# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான
ஏழாவது சட்டமன்றப் பேரவையின்
நான்காவது கூட்டத்தொடர்

1982 பிப்ரவரி 17, 18, மற்றும் 19 ஆம் நாட்கள்

(தொகுதி XXIX - எண்கள் 1 முதல் 3 வரை)

©
தமிழ்நாடு அரசு
1983

சட்டமன்றப் பேரவைத் துறை
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை - 600 009.

V211,31 N82
N83-2952

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்.

திரு. சாதிக் அலி.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்:

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (*முதலமைச்சர்*)—*பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சி பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரை பாகு கழிவு, தொல்பொருள் இயல்.*

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (*நிதி அமைச்சர்*)—*நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் ராணுவத்தினர்.*

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (*மின்துறை அமைச்சர்*)—*மின்சாரம், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு.*

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (*ஊரகத் தொழில் துறை அமைச்சர்*)—*கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் ; பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிப்புத்துறை, முத்திரைச் சட்டம்.*

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (*வருவாய்த் துறை அமைச்சர்*)—*வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.*

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (*செய்தி அறநிலையத் துறை அமைச்சர்*)—*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத்துறை, வனங்கள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.*

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (*கல்வி அமைச்சர்*)—*தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சிமொழி, கைத்தறி,*

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## Governor of Tamil Nadu.

Thiru S. SADIQ ALI.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Thiru M. G. RAMACHANDRAN (Chief Minster)-Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses and Archaeology.

2. Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)— Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex—Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electircity, Iron and Steel Control.

4. Hon. Thiru K. A. KRISHNASAMY (Minister for Rural Industries) — Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. Hon. Thiru S. D. SOMASUNDARAM (Minister for Revenue)— Revenue, Commercial Taxes, Excise and Census.

6. Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)— Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Permits.

7. Hon. Thiru C. ARANGANAYAKAM (Minister for Education)— Education Including Technical Education, Official Language and Handlooms.

8. Hon. Thiru K. KALIMUTHU (Minister for Agriculture) —Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. **Hon. Thiru C. PONNAIYAN** (Minister for Co-operation and Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. **Hon. Thiru P. KULANDAIVELU** (Minister for Local Administration)— Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. **Hon. Thiru S. RAGHAVANANDHAM** (Minister for Labour)—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply anl Drainage Board, Town Planning and Accommodation Control.

12. **Hon. Dr. H. V. HANDE** (Minister for Health)—Health

13. **Hon. Thiru K. RAJA MOHAMMED** (Minister for Irrigation)— Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. **Hon. Thiru S. MUTHUSAMY** (Minister for Transport)—Transpor, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. **Hon. Thiru. S. THIRUNAVUKKARASU** (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. **Hon. Thiru S. N. RAJENDRAN** (Minister for Public Works and Khadi)— Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor permits, Passports, Public Works Department and Establishment matter relating to Public Works Dept.

17. **Hon. Thiru M. VIJAYASARATHI** (Minister for Adi-Dravidar Welfare)— Adi Dravidar Welfare, Stationery, and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. **Hon. Thirumathi GOMATHI SRINIVASAN** (Minister for Social Welfare)— Social Welfare including Women and Children Welfare, Animal Husbandary, Beggars Home, Orphanages, Indians Overseas, Refuges and Evacuees and Correctional Administration.



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத் தலைவர் :

* மாண்புமிகு திரு. க. இராசாராம்.

### பேரவைத் துணைத் தலைவர் :

* மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

### மாற்றுத் தலைவலர்கள் பட்டியல்.

1. திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்.
2. திரு. ப. வேங்கடசுப்பிரமணியம்.
3. திரு. துரை முருகன்.
4. திரு. இல. பலராமன்.

### சட்டமன்றப் பேரவைச் செயலாள

திரு. கி.மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. இரா. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ. பி.ஜி.எல்.
திரு. கா. சீனிவாசன், பி.எஸ்.சி. (குழு அலுவலர்.)
திரு. வி. சீதாராமன், பி.காம். (சார்புச் செயலாளர்.)
திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ. பி.எல். (சார்புச் செயலாளர்.)
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ, பி.எல். (சார்புச் செயலாளர்.)
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம். (சார்புச் செயலாளர்.)
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ. (சார்புச் செயலாளர்.)
திரு. டி. எஸ். துளசிராம் (எஸ்டேட் அலுவலர்)
திரு. பி. கோதண்டராமன் (பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.)
திரு. மா. சந்திரசேகரன் (தலைமை நிருபர்.)

### (விவாத பதிப்பாளர்.)

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி.லிட்.

---

* 21—6—1980 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.
** 2—2—1982 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 1 | அங்குசாமி, திரு. ச. .. | திருவாடானை |
| 2 | அண்ணாதாசன், திரு. எம். .. | திருவரும்பூர் |
| 3 | அப்துல் ரசாக், திரு. கே. எம். .. | ஆலந்தூர் |
| 4 | அப்பாதுரை, திரு. மு. .. .. | ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 5 | அம்பிகாபதி, திரு. மு. .. | மன்னார்குடி |
| 6 | அரங்கநாதன், திரு. எஸ், .. | தர்மபுரி |
| 7 | அரங்கநாதன், திரு. மு. .. | கூனூர் (செ.வ.) |
| 8 | அரங்கநாயகம், திரு. செ. .. | கோவை (மேற்கு; |
| 9 | அரங்கராசன், திரு. ப்ரொவெ. .. | உப்பிலியாபுரம் |
| 10 | அருணகிரி, திரு. இரா. .. | திருப்பத்தூர் |
| 11 | அருணாசலம், திரு. இரா. .. | நாமக்கல் (செ.வ ) |
| 12 | அழகர்சாமி, திரு. சோ. .. | கோவில்பட்டி |
| 13 | அன்பழகன், திரு. க. .. | புரசைவாக்கம் |
| 14 | அன்பழகன், திரு. தி. .. | நாட்ராம்பள்ளி |
| 15 | அன்பில் தர்மலிங்கம், திரு. .. | லால்குடி |
| 16 | ஆண்டி அம்பலம், திரு. மெ. .. | நத்தம் |
| 17 | ஆண்டித்தேவர், திரு. எஸ். .. | உசிலம்பட்டி |
| 18 | ஆறுமுகம், திரு. எம். .. | அவினாசி (செ. வ) |
| 19 | சேலம் ஆறுமுகம், திரு. மு. .. | சேலம்-2 |
| 20 | ஆறுமுகம், திரு. த. .. | அரியலூர் |
| 21 | ஆனூர் ஜெகதீசன், திரு. பு. கோ. .. | செங்கல்பட்டு |
| 22 | இரத்தினம், திரு. எம். வி. .. | பொள்ளாச்சி |
| 23 | இராசகுமார், திரு. மெ. அ. .. | மருங்காபுரி |
| 24 | இராசமாணிக்கம், திரு. இரெ. .. | குத்தாலம் |
| 25 | இராசரத்தினம், திரு. து. .. | பூந்தமல்லி |
| 26 | இராசாம்பாள், திருமதி, தா. .. | தலைவாசல் (செ.வ. |
| 27 | இராசாராம், திரு. க. .. | பனமரத்துப்பட்டி |
| 28 | இராசாராமன், திரு. எஸ். .. | பாபநாசம் |

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத்துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு—சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள். சிறைகள், எடைகள் மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு, கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித்துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமிதானம், கிராமதானம், நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)—தொழிலாளர் வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு, குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத்துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்)—வேளாண்மை பணி, கூட்டுறவு சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வக்ப்.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத்துறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில்துறை அமைச்சர்)—பெருந் தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (கதர் மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர்)—கதர், மது மனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மது விலக்கு, பயண இசைவுச் சீட்டு, பொதுப் பணித்துறை மற்றும் பொதுப் பணித்துறை அலுவல்கள் சம்பந்தமாக.



17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்)—ஆதி திராவிடர் நலம், எழுதுபொருள், அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 29 | இராசு, திரு. ஜே. எஸ். | .. பெரம்பலூர் (செ.வ.) |
| 30 | இராசேந்திரன், திரு. எஸ். என். | .. தூத்துக்குடி (செ.) |
| 31 | இராமச்சந்திரன், திரு. எம். ஜி. | .. மதுரை (மேற்கு) |
| 32 | இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | .. சாத்தூர் |
| 33 | இராமச்சந்திரன், திரு. ச. | .. பண்ருட்டி |
| 34 | இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந. | .. செஞ்சி |
| 35 | இராமசாமி, திரு. எஸ். என். | .. சாத்தான்குளம் |
| 36 | இராமசாமி, திரு. த. | .. இராமநாதபுரம் |
| 37 | இராமசுப்பிரமணியன், திரு. இ. | .. ஸ்ரீ வைகுண்டம் |
| 38 | இராமலிங்கம், திரு. ஏ. | .. காட்டுமன்னார் (செ.வ.) |
| 39 | இராமலிங்கம், டாக்டர். கே. பி. | .. இராசிபுரம் |
| 40 | இராமலிங்கம், திரு. செ. | .. திருவிடைமருதூர் |
| 41 | இராஜசேகரன், திரு. வெ. | .. இராதாகிருஷ்ணநகர் |
| 42 | இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | .. தல்லி |
| 43 | இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | .. ஆண்டிப்பட்டி |
| 44 | இளையபெருமாள், திரு. எல். | .. எழும்பூர் (செ.வ) |
| 45 | ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | .. அம்பாசமுத்திரம் |
| 46 | உகம்சந்த், திரு. எஸ். டி. | .. மதுராந்தகம் |
| 47 | உச்சி, திரு. கே. | .. கூடலூர் |
| 48 | உத்திராபதி, திரு. பொ. | .. திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 49 | உமாநாத், திரு. ரா. | .. நாகை |
| 50 | கண்ணன், திரு. ம. | .. கண்டமங்கலம் (செ.வ.) |
| 51 | கணபதி, திரு. கே. ஆர். | .. சிதம்பரம் |
| 52 | கணேசன், திரு. இ. | .. இடைப்பாடி |
| 53 | கணேசன், திரு. சி. | .. அச்சரப்பாக்கம் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர் (2) |
|---|---|---|
| 54 | கந்தசாமி, திரு. கா. வே. | .. கிணத்துக்கடவு |
| 55 | கந்தசாமி, திரு. பி. | .. பொங்கலூர் |
| 56 | கபாலி, திரு. டி. கே. | .. மைலாப்பூர் |
| 57 | கருணாநிதி, டாக்டர், மு. | .. அண்ணாநகர் |
| 58 | கருப்பசாமிப் பாண்டியன், திரு. வி. | .. பாளையங்கோட்டை |
| 59 | கருப்பையா, திரு. இரா. | .. குளித்தலை |
| 60 | கருப்பையா, திரு. ஏ. டி. | .. வால்பாறை |
| 61 | கல்லன், திரு. கே. | .. உதகமண்டலம் |
| 62 | கலிதீர்த்தான், திரு. சோ. | .. சங்கராபுரம் |
| 63 | கலியமூர்த்தி, திரு. பெ. | .. மங்களூர் (செ. வ.) |
| 64 | நன்னிலம் கலையரசன், திரு. அ. | .. நன்னிலம் (செ.வ.) |
| 65 | காளிமுத்து, திரு. கா. | .. திருப்பரங்குன்றம் |
| 66 | கிட்டப்பா, திரு. என். | .. மாடவரம் |
| 67 | கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | .. காங்கேயம் |
| 68 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | .. ஆயிரம்விளக்கு |
| 69 | கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. | .. ஆண்டிமடம் |
| 70 | கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | .. நெல்லிக்குப்பம் |
| 71 | கிருஷ்ணராஜ், திரு. ஜி. | .. சேலம்-1 |
| 72 | கிருஷ்ணன், திரு. ரா. | .. வாசுதேவநல்லூர் |
| 73 | குப்புசாமி, திரு. என். | .. மொரப்பூர் |
| 74 | குப்புசாமி, திரு. கே. | .. ஒட்டன்சத்திரம் |
| 75 | குப்புசாமி, திரு. செ. | .. வந்தவாசி (செ.வ.) |
| 76 | குமரி அனந்தன், திரு. | .. திருவொற்றியூர் |
| 77 | குருசாமி, திரு. ப. | .. அந்தியூர் (செ.வ.) |
| 78 | குலசேகர், திரு. ஏ. டி. | .. சிங்காநல்லூர் |
| 79 | குலசேகரப் பாண்டியன், திரு. ந. | .. வாணியம்பாடி |
| 80 | குழந்தைவேலு, திரு. ப. | .. உடுமலைப்பேட்டை |
| 81 | கேசவ ஆதித்தன், திரு. சி. | .. திருச்செந்தூர் |
| 82 | கோபால், திரு. சி. | .. சோளிங்கர் |
| 83 | கோபாலகிருஷ்ணன், திரு. கா. | .. பெரியகுளம் |
| 84 | கோபாலன், திரு. ஆர். டி. | .. கம்பம் |
| 85 | கோமதி சீனிவாசன், திருமதி. | .. வலங்கை (செ. வ.) |
| 86 | கோவேந்தன், திரு. எம். ஆர். | .. பேராவூரணி |
| 87 | கோவைத்தம்பி, திரு. | .. பேரூர் |
| 88 | சக்கரபாணி, திரு. ஆர். | .. பொன்னேரி |
| 89 | சங்கரய்யா, திரு. என். | .. மதுரை (கிழக்கு) |
| 90 | சட்டநாத கரையாளர், திரு. கி. | .. தென்காசி |
| 91 | சண்முகம், திரு. இரா. | .. திருத்தணி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 92 | சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி |
| 93 | சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 94 | சந்திரசேகரன், திரு. ஏ. | சோழவந்தான் |
| 95 | சபாபதி, திரு. சி. | அரூர் (செ. வ.) |
| 96 | சமரசம், டாக்டர். கே. | காவேரிப்பட்டணம் |
| 97 | சாகுல் ஹமீது, திரு. ஏ. | கடையநல்லூர் |
| 98 | சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் |
| 99 | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 100 | சிதம்பரம், திரு. சி. த. | காரைக்குடி |
| 101 | சிவசாமி, திரு. செ. | இளையான்குடி |
| 102 | சிவஞானம், திரு. ந. | திருவோணம் |
| 103 | சிவப்பிரகாசம், திரு. சீ. | சேந்தமங்கலம் (செ.வ.) |
| 104 | சிவபெருமான், திரு. மு. | ஓமலூர் |
| 105 | சிவராமன், திரு. எ எஸ். | சின்னசேலம் |
| 106 | சின்னசாமி, திரு எம். | கரூர் |
| 107 | சின்னதுரை, திரு. ஏ. | மேல்மலையனூர் |
| 108 | சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 109 | சின்னராசு, திரு. மா. | தொண்டாமுத்தூர் |
| 110 | சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம் |
| 111 | சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர் |
| 112 | சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம் |
| 113 | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | முகையூர் |
| 114 | சுந்தரராஜ், திரு. நா. | திருமயம் |
| 115 | சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர் |
| 116 | சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 117 | சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | போடிநாயக்கனூர் |
| 118 | சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு |
| 119 | சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவலூர் |
| 120 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 121 | சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 122 | செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டிப் பாளையம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 123 | செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 124 | செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ.வ.) |
| 125 | செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 126 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. | அரவக்குறிச்சி |
| 127 | சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு |
| 128 | சொக்கலிங்கம், திரு. கே. | திருப்போரூர் |
| 129 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 130 | சோமு, திரு. என். வி. என். | பூங்கா நகர் |
| 131 | சௌந்திரராசன், திரு. கே. | திருச்சி—2 |
| 132 | டாக்டர் சௌரிராஜன், திரு. கே. | தி. நகர் |
| 133 | தங்கமணி கவுண்டர், திரு. கே. எம். | திண்டிவனம் |
| 134 | தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 135 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 136 | தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான் |
| 137 | தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ.வ.) |
| 138 | தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ.) |
| 139 | தனுக்கோடித் தேவர், திரு. கே. | முதுகளத்தூர் |
| 140 | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 141 | தியாகராசன், திரு. ஆர். | விருத்தாசலம் |
| 142 | திருச்சி சௌந்திரராசன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 143 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 144 | திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 145 | திருமான், திரு. இரா. | ஏற்காடு (செ.வ.) |
| 146 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 147 | தீர்த்தராமன், திரு. ப. | பென்னகரம் |
| 148 | துரைசாமி, திரு. பி. எஸ். | பர்கூர் |
| 149 | துரைமுருகன், திரு. | ராணிப்பேட்டை |
| 150 | துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 151 | துரைராஜ், திரு. பி. | சங்கரநாயினார் கோவில் (செ.வ.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 152 | தேவராஜ், திரு. வி. எம். .. | வேலூர் |
| 153 | நடராசன், திரு. எஸ். .. | தஞ்சாவூர் |
| 154 | நரசிம்மன், திரு. பூ. மு. .. | பள்ளிப்பட்டு |
| 155 | நல்லப்பன், திரு. தி. கா. .. | பெருந்துறை |
| 156 | நவநீத கிருஷ்ண பாண்டியன், திரு. .. | ஆலங்குளம் |
| 157 | நாச்சிமுத்து, திரு. கே. பி. .. | மேட்டூர் |
| 158 | நாராயணசாமி, திரு. கே. .. | திருவண்ணாமலை |
| 159 | நாராயணன், திரு. பி. ஜி. .. | பவானி |
| 160 | நெடுஞ்செழியன், டாக்டர்இரா. .. | திருநெல்வேலி |
| 161 | நெடுமாறன், திரு. ப. .. | மதுரை (மத்திய) |
| 162 | பக்கீர் முகம்மது, திரு. இ. எஸ். எம். .. | கும்பகோணம் |
| 163 | பட்டாபிராமன், திரு. செ. .. | திருவள்ளூர் |
| 164 | பம்மல் நல்லதம்பி, திரு. .. | தாம்பரம் |
| 165 | பரமசிவ கவுண்டர், திரு. பி. என். .. | பல்லடம் |
| 166 | பலராமன், திரு. இல. .. | போளூர் |
| 167 | பழனிசாமி, திரு. சு. .. | மேட்டுப்பாளையம் |
| 168 | பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர் |
| 169 | பழனியப்பன், திரு. கு. ப. .. | விழுப்புரம் |
| 170 | பழனிவேல், திரு. என். .. | பழனி (செ.வ.) |
| 171 | பாண்டியன், திரு. பி. எச். .. | சேரன்மாதேவி |
| 172 | பாபு கோவிந்தராஜன், திரு. .. | கடலூர் |
| 173 | பாபு ஜனார்த்தனன், திரு. .. | செய்யாறு |
| 174 | பாரமலை, திரு. க. .. | மானாமதுரை (செ.வ.). |
| 175 | பாலகிருஷ்ணன், திரு. ச. .. | மொடக்குறிச்சி |
| 176 | பாலகிருஷ்ணன், திரு. வி. .. | சிவகாசி |
| 177 | பாலசுப்பிரமணியன், திரு. க. .. | சீர்காழி (செ.வ.) |
| 178 | வேடசந்தூர் பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. .. | வேடசந்தூர் |
| 179 | பாலன், திரு. சு. .. | பெரம்பூர் (செ.வ.) |
| 180 | பாலுச்சாமி, திரு. ஏ. .. | சமயநல்லூர் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 181 | பிச்சை, திரு. எம். .. | அருப்புக்கோட்டை |
| 182 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. .. | வில்லிவாக்கம் |
| 183 | புருஷோத்தமன், திரு. து. .. | சைதாப்பேட்டை |
| 184 | பூங்காவனம், திரு. என். ஏ. .. | காட்பாடி |
| 185 | பெரியசாமி, திரு. ஏ. .. | தாராபுரம் (செ.வ.) |
| 186 | பெரியசாமி, திரு. ரா. .. | தொட்டியம் (செ.வ.) |
| 187 | பெருமாள், திரு. என். .. | வரகூர் (செ.வ.) |
| 188 | பெருமாள், திரு. ரா. கு. .. | விளாத்திகுளம் |
| 189 | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். .. | நிலக்கோட்டை (செ.வ.). |
| 190 | பொன்னுரங்கம், திரு. ப. .. | ராயபுரம் |
| 191 | பொன்னையன், திரு. சி. .. | திருச்செங்கோடு |
| 192 | மணி, திரு. டி. .. | விளவங்கோடு |
| 193 | மணிமாறன், திரு. ஆர். .. | திருப்பூர் |
| 194 | மாணிக்கம், திரு. எம். எஸ். .. | வேதாரண்யம் |
| 195 | மாரிமுத்து, திரு. த. .. | குளத்தூர் (செ.வ.) |
| 196 | முகம்மது இஸ்மாயில், திரு. பி. .. | பத்மநாபபுரம் |
| 197 | முசிறிப்புத்தன், திரு. பி. .. | திருச்சி-1 |
| 198 | முத்துகிருஷ்ணன், திரு. சு. .. | கன்னியாகுமரி |
| 199 | முத்துசாமி, திரு. சு. .. | ஈரோடு |
| 200 | முத்துராமலிங்கம், திரு. இ. .. | ராதாபுரம் |
| 201 | முத்துவேல், திரு. என். .. | வானூர் (செ. வ.) |
| 202 | முத்தையா, திரு. இரா. .. | சேடப்பட்டி |
| 203 | முனிரத்தினம், திரு. இரா. சா. .. | கும்மிடிபூண்டி |
| 204 | முனுசாமி, திரு. மு. ப. .. | பாலக்கோடு |
| 205 | மூர்த்தி, திரு. ஜி. .. | பேரணாம்பட்டு (செ.வ.). |
| 206 | மொக்கையன், திரு. பி. .. | ராஜபாளையம் (செ.வ.). |
| 207 | யசோதா, திருமதி டி. .. | ஸ்ரீ பெரும்புதூர் |
| 208 | ரகுமான்கான், திரு. அ. .. | சேப்பாக்கம் |
| 209 | ரங்கசாமி, திரு. ஆர். .. | சத்தியமங்கலம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 210 | ரங்கசாமி, திரு. க. | உளுந்தூர்பேட்டை (செ.வ.). |
| 211 | ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 212 | ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் திரு. | புதுக்கோட்டை |
| 213 | ராஜமாணிக்கம், திரு. எம். கே. | முசிறி |
| 214 | ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல் |
| 215 | வரதராஜன், திரு. என். | திண்டுக்கல் |
| 216 | விசயலட்சுமி, செல்வி வி. | வீரபாண்டி |
| 217 | வின்செண்ட், திரு. மி. | நாகர்கோவில் |
| 218 | விஜயசாரதி, திரு. எம். | அரக்கோணம் (செ.வ.) |
| 219 | விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 220 | விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |
| 221 | விஸ்வநாதன், திரு. கோ. | அணைக்கட்டு |
| 222 | வீராசாமி, திரு. த. | ஒரத்தநாடு |
| 223 | வீராணம்பலம், திரு. க. வெ | மேலூர் |
| 224 | வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சி |
| 225 | வெங்கடரெட்டி, திரு. டி. | ஒசூர் |
| 226 | வெங்கடேசன். திரு. பி. எம் | பெரணமல்லூர் |
| 227 | வெள்ளைச்சாமி, திரு. அ. | ஆத்தூர் |
| 228 | வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட்டு |
| 229 | வேலப்பன், திரு. சி. வி. | கபிலர்மலை |
| 230 | ஜகத்ரட்சகன், திரு. எஸ். | உத்திரமேரூர் |
| 231 | ஜான் வின்சென்ட், திரு மு. | நாங்குனேரி |
| 232 | ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 23 | ஹாஜா செரீப், திரு. கே. எஸ். ஜீ. | திருவல்லிக்கேணி |
| 234 | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டார் |
| 235 | மார்க்ரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்—அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்.
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்.
4. மாண்புமிகு திரு.கே. இராஜா முகமது—அமைச்சர்.
5. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி— தலைமை வழக்கறிஞர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத் தொடர் 1982 பிப்ரவரி 17, 18, மற்றும் 19 ஆம் நாட்கள்

(தொகுதி XXIX எண்கள் 1 முதல் 3 வரை)

உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | ii—V |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். | Vii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல் (தொகுதிகள் உள்பட அகரவரிசையில்) | iiX—XV |
| அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| இந்திய தண்டனைச் சட்டக்கோவை குற்றவியல் நடைமுறை விதிக்கோவை (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 1982. .. | 177—220 |
| ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1982 ஊராட்சிகள் ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1982 .. | 128—177 |
| கடன் நிவாரண (திருத்த) சட்டமுன்வடிவு, 1982 .. | 107—127 |
| கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ் குற்றஞ்செய்பவர்கள், குண்டர்கள், விபச்சாரக் குற்றஞ் செய்பவர்கள் சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு, 1982 .. | 285—345 |
| சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1982, .. | 67 |
| .. | 345—354 |

அரசினர் சட்ட முன் வடிவுகள்—தொடர்ச்சி.


பக்கங்கள்

தமிழ் பல்கலைக் கழக சட்டமுன்வடிவு, 1982 (தொடர்ச்சி) .. 67—101

நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1982 .. 345

பொதுச்சொத்து (அழித்தல், இழப்பு ஆகிய வற்றைத் தடுத்தல்) சட்டமுன்வடிவு, 1982 .. 524—529

அரசினர் தீர்மானங்கள்—

பேரவை ஒத்திவைக்கப் பெறுதல் .. 575

விதி 32 (1)-ஐத் தளர்த்தல் .. 284

விதி 58-ஐத் தளர்த்தல் .. 429

அறிவிப்புகள்—

ஆளுநரிடமிருந்து வரப்பெற்ற செய்தி .. 259

கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின்கீழ் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபச்சாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின், அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு, 1982. .. 284

சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு 1982, .. 345

பேரவை அலுவல் .. 107
.. 345
.. 576

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

எதிர்க்கட்சித் தலைவர் செல்லும் பாதையில் வெடிகுண்டு வெடித்துள்ளது. .. 506—515

தெங்கனிக் கோட்டையில் நடந்த ஊர்வலத்தில் போலீஸ் தடியடி .. 262—274

வாடிப்பட்டு காவலர்கள் ஊராட்சிப் பள்ளியில் பணிபுரியும் சீனியம்மாளைத் துன்புறுத்தியது .. 492—506

ஜல்லிக்கட்டு விழாவின் போது போலீஸ் துப்பாக்கிச் சூடு .. 49—55

கவன ஈர்ப்புகள்—

உணவு விடுதிகளில் பலகாரங்களின் விலை உயர்வு .. 521—524




கவன ஈர்ப்புகள்—தொடர்ச்சி


பக்கங்கள்.

குடும்ப ரேஷன் கார்டுதாரர்களுக்கு சர்க்கரை அளவை குறைக்க இருப்பது .. 516—520

சேலம் பகுதியில் நச்சுச்செடி 'பார்த்தீனியம்' வளர்வது .. 274—276

நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் ஆத்தூர் கிடங்கிலிருந்து நெல் மூட்டைகள் காணாமல் போனது .. 56—61

புகளூர் சர்க்கரை ஆலை நிர்வாகம் கரும்பை எடுக்க மறுப்பதால் சாகுபடியாளர் பாதிப்பு .. 62—67

மூளைக் காய்ச்சல் நோய் வராமல் தடுப்பது .. 276—284

தகவல் கோரல்—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் .. 46—49
.. 490—492

எதிர்க்கட்சித் தலைவர் செல்லும் பாதையில் வெடிகுண்டு வெடித்துள்ளது என்ற செய்தி .. 397—398

பால்கமிஷன் அறிக்கை மீது நடைபெற்ற விவாதம் தொடர்பாக .. 45—46
260—261

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகள் விவாதம்—
355—397
398—421
529—575

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 220
421—422
576

வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள் .. 3—45
225—259
455—490


## அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையைப் பயன்படுத்தும் முறை

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன, துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்கி அச்சிடப் பெறுகின்றன,

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின் கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப்பெறுகின்றன. எடுத்துக் காட்டாக. (தீ) என்று போடுவது தீர்மானத்தையும், (க.ச.)

என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ.தீ.) என்று போடுவது ஒத்திவைப்புத் தீர்மானங்களையும், (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் விளாக்களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்ட முன் வடிவுகளும் ''சட்ட முன்வடிவு'' என்ற முக்கியத் தலைப்பின் கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப் பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், மாநகராட்சிகள் போன்ற அமைப்புக்கள் அனைத்தும், 'குழு (க்கள்)' 'மன்றம் (கள்)', 'மாநகராட்சிகள், ஆகிய முக்கியத் தலைப்புகளின் கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப்பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப்பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத்தலைப்பின் கீழ் கொடுக்கப்பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர் மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் 'தலைவர்' என்ற தலைப்பின் கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப் பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| அ | : | அறிக்கை |
| அறிவி | : | அறிவிப்பு |
| அ.வி | : | அரை மணி நேர விவாதம் |
| கு.வி. | : | குறுகிய கால விவாதம் |
| பொ.வி. | : | பொது விவாதம் |
| ஆ. உ. | : | ஆளுநர் உரை |
| உ.பி. | : | உரிமைப் பிரச்சினை |
| ஒ.பி. | : | ஒழுங்குப் பிரச்சினை |
| க.ஈ. | : | கவன ஈர்ப்பு |
| க.ஈ.அ. | : | கவன ஈர்ப்பு அறிக்கை |
| ச.அ.நி. | : | சட்டமுன் வடிவின் அறிமுக நிலை |
| ச.ஆ.நி. | : | சட்ட முன்வடிவின் ஆய்வு நிலை—இந்நிலையில், |

(1) ஆய்வு/கூட்டாய்வுக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப பெறும் தீர்மானம்



(2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம்.

(3) சுற்றுக்கு அனுப்பப் பெறுவதற்கான திருத்தம்.

(4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கான தீர்மானம்.

(5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன.

| | | |
|---|---|---|
| ச.பிரி.ஆ. | : | சட்ட முன்வடிவு—பிரிவு வாரியாக ஆய்தல் |
| ச.பே. | : | சட்டமன்றப் பேரவை |
| ச.மே. | : | சட்டமன்ற மேலவை |
| த.கோ | : | தகவல் கோரல் |
| த.வி. | : | தன்னிலை விளக்கம் |
| தீ. | : | தீர்மானம் |
| உ.தீ. | : | உரிமைத் தீர்மானம் |
| ஒ.தீ. | : | ஒத்திவைப்புத் தீர்மானம் |
| த.தீ. | : | தனித் தீர்மானம் |
| து.மா.கோ | : | துணை மானியக் கோரிக்கை |
| மி.மா.கோ | : | மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை |
| பே.அ. | : | பேரவையின் அலுவல் |

பக்கங்கள்

அ

அங்குசாமி திரு. ச.—
மண்டபம், புறம்போக்கு, நிலம், மத்திய அரசு கோரிக்கை .. 460—462
முத்திரைத்தாள்கள், தாய்மொழி இடம்பெறுதல். 23—25
அப்பாதுரை திரு. மு—
எதிர்க்கட்சித் தலைவர் சென்றபாதை, வெடிகுண்டு (ஒ.தீ.) .. 506
தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு, 1982. 84—85
நெல்லை மாவட்ட கல் குவாரிகள் குத்தகை ஊராட்சி ஒன்றியங்களுக்கு கொடுத்தல் .. 39—41
அம்பிகாபதி திரு. மு—
உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் (த.கோ.) .. 47
எதிர்க்கட்சித் தலைவர் சென்ற பாதை வெடிகுண்டு, (ஒ.தீ.) .. 506, 510—511
தெங்கனிக்கோட்டையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஊர்வலத்தில் போலீஸ் தடியடி (ஒ.தீ.).. 58—62

அ—தொடர்ச்சி.

பக்கங்கள்

பொதுச் சொத்து (அழித்தல். இழப்பு ஆகிய வற்றைத் தடுத்தல்) சட்ட முன்வடிவு. 1982 .. 526—527

வாடிப்பட்டி, ஆசிரியை, ஊராட்சி ஒன்றியப்பள்ளி, காவலரால் தாக்கு, (ஒ.தீ.) .. 492—493, 499—500

அரங்கநாயகம் திரு. செ—

தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு, 1982. 67—69, 101—107

அருணாசலம் திரு. இரா—

சென்னை, ஆதி ஆந்திரர்கள், பட்டா, .. 462—463

அலுவலர்கள் —

பாலசேவிகாக்கள், அரசு ஊழியர்களாக்கள் .. 255—258

அழகர்சாமி திரு. சோ—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் (த.கோ.) .. 46

தெங்கனிக்கோட்டையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஊர்வலத்தில் போலீஸ் தடியடி (ஒ.தீ.). 262

வாடிப்பட்டி, ஆசிரியை, ஊராட்சி ஒன்றியப்பள்ளி, காவலரால் தாக்கு, (ஒ.தீ.) .. 492—493

அன்பழகன் திரு. க—

கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின்கீழ் குற்றஞ்செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாக பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு, 1982 .. 316—323, 337,338, 339—343

திருச்செந்தூர் சம்பவம் பற்றிய பால் கமிஷன் அறிக்கை மீது நடவடிக்கை (த.கோ.) .. 260—261

ஆ

ஆசிரியர்கள்—

தஞ்சாவூர் மாவட்டம் ஓய்வூதியம் பெறும் ஆசிரியர் சங்க விண்ணப்பம் .. 13—16

புலவர் படித்த செகண்டரி கிரேடு ஆசிரியர்கள், ஊக்க ஊதிய உயர்வு .. 11—13

ஆண்டித்தேவர் திரு. எஸ்.—

தெங்கனிக்கோட்டையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஊர்வலத்தில் போலீஸ் தடியடி (ஒ.தீ.).. 262—270, 271—273

மின்சார வாரியம், நிதிநிலை அறிக்கை, 1981—82, துணை நிதிநிலை அறிக்கை 1980—81, விவாதம். .. 548—553



ஆ—தொடர்ச்சி

பக்கங்கள்

வாடிப்பட்டி, ஆசிரியை, ஊராட்சி ஒன்றியப் பள்ளி காவலரால் தாக்கு, (ஒ.தீ.) .. 492—495

ஆதிதிராவிடர் நலன்—

திருப்பத்தூர், அரிசன மாணவிகள் இல்லம் .. 41—43

பேராவூரணித் தொகுதி, அரிசன நலப்பள்ளிகள் நிரந்தரக் கட்டிடம் .. 487—488

விசாரிக்க தனி நீதிமன்றம் .. 28—29

விடுதிகள், ஆதிதிராவிடர் தேர்ந்தெடுக்கும்முறை. 488—490

ஆலயங்கள்—

ஊழியர்கள் சம்பள விகிதம் .. 232

ஆறுமுகம், திரு. எம்.—

தெங்கனிக்கோட்டையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஊர்வலத்தில் போலீஸ் தடியடி (ஒ.தீ.).. 262—265

நீலகிரி மாவட்டம் அரசு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் சம்பளம் .. 233—235

ஆறுமுகம், திரு. சேலம் மு.—

மின்சார வாரியம், நிதிநிலை அறிக்கை 1981—82, துணை நிதிநிலை அறிக்கை, 1980-81 .. 382—388

ஆறுமுகம், திரு. த.—

அரியலூர், புவியியல் ஆய்வு அமைப்புப் பிரிவு .. 39

இ

இராசமாணிக்கம், திரு. இரெ.—

எதிர்க்கட்சித் தலைவர் சென்ற பாதை, வெடி குண்டு (ஒ.தீ.) .. 06

மூளைக்காய்ச்சல், குழந்தைகள் இறந்தமை (க.ஈ.) .. 276, 279, 283

இராசாம்பாள் திருமதி த.—

சேலம் மாவட்டம் ஆத்தூரில் நுகர்பொருள் வாணிபக்கழகக் கிடங்கில் நெல்மூட்டைகள் காணாமல் போனது (க.ஈ.) .. 56, 60—61

இராசாராமன், திரு. சோ.—

டாக்சி மற்றும் ஆட்டோ ரிக்ஷாக்கள், மீட்டர்கள் சான்றிதழ்கள் .. 249—251

இராசு, திரு. ஜே. எஸ்.—

ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு 1982 ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு 1982 ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு 1982 .. 173—174

குடிசை மாற்று வாரியம், கட்டப்பட்ட வீடுகள்.. 30—33

இ—தொடர்ச்சி — பக்கங்கள்

சிறுசேமிப்பு, விளம்பரம் .. 458—460

தமிழ்ப் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு 1982 .. 95, 98—99

இராமச்சந்திரன், திரு. எம். ஜி.—

எதிர்க்கட்சித் தலைவர் சென்ற பாதை, வெடி குண்டு (ஒ.தீ) .. 508

இராமச்சந்திரன், திரு. ச.—

எதிர்க்கட்சித் தலைவர் செல்லும் பாதையில் வெடிகுண்டு வெடித்துள்ளது என்ற செய்தி (த.கோ.) .. 398

மின்சார வாரியம், நிதிநிலை அறிக்கை, 1981–82 துணை நிதிநிலை அறிக்கை, 1980–81, விவாதம் .. 355,375, 380,408 569—575

இராமசாமி, திரு. எஸ். என்.—

வாடிப்பட்டி, ஆசிரியை, ஊராட்சி ஒன்றியப் பள்ளி, காவலரால் தாக்கு, (ஒ.தீ.) .. 492—497

இராமலிங்கம், டாக்டர் கே.பி.—

மின்சார வாரியம், நிதி நிலை அறிக்கை, 1981–82 துணை நிதி நிலை அறிக்கை, 1980–81 .. 411—417

இராமலிங்கம், திரு. செ.—

எதிர்க்கட்சித் தலைவர் சென்ற பாதை, வெடி குண்டு, (ஒ.தீ.) .. 506

தொழு நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள், உதவித்தொகை .. 245—247

இளையபெருமாள், திரு. எல்.—

கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ் குற்றஞ் செய்பவர்கள் குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள் சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன் வடிவு, 1982 .. 340

ஈ

ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு.பி.—

உற்பத்தியாளர் கூட்டுறவு ஸ்தாபனங்கள், நிறுவும் திட்டம். .. 22—23

ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1982 ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1982. .. 141—143





பக்கங்கள்

ஈ—தொடர்ச்சி

கிராமங்கள், குடிநீர், செலவு, .. 478—479

குடியாத்தம் அருகே கே.வி.குப்பம், மாடு விடும் திருவிழாவின்போது போலீஸ் துப்பாக்கி சூடு (ஒ.தீ.) .. 50

சேலம்மாவட்டம் ஆத்தூரில் நுகர் பொருள் வாணிபக் கழகக் கிடங்கில் நெல் மூட்டைகள் காணாமல் போனது (க.ஈ.) .. 56, 58

தெங்கனிக் கோட்டையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஊர்வலத்தில் போலீஸ் தடியடி, (ஒ.தீ.) .. 262

வாடிப்பட்டி ஆசிரியை, ஊராட்சி ஒன்றியப் பள்ளி, காவலரால் தாக்கு, (ஒ.தீ.) .. 492—493

உ

உகம்சந்த், திரு. எஸ். டி.—

சென்னை, சுப்ரீம் கோர்ட்டின் பெஞ்ச், .. 470—474

மதுராந்தகம் தாலுகா, பிரித்தல் .. 10—11

மாமண்டூர், எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை .. 237

விடுதிகள், ஆதி திராவிடர்கள், தேர்ந்தெடுக்கும் முறை. .. 488—490

உணவகங்கள்—

பலகாரங்கள், விலை உயர்வு (க.ஈ.) .. 521—524

உத்திராபதி, திரு. பொ.—

கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ் குற்றஞ் செய்பவர்கள். குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள் சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு, 1982 .. 307—311

வாடிப்பட்டி ஆசிரியை, ஊராட்சி ஒன்றியப் பள்ளி, காவலரால் தாக்கு, (ஒ.தீ.) .. 492—493

வேதாரண்யம், இரசாயனத் தொழிற்சாலை .. 483—485

உமாநாத், திரு. ரா.—

எதிர்க்கட்சித் தலைவர் சென்ற பாதை, வெடி குண்டு (ஒ.தீ.) .. 506,508—510

கல்வி, மாநில அதிகாரப் பட்டியலில் சேர்த்தல். .. 465—469

கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ்க் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு, 1982. .. 343—344

தஞ்சாவூர் மாவட்டம், ஓய்வூதியம் பெறும் ஆசிரியர் சங்க விண்ணப்பம் .. 13—16

பக்கங்கள்

உ—தொடர்ச்சி

தெங்கனிக் கோட்டையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஊர்வலத்தில் போலீஸ் தடியடி, (ஒ. தீ.) .. 7—70 274

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஊழியர் ஒருவரைத் தாக்கியது குறித்து, (த. கோ.) .. 49—491

பொதுச் சொத்து (அழித்தல், இழப்பு ஆகியவற்றைத் தடுத்தல்) சட்ட முன்வடிவு, 1982 .. 52—52

உள்ளாட்சிகள்—

அபிவிருத்தி, மத்திய அரசின் திட்டம் .. 29—30

ஈரோடு நகராட்சி, திரையரங்கம் மற்றும் திருமண மண்டபம் கட்டுதல் .. 240—241

ஊழியர்கள், பயிற்சி மற்றும் பார்வையிடல் திட்டம், .. 2—237

ஏ

ஏடுகள்—

பேரவை முன் வைக்கப் பெற்றவை .. 220 421—421 576

ஒ

ஒழுங்குப் பிரச்சனை—

பார்க்க—தலைவர்

க

கணபதி, திரு. கே. ஆர்.—

மின்சார வாரியம், நிதிநிலை அறிக்கை, 1981-82 துணை நிதி நிலை அறிக்கை, 1980-81 .. 403—405

கணேசன், திரு. சி.—

மதுராந்தகம் தாலுகா, பிரித்தல் .. 10—11

கருப்பையா, திரு. இரா.—

இந்திய தண்டனைச் சட்டக் கோவை குற்றவியல் நடைமுறை சாதிக் கோவை (தமிழ்நாடு) சட்ட முன்வடிவு, 1982 208—209

கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ்க் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசார குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாக பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு 1982 .. 241

தெங்கனிக் கோட்டையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஊர்வலத்தில் போலீஸ் தடியடி (ஒ. தீ.) .. 273—274

வாடிப்பட்டி ஆசிரியை, ஊராட்சி ஒன்றியப்பள்ளி, காவலரால் தாக்கு (ஒ. தீ.) 492—493

கல்வி—

உடற்கல்வி, நூலகக் கல்வியைப் பாடமாக்குதல். 16—19





பக்கங்கள்

க—தொடர்ச்சி

சென்னை சட்டக் கல்லூரி, மாலைநேர எம்.எல். பட்டப்படிப்பு 19—22

பாடநூல்கள், கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்களின் பாடல்கள் 463—465

மாநில அதிகாரப் பட்டியலில் சேர்த்தல் 465—469

கல்விக் கூடங்கள்—

புதுக்கோட்டை, முதுகலை வகுப்புகள், மன்னர் கல்லூரி 469—470

கலிதீர்த்தான், திரு. சோ—

சாத்தனூர் அணை, புதிய வாய்க்கால். 479—48

கவன ஈர்ப்புகள்—

உணவகங்கள், பலகாரங்கள், விலை உயர்வு 521—524

சர்க்கரை வினியோகம், அளவுக் குறைப்பு. 516—520

சேலம் "பார்த்தினியம்" நச்சுச் செடி, மக்கள் கவலை 274—276

சேலம் மாவட்டம் ஆத்தூரில் நுகர் பொருள் வாணிபக் கழகக் கிடங்கில் நெல் மூட்டைகள் காணாமல் போனது 56—61

புகளூர் சர்க்கரை ஆலை கரும்பை எடுக்காததால் சாகுபடியாளர் பாதிப்பு 62—67

மூளைக்காய்ச்சல். குழந்தைகள் இறந்தமை 276—284

கனிமங்கள்—

அரியலூர், புவியியல் ஆய்வு மையப் பிரிவு 39

நெல்லை மாவட்ட கல்குவாரிகள் குத்தகை, ஊராட்சி ஒன்றியங்களுக்கு கொடுத்தல் 39—41

கிட்டப்பா, திரு. என்—

ஆலய ஊழியர்கள், சம்பள விகிதம் 232

கிருஷ்ணமூர்த்தி, திரு. வி—

இந்திய தண்டனைச் சட்டக் கோவை குற்றவியல் நடைமுறை விதிக்கோவை (தமிழ்நாடு) சட்ட முன்வடிவு 1982 210—212

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் (த. கோ.) 48

எதிர்க்கட்சித் தலைவர் சென்ற பாதை, வெடி குண்டு (ஒ. தீ.) 506, 515

திருச்செந்தூர் சம்பவம் பற்றிய 'பால் கமிஷன் அறிக்கைமீது நடவடிக்கை த. கோ., 260

பால்கமிஷன் அறிக்கைமீது நடவடிக்கை (த. கோ) 45—46, 48

பக்கங்கள்.

க—தொடர்ச்சி

மின்சார வாரியம், நிதி நிலை அறிக்கை 1981–82, துணை நிதி நிலை அறிக்கை 1980–81 விவாதம் 561—569.

கிருஷ்ணன், திரு. ரா—

இந்திய தண்டனைச் சட்டக் கோவை குற்றவியல் நடைமுறை விதிக்கோவை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1982 196—200

சேலம் மாவட்டம் ஆத்தூரில் நுகர் பொருள் வாணிபக் கழகக் கிடங்கில் நெல் மூட்டைகள் காணாமல் போனது (க.ஈ.) 56, 59

குடிநீர்—

கடல் நீர் குடி நீராக்குதல் 477—478

கிராமங்கள், செலவு 478—479

மதுரை மாவட்டத்திலுள்ள நகராட்சிகள், திட்டம் 33

குடிபெயர்ந்தோர்—

குறிஞ்சிப்பாடி, நெய்வேலி வீடுகளில் குடியேறாமை 258—259

குமரி அனந்தன், திரு.—

நியாய விலைக் கடைகள், மக்கள் குழு மூலம் கண்காணிப்பு .. 3—8

வாடிப்பட்டி ஆசிரியை, ஊராட்சி ஒன்றியப்பள்ளி காவலரால் தாக்கு (ஒ.தீ.) 492—493

குலசேகர், திரு. எ. டி—

ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1982

ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1982 151—152

ஊராட்சிகள் ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1982

குலசேகரபாண்டியன், திரு. நா—

மின்சார வாரியம், நிதி நிலை அறிக்கை, 1981–82 துணை நிதி நிலை அறிக்கை, 1980–81 366—371

குழந்தைகள் நலம்—

மூளைக்காய்ச்சலால் இறந்தமை (க.ஈ.) 274—284

குழந்தைவேலு, திரு. ப—

ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 128,

ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த சட்டமுன்வடிவு, 1982 129, 130—163

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1982 176

''பார்த்தீனியம்'' நச்சுச்செடி, சேலம் மக்கள் கவலை (க.ஈ.ஆ.) 274—279



க—தொடர்ச்சி. பக்கங்கள்.

பொதுச் சொத்து (அழித்தல், இழப்பு ஆகியவற்றைத் தடுத்தல்) சட்டமுன்வடிவு, 1982 524, 529

கூட்டுறவு—

உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை நிறுவும் திட்டம் 22—23

சுயவேலை வாய்ப்பு, கூட்டுறவு அமைப்பு 474—475

கேசவ ஆதித்தன், திரு. சி—

திருச்செந்தூர் ஆவுடையார்குளம் நில ஆக்கிரமிப்பு 9

கோபாலன், திரு. ஆர். டி.—

கல்லூரிகள், உடற் கல்வி, நூலகக் கல்வியை பாடமாக்குதல் 16—19

கோவேந்தன், திரு. எம். ஆர்.—

நிரந்தரக் கட்டிடம், பேராவூரணித் தொகுதி அரிசன நலப்பள்ளிகள் 487—488

கோவைத்தம்பி, திரு.—

மின்சார வாரியம் 543,

நிதிநிலை அறிக்கை 1981–82 544—547

துணை நிதிநிலை அறிக்கை

'ச'

சங்கரய்யா, திரு. என்.—

தமிழ்ப் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு 1982 78—83

சட்டநாத கரையாளர், திரு. கி.

தெங்கனிக்கோட்டையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஊர்வலத்தில் போலீஸ் தடியடி (ஒ.தீ.) 58, 262

சட்ட முன்வடிகள்—

இந்திய தண்டனைச் சட்டக் கோவை குற்றவியல் நடைமுறை விதிக்கோவை (தமிழ்நாடு) திருத்த சட்ட முன்வடிவு 1982

ஆ.நி. 177—219

பிரி. நி. 219

நிறைவேற்றுதல் 220

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1982

ஆ.நி. 128—171, 175

பிரி. ஆ. 175—176

நிறைவேற்றுதல் 176—177

ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1982

ஆ.நி. 128—172, 173

பிரி. ஆ. 173—174

நிறைவேற்றுதல் 174

ச—தொடர்ச்சி. பக்கங்கள்.

ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1982
ஆ.நி. 123—1?2
பிரி.ஆ. 1?2
நிறைவேற்றுதல் 1

கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு 1982
ஆ.நி. 107—126
பிரி.ஆ. 126—127
நிறைவேற்ற 127

கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ்க் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு, 1982
ஆ.நி. 284
ஆ.நி. 285—342
பிரி.ஆ. 342—343
நிறைவேற்றுதல் 344—345

சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 198? (ஆ.நி.) ?

சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1982
ஆ.நி. ?45
ஆ.நி. ?4—354
பிரி.ஆ.
நிறைவேற்றுதல் 354

தமிழ்ப் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு, 1982
ஆ.நி. 67—10?
பிரி.ஆ. 106—107
நிறைவேற்றுதல் 107

நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1982
ஆ.நி. 345
பிரி.ஆ.
நிறைவேற்றுதல்

பொதுச் சொத்து (அழித்தல், இழப்பு ஆகியவற்றைத் தடுத்தல்) சட்ட முன்வடிவு, 1982 (ஆ.நி.) 521—529

சந்திரசேகரன், திரு. ஏ.—
வாடிப்பட்டி, ஆசிரியை, ஊராட்சி ஒன்றியப் பள்ளி காவலரால் தாக்கு (ஒ.தீ.) 492, 493
496—497





ச—தொடர்ச்சி. பக்கம்.

சமரசம், டாக்டர் திரு. கே.—
ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1982
ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1982,
ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல் திருத்த சட்ட முன்வடிவு, 1982 147—151

சர்க்கரை—
புகளூர் சர்க்கரை ஆலை கரும்பை எடுக்காததால் சாகுபடியாளர் பாதிப்பு (க.ஈ.) 62—67
விநியோகம், அளவுக் குறைப்பு, (க.ஈ.) 51?—520

சாலைகள்—
பாஞ்சாலங்குறிச்சிக்கு, ஓட்டப்பிடாரம் வழியாகச் செல்லும் சாலை, பழுது, 239

சித்தன் திரு. என். எஸ். வி.—
மதுரை (மாவட்ட நகராட்சிகள்) குடிநீர்த் திட்டம் 33

சிதம்பரம், திரு. சி. த.—
ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 198?
ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த, சட்ட முன்வடிவு, 1982
ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1982 1?8 160, 161

சிவசாமி, திரு. செ.—
தெங்கனிக்கோட்டையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஊர்வலத்தில் போலீஸ் தடியடி (ஒ.தீ.) 2?2
பாண்டிக்கண்மாய் கிராமம், டிரான்ஸ்பார்மர் மாற்றுதல் ?25—22?
மின்சார வாரியம், நிதிநிலை அறிக்கை, 1981-8?
துணை நிதிநிலை அறிக்கை, 19?0—81 40?—411

சிவப்பிரகாசம், திரு. சி.—
கொல்லிமலை பெரியாற்றின் குறுக்கே அணை 33—3?

சிறுசேமிப்பு—
விளம்பரம் ?8—460

சின்னசாமி, திரு. எம்.—
கட்டிடத் தொழிலாளர் குடும்பத்திற்கு இழப்பீடு 43—45
சென்னை. சுப்ரீம் கோர்ட்டின் பெஞ்சு ?70—4?4
புகளூர் சர்க்கரை ஆலை கரும்பை எடுக்காததால் சாகுபடியாளர் பாதிப்பு (க.ஈ.) 62, ?4—65
விடுதிகள், ஆதிதிராவிடர், தேர்ந்தெடுக்கும் முறை 488—490

பக்கம்.

ச—தொடர்ச்சி.

சுந்தரம், திரு. கே. ஆர்.—
குடியாத்தம் அருகே கே. வி. குப்பம், மாடு விடும் திருவிழாவின்போது போலீஸ் துப்பாக்கி சூடு (ஒ.தீ.) 49, 52

சுந்தரம், திரு. ப.—
திருப்பத்தூர், அரிசன மாணவிகள் இல்லம் 41—43

சுந்தரராஜ் திரு. நா.—
இந்திய தண்டனைச் சட்டக் கோவை குற்றயியல் நடைமுறை விதிக்கோவை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1982 200—203
எதிர்க் கட்சித் தலைவர் செல்லும் பாதையில் வெடிகுண்டு வெடித்துள்ளது என்ற செய்தி (த.கோ.) 393
கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ் குற்றஞ் செய்பவர்கள் குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு, 1982 296—301
வாடிப்பட்டி, ஆசிரியை, ஊராட்சி ஒன்றியப் பள்ளி, காவலரால் தாக்கு, (ஒ.தீ.) 492—493

சுப்பிரமணியன் திரு. உ.—
குடியாத்தம் அருகே கே.வி குப்பம், மாடு விடும் திருவிழாவின்போது போலீஸ் துப்பாக்கி சூடு (ஒ.தீ.) 49
சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 349—350
வாடிப்பட்டி, ஆசிரியை ஊராட்சி ஒன்றியப் பள்ளி, காவலரால் தாக்கு (ஒ.தீ.) 492—493

சுவாமிநாதன், வி. வி.—
தமிழ்ப்பல்கலைக் கழக சட்ட முன்வடிவு, 1982 92—98

செங்கோட்டையன், திரு. கு. அ.—
புகளூர் சர்க்கரை ஆலை கரும்பை எடுக்காததால் சாகுபடியாளர் பாதிப்பு (க. ஈ.) 52, 66

செடிகள்—
''பார்த்தீனியம்'' நச்சுச் செடி, சேலம் மக்கள் கவலை (க.ஈ.) 274—276

செம்மலை, திரு. செ.—
சேலம் ''பார்த்தீனியம்'' நச்சுச் செடி, மக்கள் கவலை (க.ஈ.) 274, 275, 276



ச—தொடர்ச்சி

பாலசேவிகாக்கள், அரசு ஊழியர்களாக்கல் 255—258
மினி பஸ்கள் வரிச் சலுகை 252—253

சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ.—
மயில் ரங்கம், அணை அமராவதி ஆறு 481

சேதுராமன், திரு. ஏ. எம்—
ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு 1982
ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1982
ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1982 156—158

சொக்கலிங்கம். திரு. கெ.—
எதிர்க்கட்சித் தலைவர் சென்ற பாதை, வெடி குண்டு (ஒ.தீ.) 506
மின்சார வாரியம், நிதி நிலை அறிக்கை, 1981–82
துணை நிதிநிலை அறிக்கை, 1980–81 418—421

சோமு, திரு. என். வி. என்.—
இந்திய தண்டணைச் சட்டக் கோவை குற்றயியல் நடைமுறை விதிக்கோவை (தமிழ்நாடு) சட்ட முன்வடிவு, 1982 203—208
எதிர்க்கட்சித் தலைவர் சென்ற பாதை. வெடி குண்டு (ஒ.தீ.) 506

சௌரிராஜன், டாக்டர் கே.
கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு, 1982 311—313, 344

'த'

தங்கமணி, திரு. கே. எம்.—
வாடிப்பட்டி ஆசிரியை, ஊராட்சி ஒன்றியப் பள்ளி, காவலரால் தாக்கு, (ஒ.தீ.) 492—493

தங்கராசு, திரு. ஏ.
குறிஞ்சிப்பாடி, நெய்வேலி, தாயகம் திரும்பிய தமிழர்கள் வீடுகளில் குடியேறாமை 258—259

தங்கவேல்ராஜ், திரு, பி. எம்—
கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு 1982, 114—116

த—தொடர்ச்சி


மின்சார வாரியம்
நிதிநிலை அறிக்கை 1981
துணை நிதிநிலை அறிக்கை 1980–1982
விவாதம் } 2[illegible]9—[illegible]

தலைவர்—

அறிவிப்புகள் 35

அவை அலுவல்

ஆளுநர் உரைக்கு நன்றி நவிலல் தீர்மானம்

ஆளுநர் செய்தி 259

சுப்பிரமணியன், திரு. உ.—

குடியாத்தம் அருகே கே.வி. குப்பம், மாடு விடும் திருவிழாவின்போது போலீஸ் துப்பாக்கி சூடு (ஒ.தீ.) 49

சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு,

தலைவர்

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்
ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

அமைச்சர் பதில் அளித்ததற்குப் பிறகு உறுப்பினர்கள் கேள்வி கேட்க அனுமதி இல்லை .. 515

ஒத்திவைப்பு எதற்காக என்ற காரணத்தை மட்டும் சொல்ல வேண்டுமே தவிர, ஒத்தி வைத்த பிறகு விவாதிக்க வேண்டிய விஷயங்களை முன் கூட்டியே பேசக் கூடாது .. 265

குடியாத்தம் அருகே கே. வி. குப்பம் என்னும் கிராமத்தில் 13–2–82 அன்று மாடு விடும் திருவிழா (ஜல்லிக்கட்டு) போது போலீசார் துப்பாக்கிப் பிரயோகத்தின் காரணமாக மக்கள் பலர் படுகாயம் அடைந்துள்ளதால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்டமும் பீதியும் குறித்து ..

நிதி அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப் பெற்றது .. 55

சம்பவத்தைப் பற்றி மட்டும் சுருக்கமாகச் சொல்ல வேண்டும். சம்பந்தம் இல்லாததை எல்லாம் பேச வேண்டாம் .. 59

தெங்கனிக் கோட்டையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய ஊர்வலத்தில் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்ததால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து ..

அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பெற்றது .. 262—273




த—தொடர்ச்சி


தலைவர்—தொடர்ச்சி—

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் தொடர்ச்சி—

ஒழுங்குப் பிரச்னை—

உறுப்பினர்கள் திடீரென்று எழுந்து பொத்தாம் பொதுவில் ஒரு ''இன்பர்மேஷன்'' கேட்பது முறையல்ல. முறைப்படிக் கேட்டால், அரசாங்கத்திடமிருந்து பதில் பெற்றுத் தர முடியும் .. 46

விவாதத்தை ஒட்டித்தான் எழுப்பலாமே தவிர, வெளியில் நடக்கும் விஷயம் சம்பந்தமாக எழுப்ப முடியாது .. 397,398

ஒழுங்குமுறை—

அங்கத்தினர்கள் அமைச்சர்களின் இருக்கைக்கு வந்து அவர்கள் அருகில் அமர்வதைத் தவிர்க்க வேண்டும். அப்படி அமர்வதனால் அமைச்சர்கள் வேலை செய்ய முடியாது போகும். அவையில் பேசுகின்றவர்களின் பேச்சைக் கேட்க முடியாமல் போகும். எனவே, அங்கத்தினர்கள் தங்கள் தங்கள் இருக்கைகளில் அமர்வது நல்லது .. 530—534

அங்கத்தினர்கள் அவரவர்கள் இருக்கைகளிலேயே இருக்க வேண்டும் .. 530

கவன ஈர்ப்புகள்—

ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தவர்கள், ஒன்றுக்கு மேற்பட்டிருந்தால் ஒருவருக்கு ஒரு துணைக் கேள்வி தான் அனுமதிப்பது என்பது நடைமுறை, மரபு .. 520

ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் கொண்டு வந்தால், விளக்கம் கேட்பதற்கு ஒவ்வொருவருக்கும் ஒரு முறை மட்டுமே வாய்ப்பளிக்கப் பெறுகிறது .. 283

சுருக்கமாகப் பேச வேண்டும் — 282

சட்ட முன்வடிவின் நோக்கம் குறித்துப் பேச வேண்டுமே தவிர, மானியக் கோரிக்கை மீது பேசுவது போல் பேசக் கூடாது. 155

பேசும்போது தனிப்பட்ட யாரையும் குறிப்பிடாமல் பேச வேண்டும். 293

தகவல் கோரல்—

காலையில் பத்திரிக்கைகளைப் பார்த்து விட்டு அது குறித்து அரசாங்கம் விளக்கம் தர வேண்டுமென்று ஒரு பிரச்சினையை அவையில்

**தலைவர் (தொடர்ச்சி)—**

**தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் — தொடர்ச்சி**

எழுப்புவது சரியாக இருக்காது. எதுவாக இருந்தாலும் ஒரு விதிமுறைக்கு உட்பட்டு கேட்டால் அரசாங்கத்திற்கு பதிலளிக்க இயலும். 49

பால் கமிஷன் அறிக்கை மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கொடுக்கப்பெற்ற ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என ஓர் உறுப்பினர் வற்புறுத்தியபோது தலைவர் அளித்த குறிப்புரையாவது:

"அது குறித்து எற்கெனவே மூன்று நாட்கள் விவாதம் நடந்து இருக்கிறது. எனவே ஒத்திவைப்புத் தீர்மானத்தை விதி 54-ன் கீழ் அனுமதிப்பதற்கில்லை." 260

**நீக்கம்—**

அமைச்சர் ஏதோ கூறி அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டவை நீக்கப் பெற்றது. 165

அமைச்சர் மறுத்த குற்றச்சாட்டு நீக்கப் பெற்றது. 212, 179

அமைச்சரைப் பற்றித் தனிப்பட்ட முறையில் கூறியவை நீக்கப் பெற்றது. (ச.மு.வ.) 195

அரசினர் சட்டமுன்வடிவின் மீது பேசுகையில் கூறப்பெற்ற ஒருவரின் பெயர் நீக்கப்பெற்றது. 341

அரசினர் சட்ட முன்வடிவின் மீது பேசுகையில் கூறப்பெற்ற வார்த்தைகள் நீக்கப்பெற்றன. 142, 143, 144, 299, 301,

உண்மையற்ற குற்றச்சாட்டு நீக்கப்பெற்றது. 16 161

உறுப்பினர் குறிப்பிட்ட ஒரு வார்த்தையை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கியபோது தலைவர் அளித்த குறிப்புரையாவது:—

"பேசுகின்ற உறுப்பினர்கள் முறையோடு பேச வேண்டும். சபையில் என்னென்ன வார்த்தைகளைப் பயன்படுத்தலாம் என்பதை அறிந்து பேச வேண்டும்." 473

ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குச் சம்பந்தமில்லாமல் பேசியவை நீக்கப்பெற்றன. 501, 502, 507, 510, 511



**தலைவர் தொடர்ச்சி—**

**தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் தொடர்ச்சி—**

**நீக்கம் தொடர்ச்சி—**

ஒரு சட்டமுன்வடிவைக் குறித்துப் பயன்படுத்திய சொல் நீக்கப்பெற்றது. (ச.மு.வ.) 166

ஒரு பத்திரிகை, அமைச்சரைப் பற்றி எழுதியதற்காகச் சட்டம் கொண்டுவரப்பட்டது என்பதைத் தொடர்ந்து கூறியவை நீக்கப் பெற்றன. (ச.மு.வ.) 210,—211

சட்டத்தைப் பற்றிக் கூறிய வாசகம் நீக்கப் பெற்றது.(ச.மு.வ.) 218,—219

தலைவரைப் பார்த்துக் கூறப்பட்ட வார்த்தைகள் நீக்கப்பெற்றன. 515

பத்திரிகைகளுக்கு அக்ரெடிஷன் அளிப்பது எல்லாம் தலைவர் பொறுப்பிலுள்ள விவகாரம். அதைப்பற்றியெல்லாம் விவாதிக்கக் கூடாது என்று நீக்கப்பெற்றது. (ச.மு.வ.) 184

பத்திரிகையில் வந்தவைகளை முன் அனுமதி பெறாமல் காட்டி கூறப்பெற்ற வார்த்தைகள் நீக்கப்பெற்றன. 181

பத்திரிகையில் வந்தவற்றைப் படிப்பது முறையல்ல என்பதாகக் கூறி அந்த பகுதி நீக்கப்பெற்றது. (ச. மு. வ.) 180

மேலவை உறுப்பினர் ஒருவரைப் பற்றிக் குறிப்பிட்டது சரியல்ல என அப்பகுதி நீக்கப் பெற்றது.

வெளிநடப்பு செய்யும்போது கோஷம் எழுப்புவது முறையல்ல என்று கூறி நீக்கப் பட்டது. 46,48

வெளிநடப்பு செய்வதாகக் கூறி, பிறகு கூறியவை நீக்கப்பெற்றன. 47

**பேசும் முறை—**

தலைவர் இருக்கையில் யார் அமர்ந்திருந்தாலும், அவருக்குத் தலைவருக்குள்ள எல்லா மரியாதையும் கொடுக்கப்படுகிறது. அவருக்கு எல்லா அதிகாரங்களும் இருப்பதால் "மாற்றுத் தலைவர்" என்றழைக்காமல் "தலைவர்" என்று அழைப்பதுதான் முறையாகும். அவர் தீர்ப்பைப்பற்றியும் விமர்சனம் செய்யக் கூடாது. 155—155

தலைவரை "மிஸ்டர் சேர்மன்" என்றும் அழைக்கலாம், தவறில்லை. 156

## த—தொடர்ச்சி


தலைவர்—தொடர்ச்சி—

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் தொடர்ச்சி—

விவாதம்—

மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை அண்ணன்—தம்பி என்று உறுப்பினர்களைக் குறித்துப் பேசக்கூடாது. 418

வினாக்கள் விடைகள்—

கேள்விகளைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும் (து.வி.) 484

கேள்வி நேரத்திலே வேண்டுகோள் விட முடியாது. 32

துணைக் கேள்வி மூலக் கேள்வியை ஒட்டிக் கேட்கப்பட வேண்டும். 44

நீளமான விடையாக இருந்தால் அவையின் முன் அறிக்கையாக வைத்துவிட வேண்டும். 44

பொதுப்படையாகக் கேட்க வேண்டும் (து.வி.) 229

மூலக் கேள்வியை ஒட்டியே கேட்கப்பட வேண்டும். (து.வி.) 47

தனுக்கோடித்தேவர், திரு. கே.—

வாடிப்பட்டி, ஆசிரியை, ஊராட்சி ஒன்றியப் பள்ளி, காவலரால் தாக்கு, (ஒ.தீ.) 492—493

தாமரைக்கனி திரு. இரா.—

ஆதிதிராவிடர்கள் மீது கொடுமை, விசாரிக்க தனி நீதிமன்றம். 25—29

கட்டிடத் தொழிலாளர் குடும்பத்திற்கு இழப்பீடு 43—45

சுய வேலை வாய்ப்பு, கூட்டுறவு அமைப்பு, 474—475

திருவில்லிப்புத்தூர் தொகுதி, பனைபொருள் தொழில்கூட மையம். 253—255

மூளைக்காய்ச்சல், குழந்தைகள் இறந்தமை (க.ஈ.) 276—280

திருநாவுக்கரசு, திரு. எஸ்.—

நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதிகள் திருத்த) சட்ட முன்வடிவு, 1982 345

புகளூர் சர்க்கரை ஆலை கரும்பை எடுக்காததால் சாகுபடியாளர் பாதிப்பு (க.ஈ.அ.) 62—64,65

66—67

திருமாறன், திரு. பெ.—

புதுக்கோட்டை முதுகலை வகுப்புகள், மன்னர் கல்லூரி, 469—470

திருவேங்கடம், திரு. பெ. சு.—

ஊரக ஊழியர்கள் பயிற்சி மற்றும் பார்வையிடல் திட்டம். 236—237





ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1982 ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1982, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த சட்டமுன்வடிவு, 1982. 175—176

எதிர்க்கட்சித் தலைவர் சென்ற பாதை, வெடிகுண்டு (ஒ.தீ.) 506

குடியாத்தம் அருகே கே. வி). குப்பம், மாடு விடும் திருவிழாவின் போது போலீஸ் துப்பாக்கி சூடு (ஒ.தீ.) 50

51,52—53

மின்சார வாரிய, நிதிநிலை அறிக்கை, 1981—82 துணை நிதிநிலை அறிக்கை, 1980—81 350—366

மூளைக்காய்ச்சல், குழந்தைகள் இறந்தமை (க.ஈ.) 276,282

தீர்த்தராமன் திரு. ப.—

ஓட்டல்கள், பலகாரங்கள், விலை உயர்வு (க.ஈ.) 521

தீர்மானங்கள்—

ஒத்திவைப்புத் தீர்மானம் பார்க்க—தலைவர் 65—75

தீர்மானங்கள்—

பேரவை நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப் பெறுதல். 575

விதி 32 (1)—ஐத் தளர்த்தல் 284

விதி 58—ஐத் தளர்த்தல், 492

துரைசாமி திரு. பி. எஸ்—

குள்ளாசெட்டி அணை, மராமத்து, 486—481

துரைமுருகன் திரு.—

எதிர்க்கட்சித் தலைவர் செல்லும் பாதையில் வெடிகுண்டு வெடித்துள்ளது என்ற செய்தி (த.கோ.) 397—398

எதிர்க்கட்சித் தலைவர் சென்றபாதை வெடிகுண்டு (ஒ.தீ.) 506

கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ் குற்றஞ் செய்பவர்கள் குண்டர்கள் விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு, 1982. 341

சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1982, 342—349

பொதுச் சொத்து (அழித்தல், இழப்பு ஆகிய வற்றை தடுத்தல்) சட்டமுன்வடிவு, 1982, 527—528

தொழிலாளர்கள்—

கட்டிடத் தொழிலாளர் குடும்பத்திற்கு இழப்பீடு 43—45

த—தொடர்ச்சி


நீலகிரி மாவட்டம் அரசு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் சம்பளம். 233—235

தொழிற்சாலைகள்—

காஞ்சிபுரம் ஓரிக்கை தொழிற்பேட்டை 231—232

பனை பொருள் தொழில்கூட மையம் 253—255

மாமண்டூர் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை 237

வடார்க்காடு மாவட்டம் வெடிமருந்து தொழிற்சாலை .. 485—486

வில்லிவாக்கம் தொகுதி செங்கல் தயாரிக்கும் தொழிற்சாலைகள், குடியிருப்புப் பகுதிகள் பாதிப்பு .. 239—240

வேதாரண்யம், இராசயனத் தொழிற்சாலை .. 483—485


ந


நல்லப்பன், திரு. தி. கா.

கடன் நிவாரண (திருத்த) சட்டமுன்வடிவு, 1982.. 119—120

கீழ்பவானி பாசன பிரதான கால்வாய், மராமத்துப் பணி .. 35—36

குடியாத்தம் அருகே கே.வி. குப்பம், மாடுவிடும் திருவிழாவின் போது போலீஸ் துப்பாக்கி சூடு (ஒ.தீ.) .. 50

மின்சார வாரியம்,
நிதிநிலை அறிக்கை 1981-82,
துணை நிதி நிலை அறிக்கை, 1980-81
விவாதம் .. 541—543

நவநீதகிருஷ்ண பாண்டியன், திரு. ஆர்.— 521

உணவகங்கள், பலகாரங்கள், விலை உயர்வு (க.ஈ.) .. 522—523

தெங்கனிக் கோட்டையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஊர்வலத்தில் போலீஸ் தடியடி (ஒ.தீ.).. 273

மின்சார வாரியம்
நிதிநிலை அறிக்கை, 1981-82,
துணை நிதிநிலை அறிக்கை 1980-81—
விவாதம் .. 559—561

வாடிப்பட்டி, ஆசிரியை, ஊராட்சி ஒன்றியப் பள்ளி, காவலரால் தாக்கு (ஒ.தீ.) .. 492, 493, 503

நிலங்கள்

சென்னை, ஆதி ஆந்திரர்கள் பட்டா .. 462—463

திருச்செந்தூர் ஆவுடையார் குளம், நில ஆக்கிரமிப்பு .. 9

மண்டபம், புறம்போக்கு நிலம், மத்திய அரசு கோரிக்கை .. 460—462




ந—தொடர்ச்சி


நீக்கம்—

46, 47, 48, 142, 143, 144, 160, 161, 165, 166, 179, 181, 184, 195, 210, 211, 212, 218, 219, 299, 301, 341, 473, 501, 502, 507, 510, 511, 515.

நீதிமன்றங்கள்—

சென்னை, சுப்ரீம் கோர்ட்டின் பெஞ்ச். .. 470—474

நுகர்பொருள்—

சேலம் மாவட்டம் ஆத்தூரில் நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்கில் நெல் மூட்டைகள் காணாமல் போனது (க.ஈ.) .. 56—61

நியாய விலைக் கடைகள், மக்கள் குழு மூலம் கண்காணிப்பு .. 3—8

நெடுஞ்செழியன், டாக்டர் இரா.—

உணவகங்கள், பலகாரங்கள், விலை உயர்வு (க.ஈ.அ.) .. 521—522
.. 523—524

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் (த.கோ.) .. 47—48

எதிர்க்கட்சித் தலைவர் சென்ற பாதை, வெடி குண்டு (ஒ.தீ.) .. 511—514

குடியாத்தம் அருகே கே. வி. குப்பம், மாடுவிடும் திருவிழாவின் போது போலீஸ் துப்பாக்கிசூடு (ஒ.தீ.) .. 54—55

சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு 1982 .. 67

சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 .. 345—346
.. 350—354

சர்க்கரை விநியோகம், அளவுக் குறைப்பு, (க.ஈ.அ.) .. 516—518
.. 519—520

சேலம் மாவட்டம் ஆத்தூரில் நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்கில் நெல் மூட்டைகள் காணாமல் போனது (க.ஈ.அ.) .. 56, 58, 59, 60, 61

திருச்செந்தூர் சம்பவம் பற்றிய பால் கமிஷன் அறிக்கை மீது நடவடிக்கை (த.கோ.) .. 261

தெங்கனிக்கோட்டையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஊர்வலத்தில் போலீஸ் தடியடி (ஒ.தீ.).. 271—273

பால் கமிஷன் அறிக்கை மீது நடவடிக்கை (த. கோ.) .. 49

ந—தொடர்ச்சி


நெடுஞ்செழியன், டாக்டர் இரா.—தொடர்ச்சி

பேரவை நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல். (தீ) .. 575

மூளைக்காய்ச்சல், குழந்தைகள் இறந்தமை (க.ஈ.) 282—284

வாடிப்பட்டி ஆசிரியை, ஊராட்சி ஒன்றியப் பள்ளி காவலரால் தாக்கு. (ஒ. தீ.) .. 504—505

விதி 32 (1)—ஐத் தளர்த்தல். 284

விதி 58—ஐத் தளர்த்தல், (தீ) 492

நெடுமாறன் திரு. ப.—

தமிழ்ப் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு 1982. 70, 85–92

தெங்கனிக்கோட்டையில் இந்திய கம்யூனிஸ்ட்கட்சி ஊர்வலத்தில் போலீஸ் தடியடி. (ஒ. தீ.) .. 58
262—265
267—273

பழனி தாலுக்கா, குதிரை ஆறு அணை. 481—483

மின்சார வாரியம், நிதிநிலை அறிக்கை, 1981-82, துணை நிதிநிலை அறிக்கை 1980-81, .. 553—559

வாடிப்பட்டி ஆசிரியை, ஊராட்சி ஒன்றியப்பள்ளி காவலரால் தாக்கு. (ஒ. தீ.) .. 492
495—496


'ப'


பலராமன் திரு. இல.

ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு 1982

ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு 1982. ..

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு. .. 135—141

குடியாத்தம் அருகே கே. வி. குப்பம், மாடுவிடும் திருவிழாவின்போது போலீஸ் துப்பாக்கி சூடு. (ஒ. தீ.) .. 50—51

பிற்பட்டோர் வேலைவாய்ப்பு. .. 455—458

மின்சார வாரியம், நிதிநிலை அறிக்கை' 1981-82 துணை நிதிநிலை அறிக்கை, 1980-81. .. 371—382

பழனிமுத்து திரு. சி.—

சேலம் மாவட்டம்ஆத்தூரில் நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்கில் நெல் மூட்டைகள் காணாமல் போனது (க. ஈ.) .. 56, 59-60

பழனியப்பன் திரு. கு. பா.—

ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு 1982

ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு 1982. ..

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு 1982. 128—129

கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு 1982 [illegible]

சேமிப்புக் கிடங்கு வாரியம், [illegible]




ப—தொடர்ச்சி


பழனிவேல் திரு. என்.—

சர்க்கரை விநியோகம், அளவுக் குறைப்பு, (க.ஈ.) 516
518—519

சென்னை, சுப்ரீம் கோர்ட்டின் பெஞ்ச், .. 470—474

பருத்தி, தீவிர சாகுபடி திட்டம் .. 237—239

பழனி தாலுக்கா, குதிரை ஆறு அணை, .. 481—483

வாடிப்பட்டி ஆசிரியை, ஊராட்சி ஒன்றியப்பள்ளி காவலரால் தாக்கு, (ஒ. தீ.) .. 492—493

பாசனம்—

கீழ்பவானி பாசன பிரதான கால்வாய், மராமத்து பணி. .. 35—37

பழனி தாலுக்கா, குதிரை ஆறு அணை, .. 481—483

குள்ளாசெட்டி அணை, மராமத்து, .. 480—481

கொல்லிமலை பெரியாற்றின் குறுக்கே அணை .. 33—34

கோதையாறு நீர்ப்பாசனம், கோழிப் போர்விளை கிளைக் கால்வாய் திட்டம். .. 37—38

சாத்தனூர் அணை, புதிய வாய்க்கால், 479—480

மயில்ரங்கம், அமராவதி ஆறு, 481

பாபு ஜனார்த்தனன் திரு—

ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு 1982

ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு 1982

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த சட்டமுன்வடிவு 130—135

எதிர்க்கட்சித் தலைவர் சென்ற பாதை, வெடிகுண்டு (ஒ.தீ.). 506

குடியாத்தம் அருகே கே. வி. குப்பம், மாடுவிடும் திருவிழாவின் போது போலீஸ் துப்பாக்கி சூடு (ஒ.தீ.) 50

புலவர் படித்த செகண்டரிகிரேடு ஆசிரியர்கள், ஊக்க ஊதிய உயர்வு 11—13

வாடிப்பட்டி, ஆசிரியை, ஊராட்சி ஒன்றியப் பள்ளி, காவலரால் தாக்கு, (ஒ.தீ) 492—493

பாரமலை, திரு. க.—

பாஞ்சாலங்குறிச்சிக்கு ஒட்டப்பிடாரம் வழியாகச் செல்லும் சாலை, பழுது 239

பாலகிருஷ்ணன், திரு. ச.

ஈரோடு நகராட்சி, திரையரங்கம் மற்றும் திருமண மண்டபம் கட்டுதல் 240—241

ப—தொடர்ச்சி

**பாலகிருஷ்ணன் திரு ச.—தொடர்ச்சி.**
கடல் நீர், குடிநீராக்கல், .. 477—478
கீழ்பவானி பாசன பிரதான கால்வாய், மராமத்துப்பணி 35—37
புகளூர் சர்க்கரை ஆலை கரும்பை எடுக்காததால் சாகுபடியாளர் பாதிப்பு (க. ஈ.) 62, 65

**பாலசுப்பிரமணியன் திரு வேடசந்தூர் வி.பி—**
இந்திய தண்டனைச் சட்டக் கோவை குற்றவியல் நடைமுறை விதிக்கோவை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு 1982 185—194
சென்னை சட்டக் கல்லூரி, மாலை நேர எம்.எல், பட்டப்படிப்பு 19—22
மின்சாரம், பம்பு செட்களுக்கு இணைப்பு 227—230
விடுதிகள், ஆதிதிராவிடர், தேர்ந்தெடுக்கும் முறை, 488—490

**பாலன் திரு சு—**
எதிர்க்கட்சித் தலைவர் சென்ற பாதை, வெடிகுண்டு, (ஒ.தீ.) 506
வாடிப்பட்டி, ஆசிரியை, ஊராட்சி ஒன்றியப் பள்ளி, காவலரால் தாக்கு, (ஒ. தீ.). 492—493

**பிரபாகரன், திரு. ஜே. சி. டி.—**
வில்லிவாக்கம் தொகுதி, செங்கல் தயாரிக்கும் தொழிற்சாலைகள், குடியிருப்புப் பகுதிகள் பாதிப்பு 239—240

**பிற்பட்டோர்—**
வேலைவாய்ப்பு, 455—458

**புருஷோத்தமன் திரு து.**
எதிர்க்கட்சித் தலைவர் சென்ற பாதை, வெடிகுண்டு. (ஒ.தீ.) 506
சென்னை, சுப்ரீம் கோர்ட்டின் பெஞ்ச், 470—474

**பூங்காவனம் திரு என். ஏ—**
ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு 1982
ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த சட்டமுன்வடிவு 1982
ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த சட்டமுன்வடிவு 1982 144—147
குடியாத்தம் அருகே கே.வி. குப்பம், மாடு விடும் திருவிழாவின் போது, போலீஸ் துப்பாக்கி சூடு (ஒ.தீ.) 50, 53—54
வடார்க்காடு மாவட்டம், கரிகரி பகுதி, தொழு நோய். மருத்துவமனை 241—244
வடார்க்காடு மாவட்டம், வெடிமருந்து தொழிற்சாலை. 485—487



ப—தொடர்ச்சி

**பூங்காவனம் திரு. என். ஏ—தொடர்ச்சி.**
..பேருந்துகள்
மினி பஸ்களுக்கு வரிச் சலுகை 252—253

**பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ்.**
சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 350
மின்சார வாரியம், நிதிநிலை அறிக்கை, 1981–1982 துணை நிதிநிலை அறிக்கை, 1980–81 398—403

**பொன்னுரங்கம் திரு. ப.—**
இந்திய தண்டனைச் சட்டக் கோவை குற்றவியல் நடைமுறை விதிக்கோவை (தமிழ்நாடு) சட்ட முன்வடிவு 1982 177, 218, 212—220
எதிர்க்கட்சித் தலைவர் சென்ற பாதை, வெடிகுண்டு (ஒ.தீ.) 506
கடன் நிவாரண (திருத்த) சட்டமுன்வடிவு 1982 112—114
குடியாத்தம் அருகே கே. வி. குப்பம், மாடுவிடும் திருவிழாவின் போது போலீஸ் துப்பாக்கி சூடு (ஒ. தீ) 50
வாடிப்பட்டி, ஆசிரியை ஊராட்சி ஒன்றியப் பள்ளி, காவலரால் தாக்கு, (ஒ.தீ.) 492—493, 500—502

**பொன்னையன் திரு. சி.**
கடன் நிவாரண (திருத்த) சட்டமுன்வடிவு 1982 107, 121—127
கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின்கீழ் குற்றஞ் செய்பவர்கள் குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள் சட்ட விரோதமாக பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு, 1982 285, 323—327, 338—341, 344
பொதுச் சொத்து (அழித்தல், இழப்பு ஆகியவற்றை தடுத்தல்) சட்டமுன்வடிவு, 1982 528

**போக்குவரத்து**
ஆட்டோரிக்ஷா மற்றும் டாக்சி, கட்டணங்கள் 247—249
டாக்சி மற்றும் ஆட்டோரிக்ஷாக்கள், மீட்டர் சான்றிதழ்கள் 249—251
வேதாரண்யம், நகரப்பேருந்து 251—252

'ம'


மக்கள் நல்வாழ்வு

நாகர்கோவில், பாதாள சாக்கடை .. 475—476

மணி திரு. டி.—

ஊராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு 1982
ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு 1982
ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த சட்டமுன்வடிவு 1982 .. 152—154

குடியாத்தம் அருகே கே. வி. குப்பம், மாடு விடும் திருவிழாவின்போது போலீஸ் துப்பாக்கி சூடு (ஒ. தீ) .. 49

மணிமாறன் திரு. ஆர்.—

பாட நூல்கள். கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் பாடல்கள், .. 463—465

பாலசேவிகாக்கள், அரசு ஊழியர்களாக்கல் .. 255—258

மருத்துவம்—

தொழுநோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள் உதவித்தொகை .. 245—247

மருத்துவமனைகள்—

வடஆற்காடு மாவட்டம் கரிகரி பகுதி, தொழு நோய் மருத்துவமனை, .. 241—244

மாணிக்கம், திரு. எம். எஸ்.—

வேதாரண்யம், நகரப் பேருந்து .. 251—252

மாவட்ட நிர்வாகம்—

மதுராந்தகம் தாலுகா பிரித்தல் .. 10—11

மின்சாரம்—

பம்புசெட்டுகளுக்கு இணைப்பு .. 227—230

பாண்டிக்கண்மாய் கிராமம், டிரான்ஸ்பார்மர் மாற்றுதல் .. 225—622

மின்சார வாரிய நிதி நிலை அறிக்கை, 1981—82 துணை நிதிநிலை அறிக்கை, 1980—81, விவாதம். .. 355—397, 398—421, 529—575

முகமது இஸ்மாயில் திரு. பி.—

இந்திய தண்டனைச் சட்டக்கோவை குற்றவியல் நடைமுறை விதிக்கோவை (தமிழ்நாடு) சட்ட முன்வடிவு 1982. .. 209—210

கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின்கீழ் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபச்சாரக் குற்றஞ் செய் பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது





ம— தொடர்ச்சி

நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாய கரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு, 1982. .. 313—316

கோதையாறு நீர்ப் பாசனம், கோழிப் போர் விளை சிளைக் கால்வாய் திட்டம் .. 37—33

முத்துசாமி திரு. சு.—

உறுப்பினர்களைக் கட்டுப் படுத்துதல் (ஒ. பி.) .. 535

முத்துராமலிங்கம் திரு. இ.—

ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு 1982
ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு 1982. ..
ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரி நியமித்தல்) திருத்த சட்டமுன்வடிவு, 1982. 161—163

ஓட்டல்கள், பலகாரங்கள். விலை உயர்வு (க. ஈ.) .. 521

மொழிகள்—

முத்திரைத் தாள்கள், தமிழ் மொழி இடம் பெறுதல். .. 23—25

'ர'

ரகுமான்கான் திரு. க.—

இந்திய தண்டனைச் சட்டக் கோவை குற்றவியல் நடைமுறை விதிக் கோவை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு 1982. .. 177—185, 213, 215, 218, 291

எதிர்க்கட்சித் தலைவர் சென்ற பாதையில் வெடி குண்டு வெடித்துள்ளது என்ற செய்தி (க. கோ.) .. 397

எதிர்க்கட்சித் தலைவர் சென்ற பாதை வெடி குண்டு (ஒ. தீ.) .. 506—508

கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் மருந்துப் பொருள் சட்டத்தின்கீழ் குற்றஞ் செய் பவர்கள், குண்டர்கள், விபச்சாரக் குற்றம் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாய கரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு, 1982. .. 285—293, 327, 328

ர—தொடர்ச்சி

குடியாத்தம் அருகே கே. வி. குப்பம், மாடு விடும் திருவிழாவின்போது போலீஸ் துப்பாக்கி சூடு (ஓ. தீ.) .. 5

சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1982. .. 3[illegible]3

சர்க்கரை விநியோகம், அளவுக் குறைப்பு, (க.சு.) 516, 520

தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்டமுன்வடிவு 1982. 69—78. 103

திருச்செந்தூர் சம்பவம் பற்றிய பால் கமிஷன் அறிக்கைமீது நடவடிக்கை (த. கோ.) .. 260

மின்சார வாரியம், நிதிநிலை அறிக்கை 1981—82 துணை நிதிநிலை அறிக்கை 1980—81, விவாதம். 575

வாடிப்பட்டி, ஆசிரியை, ஊராட்சி ஒன்றியப் பள்ளி, காவலரால் தாக்கு, (ஓ. தீ.) .. 492—493

ரமணி திரு. கு.—

ஆட்டோரிக்ஷா மற்றும் டாக்சி கட்டணங்கள் 247—249

மின்சார வாரியம், நிதிநிலை அறிக்கை, 1981–82 துணை நிதிநிலை அறிக்கை, 1980—81 விவாதம் .. 417 5[illegible]6—541

'வ'

வரதராஜு திரு. என்—

கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு 1982. . 116—119

தெங்கனிக் கோட்டையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஊர்வலத்தில் போலீஸ் தடியடி (ஓ.தீ.) 262

மின்சார வாரியம், நிதிநிலை அறிக்கை, 1981–82 துணை நிதிநிலை அறிக்கை, 1980—81 .. 389—397

வாடிப்பட்டி, ஆசிரியை, ஊராட்சி ஒன்றியப் பள்ளி, காவலரால் தாக்கு, (ஓ. தீ) .. 492—493 497—499

வரிகள்—

மினி பஸ்கள், சலுகை 252—253

வாரியங்கள்—

குடிசை மாற்று வாரியம், கட்டப்பட்ட வீடுகள் 30—33

சேமிப்ப கிடங்கு வாரியம், ஒழுங்கீனங்கள் 1—3



வ—தொடர்ச்சி

வின்சென்ட், திரு. மி.—

"கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ்செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு, 1982. 293—296

நாகர் கோவில், பாதாள சாக்கடை 475–476

விஜயராகவன் திரு. பொ.—

வாடிப்பட்டி ஆசிரியை, ஊராட்சி ஒன்றியப் பள்ளி, காவலரால் தாக்கு, (ஓ. தீ.) 492 493 502 503

வீட்டு வசதி—

குடிசை மாற்று வாரியம், கட்டப்பட்ட வீடுகள் 33

வெங்கடசுப்பிரமணியம் திரு. ப.—

கடன் நிவாரண திருத்த சட்ட முன்வடிவு 1982 120—121

காஞ்சிபுரம் ஜரிகை தொழிற் பேட்டை 231—232

சேலம் மாவட்டம் ஆத்தூரில் நுகர் பொருள் வாணிபக் கழகக் கிடங்கில் நெல் மூடைகள் காணாமல் போனது (க.சு) 56,58

நகராட்சிகள் அபிவிருத்தி, மத்திய அரசின் திட்டம் 29—30

வெங்கட ரெட்டி, திரு. டி.—

சம்பள வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 347—354

தமிழ்பல்கலைக் கழக சட்டமுன்வடிவு 1982 99—101

வெளிநடப்பு—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகளை எடுத்துக் கொள்ளாதது (த. கோ.) 43

சட்டமுன்வடிவு நிறைவேற்றப்படும் பொழுது அவையில் இருக்க விரும்பாமை 219

வேணுகோபால் திரு. ந.—

குடியாத்தம் அருகே கே.வி. குப்பம் மாடு விடு திருவிழாவின் போது போலீஸ் துப்பாக்கி சூடு (ஓ.தீ.) 49

வேளாண்மை—

பருத்தி, தீவிர சாகுபடி திட்டம் 237—239

'ஹ'

ஹண்டே டாக்டர் எச்.வி.

மூளைக் காய்ச்சல், குழந்தைகள் இறந்தமை 276—280
(க.ஈ.அ.) 281—283

ஹாஜாசெரீப் திரு கே. எஸ். ஜி,
பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஊழியர் ஒருவரைத் தாக்கியது குறித்து. (த. கோ) 491

ஹேமச்சந்திரன் திரு. ஜே.—

அமைச்சர்களிடம் மனுக் கொடுப்பது பற்றி (ஒ.பி.) 534

கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்தவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களை தடுக்கும் சட்ட முன்வடிவு, 1982 301—307

குடியாத்தம் அருகே கே.வி. குப்பம், மாடு விடும் திருவிழாவின்போது போலீஸ் துப்பாக்கி சூடு (ஒ. தீ.) 50

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புதன்கிழமை 1982, பிப்ரவரி 17

மாசி 5, துன்மதி, திருவள்ளுவர் 2013

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாரம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''குடிபுறம் காத்துஓம்பிக் குற்றம் கடிதல்
வடுஅன்று; வேந்தன் தொழில்''

குடிமக்களைப் பிறர் துன்புறுத்தாமல் காத்து, ஆவன செய்து ஆதரித்து, குற்றங்கள் செய்தால், அவற்றை மறுமுறையும் செய்யாமல் தடுக்கத் தண்டித்தல் வேந்தனுக்குப் பழி அன்று; அது அவனுக்குரிய தொழில்.

### 1. வினாக்கள்—விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

#### தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தில் நடைபெற்ற ஒழுங்கீனங்கள்

*வினா எண். 221—திரு. கு. பா. பழனியப்பன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) தமிழ்நாடு கிடங்கு வசதி கார்ப்பரேஷன் கிடங்குகளில் கடந்த மூன்றாண்டுகளில் நடைபெற்ற ஒழுங்கீனங்கள் பற்றி அரசுடைய கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (ஆ) அவைமுன் ஒரு விவர அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

---

*220-222 பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

திரு. கு. பா. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே மதுராந்தகத்திலே நெல் மூட்டைகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது தவிர எப்.சி.ஐ.க்குச் சொந்தமான உர மூட்டைகள் 12 டன் காணாமல் போய்விட்டதென்றும், அதற்காக சேமிப்புக் கிடங்கிற்கு ஏறத்தாழ ரூ. 28,640 இழப்பு ஏற்பட்டிருக்கிற தென்றும், அதேபோல், திருவண்ணாமலை எப்.சி.ஐ. நிறுவனத்திற்குச் சொந்தமான கோதுமை களவுபோய், ஏறத்தாழ 2,48,400 ரூபாய் இழப்பு ஏற்பட்டதாகவும், திருச்சியிலே பாங்க் ஆப் பரோடாவிற்குச் சொந்தமான பொருள்கள் காணாமற்போய் 12,60,700 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதாகவும், தூத்துக்குடியில் எஸ்.டி.சி.க்குச் சொந்தமான சர்க்கரை 288.4 மெட்ரிக் டன் காணாமல் போயின, அதன் விலை குறிப்பிடப்படவில்லை, ஏறத்தாழ 18 லிருந்து 20 லட்சம் ரூபாய் அதன் மதிப்பு இருக்கும், இராணிப்பேட்டையில் எப்.சி.ஐ.க்குச் சொந்தமான 212 புழுங்கல் அரிசி மூட்டைகள் காணாமல் போய்விட்ட தென்றும், விழுப்புரம் சேமிப்பு நிலையத்தில் 34,000 ரூபாய் அளவிற்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி பலவேறு நிலைகளில் பல லட்சக்கணக்கான ரூபாய் பல நிறுவனங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக ஆண்டறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். இதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்று பல்வேறு இடங்களில் இப்படிப்பட்ட தவறுகள், கேடுகள் நடைபெற்ற இடத்தில், முறையாக நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது. இந்த அறிக்கையில் திருச்சி சேமிப்பு கிடங்கைப் பற்றியும், விழுப்புரம் சேமிப்பு கிடங்கைப் பற்றியும், கரூர் சேமிப்பு கிடங்கை பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. இதைத் தவிர, திருச்சி சேமிப்பு கிடங்கு, மேட்டுப்பாளையம் சேமிப்பு கிடங்கு, தென்காசி கிடங்கு, செங்கற்பட்டு கிடங்கு ஆகிய இடங்குகளில் தவறுகள் ஏற்பட்டதற்கு காரணமாக இருந்த அதிகாரிகள் தற்காலிகமாக நீக்கிவைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது முறையாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நடவடிக்கை எடுப்பதில் பல்வேறு முறைகள் கையாள வேண்டியிருக்கிறது. சில விஷயங்களில் சர்வீஸ் கமிஷனை நாம் கேட்க வேண்டியிருக்கிறது. இதனால் காலதாமதம் ஏற்படுகிறது. ஆக, அத்தனை அதிகாரிகளின் மீதும், அந்தந்த தன்மைகளின் மீதும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு கு. பா. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல குற்றச்சாட்டுகளுக்கு உடந்தையாக இருந்த அதிகாரிகளுக்கு மேலதிகாரியாக உள்ள உத்திராபதி என்ற அதிகாரியின்மீது அரசு இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும்



எடுக்கவில்லை. விஜிலென்ஸ் அதிகாரிகள் அவர்மீது பல குற்றங்களைக் கண்டுபிடித்தும், அந்த மேலதிகாரிமீது இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இனியாவது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அதுபற்றிய முழு விவரக் குறிப்பு தற்போது என்னிடத்தில் இல்லை. தனியாக எழுதினால், இதுபற்றி விசாரித்து தக்க நடவடிக்கை எடுப்பேன் என்று உறுதி கூறு கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, சினிமா கொட்டைகளில் ஏ.சி. செய்யப்படுவதுபோல், நமது உணவு தானியக் கிடங்குகளில் பூச்சி, புழுக்கள் ஆகியவற்றி லிருந்து பாதுகாக்க ஏ.சி. செய்யப்படுமா? இதுபற்றி மத்திய உணவு அமைச்சராக இருந்த திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பூச்சி புழுக்கள் போன்றவற்றைத் தடுக்க பல்வேறு மருந்து வகைகள் இருக் கின்றன. கிடங்குகளில் அந்தப் பொருள்களை எப்படி சேமித்து வைப்பது என்பதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் எல்லாம் முறைப்படி செய்யப்பட்டு வருகின்றன. இதிலே ஏற்பட்டிருக்கும் கேடுபாடுகள் எல்லாம் பூச்சி புழுக்களால் ஏற்பட்டவை அல்ல: மனித உருவில் சிலபல புழுக்கள் பூச்சிகள் இருப்பதால் இப்படிப் பட்ட கேடுகள் ஏற்பட்டிருக்கின்றன. அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பூச்சி புழுக்களில் இருந்து பாதுகாப்பதற்கு ஒவ்வொரு கொடவுனையும் ஏ.சி. செய்வது என்றால் சேமித்து வைக்கப்படும் உணவுப் பொருள் களுக்குச் செலவழிப்பதைவிட அதிகமாகச் செலவு செய்ய வேண்டிவரும்.

### நியாயவிலைக் கடைகளைக் கண்காணிக்க மக்கள் குழுக்கள் அமைக்கும் திட்டம்

* வினா எண் 222.- திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா—

நியாயவிலைக் கடைகளின் செயல்களைக் கண்காணிக்கவும் சோதனையிடவும் மக்கள் குழுக்கள் அமைக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தமிழ்நாட்டில் ஒவ்வொரு தாலுகாவிலும் நியாயவிலைக் கடைகளை கண்காணிக்க கண்காணிப்புக் குழு ஒன்றை அமைக்கும்படி 14-7-1981 அன்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. குமரி அனந்தன்: அப்படிப்பட்ட குழுக்களில் யார் யார் இடம் பெறவேண்டுமென்று சொல்லுகிற வழிபாட்டுக் குறிப்பு ஏதேனும் அரசாங்கம் கொடுத்திருக்கிறதா? அதிலே சட்டமன்ற உறுப்பினர்கள் உறுதியாக இடம் பெற வழிவகைகள் இருக்கின்றனவா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஒவ்வொரு மட்டத்திலும் கண்காணிப்புக் குழு அமைக்கவேண்டுமென்று 14-7-81 அன்று உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. சட்டமன்ற பேரவை உறுப்பினர்கள் அந்தப் பகுதியைச் சார்ந்தவர்கள், சமூக சேவையாளர் ஒருவர், அந்தப் பகுதியின் நலத்தில் அக்கறை கொண்ட பெண் ஒருவர், ஆதித் திராவிடரில் முக்கியஸ்தர் ஒருவர், கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபாடு உள்ள ஒருவர், பஞ்சாயத்து விரிவாளர், அரசு தாலுகா விநியோக அலுவலாளர் ஆகிய இவ்வளவு பேரும் உறுப்பினர்கள். வட்டாட்சித் தலைவர் குழுவின் தலைவராக இருப்பார்.

சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை சட்டமன்றப் பேரவை, உறுப்பினர்கள், சமூக சேவையாளர் ஒருவர், அந்தப் பகுதியின் நலத்தில் அக்கறை கொண்ட பெண் ஒருவர், ஆதித் திராவிட சமூகத்தைச் சார்ந்த முக்கியஸ்தர் ஒருவர், கூட்டுறவு இயக்க உதவி ஆணையாளர் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள். உணவுப் பொருள் வழங்கு துணை ஆணையாளர் அவர்கள் குழுவுக்குத் தலைமை வகிப்பார்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல நோக்கத்தோடு சில திட்டங்களை வகுத்து சென்ற ஆண்டு 7வது மாதமே அறிவித்ததாகச் சொல்லுகிறார்கள். ஏழு மாதங்கள் ஆன பிறகு கூட இந்தக் குழுக்கள் இயங்குவதாகத் தகவல் இல்லை. ஆகையால், பாம் ஆயில் இல்லை, சர்க்கரை, மண் எண்ணெய், அரிசி ஆகிய எல்லாம் குறைவாகக் கொடுக்கப் படக்கூடிய நிலையில் விரைந்து அந்தக் குழுக்கள் செயல்பட நடவடிக்கைகளை அரசு உடனடியாக மேற்கொள்ளுமா?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நான் முதலிலேயே குறிப்பிட்டதுபோல் 14-7-81ல் அதற்கான உத்தரவு பிறப்பிக்கப் பட்டாலும் சிலபல இடங்களில் அந்தக் குழுக்கள் அமைக்கப்படவில்லை. அவற்றை விரைவாக அமைக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ளும். இந்தக் குழு சிறப்பான முறையில் பணியாற்றினால் அதிலே ஏற்படுகிற குறைபாடுகளைக் களைய வாய்ப்பு வசதிகள் ஏற்படும். ஒவ்வொரு நியாய விலைக் கடைகளிலும் புகார்ப் புத்தகம் வைக்கலாமா என்று ஆலோசித்து வருகிறோம். யார் யார் புகார்களை அதிலே எழுதி வைக்கிறார்களோ அந்தப் புகார்களை குறித்து குழு ஆராய்ந்து பார்த்து அந்தக் குறைகளைக் களைய வழி ஏற்படும். எல்லா வட்டங்களிலும் குழுக்களை விரைவில் அமைக்க முயற்சிகள் அரசால் மேற்கொள்ளப்படும்.

திரு. நி. அன்பழகன்: நியாய விலைக் கடைகளைக் கண்காணிக்க சோதனை டி.எஸ்.ஓ. தவிர மேலும் கூடுதல் அதிகாரிகளை வைத்து மேற்பார்வையிட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்த நியாய விலைக் கடைகளை அங்கிருக்கும் வட்டாட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அலுவலாளர் போன்றவர்கள் அவரவர்கள் எல்லைக்குட்பட்டு சோதனையிட்டு வருகிறார்கள். உணவு வழங்கு துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் சோதனை செய்யலாம், திடீர்ச்சோதனை செய்யலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. விஜிலன்ஸ் என்ற முறையில் காவல் துறையினரில் ஒரு பகுதியினர் திடீர் சோதனையிட வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

(முற்பகல் 9.10)

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளைப் பொறுத்தவரையில் பரிசோதிப்பதற்காக அமைக்கப்பட்ட குழுக்கள் கிராமங்களிலே பல கடைகளுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது, அப்படி அவர்கள் செல்கிற போது அவர்கள் சொந்தப் பணத்தைப் போட்டுத்தான் சென்று பார்க்கவேண்டியிருக்கிறது. ஆகவே அவர்களுக்கு அந்த பஸ் செலவையாவது கொடுக்க அரசு முன்வருமா? அதோடு குழுக்கள் யார் என்பதைத் தெரிவிக்கின்ற முறையிலே அந்தக் குழுவிலே இருக்கின்றவர்களுக்கு இவர்கள் தான் சோதனை செய்ய

வருகிறார்கள் என்பதைக் காட்டுகிற முறையிலே அடையாளக் கார்டுகளைக் கொடுக்க ஆவன செய்ய அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதைப்போன்று அடையாளக் கார்டுகள் அந்தக் குழுவினருக்கு வழங்குவதிலே கடினம் இருக்காது என்று கருதுகிறேன். அதைப்பற்றி அரசு ஆலோசிக்கும். இந்தக் குழுவினருக்கு போக்குவரத்து செலவு மற்றவைகள் வழங்கப்படவில்லை எனில் அதைப்பற்றி ஆராய்ந்து அறிந்து தக்க முடிவுகளை எடுக்கலாம்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இந்தக் கடைகள் ஒவ்வொன்றிலும் இருந்தும் ஏராளமான புகார்கள் வருவதனால் தான் கண்காணிப்பு என்ற பிரச்சினையே வருகிறது. அமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது தாலுகா மட்டத்திலேதான் அந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஒரு தாலுகாவிற்கு பல கடைகள் இருக்கும். அந்தக் குழுக்களினுடைய அதிகாரங்கள் என்ன? அங்கே சென்று பார்த்து விவாதிப்பது மட்டுமா? புகார்கள் மட்டும் கொண்டுவருவதா? குழு உறுப்பினர் களிடம் புகார்கள் ஏதாவது கொடுக்கப்பட்டால் நேரடியாக அந்தக் கடைகளுக்கே சென்று வெரிபை பண்ணுவதற்கு அவர் களுக்கு அதிகாரம் இருக்கிறதா? புகார்களை அவர்கள் அதிகாரி களிடம் சொன்னால் அவர்கள் கேட்கமாட்டார்கள். ஆகவே அந்த உறுப்பினர்களுக்கு அதற்கான அதிகாரங்களையெல்லாம் கொடுக்க அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்தக் குழு ஆலோசனைக் குழுவாகத்தான் பணி யாற்றும். அது செய்யவேண்டிய பணிகள் நியாய விலைக் கடை களைப் பார்வையிடுதல், விநியோகம் செய்யப்படும் பொருள் களின் தரத்தையும் அளவையும் பரிசோதித்தல் போன்ற அதிகாரங்கள் தான் இருக்கின்றனவே தவிர கணக்குவழக்குகளைச் சரிபார்த்தல் மற்றவைகளைச் சரிபார்த்தல் போன்ற அதிகாரங்கள் இல்லை. வழங்கப்படுகின்ற பொருள்கள் தரமானவையா? அளவுப்படி இருக்கின்றனவா? படிக்கற்கள் சரியாக உள்ளனவா என்று பார்க்கவேண்டும். அதுபற்றிய புகார்களை அதிகாரிகளிடம் அனுப்புதல் ஆகிய இந்தப் பணிகள் தான் அவர்களிடம் ஒப்படைக் கப்பட்டிருக்கின்றன.



திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். ஆனால் சென்னையைப் பொறுத்த வரையில் அந்தக் குழு அமைக்கப்படவில்லை. அப்படி இருந்தாலும் கூட அவர்கள் கண்டுபிடித்து அதை அதிகாரிகளிடம் சொல்கிற போது, உடனடியாக அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதில்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது? நானே இரண்டு மூன்று கடைகளிலே போய் பார்த்தேன் எழுதினேன், நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இப்படி நடவடிக்கை எடுக்க மறுக்கும் அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சென்னை நகரில் அந்தக் குழுக்கள் அமைக்கப்படவேண்டும் என்று 20–10–81 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதுவரை அமைக்கப்படாமல் இருந்தால் உடனடியாக அமைப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும். குழுவினர் புகார் செய்தால் உடனடியாகக் கவனித்து அதன்மீது நடவடிக்கை எடுக்கவேண்டு மென்றுதான் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தின் உணர்வின் அடிப்படையில் அந்தப் பணிகளை தீவிரமாக்கவும் முறைப்படுத்தவும் மக்களுக்கு அதிலே நம்பிக்கை ஏற்படுத்தவேண்டுமென்பது தான் அரசின் நோக்கமாக இருக்கின்ற காரணத்தினால் அதற்கு இந்தக் கருத்து தக்க உதவி செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகள் ஒரு ரெவின்யு வில்லேஜுக்கு ஒன்று என்ற முறையிலே அமைக்கப்படுகிறது என்று சொன்னார்கள், ஹேம்லட் ஆக இருக்கின்ற இடங்களிலேயும் ஆயிரம் குடும்பங்களுக்கு மேலாக இருக்குமானால் அங்கேயும் ஒவ்வொரு நியாயவிலைக் கடை வீதம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா? இந்த நியாயவிலைக் கடை களிலே அதிகமான அளவுக்கு சர்க்கரை போன்ற பொருட்கள் கிடைக்காத நிலைமை இருக்கிறது. ஆகவே அங்கே மக்களுக்கு சர்க்கரை போன்ற பொருள்கள் வழங்கப்படுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே. 17,300 நியாயவிலைக் கடைகள் இருக்கின்றன. கூடுமானவரையில் ஒவ்வொரு ரெவின்யு கிராமத்திற்கும் ஒரு நியாயவிலைக் கடை இருக்க வேண்டுமென்ற முறையிலே வைத்திருக்கிறோம். அதி

1982 பிப்ரவரி 17]

பட்சம் கார்டுகள் 2 ஆயிரம் வரை இருந்தால் கொடுக்கலாம். 200, 300, 600 என்ற அளவுக்கும் கார்டுகள் இருக்கின்றன. அதிகமான எண்ணிக்கையைக் குறைத்து நியாயவிலைக் கடைகளை கொஞ்சம் கூடுதல் ஆக்கலாமா என்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, இந்த நியாய விலைக் கடைகளில் வழங்கப்படுகின்ற பொருட்களின் தரத்தையும் அளவையும் கண்காணிப்பதற்காக இந்தக் குழுக்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நியாய விலைக் கடைகளில் மக்களுக்கு வழங்கப்படவேண்டிய பாம் ஆயில் மற்றும் அரிசி போன்ற பொருட்கள் பல இடங்களிலே மொத்தமாக மக்களுக்கு விநியோகிக்கப்படாமல் ஊழல் முறைகளில் கடத்தப்படுகிறது என்ற புகார்கள் வருகின்றன. அந்த மாதிரிப் புகார்களை இந்தக் குழு கண்காணிப்பது என்றால் சம்பந்தப்பட்ட நியாய விலைக் கடைகளின் கணக்குகளைப் பரிசோதித்து உடனடியாகப் பார்வையிடுவதன் மூலமாகத்தான் அதையும் தடுக்க முடியும். ஆகவே அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குழு நடவடிக்கை எடுக்க இயலாது. மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப்போன்று, ஊழல்கள், கடத்தல்கள், வேறு வகையில் உள்ள தன்மைகள் பற்றி புகார்கள் இருந்தால், அவற்றை உரிய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு அந்தக் குழுவிற்கு உரிமை இருக்கிறது. அவற்றின்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். அவர்கள் நடவடிக்கை எடுக்காவிட்டால், விரைவாக நடவடிக்கை எடுத்துத் தீர வேண்டுமென்ற அளவுக்கு அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அதைத் துரிதப்படுத்த வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய நோக்கம். ஆனால், அப்படிப்பட்ட கேடுபாடுகள் அங்கங்கே நடைபெறாமல் இருக்க வேண்டுமென்பதுதான் அந்தக் குழுவினுடைய நோக்கம். அது சிறப்பாக நடைபெற்று வெற்றி பெறுமேயானாலும் அல்லது நடைமுறையிலே அதிலே ஏதாவது சிக்கல்கள் ஏற்பட்டு, மிகப் பரவலாக ஆக்க வேண்டுமென்ற நிலைமைகள் வந்தாலும், எதிர்காலத்திலே, ஏற்பட்ட அனுபவத்தின் அடிப்படையிலே, மேலும் சிந்தித்து, முறையாக, தெளிவாக அமைப்பதற்கு அரசு முயற்சிகளை எடுக்கும்.



1982 பிப்ரவரி 17]

திருச்செந்தூர் ஆவுடையார் குளத்தில் செய்யப்பட்ட ஆக்கிரமிப்பு

* வினா எண் 223—திரு. சி. கேசவ ஆதித்தன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) நெல்லை மாவட்டம், திருச்செந்தூர் ஆவுடையார் குளம் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது?

(ஆ) அதில் எவ்வளவு இடம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், ஆவுடையார் கிராமக் குளத்தின் விஸ்தீரணம் 106.99 ஏக்கர்.

(ஆ) ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடத்தின் விஸ்தீரணம் 7.24 ஏக்கர்.

திரு. சி. கேசவ ஆதித்தன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்பாளர்கள் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குளம் பொதுப் பணித் துறையினுடைய மேற்பார்வையில் இருக்கிறது. பொதுப் பணித் துறையினர், ஆக்கிரமிப்பாளர்களை அகற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள்.

திரு. சி. கேசவ ஆதித்தன் : ஆக்கிரமிப்பாளர்கள் எத்தனை பேர்? அவர்களுடைய பெயர்களை வெளியிட முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : ஆக்கிரமிப்பாளர்களில் ஒருவர் தவிர மற்ற எல்லோருமே ஏழைகள் என்றும் ஒருவர் மட்டும்தான் வசதிக்காரர் என்றும் குறிப்பு இங்கே இருக்கிறது. மொத்தம் 13 பேர்கள். பெயர்களை வேண்டுமானால் சொல்கிறேன்.

மதுராந்தகம் தாலுகாவைப் பிரிக்கும் திட்டம்.

*வினா எண் 224—திரு. எஸ். டி. உகம்சந்த், திரு. கி. கணேசன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) செங்கற்பட்டு, மாவட்டம் மதுராந்தகம் தாலுகாவை இரண்டாக பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் புதிய வட்டம் எப்பொழுது முதல் செயலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மற்றும் (ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, அது பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது இந்த ஆண்டு நடைமுறைக்கு வர வழிவகைகள் செய்து தர அரசு முன்வருமா? அதோடு, பொதுவாக, துணை வட்டங்களாக இருக்கக்கூடியவைகளை எல்லாம், முழு வட்டங்களாக்க அரசு எண்ணியுள்ளதா? ஆமென்றால், இதுவரை எத்தனை மாற்றப்பட்டிருக்கின்றன? இனிமேல் எத்தனை மாற்றப்பட இருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்; பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையிலும் 33 துணை வட்டங்களை, முழு அந்தஸ்து பெற்ற வருவாய் வட்டங்களாக இந்த அரசு ஆக்கியிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் இன்றைக்கு 166 வட்டங்கள் இருக்கின்றன. மேலும், தேவைக்கேற்றவாறு புதிய வட்டங்களை உருவாக்குவதற்கு அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய வட்டங்களைப் பிரிப்பதற்கு ஆலோசனை இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத்திலே குடியாத்தம் தாலுகாவை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அதைப்பற்றி அரசு ஆவன செய்ததா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அதே போல் பல மாவட்டங்களில் இருந்து கோரிக்கைகள் வந்து இருக்கின்றன. அவைகளைப் பார்த்து, பரிசீலித்து, முறைப்படி ஒன்றன்பின் ஒன்றாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தாலுகாக்கள் எந்த வரைமுறையின்கீழ் பிரிக்கப்படுகின்றன. அதுபோன்று மதுராந்தகம் பகுதியில் எந்தெந்தப் பகுதிகளைப் பிரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளது என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தாலுகாக்களிலே இருக்கிற ஜனத்தொகை, அந்தப் பகுதியின் விஸ்தீரணம், அங்கு கிடைக்கும் வருவாய், அதிலே இருக்கிற பின்தங்கிய பகுதி, இவைகளையெல்லாம் எண்ணிப் பார்த்து மக்களுக்கு நன்மை விளைவிக்கும் வகையில் அவைகள் பிரிக்கப்படும்.

புலவர் பட்டம் பெற்ற இடைநிலை ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதியம் வழங்கும் திட்டம்.

*வினா எண். 225—திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புலவர் படித்து முடித்த செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு இரண்டு ஊக்க ஊதிய உயர்வுகள் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) புலவர் தகுதிபெற்ற இடைநிலை ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதியம் வழங்குவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 9.20)

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் தலைவர்களே, வித்வான் படிப்பு முடித்தவர்களுக்கு பி. இடி. ஆசிரியர் தகுதி ஊதியம் வழங்கும் நிலை தற்போது உள்ளது. வித்வான் படித்து

முடித்த இடைநிலை ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்காத நிலையில் ஏன் அவர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு வழங்க கூடாது? இனிமேலாவது, பி. ஏ.. பி. இடி., முடித்தால் கிடைத்திடும் ஊக்க ஊதியத்தைப் போல், தமிழ் வித்வான் முடித்திருந்தாலும் அவர்களுக்குக் கிடைப்பதற்கான வழியை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவரவர்களே, தற்போதுள்ள ஊக்க ஊதியம் வழங்கும் திட்டத்திற்கான மாற்றுக் கருத்துரு பணியாளர்கள் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த துறையில் பொதுப் பிரச்னையாகப் பரிசிலனையில் உள்ளது. அப்பொழுது இந்தப் பிரச்னையும் சேர்த்துப் பரிசீலிக்கப்படும்.

திரு. பாபு ஜனார்த்தனன்; பேரவைத் தலைவரவர்களே' நீண்ட நெடுங்காலமாகப் புலவர்களுக்கு இழைத்திருக்கின்ற தீங்கு இது பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில்வந்த நாம் தமிழைப் படித்த புலவர்களுக்கு ஊதியம் சம்பந்தப்பட்ட சலுகைகள், அளிப்பதற்கு அரசின் பரிசீலனையில் இனி இருக்கக்கூடிய கருத்துக்கள் என்ன என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகுதலைவரவர்களே, இப்பொழுது ஊக்க ஊதியம் என்று சொல்லிக் கொண்டு, இன்க்ரிமெண்டு தந்து கொண்டிருக்கிறோம் இன்க்ரிமெண்டிற்குப் பதிலாக வேறு ஏதாவது ஒரு முறையைப் பின்பற்ற முடியுமா என்கின்ற கருத்தைதான் அவர்கள் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். அது என்ன என்கின்ற விவரம் என்னிடத்திலே இல்லை. அப்பொழுது இந்தப் பிரச்சினையும் சேர்த்துப் பரிசீலிக்கப்படும். அந்த மாற்றுத் திட்டம் வந்ததற்குப் பிறகு அந்த அடிப்படையில் இதை நாம் பரிசீலிக்கலாம்.

திரு மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, செகண்டரி கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்குத் தமிழ் வித்வான் பயிற்சி பெற்ற பிறகு புரமோஷன் கொடுக்கின்ற சாரணத்தினால் வெளியில் வித்வான் பட்டம் படித்தவர்களும், பி.ஏ. போன்ற தமிழ்பட்டம் படித்தவர்களும் வேலைக்கு சேர்வதற்கு வாய்ப்பு குறைகிறது என்பதை அரசு அறியுமா? அதை தவிர்ப்பதற்கு ஏற்கனவே வேலையில் இருக்கின்ற செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்குப் புரமோஷன் கொடுப்பதற்கு முன்னால் வெளியில் வேலையில்லாமல் இருக்கின்ற தமிழ் பட்டதாரிகளுக்கு வேலையில் முன்னுரிமை கொடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவரவர்களே, அதுகுறித்த முழு விவரம் என்னிடத்தில் இல்லை என்றாலும் வெளியில் இருப்பவர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை நாம் ஒதுக்கி அவர்களுக்கும் வாய்ப்பு தருகிறோம்.





திரு. சே. இராமலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே, நடுநிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர்களை நியமிக்கும்பொழுது அப்பள்ளிகளில் செகண்டரி கிரேடு ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்றவர்களை.—புலவர் பட்டம் பெற்றவர்கள் அல்லது பி.லிட். தேர்வு பெற்றவர்களைச் சீனியாரிட்டி அடிப்படையில் நியமனம் செய்கிறார்களா? அல்லது நேரடியாக நியமிக்கப் படுகிறார்களா? தற்பொழுது தஞ்சை மாவட்டத்தில் பல்வேறு நடுநிலைப் பள்ளிகளில் நேரடியாக நியமிக்க வேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பித்துள்ளதாகக் கூறப்படுகிறது. அதை மாற்றி அந்த பள்ளியிலே பி.லிட். தேர்வு பெற்றவர்கள் அல்லது புலவர் பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து சீனியாரிட்டி அடிப்படையில் நியமிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவரவர்களே, சீனியாரிட்டி பிரகாரம் புரமோஷன் தருவது ஒருபக்கம் இருக்கிறது, அதேநேரத்தில் வெளியிலே படித்து வேலை வாய்ப்பு இல்லாமல் இருப்பவர்களை பொறுத்தவரையில், இப்படி முழுவதையும் சீனியாரிட்டி அடிப்படையில் என்று வைத்து விட்டால் அவர்களுக்கு எந்தக் காலத்திலும் வேலை கிடைக்காது. ஆகவே ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை வெளியிலேயிருந்து எடுப்பதற்கு ஒதுக்கியிருக்கிறோம். மற்றப்படி புரமோஷன் இருக்கிறது.

Memorandum received from the Thanjavur District Teacher pensioner's Association

*Q. No. 2 .6: THIRU R. UMANATH; Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether the Government have received any memorandum (or Charter of demands dated 16-3-981 from the Thanjavur District Teacher pensioner's Association

(b) if so the action taken by the Government.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்

(இ) கம்யூடேஷன் (commutation) தொகையை 10 ஆண்டுகளுக்குப்பின் மேலும் ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்யாமல் முழு ஓய்வூதியத்தையும் அளிப்பது என்பது இவர்களின் கோரிக்கைகளில் ஒன்று. இக்கோரிக்கையைப் பொறுத்தவரை, ஒருவர் எந்த தேதியில் கம்யூடேஷன் செய்திருந்தாலும் அதை கணக்கில் எடுக்காமல், 1-4-81ல் ஓய்வு பெற்று 15ஆண்டுகள் ஆகியிருந்தால் அவர் முழு ஓய்வூதியத்தையும் பெறலாம் என அரசு ஆணை வெளியிட்டுள்ளது. பணியிலுள்ள அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படுவது போன்று கிராக்கிப்படி

ஓய்வூதியம் பெறுவோருக்கும் அளிக்கப்பட வேண்டும். குறைந்த பட்ச ஓய்வூதியத்தை ரூ. 250/-ஆக உயர்த்த வேண்டும் என்பன போன்ற ஏனைய கோரிக்கைகளை அரசு ஏற்கவில்லை.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், தஞ்சை மாவட்டத்திலும் சரி, இந்த மாநிலம் பூராவிலும் சரி most neglected lot என்பதை அனைவரும் ஒத்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். தொடர்ந்து ரூபாயின் மதிப்பு குறைந்து கொண்டு வருவதைக் கவர்ன்மெண்டும் ஒத்துக் கொள்கிறார்கள். அதனால்தான் என். ஜி. ஓ.-க்களுக்கும் டி.ஏ. இடையிலே கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். இப்பொழுது கூட லேட்டஸ்ட் meeting of Labour Secretaries லே மினிமம் வேஜஸ் ஃபிக்ஸ் செய்யப்படுகின்ற கேட்டகிரிகளுக்கும் டி, ஏ, கொடுக்க வேண்டுமென்று வந்திருக்கின்ற பொழுது அந்தப் பிரின்சிபில் இவர்களுக்கும் பாதிக்கப்படுகின்றபோழுது அந்த டி. ஏ. பிரின்சிபிளை அந்த அளவிற்கு ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடாது? ஹரியானா மாநிலத்திலும், ஆந்திரா மாநிலத்திலும், 250 ரூபாய் மினிமம் என்று இருக்கும்பொழுது இந்த மாநிலத்திலே ஏன் அப்ளை செய்யக் கூடாது? அதற்கு குறுக்கே நிற்கக் கூடிய கஷ்டம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற கேள்வி எல்லா ஊழியர்களும் சம்பந்தப்பட்ட ஒரு பொதுப் பிரச்சினையாகும். இப்போது நான் கல்வித்துறையின் சார்பாக ஆசிரியர்கள் ஓய்வு ஊதியம் என்ற அடிப்படையில் பேசிக் கொண்டிருக்கிறேன். பொதுப் பிரச்சினை என்ற அளவில் கேள்வி கேட்டிருப்பாரானால், பொதுவாக இருக்கிற விதிகளின் அடிப்படையில் கல்வித்துறை இதற்கு ஏற்ற நடவடிக்கையை எடுக்கும்.

திரு. ரா. உமாநாத்; தலைவர் அவர்களே, மற்ற சர்வீசிலே இருக்ககூடியவர்களுக்கு இருக்கக்கூடிய உரிமைகளுடன் இருக்கக் கூடிய ஸ்தாபனங்கள் மாதிரி, பிரச்சினைகளை அரசாங்கத்துடன் தீர்வுகாணுவதற்கான ஒரு உரிமை இருக்கின்ற ஸ்தாபனங்கள் என்ற முறையில், அமைப்பில் அவர்கள் இல்லாதபோது, அதை தீர்வு காணவேண்டும் என்று சொல்லி பென்சன் கமிஷன் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று அவர்கள் கேட்டார்கள். Machinery to resolve their grievances இப்படிப்பட்ட ஒரு மெஷினரியை அமைப்பதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா? அந்த வடிவத்திலே இல்லாவிட்டாலும் கூட, வேறு எந்த வடிவத்திலாவது அவர்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அவர்களுடைய அமைப்பின் சார்பாக மாயவரத்திலே ஒரு மாநாடு நடத்தினார்கள். என்னையும் அழைத்திருந்தார்கள். நானும்



போயிருந்தேன். பென்ஷன் பெறுகின்ற ஆசிரியர்கள் மாநாட்டிலே கலந்து கொள்வது அதுதான் முதல் தடவை என்று கருதுகிறேன். அதற்குப் பிறகு அவர்களுடைய பிரச்சினைகளைப் பற்றி அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அவர்கள் நேரடியாக என்னைச் சந்திக்கலாம் அல்லது கல்வித் துறைச் செயலாளரையும் சந்திக்கலாம். அவர்கள் பிரச்சினையைப் பொறுத்த வரையில் அரசு அனுதாபத்தோடு கவனிக்கும்.

திரு. மா. சின்னராசு: தலைவர் அவர்களே, ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கான இந்தப் பென்சன் வழங்குவதில் 1-10-79-க்கு முன் ஓய்வுபெற்றவர்களுக்கு 33.8 சதம் என்றும் 1-10-1979-க்கு பின்னால் ஓய்வுபெற்றவர்களுக்கு 50 சதவிகிதம் என்றும் கொடுக்கின்ற முரண்பாடு இருப்பதாக கூறுவது அரசுக்குத் தெரியுமா? அந்த முரண்பாடு இல்லாமல் ஒரே விகிதாசாரத்தை கடைப்பிடித்து இந்த இழப்பைத் தவிர்க்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 1,10-1979-க்கு முன் இருப்பவர்களுக்கு ஒரு முறை, அதற்குப் பின்னாலே இருக்கின்றவர்களுக்கு ஒரு முறை என்று இப்போது பின்பற்றப்படுகிறது. அதை மாற்றுகின்ற குறிப்புரை எதுவும் இல்லை. இது ஒரு பொதுவான பிரச்சினை.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லும்போது இந்த ஓய்வூதியம் முன்னாலே ஒரு விகிதமும், ஒரு தேதிக்குப் பின்னால் வேறுமாதிரியாக கொடுக்கும் காரணமாக மிகவும் ஏற்றத்தாழ்வு இருப்பது நியாயம்தானா? அவர்களும் இதே விலையில் பண்டங்களை வாங்கிச் சாப்பிடும் நிலை இருக்கின்றது எனவே அதை மாற்றி அனைவருக்கும் ஒரே மாதிரியான ஓய்வு ஊதியம் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஓய்வூதியப் பிரச்சினை ஒரு பொதுப் பிரச்சினையாக இருப்பதால், அந்தப் பொதுப் பிரச்சினையின் அடிப்படையில் கேள்வி கேட்டு, அதற்குரிய அமைச்சரிடத்திலே பதிலைக் கேட்கவேண்டும். அதே பொதுப்பிரச்சினையின் அடிப்படையிலேதான் ஆசிரியர்களின் ஓய்வூதியமும் கடைபிடிக்கப்படுகின்றது. எனவே இந்த விவாதம் நியாயம்தானா என்று நான் கேட்கவிரும்புகிறேன்.

திரு எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, இந்த ஓய்வூதியத்தைப் பெறுகின்ற நாலாந்தர கடைநிலை ஊழியர்கள் 1979-க்கு முன் பென்சன் பெறுகின்றவர்கள், 1979-க்கு பின்னால் கிடைக்கின்ற ஊதியம் கிடைக்கவில்லை என்றும், அதைப் பரிசீலிக்க வேண்டும் என்றும் அரசுக்கு மனுக்கள் அனுப்பியிருக்கிறார்கள். அதிலே ஒரு சிலர் மட்டும் ஓய்வூதியம் கிடைக்

காமல் அவதிப்படுவதை இந்த அரசு அறியுமா? அதை அனுதாபத்தோடு கவனித்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் கேட்ட அந்தக் கோரிக்கையை ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் கொடுத்திருக்கிறார்கள். இது ஒரு பொதுப் பிரச்சினையாக இருப்பதால், தனியாகக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

கல்லூரிகளில் உடற்கல்வி நூலக கல்விப் பாடங்கள்

*வினா எண்: 227. திரு ஆர். டி. கோபாலன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.

உடற்கல்வியும் நூலகக் கல்வியும் கல்லூரிகளில் பாடமாக வைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இதுபற்றி முடிவு செய்வது பல்கலைக்கழகத்தின் பொறுப்பாகும். இக்கருத்து பட்டப்படிப்புப் பாடத்திட்டங்கள் மறுவடிவமைக்கப்படும்போது பரிசீலிக்கப்படும் என சென்னை பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

(முற்பகல் 9–30)

திரு. ஆர். டி கோபாலன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாப் மாநிலத்தில் ஆரம்பக்கல்வியில் இருந்து உடற்பயிற்சி கட்டாயமாக வைக்கப்பட்டு இருப்பதால், அந்த மாநிலம் விளையாட்டுத் துறையில் முன்னணியில் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதேமாதிரி. நம்முடைய மாநிலத்திலும் உடற்பயிற்சியைத் துணைப்பாடமாக ஆக்குவதற்கு அரசு பரிசீலிக்குமா? கல்லூரியில் உடற்பயிற்சிக்கு எத்தனை வகுப்புகள் வாரத்திற்கு நடத்தப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இஷ்டபாடமாக இருக்கிறபோதேநாம் அதிலே முன்னுக்கு வரவில்லை என்கிறபோது அதைக் கட்டாயப் பாடமாக ஆக்குவதன் மூலமாக அதிலே பெரிய முன்னேற்றத்தை அடைந்து விட முடியாது. பஞ்சாபில் உள்ள மாணவர்களுக்கு உடற்பயிற்சியில் மிகுந்த ஆர்வம் இருப்பதால், அவர்கள் முன்னுக்கு வருகிறார்கள். இங்கேயுள்ளவர்கள் உடற்பயிற்சி பாடத்திற்கு அவ்வளவு விருப்பம் தெரிவிப்பது இல்லை. அவர்களுக்கு அதிலே விருப்பம் ஏற்படுகின்ற வகையில் ஏதாவது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அதன் மூலம் அவர்களுக்கு அதிலே விருப்பம் ஏற்படுத்தலாம் என்று கருதுகிறோம். உடற்பயிற்சியைப் பொறுத்த வரையில், அவர்கள் சிறு குழந்தைகளாக இருக்கும் போதே அந்த உடற்பயிற்சியில் அவர்களுக்கு விருப்பம் ஏற்



படுத்துகின்ற முறையில் ஏதாவது திட்டங்களை மேற்கொண்டு அதன் அடிப்படையில் அந்த ஆர்வத்தின் காரணமாக அவர்கள் தொடர்ந்து உடற்பயிற்சியில் ஆர்வம் கொள்ளச் செய்யலாம் என்ற நம்பிக்கையில் இப்போது சில திட்டங்களைச் செய்து கொண்டு இருக்கிறோம். கல்லூரிகளில் உள்ளவர்களுக்கும் உடற்பயிற்சியில் ஆர்வம் பெறுவதற்கான வாய்ப்புகளை அதிகப் படுத்தும் முயற்சிகள் மேற்கொண்டு இருக்கிறோம்.

திரு. ஆர். டி. கோபாலன்: தலைவர் அவர்களே, நூலக சம்பந்தமாக பல்கலைக்கழகத்தில் மட்டும் தற்போது பயிற்சி கொடுக்கப்படுகிறது. இப்போது நூலகம் ஏராளமாக உண்டாக்கப்பட்டு வருகின்றன. எனவே நூலகப் பாடத்தை துணைப்பாடமாக ஆக்குவதற்கு அரசு பரிசீலிக்குமா? மாணவர்கள் பாடம் படிக்கும் நேரம் போக, மீதியுள்ள நேரத்தில் அந்த மாணவர்கள் நூலகத்தில் தங்களுடைய கவனத்தை செலுத்தி தங்களுடைய பொது அறிவை பெருக்கிக் கொள்வதற்கு வழிவகை செய்யும் வகையில், கல்லூரிகளில் நூலகப் பயிற்சி வகுப்புகள் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, ஹையர் செகண்டரி கல்வித் திட்டம் அமலுக்கு வந்ததற்குப் பிறகு கல்வித் திட்டத்தில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டு இருக்கிறது. 11–வது வகுப்பு என்பது பழைய பி. யு.–சிக்குச் சமமாகவும், 12–வது வகுப்பு என்பது முதலாம் ஆண்டு பி. ஏ. பி. எஸ். ஸி.க்குச் சமமாகவும் இருக்கும். பி.ஏ.,பி.எஸ்.ஸி. மூன்றாம் வகுப்பு என்பது எம்.ஏ.,எம்.எஸ்.ஸி, முதலாண்டு பாடத்திற்குச் சமமாக இருக்கும். அதைப்போலவே, புதிய எம்.ஏ.,எம்.எஸ்.ஸி, என்பது மேலும் ஒரு ஆண்டு கூடுதல் படிப்புக்குச் சமமாக வரும். இந்த வகையில் அந்தப் பாடங்களின் தரம் உயர்த்தப்பட்டு இருக்கிறது. ஆகவே இளங்கலைப் பட்டப் படிப்பும், முதுகலைப் பட்டப்படிப்பும் தற்போது தரம் மட்டும் உயர்த்தப்பட்டதாக இருக்கிறது. யு. ஜீ. சி.-யில் ஆலோசனை தரத்தை மட்டும் உயர்த்தினால் போதாது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி 3 ஆண்டுகாலப் பட்டப்படிப்பில் அவர்களுக்கு தேவையான பாடங்களையும் சேர்த்து, அதை குறிக்கோளாக வைத்து அந்தப் பாடத் திட்டம் 'ரி-ஸ்டரக்சர்' செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறது.

இதன் தொடர்பாக சென்னைப் பல்கலைக் கழகம் பல்வேறு ஆய்வுகள் நடத்தி, அதன் போல் ஒரு திட்டத்தைச் செயல் படுத்த முன்வந்து இருக்கிறார்கள். அதைப்போல் மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்திலும் வர இருக்கிறது. மற்ற எல்லாப்பல்கலை கழகங்களிலும் இந்த முயற்சிகள் மேற்கொள்ளபடும். அப்படி வருகிறபோது. பி.ஏ. தமிழ் படித்தாலு ஆங்கிலம் படித்தாலும், எக்னாமிக்ஸ் படித்தாலும், அதி வேலைக்கான ஒரு பாடம் புகுத்த வேண்டும் என்று ஒரு கருத்

யு.ஜி.சி.—யாலும், மாநில அரசாலும் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகவே, அப்படி 'ரி—ஸ்டரக்சர்' செய்கிறபோது, 'லைப்ரரி சயன்ஸ்' பற்றிய பாடமும், வேலைவாய்ப்பிற்கான பாடத்திட்டம் என்ற அடிப்படையில் அதிலே இருக்கும். அதை போலவே, பிசிகல் எடுகேஷன் என்கிற பாடமும் வேலை வாய்ப்பிற்கான திட்டம் என்ற அடிப்படையில் அதிலே வைப்பது குறித்துப் பரிசீலிக்தலாம். சென்னைப் பல்கலைக் கழகம் அதற்கான ஆய்வுகளைச் செய்து கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளிகளிலாவது நூலகர்களை உடனடியாக நியமிக்க அரசு உத்தரவு பிறப்பிக்குமா? 1974 ஆம் ஆண்டுக்குப் பிறகி நூலகர்கள் பதவ்கள் பல்வேறு பள்ளிகளுக்குக் கிடைக்காமலேயே இருக்கிறது இதை உணர்ந்து உடனடியாக நூலகர்கள் பதவியைக் குறைந்த பட்சம் மேல் நிலைப் பள்ளிலாவது ஏற்படுத்த அரசு முன்வருமா அடுத்து, நடுநிலைப் பள்ளிகளில் 400 மாணவர்கள் இருந்தால் தான் உடல் பயிற்சி ஆசிரியர்களை நியமிக்கலாம் என்று உத்தரவு இருக்கிறது. மாணவர்களின் எண்ணிக்கையைக் கருதாமல் எல்லாப் பள்ளிகளிலும் உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் யோசனையில் நமக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. நமக்கு இருக்கும் நிதி ஆதாரங்களின் அடிப்படையிலே தான் நாம் அந்தப் பதவிகளை ஏற்படுத்துகிறோம்.

திரு. ந. குலசேகர பாண்டியன்: தலைவரவர்களே, உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் உயற்பயிற்சிக் கல்வியை நல்ல முறையில் செயல்படுத்த உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசின் சார்பாக பயிற்சி அளிக்கும் திட்டம் ஏதாவது இருக்கிறதா? அல்லது தனிப்பட்ட முறையில் ஆசிரியர்கள் சங்கங்கள் இப்படிப்பட்ட பயிற்சியை அளிக்க முன்வந்தால் அதை ஊக்குவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, எல்லாப் பகுதி ஆசிரியர்களுக்கும் அவர்கள் பணியில் இருக்கும் போது அவ்வப்போது பயிற்சி தர வேண்டுமென்பதை கல்வித் துறையைப் பொறுத்த வரையில் சிறந்த ஒரு கொள்கையாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இல்லையென்றால் அவர்கள் சிறந்த ஆசிரியர்களாக பணியாற்ற முடியாது. அந்த வகையில் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும் எண்ணம் இருக்கிறது. இந்த துறையில் இருக்கிற ஆசிரியர்கள் தங்கள் சங்கத்தின் மூலமாக பயிற்சி அளிப்பதாக இருந்தால் அது



வரவேற்கத்தக்கது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் ஆம்பூரில் இப்படிப்பட்ட ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டு, நான்கூட அதிலே கலந்து கொண்டேன். இத்தகைய முயற்சியை நான் வரவேற்கிறேன். அரசு அதற்கு ஆதரவு தரும்.

### சென்னை சட்டக்கல்லூரியில் மாலை நேர எம் எல். பட்டபடிப்பு வகுப்பு தொடங்கும் திட்டம்

*வினா எண்.—228 திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர்: கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை சட்ட கல்லூரியில் மாலைநேர எம். எல். பட்டப்படிப்பு வகுப்பு நிறுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை மீண்டும் தொடங்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) 1979-80ம் வருடம் முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

(ஆ) எம். எல். பட்டப்படிப்பு முழு நேரமாக ஆக்கப் பட்டதால் மீண்டும் மாலை நேர வகுப்புகள் தொடங்க பல்கலைக் கழகத்திற்கு இப்போதைக்கு உத்தேசமில்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, எம்.எல். பட்டப்படிப்பு ரெகுலர் காலேஜில் இரண்டுமணி நேரம் தான் நடக்கிறது. ஆகவே, தொழில் நடத்துகிற வழக்கறிஞர்கள், தலைமைச் செயலகத்தில் பணியாற்றுகின்றவர்கள், மற்றும் பணியில் இருக்கிறவர்கள் படிப்பதற்கு ஏற்றவகையில் இப்போது கற்பிக்கும் நேரத்தை மாற்றி. மாலை 5.00 மணிக்கு அந்த வகுப்பை நடத்த ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இரண்டு மணி நேரம் என்பது பகுதி நேரப்படியாக வைக்கப் பட்டிருப்பது ஒரு காரணமாக இருந்தாலும்கூட படிக்கின்றவர்கள் தங்களுடைய முழு நேரத்தையும் இந்தக் கல்விக்காகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பது இதில் இருக்கிற ஒரு முக்கியமான அடிப்படை. அந்த முறையில்தான் பார் கவுன்சில் தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு, நமக்கு யோசனை சொல்லியிருக்கிறது; அதை நாம் செய்து கொண்டிருக்கிறோம். இருந்தாலும் வேலையில் இருக்கிறவர்கள் படித்தால் நல்ல முறையில் இருக்கும், மாணவர்கள் முழுமையாக இரண்டு மணி நேரம் படிப்பதாவது பணியில் இருப்பவர்கள் பகுதிநேர படிப்பாக படிபபதைவிட சிறந்ததாக இருக்குமா என்பது கேள்விக் குறியாக இருக்கிறது. ஆகவே, பகுதிநேர பட்டப்படிப்பு படிக்கிறவர்களுக்கு வாய்ப்புத் தரவேண்டுமென்று பார் கவுன்சிலுக்கு எழுதியிருக்கிறோம்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: தலைவரவர்களே, மாலைநேர சட்டக் கல்வியை திருச்சி, மதுரை, கோவை சட்டக் கல்லூரி களிலும் ஆரம்பிக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம். தலைவரவர்களே, மாலை நேர வகுப்புகளை நடத்தக்கூடாது என்பது பார் கவுன்சில் விருப்பமாகும். ஆகவே, பார் கவுன்சில் விருப்பத்தை மாற்றிய பிறகுதான் மதுரை, திருச்சி, கோவை என்று வரும். அதற்கு முன்னால் அதைப்பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை.

திரு. வேடசந்தூர் வி. பி.பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, ஆசிரியர் தொழிலில் இருக்கிறவர்கள் பயிற்சி அளிக்கின்ற தொழிலில் இருக்கின்ற காரணத்தால் அவர்கள் எம்.ஏ., எம். எஸ்ஸி. படிப்புக்கு நேரடியாகச் செல்லலாம் என்று பல்கலைக் கழகம் அமைத்திருக்கிறது. அந்த அடிப்படையில் சட்டம் இயற்றுகின்ற சட்டமன்றத்தில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களும், சட்டத் துறையில் பணியாற்றுகின்றவர்களும் அரசியல் சட்டம் (கான்ஸ்டிட்யூஷனல் லா) என்ற பிரிவில் நேரடியாக எம்.எல். எழுத அரசு அனுமதிக்குமா; அதுபற்றி பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, பகுதி நேர படிப்பாக நடத்தலாம் என்ற முடிவை அறிவித்த பிறகு தான் இதுபற்றிய பரிசீலனையே வரும்.

திரு. உ. சுப்பிரமணியன்: தலைவரவர்களே, எம்,எல்,பட்டப் படிப்புக்கு உண்மையிலேயே திறமையானவர்கள், அறிவு மிக்கவர்கள்தான் செல்ல முடியும். மேல் நாடுகளில் 'learn while you earn' என்று சொல்வார்கள். அந்த முறையில் இங்கேதான் பகுதி நேரப் படிப்பை ஏற்படுத்திக் கொடுத்தால் திறமைசாலிகளுக்கு அது ஒரு வாய்ப்பாக இருக்கும். அதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இது பற்றி பரிசீலனை செய்ய வேண்டிய அமைப்பு பார் கவுன்சில். அவர்களை பரிசீலனை செய்யச் சொல்லி நம்முடைய சட்டக் கல்வி இயக்குநர் எழுதி இருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தையும் யார் பரிசீலிக்க வேண்டுமோ அவர்களுடைய கவனத்திற்கு அரசு கொண்டு வரும்.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, வழக்கறிஞர் களுடைய அமைப்பு இந்த மாலை நேரக் கல்வியைத் தடுக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். நான் கேட்க விரும்புவது இன்றைக்கு வேலையில் இருப்பவர்களும், வேலையில் இல்லாத வர்கள் அதிகமான அளவிலும் இருக்கிற ஒரு காலத்தில் நாம் இருக்கிறோம். மாலை நேரக் கல்வியை இன்றைக்கு பார்





கவுன்சில் தடுக்கிறது என்றால் அதன் நோக்கம் என்ன? வேலையில் இருக்கிறவர்கள் தடை செய்கிறார்கள் என்பதற்காக அரசு ஏன் அதைத் தடுக்க வேண்டுமென்று கேட்க விரும்புகிறேன்.

(முற்பகல் 9.40)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இது தொழில் சம்பந்தமானது. தொழில் பற்றிய ஒரு உயர்ந்த அமைப்பாக பார் கவுன்சில் இருக்கின்றது. அவர்கள் பார்த்து இப்படிப்பட்டவர்கள்தான் வழக்கறிஞர்கள் தொழில் செய்ய முடியும் என்று சொல்லக்கூடிய உரிமையையும் அதிகாரத்தையும் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் எப்படிப் பட்டவர்கள் இந்தத் தொழிலைப் புரிய முடியும் என்று சொல்கிறார்கள். அல்லது அப்படிப் படித்தால்தான் அந்தப் பட்டத்திற்கு மதிப்பு இருக்கும் என்றும் இல்லை என்றால் அந்த மரியாதை அந்தப் பட்டம் தராது என்றும் சொல்கிறார்கள். ஆகவே இப்போது நாம் அந்தத் தடையை எடுக்க வேண்டும் என்று கேட்டிருப்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்ற அந்தக் கருத்தை அரசு ஏற்றிருக்கின்றது என்பதுதான். ஆகவே நாம் ஏற்றிருக்கிறோம். இதுபற்றி அவர்களைக் கேட்டிருக்கிறோம்.

திரு. மி. வின்சென்ட்: தலைவரவர்களே, எம். எல். படித்த வழக்கறிஞர்கள் பொதுவாக அரசிடம் வேலை கேட்டதில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் என்ற பேச்சுக்கே இடம் இல்லாத இத்தகைய மேற்பட்டப் படிப்புகளைப் படிக்கின்ற வாய்ப்பின் எண்ணிக்கையை அதிகமாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, நான் ஏற்கெனவே, தெரிவித்த பதிலில் அரசு அதற்கு முன்வந்திருக் கின்றது என்று கூறினேன். ஆனால் அதற்கு அனுமதி தர வேண்டியவர்கள் தர வேண்டும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவரவர்களே, மாலை நேரக் கல்லூரியை இங்கே அனுமதிப்பதிலே சங்கடம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் மைசூர், மகாராஷ்டிரா போன்ற அண்டை மாநிலங்களில் தபால் மூல மாகவும் கல்வி போதிக்கப்படுகிறது. மாலை நேரக் கல்வியின் மூலமும் இந்தக் கல்வி போதிக்கப்படுகின்றது. ஆகவே அங்கே இருப்பவர்கள் அனுமதிக்கின்ற சூழ்நிலை இருக்கின்றபோது இங்கேயும் மாலை நேரக் கல்லூரியின் மூலமாகவும் தபால் மூல மாகவும் அந்தக் கல்வியைக் கற்பதற்குரிய வகையிலே அந்த அதாரிட்டிக்கு ஆலோசனையை ஏன் கூற முடியாது என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, மாலை நேரக் கல்லூரியிலே படிக்க வேண்டும் என்ற கருத்தை அரசு ஏற்றுக் கொண்டுதான் அரசின் சார்பாக கல்லூரி இயக்குநர் அந்த வழக்கறிஞர்கள் சங்கத்திற்கு எழுதி இருக்கிறார். அவர்கள் அனுமதி தந்தவுடன் நாம் அதைப்பற்றி நடவடிக்கை எடுக்க முடியும்.

**தமிழ்நாட்டில் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை நிறுவும் திட்டம்**

*வினா எண் 229 திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உற்பத்தியாளர் கூட்டுறவு ஸ்தாபனங்களை நிறுவுவது பற்றிய திட்டம் தமிழக அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இதுபற்றிய விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** (அ) மற்றும் (ஆ): தற்பொழுது செயல்பட்டு வரும் ஆதாரக் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களே, இவற்றின் பெயரை ''விவசாய உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்கள்'' என மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:** தலைவரவர்களே, பரிசீலனை நீண்ட காலமாக நீடித்துக்கொண்டிருக்கின்றது, எனவே சீக்கிரமாக முடிவு எடுத்து அதை அமல் நடத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவரவர்களே, இந்தப் பரிசீலனை நீண்ட நாட்களாக இல்லை. சென்ற செலக்ட் கமிட்டியின் கூட்டத்தில்தான் இதுபற்றி யோசனை செய்யப்பட்டு தற்போது 20 நாட்களுக்கு முன்புதான் இதுபற்றிய முடிவான நிலைக்கு வந்திருக்கிறோம், மாண்புமிகு உறுப்பினர்கள் தமிழ்நாட்டில் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத நிலைமை இருப்பதாகக் கருதக் கூடாது. பெயர் மாற்றம்தான் செய்யப்படுகிறது. Cooperative marketing Societies are only producers Cooperative societies ஏற்கெனவே அந்த விதியில்தான் அவை செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. அப்படி 115 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இருக்கின்றன. பெயர்தான் விற்பனைச் சங்கங்கள் என்று இருக்கின்றதே தவிர, செயல், ஆப்ஜெக்ட்ஸ் ஆகிய அனைத்திலும் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கங்களாகத்தான் இருக்கின்றன. இப்படி 115 கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கங்கள் தமிழ்நாட்டில் ஏற்கெனவே இருக்கின்றன.



**திரு. பாபு ஜனார்த்தனன்:** தலைவர் அவர்களே, விவசாய உற்பத்தியாளர்கள் சங்கம் என்ற பெயர் மாற்றத்திற்காக மகிழ்ச்சிதான். ஆனால் தற்போது இடைத்தரகர்கள் மூலம் நெல் விற்பனையிலே இருக்கின்ற லெவியினை முதலாளிகளிடமிருந்து பெறாமல் விவசாயிகளிடத்திலே இருந்து பெறுகின்ற நிலைமை இருக்கின்றது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். விவசாய உற்பத்தியாளர் சங்கம் என்று ஏற்படுகின்றபோது இப்படிப்பட்ட முறைகள் எல்லாம் இல்லாமல் விவசாயிகளுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய விலை நேரடியாகக் கிடைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நல்ல யோசனை ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் விவசாயிகளிடம் லெவி வாங்குகிறார்கள் என்று நான் கருதவில்லை, வியாபாரிகளிடம்தான் லெவி வாங்குகிறார்கள். ஆனால் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கம் அதனுடைய அங்கத்தினர்களான விவசாயிகளிடம் இருந்து நேரடியாக கொள்முதல் செய்து அவர்களே அதை நுகர்பொருள் கூட்டுறவு அங்காடிகள் மூலமாக விற்பனை செய்கிறபோது கண்டிப்பாக விவசாயிகளுக்கு அதிகப்படியான லாபம் கிடைக்கின்றது. ஒரு சப்போர்ட் ப்ரைஸ் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்டு விற்பனையிலே அதிகப்படியான லாபம் கிடைக்குமேயானால் அந்த லாபம் கூடரிபேட்டாக மீண்டும் விவசாயிகளுக்குச் சென்று சேர வேண்டும் என்று கூட அரசு தற்போது நடவடிக்கை எடுத்திருக்கிறது.

**தமிழ்நாட்டில் பயன்படுத்தப்படும் முத்திரைத் தாள்கள்**

*வினா எண். 230 திரு. ச. அங்குசாமி: மாண்புமிகு கூட்டுறவு, சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தமிழ்நாட்டில் பயன்படுத்தப்படும் முத்திரை கட்டணத்தாளில் (Court fee stamp) ஆங்கிலமும், இந்தியும் இருக்கிறது என்பதை அரசு அறியுமா?

(ஆ) அதில் தமிழ்மொழி இடம்பெற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(இ) மற்ற மாநிலங்களில் தாய்மொழி இடம் பெற்றிருப்பதை அரசு உணருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** (அ) ஆம்.

(ஆ) முதுநிலை துணை பொது மேலாளர், மத்திய முத்திரைத்தாள் கிடங்கி, நாசிக், முத்திரைத் தாளில் தமிழ் இடம் பெறுவதைக் குறித்து ஆராய்ந்து அனுப்பும்படி கேட்கப் பட்டுள்ளது.

(இ) மற்ற மாநிலங்களில் ஆங்கிலமும், இந்தியும் மட்டுமே தவிர, வேறு எந்த மாநில மொழிகளும், முத்திரைத் தாளில் அச்சு செய்யப்படவில்லை.

திரு. ச. அங்குசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே பேரவைத் தலைவர் அவர்களே, எங்கும் தமிழ், மாண்புமிகு எதிலும் தமிழ் என்று நமது அரசு கொள்கை எடுத்திருக்கிறது. ஏற்கெனவே 1.50 பைசா என்று தமிழிலே முத்திரைத் தாள்களில் பொறிக்கப் பெற்றிருந்ததே. இப்பொழுது அதிலே இந்தியும், ஆங்கிலமும் இடம் பெறுவதற்குக் காரணம் என்ன? அந்த நிலையை அரசு விளக்க முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோர்ட்ஃபீ ஸ்டாம்பைப் பொறுத்த வரைக்கும் எப்பொழுதுமே தமிழில் இருந்தது இல்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது காபி ஸ்டேம் பேபர் என்று கருதுகிறேன். அதிலே தமிழில் தான் இருந்து வருகிறது. ஆனால் அதிலும்கூட இந்த மொழியில் தான் இருக்க வேண்டும் என்று முடிவு செய்யக்கூடிய அதிகாரம் நம்மிடம் இல்லை. மாநில அரசு தமிழில்தான் இருக்க வேண்டும் என்று வற்புறுத்தியது. ஆனால் ஒரு சீரான அமைப்பு பாரதம் தழுவிய அளவிலே இருக்க வேண்டும் என்ற எண்ணத்தைச் சொல்லி, ஆங்கிலமும், இந்தியும் ஆகிய இரு மொழிகளிலே முத்திரைத் தாள்களில் இடம் பெற வேண்டும் என்று மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது.

காபி ஸ்டேம்ப் பேப்பரில் மட்டும் தான் தமிழிலே இருந்து வருகிறது. அதைக்கூட இந்தியிலே கொண்டு வர வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் அதை நாம் எதிர்க்கிறோம். ஆங்கிலம் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளில் இருக்க வேண்டும் என்று சொல்லி வருகிறோம். இந்தக் கோர்ட் ஃபீ ஸ்டாம்பைப் (முத்திரைத்தாள்) பொறுத்தவரை, தமிழ் அதில் இடம் பெறவேண்டும் என்பதை மாநில அரசு மைய அரசுக்கு வற்புறுத்தி வருகிறது.

திரு. ச. அங்குசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முத்திரைத் தாள்களை மாநில அரசு அச்சடிக்கிறதா? அல்லது மைய அரசு அச்சடிக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாசிக் என்னும் இடத்திலே மைய அரசு தான் அதை அச்சடிக்கிறது.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோர்ட்டுகளிலே சர்டிபைஃடு காப்பி வாங்குகின்ற சமயத்தில் ஸ்டாக் இல்லாமல் போய்விட்டால் உச்சநீதிமன்றத்திலே இருப்பது போல On payment of cost என்ற முறையில் சாதாரண பேப்பரிலே காப்பி எடுத்து, அதை சர்டிபை பண்ணிக் கொடுக்கிறார்கள். அதைப்போல இங்கே ஜில்லா கோர்ட்டுகளிலும், முன்சீப் கோர்ட்டுகளிலும் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை பளு குறைவாக இருக்க வேண்டும் என்றும் துரிதமாகப் பணி நடைபெறவேண்டும் என்ற நோக்கத்தோடும் தான் ஸ்டேம்ப் சிஸ்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. கேஷ் சிஸ்டம் என்று கொண்டு வந்தால் சில பிரச்னைகள் உருவாகும். ஆகவே ஏற்கெனவே இவைகளையெல்லாம் ஆராய்ந்துதான் இதில் இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான முறை நடைபெற்று வருகிறது. இது மிக நல்ல முறை. இதிலே மாற்றம் தேவை இல்லை.

திரு. கோவைத் தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதாவது ஒரு விதத்தில் இந்தி மொழி எல்லாவற்றிலும் திணிக்கப்பட்டு வருவதை அரசு அறிந்திருக்கிறதா? ரூபாய் நோட்டுக்களில் எல்லாம் தமிழில் எழுத்துக்கள் இருக்கும்போது முத்திரைத் தாள்களில் தமிழ் ஏன் இடம்பெறக்கூடாது? இதை நமது அரசு மைய அரசிடம் கேட்டு அனுமதி பெறுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னேன், இந்த முத்திரைத் தாள்களில் தமிழ் மொழி இடம் பெற வேண்டும் என்பதில் நமது அரசு அக்கறை கொண்டு நடவடிக்கை எடுத்து வருகிறது. மைய அரசு அதை நிராகரித்தபோதிலும், முத்திரைத் தாள்களில் தமிழ் மொழி கட்டாயம் இடம்பெற்றேயாகவேண்டும் என்பதை மாநில அரசு மைய அரசுக்கு மீண்டும் வலியுறுத்தும்

## ஆதி திராவிடர்கள் மீதான வழக்குகளை விசாரிக்க தனி நீதிமன்றங்கள்

*வினா எண் 231 திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

ஆதிதிராவிடர்கள் மீதான கொடுமைகளை விசாரிக்க தனிக் கோர்ட்டுகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

[1982 பிப்ரவரி 17

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: 13-11-1981 நாளிட்ட, உள்துறை அரசு ஆணை 2688-ன்படி 1955 ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ்வரும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினர்கள் பாதிக்கப்பட்டுள்ள வழக்குகளை விசாரிக்க திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கும்பகோணம் ஆகிய இடங்களில் முறையே நான்கு குற்றவியல் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் சிறப்பு நீதி மன்றங்கள் அமைக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

[முற்பகல் 9-50]

திரு. இரா. தாமரைக்கனி: ஆதி திராவிடர்களைப் பாதுகாக்க எவ்வளவோ சட்டங்கள் இருந்தும் அவர்களுக்கு எதிரான கொடுமைகள் தொடர்கின்றன. தீண்டாமை, தாழ்த்தப்பட்ட வகுப்புப் பெண்களைக் கற்பழிப்பது--பெண் பாவம் பொல்லாது என்று சொல்வார்கள்.-- போன்ற கொடுமையான காரியங்களை நடப்பதைத் தடுப்பதற்காக அப்படிப்பட்டக் கொடுமைக்காரர்களுக்கு நல்ல பாடம் கற்பிக்கும் விதத்தில் அரபு நாடுகளில் உள்ளதைப்போன்று கல்லால் அடித்துக் கொல்லுதல், சிரச்சேதம், மாறுகால் வாங்குதல் மாறுகைவாங்குதல், சவுக்கால் அடித்தல் போன்ற கடும் தண்டனைகள் கொடுக்கும்வகையில சட்டம் திருத்தப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படுகிற தீங்குக்கு பரிகாரம் தேட ஏற்கனவே ஒரு சட்டம் நடைமுறையில் இருக்கிறது. இந்தியன் பீனல் கோர்ட் படியும் நடவடிக்கை எடுக்கலாம். ப்ரொட்டக்ஷன் ஆப் சிவில் ரைட்ஸ் ஆக்ட்படியும் நடவடிக்கை எடுக்கலாம். இருந்தாலும் இன்னும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பதில் இந்த அரசும் அக்கறையோடுதான் இருக்கிறது. அதுகுறித்து மையஅரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யும். கற்பழிப்பு பொறுத்தவரையில் தாழ்த்தப்பட்ட வகுப்புப் பெண்கள் கற்பழிக்கப்படுவது என்பது மட்டுமல்ல, பெண்கள் யாராக இருந்தாலும் எந்த வகுப்பைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் பெண்களைக் கற்பழிப்பது என்பது மிகவும் கொடூரமான ஒன்று. இது அதிகப்படியான தண்டனைக்கு உள்ளாக்கப்படவேண்டும் என்று மாநில அரசு கருதுகிறது. கற்பழிப்புக் குற்றத்தில் ஈடுபடுகிறவர்களுக்கு தூக்குத்தண்டனை தரவேண்டுமென்று மைய அரசை மாநில அரசு ஏற்கனவே வற்புறுத்தியிருக்கிறது.

திரு க. பாலன்: ஆதி திராவிடர்களுக்கு எங்கெங்கு கொடுமைகள் இழைக்கப்படுகின்றனவோ, அப்படித் தெரிந்தயிடங்களில் அதைப் பற்றி விசாரிக்க முதல்வர் அவர்களை தலைவராகக்கொண்டு சட்ட மன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், நீதிபதி அந்தஸ்தில் உள்ள ஒருவர் இவர்களைக்கொண்ட ஒரு குழு அமைத்து விசாரிக்கப்படுமா?



1982 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அன்றாடம் [illegible]க்கடி ஒவ்வொரு பகுதிகளிலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக குறைகள், குற்றங்கள் நடந்துகொண்டுதானிருக்கின்றன. [illegible]றகனவே நான் சொன்னதுபோல் ப்ரொட்டக்ஷன் ஆப் சிவில் ரைட்ஸ் ஐ.பி.ஸி. இவற்றின்கீழ் நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். மாவட்டவாரியான கணக்குகள் இருக்கின்றன. 1979 ஆம் ஆண்டின் புள்ளிவிவரப்படி 695 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 485 வழக்குகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பரிகாரம் தேடப்பட்டிருக்கிறது. இன்னும் 237 வழக்குகள் முடிவுறாத நிலையில் இருக்கின்றன. அதேபோல் 1980-ல் 448 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 348 வழக்குகளுக்கு பரிகாரம் தேடப்பட்டிருக்கிறது. மீதி வழக்குகள் முடிவுறாத நிலையில் இருக்கின்றன. 1981-ல் 441 வழக்குகள் முடிவுறாத நிலையில் இருக்கின்றன. இந்த நான்கு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கும்போது பென்டன்ஸி ஆப் கேஸஸ் இல்லாமல் விரைவில் அவர்களுக்கு பலன் கிட்டும் வகையில் நீதி வழங்க வாய்ப்புள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவச சட்ட உதவி வழங்க அரசாங்கத்திடம் திட்டமுள்ளதா? அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. சி.. பொன்னையன் : தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அவர்கள் சந்திக்கிற வழக்குகள் எதுவாக இருந்தாலும் உதவி செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் ப்ரீ லீகல் எய்ட் போர்ட் மூலமாக அவர்களுக்கு அந்த உதவி அளிக்கப்படுகிறது. 1979-ல் அமைக்கப்பட்ட அந்த ப்ரீ லீகல் எய்ட் போர்ட் மூலம் இதுகாறும் கிட்டத்தட்ட 7,500 வழக்குகளில் தாழ்த்தப்பட்டவர்கள் பாதிக்கப்பட்ட வழக்குகளில் அவர்களுக்கு பரிகாரம் தேடப்பட்டிருக்கிறது.

திரு எல். இளையபெருமாள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிவில் ரைட்ஸ் சம்பந்தமாகக் சொன்னார்கள். ப்ளையிங் ஸ்குவாட்ஸ் இருந்தாலும், ஹரிஜனங்களைக் கொடுமைப்படுத்து சில வழக்குகளில் நான்-ஹரிஜன் சாட்சி இருந்தால்தான் வழக்கு எடுக்கமுடியும் என்ற அவலநிலையில் கீழ்மட்டத்திலுள்ள அதிகாரிகள் பல கேஸ்களில் நடவடிக்கை எடுக்கமுடியாமல் போய் விட்டன. அது அரசுக்குத் தெரியுமா? மேலும் இப்படிப்பட்ட சாட்சிகளை பயமுறுத்தி அவர்களை சமாதானப்படுத்துவது என்ற நிலை இருப்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே வருங்காலத்திலாவது சாட்சி சொல்ல வருகிறவர்களைப் பயமுறுத்தாமல் இருப்பதற்கும், அப்படிச் செய்கிற அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கவும் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: சாட்சிகளில் தாழ்த்தப்பட்டவர்கள் அல்லாதாரில் ஒருவர் சாட்சி இருக்க வேண்டும் என்று வற்புறுத்தி அதன் மூலம் துன்புறுத்துவது தவறான

ஒன்றாகும். அப்படி அதற்கு ஆதாரம் இருந்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும். அதிகாரிகள் சமாதானப்படுத்தும் முறையில் ஈடுபடுவதாக தகவல் இருந்தாலும் உறுப்பினர் அவர்கள் அப்படி ஏதாவது தெரிவிப்பார்களேயானால் நடவடிக்கை எடுக்கப்படும். காரணம், இந்த பிரச்னையை சமாதானத்தில் தீர்க்கமுடியாது. காரணம் தீண்டாமை என்ற உணர்வு பன்னெடுங்காலமாக பட்டிதொட்டிகளில் பரவிக்கிடப்பதால் கடுமையான நடவடிக்கைகள் மூலமாகத்தான் அதை நீக்கமுடியும் என்ற உணர்வோடு அந்தக் கடும் நடவடிக்கைகள் தொடர வேண்டும் என்று அரசு கருதுகிறது. அந்த நடவடிக்கைகள் கண்டிப்பாகத் தொடரும்.

திரு கு. ரமணி. தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கடந்த 3 ஆண்டுகளில் அரிசனங்கள் மீது வந்திருக்கக்கூடிய வழக்குகள், அதிலே எவ்வளவு வழக்குகளுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். தனி நீதிமன்றங்கள் அவர்களுக்கு அமைக்கப்பட வேண்டுமென்று கேட்பதன் அடிப்படையான நோக்கம், அதிகப்படியான நோக்கம், அதிகப்படியான வழக்குகள் அந்த சமுதாயத்தைச் சார்ந்த மக்கள்மீது ஒவ்வொரு கிராமங்களிலும் போடுவதன் காரணமாகத்தான். அந்த வழக்குகள் சாதாரண வழக்கு மன்றங்களில் நடப்பதானால், விரைவிலே தீர்க்க முடியாது. நிரந்தரமான தனியான நீதிமன்றங்கள் எந்த காலத்திற்குள் துரிதமாக அமைக்கப்படும் என்பதை, எந்த கால அளவிற்குள் ஏற்படுத்தப்படும் என்பதைச் சொல்ல முடியுமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணுகின்ற அடிப்படையில்தான் அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. சாதாரண நீதி மன்றங்களிலே அவர்களுக்கு அந்த நீதி விரைவில் கிடைக்க முடியாத நிலை இருப்பதன் காரணமாகத்தான், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, கும்பகோணம் ஆகிய நான்கு இடங்களில் ஸ்பெஷல் பர்ஸ்ட் கிளாஸ் ஜுடிசியல் மாஜிஸ்திரேட் கோர்ட் அமைக்க அரசு ஆணையிட்டிருக்கிறது. நடப்பு ஆண்டிலிருந்து இவைகள் நடைமுறைப்படுத்த இருக்கின்றன.

திரு. க. பாரமலை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் அமைச்சர் அவர்கள் 4 இடங்களில் கோர்டுகள் அமைப்பதற்கான அனுமதி இடப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள். அவைகள் எப்போது செயல்பட துவங்கும் என்பதை அறிவிப்பதோடு, இந்த வழக்குகளில் பெரும்பகுதி தோல்வி அடைவதற்குக் காரணம், அதை நடத்துகின்ற பப்ளிக் பிராசிகியூட்டரால் ஏற்படுகின்றது என்று தெரிகிறது. அரிசனங்கள்மீது இன்டரஸ்ட் இல்லாது பப்ளிக் பிராசிகியூட்டர்கள் இருக்கிறார்கள் என்ற புகார் வருவதன் காரணமாக, விசேஷமாக ஏற்படுத்தஇருக்கின்ற இந்த கோர்ட்டுகளில் ஏற்கனவே இருக்கின்றவர்கள் நியமிக்கப்படாமல், புதியதாக பப்ளிக் பிராசிகியூட்டர்கள் நியமிப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, கும்பகோணம் ஆகிய 4 இடங்களில் அமைக்க இருக்கின்ற நீதி மன்றங்கள் விரைவில் நடைமுறையில் செயலுக்கு வர இருக்கின்றன. பப்ளிக் பிராசிகியூட்டர்களைப் போறுத்தவரையில், இந்த நீதிமன்றங்களுக்குத் தனியாக போடப்படுவார்கள். அப்படிப் போடுகின்றபோது' தாழ்த்தப்பட்ட மக்கள் நலனுக்குப் புறம்பாக செயல்படாதவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரொடெக்ஷன் ஆப் சிவில் ரைட்ஸ் ஆக்ட்-படி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிப்பதற்குத் தனி கோர்ட் அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளதாகச் சொன்னார்கள். அது பாராட்டுக்குரியது. ஆனால், தாழ்த்தப்பட்ட மக்கள், சாதாரண அரிசனங்கள் பழிவாங்கப்படும் நோக்கத்துடன், பல வழிகளில் திருட்டு வழக்கு. மற்றும் சில்லரை வழக்குகளை அவர்கள்மீது போடுகிறார்கள். இந்த வழக்குகளை விசாரிப்பதற்கு இந்த கோர்ட்டுக்கு அதிகாரம் வழங்கப்படுமா? ஜுடிசியல் பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்திரேட் நியமிக்கப்படுவதாக இருந்தால், தாழ்த்தப்பட்ட மக்கள் மாஜிஸ்திரேட்டுகளாக நியமிக்கப்படுவார்களா? குறைந்தபட்சம், அரசு வழக்கறிஞர்களையாவது தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களை நியமிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.பி.சி., கிரிமினல் புரசீஜர் கோட் ஆகியவைகளை ஒட்டிய குற்றங்கள் வருகின்றபோது, அவைகள் இங்கே வராது. தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனியாக சட்டம் இருக்கிறது. தனி நீதி மன்றங்கள், பொது நீதிமன்றங்கள் ஆகியவைகளில்தான் அவைகள் நடக்கும். அங்கே அவர்கள் நிரபராதிகள் என்று பரிகாரம் தேட வழியிருக்கிறது. இந்த ஸ்பெஷல் கோர்ட்டுகளைப் பொறுத்தவரைக்கும், சரியான முறையில் வழக்கறிஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, நான் ஏற்கனவே சொன்னதுபோல். தாழ்த்தப்பட்ட மக்கள் நலனுக்கு பாதகம் ஏற்படாமல் இருப்பவர்கள் நியமிக்கப்படுவார்கள்,

### மத்திய அரசு தனி திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்ய எடுத்துக் கொள்ளப்பெறும் நகராட்சிகள்

*வினா எண் 232—திரு ப. வெங்கட்டசுப்பிரமணியம் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசு தனித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வதற்காகத் தமிழ்நாட்டில் உள்ள நகராட்சிகளை எடுத்துக் கொள்ளும் திட்டம் உள்ளதா?

[1982 பிப்ரவரி 17

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்தில் காஞ்சிபுரம் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; (அ) ஆம்.

(ஆ) காஞ்சிபுரம் நகரின் மக்கள் தொகை ஒரு இலட்சத்திற்கு மேல் உள்ளதால், மத்திய அரசு தனித்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

[முற்பகல் 10.00]

மாண்புமிகு திரு. ப, வெங்கடசுப்பிரமணியம்: இந்த ஒரு லட்சம் மக்கள் தொகைக் கணக்கை மேலும் அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; ஒரு இலட்சமும் அதற்குக் குறைவாகவும் மக்கள் தொகை உள்ள சிறு நகரங்கள், பெரிய நகரங்களில் இந்த வேலைகள் முடிந்த பிறகு இதனை விரிவுபடுத்துவது பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம். அப்படி விரிவுபடுத்தும் காலத்திலே காஞ்சிபுரம் நகரத்தில் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். இந்த அரசு அப்படி பரிந்துரைச் செய்வதைப் பற்றிப் பரிசீலனை செய்யும்.

திரு. மா. சின்னராசு. மத்திய அரசு திட்டத்தின் மூலமாக ஒரு இலட்சத்திற்கு அதிகமாக மக்கள் தொகை உள்ள நகராட்சிகளில் இந்தத் திட்டத்தை மேற்கொள்வதில்லை என்று சொன்னார்கள். ஒரு இலட்சத்திற்குக் குறைவாக மக்கள் தொகை இருக்கும் எந்தெந்த நகராட்சிகளில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ. இராகவாந்தம். 23 சிறிய, நடுத்தர நகரங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பட்டியலைப் படிக்க வேண்டுமென்று சொன்னால் படிக்கிறேன்.

### குடிசை மாற்று வாரியம் மூலம் கட்டப்பட்ட வீடுகள்

*வினா எண் 233—திரு ஜே. எஸ். இராசு: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிசைமாற்று வாரியம் தொடங்கப்பட்டதிலிருந்து 1980 வரை எத்தனை வீடுகள் கட்டியிருக்கிறது?

(ஆ) அதற்கான மொத்த செலவு எவ்வளவு?



1982 பிப்ரவரி 17]

(இ) எந்த அடிப்படையில் வீடுகள் ஒதுக்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். (அ) குடிசை மாற்று வாரியம் தொடங்கப்பட்டதிலிருந்து 1980 வரை 27,783 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

(ஆ) அதற்கான மொத்த செலவு ரூ.3,118.61 இலட்சம்.

(இ) குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்படும் குடியிருப்புகள், சென்னை நகரில் 30—6—1977க்கு முன்னதாக குடிசைப் பகுதியில் வசித்து ரூ. 250/-க்கும் மேற்படாத மாத வருமானமுள்ள குடிசைவாசிக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

திரு. ஜே. எஸ். இராசு. வறுமையை ஒழிக்க தொடுக்கப்படும் முதல் போர் வீடற்றவர்களுக்கு இல்லங்கள் வழங்குவது என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கருத்துக்கு ஏற்ப செயல்பட தி. மு. க. ஆட்சிக் காலத்தில் குடிசை மாற்று வாரியத் திட்டம் கொண்டு வரப்பட்டது. இந்தத் திட்டம் மாவட்டத் தலைநகரங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டிருக்கிறதா? இல்லையென்றால் இனியாவது விஸ்தரிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். இப்போது சென்னை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய பெரிய நகரங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது மற்ற ஊர்களுக்கு விரிவாக்குவதைப் பற்றி நிதி ஆதாரத்தை மனதில் கொண்டு பரிசீலனை செய்யப்படும்.

திரு. ஜே. எஸ். இராசு. குடிசை மாற்றுவாரியத்திற்கான வீடுகள் கட்டுகின்ற செலவினை நமது மாநில அரசே ஏற்றுக் கொள்கிறதா? மத்திய அரசு ஏதேனும் உதவி செய்கிறதா? நிதி உதவி செய்யும் ஸ்தாபனங்களிடமிருந்து நாம் கடன் பெறுகிறோமா? எந்தெந்த வகையில் இந்த இனத்திற்கு நிதி கிடைக்கிறது என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். மத்திய அரசிடமிருந்து எந்தவிதமான நிதி உதவியும் கிடையாது. முழுக்க முழுக்க மாநில அரசே அதற்குச் செலவு செய்கிறது. நிதி, நிறுவனங்களிலிருந்து பணம் வருகிறது. தமிழக அரசு எல்லாச் செலவுகளையும் ஏற்றுக் கொள்கிறது.

திரு. செ. செம்மலை: குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள ஒரே தகுதியுள்ள வீடுகளுக்கு வாடகை நிர்ணயம் சில இடங்களில் ஊழியர்களின் சம்பள அடிப்படையிலும், சில இடங்களில் குறைந்தபட்ச வாடகை என்ற அடிப்படையிலும் நிர்ணயிக்கப்படுகிறது. இதைச் சீர்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1982 பிப்ரவரி 17

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கிரவுண்ட் ஃபிளோர், ஃபஸ்ட் ப்ளோர், செகண்ட் ப்ளோர் என்று மேலே போகப் போக குறைவாகவும், கீழே வர வர அதிகமாகவும் வாடகை வசூல் செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : எங்கள் தொகுதியான இராயபுரத்தில் திடீர் நகர்ப் பகுதியில் கட்டப்பட்ட பல்லாயிரக்கணக்கான வீடுகள் யாருக்கும் வழங்கப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். இதைக் குறித்து சென்ற முறை கால் அட்டென்ஷன் நோட்டீஸ் கொடுத்தபோது வழங்கப்படும் என்று சொன்னார்கள். என்னிடம் அட்டை இருக்கிறது. அதைக் காண்பிக்கிறேன். இதுவரை வழங்கப்படாமல் இருக்கிறது. திடீர் நகரத்தைப் பொறுத்தமட்டில் அமைச்சர் துரித நடவடிக்கை எடுத்து உரியவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நம்மில் சிலர் சில தவறுகளைச் செய்து விடுகிறோம். எந்த விஷயத்தை எங்கே காட்டவேண்டுமோ அங்கே காட்டாமல் வேறு இடத்திலே காண்பிக்கிறோம். ஒருவரிடத்திலே அட்டை இருந்து அவருக்கு வீடு கிடைக்கவில்லையென்றால் என்னிடம் கொண்டுவந்து நேராகக் காண்பித்து இருந்தால் அவருக்கு வீடு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கலாம். அதைவிட்டுவிட்டு சட்ட மன்றத்திலே காண்பிக்கிறேன் என்று சொல்வதன் மூலமாக யாருக்கு உதவி செய்ய வேண்டுமென்று நினைக்கிறார்களோ அவர்களுக்கு உடனடியாக பயன் அளிக்கும் என்று நான் நினைக்கவில்லை. நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அட்டையை என்னிடம் கொடுங்கள். நான் குறிப்பை எடுத்துக்கொண்டு அதன்மீது நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்திலே வேண்டுகோள் விடமுடியாது. சென்னையிலே உள்ள பொதுக் காரியம் பற்றிக் கேட்டால் ஒரு தொகுதிக்கு அது பயன்படும். குடிசை மாற்று வாரியம் பற்றிய பொதுக்கேள்வி இது. அதிலே ஒரு ஆளுக்கு கிடைக்கவில்லை என்று சொல்வது முறையல்ல. இது பொதுவான கேள்வியல்ல.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்திலே வீடுகள் கொடுப்பதற்காக அட்டைகள் கொடுக்கப்பட்டிருந்தாலும் அதற்கு ஏதாவது காலவரம்பு உண்டா? குறிப்பாக திருமங்கலம் பகுதியிலே அட்டைகள் கொடுக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் கிடைக்கவில்லை, அதே நேரத்திலே அட்டைகள் கொடுக்கப்படாதவர்களுக்கு வீடுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? வருங்காலத்திலாவது அவர்களுக்கு உடனடியாக வீடுகளைக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?



1982 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அட்டைகளுக்கு எந்தக் காலத்திலேயும் மதிப்பும் மரியாதையும் உண்டு. என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால் திருமங்கலம் பகுதிக்கு யாரும் போகமாட்டேன் என்று சொன்னதாகவும், யார் போக விரும்புகிறார்களோ அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்றும் என்னிடம் குடிசை மாற்று வாரியம் தகவல் தந்திருக்கிறது. இதற்காகத் தனிக் கேள்வி போட்டால் விவரம் தருகிறேன்.

## மதுரை மாவட்டத்திலுள்ள நகராட்சிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம்

*வினா எண். 234— திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

மதுரை மாவட்டத்தில் எந்தெந்த நகராட்சிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : சின்னமனூர், தேனி, அல்லிநகரம், மற்றும் கம்பம் ஆகிய நான்கு நகராட்சிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. திருமங்கலம் நகராட்சிக் குடிதண்ணீர் திட்டம் ரூ. 62.49 இலட்சம் ரூபாயில் நிறைவேற்றிட 29–1[illegible]–1981ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## பெரியாற்றின் குறுக்கே அணை கட்டிட திட்டம்:

* வினா எண். 235—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) கொல்லிமலையில் ஓடும் பெரியாறு ஆற்றை தேக்கி ஒரு பெரிய அணையை கட்டினால் அதனால் 20,000 ஏக்கர் பயன்பெறும். அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) (ஆ) கொல்லிமலையில் ஓடும் பெரியாறு ஆற்றைத் தேக்கி அணை கட்டும் திட்டம் எதுவும் ஆய்வில் இல்லை. ஆனால் திருச்சி மாவட்டம் துறையூர் வட்டம் புதுப்பட்டி கிராமத்தருகே, கொல்லிமலையிலிருந்து வரும் அய்யார் ஆற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதற்கான திட்டம் தலைமைப் பொறியாளரின் விரிவான ஆய்வில் உள்ளது.

திரு. என். வதராஜன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கேள்விக்கு பதில் சொல்லி முடிப்பதற்குள் அடுத்த கேள்விக்குப் போய்விட்டீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. அமைச்சர் பதிலைச் சொல்லி முடித்துவிட்டார்கள்.

திரு. ஓ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லி மலையிலிருந்து வரும் அய்யார் ஆற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைத்து திருச்சிக்குப் பயன்படுத்துகின்ற திட்டத்தைக் கொண்டுவருவதற்காக நான் அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் கொல்லி மலையில் ஓடும் பெரியாறு ஆற்றைத் தேக்கி அணைகட்டினால் அதன் மூலமாக சேலம் மாவட்டத்திலே உள்ள சேந்தமங்கலம் பகுதி விவசாயிகள் பயன் அடையமுடியும். ஆகவே அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, அதைத்தான் நான் பதிலிலேயே சொல்லியிருக்கிறேன். திருச்சி மாவட்டம் துறையூர் வட்டம் புதுப்பட்டி கிராமத்தருகே கொல்லி மலையிலிருந்து வரும் அய்யார் ஆற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல் கொல்லி மலையில் ஓடும் பெரியாறு ஆற்றைத் தேக்கி அணைகட்டும் திட்டம் ஆய்வில் இல்லை. அதை ஒரு வேண்டுகோளாக வைத்துள்ளார்கள், அரசு அதைக் கவனிக்கும்.

திரு. வெ. அரங்கசராசன் : தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம் துறையூர் வட்டம் புதுப்பட்டி பகுதியில் அந்த அணை கட்டும் திட்டம் தீவிரப் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள், அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டம் 10 ஆண்டுக் காலமாக பரிசீலனையில் இருந்து வருகிறது. அதை விரைவாக நிறைவேற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, எத்தனை ஆண்டுக்காலம் கிடப்பிலே இருந்தது என்ற தகவல் இல்லை. இந்தத் திட்டம் நல்ல திட்டம். என்னிடம் தரப்பட்டிருக்கின்ற தகவலின்படி ரூபாய் 518 லட்சம் மதிப்பீட்டில் 5,100 ஏக்கர் புஞ்சை நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும் என்ற காரணத்தினால் அதை எடுத்துச் செய்வதிலே சிரமம் இருக்காது என்று கருதுகிறேன். எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக அரசு நடவடிக்கை எடுக்கும்.





### கீழ்பவானி பாசன பிரதான கால்வாய் மராமத்துப்பணி

* வினா எண். 236.— திரு. ச. பாலகிருஷ்ணன்
திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்பவானி பாசன பிரதான கால்வாய்க்கு சிமெண்ட் பூசி நீர்க் கசிவைத் தடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) அத்திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும்?

(இ) அதற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) (ஆ) : இத்திட்டத்திற்கான விரிவான ஆய்வு, தலைமைப் பொறியாளரால் மேற்கொள்ளப்படவிருக்கிறது. ஆய்வுக்குப் பின் முடிவெடுக்கப்படும்.

(இ) விரிவான ஆய்வு இன்னும் நடைபெறாததால் இத்திட்டத்திற்கு நடப்பு ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

(முற்பகல் 10.10)

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கால்வாயிற்கு சிமெண்ட் பூசி நீர்க் கசிவைத் தடுப்பதால் சேமிக்கப்படும் தண்ணீரின் அளவு எவ்வளவு? அந்தத் தண்ணீரை எந்த முறையில் விநியோகம் செய்வதற்கு உத்தேசம் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது முன்னோடி அறிக்கைதான் நமக்குத் தயாரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன்படி கிட்டத்தட்ட 50 கோடி ரூபாய் செலவில் கீழ்பவானி பிரதான துணைக் கால்வாய்களை நவீனப்படுத்தினால் 62,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டத்தை விரைவில் எடுப்பதன் மூலம் வறண்ட பகுதியாக இன்றைக்குக் கருதப்படும் பெரியார் மாவட்டம் அல்லது கோவையின் ஒரு பகுதியில் வளம் ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 50 கோடி ரூபாய் பொருட்செலவில் நிறைவேற்றப்படுவதற்கான திட்டம் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கனவே, இந்தக் கீழ்

[1982 பிப்ரவரி 17

பவானி ஆற்றிலிருந்து 33 சதவீதம் கசிவதாகப் பொறியாளர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அந்தக் கசிவு நீரைப் பயன்படுத்துகின்றபொழுது குளம் குட்டைகளுக்கும் தண்ணீர் விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? அல்லது முழுமையும் பாசனத்திற்கே விடுவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கசிவு நீரைப் பயன்படுத்த வேண்டும். அங்கேயுள்ள ண்மாய்கள், குளங்களுக்கெல்லாம் நீரைக்கொடுத்து அந்த நீரைத் தேக்கி வைக்க வேண்டுமென்பது ஒரு கருத்து; கால்வாயை நவீனப்படுத்தி கிட்டத்தட்ட 62,000 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி கொடுப்பது என்பது இன்னொரு கருத்து. இப்பொழுது இந்த இரண்டு கருத்துருக்களும் பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது இந்தக் சிவு நீரைப் பயன்படுத்தி ஏராளமான சிறு விவசாயிகள் வேளாண்மை செய்து வருகிறார்கள். சிமெண்ட் பூசப்படுவதால் இந்த விவசாயிகள் பெரிதும் பாதிக்கப் படுவார்கள். எனவே, இவர்களை மனத்திற்கொண்டு, சிமெண்ட் பூசுவதால் மிச்சம் ஆகின்ற தண்ணீரைப் புதிய நிலங்களுக்கு வழங்கும்பொழுது, இப்படிப்பட்ட விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுத்து வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: பேரவைத் தலைவரவர்களே, நவீனப்படுத்தும்பொழுது கரையோரப் பகுதிகளில் மட்டும்தான் நாம் இப்பொழுது சிமெண்ட் லைனிங் சேனலைக் கட்டிக்கொண்டிருக்கிறோம். அதன் காரணமாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதைப்போலப் பெரிய பாதிப்பு வராது. ஆனால் கரையை யொட்டியுள்ள பகுதிகளிலே இந்தக் கசிவுநீரைப் பயன்படுத்துகின்ற விவசாயிகளுக்கு ஓரளவிற்குப் பாதிப்பு ஏற்படலாம். கூடுமானவரையில் பாதிப்பு ஏற்படாத அளவிற்குத் தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்தினால் பயன்படக்கூடிய தாலுக்காக்கள் எவை எவை என மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.



]1982 பிப்ரவரி 17

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவரவர்களே, ஆய்விலே இருக்கிறது. ஓரளவிற்குத் தகவல் இருந்தாலும், திட்டத்தை நிறைவேற்றும்பொழுது அதை அறிவிப்பதுதான் நல்லது என்று நான் கருதுகிறேன். காரணம், இப்பொழுதே பலபேர் இந்தத் திட்டம் இந்தப் பகுதியில் வருகிறதா, அந்தப் பகுதியில் வருகிறதா என்று கேட்டு ஏழை விவசாயிகளிடம் இருக்கின்ற நிலங்களைக் குறைந்த விலைக்கு வாங்கி வைத்துக் கொள்வார்களேயானால் நாம் நினைக்கக் கூடிய அந்தச் சமூக நீதி கிடைக்காமலேகூடப் போய்விடும். ஆகவே, திட்டத்தை நிறைவேற்றும்பொழுது அதை அறிவிப்பதுதான் நல்லது என்று நான் கருதுகிறேன்.

கோதையாறு நீர்ப்பாசனத் திட்டம்

* வினா எண் 237—திரு. பி. முகமது இஸ்மாயில்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) கன்னியாகுமரி மாவட்டம் கோதையாறு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் கோழிப்போர்விளை கிளைக் கால்வாய் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலைமை என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது; (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. முகமதுஇஸ்மாயில்:- பேரவைத் தலைவர் அவர்களே, பல வருடங்களாக வற்புறுத்தப்பட்டு வரும் இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்வதில் என்ன சிரமங்கள் இருக்கின்றன? இது எடுத்துக்கொள்ளப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புவதோடு, இந்தக் திட்டம் இனிமேலாவது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுமா என்பதையும் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: பேரவைத் தலைவர் அவர்களே, கோதையாறு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் கோழிப்போர்விளை கிளைக்கால்வாய் அமைக்கும் திட்டம் பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேள்வி கேட்டிருக்கிறார்கள். ஆனால் ஏற்கனவே கன்னியாகுமரி மாவட்டத்தில் கோதையாறு பாசனத்தின்கீழ் 64,000 ஏக்கர் ஆயக்கட்டுகளுக்குப் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி நீர்த்தேக்கங் களிலிருந்து பாசனவசதி அளிக்கப்படுகிறது. கடந்த சில வருடங்களாக இந்த நீர்த் தேக்கங்களுக்குப் போதிய நீர் வரத்து ஓரளவுக்குக் குறைந்திருக்கிறது. சில சிரமங்களை நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். எனவே, இருக்கக்கூடிய

[1982 பிப்ரவரி 17

இந்த 64,000 ஏக்கர்களுக்கு நாம் பாசன வசதி கொடுப்பதிலே அதிக கவனம் உடையவர்களாக இருக்க வேண்டியிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் இந்தக் கோதையாறு நீர்ப்பாசனத் திட்டத்தை நவீனப்படுத்துகின்ற அந்தத் திட்டத்தை நாம் எடுக்கின்றபொழுது மாண்புமிகு உறுப்பினரவர்கள் எதிர் பார்க்கின்ற அந்தத் திட்டத்தையும் எடுத்துக் கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது. அதற்கு அரசு ஒரு விரிவான திட்டத்தை இப்பொழுது ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில், கோதையாறு அணையை நவீன படுத்துவதற்காக ரூ.15 கோடி அளவிலே ஒரு முன்னோடிதிட்ட அறிக்கை இப்பொழுது நமக்கு கிடைத்திருக்கிறது. அதை எடுத்து நாம் செயல் படுத்தும் போது மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்த திட்டத்தையும் கவனத்தில் கொள்ள வாய்ப்பிருக்கிறது என்பதைத். தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. முகமது இஸ்மாயில் : பேரவைத் தலைவர் அவர்களே' நவீனப் படுத்தும் திட்டம் உடனடியாக மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது ; நவீனப்படுத்துகின்ற திட்டமென கன்னியாகுமரி மாவட்டத்திலே நாம் 3 திட்டங்களை எடுத்திருக்கிறோம். அதிலே அனந்தனார் வாய்க்காலைப் புதுப்பிக்கும் திட்டத்திற்கு அனுமதி அளித்திருக்கிறோம். அடுத்து இருக்கக்கூடிய திருப்புரப்பு அணைக்கட்டு. அது வலது கால்வாய் விரிவாக்கத் திட்டம். அது ஒன்று தான் ரூ. 47 இலட்சம் என்று குறைந்த அளவிலே உள்ளது. இருக்கக்கூடிய ஒரே திட்டம் கோதையாறு அணையை நவீனப்படுத்துவதுதான். எனவே, அதற்கு முன்னுரிமை கொடுத்து. விரைவிலே செயல்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே. கோதையாறு நீர்ப்பாசனத் திட்டத்தை மாடர்னைஸ் செய்யும் நேரத்திலே, எந்த, எந்தப் புதிய கால்வாய் அதற்கு உட்படுத்தப்படும்? அதற்காக எவ்வளவு செலவு ஆகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது? அதன் காரணமாக, எத்தனை ஏக்கர் நிலத்திற்கு அதிகமான நீர் பாசன வசதி கிடைக்கும்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தோராயமான மதிப்பீடுதான். ரூ. 15 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதன் மூலம் 20,000 ஏக்கர்களை நவீனப்படுத்துவதன் மூலம் கிடைக்கக்கூடிய உபரி நீர்ப் எற்கனவே பயன் பெற்று வருகின்ற நிலங்களுக்கு, பாசன வசதியை உறுதிப் படுத்தவும், பாசனப் பற்றாக் குறையைப் போக்கவும் பயன்படும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.



1982 பிப்ரவரி 17]

## அரியலூரில் புவியியல் ஆய்வு அமைப்பின் பிரிவு ஒன்றை ஏற்படுத்தும் திட்டம்

* வினா எண் 238 திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கனிமவள படிவங்கள், தகவல் குறிப்புகள் பாசில்கள் (fasils) அடங்கிய ஜியாலஜிகல் இன்பர்மேஷன் சென்டர் ஒன்றை அரியலூரில் துவக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு ; புதைபடிவங்களை நிரந்தரமாக பாதுகாக்கும் பொருட்டு இந்திய புவியியல் ஆய்வு அமைப்பும், மாநில புவியியல் பிரிவும், கூட்டாக இணைந்து திருச்சி மாவட்டத்திலுள்ள அரியலூருக்கு அருகில் அருங்காட்சியகம் ஒன்றை அமைப்பதென உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூருக்கு அருகில் ஜியாலஜிக்கல் இன்பர்மேஷன் சென்டர் அமைக்கும் இடம் எது என்பதை அறிய விரும்புவதுடன், அந்தப்பகுதியில் கல்லமேடு, வெட்டிப்பாளயம் காட்டுப்பிரிஞம் கால்வாய் போன்ற இடங்களில், அரும்பொருள்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அந்த சென்டரை அரியலூரிலேயே அமைக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சொன்னேன், அரியலூருக்கு அருகில் அமைக்க அரசு பரிசீலித்துக் கொண்டு வருகிறது என்று. அந்தப் பகுதியிலே அந்த மியூசியம் அமைக்கப்படும் போது, அதைச் சார்ந்திருக்கிற எல்லா பகுதிகளிலிருந்தும் எடுக்கப்படுகிற பொருள்கள் அந்த மியூசியத்திலே வைக்கப்படும்.

## நெல்லை மாவட்டத்திலுள்ள கல்குவாரிகளை ஊராட்சி ஒன்றியங்களுக்கு குத்தகைக்கு விடும் திட்டம்

* வினா எண் 239 திரு. மு. அப்பாத்துரை மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) நெல்லை மாவட்டத்திலுள்ள அரசுக்குச் சொந்தமான கல்குவாரிகளை தனி நபர்களுக்கு குறைந்த தொகைக்கு குத்தகைக்கு விடும் முறையை மாற்றி ஊராட்சி ஒன்றியங்களுக்கு உரிமை வழங்கப்பட்டது உண்மையா?

(ஆ) இந்த முறை நீடிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (அ) ஆம்

(ஆ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள புறம்போக்கு குவாரிகளை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கு கடந்த மூன்று பசலிகளில் கிடைக்கப்பெற்ற குத்தகைத்தொகையினை சராசரித்தொகையை குத்தகைத் தொகையாக நிர்ணயம் செய்து, குவாரிகளை 1390 பசலிக்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டது. ஆனால் அரசு 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுகனிம விதிகள்படி வியாபார நோக்கத்துடன் ஒன்றியங்களுக்கு குவாரிகளை குத்தகைக்கு விட அதிகாரம் இல்லை. ஆதலால், மாவட்ட ஆட்சியாளர் புறம்போக்கு குவாரிகளை ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கிய உத்திரவை ரத்து செய்தும், ஊராட்சி ஒன்றியங்கள் விருப்பப்பட்டால் பொது ஏலத்தில் பங்கு பெறலாம் என்று அரசு ஆணையிட்டதற்குப் பிறகு இம்முறை கைவிடப்பட்டது.

திரு. மு அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியைக் கேட்டதன் நோக்கமே இன்றைக்கு நம்முடைய நாட்டில் தன்னிறைவுத் திட்டம்போன்ற பல்வேறு திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றிற்காக, அந்தக்குவாரிகளிலே இருந்து அந்தக் கற்கள் எல்லாம் பெறப்படுகின்றன. ஆகவே, கற்களினுடைய விலையை அதிகப்படுத்தி தனியார்கள் அதிகமாக இலாபம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் மீண்டும் பரிசீலணைசெய்து அரசாங்கமே அந்தக் குவாரிகளை ஏற்று நடத்த ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரக்கணக்கான இடங்களில் சிதறிக் கிடக்கிற சிறுசிறு பகுதிகளை அரசே எடுத்து நடத்த இயலாது. ஊராட்சி ஒன்றியங்கள், தேவை என்றால், பொது ஏலத்தில் கலந்து கொண்டு, அவர்களும் பங்கு பெற்று, ஏலத்தில் எடுத்துக் கொள்ளலாம்.

திரு. மு. அப்பாதுரை ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தமாதிரி கல்குவாரி நடத்துகின்ற கிராமங்களில் தொழிலாளர்கள் சங்கங்கள் அமைத்திருக்கிறார்கள். அப்படிப் பட்ட சங்கங்களுக்கு இந்தக் குவாரிகளைக் குத்தகைக்கு விட அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.





[முற்பகல் 10.20]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களாகப் பதிவு செய்து கொண்டு அந்தச் சங்கங்கள் முன்வந்தால், அவைகளுக்கு முன்னுரிமை அளிக்க அரசு யோசிக்கும்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலே சுண்ணாம்புக்கல் தனியாக எடுக்கப்பட்டு, அதில் இருந்து ஏராளமான கனிம்புப் பொருள்கள் விரயமாவது அரசுக்குத் தெரியுமா? அப்படியானால் உடனடியாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு அவைகளை முறைப்படி குத்தகைக்கு விட, அவைகளை ஒழுங்குபடுத்தி அரசு நக்வடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, கேள்வி கல்குவாரியைப் பற்றியது. இருந்தாலும், லைம்ஸ்டோன்களைப் பொறுத்தவரையில், மூன்று வகையாக எடுக்கிறார்கள். ஒன்று பெரிய தொழிற்சாலைகளுக்கு எடுத்து அவர்கள் உபயோகிக்கிறார்கள். அடுத்து சிறிய தொழிற் சாலைகளுக்கு எடுத்துச் சென்று அவர்களும் உபயொகிக்கிறார்கள். மூன்றாவதாக தனியர்கள் சிலர் குறைந்த அளவு எடுத்து வியாபாரம் செய்கின்றார்கள். இதிலே ஊராட்சி ஒன்றியங்கள் செய்வதற்கு எதுவுமில்லை அப்படி தேவை என்றால், அவர்கள் விண்ணப்பித்து, பொது ஏலத்திலும் பங்கு கொண்டு எடுக்கலாம், அல்லது சொசைட்டிகளின் மூலமாகவும் எடுக்கலாம். அந்த நிலை வரும்போது அரசு யோசிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருப்பத்தூரில் அரிசன மாணவிகள் இல்லம் கட்டும் திட்டம்

* வினா எண் 240.—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் அரிசன மாணவிகள் இல்லம் புதியதாகக் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் உடன் கட்டுவதற்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் ஐம்பது பேர் தங்கும் ஆதிதிராவிட மாணவிகள் இல்லம் ஒன்று இயங்கி வருகிறது. இதற்காக புதிய கட்டிடம் இதுவரைக் கட்டப்படவில்லை. இதற்கான கருத்துக்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

(ஆ) நிதி நிலையைப் பொறுத்து வரும் ஆண்டுகளில் இவ்வில்லத்திற்கு புதிய கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. ப. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே அரிசன மாணவிகள் இல்லம் என்று இருந்தாலும் பல மதத்தினரும் அங்கே படிக்கின்றார்கள், நீண்ட நாட்களாக வாடகைக் கட்டிடத்தில் இருக்கின்ற அந்த இல்லம் மிகவும் பழுதடைந்து இருக்கின்றது, ஆபத்தான நிலையில் இருக்கின்றது. அந்த ஏழை மாணவிகளைக் காப்பாற்றும் வகையில் உடனடியாக புதிய கட்டிடத்தைக் கட்ட அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** தலைவர் அவர்களே, மாணவிகளின் இல்லங்களைப் புதிதாகக் கட்டுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல, இருக்கின்ற அடிப்படை வசதியை உணர்ந்து அந்த மாணவிகளுக்கு வசதிகள் செய்து தரவேண்டும் என்ற எண்ணத்தோடு, தமிழக அரசும் மத்திய அரசும் ஒரு ஆண்டுக்கு 50 இல்லங்கள் கட்டுவதென்று முடிவெடுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. வருகிற நிதி ஆண்டிலே 50 மாணவியர் இல்லங்களைப் புதிதாக கட்டப்பட இருக்கிறது. அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்து நிச்சயமாக பரிசீலிக்கப்படும்.

**திரு. ஏ. சி. சண்முகம்:** தலைவர் அவர்களே, இந்த விடுதிகள் கட்டும்போது, சீல்டு டெண்டர் முறைலேதான் ஒப்பந்தக்காரர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆனால் ஒரே நபர் டெண்டர் போட்டால் அரசு அதை நிராகரிக்கிறது. ஆனால் ஒப்பந்தக்காரர்கள் ஒன்று சேர்ந்து கொண்டு ஆளுக்கு ஒரு வேலை என்று பகிர்ந்து கொள்கிறார்கள். அப்படி டெண்டர் போடுவதும் அரசு தள்ளுபடி செய்வதுமாக 2, 3 ஆண்டுகளுக்கு அந்தக் கட்டிடங்கள் கட்டமுடியாமல் இருக்கின்றது. இதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் இல்லை.

**திரு. ப. சுந்தரம்:** தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடத்தைக் கட்ட வேண்டும் என்று சென்ற ஆண்டிலேயே அமைச்சரிடம் நேரடியாக மனு கொடுத்தேன். அவரும் கட்டுவதாகச் சொன்னார். அங்கே இருக்கின்ற கட்டிடம் பாழடைந்த கட்டிடமாக இருக்கின்ற காரணத்தால், அந்தக் கட்டிடத்தின் சொந்தக்காரர்கள் அதை உடனடியாகக் காலி செய்யவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அங்கே இருக்கின்ற அதிகாரிகள் வேறு இடம் தேர்வு செய்யவில்லை என்று சொல்லுகிறார்கள். எனவே, நடப்பு ஆண்டிலாவது இந்தக் கட்டடத்தை நிச்சயமாக கட்டித்தர அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு எம். விஜயசாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கக் கூடிய கருத்தின் அடிப்படையில்தான் பதில் அளித்திருக்கிறேன். வருகின்ற நடப்பு ஆண்டில் இதை அரசு பரிசீலனை செய்யும்.

### வேலை நேரத்தில் விபத்துக்குள்ளாகி இறக்கும் கட்டிடத் தொழிலாளர் குடும்பத்திற்கு இழப்பீடு வழங்கும் திட்டம்.

குறுகிய கால வினா எண் 1. ***திரு. இரா. தாமரைக்கனி: திரு. எம். சின்னசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கட்டிடம் கட்டும் தொழிலாளி வேலை நேரத்தில் விபத்துக்குள்ளாகி மாண்டால் அவருடைய குடும்பத்திற்கு ரூபாய் 10,000 வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) இத்திட்டத்திற்கு மத்திய அரசு சட்டம் இயற்ற காலதாமதம் ஆவதால் தமிழக அரசின் நிலை என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** (அ) மற்றும் (ஆ): மத்திய அரசு கொண்டுவர உத்தேசித்திருக்கும் 'கட்டிடம் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள் சட்டம்' இயற்றுவதில் காலதாமதம் ஏற்படக் கூடுமாதலால், மாநில அளவில் இவர்களுக்கென ஒரு சட்டத்தினை மேற்கொள்ள இவ்வரசு தீர்மானித்துள்ளது. சட்டம் விரைவில் கொண்டு வரப்படும். கட்டிடம் கட்டும் தொழிலாளி வேலை நேரத்தில் விபத்துக்குள்ளாகி மாண்டால் அவர் குடும்பத்திற்குத் தகுந்த இழப்பீடு வழங்க இச்சட்டத்தில் வழிவகை செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, தமிழக அரசு இந்தக் சட்டத்தைக் கொண்டு வந்ததற்கு மிக்க நன்றி. அந்தச் சட்டம் வருவதில் காலதாமதம் ஆவதைத் தடுக்க இந்தத் திட்டத்தை விரைவில் செயல்படுத்த மத்திய அரசு மாநில அரசுக்கு ஏதாவது ஆலோசனை கூறியுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் சட்டம் டிராப்ட் பில்—மாநில அரசுக்கு அனுப்பப்பட்டது. அதற்கு வேண்டிய ஆலோசனையை இந்த அரசு அனுப்பியிருக்கிறது. நாம் உடனே கொண்டு வருவோம் என்று சொல்லவில்லை. மத்திய அரசு கொண்டு வருவதில் தாமதம் ஏற்படுமானால், மாநில அரசு

ஒரு சட்டத்தைத் தயாரித்து, சட்ட இலாகாவுக்கு அனுப்பியுள்ளதை, சட்ட இலாகாவிலிருந்து வந்த பிறகு, அதுவரையில் மத்திய அரசு அந்தச் சட்டத்தைக் கொண்டு வராமல் இருந்தால் மாநில அரசு அந்தச் சட்டத்தை கொண்டு வந்து, இந்தச் சட்டமன்றத்தில் நிறைவேற்ற எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய பரிந்துரைகள் கிட்டதட்ட 5 பரிந்துரைகள் இருக்கின்றன. அதைப் படிப்பதற்கு அனுமதி கொடுத்தால், படித்துக் காண்பிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைகள் நீளமான பரிந்துரைகளாக இருந்தால், அவையின் முன் அறிக்கையாக வைத்து விடவேண்டும்.

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, கட்டிடத் தொழிலாளர்கள் வேலை செய்யும்போது திடீரென்று இறந்து விடுகிறார்கள். ஆகவே, அவர்கள் கட்டாயமாக இன்ஷூரன்ஸ் செய்யவேண்டும் என்ற சட்டத்தை அரசு கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைப்பற்றி இப்போதே விவாதம் செய்வதற்கு இறங்கிவிடக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன். அவர்களுக்கு இழப்பீடு கொடுப்பதற்கும்—மத்திய சட்டத்திலே வழிவகை செய்யப்பட்டுள்ளது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடத் தொழிலாளர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் விபத்தில் இறந்தால் கொடுக்கவேண்டும் என்று கேட்கிறார்கள். பனையேறும் தொழிலாளர்களுக்குச் சட்டம் கொண்டு வராமலேயே கொடுக்கிறபோது......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கட்டிடத் தொழிலாளர்களைப் பற்றி மட்டும் கேட்கவேண்டும். பனைமரம் ஏறும் தொழிலாளர்களைப் பற்றிக் கேட்க ஆரம்பித்தால், நேரம் அதிகமாகும். ஆகவே, மூலக் கேள்வியை ஒட்டிக் கேட்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, கட்டிடத் தொழிலாளர்கள் விபத்தில் இறந்தால் 10,000 ரூபாய் கொடுக்கும் முறை சட்டத்தால் அல்ல, சட்டம் இல்லாமலேயே தருவதற்கு அரசு முன்வருமா? ஏனென்றால் பனையேறும் தொழிலாளர்கள் இறந்துவிட்டால் உடனடியா 10,000 ரூபாய் தருகின்றபோது இந்தக் கட்டிடத் தொழிலாளர்களுக்கும்—அவர்கள் திடீரென்று இறந்துவிட்டால்-ரூ. 10,000 கொடுப்பதற்குச் சட்டம் கொண்டு வந்துதான் செய்யவேண்டும் என்று சொல்வதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன.



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அதுதான் எனக்கும் தெரியவில்லை. 30-32 ஆண்டு காலமாக இதைப்பற்றி யாருமே சிந்திக்காமல் ஏன் விட்டு விட்டார்கள் என்று தெரியவில்லை. இந்த அரசு வந்ததற்குப் பிறகுதான் இதற்குச் சட்டத்திலே ப்ரொவிஷன் செய்யலாம் என்று உத்தேசித்துக் கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கி. சட்டநாத கரையாளர்: அவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் பட்ஜெட் கூட்டத் தொடரில் வருமா? அந்தச் சட்டத்திலே நஷ்டஈடு கொடுப்பதற்கு இன்ஷூரன்ஸ் மூலமோ அல்லது அரசு நேரடியாகக் கொடுப்பதன் மூலமோ அல்லது முதலாளிகளிடமிருந்து வரைபடம் தாக்கல் செய்கிறபோது ஒரு தொகையை வசூலிப்பதன் மூலமோ-அல்லது தொழிலாளர்களிடமிருந்து பங்குத் தொகை வசூலிப்பதன் மூலமோ என்று எந்த அடிப்படையில் அந்த நஷ்டஈடு கொடுப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டத்தைப் பற்றியே விரிவான விளக்கம் கேட்டு இருக்கிறார். எல்லா விவரங்களையும் சொல்வதற்கு ஆரம்பித்தால் நேரம் போதாது. ஆகவே, சட்டத்தைப்பற்றி விரிவாகப் பின்னர் பேசலாம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் வருமா என்று கேட்டார்கள். இப்போதே உடனடியாகக் கொண்டு வந்து விட முடியாது. மத்திய அரசு கொண்டு வரவில்லையென்றால், மத்திய அரசு அந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதைத் தாமதப்படுத்தினால், மாநில அரசு கொண்டு வரும். இதுதான் இன்றுள்ள நிலைமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### (அ) 'பால்கமிஷன்' அறிக்கைமீது நடைபெற்ற விவாதம்-தொடர்பாக.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் சற்றேறக்குறைய 3 தினங்களுக்கு பால் கமிஷன் அறிக்கைமீது விவாதம் நடைபெற்று அதிலே நாங்கள் எல்லாம் பங்கேடுத்துக் கொண்டோம். அதில்

பங்கேற்ற அத்தனை உறுப்பினர்களும் அந்தக் கோவிலில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தங்கள் மூலயாக அரசுக்கு விண்ணப்பித்துக்கொண்டோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கேயுள்ள அறங்காவலர் குழு ராசினாமா செய்து விட்டார்கள் என்று சொன்னார்கள். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க உதவ வேண்டும் என்றும் சொன்னார்கள், குற்றவாளிகளைக் கண்டுபிடித்தார்களா என்கிற விவரம் இப்போது தெரிவிக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பாராளுமன்றத்திலும் சட்டமன்றத்திலும் தொடர்ந்து பணியாற்றியவர். இப்படி திடீரென்று எழுந்து பொத்தாம் பொதுவில் ஒரு 'இம்பர்மேஷன்' கேட்பது முறையல்ல. முறைப்படி அதைக் கேட்டால், அரசாங்கத்திடமிருந்து பதில் பெற்றுத்தர முடியும். இந்த முறையை நான் அனுமதிக்கவில்லை.

திரு. வி கிருஷ்ணமூர்த்தி: சார், இன்பர்மேஷன் இருந்தால் சொல்லச் சொல்லுங்கள், அவர்கள் சொல்லட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திடீரென்று எழுந்து இப்படிக் கேட்பது எல்லாம் முறை அல்ல.

(முற்பகல் 10-30)

(ஆ.) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, நேற்றையதினம் தர்மபுரி மாவட்டத்தில் நடைபெற்ற அடக்குமுறை பற்றி கேட்டேன். இன்றைக்கு அந்தப் பிரச்னையை எடுத்துக் கொள்வதாகச் சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு அதை எடுத்துக் கொள்வதாக நான் சொல்லவில்லை. இன்றைக்கும் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் வருகிறது. கே. வி. குப்பத்தைப்பற்றியது; போலீஸ் அடக்குமுறை பற்றித்தான் வருகிறது. 20 பேர்கள் அதுபற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

* * *

நீங்கள் இப்படிக் கோஷம் போடுவது முறையே அல்ல. அவை எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது.

திரு. என். சங்கரய்யா: தலைவரவர்களே, ஒரு முக்கியமான பிரச்சனைப்பற்றிக் கேட்கிறார்கள்......

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையிலே இப்படி நடந்து கொள்வது முறைதானா என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் சிந்திக்க வேண்டும். (குறுக்கீடு) திரு. உமாநாத் அவர்கள் கொடுத்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானம் இப்போது எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி: நாங்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளாததால் அதை எதிர்த்து நாங்கள் வெளி நடப்புத்தான் செய்தாக வேண்டும். * * *

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து இந்த அவையினுடைய மதிப்பையும் மரியாதையையும் காப்பாற்றினால்தான் இந்த அவை நல்ல முறையிலே நடைபெறும். அதற்காக எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் ஒத்துழைப்புத் தரவேண்டும். ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பொறுத்தவரையிலே பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதி தந்து அதன்பிறகு அதற்கு விளக்கங்கள் தருகின்ற முறைகளை நாம் கடைபிடித்துக்கொண்டு வருகிறோம். இன்றைக்கு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வதாக இருக்கிறார்கள். அது ஏற்கெனவே கொடுக்கப்பட்ட ஒன்று. மாண்புமிகு உறுப்பினர்கள் நேற்று ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். உறுப்பினர்கள் அதுபற்றிய கருத்துக்களைச் சொன்னால் அதற்குரிய முறையிலே அரசு தரப்பிலேயே நிலைமைகளை எடுத்துச் சொல்லவேண்டும். அதற்கான விவரங்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. நான் உறுதியாகச் சொல்கிறேன். நாளைக்கு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. விவரமான விளக்கங்களைத் தரவேண்டும் என்பதற்காக நாளை எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும் மற்றவர்களும் உள்ளபடியே நீண்ட அனுபவம் பெற்றவர்கள், சட்டமன்றத்தின் தன்மையைப் பற்றி நன்கு அறிந்த அவர்கள் அவையின் தன்மையைக் காப்பாற்ற பெரும் ஒத்துழைப்பு தரவேண்டும். இதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டால் அரசின் தரப்பிலே விளக்கங்கள் தரவேண்டும். நாளை எடுத்துக்கொண்டால் மாண்புமிகு உறுப்பினர்களும் அதிலே கருத்துக்களைச் சொல்லலாம். அரசின் தரப்பிலேயும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என்பதைச்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 பிப்ரவரி 17

சொல்ல முடியும். ஆகவே, இந்த அவையின் கண்ணியத்தையும் மதிப்பையும் காப்பாற்றுவதற்கு அவையில் இருக்கின்ற எல்லா தரப்பு உறுப்பினர்களும் ஒத்துழைப்பு தந்தால் தான் நம்முடைய கண்ணியமும் காப்பாற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாணவப் பருவத்திலிருந்து அரசியல் நிலைமைகளை நான் பார்த்து வருகிறேன். ஒவ்வொருவரும் ஒரு அரசியல் கட்சிக்குச் சொந்தக்காரராகத்தான் இருக்கிறோம். ஆகவே வெளிநடப்பு செய்கின்ற உரிமையைப் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. அது மாண்புமிகு உறுப்பினர்களின் ஜனநாயகக் கடமைகளில் ஒன்று. அந்த உரிமை அவர்களுக்கு உண்டு. ஆனால் முழக்கங்கள், கோஷங்கள் போன்றவற்ற எல்லாம் அவைக்கு வெளியே வைத்துக்கொள்ளலாமே தவிர அவையிலே கூடாது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, தாங்கள் மிகுந்த அனுபவத்தின் அடிப்படையிலே அறிவுரைகளை எல்லாம் சொன்னீர்கள். ஆனால் இருக்கின்ற உறுப்பினர்கள் உங்களிடத்திலே 'அலவ்' பண்ணவேண்டும் என்று பணிவாகக் கேட்டபோது அனுமதி தராமல் தாங்களே வெளியே தள்ளவேண்டும் என்று நினைக்கிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உள்ளே .. வாருங்கள் என அழைப்பதுதான் என் வழக்கமே தவிர யாரையும் வெளியே தள்ள நான் நினைத்ததே இல்லை.

(முற்பகல் 10-40)

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்வதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்றாலும், 3 நாட்களாக சட்டசபையில் அது குறித்து விவாதித்தோம். அது சம்பந்தமாக கொலைகாரர்கள் கைது செய்யப்பட்டார்களா என்பதைத்தான் நான் ஒரு விளக்கம் பெறுவதற்காக ஒரு சப்மிஷனில் கேட்டேன். எங்களைப் பேசவிடாமல் செய்து கொண்டிருந்தால் வெளியே அனுப்புவது போலத்தானே ஆகிறது. . . . . . . (மணியடிக்கப்பெற்றது)

(*) மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1982 பிப்ரவரி 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெளிநடப்பு செய்வது எல்லாம் உங்களுடைய உரிமை. அது ஜனநாயக மரபுக்கு உட்பட்டது. ஆனால் இது போன்ற நிலையை, அவைக்குள்ளேயே கோஷம் எழுப்பும் முறையை நான் இதுவரையில் கண்டதே இல்லை. யாராக இருந்தாலும் இதற்கு அனுமதிக்க மாட்டார்கள். காலையில் பேப்பரைப் பார்த்துவிட்டு, அது குறித்து அரசாங்கம் விளக்கம் வேண்டும் என்று திடீர் திடீர் என்று ஏதாவது பிரச்சினையை அவையில் கிளப்பினால் எப்படி அவை ஒழுங்காக நடக்க முடியும்? எதுவாக இருந்தாலும் ஒத்திவைப்புத் தீர்மானத்தில் அல்லது கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் அல்லது வினாக்களின் வாயிலாக எழுப்பிக் கேளுங்கள். ஏதாவது ஒரு விதிமுறைகளுக்கு உட்பட்டு கேட்டால், பதில் சொல்வதற்கு அரசாங்கத்திற்கும் இயலும், அவையின் கண்ணியமும் காப்பாற்றப்படும். ஆனால் இதுபோன்ற முறைகள் சரியல்ல. (குறுக்கீடுகள்-குழப்பம்)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் விதிமுறைகளின்படி, நடைமுறைகளுக்கு உட்பட்டு எழுப்ப நினைக்கும் பிரச்னைகளை எழுப்ப வேண்டும் என்று பேரவைத் தலைவர் அவர்கள் சொல்வதில் நியாயம் இருக்கிறது. (குறுக்கீடு) சப்மிஷன்தான் என்று சொன்னால், இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு சப்மிஷனைக் கேட்கலாம். குறுகிய கால வினாக்களைக் கேட்டுப் பதிலை பெறுவதற்குக்கூட உறுப்பினர்களுக்கு வழி இருக்கிறது. ஆகவே விதிமுறைகளின்படி எழுப்புங்கள் என்று கேட்கிறாரே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

### 3. ஒத்திவைப்புத் தீர்மானம்

### ஜல்லிக்கட்டு விழாவின்போது போலீஸ் துப்பாக்கிச் சூடு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குடியாத்தம் அருகே கே.வி. குப்பம் என்னும் கிராமத்தில் 13-2-1982 அன்று மாடு விடும் திருவிழா (ஜல்லிக்கட்டு)போது போலீசார் துப்பாக்கிப் பிரயோகத்தின் காரணமாக மக்கள் பலர் படுகாயம் அடைந்துள்ளதால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்டமும் பீதியும் குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்னும் தீர்மானத்தை முன்மொழிய என் அனுமதியைக் கேட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு உ. சுப்பிரமணியன் அவர்கள் ஒரு முன்னறிவிப்புக் கொடுத்துள்ளார். இதே பொருள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள்—

திரு. த. வேணுகோபால்
திரு. கே. ஆர். சுந்தரம்
திரு. டி. மணி

திரு. ப. பொன்னுரங்கம்
திரு. என். ஏ. பூங்காவனம்
திரு. தி. கா. நல்லப்பன்
திரு. பெ. சு. திருவேங்கடம்
திரு. அ. ரகுமான்கான்
திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்
திரு. ஜே. ஹேமசந்திரன்
திரு. இல். பலராமன்
திரு. பாபு. ஜனார்த்தனன்

ஆகியோரும் முன்னறிவிப்புக் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்துச் சுருக்கமாகக் கூறும்படி திரு இல. பலராமன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம், கே. வி. குப்பம் பகுதியிலே வழி வழியாக நடந்து கொண்டிருக்கிற மாடு பிடி திருவிழாவிலே ஒரு சிறு சம்பவத்தை வைத்து, அங்கே ஒரு பெரிய கலவரம் ஏற்பட்டு துப்பாக்கிச் சூடு நடத்தக் கூடிய அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்றால், அதற்கு யார் பொறுப்பு என்பதை அரசு ஆலோசிக்க வேண்டும்.

இதனால் அப்பகுதியில் உள்ள மக்கள் மத்தியிலே குழப்பமும் பீதியும் காவல் துறையினர் மீது ஒரு நல்ல எண்ணம் இல்லாத வகையிலே, காட்டு தர்பார் நடத்தும் காவல் துறையினராக உள்ளனர் என்று கருதும் வகையில், அந்தப் பகுதி மக்கள் மத்தியிலே ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்று முதலாவதாக குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

அங்கே நடைபெற்ற ஒரு சிறு தகராறை அப்படியே விட்டிருந்தார்களானால், சரியாக இருந்திருக்கும், அமைதியாக இருந்திருக்கும். ஆனால் காவல் துறையினர் அங்கேயிருந்து ஒரு நபரை அழைத்து வந்து காவல் நிலையத்தில் அடைத்து வைத்து, பொது மக்கள் மத்தியில் அவரை அடிக்க்கூடிய அளவுக்கு சம்பவத்தை ஏற்படுத்தியதினால், பலர் கூட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அப்படி கூடிய நபர்களை விரட்டுவதற்காக தடியடிப்பிரயோகம் செய்யப்பட்டதன் விளைவாக ஒரு இளைஞன் மாணவன் அங்கே அடிக்கப்பட்டு, மிக மோசமாக பாதிக்கப்பட்டதன் காரணமாக மேலும் பலர் கூடவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்திய பழிக்குக் காவல் துறை ஆளாக நேரிட்டது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.



(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதன் விளைவாக கூடவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் அந்தப் பகுதியில் ஏற்பட்டு சாதாரண மக்கள், காவல் துறையை மதிக்க வேண்டிய மக்கள், இன்று அஞ்சுகிற ஒரு சூழ்நிலையை உருவாக்கியதோடு கூட காவல் துறையினர் நடந்துகொண்ட முறை வருந்தத்தக்கது, கண்டிக்கத்தக்கது. இது எல்லாக் கிராமங்களுக்கும் பரவிவிடக்கூடிய ஒரு சூழ்நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பகுதி மக்கள் மிகவும் வேதனையோடு இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. ஆகவே இதுபற்றி விரிவாகப் பேசுவதற்கு அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம் கே. வி குப்பத்தில் சென்ற 1 ஆம் தேதி அன்று வழக்கமாக நடைபெறும் பொங்கல் திருவிழாவிருந்து மாடுவிடும் விழா நிகழ்ச்சி பல்வேறு இடங்களில நடப்பதைப் போன்று இங்கும் நடைபெற்றிருக்கிறது. அன்றையதினம் கே. வி. குப்பம் காங்குப்பம் இவற்றைச் சேர்ந்தவர்கள் ஆயிரக்கணக்கில் குழுமியிருக்கும்போது வாய் வார்த்தையில் தர்க்கம் நடந்தபோது அங்கிருந்த போலீசார் ஒருவர் பொது மக்கள் எதிரிலேயே அந்தப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்த ஒருவரை அடித்திருக்கிறார்கள். இங்குதான் பிரச்னை எழுகிறது. அப்படி அடித்ததோடு மட்டுமல்லாமல் அவர்களை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அவர்களைத் தொடர்ந்து பொதுமக்களும் காவல் நிலையத்திற்குச் சென்றிருக்கிறார்கள். காவல் நிலையத்தின் எதிரில் போலீசார் அழைத்து வந்த நபரை பூட்ஸ் காலால் எட்டி உதைத்து உள்ளே தள்ளியிருக்கிறார். பொதுமக்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்த பிறகு போலீசார் பொது மக்கள் மீது கடுமையான முறையில் தடியடிப் பிரயோகம் செய்திருக்கிறார்கள். பிறகு துப்பாக்கிப் பிரயோகம் எல்லாம் நடைபெற்றிருக்கின்றன என்று கேள்விப்படுகிறபோது உள்ளபடியே இது வருந்தத்தக்கதொரு செயலாகும்.

சாதாரணமாக இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் கிராமங்களில் நடைபெறுகிற காலங்களில் ஏதாவது ஒரு சிறிய சர்ச்சை என்றாலும் பொதுமக்களே பேசி சமாதானப்படுத்தியிருக் லாம். பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னால் அடிப்பதோடு எட்டி உதைப்பது போன்ற காரியங்கள் நடைபெற்ற காரணத்தால் இப்படிப்பட்ட ஒரு சிறிய நிகழ்ச்சி துப்பாக்கிப் பிரயோகம் செய்கிற அளவிற்குப் பெரியதொரு நிகழ்ச்சியாக அங்கே வளர்ந்திருக்கிறது. போலீசாருக்கு எவ்வளவோ வேலைகள் இருக்கின்றன. களவுகள், ஏராளமான திருட்டுகள் போன்றவற்றைக் கவனிப்பதை விட்டு விட்டு இப்படிப்பட்ட அசம்பாவிதமான நிகழ்ச்சிகள் பலயிடங்

களில் அன்றாடம் நடக்கின்ற நிகழ்ச்சிகளாகத் தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே போலீசாருக்கு தக்க முறையில் அரசு அறிவுரைகள் வழங்கவேண்டும். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறாவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி இதுபற்றி நாம் இன்னும் விரிவாகப் பேச இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கோரி முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. கே. ஆர். சுந்தரம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, குடியாத்தம் பகுதியில் கே. வி. குப்பத்தில் மாடுவிடும் திருவிழாவின்போது இரண்டு பேர்களிடையே ஏற்பட்ட வாய்த் தகராறை முன்னிட்டு காவல் துறை ஊழியர் ஒருவர் தலையிட்டு அங்கேயே அவர்களை அடித்து காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள். பொதுமக்கள் பார்த்துக் கொண்டிருக்கிற நேரத்தில் காவல் துறை ஊழியர் ஒருவர் அழைத்துச் சென்றவரை காவல் நிலையத்திற்கு உள்ளே நுழைகிற நேரத்தில் பூட்ஸ் காலால் உதைத்து உள்ளே தள்ளியிருக்கிறார். இதைப் பார்த்து ஆத்திரம் அடைந்த மக்களைக் கலைக்க வேண்டி தடியடிப்பிரயோகம் நடத்தியிருக்கிறார்கள் இந்த தடியடிப் பிரயோகத்திற்குப் பயந்து பொதுமக்கள் ஓடும்போது ஒருவர் போலீசாரால் அடிபட்டு கீழே விழுந்திருக்கிறார். அப்படி கீழே விழுந்தவரை போலீசார் தாக்கிய நேரத்தில் கும்பல் கூடியது. அந்த நேரத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கிறார்கள். அதனால் பலர் காயமடைந்திருக்கிறார்கள். இன்று கே. வி. குப்பத்தில் மட்டும் அல்ல, தமிழ்நாட்டிலுள்ள பல பகுதிகளில் தொடர்ச்சியாக இப்படி நடந்துகொண்டிருக்கிறது. அரசியல்வாதிகள் மீதும் அத்துமீறி நடந்துகொண்டிருக்கிற சம்பவங்கள் நாள்தோறும் நடந்து கொண்டிருக்கின்றன. இந்தச் சட்டமன்றத்தில் திருச்செந்தூர் சம்பவம் பற்றி பேசியபிறகும்கூட காவல் துறையினர் இப்படி நடந்து கொள்கிறார்கள். கே. வி. குப்பத்தில் துப்பாக்கி சூடு நடந்த பின்னாலும் நூற்றுக்கணக்கான பொது மக்களை கைது செய்து. போலீசார் வீடு வீடாக நுழைந்து கிராமம் கிராமமாக நுழைந்து பலரைக் கைதுசெய்து கொண்டிருக்கிறார்கள். அப்படி கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யவும் அப்படி பொதுமக்கள் முன்னாள் தாக்கிய போலீஸ் அதிகாரியை தற்காலிக வேலை நீக்கம் செய்யவும், அதைப்பற்றி விசாரிக்க நீதி விசாரணை செய்ய வேண்டியும் இப்படி பல விஷயங்களைப் பற்றி பேச வேண்டியிருப்பதால் அவையில் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது பற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



(முற்பகல் 10.50)

திரு. என். ஏ. பூங்காவனம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கே.வி. குப்பம் என்ற பகுதி என்னுடைய தொகுதியைச் சார்ந்தப் பகுதியாகும். அந்தப் பகுதியில் 13ஆம் தேதியன்று போலீசார் ஆண்டுதோறும் நடைபெற்று வரும் மாடு விரட்டும் திருவிழாவில் தலையிட்டு, எனக்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல், இதிலே விவகாரம் எப்படி வந்தது என்று சொன்னால் ராஜேந்திரன் என்கிற கிரேட் 1 போலீஸ்காரர் அந்தக் காவல் நிலையத்திலே நீண்ட காலமாக பொதுமக்களை அடிப்பதும் தகராறிலே ஈடுபடுத்தி, கேஸ்களை ஜோடிப்பதும், பணம் பெறுவதும் தொடர்ந்து செய்து வருகிறார் என்று பல புகார்கள் மாவட்ட போலீஸ் நிலையத்திற்கும் தலைமை அதிகாரிகளுக்கும் பொதுமக்கள் அனுப்பியிருக்கிறார்கள். நானும் அனுப்பியிருக்கிறேன். ஆனால் 13 ஆம் தேதியன்று பொதுமக்கள் பேசிக்கொண்ட அந்த பேச்சு வார்த்தைகளின் குறுக்கே தலையிட்டு, பொதுமக்கள் முன்னாலேயே 4 பேர்களை அடித்திருக்கிறார்கள். அதில் ஒரு சிறு பையன், 11வயது இளைஞனின் மண்டையைக் கிழித்திருக்கிறார்கள். அதோடு இன்னொருவரையும் அடித்திருக்கிறார்கள். அதற்குப் பின்னால் கலவரம் ஏற்படக்கூடிய சூழ்நிலை வந்தவுடன், அவர்களை இழுத்துக்கொண்டு போலீஸ் நிலையத்திற்குச் சென்றிருக்கிறார்கள். வெளியே வரும்போது பூட்ஸ் காலால் உதைத்திருக்கிறார்கள். அடித்திருக்கிறார்கள். இத்தகைய நிகழ்ச்சியை அவர்கள் தொடர்ந்து செய்திருக்கிறாகள். இதைத் தவிர, முன்னறிவிப்பு எதுவும் இல்லாமல் போலீஸ் அதிகாரிகள் தடியடிப் பிரயோகம் செய்திருக்கிறார்கள். அப்படி அடித்ததினால் பலர் அடிபட்டிருக்கிறார்கள். அவர்களில் பலர் மருத்துவ நிலையத்திற்குச் செல்லவில்லல. தகவல் கொடுக்கவில்லை. தனியாரிடமும் சிகிச்சை பெற்றுக்கொண்டு சென்றிருக்கிறார்கள்.

அன்றைய மறுநாள் அந்தப் பகுதிக்குச் சென்று, தகவல் கிடைத்த பிறகு, பார்த்தபோது சிறைக்குள்ளே 17 பேர்கள் இருக்கிறார்கள், இளைஞர்கள், சாதாரண பீடித் தொழிலாளர்கள், கை வண்டி இழுக்கக்கூடியவர்கள், கூலி வேலை செய்பவர்கள் எல்லாம் சிறைக்குள்ளே இருக்கிறார்கள், அதே போல், இன்ஸ்பெக்டருக்கு அடிப்பட்டது என்று சொன்னார்கள். அதையும் சென்று பார்த்தேன். மருத்துவமனையிலே அந்த இன்ஸ்பெக்டரை விசாரிக்கின்றப் போது அவர் சரிவர பதில் சொல்லாமல், ஒருமாதிரியாக சொன்னார்கள். டி. எஸ். பியைப் பார்த்தேன். போலீஸார் நடந்துகொண்ட முறை, எடுத்த நடவடிக்கைகள், துப்பாக்கிச் சூடு, இதனால் இந்தப் பகுதியில் ஏற்பட்டிருக்கக்கூடிய தவறுகளுக்கு யார் காரணம், சம்பந்தப்பட்ட அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன்.

நான் பகிரங்கமாகவே குற்றம் சாட்டுகிறேன். ராஜேந்திரன் என்கிற இந்த கிரேட் 1 போலீஸ்காரர் தொடர்ந்து இப்படி செய்கிறார். இந்தச் சூழ்நிலை ஆரம்பிப்பதற்கும், தடியடி பிரயோகம் நடப்பதற்கும் அவர்தான் காரணமாக இருந்திருக்கிறார். தமிழகத்திலே எந்த மாவட்டத்தை எடுத்துக் கொண்டாலும், எந்தப் பகுதியை எடுத்துக் கொண்டாலும், நம் மாநில அரசு என்று ஒன்றிருக்கிறது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு இருக்கிறது என்ற நிலை இல்லாமல், போலீசார் ஆட்சி நடக்கிறது என்ற நிலையில்தான் தமிழகம் இருக்கிறது. என் தொகுதியில் மட்டும் அல்ல. திருப்பத்தூர் தொகுதியிலே தகராறு இருக்கிறது; ஆம்பூர் தொகுதியிலே தகராறு இருக்கிறது. இப்படி தகராறுகள் தொடர்ந்து எல்லாப் பகுதிகளிலும் இருக்கிறது. இந்த நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற அடிப்படையில், நம்முடைய மாநில அரசாங்கம் உடனடியாக ராஜேந்திரன் என்கிற அந்த போலீஸ்காரரை வேலையை விட்டு நீக்குவதோடு, இதுகுறித்து விசாரணை நடத்தவேண்டும், மேலும் இதுசம்பந்தமாக தொடர்ந்து விவாதிப்பதற்கு இந்தப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு கிடைத்த தகவல்களின் படி, வட ஆற்காடு மாவட்டம், குடியாத்தம் அருகேயுள்ள கே. வி. குப்பம், காமாட்சி அம்மன்பேட்டையில் 13.2.82 அன்று நடைபெற்ற காளை விரட்டு போட்டியின்போது, அங்கு குழுமியிருந்த இருசாராரிடையே குழப்பம் ஏற்பட்டது. அச்சமயம் பந்தோபஸ்து பணியில் ஈடுபட்டிருந்த காவலர்கள் தலையிட்டு நிலைமையை கட்டுக்குள் கொண்டுவர முற்பட்டனர். இதில் கே. வி. குப்பத்தைச் சேர்ந்த சண்முகம் என்பவருக்கு தலையில் சிறு காயம் ஏற்பட்டது. காவலர்க்கும், பொது மக்களில் ஒரு பகுதியினருக்கும் மோதல் ஏற்பட்டிருக்கின்றது. காவலர்களின் இச்செய்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் உள்ளூர் நபர்கள் சிலர் கே. வி. குப்பம் காவல் நிலையத்தின் முன்பு கூடி, சிலர் காவல் நிலையத்திற்குள் நுழைய முற்பட்டனர். அவர்களை உதவி ஆய்வாளர் விரட்டினார், அந்த அமளியில் சக்கரவர்த்தி என்பவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. அவரைக் காவல்நிலையத்திற்குக் கொண்டுவந்து முதல் உதவி அளித்து பிறகு காயமடைந்த நபரை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவ மனைக்கு அனுப்புவதற்கான முயற்சியில் உதவி ஆய்வாளர் ஈடுபட்டார். இதற்கிடையில் காயமடைந்த சக்கரவர்த்தி இறந்துவிட்டதாக புரளியும் பரவத் தொடங்கியது. இதைத் தொடர்ந்து கூட்டத்தினர் காவல்நிலயத்தை கற்களால் தாக்க ஆரம்பித்தனர். இதனால் காவல் நிலையம் சேதமாகி ரூ.300-க்கு நஷ்டம் ஏற்பட்டது. கூட்டத்தினரின் கல்லெறிதலில் உதவி ஆய்வாளரும் காவலர் ஒருவரும் காயமடைய நேர்ந்தது.



கூட்டத்தினரின் வன்முறை பெருகி வருவதைக் கண்ட துணை ஆய்வாளர் தற்பாதுகாப்புக்காக துப்பாக்கிப் பிரயோகம் செய்ய ஆணையிட்டார். இதனைத் தொடர்ந்து வானத்தை நோக்கி ஐந்து தடவை ரவை தோட்டா (பக் ஷாட்ஸ்) துப்பாக்கிப் பிரயோகமும், மூன்று தடவை தோட்டா துப்பாக்கி (பால் ஷாட்ஸ்) பிரயோகமும் செய்யப்பட்டது. இத் துப்பாக்கிப் பிரயோகத்தில் யாரும் காயமடையவோ உயிரிழக்கவோ இல்லை. கூட்டம் கலைந்து சென்றது.

இச் சம்பவத்தில் காயமடைந்த சண்முகம், சக்கரவர்த்தி, குப்புசாமி ரெட்டியார் ஆகியோர் முதலுதவி அளிக்கப்பட்டு மேற்சிகிச்சைக்காக குடியாத்தம் அரசு மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். காயமடைந்த துணை ஆய்வாளரும் உள் நோயாளியாக குடியாத்தம் அரசு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். கூடுதல் காவல் படையும், எஸ். பி. யும் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து சம்பவத்தைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியது போன்று காவல் துறையைச் சார்ந்தவர்கள் அத்து மீறி நடந்து கொண்டதன் காரணமாக பொதுமக்களிடத்தில் மாச்சரியங்கள் ஏற்பட்டன என்பதால் அந்த அடிப்படையில் அரசு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவும், மேலதிகாரிகள் மூலமாகவும் விசாரித்து அது குறித்து உடனடியாக அறிக்கை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியது போன்று கலவரங்களுக்கும் மற்றவற்றுக்கும் யார் யார் காரணமோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது. கொடுத்திருக்கும் புகார்களின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் விசாரித்து அறிக்கை வந்த பிறகு தக்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து நிலைமை கட்டுக்கடங்கி இருப்பதாலும், மேற்கொண்டு அசம்பாவிதங்கள் நடைபெறாததாலும் இதுகுறித்து விவாதிக்க அவையை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 4. கவன ஈர்ப்புகள்

### (அ) நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் ஆத்தூர் கிடங்கிலிருந்து நெல் மூட்டைகள் காணாமல் போனது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் ப. வெங்கடசுப்பிரமணியம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. கிருஷ்ணன், சி. பழனிமுத்து மற்றும் திருமதி தா. இராசாம்பாள் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு நிதித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம் ஆத்தூரில் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்கிலிருந்து ரூ. 8 லட்சம் மதிப்புள்ள நெல் மூட்டைகள் காணாமல் போனது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் என்னுமிடத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 1981-ம் ஆண்டின் குறுவைப் பட்ட நெல்லை கூலிக்கு அரைப்பதற்கு திரு. கே. வி. சந்திரமோகன் என்பவர் முகவராக நியமிக்கப்பட்டார். இதற்கு, நுகர்பொருள் வாணிபக் கழகத்துக்கு ஒப்பந்தப் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். அந்த ஒப்பந்தப் பத்திரத்தின் சரத்துக்கள்படி, தஞ்சாவூர் மாவட்டத்தில் கொள்முதல் செய்த 1030.742 மெட்ரிக் டன் நெல் அரைவைக்காக அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த நெல் ஒற்றைப்பூட்டு அதிகாரி திரு. ஏ. முருகேசன் (துணைத் தாசில்தார்) அவர்களின் கண்காணிப்பில் அரைவை முகவரின் கிடங்கில் இருந்தது. அதில் 362.689 மெட்ரிக் டன் நெல்லை ஒற்றைப்பூட்டு அதிகாரி அரைவைக்காக கொடுத்திருக்கிறார். அந்நெல்லிற்கு அரைவை முகவர் கொடுக்க வேண்டிய அரிசியின் அளவு 224.868 மெட்ரிக் டன். ஆனால் அவர் கொடுத்தது 171.700 டன் அரிசிதான்.

அரைவைக்காக முகவரிடம் கொடுத்த நெல்லையும் அவர் கொடுத்த அரிசியையும், மீதம் அவரிடமும், ஒற்றைப்பூட்டு அதிகாரியின் கண்காணிப்பில் உள்ள கிட்டங்கியில் உள்ள நெல்லையும் ஆய்வு செய்ய நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைமை அலுவலகத்தில் உள்ள ஆய்வுக் குழு அனுப்பப்பட்டது. அக்குழு இந்த அரைவை முகவரிடம் உள்ள கணக்குகளையும்,



கையிருப்பையும் ஆய்வு செய்து கையிருப்பில் குறைவுகள் காணப்படுவதாகக் கண்டுபிடித்து நுகர் பொருள் வாணிபக் கழக சேலம் மண்டல் மேலாளருக்கு தெரிவித்தது. ஆய்வுக் குழு எடுத்துக் கூறியபடி அரைவை முகவரிடம் உள்ள கையிருப்பு முழுவதும் நிறுத்து சரி பார்த்ததில், பின் வரும் அளவு நெல்லும், அரிசியும் காலி கோணிப்பையும் குறைவாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

| | மூட்டைகள் | எடை (மெட்ரிக் டன்) | மதிப்பு ரூ. |
|---|---|---|---|
| நெல் | 7081 | 414.229 | 4,76,363.35 |
| அரிசி | 329 | 32.891 | 57,559.25 |
| கோணி | — | — | 48,215.75 |
| | | | 5,82,138.35 |

நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் அறிவுரைப்படி, ஒற்றைப் பூட்டு அதிகாரி அரைவை முகவரிடம் அமைக்க ஒப்படைத்த நெல் முழுவதும் தன் கண்காணிப்பில் வைத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு முறையும் அரைவைக்காக அவர் 20 முதல் 30 மெட்ரிக் டன் வரை நெல்தான் அரைவை முகவரிடம் கொடுக்கவேண்டும். ஒரு முறை கொடுத்த நெல்லுக்குரிய அரிசி முழுவதும் பெற்றபின்தான் அரைவைக்காக அடுத்த முறை தன் கண்காணிப்பில் உள்ள நெல்லை ஒற்றைப்பூட்டு அதிகாரி கொடுக்கவேண்டும். மாறாக, ஒற்றைப்பூட்டு அதிகாரி நெல் இருந்த கிடங்கிப் பூட்டின் ஒரு திறவு கோலை அரைவை முகவரிடம் ஒப்படைத்து விட்டார். மேலும் அவர் தினமும் அரைவைக்கு எடுத்த நெல்லையும், அதற்கு வரவேண்டிய அரிசியையும், மீதி கையிருப்பு நெல்லையும் கண்காணிக்க தவறிவிட்டார். இதைப்பற்றி ஒற்றைப்பூட்டு அதிகாரி மீதும் அரைவை முகவர் மீதும் மண்டல மேலாளர் காவல்துறைக்குப் புகார் கொடுத்துள்ளார்.

இந்த இழப்பை ஈடுசெய்ய அரைவை முகவர் மீதும், ஒற்றைப் பூட்டு அதிகாரி மீதும் உரிமையியல் வழக்குத் தொடர்ந்து, அரைவை முகவர் திரு சந்திரமோகன் அவர்களுக்குச் சொந்தமான நான்கு லாரிகளையும், ஒற்றைப்பூட்டு அதிகாரிக்கு சொந்தமான 5 ஏக்கர் நிலத்தையும் கைப்பற்ற சேலம் சார்பு நீதிமன்றத்தில் ஆணை பெறப்பட்டுள்ளது. அவ்வாணைப்படி, நான்கு லாரிகளில் மூன்று லாரிகள் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தின் பாதுகாப்பில் உள்ளது. எஞ்சிய ஒரு லாரியைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது இந்த அரைவை முகவரிடம் நெல்லை வாங்கியதாகக் கருதப்படும் நாமக்கல்லைச் சேர்ந்த திரு நல்ல தம்பி என்பவரை காவல் துறையினர் கைது செய்துள்ளனர். இந்த அரைவை முகவர் ஏற்கனவே ரூ. 20,000 பிணை வைப்புத்

தொகையாகச் செலுத்தியிள்ளார். மேலும், அவருக்கு தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழகத்திலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் தஞ்சாவூர் மண்டலத்திலிருந்து நெல் கொண்டு சென்றதற்குக் கூலியாகவும், அரைவை கூலியாகவும் தரவேண்டியுள்ளது. அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்பை ஈடுகட்டுவதற்கு சட்டப்படியான நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குற்றவாளிகள் மீதும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் இது போன்ற செயல்களைத் தடுக்க நெல் அரவைகள் செய்பவர்களின் செக்யூரிடி டெப்பாசிட்டைக் கூடுதலாக வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்த விஷயத்தைப் பொருத்தவரை தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன. தவறுகளுக்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முயற்சிகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. வைப்புத் தொகையை எந்த அளவுக்கு வைப்பது என்பதைப் பற்றி ஆராய்ந்துதான் முடிவு செய்ய வேண்டும். இப்போது அதனை அதிகமாக ஆக்குவோமானால் மற்றவர்களுக்குக் கொஞ்சம் கஷ்டம் ஏற்படலாம். இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற யோசனையை அடிப்படையாக வைத்து பரிசீலனை செய்யப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: இந்த விவர அறிக்கையைப் பார்த்தால் காணாமல் போன பொருள்கள் யார் யாருக்கு விற்கப்பட்டன என்ற விவரம் கிடைக்கப்பெற்று மேல் நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சாதாரணமாக ஒரு பொருள் திருட்டுப் போகுமானால் அந்தச் சாமானைக் கைப்பற்ற எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பது வழக்கம். அரசாங்கத்தின் நெல், அரிசி ஆகியவை ஐந்து லட்சத்திற்கும் அதிகமான மதிப்புள்ளவை திருட்டுச் சாமான்கள் விற்கப்பட்டிருக்கிறது. அவற்றை கைப்பற்ற அரசின் சார்பில் என்ன நடவடிக்கை எடுககப்பட்டிருக்கிறது? அவ்வாறு கைப்பற்றிய விவரங்களை அரசு அறிவிக்குமா?

(முற்பகல் 11.00)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே. அதை விசாரிக்கிறபோது நாமக்கல்லைச் சேர்ந்த ஒருவருக்கு விற்கப்பட்டதாகத் தெரிகிறது. அவர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார். விற்கப்பட்ட பொருள்களை அவர் விற்றுவிட்டாரா அல்லது அவர் வைத்திருக்கிறாரா என்ற விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் போன்று உடனடியாகக் கைப்பற்றி இருந்தால் சரியாக இருந்திருக்கும். அவர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார். மாண்புமிகு



உறுப்பினர் கூறுவதைப்போன்று பொருள்கள் இருக்குமானால் பொருள்களையும் சேர்த்து பறிமுதல் செய்வார்கள். அதைப் பற்றிய விவரக்குறிப்பு என்னிடத்திலே இப்போது இல்லை. ஒருவரை கைது செய்கிறபோதே அவர் வைத்திருக்கின்ற பொருளை அது இருந்தால் கைப்பற்றியிருப்பார்கள். சந்திரமோகன் என்பவரிடமிருந்து அவருக்குச் சொந்தமான 4 லாரிகளை கைப்பற்ற முயற்சிகள் எடுக்கப்பட்டு 3 லாரிகள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. இன்னொரு லாரியையும் கைப்பற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இருப்புத் தொகையாக இருந்த 20 ஆயிரம் ரூபாயையும் முடக்கிவைப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். நுகர்பொருள் வாணிபக் கழகத்திலிருந்து வேறு வகையில் அவருக்குத் தரவேண்டிய 1 லட்சம் ரூபாயும் முடக்கிவைக்கப்பட்டிருக்கிறது. இந்த இழப்பை ஈடுகட்டுவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் அரசு முறைப்படி மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு ரா. கிருஷ்ணன்: துணைத் தலைவர் அவர்களே, இந்த 5 லட்சத்து 82 ஆயிரம் ரூபாய் பெருமானமுள்ள இந்தப் பொருட்களை கைப்பற்றுவதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன? ஒற்றைப்பூட்டு அதிகாரி நெல்லையும் அரிசியையும் பற்றிய இருப்புக்கணக்கை கண்காணிக்கத் தவறிவிட்டார் என்று இதிலே கூறப்பட்டிருக்கிறது. அவர் தற்காலிக வேலை நீக்கம் எடுக்கப்பட்டிருக்கிறாரா? அவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஒற்றை பூட்டு அதிகாரியினுடைய தவறின் காரணமாகத்தான் இது நடைபெற்றிருக்கிறது. அவர் மட்டுமே சாவியை வைத்திருக்கவேண்டும். சாவியை அரைவைக்காரரிடம் கொடுத்தது அவருடைய தவறு. ஒரு தடவையில் 30 மெட்ரிக் டன் கொடுத்து வாங்கவேண்டும், வாங்கியதற்குப் பிறகு தான் மேற்கொண்டு தரவேண்டும். இந்த முறை பின்பற்றப்படவில்லை, ஆகவே அவர் அதிலே தவறியிருக்கிறார். அவருக்குச் சொந்தமான 5 ஏக்கர் நிலம் கைப்பற்றப்பட்டிருக்கிறது. மேற்கொண்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

* திரு சி. பழனிமுத்து: நெல் அரைவை முகவர் சந்திரமோகன் ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுத்தாரா? சால்வன்சி பத்திரம் கொடுத்து இருக்கிறாரா? தஞ்சை மாவட்டத்திலிருந்து அரியலூர், பெரம்பலூர் வழியாக ஆத்தூர் வரவேண்டியது, நாமக்கல் ராசிபுரம் சேலம் வழியாக ஆத்தூர் வந்திருக்கின்ற நிலையில் மண்டல அதிகாரியும் உதவி இருக்கிறார். அப்படி வருகின்றபோது நாமக்கல்லிலே விற்றுவிட்டதாகத் தெரிகிறது. இந்த 3 லாரிகளுக்காகவும் அரசு வங்கிகளிலே கடன் பெறப்பட்டிருக்கிறதா? துணை தாசில்தார், மண்டல அதிகாரி ஆகியவர்களும்

வாடகை ஏற்றுக்கூலி, இறக்குக்கூலி கொடுக்கப்படாத காரணத்தால் ஒரு சில அதிகாரிகளும் செய்த தவறினால் தான் இந்தக் காரியம் நடைபெற்றிருக்கிறது. அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** சந்திரமோகன் என்பவர் நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு ஒப்பந்தப் பத்திரம் எழுதிக் கொடுத்திருக்கிறார். அதன் படி 1530.72 மெட்ரிக் டன் நெல் அரைவைக்காக அவரிடம் ஒப்படைக்கப் பட்டது. அவர் முறை தவறி நடந்துகொண்டிருக்கிறார். அது பற்றி நடவடிக்கை எடுக்கலாம். ஒற்றைப்பூட்டு அதிகாரி சுயாக கண்காணித்திருக்கிறாரா, எந்தக் காலத்திற்குள் நடை பெற்றது என்ற விவரங்களைத் தரும்படி கேட்டுக்கொண்டிருக் கிறோம். அப்படியே அரசிடமிருந்து ஒரு வகையிலே பணம் வரவேண்டியிருந்தாலும் அதை முறைப்படிதான் பெறவேண்டுமே தவிர முறையில்லாத வகையில் அவர்கள் எடுத்துவிட்டு அதை ஈடுகட்டிக்கொள்கிறேன் என்று சொல்வது சரியல்ல. அதிகாரிகள் ஏதாவது தவறு செய்தால் அதுபற்றி அரசாங்கத்தின் கவனத் திற்குக் கொண்டுவந்து அதன்மூலம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்போன்று அப்படி நீண்ட தவணையில்லாமல் காலத்தாழ்வு ஏற்படாமல் அவரவர்களுககு உரிய தொகை சேரவேண்டுமென்ற உத்திரவை பொதுவாகப் போட்டிருக்கிறோம். எங்கேயாவது ஏதேனும் ஒரு காரணத்தினால் அல்லது விளக்கம் தராத வரையில் அவர் களுக்குப் போய்ச் சேராமல் இருந்தால் அது தனியாக, கவனிக்கப்படும்.

*திருமதி தா. இராசாம்பாள் : துணைத் தலைவர் அவர்களே, முகவர் சந்திரமோகனுக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டதா? பிணை வைப்புத் தொகை 20 ஆயிரம் முடக்கப்பட்டதாகக் கூறப் படுகிறது. அவருக்குக் கொடுக்கவேண்டிய ஒரு லட்சம் நிலுவை யில் இருப்பதாகக் கூறப்படுகிறது. வேறு வகையில் செலுத்த வேண்டிய தொகை ஒரு லட்சம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மேலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவர் மட்டுமல்ல மேல் அதிகாரிகள் முதல் கடைநிலை ஊழியர்கள் வரை சம்பந்தப்பட்டவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? இப்படிப்பட்ட முழு விவரங்கள் இதில் குறிக்கப்படவில்லை. இப்படிப்பட்ட ஒரு நெல் கொள்முதலில் அவசரம் அவசரமாக அரசு எடுத்த நடவடிக்கை களின் காரணமாக, லைசன்ஸ் வழங்கப்பெறாமல் அவர்கள் பிணை வைப்புத் தொகைகூட கட்டப்படாமல் பல காலகட்டங்களில் முக்கியமாகச் சேலம் மாவட்டத்தில் இப்படிப்பட்ட பல நடை முறைகள் நடந்து கொண்டிருக்கின்றன. பொதுமக்களிடமிருந்து பல புகார்கள் வந்தும்கூட, உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படாததால் தொடர்ந்து இப்படிப்பட்ட நிலைமை



நீடித்துக் கொண்டு இருக்கிறது. இதற்கான காரண காரியங்களை அறிந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வேலை நீக்கம் செய்வ தோடு, இவருக்குச் சேர வேண்டிய ஒரு இலட்சம் ரூபாய் எப்படி நிலுவையில் நின்றது என்ற விளக்கத்தையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் முதலில் குறிப்பிட்ட படி திரு. கே. வி சந்திரமோகன் அவர்கள் நுகர் பொருள் வாணிபக் கழகத்துக்கு ஒப்பந்தப் பத்திரம் எழுதிக் கொடுத் துள்ளார். அந்த ஒப்பந்தப் பத்திரத்தின் சரத்துக்கள்படி, அவர்களுக்குத் தஞ்சை மாவட்டத்ினுடைய நெல் இருப்பு கொடுக்கப்பட்டது. நான் ஒரு இலட்சம் என்று குறிப்பிட்டது இதில் குறிப்பிட்டிருப்பதைத்தான்.

தமிழ் நாடு நுகர் பொருள் வாணிப கழகத்திலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் தஞ்சாவூர் மண்டலத்திலிருந்து நெல் கொண்டு சென்றதற்குக் கூலியாகவும், அரைவை கூலியாகவும் தரவேண்டி யுள்ளது. அவருக்குத் தர வேண்டியிருக்கின்ற பணத்தை இப்பொழுது தராமல் நிறுத்தி வைத்திருக்கிறோம் என்றுதான் நான் குறிப்பிட்டேன்.

ஆனால் இந்தத் தன்மையைப் பொறுத்தவரைக்கும் அது மோசடி யாகத்தான் நடைபெற்றதால் இந்த மோசடியைப் பொறுத்த வரையிலும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை அவர் மீது எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

தன்னுடைய கடமைகளை ஒழுங்காகச் செய்யாத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கிற வகையில் உடனடியாக அந்த ஒற்றைப் பூட்டு அதிகாரிதான் முழுப் பொறுப்பு—ஆகவே அவரை நீக்கி வைத்து, அவருக்குரிய ஐந்து ஏக்கர் நிலத்தையும் கைப் பற்றியிருக்கிறோம். ஆனால் அவரை மேற்பார்வையிட வேண்டிய அதிகாரிகளோ மற்றவர்களோ ஏதாவது தவறு செய்தார்களா என்பதைப்பற்றித் துறையின் மூலமாகப் பரிசீலனை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதன் மூலமாக வேறு யாரும் இதிலே ஈடு பட்டுத் தவறு செய்திருப்பார்களேயானால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும்படியாக அரசு உரிய துறையினருக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறது.

நான் முதலிலே குறிப்பிட்டபடி, அரசாங்கத்தின் சார்பாகச் செலுத்தப்பட வேண்டிய தொகை, உரிய காலத்தில், உரிய முறையில் போக வேண்டுமென்பதிலே ஏற்கனவே ஆணையிட் டிருக்கிறோம். காலத் தாழ்வு ஏற்பட்டிருக்குமேயானால் ஆங்காங்கு அந்தந்தப் பிரச்னைத் தனித்தனியாகக் கொண்டு வருவார்களேயானால் விரைவில் முடிப்பதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளும்.

(ஆ) புகளூர் சர்க்கரை ஆலை நிர்வாகம் கரும்பை எடுக்க மறுப்பதால் சாகுபடியாளர் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் எம். சின்னசாமி, ச. பாலகிருஷ்ணன், கு. அ. செங்கோட்டையன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழில்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. எம். சின்னசாமி: துணைத் தலைவர் அவர்களே ''திருச்சி மாவட்டம் புகளூர் சர்க்கரை ஆலை நிர்வாகம் நடப்பு பருவத்திற்குக் கரும்பை எடுகக மறுப்பதால், கரும்பு சாகுபடியாளர் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ் டி. திருநாவுக்கரசு: பேரவை முன் கீழ்க் கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

திருச்சி மாவட்டம் புகளூரில் இயங்கும் சர்க்கரை ஆலை டெக்கான் சுகர்ஸ் அண்டு அப்காரி கம்பெனி என்ற ஒரு தனியார் நிறுவனத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

(2) இந்த சர்க்கரை ஆலை கடந்த மூன்று ஆண்டுகளில் கீழே கண்டவாறு கரும்பு அரவை செய்துள்ளது.

| ஆண்டு | அரவை செய்யப்பட்ட கரும்பு (டன்களில்) |
|---|---|
| 1978-79 | 3.92,802 |
| 1979-80 | 2,45,498 |
| 1980-81 | 3,27,084 |

(3) கரும்பு அரவைக்கு முன்கூட்டியே அதாவது ஜூன் மாத கடைசிவரையில் எந்த எந்த நில உரிமையாளர்களிடமிருந்து கரும்பு பெறப்படும் என்று சர்க்கரை ஆலை ஒரு ஒப்பந்தம் செய்து கொள்வது வழக்கம். அதன்படி நடப்பு சர்க்கரை ஆண்டில் (அக்டோபர், 1981-செப்டம்பர், 1982) 4.25 இலட்சம் டன்கள் அரவை செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இர்த ஆலையின் அரவைத்திறன் நாளொன்றுக்கு 1,850 டன்கள். இந்த ஆலை பொதுவாக இரண்டு பருவங்களில் அரவை செய்யும். ஒன்று நவம்பர் முதல் ஏப்ரல் வரையிலும், இரண்டாவது ஆகஸ்ட் முதல் செப்டம்பர் வரையிலுமாகும். சுமார் எட்டு மாதங்களுக்கு அரவையும் நான்கு மாதங்களுக்கு ஆலை இயந்திரங்களைப் பழுது பார்க்கும் வேலையும் நடக்கும். முக்கியமான (main season) பருவத்தில் மூன்று லட்சம் டன்கள் கரும்பும், சிறப்பு பருவத்தில் 1 இலட்சம் டன்கள் கரும்பும், ஆக மொத்தம் சுமார் 4 இலட்சம் கரும்பினை புகளூர் சர்க்கரை ஆலை அரவை செய்ய இயலும்.



(4) புகளூர் சர்க்கரை ஆலை அரவை பருவம் நடப்பு ஆண்டில் 1-11-81 முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. இப்பருவத்திற்கு 7,510 ஏக்கர்கள் கரும்பு, பதிவு செய்யப்பட்டுள்ளன, இப்பரப்பளவிலிருந்து 3.50 இலட்சம் டன்கள் கரும்பு அரவைக்கு வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1982, ஜனவரி 31-ந் தேதி வரை 3,183 ஏக்கரிலிருந்து பெறப்பட்ட 1,53,4)4 டன் கரு பினை இவ்வாலை அரவை செய்துள்ளது. இன்னும் பதிவு செய்யப்பட்ட கரும்பு சுமார் 2 இலட்சம் டன்கள் மீதமுள்ள 4,327 ஏக்கரிலிருந்து அரவைக்கு வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மீதமுள்ள பரப்பளவிலிருந்து அரவைக்கு வரக்கூடிய சுமார் 2 இலட்சம் டன் கருடபை அரவை செய்து முடிக்க 1982-ஆம் அண்டு ஜூன் மாதம் முதல் வாரம் வரை ஆகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதற்குப்பின் ஆலையின் இயந்திரங்களைப் பழுது பார்த்து முடிக்கக் குறைந்தது 3 மாதங்களுக்காகும். இதற்குப்பின் சிறப்புப்பருவம் 1982-ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் தொடங்கும்.

(5) சிறப்புப் பருவத்தில் (ஆகஸ்டு-செப்டம்பர்) அரவை செய்வதற்கென புகளூர் சர்க்கரை ஆலை 2,431 ஏக்கர்கள் பதிவு செய்துள்ளது. இதன் மூலம் சுமார் ஒரு இலட்சம் டன் கரும்பு அரவைக்குக் கிடைக்கும். இந்த அரவை முடிய 15-10-82 வரை ஆகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன் பின்பு 1982-83ல் முக்கிய அரவைப்பருவம் பருவ மழை, காலநிலை, இயந்திரங்களை பழுது பார்த்தல் முதலியவற்றைப் பொறுத்து 1982-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் இரண்டாவது வாரத்தில் அரவை தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

(6) மேலே குறிப்பிட்டபடி 1981-82 முக்கிய அரவைப் பருவத்திற்கு பதிவு செய்யப்பட்ட 7,510 ஏக்கர் கரும்பைத் தவிர, 3,343 ஏக்கர் பதிவு செய்யப்படாத கரும்பும் 1981-82 ஆம் ஆண்டில் புகளூர் சர்க்கரை ஆலைப் பகுதியில் பயிர் செய்யப்பட்டுள்ளது. இதில் 1981-ஆம் ஆண்டு நவம்பர் 1-ந் தேதி முதல் மூன்று மாதங்களில் வெல்லம் ஆகிய 368 ஏக்கர்கள் கரும்பு போக மீதி 2,975 ஏக்கர் பதிவில்லாக் கரும்பு இப்பகுதியில் தற்போது உள்ளது.

(7) நடப்பு ஆண்டில் அரவைக்கு 4.25 இலட்சம் டன்கள் அரவை செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் 4.53 இலட்சம் டன்கள் ஆலைக்கு அரவைக்காகக் கிடைக்கும். இதில் 4·25 இலட்சம் டன்கள் 1981-82 சர்க்கரை ஆண்டில் அரவை செய்யப்படும். மீதமுள்ள 28,000 டன் கரும்பு 1-10-82 முதல் தொடங்கும் சர்க்கரை ஆண்டில் அரவை செய்யப்படும். புகளூர் சர்க்கரை ஆலை வெல்லம் விலை மிகவும் குறைந்து விற்கக்கூடிய சூழ்நிலையில் கரும்பு பயிரிடும் விவசாயிகளின் நன்மையைக்

கருத்திற்கொண்டு எவ்வளவு அதிகமான பரப்பளவு கரும்பு பதிவு செய்ய இயலுமோ அவ்வளவு பரப்பளவு ஆலையின் இயந்திரங்களுக்குப் பழுது ஏற்படும் சூழ்நிலையையும் பொருட்படுத்தாது பதிவு செய்து அரைக்கத் திட்டமிட்டும் குறைந்த சர்க்கரைக் கட்டுமானத்தையும் பொருட்படுத்தாது 1981 நவம்பர் முதல் வாரத்திலேயே அரவை வேலையைத் தொடங்கியும் சுமார் 260 நாட்கள் இந்த சர்க்கரைப் பருவத்தில் ஆலையை இயக்கி அதிகப்படியான கரும்பை (4·20 இலட்சம் டன்கள்) அரவை செய்யத் திட்டமிட்டு கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு நன்மை புரியும் வகையில் செயல்பட்டு வருகின்றது. மேலும் புகளூர் சர்க்கரை ஆலை 3-2-82-லேயே தங்கள் ஆலைப் பகுதியிலுள்ள கரும்பு விவசாயிகளுக்கு இனிமேல் பதிவு செய்யப்படாத கரும்பினை அரவைக்குக் எடுத்துக்கொள்ள இயலாது என்ற அறிக்கையும் விடப்பட்டுள்ளது.

(8) புகளூர் வட்டாரத்தில் உள்ள பதிவு செய்யப்படாத கரும்பை மற்ற ஆலைகளுக்கு திருப்பிவிட முடியுமா என்பதைப் பற்றி ஆய்வு செய்யும்போது தமிழகத்திலுள்ள எல்லா சர்க்கரை ஆலைகளும் அண்மையில் உள்ள ஆலைகளிடமிருந்து பதிவு செய்யப்பட்ட உபரியான கரும்பு உற்பத்தியாளர் ளிடமிருந்து கரும்பை பெறுவதற்கு ஏற்பாடு செய்துள்ளன என்று தெரிய வருகின்றது.

(9) 1980–81ஆம் ஆண்டில் புகளூர் சர்க்கரை ஆலையில் 3·27 இலட்சம் டன்கள்தான் அரவை செய்தது. ஆயினும் இந்த ஆண்டு கரும்பு விளைவிப்போர்களுடைய நன்மையைக் கருதி 4.25 இலட்சம் டன்கள் அரவை செய்ய புகளூர், சர்க்கரை ஆலை திட்டமிட்டுள்ளது. தனது அரவைத் திறனுக்கு அதிகமாவே 1981–82ஆம் ஆண்டு கரும்பு வேண்டிய அளவு, பரப்பளவினையும் ஆலை பதிவு செய்துள்ளது. ஆதலின் புகளூர் சர்க்கரை ஆலையோ, அல்லது தமிழகத்திலுள்ள மற்ற சர்க்கரை ஆலைகளோ தங்கள் தேவைக்குப் போதுமான கரும்பு அரவைக்குப் பதிவு செய்திருப்பதால், மேலும் பதிவில்லாக் கரும்பை எடுக்க இயலாது.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் தற்போது ஆலை நிர்வாகம் நடத்திக்கொண்டிருக்கின்ற மெயின் சீசனுக்கும்-அதாவது முக்கியப் பருவத்திற்கும், அடுத்து நடக்கவிருக்கும் ஸ்பெஷல் சீசனுக்கும்—அதாவது சிறப்புப் பருவத்திற்கும் இடையில் இயந்திரங்களைப் பழுது பார்ப்பதற்காக நான்கு மாத காலம் தேவைப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறது. அதை இரண்டு மாத காலமாகக் குறைத்தால் நல்லது. ஏற்கனவே இரண்டு மாத காலத்திலேயெல்லாம் அந்த இயந்திரங்களைப் பழுது பார்ப்பதற்குரிய கால அளவை எடுத்துக்கொண்டு அந்த ஆலை நிர்வாகம் செய்திருக்கிறது. எனவே, அந்த நான்கு மாத காலத்தை





இரண்டு மாத காலமாகக் குறைத்தால் இப்பொழுது பாதிக்கப்பட்டுள்ள கரும்புகளை எடுக்க ஒரு வாய்ப்பிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்த ஆலை நிர்வாகத்தை அழைத்துப் பேசி இதற்கான வழிவகைகளைச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இங்கே குறிப்பிடப்பட்டிருப்பது பொதுவாக அந்த இலாக்காவினுடைய இயந்திரங்களைப் பழுது பார்க்க, சரி பார்க்க எத்தனை மாதங்களாகும் என்பதைக் கணக்கிலே கொண்டு கொடுக்கப்பட்டிருக்கின்ற குறிப்பு. கொண்டு வரப்பட்டிருக்கின்ற கவன ஈர்ப்பு பதிவு செய்யப்படாத கரும்பைப் பற்றியது. ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட கரும்புகளை அவர்கள் எடுக்காமல் இருக்கிறபொழுது அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறபொழுது நாம் அவர்களைக் கட்டாயப்படுத்துகிறோம், திருப்பிச் சொல்கிறோம், நடவடிக்கை எடுக்க வைக்கிறோம். இதற்குக் காரணமே இந்தத் தடவை கரும்பை வெளியே ஆட்டினால், சர்க்கரை ஆட்டினால் இலாபம் இல்லை; அரசாங்கம் ஒரு டன் கரும்பின் விலையை ரூ. 165-ஆக இருந்ததை 10 ரூபாய் உயர்த்தி, 175 ரூபாய் என்று அறிவித்தது. அதனால் இலாபம் இருக்கிறது என்பதால் ரெஜிஸ்தர் செய்யப்பட்ட அல்லது ரெஜிஸ்தர் செய்யப்படாத கரும்பாக இருந்தாலும் ஆலையிலே எடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதுதான் இப்பொழுதுள்ள நிலைமை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையைக் கவனத்தில் கொண்டு அந்த ஆலைக்கு அது அறிவுறுத்தப்படும்.

[முற்பகல் 11-10]

திரு. ச. பாலகிருஷ்ணன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, பதிவு செய்யப்படாத கரும்பு விவசாயிகள் என்று நிர்வாகம் குறிப்பிடுகிற விவசாயிகள் தங்கள் நிலத்திலே விளைகின்ற கரும்பினை ஆலையின் ஆரம்பக் காலம் முதல் ஆலைக்குத்தான் கொடுத்து வருகிறார்கள். சென்ற ஆண்டு ஆலைக்குக் கரும்பைத் தரவில்லை என்ற காரணத்தைச் சொல்லி, நிர்வாகம் பல விவசாயிகளின் கரும்பினை பதிவு செய்வதற்கு மறுத்துவிட்டார்கள். தற்பொழுது வெல்லம் மற்றும் பழுப்புச் சர்க்கரை விலை மிகவும் குறைவாக உள்ளபடியால் விவசாயிகள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். எனவே அரசு அந்த விவசாயிகளுக்கு உதவுகின்ற வகையிலே பதிவில்லா கரும்பையும் வெட்ட ஆலை நிர்வாகத்தை வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் ஏற்கனவே சொன்னேன். ஆலைகளில், கரும்பை எடுத்துக்கொள்ளும்போது, முதலிலே பதிவு செய்த கரும்புகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டியிருக்கிறது. அதைக் கட்டாயம் செய்யவேண்டியிருக்கிறது. ஏனென்றால், ஒவ்வொரு ஆலையின் சார்பிலேயும் பதிவு செய்து கரும்புகளைப் பயிரிடுகின்ற விவசாயிகளுக்குக் கடன், மற்ற வசதிகளெல்லாம் செய்து தரப்படுகின்றன. அதையெல்லாம் பயன்படுத்திக் கொண்டு கரும்பு பயிரிடப்படுகிறது. அவர் களிடத்திலே திரும்பப் பெற வேண்டியிருக்கிறது. நான் ஏற்கனவே, சுட்டிக்காட்டியதைப்போல, ரூ. 127-ஆக ரூ. 10/- உயர்த்தி, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் விவசாயிகளுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு அறிவித்தார்கள். அதனாலே, அரசுக்கு பர்சேஸ் டாக்ஸ் என்ற வகையில், ஆலைகளிலிருந்து, ரூ 10 வீதம் வாவேண்டிய பணத்தை, விவசாயிகளுக்குக் கொடுக்கச் சொல்லி கொடுத்துள்ளோம். அதனாலே அரசாங்கத்திற்கு வரவேண்டிய வருமானம், ரூ. 7 கோடி. பர்சேஸ் டாக்ஸ் என்ற வகையில், இந்த ஆண்டு மட்டும் நட்டம். வெளியே நாட்டுக் சர்க்கரை ஆட்டுகிறபொழுது, அதனாலே இலாபம் இல்லை என்ற காரணத்தினாலே எல்லோரும் பக்கத்திலேயிருக்கிற ஆலையே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்துகிறார்கள். அதிலே, முறைப்படி ரிஜிஸ்டர் கரும்பு முதலிலே எடுத்துக் கொள்ளப்பட்டு இன்னும் தேவையாக இருந்தால் மற்றவர்கள் வேண்டுகோளையும் ஏந்த, அந்த ஆலைகளை ஏற்கும்படி சொல்லலாம்.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கரும்பு உற்பத்தியாளர்கள் இன்னலைத் தீர்க்கின்ற வகையில் தற்போது ஏற்காமல் உள்ள சக்தி சர்க்கரை ஆலையில், அமராவதி சர்க்கரை ஆலையில், கரும்பு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? அதோடு வருகின்ற ஆண்டிலாவது அதிகமாக கரும்பு உற்பத்தி செய்யும் பெரியார் மாவட்டத்தில் மேலும் ஒரு சர்க்கரை ஆலையை நிறுவுவதற்கு அரசு முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சக்தி சர்க்கரை ஆலையாக இருந்தாலும் சரி, மோகனூர் சர்க்கரை ஆலையாக இருந்தாலும் சரி எல்லா ஆலைகளுக்கும் ரிஜிஸ்டர்ட் ஏரியா இருக்கிறது. அந்த ஏரியாக்களிலே பயிரிடப்படுகிற கரும்புகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, மேலும் தேவை என்று நினைத்தால்தான் மற்ற பகுதிகளிலே இருந்து அவர்கள் எடுத்துக்கொள்ள முடியும். பெரியார் மாவட்டத்திலே கூட்டுறவு சார்பிலே அல்ல, தனியார் சார்பிலே இரண்டு சர்க்கரை ஆலைகள் அமைக்கப்படுவதற்கு விண்ணப்



பங்கள் வந்திருக்கின்றன. அரசு, முதலிலே, கூட்டுறவுத் துறையிலே மட்டும்தான், சர்க்கரை ஆலைகளை நிறுவுவது என்கிற முடிவை எடுத்திருந்தது. அதை அமைச்சரவை பரிசீலனை செய்து, தனியார்களின் சார்பிலே கூட கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் நிறுவ முன் வந்தால் அவற்றை மைய அரசுக்குப் பரிந்துரை செய்யலாம் என்று முடிவெடுத்திருக்கிறது. அந்த முடிவிற்கு ஏற்ப, தனியார்கள் மனு செய்யும்போது அவற்றை வரவேற்கிறோம், அவற்றைப் பரிந்துரை செய்து மைய அரசுக்கு அனுப்பத் தயாராக இருக்கிறோம். பெரியார் மாவட்டத்திலே சர்க்கரை ஆலைகள் அமைக்க இரண்டு மனுக்கள் வந்திருக்கின்றன.

## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

### (ஆ) தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவு, 1982-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 1982-ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டுமென முன்மொழியப் பெற்றுள்ள தீர்மானத்தின் மீது மேலும் விவாதம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிற இந்தச் சமயத்தில் இச் சட்ட முன்வடிவினைப் பற்றி சில முக்கிய அம்சங்களை எடுத்துக்கூற விரும்புகிறேன். இந்தியாவில் கடந்த 30 ஆண்டுகளில் ஏற்பட்டிருக்கும் பல்கலைக் கழக வளர்ச்சியினை ஆராயும்போது தமிழகத்தில் பல்கலைக் கழகங்களுடைய எண்ணிக்கை அனைத்தும் சராசரி நிலையிலும் மிகவும் குறை

வாகவே உள்ளது என்பது புலப்படும். 1981- சனவரி திங்களில் மதுரையில் நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொண்ட பேரறிஞர்கள் பலரும் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று மேநிலை ஆராய்ச்சிக்கு மிகத் தேவை என வலியுறுத்தினர். கடந்த ஆண்டு இந்த மன்றத்தில் வைக்கப் பட்ட நிதி நிலை அறிக்கையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் இவ்வாண்டு நிறுவப்படும் என அறிவிக்கப்பெற்றது. எனவே, புதிய பல்கலைக்கழகங்கள் தமிழகத்திலே அமைவது அவசியம் என்பதாலே, அதுவும் தமிழ் மொழி வளர்ச்சிக்கென தனியே ஒரு பல்கலைக் கழகம் தொடங்குவது சிறப்பாக இருக்கும் என்று அரசு பெரிதும் விரும்பியது.

சிறப்பு மிக்க, இலக்கிய வளம் நிறைந்த பண்பாடும், மரபும் மாறாது, இயல், இசை, நாடகம், நாட்டியம், சிற்பம், ஓவியம் மருத்துவம் போன்ற துறைகளிலே தொடர்புடைய ஏனைய துறைகளிலும் இன்றுவரை ஆராய்ச்சி செய்ய வாய்ப்புள்ள தமிழ் மொழிக்கு என்றே தனியார் ஒரு பல்கலைக்கழகம் நிறுவுவது குறித்து ஆய்வு செய்ய, மதுரை—காமராஜர் பல்கலைக் கழகத் துணைவேந்தரான வ. சுப. மாணிக்கம் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில், தமிழ்ப்பல்கலைக் கழகத்தைத் தஞ்சாவூரில் நிறுவி- உள்ளது. பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் அன்று இப்பல்கலைக் கழகத்தை நிறுவுவது பொருத்தமானது எனக் கருதி, தமிழ்ப் பல்கலைக் கழக அவசரச் சட்டம் பிரகடனப்படுத்தப் பெற்று. 15—9—1981 முதல் இப்பல்கலைக் கழகம் பணியாற்றி வருகிறது. பல்கலைக் கழக மானியக் குழுவின் தலைவர் இச்சட்டத்தை தமிழ்நாடு அரசு இயற்றலாம் எனக் கருத்து தெரிவித்துள்ளார்.

இப் பல்கலைக் கழகம் பிற பல்கலைக் கழகங்களிலும் இருந்து வேறுபட்டு உறையுள் தனிப் பல்கலைக் கழகமாக விளங்கும். இப்பல்கலைக் கழகத்தோடு எந்தக் கல்லூரிகளும் நிறுவனங்களும் இணைக்கப்படமாட்டாது. இப்பல்கலைக் கழகம பல்வேறு துறைகளில் தமிழில் ஆராய்ச்சி செய்ய வகை செய்யும்.

பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தர் அரசால் 3 ஆண்டுகளுக்கு நியமிக்கப்படுவார். மொத்தத்தில் துணை வேந்தரின் பதவிக் காலம் 6 ஆண்டுகளுக்கு மேல் இராது. அன்றியும் பதவிக்காலம் முடிவடைந்த. பின்னர், வேந்தர் உத்தரவிட்டு, அவ்வுத்தரவில் குறிப்பிடக் கூடியவாறு ஓராண்டுக்கு மேற்படாத கால அளவுக்கு தொடர்ந்து பதவி வகிக்கச் செய்யலாம். அக்கால அளவில் அவருக்கு 65 வயது முடிந்திருந்தால், அவர் பதவியில் இருந்து ஓய்வு பெற வேண்டும். தேர்வுகள் நடத்தும் அலுவலர் இப்பல்கலைக் கழகத்தில் கிடையாது, நிதி அதிகாரியையும் அரசே நியமிக்கும்.



அவர் ஆட்சிக் குழுவின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டே செயலாற்றுவார். ஆட்சிக் குழு, ஆலோசனைக்குழு ஆகிய இரு குழுக்களை மட்டுமே இப்பல்கலைக் கழகம் பெற்றிருக்கும். பிற பல்கலைக் கழகங்களைப்போல கல்விக் குழுவோ, கல்வி விவகாரங்களைக் கவனிக்கும் கல்வி நடைக் குழுவையோ கொண்டிருக்காது. இப்பல்கலைக் கழகம் ஆரம்ப நிலையில் 16 துறைகளை உட்கொண்டு கலைப்புலம், கையெழுத்துப் புலம், வளர் தமிழ்ப் புலம், மொழியியல் புலம், அறிவியல் புலம் என்ற ஐம்புலங்களைக் கொண்டதாக இருக்கும். ஆட்சிக் குழு அல்லது ஆலோசனைக் குழு இவை இரண்டிலும் மொத்தம் 6 ஆண்டு களுக்கு உறுப்பினராகப் பதவி வகித்து உள்ளவர், அம்மன்றங்களில் மீண்டும் நியமனம் செய்யப்படவோ, தேர்ந்தெடுக்கப் படவோ தகுதி உடையவராகமாட்டார். மேற்சொன்ன கருத்து களுக்குச் செயல்வடிவம் கொடுப்பதே இந்தப் பல்கலைக்கழக சட்ட முன்வடிவின் நோக்கமாகும்.

திரு. அ. குமாரன்கன்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழக சட்டமுன்வடிவை அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக தமிழுக்காக அந்தப் பல்கலைக் கழகம் கொண்டு வரப் படுவதை நாங்கள் வரவேற்கிறோம். எதிர்க்கட்சி என்பதற்காக நல்ல காரியங்கள் செய்யப்படுமானால் அதை எதிர்க்க வேண்டிய அவசியம் இல்லை. அந்த அடிப்படையிலேதான் நாங்கள் ஆதரவு தருகிறோம். நான் இந்த அவையினுடைய கவனத் திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். மறைந்த பாரதியார் அவர்கள் கூட ஒரு நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிட் டிருக்கிறார்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்த நாட்டிலே இருந்தபோது, கார்வே என்று சொல்லக்கூடிய பிரிட்டிஷ் புரொபசர், பூனா நகரில் பெண்கள் பல்கலைக் கழகம் ஒன்றை துவக்கினார். அதில் மராத்தி மொழியையே எல்லாப் பாடங் களுக்கும் பயிற்றுமொழியாக்கினார். தேசியக் கவி பாரதியார், பேராசிரியர் கார்வேயின் துணிகரமான முயற்சியை வரவேற்று எழுதியது வருமாறு: 'நமது தேசத்தில் இப்போது புதிதாக யோசனை செய்யப்படும் காரியங்களில் பூனாவில் ஸ்ரீகார்வே என்பவர் ஏற்படுத்தப் போகிற ஸ்திரீகளின் சர்வகலாசங்கம் பிரதான வகுப்பைச் சேர்ந்தது. இவர் வெளிநாட்டுக்காரரர், வெள்ளைக்காரர். ஸ்ரீ கார்வே ஏற்படுத்தப்போகிற சர்வகலா சங்கத்தில் தேச பாஷைகளின் மூலமாகவே சகல சாஸ்திரங்களும் கற்றுக் கொடுக்கப்படும். இவருடைய சர்வகலா சங்கம் ஸ்தாபன மாகிப் பத்து வருஷம் நடக்குமானால் அதுவரை நம் நாட்டு ஆண் பள்ளிக் கூடங்களில் இங்கிலீஷ் பாஷை மூலமாகவே கல்விப் பயிற்சி நடந்து வருமானால், பிறகு நமது நாட்டில் ஆண்களைக் காட்டிலும் பெண்கள் உயர்ந்த கல்வியும் அறிவுத் திறமையும் சாஸ்திரப் பழக்கமும் பெற்றிருக்கும்படி நேரிடும். அந்த நிலை

ஏற்படும் முன்பாகவே ஆண் பள்ளிக்கூடங்களிலும் சுதேச பாஷைகளின் பழக்கம் அதிகப்பட்டுவிடுமென்று நம்புகிறேன்.' என்று, பாரதியார் அவர்கள் அந்தக் காலத்திலே வெளிநாட்டுக் காரரான கார்வே அவர்கள் இரு பெண் பல்கலைக்கழகம் அமைக்கின்ற முயற்சியைப் பற்றி பாராட்டினார்.

திரு. ப. நெடுமாறன்: துணைத் தலைவர் அவர்களே, கார்வே வெள்ளைக்காரர் அல்ல. அவர் மராட்டிய மாநிலத்தை சேர்ந்தவர். மகாராட்டிரத்திலே விதவை விவாகத்தை தொடங்கி நடத்தினார், அவர்தான் இந்தப் பெண்கள் பல்கலைக் கழகத்தைத் தொடங்கி நடத்தினார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.20)

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்த நாட்டிலே இருந்தபோது, கார்வே, என்ற ப்ரொபசர் அந்தக் காரியத்தைச் செய்து இருக்கிறார் என்ற அர்த்தத்தில்தான் நான் அதைக் குறிப்பிட்டேன். சார்வே அவர்கள் ஒரு வெள்ளைக் காரர் என்று சொன்னது தவறான தகவல் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். எனவே, நான் உங்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய காலத்திலே இது போன்ற காரியங்கள் நடைபெற்று இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி, தமிழ்ப் பல்கலைக் கழகம் கொண்டு வருவதை நான் வரவேற்கிறேன்.

''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்'' என்று பாரதியார் பாடினார்:

''பல்லுயிரும்பலஉலகும் படைத்தலைத் துவக்கியதுபோல்,
எல்லையறு பிரமனவன் இருந்தபடி இருப்பதுபோல்.
கன்னடமும், களிதெலுங்கும், கவிமலையாளமும்,
உன் உத்திரத்தில் உதித்தெழுந்து ஒன்றுபல ஆயிடினும்,
ஆர்யம்போல் உலகவழக்கு அழிந்தொழிந்து குறையா
உன் சீரிளமை செயல்மறந்து "வாழ்த்ததுமே'' என்று

சுந்தரம் பிள்ளை அவர்கள் பாடினார்கள். அதைப்போலவே, மங்கை ஒருத்தி தரும் சுகமும், எங்கள் மாத்தமிழுக்கு ஈடில்லை' என்று பாவேந்தர் பாடினார்கள். எனவே, அன்னைத் தமிழுக்கு ஒரு பல்கலைக்கழகம் கொண்டு வருவது வரவேற்கக் கூடியதே என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





அந்த விழாவில் கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தமிழ் மூலம் எல்லாம் செய்யமுடியும் என்பதை நாம் நிரூபித்தாகவேண்டும், அது என்னுடைய ஆசை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நான் வருத்தத்தோடு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எந்த நல்ல நோக்கத்தோடு தமிழ எங்கும் இருக்கவேண்டும், தமிழிலே எல்லாம் நடக்கவேண்டும் என்று சொல்கிறோமோ, அதை தகர்க்கும் வகையில் தவறு நடைபெற்று இருக்கிறது.

மின்சார இலாகாவில் ஒரு உத்தரவு போடப்பட்டு இருக்கிறது. அந்த வாரியத்தில் இருக்கும் ஊழியர்கள் அலுவல் காரணமாக செய்யும் பயணங்களுக்குத் தயாரிக்கப்படுகின்ற டி.ஏ.பில் இதுவரையில் தமிழில் தயாரிக்கப்பட்டு வந்தது. ஆனால் இனிமேல் அது ஆங்கிலத்தில் இருக்கவேண்டும் என்று உத்தரவு போடப்பட்டு இருக்கிறது. இதன் காரணமாக 1,250 ரூ. வரை அந்தப் பயணப்படி பெறமுடியாமல் அங்கேயுள்ள ஒரு எம்ப்ளாயீ, ஒரு அதிகாரி கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார். அவர் எப்போதும் போல் தமிழில் தயாரித்துக் கொடுத்து இருக்கிறார். அது ஆங்கிலத்தில் தான் எழுதப்பட்டு இருக்க வேண்டும் என்று சொல்லி கடந்த 6 மாதகாலமாக அவர்கள் அதைக் கொடுக்காமல் இருக்கிறார்கள். இதுவரையில் மின்சார இலாகாவில் தமிழில் தயாரிக்கப்பட்டு வந்த பயணப்படி பில் தற்போது ஆங்கிலத்தில் தான் தயாரிக்கப்பட வேண்டும் என்று ஏன் போடப்பட்டது என்று தெரியவில்லை. இதற்காக அந்த அதிகாரி பல விண்ணப்பங்கள் போட்டு இருக்கிறார். ஆனால் அவருக்கு அளிக்கப்பட்ட பதில் அது குறித்து இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை என்பது தான். எதைக் குறித்து இறுதி முடிவு எடுக்கவில்லை—ஆங்கிலத்தில் இருக்கும் அதை தமிழில் மாற்றுவது என்பது தான் அர்த்தம். இப்படிப்பட்ட நிலைமைகள் அரசாங்கத்திற்குக் கட்டுபட்டுள்ள ஒரு வாரியத்தில் நடை பெறுகின்ற நேரத்தில், தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆரம்பிக் கிறோம் என்று பெருமைப்பட்டுக் கொள்வதில் அர்த்தம் இருக் கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். இந்தச் சட்டத் திலே பல குறைபாடுகள் இருக்கின்றன என்பதை நான் வருத்தத் தோடு தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். இங்கே நேற்று கூட விவாதங்கள் நடைபெற்றன. அதிலே ஆலோசனைக் குழு- செனட்-ஆட்சிக் குழு-சின்டிகேட்—ஆகிய இவற்றிற்கு உறுப்பினர் களின் பதவிக்காலம் 6 ஆண்டுகாலம் என்று நிர்ணயித்து இருக்

கிறீர்கள் எங்களுடைய உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் அது எத்தகைய தவறானது என்பதற்கான காரணங்களை எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய அமைச்சர் அவர்கள் அதற்கு பதில் சொல்கிறபோது, மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்திற்கு ஒரு சட்டம் கொண்டு வந்து 6 ஆண்டு காலம் தான் அவர்களுடைய பதவிக்காலம் என்று சொன்ன நேரத்தில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு இதை ஏன் கொண்டு வரவில்லை, சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு ஏன் கொண்டு வரவில்லை என்று கேட்டார்கள் என்பதைச் சுட்டிக் காட்டி, இப்போது கொண்டு வந்தால் அதை எதிர்க்கிறோம் என்று சொல்கிறார்களே என்று வருத்தத்தோடு சொன்னார்கள். நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் உள்ள செனட், சின்டிகேட் உறுப்பினர்களுக்கு பதவிக்காலம் 6 ஆண்டு காலம் என்று கொண்டு வந்ததை அன்று எதிர்த்தோம். இன்றைக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றிற்குக் கொண்டு வருகிறபோதும் எதிர்க்கிறோம். அன்றைக்கு இந்த அவையில் நாங்கள் பேசியது, ஒரு தவறைச் செய்தீர்கள், அந்தத் தவறைச் செய்கிறபோது கூட வித்தியாசம் காட்டுகிறீர்களே, ஒரு பல்கலைக் கழகத்திற்கு வைத்து விட்டு, பாக்கி பல்கலைக் கழகங்களுக்கு இல்லாமல் செய்கிறீர்களே, தவறு செய்வதிலே கூட ஒரு ஒழுங்கு இல்லையே. அதைக் கூட ஒழுங்காகச் செய்யவில்லையே என்று உங்களுடைய தவறான போக்கைச் சுட்டிக் காட்டுவதற்காக அதைச் சொன்னோம். எனவே தனிப்பட்ட ஒரு நபரை வைத்துக் கொண்டு செய்தோம் என்று யாரும் தப்பாகக் கருதிவிடக் கூடாது என்பதற்காக ஒரு அற்புதமான காரியத்தைச் செய்து இருக்கிறீர்கள்.

எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது. மதுரையில் பொற்கைப் பாண்டியன் இரவு நேரத்தில் மாறு வேடத்தில் பாதுகாப்பிற்காக வருகிறான். ஒரு குடும்பத்தில் உள்ள கணவன் வெளியூர் சென்று இருக்கிறான் என்பதை அறிந்து அந்த வீட்டிற்கு காவல் இருக்கிறான். ஏதோ ஒரு ஆண் குரல் கேட்கிறதே என்பதற்காக கதவைத் தட்டுகிறான். ஆனால் உள்ளே இருந்தது அவள் கணவன் தான் என்பதை அறிந்தவுடன் தன்னுடைய தவறு வெளியே தெரிந்து விடக் கூடாதே என்பதற்காக எல்லோர் வீட்டுக்கதவையும் தட்டிக் கொண்டு சென்றானாம். எனவே ஒரு தப்பு வெளியே தெரியக் கூடாது என்பதற்காக தொடர்ந்து பல இடங்களில் அதைச் செய்து விட்டால் தப்பு சரியாகிவிடும் என்று இதைச் செய்து இருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவரவர்களே, கணவன் வந்து மனைவியோடு வீட்டின் உள்ளே பேசிக்கொண்டிருக்கிறான். அப்போது பாண்டியன் கதவைத் தட்டுகிறான். உள்ளே இருப்பது கணவன் என்று தெரிந்தவுடன் மனைவி மீது சந்தேகம் வந்துவிடக்கூடாதே என்பதற்காக, அந்த நல்ல எண்ணத்தோடு மற்ற வீட்டுக் கதவுகளையும் தட்டுகிறான் யாரோ விவரம் இல்லாதவன் தெரியாமல் கதவைத் தட்டியிருக்கிறான் என்ற எண்ணம் ஏற்படுவதற்காக அப்படிச் செய்கிறான். ஆக கணவனுக்கு தன்னுடைய மனைவி மீது சந்தேகம் ஏற்படக் கூடாது என்ற நல்ல எண்ணத்தில் தான் அப்படிச் செய்ததாக நான் கருதுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: பாண்டியன் நியாயத்திற்காக கதவுகளைத் தட்டினான். ஆனால் நீங்கள் தவறான காரியத்திற்காக கதவுகளைத் தட்டியிருக்கிறீர்கள். இப்போது மற்ற பல்கலைக் கழகங்களுக்கும் இதைப் போன்ற சரத்துக்களைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அதுபற்றி இங்கே பலர் சுட்டிக்காட்டினார்கள்.

நான் குறிப்பாக ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். பஞ்சாயத்து யூனியன் தேர்தல் என்று சொல்கிறீர்கள். அதற்கும் இப்படி வைப்பீர்களா என்று கேட்க விரும்புகிறேன். நேற்று நண்பர் துரைமுருகன் அவர்கள்கூட இதுபற்றிச் சொன்னார்கள். இன்றைக்கு, மந்திரி பதவியாக இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர் பதவியாக இருந்தாலும், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியாக இருந்தாலும், மாநகராட்சி உறுப்பினர் பதவியாக இருந்தாலும், முதலமைச்சர் பதவியாக இருந்தாலும், உங்களுடைய அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் பதவியாக இருந்தாலும், சபாநாயகர் பதவியாக இருந்தாலும், துணைச் சபாநாயகர் பதவியாக இருந்தாலும் இங்கே இருக்கின்ற செக்ரட்டரி பதவியாக இருந்தாலும் இந்தப் பதவிகளுக்கு எல்லாம் குறிப்பிட்ட இந்த ஆறு ஆண்டுக்காலம்தான் என்று வைப்பீர்களா? செக்ரட்டரி தொடர்ந்து பதவியில் இருந்தால் 'வெஸ்டட் இன்டரஸ்ட்' ஏற்பட்டு, தவறு செய்வார், தப்பு நடக்கும் அல்லது அமைச்சர் தொடர்ந்து இருந்தால் தவறு நடக்கும்; மற்றவர்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று சொல்லி நம்முடைய கல்வி அமைச்சர் ராஜிநாமா செய்வாரா? அவர்கள் ராஜிநாமா செய்ய வேண்டுமென்பது என்னுடைய விருப்பம் அல்ல. ஆக, செனட்டுக்கும் சின்டிகேட்டுக்கும் வரக்கூடியவர் பதவிக் காலம் ஆறு ஆண்டுகள் என்று சொல்கின்ற வாதம் சரியல்ல. Before the eye of law all are equal சட்டத்தின் முன்னால் எல்லோரும் சமமாக இருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட வரை மட்டும் சட்டம் பாதிப்பதாக இருக்கக்கூடாது. இதுதான் எங்களுடைய கருத்து.

[திரு. அ. ரகுமான்கான்] [1982 பிப்ரவரி 17

அடுத்து, நம்முடைய அமைச்சரவர்கள் கூட இங்கே சொன்னார்கள். துணை வேந்தர் எவ்வளவு ஆண்டுக்காலம் இருக்கலாம் என்றால், ஆறு ஆண்டுகள் இருக்கலாம்; அதற்குமேல் இருக்க முடியாது. நீங்கள் விரும்பினால் ஓராண்டு எக்ஸ்டென்ஷன் கொடுக்கலாம். ஆக, 7 ஆண்டுகள் துணைவேந்தர் பதவியில் இருக்கலாம். ஆனால் பதிவாளர் எவ்வளவு ஆண்டு பதவியில் இருக்கலாம்? ரெஜிஸ்டிரார் எவ்வளவு ஆண்டு வேண்டுமானாலும் இருக்கலாம். இதை யார் முடிவு செய்வது? சின்டிகேட் முடிவு என்று சொல்கிறார்கள். ஒரு பல்கலைக் கழகத்தில் துணை வேந்தர் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் தான் இருக்க வேண்டும்; ரெஜிஸ்டிரார் எவ்வளவு ஆண்டுக்கு வேண்டுமானாலும் இருக்கலாம் என்று சொல்லியிருப்பது ஏன்? துணை வேந்தர் 65 வயதில் ரிட்டயர் ஆகிறார். ஆனால் பதிவாளர் 58 வயதிலே ரிட்டயர் ஆகிறார் என்று வைத்திருக்கிறீர்கள். ஏன் இந்த இரட்டை வேடம்? ஏன் இந்த இரட்டைப் போக்கு? ஏன் இந்த இரட்டைக் கொள்கை? மாண்புமிகு அமைச்சரின் பதிலிலே இவைகளுக்கு எல்லாம் விளக்கமாகப் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். செனட் மெம்பரும் சின்டிக்கேட் மெம்பரும் ஆறு ஆண்டுகளுக்கு மேல் பதவி வகிக்கக்கூடாது என்று சொன்னால், இதிலே நம்முடைய கல்வி அமைச்சரும் வருகிறார். அவர் இணை வேந்தராக இருக்கிறார்; அதே நேரத்தில் செனட் மெம்பராகவும் இருக்கிறார். நீங்கள் மட்டும் நிரந்தரமாக இருக்கலாமா? இணை வேந்தர் என்ற முறையில் நீங்கள் நிரந்தரமாக இருக்கலாம். ஆனால் செனட் மெம்பர்களும் சின்டிகேட் மெம்பர்களும் 6 ஆண்டுக்குமேல் இருக்கக்கூடாது என்று சொன்னால் இணை வேந்தர் எப்படி இருக்கலாம். அமைச்சராக இருப்பதால் இணை வேந்தர் என்று வருகிறது. அப்படியானால் நீங்கள் கல்வி அமைச்சராக இருக்கும் வரையில் இணை வேந்தராக இருக்கலாம். ஆனால் செனட்டில் எப்படி ஆறு ஆண்டுக் காலத்திற்குமேல் இருக்க முடியும்? 6 ஆண்டுக்குப் பின்னால் நீங்களும் தகுதி இழந்துவிடுகிறீர்கள், செனட் மெம்பர் என்ற முறையில். இந்தமாதிரியான சந்தேகங்களுக்கு எல்லாம் அமைச்சர் தெளிவாக பதில் சொல்வார் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்து இன்னொன்று. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் தவறுகள் நடைபெறுகின்றன என்று சொன்னார்கள். படித்த பட்டதாரிகள்தான் வாக்காளர்களாக வருகிறார்கள். ஆகவே, தவறு நடக்காது, நடந்தாலும் கண்டு பிடித்துவிடலாம், திரும்பப் பெறலாம் என்று சொன்னார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்களும் right to recall தவறு செய்தவர்களைத் திரும்பப் பெறலாம் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். ஒரு ஜனநாயக அமைப்பில் ஏதாவது ஒரு இடத்தில் தவறு நடக்கலாம்; நடக்காது என்று சொல்ல



1982 பிப்ரவரி 17] [திரு. அ. ரகுமான்கான்]

முடியாது. அதற்காக அமைப்பையே மாற்றிவிட முடியாது; மாற்றக்கூடாது. சட்டம், ஒழுங்கு கெட்டுவிட்டது என்பதற்காக போலீஸ் டிபார்ட்மெண்ட் கூடாது என்று திரு. நெடுமாறன் அவர்கள் கூறமாட்டார்கள். குறைகளைக் களைவது வேறு, அதற்காக அடிப்படையையே தகர்த்து எறிவது வேறு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-30]

அடுத்து துணை வேந்தருக்கு அதிகமான அதிகாரம் கொடுத்து இருக்கிறீர்கள். இந்த மசோதாவின் பக்கம் 14—லே பார்த்தால், துணை வேந்தர் அவர்கள் எடுக்கக் கூடிய எந்த முடிவாக இருந்தாலும் பாதிக்கப்படுபவர்கள் சின்டிகேட் ஆட்சிமன்றக் குழுவிற்கு அப்பீல் செய்யலாம் என்று சொல்லி இருக்கிறீர்கள். அப்படி அப்பீல் செய்ததற்குப் பிறகு இறுதியாகத் துணைவேந்தர் அவர்கள் தீர்ப்புதான் இறுதியானது என்று நீங்கள் போட்டிருந்தால் எப்படி? துணைவேந்தர்தான் குற்றச்சாட்டு சொல்கிறார். துணை வேந்தர்தான் நடவடிக்கை எடுக்கிறார். ஆனால் சின்டிகேட்டுக்கு அப்பீல் செய்யலாம் என்று சொல்கிறீர்கள். என்னதான் துணை வேந்தர் எடுக்கக்கூடிய நடவடிக்கை தவறு என்று சொன்னாலும் துணைவேந்தர்தான் இறுதித் தீர்ப்பு வழங்கவேண்டும் என்கின்றபோது எதற்காக சின்டிகேட்? அதனை அப்பல்லேட் அதாரிட்டி என்று சொல்கிறீர்கள். ஆகவே துணைவேந்தரிடத்திலே அதிகாரத்தைக் குவித்திருப்பது என்பது பல்கலைக் கழக நிர்வாகத்திற்கு நியாயமாக இருக்க முடியாது.

அடுத்து அரசாங்கத்தின் சார்பாக நிதி அதிகாரி என்று ஒருவரைப் போட்டிருக்கிறீர்கள். இது பல்கலைக் கழகத்தினுடைய சுயாட்சியிலே குறுக்கிடுவதாகும். மாநில சுயாட்சிக்காகக் குரல் கொடுக்கும் நீங்கள் நிதி அதிகாரி என்று அரசாங்கத்தின் சார்பாக ஒருவரைப் போட்டு நிர்வாகத்தை முடக்கக்கூடாது. இவ்வாறு நிதி அதிகாரி போடுவதை பல்கலைக் கழகங்கள் எதிர்த்திருக்கின்றன. துணை வேந்தர், பதிவாளர், நிதி அதிகாரி பல்கலைக் கழகப் பணியாளர்கள் இவர்கள் எல்லாம் இண்டியன் பீனல் கோட் சட்டத்தின்படி அரசாங்க ஊழியர்கள் என்று அறிவித்திருக்கிறீர்கள் இந்த புதிய சட்டத்தின் மூலமாக, They are all Government Servants. அப்படியானால் இனி அமைச்சர் என்னுடைய கைகள் கட்டப்பட்டிருக்கின்றன, அரசாங்கத்தால் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்ல முடியாது. நேற்று கூட திரு குமாரசாமி என்பவர் பற்றி இங்கே குறிப்பிடப்பட்டது. சி.ஐ.டி. ரிப்போர்ட் எல்லாம் வந்துவிட்டது என்று சொன்னார்கள். குற்றவாளிகள் கைது செய்யப்பட வேண்டும், வழக்கு தொடரவேண்டும், அவர்கள் நீதிமன்றத்திலே நிறுத்தப்பட வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் இப்போது சட்ட சிக்கல் கிடையாது, ஆகவே அந்த நடவடிக்கையை எடுக்கவேண்டும்.

அடுத்து ஆலோசனைக் குழு என்று சொல்லக்கூடிய செனட்டுக்கு சட்டப் பேரவையிலே இருந்து இரண்டுபேரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். மேலவையில் இருந்து ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். தஞ்சை தமிழ்ச் சங்கத்திலே இருந்து ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். மதுரைத் தமிழ்ச் சங்கத்திலே. இருந்து ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அடுத்து நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு அதிகாரம் இருக்கின்றது. அவர்கள் பார்த்து 3 பேரைப் போடலாம். அவர்கள் யார்? ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்தவர்கள் மற்றும் பழங்குடி மக்கள். ஆனால் தாய்க்குலம் என்று சொன்னீர்கள். பஞ்சயாத்து யூனியனிலே தாய்க்குலத்திற்கு இட ஒதுக்கீடு தந்தீர்கள். ஆனால் இதிலே அந்தத் தாய்க்குலத்திற்கு ஏன் இட ஒதுக்கீடு இல்லை? ஏன் ரிசர்வேஷன் இல்லை என்று தாய்க்குலத்தின் சார்பாக நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வேந்தர் இன்றைக்கு இருக்கக்கூடிய கவர்னர், அவர்களும் நியமனம் செய்கிறார்கள. கல்லூரிகளிலிருந்து நியமனம் செய்கிறார்கள். ஆனால் அமைச்சரின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். பட்டம் பெற்றவர்கள் தான் இந்த செனட்டிலே இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை அவர்களும் இருக்கட்டும், நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் பட்டமே பெறாத தமிழ் கற்ற மேதைகளும், பேரறிஞர்களும் வெளியே இருக்கிறார்கள். அவர்களுக்கும் இதிலே இடம் தரவேண்டும். பெயரைக் கூட குறிப்பிட்டுச் சொல்கிறேன். கி. இராமலிங்கனார் என்பவர் பழம்பெரும் அறிஞர், ஒரு இலட்சம் வேற்று மொழிச் சொற்களை தமிழில் மொழிபெயர்த்து இருக்கிறார். அவரைப் போன்ற பேரறிஞர்கள் இதை செனட் நிர்வாகக் குழுவிலே அவசியம் இடம் பெறவேண்டும். தமிழ் அறிஞர்களுக்கும் இடம் இருந்தால்தான் தமிழ் பல்கலைக் கழகம் சிறப்பாக இருக்க முடியும் என்பதை நான் நினைவுப்படுத்த விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

கடைசியாக ஒன்றை நான் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆலோசனைக் குழு என்று சொல்லக்கூடிய செனட் அடிக்கடி கூடுவதில்லை. பல்கலைக் கழகத்தின் குறைகளை எடுத்துச் சொல்லக்கூடிய வாய்ப்பு அங்கே இருக்கின்றது ஆகவே அது வருடத்திற்கு 4 முறையாவது கூடவேண்டும்.

அடுத்து ஒன்றைச் சொல்லிவிட்டு முடித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். பிற மொழிச் சொற்களையும், பிற மொழி இலக்கியங்களையும், பிறமொழி நூல்களிலே இருக்கக் கூடிய கருத்துக்களையும் தமிழிலே மொழிபெயர்க்க வேண்டும் என்ற நல்ல கொள்கை வரவேற்கப்படக்கூடிய ஒன்று. தமிழ்ப் பல்கலைக் கழகத்தினுடைய பணிகளில் அதுவும் ஒன்று.



ஆனால் தமிழ் பண்பாட்டு மையத்தின் சார்பாக கல்கத்தாவிற்கு சென்ற அதிகாரிகள் என்ன செய்திருக்கிறார்கள் என்றால் ஏற்கெனவே இங்கே தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு இருக்கின்ற மரியாதைக்குரிய கலில்கிப்ரான் அவர்களுடைய கவிதைகளை எல்லாம், தமிழ் பண்பாட்டு மையத்தின் சார்பாக சர்க்கார் பணத்திலே சென்றவர்கள் மொழிபெயர்த்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படி சர்க்கார் பணத்திலேயே போய் ஏற்கெனவே மொழி பெயர்க்கப்பட்டதையே திரும்பவும் மொழி பெயர்த்துக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொன்னால், இதில் மக்கள் வரிப்பணம் எவ்வளவு வீணாகிறது என்பதை சற்று எண்ணிப் பார்க்கவேண்டும் என்றே இதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து இன்னொன்றையும் நான் இந்த அவையின் கவனத்திற்கும், அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வர விரும்புகிறேன். பொதுவாக பல்கலைக் கழகங்களில் தற்போது ஊழல்கள் பெருகிவிட்டன. அப்படி அங்கே ஊழல்கள் நடைபெறுவதற்கு இடம் தரலாகாது என்று சுட்டிக்காட்டுவதோடு ஒரு உதாரணம் ஒன்றையும் சொல்லவிரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

இன்னும் இரண்டு நிமிடங்கள் கொடுத்தால் போதும். ஒரே ஒரு பாயிண்ட் ஐந்து வாக்கியங்கள் மட்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குச் சொல்லிவிட்டு என் உரையை உடனே முடித்துக் கொள்கிறேன்.

எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற இந்தக் குறிப்பில், சுப்பிரமணியம் என்ற சட்டக்கல்லூரி மாணவன் ஒருவர் ஒரு முறையீட்டைக் கொடுத்துள்ளார் அது உங்களுக்கும் கூட அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதில் "நான் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரியில் இரண்டாம் ஆண்டு பொது சட்ட இயல் முதல் இரண்டாம்பிரிவு தேர்வுக்காக பணம்கட்டி, மனுவும்செய்து ஒவ்வொரு தேர்வையும் நல்ல முறையில் 42 பக்கங்களுக்குக் குறையாமல், தாய்மொழியான தமிழ் மொழியில் எழுதியிருக்கிறேன். என்னுடைய தேர்வு எண். 301. கடந்த 16–7–1981 அன்று தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. ஆனால் என் தேர்வு முடிவு மட்டும் அறிவிக்கப்படவில்லை. இதுவரையில் அதுபற்றி சரியான முறையில் என்ன ஆயிற்று என்றே தெரிவிக்கப்படவும் இல்லை. மேலும் நான் தேர்வுக்கு ஆஜராகவில்லை என்ற நிலை பல்கலைக் கழக சட்டத் துறை சம்பந்தப்பட்ட பதிவேட்டில் ஆப்செண்ட் மார்க் செய்யப்பட்டிருக்கிறது. நான் உடனே எங்கள் கல்லூரி. தலைமை தேர்வு கண்காணிப்பாளர் திரு. கோவிந்தராசன் அவர்களிடம் சென்று முறையிட்டு நான் தேர்வு எழுதியதற்கான அத்தாட்சியைப் பெற்றுக் கொண்டு, மீண்டும் பல்கலைக் கழகம் சென்று, உடனே அந்த அத்தாட்சியை அவர்களிடம் அன்றே சமர்ப்பித்து விட்டேன். அதற்குப் பின்பும்

சம்பந்தப்பட்ட தேர்வு ஆய்வாளர்கள், மற்றும் துறை அலுவலர்கள், இன்னும் எம்ஃ விடைத்தாள்கள் திருத்தப்பட்டு வரவில்லை என்று சொல்கிறார்கள்,'' என்று முறையிட்டிருக்கிறார். பொறுப்புள்ள அதிகாரிகள் தமிழ் மொழிக்கு கொடுத்திருக்கும் மரியாதையை பார்த்தீர்களா என்று கேட்க விரும்புகிறேன்.

தேர்வு எழுதி 7 மதங்கள் ஆகிவிட்டது. பரீட்சை முடிவுகளும் வந்துவிட்டது. தேர்வு எழுதப்பட்டது என்பதற்கான சான்றுகளும் கொடுத்தாகிவிட்டது. அதற்குப் பிறகும், எழுதிய பரீட்சைப் பேப்பர்கள் காணாமல் போய் விட்ட நிலையில் அந்த முடிவும் அறிவிக்கப்படவில்லை என்று சொன்னால், இது என்ன நியாயம் என்பதைக் கேட்டு, தமிழ் பல்கலைக் கழகம் அமைக்கப்படுவதை வரவேற்கிறோம். ஆனால் அதற்காக கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டம் ஜனநாயக விரோதமாக கொண்டு வரப்பட்டிருக்கிறது என்ற நிலையில் அதை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்று சொல்லி அமர்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சையில் தமிழ் பல்கலைக் கழகம் அமைப்பதற்கான இந்தச் சட்டமுன்வடிவினை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே மனப்பூர்வமாக நான் வரவேற்கிறேன். இந்தப் பல்கலைக் கழகம் அமைப்பதன் விளைவாக தமிழ் மொழி, அரசுத் துறையிலும், நிதித் துறையிலும், சட்டமன்றத் துறையிலும், மற்ற தொழில் வணிகம் போன்ற துறைகள் அனைத்திலும், தமிழ்மொழி ஆட்சி மொழியாகவும்' போதனா மொழியாகவும் சிறப்பாக வளர்ச்சியடைவதற்கு, இந்தப் பல்கலைக் கழகம் பெரிதும் பயன்படுத்தப்பட வேண்டும் என்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

ஆரம்பக் கல்வியில் இருந்து, பட்ட மேற்படிப்புக் கல்வி வரை தாய்மொழியின் மூலமாகவே நடைபெறுவதற்கு இங்கே பல இடைஞ்சல்களும், இன்னல்களும் இருக்கின்றன. இளம் சிறார்களுக்கு கல்வி கற்பிப்பதை, ஆங்கில மொழி மூலமாக நடைபெறக்கூடிய அந்தப் பள்ளிகளிலிருந்து. அங்கேயிருந்தே சிறந்த கல்வியை தமிழ் மூலமாக கற்றுத்தர முடியும் என்ற நிலையை ஏற்படுத்தினால்தான், பல்கலைக் கழகப் படிப்புப் போன்ற உயர் மட்டக் கல்விக்கு அவர்கள் வரும்போது, தமிழ் மொழியினைப் பயன்படுத்தி, பெரும் ஆராய்ச்சிகளையும், சிறந்த கண்டுபிடிப்புகளையும், தமிழ்மொழியின் மூலமாகவே அவர்கள் கண்டு பிடிக்க முடியும். அந்த நிலைக்கு அவர்கள் அப்போது தான் வரமுடியும்.

அத்தோடு கூட, உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், தாய் மொழி மூலமாகவே பயிற்சி என்பதை மேலும் மேலும் அதிகப்படுத்தி, ஒரு சில ஆண்டுகளுக்குள், தாய் மொழி மூலமாகத்தான் இந்தப் பயிற்சிகள் நடைபெறும் என்கிற நிலையை





ஏற்படுத்தும் வகையில் ஏற்பாடுகள் செய்தால், இந்த தமிழ் பல்கலைக் கழகத்தின் மூலம், எந்த விளைவுகள் ஏற்படவேண்டும் என்று கருதுகிறோமோ, அந்த விளைவுகளை ஏற்படுத்த முடியும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, துணை வேந்தர் நியமிப்பதைப் பொறுத்தவரையில், இந்தப் பல்கலைக் கழகம் என்று அல்ல, மற்ற எல்லாப் பல்கலைக் கழகத்திலேயும் கூட இருக்கக்கூடிய முறைகளைப் பார்க்கிறபோது, அரசு ஒருபிரதிநிதியை நியமிக்கிறது, ஆட்சிக்குழு ஒரு பிரதிநிதியை நியமிக்கிறது, ஆலோசனைக்குழு ஒரு பிரதிநிதியை நியமிக்கிறது. இந்த மூன்று பேர்களும் தேர்ந்தெடுத்த பெயர்களின் பட்டியலிலிருந்து, ஆளுநர் அவர்கள் தான் இறுதியாக தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற அமைப்பு இருக்கிறது.

ஆனால், சாதாரணமாக ஒரு மாநிலத்தில் இருக்கக்கூடிய எந்தப் பல்கலைக் கழகமாக இருந்தாலும்,-இந்தப் பல்கலைக் கழகத்தையும் சேர்த்துச் சொல்கிறேன்-ஆளுநர் அவர்கள் துணை வேந்தரை நியமிக்க வேண்டும் என்று இருப்பது ஒரு பெயரளவிற்குத் தான் இருக்க வேண்டும், எப்படி இந்த அவையிலே, அமைச்சரவை ஆலோசனையின் பேரில் தயாரித்துக் கொடுக்கும் உரையினை ஆளுநர் அவர்கள் தமது உரையாகப் படிக்கிறாரோ, அதைப்போலவே மந்திரிசபையின் ஆலோசனையின் பேரில்தான், இந்த துணை வேந்தர் பதவியை பல்கலைக் கழகங்களில் ஆளுநர் அவர்கள் நியமிக்க வேண்டும் என்ற நியதியை ஏற்படுத்த வேண்டியது மிகவும் அவசியம் என்று நான் கருதுகிறேன்.

[முற்பகல் 11'40]

இல்லாமல் போனால், வேறு சில மாநிலங்களில் அந்த மந்திரிசபைகளின் கருத்துக்களுக்கு மாறாகவே முற்றிலும் முரணான வகையில் ஆளுநர் அவர்களால் அத்துறையில் நியமனம் செய்யப்பட்டு அதனால் பல பிரச்னைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே இந்த மாநில அரசு இதைப்பற்றி தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் பல்கலைக் கழகம் துவங்குவதன் மூலம் கடந்த காலத்தில் திரு உ. வே. சுவாமிநாத ஐயர் அவர்கள் செய்தது போல் எவ்வளவோ சுவடிகள் அச்சிடப்படாமல் இருக்கக் கூடியவற்றை அச்சுக்குக் கொண்டுவருவதோடு கூட, தொல்காப்பியம் போன்ற இலக்கியங்களை எல்லாம், அவைகள் எல்லாம் கவிதை வடிவத்தில் இருப்பதால் அதனுடைய பொருளை பெரும்பாலான பொது மக்களால் புரிந்து கொள்ள முடியவில்லை, ஆகவே இப்படிப்பட்ட பழம் பெரும் இலக்கியங்களில் அடங்கியிருக்கக்கூடிய உண்மைகளை வசன நடையில் எழுதி இத்தகைய நூல்களை இந்த பல்கலைக்கழகம் மூலம்

அரசாங்கம் வெளியிடுவதன் மூலம் தமிழ்மக்களின் தோன்று தொட்ட வாழ்க்கையை, அவர்களுடைய சமூக பொருளாதார வாழ்க்கையை, அதன் நிலைமைகளை தமிழக மக்கள் அறிந்து கொள்ள ஏதுவாகும்.

இந்தப் பல்கலைக் கழகம் மூலம் நடைபெற இருக்கிற ஆராய்ச்சி பற்றி கூறும்போது ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். தமிழும் மதமும் சேர்ந்து வளர்ந்தன. தமிழ் என்றால் மதம் தான். சமய வளர்ச்சிதான் தமிழ் வளர்ச்சி என்று சொல்லக் கூடிய ஒரு கருத்தோட்டம் இருக்கிறது. அதை நாங்கள் நிராகரிக்கிறோம். மதம் என்பது தமிழ் மக்களின் வாழ்க்கையில் ஒரு அம்சமாக இருந்ததே தவிர அதுவாகவே இல்லை. உதாரணமாக இந்தியத் தத்துவத்திலே நாத்திகம் இருக்கிறது என்பதுபற்றி தேவி பிரஸாத் சட்டோபாத்யாயா என்ற அறிஞர் எழுதிய, தக்க ஆதாரங்களோடு எழுதிய பல புத்தகங்கள் இருக்கின்றன. இந்தியத் தத்துவத்தில் ஆத்திகத்திற்கு எதிரான பொருள்முகவாதம் அடங்கியிருக்கிறது என்பதை வடமொழி இலக்கியங்களிலிருந்தே மேற்கோள் காட்டி நிரூபிக்கும் முயற்சி நடந்திருக்கிறது. அதேபோல் தமிழ்மொழி இலக்கியங்களிலும் விஞ்ஞானத்தைப் பலப்படுத்தக்கூடிய, பகுத்தறிவைப் பலப்படுத்தக்கூடிய கருத்துகள் வருகின்றன. அவைகளை புறக்கணிக்கக்கூடிய போக்கு தமிழ் இலக்கியத்தில் பல ஆண்டுக் காலமாக இருந்திருக்கிறது. ஆகவே ஆராய்ச்சியாளர்களுக்கு எந்தவிதமான கட்டுகளும் போடாமல் அவரவர்கள் கோணத்திலிருந்து பகுத்தறிவு முறையில், விஞ்ஞானத்தைப் பயன்படுத்தக் கூடிய முறையில் ஆராய்ந்து கடந்த காலத்தில் தமிழ் சமுதாயத்தில் இருந்த உண்மைகளை உள்ளபடியே ஆராய்ச்சி செய்து கொண்டுவருவதற்கான ஊக்கத்தை அரசாங்கம் இந்தப் பல்கலைக் கழகம் மூலம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்டவர்களுக்கு ஊக்கமளிக்கவேண்டும்.

அடுத்தபடியாக தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் என்ற பெயரால் அரசாங்கம் மட்டும் முடிவெடுப்பது பொருத்தமானதல்ல. சமீபத்தில் ஒரு மாநாட்டில் மதுரை—காமராஜ் பல்கலைக்கழக துணைவேந்தர் கூட அரசுக்கு இதைப் பற்றி எச்சரிக்கைகளை விடுத்திருக்கிறார்கள். இதிலே எவ்வாறு நடைபெறவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே இது மொழி சம்பந்தப்பட்ட பிரச்னை. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அது இயற்கையிலே வளர்ச்சி பெற்று ஒரு வடிவம் எடுத்திருக்கக்கூடிய மொழி. அரசாங்கம் மட்டும் அதன் முடிவுப்படி எழுத்து சீர்திருத்தம் கொண்டுவருவது என்பது பொருத்தமாகயிருக்காது. தமிழ் மக்கள் அனைவருடையவும், அவர்கள் பிரதிநிதிகள், அறிஞர் பெருமக்கள் அனைவருடைய ஒருமித்த கருத்தினை ஏற்படுத்தும் வகையில் அது செய்யப்படவேண்டும் என்ற கருத்தை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



இன்று ஏற்படுத்தக்கூடிய இந்தப் பல்கலைக் கழகத்தில் வேறு எந்தவிதமான கல்லூரிகளும் இணைக்கப்படாமல் நடத்தப்படக் கூடிய காரணத்தினால் அது தமிழ் மொழி வளர்ச்சிக்கு பெரிதும் உதவி செய்யும். அப்படிச் செய்யும்போது, தொழில் துறை, வணிகம், விஞ்ஞானம் போன்ற துறைகளில் இன்று தமிழ் மொழியைப் பயன்படுத்தி நூல்கள் வரவேண்டியது அவசியம். ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது, இந்தப் பல்கலைக் கழகத்தின் பணி உலகத்தில் வேறு எங்கு தமிழ்மொழி போதிக்கப் படுகிறதோ அந்தப் பல்கலைக் கழகங்களோடு தொடர்பு கொண்டு தமிழ்மொழி வளர்ச்சிக்குப்பயன்படுத்த வேண்டும் என்று சொல்லும்போது இலங்கையில் ஏற்கனவே மருத்துவக் கல்லூரியில் சொல்லபடக்கூடிய பாடங்களையெல்லாம் அவர்கள் தமிழ்மொழியில் ஆக்கியிருக்கிறார்கள். ஆகவே இந்த வளர்ச்சிப் போக்கினை கணக்கில்கொண்டு வெகு சீக்கிரத்தில் தமிழ்மொழி பலதுறைகளில் வளர்ச்சியடைய இந்தப் பல்கலைக் கழகத்தை பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

மற்றொன்று. இந்தப் பல்கலைக்கழகம் ஏற்படக்கூடிய காலத்தில் மதுரையில் உள்ள தமிழ்ச் சங்கம், சென்னையில் உலகத் தமிழ் ஆராய்ச்சிக்காக எற்படுத்தப்பட்ட சங்கம் தமிழ் வளர்ச்சிக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கக் கூடிய வாரியம் இப்படி பல அமைப்புகள் உள்ளன. இவற்றின் பிரதிநிதிகளை இந்தப் பல்கலைக் கழகத்தின் ஆலோசனைக் குழுவில் போடுவதற்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)

என்றாலும், நான் கூற விரும்புவது இத்துறைகளுடைய வெளியீடுகளைப் பார்த்தால், ஒவ்வொரு நிறுவனமும், தன்தன் சுயேச்சையான முடிவுகளின்படி இலக்கியத்தை, வரலாற்றை, இப்படி பல வெளியீடுகளை வெளியிட்டிருக்கிறார்கள். உதாரணமாக, தமிழ் இலக்கியத்தைப் பற்றிய இன்றைக்கு ஒவ்வொரு நூற்றாண்டாக எழுதி ஒவ்வொரு அறிஞர்களாக எழுதிய பல புத்தகங்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அதற்குப் பதிலாக, தமிழ் சரித்திரம், தமிழ் இலக்கியத்தினுடைய வரலாறு ஆகியவைகளைப் பற்றி ஒரு குழுவை நியமித்து, அவர்கள் மூலம் யதார்த்த பூர்வமாக தமிழ் இலக்கியங்களைப் பற்றி, தமிழ் வரலாற்றைப் பற்றி பரிசீலித்து, அரசாங்கம் அந்த நூல்களை வெளியிடுமானால், தமிழ் மக்களுக்கு தமிழ் இலக்கியத்தைப் பற்றிய ஒரு தெளிவான கருத்து உருவாவதற்கு அது உதவியாக இருக்கும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சையிலே அமைக்கப்பட்ட காரணத்தினால், அதற்கு நியமிக்கப்பட்டிருக்கக்கூடிய மற்ற அதிகாரிகளைப் பொறுத்தவரையில் ஏற்கனவே மற்ற பல்கலைக் கழகங்களுக்கு போடப்பட்ட அதே கால வரம்பு கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருப்பது, முற்றும் பொருத்தமானது. மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசும்போது, மதுரை—காமராஜ் பல்கலைக்கழகத்திற்கு

ஒரு ஏற்பாட்டைக் கொண்டு வந்திருப்பதன் காரணமாக மற்றவற்றிற்கும் இதைக் கொண்டு வரவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். ஒரு நல்ல காரியம் எதனால் ஆரம்பிக்கப்பட்டாலும், அது எல்லாப் பல்கலைக் கழகங்களுக்கும் வரும் என்ற நிலை வரும்போது, அதை அவர்கள் வரவேற்க வேண்டுமென்று நான் கருதுகிறேன். உதாரணமாக, அப்படி வரும்போது, அண்ணாமலைப் பல்கலைக்கழக பிரச்னை வருகிறது. இன்னும் சில பல்கலைக்கழகங்களில் இணைவேந்தர் பதவி சிலரால் ஆயுட்காலம் முழுவதும் தனிப்பட்ட நபர்களால் நீடிப்பது என்பதைப்பற்றி அரசாங்கம் பரிசீலித்து, இன்றைக்கு அப்பேர்ப்பட்டவர்களுடைய ஆதிக்கம் இல்லாத வகையில், எல்லாப் பல்கலைக்கழகங்களும் நடப்பது மிகவும் அவசியமாகும். ஆகவே, ஒட்டுமொத்தத்திலே இந்தத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் மூலமாக ஏராளமாக வெளியீடுகளை வெளியிடுவ தோடு மட்டுமல்லாமல், உலகத்திலுள்ள சிறந்த மொழிகளி லிருந்து, மொழிபெயர்த்து, தமிழ்ப் புத்தகங்களைப் கொண்டு வருவதற்கு பெரிய அளவிலே வகைசெய்ய வேண்டும்

அதேபோல், இன்றைக்கு பல புலன்களை ஏற்படுத்தியிருப்ப தாக அமைச்சர் அவர்கள் இங்கே பேசும்போது குறிப்பிட்டார்கள். அந்தப் புலன்களின் மூலமாக, அதற்கு தகுந்த பேராசிரியர்களை நியமித்து, அதோடு நவீன தமிழ் எழுத்தாளர் இயக்கங்களையும் இதிலே சேர்க்க வாய்ப்பு கொடுப்பதற்கு ஆலோசிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். மதுரை தமிழ்ச் சங்கம், கரந்தைத் தமிழ்ச் சங்கம் போன்றவற்றின் பிரதிநிதிகளை போடப்போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி போட்டாலும், போடாவிட்டாலும், இன்றைக்கு தமிழ்நாட்டிலே பல எழுத்தாளர் இயக்கங்கள் தோன்றியிருக்கின்றன, அவர் களுக்கும் இதிலே வாய்ப்பு கொடுக்கவேண்டும். கடந்த கால இலக்கியங்களைக் கொண்டு வர முயற்சிக்கின்ற இந்த அரசு, நவீன இலக்கியங்களைப் படைக்கின்ற இத்தகைய எழுத்தாளர் இயக்கங்களையும் இதிலே கொண்டுவருகின்ற நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். இன்றைக்கு அவர்கள் நவீன இலக்கியங் களை உருவாக்கி வருகிறார்கள். புதிய கவிதைகளை உருவாக்கு கிறார்கள். அதேபோல், புதிய நாடக ஆசிரியர்கள் தோன்றி வருகிறார்கள். அவர்களுடைய கருத்துரைகளையும் இன்றைக்கு கேட்டு, அதையும் பரிசீலித்து. அவர்களையும் அரசாங்கம் ஆலோசனைக் குழுவிலோ அல்லது அரசாங்கத்தி னுடைய நியமனத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிற அந்தக் குழுவிலோ அவர்களைச் சேர்ப்பது மிகவும் பொருத்தமாக இருக்கு மென்று கருதுகிறேன்.

இறுதியாக நான் சொல்ல விருப்புவது, இன்றைக்கு பாரதியார் பெரிய பட்டம் வாங்கவில்லை; அதேபோல் பாரதிதாசன் பெரிய பட்டம் வாங்கவில்லை. ஆகவே, இந்தப் பல்கலைக்கழகமாவது, மேற்படிப்பு படித்து பட்டம் பெற்றவர்களைத்தான் சேர்த்துக் கொள்வது என்ற நிலைமை இல்லாமல், சம்பிரதாயமான பட்டம்



பெற்றிருக்க வேண்டும், பட்டயம் பெற்றிருக்க வேண்டும், இத்தகைய தகுதி இருக்கவேண்டும், பட்டம் பெற்று, அதற்கான மேல்படிப்பிற்கான ஆராய்ச்சி செய்திருக்க வேண்டும் என்ற நிலைமைகள் எல்லாம் இல்லாமல். பட்ட படிப்பு இல்லாமலேயே பல அறிஞர்கள். சொந்த கல்வியைப் பெற்று பெரிய கவிஞர் களாகவும், பெரிய எழுத்தாளர்களாகவும் மாறியிருக்கிறார்கள் என்பதை கருத்தில்கொண்டு, அத்தகையவர்களுக்கும் வாய்ப்பு கொடுக்கவேண்டும். ஆகவே, இந்தத் தமிழ்ப் பல்கலைக்கழகம் அவர்களுடைய கருத்துரைகளையும், ஆராய்ச்சி உரைகளையும் ஆய்வுரை நூல்களையும் கொடுத்தால், இந்தப் பல்கலைக்கழகம் அவர்களுக்கு முறைசேர்ந்த கல்வி இல்லாத காரணத்தால், அவை களை நிராகரித்து விடுமா? நிராகரிக்கக் கூடாது என்று நான் கருதுகிறேன்.

கவிஞர்கள் இயற்கையாகவே தோன்றியிருக்கிறார்கள். அதே போல், நாடகாசிரியர்கள் நாடகங்களைப் புனைந்திருக்கிறார்கள். நடைமுறை வழக்கங்களில் இருப்பதைவைத்து, நாடகங்கள் அவர்களால் உருவாக்கப்படுகிறது. எனவே. பல எழுத்தாளர்கள் கவிஞர்கள் முறையான கல்வியில்லாமல் தோன்றியிருக்கிறார்கள்; தோன்றுகிறார்கள். அவர்கள் எழுதக்கூடிய நூல்களையும் இந்தத் தமிழ்ப் பல்கலைக்கழகம் பரிசீலித்து. அதன்மூலம் தமிழ்நாட்டிலே பொதுமக்களிலே இருந்து தோன்றக்கூடிய அறிஞர்களுக்கு ஊக்கம் அளிக்கவேண்டும்.

இறுதியாக நான் சொல்ல விரும்புவது, எந்தவிதமான முறை யான கல்வியும் இல்லாமல், இந்தத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பரீட்சை எழுதுவதற்கு மக்களுக்கு உரிமை இருக்கவேண்டும். ஒருவர் தன் வாழ்க்கையிலே, கல்லூரியிலோ, உயர்நிலைப் பள்ளியிலோ படிப்பதற்கு வாய்ப்பு இழந்துவிட்டாலும், இந்தப் பல்கலைக்கழகத்தில் தேர்வுகளை எழுதுவதற்கு தகுதி என்று கருதினால், அவருடைய விடைத்தாள் தகுதியானது என்று இந்தப் பல்கலைக்கழகம் கருதினால் அதற்கான புலவர் பட்டமோ அல்லது அறிஞர் பட்டத்தையோ வழங்குவதற்கு தயங்கக் கூடாது. அப்படி சாதாரண மக்களும் இந்தப் பல்கலைக்கழகத்தில் உறவாவதற்கு, பலன் பெறுவதற்கு முன்வர வேண்டும். ஷேக்ஸ்பியர், கம்பர் இவர்கள் எல்லாம் முறையாக கல்வி பயின்றவர்கள் அல்ல. ஆனால், மாபெரும் இலக்கியங்களை அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள், அதேபோல் தமிழகத்திலே கவிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் உருவாக வேண்டும். அவர்களுக்கு எந்தவிதமான முறையான படிப்பு இல்லாவிட்டாலும்கூட, இந்த தமிழ் பல்கலைக்கழகத்தில் அவர்கள் நூல்களை பரிசீலித்து, அதற்கு பரிசு, பட்டம் கொடுக்கின்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். அப்போது உண்மையிலேயே நாடகத் துறையிலும், கவிதைத் துறையிலும், இலக்கியத் துறையிலும் தமிழுக்கு வளர்ச்சி ஏற்படும் என்று இந்தச் சட்டமுன்வடிவை ஆதரித்து அமர்கிறேன்.

(முற்பகல் 11.50)

திரு. மு. அப்பாதுரை: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தத் தமிழ்ப் பல்கலைக் கழக மசோதாவை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக வரவேற்கிறேன். இன்றைக்கு எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று அரசு அறிவித்திருக்கிற சூழ்நிலையில் 1952 ஆம் ஆண்டு இதே தமிழக மாமன்றத்தில எங்கள் அருமைத் தலைவர் ஜீவா அவர்கள் முதல் முதலாகத் தமிழில் பேசி தமிழில் சட்டமன்ற நடவடிக்கைகள் அமையமுடியும் என்று அன்றைக்கே குரல் கொடுத்தார்கள். அந்த எண்ணங்கள் இன்றைக்கு ஈடேறுகின்றன என்று நினைக்கிறபோது பெருமைப்படுகிறேன். இன்றைக்கு பாரதி நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிறோம். ''உலகெலாம் தமிழ் முழக்கம் பரவ வேண்டும்'' என்று கனவு கண்டவன் பாரதி. உலக மக்கள் தமிழ் மொழியின் பெருமையை அறிந்து கொள்ளும் விதத்தில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை அமைக்கும் மசோதாவைக் கொண்டு வந்திருப்பதற்காகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு மூத்த தலைவர்கள், பாரதி, ஜீவா போன்றவர்கள். எந்தக் கனவைக் கண்டார்களோ அந்தக் கனவு நனவாகும்படியான கருத்தோட்டங்களில் தமிழ்ப் பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இன்று விஞ்ஞானத்தை எடுத்துக் கொண்டால் உலகில முன்னேறியிருக்கும் நாடுகளில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றங்கள் எல்லாம் தமிழ் மொழியில் வர கால இடைவெளி அதிகமாக இருக்கிறது. புதிய புதிய கண்டு பிடிப்புகள் விஞ்ஞானத் துறையிலும் மற்றத் துறைகளிலும் வருவது தமிழ் மொழியில் அதிகமாக வருவதற்கு இடைவெளி அதிகமாக இருக்கிறது. அதைப் போக்குகிற விதத்தில் உலகத்தில் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள், மருத்துவத் துறையாக இருந்தாலும், ஆராய்ச்சித் துறையாக இருந்தாலும் அந்தக் கருத்தோட்டங்கள் உடனடியாக தமிழுக்கு வருகிற அடிப்படையில் இந்தப் பல்கலைக் கழகம மொழி பெயர்ப்புத் துறையில் ஈடுகொடுத்துப் பணியாற்ற ஆக்கமும் ஊக்கமும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நாம் எங்கும் தமிழ் என்று சொல்லுகிறபோது அரசாங்கத்தின் ஆணைகள் மற்றவற்றில் எல்லாம் வழக்கில் இல்லாத சொற்கள் எல்லாம் வருகின்றன. அரசு கலைச் சொற்களை மொழி பெயர்க்கும்போது மக்கள் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தக்கூடிய, புரிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு சாமானிய மக்களும் புரிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு கலைச் சொற்களை உருவாக்க இந்தப் பல்கலைக் கழகம் ஆக்கம் கொடுக்கவேணடும். மொழி பெயர்ப்புத் துறை போன்ற காரியங்களுக்கு இந்தப் பல்கலைக் கழகம் முதலிடம் கொடுக்க வேண்டும். இன்றைக்கு நம்முடைய நாட்டுச் சரித்திரத்தைப் பார்க்கும்போது பிறநாட்டவர்கள் எழுதிய சான்றுகள்தான்



ஆதாரமாக இருக்கின்றன. நம்முடைய தமிழகத்தின் வரலாற்று உண்மைகள் சான்றுகளை தமிழ் இலக்கியத்தில் எழுதப்பட்ட நூல்கள், பல்வேறு தலைவர்களால் எழுதப்பட்ட கருத்துக்கள் ஆகியவற்றைக் கொண்டு கண்டறிந்து நம்முடைய வரலாற்றை நாம் எழுதவேண்டும்.

குறிப்பாக எங்கள் மாவட்டத்தில் பிறந்து கர்நாடக மாநிலத்தில் பேராசிரியராக இருக்கும் வானமாமலை அவர்கள் தமிழ்நாட்டு கிராமப் பாடல்களை ஆராய்ந்து, எப்படித் தமிழ்ச் சமுதாயம் முன்னேறி வந்திருக்கிறது மாறி வந்திருக்கிறது. என்ற முறையில் சிறந்த ஆராய்ச்சியைச் செய்திருக்கிறார்கள். 'ஆராய்ச்சி' என்ற பத்திரிக்கையையும் நடத்தி உலகம் பூராவும் அத்தகைய கருத்தோட்டங்களை எல்லாம் உணருமாறு செய்திருக்கிறார்கள். தமிழகத்தின் உண்மையான வரலாறுகள், பண்புகள் தமிழகத்தில் மீண்டும் புத்துயிர் பெறும் அளவுக்கு நம்முடைய வரலாற்றை உருவாக்கவேண்டும்.

அதே நேரத்திலே இன்றைக்கு எத்தனை சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டாலும் கல்வியில் அடிப்படையான மாற்றங்கள் செய்யப்படாத காரணத்தினால், போதனையில் உள்ள நடைமுறைகள் மாற்றப்படாத காரணத்தினால் இன்றைக்குக் கல்வி ஏட்டுக்கல்வியாகவே இருக்கிறது. இந்த நிலை தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு வந்துவிடக் கூடாது. அருமைத் தோழர் திரு. சங்கரய்யா அவர்கள் கூறுவதைப் போன்று தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் வர எத்தனை தகுதி பெற்றிருக்க வேண்டுமென்று இல்லாமல் தமிழ்க் கவிஞர்கள், புதிய சிந்தனையாளர்கள் தமிழகத்திலே இருக்கிறார்கள், அப்படிப்பட்டவர்களுக்கும் ஆக்கம் கொடுக்கின்ற முறையிலே இந்தப் பல்கலைக் கழகம் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தத் தமிழ்ப் பல்கலைக் கழக மசோதாவை வரவேற்று முடிக்கிறேன்

*திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழிக்கு ஒரு பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டு இருப்பதை நாங்கள் இதயப் பூர்வமாக வரவேற்கிறோம். மொழிக்கான பல்கலைக் கழகங்கள் என்பது உலகத்திலே அபூர்வமாகவே அமைந்திருக்கின்றன. வடக்கே சமஸ்கிருதத்திற்கு ஒன்றிரண்டு பல்கலைக் கழகங்களும். ஐரோப்பாவிலே ஜெர்மானிய நாட்டில் ஜெர்மன் மொழிக்காக ஒரு பல்கலைக் கழகமும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவில் சமஸ்கிருத மொழிக்கு அடுத்தபடியாகத் தமிழகத்தில் தமிழ் மொழிக்குப் பல்கலைக் கழகம் இப்போது அமைக்கப்பட்டு இருப்பது உலகப் பூராவும் உள்ள தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

[திரு. ப. நெடுமாறன்] [1932 பிப்ரவரி 17

இது ஏதோ தமிழ்நாட்டிலே உள்ள தமிழர்களுக்கே மட்டுமான பல்கலைக் கழகமாக அமைக்கப்படவில்லை என்றுதான் நான் எண்ணுகிறேன். உலகத் தமிழ் மாநாட்டில் 'பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தமிழறிஞர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று இந்தப் பல்கலைக் கழகத்தை அமைக்க அரசு முன்வந்தது என்று கல்வியமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இதன் அடிப்படை நோக்கமே இந்தப் பல்கலைக் கழகம் உலகம் பூராவும் வாழ்கின்ற தமிழர்கள் எந்த நாட்டிலே வாழ்ந்தாலும், எந்தப் பகுதியிலே வாழ்ந்தாலும் அவர்கள் அத்தனை பேர்களுக்கும் சொந்தமானதுதான் இந்தப் பல்கலைக் கழகம் என்ற உணர்வோடு இதை அணுக வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உலகத்தின் சிறந்த மொழிகளுள் ஒன்றாகத் திகழுகின்ற தமிழை உலக மொழியாக மாற்றுவதற்கு அடித்தளம் அமைக்கப்பட்டிருக்கிறது இந்தப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டதன் மூலமாக என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 'எ குட் ஸ்டார்ட்' என்று ஆங்கிலத்திலே சொல்வார்களே, அதைப் போன்று ஒரு நல்ல ஆரம்பத்துடன் இப்பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டிருக்கிறது. ஒரு தகுதிவாய்ந்த தமிழ் அறிஞரைத் துணைவேந்தராக அரசு நியமித்து இருப்பதை உலகம் பூராவும் உள்ள தமிழர்கள் ஏற்றுப் பாராட்டுகிறார்கள் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

''இதனை இதனால் இவன்முடிக்கும் என்று ஆய்ந்து
அதனை அவன்கண் விடல்.''

என்று நம்முடைய வள்ளுவப் பெருந்தகை சொன்னார்கள். அதைப்போல இந்தப் பல்கலைக் கழகத்திற்கு யார் துணைவேந்தராக நியமிக்கப்பட்டால் சாலப் பொருத்தமாக இருக்கும் என்பதை ஆராய்ந்து டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம் அவர்களை வெர்ல்ட் வைட் ரெப்புடேஷன் உள்ள தமிழ் ஆராய்ச்சியறிஞரை, விஞ்ஞான பூர்வமாக ஆராய்ச்சியை அணுகக் கூடிய சிந்தனை படைத்த ஒருவரை நியமித்திருப்பதன் மூலம் ஒரு நல்ல தொடக்கத்தைச் செய்திருக்கிறார்கள்.

''அட்வான்ஸ்டு ரிசர்ச் சென்டர் ஃபார் தமிழ் ஸ்டடீஸ்'' வேண்டும் என்ற கோரிக்கை நீண்டநாளாக இருந்து வருகிறது. இந்தப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டதன் மூலம் அது நிறைவேறியிருக்கிறது. உயர் ஆராய்ச்சி நிலையம் என்பது இந்தியாவிலே பல்வேறு மொழிகளுக்கு இருந்தாலும் கூட நம்முடைய தமிழ் மொழிக்காக இல்லாத குறை நீண்ட நாட்களாக இருந்தது, இப்போது அது நிவர்த்தியாகி இருக்கிறது. தமிழ் மொழி, பண்பாடு முதலியவற்றை ஆராய்ச்சி செய்யக் கூடிய உயர் ஆராய்ச்சி மன்றமாக இப்போது இந்தப் பல்கலைக் கழகம் அமையும் என்று அரசு அறிவித்து இருப்பதும் மகிழ்ச்சியை அளிக்கிறது.



1982 பிப்ரவரி 17] [திரு. ப. நெடுமாறன்]

இந்தியாவிலேயிருந்தும் வெளிநாடுகளிலேயிருந்தும் தமிழ் கற்க விழைவோர்க்கு பயிற்சி அளிப்பது என்பது இதன் நோக்கங்களுள் ஒன்று, என்று விதிமுறைகளிலே சொல்லப்பட்டிருக்கிறது. இது ஒரு நல்ல அறிகுறி. நம்முடைய தமிழகத்திலே வாழக் கூடிய மாணவர்கள் மட்டுமல்ல, இந்தியாவின் பிற மாநிலங்களில் வாழுகின்ற தமிழர்களுடைய குழந்தைகளும் இலங்கை, மலேசியா, பிஜித் தீவு, மொரீஷியஸ் போன்ற 13-க்கும் மேற்பட்ட வெளிநாடுகளிலே தமிழர்கள் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்களே, அந்த நாடுகளில் வாழுகின்ற தமிழர்களின் குழந்தைகளின் நிலையையும் இன்றைக்கு எப்படி இருக்கின்றது என்பதைப் பார்க்க வேண்டும். இலங்கை, மலேசியாவில் பெருவாரியாகத் தமிழர்கள் வாழும் பகுதிகள் இருக்கின்றன. ஆனால் அங்கே உள்ள மாணவர்கள் முழுவதும் தமிழ் மொழியில் கற்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது, பிஜி, மொரீஷியஸ் போன்ற தீவுகளிலே வாழும் தமிழர்கள் நம் மொழியை மறந்து, நம் பண்பாட்டை மறந்து விடுகின்ற அளவிற்கு அவர்களுடைய குழந்தைகளைப் பிரெஞ்சு மொழியிலேயோ அல்லது ஆங்கில மொழியிலேயோ படிக்க வைக்கக் கூடிய அளவிற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இங்கிருந்து மொழி அறிஞர்களை அனுப்பி வைத்து, அவர்களுக்குத் தமிழ் கற்றுக் கொடுப்பதற்கான வழிவகைகளை இந்தப் பல்கலைக் கழகம் செய்யும் என்பது இந்தப் பிரிவின் மூலம் தெரிகிறது. அதை நான் பாராட்டுகிறேன்.

(நண்பகல் 12–00)

இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களில் நிறையத் தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அண்டை மாநிலமான கர்நாடகத்திலேயிருந்து நான்கு நாட்களுக்கு முன்பு வந்திருக்கின்ற செய்தி நமக்குக் கவலையைத் தருகிறது. கன்னட மொழியிலேதான் எல்லாப் பாடங்களும் சொல்லிக்கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. நமக்கு அதிலே ஆட்சேபணை இல்லை. ஆனால் அங்கே வாழுகின்ற தமிழர்களின் குழந்தைகள் தமிழை இரண்டாம் மொழியாக எடுத்துப் படிப்பதற்குக்கூட அனுமதி அளிக்கக் கூடாது என்ற போராட்டம் உருவாகியுள்ளது. தமிழகத்திலே வாழும் சிறுபான்மையோர் கன்னட மொழியிலே, தெலுங்கு மொழியிலே படிப்பதற்கு எங்கெங்கு வசதி செய்து கொடுக்கப்பட முடியுமோ அவற்றைச் செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அப்படிப்பட்ட உரிமை மற்ற மாநிலங்களில் நமக்கு அளிக்கப்படக் கூடாது என்ற இயக்கங்கள் வலுத்திருக்கின்ற வேளையிலே நம் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் மூலமாக அவர்களுக்கு அந்த வாய்ப்பை வழங்கக் கூடிய சூழ்நிலை இருப்பது பாராட்டுதற்குரியது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ப. நெடுமாறன்] 1982 பிப்ரவரி 17]

தமிழ்நாட்டிலும், தமிழர்கள் வாழ்ந்து வரும் ஏனைய நாடுகளிலும் தமிழர்கள் பயன்படுத்தும் தமிழ்ச் சொற்கள், சொற்றொடர்கள், வழக்காற்றிலுள்ள சொற்கள், தொழில்துறை வேளாண்மைத் துறைகளுக்கேயுரிய சொற்கள் ஆகியவற்றைத் தொகுத்து வெளியிடல் என்பதும் சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே இன்னும் சிலவற்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலே தமிழ் ஆட்சி மொழியாக இருக்கிறது. இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதியில் தமிழ் ஆட்சிமொழியாக இருக்கிறது; மலேசியாவில் தமிழ் ஆட்சி மொழியாக இருக்கிறது. தமிழர்கள் இலங்கை, மலேசியா போன்ற நாடுகளில் அமைச்சர்களாக இருக்கிறார்கள். அங்கேயும் ஆட்சிச் சொற்கள் கலைச் சொற்கள், விஞ்ஞானச் சொற்கள் முதலியவை அங்கேயுள்ள தமிழ் அறிஞர்களால் உருவாக்கப்பட்டு வருகின்றன இங்கேயும் நாம் அவற்றை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். ஆனால் ஒரே ஆங்கிலச் சொல்லுக்கு—அது விஞ்ஞானச் சொல்லாக இருந்தாலும் கலை சொல்லாக இருந்தாலும், அவர்கள் ஒரு தமிழ்ச் சொல்லை உபயோகப்படுத்துகிறார்கள்; நாம் மற்றொரு தமிழ்ச் சொல்லை உபயோகப்படுத்துகிறோம். இந்த வேறுபாடு என்பது பின்னால் பல சிக்கல்களுக்கும் பல பிரச்சனைகளுக்கும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, தமிழ் எங்கெங்கே ஆட்சிமொழியாக பயிற்சி மொழியாக இருக்கிறதோ அங்கேயெல்லாம் ஒரே மாதிரியான சொற்கள் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் எதிர்காலத்தில் மொழி வளர்ச்சிக்கு எந்தக் குந்தகமும் இல்லாமல் இருந்து, மொழி வளரும். அப்பொழுதுதான் நாம் வெளிநாட்டுப் பாடப் புத்தகங்களை இந்த நாட்டில் சொல்லிக் கொடுக்க முடியும்; வெளிநாட்டில் இருக்கின்ற குழந்தைகளுக்கு நம் நாட்டில் வெளியிடப்படும் பாடங்களைச் சொல்லிக் கொடுக்க முடியும். அப்படியில்லாமல் வித்தியாசமான சொற்கள் இருந்தால், வேறுபாடான புத்தகங்கள் வந்து, அதன் விளைவாகப் பின்னால் குழப்பங்கள் அதிகரிக்கும். ஆகவே, இந்தச் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, இந்தச் சொற்களைத் தொகுக்கும்பொழுது மற்ற நாடுகளில் வாழுகின்ற தமிழ் அறிஞர்களையும் இந்தக் குழுக்களிலே சேர்த்துக் கொண்டு இந்தச் சொற்களைத் தொகுக்க வேண்டும் என்று நான் இங்கே வற்புறுத்த விரும்புகிறேன்.

இன்னொரு இடத்திலே 4—வது பிரிவிலே 8—வது உட்பிரிவிலே சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால், ''எதிர்கால அறிவியல் வளர்ச்சிக் கண்ணோட்டத்தில் பண்டைக் காலம் குறித்து ஆராய்ச்சி செய்ய வகை செய்தல்'' என்பது. இது சற்றுத் தெளிவில்லாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் தங்களுடைய பதிலுரையில் இதற்கான தெளிவினை அளிப்பார்கள் என்று நம்புகிறேன்.



[1982 பிப்ரவரி 17 [திரு. ப. நெடுமாறன்]

இந்தப் பல்கலைக் கழகத்தின் ஆலோசனைக் குழு, ஆட்சிக் குழு ஆகியவற்றில் யார் யார் அங்கம் வகிப்பார்கள் என்பது பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பல்கலைக் கழகம் தமிழ்நாட்டிலே இருப்பவர்களுக்கு மட்டுமே அல்ல; உலகம் பூராவிலும் இருக்கின்ற தமிழர்களுக்காக அவர்கள் எந்த நாட்டிலே வாழ்ந்தாலும் அவர்களுக்கும் உரிய பல்கலைக்கழகமாக இது இருக்க வேண்டும்.

அந்த வகையிலே வெளிநாட்டுத் தமிழ் அறிஞர்களுக்கும் இந்தக் குழுக்களிலே இடம் கொடுப்பது சிறப்பாக இருக்கும் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். வெளிநாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ்த் துறைகள் இருக்கின்றன. மற்றும் இலங்கையிலே யாழ்ப் பல்கலைக்கழகம் இருக்கிறது. மலேசியாவிலே பல்கலைக்கழகம் இருக்கிறது, அங்கே எல்லாம் தமிழ்த் துறைகள் இருக்கின்றன. அவர்களுக்கும் நமக்கும் தொடர்புகள் இருக்க வேண்டும். அந்த வகையிலே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் வித்தியானந்தன் அவர்கள் எனக்கு எழுதி இருக்கிற கடிதத்திலிருந்து சில பகுதிகளை அமைச்சர் அவர்களின் கவனத்திற்காக நான் கொண்டு வரவிரும்புகிறேன். 'இப்பொழுது இலங்கைப் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு, இங்குள்ள பல்கலைக் கழகம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு துறையில் பிறநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றுடன் நிறுவன நிலைப்படி இணைப்பினை ஏற்படுத்துவதை ஊக்குவிக்கின்றது' என்று எழுதியிருக்கிறார். ஆகவே, அவர்கள் தஞ்சைப் பல்கலைக்கழகத்துடன் உறவு வைத்துக் கொள்ள விரும்புகிறார்கள். அதையும் சொல்லியிருக்கிறார். 'எனவே, இச்செயல் திட்டத்தின் கீழ் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கும் எமது பல்கலைக் கழகத்தின் தமிழ் ஆய்வுகளுக்கும் நிறுவன நிலைப்படி இணைப்பினை ஏற்படுத்தலாம். அதன் வழியாக ஆராய்ச்சியிடம் வழங்கல், ஆய்வுப்புல் ஆற்றல் ஆகியவற்றைப் பரிமாற்றம் செய்யலாம். அத்தகைய பிணைப்பு எமது ஆராய்ச்சியாளர்கள் அங்கு வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தும்.'' என்று அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதையும் அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொண்டு இந்த இணைப்புகளை ஏற்படுத்துவதற்கும் உதவி செய்யவேண்டும்.

பிறநாட்டுத் தமிழ் அறிஞர்களையும் இந்த ஆலோசனைக் குழுவிலும், ஆட்சிக் குழுவிலும் சேர்க்க வேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

வெளி நாடுகளிலுள்ள சுவடிகள், இந்தியாவிலுள்ள பழஞ் சுவடிகளை எல்லாம், இந்தப் பல்கலைக் கழகம் பேணிப் பாதுகாக்கும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 2,000-க்கு மேற்பட்ட சுவடிகள், ஐரோப்பிய நாடுகளிலுள்ள பல்வேறு நகரங்களில் உள்ள மியூசியங்களிலே இருக்கின்றன என்று

[திரு. ப. நெடுமாறன்] [1982 பிப்ரவரி 17

உலகத் தமிழ் மாநாட்டிலே தெரிவித்தார்கள். ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள், போர்ச்சுக்கீசியர்கள், டச்சுக்காரர்கள் போன்ற பலர் வந்து இந்த நாட்டிலே பல்வேறு பகுதிகளிலே ஆட்சி நடத்தியிருக்கிறார்கள். அவர்கள் இங்கிருந்து ஓலைச் சுவடிகளை நிறைய எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அந்த ஓலைச் சுவடிகளிலே என்ன எழுதப் பட்டிருக்கின்றன எதைப்பற்றி எழுதப்பட்டிருக்கின்ற என்பதைப் பற்றி தெளிவான ஆராய்ச்சிகள் அந்த நாடுகளிலே நடைபெற வில்லை. ஓலைச்சுவடிகளின் ஆயுட்காலம் என்பது 300, 400 வருஷங்கள்தான் இருக்கும். அதற்குப் பின்னால், அவை களெல்லாம் மக்கி அழிந்து விடக்கூடிய அபாயம் இருக்கிறது. ஆகவே, அந்த ஓலைச் சுவடிகளை எல்லாம் உடனே பிரதி எடுப் பதற்கு அல்லது 'போட்டோஸ்டேட் காப்பி' எடுப்பதற்கு இந்தப் பல்கலைக்கழகம் மூலம் சகல ஏற்பாடுகளும் செய்வதற்கு வழிவகுக்க வேண்டும். அதற்கு அரசு உதவ வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப் போலவே எழுத்துச் சீர்திருத்தத்தைப் பற்றியும் இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. எழுத்துச் சீர்திருத்தம் என்பது ஏதோ தமிழ்நாட்டிலே, தமிழ் மொழியைச் சீர்திருத்துவதாக மட்டும் இருக்கக் கூடாது. அண்மையிலே, இலங்கைக்கு நான் சென்ற பொழுது யாழ்ப் பல்கலைக் கழக ஆராய்ச்சி மாணவர் கள் என்னிடம் ஒரு கேள்வியைக் கேட்டார்கள். எழுத்துச் சீர்திருத்தம் என்பதை நீங்கள் செய்திருக்கிறீர்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். ஏதோ தமிழ்மொழி உங்களுக்கு மட்டுமே சொந்தமான மொழி போல நினைத்துக் கொண்டு, எங்களைக் கலந்து ஆலோசிக்காமல், நீங்கள் எழுத்துச் சீர் திருத்தத்தைச் செய்திருக்கிறீர்கள். தயவுசெய்து தமிழர்களாக வாழ்கின்ற எங்களையும் ஆலோசனைக் குழுக்களிலே சேர்த்துக் கொண்டு, எழுத்துச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று அவர்கள் தெரிவித்தார்கள். அதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வைக்க விரும்புகிறேன். ஏனென்றால், எழுத்துச் சீர்திருத்தம் என்பது எத்தனையோ தலைமுறைக்கும், தமிழர் களின் எதிர்காலத்தைப் பாதிக்கக் கூடிய தன்மை உடையதாக இருக்கப்போகிறது. ஆகவே, அப்பேர்ப்பட்ட முக்கியமான காரியத்தில் உலகம் பூராவும் வாழ்கின்ற தமிழ் அறிஞர்களை நாம் கலந்து கொண்டு இதைச் செய்ய வேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

[பிற்பகல் 12.10]

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். பிரிவு 4 (16)லே பல்கலைக்கழக நூலகங்கள், ஆராய்ச்சி நிலையங்கள், ஆராய்ச்சிக் குரிய அருங்காட்சியகங்கள், நூல் வெளியீட்டுக் கழகங்கள் ஆகிய வற்றை நிறுவி பேணி வருதல், மேலும் பிரிவு (4) 17 லே குறிப் பிடப்பட்டுள்ளபடி ஆராய்ச்சிக்கான பதவிகளை ஏற்படுத்தி, அப்பதவிகளுக்கு நியமனம் செய்தல் என்றும் சொல்லப்பட்டிருக் கின்றது; இது குறித்து சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.



1982 பிப்ரவரி 12] [திரு. ப. நெடுமாறன்]

பல்கலைக்கழக நூலகங்கள், ஆராய்ச்சி நிலையங்கள், அருங் காட்சியகங்கள் போன்றவைகளை அமைப்பது வரவேற்கத்தக்க தாகும். அந்த வகையிலே காலம் சென்ற தமிழறிஞர்களான உ. வே. சாமிநாத ஐயர், ச. சே. பாரதியார், வையாபுரிப்பிள்ளை, சி. தாமோதரன் பிள்ளை, மறைமலை அடிகள் போன்ற பழம் பெரும் தமிழ் அறிஞர்கள் நிறைய சுவடிகளைச் சேர்த்து வைத் திருக்கிறார்கள். ஏராளமான ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். இப்போது அவைகள் எல்லாம் சில *தனிப்பட்டவர்கள் கையிலே இருக்கின்றன. அவற்றை எல்லாம் அரசே வாங்கித் தமிழ்ப் பல்கலைக் கழகத் தினிடம் ஒப்படைக்க வேண்டும். தனிப்பட்டவர்களிடத்திலே இருப்பதாலே ஆராய்ச்சி அறிஞர்கள் தாராளமாகச் சென்று பார்வையிட்டு, ஆராய்ச்சி செய்வதற்குப் போதுமான வழியில்லை; ஆகவே இதுபோன்ற பழம்பெரும் அறிஞர்கள் வைத்திருந்த சுவடிகளையும் மற்ற ஆராய்ச்சிக்குறிப்புகளையும் அனைத்தையும் அரசாங்கமே எடுத்துக் கொண்டு, அவைகளைத் தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று வற்புறுத்த விரும்பு கிறேன்.

அடுத்து ஆராய்ச்சிக்கான பதவிகள் ஏற்படுத்தி நியமனம் செய்வதைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. உலகம் பூராவிலும் வாழ்கின்ற தமிழர்கள் எல்லோருக்கும் இதிலே வாய்ப்பு கொடுக்க வேண்டும். இலங்கை, மலேசியா, மொரீசியஸ், பிஜித் தீவுகள் போன்ற நாடுகளில் வாழ்கின்ற தமிழ் மாணவர்களுக்கு ஓரளவு இடம் ஒதுக்கிக் கொடுக்கவேண்டும் என்பதை அமைச்சர் அவர்கள் தன்னுடைய கவனத்திலே வைத்துக் கொள்வார் என்று நம்புகிறேன். அதேபோல இன்றைக்கு Repetition of research அதிகமாக இருக்கின்றது. அண்ணாமலைப் பல்கலைக் கழகமாக இருந்தாலும், மதுரைப் பல்கலைக் கழகமாக இருந்தாலும், சென்னைப் பல்கலைக்கழகமாக இருந்தாலும் டாக்டர் பட்டத்திற்காகத் தமிழ் ஆராய்ச்சி ஏராளமான பேர்கள் பங்கு பெற்று நடந்து கொண்டு இருக்கின்றது. ஒரே பொருள் பற்றி இருவர் அல்லது மூவர் அதற்கு மேலும் கூட ஆராய்ச்சி செய்கிறார்கள். அதனாலே அரசாங்கத்தின் பணம் மட்டுமல்ல, தனிப்பட்டவர்களுடைய காலமும் விரயம் ஆகிறது. அந்த ஆராய்ச்சிகளை எல்லாம் ஒருமுகப்படுத்தும், பணியினைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திடம் ஒப்படைக்க வேண்டும். அவர்களுடைய ஆலோசனையின் பேரிலே ஆராய்ச்சி நடைபெற வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களிலே திருக்குறள் ஆராய்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தனித்தனியே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதிலே ரெப்படிஷன் இருக்கின்றது என்று செய்திகள் வந்திருக்கின்றன. ஆகவே இந்த மூன்றையும் ஒருமுகப் படுத்தி அதைத் தமிழ்ப்பல்கலைக் கழகத்திடம் ஒப்படைக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் அரசாங்கத்திற்குப் பண விரயம் குறையும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுபோலவே பழம் சுவடிகளை ஆராய்கிற அல்லது பேணிப் பாதுகாக்கின்ற வேலையை இந்தத் தமிழ்ப் பல்கலைக் கழகம் செய்யும் என்று இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதே வேளையில் அரசாங்கத்தின் சார்பில் தமிழ்ப் பண்பாட்டு மையம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய வேலைதான் இதுவும். அப்படியானால் சுவடிகளைப் பாதுகாக்கின்ற ஒரே வேலையை இந்த இரண்டு இடங்களிலும் எப்படி நடத்த முடியும்? அதனால் ரெப்படிஷன் ஆகும். இந்தச் சுவடிகளைப் பராமரிக்கின்ற வேலையைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திடம் ஒப்படைப்பது சிறப்பாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இறுதியாக, பல்கலைக் கழக மானியக் குழுவின் உதவி இந்தத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குக் கிடைப்பதற்கான முயற்சியை நம்முடைய அரசு செய்யவேண்டும். அதைப் போலவே, யுனஸ்கோவில் இருந்து நிறைய உதவி கொடுக்கப்படுகிறது. மொழி ஆராய்ச்சி, அகழ்வாராய்ச்சிக்கு யுனெஸ்கோ நிறுவனம் உதவி செய்கிறார்கள். அந்த உதவி தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குக் கிடைக்க மத்திய அரசின் மூலமாக முயற்சி செய்ய வேண்டும். ஏனென்றால் இது ஒரு 'யுனிக்' யுனிவர்சிட்டி. தனித் தன்மை வாய்ந்த பல்கலைக் கழகமாக இந்தியாவிலேயே தமிழ் நாட்டில் தான் அமைத்து இருக்கிறார்கள். ஆகவே இதற்கு உதவி செய்யவேண்டிய பொறுப்பு மத்திய அரசாங்கத்திற்கும் உண்டு. அதன் மூலமாக நாம் யுனஸ்கோவில் இருந்து அதற்கான உதவியைப் பெறவேண்டும்.

எகிப்தில் நடக்கும் அகழ்வாராய்ச்சிக்கு யுனஸ்கோ நிறுவனம் முழுமையான உதவி அளிக்கிறது. அதைப்போலவே தமிழகத்திலே நடைபெறுகின்ற அகழ்வாராய்ச்சிக்கான உதவிகளையும் யுனஸ்கோ அளிப்பதற்கான முயற்சிகளை அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று வற்புறுத்திச் சொல்லி, இந்தப் பல்கலைக் கழகம் அமைய இருப்பதை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன். தமிழ்ப் பல்கலைக் கழகம் உலகம் பூராவிலும் இருக்கக்கூடிய தமிழர்களுக்குச் சொந்தமான பல்கலைக் கழகமாக விளங்கவேண்டும்; உலகப் பொது மொழிகளில் ஒன்றாகத் தமிழ் ஆவதற்கு இந்தப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டிருப்பதன் மூலம் அடிப்படை அமைக்கப்பட்டு இருக்கிறது என்று சுட்டிக்காட்டி, இதை வரவேற்று என்னுடைய உரையை முடிக்கிறேன்.

*திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சென்னை மாகாணம் என்பது தமிழ்நாடு என்று பெயர் மாற்றப்பட்ட பிறகு இன்றையதினம் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நாளாகும். ஏனென்றால் பல வருஷங்களாகத் தமிழ் மொழிக்குப் பல்கலைக் கழகம் இல்லை என்ற குறையைப் போக்கி, அன்னை மொழியாம் தமிழ் மொழிக்கு நினைவாலயம் எடுப்பது





போல், புரட்சித் தலைவர் அரசின் கீழ் பணிபுரிகின்ற மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து இருப்பதற்காக நான் நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டு இருக்கிறேன். அவர் கல்வி அமைச்சர் மாத்திரம் அல்ல, வந்து, நடந்து கொண்டு இருக்கக்கூடிய தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தரும் கூட, அதற்காக அவருக்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் தமிழில் கோவிலில் அர்ச்சனை செய்யவேண்டும் என்று சொன்னால் அதற்கு கோர்ட் தடை விதிக்கிறது. தமிழ் நாட்டுத் திரையரங்குகளில் இத்தனை வாரங்கள் தமிழ்ப் படம் திரையிடப்படவேண்டும் என்று சொன்னால் அதற்குக் கோர்ட் தடைவிதிக்கிறது. ஹைகோர்ட்டில் தமிழ்மொழியில் நடவடிக்கைகள் இருக்கவேண்டும் என்று சொன்னால் அதற்கு கோர்ட் தடை விதிக்கிறது. தமிழ்மொழி கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே தோன்றிய மூத்த மொழி என்று நாம் சொல்கிறோம். பிரமிட் கோபுரம் எழுவதற்கு முன்பு, ரோம் நாட்டின் சாய்ந்த கோபுரங்கள் தோன்றுவதற்கு முன்பு இலக்கியம், இலக்கணம் பெற்ற மொழி தமிழ் மொழி என்று சொல்கிறோம். ஆனால் இந்தத் தமிழ் நாட்டில், பல்வேறு விஞ்ஞானப் பிரிவுகளில் தொழில் கல்வி நிலையங்களில் தமிழ் மொழி பயிற்று மொழியாக இல்லாமல் இருக்கிறது. சின்ன நாடான ஜப்பானிலும், இஸ்ரேல் நாட்டிலும், பெரிய நாடான சீனாவிலும், பக்கத்திலே இருக்கின்ற இலங்கையிலும் பல்வேறு தொழில் கல்விகள், மருத்துவம் போன்ற கல்விகள், அந்தந்த நாட்டின் தாய் மொழியில் கற்பிக்கப் படுகின்றன. பிரஞ்சு நாட்டில், பிரெஞ்சு மொழியில்தான் கற்பிக்கப்படுகின்றன. தமிழ் நாட்டில் அப்படிப்பட்ட நிலைமை இல்லை என்கிற குறையைப் போக்குகின்ற வகையில், பல்வேறு தொழில் கல்லூரிகளிலே, தொழில் கல்வியைத் தாய் மொழியாம் தமிழ் மொழியில் நடத்துவதற்கு உதவியாக இருக்கவேண்டும் என்பதற்காகப், பல்வேறு விஞ்ஞானப் படிப்புகளையெல்லாம் தமிழில் இயற்றவேண்டும் என்பதற்காக இப்படி ஒரு பல்கலைக் கழகம் கொண்டு வந்து இருப்பதைப் பாராட்டுகிறேன்.

அதுவும் எந்த நாளில் அந்தப் பல்கலைக்கழகம் கொண்டு வரப்படுகிறது என்றால் பேறிஞ்ர் அண்ணா அவர்கள் பிறந்த அந்த நாளில் அந்தப் பல்கலைக் கழகம் துவக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். சர். சி. பி. இராமசாமி ஐயர், ரைட் ஆனரபிள் சீனிவாச சாஸ்திரி, வெள்ளி நாக்குப்படைத்தவர் என்று சொல்வார்களே—அந்த ரைட் ஆனரபிள் சீனிவாச சாஸ்திரி, சர். ஏ. ராமசாமி முதலியார், சர். ஆர். சண்முகம் செட்டியார் போன்றவர்கள் ஆங்கிலத்தில் பேசினால்தான் நல்லது, அதற்குத்தான் மதிப்பு இருக்கிறது என்று அன்னிய நாட்டிலே மட்டுமல்ல, தமிழ் நாட்டிலே கூட ஆங்கிலத்தில் பேசி வந்த நேரத்தில், அந்த முறையை மாற்றி பேரறிஞ்ர் அண்ணா அவர்கள் தான் தமிழிலும் அழகாகப் பேசலாம், வலியுறுத்திப் பேசலாம், பட்டமளிப்புவிழா மன்றங்களில் பேசலாம் என்று தமிழ்

நாட்டில் மட்டுமல்ல, அவர் சென்ற பல்வேறு இடங்களில் அதனைச் செய்து காட்டியிருக்கிறார்கள். இதை நான் குறிப்பிடுகிறபோது தமிழ் மொழியில் மாத்திரம் அவர் பேசினார் என்று யாரும் கருதிவிடக் கூடாது. ஆங்கிலத்தில் கூட, அமெரிக்க நாட்டு இங்கர்சால் போல் அவர்கள் சொற்பொழிவு ஆற்றினார்கள், எழுதினார்கள். அதுமட்டுமல்ல, தமிழ் மொழியை நாடகம் எழுதவும் உபயோகிக்கலாம், தமிழ் மொழியைத் திரைப்படங்களிலும் பயன்படுத்தலாம் என்பதைச் செய்து காட்டினார்கள். அந்த வகையில், பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த அந்த நாளில் தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டு, அதற்கான சட்டமுன்வடிவு இங்கே கொண்டு வருவதை நான் பாராட்டி அதற்காக இந்த அரசுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்த அருமையான மசோதாவை நிபந்தனையின்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் வரவேற்பார்கள் என்று நான் கருதினேன். ஆனால் நான் எதிர்பார்த்ததற்கு மாறாக, அவர்கள் நல்ல எதிர்க்கட்சியைப் போல செயல்படாமல், எதிர்க்கட்சியாக இருக்கிறோம், எதிர்க்க வேண்டும் என்ற அடிப்படையில் ஏதோ இந்தச் சட்டத்திலே குறை இருப்பதாகச் சொன்னார்கள். தமிழ்ப்பல்கலைக் கழகத்தை வரவேற்கிறேன், ஆனால் இந்தச் சட்டத்தைக் கண்டிக்கிறேன் என்று சொன்னார்கள். சட்டம் இல்லாமல் ஒரு பல்கலைக் கழகம் விளங்க முடியாது என்பதை அவர்கள் மறந்து விட்டார்கள். அது மாத்திரம் அல்ல, இந்தப் பல்கலைக் கழகச் சட்டம் வருகிறபோது, இரண்டு பருவங்களுக்கு மேல் மொத்தம் 6 ஆண்டுகளுக்கு மேல் செனட் அல்லது சின்டிகேட்டிலே உறுப்பினர்களாக யாரும் இருக்கக்கூடாது என்று கொண்டு வந்து இருப்பதை அவர்கள் பாராட்டாமல், இந்த நல்ல நோக்கத்தை வரவேற்காமல், அமைச்சர்களும், முதலமைச்சரும் கூட இரண்டு பருவங்களுக்கு மேல் இல்லாமல் செய்வீர்களா, பொதுச் செயலாளர் போன்ற பதவியில் கூட இரண்டு பருவங்களுக்கு மேல் இல்லாமல் செய்வீர்களா என்று கேட்டார்கள்.

(பிற்பகல் 12.20)

மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் தமிழ் நாட்டில் அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய காலம் தொட்டு பிறகும் இருந்தார்கள் என்று கருதுகிறேன். அவர்கள் வெளிநாட்டுக்குச் சென்றிருந்தாலும் விரைவிலே வந்திருப்பார்கள். நான் அவருக்கு நினைவு படுத்த விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள்தான் வகித்து வந்த பொதுச் செயலாளர் பதவியிலிருந்து விலகி, தனக்கு அடுத்தபடியாக இருந்த டாக்டர் நாவலர் அவர்களிடம் "தம்பி! வா! தலைமை தாங்கு, நீ இடுகிற கட்டளைப்படி நான் நடக்கிறேன்" என்று சொல்லி அந்தப் பொதுச் செயலாளர் பதவியைத்





தந்தார்கள். அதைப்போல புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் தன்னுடைய கட்சியின் வலிமை மிக்கப் பதவியான பொதுச் செயலாளர் பதவியை டாக்டர் நாவலர் அவர்களுக்கு தானே மனமுவந்து தந்தார்கள். அதுமட்டுமல்ல. அதற்குப் பிறகு ப. உ. ச. அவர்களுக்குத் தந்தார்கள் அந்தப் பதவியை.

திரு. ஜே. எஸ். இராசு : சார் பாயின்ட் ஆஃப் கிளாரிபிஃகேஷன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான தகவலைச் சொல்கிறார்கள். ஒரு பெரிய ஜனநாயகக் கட்சியைப் பற்றித் தவறான தகவலைத் தருகிறார்கள். அதற்கு என்னுடைய விளக்கத்தைச் சொல்லியாக வேண்டும்.

திரு. வி. வி. சுவாமிநாதன் : am not yielding. The hon. Member can rake up later on.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இல. பலராமன்) : உங்கள் கட்சியின் சார்பில் பேசும்போது அதற்குப் பதில் சொல்லலாம். இருந்தாலும் நீங்கள் வற்புறுத்துவதால் அவர் பேசி முடிந்த பிறகு நீங்கள் விளக்கம் சொல்வதற்கு வாய்ப்புத் தருகிறேன்.

திரு. வி. வி. சுவாமிநாதன் : உங்கள் கட்சியைச் சர்ந்த மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் சொன்னதால் நான் சொல்ல வேண்டியிருக்கிறது. நான் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. தவறு இருந்தால் நீங்கள் பேசும்போது பதில் சொல்லிக் கொள்ளுங்கள்.

அது மட்டுமல்ல. மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைவர் பதவியே கட்சிக்குக் கூடாது என்று சொல்லி, உலகத்திலே உள்ள சமதர்ம நாடுகளில் உள்ளதைப்போல கட்சி அமைப்புகளில் பொதுச் செயலாளர் பதவியை மட்டுமே வைத்திருந்து தலைவர் பதவி வகிக்க வேண்டுமென்றால் தந்தை பெரியார்தான் அந்தப் பதவியை வகிக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் அந்தப் பொதுச் செயலாளர் பதவிக்கு டாக்டர் நாவலர் அவர்கள் போட்டியிட்டார்கள் என்பதால் அந்தப் பதவியை அதிகாரம் இல்லாத பதவியாக்கியது எங்கள் தலைவர் அல்ல; அது உங்கள் தலைவர் தான் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

நான் கட்சி அரசியல் பற்றி அதற்குமேல் போக விரும்பவில்லை. அமைச்சர் பதவியும், முதலமைச்சர் பதவியும் வேண்டுமென்றால் பிரதமர் பதவியும் இரண்டு பருவங்களுக்கு மேல் வரக்கூடாது என்பது ஒரு அதிசயமான சட்டம் அல்ல. அமெரிக்க நாட்டில் ஜனாதிபதியாக இருந்தவர் தொடர்ந்து ஒரு ஜன திபதியாக இரண்டு பருவங்களுக்குமேல் இருக்கக்கூடாது என்று சட்டம் இருக்கிறது. அப்படி ஒரு சட்டம் வேண்டுமானால் மாண்புமிகு ரகுமான்கான் கேட்க வேண்டிய இடம் இந்த மாமன்றமல்ல, பாராளுமன்றம். சட்டம் கொண்டு வர வேண்டியது இந்தியப் பேரரசு.

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1982 பிப்ரவரி 17

தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் தஞ்சை தரணியில், தஞ்சைத் தரணி என்று சொல்லும்போது சோழப் பேரரசினால் கட்டப் பட்ட பெருவுடையார் கோவில் என்று சொல்லப்படுகிற கட்டிடக் கலை சாஸ்திரத்திற்குப் பேர்போன உலகத்தின் கவனத்தை ஈர்த்த அந்த உன்னதமான கோபுரம் அங்கே இருப்பதால் இந்த தமிழ்ப் பல்கலைக் கழகத்தை அங்கே நிறுவியிருப்பது மிகவும் பொருத்த முடையதே ஆகும்.

அது மட்டுமல்ல. அங்கே சரஸ்வதி மகால் என்று சொல்லப் படுகிற அந்த இடத்தில் சரபோஜி மன்னரால் பாதுகாத்து வைக்கப்பட்ட பழைய சுவடிகள், பழம்பெரும் புத்தகங்கள் எல்லாம் இருக்கின்றன. அந்தத் தஞ்சை மாவட்டத்தில் இந்தத் தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன்.

சரஸ்வதி மகாலில் ஓலைச் சுவடிகள், பழைய புத்தகங்கள் எல்லாம் ஏராளமாக இருக்கின்றன. இந்தச் சட்டத்தில் இந்தப் பல்கலைக் கழகத்தின் பணி என்ன என்று வருகிற போது இயல், இசை, நாடகம், நாட்டியம், சிற்பம், ஓவியம் போன்றவைகள் பற்றிய குறிப்புகள் மட்டுமல்லாமல், கல்வெட்டு கள், சுவடிகள் போன்றவற்றில் இருக்கிற எழுத்துக்களை எல்லாம் எடுத்து நம் மொழியில் மாத்திரம் அல்லாமல் பிற மொழிகளிலும் மொழி பெயர்த்து, அதோடு பிற மொழிகளில் இருக்கிற இறவாப் புகழ் பெற்ற இலக்கியங்களை நம் மொழி யிலும் மொழிபெயர்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், அந்த சரஸ்வதி மகாலில் மருத்துவத்தைப் பற்றியும், வானசாஸ்திரத்தைப் பற்றியும், ஜோதிடத்தைப் பற்றியும் அருமையான குறிப்புகள் இருப்பதாக அறிகிறேன். நம்மால் சில உண்மைகளுக்குக் காரணம் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதற்காக அவைகள் பழமையானவை அல்லது பகுத்தறிவு இல்லாதவை என்று தள்ளிவிடாமல் அந்த சிறப்பான குறிப்புகள் அடங்கிய நூல்களை. குறிப்பாக மருத்துவம், வான சாஸ்திரம் போன்றவைகளை மொழி பெயர்த்து மக்களுக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வங்கக் கவி தாகூர் அவர்கள் எழுதிய கீதாஞ்சலியைக் கூட அவருடைய சகோதரர் அந்தக் காலத்தில் மேல்நாடுகளுக்குச் செல்கிற வாய்ப்பு இருந்ததால், லண்டன் மாநகரில் சில அறிஞர் களைக் கூட்டிவைத்து, அந்தக் கவிதைகளை ஆங்கிலத்தில் பாடிக் காட்டியதால்தான் அதற்கு உலகப் புகழ் பரிசு, நோபல் பரிசு கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அந்தத் தகுதியைப் பெற்றது கீதாஞ்சலி. பாவம் பாரதியார் வறுமையில் வாடினார். அந்தக் காலத்தில் தாகூரின் தமையனார் போல யாராவது தமிழ்நாட்டில் பாரதியாரின் இறவாப் புகழ்பெற்ற கவிதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, லண்டன் மாநகரில் பாரிசில், அமெரிக்காவில் பாடிக் காட்டியிருந்தால் நோபல் பரிசு தாகூருக்குக் கிடைப்பதற்கு முன்பு பாரதியாருக்குக் கிடைத்திருக்கும்.



1982 பிப்ரவரி 17] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

நான் எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால் தமிழ் மொழியில் இறவாத புகழுடைய இலக்கியங்களைப் பிற மொழியில் மொழி பெயர்க்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அதைப்போன்று வான சாஸ்திரம் பற்றியும் சொல்லி இருக் கிறார்கள். ஒவ்வொரு மாதமும் ஒரு நட்சத்திரம் பற்றிக் குறிப் பிடுகிறார்கள். மாசி மாதத்திலே மகம் நட்சத்திரமும், தை மாதத்திலே பூசம் நட்சத்திரமும், மார்கழி மாதத்திலே திருவாதிரை நட்சத்திரமும், கார்த்திகை மாதத்தில் கார்த்திகை பற்றிக் குறிப்பிடுகிறார்கள். இப்படி ஒவ்வொரு மாதத்திற்கும் ஒரு நட்சத்திரம் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். அன்றையதினம் இரவு 12 மணிக்கு ஒருவர் வானத்திலே பார்த்தால் ஒரு குறிப் பிட்ட நட்சத்திரம் சந்திரனுக்கு அருகிலே மிக நெருங்கி இருக்கும். அதை வைத்துத்தான் பல்வேறு கணிதங்களையும் ஆராய்ச்சி களையும் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

குறிப்பாக மாசி மாதத்தில் இரவு 12 மணிக்கு வானத்திலே இருக்கின்ற சந்திரன் பற்றி பாடுகின்ற அந்த வான சாஸ்திர நிபுணர் சொல்கிறார், 'மாசி மகமும் மாமதியும் தெற்கானால் நாடு செழிக்கும் நல்ல மழை பொழியும்' என்று. இதைப்போன்று வெள்ளி என்ற நட்சத்திரம் விடியற்காலையிலே கீழ்த் திக்கிலே எந்தப் பக்கம் இருக்கின்றது என்று பார்த்து வருகின்ற காலங் களில் மழை பெய்யுமா பெய்யாதா என்றெல்லாம் சொல் கிறார்கள். இவ்வளவு பெரிய சாஸ்திரங்களுக்குச் சொந்தக்கார ராக இருக்கின்ற நாம் அவற்றை எல்லாம் ஆங்கிலத்திலே மொழி பெயர்க்காமல் பெட்டிகளிலும், அலமாரிகளிலும் வைத்திருக்கின்ற நிலைமையினை மாற்றி அமைப்பதற்கு முன் வந்த இந்தத் தமிழக அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து கல்வெட்டு பற்றிச் சொல்கின்றபோது அண்மையிலே தென்னார்க்காடு மாவட்டத்திலே ஒரு சிற்றூரிலே ஒரு கல்வெட்டை எடுத்து இருக்கிறார்கள். அதிலே சத்தியசீலன் என்று வருகின்ற வார்த்தை சரித்திரத்திலே புத்தரைக் குறிக்குமா அல்லது வேறு யாரையாவது குறிக்குமா என்ற ஐயத்தைப் போக்குகின்ற வகையிலே அந்த சத்தியசீலன் என்ற வார்த்தை நம்முடைய பழம்பெரும் மன்னனைத்தான் குறிக்கும் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். இதுபோல் பல்வேறு சாஸ்திரங்கள் உண்மையைக் கண்டு பிடிப்ப தற்குத் தமிழ்ப் பல்கலைக் கழகம் பயன்படும் என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1982 பிப்ரவரி 17

காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ஒரு இன்ஜினியர் நான் மேல்நாடுகளிலே உள்ள கட்டிடக்கலையைச் சென்று பார்க்கப் போகிறேன் என்று சொன்னாராம். அப்போது பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் 'தமிழ்நாட்டிலே இருக்கின்ற ஆவுடையார் கோவிலைப் பார்த்திருக்கிறீர்களா? மதுரை திருமலைநாயக்கர் மஹாலைப் பார்த்திருக்கிறீர்களா? என்று கேட்டு 'முதலிலே இவற்றைச் சென்று பாருங்கள், அதற்குப் பிறகு வெளிநாட்டுக்குச் செல்லலாம்' என்று கூறியதாகக் கேள்விப்பட்டேன். இப்படி நம்முடைய அருமை, பெருமைகளை எல்லாம், இலக்கண இலக்கியங்களை எல்லாம் தனக்கு மாத்திரம் பயன்படாமல் பிறருக்கும் பயன்படவேண்டும் என்ற உன்னதமான கொள்கையில் தேவர்கள் சாப்பிடுகின்ற அமிர்தமாக இருந்தாலும் அதை தனியாக உண்ணாமல் பலருடன் சேர்ந்து சாப்பிடவேண்டும் என்ற உண்மையைக் கவனத்தில் கொண்டு பிறருக்கு நன்மை செய்ய முடியவில்லை என்றாலும் தீமையாவது செய்யாமல் இருக்க வேண்டும் என்ற உண்மையினையும் உலகுக்கு அளித்த தமிழ்க் கலாச்சாரத்தையும், தமிழ் பண்பாட்டையும் பேணிக் காக்க வேண்டும் என்ற வகையிலே தமிழ்ப் பல்கலைக் கழகத்தை தஞ்சைத் தரணியிலே பேரறிஞர் அண்ணா பிறந்த நாளிலே கொண்டு வந்த முதல்வர் அவர்களுக்கும் அவர் வழியிலே செயலாற்றி வருகின்ற கல்வி அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நேற்றையதினம் யாரும் எதிர்பாராத விதமாக, சிதம்பரத்திலே நாங்கள் கல்லூரி வேண்டும் என்று கேட்டு அது கிடைக்குமா கிடைக்காதா என்ற சந்தேகத்தில் த மாண்புமிகு இளையபெருமாள் அவர்கள் கிளப்பியபோது பிள்ளை வரம் கேட்டவருக்கு ஒரு பிள்ளை என்றல்லாமல் இரட்டைப் பிள்ளை கொடுத்தது போல் ஆண்களுக்கு ஒரு கல்லூரி, பெண்களுக்கு ஒரு கல்லூரி என்று இரண்டு கல்லூரிகளைத் தந்த புரட்சித் தலைவர் அவர்களையும், கல்வி அமைச்சர் அவர்களையும் பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு ஜே எஸ் இராசு: மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே மிகப்பெரிய ஜனநாயக வாதியாக விளங்கிய பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றியும் அவர் வழி நடக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினைப் பற்றியும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கின்ற ஜூனியர்கள் யாராவது பேசி இருந்தால் நான் அதைப் பற்றிக் கவலைப் பட்டிருக்க மாட்டேன். ஆனால் எனது மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய வி. வி. சுவாமிநாதன் அவர்கள் ஒரு தவறான தகவலை எனது கட்சியின் மீது சொல்கிறார். இதை விவாதத்திற்காக நான் இங்கே சொல்லவில்லை, அப்படி விவாதிக்கவும் நான் விரும்பவில்லை. 1956-ஆம் ஆண்டு திருச்சியிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டுக்குத்தான் நம்முடைய



1982 பிப்ரவரி 17] [திரு.ஜே.எஸ். இராசு]

நாவலர் அவர்கள் தலைமை ஏற்றார்கள். அவர் தலைமை ஏற்க வருகின்ற நேரத்திலே புகழ்ச்சிக்காகத்தான் 'தம்பி வா, தலைமை ஏற்க வா. உன் ஆணைக்கு அடிபணிந்து நடக்கிறோம்' என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள் ஆனால் எலக்ஷன் நடத்தாமல் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நாவலரை அண்ணா அவர்கள் பொதுச் செயலாளராக ஆக்கவில்லை. தேர்தலிலே ஏகமனதாக நாவலர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவசர சட்டத்தின் மூலமாக ஆட்சியையும் அட்ஹாக் கமிட்டியின் மூலமாகவே கட்சியையும் நடத்துபவர்களுக்கு இந்த உண்மை புரிய நியாயமில்லை.

[பிற்பகல் 12.30]

THIRU T. VENKATA REDDY: I am gratefull to this House for giving me this opportunity to speak on this Bill.

On behalf of the Congress Party we welcome this Bill. This Bill should have been introduced long back. Though late, this has been introduced now, We must thank the Government for bringing this Bill at this stage at least. It is an absolute necessity to have such an University in Tamil Nadu. We have been saying that even the translated version from English to Tamil of the Constitution is found to be defective in many respects,

Even in the field of Science, the technical words from English have not been properly translated in any other language, and more so in Technology and Science. Proper Tamil words are not there in Tamil language for such a translation. However, we are thankful to the Government and also to the Minister for Education for constituting a University for Tamil with a laudable object to facilitate and to regulate research in the fields of Culture, Music, and other literary works- more so in Astrology, Science, Engineering etc. This would only go to show how our Education Minister is interested in translating into Tamil finding out suitable words in Tamil language, more so in Science and Engineering Section. It is also noteworthy that while constituting a University for Tamil language, the University should be headed by those who are exports in Tamil language. I may also suggest that there should also be experts not only in Tamil language but also experts in other languages. more so in Englise. They should also be members of the Senate and Syndicate of the University so that the literature that is found in English could be translated in Tamil, This should be the motive behind this University. Otherwise, most of our youngsters who have to educate themselves in Technology and Science, will be deparived of suitable textbooks in those subjects; I am saying this because language is only a vehicle of thought. While giving importance to our mother language, we must not lose sighs of the importance of the other languages also, the

[Thiru T. Venkata Reddy] 1982 பிப்ரவரி 17

portance of technical books in other languages; In this connection, I may like to draw the attention of the Hon. Minister for Education to the importance of English language with respect to Science. Recently there was a Seminar held in Delhi. There the Hindu has also published the proceedings of the Seminar. Technocrats and Scientists have also participated in that Seminar. In that Seminar, they have summed up the importance of English language. I will also read the last paragraph of the summing up of that Seminar;

"Basic science are the foundation on which an effective engineering syllabus can be built. English being the medium for teaching and learning plays a pivotal role in technical education. Almost all the latest developments in the different areas of engineering practice are available only in English. Participants on the whole showed awareness of the significant position to be the teaching of English.".

Why I am submitting this at this juncture is, they have also said that English language has been playing a pivotal role in the day-to-day life not only of this country but also in all the spheres of life in the whole world. So, English has become No. 1 language in the whole world. Such being the case, the Education Minister and the Government should not lose sight of the importance of English language, must be developed so that the books in English language could be translated into Tamil properly through this University and also to facilitate our boys to compete well in the Competitive Examinations. We knew that our Tamil students fair very badly because of the non-availability of suitable textbooks in Science and Technology.

This University must play a prominent role to fill up that gap. Many of you will be wondering why a man who is speaking in English is supporting this Bill. Though I am not able to speak in Tamil fluently I love that language. I want that our boys must learn that language well and become good citizens of India. But at the same time English also must be learnt, so that they can become good citizens of not only Tamil but also of our country.

At this juncture I must also point out that there are minority language people like me speaking Telugu. There are also people speaking Urdu, Malayalam and Kannadar, here in Tamil Nadu. So I would request that protection should be given to such minority language people.



V211,31 N82

[1982 பிப்ரவரி 17]

(மாண்புமிகு பேரவைத் தலைவர்-தலைமை)

N83-2-2

I may also point out at this juncture that in our areas, Hosur and Danganikotta, most of the schools are run in Telugu medium. Even Elementary schools but also High Schools are having Telugu medium. But unfortunately text books are not available in those minority languages. The academic year has passed and we are at the fag end of the year. Still we have not got the text books in the minority language. Why I am submitting this is, while we are enthusiastic in introducing a Bill for Tamil University, our Education Minister must not also look down the minority language people in a different manner. They also form part of Tamil Nadu. They are also as good Tamilians as the Tamil speaking people are. Their interest must be safeguarded. I had already brought this matter to the notice of the Director of Minority Education 6 months back. But still the text books have not been supplied yet. Therefore, I request the Hon'ble Education Minister that while introducing this Bill, he must also see that the protection to the minority language people is accorded. There is also a G.O. to that effect.

Mr. SPEAKER: The Hon'ble Member is speaking on Tamil University Bill in English.

122226

Thiru T. VENKATA REDDI: There is also a G.O. whereby protection to the minority language people is given. The G.O. is mostly neglected. I request the Hon'bl Education Minister that more Pulavars should be given an opportunity to man this Tamil University. I also request that protection to the minority language people should be given. Thank you.

(பிற்பகல் 12.40]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ப் பல்கலைக் கழக சட்டமுன்வடிவைப் பற்றி தங்களது சிறந்த கருத்துக்களை எடுத்துச் சொன்ன மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் ஒரு உயர்தனிச் செம்மொழி, அது சமஸ்கிருதம் போல் பழமை வாய்ந்தது, ஆனால் சமஸ்கிருதம்போல் உலக வழக்கொழிந்ததாக, இன்றைக்கும் பேச்சுவழக்கில் பயன்படுகின்ற நிலையிலே இருந்துவருகின்ற ஒரு சிறந்த மொழி என்ற அடிப்படையில், அதற்கு ஒரு பல்கலைக்கழகம் அமைக்க வேண்டு

மென்று அறிஞர் பெருமக்கள் கருத்திற்கேற்ப மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்து, அந்த அடிப்படையிலே தான் இந்த சட்ட முன்வடிவு உங்களுடைய ஆய்வுக்கு வைக்கப்பட்டிருக்கிறது இந்தத் தமிழ்ப் பல்கலைக்கழகம பற்றி பொதுவாக வரவேற்ற அத்தனை பேர்களுக்கும், எல்லாக் கட்சிகளுக்கும் எனது நன்றியை குறிப்பாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களிலே. நண்பர் ரகுமான்கான் அவர்கள், இரண்டு முறைகளுக்கு மேல் பதவி வகிக்கக் கூடாது என்று இருக்கின்ற நிலைமையை மறுபடியும் இன்றைக்குத் தவறாக எடுத்து, அதை ஒரு குறையாகப் பேசினார்கள்.

நான் பொதுவான ஒரு கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு நாம் இந்தப் பல்கலைக்கழகத்தைப் பற்றி பேசுகின்றபோது, அதிலே உள்ள சிண்டிகேட் உறுப்பினர்கள், செனட் உறுப்பினர்கள் பற்றி, அதிலே அங்கம் வகிப்பவர்கள் பற்றி, அவர்களுக்கு இருக்கின்ற சிரமங்கள், கஷ்டங்கள் ஆகியவற்றை மனதிலே வைத்துப் பேசுவது என்பது ஒன்று. அதற்கடுத்து, பல்கலைக் கழகத்தை மனதிலே வைத்து, அதன் மூலம் மக்களுக்கு என்ன பயன் கிடைக்கிறது என்ற அடிப்படையை வைத்து அந்தப் பணிகளிலே உள்ளவர்கள் கஷ்டங்களை, சிரமங்களை மனதிலே வைத்துப் பேசுவது என்பது ஒன்று. ஆகவே, நாம் சிண்டிகேட் உறுப்பினர்களுக்கு ஏற்படுகின்ற கஷ்டங்களை மனதிலே வைத்துக்கொண்டு பேசினால், இதிலே ஒரு சரியான முடிவிற்கு வரமுடியாது.

அது மட்டுமல்ல, அதன் மூலமாக நாம் மக்களுக்கு ஒரு நன்மையை குறிப்பாகச் செய்ய முடியாது. ஆகவே, அந்த அடிப்படையிலே இதுபோன்ற கருத்துக்களையும், இது சம்பந்தமாக அரசு எடுக்கும் நடவடிக்கைகளையும் பார்க்க வேண்டும் என்று நான் அனைத்துக் கட்சி உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.





இரண்டு முறைகளுக்கு மேல் வரக்கூடாது என்று வைத்துவிட்டு, மந்திரியாக மட்டும் இரண்டு முறைகளுக்கு மேல் வரலாமா, சட்டமன்ற உறுப்பினராக மட்டும் இரண்டு முறைகளுக்கு மேல் வரலாமா, செகரட்டரியாக மட்டும் இரண்டு முறைகளுக்கு மேல் வரலாமா, குமாஸ்தாவாக மட்டும் இரண்டு முறைகளுக்கு மேல் வரலாமா என்று ஊரிலே உள்ள எல்லா பதவிகளையும் எடுத்துச் சொல்லி, அதை ஒரு விவாதமாக வைத்து விட்டார்கள், ஆனால், அதற்காக நான் வருத்தப்படவில்லை; சந்தோசப்படுகிறேன். அத்தனை பதவிகளையும் சொன்ன அவர், கணவன், மனைவியை விட்டுவிட்டாரே என்று சொல்லி, அதற்காக எல்லா உறுப்பினர்களின் சார்பிலும் அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்...... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் என்பது ஜனநாயகத்தால் தேர்ந்தெடுக்கப்படுபவர். அவர்கள் 20, 25 ஆண்டுகள் இருக்கலாம். மேலும் வாழ்ந்தால். 50 அல்லது 60 ஆண்டுகளுக்கும் இருக்கலாம். ஆகவே, இதிலே அமைச்சர்கள் மட்டும் இருக்கலாமா என்று சேர்த்துக்கொள்வது சரியல்ல. உங்களுடைய வாதம் சுவையாக இருந்தது என்பதாகச் சொல்லி, அதற்கு நன்றிதான் சொன்னார்.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத் தலைவர் அவர்களே, என்னைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதால், நான் பதில் சொல்லிவிடுகிறேன். நேரத்தை வீணாக் விரும்பவில்லை. பதவி என்று சொல்லுகின்ற போது, சிண்டிகேட்டாக இருந்தாலும், செனட்டாக இருந்தாலும் அதுவும் வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பதவி தான். நான் சொல்ல விரும்புவது எல்லோருக்கும் வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்று சொல்லுகின்ற போது, அது சிண்டிகேட், செனட் உறுப்பினர்களுக்கு மட்டும்தான் பொருந்தும், வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பதவிகளான அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், முதலமைச்சர், மற்றவற்றிற்குப் பொருந்தாது என்று சொன்னால் வாய்ப்புகள் மற்றவர்களுக்கு கிடைக்கின்ற சூழ்நிலை ஏற்படுமா என்பதுதான் என்னுடைய கேள்வி. கணவன், மனைவி பதவி அல்ல. உறவு முறை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே. அவர்கள் புரிந்துகொள்ள இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த இரண்டு முறைகளுக்கு மேல் பதவிக்கு வரக்கூடாது என்ற

[திரு. செ. அரங்கநாயகம்] [1982 பிப்ரவரி 17

கோரிக்கையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்கள் எடுத்து வைத்துக்கொண்டு யோசிவில்லை. ஆசிரியர்கள். பல்கலைக்கழகத்தோடு நேரடி தொடர்பு உடையவர்கள். அந்தப் பல்கலைக்கழகம் என்ன நடைமுறையிலே நடைபெற வேண்டும் என்று விரும்பினார்களே, அதிலே பங்கு கொள்ளுகின்ற அவர்கள் தங்களுடைய உணர்வுகளை எங்களிடம் சொன்ன நேரத்தில் அந்த அடிப்படையிலே இதைச் செய்திருக்கிறோமே தவிர, தவறான நோக்கத்தின் அடிப்படையிலே, தவறு செய்யவில்லை என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்;

ஆசிரியப் பெருமக்கள் பிரதிநிதித்துவம் பல்கலைக் கழகஆட்சி மன்றக் குழுவிலும் மற்றக் குழுக்களிலும அதிகம் இருக்க வேண்டுமென்ற கோரிக்கைக்கிணங்க புதிதாக வந்திருக்கிற பல்கலைக்கழக மசோதாக்களிலே அது இடம் பெற்றிருக்கிறது. ஆசிரியர்கள் சார்பாக வந்த கோரிக்கைகளை ஏற்று அவர்களுக்கு பிரதிநிதித்துவம் அதிகம் வேண்டுமென்ற கொள்கையை ஏற்று அந்த அடிப்படையில் இந்தப் பிரச்சினையை அணுகியிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஹோசூரைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் வெங்கடரெட்டியார் அவர்கள் தங்களுடைய உணர்வுகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்க்ள், இன்றைக்கு மைனாரிட்டி மக்கள் என்ற நிலையைப் பார்த்தால் இந்தியாவிலேயே தமிழ்நாடு தவிர வேறு எங்கும் இப்படிப்பட்ட பாதுகாப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஹோசூரில் இருக்கும் தெலுங்கு பேசும் குழந்தைகளுக்கு தெலுங்கில் பள்ளிக்கூடங்கள் நடைபெறுகின்றன என்று அவர்களே சொன்னார்கள். இந்த அளவுக்கு வாய்ப்பு மற்ற இடங்களில் இல்லை. நாம் இருமொழிக் கொள்கையை வைத்திருக்கும் காரணத்தால் மாணவர்கள் இரண்டு மொழிகளை மட்டும் படித்தால் போதுமானது. அதிலே ஆங்கிலம் கட்டாய மொழி என்பதை மாண்புமிகு வெங்கடரெட்டியார் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஆனால் மூன்று மொழிகள் என்று வைத்துக்கொண்டு செயல்படுகிற மாநிலங்களில் குறிப்பாக கர்நாடகத்தை எடுத்துக் கொண்டால் அங்கிருக்கும் தமிழ் பேசும் மக்கள் சார்பில் அல்லது உருது பேசும் மக்கள் சார்பில் எதிர்ப்புகள் கிளம்பி இருக்கின்றன. அங்கு கர்நாடக மொழியை கட்டாயமாக்கி இருக்கிறார்கள். இந்தியைக் கட்டாயமாக்கி இருக்கிறார்கள்.



1982 பிப்ரவரி 17] [திரு. செ. அரங்கநாயகம்]

ஆங்கிலத்தைப் படிக்கலாம் என்று இருக்கிறது. அங்கிருக்கும் சிறுபான்மையினர் ஒன்று தங்களுடைய மொழியை தமிழ் மொழியை அல்லது ஆங்கிலத்தைப் படிக்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது ஒன்று அவர்கள் ஆங்கிலத்தை விடவேண்டும் அல்லது தமிழ்மொழியை விடவேண்டுமென்ற புதிய நிலைமை ஏற்பட்டதன் காரணமாக சிறுபான்மை மக்கள் கிளர்ச்சி உணர்வைப் பெற்றிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை தமிழ்நாட்டில் இல்லை. இங்கிருக்கும் சிறுபான்மையினர் தங்களுடைய மாநிலத்தில் இருந்தால் என்ன பாதுகாப்பு கிடைக்குமோ அந்தப் பாதுகாப்பு தரப்படுகிறது. அவர்கள் தங்களுடைய மாநிலத்தில் இருப்பது போன்ற உணர்வு ஏற்படுத்தப்படிருக்கிறது. அந்த அடிப்படையில் சிறுபான்மையினரைப் பாதுகாக்க முடியும் என்பதற்கு மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருந்து கொண்டிருக்கிறது, அது தொடர்பாகக் குறைபாடுகள் இருக்குமானால் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அரசு பரிசீலிக்கும்.

அறிவியல் வளர்ச்சி தொடர்பாக மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். தமிழ் மொழியும் தமிழ் மதமும் பற்றி மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். தமிழ் படிப்பு பொதுவாக இருந்த சமயத்தில் அறிவியல் வளர்ச்சியும் இருந்திருக்கிறது என்பதைப் பல்வேறு ஆதாரங்கள் மூலம் சுட்டிக்காட்டினார்கள். ஓலைச் சுவடி ஆராய்ச்சி மூலம் அவை விளங்குகின்றன. குறிப்பிட்ட கால கட்டத்திற்குப் பிறகு அறிவியல் வளர்ச்சி இல்லை. அப்போது தமிழைப் படிக்காமல் இருந்திருக்கிறார்கள். நூற்றுக்கு 54 பேர் தாங்கள் பேசுகிற தமிழ் மொழியை எழுதவோ பேசவோ முடியாத நிலைமையில் இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும் போது பல்வேறு காரணங்களை ஆராய்ந்து பார்க்கிறோம். அதிலே ஒரு காரணம் மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் குறிப்பிட்டது—மக்கள் பொதுவாக தமிழைப் படிக்காத, பயன்படுத்தாத நிலையில் குறிப்பாக மதத்திற்கு மட்டும் தமிழ்மொழி என்ற நிலை ஏற்பட்ட பிறகு மக்கள் தமிழைப் படிக்காமல் இருந்திருக்கிறார்கள். பல்வேறு காரியங்களில் தமிழ் மக்களுடைய வாழ்க்கைக்குத் தேவை என்று நிரூபித்துக் காட்டும்போது, அந்த நிலைமையை ஏற்படுத்தும்போது, மக்கள் நிச்சயமாகத் தமிழைப் படிப்பார்கள். அப்போது நூற்றுக்கு 54 பேர் படிக்காத நிலைமை மாறி நூற்றுக்கு நூறு பேரும் தமிழைப் படிக்கக்கூடிய நிலை உருவாகும். அந்த அடிப்படையில் தமிழ் மொழி உலக மொழியாக உலகத்தில் செல்வாக்குப் பெற்ற மொழியாக வரக்கூடிய நிலைமை ஏற்படும். தமிழில் அறிவியல் வளர்ச்சி ஏற்படும். இது உடனடியாகச் செய்ய வேண்டிய காரியமாகும். அதற்காக இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக்

[திரு. செ. அரங்கநாயகம்] [1982 பிப்ரவரி 17

கொண்டிருக்கிறது. அதற்கு மிக முக்கியமாக தமிழ்ப் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

(பிற்பகல் 12.50)

யு.ஜி.சி.யினுடைய உதவியைப் பற்றித் தெரிவித்தார்கள். அந்த உதவியைப் பெறுவதற்கான முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம். அவர்களும் ஒரு குழுவை அமைத்திருக்கிறார்கள். அந்தக் குழுவிலே நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆப் எஜுகேஷனல் பிளானிங் அண்ட் அட்மினிஸ்ட்ரேஷன் என்ற நிறுவனத்தைச் சேர்ந்த புரபொஸர் எம்.வி.ஜ. மாத்தூர் அவர்களும் உஸ்மானியா பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் ஜி. ராமாரெட்டி அவர்களும், பம்பாய் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த புரபஸர் ராம்ஜோஷி அவர்களும் ராஞ்சி பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஏ.கே.தான் அவர்களும் சென்ட்ரல் இன்ஸ்டிட்யூட் ஆப் இன்டியன் லாங்குவேஜஸ்-ஐச் சேர்ந்த டி.பி. பட்றாய்க் அவர்களும் மத்திய அரசினுடைய கலவித்துறையின் துணைச் செயலாளர் எம்.ஆர். கோல்காட் அவர்களும் நம்முடைய மாநில அரசின் சார்பில் ஒரு பிரதிநிதியும் அந்தக் குழுவிலே அங்கம் வகிப்பார்கள். அந்தப் பல்கலைக் கழகம் பற்றி அவர்கள் ஆராய்ந்து சிபாரிசு செய்த பிறகு அதுதொடர்பான யு.ஜி.சி. உதவியை நாம் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குப் பெறமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேறுபல கருத்துக்களை இங்கேஎடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நேரம் கருதி இதோடு முடித்துக் கொள்ள வேண்டியிருக்கிற நிலை இருக்கிறது. அந்தக் கருத்துக்கள் அரசின் கவனத்தில் எப்போதும் இருக்கும். தேவையான நேரத்தில் தக்க நடவடுக்கை எடுக்கப்படும் என்று சொல்லி இந்த தமிழ்ப் பல்கலைக் கழக சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி — "1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.



1982 பிப்ரவரி 17] [மாண்புமிகு பேரவைத் தலைவர்]

பிரிவுகள் 2 முதல் 50 வரை, அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். "1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1982) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

## 6. அறிவிப்பு

### பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று மாலை 4 மணிக்குத் தொடர்ந்து நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

### (2) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு 1982

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

திரு கு. பா. பழனிப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1982) மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை

* 1982 பிப்ரவரி ...ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

எடுத்துக்கூற விரும்புகிறேன். இந்தச் சட்ட முன்வடிவிற்கு முன்னதாக ஒரு அவசரச் சட்டம் 9-1-81 அன்று போடப்பட்டு 10 ஆம் தேதியன்று அரசிதழில் வெளியிடப்பட்டது. 30-9-81 இல் அதன் காலக்கெடுவை நீட்டிப்பதுதான் நோக்கமாக இருந்திருக்கிறது. அப்படியிருந்தும் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. அதைப்போலவே 1/30 என்ற அவசரச் சட்டமும்கூட 19-4-1980 என்பதை 19-11-81 இல் தான் நீட்டிப்பதாக வெளியீடு வந்தது. இந்த முறையிலே காலக்கெடு முடிந்து பல மாதங்கள் கழித்து வருவதற்கு என்ன காரணம் என்பதை அரசு தான் விளக்க வேண்டும். மூலச் சட்டத்தினுடைய நோக்கம் ஏழை எளியவர்கள் பலன் அடைய வேண்டும் என்பதற்காக என்று சொல்லப்பட்டாலும், இப்படிக் காலக்கெடுவை நீட்டிப்பதிலே அரசு காட்டுகிற தவறான போக்கு உண்மையிலேயே ஏழை எளிய மக்களுக்குப் பயன்தராத நிலையைத்தான் எடுத்துக் காட்டுகிறது. மூலச் சட்டத்திலே 1-1-80-க்கு முன்னாலே உள்ள கடன்களையெல்லாம் முழுக்க ரத்து செய்வதாகவும் கடனாளிகள்மீது வழக்குப் போட முடியாது என்றும் நிலுவையிலே உள்ள அந்த வழக்குகள் எல்லாம் தள்ளுபடி செய்யப்படும் என்றும் சிறையிலே அடைபட்டிருக்கிறவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்றும் அடகு வைக்கப்பட்ட பொருள்கள் மீட்டுத் தரப்படும் என்றும் சொல்லப்பட்டு இருக்கிறது. நிலமோ அல்லது சொத்துக்களோ அடைமானத்தில் இருந்தால் மீட்டுத்தர வேண்டும். இதுதான் நோக்கம் என்பதாக அந்த மூலச்சட்டத்தில் காணப்படுகிறது. அதிலே குறிப்பாக பிரிவு 5, 6-லே சொல்ல வேண்டுமென்றால் இந்தக் கடன் பெற்ற கடனாளி எவ்வளவு நாட்களுக்குள்ளாகத் தாசில்தாரிடத்தில் மனுச் செய்ய வேண்டுமென்பதுதான் நோக்கம். அந்த வகையிலே தான் இந்தத் திருத்தமும் அமைந்திருக்கிறது.

ஆனால் இந்த மனுக்களையெல்லாம் தாசில்தாரிட்த்திலே செய்துவிட்டு வழக்குரைஞர் ஆஜர் ஆகக்கூடாது என்று சொன்னார்கள். நேற்று முன்தினம் அமைச்சரவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கின்றபொழுது இலவச சட்ட உதவி வழக்குரைஞர்கள் ஆஜராக அறிவுரை செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அப்படி ஏதும் அறிவுரை வந்ததாக இதுவரையிலே தெரியவில்லை. இருந்தாலும் கூட நான் சொல்ல விரும்புவது, ஏழை எளியவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள அல்லது வசதி படைத்தவர்கள், பணம் படைத்தவர்கள் அவர்கள் பேரிலே வழக்கு தொடுத்தால் அவர்களைக் காப்பாற்றிக் கொள்ள இருக்கின்ற ஒரு நிலையிலே இலவச சட்ட உதவி மூலமாகத்தான் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்ற நிலை உருவாகிவிட்டது. அப்படி இருக்கும்பொழுது எந்த வழக்கறிஞரும் அங்கே ஆஜர் ஆகக் கூடாது. தாசில்தார் முன்னால் என்று மிகத்தெளிவாக 9-வது பிரிவு கூறுகிறது. அப்படி இலவச சட்ட உதவி மூலமாகக் கூட ஆஜர் ஆகக்கூடாது என்ற



நிலைமை ஏற்பட்டு விட்ட பிறகு அவர்களுக்குப் பாதுகாப்பு என்பதே இல்லாத சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. ஏனென்றால் பணம் படைத்தவர்களுக்கு எந்தெந்த வகைகளிலே சட்டத்தைப் பயன்படுத்தி, ஏழை எளியவர்களிடத்திலேயிருந்து பணத்தைப் பெறலாம் அல்லது அவர்களை எப்படி ஏமாற்றலாம் என்பதற்குப் பல செளகரியங்கள் இருக்கின்றன. ஆனால் அந்த ஏழைகளுக்குத் தங்களை நிச்சயமாகப் பாதுகாத்துக் கொள்ளக் கூட வசதி கிடையாது. இருந்தாலும் இலவச சட்ட உதவி மூலமாக இருக்கின்ற அமைப்பைக் கூட பயன்படுத்த முடியாத சூழ்நிலையை அரசு நிச்சயமாகக் கவனத்திற் கொண்டு அந்த இலவச சட்ட உதவி மூலம் அவர்கள் பலன் பெறத்தக்க வகையிலே இந்தச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டிருக்க வேண்டும். இன்னும்கூட காலம் கடந்து விடவில்லை. எனவே, இதுபற்றி அமைச்சரவர்கள் ஒரு திருத்தத்தைக் கொண்டு வர வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

அடுத்து, மூலச்சட்டத்திலே சொல்லும்பொழுது குடும்பம் என்பதற்கு ஒரு விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். கணவன், மனைவி, வயது வராத குழந்தைகள் மட்டும் சேர்ந்துதான் ஒரு குடும்பம். அந்தக் குடும்பத்தின் வருமானத்தை மாத்திரம்தான் எடுத்துக்கொண்டு, அந்தக் கணக்கை எடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். நான் கேட்பதெல்லாம் வயது வந்த பிள்ளைகள் அந்தக் குடும்பத்திற்கு வருமானத்தைக் கொடுத்தாலும்கூட, அவர்கள் இந்தக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. என்ன காரணம்? அவர்களும் சேர்ந்துதான் குடும்பம் என்று இருக்கவேண்டும் அல்லவா? அவர்களைத் தவிர்த்து மற்றவர்கள்தான் குடும்பம் என்று சொல்வது எப்படி? முறையானதாக இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை.

அதுமட்டுமல்லாமல், மனைவியினுடைய வருமானத்தை இங்கே சேர்த்து கணக்கு எடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இது மற்ற சட்டங்களுக்கு முன்னுக்குப் பின் முரணானதாக இருக்கிறது என்பதை நான் மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். காரணம் இந்துச் சட்டத்திலே women's right to property என்று இருக்கிறது. அந்தச் சட்டத்தின் பிரகாரம் பார்த்தால் மனைவிக்கு என்று இருக்கும் சொத்துக்குத் தனியாக உரிமை இருக்கிறது. அப்படியிருக்கின்ற பொழுது குடும்பத்தினுடைய வருமானம் என்று போட்டு, ஒரு தனி நபரோ அல்லது குடும்பமோ இருக்கின்ற இந்தப் பிரச்னையிலே மனைவியினுடைய வருமானத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் தனியாக அந்தக் கணவனுக்கு மட்டும் இருக்கின்ற வழக்குகளிலே மனைவி பணம் கொடுத்து அதை அடைக்க வேண்டுமென்று சொன்னால் அப்படி அடைப்பதற்கு, கேட்பதற்குக் கோர்ட்டிலே நியாயம் இல்லை. கணவன் கடன் பெற்றால் மனைவி அடைக்க வேண்டுமென்று கேட்பதற்கு நியாயம் இல்லை. ஆனால் இங்கே

மனைவியினுடைய வருமானம் அந்தக் குடும்பத்திலே கணக்கெடுக்க வேண்டுமென்று சொல்வது முறையாக இல்லை. இதைப்பற்றி பல்வேறு சட்ட நிபுணர்களெல்லாம் கூறி, சில பத்திரிகைகளில் எல்லாம் எழுதியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன்.

அடுத்து, விவசாய நிலத்தினுடைய வருமானத்தைக் கணக்கிட வேண்டுமென்று சொல்கிறார்கள். மொத்த வருமானம் 4,800 ரூபாய்க்குக் குறைவாக இருந்தால்தான் இந்தக் கடன் சட்டம் பலன் அளிக்க வேண்டுமென்று இருக்கிறதே, இதிலே விவசாய நிலத்தினுடைய வருமானத்தைக் கணக்கிடுவதற்கு என்ன வழி முறை காணப்பட்டிருக்கிறது என்பதற்குத் தெளிவாக இல்லை. இன்றைக்கு கிராம அதிகாரிகள் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. இப்படிக் கிராம அதிகாரிகள் இல்லை என்ற காரணத்தினாலே அங்கேயிருக்கின்ற ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அல்லது தாசில்தாரிடத்தில் போய் இப்படி என்னுடைய நிலத்தின் வருமானத்தைக் கொடு என்று சொன்னால் அப்படிக் கொடுப்பதற்கான வழி முறையை வைக்காத நிலையிலே அதைப்பெறுவது ஏழை எளிய மக்களுக்கு எவ்வளவு கடினமான காரியமாக இருக்கும் என்பதை நடைமுறைப்படுத்திப் பார்க்கும்பொழுதுதான் தெரிகிறது. எனவே, நிச்சயமாக அப்படி ஒரு வழி அமைக்க வேண்டும். இந்த வகையிலே இந்த சர்ட்டிபிகேட்டெல்லாம் கொடுப்பது என்பதற்கான முறை இன்னும் வகுக்கப்படவில்லை. அது தெளிவாக இல்லாத காரணத்தினால் நடைமுறையிலே இன்றைக்குக்கூட ஒன்றிரண்டு இடங்களில் இந்தப் பலனை ஏழை எளியவர்கள் முழுமையாக அனுபவித்தார்கள் என்று சொல்ல முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது.

அடுத்து, சொத்து மதிப்பு 25,000 ரூபாய்க்குக் குறைவாக இருப்பவர்களுக்கு இந்தப் பலன் இருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படிச் சொத்தினுடைய மதிப்பைப் பெறுவதற்கு எந்த அதிகாரியிடத்திலே அணுகி எந்த வகையில் செய்ய வேண்டுமென்பதற்குத் தெளிவான விளக்கங்கள் சட்டத்தில் இல்லை. உதவிப் பதிவாளர் அலுவலகத்திலே போய் சொத்தினுடைய மதிப்புச் சான்றிதழ் வேண்டுமென்றால், அவர்களுக்குத் தகுதியான உத்தரவு தரப்படாத காரணத்தினாலே அதை எந்த வகையில் முறையாகப் பெற வேண்டுமென்பதற்கு ஆதாரம் எதுவுமில்லை.

இன்றைக்கு வரையில் பல வழக்குகளிலே பல்வேறு கட்டங்களிலே தமிழ்நாடு பூராவும் இந்த மதிப்புச் சான்றிதழ் பெறுவதிலேயும் வருமானச் சான்றிதழ் பெறுவதிலேயும் பெருங் கஷ்டங்களுக்கு உள்ளாகி ஏராளமானவர்கள் அவதிப் படுகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.





தாசில்தாரிடத்திலே இந்த அடகு பொருட்களைச் சொத்து போக்கியம் அதாவது அடைமானம் வைத்திருக்கின்ற சொத்துக்களை மீட்டுக் கொடுப்பது என்ற இந்த இரண்டு காரணங்களுக்காக மாத்திரம் தாசில்தார் கோர்ட்டிலே அணுகலாம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-00)

நான் இன்றைக்குக் கேட்க விரும்புவது, இதுவரையிலே தமிழகத்திலே எத்தனை வழக்குகள் தாசில்தார் அலுவலகங்களிலே கொடுக்கப்பட்டு, எத்தனை சொத்துக்களை மீட்டுக் கொடுத்திருக்கிறார்கள்? அல்லது எவ்வளவு நகைகளை மீட்டுக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், எனக்குப் பல தகவல்கள் வந்திருக்கின்றன. குறிப்பாக, தென்னாற்காடு மாவட்டத்திலே உளுந்தூர்பேட்டை நகரத்திலே கூட, இது வரையிலே தாசில்தார் ஒன்றும் நடவடிக்கை எடுக்கவில்லையென்று அவர்மீது ஏராளமான புகார்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நகைகளைத் திருப்பிக் கொடுக்கவில்லை, சொத்துக்களை மீட்டுக்கொடுக்க வசதியில்லை. தாசில்தார் இதுவரைக்கும் நடவடிக்கை எடுக்கவில்லையென்று, தாசில்தார் பேரிலேயே கூட புகார்கள் வந்திருக்கின்றன. ஆனால், அவர் இதுவரையில் நடவடிக்கைஎடுக்கவில்லை. அதனுடைய காரணம் என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன். ஒருவேளை, அந்தப் பகுதியிலே இருக்கிறஆளுங்கட்சியினர் பலர்—மாவட்டச் செயலாளராகவும், ஒன்றிய; நகரச் செயலாளராகவும் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் அடகுக் கடை மார்வாடிகளாக, நகைக்குப் பணம் கொடுப்பவர்களாக இருப்பதனாலே இப்படி நடக்கிறது என்று பரவலாகக் குற்றம் கூறப்படுகிறது. அவைகளையும் களைந்தெடுக்கிற வகையிலே, உடனடியாக, இந்தச் சட்டத் திருத்தத்தைச் செய்ய ஏற்பாடு செய்தால், அவைகளையெல்லாம் தாசில்தார் மூலம் விரைவாக பைசல் செய்வதற்கு வழிவகை ஏற்படும்.

அடுத்து, இப்படிப்பட்ட காலக்கெடுக்களை முறையில்லாமல் நீட்டிக்கொண்டு போவதாலே, இன்றைக்கு மாற்று வசதியில்லாத காரணத்தாலே, பல தொல்லைகளுக்கு ஏழை எளியவர்கள் ஆளாவார்கள் என்று நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். குறிப்பாக, இன்றைக்கு சாதாரணமாக, கடன் வாங்குவது, கொடுப்பதே கூட, சிரமமான காரியமாக இருக்கிறது. 3 வட்டி, 4 வட்டி என்ற அளவிலே, பெரும் அளவுக்கு வட்டியை வசூல் செய்ய, நகைகளையும் பொருள்களையும் அடைமானம் வைத்தாலும்கூட, சீட்டு எதுவும் கொடுக்காமல், தனிப்பட்ட முறையிலே, ஏராளமான பேர்கள் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறார்கள் என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏனென்றால், முறையாக இருக்கிற நிறுவனங்களிலே, அல்லது அரசு அங்கீகரித்துள்ள நிறுவனங்களிலே, வங்கிகளிலே, அவர்களுக்கு நியாயமான வட்டிகளிலே

கடன் கிடைக்கும். ஆனால் அப்படிப்பட்ட நிறுவனங்கள் இன்றைக்குச் செயல்படமுடியாத நிலைமை இருப்பதனாலே, ஏழை எளியவர்கள் ஏராளமான வட்டி கொடுப்பதோடு, அதற்கு அத்தாட்சி இல்லாமலேயே வாங்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

பல வருஷங்களுக்கு முன்பாக என்று கூட நினைக்கிறேன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கின்றபொழுது, தபால் ஆபீசிலேகூட பண்டங்களை மாற்றாக வைத்து, கடன் கொடுக்கக் கூடிய நிலைமையை ஏற்படுத்தலாம் என்று ஆலோசனை சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு இருக்கிற கூட்டுறவு வங்கிகளும் கூட அல்லது மற்ற வங்கிகளும்கூட, அதற்கு ஏற்பாடு செய்தால் பெரும் அளவுக்கு உதவியாக இருக்கும், தபால் ஆபீசில் செய்ய முடியாவிட்டாலும் பரவாயில்லை என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏழை, எளியவர்களுக்கு இந்தச் சட்டத்தின் மூலமாக, உரிய பலன் இதுவரையில் கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு இதில், கடன் வாங்கித் திருப்பிச் செலுத்த வேண்டியதில்லை என்ற உணர்வும், கூடவே உண்டாகி விடக்கூடிய சூழ்நிலை உருவாவதாலே இந்தச் சட்டத்தின் உண்மையான பலன் நாட்டுமக்களுக்குக் கிடைக்கவில்லை என்பதை எடுத்துக் கூறி Madras Law Journal 1980 என்ற ஒரு இதழிலே 80—இரண்டாவது பக்கம் மூன்றிலே கூட குறிப்பிட்டிருக்கிறார்கள். This piece of Legislation is hasty and thoughtless one என்று கூறியிருக்கிறது. அப்படி அவசரமாகவும், ஆழ்ந்த சிந்தனை இல்லாமலும் இருக்கிற ஒரு சட்டமுன்வடிவு என்பதனைத் தெரிவித்து அமர்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை நான் ஆதரிக்கிறேன். என்றாலும், இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வந்திருக்கிற இந்த முறை இருக்கிறதே, அது வன்மையான கண்டனத்திற்கு உரியது என்பதை மெத்த பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்டம் அன்றாடம் காய்ச்சிகளுக்கு பயன்படுகின்ற நல்ல சட்டம் என்பதை நான் மறுக்கத் தயாராக இல்லை. ஆனால், இந்தச் சட்டத்தை எவ்வளவு அக்கறையோடு பேணிக் காக்க வேண்டுமோ, அந்த அக்கறையிலிருந்து இந்த அரசாங்கம் தவறி விட்டது என்பதுதான் என்னுடைய தாழ்மையான எடுத்துக் காட்டாகும். இந்தச் சட்டம் இப்பொழுது ரினீவல்—எக்ஸ்டென்ஷனுக்குத்தான் வருகிறது, ஆர்டினன்ஸ் போட்டதும் சரி, இப்பொழுது வருவதும் சரி, இந்தச் சட்டம் 1981 செப்டம்பர் 30-ஆம் தேதியோடு முடிவுற்றது. ஆனால் அக்டோபர் முதல் தேதியிலிருந்து இந்தச் சட்டம் தொடர்ந்து இருந்திருக்கவேண்டும். அப்படி அமுலில் இல்லையானால் பல ஏழைகள் பாதிக்கப் படுவார்கள். அவர்கள் அடகு வைத்திருக்கின்ற நகைகள், அவர்கள் வாங்கியிருக்கின்ற கடன்கள் எல்லாம் செல்லுபடியாகாமல்





போய்விடுகின்றன. ஆக, செல்லுபடியாகின்ற அளவுக்கு இந்தச் சட்டத்தைக் கொண்டுவராமல், இடைவெளி உருவாவதற்குக் காரணம் என்ன? அதை நான் அமைச்சரிடம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அக்டோபர் முதல் தேதியேவர வேண்டிய சட்டம் அவசரச் சட்டமாக இருந்தாலும் சரி (சபையில்லாததால்), நவம்பர் 11 ஆம் தேதி தான் கொண்டு வரப்படுகிறது. ஆனால், இந்த இரண்டு மாதம் 8 நாள் இடைவெளியிலே பலவேறு நகைகள் அடகு படுத்தியிருக்கின்றவர்கள், கடன் கொடுத்தவர்கள் எல்லாம் கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். என் தொகுதியில்கூட ஒருவர் கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். அண்மையிலேகூட நாம் பத்திரிகையிலே செய்தியாகப் பார்த்தோம். ஆயிரம் ரிட் பெட்டிஷன்கள் சப்மிட் செய்திருக்கிறார்கள். ஆனால், அவை தள்ளுபடி ஆகியிருக்கின்றன. எப்பொழுது? டிசம்பர் 10 ஆம் தேதி அவை தள்ளுபடியாகின்றன? எங்கு, சுப்ரீம் கோர்ட்டில்.

காரணம் 8-ந்தேதி வரைக்கும் இந்தச் சட்டம் இல்லை. ஆனால் 10 ஆம் தேதி 1,000 பெட்டிஷன்கள் தள்ளுபடி செய்யப் பட்ட பிறகு, இப்படி நாம் பாராமுகமாக, அக்கறை இல்லாமல் இருந்த காரணத்தினால் சுப்ரீம் கோர்ட்டுக்கு அந்த அடகுக் கடைக்காரர்கள் போகின்ற அளவுக்கு உற்சாகத்தை இந்த இடைவெளி உண்டாக்கி வந்திருக்கிறது என்பதையும் அதற்கு இந்த அரசாங்கம் துணையாக இருக்கிறது என்பதையும் நான் குற்றமாகச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். சுப்ரீம் கோர்ட்டிலே ஸ்டே வாங்கி இருக்கிறார்கள் இப்போது. பத்து நாட்களுக்கு முன்பு பத்திரிகையைப் பார்த்தால் தெரியும். இந்த சட்டத்திற்கு ஸ்டே வாங்கி இருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த தைரியம் எப்படி வந்தது? அடகு பிடிப்பவர்களுக்கு இந்த தைரியம் வருவதற்கு இந்த சர்க்கார்தான் காரணம். இந்த 2 மாதம் 8 நாள் இடைவெளியை நீங்கள் உண்டாக்கிய காரணத்தினால், அவர்களுக்கு இந்த நிலை உருவாகியது. அமைச்சர் சொல்லக்கூடும். அன்று கூட இன்ட்ரடக்ஷன் ஸ்டேஜிலேயே அப்போஸ் பண்ணிய நேரத்தில்—இந்த சட்டத்தை அல்ல—பிரசிடென்ட் அசென்ட் வாங்க காலதாமதம் ஆகிவிட்டது என்று சொன்னார்கள். நான் மெத்த பணிவோடு கேட்டுக்கொள் கிறேன். இந்த சட்டத்தோடு வேறு சில சட்டங்களுக்கும் நீங்கள் ஆர்டினன்ஸ் போட்டிருக்கிறீர்கள். அசென்ட் வாங்கி என்ன சட்டம். பஞ்சாயத்து போர்டுக்கு ஸ்பெஷல் ஆபீசர் அப்பாயின்ட் பண்ணுவது, பஞ்சாயத்து யூனியனுக்கு ஸ்பெஷல் ஆபீசர் அப்பாயின்ட்மென்ட் செய்வது போன்ற சட்டங்கள். அந்த சட்டம் டிசம்பர் 10-ந்தேதி முடிகிறது. ஆனால் அது 17-ந் தேதியில் இருந்து ரெனியுவல் செய்யப்பட வேண்டும். ஆக 9-ந் தேதி ஆர்டினன்ஸ் போடப்படுகிறது. அசென்ட் வாங்கி இருக்கிறீர்கள். அதேபோன்று பஞ்சாயத்து யூனியனுக்கு 31 டிசம்பர் முடிகிறது. அதற்கும் அட்வான்சாக அசென்ட் வாங்கி இருக்கிறீர்கள். இதற்கெல்லாம் அசென்ட் வாங்குகிறீர்கள்.

நீங்கள். அந்த முயற்சியிலே ஈடுபடுகின்ற அமைச்சர் அவர்கள் இந்த கடன் நிவாரணச் சட்டத்திற்கு ஏன் முன் கூட்டியே அசென்ட் வாங்கவில்லை என்பதை நான் மெத்தப் பணிவன் போடு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த ஒரு முஸ்லீம் 4 மோதிரம், ஒரு ஜதை காது வளையங்கள் அடகு வைத்து பின்னர் சென்று கேட்டபோது இல்லை, இல்லை இப்போது இந்தச் சட்டம் நடைமுறையில் இல்லை. (மணி அடிக்கப்பட்டது) ஏலம் விடப்பட்டுவிட்டது. ஆகவே மிச்சப் பணத்தை வாங்கிக்கொண்டு போங்கள் என்று சொல்லி மிச்சப் பணத்தைத்தான் தந்தார்கள். அதற்கென்றே ஒரு ஆக்ஷனர். அவரும் யார்? அவரும் ஒரு மார்வாடிதான் சென்னையைப் பொறுத்த மட்டும். அவர் மூலமாக ஏலம் விடப்பட்டு சொற்ப தொகைதான் கொடுக்கப் பட்டிருக்கிறது. நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இந்த இடைவெளிக்கு என்ன காரணம். பிரசிடென்ட் அசென்ட்தான் காரணமா? மற்ற ஆர்டினன்ஸ்கள் எல்லாம் அப்படி இல்லையே? இதிலேதான் தவறு நடந்திருக்கிறது. அதுவும் பழனியப்பன், சொன்னதைப் போல 80-லே இப்படி நடைபெற்றிருக்கிறது அது நாட்கள் கணக்கிலே, இது மாத கணக்காக இருக்கிறது. இது ஏன் வந்தது? ஏதாவது பேச்சு வார்த்தை நடந்ததா? அந்தப் பேச்சு வார்த்தையின் விளைவாக நடந்த பேரத்தின் விளைவா? என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டத்தை ஆதரித்தாலும், இந்த முறையை 80-லே கையாண்டு இருக்கிறீர்கள். 82-லே கையாளுகிறீர்கள், வருங் காலத்தில் இந்த நிலையை, காலதாமதத்தை ஏற்படுத்தாமல் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள் கிறேன்.

* திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் நிவாரணச் சட்ட முன்வடிவின் மீது நான் சார்ந்திருக்கின்ற இந்திரா காங்கிரஸ் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனியப்பன் அவர்கள் கூறியதைப்போல மிகவும் கால தாமதமாகத்தான் இந்த நிவாரணச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் மாண்புமிகு சட்ட அமைச்சர் கொண்டு வந்திருக்கின்ற இந்த நிவாரணச் சட்டம் உண்மையிலேயே ஏழை மக்களுக்கும் விவசாய மக்களுக்கும் பயன் தருமா என்றால், நிச்சயமாக இல்லை. அதற்கு ஒரே காரணம் நாம் பல சட்டங்களை கொண்டு வந்திருக்கிறோம். ஆக்ட் 4/38-லிருந்து இன்றுவரை 10, 15 சட்டங்களை கொண்டு வந்திருக்கிறோம். இந்த சட்டங்களை எல்லாம் ஒன்றாக சேர்த்து ஒரே சட்டமாக காம்ப்ரஹென்சிவ் ஆமடாக கொண்டு வந்தால் நிலைமை சீரடையும், ஏழை விவசாய மக்களும் பயனடைவார்கள் என்று கூறிக்கொள்கிறேன். ஆக்ட்





13/80-லே அந்த புரோ நோட்டின் மேல் பணம் வாங்கி இருந்தால் அவர்களுக்கு கடன் நிவாரணம் செய்வதில் முடிவு சொல்ல தாசில்தாருக்கு அதிகாரம் இல்லை. அண்மையில் சென்னை ஹைகோர்ட்டில் ஒரு தீர்ப்பு கூறப்பட்டது. அதை எண்ணத்தில் கொண்டு சர்க்கார் அதற்கு தகுந்தாற்போல் சட்டம் கொண்டு வந்ததா என்றால் அதுவும் இல்லை. இதுபோன்ற சட்டங்களால் ஏழைகளுக்கு மிகவும் இடைஞ்சல் தான் நேரும். மத்திய அரசு ஆக்ட் 31/1976 என்று சட்டம் கொண்டு வந்தது. கடன கொடுத் தவர் கடனாளியின் வருமானம் சொத்து ஆகியவைகளை நிரூபிக்க வேண்டும்.

(பிற்பகல் 1-10)

அந்தச் சட்டத்திலே மிகவும் கிளியராக இருந்தது. 2,400 ரூபாய் உள்ளவர்கள் அல்லது நஞ்சை நிலம் வைத்திருந்தால் 63 சென்ட், அல்லது தோட்ட நிலமாக இருந்தால் ஒரு ஏக்கரா 25 சென்ட், புஞ்சை நிலமாக இருந்தால் 4 ஏக்கர் என்று கிளியராக அந்தச் சட்டத்தில் போட்டுக்கொண்டு வந்தோம். ஆனால் ஆக்ட் 13/80 சட்டம் வருகிறபோது அதிலே 4,800 ரூ. வருமானத்திற்கு குறை வாக உள்ளவர்கள் யாராக இருந்தாலும், அல்லது 25,000 சொத்து மதிப்புக்குக் குறைவா இருந்தாலும், அவர்களுக்கு இந்தச் சட்டத்தின் மூலமாக நிவாரணம் கொடுக்கும் வகையில் சட்டம் கொண்டு வந்தோம். 4,800 ரூ. வருமானம் என்பது எப்படி நிர்ணயிப்பது என்பதற்கான கெய்டுலைன்ஸ் கொடுத்தி ருக்கிறீர்களா என்றால், அப்படி ஒன்றும் இல்லை. இதன் காரண மாக அந்த மக்கள் ஒவ்வொரு கோர்ட்டா அலைந்து கொண்டு இருக்க வேண்டிய நிலைமை வந்து இருக்கிறது. ஆக்ட் 13/80ல் கடனாளிதான் வருமானம், சொத்து மதிப்பு நிரூபிக்க வேண்டி யிருக்கிறது.

உதாரணத்திற்காக ஒன்றைச் சொல்கிறேன். ஒரு ஊரிலே ஒரு ஏக்கர் நிலம் ஒருவர் வைத்து இருக்கிறார். அவருக்குப் பணம் கொடுத்தவர் அந்த நிலத்தின் மதிப்பு ரூ 50,000 என்றும் அந்தப் பணத்தை வாங்கியவர் ரூ. 5,000 என்றும் சொல்லி, அந்த நிலத்திற்குப் பக்கத்தில் இருப்பவர் சாட்சி சொல்கிறபோது ரூ. 50,000 தான் என்று சொல்லிவிட்டால், அவர் பணத்தைத் திருப்பி கட்ட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, உண்மையான நிவாரணம் எதுவும் அந்த ஏழை எளிய மக்களுக்குக் கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சொத்தின் மதிப்பைப் பொறுத்தவரையில், ஒரு வீடு இருக் கிறது என்று வைத்துக்கொள்வோம். அந்த வீட்டின் மதிப்பைக் கணக்கிடுகிறபோது அது வீட்டு வரியின் அடிப்படையிலோ அல்லது நிலமாக இருந்தால், அந்த வாய்தா ரசீதின் அடிப்படையிலோ அது நிர்ணயிக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட ஒரு திட்ட வட்டமாக கெய்டுலைன்ஸ் கொடுக்காததால், கோர்ட்டு தனது விருப்பு வெறுப்புக்குத் தக்கவாறு தீர்ப்பு செய்து மக்கள் பல

விதமான இன்னல்களுக்கு ஆளாக நேரிடுகிறது என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்னொரு உதாரணத்தையும் நான் சொல்ல விரும்புகிறேன். ஒருவர் 1,000 ரூ. கடன் கொடுத்து இருக்கிறார். 1,000 ரூ. மற்றொருவர் கடன் பெற்று இருக்கிறார். கடன் கொடுத்தவர் கோர்ட்டுக்குப்போய் இருந்தால், கடன் கொடுத்தவர் மேற்கொண்டு ரூ. 1,000 செலவு செய்து விட்டார், கடன் வாங்கியவரும் கோர்ட்டில் 1,000 ரூ. செலவு செய்து விட்டார் என்று திரு. பழனியப்பன் குறிப்பிட்டதைப்போல மக்களிடத்தில் நாணயம் கெட்டு விட்டது. மக்களுக்கும் சரியான வகையில் சட்டத்தின் பலன்கள் கிடைக்கவில்லை.

நாம் தினமும் ஒரு சட்டம் கொண்டு வருகிறோம். வருஷத்திற்கு 4 அல்லது 5 ஆக்ட் கொண்டு வருகிறோம். ஆக்ட் 40/78-ல் ஒரு ஆள் பாதிக்கு பாதிகொடுத்து விட்டால் போதும் என்று சொன்னோம். அதாவது 1,000 ரூ. கொடுக்க வேண்டியவர் ரூ. 500 கொடுத்தால் போதும் என்று சொன்னோம். அந்தச் சட்டம் கோர்ட்டில் போய் செல்லாது என்று வர இருந்த சமயத்தில், ஆக்ட் 40/79 என்று ஒரு சட்டத்தை அவசர அவசரமாகக் கொண்டு வந்தோம். இப்படி திருப்பித் திருப்பி சட்டங்களைக் கொண்டு வருகிறபோது ஒரு கேஸ் 9 ஆகும் நிலைமையைத்தான் நாம் மக்களுக்கு வைத்து இருக்கிறோம். உண்மையிலேயே வறுமைக் கோட்டின்கீழ் உள்ள மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்படவில்லை.

மேலும் ஒரு உதாரண கேஸ் சொல்லுகிறேன். ஒருவன் பிச்சை எடுத்துக் கொண்டு இருக்கிறான். அவன் கூடவே பிச்சை எடுப்பவன் இவனுக்கு தினமும் 20 ரூ. 25 ரூ. கிடைக்கும் என்று சொல்லிவிட்டால், நிச்சயமாக அந்தப் பிச்சைக்காரனுக்குக் கூட இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தால் பயன் கிடைக்காது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன். ஆகவே சட்டம் கொண்டு வருகிறபோது உண்மையிலேயே நாம் கொண்டு வருகின்ற சட்டம் செல்லுமா, மக்களுக்கு பயன் அளிக்குமா என்பதைச் சிந்தித்துப் பார்த்துக் கொண்டு வரவேண்டுமே அல்லாது, ஏதோ ஏழை எளிய மக்களுக்குச் செய்கிறோம் என்று வைத்து விளம்பரத்துக்காக சட்டம் கொண்டு வரக்கூடாது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இன்றைக்குப் பல பாமர மக்கள் கடன் பெற முடியாமல் தெருவில் நின்று கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சட்டத்தை காங்கிரஸ் கட்சி சார்பாக ஆதரிக்கின்ற அதே நேரத்தில், ஏழை எளிய பாமர மக்களையும் காப்பாற்றுகின்ற வகையில் ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டு வாருங்கள் என்று கேட்டு, அமர்கிறேன், வணக்கம்.

திரு. என். வரதராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டத்தை மேலும் திருத்துகின்ற இந்தச் சட்ட முன்வடிவு மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.





இந்தச் சட்டத்தினுடைய நோக்கம் சரியானது, புனிதமானது, நல்லது. இந்தக்கால நீட்டிப்பும் சரியானது. ஆனால் அரசின் சார்பாக இந்தச் சட்டத்தை முன்மொழிகிறபோது, என்ன நோக்கத்திற்காக இந்தச் சட்டத்தை மேலும் நீட்டிக்க விரும்புகிறார்கள் என்பதை மேலும் இங்கே விளக்கமாகச் சொல்லி இருக்க வேண்டும். எங்களைப் பொறுத்த வரையில் அனுபவத்தின் விளைவாக அரசுக்கு சில ஆலோசனைகளை அளிக்க வேண்டியிருக்கிறது, எந்த நல்ல நோக்கத்திற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறீர்களோ, அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துகிறபோது பல கஷ்டங்கள், சிரமங்கள் இன்றைக்கு உண்டாகி இருக்கின்றன என்பதை அரசு அறிய வேண்டும்.

இன்றைக்கு பாதிக்கப்பட்டு இருக்கும் மக்கள் பூரணமான நிவாரணம் பெற முடியாமல் சிரமப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே தான் இதை மேலும் நீடிக்க வேண்டி இருக்கிறது. ஒரு 6 மாத காலத்திற்குள் விண்ணப்பங்களை தமிழ்நாடு முழுவதிலும் உள்ள மக்கள் கொடுத்துவிட முடியும். ஆனால் அவர்கள் விண்ணப்பங்கள் போடுவதற்குத் தயக்கம் காட்டுவதற்குக் காரணம் என்னவென்றால், இதனால் அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை என்கிற உண்மையால் தான் இந்த நிவாரணம் கேட்டு மனுக்கள் போடுவதற்கு மக்கள் முன்வரவில்லை. இருக்கும் விவரங்களை முழுமையாகத் தெரிந்து கொள்ள, முழுமையாக விசாரித்துத் தெரிந்து கொள்ள தேவையான இந்த கால அவகாசத்தை நீங்கள் முதலிலே பெற்றிருக்க வேண்டும். நான் சொல்வது கால அவகாசம் கடனாளிக்கு அல்ல, அரசாங்கத்திற்கே வேண்டும். ஆகவே, இந்தச் சட்டத்தில் இருக்கிற ஓட்டை உடைசல்களை மாற்றி, நல்ல முறையில் தேவையான கால அவகாசத்தோடு கொண்டுவர அரசாங்கம் முயலவேண்டும்.

1977-க்குப் பின்னாலே இந்த அரசு வந்த பிறகு கூட்டுறவுத் துறையிலே ஓரளவுக்கு கடன் நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது. அது தேவை என்று அரசாங்கத்திற்குத் தெரிந்ததால் அந்த நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசு இந்த நிவாரணம் கொடுப்பதிலே சிலவகைகளிலே ஒத்துக்கொள்ளவில்லை என்றாலும் நம்முடைய அரசு கொடுக்க முன்வந்ததை நான் வரவேற்கிறேன்.

அதே நேரத்தில் தனியார் துறையில் கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வந்து, உயர்நீதிமன்றம் இதை ஏற்றுக்கொள்ளாததால் கைவிட்டு விட்டோம். ஆக தனியார் துறையில் கடன் நிவாரணம் என்பது கிடைக்காத ஒன்றாக இருக்கிறது. பாதிக்கப்பட்டிருக்கிற மக்களுக்கு, வருமானத்தில் பின்தங்கியிருக்கிற மக்களுக்கு, கடனை கட்ட முடியாத மக்களுக்கு நிவாரணம் அளிப்பது என்பது சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. இதை காங்கிரஸ் அரசு அல்லாத மாநிலங்கள்தான் செய்ய வேண்டுமென்ற நிலை இல்லை.

[திரு. என். வரதராஜன்] [1982 பிப்ரவரி 17

இன்றைக்கு காங்கிரஸ் அரசே செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கும்போது இந்தச் சட்டத்தை இன்னும் சரியான முறையிலே திருத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிச்சயமாக உதவி கிடைக்கும். இதுதான் எங்களுடைய விண்ணப்பம், வேண்டுகோள். நீங்கள் காலத்தை நீட்டிப்பதில் பயனில்லை, உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். சில விதிவிலக்கு கொடுத்திருக்கிறோம். இந்த விதிவிலக்கை தாசில்தார் தவறாகப் பயன்படுத்துகிறார். ஒரு ஏக்கர் வரை புஞ்சை நிலம் இருக்கிறது என்றால் அதிலே 25,000 ரூபாய் வருமானம் வரும் என்று சொல்லி விடுகிறார். இது அவர்களுடைய யதார்த்த வாதம். தாசில்தார் சிந்தனை இது: அந்த தாசில்தார் வர்க்க உணர்வு இது. எந்த நோக்கத்திற்காக கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வந்திருக்கிறோமோ அதற்கு மாறாக தாசில்தார் சீறி பாய்கிறார் சாதாரண குடிமக்களிடம். அவர்களின் அந்த முறை சரியாக இல்லை. இதற்கு ஏதாவது ஒரு குழு அமைத்தால் கூட பரவா யில்லை.

அதைப்போல இன்றைக்கு 4,800 ரூபாய்க்கு குறைவாக வருமானம் உள்ளவர் என்று சான்றிதழ் பெற்றால்தான், ஒருவர் இந்தச் சட்டத்தின் பயனை அனுபவிக்க முடியும், நிவாரணம் பெற விண்ணப்பம் போட முடியும். அந்த சர்டிபிகேட் வாங்குவதற்கு ஆறு மாதம் ஆகிவிடுகிறது. அதுவரையில் ரெவின்யூ இன்ஸ்பெக்டர், தாசில்தார் என்று அவர்களைச் சுற்றிக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. அப்படி இருந்தாலும் எத்தனையோ பேர்களுடைய விண்ணப்பங்களை 4,800 ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்கள் என்று தாசில்தார் சொல்லிவிடுவதன் மூலம் தள்ளுபடி செய்திருக்கிறார்கள்; ஏராளமானவர்கள் விண்ணப்பமே போட முடியவில்லை. காரணம் சர்டிபிகேட் கிடைக்கவில்லை. அதிலே இருக்கக்கூடிய கோளாறை முதலிலே நிவர்த்தி செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக குறிப்பிட விரும்புவது, இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறுவதற்கும் இந்தச் சட்டத்திலே இடம் இருக்கிறது. ஒருவன் 2,000 ரூபாய் கடனாளி என்றால் தாசில்தார் அவனிடம் பேரம் பேசுகிறார். நீ 500 ரூபாய் பெற்றுக்கொள்; 1,500 ரூபாயை கட்டிவிடு என்று சொல்கிறார். ஆனால் அரசுக்கு அவர் முழு நிவாரணம் அளிக்கப்பட்டது என்று அறிக்கை அனுப்புகிறார். இந்த கஷ்டத்தை நாங்கள் அனுபவிக்கிறோம். அனுபவபூர்வமாக இதைச் சொல்கிறேன். ஆகவே அரசு இப்படிப்பட்ட தவறுகளுக்கு இடமில்லாமல் இந்தச் சட்டத்தைத் திருத்தினால்தான், தமிழகத்தில் 4,800 ரூபாய்க்கு குறைவான வருமானம் பெறுகிறவர்களுக்கு உண்மையிலே நிவாரணம் கிடைக்கும். இல்லை என்றால் அவர்கள் அடகு வைக்கிற பொருள்களை ஏப்பம் விடுகின்ற நிலைதான் ஏற்படும்.



1982 பிப்ரவரி 17] [திரு. என். வரதராஜன்]

இதிலே கூட ஆர். டி. ஓ, சப்-கலெக்டரிடம் அப்பீல் செய்ய வேண்டுமென்றால் அதற்குள்ளே இந்த ஆறு மாதம் கழிந்து விடுகிறது. ஆகவே கால அவகாசத்தை நீட்டிக்க வேண்டும். ஏழை எளிய மக்கள் இதன் பலனை அடைகின்ற வகையில், கடன் நிவாரணச் சட்டத்தை நல்லமுறையில் அமுல்படுத்துவதற்கு இதிலே என்ன திருத்தத்தைச் செய்யலாம் என்று அரசு ஆலோசித்து, அதைச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தி, அமர்கிறேன்.

திரு. நி. கா. நல்லப்பன்: தலைவரவர்களே, இந்த 1980ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டத்தின் காலத்தை மேலும் நீட்டிப்பதற்காக கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

ஏழை எளிய மக்களுக்கு பயன்படக்கூடிய ஒரு நல்ல நோக்கத்தோடு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருந்தாலும் இதனுடைய காலம் 1982 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ந் தேதியோடு முடிந்து விடுகிறது. ஏற்கெனவே இருந்தச் சட்டத்தின் பயன் முழுமையாக ஏழை எளிய மக்களுக்கு கிடைக்கவில்லை என்ற காரணத்தால், அதனுடைய காலத்தை நீட்டிப்பதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டத்தின் காலம் மார்ச் 31-ந் தேதியோடு முடிந்துவிடும் என்பதற்குப் பதிலாக 1982 டிசம்பர் வரையில் காலத்தை நீட்டிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

ஆனால் அதே நேரத்தில் இந்தச் சட்டம் ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் நன்மை அளிக்கக்கூடிய வகையிலே தமிழக விளம்பரத் தாள்களில் வருகின்ற வகையிலே தமிழக விளம்பர இலாக்காவின் மூலம் இதுபற்றித் தெளிவாக விளம்பரப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கடன்பட்டவர்களின் வருமானம் 4,800 ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால் கடன் கொடுத்தவர்கள் இவர்களுக்கு இன்னின்ன வகையிலே வருமானம் வருகின்றது, 4,800 ரூபாய் வருமானம் வருகின்றது என்று நிரூபிக்க வேண்டும், அந்த வகையிலே சட்டத்தைத் திருத்த வேண்டும். ஆனால் அதற்கு மாறாக கடன்பட்டவர்கள் தான் 4,800 ரூபாய் வருமானம் வருகின்றது என்பதைச் சொல்ல வேண்டும் என்பது சரியல்ல. எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே சாதாரண விவசாயத் தொழிலாளிக்கு ஒரு நாளுக்கு தினக்கூலி 10 ரூபாய். பெண் தொழிலாளியாக இருந்தால் 5 ரூபாய் என்றெல்லாம் கணக்குப்போட்டு வருவாய்த் துறையிலே இருக்கக்கூடிய அதிகாரிகள் கணக்குக் கொடுத்துவிடுவார்கள். ஆனால் மாதம் பூராவும் அவர்களுக்கு வருமானம் வருகின்றதா இல்லையா என்பதைப் பார்க்க வேண்டும். ஆகவே முழுமையாக 4,800 ரூபாய் வருமானம் வருகின்றதா என்பதைப் பார்த்து அதுபற்றி நிரூபிக்கின்ற வகையிலே சட்டத்தைத் திருத்த வேண்டும்.

[திரு. தி. கா. நல்லப்பன்] [1982 பிப்ரவரி 17

அடுத்து சொத்தினுடைய மதிப்பு 25,000 ரூபாய் என்று இருக்கின்றது. குடியிருப்பதற்கு ஒரு வீடு இருந்தாலும் சரி, அல்லது நகரத்தை ஒட்டிய பகுதிகளில் காலி நிலம் 2 செண்ட், 3 செண்ட் என்று இருந்தால் கூட அதற்கு 25 ஆயிரம் ரூபாய் மதிப்பு இருக்கக்கூடிய அளவுக்கு சம்பந்தப்பட்ட ரெவின்யூ இலாக்கா அதிகாரிகள் எழுதிக் கொடுத்து விடுகிறார்கள். கடன் கொடுத்தவர்கள் பணக்காரர்களாக இருந்தால் இப்படிச் செய்து விடுகிறார்கள். ஆகவே இது சரியா என்பதைப் பார்ப்பதற்கு பொதுமக்கள் கொண்ட ஒரு குழுவை அமைக்க வேண்டும்.

அடுந்து விதவைகளுக்கு விலக்கு அளிக்கவேண்டும் என்கின்ற போது குறைந்தபட்சம் வருமானம் இல்லாத எந்தவிதமான நிலங்களும், இல்லாத அந்தவிதமான விதவைகளாக இருந்தால் அதைப் பற்றி பரிசீலிக்க வேண்டியதுதான். ஆனால் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களையும் 50 ஏக்கர் நிலங்களையும் வைத்துக்கொண்டு இருக்கின்ற அல்லது 25 ஏக்கர் நிலத்தை வைத்துக்கொண்டிருக்கின்ற விதவைகளாக இருந்தால் அவர்களுக்கும் இந்த சட்டத்திலே விதிவிலக்கு வேண்டுமா என்பதை தயவுசெய்து யோசித்து அதைத் திருத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து சம்பந்தப்பட்ட தாசில்தார்களுக்கு மேலும் விண்ணப்பிக்க வேண்டும் என்ற வகையிலே அந்த அதிகாரத்தை ஒரு மாதத்திற்கு அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது. அப்படிக் கொடுத்தால் ஏற்கெனவே விண்ணப்பித்து இருப்பவர்களின் விண்ணப்பங்களை அவர்கள் வாங்கி அதைப் பரிசீலிப்பதற்குப் பதிலாக அவர்களுக்கு வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்று பார்த்து முடிவெடுக்கின்ற நிலைமை ஏற்படும். ஆகவே இந்த மார்ச் 31 ஆம் தேதி என்று இருப்பதை குறைந்தபட்சம் டிசம்பர் வரையாவது நீட்டிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வருமானச் சான்றிதழ் பெறுவதைப் பொறுத்த வரையிலே ஏற்கெனவே இருந்த மணியக்காரர்கள், கணக்குப் பிள்ளை போன்றவர்கள் ஆங்காங்குள்ள நிலைமைகளைப் பார்த்து புரிந்து கொண்டு வருமானச் சான்றிதழ் கொடுக்கக்கூடிய நிலைமை இருந்தது. ஆனால் இன்றையதினம் இருக்கக்கூடிய ரெவின்யூ அதிகாரிகள் எங்கே இருக்கிறார்கள் என்றே தெரியவில்லை. அவர்கள் எந்த கிராமத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்பது கூட தெரியாத நிலைமை இருக்கின்றது. ஆகவே இதையுக் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கொண்டுவரப்பட்டிருக்கின்ற கடன் நிவாரணச் சட்டத்தை நான் முழுமையாக வரவேற்கிறேன். அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி வந்த காலத்திலே சில சங்கடங்கள் ஏற்பட்டன. அந்தச் சங்கடங்களைப் போக்க மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை



1982 பிப்ரவரி 17] [திரு. ப. வெங்கட சுப்பிரமணியம்]

எடுக்க வேண்டும் என்று கோருகிறேன். உதாரணமாக அந்தச் சட்டத்திலே 'Family' means individual, his wife and unmarried children என்று கூறப்பட்டிருக்கின்றது. அந்த மைனர் குழந்தைகளுக்கு திருமணம் ஆகியபின் அவர்கள் அந்தச் சொத்துக்களை அந்தக் குழந்தைகளின் மேல் எழுதி வைத்து அதனால் சட்டத்தை ஏமாற்றுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. அதற்காக அந்தக் கிளாசிலே, 'Family' must include all members of the joint Family. என்று சேர்த்து அதன்மூலம் சட்டத்தை ஏய்க்கின்ற ஒரு வாய்ப்பினை தவிர்ப்பதற்கு நம்முடைய சட்டத்துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்ததாக சொத்துக்களை அடகு வைக்கிற காலத்தில், அந்தச் சொத்துக்களை கட்டாயமாக பத்திரமாக திரும்பப் பெறுவதற்கான ஒரு வாய்ப்பினை, அடகு வைத்திருப்பவர்கள், இதிலிருக்கும் விதிகளின்படி இழந்துவிடுகின்ற சூழ்நிலை இருக்கிறது. அந்த விதியின்படி அவர்கள் ஆர். டி.ஓ. விற்கு மனு செய்துக் கொள்ளலாம் என்று இருக்கிறதே தவிர. வேறு வசதிகள் எதுவும் செய்து தரப்படவில்லை.

அந்த ஆர்.டி.ஓ. கொடுக்கிற கான்பிடன்ஷியல் லெட்டரையும் மீறி, அவர்களே பான்புரோக்கர்களே அந்தச் சொத்துக்களை விற்பதற்கான ஒரு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அந்த விதியைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நம்முடைய அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன். அடுத்ததாக சொத்துக்களுடைய மதிப்புகளை நிர்ணயம் செய்வதற்கான ஒரு வழி வகையை அல்லது வழிகாட்டி நெறியினை, நம்முடைய அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட இலாக்காவிற்கு அனுப்பி, அதன் மூலமாக கடனாளியாக இருப்பவர்கள் பாதிக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதை கருதி, அந்தக் குறைபாட்டினை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி, இந்தச் சட்டத் திருத்தத்தை வரவேற்று அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட, Act 13 of 1980 என்று சொல்லப்படுகிற, அந்தக் கடன் நிவாரணச் சட்டம், அவ்வப்போது நீட்டிக்கப்பட்ட காரணமும், தற்போது, மீண்டும் நீட்டிக்கப்படவேண்டிய காரணத்தையும், நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் நல்லப்பன் அவர்கள் சுட்டிக் காட்டியதைப்போல, இந்தச் சட்டத்தினுடைய பலன் குக்கிராமங்களுக்கும் சென்று அடையவேண்டும் என்ற அடிப்படையில், அங்கே அவர்களுக்கு தெரியக்கூடிய அளவுக்கு போதிய விளம்பரமும் வேண்டும் என்ற அடிப்படையில்தான், தொடர்ந்து விளம்பரத்தை மேற்கொண்டு, அதே நேரத்தில், இச்சட்டத்தை நீட்டித்து ஏழைகளுக்கு அந்தப் பலன் கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்தில், அந்த நீட்டிப்புச் செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது, குறிப்பாக பழனியப்பன் அவர்கள் பேசுகிறபோது, வழக்குரைஞர்கள் ஏன் இதிலே கூடாது என்ற கேள்வியைக் கேட்டார்கள். வழக்குரைஞர்களை வைத்து நடத்தவேண்டிய நிலை ஏழைகளுக்கும் கண்டிப்பாக இருக்கவேண்டும் என்று வகுப்போமேயானால், அது ஏழைகளுக்குத்தான் பாதகமாக அமையும் என்பதை வழக்குரைஞராக உள்ள அன்புச் சகோதரர் பழனியப்பன் அவர்கள் அறியாமல் இருக்க மாட்டார்கள். காரணம் வழக்குரைஞர்களை டெட்டார்ஸ் வைத்துக் கொள்ளலாம் என்று சட்டம் கொண்டு வந்துவிட்டு, கிரெடிட்டார்ஸ்களுக்கு வழக்குரைஞர்கள் கூடாது என்று டிஸ்கிரிமினேஷன் செய்ய முடியாது சட்டத்திலே என்பதையும், வழக்குரைஞர் மாண்புமிகு உறுப்பினர் பழனியப்பன் அவர்கள் அறிவார்கள் என்று நம்புகி!றன்.

ஆக அத்தகைய வாய்ப்பு டெட்டார்ஸ்களுக்கு கொடுக்கும் போது. கிரெடிட்டார்ஸ்களுக்கும் தரவேண்டிய நிலை ஏற்பட்டு விடுமேயானால் கடன் தருகிற மணி-லெண்டர்ஸ், பான்-புரோக்கர்கள் பணபலம் உள்ளச் சூழ்நிலையில் இருக்கிற காரணத்தினால் பெரிய வழக்குரைஞர்களை வைக்க முடியும். ஆனால் கடன் பெற்றிருக்கிற சாதாரண ஏழைகள், வாங்கிய கடனையே திருப்பிக் கட்ட முடியாத நிலைமையிலே இருக்கிற ஏழைகள், வழக்குரைஞர்களை வைத்து அதை நடத்த வேண்டிய நிலை சட்ட ரீதியாக இன்று இருக்குமேயானால், அது ஏழைகளுக்கு பாதிப்பை தான் ஏற்படுத்துமே ஒழிய, பலனை ஏற்படுத்தாது என்ற காரணத்தால்தான், அந்தச் சட்டத்தின் நோக்கமே ஈடேறாமல் போய்விடும் என்ற காரணத்தால்தான், வழக்குரைஞர்களே இங்கே கூடாது என்ற முடிவை செயல்படுத்தி, அதே நேரத்தில் Appellate Provision to the R,D.O. உண்டு என்றும் விதியிலே கொண்டு வரப்பட்டிருக்கிறது.

ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியதைப்போல, Free legal aid உதவியைப் பொறுத்தவரைக்கும் Free legal aid persons need not necessarily appear before the Tahsildar. அவர்களுக்குத் தகவல் இல்லை என்று சொன்னார்கள். அவர்களுக்கு இது அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அந்தப் பிரச்னை எழவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் பழனியப்பன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் தங்கவேல்ராஜ் அவர்களும் பேசுகிறபோது, இந்தச் சட்டத்தின் பலன் யாருக்குமே கிட்டவில்லை என்ற பொருளோடு சொன்னார்கள். அது தவறு. இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தபிறகு யாருக்குமே பலன் கிடையாது என்ற ஐயப்பாட்டினை ஏற்கலாகாது என்று கூறுவதற்குக் காரணம், இதுகாறும் இந்தச் சட்டத்தின் அடிப்படையில்.... (மணியடிக்கப் பெற்றது)





[பிற்பகல் 1-30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : 80,000 மனுக்கள் வரப்பெற்றன. அதில் 50,999 மனுக்கள் டிஸ்போஸ் செய்யப்பட்டிருக்கின்றன. இதிலே 50,999 பேர்கள் பலன் பெற்றிருக்கிறார்கள் என்றால் இந்தச் சட்டம் ஏழைகளுக்கு பலன் ஈர்க்கிற சட்டம். ஆனால் அரசின் எண்ணம் இன்னும் அதிகப் பலன்கள் ஏழைகளுக்குக் கிடைக்கவேண்டும் என்பதால் நீட்டிப்பு தருகிறோம. கிராமங்களில் இன்னும் இதன் பலன் அதிகமாக சென்றடையவில்லை எனறு விளமபரம் செய்து இதைக் கொண்டுவரவேண்டுமென்பதற்காகத்தான் இது கொண்டுவரப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனியப்பன் அவர்கள் பேசுகிறபோது மனைவியின் வருமானத்தைச் சேர்க்கக்கூடாது என்று சொல்லி அந்த நேரத்தில் வயது வந்தவர்கள் வருமானத்தை சேர்க்க வேண்டும் என்றும் சொன்னார்கள். மனைவியின் வருமானத்தை சேர்க்க வேண்டாம் என்று சொல்லி வீட்டில் இருக்கிற வயது வந்த ஆனால் வருமானம் பெறுகிறவர்கள் வருமானத்தை இதோடு இணைக்கவேண்டும் என்று சொல்வது முன்னுக்குப்பின் முரணாக இருக்கிறது. காரணம், வருமானத்தை பொறுத்தவரையில் ஒரு குடும்பம் என்று வருகிறபோது கணவன் மனைவி வருமானம் குடும்பத்தின் ஒட்டு மொத்த வருமானம் என்ற காரணத்தால் சேர்க்கப்படுகிறது. அந்த குடும்பத்தில் வயது வந்திருக்கிற திருமணமாகாதவர்கள் பலர் இருந்து அளவு கடந்த வருமானம் பெறுகிற நிலை இருந்தால் அவர்களுக்கு இந்தச் சட்டத்தின் பலன் கிட்டிவிட்டால் ஏழைகளுக்குத்தான் பாதிப்பு என்ற காரணத்தால் இதை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை.

அடுத்து, இந்தச் சட்டம் ஏன் காலதாமதமாக, இந்த அவசரச் சட்டம் வந்தது, இதனால் ஏழைகள் பாதிக்கப்படமாட்டார்களா—பாதிக்கப்பட்டார்கள் என்று திரு. பொன்னுரங்கம் அவர்கள் சொன்னார்கள். அது தவறு. காரணம், இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் 30–9–81ம் தேதி சட்டத்தின் அடிப்படையில் மனு செய்ய கடைசி நாள். ஆனால் இந்தச் சட்டத்திற்குள் சென்று படித்தால் உறுப்பினர்களுக்குத் தெரியும். 30–9–81-ல் இருந்து மேலும் ஒரு மாத காலம் 31—10—81 வரை தாசில்தார் அவர்கள் மனுவைப் பெறுகிற அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார்கள். 31–10–81 வரை அதை அடுத்து 31-10-81க்கு பிறகு க்ரெடிட்டார்ஸ், டெப்டார்ஸ் இருசாராருக்கும் விண்ணப்பங்கள் ஏதாவது இருந்தால், கோரிக்கைகள் ஏதாவது இருந்தால் நீங்கள் அனுப்பலாம் என்று சொல்லி 15 நாட்கள் டைம் தருகிறார்கள். அதற்குப் பிறகு அவர் உத்தரவிடுகிறார். அந்த உத்தரவை நடைமுறைப்படுத்த உத்தரவிட்டு மேற்கொண்டு 15 நாட்கள் அவர்களுக்கு காலநீட்டிப்பு தரப்படுகிறது. அதுமட்டு

மல்லாமல், அனைத்தும் முடிந்துவிட்ட பிறகும்கூட செக்ஷன் 5(ஏ) படி யார் யார் கடன கடன்சலுகை..ய, இந்தச் சட்டத்தின்கீழ் சலுகைபெற தகுதியுடையவர்கள் என்று அறிவிக்கப்படுகிறார்களோ அறிவிக்கப்பட்ட பிறகு ‹லுகை பெற தகுதியில்ல‹தவர்கள் மட்டும் அவர்கள் பொருள்களை ஏலத்துற்கு விடலாம் என்றிருக்கிறது. அப்படி விடுவதற்கும் கூட அனுமதி பெற்றாகவேண்டும். 12 ஏ(2) பான்ப்ரொக் ர்சட்டத்திலும் இதற்கு கரஸ்பாண்டிங்காக ஒரு விதி கொண்டு வந்து— தடைக்கல் அங்கு இருக்கிறது. நி‹னைத்தபோது பான் ப்ரோக் ர்ஸ் அல்லது மணி-லெண்டர்ஸ் விற்றுவிடமுடியாது. அப்படி இந்தக் காலக்கெடு‹வ எடுத்துக் கொண்டாலும் 15–12–81 வரை யாராலும் எந்தப் பொருட்களை ஏலத்திற்கு வி‹ முடியாது. அப்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 15–12–81 க்கு முன்னால் யாராவது ஏலமிட்டார்கள் என்று சொன்னால் அவர்கள் ‹ட்டத்தை மீறியவர்கள் தண்டிக்கப் படவேண்டியவர்கள், தண்டனைக்குள்ளாவார்கள் என்பனத மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தாமதம் இல்லையென்பதற்‹ா, இன்டரக்னம் வெளிப்படையாக தெரிந்தாலும்கூட சட்டரீதியாக தாமதம் ஓரளவுகூட இல்லை என்பதற்காக இதைச் சொன்னேன். ஆனால் முன்பே இந்த அவையில் இன்ட்ரொட்யூஸ் செய்தபோது சொன்னதுபோல் மாநில அரசைப் பொறுத்தவரையில் காலக்கெடு 15–12–81 வரை இருந்தபோதிலும் நான் எற்கனவே விளக்கியது போல் 14–10–81 மைய அரசின் அனுமதிக்கு இது அனுப்பப் பட்டது. அப்படி மைய அரசுக்கு 14–10–81 அனுப்பபட்டு மைய அரசின் தாமதம் எப்படி ஏற்பட்டது என்று கேட்டார்கள். தாமதம் இல்லாமல் தாமதம் என்று சொல்லப்படுகிறதா என்று கூட கேட்டார்கள். வேறு காரணம் என்ன என்று கேட்டார்கள். 14–10–81 சட்டரீதியாக ஆர்டினன்ஸ் பிரகாரமே உங்களுக்கு 31–10–81 என்றிருக்க, விதி பிரகாரம் 15-12-81 வரை இருக்க 14-10-81-க்கு டெல்லிக்கு இது அனுப்பப்பட்டு, மைய அரசுக்கு மாநில அரசால் அனுப்பப்பட்டு மாநில அரசு 22-10-81 ஒரு ரிமைன்டர் கொடுத்தது.

மாநில அரசு மைய அரசை ஞாபகப்படுத்தியது. அதை யடுத்து, 29-10-81 அன்று ஸ்பெஷல் ‹மிஷனர் ஆப் தி டமில் நாடு மூலம் நினைவுபடுத்தப்பட்டது. அதையடுத்து, 2-11-81 அன்று மீண்டும் டெலக்ஸ் மூலம் நினைவுபடுத்தப்பட்டது. 4-11-81 அன்று ஸ்பெஷல் ரெப்ரசன்டேடிவ் ஆப் தி டாமில்நாடு அவுஸ் கவர்ன்மென்ட் மூலம் நினைவுபடுத்தப்பட்டது. அதை யொட்டி, 20-11-81, 24-11-81, 28-11-81 ஆகிய தேதிகளில் மைய அரசின் ‹வனத்திற்கு கொண்டு வரப்பட்டது. உடனடியாக இது வரவேண்டுமென்று கோரி இறுதியாக 30-11-81 அன்று 1½ மாதங்களுக்குப்பிறகு மைய அரசு இதற்கு அனுமதி தந்தது. வழக்கமாக ஆர்டினன்ஸைப் பொறுத்தவரையில், சில நேரங்களில் 2 நாட்களிக் அனுமதி தந்துவிடுகிறார்கள்; ஒரு வாரத்திற்குள்ளும் தந்திருக



கிறார்கள். இரண்டு வாரங்களுக்குள்ளும் தந்து விடுகிறார்கள். ஏன் தாமதம் செய்கிறீர்கள் என்று அவர்களை நாம கண்டிக்க முடியாது. ஆனால், பலமுறை நினைவுபடுத்தப்பட்டிருக்கிறது. 1½ மாதங்களுக்குப் பின்னால், 30-11-81 அன்று இது சட்டமாகக் கொண்டு வரப்பட்டது. ஆனால், 15-11-81 வரைக்கும் காலம் இருக்கிறது என்பதற்காக இவைகளைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் தங்கவேல்ராஜ் பேசுகின்றபோது, 1980 ஆம் ஆண்டு ஏப்ரலில் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டம் பிராமிசரி நோட்டுக்கு பாதிப்பு தற்போது இல்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஒரு வழக்கறிஞர். இதிலே, 'டெட்' என்பதற்கு என்ன விளக்கம் மூலச் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது என்றால், 'Debt' means any liability in cash or in kind, whether secured or unsecured and whether decreed or not, but does not include arrears of taxes due to the Central Government or a State Government or a local authority.' என்று சொல்லியிருக்கிறது. மிகத் தெளிவாக, 'whether secured or unsecured' என்று இருக்கிறது. 'அன்-செக்யூர்ட்' என்று வருகிறபோது, that includes promissory notes also என்பதற்கு பல தீர்ப்புகள் உயர்நீதி மன்றம், உச்சநீதி மன்றத்தின் தீர்ப்புகள் இருப்பது வழக்கறிஞர் நண்பர் தங்கவேல்ராஜ் அவர்களுக்குத் தெரியும் என்று கருது கிறேன். எனவே, ஏற்கனவே மூலச் சட்டத்தில் இருப்பதுதானே ஒழிய வேறல்ல. 1976 ஆம் ஆண்டு சட்டத்திலே, 2400 ரூபாய்க்கு கீழே வருமானம் உள்ளவர்கள் அல்லது குறிப்பிட்ட அளவுக்கு நஞ்சை, புஞ்சை நிலங்கள் உள்ளவர்கள் என்று இருப்பதாகச் சொன்னார்கள். அந்தக் கருத்து இந்தச் சட்டத்திலே இருக் கிறது. 2400 ரூபாய் என்று 1976லே ஏழைகள் என்று போடப் பட்ட அந்த வரம்பை உயர்த்தி, ரூ 4800 என்ற அளவுக்கு உயர்த்தியிருக்கிறோம். அந்த அளவுக்கு ஏழைகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. அப்போது நீங்கள் கொண்டு வந்தது, 2½ ஏக்கர் நஞ்சை, 5 ஏக்கர் புஞ்சை என்பதை மாற்றி, 10 எக்கர் அன்-இர்ரிகேடட் 5 ஏக்கர் இர்ரிகேடட் என்று மாற்றியிருக்கிறோம். அவர்களுடைய வருமானத்தின் அடிப்படையில் அவர்களுடைய ஏழ்மை, பணபலம் நிர்ணயிக்கப்படுகிறதே தவிர, 'ஏக்ரேஜ்' அடிப்படையில் இல்லை என்பதை இந்த அவையிலே தெரிவித்து அந்த அடிப்படையில்தான் இந்தத் திருத்தம் கொண்டு வந்து, 76 ஆம் ஆண்டு சட்டத்தில் இருப்பதையும் சேர்த்து கொண்டு வரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் வரதராஜன் அவர்களும், நல்லப்பன் அவர்களும் பல ஆலோசனைகளைக் கூறினார்கள். நடைமுறையில் தாசில்தார் நிலையில் இதிலே சில சிக்கல்கள் இருப்பதாகவும், அதனால் ஏழைகள் இந்தப் பலனைப் பெறுவதில் பல சிரமங்கள் இருப்பதாகவும் சொன்னார்கள். அதற்கு சட்டத் திருத்தம் தேவையில்லை. ஆனாலும் நடவடிக்கை எடுக் வேண்டும். உறுப்பினர்களுடைய ஆலோசனையை அரசு ஏற்கின்றது. ஏற்கனவே,

இதை ஆய்ந்து வருகின்றோம். மிக விரைவிலே தாசில்தார்களுக்கு எல்லாம் தக்க அறிவுரைகள் கொடுக்கப்பட்டு, எந்தக் குறைபாடுகளும் இல்லாதவாறு நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெயரிலே இருக்கின்ற அந்தத் திருத்தங்கள் அவை முன் மொழிய அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி "தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

[பிற்பகல் 1-40]

பிரிவு-2

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி- "பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்".

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இந்தச் சட்டம் மேலும் மூன்று மாத காலம் நீட்டிக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியதையொட்டி நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்.

" In clause 2,—

"(1) in sub-clause (i),—

(a) in item (a), for the expression "the 31st day of March 1982", substitute the exp.ession "the 30th day of June 1982";

(b) in i.em (b), for the expression the 30th day of April 1982", substitute the expression "the 31st day of July 1982";

for (2) in snb-clanse (ii), expression "the 30th day of April 1987", substitute the expression "the 31st day of July 1982".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 2 திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.



பிரிவு-3

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி— "பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்."

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:—

In clause 3,— (1) in sub-clause ( ),—

(a) in item (a), for the exp ession "the 31st day of March 1982", substitute the expression "the 30th day of June 1982";

(b) in item (b), for the expression "the 30th day of April 1982", substitute the expression "the 31st day of July 1982";

(2) in sub-clause (ii), for the exp essicn "the 30th day of April 1982", substitute the expression "the 31st day of July 1982".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3 திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 4 பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: "தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1982) திருத்தப்பெற்றப்படி நிறைவேற்றப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 4.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-42 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

(மாலை 4-00)

மாலை 4·00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) ஊராட்சிகள் சம்பந்தமான சட்ட முன்வடிவுகள், 1982.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன் வடிவு ஆகிய மூன்று சட்டமுன்வடிவுகளையும் சேர்த்து விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம்.

திரு கு. பா. பழனியப்பன்: துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் அவர்களால் 9.12.1981 ஆம் தேதியன்று பிறப்பிக்கப் பெற்ற, 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாவது திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 16/1981) இப்பேரவை நிராகரிக்கிறது".

திரு. பெ. சு. திருவேங்கடம்: துணைத் தலைவரவர்களே, நான் இதை வழிமொழிகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன் வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 6/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

திரு. கு. பா. பழனியப்பன்: துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் அவர்களால் 9-12-1981 ஆம் தேதியன்று பிறப்பிக்கப் பெற்ற, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) மூன்றாம் திருத்த அவசரச் (சட்டத்தை தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 14/1981) இப்பேரவை நிராகரிக்கிறது".

திரு. பெ. சு. திருவேங்கடம்: துணைத் தலைவரவர்களே, நான் இதை வழிமொழிகிறேன்.

@ 1982 பிப்ரவரி 8ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 4/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்".

திரு. கு. பா. பழனியப்பன்: துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"ஆளுநர் அவர்களால் 9-12-1981 ஆம் தேதியன்று பிறப்பிக்கப் பெற்ற, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) மூன்றாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 15/1981) இப் பேரவை நிராகரிக்கிறது."

திரு. சு. பாலன்: துணைத் தலைவரவர்களே, நான் இதை வழிமொழிகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 5/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவசரச் சட்டங்களை நிராகரிக்க வேண்டுமென்ற தீர்மானங்களும், சட்ட முன்வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற அமைச்சரின் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. அமைச்சரவர்கள் ஏதாவது கூற வேண்டுமானால் கூறலாம்.

*மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மூன்று சட்டமுன்வடிவுகளையும் ஒன்றாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு நீங்கள் அனுமதி அளித்ததற்காக நான் முதலில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப்

* 1982 பிப்ரவரி 8-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

பேரவை சட்டமுன்வடிவு எண். 6/1982), தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 4/1982), தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 5/1982) ஆகிய சட்டமுன்வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

இந்தச் சட்டமுன்வடிவுகள் எதற்காக அவைமுன் கொண்டு வரப்பட்டிருக்கின்றன என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. ஆதலால் அவர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்ததற்குப் பிறகு என்னுடைய கருத்துக்களைப் பின்னால் தெரிவிக்கிறேன் என்று கூறி, மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களை கூறுமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்ற ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவையும், ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவையும், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். நடைபெறாத ஒரு தேர்தலுக்கு ஒரு சட்ட முன்வடிவு வருகிறது என்றால், அவசரம் அவசரமாகக் கொண்டு வந்த சட்டத்தை, சட்ட வடிவில் கொண்டுவர வேண்டுமென்று சட்டத்திலே இருக்கிற காரணத்தினால், இதைக் கொண்டு வந்திருக்கிறார்களே ஒழிய, உள்ளபடியே, தேர்தல் நடைபெற வேண்டும் என்ற எண்ணம் இல்லை. தேர்தல் நடக்குமா என்ற ஐயப்பாடு நாட்டிலே நல்லோர் அத்தனை பேர் உள்ளத்திலும் ஏற்பட்டுவிட்டது. இந்தச் சட்ட முன்வடிவினுடைய நோக்கம் புனிதமானதுதான். ஆனால், மார்க்கம் சரியில்லாத நிலையிலே இந்நிலை ஏற்பட்டுவிட்டது. ஆதிதிராவிடர் மக்களுக்கு பழங்குடியினருக்கு 18 சதவீதமும் மகளிருக்கு 15 சதவீதமும் என்ற மிக கவர்ச்சிகரமான ஒரு நோக்கத்தோடு, இன்னும் சொல்லப்போனால், நல்ல எண்ணத்தோடு, கூட அதைச் செய்திருக்கலாம். ஆனால் அதற்காக எடுத்துக் கொண்ட நோக்கமானது, அவர்கள் தேர்வு செய்த முறைகள் உண்மையிலேயே தேர்தல் நடைபெற வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு செய்யப்பட்டவையா என்பதை நாம் எண்ணிப் பார்க்கும்போது வேதனைப்பட வேண்டியிருக்கிறது

இன்றைய தினம் ஊராட்சி தேர்தல்கள், ஊராட்சி ஒன்றியத் தேர்தல்கள், மற்றும் நகராட்சித் தேர்தல்கள் நடைபெறாத காரணத்தால், சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிற பணி



பெரும்பணியாகி விட்டது. கிராமங்களிலே இருக்கின்ற நிலைமைகளைப் பார்க்கின்றபொழுது, எல்லாவற்றையும் சட்டமன்ற உறுப்பினர்களே செய்ய வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் இன்றைய ஆட்சியாளர்களால், ஏற்பட்டுள்ளது. கவர்ச்சிகரமான இப்படிப்பட்ட ஒரு தேர்தல் சட்டத்தைப் போட்டதால், கிராமத்திலே ஜனநாயகம் செத்து விட்டது என்ற அளவிலே, கிராமங்கள் அநாதைகளாக, திக்கற்ற நிலையிலே, கேட்பாரற்ற நிலையிலே உள்ளன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் உணர்வார்கள். எதிர்க்கட்சியிலே உள்ள நாங்கள் சொல்வதில் உண்மையில்லாமல் இல்லை என்பதை ஆளுங்கட்சி உறுப்பினர்களும் ஒத்துக்கொள்வார்கள். மனசாட்சி இருக்கிற காரணத்தால். இன்றைய தினம் ஏன் அவ்வாறு ஏற்பட்டிருக்கிறது என்றால், அவசரம், அவசரமாக ஊராட்சிகளை கலைத்துவிட்ட காரணத்தால், ஊராட்சிகளிலே உறுப்பினர்கள் இல்லை, தலைவர்கள் இல்லை என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. அதேபோன்று, இந்த ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்றவர்கள், ஊராட்சி ஒன்றியங்களிலே, அல்லது கிராமங்களிலே கிராம மணியக்காரர்களையும், கணக்குப் பிள்ளைகளையும் ஒழித்துவிட்ட காரணத்தால், இன்றையதினம் கிராமங்கள் அநாதைகளாக, கேட்பாரற்ற நிலையில் இருக்கின்றன என்பதை நான் சொல்லி, தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில் நீங்கள் இல்லை. உங்கள் மனசாட்சியே அதை அறிவுறுத்தும் என்று நான் அழுத்தந்திருத்தமாக நம்புகிறேன்.

இன்றையதினம் கிராமத்திலே இருப்பவர் யார் என்று சொன்னால், தலையாரிதான் இருக்கிறார், வெட்டியான்தான் இருக்கிறார். இன்னும் சொல்லப்போனால், யாராவது மக்கள் இறந்தால், அவர்களைப் புதைக்க வெட்டியான் தேவை. ஆகவே, இருக்கட்டும் என்று வைத்து விட்டார்களோ, என்னவோ? இல்லையென்றால், வெட்டியானையும் ஒழித்து விட்டிருப்பார்கள். கேட்டால், ஆதி திராவிட மக்களுக்கு 18 சதவீதம் வைத்து விட்டோம், பெண்களுக்கு 15 சதவீதம் வைத்துவிட்டோம் என்று அமைச்சர் அவர்கள் மார்தட்டிச் சொல்லிக்கொண்டிருப்பார்கள். நான் கேட்கிறேன், நீங்கள் ஓட்டை உடைசலான சட்டத்தை ஏன் போட்டீர்கள்? உண்மையிலே ஜனநாயகம் தழைக்க வேண்டும், ஊராட்சித் தலைவர்கள் வரவேண்டும், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் வர வேண்டுமென்ற எண்ணம் இருந்திருந்தால், ஓட்டை, உடைசல் சட்டத்தைப் போட்டிருப்பார்களா? இன்னும் சொல்லப்போனால், சட்ட விதிகளை உருவாக்குவதற்காக, ஸ்பெஷல் பி.டி.ஓக்களை அமைச்சருடைய தலைமையிலே போட்டு, 10 நாட்களுக்கு மேலாக உட்கார்ந்து உருவாக்கினார்கள். 10 ஸ்பெஷல் பி.டி.ஓ.க்களும் அமைச்சரும் உட்கார்ந்து, ஊராட்சி ஒன்றியத் தலைவர்களையும், ஊராட்சித் தலைவர்களையும் உருவாக்க வேண்டுமென்று சட்டத்தை உருவாக்கினார்கள்.

[திரு. பாபு ஜனார்த்தனன்] [1982 பிப்ரவரி 17

(மாலை 4-10)

இந்த ஓட்டை உடைசல் சட்டத்தை இவ்வளவு ஆராய்ச்சி செய்து, பெரிய பெரிய ஐ. ஏ. எஸ். அதிகாரிகளை எல்லாம் வைத்துக்கொண்டு உருவாக்கலாமா? அப்படி உருவாக்கிக் கொண்டுவிட்டு, ஊரெல்லாம் பெத்தபேரு, ஆனால் நீராகாரத்துக்கு வழியில்லை என்று சொல்வது போல, தேர்தல் என்று சொல்லி, ஆராய்ச்சி எல்லாம் செய்து, ஊராட்சித் தேர்தல், ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தேர்தல், ஆதிதிராவிடர்களுக்கு 18 சதவிகிதம், மகளிர்க்கு 15 சதவிகிதம் என்றெல்லாம் மிக அழகாக பேசினீர்களே ஒழிய, உண்மையில் தேர்தல் நடைபெறாத நிலைமை ஏற்பட்டது. தமிழ்நாட்டிலே ஒரு பழமொழி உண்டு. "முள்ளு முனையிலே மூணு குளம் வெட்டி, 2 குளம் பாழ், ஒண்ணுலே தண்ணீரே இல்லை," அண்ணா அவர்களும் அடிக்கடி இந்தப் பழமொழியைச் சொன்னார்கள். அதைப்போல மகளிர்க்குப் 15 இடம், கவர்ச்சிகரமாக முள்ளு முனையிலே '3 குளம் வெட்டி அதிலே 2-ஐ பாழடித்துவிட்டீர்கள். ஒன்றிலே தண்ணீர் இல்லை என்ற அளவுக்கு இந்தச் சட்டத்தை உருவாக்கியிருக்கிறீர்கள். ஏன் இதை நல்ல முறையில் நீங்கள் உருவாக்கவில்லை. இதற்காக நீங்கள் வெட்கப்படவேண்டும். திறமையற்ற நிலையில், சட்ட அறிவு இல்லாமல், ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தேர்தலை அறிவித்துவிட்டு, பின்னர் எதிர்கட்சிக் காரர்கள் ஸ்டே வாங்கிவிட்டார்கள் என்று சொல்வதற்கு உங்களுக்கு வெட்கமாக இல்லையா?

எவ்வளவு ஓட்டை உடைசலான சட்டம், தென்னார்க்காடு மாவட்டத்தில் அவியானூர் என்ற கிராமம், அந்த கிராமத்திலே அரிசனனே இல்லை, ஆனால் அந்த தொகுதியை அரிசனங்களுக்கு ஒதுக்கியிருக்கிறீர்கள். நாங்கள் ஒதுக்கிவிட்டோம் ஆனால் எதிர்கட்சிக்காரர்கள் தான் கோர்ட்டுக்குச் சென்று ஸ்டே வாங்கிவிட்டார்கள் என்று சொல்வதற்கு உங்களுக்கு வெட்கமாக இல்லை. தேர்தலை நடத்துவதற்கு உங்களுக்கு அறிவாற்றல் இல்லை, திறமை இல்லை, வக்கு இல்லை, வகை இல்லை. தேர்தலை நடத்தவேண்டும் என்ற எண்ணமே உங்களுக்கு இல்லை. இன்னும் ஒரு பழமொழியை சொல்வார்கள். தலைமுறை தலைமுறையாய் மொட்டையன் அவன் பெயர் கூந்தலழகன் என்று சொல்வார்கள், அதுமாதிரிதான் இருக்கிறது இதுவும். அழகான சட்டத்தை உருவாக்கி இருக்கிறோம் என்று சொல்லிவிட்டு இப்படி ஒரு ஓட்டை உடைசலான சட்டத்தைப் போட்டு இருக்கிறீர்கள். அரிசனனே இல்லாத இடத்தில் அரிசனங்களுக்கு ஒதுக்கி இருக்கிறீர்கள். இப்படி ஒரு சட்டத்தை உருவாக்கிவிட்டு தேர்தலை நடத்துகிறோம் என்று சொன்னால் என்ன அர்த்தம். இதை ஒரு சம்பிரதாயத்துக்குத்தான் சொன்னீர்களே தவிர, உண்மையிலேயே உங்களுக்கு தேர்தல் நடத்தவேண்டும் என்ற நல்ல எண்ணம், நல்ல ஆர்வம் உங்களுக்கு இருக்கிறதா? நிச்சயமாகக் கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1982 பிப்ரவரி 17] [திரு. பாபு ஜனார்த்தனன்]

இப்போது உயர்நீதி மன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். பின்னர் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போவார்கள். அது 3 ஆண்டு காலமாகும் அல்லது உங்கள் கதை முடிகின்ற வரையிலும் இந்தத் தேர்தல் நடக்கப்போவதில்லை. உங்கள் மனசாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கள். யாராவது, ஒரு 10 பேர்களை, பொதுவான 10 பேர்களை அழைத்து ஒரு விவாத மேடை அமைத்து கருத்துக்களைச் சொல்லச் சொன்னால், அவர்கள்கூட நிச்சயமாக இந்தத் தேர்தல் நடக்காது என்றுதான் சொல்வார்கள். நீங்கள் தேர்தலை நடத்துகின்ற அறிகுறியே இல்லை.

உதாரணத்திற்கு ஒன்றை சொல்ல விரும்புகிறேன். உங்கள் சட்டம் எவ்வளவு கேவலமான சட்டம் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் ராந்தம் என்ற ஊரை ரிசர்வ் தொகுதியாக வைத்திருந்தார்கள். அந்த ஊர் மக்கள் பி.டி.ஓ.க்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் மனுச் செய்து அந்தத் தொகுதியை ரிசர்வ் தொகுதியிலிருந்து பொதுத் தொகுதிக்கு மாற்ற வேண்டும் என்று மனுக் கொடுத்திருந்தார்கள். என்ன செய்திருக்கவேண்டும்? அந்த வெம்பாக்கம் ஒன்றியத்தைச் சேர்ந்த ராந்தம் என்ற கிராமத்தைச் சேர்ந்த அதிக பர்சன்டேஜ் ஆதிதிராவிடர்கள் இருக்கின்ற தொகுதிக்குக் கொடுத்திருக்கவேண்டும். ஆனால் ஆதிதிராவிடர் பர்சன்டேஜே வராத மோரணம் என்ற கிராமத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள். இது நியாயம் தானா? அந்த வெம்பாக்கம் ஒன்றியத்திலேயே நிறைய கிராமங்கள் இருக்கின்றன, அவைகளிலே ஒன்றிற்குக் கொடுத்திருக்கலாம். ஆனால் உங்களுக்குதான் தேர்தலை நடத்தவேண்டும் என்கின்ற நல்ல எண்ணம் கிடையாதே. உள்ளபடியே இதிலே அவதிப்படுகின்றவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள்தான். அது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எதிர்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், நாங்கள் எல்லாம் மிகவும் பாவம் செய்த சட்டமன்ற உறுப்பினர்கள். கிராமங்களுக்குச் சென்றால், விளக்குகள் எரியவில்லை என்று கேட்கிறார்கள். ஊராட்சி தலைவர்கள் இருந்தால் அவர்கள் குறிப்பிட்ட அந்த எலக்டிரிசிடி போர்டு ஆபீசுக்குச் சென்று பல்புகளைக் கொண்டு வந்து மாட்டி விளக்குகளை எரிய வைப்பார்கள்.

ஒவ்வொரு பிரச்னையிலும் சட்டமன்ற உறுப்பினர்கள் தான் பதில் சொல்லவேண்டிய நிலைமைகள் தொகுதிகளிலே இருக்கின்றன. ஒவ்வொரு கிராமங்களுக்கும் நாங்கள் செல்கின்ற நேரத்தில், குடிசைகளில் விளக்கு எரியவில்லை, சுகாதார நிலைமைகள் சரியில்லை, குடிநீர் இல்லை என்று சொல்கிறார்கள். இந்த வசதிகளையெல்லாம் கவனிக்க ஆட்கள் இல்லாமல் இருக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன.

[திரு. பாபு ஜனார்த்தனன்] [1982 பிப்ரவரி 17

இன்றையதினம் தனி அலுவலர்களை நியமித்து இருக்கிறீர்கள், அவர்கள் செய்து இருக்கும் கொள்ளைகள், அதன் தன்மைகள் குறித்து ஒரு பொது ஆய்வு செய்யவேண்டும். அது எந்த தனி அலுவலராக இருந்தாலும் சரி—நகராட்சியைச் சேர்ந்தவரோ அல்லது ஊராட்சியைச் சேர்ந்தவர்களோ யாராக இருந்தாலும் சரி—அவர்களைப் பற்றி பொதுவான முறையில் ஆய்வு செய்தால், நிலைமைகள் வெளிப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களெல்லாம் கேட்பாரற்ற முறையில் இருப்பதால், கொள்ளை அடித்துக்கொண்டு இருக்கிறார்கள். அதைப்போலவே, இந்த கிராம சேவக்குகள் தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் இந்தத் தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றுகிறார்களா அல்லது தங்களுடைய ஜோபியை நிரப்பிக்கொள்கிறார்களா என்று தெரியவில்லை. அந்த கிராம சேவக்குகள் தங்களுக்கு வேண்டியவர்களைக்கொண்டு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குச் சொல்கிறார்கள். இதிலே ஆளும் கட்சி இருக்கிறது என்று சொல்லவில்லை. அந்த கிராம சேவக்குகளுக்கு யார் கையூட்டு அல்லது நீட்டிய இடத்தில் கையெழுத்துப் போட்டுத் தருவார்களோ அவர்களிடத்தில் பணிகள் ஒப்படைக்கப்படுகின்றன. இந்தத் தன்னிறைவுத் திட்டத்தால் எந்தப் பணியும் நிறைவேற்றப்படவில்லை. தன்னிறைவுத் திட்டத்தில் தண்ணிர் கொடுக்கும் திட்டம் இல்லை. தண்ணீர் திட்டம் இல்லை என்பதைத்தான் 'தண்ணீர், தண்ணீர்' சினிமா கேலி செய்கிறது. நீண்டகாலமாக கிராமத்தில் உள்ள மக்களுக்குத் தண்ணீர் கிடைக்காத காரணத்தால், அந்தப் பகுதியில் உள்ள எல்லாக் கட்சியினரும், ஆளும்கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி அல்லது பொதுவாழ்விலே உள்ள யாராக இருந்தாலும் சரி, அவர்களெல்லாம் கிராம மக்களால் கேவலப்படுத்தப்படும் நிலையில் இன்றைக்கு இந்தத் தன்னிறைவுத் திட்டம்நிறைவேற்றப்படுகிறது. தண்ணீர் கொடுப்பது என்னுடைய துறையில் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லலாம். அது வாட்டர் போர்ட்டின் கீழ் வருகிறது என்று சொல்லாம். இருந்தாலும், தண்ணீர் கொடுப்பதற்காக எந்தவிதமான திட்டத்தையும் இந்த அரசு செய்யவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தத் தன்னிறைவுத் திட்டத்தில் மக்களுக்குத் தேவையான எந்தக் காரியமும் செய்யப்படவில்லை. இன்றையதினம் மிகவும் வறட்சியான நிலையில் திருவண்ணாமலை, போளூர், கலசப்பாக்கம், பெரணமல்லூர், வந்தவாசி, செய்யாறு, ஆரணி போன்ற பகுதிகள் இருக்கின்றன. மழை இல்லாத காரணத்தால் தண்ணீர் பற்றாக்குறை இருக்கிறது, அங்கே கடுமையான வறட்சி இருக்கிறது. அவற்றை நிவர்த்தி செய்வதற்கு நல்லதொரு திட்டத்தை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்தத் தேர்தல் நடக்கும், கிராமத்தில் ஜனநாயகம் தழைக்கும் என்ற நம்பிக்கை ஆளும் கட்சியில் இருப்பவர்களின் மனச்சாட்சிக்குக்கூட இருக்கவில்லை, எதிர்க்கட்சிகளுக்கு அந்த நம்பிக்கையே இல்லை, நாட்டு



1982 பிப்ரவரி 17] [திரு. பாபு ஜனார்த்தனன்]

மக்களுக்கு தேர்தல் நடக்கும் என்ற எண்ணம் இல்லை என்று எடுத்துச் சொல்லி, ஏதோ இந்த நாட்டு மக்கள் உங்களைத் தேர்ந்தெடுத்து இங்கே அனுப்பிவிட்டார்கள், அவர்களை வாழ வையுங்கள் என்று சொல்லி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே அரசால் கொண்டு வரப்பட்டு இருக்கின்ற ஊராட்சி தேர்தல்கள் குறித்த சட்டமுன்வடிவுகளின் மீதான விவாதமாக இருந்தாலும், இது போன்ற திருத்தங்கள் வருவது காலத்திற்கேற்ப ஜனநாயக அமைப்பிலே வரவேற்கக் கூடியதாக இருந்தாலும் கூட, நடைபெறுகின்ற காரியங்களின் நிலைமை என்ன என்பதைப் பார்க்கிறபோது, அங்கே தான் சற்று வருத்தமாக இருக்கிறது. இங்கே கொண்டு வந்து இருக்கக்கூடிய சட்டத்திலே அரிசனங்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, மலைவாழ் மக்களுக்கு 18% பஞ்சாயத்து தேர்தலிலும் பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தலிலும், பெண்களுக்கு 15% என்கிற நிலைமையிலும் ஒதுக்கப்பட்டு, ஒரு கொள்கையாக அது அறிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், இதைப் பார்க்கிறபோது, எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் சனார்த்தனம் அவர்கள் சட்டத்திலே ஓட்டை, அதனால் தேர்தல் நடக்கவில்லை, தேர்தல் மாமங்கத்திற்கு ஒரு முறை தான், அதாவது 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை தான் வரும் என்ற நிலைமையில் வைத்து இருக்கும் அரசாங்கமாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டினார்கள் என்பதை நான் மீண்டும் சுட்டிக் காட்டாமல் இருக்கமுடியவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாலை 4.20)

இன்றைக்கு ஜனநாயகத்தின் அடித்தளம் என்று சொல்லக்கூடிய அமைப்புகள் பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து ஒன்றியங்களும். அண்ணல் காந்தியடிகள் இந்த நாட்டுக்கு சுதந்திரம் தந்தது மட்டுமல்ல, இந்த நாட்டில் கிராம ராஜியம் அமைய வேண்டும்; மக்கள் தங்களைத் தாங்களே ஆள வேண்டுமென்ற ஒரு நிலையை ஏற்படுத்தித் தந்தார்கள். அதற்கு முத்தாய்ப்பு வைத்தது போல் தமிழ்நாட்டில் இந்த அமைப்புகளை மறைந்த அமரர் காமராஜ் அவர்கள் ஒளிமயமாக்கினார்கள். காந்தியடிகள் கண்ட கனவை நனவாக்கினார்கள். அது இன்றைக்கு சீர்கெட்டு, சின்னாபின்னமாகி, சீரழிந்து, பஞ்சாயத்து ராஜியம் இருக்கிறதா என்று கேட்கக்கூடிய வகையில் மிகவும் மோசமாக பஞ்சாயத்துக்கள் சீரழிந்து கொண்டிருக்கின்றன; ஜனநாயகம் செத்துக்கொண்டிருக்கிறது என்பதை என்னால் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, காந்திஜி கண்ட கிராம ராஜியம் சீரழிந்துவிட்டது என்று அவர்கள் சொல்கிறார்கள். அது தமிழ்நாட்டில் மட்டும்தான்

என்று சொல்கிறார்களா? அல்லது மற்ற மாநிலங்களிலும், காங்கிரஸ் ஆட்சியில் இருக்கிற பிற மாநிலங்களிலும் பஞ்சாயத்துத் தேர்தலை நடத்தாமல் இந்த நிலையில் இருக்கிறது என்று சொல்கிறார்களா?

திரு. இல. பலராமன்: இங்கே நாம் பேசிக்கொண்டிருப்பது தமிழ்நாட்டைப் பற்றித்தான். நாம் தமிழ்நாட்டில் வாழ்கிறோம். தமிழ்நாட்டின் நிர்வாகம் நம்மிடம் இருக்கிறது. ஆகையால் இங்கே நாம் என்ன செய்கிறோம் என்பதைத்தான் சொல்ல வேண்டுமே தவிர பீகாரிலே என்ன செய்கிறார்கள், அரியானாவிலே என்ன செய்கிறார்கள் அல்லது மற்ற மாநிலங்களிலே என்ன செய்கிறார்கள் என்று சொல்லவேண்டியதில்லை. நாம் எப்படி ஆளவேண்டும், நாம் எப்படி ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக நம்மை இங்கே அனுப்பி வைத்திருக்கிறார்கள் மக்கள். ஆகவே, அந்த வகையில் நாம் நம்முடைய கடமையைச் செய்ய வேண்டும்.

பஞ்சாயத்துத் தேர்தல் என்று அறிவித்துவிட்டு, அதிலே பெண்களுக்கு 15% என்று சொல்லி, எந்த அடிப்படையிலே இட ஒதுக்கீடு செய்தார்கள் என்று பார்த்தால், 1970 ஆம் ஆண்டு ஜனத்தொகை அடிப்படையில் என்று சொன்னார்கள். அந்தக் கணக்கைகூட சரியாக எடுத்திருக்கிறார்களா என்று பார்த்தால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அதனால் தான் உயர்நீதி மன்றத்தில் பல வழக்குகள் தொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு அரசியல் காரணம் எது வேண்டுமானாலும் கூறலாம். ஆனால் ஆளும் கட்சியிலே, எங்கெங்கே யாரை நிறுத்தலாம், எங்கெங்கே யாரை வரவிடக்கூடாது, எப்படி எல்லாம் தடுக்கலாம் என்று கூடிப் பேசியதாக ஒரு தகவல் இன்றைக்கு மக்கள் மத்தியிலே இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தேர்தல் வரக் கூடாது, நிர்வாகம் சீர்கேடு அடைந்தாலும் பரவாயில்லை என்று நினைத்தக் காரணத்தால்தான் 1970 ஆம் ஆண்டு ஜனத்தொகை அடிப்படையில் நீங்கள் இடங்களை ஒதுக்கீடு செய்தீர்கள். அதை எதிர்த்து நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். எப்படி சீர்கேடு நடந்திருக்கிறது என்பதை அனுபவப்பூர்வமாக நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

வடாற்காடு மாவட்டத்திலே ஒரு கிராமம். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. அன்பழகன் அவர்களுடைய தொகுதியில் இருக்கிற ஒரு கிராமம் கொத்தூர் என்பது. அந்த ஊர் ஆந்திர மாநிலத்தின் எல்லையில் இருக்கிறது. அந்தக் கிராமத்தில் இன்றைக்குக்கூட பெண்கள் தன்னுடைய மகனாக இருந்தால் கூட, ஆண்கள் மத்தியிலே ஒரு தாய் உட்காரும் வழக்கம் இல்லை; அந்த அளவுக்கு அவர்கள் தயக்கம் காட்டுகிறார்கள்; ஒதுங்கி வாழ்கிறார்கள். அந்தக் கிராமம் பெண்களுக்கு என்று ஒதுக்கீடு செய்யப்பட்டது.





திரு. தி. அன்பழகன்: துணைத் தலைவரவர்களே, ஒரு விளக்கம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல அங்கே நிலைமை இல்லை. தாய்மார்கள் எல்லாம் மற்ற பகுதிகளிலே இருப்பதைப் போல இருக்கிறார்கள். அவர்களுடைய சுதந்திரம் பாதிக்கப்படவில்லை. அவர்கள் உரிமை பாதிக்கப்படவில்லை, தேர்தலின்போது எனக்கு அதிகமாக அவர்கள் ஓட்டளித்திருக்கிறார்கள். அவர்கள் எந்தவிதமான தயக்கமும் இல்லாமல் சுதந்திரமாகவே இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாய்மார்கள் சுதந்திரமாக இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அவர்களுடைய சுதந்திரம் பறிக்கப்பட்டதாக நான் சொல்லவில்லை. ஆனால் அந்தப் பகுதியிலே பெண்கள் எந்த அளவுக்கு சமுதாயத்திலே நடந்துகொள்கிறார்கள் என்பதை அனுபவப்பூர்வமாக எடுத்துச் சொன்னேன். அப்படிப்பட்ட ஒரு இடத்தை பெண்களுக்கு என்று ஒதுக்கினால், அந்தப் பெண்கள் முன்வந்து ஆண்கள் மத்தியில் இருப்பார்களா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதனால் பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்தது தவறு என்று சொல்லவில்லை. இருந்தாலும் ஆந்திரப்பிரதேசத்தின் எல்லை ஓரத்தில் இருக்கிற அப்படிப்பட்ட ஒரு கிராமத்தை பெண்களுக்கு என்று ஒதுக்கியதை அந்தப் பகுதி மக்கள் விரும்பவில்லை என்பதை நான் ஒரு குற்றச்சாட்டாக அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இனிமேலாவது இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நான் ஜனநாயகம் செத்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னாலும் ஜனநாயகம் தழைக்க வேண்டுமென்றால் 1956 ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி நீங்கள் ஏன் தேர்தலை வைக்கக்கூடாது என்று கேட்கிறேன். அதை மீண்டும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேண்டுமானால் இதுபோன்ற சட்டங்களை இயற்றி அந்த சட்டங்கள் நிறைவாக இருக்குமேயானால் மீண்டும் தேர்தலை நடத்தலாம். அப்போது நீங்கள் நினைக்கக்கூடிய விதத்திலே பெண்களுக்கு எவ்வளவு ஒதுக்கவேண்டும் என்றும், அரிசனங்களுக்கும் மற்றவர்களுக்கும் எவ்வளவு ஒதுக்கவேண்டும் என்றும் முடிவு செய்து கொள்ளலாம். ஆனால் தற்காலிகமாக நிர்வாகம் செம்மையாக இருக்க வேண்டும் என்றால் 80 சதவீதம் கிராமங்களிலே இருக்கின்ற மக்களுக்கு ஜனநாயகத்தைக் கொடுக்க வேண்டும் என்றால் தேர்தலை விரைவாக நாளை மறுதினம்கூட மாண்புமிகு அமைச்சரவர்கள் நடத்தலாம். 58-வது சட்டப்படி தேர்தலை பழைய முறையிலேயே நடத்தலாம் என்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்று நான் அமைச்சரவர்களிடத்திலே கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் நீங்கள் ஜனநாயகத்தைக் கொடுத்தவர்கள் ஆவீர்கள். ஆகவே அதற்கு நீங்கள் தயாராக வேண்டும்.

அடுத்து, மாவட்ட நிர்வாகத்திற்கு ஆணையாளரையே தனி அதிகாரியாக நியமித்திருக்கின்ற நிலைமை இருக்கின்றது. அந்தத் தனி அதிகாரிகளினுடைய நிலைமை இன்றைக்கு காட்டு தர்பரர் தான். அதை யாரும் மறுக்க முடியாது. அவர் நினைத்ததுதான் நிலைமை. பஞ்சாயத்து தலைவராக ஆணையாளர் இருக்கிறார். அவரே செலவழிக்கவேண்டும். அவரே கணக்குப் பார்க்கவேண்டும். கடந்த காலங்களில்கூட இதுபற்றி எல்லாம் அவையிலே சுட்டிக் காட்டினார்கள். ஆனால் அந்த நிலைமை நிவர்த்திக்கப்பட்டதா என்றால் இல்லை, இந்த நிலைமையினை மாண்புமிகு அமைச்சரவர்கள் சிந்திக்க வேண்டும்.

எங்களுடைய கிராமத்திலே நானும் பஞ்சாயத்துத் தலைவராக இருந்திருக்கிறேன். கடைசியில் நீங்கள் பஞ்சாயத்துக்களைக் கலைக்கும் வரையில் இருந்தேன். நான் அதிகமாகச் செலவழிக்காமல் மிகவும் சிக்கனமாக மக்களுக்கு தேவையானவற்றைச் செய்து 40 ஆயிரம் ரூபாய் அங்கே வைத்துவிட்டுத்தான் வந்தேன். ஆனால் இப்போது என்ன செய்திருக்கிறார்கள் என்று நான் கேட்டால்கூட எனக்கே கணக்கு கிடைக்கவில்லை. ஆகவே இப்படி அவர்களாகவே அதை எடுப்பதும் செலவழிப்பதுமான காரியங்கள் நடந்துகொண்டு வருகின்றன. கிராமங்களில் இப்படிப்பட்ட நிலைமை இருந்து வருவது நியாயமா? அதிகாரிகளுக்கு அந்த அதிகாரத்தைத் தரலாமா? அவர்கள் என்ன உத்தமர்களா? ஜனநாயகம் இருக்கும்போது கூட அதை ஒட்டியே பல பிரச்சினைகள் எழுகின்ற சூழ்நிலை இருக்கின்றபோது இப்போது கேட்பாரற்று கிடக்கக்கூடிய அந்த கிராமங்களின் நிலைமை என்ன என்பதை நாம் யோசிக்க வேண்டும்.

அடுத்து, தன்னிறைவுத் திட்டம் என்பது நல்லதொரு திட்டம். அதை யாரும் ஆட்சேபிக்க முடியாது, ஆனால் இந்தத் திட்டத்திற்காக செய்யக்கூடிய காரியங்களை எல்லாம் பார்க்கின்றபோது மிகவும் வருத்தமாக இருக்கின்றது. ஏதோ சாலைக்கு மண் அடித்தோம் என்ற நிலை இருக்கின்றதே தவிர அதுபற்றி சரியாகக் கணக்கு எடுக்க முடியாது. கட்டக்கூடிய கட்டடங்களாவது நல்ல நிலைமையிலே இருக்கின்றதா என்றால் இல்லை. போளூர் பகுதியிலே இராமநாதபுரம் என்ற ஊர் இருக்கின்றது. அந்த ஊரிலே 60 ஆயிரம் ரூபாய் செலவிலே ஒரு பஞ்சாயத்துக் கட்டிடத்தைக் கட்டி இருக்கிறார்கள். அந்தக் கட்டிடத்திலே போய் கையை வைத்தால் சிமெண்ட் எல்லாம் கீழே விழக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்கின்றது. எதிர்க்கட்சி உறுப்பினராக இருக்கின்ற இந்த பலராமன் தொகுதியிலே மட்டும் இந்த நிலைமை என்று இல்லாமல் ஆளும் கட்சியின் அங்கத்தினர்கள் இருக்கக்கூடிய தொகுதிகளிலும் இது போன்ற நிலைமைகள் தான் பரவலாக இருக்கின்றது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதை எப்படி நிர்வகிப்பது என்ற வகையிலே யோசித்து காரியமாற்றவேண்டும். ஆனால்





இப்போது தான்தோன்றித்தனமாக அந்த அதிகாரிகளே செலவழிக்கக்கூடிய நிலைமையில் பல ஊழல்கள் அதிகாரிகள் மத்தியிலே இருக்கின்றது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

சிமெண்ட் வழங்குவதைப் பொறுத்தவரையிலே பி. டி. ஓ. மத்தியிலேயும் அந்த நிலைமை இருந்தது. அவருக்கு அடுத்த அதிகாரியிடத்திலேயும் அந்த நிலைமை இருக்கின்றது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்து, பஞ்சாயத்து ஒன்றியங்களைப் பராமரிப்பதற்கு கண்காணிப்புக் குழுக்களை அமைத்திருக்கிறார்கள். அந்தக் குழுக்கள் கூடுகின்றதா, ஆலோசனைக் குழு கூடுகின்றதா? என்பது தெரியவில்லை. அந்தக் குழு அதிகாரப் பற்றற்றதுதான் இருந்தாலும் முழு அதிகாரமும் கொடுக்கப்பட்டு நிர்வகித்து வருகின்ற அந்த அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் என்பதைக் கண்காணிப்பதற்குக் கூட அங்கே தகவல் இல்லை.

[மாலை 4.30]

சட்டமன்ற உறுப்பினர்களுக்குக்கூட பி.டி.ஓ. அவர்கள் அந்தப் பஞ்சாயத்து ஒன்றியங்களில் என்னென்ன காரியங்கள் நடைபெறுகிறது என்ற விவரங்களை கூறுவது இல்லை. ஏதாவது தீர்மானங்கள் போடப்பட்டதா? செலவுகள் ஏதாவது செய்யப்பட்டதா? தீர்மானங்களின் வகை என்ன, அதனால் நன்மை என்ன போன்ற விவரங்கள் எதுவும் யாருக்கும் தெரிவதில்லை. இந்த ஆலோசனைக் குழுக்கூட்டம் கூட ஏதோ பெயரளவில் தான் கூட்டப்பட்டு, எழுதி வைத்துக் கொண்டு ஏதோ படிக்கக் கூடிய நிலையில்தான் நடக்கிறது.

கூட்டப்படும் கூட்டங்களின் விவரமும் முன்னதாகவே உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்துவது கிடையாது, ஒன்றிரண்டு மணி நேரத்திற்கு முன்னால் அதற்கான நோட்டீஸ் வருகிறது. அல்லது ஒரு நாளைக்கு முன்னால் வருகிறது. ஆகையால் இதையெல்லாம் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என் தொகுதியைப் பற்றிய ஒரு முக்கியமானப் பிரச்னை. சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் இரண்டு வளர்ச்சி மன்றங்களுக்கு நான் உறுப்பினராக இருக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. கலசப்பாடி ஒன்றியமும், போளூர் ஒன்றியமும் இரண்டும் இணைந்ததான தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராக வந்திருக்கிறேன். ஆனால் ஒரு வளர்ச்சி மன்றத்தில்தான் உறுப்பினராக இருக்க வேண்டும் என்ற ரீதியில் சொல்வது நியாயம் இல்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

கடையம்பாடியின் ஒரு பகுதி மக்களும், போளூர் தெற்குப் பகுதி மக்களும் சேர்ந்துதான் என்னை தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஆகவே ஒரு பகுதியில் உள்ள 50,000 வாக்காளர்களுக்கு சேர வேண்டிய நல்லபணிகளை காண்காணிக்க முடியாத சூழ்நிலை எனக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அந்த இரண்டு மன்றங்களிலுமே உறுப்பினராக இருக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இந்த நிலை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், இருப்பதாக தெரிகிறது. இதனால் அரசுக்கு எந்தவித நஷ்டமும் ஏற்படாத வகையில், அல்லது அதிகப்படியான படியை (தொகையை) வாங்க வேண்டிய சூழ்நிலை இல்லாத வகையில் இந்த இரண்டு மன்றங்களிலும் கலந்துக்கொண்டு, அங்குள்ள பிரச்னைகளில் விவாதித்து பங்குபெறும் வகையில், இதை வகை முறை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, தன்னிறைவுத் திட்டமானாலும் சரி, தேசிய வேலை வாய்ப்புத் திட்டம் என்றாலும் சரி, அவைகள் நல்லமுறையில் செம்மையாக நடைபெற்று, நாட்டு மக்களுக்கு பயன் தரவேண்டுமானால், 1958ஆவது பஞ்சாயத்துச் சட்டப்படி தேர்தலை நடத்தி, ஜனநாயகத்தைக் காக்கவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், அரசையும் நான் மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். பஞ்சாயத்து ராஜ்யம்தான் ஜனநாயகத்தின் ஆணிவேர். அதை நீங்கள் களைந்துவிடுவீர்களேயானால் ஜனநாயகம் செத்துவிடும் என்பதை உணர்ந்து செயலாற்ற வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொண்டு, வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் 10 உறுப்பினர்களுக்கு மேல் பேச வேண்டியிருப்பதால். சுருக்கமாக ஒவ்வொருவரும் 5 நிமிடங்களுக்குள் முடித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். திரு. பி. சொரணம்.

திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பலராமன் அவர்கள் தேர்தலை உடனேயே நாளையே நடத்த வேண்டும் என்று சொன்னார்கள். அப்படி என்றால், பெண்களுக்கும் அரிசனங்களுக்கும் இடம் ஒதுக்கீடு செய்தது தவறு என்று சொல்கிறாரா? அதை அவர் காங்கிரஸ் கட்சியின் சார்பில் சார்பாக சொல்லுகிறாரா அல்லது தனிப்பட்ட முறையில் சொல்லுகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. இல. பலராமன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு விளக்கம் தர வேண்டிய அவசியம் எனக்கு இருக்கிறது. 58 ஆவது சட்டப்படி தேர்தலை நடத்திவிட்டு, பிறகு சட்டங்களை திருத்தி அமைத்து



மக்கள் மத்தியிலே வைக்கும்போது, அது நீதிமன்றம் உட்பட எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற அளவுக்கு இருக்குமேயானால், உங்களிடமே கலைக்கின்ற அதிகாரமும் இருப்பதால், மறுபடியும் கலைத்துவிட்டு அடுத்த தேர்தலை நீங்கள் நடத்தலாமே என்பதுதான் என்னுடைய வாதம். இதிலே எந்தவித மாறுபட்ட கருத்தும் இல்லை. உங்களுடைய கட்சியானாலும் சரி, எங்களுடைய கட்சியானாலும் சரி, ஜனநாயகம் காக்கப்பட வேண்டும் என்பதுதான் இதனுடைய நோக்கம். எல்லோருடைய விருப்பமும் அதுதான்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத் தலைவருக்கான ஒதுக்கீடு. ஊராட்சித் தலைவருக்கான ஒதுக்கீடு சம்பந்தமாக கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டத்திருத்தத்தை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஆதரித்து என்னுடைய கருத்துக்களை கூற நான் முன் வந்திருக்கிறேன்.

ஏற்கெனவே இத்தகைய ஒதுக்கீடு கொண்டு வரப்படவேண்டும் என்று இந்த சட்ட மன்றத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கோரிக்கைகள் வைத்தோம். அதற்கு பிறகு நடந்த சர்வகட்சி கூட்டத்தில், இவைகளைப் பற்றியெல்லாம் விரிவாக ஆராய்ந்துதான், இந்த ஒதுக்கீடு கொண்டு வரப்பட்டிருக்கிறது. அந்தக் கூட்டத்திலே கலந்து கொண்ட கட்சிகள் ஒப்புக்கொண்ட ஒதுக்கீட்டின் அடிப்படையில்தான் இந்த ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் செய்யப்பட்டு, கொண்டு வரப்பட்டிருக்கிறது.

அதற்கிடையில் பல்வேறு விதமான நிகழ்ச்சிகள் எல்லாம் ஏற்பட்டு, கோர்ட்டுக்குப் போகவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதை கொஞ்சம் சாங்கோபாங்கமாக ஆராய்ச்சி செய்திருந்தால், அதில் கொஞ்சம் அதிகப்படியான கவனம் செலுத்தியிருந்தால். அந்த நிலையை தவிர்த்திருக்கக்கூடும். ஆகவே, அதைப்பற்றி சில விவரங்களை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்டத்திருத்தத்திலேயே சொல்லுகிறபோது ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒதுக்கப்பெறுவதை சொல்கிறபோது. பெண்களுக்கானாலும் சரி, அரிசனங்களுக்கானாலும் சரி, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு அளவாக ஒன்றியங்களையும், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அளவாக ஊராட்சி மன்றங்களையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அந்தந்த வட்டாரங்களில் உள்ள அரிசனங்களின் எண்ணிக்கை அடிப்படையில், விகிதாசார அடிப்படையில் ஒதுக்க வேண்டும். அதிகாரிகள் கையில் விட்டு விட்டு அவர்களால் ஒரு லிஸ்ட் தயாரிக்கப்பட்டு கெஸெட்டில் நோட்டிபிகேஷன் வருகிறபோது, ஆட்சேபனை கேட்கிறபோது அவற்றிற்கு பல்வேறு விதமான

[திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்] [1982 பிப்ரவரி 17

ஆட்சேபணைகள் வந்திருக்கின்றன, இந்த ஆட்சேபணைகள் வரும்போது ஒன்றை அரசாங்கம் சிந்தித்து ஏற்பாடு செய்திருந்தால் இவைகளைத் தவிர்த்திருக்க முடியும் என்று எங்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகின்றது. இருக்கிற அனைத்துக் கட்சிகளையும் கூட்டி வைத்து இந்த இந்த ஒன்றியங்களை அரிசனங்களுக்கு என்று ஒதுக்கலாம், இந்த இந்த ஒன்றியங்களை பெண்களுக்கு என்று ஒதுக்கலாம் என்று அந்தந்த மாவட்டங்களில் இருக்கிற அனைத்துக் கட்சிகளையும் கூப்பிட்டு பேசி இருந்தால் நன்றாகயிருந்திருக்கும். இந்த ஒன்றியத்தில் அரிசனங்கள் அதிகமாக இருக்கிறார்கள், ஆகவே இதை அவர்களுக்காக ஒதுக்குகிறோம், இந்த ஒன்றியத்தைப் பெண்களுக்காக ஒதுக்குகிறோம் என்று சொல்லி அனைத்துக் கட்சி பிரதிநிதிகளையும் கூப்பிட்டு வைத்து பேசி முடிவு செய்திருந்தால் இந்தப் பிரச்சினையைத் தவிர்க்க முடியும். ஆனால் அந்நிலையைத் தவிர்ப்பதற்கு அதிகக் கவனம் செலுத்தப்படவில்லை. சில தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன.

உதாரணத்திற்காகச் சொல்ல வேண்டுமென்றால், கன்னியாகுமரி மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் முதலில் குருத்தங்கோடு பெண்களுக்காக என்று ஒதுக்கப்பட்டது. பின்னர் அது மேல்பரப்பிற்கு மாற்றப்பட்டிருக்கிறது. பார்க்கப்போனால் குருத்தங்கோடில்தான் பெண்கள் அதைவிட அதிகமாக இருக்கிறார்கள். ஆக, முதலில் ஒதுக்கியதுதான் சரி. ஆனால் பல்வேறு நிர்ப்பந்தங்கள் காரணமாக, பல்வேறு நண்பர்களின் வற்புறுத்தல் காரணமாக குருத்தங்கோடிலிருந்து வேறு இடத்திற்கு மாற்றப்பட்டது. இப்படிப்பட்டதொரு நிலை ஏற்பட்டிருப்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

அதேபோல் *** *** *** *** அரிசனங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுகுறித்து ஆட்சேபணை வந்த பிறகு அது *** மாற்றப்பட்டிருக்கிறது. இது போன்று பலயிடங்களில் ஒன்றியங்களை, ஏற்கனவே அரிசனங்களுக்காக, பெண்களுக்காக என்று ஒதுக்கப்பட்டிருந்த ஒன்றியங்கள் நிர்ப்பந்தம் காரணமாக மாற்றவேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, கறாராக இருந்திருந்தால் இந்தப் பிரச்னையே வந்திருக்காது. ஆக, கோர்ட்டுக்குப் போவதைத் தவிர்த்திருக்க முடியும்.

கோர்ட்டுக்குப் போவதில் கூட அரசாங்கம் காலாகாலத்தில் முயற்சி எடுத்து கோர்ட்டில் மனு சமர்ப்பித்து ஸ்டே வெக்கேட் செய்ய பெட்டிஷன் போட்டிருந்தால் தேர்தலை சீக்கிரமாக நடத்த உதவியாக இருந்திருக்கும். ஒரு ஒன்றியத்தினை முதலில் அரிசனங்களுக்காக அல்லது பெண்களுக்காக என்று ஒதுக்கி விட்டு பின்னர் வேறு ஒன்றியத்தை ஒதுக்குவது என்று வரும்போது பல்வேறு விதமான சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆகவே ஏற்பட்டிருக்கிற தவறுகளை நிவர்த்தி செய்து, காலாகாலத்தில்

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1982 பிப்ரவரி 17] [திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்]

ஸ்டே வெக்கேஷன் பெட்டிஷன் போட்டு சீக்கிரத்தில் தேர்தல்கள் நடத்தவேண்டுமே தவிர அதல்லாமல் இதை கொண்டுவர வேண்டாம் என்றோ அல்லது நீண்ட காலத்திற்கு ஒத்தி வைப்பதோ சரியல்ல. ஒதுக்கீடே வேண்டியதில்லை என்றோ அல்லது பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்றோ இருக்கக் கூடாது.

அடுத்து வாக்காளர்கள் ஜாபிதாவைப் பொறுத்தவரையில் ஒன்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். வாக்காளர்கள் ஜாபிதாவை புதுப்பிக்கின்றோம் என்று சொல்கிறார்கள், நீக்கல், சேர்த்தல் என்று வரும்போது ஒரு ஊரில் ஒருவர் ஒரு வீட்டில் இருக்கிறார், அவர் பக்கத்து வீட்டுக்கு மாறிப் போகிறார்.

[மாலை 4-40]

அந்த பக்கத்து வீட்டில் குடியேறினார் என்ற ஒரே காரணத்திற்காக, அவருடைய பெயரையே நீக்கிவிட்டார்கள். இதிலே வேடிக்கை என்னவென்றால், அவர் ஏற்கனவே நாமினேஷன் போட்டிருக்கிறார், பழைய லிஸ்டிலே பேர் இருப்பதை வைத்து. அதற்குப் பிறகு நாமினேஷன் பேப்பரை பரிசீலனை செய்கிற போது, புதிய லிஸ்டிலே அவர் பெயர் இல்லை என்று சொல்லி நீக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. அப்படி பாதிக்கப்பட்டவர்களில் அனைத்திந்திய அண்ணா தி. மு. கழகத்தைச் சார்ந்தவர்களும் இருக்கிறார்கள். பி. எஸ். மணி என்பவரின் நாமினேஷன் அப்படி தள்ளுபடி செய்யப்பட்டது, ஆகவே, வாக்காளர் ஜாபிதாவை நல்லமுறையில் திருத்தி, நல்ல முறையிலே வாக்காளர் பட்டியலை வெளியிட்டு, இந்தத் தேர்தலை விரைவிலே நடத்த வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கேட்டுக்கொண்டு, இந்தத் திருத்தத்தை ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். *** என்ற ரெபரென்ஸ் வந்தது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: அப்படி மாற்றி இருப்பது உண்மை. நான் நிரூபிக்கிறேன். அப்படிப்பட்ட நிர்ப்பந்தம் இருந்திருக்கிறது. அதுவும் உண்மை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் இதற்கு பதில் சொல்ல முடியாததினால் தான் சொல்கிறேன். அந்த வார்த்தைகள் வேண்டாம்.

[1982 பிப்ரவரி 17

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே' * * * ஒன்றியம் மாற்றப்பட்டது என்று மதிப்பிற்குரிய சொரணம் அவர்கள் கூறினார்கள். எந்த நிர்ப்பந்தத்தின் அடிப்படையிலும் இந்த ஒதுக்கீடு செய்யப்படவில்லை. அப்படி நிர்ப்பந்தம் ஏதாவது ஏற்பட்டு, அப்படி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தால்' அதற்கு ஆதாரம் இருந்தால, தயவுசெய்து இங்கே என்னிடம் கொடுத்தால், நீங்கள் சொன்ன கருத்தை ஏற்றுக் கொள்வதில் ஆட்சேபணை இல்லை. ஆனால், ஆதாரம் இல்லை என்று சொன்னால், அந்த வார்த்தைகளை எடுத்துவிடுவது நல்லது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேசும்போது திரு. சொரணம் அவர்கள் சொன்ன பொதுவான சொந்தக்கருத்து தேவையில்லை. ஏற்கனவே, இந்த மாதிரி பேசவேண்டாம் என்று நாம் முடிவெடுத்திருக்கிறோம். இப்போது, இந்தப் பிரச்னையைப் பற்றிச் சொல்லுகிறீர்கள். * * * என்ற அந்த வார்த்தைகள் தேவையில்லை.

திரு. என். ஏ. பூங்காவனம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சிகள் தனி அதிகாரிகள் நியமனம் சம்பந்தமாக வந்துள்ள சட்டமுன்வடிவின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஆரம்பத்திலே தேர்தல் துவங்கிய காலத்தில், பெண்களுக்கென்று ஒதுக்கியும், பிற்பட்ட மக்கள் என்ற முறையில் அரிசனங்களுக்கு என்று ஒதுக்கியதையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்றிருக்கிறது. மேலும், அமுலாக்க வேண்டுமென்று கோருகிறது. இந்தத் தீர்மானத்தை அமுலாக்குகின்ற சந்தர்ப்பத்தில், நம்முடைய அரசாங்கம் மற்றக் கட்சிகளை அணுகி, ஒட்டுமொத்தமாக விவாதித்து, எந்தெந்த யூனியன் என்றும், எந்தெந்தப் பகுதி என்றும் விவாதித்து முடிவெடுத்திருந்தால், இந்தப் பிரச்னை எழுந்திருக்காது என்பது ஒரு அம்சம்.

தேர்தல் சம்பந்தமாக பல்வேறு பகுதிகளிலே இருந்து பல பேர் கோர்ட்டுக்குச் சென்றிருக்கிறார்கள். கோர்ட்டிலே தடையைப் பெற்று, அதனால் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டிருப்பதற்காக நாம் இப்போது இங்கே விவாதித்துக் கொண்டிருக்கிறோம். அப்படி எந்தெந்தப் பிரச்னையின் பேரில் தடை கொடுக்கப்பட்டிருக்கிறதோ, என்னென்ன பிரச்னைகள் எழுப்பப்பட்டிருக்கிறதோ, அந்தப் பிரச்னைகளை யொட்டி நம்முடைய அரசாங்கம் இப்போது என்ன நிலையை எடுத்துக்

* * * மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





கொண்டிருக்கிறது என்பது ஒன்று. இரண்டாவது, இந்த கோர்ட்டில் நடவடிக்கைகள் நீடிக்கப்படுமேயானால், இது தொடருமேயானால், உச்ச நீதி மன்றத்திற்குச் சென்றால் 5 ஆண்டுகள் ஆகக்கூடிய ஒரு அபாயகரமான சூழ்நிலை உள்ளது என்பதையும் நான் பணிவோடு அரசுக்குத் தெரிவித்து கொள்கிறேன். மூன்றாவதாக, தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீடிக்க வேண்டுமென்று இங்கே வந்திருக்கக்கூடிய இந்த அம்சத்தை நான் மி வும் வன்மையாக ஆட்சேபிக்கிறேன். அதற்கு அடிப்படையான காரணம் தனி அதிகாரிகள் செயல்படக் கூடியமுறை என்ன என்பதை அமைச்சர் அவர்களுக்கு பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஊட்ட உணவுத் திட்டம், வேலைக்கு உணவுத் திட்டம், கிராம ஒருங்கிணைப்புத் திட்டம், வறட்சிப் பணித் திட்டம், தன்னிறைவுத் திட்டம் என்று இப்படி பல திட்டங்களை நாம் கிராமங்களிலே அமுல்படுத்துகிறோம்.

அமுல் நடத்துகிறபோது அந்த அதிகாரிகள் அப்படிச் செயல்படுகிறார்கள் என்பதைப் பற்றிப் பல புகார்கள் பல ஒன்றியங்களிலிருந்து அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குப் போய்க் கொண்டிருக்கிறது. அது அமைச்சருக்கு நன்றாகத் தெரியும். உதாரணமாக, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை ஊர்நல அலுவலர் இளங்கோ என்பவர் பத்து டன் அரிசியை ஒரு லாரியில் ஏற்றி மொத்தமாக விற்றுவிட்டார். அவர் அப்படி யாருக்கு விற்றார் என்ற விவரங்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் புகார் கொடுத்தேன். இதுவரை என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று தெரியவில்லை. தேர்தல் அலுவலர் மட்டும் மாற்றப்பட்டிருக்கிறார்.

இரண்டாவதாக, அந்த ஒன்றியத்தில் நடைபெறுகிற பல்வேறு ஊழல்கள் சம்பந்தமாக பொதுமக்கள், தனியார்கள், பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அகில இந்திய அண்ணா தி.மு.க. வினர் உட்பட ஒன்றாக நின்று குற்றங்களை எடுத்துச் சொல்லியும், புகார்களைக் கொடுத்தும் அந்த பி.டு.ஒ. வை மாற்ற முடியவில்லை. தன்னிறைவு திட்டத்தையும் வேறு பல திட்டங்களையும் நிறைவேற்றுவதில் ஊழல் நடக்கிறது என்று மனுக்கள் அமைச்சருக்கு அனுப்பப்பட்டன. கடைசியில் அவரை டி.ஆர்.டி. மாற்றம் செய்தார்கள். துரதிருஷ்டவசமாக இத்துறைக்குச் சம்பந்தம் இல்லாத அமைச்சர் தலையிட்டு அந்த மாற்றம் நிறுத்தப்பட்டதாகக் கேள்விப்படுகிறேன். இப்படிப்பட்ட நிலை ஜனநாயகத்தில் நடைபெறலாமா? ஊழல் செய்கிற அதிகாரி குற்றம் செய்கிற அதிகாரி-பச்சையாகச் சொன்னால் லஞ்சம் வாங்குகிற அதிகாரி மாற்றப்பட்டதற்குக் குறுக்கே ஒரு அமைச்சர் இருக்கிறார் என்றால் அது எப்படி நியாயமாகும். எப்படி நாம் ஜனநாயகத்தைக் காப்பாற்றப் போகிறோம்? அப்படிப்பட்டவர்களுக்கு மேலும் அதிகாரங்களைக் கொடுப்பது நியாயந்தானா? பஞ்சாயத்துத் தேர்தல்கள் இல்லாத காரணத்தால் இப்படிப்பட்ட திட்டங்களுக்காகச் செலவழிக்கப்படும் பணம் மக்களுக்குப் போய்ச் சேரவில்லை. அது மக்களுக்குப் போய்ச் சேரவேண்டுமென்று சொன்னால் உடனடியாகத் தேர்தலை நடத்தவேண்டும்.

எல்லோரும் எல்லாமும் பெறத்தக்க வகையில், அரிசன். பெண்கள் ஆகியோருக்கு ஜனநாயக அமைப்புகளிலே பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்ற முறையிலே காந்தியடிகள் கண்ட ராமராஜ்யம், அண்ணா அவர்கள் கண்ட கிராம ராஜ்யம் ஆகியவை இணைந்த ஒரு புது நிலையை தமிழ்நாட்டிலே உருவாக்க வேண்டுமென்ற முறையிலே கிராமங்கள், நகரங்கள் என்ற வித்தியாசம் இல்லாமல் சிறு நகரம். பெரு நகரம் என்று உருவாக வேண்டுமென்ற நிலையில் மிகப் பெரிய மாற்றத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்தது என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த அரசு 13-5-1981 அன்று பேரூராட்சி நிர்வாக தனி அமைப்புகளை ஏற்படுத்த ஆணையிட்டது. அதன் மூலம் 619க்கும் மேற்பட்ட பேரூராட்சிகள் பலன் அடையக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

தன்னிறைவித் திட்டம் என்பது கிராமங்களுக்கு மட்டுமல்லாமல், அந்தத் திட்டத்தைப் பேரூராட்சிகளும் பெற வேண்டுமென்ற நல்ல எண்ணத்தை இங்கே சொல்லியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, 8-12-81 ஆம் நாள் மாண்புமிகு அமைச்சரவர்கள் கலந்து கொண்ட உயர்மட்டக் குழுவிலே, இந்தப் பேரூராட்சிகளெல்லாம் நகராட்சிகளைப்போல விளக்கவேண்டும் அந்த வகையில் அமைப்புகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்திருப்பது இந்த அரசின் மனச்சாட்சியை எடுத்துக் காட்டும் வகையில் அமைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்திலே, பேரூராட்சிகளுக்குத் தனி அலுவலர் என்ற நிலையில் இருப்பவர்கள் பி.டீ.ஓ, அல்லது டீ.டீ.ஓ. என்று பேரூராட்சிகளுக்கு அப்பாற்பட்ட இடத்திலே மாறுதலுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இதற்கான சிறப்பு அலுவலர் என்று பி.டீ.ஓ.வைச் சொன்னாலும் சரி, டீ.டீ.ஓ வைச் சொன்னாலும் சரி பல ஃபைல்கள் செல்லும் பொழுது அவர்களுக்கு ஒரு வழி, இவர்களுக்கு ஒரு வழி என்று இருப்பதால், அந்த எக்சிகியூட்டிவ் ஆபீசர் என்று சொல்லப்படுகின்ற செயல் அலுவலரையேத் தனி அலுவலர் என்ற நிலையை உருவாக்கி அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தால் மேலும் இதை முனைப்பாகச் செயல்படுத்த முடியுமா என்பதைப்பற்றிப் பரிசீலனை செய்து முடிவுக்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எப்படியோ தேர்தல்கள் ஒத்தி வைக்கப்படக் கூடிய இந்தச் சூழ்நிலையில் மக்கள் குழு மிகச் சிறந்த கண்காணிப்புக் குழுவாக, ஏற்படுகின்ற எத்தனையோ பிரச்னைகளில் தலையிட்டு, மாதத்திற்கு ஒருமுறையாவது மக்கள் குழு என்ற அந்தக் கூட்டத்தைக் கூட்டி, முழுதும் பரிசீலித்து கிராமங்களில்



ஏற்படுகின்ற நன்மை. தீமைகளையும், நடைமுறையில் இருக்கின்ற சிக்கல்களையும் புரிந்து கொண்டு அதற்கேற்றவாறு செயல் திட்டங்களை உருவாக்கும் வகையில் நீங்கள் ஆணையிட வேண்டும் என்றும், அப்படிப்பட்ட அமைப்பாக அதைக் கொண்டு வரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே, சிலர் சொன்னார்கள். தேர்தலைப் பற்றிக் கவலைப் படுகிறார்கள், அதனால்தான் ஒத்தி வைக்கிறார்கள். என்றெல்லாம் சொன்னார்கள். யார் போட்டி போடப் போகிறோம் என்றெல்லாம் அவர்களுக்கே தெரியவில்லை என்றெல்லாம் கூறினார்கள். என்னுடைய தொகுதியிலேயே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒன்றியத் தலைவர் பொறுப்புக்கு நிற்க வேண்டுமென்று கருதி ஒரு ஆசிரியரை தன்னுடைய வேலையை இராஜினாமா செய்துவிட்டு, இன்றைய தினம் வேலையும் இல்லாமல் பொறுப்பும் இல்லாமல் தேர்தலைச் சந்திக்காமல் இருக்கிறார் என்ற நிலையிருக்கிறது என்றால் இப்படிப்பட்ட ஒரு நிலை வரும் என்று தெரிந்திருந்தால் அவர் இராஜினாமா செய்ய வேண்டிய நிலைமைக்கு நாங்கள் விட்டிருப்போமா என்று நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, நாங்களெல்லாம் தேர்தலில் வேட்பாளர்களைத் நிறுத்திவிட்டோம். அவசரம் அவசரமாக நிறுத்திவிட்டோம் என்று சொல்பவர்களைப் பார்த்துக் கேட்கிறேன். திருடனே திருடன் திருடன் என்று கத்திக்கொண்டு ஓடுவது திருட்டுத் தனத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு உபயோகப்படுமே தவிர அவைகள் உண்மைகள் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் எப்பொழுது தேர்தலிலே ஈடுபட்டாலும்கூட, கடைசிக் கட்டத்திலேதான் எதிர்க்கட்சி வரிசையிலே யார் யார் நிற்கிறார்கள் என்பதையெல்லாம் பார்த்து அதற்குப்பிறகு யாரைத் தேர்தலுக்கு நிறுத்திகிறோம் என்று கடைசி நாளில் தான் வெளியாகும். அது எங்களுக்கு நாங்களே ஏற்படுத்திக் கொண்ட ஒரு முறை. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சீட்டாடத் தெரியாதவர், ஆனால் சதுரங்கம் விளையாடுவார், சீட்டாட்டத்தில் எந்தச் சீட்டுத் தேவையில்லையோ அதை முன்பே கழித்து விடலாம் சதுரங்கத்தில் எந்தக் காயை நகர்த்த வேண்டுமென்று அறிந்திருப்பவர்; எதிரி வைக்க வேண்டுமென்று தீர்மானிப்பதில் சமர்த்தர். அந்த முறையில்தான் அரசியல் விளையாட்டிலும் ஆடுகிறாரே தவிர வேறல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு விழாக்களுக்கு ஏற்பாடுகள் செய்து அமைச்சரிடம் அனுமதி பெற்று ஒப்புதல் வாங்கிய பின்னர் பி.டி.ஒ. சவால் விடுகிறார். ஒரு அமைச்சர் இல்லாவிட்டால் நான் வேறு அமைச்சரைக் கொண்டு வருகிறேன் என்று சொல்லி இன்னொரு அமைச்சரைக் கொண்டு விழா நடக்கிறது. அழைப்பிதழில் என் பெயர் கிடையாது. அழைப்பும் கிடையாது. இது என்ன நியாயம்? இது என்ன நீதி? இப்படிப்பட்ட நடைமுறை நிலவினால் எப்படி நாட்டில் ஜனநாயகம் நிலவும்?

வட ஆற்காடு மாவட்டத்தில் வடக்கு, தெற்கு என்று இரு வளர்ச்சி மன்றங்கள் இருக்கின்றன. வடக்கு வளர்ச்சி மன்றத்தின் அதிகாரி நடராஜன் என்பவர், ஏறக்குறைய ஒன்பது ஆண்டுகளாக இருக்கிறார். சர்க்காரிலிருந்து ஏராளமான நிதிகளை பல திட்டங்களை நிறைவேற்றுவதற்காகத் தருகிறார்கள். வறட்சிப் பணிகளை நிறைவேற்ற வேண்டுமென்று சட்டசபையில் நாம் பேசுகிறோம். ஊழல் அதிகம் நடக்கிறதே, அதை எப்படித் தடுப்பது என்று கேட்டால், இந்த அரசாங்கத்தில் வேறு என்ன நடக்கும் என்ற வார்த்தைகளை ஒரு அதிகாரி, வளர்ச்சி மன்ற அதிகாரி சொல்லுகிறார். அதுவும் கம்யூனிஸ்ட் கட்சிக்காரனிடம் பார்த்துச் சொல்கிறார். ஒன்பது ஆண்டு காலம் அங்கே இருந்த அவருக்கு மாற்றம் வருகிறது. எப்படி? வடக்கு வளர்ச்சி மன்றத்திலிருந்து தெற்கு வளர்ச்சி மன்றத்திற்கு மாற்றப்படுகிறார். முதல் அறை தெற்கு. உள்ளே போனால் வடக்கு. இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்போது டி.டி.ஒ.வாக எட்வின் என்பவர் வந்திருக்கிறார். அவர் இரண்டு மூன்று கிராமங்களிலே குறிப்பாக எந்தத் திட்டம் போட்டாலும் கணக்குக் காட்டாமலே ஊழலுக்கு உடந்தையாக இருக்கிறார்.

(மாலை 4.50)

இதைப் பற்றி நான் நேராக வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேயே சொன்னேன். அரிசியில் பத்து சதவீதத்தை வேண்டுமானால் எடுத்துக் கொள்ளுங்கள், ஒரேடியாக 50 சதவீதத்தை எடுக்காதீர்கள், விற்காதீர்கள், நியாயமாக எடுத்துக் கொள்ளுங்கள். அளவோடு எடுங்கள் என்று சொன்னேன். தன்னிறைவுத் திட்டம் ஒன்றிலே தான் காண்ட்ராக்ட் விடப்படுகிறது. மற்றத் திட்டங்களிலே ஊர் நல அலுவலர்கள், பி.டி ஒக்கள் டி.டி.ஒ.க்கள், பி.ஏ. இந்த நான்கு பேர்களும் சேர்ந்து பங்கு போட்டுக் கொள்கிறார்கள் என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். சபையிலே அமைச்சர் சொல்கிறார்கள். திட்டங்கள் அறிவிக்கப்படுகின்றன, பணம் ஒதுக்கப்படுகிறது. ஆனால் மக்களுக்குப் பலன் போய்ச் சேரவில்லை. அங்கே மாவட்ட ஆட்சித் தலைவர் இளைஞர், கொஞ்சம் நல்லவர்கூட, நான் இப்படிச் சொல்வதால் அவர் கம்யூனிஸ்ட் என்று முடிவு செய்துவிடாதீர்கள், அவர் சுறுசுறுப்பானவர் கறாராக





இருக்கிறார். 36 ஒன்றியங்களிலேயும் நன்றாக வேலை வாங்குகிறார். அவரைப் போன்றவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களாக இருந்தால் போதும். எங்கேயும் தவறுகள் நடப்பதற்கு வாய்ப்பு இருக்காது. ஒரு குறிப்பிட்ட திட்டத்திற்கு 45 லட்சம் என்று ஒதுக்குகிறார்கள். அதிலே பல லட்சத்தைக் கொள்ளையடித்துவிடுகிறார்கள். பெரும் பகுதியை எடுத்துக் கொள்கிற நிலைமை இருக்கிறது. சமுதாய மறுமலர்ச்சி என்று நாம் பேசுகிறோமே அது வருமா என்ற சந்தேகம் இருக்கிறது. ஆகவே சமுதாய மறுமலர்ச்சி வரவேண்டுமென்றால் அமைச்சர் அவர்கள் கோர்ட்டிலே உள்ள தடையை நீக்குவதற்கும் என்ன என்ன பிரச்சினைகள் இருக்கின்றனவோ, அவர்கள் சொல்லியிருக்கிறார்களோ அதையெல்லாம் போக்குவதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி தேர்தலை உடனடியாக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு மக்கள் நலன்களைக் காக்கக்கூடிய முறையிலே அங்கே பி.டி.ஒ. ஆக இருப்பவரை வேறு எங்காவது அனுப்பினால் அங்கேயும் குளோஸ் ஆகிவிடும். அவர் சாதாரண ஆள் அல்ல. ஒரு உதாரணம் சொல்கிறேன். அவசர நிலை இருந்தபோது. அவர் கே. சேஷாவிடமே போய்ச் சொன்னார், நான் ஒரு அரிஜன, என்மேல் பொய்ப் புகார்கள் எழுதுகிறார்கள் என்று சொல்லியிருக்கிறார். அவரால் தமிழ்நாட்டிலே உள்ள 375 ஒன்றியங்களிலேயும் சிமின்ட் கொடுக்காதே என்ற சூழ்நிலை உருவாயிற்று அந்த பி.டி.ஒ.க்கு 10 ரூபாய் மூடைக்குக் கொடுத்தால் கையெழுத்துப் போடுவார். அவரை பி.டி.ஒ.வாக போடாமல் வேறு எங்காவது உட்கார்ந்துகொண்டு இருக்கின்ற வேலையிலே போடவேண்டும். உடனடியாக தேர்தல் நடத்த நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்கள், எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். நன்றி வணக்கம்.

*டாக்டர் கே. சமரசம்: துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற உள்ளாட்சித் துறை சம்பந்தப்பட்ட 3 மசோதாக்கள் மீது பேசுகின்ற வாய்ப்பை அளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உண்மையிலேயே இந்த மசோதாக்கள் இந்த நேரத்திலே வருவது ஒரு துரதிருஷ்டம்தான். இது எதிர்பாராதது என்று சொன்னால் மிகையாகாது. காரணம் ஆளுங்கட்சியோ அரசோ இப்படிப்பட்ட மசோதாவைக் கொண்டுவருவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையில்—எப்படியும் தேர்தலை நடத்தியே தீரவேண்டுமென்று எண்ணத்திலே தான் அரசு இருந்தது—உண்மை செருப்டணிந்து கொண்டு வீட்டைவிட்டு வெளியேறுவதற்கு முன்னதாக பொய் உலகத்தையே வலம்வந்து வாசல் படியில் வந்து நிற்கும் என்று சொல்வதைப்போல பல பிரச்சினைகள் எழுந்ததால் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலையில் நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாக்கு என்று சொல்வார்களே அது போலே ஏதோ சில பிரச்னைகளை அவர்கள் சொன்னார்கள் ஆனால் நடைபெற்ற எல்லாத் தேர்தல்களிலும் கடுமையான தோல்வியைக் கண்டு திருப்பத்தூர் தேர்தலில் திருகு வலியைக் கண்டு, பிரதான எதிர்க்கட்சி என்ற வரிசையிலிருந்து எங்கே மூன்றாவது வரிசைகளுக்கு வந்து விடுமோ என்று அச்சப்படுகின்ற அளவிற்கு நிலைமைகள் போனதற்குப் பிறகுதான் இப்படிப்பட்ட நிலைமைகள் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

அதுமட்டுமல்ல, எத்தனையோ பிரச்னைகள் உள்ளாட்சித் தேர்தல்கள் சம்பந்தமாக வரும்பொழும் அதைப்பற்றி பேசுவதற்காக உயர் மட்டக் குழுக்களைக் கூட்டும்பொழுது அதிலே வந்து தங்களுடைய கருத்துக்களை அவர்கள் சொல்லியிருந்தால் இப்படிப்பட்ட பிரச்னைகள் ஓரளவிற்கு சுமுகமாக முடிந்திருக்கும். ஆனால் உழும்பொழுது ஊர்பேல் போய்விட்டு அறுக்கும் நேரத்தில் அரிவாளைக் கொண்டு வந்து கதிர் எங்கே இருக்கிறது என்று கேட்டதைப்போலத்தான் இப்பொழுது அவர்கள் கூறுவது இருக்கிறதே தவிர வேறல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். படிப்பது பாரதம், இடிப்பது பெருமாள் கோயில் என்பதைப்போலதான் பிரதான எதிர்க்கட்சி இருப்பது உண்மையிலேயே வேதனை தரத்தக்கதாக இருக்கிறது. அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகம், ஆந்திரா போன்ற மாநிலங்களில் உள்ளாட்சித் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டிலேதான் பாரதி சொன்ன பிரச்சினைகளையும், காந்தியடிகள் சொன்ன கருத்துக்களையும் உணர்ந்து அரிசனங்களும், பெண்களும் உள்ளாட்சி மன்றங்களுக்குத் தலைவர்களாக வரவேண்டும். அவர்களும் இந்த நாட்டை ஆள வாய்ப்பு பெற வேண்டும் என்கின்ற வகையில் செய்யப்பட்ட சட்டங்களெல்லாம் பழுது பட்டுப் போகின்ற அளவிற்கு எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் காரணமாக இருப்பது உண்மையிலேயே வருந்தத்தக்கது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாலை 5-00)

சாதாரணமானவர்களுக்கு பைத்தியம் பிடித்தால் டாக்டர் வைத்தியம் பார்ப்பார். ஆனால் டாக்டருக்கு பைத்தியம் பிடித்தால் யார் வைத்தியம் செய்வது? அதைப்போல மக்களுக்குப் பிரச்னைகளை தோன்றினால் அரசியல் கட்சிகள் தீர்வு காண வேண்டும். அரசியல் கட்சிகளுக்கே நோய் வந்து விட்டால் தீர்ப்பது யார் என்பதை எதிர்க்கட்சியிலே எண்ணிப் பார்த்து இனிமேலாவது இடித்துச் சொல்லக்கூடிய வகையிலே, ஆலோசனை சொல்லக்கூடிய வகையிலே பிரச்னைகளைத் தெளிவாகத் தீர்க்கக்



கூடியவகையிலே ஆலோசனைகள் சொன்னால் எளிதாக முடியும்; அடுத்துத் தேர்தல் நடைபெறக்கூடிய முறையிலே வழி வகை செய்யவேண்டும் என்று கேட்டு, நான் இந்தத்தீர்மானத்தை வரவேற்று முடிக்கிறேன்.

திரு. ஏ. டி. குலசேகர்: துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகளின் தனி அதிகாரிகளின் பதவிக்காலத்தை நீடிப்பது ஜனநாயக விரோதமாகும்; அண்ணல் காந்தியார் அவர்கள் கிராம இராஜ்யம் வேண்டும் என்றார். கிராமப் பஞ்சாயத்துக்கள் ஜனநாயகத்தின் தொட்டில், பல ஆண்டுகளாக ஊராட்சித் தேர்தல்களை நடத்தாமல் இருப்பது முறையானதும் அல்ல.

உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வந்தபொழுது, சர்க்கார் சாமர்குளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிக்கு நிதி அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். அந்த நிதி முறையாக செலவு செய்யப்பட வேண்டும். அந்த நிதியைப் பொது மக்களுக்கு நல்லமுறையிலே செலவு செய்ய அதிகாரிகள் முன் வரவில்லையென்ற ஒரு குற்றச்சாட்டைக் கூறிக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

என் பகுதியிலே விளாங்குறிச்சி ஏடு அவினாசிப் பாதை காளப்பட்டியிலிருந்து வினாசிப் பாதை, மதுக்கரை ஒன்றியத்திலே உள்ள வெள்ளலூர் பகுதியிலேயிருந்து சிங்காநல்லூர் செல்லும் பாதைகளுல் உள்ள பாலங்கள் 10, 15 ஆண்டுகளாக இன்னும் பழுது பார்க்கப் படாமலே உள்ளன. குடிதண்ணீர் தொட்டிகள் புதிதாகக் கட்டப்படாவிட்டாலும், இடிந்துபோன தொட்டிகளையும், இடிந்துபோன பள்ளிக்கட்டிடங்களையும் கட்டித் தராமலிருக்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. பம்ப்செட் பழுதுதடைந்தால் தனி அதிகாரியிடம் கூறினால், 1 மாத காலம் ஆகிறது அதை மாற்றியமைப்பதற்கு. குடிதண்ணீர் இல்லாமல் தாய்மார்கள் மிகவும் கஷ்டப்படுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

வட்டார வளர்ச்சிக் கூட்டம் நடைபெற்றால், அந்தக் கூட்டங்களுக்குச் சட்டமன்ற உறுப்பினர்களை அழைப்பதே இல்லை. அது நடைபெறுகின்றதா இல்லையா என்று சட்ட மன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதே இல்லை. கூட்டங்கள் கூடும்போது யார், யாரோ இணைந்து கொள்கிறார்களே தவிர சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு அனுப்பப் படுவதில்லையென்பது எல்லோரும் அறிந்த ஒன்றாகும்.

குடிநீர் விநியோகம் செய்யும் தொழிலாளிக்கு கிராமப் புறத்திலே ரூ. 45 தான் சம்பளமாக அளிக்கப்படுகிறது. அவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை அரசு ஏற்று அவர்களுடைய மாதச் சம்பளத்தை அதிகரிக்கவேண்டுமென்று கேட்டு கிராமப்புறத்திலே துப்புரவு செய்யும் தொழிலாளர்கள் எண்ணிக்கை கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு எந்த அள…

இருந்ததோ, அதே அளவில்தான் இன்றளவும் உள்ளது கிராமப் புறத்திலே துப்புறவு செய்யும் தொழிலாளிகளுடைய எண்ணிக் கையை அதிகரித்து அவர்களுடைய மொத்த வருமானத்தையும் அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தனி அதிகாரிகள் எல்லா வேலைகளையும் காலதாமப்படுத்தி செய்கிறாகள் என்பதற்கு ஒன்றைச் சொல்இறேன். என்னுடைய ஒன்றியத்திலே எனக்கே தென்னங்கன்னு வேண்டுமென்று 1½ ஆண்டுகளுக்கு முன்னாலே, ரூ. 100 அட்வான்ஸ் கொடுக்கப் பட்டும், இன்றுவரை எனக்கோ, மற்றவர்களுக்கோ, தென்னங் கன்றுகள் கொடுக்கப்படவில்லை. இதைப்பற்றி பலமுறை அரசாங்கத்திடம் கூறியும் இன்னும் கொடுக்கப்படவில்லை என்று கூறியிருக்கிறார்கள்.

வேலைக்கு உணவுத் திட்டத்தில் கொடுக்கப்படுகின்ற அரிசி மிகவும் மோசமான நிலையில் உள்ளது என்று அங்கேயுள்ள அதிகாரிகளும், அதை வாங்கிச்செல்கின்ற மக்களும் கூறுகிறார்கள் அவர்களுக்கு நல்ல அரிசியைக் கொடுக்க இந்த அரசு முன் வரவேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன்.

..

*திரு. டி. மணி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியத் தனி அதிகாரிகளின் பதவிக்காலம் நீட்டிப்பு சம்பந்தமாக கொண்டு வந்திருக்கின்ற மசோதாவின் மீது ஒரு சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். தேர்தலை நடத்தாமல் இவர்களுடைய பதவிக் காலத்தை நீட்டித்துக் கொண்டே போனால் ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லாத காரணத்சால், கிராமப் பகுதிகளிலே எந்த அளவுக்கு அவர்கள் ஆற்ற வேண்டிய பணிகளை, கடமை களை சரிவர செய்ய முடியவில்லை என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஏற்கனவே கடந்த ஆண்டு தமிழகம் பூராவும் வறட்சியால பாதிக்கப்பட்ட போது எங்கள் குமரி மாவட்டத்தில் சில பகுதிகளிலும் கடுமையான வறட்சி பாதித்தது குறிப்பாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வேண்டுமென்று குமரி மாவட்டத்தில் உள்ள விளவங்கோடுதாலுகாவில் சில இடங்களில் வேண்டும் என்று கேட்டு வலியுறுத்தினோம். ஏற்கனவே அதற்கு முன்னாலே மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்திலே மருதங்கோடு கிராமப் பஞ்சாயததிலே ஒரு குடிநீர் திட்டம் இருக்கிறது. அங்கேயுள்ள கிணற்றில் போதுமான தண்ணீர் இருக்கின்றது. அந்த தண்ணீரை விநியோகம் செய்யும் குழாய்கள் பழுதடைந் திருக்கிறது. பம்ப்செட் பழுதடைந்துள்ளது. அதை சரி செய்ய வேண்டும் என்று அந்த அதிகாரியிடத்தில் சொல்லலாம் என்று சென்றால் அவர் கிடைப்பதே கிடையாது. அதுமட்டுமல்ல மூன்றாவது வருடங்களாக இப்படி அந்த நிலை தொடர்ந்து வருகிறது. மருதங்கோடு பஞ்சாயத்து நிலை இருக்கின்றது. இதைப்போல பல பஞ்சாயத்துகள் இருக்கின்றன. நகரப் பஞ்சாயத்துக்களின் நிலையும் இதுதான், குடிநீர் நிலை இதுதான்,





அடுத்து குழித்துறை நகரப் பஞ்சாயத்தில் குடிநீர் திட்டம் இருக் கின்றது. அங்கும் போதுமான தண்ணீர் இருக்கின்றது. ஆனால் அதை விநியோகம் செய்கின்ற இயந்திரங்கள் பழுதடைந்தது. குழாய்கள் பழுதடைந்து தண்ணீர் சப்ளை செய்ய முடியவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லாத காரணத்தினால், இந்த நிலை நீடிக்கிறது. தனி அதிகாரிகள் சரிவர செயல்படுவ தில்லை.

அடுத்து ஊராட்சிகளுடையவும் கிராம பஞ்சாயத்து களுடைய சுகாதாரத்தைப் பார்க்கும் போது, துப்புறவு வேலைகள் சரிவர நடப்பதில்லை. கிராம அபிவிருத்தி வேலைகள் சரிவ்ர நடத்தப்படுவதில்லை. இது சம்பந்தமாக, தற்போது தன்னிறைவுத் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் முன்சிறை ஊராட்சி ஒன்றியத்தில் கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அந்தப் பணிகள் முழுமையாக, காலா காலத்தில் முடிப்பதற்கு முடியவில்லை. மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு இருந்திருந்தால் அந்த வேலைகள் காலாகாலத்தில் முடிந்திருக்கும். அப்படிப்பட்ட அமைப்பு இருந்தால்தான் எந்தெந்தப் பகுதிக்குத் தேவையான சாலைகள், எந்தெந்தப் பகுதிக்குத் தேவையான குடிநீர் திட்டம், எந்தெந்தப் பகுதிக்குத் எந்தெந்த வேலைகள் தேவை என்று தீர்மானிக்கப்பட்டு முறை யாக காரியங்கள் நடந்திருக்கும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு இல்லாத காரணத்தினால், பல்வேறு குறைபாடுகள் உள்ளது. அதிகாரிகள் தாங்களாகவே திட்டங்களைப் போட்டுக் கொள்ளுகிறார்கள். அந்தத் திட்டங்களை அந்தத் தொகுதிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் இடத்திலும் சொல்வதில்லை.

அடுத்து கிராத்தூர் கிராம பஞ்சாயத்திலே தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ஒரு ஆண்டிற்கு முன் ஆரம்பிக்கப்பட்ட கிராம குடிநீர் திட்டம் தொடங்கி இன்னும் முடிக்கப்படாமல் இருக் கின்றது.

அதுபோலவே இன்று மேல்புறம் ஒன்றியத்தில் இந்தத் தடவை தன்னிறைவுத் திட்டம் புதிதாகக் கொண்டுவரப்பட்டிருக் கிறது. இப்போது இணைப்புச் சாலைகள் என்று நாம் எழுதி வைத்திருக்கிறோமே தவிர, அந்தத் திட்டங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு பஞ்சாயத்து யூனியன்களிலே நடை பெறுகின்ற தன்னிறைவுத் திட்ட வேலைகளைப் பார்ப்போமே யானால் இந்த இணைப்புச் சாலைகள் என்று சொல்வது, இரண்டு தனிச்சாலைகளாக இருக்கின்றனவே தவிர இணையாத சாலை களாகத்தான் இருக்கின்றன. காரணம் அந்தப் பகுதியில் நிலப் பரப்புகள் அதிகப்படியான விலையில் விற்கின்றன. யாரும் இலவசமாகக் கொடுக்கத் தயாராக இல்லை. அப்படி அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்கு அங்கே இருக்கின்ற ஆதிகாரி களுக்கு அதிகாரம் இல்லை என்று சொல்லுகிறார்கள். எனவே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இருந்திருந்தால்

இந்த குறைபாடுகளை களைய முடிந்திருக்கும். ஆக லட்சக் கணக்கான ரூபாய்கள் செலவு செய்யும் இணைப்புச் சாலைகளை போடமுடியாத நிலையில் இருப்பதைப் பார்க்கிறோம். அதற்குக் காரணமாக இருக்கின்ற இந்த தேர்தலை காலாகாலத்தில் நடத்த முடியாமல், தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிக்கும் நிர்பந்தத்தில் இருக்கிறோம்.

அடுத்து துப்புரவுப் பணி என்று எடுத்துக் கொள்ளும்போது படுமோசமான நிலைதான் இருந்து வருகிறது. குறிப்பாக கணியக்காய்விளைஎன்னும் ஒரு நகர பஞ்சாயத்து இருக்கின்றது. நம்முடைய அமைச்சர் பெருமக்கள் எல்லாம் எங்கள் மாவட்டத் திற்கு வரும் போது திருவனந்தபுரத்தில் வந்து முதன் முதலாக சந்திக்கின்ற இடம் அது அந்த கணியக்காவிளை நகர பஞ்சாயத்தில் ஒரு யூரினல் இருக்கின்றது. அதில் வரும் கழிவுநீர் எல்லாம் தெருவிலே வருகின்ற துர்பாக்கிய நிலை இருக்கின்றது. அந்த அளவுக்கு சீர்கேடான நிலை இருக்கிறது. 15 ஆண்டு களுக்கு முன்னாலே அந்தக் காலக்கட்டத்தில் நம்முடைய கிராமப் பகுதிகளிலே எவ்வளவு துப்புரவுப் பணியாளர்கள் இருந்தார்களோ அதே ஆட்கள் தான் 2 பேர்கள் இருந்தால் அதே இரண்டு பேர்கள் தான் இருக்கிறார்கள். இந்த 15, 20 ஆண்டுகாலத்தில் எவ்வளவு மக்கள் தொகை உயர்ந்திருக்கின்றது. அதற்கு ஏற்றவாறு அந்த எண்ணிக்கை இருக்கிறதா என்றால் இல்லை. குறிப்பாக நான் இன்னொன்றை சொல்ல விரும்பு கிறேன். எங்ளுடைய மாவட்டத்தைப் பொறுத்த மட்டில், 67 நகர பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அந்த நகர பஞ்சாயத்துக் களுக்கு எல்லாம் சேர்த்து ஒரு புதிய அதிகாரியை போட்டிருக் கிறார்கள். ரீஜினல் டைரக்டர் என்பவரைப் போட்டு நெல்லை யிலே வைத்திருக்கிறார்கள்.

(மாலை 5.10)

அந்த ரீஜினல் டைரக்டரை அணுகாமல், அவர்களுடைய அனுமதி இல்லாமல், நகரப் பஞ்சாயத்தில் எந்தப் பணியும் அங்கே நடைபெறுவது இல்லை, நடக்காது. அங்கேயிருக்கும் நகரப் பஞ்சாயத்து அதிகாரிகளைப் பார்க்கப்போனால், அவர்கள் வாரத்திற்கு இரண்டு முறை நெல்லைக்கு வந்து விடுகிறார்கள் அந்தப் பெரிய அதிகாரியைப் பார்ப்பதற்கு. குறிப்பாக ஒரு விஷயத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பாகோடு நகரப் பஞ்சாயத்தில் பெரியவர் நேசமணியின் பெயரில் ஒரு பாலம் இருக்கிறது. அந்தப் பாலத்திலே இரண்டு மின்சார விளக்குகள் பொறுத்தப்பட வேண்டுமென்று சில மாதங்களுக்கு முன்னால் வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே நாங்கள் இரண்டு எம்.எல்.ஏ.க் களும் கோரிக்கை வைத்தோம். அப்போது, அந்த வளர்ச்சி மன்றக் கூட்டத்திற்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை. அதற்கு அதிகாரம் இல்லை, அந்த ரீஜினல் டைரக்டரைப் பார்த்தால் தான் முடியும் என்று சொல்லிவிட்டார்கள். அவரைக் கேட்டால் அவர் இன்னொரு விதமாகச் சொல்கிறார்கள்.





மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்): தற்போது அவை முன் உள்ள சட்டமுன்வடிவு பஞ்சாயத்து அதிகாரிகளுக்கு பதவி நீட்டிப்பது குறித்ததாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மானியக் கோரிக்கை மீது பேசுவது போல் எல்லா வற்றையும் இதிலே பேசக்கூடாது. மானியக் கோரிக்கை வருகிற போது அதைப்பற்றியெல்லாம் பேசலாம். இப்போது பஞ்சாயத் துக்களுக்கு தேர்தல் நடத்துவது குறித்து மட்டும் பேசவேண்டும்.

திரு டி. மணி: ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டித்துக் கொடுப்பதற்கு பதிலாக இந்தத் தேர்தலை விரைவில் நடத்துங்கள், அப்படி நடத்தாத காரணத்தால் என்னென்ன விளைவுகள் ஏற்பட்டுள்ளன என்பதைச் சொல் வதற்குத்தான் அந்தத் தகவல்களைத் தந்தேன். ஆகவே நான் கேட்டுக்கொள்வது எல்லாம், அந்த ரீஜினல் டைரக்டர் பதவியை கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் தனியாக நியமனம் செய்து தரவேண்டும், அந்த ஊராட்சிகளுக்கும், ஒன்றியங்களுக்கும், உடனடியாகத் தேர்தல் நடத்த வேண்டும். மிகக் குறுகிய காலத்தில் அந்தத் தேர்தலை நடத்துவதன் மூலம் மக்களின் யதார்த்தமான ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கவும், அங்கு ஜனநாயக அமைப்புகளை ஏற்படுத்தவும், அந்தக் கிராமத்தில் உள்ள மக்கள் பிரச்னைகள் தீர்க்கவும், அரசு கொண்டுவந்துள்ள தன்னிறைவுத் திட்டங்கள் சரிவர முறையாக நிறைவேற்றப் படவும் இயலும் என்பதைத் தெரிவித்து, அந்தத் தேர்தலை நீங்கள் வேகமாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: மிஸ்டர் சேர்மன் என்னுடைய பெயர் பேசுவோர் பட்டியலில் இருக்கிறதா? என்னை இன்னும் அழைக்கவில்லையே என்பதால் கேட்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்): மாண்புமிகு உறுப்பினர் பெயரில் இளையபெருமாள் என்றாலும் அரசியலில் பெத்தபெருமாள். ஆகவே, அவர் பெயர் அவருடைய கட்சி சார்பில் இங்கே எழுதி கொடுக்கப்பட்டு இருக்குமானால், நான் நிச்சயமாக அழைக்கிறேன்.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு தற்காலிக தலைவர் அவர் களே, மாண்புமிகு உறுப்பினர் மணி பேசும்போது ..........

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. துரை முருகன்): இந்த இருக்கையில் யார் அமர்ந்து இருந்தாலும், அவர் தலைவராகத் தான் கருதப்பட வேண்டும்.

I shallread the observation of Kaul and Shakdher in Parliamentar Practice:

"Any member of the panel of Chairman, when presiding over a sitting of the House, has the same powers as the Speaker when so presiding. The rulings of a chairman are not subject to any criticism nor open to any debate or appeal. In order that there is an authoritative ruling a Chairman often reserves major issues for decision by the Speaker. A reference to Chairman's conduct while in the Chair amounts to contempt of the House and therefore, he is shown all respect as Presiding Officer of the House."

என்று சொல்லப்பட்டு இருக்கிறது. எனவே 'தலைவர்' என்று தான் அழைக்க வேண்டும்.

திரு. கோவைத் தம்பி: மாண்புமிகு உறுப்பினர் மணி பேசும் போது' இந்த பில்லின் மீது மட்டும் பேசவேண்டும் என்று சொன்னீர்கள்' பிறகு நீங்களே..

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்): இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் கிடையாது. என்னுடைய தீர்ப்பைப்பற்றி விமர்சனம் செய்யக் கூடாது. தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் உட்கார வேண்டும்.

I have explained to the House. The Hon'ble member should not question the chair.

THIRU K. RAMANI: Please listen to my point of order.

திரு. எம். எஸ். மாணிக்கம்: சார், பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்): பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லை. நீங்கள் உட்காருங்கள்.

திரு. கு. ரமணி: மிஸ்டர் சேர்மென் சார், ஒரு விளக்கம். நீங்கள் இந்த சபைக்கு ஒரு நல்ல விஷயத்தை எங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தீர்கள்; வரவேற்கிறோம். ஆனால் உங்களை மிஸ்டர் சேர்மென் என்று அழைக்கலாம் இல்லையா?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்): அழைக்கலாம். அதில் தவறு இல்லை. அடுத்து ஆற்காடு திரு. சேதுராமன் அவர்கள்.

திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சிகள் பற்றிய மசோதாவும், ஊராட்சி ஒன்றிய தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிக்கின்ற மசோதாவையும் ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முதலிலே உள்ளாட்சித் தேர்தலுக்கு இட ஒதுக்கீடுகள் பற்றிய மசோதா மீது பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் என்னை ஆற்காடு சேதுராமன் என்று அழைத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.



தேர்தலை அறிவித்த போது, எங்களுடைய அரசு நிச்சயமாக தேர்தலை நடத்த வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில்தான் அறிவித்தது. அதற்காக அதிகாரிகளை எல்லாம் அழைத்து பேசினார்கள். எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. 'டாம் டாம்' கூட போடப்பட்டது. தேர்தலை எப்படியாவது நடத்த வேண்டும் என்பதற்கான எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. இருந்தாலும் எதிர்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பொதுத் தடை பெற்றதன் காரணமாக தேர்தலை நடத்த முடியவில்லையே தவிர, இந்த அரசோ, அமைச்சர்களோ தேர்தலை நிறுத்தவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதைப் போன்று தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றி குறை கூறினார்கள். தன்னிறைவுத் திட்டத்தில் ஏதோ குறை இருந்தாலும் இன்றைக்கு தமிழகத்தில் அது ஒரு தனிப்பெரும் திட்டமாக செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் சீரிய முயற்சியில் கிராம ராஜ்யம் நல்ல முறையில் செயல்பட வேண்டும் என்ற எண்ணத்தில் இன்றைக்கு தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராமங்களுக்கு போக்குவரத்து வசதி, குடிதண்ணீர் வசதி போன்ற பல்வேறு வசதிகளை கிராமங்களுக்கு நிரந்தரமாகச் செய்து கொடுக்க வேண்டுமென்ற புரட்சித் தலைவரின் எண்ணத்திற்கு ஏற்ப, அந்தக் கொள்கையின் அடிப்படையில் தமிழகத்தில் தன்னிறைவுத் திட்டம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. இன்றைக்கு அகில இந்தியாவுக்கும் ஒரு எடுத்துக் காட்டாக, நல்ல முறையில் நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே தேர்தலை நிறுத்திவிட்டார்கள் என்று சொன்னார்கள். தேர்தல் தானாக நின்று விட்டதே தவிர அரசாங்கம் நிறுத்தவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களோ, அமைச்சர்களோ, தேர்தலை நிறுத்தவில்லை. இப்போது தன்னிறைவுத் திட்டத்தை பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் கொண்டு வந்திருப்பது பாராட்டுக்குரிய ஒன்று, அதைப்போன்று இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு கொள்கையை உள்ளாட்சித் தேர்தலில், தமிழ்நாட்டில் கொண்டுவர இந்த அரசு திட்டமிட்டு அறிவித்தது. அந்த வகையில் தேர்தல் நடைபெற்றிருந்தால் இன்றைக்கு எல்லா மாநிலங்களும் நம்மைப் பாராட்டியிருப்பார்கள். ஆனால் தேர்தலை நிறுத்த பொதுத் தடை வாங்கியிருக்கிறார்கள். ஊராட்சித் தேர்தலில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு பெண்களுக்கு 15% இட ஒதுக்கீடுகளும் ஆதி திராவிடர்களுக்கு 18% இட ஒதுக்கீடுகளும் செய்யப்பட்டிருந்தன. இது எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு கொள்கை என்பதை மறுக்க முடியாது. அறிவித்த அந்த அளவில் தேர்தல் நடைபெற்றிருந்தால் அது எல்லோராலும் பாராட்டப்பட்டிருக்கும்; வாழ்த்தப்பட்டிருக்கும். இப்போது தேர்தலுக்கு

தடை வாங்கிவிட்டாலும், தமிழகத்தில் இன்னும் 2 அல்லது 3 மாதத்தில் இந்த இட ஒதுக்கீடுகளின் அடிப்படையில் இந்தத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று கேட்டு, இந்தச் சட்ட முன்வடிவுகளை ஆதரித்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

[மாலை 5.20]

* திரு. சி. த. சிதம்பரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தலே நடத்தப்படாமல் தனி அதிகாரிகளின் காலத்தை நீட்டித்துக்கொண்டே போவதால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இந்த சட்ட முன்வடிவை நாங்கள் கடுமையாக எதிர்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். தேர்தல் நடத்தப்படாத காரணத்தால் இன்றையதினம் பல்வேறு பணிகள் நடைபெற முடியாமல் இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டம், வறட்சிப் பணிகள், தேசிய வேலை வாய்ப்புத் திட்டம் போன்றவை நடைபெற்று வருகின்றன என்று சொன்னாலும், எந்தப் பணிகளும் சரியாக நடக்கவில்லை. ஊராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தலைவர் இல்லாத காரணத்தாலே ஊராட்சி ஒன்றியங்களுக்கு இருந்த மரியாதையே போய்விட்டது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களிலும், ஊராட்சி மன்றங்களிலும் வறட்சிப் பணிகளைச் செய்ய முடியாமல் ஹைவேஸ்—லேகொடுத்து வறட்சித் திட்டத்திற்கென்று தனியாகப் போட்டு அவர்கள் செய்யவேண்டும் என்று சொல்லி அந்தப் பணி நடத்தப்படுகின்றது. ஆகவே ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் இல்லாத காரணத்தால் ஊராட்சி ஒன்றியங்களுக்கு இருந்த மரியாதையே போய்விட்டது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த வறட்சி பணிகள் என்பது கிணறு தோண்டுவதைத் தவிர வேறு இல்லை. ஆனால் அடிப்படைத் தேவை சாலைகள் அமைப்பதுதான். ஆனால் அந்தச் சாலைகள் அமைப்பது பற்றிய அதிகாரம் கூட ஊராட்சி ஒன்றியங்களுக்கு இல்லாமல் போய்விட்டது. தன்னிறைவுத் திட்டத்திற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்கக்கூடிய பணம் குறைவானது என்பதை அமைச்சர் அவர்களிடத்திலே நாங்கள் சொல்லி இருக்கிறோம். அமைச்சர் அவர்களோ இதைவிட அதிகமாக எவ்வாறு தர முடியும் என்று சொல்லி ஆகவே தர முடியாது என்று சொல்வார்கள். ஆனால் ஊரட்சி ஒன்றியத் தலைவர்கள் இல்லாத காரணத்தால்தான் பல வேலைகள் நன்கு நடைபெறவில்லை. எந்தெந்த வேலைகள் தேவை எந்தெந்த வேலைகள் தேவையில்லை என்பதைப்பற்றி கண்காணிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறன்து.



*தேசிய வேலைவாய்ப்புத் திட்டங்களுக்காக கான்ட்ராக்ட் கொடுக்கப்படுகின்றபோது கூட தலைவர் இல்லாத காரணத்தால் பல்வேறு வகையான குழப்பங்கள் ஏற்படுகின்றன. தன்னிறைவுத் திட்டத்தைக்கூட நல்ல முறையிலே கண்காணிக்க முடியவில்லை என்பதால் ஒரு ரோட்டுக்கு 4 முறை கூட டெண்டர் கோரப்படுகின்ற நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. ஆனால் அது டெக்னிக்கல் மிஸ்டேக் என்று சொல்கிறார்கள். இப்படி ஒவ்வொரு முறையும் கான்ட்ராக்டர்களைத் திரும்பத்திரும்பப் போடுவதன் காரணத்தால் தன்னிறைவுத் திட்டம் அந்தந்த ஆண்டிலே நிறைவு பெறாமல் சாலை வேலைகள் எல்லாம் அப்படியே கிடந்து போய்விடுகின்றன. ஆங்காங்கே ஒன்றியத் தலைவர்கள் இருந்தால் இந்தமாதிரியான நிலைமைகள் இருக்காது. குடிநீர் வசதி, விளக்கு வசதி, சாலை வசதி இப்படி எந்தப் பணியும் சரியாக நடைபெறவில்லை.

குடிநீரைப் பொறுத்தவரையிலே எந்தப் பணியும் எந்த ஊரிலும் சரியான முறையிலே நடக்கவில்லை. தலைவர் இல்லாத காரணத்தால்தான் இப்படிப்பட்ட நிலைமை இருக்கின்றது. தெரு விளக்குகள் எரியவில்லை என்றால் பஞ்சாயத்து போர்ட், பஞ்சாயத்துத் தலைவர்கள் போன்றவர்களிடத்திலே முறையிடலாம். ஆனால் ஊராட்சியிலேயும் தலைவர்கள் இல்லை, ஒன்றியத்திலேயும் தலைவர்கள் இல்லை, இப்படி யாருமே இல்லாத காரணத்தால் தெரு விளக்குகள் எரியவில்லை என்றால் யாரிடத்திலும் சொல்ல முடியாத நிலைமை இருக்கின்றது. சாலைகள் செப்பனிடப்படாத நிலைமை இருக்கின்றது. இப்படிப் பட்ட நிலைமைகள் எல்லாம் தேர்தல் நடக்காத காரணத்தால் தான் ஏற்பட்டிருக்கின்றது என்பதை நாம் உணரவேண்டும்.

என்னுடைய தொகுதியான காரைக்குடியிலே 5, 6 ரோடுகள் பற்றி அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டு வந்திருக்கின்றது. ஆனால் பஞ்சாயத்துத் தலைவர்கள் இருந்தால் அவர்கள் இங்கே வந்து கேட்டு அவற்றை நிறைவேற்றக்கூடிய வாய்ப்பு இருக்கும். ஆனால் இப்போது அதிகாரிகள் அதற்காக அனுப்பப் படுகிறார்கள். ஆனால் அதிகாரிகளோ வந்தால் என்ன வராவிட்டால் என்ன என்ற நிலைமையிலே இருக்கிறார்கள்.

குறிப்பாக என்னுடைய தொகுதியிலே கல்லல் பகுதியிலே உள்ள கருங்குளம்—வெற்றியூர் என்ற ஒரு சாலை பற்றி நீண்ட நாட்களாகப் பரிந்துரை செய்யப்பட்டது. D.R.D. யிலே அதற்கான பரிந்துரை செய்யப்பட்டு அரசாங்கத்திலேதான் காலதாமதம் ஆகிக்கொண்டிருக்கின்றது. அதைச் செய்ய வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சிமென்ட் ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையிலே இருக்கின்ற நிலைமைகளைப் பற்றி பல நண்பர்களும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். சிமின்ட் ஒதுக்கீடு செய்வதைப் பொறுத்த வரையிலே யார்யார் எந்தெந்தத் தேதியிலே மனுப் போட்டிருக்

கிறார்கள் என்று பார்த்து ஒரு அட்டவணை தயார் செய்து வைத்துக்கொண்டு ரிஜிஸ்டர் போட்டு அதன்படி கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பேரூராட்சிகளைத் தன்னிறைவுத் திட்டத்திலே எடுப்பதைப்பற்றி உறுப்பினர்கள் சொன்னார்கள். என்னுடைய தொகுதியிலே 5 பேரூராட்சிகள் இருக்கின்றன. அங்கே பணம் இல்லாத நிலைமை இருக்கின்றது. ஆகவே அந்த அடிப்படையிலேயும் அந்த பேரூராட்சிகளை எடுத்துக்கொள்ளவில்லை. ஆகவே வறட்சித் திட்டத்திலேயும் அந்த பேரூராட்சிகளை எடுத்துக்கொள்ளவில்லை, தன்னிறைவுத் திட்டத்திலேயும் எடுத்துக்கொள்ளவில்லை. ஆகவே இந்தத் திட்டத்திலே எங்கள் பகுதியிலே இருக்கின்ற அந்த பேரூராட்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அதிகாரிகள் எப்படி குழப்புகிறார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். தேர்தலுக்காக நாமினேஷன் போடுவதற்கு 2 ஆம் தேதி கடைசி நாள் என்று அறிவித்தார்கள். 4 ஆம் தேதி வரை ஸ்க்ரூட்டினி, அது முடிந்த பிறகு வாபஸ் வாங்கிக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். எங்கள் கட்சியிலே ஒரு டம்மியாக கல்லல் பகுதியிலே, சுப்பராயன் என்பவர் இரண்டாம் தேதி நாமினேஷன் போட்டார். 4 ஆம் தேதி ஸ்க்ரூட்டினி நடந்தது. பிறகு அவர் வாபஸ் வாங்கிக் கொண்டார். வாபஸ் வாங்கிவிட்டு பணத்தைத் திருப்பித் தாருங்கள் என்று கேட்டார். அவர் வாபஸ் வாங்கிவிட்டார் என்பதை ஒப்புக்கொண்டதாக முதலிலே தெரிவித்தார்கள். பிறகு 5 ஆம் தேதி அல்லது 6 ஆம் தேதியன்று போய் டெப்பாசிட் பணத்தைக் கேட்டால், 5 ஆம் தேதி, 6 ஆம் தேதிக்குப் பிறகு நாமினேஷன் வாபஸ் வாங்க முடியாது. **

** ** **

பணம் தர முடியாது என்று தெரிவித்துவிட்டார்கள். ஆகவே, நிர்வாகம் என்பதில் அதிகார பொறுப்பிலே இருப்பவர்களுக்கு எவ்வளவு சுலபமாக மாற்றமுடிகிறது என்பதை எடுத்துக்காட்ட, தனி அதிகாரிகள் இருந்தால் நிர்வாகம் எவ்வளவு சீர்கேடு அடையும் என்பதை எடுத்துக்காட்ட, இதைவிட வேறு ஒரு உதாரணம் தேவைப்படாது என்று நினைக்கிறேன்.

ஆகவே, அதிகாரிகளின் ஆட்சி நீட்டிப்பை தடுக்கிற வகையிலும், நல்ல பணிகள் பொதுமக்களுக்கு பயன்படுகிற வகையிலும், ஜனநாயக முறைகாக்கப்படவேண்டிய நிலையிலும் தேர்தலை நடத்துவதற்குப் பதிலாக கால நீட்டிப்புக் கேட்டு கொண்டு வரப்பட்ட இந்தச் சட்டமுன்வடிவினை எதிர்க்கிறேன் என்று சொல்லி என் உரையை முடிக்கிறேன் நன்றி, வணக்கம்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிதம்பரம் அவர்கள் ஒரு குற்றச்சாட்டை சொன்னார்கள். அதுவும் குறிப்பாக ** டெப்பாசிட் பணத்தை கொடுக்க வேண்டாம் என்று சொன்னது போலச் சொன்னார்கள். அதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? ஆதாரம் இருக்கிறது என்று சொன்னால் அதை என்னவென்று கேட்க விரும்புகிறேன். அப்படி ஆதாரம் இல்லையென்றால், அந்த வார்த்தைகளை, அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சி. த. சிதம்பரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் போய் வாபஸ் பெற்றதற்கான பணம் திருப்பித்தர வேண்டும் என்று கேட்டபோது, பத்திரிகையில் அறிக்கை வந்திருக்கிறது. இனிமேல் புதிதாக நாமினேஷன் கொடுப்பதோ, வாபஸ் வாங்குவதோ முடியாது என்றும், கோர்ட்டிலே போயிருப்பதால், அந்தந்த இடங்களில் என்னென்ன நிலைமை இருந்ததோ, அப்படியே இருக்கவேண்டும் என்று * * *

பி.டி.ஓ. சொல்லித்தான் நான் இங்கே கூறினேன். வேறு ஆதாரங்கள் என்னிடம் இல்லை.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ** ** கொடுக்கவில்லை. ஆகவே இப்படி ஒரு உண்மையற்ற குற்றச்சாட்டைக் கூறுவது தவறு என்று கருதுகிறேன். ஆகவே அந்த வார்த்தையை * ** குறிப்பேட்டிலிருந்து நீக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படிப்பட்ட வார்த்தைகளை குறிப்பேட்டிலிருந்துநீக்கும்படி ஆணையிடுகிறேன்.

திரு. இ. முத்துராமலிங்கம் : சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி போன்றவற்றிற்கு, தனி அதிகாரிகளின் பதவி காலத்தை நீட்டிக்கிற இந்தச் சட்டமுன்வடிவின்மீது, காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று பல்வேறு கட்சிகளின் சார்பாகவும், ஆளும் கட்சியின் சார்பாகவும் ஏற்பாடு செய்யப்பட்டும் கூட,

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. இ. முத்து இராமலிங்கம்] [1982 பிப்ரவரி 17

தற்போது நீதிமன்றத்தின் ஆணையின் காரணமாக நடத்தப்பட இருந்த தேர்தல்கள் அனைத்தும் ஒத்தி வைக்கப்பட்டு, மீண்டும் இந்த அதிகாரிகளுடைய பதவி காலத்தை நீட்டிக்கிற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இன்றையதினம் ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும், ஆங்காங்கே, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுடைய பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால், எந்த அளவுக்கு மக்களுடைய அடிப்படைப் பிரச்னைகள் தீர்க்கப்படாமலும், மக்களுடைய அடிப்படைத் தேவைகள் குறித்து அரசினுடைய காதுகளுக்கு எட்டாமலும் இருக்கிறது என்பதை என்னால் பல்வேறு நிகழ்ச்சிகளின் மூலமாக இங்கே எடுத்து வைக்க முடியும். குறிப்பாக ஆங்காங்கே உள்ள தனி அதிகாரிகள் தங்களுடைய இஷ்டப்படி என்னென்ன வேலைகளையெல்லாம் செய்ய முடியுமோ, அதையெல்லாம் செய்கிறார்களே தவிர, மக்களுக்கு முக்கியமாகத் தேவைப்படுவது எது, மக்களுக்கு அத்தியாவசியமாக எது தேவைப்படுகிறது என்பதைப் பார்த்து, அவைகளை எடுத்துக் கொள்வது இல்லை. என்னைப் பொறுத்தவரையில், தனி அதிகாரிகளும் ஒரு சில காண்டிராக்டர்களும் சேர்ந்துதான் அந்த அந்த ஊராட்சி ஒன்றியங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் சொல்லமுடியும்.

இப்பொழுது தன்னிறைவுத் திட்டம் செயல்பட்டு வருகிறது. இந்த அரசினுடைய அந்த நல்ல திட்டத்தை எந்த அளவுக்கு தவறாக ஒரு சில அதிகாரிகள் பயன்படுத்தி வருகிறார்கள் என்பதை என்னால் இங்கே உதாரணத்தோடு எடுத்துக்கூற முடியும். என்னுடைய தொகுதியிலே உள்ள 2 ஊராட்சி ஒன்றியங்களுமே இந்த தன்னிறைவுத் திட்டத்திலே எடுக்கப்பட்டது. ஏறத்தாழ 2 கோடி அளவிலே திட்டங்கள் முதலிலே தீட்டப்பட்டாலும் கூட, பற்றாக்குறை காரணமாக அந்த திட்டங்கள் ஒரு கோடி அளவுக்கு குறைக்கப்பட்டது.

(மாலை 5.30)

குறைக்கப்பட்ட பல திட்டங்களில் ஆங்காங்கே சாலைகள் அமைக்கிற நேரத்தில், மக்கள் பிரதிநிதிகள் எடுத்துக் குறிப்பிட்ட அல்லது கூறிய வேலைகள் விடுபட்டு ஒப்பந்தக்காரர்களுக்கு எளிதாக எந்தெந்த சாலைகளையெல்லாம் போட்டு முடிக்க முடியுமோ அந்தச் சாலைகள் மட்டும் எடுத்து ஆங்காங்கே அந்த வேலைகள் நடைபெற்றிருப்பதை நான் எடுத்துக் கூற முடியும்,

அடுத்து பேரூராட்சி மன்றங்களுக்கு என்று தனி நிர்வாகம் அமைக்கப்பட்டு ரீஜனல் டைரக்டர் பார் டவுன் பஞ்சாயத்து என்று உருவாக்கியதன் மூலம் ஒன்றியங்களிலிருந்து பேரூராட்சி மன்றங்கள் அனைத்தும் தனித்து விடப்படக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. பொதுவாக இன்றையதினம் பேரூராட்சி மன்றங்களின் வருமானம் அனைத்தும் அங்குள்ள நிர்வாக அதிகாரி



[திரு. இ. முத்துராமலிங்கம்] [1982 பிப்ரவரி 17

பின்னர் நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளை விரைவாக முடித்து ஒன்றியங்களில் தேர்தல்களை நடத்தி மக்கள் பிரதிநிதிகள் மக்களை ஆட்சி செய்கிற ஒரு முறையை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டு என் உரையை முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

*மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, இந்த மூன்று சட்டங்களின் பேரிலே 10 மாமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதுவும் குறிப்பாக, மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள், மற்றவர்கள் இதனை வரவேற்றிருக்கிறார்கள். அதே நேரத்தில் திராவிட முன்னேற்ற கழகத்தைச் சார்ந்த அருமை நண்பர்கள் பாபு ஜனார்த்தனன் அவர்கள், சிதம்பரம் அவர்கள், குலசேகரன் போன்றவர்கள் இதை எதிர்க்கிறார்கள்: வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள்.

குறிப்பாக, இந்த அவசரச் சட்டம் 13/81 எதற்காக ஏற்படுத்தப்பட்டது என்பது நம் மாமன்ற உறுப்பினர்களுக்கு நன்கு தெரியும். அதுவும் குறிப்பாக, 1982ஆம் ஆண்டு ஊராட்சி சட்டத்தில் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து, ஊராட்சி சட்டத்திலே இல்லாத ஒரு புதுமையான, புரட்சியான தன்மையை இந்த கிராமப்புற மக்களுக்கு கொடுக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு, தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் 18% இடத்தை ஆதி திராவிட, மலைவாழ் மக்களுக்கும், 15 சதவிதம் இடத்தை பெண்களுக்கும் ஒதுக்கித் தரவேண்டுமென்ற முறையிலே ஒரு அவசரச் சட்டம் மூலமாக கொண்டு வரப்பட்டது அந்த அவசரச் சட்டம் அமுலாக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. குறிப்பாக இதை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்று சொல்பவர்களை நான் கேட்டுக் கொள்வது, இப்படிப்பட்ட ஒரு சீர்திருத்தத்தை, இப்படிப்பட்ட ஒரு புரட்சிகரமான திட்டத்தை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம் எதிர்பார்க்கிறோம் என்ற கேள்விக்கு அவர்கள் பதில்சொல்லியாக வேண்டும். ஆதிதிராவிட மக்களுக்கு 18சதவிகிதம் தேவையில்லைஎன்று சொல்கிறார்களா, தாய்மார்களுக்கு 15சதவிகிதம் இடத்தை ஊராட்சிகளில்,' ஊராட்சி ஒன்றியங்களில் கொடுக்கக் கூடாது என்று சொல்கிறார்களா என்று அவர்கள் தெளிவாகச் சொல்லவில்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, இந்த அவசரச் சட்டம் கொண்டுவந்ததிலே, அந்த சட்டத்திலே ஓட்டை, உடைசல் என்றெல்லாம் அவர்கள் வரிக்கு வரி எவ்வளவு கேவலமாகப் பேச முடியுமோ, அவ்வளவு கேவலமான வார்த்தைகளை அங்கே உபயோகித்திருக்கிறார்கள் என்பதை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்டத்தை ஒரு நல்ல எண்ணத்தின் அடிப்படையில் கொண்டுவந்த நேரத்தில், இதை இழித்துப் பழித்துக் கூறி, கேவலமாகப் பேசுகின்ற ஒரு நிலையை இந்தச் சட்டத்திலே உருவாக்கியிருக்கிறீர்கள் என்று சொன்னால், உண்மையிலேயே இந்தச் சட்டத்தில்

களுக்கும்" சிப்பந்திகளுக்கும் உள்ள சம்பளத்திற்கே போதாத நிலை இருந்து வருகிறது. அதுபோக, ஆங்காங்குள்ள பேரூராட்சி மன்ற நிர்வாக அதிகாரிகள் தங்கள் இஷ்டம்போல் அந்தப் பேரூராட்சி மன்றங்களை நடத்திவருகிற ஒரு சூழ்நிலை இன்று இருந்து வருகிறது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் என் தொகுதியில் உள்ள திருசயன்விளை பேரூராட்சி மன்றத்தில் உள்ள நிர்வாகச் சீர்கேடுகளை சுட்டிக்காட்டி என் உரையை முடிக்கலாம் என்று கருதுகிறேன். அங்குள்ள மக்கள் பிரதிநிதி எடுத்துக்கூறிய காரணத்தால் கடந்த ஆண்டு வெள்ள நிவாரணத் திட்டத்தில் அந்த வேலைகள் அனைத்தும் முடிக்கப்பட்டு ஏறக் குறைய ஓராண்டு காலமாகியும் அந்தக் கடைகள், கட்டடத்தில் உள்ள அறைகள் இவை ஏலத்திற்கு விடப்படாது, வாடகைக்கு விடப்படாமல் அப்படியே இருக்கிறது.

அந்த பேரூராட்சி மன்றத்தில் நடைபெற்ற பல நிர்வாக சீர்கேடுகள் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களிடம், அங்குள்ள மக்கள் எடுத்துக் கூறியும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் சுகாதார வசதிகள் சரியாக இல்லை என்பதை எடுத்துக்கூறி எங்கள் இயக்கம் ஒரு போராட்டத்தினை அறிவித்துள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை அறிவார்கள். அதை மனதிற்கொண்டு தயவுசெய்து மாநகராட்சியில் உள்ள இந்த சுகாதாரச் சீர்கேடுகளை அகற்றி மக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தன்னிறவுத் திட்டத்திற்கு போதிய அளவு சிமெண்ட் கிடைக்காததால் ஏராளமான பால வேலைகள் விடுபட்டுள்ளன. ஆகவே அந்த வேலைகளை மனதிற்கொண்டு அடுத்து வருகிற நடப்பாண்டில் சாதாரணத் திட்டங்களிலாவது சேர்த்து அவற்றைச் செயல்படுத்தவேண்டும்.

பேரூராட்சி மன்றங்கள், ஒன்றியங்களுக்கு ஹரிஜனங்களுக்கு என்று இடம் ஒதுக்கப்படுவதை வரவேற்கிறோம். ஆனால் பல்வேறு ஒன்றியங்களில் மிகச் சொற்பமாக பத்து வோட்டு கூட இல்லாத ஒருசில கிராமங்கள் ஹரிஜனங்களுக்காக என்று ஒதுக்கப் பட்டுள்ளன. என் தொகுதியிலேயே உள்ளது. உதாரணம் கூற முடியும். ஆகவே இதை மனதில்கொண்டு சரியான விதத்தில் ஹரிஜனங்களுக்கு இட ஒதுக்கீடு செய்யவேண்டும்:

குளங்களுக்கு நடுவில் கிணறுகள் தோண்டும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு பலவேறு இடங்களில் மழை காரணமாக கிணறுகள் மூடப்பட்டிருக்கின்றன. ஒரு குளத்திற்கு ரூ, 50,000. ஒரு லட்சம் என்று செலவு செய்யப்பட்டு யாருக்கும் பயன் படாமல் அவை இருக்கின்றன.





அவர்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதுதான் பொருள். அப்படி நம்பிக்கை இல்லையென்று சொன்னால், 15 சதவிகிதம் ஆதித் திராவிட மக்களுக்கு கொண்டு வந்ததிலே நம்பிக்கை இல்லையா அல்லது 15 சதவிகிதம் இடத்தை பெண்களுக்கு ஒதுக்கியதிலே நம்பிக்கை இல்லையா என்பதைத் தெளிவாக்கியிருக்க வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பாபு ஜனார்த்தனன் அவர்களே, நீங்கள் பேசுகின்றபோது, நான் குறுக்கிடவில்லை. தயவுசெய்து உங்களுக்கு சந்தேகம் இருந்தால் நான் பேசியபின் கேட்கலாம்.

இந்தச் சட்டத்தை ஓட்டை, உடைசல் என்று சொல்லுகிறார்களே இந்த சட்டத்தின் விதிகளில் எந்த இடத்தில் ஓட்டை, உடைசல் இருக்கிறது என்பதைத் தெளிவாகச் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லாமல், பொதுவாக * * * வெளியிலே பேசுவதுபோல், இங்கே சட்டமன்றத்திலே பேசி ஒரு விதியை உருவாக்குவது சரியான வாதமாகாது, முறையல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அவசரச் சட்டத்தில் 18சதவிகிதம் ஆதி திராவிடர்களுக்கு ஒதுக்கியது சரியில்லை என்று சொல்லவேண்டும்....

திரு. துரை முருகன்: ** என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த வார்த்தை இருக்கலாமா, வேண்டாமா இருக்கலாம் என்று சொன்னால் ஆட்சேபனை இல்லை.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். இங்கே பாபு ஜனார்த்தனன் அவர்கள் பேசுகிற போது வெட்கமில்லை, வக்கு இல்லை, வகையில்லை என்ற வார்த்தைகள் எல்லாம் அவர்களால் சொல்லப்பட்டது. அப்படி அந்த வார்த்தைகள் இருக்கும் போது * * * என்ற வார்த்தை ஏன் இருக்கக் கூடாது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த வார்த்தை எந்தச் சூழ்நிலையில், எந்த நிலையிலே உபயோகப்படுத்தப் பட்டது என்பதைப் பார்த்துச் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு; இந்தச் சட்டத்திலே ஓட்டை, உடைசல் இருக்கிறது என்று சொன்னால், இன்று இந்தச் சட்டத்தை எதிர்த்து ஏறத்தாழ 340ரிட் பெட்டிஷன்கள் உயர்நீதி மன்றத்திலே இருக்கின்றன.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ப. குழந்தைவேலு] [1982 பிப்ரவரி 17

(மாலை 5—40)

உயர்நீதி மன்றத்தில் வழக்குகள் இருக்கிற காரணத்தால் அதிகமாக விவரங்களுக்குள்ளே போக விரும்பவில்லை. ஆனாலும் கூட இந்தச் சட்டம் ஒரு நல்லெண்ணத்தின் அடிப்படையில் கொண்டு வந்த சட்டம் என்பதை அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டுமென்பதைத்தான் இந்த நேரத்தில் சுட்டிகாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்களைப் பார்த்து, நீங்கள் தேர்தலை நடத்தவில்லையே, உங்களுக்கு வெட்கமாக இல்லையா என்று கேட்கிறார்கள். நான் பணிவன்போடு கேட்கிறேன் 1972-73ல் இதே மாநகராட்சி கலைக்கப்பட்டது, கலைக்கப்பட்ட பின்னால் மூன்று நான்கு ஆண்டு காலம் ஆட்சி பீடத்தில் இருந்தீர்கள் ஏன் நீங்கள் மாநகராட்சித் தேர்தலை நடத்தவில்லை? உங்களுக்கு வெட்கமாக இல்லையா என்று நான் கேட்க முடியும், ஆனால் இப்போது நான் கேட்கவில்லை. 1970-ல் ஊராட்சி மன்றத் தேர்தல் நடந்தது. 1975 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஊராட்சித் தலைவர்களின் பதவி முடிவு பெறுகிறது. அப்போதும் ஆட்சி பீடத்தில் நீங்கள் இருந்தீர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அப்போது தேர்தல் நடத்தவில்லையே, உங்களுக்கு வெட்கமாக இல்லையா என்று கேட்க முடியும், ஆனால் கேட்கவில்லை.

திரு. என். வி. என். சோமு: 1973 ஆம் ஆண்டு மாநகராட்சி மன்றம் கலைக்கப்பட்டது. 1976 ஆம் ஆண்டு வரைதான் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் ஆட்சியில் இருக்க அனுமதிக்கப்பட்டது அப்போதுவழக்கு மன்றத்தில் வழக்குஇருந்த காரணத்தால், அதிலே தீர்ப்பளிக்காத காரணத்தால், எல்லா அரசியல்கட்சிகளும், தி.மு.க.,அ.தி.மு.க.,காங்கிரஸ்,கம்யூனிஸ்டு சம்பந்தப்பட்ட வழக்குகள் உயர்நீதிமன்றத்தில் இருந்த காரணத்தால்தான் தேர்தல் நடத்தப் பெறவில்லை. இப்போது அமைச்சருக்கு வீரமும், விவேகமும் ஆண்மையும் இருக்குமானால் மாநகராட்சித் தேர்தலை நடத்த உத்தரவிடுவார்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் பேசுகையில் ** என்று சொன்ன வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அருமை நண்பர் சோமு அவர்கள் மாநகராட்சித் தேர்தலை ஏன் நடத்தவில்லை என்பதற்கு ஒரு காரணத்தைச் சொன்னார். நான் உண்மையில் திரும்பிக் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். உங்கள் மேல் 1973 மஸ்டர் ரோல் வழக்கு வந்தது. 1973ல், மஸ்டர் ரோல் வழக்குவந்த நேரத்தில் அது நீதி மன்றத்திற்குச் சென்றது. ஆனால் நீதிமன்றத்தில் மாநக

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1982 பிப்ரவரி 17] [திரு. ப. குழந்தைவேலு)

ராட்சித் தேர்தல்களை நடத்தக்கூடாது என்ற தடை வாங்கவில்லை. தடை வாங்காத நேரத்தில் ஏன் மாநகராட்சித் தேர்தலை நடத்தவில்லை? 1973ல் இருந்து 1976 ஜனவரி 31-ஆம் தேதி வரை இருந்த நீங்கள் ஏன் அந்தத் தேர்தலை நடத்தவில்லை? யாருக்கு வெட்கம் இல்லை, வக்கு இல்லை; வகை இல்லை என்று என்னால் திருப்பிக் கேட்க முடியும், ஆனால் கேட்கவில்லை. நான் ஒரு விஷயத்தைக் கூறுவதற்காக மாமன்ற உறுப்பினர்கள் என்னை மன்னிக்கவேண்டும். கற்பனையில் கோட்டை கட்டி, அதிலே முதல்வராக இருக்க வேண்டுமென்று போஸ்டர் அடித்து அதற்காக வள்ளுவர் கோட்டத்தைத் தேர்ந்தெடுத்தீர்களே, உங்களுக்கு வெட்கமாக இல்லையா என்று கேட்கக் கூடாதா அப்பேர்ப்பட்டவர்கள் எங்களைப் பார்த்து வெட்கம் இல்லையா விவேகம் இல்லையா என்று கேட்கிறார்கள்

நாங்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிற நேரத்தில் நல்லெண்ணத்தின் அடிப்படையில்அனைத்துக் கட்சியினர் கூட்டத்தைப் பல நாட்கள் நடத்தி இந்தச் சட்டத்தை ஏற்றுக் கொள்கிற முடிவு வந்ததற்குப் பிறகுதான் சட்டமே உருவாக்கப்பட்டது. பிறகு சட்டம் வந்த பின்னால் சிக்கல்கள் வந்து விடக் கூடாது. இந்தச் சட்டம் செல்லுபடியாகாத நிலைமை வந்து விடக் கூடாது என்பதற்காக டில்லிக்குச் சென்று வல்லுநர்கள் ஒபினியன் பெற்றுதான் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். தயவு செய்து யாரும் தவறாக நினைக்கக்கூடாது. நானும் வழக்கறிஞராக பத்தாண்டு காலம் பணிபுரிந்தவன். சட்ட அமைச்சர் அவர்களும் வழக்கறிஞர். இப்படி வழக்கறிஞர்களாக இருக்கிற நாங்கள் ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்று சொன்னால் ஓட்டை உடைசல்களை வைத்து சட்டத்தைக் கொண்டு வருவோமா? வழக்கறிஞர்களாகப் பணியாற்றுகிறவர்களுக்கு தெரியும். எவ்வளவு நல்ல சட்டமானாலும் அந்த சட்டத்திற்கு மாறாக வழக்கறிஞர்கள் வாதாடுவது உண்டு. அப்படி இருக்கிற நேரத்தில்உடனே அந்தச் சட்டம் மோசம் என்று சொல்லுவதா? ஓட்டைஉடைசல் இருக்கிறது என்று சொல்லுவதா? தயவு செய்து அப்படிப் பேசவேண்டாமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் இந்தத் தேர்தலை நடத்துவதற்குரிய வாய்ப்புகளை ஏற்படுத்தி பொதுமக்கள் ஆட்சேபணைகளைத் தெரிவிப்பதற்காக 15 நாட்கள் அவகாசம் நாங்கள் கொடுக்கவில்லையா? தேர்தல் நடத்தக்கூடாது என்ற எண்ணம் எங்களுக்கு இருந்திருந்தால் 15 நாட்கள் அவகாசம் கொடுக்காமலேயே தேர்தலை அறிவித்து விட்டு எப்படியோ போகட்டும் என்ற எண்ணத்திலே நாங்கள் இருந்திருக்க முடியாதா? தேர்தலை நடத்தவேண்டும் என்பதற்காகத்தான், நாமினேஷன் பைல் பண்ணுவதற்கும் வித்ட்ரா பண்ணுவதற்கும் தேதிகளைக் குறிப்பிட்டு ஜனவரி மாதத்திலே 24,29 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களாக தேர்தலை நடத்தவேண்டுமென்று தெரிவித்தோம்.

[திரு. ப. குழந்தைவேலு] [1982 பிப்ரவரி 17

ஆனால் அதற்குத் தடை வாங்கியவர்கள் யார்? எப்படி வாங்கினார்கள், எந்த எந்த வழக்கறிஞர்கள் வாங்கியிருக்கிறார்கள் என்பதைப் பற்றி என்னிடம் குறிப்புகள் இருக்கின்றன. வேண்டுமானால் காட்டத் தயாராக இருக்கிறேன் என்பதும் எந்த எந்த வழக்கறிஞர்கள் வழக்குமன்றங்களிலே வழக்கைப் பதிவு செய்தார்கள் என்பதும் 340 ரிட் மனுக்கள் பற்றிய விவரங்களும் இங்கே என்னிடத்தில் இருக்கின்றன. இரட்டை வேடம் போடுகிறவர்கள், நாடகம் ஆடுகிறார்கள், எங்களைப் பார்த்து தேர்தலை ஏன் நடத்தவில்லை என்று எப்படி கேட்க முடியு ? இந்தத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டுமென்ற முறையிலே தான் 340 ரிட் மனுக்கள் மீதும் வேகமாகத் தீர்ப்பளிக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம். கடந்த 3ஆம் தேதி உயர்நீதிமன்றத்திலே அரசின் சார்பிலே ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. டிவிஷன் பெஞ்சுக்கு, ஏற்றுக் கொள்ளவேண்டுமென்றும் சீக்கிரமாக முடிவு தெரிவிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு மனுச் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே சீக்கிரமாக அது முடிவடையும். தேர்தல் விரைவிலே நடைபெறும். தேர்தல் களத்தில் சந்திப்பதற்கு நாங்கள் அஞ்சியவர்கள் அல்ல. தேர்தலை நடத்துவதற்கு எப்போதும் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் எப்போதும் எந்தத் தேர்தலுக்கும் எதற்கும் அஞ்சியவர்கள் இல்லை என்பதை ஆணித்தரமாகச் சொல்லிக் கொள்கிறேன். இந்தத் தேர்தலை சீக்கிரமாக நடத்த வேண்டுமென்ற எண்ணத்தோடும் இந்தப் புரட்சிகரமான கருத்துக்களைக் கொண்டுவரவேண்டுமென்ற எண்ணத்தோடும், இந்த அவசர சட்டத்தை சட்டமாக்க வேண்டுமென்ற பணியில் நாம் ஈடுபட்டு இருக்கிறோம்.

இதை எதிர்க்கிறவர்களை, நிராகரிக்கிறவர்களைக்கூட நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், இந்த அவசரச் சட்டத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். இது சட்டமாக வேண்டும், சட்டமாக்கப்பட்டால் தான் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு வழி காட்டுகின்ற நிலைமை ஏற்படமுடியும், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே 1958 ஆம் ஆண்டு சட்டப்படி தேர்தல் நடத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு பலராமன் அவர்கள் தெரிவித்தார்கள். 1958 ஆம் ஆண்டுச் சட்டப்படி நடத்தினால் இதுபோன்ற புரட்சிகரமான திட்டங்களைக் கொண்டு வர முடியாது. 1958 ஆம் ஆண்டு சட்டத்திலே ஆதிதிராவிடர்களுக்கு 18 சதவீதம், 1ο சதவீதம தாய்மார்களுக்கு என்ற வாய்ப்புக்கள் இல்லை. ஆகவே இப்போது இந்தத் திட்டத்தை அறிவித்து விட்டு மீண்டும் பழைய நிலைக்குச் சென்று 1958-ம் ஆம் ஆண்டுச் சட்டத்திற்குப் போவது சரியாக இருக்காது.



1982 பிப்ரவரி 17] [திரு. ப. குழந்தைவேலு]

இதைச் சட்டமாக்கிவிட்டு தேர்தலை நடத்த வேண்டுமென்ற முறையிலே தான் அரசு இருக்கிறது. ஆகவே இதைச் சட்டமாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சிகளுக்கு நியமிக்கப்பட்ட தனி அதிகாரிகள், ஊராட்சி ஒன்றியக் குழுவிற்கு நியமிக்கப்பட்ட தனி அதிகாரிகள் ஆகியவர்களுடைய பதவிக்காலம் 31-3-82 அன்றும் 11-3-82 அன்றும் முடிவடைகின்றது. ஆகவே அவர்களுடைய பதவிக்காலத்தை நீட்டிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சில குற்றச்சாட்டுகளைச் சொல்லியிருக்கிறார்கள். தேசிய வேலைவாய்ப்புத் திட்டம், தன்னிறைவுத் திட்டம், மதிய உணவுத் திட்டம் போன்றவற்றில் பல குறைபாடுகள் கோடிட்டுக் குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கின்றன. அதிகாரிகள் மெத்தனமாக இருக்கிறார்கள், வேலை சரியாகச் செய்யவில்லை என்பன போன்ற குற்றச்சாட்டுகள் வந்திருக்கின்றன. அவைகளையெல்லாம் நான் கவனிப்பேன் என்று உறுதியினைக்கூறி அதே நேரத்திலே இந்தத் திருத்தங்களை ஏற்றுக்கொண்டு இதைச் சட்டமாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது மலைவாழ் மக்களுக்கும் ஆதிதிராவிட மக்களுக்கும் பெண்களுக்கும் நாங்கள் கடமையை செய்திருக்கிறோம் என்று சொன்னார்கள். அது வரவேற்கத்தக்கது. நான் வரவேற்கிறேன். கோவை மாவட்டத்தில் மேட்டுப்பாளையம் அருகே பரணிமலைப் பகுதியிலே மலைவாழ் மக்கள் சட்டசபை, பாராளுமன்றத் தேர்தலில் வோட்டுப் போட்டிருக்கிறார்கள். ஆனால் பஞ்சாயத்துத் தேர்தல், பஞ்சாயத்து யூனியன் தேர்தல்களிலே அவர்களுடைய பெயர்கள் குறிக்கப்படவில்லை.

(மாலை 5-50)

அப்படி விடுபட்டுப் போய் இருக்கிறது. அதைப்போலத் தென்னார்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அவியனூர் பற்றிய பிரச்னை வந்தது. அந்தப் பிரச்னை சம்பந்தமாக பெரிய அதிகாரிகளின் அலட்சியப் போக்கின் காரணமாக, உண்மையான கருத்துக்களை அரசாங்கத்திற்குத் தெரிவிக்காத காரணங்களினால் இங்கே பிரச்னைகள் வந்தன. அப்படிப்பட்ட அதிகாரிகள் யார் என்று பார்த்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தவறினால் அரசாங்கத்திற்கு எதை வேண்டுமானாலும் எழுதிக் கொடுக்கலாம். அவர்கள் நமக்குச் சாதகமாகத்தான் இருக்கிறார்கள், ஆகவே, நாம் தப்பித்துக் கொள்ளலாம் என்று அதிகாரிகள் மத்தியில் நினைக்கலாம். நான் எல்லா அதிகாரிகளையும் குற்றம் சொல்லவில்லை. ஆனால், குறிப்பாக மெத்தனமாக இருந்து' வேண்டுமென்றே பொய்யான தகவலைக் கொடுத்திருந்தால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கத் தவறக் கூடாது.

இரண்டாவதாக, நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல கோவை மாவட்டத்தில் அந்த இடத்தில் ஏற்கனவே நாடாளு மன்றத் தேர்தலுக்கும், சட்டமன்றத் தேர்தலுக்கும் வாக்களித் தவர்களின் பெயர்கள் விடுபட்டுப் போய் இருக்கின்றன. இது பற்றிக் கலெக்டருக்கும் எழுதியிருக்கிறோம். சகோதரர் ரமணி அவர்களும் எழுதியிருக்கிறார்கள். இதுபோன்ற பிரச்னைகளுக்கு அமைச்சரவர்கள் என்ன பதில் சொல்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவரவர் களே, கோவை மாவட்டத்தில் இருக்கின்ற நிலைமைகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். உடனடியாக அவைகள் கவனிக்கப் படும். அதே நேரத்தில் தென்னார்க்காடு மாவட்டம், அண்ணா கிராமம் ஒன்றியத்தில் அவியனூர் பற்றிச் சொன்னார்கள். ஏற்கனவே, கடந்த 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி அவியனூர் கிராமத்தில் அரிசனங்கள் இருப்ப தாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தப் புள்ளி விவரங்களின் அடிப்படையில் நாங்கள் ஒதுக்கீடு செய்தோமே தவிர வேறு எந்த எண்ணத்திலும் அல்ல. ஆனால் பிறகு எதிர்ப்பு தெரிவித்து ஆட்சேபணை கூறியிருக்கிறார்கள். அவைகளை யெல்லாம் களைந்து எடுத்திருக்க வேண்டுமென்பதுதான். சரியான நேரத்தில் கொடுக்கவில்லையே தவிர, ஆனால் அந்தப் புள்ளி விவரங்கள் 1973-அம் ஆண்டிலே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபொழுதுகூட மக்கள் தொகை கணக்கீடு கிடைக்கிறது. அப்பொழுதாவது அவர்கள் பார்த்து இருக்க வேண்டும். அப்பொழுதும் அவர்கள் பார்க்கவில்லை. ஆகவே, அந்தத் தவறுதான் நடந்திருக்கிறதே தவிர வேறல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்:

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: பேரவைத் துணைத் தலைவரவர் களே, சென்ற வாரம்கூட நம்முடைய மாண்பமிகு உறுப் பினரவர்கள் இதுபற்றிச் சொன்னார்கள். அவியனூர் என்னுடைய தொகுதியில் இருப்பதாலும், நான் ஏற்கனவே சேர்மனாக இருந்த காரணத்தினாலும் சிலவற்றைச் சொல்ல வேண்டியிருக்கிறது. சட்டமன்றத்தில் 1965-வரையில் அவியனூரிலோ அல்லது அழகப் பெருமாகுப்பத்திலோ ஜாதி இந்துக்கள்தான் வந்தார்கள்; அரிசனங்கள் வர முடியவில்லை. அப்படி வராத காரணத்தினால் அவியனூரிலிருந்து இந்தக் காலனி பகுதியைச் சேர்ந்து அழகப் பெருமாகுப்பத்தில் சேர்ந்த காரணத்தினால்தான் அன்றையதினம் நம்முடைய அருமை நண்பர் தங்கவேல் அவர்கள் வர முடிந்தது. அரிசனங்கள் வருவதைத் தடுப்பதற்காகப் பிரிக்கவில்லை. அது அவராக விரும்பி, தங்கவேல் அவர்களே தான் பிரசிடெண்டாக வர வேண்டுமென்பதற்காக அவியனூரிலேயிருந்து 1965-லேயே அதைப் பிரித்து அழகப்பெருமாகுப்பத்திலே சேர்த்து விட்ட காரணத்தினால் பொது மக்களுடைய வாக்குகளைப்பெற்று அன்றையதினம் அவர் தலைவராக வந்தார்கள்.





நான் அமைச்சரவர்களிடத்தில் ஒரு கருத்தை அறிய விரும்பு கிறேன். தேர்தல் பற்றிய ஸ்டே வெகேட் செய்யப்பட்ட பிறகு மறுபடியும் புனர் பரிசீலனை செய்து தேர்தலை நடத்தப் போகிறார்கள். அப்பொழுது இந்தப் பஞ்சாயத்து யூனியனில் யார் அதிகமாக இருக்கிறார்கள், அந்தப் பஞ்சாயத்தில் யார் அதிகமாக இருக்கிறார்கள் என்று அறிய, கலெக்டர் என்று ஒருவர் இருக் கிறாரே அவரைக் கேட்டால் என்ன? நீங்கள் ஏன் சென்சஸ் புத்தகத்தை வைத்துக்கொண்டு போனீர்கள்?

திரு. இரா. கருப்பையா: துணைத் தலைவரவர்களே,....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒவ்வொருவருக்கும் ஏதாவது சந்தேகங்கள் எழுந்துகொண்டுதான் இருக்கும். நாம் ஆறரை மணிக்குள் முடிக்க வேண்டுமென்று கருதிக்கொண்டிருக் கிறோம். இன்னும் மூன்று சட்ட முன்வடிவுகள் இருக்கின்றன.

திரு. இரா. கருப்பையா: ஒரே ஒரு விளக்கம் கேட்க விரும்பு கிறேன். இப்பொழுது மாண்புமிகு அமைச்சரவர்கள் கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் பரலி கிராமத்தைப் பற்றிக் கவனிக்கப்படும் என்று சொன்னார்கள். இம்மாதிரி பலயிடங் களில் புகார்கள் இருக்கின்றன. ஊராட்சி மன்றத் தேர்தல் களுக்கான வாக்காளர் பட்டியலில் பெயர்கள் விடுபட்டிருப் பதாகப் புகார்கள் இருக்கின்றன. ஆகவே, 1981 ஆம் ஆண்டு 18 வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்குரிமை என்ற அடிப் படையில் உடனடியாக வாக்காளர் பட்டியலைத் திருத்துவதற் கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு எப்படி இருக்கிறதோ அதைப் பொறுத்துத்தான் நாம் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனாலும், 18 வயது வந்தவர்களைப் பற்றி அங்கே வழக்கில்லை. ஆகவே, தேர்தல் வருவதற்கு முன்னாலே இவைகள் எல்லாம் சீர்திருத்தப்படும்.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் பேசும்பொழுது 1958 ஆம் ஆண்டு சட்டப்படி பஞ்சாயத்துத் தேர்தலை நடத்த வேண்டுமென்று ஆலோசனை யாகக் கூறினேன். இதனை எதிர்க்கின்ற 300-க்கு மேற்பட்ட வழக்குகள் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கின்றன. அவர்கள் உச்ச நீதிமன்றத்திற்குச் செல்வதை யாரும் தடை செய்ய முடியாத நிலைமையிருக்கிறது. அதனால் காலதாமதமாகும். இப்பொழுது நிர்வாகம் சீர்கெட்டிருக்கிறது. ஆகவே, பழைய முறையிலாவது தேர்தலை நடத்தி, இடைக்காலம் என்றைக்கு வேண்டுமானாலும் நீங்கள் கலைக்கலாம் என்ற முறையில், அங்பொழுது நீங்கள் சொல்கின்ற புரட்சித் திட்டத்தைப் புகுத்தி, அப்பொழுது தேர்தலை நடத்தலாம் என்றுதான் சொன்னேன்.

[1982 பிப்ரவரி 17

(ஈ) ஊராட்சிகள் திருத்த சட்டமுன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து வாக்கெடுப்பு. திரு. கு. பா. பழனியப்பன் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 10 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 6/1982) நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(உ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"ஆளுநர் அவர்களால் 9-12-1981-ஆம் தேதியன்று பிறப்பிக்கப் பெற்ற, தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) மூன்றாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 14/1981) இப்பேரவை நிராகரிக்கிறது".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.



1982 பிப்ரவரி 17]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 4/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

[மாலை 6-00]

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"பிரிவு 2 உட்பிரிவு 1-ல், "இரண்டு ஆண்டு ஒன்பது திங்கள் காலத்திற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இரண்டு ஆண்டு ஆறு திங்கள் காலத்திற்கு" என்னும் சொற்களை அமைத்துக் கொள்ளவேண்டும்."

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

திரு. ஜே. எஸ். இராசு: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"பிரிவு 2 உட்பிரிவு 1—ல் "இரண்டு ஆண்டு ஒன்பது திங்கள் காலத்திற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இரண்டு ஆண்டு ஆறு திங்கள் காலத்திற்கு" என்னும் சொற்களை அமைத்துக் கொள்ள வேண்டும்.

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என் பேரால் கொடுக்கப்பட்டிருக்கின்ற திருத்தத்தை வலியுறுத்தி சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். கடந்த சட்டமன்றக் கூட்டம் நடைபெற்ற நேரத்தில், விரைவிலே பஞ்சாயத்து, பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர்கள் தேர்தல் நடைபெறும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

உறுதியாகத் தெரிவித்தார்கள். எதிர் தரப்பிலே இருந்து வருவது மழைக்காலம் ஆயிற்றே தேர்தல் நடைபெறுமா என்று கேட்ட நேரத்தில், நம்முடைய அமைச்சர் அவர்கள் வழக்கம் போலவே உறுதியாக, மழைபெய்தாலும், இடி இடித்தாலும், புயல் வீசினாலும், வெள்ளம் வந்தாலும் தேர்தல் நடைபெறும் என்று (மணி அடிக்கப்பட்டது) குறிப்பிட்டார்கள். துணைத் தலைவர் அவர்களே, மழை பொழிந்தாலும், இடி இடித்தாலும் புயல் வீசினாலும் தேர்தல் நடைபெறும் என்று இதுபோல இந்த மன்றத்திலே அமைச்சர் அவர்கள் மொழிந்தது ரெக்கார்டுகளிலே இருக்கின்றன. மழை பொழிந்தது, இடி இடித்தது, புயல் வீசியது ஆனால் தேர்தல்தான் வரவில்லை.

நடைபெறவிருந்த தேர்தல் நிறுத்தி வைக்கப்பட்டதற்குக் காரணங்கள் பலவாக இருக்கலாம். அதற்குள்ளே நுழைய நான் விரும்பவில்லை. இருந்தாலும் நடைபெறவிருந்த தேர்தல் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. மேலும் கால நீட்டிப்புக்கு, தனி அதிகாரிகளின் கால நீட்டிப்பு கேட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் தங்களுடைய மசோதாவை கொடுத்திருக்கிறார்கள். நாங்கள் ஏற்கனவே தெரிவித்த பிரகாரம் நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும்; இனிமேல் நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும் என்று கூறி, தாங்கள் எடுத்துக் கொண்ட முயற்சிக்கேற்ப, விரைவிலே உங்கள் அரசாங்க வழக்கறிஞர்கள் மூலமாக நீங்கள் எடுத்துக் கொண்ட முயற்சியிலே சற்று விரைவு காண்பித்து, விரைவிலேயே நீங்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய புரட்சிகரமான திட்டத்தின்படி தேர்தலை நடத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, இந்தத் தீர்மானத்தை நான் எதிர்த்து என்னுடைய கருத்தைத் தெரிவிக்கிறேன்.

திருத்தங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றன.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1 முகப்புரை நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 4/1982) நிறைவேற்றப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.





**(ஊ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1982**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "ஆளுநர் அவர்களால் 9-12-1981-ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) மூன்றாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 15/1981) இப்பேரவை நிராகரிக்கிறது."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.5/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 2 சட்டமுன்வடிவில் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்."

திரு. பொ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"பிரிவு 2 உட்பிரிவு 1—ல்" ஐந்தாண்டுகள் ஐந்து திங்கள்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐந்தாண்டுகள் மூன்று திங்கள்கள்" என்னும் சொற்களை அமைத்துக்கொள்ளவேண்டும்."

திருத்தம் முறையாக வழிமொழியப்பெற்றது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: துணைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்துள்ள திருத்தத்தின் மீது ஓரிரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஏற்கனவே, இந்த அரசு 13,000 ஊராட்சி மன்றங்களைக் கலைத்தபோது, ஒன்றிய ஆணையாளர்களையே அந்த ஊராட்சி மன்றத்தின் தனி அதிகாரியாக நியமித்தார்கள். அப்போதே இந்த மன்றத்தில் சொன்னோம். தனி அதிகாரிகளாக இருக்கும் ஆணையாளர்களுக்கு தலைவருக்கு இருக்கும் அதிகாரமும் இருப்பதால் அவர்கள் ஊராட்சிகள் பணத்தை செக்போட்டு எடுத்துச் செலவழிக்கின்ற நிலைமையும், பல வேலைகளை அவர்களே செய்ய வேண்டிய பொறுப்பும் வருகிறது என்று எடுத்துக்காட்டி, அந்த வேலைகளை கவனிக்கவேண்டிய பொறுப்பு, அல்லது அவற்றை மேற்பார்வை செய்யும் பொறுப்பு அந்த ஆணையாளர்களின் கீழ் பதவி வகிக்கின்ற ஓவர்சியர் போன்றவர்களுக்கு இருப்பதால், அந்த மேற்பார்வை செய்யும் அதிகாரத்தை வேறு யாரிடமாவது ஒப்படைக்கவேண்டும் என்று அன்றைக்கே இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். நானும் அதனைச் சுட்டிக் காட்டினேன். அப்போது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் தனி அதிகாரிகள் பதவிக்காலம் இருக்கும் வரையில் அந்த அதிகாரத்தை வேறு யாரிடமாவது கொடுத்து கண்காணிக்கச் செய்வோம் என்று உறுதி அளித்தார்கள். ஆனால் இதுவரையில் அதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்று அறிகிறேன். இந்தத் தேர்தல் நடக்குமா, நடக்காதா, நீதி மன்றம் தடையை எப்போது விலக்கும், தேர்தல் எப்போது நடக்கும் என்கிற பிரச்னை வேறு. ஆனால் அது வரையில் இந்தத் தனி அதிகாரிகள் ஊராட்சிகளின் பணத்தைப் பல்வேறு பணிகளுக்கு செலவு செய்கிறார்கள். அதிலே ஏகப்பட்ட விரயம் ஏற்படுகிறது. ஆகவே அதைக் கண்காணிப்பதற்காக உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டு, என்னுடைய திருத்தத்தை நான் வலியுறுத்துகிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 5/1982) நிறைவேற்றப்பெறவேண்டும்."





தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

## (எ) இந்திய தண்டனைச் சட்டக்கோவை குற்றவியல் நடைமுறை விதிக்கோவை (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு 1982

திரு அ. ரகுமான்கான்: துணைத்தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"ஆளுநர் அவர்களால் 20-9-1981—ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற 1981—ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டக்கோவை, குற்றவியல் நடைமுறை விதிக்கோவை (தமிழ்நாடு திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண், 12/1981) இப்பேரவை நிராகரிக்கிறது"

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"1982-ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டக் கோவை, குற்றவியல் நடைமுறை விதிக்கோவை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு* எண். 3/1982 ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ரகுமான்கான் அவர்களின் தீர்மானமும், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானமும் அவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெற்றுள்ளன.

[இரவு 6-10]

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு இங்கே கொண்டுவரப்பட்டிருக்கக் கூடிய இந்த சட்ட முன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் கடுமையாக எதிர்க்கிறேன்.

பத்திரிகைகளுடைய உரிமையைப் பறிப்பதற்காக கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த சட்டமுன்வடிவு சட்டமாக நிறைவேற்றப் படக்கூடிய இந்த நாள் சட்டமன்ற நிகழ்ச்சிகளில் ஒரு துக்க நாள், ஒரு கறுப்பு நாள் என்று நான் வருத்தத்தோடு இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சட்டமன்றத்திலே எதிர்க்கட்சிகள் இன்னின்ன முறையில் பேசினார்கள்; வெளியிலே இப்படி எல்லாம் பேசினார்கள் என்று பத்திரிகைகளிலே போடுவார்கள். ஆனால் இனிமேல் அந்தச் செய்திகளை வெளியிடும் பத்திரிகைகளின் உரிமை படுகொலை செய்யப்படுகிறது; பத்திரிகை உரிமை பறிமுதல் செய்யப்

*1982 பிப்ரவரி 8ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

படுகிறது. இங்கே நீங்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தச் சட்டம் இந்தியன் பினல் கோடு 292 (ஏ)-க்கு ஒரு திருத்தம் கொடுக்கிறது. அந்தப் பிரிவைத் திருத்துவதற்காகக் கொண்டு வந்திருக்கிறீர்கள் இந்தச் சட்டத்தை. ஏற்கெனவே இந்தியன் பினல் கோடு சட்டத்தில் பத்திரிகைகளாக இருந்தாலும், சுற்றறிக்கைகளாக இருந்தாலும், சஞ்சிகைகளாக இருந்தாலும் அவைகளிலே கீழ்த்தரமாக எழுதினாலும், அவதூறாக எழுதினாலும், முறைகேடாக எழுதினாலும்; சம்பந்தப்பட்டவர்கள் யார் வேண்டுமானாலும், சர்க்கார் உட்பட வழக்குத் தொடுக்கலாம் என்ற அதிகாரம் இருக்கிறது; தண்டிக்கப்படலாம். ஏற்கெனவே இருக்கிற சட்டத்தில் இந்த விதிகள் இருக்கின்றன.

இப்போது நீங்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தத் திருத்தச் சட்டத்தில் எப்படி கொண்டு வந்திருக்கிறீர்கள் என்றால், ஏற்கெனவே இருக்கிற இந்தியன் பினல் கோடு சட்டம் 292 (ஏ)-க்கு கொண்டுவந்திருக்கிற இந்தத் திருத்தச் சட்டத்திலே சொல்லியிருக்கிறபடி ஒருவர் கைதானால் ஜாமீனில் வரமுடியாது, 5 ஆண்டுக்கு உள்ளே இருக்க வேண்டும். ஏற்கெனவே இருந்தச் சட்டத்தில் ஒருவர் கீழ்த்தரமாக எழுதினால், அவதூறாக எழுதினால் அவர்மீது வழக்குத் தொடரலாம். அப்படி வழக்குத் தொடருகிறபோது குற்றம் சுமத்தப்பட்டவர் ஜாமீனில் வெளியே வரலாம், தான் குற்றவாளி அல்ல என்று வாதிடலாம். ஆனால் இப்போது நீங்கள் கொண்டு வந்திருக்கிற சட்டத்தில் எப்படி இருக்கிறது என்றால் யார்மீது வேண்டுமானாலும். கீழ்த்தரமாக எழுதினார், அவதூறாக எழுதினார், பழித்து எழுதினார் என்று சொல்லி ஒரு பத்திரிகையை வெளியிடுகிறவரையோ அல்லது பத்திரிகை ஆசிரியரையோ கைது செய்யலாம். அப்படி கைது செய்தால் அவர் 5 ஆண்டுக்காலம் உள்ளே இருக்க வேண்டும். இது கடுமையான சட்டம், கடுமையான தண்டனை, அவர் ஜாமீனிலும் வர முடியாது. இதற்கு முன்னாலே இருந்தச் சட்டத்தில் ஜாமீனில் வரலாம், வாதிடலாம்; தண்டனை இரண்டு ஆண்டுகள் தான். அதுவும் நீதிமன்றம்தான் தீர்ப்பு வழங்க முடியும்.

இப்போது 5 ஆண்டுத் தண்டனை, ஜாமீனில் வரமுடியாது என்று சொல்லுகின்ற சட்டத்திலே யார் தீர்ப்பு கூறுவது? யாரிடத்திலே அந்தச் சட்டத்தைக் கொடுக்கிறீர்கள்? அவதூறாக எழுதினார், கீழ்த்தரமாக எழுதினார், தரக்குறைவாக எழுதினார் என்று யார் தீர்மானிப்பது? உங்கள் அதிகாரிகள் தான் அதை தீர்மானிக்கிறார்கள். இப்படிப்பட்ட அதிகாரப் போலீசாருக்கு கொடுக்கப்பட்டால், இப்படிப்பட்ட அதிகாரம் உங்களுக்குக் கொடுக்கப்பட்டால், சர்க்கார் இந்தச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தியது ஆகாதா அல்லது தவறாகப் பயன் [illegible] நான் கேட்க ஆசைப்படுகிறேன்.



அரசியல் உள்நோக்கத்தால், அரசியல் காழ்ப்பு உணர்ச்சியால் இந்தச் சட்டத்தை நீங்கள் தவறாகப் பயன்படுத்தமாட்டீர்களா என்பதற்கு கடந்த கால அனுபவங்கள் தெளிவாக இருக்கின்றன. ஏற்கெனவே இருக்கிற சட்டத்திலே நடவடிக்கை எடுக்க, தகுந்த தண்டனை வழங்க இடமிருக்கிறபோது 5 ஆண்டு தண்டனை, ஜாமீனில் வரமுடியாது என்று கொண்டுவந்திருக்கிற இந்தச் சட்டம், பத்திரிகை கொலை செய்யும் இந்தச் சட்டம் எந்தவகையில் நியாயம் என்று கேட்க விரும்புகிறேன்.

சர்க்காருடைய கொள்கை தவறானது என்று பத்திரிகையில் எடுத்துச் சொல்லக்கூடாதா? அமைச்சர்கள் தவறு செய்தார்கள் என்று பத்திரிகைகளிலே எழுதக்கூடாதா? ஆளும் கட்சி தவறு செய்தால் அதை பத்திரிகை சுட்டிக்காட்டக் கூடாதா? உங்கள் திட்டங்களை குறை இருந்தால் அதைச் சொல்லக்கூடாதா? உங்கள் அதிகாரிகள் தவறு செய்தால் அதையும் பேசக்கூடாதா? அரசாங்க அதிகாரிகள் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே எவ்வளவோ சொல்லியிருக்கிறார்கள், வெளியிலேயும் சொல்லியிருக்கிறார்கள். முதலமைச்சர் அவதூறாகச் சொல்கிறார் என்று அந்த அதிகாரிகள் வழக்கு போட முடியுமா? அந்த அதிகாரிகள் நீதிமன்றம் போக முடியுமா? வழக்குப் போட்டால் அந்த அதிகாரி பதவியில் இருக்க முடியுமா? அவர்களுக்கு பாதுகாப்பு இல்லையே இப்படிப்பட்ட ஒரு பயங்கரமான சட்டமாக இது இருக்கிறது. அவதூறாக எழுதினார் என்று சொல்லி ஒருவர் கைது செய்யப்பட்டால் அவர் ஜாமீனில் வரமுடியாது, 5 ஆண்டு ஜெயில் என்றால் இது எவ்வளவு கடுமையானச் சட்டம்? இது நியாயம் தானா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

இன்று காலையிலே கூட இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் மிகத் தெளிவாக எழுதியிருக்கிறார்கள். நீங்கள் அனுமதித்த 10 பிளன்டிங் யூனிட்டுகளில் மிகப்பெரிய தவறு நடந்திருக்கிறது என்று பத்திரிகையிலே வந்திருக்கிறது. அதைக் கண்டுபிடிப்பதற்காக இன்கம் டாக்ஸ் டிபார்ட்மென்டிலிருந்து ரெய்டு செய்து ஒரு இலட்சம் ரூபாய் சீஸ் செய்யப்பட்டிருக்கிறது; பல்வேறு ரிக்கார்டுகள் சீல் செய்யப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: ரெய்டு என்றால் என்ன என்பதை விளக்குவார்களா?

திரு. அ. ரகுமான்கான் துணைத் தலைவரவர்களே, நான் சொல்வது ரெய்ட். Raid அடுத்து நான் அமைச்சர் அவர்களுக்கு விளக்குவதற்காகச் சொல்கிறேன். அவர்கள் என்ன என்று கேட்டார். தமிழ்நாட்டிலே உள்ள இண்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை போன்றவைகளை எல்லாம் அவர்கள் அதிகமாகப் படிப்பதற்கு வாய்ப்பு இருந்திருக்காது.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

என்று அந்தப் பத்திரிக்கையிலே வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்தப் பத்திரிகைகளில் உள்ளது எல்லாம் வேண்டாம்.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவரவர்களே, பத்திரிகையிலே இப்படி செய்தி வருகின்றது என்றுதான் சொன்னேன், மாண்புமிகு உமாநாத் அவர்கள் கூட இப்படி பத்திரிகைகளை ரெஃபர் பண்ணி இருக்கிறார்கள்.

திரு. துரைமுருகன்: பத்திரிகைகளில் வந்ததை அவர் கோட் பண்ணிச் சொல்லி இருக்கிறார். இது தப்பா?

திரு அ. ரகுமான்கான்: துணைத் தலைவரவர்களே, பத்திரிக்கையிலே எங்களைப் பற்றி அவதூறாக எழுதுகிறார்கள், கேவலமாக எழுதுகிறார்கள், கீழ்த்தரமாக எழுதுகிறார்கள் என்றெல்லாம் முதலமைச்சர் அவர்கள் குற்றம் சுமத்துகிறார். இண்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே எழுதப்பட்டிருக்கின்றதே, ரெய்ட் செய்யப்பட்டது. சோதனையிடப்பட்டது. ஒரு இலட்சம் ரூபாய் எடுக்கப்பட்டது என்றெல்லாம் எழுதி இருக்கிறார்களே, நான் கேட்கிறேன் இது தவறா? அவதூறா? அப்படி என்றால் இண்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையின் மீது நாளைக்கே வழக்கு போடுங்கள். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. அவதூறு என்று அவர்களைக் கைது செய்வீர்களா? நான் பெய்லபிள் என்ற வகையிலே கைது செய்வீர்களா?

நான் இன்னொன்றையும் கேட்கவிரும்புகிறேன். உங்களுடைய தவறுகளை எடுத்துச் சொன்னால் அவற்றை அவதூறு என்று சொல்லி அந்த சட்டத்திற்குள்ளே ஒளிந்துக் கொள்ள கூடாது. அதைப் போலவே எதிரொலி பத்திரிகையைப்பற்றிக் கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேலவையிலே பேசினார்கள். எதிரொலி பத்திரிகை அவதூறாக எழுதினால் உண்மைக்குப் புறம்பான செய்திகளை எழுதினால் எப்படி பொறுத்துக் கொள்ள முடியும். எனவே அதற்கு சட்டம் தேவை என்றுசொல்கிறார். நான் ஆதாரபூர்வமாகவும் அதிகார பூர்வமாகவும் இங்கே சொல்கிறேன். எதிரொலி பத்திரிகையில் எழுதியது பார்த்தசாரதி என்ற ஒரு டாக்டர். அவர் எம். எஸ். ஆர்த்தோ. அவருக்கு இடம் கொடுக்கப் படாமல் ஒழுங்கீனங்கள் நடைபெற்றிருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் செலக்ஷன் கமிட்டியிலே இருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கு சொந்தக்காரர்களுக்குத் தரப்பட்டிருக்கின்றது, இது முறை கேடு இது ஒழுங்கீனம் என்று இந்தியாவினுடைய சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வழங்கி இருக்கின்றது. இதை எதிரொலி பத்திரிகை எழுதியது. அமைச்சர் ஹண்டே அவர்களுக்கு எதிராக எழுதியது. நான் கேட்கிறேன். இது அவதூறா? இது கீழ்த்தரமா?





ஆகவே மக்கள் மத்தியிலே உங்களுடைய தவறுகளைத் தெளிவாக்கக்கூடாது என்பதற்காகத்தான் இந்த கடுமையான சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்.

அதுமட்டுமல்ல, இண்டியா டுடே என்ற பத்திரிகை எழுதவில்லையா? எரிசாராயத்தைப் பற்றி எழுதவில்லையா, கப்பல் பேரத்தைப் பற்றி எழுதவில்லையா? பிளிட்ஸ் பத்திரிகையும், சண்டே பத்திரிகையும் எழுதவில்லையா? உங்கள் சட்டம் அவர்களை என்ன செய்ய முடியும்? நான் கேட்கிறேன், வழக்கு தொடுக்க முடியுமா? இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறீர்களே, 5 ஆண்டுகள் உள்ளே இருக்க முடியும் என்று, இதற்குள்ளே நுழைய முடியுமா? அப்படி உங்களுக்கு நிச்சயமாக முடியும் என்று சொன்னால் அந்தக் காரியத்தைத் தாராளமாகச் செய்யலாம். இதிலே ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீசன் என்று குறிப்பிட்டு இருக்கிறீர்கள். ஆனால் ஆபாசமான, கீழ்த்தரமான, அவதூறான பத்திரிகைகளை வெளியிடுவதையும் சஞ்சிகைகளை வெளியிடுவதையும் பற்றி அரசின் கவனத்திற்கு வந்திருக்கின்றது. ஆகவேதான் இந்த அவதூறான, கீழ்த்தரமான தப்பைக் கண்டிப்பதற்காக நடவடிக்கை எடுப்பதற்காக இந்த அவசரச் சட்டத்தை நாங்கள் இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறோம். என்று நீங்கள் குறிப்பிடுகிறீர்கள். அப்படியானால் நான் உங்களைப் பார்த்துக் கேட்கிறேன். மூக்குத்தி என்ற பத்திரிகை வெளிவருவது அரசின் கவனத்திற்குத் தெரியாதா? காமம் என்ற பத்திரிகை வெளிவருவது அரசுக்குத் தெரியாதா? மாயா என்ற பத்திரிகை வருகிறதே, அது அரசுக்குத் தெரியாதா? அவைகளிலே இருப்பது எல்லாம் ஆபாசமாகத் தெரியவில்லையா?

* * *

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரிகையாக இருந்தாலும், புகைப்படமாக இருந்தாலும் அதை அவையிலே காட்டுவதற்கு முன்னாலே தங்களுடைய அனுமதி பெற்றுத்தான் காட்டப்படுவது வழக்கம். ஆனால்

* * *

இதை எல்லாம் எப்படி அலவ் பண்ணுகிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் அப்போதே சொன்னேன் நீங்கள் இண்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையைப் படித்தபோது கூடச் சொன்னேன். இப்படி அவையிலே கொண்டு வந்து காட்டுவதற்கு முன் என்னுடைய அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும் என்று. ஆகவே அதை விட்டுவிட்டு மற்ற விஷயங்களைப் பேசுங்கள் (குறுக்கீடுகள்—குழப்பம்)

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(இரவு 6.20)

திரு. இரா. முத்தையா: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் ஏதேதோ படங்களை காட்டுகிறார், பத்திரிகைகளை வைத்திருக்கிறார். அவைகளையெல்லாம் அவையிலே காட்டுவதற்கு தாங்கள் அனுமதிக்கிறீர்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் அவைகள் எதையும் அனுமதிக்கவில்லை. அவர் மேற்கொண்டு, பில்லில் பேசலாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. து. புருஷோத்தமன்: துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், தொழில் அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, அவைகளையெல்லாம் அனுமதிக்கலாமா என்று உங்களுக்கே கட்டளை பிறப்பிப்பது போல பேசுகிறாரே, அப்படி பேசுவது சரிதானா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: யாரும் எனக்கு உத்தரவு போடவில்லை. ஒரு விஷயத்தை அவருடைய சார்பிலே எடுத்துச் சொன்னார்கள் அவ்வளவுதான். திரு. ரகுமான்கான் அவர்கள் தொடர்ந்து சட்டமுன்வடிவின் மீது பேசட்டும்.

திரு. அ ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒன்றினை படித்துக் காட்ட தாங்கள் அனுமதிப்பீர்கள் என்று நினைக்கிறேன். அதை இங்கே படிக்க விரும்புகிறேன். ரத்தினம் என்ற வழக்குரைஞர், இந்த மூக்குத்திப் பத்திரிகை, மாயா பத்திரிகை, காமம் என்ற மூன்று பத்திரிகைகளின் மீதும் ஆபாசமாக இருக்கிறது, கீழ்த்தரமாக இருக்கிறது, அவதூறாக இருக்கிறது, எனவே இவைகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வழக்கு தொடர்ந்ததற்கு, மெட்ராஸ் ஹைகோர்ட்டிலே தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) அந்த தீர்ப்பிலே, அந்த மூன்றுபத்திரிகைகளின் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டால், இல்லை, காரணம் அந்தப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் ஆளும்கட்சியைச் சேர்ந்தவர்கள், இன்னொரு பத்திரிகை ஆசிரியர் ஆளும்கட்சியிலே கீழ் கிரேடு லெவலில் உள்ளவர் போல் இருக்கிறது. அவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதெல்லாம் போகட்டும்; தீர்ப்பு வழங்கப்பெற்ற இந்த மூன்று பத்திரிகை ஆசிரியர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. அந்தப் பத்திரிகைகளை வெளியிட்டவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கவில்லை. பின்பு யார்மீது எடுத்திருக்கிறார்கள் என்று கேட்டால், அதை விற்கக்கூடிய சாதாரண சேல்ஸ்மேன் இருக்கிறாரே, ரீடெய்ல் ஏஜெண்ட் அவர் மீது வழக்குப் போட்டு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். ஆசிரியர்களையும் விட்டு விட்டார்கள். வெளியிட்டவர்களையும்



வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தத் திருத்தம் 292—எ பிரிவு பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுவது 292-வது பிரிவு பற்றியது. நிந்தனையாக எழுதுவதை தண்டிப்பதற்காகத்தான் அமைச்சர் அவர்கள் திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். 'ஸ்கரிலஸ்' என்று சொன்னால் இன்டீசன்ட் லேங்குவேஜ் என்று ஆக்ஸ்போர்டு டிக்ஷனரியில் போட்டிருக்கிறார்கள். இந்தக் கேள்வி வரும் என்பதை எதிர்பார்த்துத்தான், அதைப்பார்த்துவிட்டு தயாராக வந்திருக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, இர்ரெலவண்ட்டாக நான் பேசவில்லை.

எனவே, ஆளும் கட்சியின் சார்பாக இருக்கிற காரணத்தாலே அவதூறாக இருந்தாலும், கீழ்த்தரமாக இருந்தாலும், ஆபாசமாக இருந்தாலும் சர்க்கார் நடவடிக்கை எடுக்கத் தவறுகிறது. இன்னொரு ஆதாரத்தைக் கூட நான் இங்கே கொடுக்க முடியும். நம்முடைய மாண்புமிகு கமிஷனர், ஸ்ரீ பால் அவர்கள் ஒரு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். எதிரொலி பத்திரிகைக்கு நீங்கள் எழுதுவது அவதூறாக இருக்கிறது என்று. அதை இங்கே கோடிட்டுக் காட்டவிரும்புகிறேன். அவர் கொடுத்த அந்த நோட்டீஸினுடைய நம்பரைக்கூடச் சொல்கிறேன்: 22.12.1981 ஆம் தேதியன்று அந்த நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1553/5/ஏ 6/வி1/81. அதிலே அவதூறாக எதுவும் எழுதக்கூடாது என்று கேட்டிருக்கிறார்கள்.

நான் கேட்கிறேன். மக்கள் குரல் பத்திரிக்கை இருக்கிறதே உங்களுடைய பத்திரிக்கை, அது எதுவும் எழுதுவது இல்லையா? அதன்மீது நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறதா? உங்களுடைய ஆதாரபூர்வமான பத்திரிக்கை என்று நம்புகிறேன் அண்ணா பத்திரிக்கை, அது எதுவுமே எழுதுவது இல்லையா? அதன்மீது நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறதா? ஆனால் எங்களுக்குத்தான் நாங்கள் எழுதுகிற பத்திரிக்கை அவதூறு என்று சொல்லி, நோட்டீஸ் கொடுத்திருக்கிறீர்கள் என்று சொன்னால், அதற்கு நான் கமிஷனர் மீது குற்றம் சொல்ல மாட்டேன்.

நான் ஸ்ரீபால் அவர்கள் மீது குற்றச்சாட்டு சொல்ல மாட்டேன். ஏனென்றால் அவர்கள் அம்பு எய்பவர்கள் நீங்கள் தான். இப்படி இரட்டை நிலையில் நீங்கள் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்த எவ்வளவோ வாய்ப்பிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டத்தான் இங்கே இவற்றையெல்லாம் குறிப்பிட்டேன்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்க அதிகாரிகள் பேட்டி தரக்கூடாது என்று சட்டம் எந்த நாட்டிலாவது இருக்கிறதா? நான் சட்டம் என்றிருப்பதாகச் சொல்லவில்லை. மத்திய அமைச்சர் திரு. சாத்தே அவர்களிடம் பத்திரிக்கை நிருபர்கள் முறையிடுகிறார்கள். அப்படி அதிகாரிகள் பேட்டி கொடுக்கக்கூடாது என்று நிலை இருக்கிறது என்று சொல்கிறபோது அவர் கேட்கிறார், அப்படி ஒரு உத்தரவு இருக்கிறதா என்று. அப்படி ஒரு பத்திரிகை தணிக்கை இருப்பது சரியல்ல என்று பத்திரிகை நிருபர்களிடம் இவர்கள் சொல்லி அது பத்திரிகைகளில் வந்திருக்கிறது. இது தவறான தகவல் என்று சொன்னால் அமைச்சர் அவர்கள் இதை மறுக்கலாம். ஆகவே இன்று அரசாங்க அதிகாரிகள் அரசாங்க விஷயங்கள் பற்றி தகவல் கொடுக்கக்கூடாது என்று சொல்கிற அளவிற்கு செய்து கொண்டிருக்கிறார்கள். பெங்களூரில் உள்ள 'ஸண்டே மிட்—டே' என்ற பத்திரிகையில் வெளி வந்திருக்கிறது. அந்தப் பத்திரிகையில் குறிப்பிடுகிறார்கள், திருப்பத்தூர் இடைத் தேர்தலின்போது அங்கே நிற்கக் கூடிய வேட்பாளர் யார், நாமினேஷன் என்னவாயிற்று, அங்கே எவ்வளவு பேர்கள் போட்டியிடுகிறார்கள் எனற விவரங்களை பத்திரிகை நிருபர்கள் அதிகாரிகளிடம் கேட்டால் அவர்கள் வாயைப் பொத்திக்கொண்டிருக்கிறார்கள், நாங்கள் சொல்லக்கூடாது, எங்களுக்கு அந்த வம்பு வேண்டாம் என்று சொல்லியிருப்பதாக அந்தப் பங்களூர் பத்திரிகையில் வந்திருக்கிறது என்று சொன்னால் நான் கேட்கிறேன், அண்ணா அவர்கள் ஜனநாயகத்திற்காக எவ்வளவோ பாடுபட்டார்கள், அதற்கு விரோதமாக இந்த அரசு ஜனநாயக படுகொலையாக இந்தப் பத்திரிகை சட்டம் என்ற பெயரால் இதைக்கொண்டு வந்திருக்கிறது.

டெலிவிஷனில் உங்களைப் பற்றி செய்தி சரியாக வெளியிடவில்லை என்று சொல்லி டெலிவிஷனுக்காக வந்த போட்டோகிராபரை அமைச்சர் ஹண்டே அவர்கள் வெளியே அனுப்புகிறார். வானொலியில் சரியாகச் செய்திகள் வரவில்லை என்று சொல்லி நீங்கள் எதிர்ப்பு தெரிவிக்கிறீர்கள். இப்படி பல்வேறு பிரச்னைகள். மக்களின் அடிப்படை உரிமையாக இருக்கக்கூடிய, ஜனநாயக உரிமையாக இருக்கக்கூடிய பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதிக்கிற வகையில் சட்டம் இயற்றுகிறீர்கள். இறுதியாக நான் ஒன்றை மட்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

** **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையெல்லாம் அவைத் தலைவர் அவர்களின் விவகாரம். இதில் அது வேண்டாம்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





திரு. அ. ரகுமான்கான்: எதிரொலி பத்திரிகை உங்களை, இந்த அரசை ஆதரிக்கவில்லை என்பதற்காக விளம்பரங்கள் தராமல் உங்களை ஆதரிக்கக்கூடிய பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் தருகிறீர்கள்.

தினகரன் பத்திரிகை பற்றிய ஒரு சம்பவத்தைச் சொல்லி என் உரையை முடிக்கிறேன். தினகரனை ஒரு தியேட்டரில் விற்கக்கூடாது என்று கூறி, யாரோ ஒருவர் அங்குள்ள ஊழியர் ஒருவர் அடிக்கப்பட்டார் என்ற செய்தியை அந்தப் பத்திரிகை போட்டதன் காரணமாக அந்தப் பத்திரிகை விற்கக்கூடாது என்று சொல்லி மாலை முரசு ஏஜெண்டை அடித்து அவர்களை துன்புறுத்தி மாலை முரசு வரக்கூடாது, தினகரன் விற்கக்கூடாது என்று இப்படி காட்டு தர்பார் நடக்கிறது. இதுபற்றி இந்த சர்க்கார் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் இது ஜனநாயக நாடா அல்லது சர்வாதிகார நாடா என்று கேட்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன்: யாரையோ மென்ஷன் செய்கிறார்கள்.

எங்கேயோ நடக்கிறது. யார் யாரை அடித்தார்கள்? ஏஜெண்டை யார் தடுத்து நிறுத்தினார்கள்? யாரோ அடித்தார்கள், யாரோ தடுத்து நிறுத்தினார்கள் என்று யாரோ யாரோ என்று சொல்லி இப்படி இந்த மன்றத்தில் சொல்வது சரியல்ல. யாரையோ குறிப்பிட்டுத்தான் சொல்கிறார். வெளியே நடப்பதை இங்கே சொல்லி அம்பலப்படுத்த வேண்டியதில்லை. அப்படியானால் அதை நிரூபிக்க வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் நீண்ட நாட்களாக இங்கே இருக்கிறவர்கள். சட்டசபையில் குற்றச்சாட்டுக்கள் சொல்கிறபோது பெயர்களைக் குறிப்பிட்டுச்சொல்வதால் பிரச்னை எழுகிறது.

(இரவு 6.30)

என்னுடைய அனுபவத்தின் காரணமாக, இதைப் புரிந்து கொண்டு, பொதுவாக எனக்குக் கிடைத்த தகவலைக் கொண்டு, செய்திகளை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதை மறுக்க உங்களுக்கு உரிமை இருக்கிறது. ஆக, நான் சொல்ல விரும்புவது, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இருந்த காலத்திலே, இது போன்ற தடைச் சட்டங்கள் வந்தன. இன்னும் சொல்லப் போனால். (மணியடிக்கப்பட்டது.)

*திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982—ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டக்கோவை குற்றயியல் நடைமுறை விதிக் கோவை (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவை வரவேற்கின்ற வகையில் நான் சில கருத்துக்களை இங்கே முன்வைக்க விரும்புகிறேன். இந்தச் சட்டத் திருத்தத்தை நான்

[1982 பிப்ரவரி 17

[திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

வரவேற்கிறேன் என்பதைவிட இந்த அரசையும், சட்ட அமைச்சர் அவர்களையும் நான் மட்டுமல்ல, இந்த சட்டமன்றத்திலே இருக்கின்ற அனைவருமே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

ஏதோ இருண்ட காலத்தில் இருப்பதாக ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள். சட்ட புத்தகத்திலே ஒரு இருண்ட காலத்தை உருவாக்கிவிட்டுச் சென்றார்கள். தி.மு.க.வினர் அந்த இருண்ட இடத்திலே ஒளி பாய்ச்ச வேண்டுமென்பதுதான் இந்த சட்டமுன்வடிவின் நோக்கம். சட்டத்தைப் போட்டுவிட்டுப் போய்விட்டார்கள். ஐ.பி.சி. 292 பிரிவிலே தண்டனையை மட்டும் சொன்னார்கள். அதை எப்படி நடைமுறைப்படுத்த வேண்டும்? புரசிஜரல் லா சி.ஆர்.பி.சி,யிலே இருந்தது. 1973 ஆம் ஆண்டு இந்திய பாராளுமன்றத்தில் சி.ஆர்.பி.சி. யை நடைமுறை சட்டத்தை ரிபீல் செய்கின்றபோது 292 (ஏ)க்கு என்ன நடைமுறை என்பது செய்ய முடியாமல், அது அப்புறப் படுத்தி விட்டது. ஆகவே, 1974 ஆம் ஆண்டு முதல் 1977 ஆம் ஆண்டுவரை தமிழகம் என்ன நிறைவேற்றி இருந்ததோ, இந்தச் சட்டம் 292(ஏ) சட்டப்புத்தகத்திலே இருந்தாலும்கூட, அதனுடைய நடைமுறை என்ன? பெயிலபிளா, காக்னிசபில் அபென்சா, யார் அதைவிடவேண்டும் யார் விசாரிக்க வேண்டும், யார் கொண்டு வரவேண்டும் என்ற தெளிவு இல்லாமல், நடைமுறை இல்லாமல் இருண்ட காட்டிலே இருப்பதைப்போல் இருந்தது. சட்டத்தை மட்டும் போட்டு வைத்திருக்கிறார்கள். அதைத் திருத்த வேண்டும், தமிழகத்திலே அந்த சட்ட நடைமுறையை முறைப் படுத்த வேண்டும் என்ற முறையிலே இப்போது மாற்றப்பட்டிருக்கிறது. நீண்ட காலமானாலும்கூட, அப்படிப்பட்ட தவறை நிவர்த்திக்க வேண்டும். ஐ.பி.சி. சட்டத்தை நடைமுறைப் படுத்த வேண்டும், இதைக் கட்டாயம் செய்யவேண்டும் என்பது பயிற்சி செய்கின்ற வழக்கறிஞர்களுக்குத் தெரியும்.

சட்டப் புத்தகத்தில் மட்டும் இந்தக் குற்றத்திற்கான தண்டனையைச் சொல்லியிருந்தால் மட்டும் போதுமா. அதிலே நடைமுறை என்ன? பெயிலபிளா, நான்—பெயிலபிளா என்பதை தெளிவாக போடவேண்டும். 1974லிருந்து இன்றுவரை இந்தப் புத்தகத்திலே அது இல்லாமல் இருந்தது. எனவே, அதை நடைமுறைச் சட்டத்திலே போடவேண்டுமென்பதற்காக இப்போது அது இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது என்ற வகையிலே நான் முதலிலே இந்த அரசையும், சட்ட அமைச்சர் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே சமயத்தில், இங்கே பேசுகின்றபோது அருமை நண்பர் ரகுமான்கான் அவர்கள் இது ஏதோ கறுப்புச் சட்டம், அடக்குமுறைச்சட்டம் என்கிற வார்த்தைகளையெல்லாம் உபயோகித்தார்கள் அவருக்கு நான் பணிவாகக் கூறவிரும்புவதெல்லாம், அதேபோல் திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சார்ந்த நண்பர்கள் பேசுகின்றபோது சில கருத்துக்களைச்



1982 பிப்ரவரி 17]

[திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

சொன்னார்கள். அவர்களுக்கெல்லாம் நான் சொல்ல விரும்புவது, இந்த தமிழ் நாட்டு மக்களுக்கு ஞாபக சக்தியே இல்லை அல்லது இந்த பத்திரிகை நிருபர்களுக்கு ஞாபகச் சக்தியே அற்றுபோய் விட்டது என்று எண்ணி, தயவுசெய்து இப்படிப் பேசவேண்டாம். 1960லே காங்கிரஸ் பேரியக்கம் தமிழகத்தை ஆட்சி செய்தபோதே, இந்த 292-(ஏ). சட்டம் இந்திய குற்றவியல் சட்டத்தில் இருந்தது. அன்று முதல் குற்றத்திற்கு என்ன தண்டனையோ, அதே தண்டனைதான் இன்றைய சட்டத் திட்டத்திலும் இருக்கிறது, கூறுகிறது. இரண்டாவது தண்டனைக்கு காங்கிரஸ் பேரியக்கம் 1960லே ஒரு திருத்தம் கொண்டுவந்து, கட்டாயமாக 6 மாத சிறைத் தண்டனை கொடுக்க வேண்டுமென்று போடப்பட்டது. அப்படி தண்டனைப் போட்டதை அந்த தண்டனையை இப்போது கூட்டியிருக்கிறோம். அது உண்மை அது ஒன்று.

அடுத்து, நான்—பெயிலபிள் என்று போட்டிருக்கிறீர்கள் அதனால் ஜாமீனிலேயே வரவேமுடியாது என்ற ஒரு கருத்து தி.மு.க. வினராலும் தெரிவிக்கப்பட்டது. இதை மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி நான்-பெயிலபிள் என்று போட்ட ஒரே காரணத்திற்காக, பத்திரிக்கைக்காரர்கள் ஜாமீனிலேயே வரமுடியாது என்று சொல்வதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. மேலும் அது உண்மையே இல்லையே! நான்—பெயிலபிள் என்ற ஒரு குற்றத்திற்காக, ஜாமீனில் வரவே முடியாது என்பதுதான் நடைமுறையா? நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், சட்ட அமைச்சர் அவர்கள் அவையின் முன்பு வைத்திருக்கின்ற வாக்கியம் நான்—பெயிலபிள் ஒன்றைத் தவிர, தண்டனைக் காலம் கூட்டப்பட்டிருக்கிறது. அதற்கான காரணங்கள் சொல்லப் பட்டிருக்கிறது. நீங்களே இப்படிச் செய்திருக்கிறீர்கள், பல்வேறு இடங்ளில் என்பதைச் சொல்வதற்கு முன்பு, 1960ல் காங்கிரஸ் பேரியக்கம் செய்த அந்த சட்டத் திருத்தத்திற்கு ஒரு திருத்தம் கொண்டுவந்து, 5 ஆண்டுக் காலம் தண்டனை என்று போடப் பட்டிருக்கிறது. குறைந்தபட்சம் 6 மாதம் கொடுத்துத்தான் ஆகவேண்டும் என்பது 1960 ஆண்டு சட்டத் திருத்தம் சொல்கிறது. இன்று அப்படியல்ல. 5 வருஷங்கள் என்றிருந்தாலும் கூட, நீதிபதி 2, 3 மாதங்கள் தண்டனை கொடுத்தாலும், அது தவறில்லை. அதை மறுக்கவும் முடியாது, எவராலும்.

பழைய சட்டப்படி போலீஸ் கமிஷனர் அவர்கள்விடவேண்டும். இன்றைக்கு அதைப்பற்றி நீதிபதியிடம் முறையிடுவதற்கு வாய்ப்பிருக்கிறது. எனவே, இந்தச் சட்டத்தை கொண்டு வந்துள்ளதைப் பாராட்டுகின்ற அதே நேரத்திலே, இங்கே இந்தச் சட்டத்தை கறுப்புச் சட்டம் என்றும் அங்கே பேசிய சில தி.மு.க. உறுப்பினர்கள் சொன்னார்கள். அவர்கள் இந்தச் சட்டம் ஏன் என்று கேட்கிறார்கள்? எந்த வகையில் தி.மு.க. நண்பர்கள் எழுப்புகிறார்கள் என்பதுதான் புரியாததாக உள்ளது.

[1982 பிப்ரவரி 17

[திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியம்]

அதற்காகத்தான் முதலிலேயே குறிப்பிட்டேன். தி.மு.க. ஆட்சி காலத்தில் தான் நடைமுறைச் சட்டம் இல்லாமல் விடுபட்டுப் போயிற்று. நடைமுறை சட்டமான சி. ஆர்.பி.சி.யில் விடப்பட்ட நடைமுறைச் சட்டத்தை இயற்ற வேண்டுமென்று இந்த சட்டம் வந்திருக்கிறது. இந்தியப் பாராளுமன்றத்திலும், மாநில சட்டமன்றங்களிலும் இதுவரை பதினெட்டாயிரத்துக்கு மேற்பட்ட சட்டங்கள் இயற்றப் பட்டிருந்தாலும் கூட புதிய சட்டங்கள் வரக் காரணம் என்ன? சமுதாய நீதிக்காக இயற்றப் படுகிற சட்டங்களை நிறைவேற்ற மீண்டும் வேறு சட்டங்கள் இயற்ற வேண்டியுள்ளது என்று பிரபல வழக்கறிஞர்களே சொல்லுகிறார்கள். ஒரு சட்டம் போடப்பட்டு பிறகு அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியவில்லை என்று வரும்போது மீண்டும் வேறு ஒரு சட்டம் போட வேண்டிய நிலைமை உருவாகிறது. 123 ஏ ஐ.பி.சி.ல் இருக்கிறது. அதன்படி ராஜத் துரோகக் குற்றத்திற்காக நடவடிக்கை எடுக்க முடியும். அப்படி எடுக்க முடியும் என்று ஓர் சட்டம் இருக்கும் போது தேசிய பாதுகாப்பு சட்டத்துக்கு தி.மு க. வினராகியநீங்கள் ஏன் பாராளுமன்றத்தில் கைதூக்கினார்கள் சட்டம் தான் இருந்ததே? இதிலே இருக்கிற நியாயத்தைச் சொல்லுங்கள் தவறுகள் இருந்தால் சுட்டிக்காட்டுங்கள். இருக்கிற சட்டம் போதுமா என்று தயவு செய்து எண்ணிப் பார்க்கவேண்டும். ஆளும் கட்சிப் பத்திரிகைகளை விட்டு விடுகிறார்கள் என்று சொன்னார்கள். அரசியல் கட்சி ரீதியில் பசினால் கூட உண்மை தானா. ஐ,பி,சி, படி குற்றம் செய்பவர்கள் பற்றிக் காவல் துறையிடம் புகார் சொல்லக்கூடாதா? காவல் துறை நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் நீதிமன்றத்தை அணுகக் கூடாதா? முடியாதா? அந்த நிலையில்தான் இந்தச் சட்டமே வந்திருக்கிறது என்பதை தயவு செய்து உணர்ந்து பார்க்க வேண்டும். அருமை நண்பர் ரகுமான்கான் அவர்கள் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் எழுதியதைப் பற்றிச் சொன்னார்கள். எதிரொலி பத்திரிகையில் அதை அப்படியே முழுமையாகப் போட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆனால் எதிரொலி பத்திரிக்கை அப்படியா எழுதியது, எழுதுகிறது.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை தெளிவாகப் போட்டிருக்கிறது. தமிழ்நாட்டு சர்க்கார் அனுமதி வழங்கிய பிளெண்டிங் யூனிட்ஸ் என்றும் இன்கம் டாக்ஸ் டிப்பார்ட்மெண்ட் அதிகாரிகள் சோதனையிட்டு ஒரு லட்சம் ரூபாய் பெறுமான தொகையினையும், டாக்குமெண்டுகளையும் கைப்பற்றியிருக்கிறார்கள். டாய்லட் வழியாக உள்ளே நுழைந்து அந்த ரெக்கார்டுகளைக் கடத்திச் செல்லும் முயற்சிகளில் நடைபெற்றன என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்குச் செய்தி கிடைத்து வெளியிட்டிருக்கிறது. ரெய்டு வேகமாக நடைபெற என்ன காரணம்....



1982 பிப்ரவரி 17]

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: அருமை நண்பர் மிக சாமர்த்தியமாகப் பேசுகிறார். ஒன்பது பிளண்டிங் யூனிட் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த வருமானவரி சோதனைக்கும் அரசியல் கட்சிகளுக்கும் தொடர்பு இருக்கிறது என்று நிரூபிப்பது கடினம் என்றும் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கை கூறுகிறதே அதைப்படிக்க அவருக்குத் தயக்கம் ஏன்? சட்டத்தின் எக்ஸ்பிளநேஷன் I-ல் மிகத் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் பதவியிலிருந்து எடுக்கிற நடவடிக்கை நிபந்தனையானது என்று சட்டம் எந்த இடத்திலும் சொல்லவில்லை. ஒரு பொதுஊழியர் தன்பொதுக்கடமைகளைஆற்றும்போது அவருடைய நடவடிக்கையைப்பொறுத்தோ அல்லது அவருடைய நடத்தையில் அவருடைய குணப் பண்பு எந்த அளவுக்குத் தோன்றுகிறதோ அந்த அளவைப் பொறுத்து, ஆனால் அதற்கு மேற்படாமல் நல்லெண்ணத்தோடு தெரிவிப்பது கீழ்த்தரமானதாக ஆகாது. ஒரு அதிகாரி அந்தப் பதவியில் இருந்து செய்கிற பணியினை விமர்சிப்பது தவறு இல்லை.

(இரவு 6.40)

அப்படிப்பட்ட விமர்சனங்களை அனைத்து அரசியல் கட்சிகளும் ஏற்றுக் கொள்கிறோம். இதே இண்டியன் எக்ஸ்பிரஸிலே அப்படி கடுமையான விமரிசனம் வந்திருக்கிறது. அதை திரு. ரகுமான்கான் அவர்கள் பார்த்தாரா? சுப்ரீம் கோர்ட் நீதிபதி சர்க்காரியா உட்கார்ந்து விசாரித்த சாட்சி, அதே சாட்சி மீண்டும் சாட்சி சொல்ல மறுத்துவிட்டார் என்பதை காரணமாகச் சொல்லி ஒரு மாஜிஸ்திரேட் முடிவு எடுத்து திரு. கருணாநிதி மீதிருந்த வழக்கை வாபஸ் பெறுகிறாரே அது என்ன வியப்பு, அது என்ன விந்தை என்பதை இன்றைய எக்ஸ்பிரஸ் எழுதியிருக்கிறது, எடுத்து காட்டியுள்ளது.அவை விமரிசனங்கள். அவர் நீதிபதியாக இருந்து செயல்படுகிறார், அவரின் செயல்பாட்டு முரண்பாட்டை அதைப்பற்றிய விமர்சனங்கள். அவைகளை ஸ்கர்ல்ஸ் என்று இந்த சட்டம் சொல்வதாக எனக்குத் தெரியவில்லை. எக்ஸ்பிளநேஷன் I-லே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிகாரி தன்னுடைய பதவியிலே அமர்ந்து செய்கிற பணிகளை விமர்சிப்பதிலே தவறு இல்லை என்று சொல்கிறது. ஆனால் அப்படி எழுதியிருப்பதாக இருந்தால் நியாயம். ஆனால் அருண்சௌரி போல் இங்கே ஒரு சில பத்திரிகைகள் எழுதுவதாகச் சொல்வார்களானால், அருண்சௌரிபோல் பத்திரிகைகள் எழுதினால் அதை அரசாங்கம் மட்டுமல்ல, சட்டமும் தடுக்கமுடியாது, தடுத்தாலும் மக்களே வாழ்த்துவார்கள். வரவேற்பார்கள் என்பதைத்தான் நடைமுறையிலே நாம் பல மாநிலங்களில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஒரு நாள் எதிரொலி பத்திரிக்கை மிகத் தெளிவான ஆதாரங்களுடன் இல்லாமல் பெயர் தெரியாமல் பெயர் போடாது சுற்றிவளைத்து ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்று எழுதப்படுகிறது. தொடர்பே இல்லாது நான்கு தினங்களுக்குப் பிறகு

[திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

அந்த சட்டமன்ற உறுப்பினருடைய பெயர் போடப்படுகிறது. இது என்ன நியாயம். இந்தச் சட்டத்தினுடைய நோக்கம் 5 ஆண்டுக்காலம் தண்டனை என்று இருந்தாலும் நீங்களே எண்ணிப்பாருங்கள், உங்களுக்கு அந்த நிலை ஏற்பட்டாலும் உங்களைப்பற்றி அவதூறாக எழுதினாலும் இதுதான் என்பதைச் சொல்ல வருகிறேன். எதிர்ப்பதை விட நியாயங்களை உங்கள் இதயதராசில் எடை போட்டுப் பாருங்கள்.

1977–1978 ஆம் ஆண்டுகளிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் எம் ஜி.ஆர். அவர்களைப்பற்றி எவ்வளவு தவறாக வருமானவரி சோதனை என்றும் இவ்வளவு லட்சம் எடுத்தார்கள் என்றும் அவ்வளவு லட்சம் எடுத்தார்கள் என்றும் எட்டு காலம் செய்தியை தமிழகத்திலே ஒரு சில பத்திரிகைகள் போட்டதை அருமை நண்பர்கள் மறந்து இருக்கமாட்டார்கள். ஆனால் எழுதிய காலம், 1977, 1978 ஆம் ஆண்டுகள். ஆனால் 30-8-1980 இல் அதாவது இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பாராளுமன்றத்திலே மத்திய நிதியமைச்சர் பதில் அளிக்கிறார், அப்படிப்பட்டவை நடைபெறவில்லை, அன்னியச் செலாவணி சம்பந்தமாக வழக்குப் போடப்படவும் இல்லை, போடுகிற ஆதாரங்கள் எதுவும் இல்லை என்று. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு எந்தவிதமான வருமானவரி சோதனையும் அவரிடம் நடக்கவில்லை என்று சொல்கிறார்கள். இதை எப்படி அவர் 2 வருடங்களுக்கு பின மக்களிடம் மறுப்பது? சோதனை என்று சொன்னார்கள், இவ்வளவு எடுத்தார்கள், அவ்வளவு எடுத்தார்கள் என்று முதல் நாள் பத்திரிகையிலே பெயர் இல்லாமல் வருகிறது. ஒரு சட்டமன்ற உறுப்பினர் பெயர் நான்கு நாட்களுக்குப் பிறகு தொடர்பில்லாது சேர்க்கப்படுகிறது, இணைப்பு இல்லாமல் இருக்கிறதே என்று. அதிலே பெயர் தெரியாமல் எழுதுகிறார்கள், மற்றப்பெயர்களை வைத்து எழுதமுடியவில்லை. அருண் சௌரி போலவோ எக்ஸ்பிரஸ் போலவோ எழுதினால் அதை ஆட்சேபிக்க வழக்குமன்றத்திலே சொல்வதற்கு தயாராக லாம். ஆனால் அப்படியில்லாமல் தெரிகிறது, பேசிக் கொள் கிறார்கள் என்று தான் போடப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் பெயர் முதலிலே போடாமல் நான்கு நாட்களுக்குப் பிறகு போடப்பட்டிருக்கிறது. ஏதோ இது புதிய சட்டம் என்று இங்கே பேசிய திரு. ரகுமான்கான் அவர்களும் ஆரம்பத்திலே பேசிய திரு. துரை முருகன் அவர்களும் நிருபர்களைப் பார்த்துக் கொண்டே பேசினார்கள், கருப்புச் சட்டம் என்றும், பத்திரிகைகளை ஒடுக்க இந்தச் சட்டம் என்றும் தி.மு.க. வினர் சொன்னார்கள். நான் அருமை நண்பர்களை பணிவுடன் கேட்டுக் கொள்வது எல்லாம், நாட்டு மக்கள் மறந்திருந்தாலும் கூட பத்திரிகை நிருபர்களுக்கு ஞாபக சக்தி அதிகமாக இருக்கிறது என்று நினைக்கிறேன். கேட்கிறார்கள், தி.மு.க.வினர் பத்திரிகை டைரக்டரை கைது செய்தது உண்டா என்று. ஒரு பத்திரிகை ஆசிரியரை கைது செய்யலாம், ஆனால் டைரக்டரை கைது



[திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

செய்தது உண்டா என்ற கேள்வியைக் கேட்டார்கள். உங்களுடைய ஆட்சிக்காலத்திலே டைரக்டர் கைது செய்யப்படவில்லையா, இங்கே சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற திரு. விஸ்வநாதன் அவர்கள் மக்கள் குரல் டைரக்டராக இருந்தபோது வேலூரில் அவரை கைதுசெய்து கொண்டுவரவில்லையா? ஏன் மற்ற மாநிலங்களிலே கைதுசெய்யவில்லையா?

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினரைக் குறிப்பிட்டு ஒரு பத்திரிகையிலே ஐ டி. டிபார்ட்மெண்டால் ரெய்ட் செய்யப்பட்டது என்று குறிப்பிடப்பட்ட தகவல் உண்மைக்குப் புறம்பானது என்று சொல்கிறாரா? அது நடைபெறவில்லை என்று சொல்கிறாரா? பெயர் சொல்லவேண்டுமென்று கேட்கிறாரா? தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: என்னுடைய வாதமே அருண் சௌரி போலவோ எக்ஸ்பிரஸ் போலவோ நேரடியாக செக் நம்பர் குறித்து எழுதியிருக்கிறார்களே அதைப் போல எழுதவில்லை. முதல் நாள் பெயர் வரவில்லை, நான்கு நாட்களுக்குப் பிறகு செய்திபோட்டு அந்தச் செய்திக்கும் இந்த செய்திக்கும் முடிச்சுப் போடுகிறார்கள். அந்த வாதத்திற்கு நான் வரவில்லை, அது வழக்குமன்றத்திலே நிர்ணயிக்கப்பட வேண்டியது. நீங்கள் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே எழுதுகிறார்கள் என்று சொல்கிறீர்கள். அதன் முறையும், எதிரொலி எழுதும் முறையும் ஒன்றுதானா? அதற்கு பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) என்னுடைய வாதம் அதுவல்ல. ஏனென்றால் தயவு செய்து நீங்கள் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையுடனும், அருண்சூரியுடனும் உங்கள் எதிரொலி பத்திரிகையை ஒப்பிடுவது சரியல்ல என்பதற்காகத்தான் நான் சில உதாரணங்களை எடுத்து வைத்தேன்.

டைரக்டரைக் கைது செய்திருக்கிறார்கள். "சண்டே" பத்திரிகையிலே கூட பத்திரிகை ஆசிரியரே பேட்டி கொடுத்திருக்கிறார். எனவே ஏதோ இது புதுமை, இந்த மாநிலத்திலே தான் நடக்கிறது என்பதுபோலச் சொல்கிறார்கள்.

அன்றைக்கு முதலமைச்சராக இருந்தவர் ஒரு மில்லைத் திறந்திருக்கிறார். திறக்கப்பட்ட அந்த மில்லுக்கு லைசென்ஸ் இல்லை என்று மக்கள் குரல் செய்திப் போடுகிறது. அப்பொழுது அந்த மக்கள் குரல் ஆசிரியரை மட்டும் கைது செய்யவில்லை. இன்றைக்கு இங்கே சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற திரு. விஸ்வநாதன் அவர்களை வேலூரிலே கைது செய்து அழைத்து வருகிறார்கள்.

பீகாரிலே எத்தனையோ டைரக்டர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். நான் இதை நியாயப்படுத்த விரும்பவில்லை.

[1982 பிப்ரவரி 17
[திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

இந்தச் சட்டம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பத்திரிகை களை ஒடுக்கும் எண்ணம் இந்த அரசுக்கு இல்லை, இருந்ததும் இல்லை என்பதற்காகச் சொல்கிறேன் ஆனால் இந்தச் சட்டமே இல்லாமல், இந்தச் சட்டத்தினுடைய நடைமுறை விதிகள் இல்லாத நிலையிலேயே தங்கள் கையிலே சட்டத்தை எடுத்து வைத்துக்கொண்டு பத்திரிகைகளுக்கு என்னென்ன கொடுமை களைச் செய்தீர்கள் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்கவேண்டும். நீங்கள் கடந்து வந்த பாதையைக் கொஞ்சம் தயவு செய்து சற்றுத் திரும்பிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி திரும்பிப் பார்த்துவிட்டு பிறகு எங்களைக் குறை சொல்லுங்கள் நாங்கள் அப்படிச் செய்திருக்கிறோமா என்பதைப் பாருங்கள்.

விலைவாசி உயர்ந்து விட்டது என்று மக்கள் குரல் செய்தி போட்டதற்காக அன்று முழுவதும் அந்தப் பத்திரிகை பிரதிகள் முழுவதும் பறிமுதல் செய்யப்படவில்லையா. தேதி வேண்டுமா? தருகிறேன். அதைவிட, மக்கள் குரலினுடைய கோரிக்கையை ஏற்று அரசு நடவடிக்கை என்று உங்களைப் பாராட்டிய அந்த மக்கள் குரல் பத்திரிகையையும் பறிமுதல் செய்தீர்களே, உண்டா இல்லையா?

என்ன சொன்னார், மறைந்த மூதறிஞர் இராஜகோபாலச்சாரி யார் அவர்கள். அன்றையதினம் முதலமைச்சரைக் குறையா சொன்னார் இல்லை. அந்த முதலமைச்சரைக் காப்பாற்ற வந்தார் முதலமைச்சர் அவர்களே, உங்களைப் பற்றி தவறாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்; முதலமைச்சரைப்பற்றி தவறான எண்ணம் மக்கள் மத்தியிலே பரவக் கூடாது.; பத்திரிகைகள் பரப்புகின்றன; ஆகவே அன்றைய முதலமைச்சர் மீது சி.பி.ஐ. எடுத்த நடவடிக்கையைப் பத்திரிகைக்கு அரசு வெளியிட வேண்டும் என்ற கோரிக்கை விடுத்ததற்காக, எல்லாப் பத்திரிகை களுக்கும் பத்து பர்சென்ட் மின்வெட்டு என்றால், அந்தச் செய்தியை வெளியிட்ட பத்திரிகைக்கு இருபத்தைந்து பர்சென்ட் மின்வெட்டு. அவர்கள் உச்ச நீதிமன்றத்திற்குப் போகவில்லையா? சென்னை உயர்நீதி மன்றத்திற்குப் போகவில்லையா? போன பிறகு அன்றைய அரசு சட்டத்துறையைக் கலந்தாலோசித்து தவறு தான்: கொடுக்கிறோம் என்று அஃபிடவிட் போட வில்லையா? அப்படி ஏதாவது இந்த அரசு கொடுமை செய்திருக் கிறதா? அதற்காகத்தான் சொல்ல வருகிறேன்.

விலை உயர்வு என்று போட்டதற்காக பத்திரிகைகள் பறிமுதல்; பிறகு எங்களுடைய கோரிக்கையை ஏற்று அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது என்று அன்றைய சர்க்காரைப் பாராட்டு கிறது மக்கள் குரல் அன்றும் பறிமுதல்.



1982 பிப்ரவரி 17][திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

இதையெல்லாம் விட இந்திய உள்நாட்டுப் பாதுகாப்பு விதி 48–இன்படி ஒருமுறை தணிக்கை அதிகாரிகள் பரிசீலனை செய்து முடித்த பத்திரிகையைப் பறிமுதல் செய்யக் கூடாது என்பது மத்திய அரசின் சட்டம் அனைவரும் ஏற்றுக்கொண்டது; ஆனால் அந்த நடை முறையை மீறி அந்த விதியை மீறி இந்திய உள் நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் 48–வது விதியின் கீழ் அதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கின்ற அதிகாரி தணிக்கை செய்த பிறகும் 2,25,000 குமுதம் பத்திரிகைகளைப் பறிமுதல் செய்தது எந்தக் காலம்? அப்படி ஏதாவது இப்பொழுது உள்ளதா? அதே சட்டம் இருக்கிறதா இல்லையா என்பது வேறு விஷயம். அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்தால் இந்தக் கறுப்புச் சட்டம் என்று நீங்கள் சொல்வது நியாயம்தான். அடக்குமுறைச் சட்டம் என்று சொல்வது நியாயந்தான். ஆனால் எழுது கின்ற நடைமுறைகளைப் பார்க்கின்றபொழுது—அதற்காகத் தான் ஒரு உதாரணத்தையும் சொன்னேன்.

ஒரு அதிகாரி பதவியில் இருக்கின்றபொழுதோ அல்லது முதலமைச்சராக இருக்கின்றபொழுது அவர் நடவடிக்கை களைப் பற்றி விமர்சிப்பதைப் பற்றிச் சொல்லவில்லை. ஆனால் தனிப்பட்ட முறையிலே நிந்திக்கின்ற வகையிலே எழுதும்போது தான் பிரச்சனை வருகிறது. அதற்காகத்தான் சொன்னேன் அப்படிப்பட்ட உதாரணங்களை இன்னும் சொல்ல வேண்டு மென்றால் ஏராளமாக அடுக்கிக் கொண்டே போக முடியும். ஆனால் ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

1977, 1978, 1979–ஆம் ஆண்டுகளில் இது அனைத்துக் கட்சிகாரர்களுக்கும் தெரிந்திருக்கும்; இன்றைய தினம் முதலமைச்சராக இருக்கின்ற புரட்சித் தலைவரவர்களைப்பற்றி வருமான வரித் துறையை இணைத்துப் போடப்பட்ட செய்தி எட்டுக்கால செய்தியிலே வந்தது. ஆனால் அப்படி இல்லை என்ற மறுக்கப்படுகின்ற செய்தி நான்கே நான்கு வரிகளில் இந்துப் பத்திரிகையில்தான் இரண்டு வருடங்களுக்குப் பின் வந்தது பாராளுமன்றத்திலே சொல்லுகிறார்கள், அப்படி எந்த நடவடிக்கையும் இல்லை என்று, 30–8–80 ஆம் நாள் அதுவும் நாலே வரிகளில் ஒரு மூலையில் வருகிறது இப்படி எழுதிக் கொண்டே போகலாமா? இதைத் தடுக்க வேண்டாமா? இது நீதிதானா? உரிமைகள் என்பது ஒரு வழிப்பாதையா?

இரண்டாவது குற்றத்திற்குத்தான் போட்டிருக்கிறோம். முதல் குற்றத்திற்கு 1960 ஆம் ஆண்டு காங்கிரஸ் நண்பர்கள் போட்ட சட்டத்தைப் பின்பற்றித்தான் நாம் வந்திருக் கிறோம். முதல் குற்றத்திற்கு நாங்கள் போடவில்லை; திராவிட முன்னேற்றக் கழகத்தினராகிய நீங்களும் போடவில்லை' காங்கிரஸ்காரர்கள் போட்டுக் கொடுத்த சட்டம்.

[திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்] [1982 பிப்ரவரி 17

அதிலும் குறிப்பாக இரண்டாவது குற்றத்திற்கு ஐந்தாண்டு அல்லது ஃபைன். அருமை நண்பர்களுக்குத் தெரியும். நீதிபதி பார்த்து ஒரு மாதம் போட்டால்கூட ஏன் குறைத்து போட்டாய் என்று கேட்க முடியாது. ஆனால் காங்கிரஸ் நண்பர்கள்.

'not less than six months'

ஆறு மாதங்களுக்குக் குறையவே கூடாது-அதை எந்த நோக்கத்திற்காகப் போட்டார்கள்? இப்படி எழுதும் முறைகளை அதிகாரபூர்வமாக எழுதுகின்றபொழுது, தெளிவாக எழுதுகின்றபொழுது, அவைகளை அரசாங்கம் சட்டம் போட்டுத் தடுக்க முடியாது. அதை மக்கள் ஏற்றுக்கொள்ளவும் முடியாது என்பதற்குப் பல மாநிலங்களில் இன்றைக்கு உதாரணங்களை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

(இரவு 6-50)

அந்த வகையிலே, பொது வாழ்க்கையிலே இருப்பவர்களைப் பற்றி ஒருசில பத்திரிகைகள் எழுதுகின்ற முறைகளைப் பார்க்கின்றபோது, பொது வாழ்க்கைக்கு வருவதே ஆபத்தோ, பொது வாழ்க்கைக்கு வந்தாலே பத்திரிகை இப்படி எழுத ஆரம்பித்துவிடுமோ, என்ற அளவுக்கு, பொது வாழ்க்கையை விட்டுவிட வேண்டுமென்கிற அளவுக்கு, மிகவும் கடுமையாக, இல்லாதவைகளை, கணித்தரமாகச் சொல்ல முடியவில்லை, தெரிகிறது, பேசிக் கொள்கிறார்கள், என்கிற அளவுகெல்லாம் எழுதுகிறார்கள். விமர்சனங்களைத் தடுக்கவில்லை இந்தச் சட்டம். அதற்குத்தான் இரண்டு உதாரணங்களைச் சான்னேன். 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'ஸிலே 'ரெய்ட்' என்று எழுதியிருப்பது நடவடிக்கை, அதை இந்தச் சட்டம் அனுமதிக்கிறது. அதைப் போல் சர்க்காரியா நீதிபதியையும் இங்கேயிருக்கிற நீதிபதியையும் ஒப்பிட்டு, என்ன நியாயம், என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் இன்றைக்குக் கேட்டிருக்கிறதே அதுவும் ஒரு விமர்சனம். அப்படி சொல்பவைகளை இந்தச் சட்டத்தினுடைய எக்ஸ்பிளனேஷன் 1 வரவேற்கிறது அனுமதிக்கிறது. என்ற வகையிலே இந்தச் சட்டம் கறுப்புச் சட்டம் அல்ல, அடக்கு முறைச் சட்டம் அல்ல என்பதைவிட 6,7 ஆண்டுகாலத்திற்குச் சட்டப் புத்தகத்திலே இருளாக இருந்த பகுதியிலே பாய்ச்சப்படுகின்ற ஒளி தான் என்று சொல்லி இந்தச் சட்டத்தை வரவேற்று, மேலும் 6,7 ஆண்டுகாலமாகப் போடப்பட்டிருந்த சட்டத்திற்கு, சட்டத்திலேயிருந்த ஒரு பிரிவிற்கு இப்படிதான் நடைமுறை, யாரைத்தான் ஜாமீனில் விடுவது, பெயிலபிலா, நான்பெயிலபிலா என்றே தெரியாமல், இருட்டில் இருந்ததை மாற்றி அவைகளுக்கு நடைமுறையை வகுத்த இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று அமாகிறேன், நன்றி.



1982 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுகிறபொழுது, படத்தைக் காண்பித்து அதை, குறிப்பாக,

** **

இரண்டையும் சபைக் குறிப்பிலே இருந்து நீக்கி விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

** ** **

வாசகங்களை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

** ** **

அதை மட்டும் தான்.

திரு. நா.சுந்தரராஜ்: விவாதத்தைத் தொடர்ந்து நாளைக்கு வைத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்தச் சட்ட முன்வடிவையும் அடுத்ததுபோல் இன்னொன்று இருக்கிறதே அந்தச் சட்ட முன்வடிவையும் இப்பொழுது முடித்து விடுவோம். (குறுக்கீடுகள்) நாளைக்கு வேறு நிறைய சட்ட முன்வடிவுகள் இருக்கின்றன. தயவுசெய்து ஒத்துழையுங்கள், சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்). ஒவ்வொரு கட்சியிலும் ஒவ்வொருவர் மட்டும் பேசினால் முடித்து விடலாம்.

Thiru K.S.G. HAJA SHAREEF : No. No. We had the party meeting at 5 O' clock and it has been changed to 7 O' clock. We won't be here. I am sorry, we cannot be here. Please do adjourn now.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இடையிலே முடிக்க முடியாது. அந்தச் சட்ட முன்வடிவையாவது நிறைவேற்றுவோம். (குறுக்கீடுகள்) ஒவ்வொருவருடைய வசதியையும் பார்த்துக் கொண்டேயிருந்தால், 234 பேர்களுடைய வசதியையும் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை மட்டும் இப்பொழுது நிறைவேற்றி விடலாம் மற்ற சட்ட முன்வடிவுகளை நாளைக்கு வைத்துக் கொள்ளலாம். இதைமட்டும் சீக்கிரத்திலே முடித்து விடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை மார்க்சிஸ்ட் கட்சி கடுமையாக எதிர்க்கிறது. இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் ஒரு மோசடியான சட்டம், உள்நோக்கம் கொண்டது என்று நாங்கள் குற்றம் சாட்டுகிறோம். நமக்கு, பத்திரிகைகளுக்கு, கருத்துக் கூறுவதற்கு அடிப்படை உரிமையிருக்கிறது. அதிலே, நியாயமான கட்டுப்பாடு தேவை என்றும், அரசியலமைப்புச் சட்டத்தின் 196-வது பிரிவு கூறுகிறது. இருந்தாலும், இப்படிப்பட்ட கட்டுப்பாடு அவசியந்தானா? ஸ்கரிலஸ் என்பதே கீழ்த்தரமானது. அது வரையறுக்கப்படக்கூடியதா? இது 'வேக் டெர்ம் வேக்காக இருக்கிறது. ஆனால், இதை முடிவு செய்ய யாருக்கு உரிமை இருக்கிறது? இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில், காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கு உரிமை இருக்கிறது. இப்படிப்பட்ட உரிமையைக் காவல் துறைக்கு ஒப்படைப்பது நியாயம் தானா என்பது முதல் கேள்வி. அதோடு எனக்கு முன்பாக பேசிய நண்பர் வி.பி. பாலசுப்பிரமணியன் சொன்னார்கள், ஏற்கனவே ஒரு திருத்தம் உருவாக்கப்பட்டது என்று. அதற்கு பிரின்சிப்பல் மெட்ராஸ் ஆக்ட் 25 ஆப் 1960-யில் ரூல்ஸ் இல்லை, பெயிலபிலா, நான்பெயிலபிலா, எதுவுமே சொல்லவில்லை, என்று சொன்னார்கள்.

ஆனால் இதிலே கடைசியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பெய்லபிள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதோடு இது வாரன்ட் கேஸ் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பனிஷ்மென்டைப் பொறுத்த வரையிலும் ஏற்கனவே இங்கே இருக்கின்றது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : துணைத் தலைவர் அவர்களே, நடைமுறையிலே இருப்பதாகச் சொன்னார்கள். 1960 ஆம் ஆண்டு போட்டது உண்மை. ஆனால் 1973 ஆம் ஆண்டு பாராளுமன்றம் என்ட்டையர் சி.ஆர்.பி.சியையும் ரிப்பீல் செய்துவிட்டது. அதோடு சேர்த்து இதுவும் போய்விடுகிறது. அதை இப்போதுதான் நடைமுறைப் படுத்துகிறோம்.

திரு. ரா. கிருஷ்ணன் : துணைத் தலைவர் அவர்களே, இது மெட்ராஸ் ஆக்ட். இது எக்ஸிஸ்டிங் ஆக்ட். இது ரிப்பீல் ஆகிவிட்டதாக சொல்வது சரியல்ல. அதை அமைச்சர் அவர்களே சொல்லட்டும். அதுபோன்று இதில் 'ரீசனபிள் ரெஸ்டிரிக்ஷன் இருக்கிறதா. கடந்த காலத்தில் இருந்ததா என்பது கேள்விக் குறி. பொதுவாக இதிலே தண்டனை கூட போடப்பட்டிருக்கிறது. நான் — பெயிலபிள் என்று ஆக்கப்பட்டிருக்கிறது, என்பது மட்டுமல்ல பிரச்சினை. இதுவரையில் இருக்கிற சட்டத்தின் பிரகாரம் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது கேள்விக்குறி. பொதுவாக 'ஸ்கரிலஸ்' என்பதே மத



சார்பாக ஆபாசமான காட்சி அங்கே வைக்கலாம். கோவில் புற வாசல்களில் ஆபாசமான சிலைகள் வைக்கப்பட்டிருக்கின்றன, அது அனுமதிக்கப்படுகிறது. கலை உணர்வோடு ஆபாசங்கள் காட்டப்படலாம், அது அனுமதிக்கப்படுகிறது. அதைப் பொறுத்தவரையில் போனோகிராபியாக இருக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது.

ஆகவே, உள்நோக்கம் கொண்டு, வேண்டுமென்றே ஆபாசமான காட்சியை, எழுத்தை ஏற்படுத்தக் கூடாது என்பது தான் இந்த சட்டத்தினுடைய நோக்கம். அதைப் பொறுத்த வரையில் பார்த்தால், இங்கே பல பத்திரிகைகள் எப்படி இருக்கின்றன. பொதுவாக மனித சமுதாயமே ஏற்றுக் கொள்ள முடியாத அளவுக்கு இங்கே காட்டப்பட்டது. அப்படிப்பட்ட பத்திரிகைகள் எல்லாம் எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாமல்; உள்நோக்கம் இருப்பதை நான் நிச்சயமாக நிரூபிக்க முடியும். பொதுவாக, மாயா, காமம், மூக்குத்தி போன்றவை, அதே போன்று ஆங்கிலத்திலும் ஒரு பத்திரிகை இருக்கிறது. இப்படிப் பட்ட பத்திரிகைகள் எல்லாம் வருகின்றன. இந்தப் பத்திரிகைகளை எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாமல் இங்கே விற்பனை செய்யப்படுகின்றன. அதை எல்லாம் விட்டுவிட்டு புதிதாகச் சட்டம் போட்டு விட்டால், இவைகள் எல்லாம் திருந்திவிடும் என்பதில் நியாயமில்லை. இது மோட்டிவேட்டட் என்று சொல்வதற்கு அடிப்படைக் காரணம் என்ன? காமம் ஆளும் கட்சிக்காரர் நடத்துவது. மூக்குத்தி ஆளும் கட்சி எம்.எல்.சி நடத்துகின்றார். இரண்டிலுமே வருகின்ற அம்சங்களில் வித்தியாசமே கிடையாது. ஆனாலும் அந்த எம். எல். சி.க்கு கட்டுப்பாடு கிடையாது. அதே ஆளும் கட்சியைச் சேர்ந்த இன்னொருவர் நடத்துகின்ற பத்திரிகை காமம். அதைப் பொறுத்தவரையில் விற்பனையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டது. விற்பனையாளர்கள் மீது மட்டும்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதை அச்சிட்டவர்கள் மீதோ, வெளியிடுகின்றவர்கள் மீதோ யார் பேரிலும் நடவடிக்கை இல்லை. இது என்ன போக்கு?

ஆகவே, ஏற்கனவே இருக்கக் கூடிய சட்டத்தைப் பொறுத்த வரையிலே, அதன் மூலமாகவே உங்களுடைய நோக்கங்களை நிறைவேற்ற முடியும். அதைவிட்டுவிட்டு விற்பனையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்தப் பத்திரிகை உடனே நிறுத்தப்பட்டது. ஒரு சாதாரண நடவடிக்கை காரணமாக அந்தப் பத்திரிகை நிறுத்தப்பட்டது வரவேற்கத்தக்கது. அதே நேரத்தில் 'மூக்குத்தியைப்' பொறுத்தவரையில் நடவடிக்கை கிடையாது. ஏற்கனவே சில ஆயிரங்கள் தான் விற்றுக் கொண்டிருந்த இந்தப் பத்திரிக்கைக்கு நல்ல கிராக்கி, ஏற்பட்டிருக்கிறது.

இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அந்த ஆளும் கட்சி எம்.எல்.சிக்காக இதைச் செய்திருக்கிறார்கள். அந்த மூக்குத்திப் பத்திரிகையின் விற்பனையை அதிகரிக்கச் செய்ய வேண்டும் எனபதற்காக அதே அம்சம் உள்ள காமம் பத்திரிகையைக் கட்டுப்படுத்தக் கூடிய ஒரு போக்கு எதற்காக. அப்படிக் கட்டுப்படுத்தியதை நியாயம் என்று நான் சொல்லுகிறேன். ஆனால் இந்த ஓர வஞ்சனை எதற்காக என்று கேட்கிறேன்.

[இரவு 7.00]

பொதுவாக இந்தப் பத்திரிகைகளைப் பொறுத்தவரையில், இளைஞர்கள் குறிப்பாக மாணவர்கள் கடுமையான முறையில் பாதிக்கப்படுகிறார்கள். இந்தப் பத்திரிகைகள் மாணவர்களை திசை திருப்பும் முறையில் குடிப்பழக்கம், விபச்சாரம் போன்ற பழக்கங்களுக்கு தூண்டப்படுகிற நிலைமைகள் இருக்கின்றன. மேலும், ப்ளு பிலிம் பார்ப்பதற்கு மாணவர்கள் தங்களுடைய பணத்தை விரயம் செய்யும் போக்கு இருக்கிறது. இதைப் போன்ற பழக்கத்தை அந்தப் பத்திரிக்கைகள் ஏற்படுத்துவதன் காரணமாக அந்தப் பழக்கத்தை அவர்கள் மாற்றிக்கொள்ள வழியில்லாமல் அவர்கள் அந்தப் பத்திரிகைகளைத் தொடர்ந்து படிக்கும் நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுகிறபோதும் சொன்னார்கள். இப்போது இங்கே பேசுகின்ற உறுப்பினரும் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். மூக்குத்தி, மாயா பத்திரிகைகள் நிறுத்தப்பட்டுவிட்டன. செத்துப்பேன பத்திரிகைகள் குறித்து இங்கே பேசுவது சரியல்ல. அவர் எங்கிருந்தோ பழைய கடையில் இருந்து இங்கே வாங்கிவந்து பேசிக்கொண்டு இருக்கிறார் என்று நினைக்கிறேன். இப்போது மூக்குத்தி, மாயா பத்திரிகைகள் வருவது இல்லை.

திரு. துரை முருகன் : திரு. சமரசம் அவர்கள் மாதிரி நாங்கள் அந்தப் பத்திரிகைகள் படிக்கும் 'ரெகுலர் ரீடர்கள்' அல்ல. அதனால் எங்களுக்கு அதுவெல்லாம் தெரியாது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இப்போது வந்து கொண்டு இருக்கும் பத்திரிகைகள்— ஆங்கிலத்தில் ரசூர், மலையாளத்தில் மனோரதி, அதைப்போலவே தெலுங்கிலும், கன்னடத்திலும் பத்திரிகைகள் சென்னையில் இருந்து தான் வெளி வந்து கொண்டு இருக்கின்றன.

சமீபத்தில் கூட காவல் துறையைச் சேர்ந்தவர்கள் சில நடவடிக்கைகளை எடுத்தார்கள். 18-11-81 ஆம் தேதி சிலர் கைது செய்யப்பட்டனர். சாகித்குமார், அப்பாராவ், பிரசாத்



ராவ், பார்க்கவா சர்மா, நரசிம்ம ராவ் ஆகியோர் பழைய ஆக்டின் கீழ் 18-11-81-ல் கைது செய்யப்பட்டனர். அதற்கு அடுத்து, சாலிகிராமத்தைச் சேர்ந்த ரகு, கோடம்பாக்கத்தைச் சேர்ந்த ராஜு, ராஜசேகரன் ஆகியோரும் மற்றும் கோபால், பாபு, சந்திரசேகரன், சந்திரன், பச்சியப்பன், நடராஜன் ஆகியோரும் கைது செய்யப்பட்டார்கள். ஆனால் கைது செய்யப்பட்டவர்கள் உடனடியாக விடுதலை செய்யப் பட்டார்கள். ஆனால் அவர்கள் பிரின்ட் செய்த எந்தப் பொருள்களும் கைப்பற்றப்படவில்லை. லட்சக்கணக்கான ரூபாய் பெறுமான அந்தப் புத்தகங்கள் அவர்களிடமே இருந்தன. ஆகவே, இப்படிப்பட்ட போக்கு இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே, இந்த ஆர்டினென்ஸ் போட்ட பிறகும் கூட, சில நடவடிக்கைகளைப் போலீசார் எடுத்துள்ளனர். அவைகள் பத்திரிகைகளில் செய்திகளாக வெளிவந்துள்ளன. 19-11-81, மற்றும் 20-11-81 இந்து பத்திரிகையிலும், 19-11-81, 22-11-81 இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலும் செய்திகள் வந்து இருக்கின்றன. இந்த நடவடிக்கைகள் குறித்தும் பழைய நிலை தான். அதாவது சம்பந்தம் இல்லாதவர்கள் அல்லது விற்பனையாளர்கள் மீது நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். அவர்களும் பெய்ல் கட்டியதால் விடப்பட்டு இருக்கிறார்கள். உண்மையான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. தண்டிக்கப்படவில்லை. இது தான் இன்றுள்ள உண்மைநிலை.

மேலும், இந்தப் பத்திரிகைகள் பெண்களைப் பற்றிக் கேவலமாக எழுதுகின்றன. பெண்கள் புணர்ச்சி செய்வதற்கான ஒரு பொருள் என்கிற அளவிற்கு அதிலே எழுதப்படுகிறது. இயற்கைக்கு முரணான புணர்ச்சிகள் பற்றி அதிலே எழுதப் படுகிறது. இவைகள் கண்டிக்கத்தக்கவை. மிகக்கடுமையான அளவிற்கு அவர்கள் இதை எழுதுகிறார்கள். அவைகளை எல்லாம் இங்கே படித்துக்காட்டமுடியாது, எடுத்துச்சொல்ல முடியாது. அந்த அளவிற்கு எழுதப்பட்டுள்ளது. ஆகவே அரசு இதனை கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், ப்ளு பிலிம் ரகசியமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அவைகள் எல்லாம் மூர் மார்க்கெட்டில் கிடைக்கின்றன. இவைகள் அங்கே விற்கப்படுவது போலீஸ்காரர்களுக்குத் தெரியாதா? அரசாங்கத்திற்குத் தெரியாதா? ப்ளு பிலிம்களைப் பொறுத்தவரையில், அவைகள் எல்லாம் பல பங்களாக்களில் போட்டுக் காண்பிக்கப்படுகின்றன என்பது ஊரறிந்த விஷயம். அவைகுறித்து போலீஸ்காரர்களுக்கும் தெரியும், அரசாங்கத்திற்கும் தெரியும். இருந்தும் கூட இதுவரையில் முறையான நடவடிக்கை எடுக்கப் படவில்லை என்பதுதான் எங்களுடைய [illegible]

ஏற்கெனவே இருந்த சட்டத்தை வைத்தே நடவடிக்கை எடுக்கலாம். 25/60 என்ற சட்டத்தைப் பொறுத்தவரையில் 6 மாதம் முதல் இரண்டு ஆண்டுக்காலத்திற்கு தண்டனை கொடுக்கலாம். முதல் தண்டனை என்றால் 6 மாதத்திற்கு உள்ளாகவும், இரண்டாவது தடவையோ அதற்கு மேலோ பெறுகின்ற தண்டனை என்றால் குறைந்தது 6 மாதம் முதல் 2 வருடங்கள் வரையில் தண்டனை வழங்கலாம் என்று ஏற்கெனவே இருக்கிறது. அப்படி இருந்தாலும் கூட இதுவரையில் எத்தனை பேர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது? அப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் இப்படி 'மூக்குத்தி' 'மாயா' போன்ற பத்திரிகைகள் எல்லாம் வந்திருக்குமா? ஏற்கெனவே இருக்கிற சட்டத்தின்படியே தகுந்த நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால் நீங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. கடந்த கால நடவடிக்கை என்றால் கூட, அப்போது குற்றம் செய்திருந்தாலும் அது இப்போது குற்றமாகாது என்ற நிலை வராது; அது எப்போதும் குற்றம்தான். அதை விசாரித்து, இப்போதுகூட தண்டனை வழங்க முடியும். இப்போது அந்தப் பத்திரிகை வரவில்லை என்பதால் குற்றம் செய்யவில்லை என்றாகிவிடாது; அப்படிச் சொல்வது நியாயமில்லை. ஆகையால் இந்தச் சட்டம் தேவையற்றது, இந்தச் சட்டம் உள்நோக்கம் கொண்டது; இது எதிர்க்கட்சிக்காரர்களுடைய பத்திரிகைகளை அல்லது வேண்டாதவர்களுடைய பத்திரிகைகளை கட்டுப்படுத்த அல்லது அவர்களை நிர்ப்பந்தப்படுத்த, அவர்களுக்கு தண்டனைக் கொடுக்க என்றே கொண்டுவரப்பட்ட ஒரு சட்டம்; இது ஒரு வரையறைக்கு உட்பட்டு இருக்கிற சட்டம் அல்ல, இது நியாயமான சட்டம் அல்ல ஆகவே இதை நீங்கள் 'வாபஸ்' பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, முடித்துக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற 1982 ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டக் கோவை குற்றயியல் நடைமுறை விதிக்கோவைச் சட்டத்தின்மீது காங்கிரஸ் கட்சியின் சார்பிலே ஒருசில கருத்துக்களைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு இந்தச் சட்ட முன்வடிவு எதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று காரண விளக்கங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. கடந்த காலத்தில் 1960 ஆம் ஆண்டில் காங்கிரஸ் ஆட்சியின் போதுதான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது என்று எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் தெளிவாக, அழுத்தம் திருத்தமாகச் சொன்னார்கள் என்று கருதுகிறேன். ஏற்கெனவே கொண்டு வந்திருக்கிற அந்தச் சட்டத்தை உங்களால் அமுல்படுத்த முடியவில்லை. இன்றைக்கு திருத்தச் சட்டம் என்ற பெயரால் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்றால்



உங்களுடைய எண்ணம் என்ன என்பதை புரிந்துகொள்ள முடியவில்லை. 2 ஆண்டு முதல் 5 ஆண்டு வரையில் சிறைத் தண்டனை, அபராதம் என்று இந்தத் திருத்தச் சட்டம் அமைந்திருப்பதற்கு என்ன காரணம்?

சாதாரணமாக முன்னால் இருக்கிற ஒரு சட்டத்தைச் செயல்படுத்துவதில் ஏதாவது சிக்கலோ, சிரமமோ, சங்கடமோ இருந்தால்தான் திருத்தச்சட்டம் கொண்டுவருவது வழக்கம்; அதுதான் நடைமுறை. ஆனால் இன்றைக்கு எந்தவிதமான நடைமுறையும் இல்லாமல், தடை இல்லாமல் சிக்கல் இல்லாமல், சிரமம் இல்லாமல் இருக்கும்போது இப்படிப்பட்ட ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறீர்கள் என்றால் இதை நீங்கள் திரும்பப் பெற்றுக்கொள்வதுதான் நல்லது.

இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்ததற்கான காரணத்தைச் சொல்லுகிற போது சமீப காலத்தில் ஆபாசப் பத்திரிகைகள், ஆபாச எழுத்துக்கள் அதிகமாகிவிட்டன; அதைத் தடுக்க இந்தச் சட்டம் என்று சொல்கிறீர்கள். உண்மைதான். அதற்கு ஏற்கெனவே இருக்கிற சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கலாம், நீங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. அதனால் ஆபாசம் பெருகி விட்டது.

சென்னை மாநகரின் தலைமை இடமாக விளங்குகின்ற மவுண்ட் ரோட்டில் அண்ணா சிலையிலிருந்து காஸ்மாபோலிட்டன் கிளப் வரையில் நடந்துசென்று பார்த்தால் தெரியும். அமைச்சர்களும் பார்த்திருப்பார்கள் என்று கருதுகிறேன். அந்தப் பகுதியிலே இப்போதும் ஆயிரக்கணக்கான ஆபாச புத்தகங்கள் விற்கப்படுகின்றன. அதைத் தடுக்க உங்களுக்கு சக்தி இல்லையா? அதைத் தடுக்க உங்களுக்கு மனம் இல்லையா? பழைய சட்டத்தை வைத்தே ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது? இன்றைக்கு இந்தச் சட்டத்தை நீங்கள் கொண்டு வந்திருப்பதைப் பார்த்தால், வேண்டாத அரசியல் கட்சிப் பத்திரிகைகளை ஒடுக்குவதற்காக, அந்தப் பத்திரிகைகள்மீது பாய்வதற்காக, அந்தப் பத்திரிகைகளை மிரட்டுவதற்காகத்தான் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிரமணியன் அவர்கள் சொன்னார்கள். பீகாரிலே இத்தகைய சட்டம் போடப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். எனக்குத் தெரிந்தவரையில் பீகாரிலோ அல்லது உத்திரப்பிரதேசத்திலோ இப்படிப்பட்டச் சட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. (குறுக்கீடு) இப்போது சமன்படுத்துவதாக, அவர்கள் குறிப்பிட்டதை சரிப்படுத்துவதற்காக ஏதாவது காரணம் சொல்லலாம். ஆனால் அங்கே இப்படிப்பட்ட சட்டம் இருப்பதாகத் தெரியவில்லை.

[இரவு 7.10]

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரிசா அரசு சட்டம் போட்டிருக்கின்றதா என்று கேட்டால் அவர்கள் சட்டம் போடவில்லை. தமிழ்நாட்டிலே ஒரு செக்ஷன் போட்டு அந்த செக்ஷனிலே என்ன வாசகம் போட்டிருக்கிறார்களோ அதே வாசகத்தை நாமும் வைத்துக் கொள்வோம் என்று போட்டிருக்கிறார்கள்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த சட்டத்தைக் கொண்டு வந்து காட்டினால் தான் ஏற்றுக் கொள்ள முடியும். இங்கே வாதத்திற்காகப் பேசுவதை என்னாலே ஏற்றுக்கொள்ள முடியாது.

அடுத்து இங்கே சமீப காலத்திலே எதிரொலி பத்திரிக்கையின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அது எங்களைச் சார்ந்த பத்திரிகை அல்ல, ஆனால் ஒரு பிரச்சினை என்றால் ஒரு பத்திரிகையின் ஆசிரியரை மட்டும்தான் கைது செய்வது என்பது கடந்த காலத்திலே உள்ள நடைமுறை. ஆனால் அதனுடைய டைரக்டர்ஸ் போன்றவர்களை எல்லாம் எங்கோ இருப்பவர்களை எல்லாம் கைது செய்து அவர்களுக்கும் அந்த செய்திகளுக்கும் சம்பந்தப்படுத்தி அவர்களைச் சிறையிலே தள்ளவேண்டும் என்று சொல்வது தவறு என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து அதிகாரிகள் பேட்டி கொடுக்கக் கூடாது என்று சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். குறிப்பாக அதிகாரிகள் பல செய்திகளைச் சொல்லவேண்டிய நிலைமையிலே இருக்கிறார்கள். டிரவுட் ரிலீஃப் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒரு இடத்திற்குப் போகிறார் என்று வைத்துக் கொண்டால், குறிப்பாகத் திருச்சிக்குப் போகிறார் என்றால் அவர் போனவுடன் நிருபர்கள் அவரைச் சந்தித்து மத்திய அரசு எவ்வளவு கொடுக்கின்றது, நீங்கள் எவ்வளவு செலவு செய்கிறீர்கள் என்று கேட்டால் அதற்கு அந்த அதிகாரி பதில் சொல்ல முடியாது என்று சொல்லிவிட்டால் பிறகு அந்த அதிகாரிக்கு மரியாதை இல்லாமல் போய்விடும். ஆகவே அதிகாரிகள் ஒரு குறிப்பிட்ட வரம்புக்குள்ளே இருந்துகொண்டு பதில் சொல்வதற்கு அனுமதிக்கப்படவேண்டும். ஆனால் எந்த அதிகாரியும் அவ்வாறு பத்திரிகை நிருபர்களுக்கு பதில் சொல்லக்கூடாது என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் மட்டும் ஒரு குறிப்பிட்ட வரம்புக்குள்ளே இருந்து பதில் சொல்ல வேண்டும் என்றும் சொல்வ சரியான ஜனநாயகமா என்பதை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது.



அடுத்து அதிகாரிகளோ அரசோ தவறுகளைச் செய்கின்றபோது அதுபற்றி உலகத்திற்குத் தெரிவிக்கவேண்டியது பத்திரிகைகளின் பிரதான பங்காக இருக்கின்றது. நாடாளுமன்றத்திலேயோ அல்லது இங்கேயோ ஒரு ஒத்திவைப்புத் தீர்மானமோ அல்லது வேறு வகையான தீர்மானங்களையோ கொண்டு வருகிறார்கள் என்று சொன்னால் அதுபற்றி நாம் தெரிவிக்கின்ற கருத்துக்கள் எல்லாம் பத்திரிகையின் மூலமாகத்தான் மக்களுக்குத் தெரியும். ஆனால் அதிலே உங்களுக்குப் புறம்பான கருத்துக்கள் சொல்லப்பட்டது என்ற காரணத்திற்காக பத்திரிகையின் மீது நடவடிக்கை எடுத்தால் அது சரியாக இருக்காது.

சிவப்பு நாடா பத்திரிகையை எடுத்துக்கொண்டால் அதிலே பல செய்திகள் வந்திருக்கின்றன. குறிப்பாக எரி சாராயப் பிரச்சினை பற்றி உலகத்திற்கு முதல் முதல் எடுத்துக் காட்டியதே சிவப்பு நாடா பத்திரிகைதான். மாத்ருபூமி என்ற மலையாளப் பத்திரிகையிலே வந்ததாகக்கூட சொல்லப்பட்டது. ஆனால் அதற்கு சில நாட்களுக்கு முன்பாகவே சிவப்பு நாடா பத்திரிகையிலேதான் அந்தச் செய்தி வந்தது. மேலும் பல அதிகாரிகள் செய்த தவறுகள் பற்றி எல்லாம் அந்த பத்திரிகையிலே பிரசுரம் ஆகி இருக்கின்றது, அதற்குப் பிறகு அந்தச் செய்திகளின் அடிப்படையிலே அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்திருப்பதாகவும் நான் அறிகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு பாலசுப்பிரமணியம் அவர்கள் இந்த மாநிலத்திலே கொண்டுவரப்பட்ட சட்டம் போன்று ஒரிஸ்ஸா மாநிலத்திலேயும் கொண்டுவரப்பட்டதாகச் சொன்னார், தமிழ்நாடு சர்க்கார் கொண்டு வந்ததற்குப் பிறகுதான் கொண்டுவந்ததாகச் சொன்னார். ஆகவே இந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டு நான் விடை பெறுகிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, அருமை நண்பர் சுந்தரராஜ் அவர்கள் பத்திரிகைகள் சரியாகச் செய்தி வெளியிடுகின்றன என்று சொன்னார்கள். இந்த நாட்டின் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் பத்திரிகைகள் செய்தி வெளியிடுகின்ற தன்மை பற்றி ஒரு கருத்தை சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்கிறார்களா அல்லது அவர் சொல்கின்ற கருத்தைத் நான் வலியுறுத்துகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த விவாதம் எல்லாம் வேண்டாம். நேரம் இல்லை. மாண்புமிகு திரு. என். வி. என். சோமு அவர்களைப் பேச அழைக்கிறேன்.

திரு. என். வி. என். சோமு: தலைவரவர்களே, பத்திரிகைகளுக்கு எல்லாம் வாய்ப்பூட்டு போகின்ற கடுமையான சட்டத்தை ஒரு பத்திரிகையாளர் என்ற முறையிலே நான் எதிர்க்காவிட்டால் என்னுடைய கடமையிலிருந்து நான் தவறியவனாவேன் என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதுவரை இங்கே கொண்டு வந்து நிறைவேற்றிய சட்டங்களை

எல்லாம் நீங்கள் ஏதோ மக்களுக்காகக் கொண்டு வந்ததுபோல் சொல்லிக் கொண்டு வந்தீர்கள். ஆனால் இந்த சட்டத்தை உங்களுக்காக உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத்தான் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டிலிருந்து நிச்சயமாக உங்களால் தப்பித்துக் கொள்ள முடியாது. முழுக்க முழுக்க ஆளும் கட்சியையும் அமைச்சர்களையும் எதிர்க்கட்சியினரின் நியாயமான குற்றச்சாட்டுகளில் இருந்து காப்பாற்றிக்கொள்ளத்தான் இத்தகைய ஒரு கறுப்புச் சட்டத்தை இன்றையதினம் நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் கூட குறிப்பிட்டார்—அரும்சுவை விவகாரத்தைப்பற்றி. அந்த அரும்சுவை விவகாரம் நீதிமன்றத்திற்குச் சென்று, நீதிமன்ற விதிகளுக்கு உட்பட்டு தங்களுடைய பதவியை துறந்த மராட்டிய முதல்வர் அந்துலே அவர்கள் கூட இத்தகைய கருப்புச் சட்டத்தைக் கொண்டு வந்ததாக வரலாறு இல்லை. செய்தி இல்லை. அறிஞர் அண்ணாவின் வழியில் வந்ததாக நாம் சொல்லிக் கொள்கிறோம். அறிஞர் அண்ணா என்ன சொன்னார்? ''கல்—அடியா கலங்காதே, சொல்லடியா, சோர்வு அடையாதே, மாற்றார் தாக்குதலா மருண்டு விடாதே'' என்று சொன்னார். ஆனால் இன்றைக்கு எதிர்க்கட்சிப் பத்திரிகைகள் எழுதுகின்றன என்று அவைகளை கடுமையான சட்டம் கொண்டு வந்து, இரும்புக் கரத்தைக் கொண்டு நசுக்கத் துவங்குவது விவேகமான செயல் அல்ல, ஜனநாயகத்திற்கு விரோதமான செயல் என்று சொல்ல விரும்புகிறேன்.

அக்கினிப் பிரவேசங்கள் செய்தும், நெருப்பு ஆறுகளில் எல்லாம் மூழ்கியும்தான் நாங்கள் இங்கே வந்திருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி ஏதோ சொன்னார்கள். ஆனால் நாங்களும் அதிலெல்லாம் நீந்தித்தான் வந்திருக்கிறோம். அந்தக் காலத்திலே அறிஞர் அண்ணாவினுடைய திராவிடநாடு இயக்கத்திற்குக் கேட்காத ஜாமீனா, செய்யாத பறிமுதலா? முரசொலிக்கு கேட்காத ஜாமீனா செய்யாத பறிமுதலா, நாங்கள் நடத்தி வந்த திராவிட இதழுக்குக் கேட்காத ஜாமீன் தொகையா செய்யாத பறிமுதலா, போர்வாள் இதழுக்கு கேட்காத ஜாமீன் தொகையா செய்யாத பறிமுதலா என்பதையெல்லாம் இங்கு பேசிய நண்பர்கள் தயவுசெய்து, கடந்து வந்த பாதையினை 47 ஆம் ஆண்டு முதற்கொண்டு அன்பு கூர்ந்து யோசித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஐக்கிய நாடு பொதுச் சட்டப்பேரவை, ஜெனரல் அசெம்பிளியில் 1947-ம் ஆண்டிலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. அந்தத் தீர்மானத்திலே........

> Freedom of information is a fundamental human right and is the touchstone of all the freedoms to which the United Nations is consecrated. Freedom of information implies the right to gather, transmit and publish news anywhere and everywhere without fetter.



ஐக்கிய நாடு சபைகளுடைய இந்த தீர்மானத்தில் சொல்லப்பட்டிருக்கிற எல்லாவிதமான உரிமைகளிலும், பேச்சு உரிமை, செயல் உரிமை, எழுத்து உரிமை எல்லாவற்றிற்கும் உரைகல்லாக இருப்பது எது என்று சொன்னால், எழுத்து உரிமைதான்—பத்திரிகை உரிமைதான். ஆனால் அதையே நீங்கள் புரிந்துக் கொள்ளாத அளவுக்கு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, அவற்றை நசுக்க நினைப்பது, தேவையற்ற செயல் என்பதை நான் சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன்.

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல வழக்கறிஞர். பல வழக்குகளில் நானும் அவரும் சேர்ந்து, நீதிமன்றத்திலே அந்தக்காலத்திலே பணியாற்றியிருக்கிறோம். அவர்களுக்கே நன்றாகத் தெரியும். இருக்கிற தண்டனைச் சட்டத்திலேயே இதற்கு ஏராளமான வசதிகள், வாய்ப்புகள் செக்ஷன்கள் இருக்கின்றன என்பது. ஐ. பி. சி. 500 இருக்கிறது. ஐ. பி. சி. 501-ஏ இருக்கிறது, ஐ. பி. சி. 501பி இருக்கிறது. ஐ. பி. சி. 502 ஏ & பி இருக்கின்றன. இவைகளிலே தண்டித்தால் குறைந்தது 2 ஆண்டுக்காலம் வரையிலே தண்டனை தரலாம். மான நஷ்ட வழக்கிலே சென்றாலும் தண்டிக்கலாம் என்றெல்லாம் இருக்கிறபோது இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டம் வேண்டும் என்றே பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு போடக் கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டமாக இருக்கிறது என்பதை மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதிலேயும் நான் மிகவும் கண்டிக்கத் தகுந்ததாக நினைப்பது ஒரு பிரிவு ''நான்-பெயிலபிள்'' என்பது. என்ன பாவம் செய்தார்கள் அந்தப் பத்திரிகைகாரர்கள்? அவர்கள் தவறாக எழுதுவதாகவே வைத்துக் கொள்வோம். அவர்களைப் பிடித்து உள்ளே போட்டுவிட்டு, மாஜிஸ்ட்டிரேட் கோர்ட்டிலே சென்று ஜாமீனில் விடுவிக்குமாறு கேட்டால், மாஜிஸ்ட்டிரேட் விடமாட்டார். பிறகு செஷன்ஸ் கோர்ட். அதன்பிறகு உயர்நீதிமன்றத்திற்குச் சென்று ஜாமீனிலே பத்திரிகையாளர்களை அழைத்துக் கொண்டு வருவதற்குள்ளாக 10 நாட்கள் ஆகலாம். ஆகவே குறைந்தபட்சம் இந்த 'நான் பெயில்பிள்' என்று இருப்பதையாவது மாற்றுவதற்கு அமைச்சருக்கு மனம் இரங்கவில்லையா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

இன்னொன்று அமைச்சர் அவர்கள் கிரிமினல் புரொசீஜர் கோடை எடுத்து வைத்து பார்த்தார்களேயானால் தெரியும். அதிலே வந்த 'நான்-பெயிலபிள்' என்று சொல்கிறார்களே அந்த வார்த்தையை, இந்தச் சட்டத்திலே இப்பொழுது கொண்டு வந்திருக்கிறீர்களே—அந்தத் திருத்தம்தான் அசிங்கமாக இருக்கிறது. தேவையில்லாமல் நுழைத்திருக்கிறார்கள். வரிசையாகப் பார்த்தால் தெரியும். 269 நான்-பெயிலபிள், 270 நான்-பெயிலபிள், 271 நான்-பெயிலபிள், 272 நான்-பெயிலபிள், 273, 274, 275, 276, 277, 278, 279, 280, 281, 282, 283, 284, 285,

[திரு. என். வி. என். சோமு] [1982 பிப்ரவரி 17

286, 287, 288ஏ, 289ஏ, 290, 291 அத்தனையும் பெயிலபிள். எல்லாம் 'டிட்டோ' போட்டிருக்கும். ஆனால் 292—இந்த அவசரச் சட்டம் கொண்டு வரப்படுவதற்கு முன்னால் வரை பெயிலபிள் இப்பொழுது 'நான்—பெயிலபிள்' ஆகவே இவ்வளவு பெயிலபிள் சட்டங்களுக்கு மத்தியில் அசிங்கமாக 'நான்—பெயிலபிள்' என்ற வார்த்தையை நுழைத்திருக்கிறார்கள். அதுவும் ஒரு வழக்கறிஞர் சட்ட அமைச்சராக இருந்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு திரு. பொன்னையன் அவர்கள் காலத்திலே இப்படி கொண்டு வரப்பட வேண்டுமா என்று நான் மிகவும் ஆதங்கத்தோடு கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஏதாவது பத்திரிகைகள் தவறு செய்தால், பிரஸ் கவுன்சில் இருக்கிறது. பத்திரிகைகளிலே கூட பார்த்திருப்பீர்கள்.

> The press Council of India has upheld the complaint of the Assam Government against "Dainik Asom and warned its Editor. என்று.

[இரவு 7—20]

அஸாம் டைம்ஸ் என்ற பத்திரிகை ஆசிரியர் தவறு செய்தார் என்ற காரணத்திற்காக அஸாம் கவர்ன்மென்ட் புகார் செய்து ப்ரஸ் கவுன்சில் அந்தப் பத்திகையை எச்சரிக்கை செய்ததோடு மட்டுமல்ல அந்த ஆசிரியரை கடுமையாக எச்சரித்தும் இருக்கிறது. அன்று ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசியதை இங்கே சொல்கிறேன். 'எனக்குத் தெரிந்த வரையில் இந்தச் சட்டத்தை யார் மீதாவது பயன்படுத்த வேண்டுமானால் அதைப் பற்றி ஆய்வு செய்ய ஒரு கமிட்டிக்கு அனுப்பப்படவேண்டும். அந்த சட்டம் தெரிந்த அந்தக் குழு அதை ஏற்றுக் கொள்ளவேண்டும் அப்படி நடவடிக்கை எடுப்பது பொருத்தம்தானா என்று பார்க்க வேண்டும். அதன் பிறகுதான் நடவடிக்கை தொடர வேண்டும் என்று நான் சொல்ல விரும்புகிறேன்' என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுகிற நேரத்தில் இடைமறித்துக் குறிப்பிட்டார்கள். நான் இங்கே கொண்டு வந்திருக்கிற இந்த மசோதாவை புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். அப்படி ஏதாவது ஒரு பிரிவு, அப்படி ஏதாவது புதிதான வார்த்தைகள் இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. இதை சட்ட அமைச்சர் அவர்கள் அன்புகூர்ந்து தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த சட்டமன்றம் கூடியது முதற்கொண்டு இன்றுவரை நீங்கள் கொண்டு வந்துள்ள ஏராளமான சட்டங்களைப் பார்த்தால் டாஸிட்டஸ் மிக அழகாகச் சொல்லியிருக்கிறார்கள்.



1982 பிப்ரவரி 17] [திரு. என். வி. என். சோமு]

Tacitus, a Roman Orator says, "when the State is more corrupt, then the laws are most multiPlied." என்று. அரசாங்கம் எவ்வளவு ஊழல் உள்ள அரசாங்கமாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாகச் சட்டங்கள் வரும் என்று அவர்கள் சொல்லியிருப்பதை நான் மிக்கப் பணிவுடன் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

THE Hon. THIRU S. RAMACHANRAN: A State means a nation also not necessarily a State Government.

THIRU N.V.N. SOMU; Ths State means a State Government

THE HON. THIRU S RAMACHANDRAN; No, when the laws are enacted and when you mentioned the quotation of Tacitus it really mean the nation also.

THIRU N. V. N. SOMU:—This Government also is implied as a State. Tacitus means this Government also.

அதோடு மட்டுமல்ல. மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, நான் முடித்துக் கொள்கிறேன், தங்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு பத்திரிகையாளர் என்ற முறையிலும் பத்திரிகை சம்பந்தப்பட்ட ஒரு தொண்டன் என்ற முறையிலும் இந்தச் சட்ட முன்வடிவின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்ததற்கு நான் உங்களுக்கு நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

திருமதி இந்திரா காந்தி அம்மையாரைப்பற்றி திரு. பாலசுப்ரமண்யம் அவர்கள் சொன்னார்கள். திருமதி இந்திரா காந்தி அவர்களின் தந்தையார் பண்டிதநேரு அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

> I would rather have a compleely free press with all the dangers involved in the wrong use of the freedom than a supPressed or a regulated press.

என்று பண்டித நேரு அவர்கள் அந்தக் காலத்திலேயே சொல்லியிருக்கிறார்கள்.

> Charles Bradlaugh Says 'Better a thousand fold abuse of the free speech than thedenial of free speech. The abuse dies in a day but the denial slays the life of the people and entombs the hope of the race.

வதந்திகள் அல்லது அவதூறுகள் இவை அன்றே மறைந்து விடும். ஆனால் அதற்காகக் கொண்டுவருகிற இந்தச் சட்டத்தால் மாய்க்கப்படுகிற சிந்தனைகள் நிச்சயம் உயிர் பெற்று எழாது என்பதை அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

குறைந்த பட்சம் பத்திரிகையாளர்கள் ஜாமீனில் வரக்கூடாது என்பதையாவது மாற்றவேண்டும்' அதற்குரிய திருத்தத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வரவேண்டுமென்று கேட்டு நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியத் தண்டனை விதிக்கோவையையும், 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதிக்கோவையையும் மேலும் திருத்துவதற்கான சட்ட முன்வடிவு இந்த மன்றத்தின் முன் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தச் சட்ட முன்வடிவை பொறுத்து கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சில பல கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இது அவசியமற்றது, தேவையற்றது, கம்யூனிஸ்ட் கட்சி இது சட்டமாவதை வன்மையாக எதிர்க்கின்றது. அதோடு தன் கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

இந்த சட்ட முன்வடிவைக் கொண்டுவருவதற்கான காரண நோக்க விளக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. செய்தித்தாள்கள் பருவ கால பத்திரிகைகள், சுற்றறிக்கைகள், படங்கள் முதலியவற்றில் மிகவும் தரக்குறைவான அல்லது கீழ்த்தரமான செய்திகளை வெளியிடுவது அண்மையில் அதிகரித்து வருவதாக அரசின் நாட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது, அதைத் தடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இது கொண்டுவரப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது, ஏற்கனவே இது சம்பந்தமாக இருக்கிற சட்டம் 1960 ல் இயற்றிய சட்டமாகும். இந்தச் சட்டத்தின் அடிப்படையிலே அரசுக்கு சகலவிதமான அதிகாரம் இருந்திருக்கிறது என்பதை இம்மாதிரியான காரியங்களைத் தடுப்பதற்கு அதிகாரத்தை பெற்றிருக்கிறது. அந்த அதிகாரத்தை நடைமுறையில் செயல்படுத்தி, எந்த அளவிற்கு வெற்றி பெற முடியவில்லை, எந்த அளவிற்கு இந்தக் காரியங்கள் நிறைவேற்ற முடியவில்லை என்ற விவரங்களைக் குறிப்பிட்டிருக்க வேண்டும். ஆனால், இம்மாதிரியாக எதுவும் குறிப்பிடாமல், திடீரென்று ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு வருவதும், அதைச் சட்டமாக்க வேண்டுமென்று கோருவதும் அவ்வளவு சரியானதல்ல என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்,

நாம் செய்தித் தாள்களைப் பற்றி அறிவோம். செய்தித் தாள்கள் அரசாங்கத்தின் குறைகளை, அரசாங்கம் எடுக்கக்கூடிய தவறான நடவடிக்கைகளை முழுமையாக விமர்சிக்கக்கூடிய நிலையில் இருக்கின்றன. மக்களுடைய உணர்வுகளை பிரதிபலிக்கக்கூடிய செய்தித் தாள்கள் தங்கள் கடமையை ஆற்றி வருகின்றன. இம்மாதிரியான சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம், இன்றையதினம் அரசாங்கம் செய்தித் தாள்களை நடுநிலை





யிலிருந்து அரசின் தவறான நிலைகளையும், கொள்கைகளையும் விமர்சிக்கும் செய்தித் தாள்களை அச்சுறுத்தக்கூடிய ஒரு நிலைமையை ஏற்படுத்துவதற்காக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதிலும் குறிப்பாக, சமீப காலத்தில் அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கைகள் — அதாவது எந்தப் பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை ஆராயக்கூடிய நேரத்தில், தெளிவாக அரசின் கொள்கைகளை, தவறுகளை விமர்சிக்கும் பத்திரிக்கைகள், அதிலும் குறிப்பாக எதிர்க்கட்சிகளைச் சார்ந்த பத்திரிகைகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற உணர்வோடு, அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற உணர்வோடு, இம்மாதிரியான சட்டங்கள் கொண்டு வரப்படுகின்றது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவேதான், இந்தச் சட்டம் இன்றையதினம் முழுமையாக இந்த அவையில் நிறைவேற்ற வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டாலும், மக்களுடைய உணர்வுகளை, எண்ணங்களை, கருத்துக்களை பிரதிபலிக்க கூடிய செய்தித் தாள்கள், எதிர்க்கட்சியினருடைய உணர்வுகளை பிரதிபலிக்கக் கூடிய, எதிர்க்கட்சி வரிசையிலே உள்ளவர்களுடைய குரலை நெறிக்கக்கூடிய முறையில் இந்தச் சட்டம் பயன்படும். ஆகவே, இந்தச் சட்டத்தை அமுலாக்குவதை கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எங்கள் ஆட்சேபணையைத் தெரிவிக்கிறோம் என்றும், எங்கள் வன்மையான கண்டிப்பையும் தெரிவித்துக்கொண்டு, அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தை வாபஸ் பெறவேண்டும் என்ற வேண்டுகோளையும் வைத்து, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. பி முகமது இஸ்மாயில்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவாதத்தில் இருக்கின்ற இந்த சட்டத் திருத்தத்தைப் பற்றி என்னுடைய கருத்துக்களை சுருக்கமாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். இங்கே விவாதத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கின்ற சட்டத் திருத்தம் ஏற்கனவே இருக்கின்ற ஒரு சட்டத்தின் மாற்று என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏற்கனவே, இருக்கின்ற சட்டத்தின்படி தண்டனைக்கு உள்ளாகிறவர்கள், தண்டனை பெற்றாலும், மேலும் அதே குற்றத்தை திரும்பத் திரும்ப செய்கின்ற காரணத்தால், அதிகப்படியான தண்டனை வழங்குவதற்கு இந்தச் சட்டத்திருத்தம் கொண்டு வந்திருப்பதை யாரும் மறுக்க முடியாது. அவதூறாக, கீழ்த்தரமாக, ஆபாசமாக எழுதினால், அதிகமான லாபத்தைத் தரக்கூடும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், சில பத்திரிகைகள், சில எழுத்தாளர்கள் இத்தகைய செயல்களில் ஈடுபடுவதினால், அவர்களுக்கு அதிகப்படியான தண்டனை வழங்க இந்தச் சட்டம் வகை செய்வதை நாங்கள் வரவேற்கிறோம்.

இந்தச் சட்டத்திற்கு எதிராக சொல்லப்பட்ட கருத்துக்கள் அத்தனையும் சட்டம் வேண்டாம் என்ற முறையில் அமைந்திடாமல், இந்தச் சட்டம் பாரபட்சமாக செயல்படுத்தப்படுவதை எடுத்துக் காட்டினார்கள். பல பத்திரிகைகள் அவதூறாக, தாறுமாறாக, கீழ்த்தரமாக எழுதுகிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டி, அந்தப் பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுக்காமல், குறிப்பிட்ட சில பத்திரிகைகள் மீது மட்டும் இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டினார்கள். ஆகவே, நிறைவேற்றப்பட வேண்டிய இந்தச் சட்டத்தை தூங்க விடாமல், பாரபட்சமற்ற முறையில், வேண்டாதவர்களை மட்டும் தாக்குகின்ற முறையில் இருந்துவிடாமல், யாரையும், எந்தத் துறையையும், எந்தக் கட்சியையும் சார்ந்த பத்திரிகையாக இருந்தாலும், ஆபாசமான முறையில், கீழ்த்தரமான முறையில் எழுதும் பத்திரிகைகள்மீது தவறாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். இத்தகைய நடவடிக்கை எடுக்கவும் நாட்டிலே மலிந்து வருகின்ற மஞ்சள் பத்திரிகை மீதும், சமுதாயத்திலே கீழ்த்தரமாக எழுதிக் கொண்டிருக்கும் பத்திரிகைகள் மீதும் தண்டனை அளிப்பதற்கு இந்தச் சட்டம் வகை செய்கிறது.

[இரவு 7-30]

அத்தகைய நல்ல காரியத்தை இந்த அரசு செய்கிற போது சமுதாயத்திற்குப் பயனுள்ள காரியத்தைச் செய்வதாக ஆகும் இந்தச் சட்டம் அத்தகைய சட்டமாக இருக்கவேண்டுமென்ற என்னுடைய கருத்தைக் கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் ஐந்து நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன்.

இன்றையதினம் நான் மேலவையில் உட்கார்ந்து கொண்டு முதலமைச்சர் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தேன். இந்தச் சட்டம் எப்படி வந்தது என்பதற்கு ஆணித்தரமான வாதங்களை எல்லாம் அங்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு மணி நேரத்திற்கு மேல் எடுத்து விளக்கினார்கள்.

** **

முதலமைச்சர் பேரிலோ, அமைச்சர்கள் பேரிலோ தவறான முறையில் எழுதினாலோ, லஞ்சம் வாங்கினார்கள் என்று எழுதினாலோ ஏற்கனவே இருக்கக்கூடிய சட்டத்தின்படியே மான நஷ்ட வழக்கு கோர்ட்டில் தொடரலாம்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





இப்படி பத்திரிகைகளை மிரட்டுவது என்பது வெள்ளைக்காரன் காலத்தில் கூட இல்லாத புதுமை. வெள்ளைக்காரன் காலத்தில் இல்லாத சட்டத்தை இன்றையதினம் கொண்டு வந்திருக்கிறார்கள். இது நியாயமா? இதிலே 'காக்னிசிபிள்' என்று போட்டுவிட்டு அதே சமயத்தில் 'நான் பெயிலபிள்' என்று போட்டிருக்கிறார்கள். எது ஸ்பூரியஸ், எது டெஃப்மேட்டரி, எது பிளாக் மெயில் என்று சொல்லக்கூடியது யார்? போலீஸ் ஸ்டேஷன் அதிகாரி. அவருடைய டிஸ்க்ரீஷன் படி உடனே அந்தப் பத்திரிகை ஆசிரியரைக் கைது செய்யலாம். அவரை ஜாமீனில் விடக்கூடாது என்ற முறையில் நடவடிக்கை எடுக்கலாம். ஆகவே, இந்த முறையில் கடுமையான மோசமான சட்டம் இருக்கக்கூடாது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கோவையில் ஏற்கனவே விசாரணையில் இருக்கிறது. தினகரன் பத்திரிகையும் மாலை முரசு பத்திரிகையும் முதலமைச்சருக்கு எதிரான செய்தியைப் போட்டது என்பதற்காக அந்தப் பத்திரிகை அலுவலகங்கள் தாக்கப்பட்டு தற்போது விசாரணை நடக்கிறது. அதைச் சார்ந்த பத்திரிகைகளைக் கோவையில் விற்கக்கூடாது என்ற முறையில் ஜங்கிள் லா இன்றையதினம் வந்து கொண்டிருக்கிறது. அப்படி பத்திரிகைகளை மிரட்டுவது நியாயம் அல்ல. வாய்ப்பூட்டுப் போடுவது நியாயமல்ல. எங்களைப் பற்றிப் பத்திரிகைகள் தவறாக எழுதிவிட்டால் போலீஸ் ஸ்டேஷனில் போய் புகார் கொடுத்தால் ஏற்றுக் கொள்வார்களா? எங்களுக்கு என்ன பாதுகாப்பு? நான் கோர்ட்டில் சென்றுதான் நடவடிக்கை எடுக்க முடியும். கோர்ட்டில் கம்ப்ளெயின்ட் கொடுக்கும் முறை ஏற்கனவே இருக்கிறது. அந்த முறைகளை இந்த அரசாங்கம் மேற்கொள்ளலாம். வீராசாமி எம்.எல்.சி. மீதும் எதிரொலி பத்திரிகை மீதும் நடவடிக்கை எடுப்பதற்காக இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சட்டத்திற்கு மத்திய அரசின் அனுமதி கிடைக்காது. ஒருவேளை அனுமதி கிடைத்தாலும் கோர்ட்டில் நிர்மூலமாக்கப்படும். சட்ட அமைச்சர் அவர்கள் 'லெட் அஸ் சேலஞ்ச்' என்று சொல்லுகிறார்கள். 'லெட் அஸ் சீ' என்று சொல்லலாம். அரசியல் சட்டத்தின் 19வது ஷரத்தில் கொடுக்கப்பட்ட உரிமைகளைப் பறிக்கக்கூடிய விதத்தில் இது இருக்கிறது. உங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, உங்களைப் பற்றி எழுதுவதைத் தடுப்பதற்காக உங்களுக்கு ஒரு அரணாகத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. நீங்கள் செய்யக்கூடிய காரியம் எந்தப் பத்திரிகையும் உங்களைப் பற்றி தவறாக எழுதினால் மான நஷ்ட வழக்குப் போடுங்கள் ** அதைவிட்டுவிட்டு இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த வாசகத்தை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது சட்டமன்ற மேலவையிலே அவர் இருந்து கேட்டதாகவும் அப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது ** என்று பேசியதாகச் சொல்கிறார் (குறுக்கீடு). அப்படிப் பேசியிருந்தால் பிரச்சினை இல்லை.

திரு வி. கிருஷ்ணமூர்த்தி: அந்தத் தோரணையில் பேசியதாகத்தான் சொன்னேன்.

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு: அப்படிப் பேசியிருந்தால் பிரச்சினையே இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் பேசியபோது** என்று மேலவையிலே பேசியதாக சொல்லியிருக்கிறார். அப்படிப் பேசி இருக்க முடியாது. எனவே பேசாததை இங்கே சொல்கிறார்...

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அங்கே பேசியபோது நான் இருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி சொன்னதைப்போல் முதலமைச்சர் அவர்கள் பேசவில்லை.

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு: துணைத் தலைவர் அவர்களே, அவர் பேசிய மற்ற குற்றச்சாட்டுகளுக்கு எல்லாம் அமைச்சர் பதில் சொல்லப் போகிறார். அதுபற்றிப் பிரச்சினை இல்லை. * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த வாசகம் இருக்கத் தேவையில்லை, அமைச்சர் இல்லை என்று மறுத்தாகிவிட்டது.

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுகின்றபோது வேண்டாத பத்திரிகைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். 292 ஏ என்றும் பிரிவு தற்போது கொண்டுவருவதன் நோக்கம் வேண்டாத பத்திரிகைகளை நசுக்குகின்ற நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கிற பிரிவு என்று பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அரசினுடைய எண்ணம் அது அறவே இல்லை என்பதை முதற்கண் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு பாலசுப்பிரமணியன் அவர்கள் தெளிவாகச் சுட்டிக் காட்டியதைப்போல் தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு 25வது சட்டத்திலே அதுபற்றிய ஷரத்துக்கள் இருப்பதை பேசிய உறுப்பினர்களும் அறிவர், அவையும் அறியும். ஆனால், புதிய கிரிமினல் புரசீஜர் கோட் மத்திய அரசால் பாராளுமன்றத்தில்

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க



1960 ஆம் ஆண்டிலே கொண்டுவரப்பட்டது, இந்தத் திருத்தம் பாராளுமன்றத்திலே கொண்டுவரப்பட்டபோது அது சேர்த்துக் கொள்ளப்படவில்லை. ஆக்ட் 25 ஆப் 1960ஐப் பொறுத்தவரைக்கும் அது மாநிலச் சட்டமாகும்.

(இரவு 7-40)

எனவே, மைய அரசு கொண்டு வந்த அந்தச் சட்டத்தில் இது இடம் பெறவில்லை. 1960-ஆம் ஆண்டில் அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தபோழுதே சில காரணங்களின் அடிப்படையில் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை Statement of opjects and Reasons for the Act 25 of 1960 படித்தால் தெளிவாகத் தெரியும். அந்தச் சட்டத்தைக் கொண்டு வரும்பொழுது அதிலே அன்றைக்குச் சட்ட அமைச்சராகப் பொறுப்பிலேயிருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் இதைத் தெளிவுபட சொல்லியிருக்கிறார்கள். "The press objection ble Matter Act 1951 contains provisions under which action could be taken against scurrilous writings and writings which are grossly indecent or obscene or intended for blackmail. But that Act lapsed on 31st January 1966. There is at present no Law effectively to deal with such writings and this has enabled yellow press to indulge in such writing directed against the persons of status and standing in society. The victims are reluctant to take legal action against the publisher lest it should give undue publicity to this infamous writing. If the growth of such writings is not put down effectively it is possible that the public might gather an impression that anybody can write anything about persons of high status and get away with it. Such a situation would be highly deplorable and it would be felt that the Goverment would be failing in its duty if they do not take adequate steps to forstall such elements and put them down firmly whenever necessaary. என்று அன்றைக்கு Statement of Objects and Reasons-லே 1960-ஆம் ஆண்டிலேயே இதைக் கொண்டு வரும் பொழுது அப்பொழுதே கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஆனால் அந்தச் சட்டத்திற்கும் தற்போது கொண்டு வந்திருக்கும் திருத்தத்திற்கும் உள்ள ஒரே வேறுபாடு, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசும்பொழுது ஜாமீன் இல்லாமல் ஐந்தாண்டுக் காலம் சிறையில் இருக்கலாம் என்று சொன்னார்கள்.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் சொன்னது வேறு. மிஸ் ரெப்ரசண்டேஷன் ஆகிவிடக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். தவறான தகவல் வந்துவிடக் கூடாது என்பதற்காகச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவரவர்களே, இப்பொழுது கொண்டு வந்திருக்கின்ற திருத்தத்தின்படி முதல் தடவை குற்றம் இழைக்கப்பட்டால் இரண்டாண்டு. In the second instance or subsequent instants five years, non vonlable. ஏற்கனவே இரண்டாண்டுகள் பெயிலபிள் என்பது தான் வேறுபாடு.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஏற்கனவே இருக்கின்ற சட்டத்திலேயே குறைந்தபட்சத் தண்டனை ஆறு மாத காலம் என்றிருக்கிறது. அதிகபட்ச தண்டனை இரண்டு ஆண்டுக் காலம் அல்லது ஃபைன் என்று இருந்தது.

அந்தக் குறைந்தபட்சத் தண்டனையைப் பொறுத்த வரைக்கும் ஒரு மாற்றத்தையும் தற்போது மேற்கொள்ளவில்லை. குறைந்தபட்சத் தண்டனை அந்த ஆறு மாத காலமாகவே தொடர்ந்து இருக்கிறது. அதிகப்பட்சத் தண்டனையைப் பொறுத்தவரைக்கும், அதுவும் குறிப்பாக அது போன்ற, Scurrilously, grossly indecent, ond matters which intend to blackmail,, என்ற அடிப்படையில் இதுபோன்ற செய்திகள் வருமேயானால் இப்பொழுது இரண்டாவது முறையாகத் தொடர்ந்து அந்தத் தவறைச் செய்யும்பொழுது — முதல் முறை ஒருவர் தவறைச் செய்கிறார்; அவருக்கு எடுத்தவுடன் குறைந்தபட்சமாக 6 மாத கால தண்டனை என்று அவர்களுக்குத் தண்டனை நீதிமன்றத்திலே கிட்டாது; சட்டத்திலும் இடமில்லை. ஆனால் இரண்டாவது முறையாக அவர்கள் அந்தத்தவறைத் தொடர்ந்து செய்கிறபொழுதுதான் குறைந்தபட்சத் தண்டனை அந்த ஆறு மாத காலம் என இருக்கிறது. If one contiously indulges in such activities then only he is liable for the punishment under the propsed Act and also under the existing Act". எனவே, அந்த இரண்டாண்டுக் காலம் அதிக பட்சமாக இரண்டாவது முறைத் தொடர்ந்து தவறைச்செய்பவர்களுக்கு ஏற்கனவே இருந்ததைத் தற்போது ஐந்தாண்டு காலம் "with fine" என்று மாற்றப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசும்பொழுது ஸ்கரிலஸ் என்பதற்கு Oxford Dictionary -இல் indecent language என்னும் பொருளோடு சொன்னார்கள். சட்டத்தைப் பொறுத்தவரைக்கும் Oxford Dictionary என்ன சொல்கிறது என்பதை விட, ஸ்கரிலஸ் என்பதனை Explanation 1 to Sec.292(A) -லே தெளிவாக்கப்பட்டிருக்கிறது. For the Purpose of this Section, Explanation (A) the word "Scurrilous" shall be deemed to include any matter which is likely to be injurioua to morality or is calculated to injure any person" என இருக்கிறது.

தனிப்பட்ட முறையில் மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபொழுது மூக்குத்தி பத்திரிகை, காமம் எனும் பத்திரிகை, வேறு ஏதோ மாயா என்ற பத்திரிகை பற்றியெல்லாம் சொன்னார்கள். அந்த பத்திரிகைகள் ஆபாசமாக வருவதாகவும் அதை தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்பதைப் பற்றியெல்லாம் கேட்டார்கள். There is vast disitinction between Section 292(A) 293 again read with 95 of the Cr. P. C. காரணம், 292-(ஏ)-ன் கீழ் எடுக்கப்படுகின்ற நடவடிக்கை, தனிப்பட்ட ஒருவர், அல்லது, சிலர் கலெக்டிவ்லி collectively when they are injure



அப்பொழுதுதான் அந்த ப்ரொவிஷன்ஸ் அட்ராக்ட் ஆகிறது. ஆனால் மூக்குத்தி பத்திரிக்கை, மாயா பத்திரிகை, காமம் பத்திரிகை....

திரு. அ. இரகுமான்கான்: நான் அமைச்சருடைய பேச்சில் குறுக்கிடுவதற்காக மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். அதுவல்ல என்னுடைய நோக்கம். காரணம், நான் சொல்ல விரும்புவது சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முடியாது என்று அமைச்சர் சொல்கின்ற காரணத்தினாலே, நான் அவருக்கு விளக்கம் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸில், 'செய்தித் தாள்கள். பருவகாலப் பத்திரிகைகள், சுற்றறிக்கைகள், படங்கள், முதலியவற்றில் மிகவும் தரக்குறைவான அல்லது கவர்ச்சிகரமான செய்திகளை வெளியிடுவது அண்மையில் அதிகரித்து வருவதாக அரசின் நாட்டத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இவ்வாறு வெளியிடுவதைத் தடுப்பதற்கு இந்தத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது என்று உள்ளது. அரசுக்கு, ஏற்சனவே ஆபாசச் செய்திகள், படங்கள், வெளியிடபடுகின்றன அந்தப் பத்திரிகைகளில் என்று தெரியவில்லையா? நடவடிக்கை எடுக்கவில்லைய ? அதற்குச் சட்டம் இல்லையா என்று கேட்டேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் தற்போது சொன்னதைத்தான் முன்னரும் சொன்னார். நான் அதைப் புரிந்து கொண்டுதான் விளக்கம் சொன்னேன. 292 (ஏ) நோக்கமெல்லாம் அப்படி Scurrilous, grossly indecent or matters with intent to blackmail என்று வருகின்ற பொழுது, அவை That should be likely to be injurious/either to morality or calculated to injure any person என்ற அடிப்படையில்தான் அவைமீது நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால், மூக்குத்தி, மாயா என்று நீங்கள் சொன்ன ஆபாசப் பத்திரிகைகளைப் பொறுத்தவரை அவைகள் மீது நடவடிக்கை எடுக்க, ஏற்கனவே, மாண்புமிகு உறுப்பினர் பாலு அவர்கள் சுட்டிகாட்டியதைப் போல், 272 இருக்கிறது. 293 இருக்கிறது, கிரிமினல் ப்ரொசீஜர் கோட் 95—வது பிரிவு இருக்கிறது. அந்த அடிப்படையில்தான் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வழியிருக்கிறது. தற்போது பிரச்சினை 292, which is a separate Section. which is pertaining to an individual who whould be injured in view of the publication of such matters which would be scurrils or indecent or matters whieh intend to blackmail' எனவேதான் இதையும் சேர்த்து இணைக்க வேண்டாம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அடுத்து அந்த அபாச பத்திரிகைகள் நான் அதற்கும் விளக்கம் தர கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணன் அவர்கள் பேசுகின்றபொழுது கூட அதைப்பற்றி சொன்னார்கள். ஆபாசப் பத்திரிகைகள் சில மிக ஆபாசமாகச் செய்திகளை வெளியிடுகின்ற பொழுது, அவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுக்காமல்இருக்க காரணம் என்ன? ஆளுங்கட்சியைச் சேர்ந்த

பத்திரிகைகள் என்ற காரணமா என்று கூடக் கேட்டார்கள்? அது எந்தக் கட்சியைச் சேர்ந்த பத்திரிகையாக இருந்தாலும், யார் நடத்துகின்ற பத்திரிகையாக இருந்தாலும் கண்டிப்பாக அந்தப் பத்திரிகைகள் மீது கடுமையான நடவடிக்கை According to the provisions of Sec. 292, and 293 read with Sec. 95 of Cr. P. C. எடுக்கப்படும் என்ற உறுதியினை நான் அவைக்குக் கூற விரும்புகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு செய்வதாகச் சொன்னார்கள். ஆனால், ஏற்கனவே பெண் உரிமை இயக்கம் என்ற அமைப்பும், ஜனநாயக மாதர் சங்கம் என்ற அமைப்பும், 2–9–1979 அன்று மாண்புமிகு ஆர். எம். வீரப்பன் அவர்களிடம் ஒரு மகஜர் கொடுத்திருக்கின்றன, இப்படிப்பட்ட ஆபாசமானவை பற்றி. அதிலே நடவடிக்கை எடுக்கவே இல்லையே?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த எந்தப் பத்திரிகைகள் ஆபாசப் பத்திரிகைகள், எவை மீது நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கின்றன என்ற குறிப்புகள் தற்போது என்னிடம் இல்லை.

(இரவு 7-50)

ஆனால் அவைக்கு நான் அரசின் சார்பிலே தருகின்ற உறுதி ஆபாசப் பத்திரிகைகளை யார் வெளியிட்டாலும், யார் எழுதினாலும் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் கூட சட்டத்தை மீறுகின்றபோது அவர்கள் மீது சட்டம் தன் கடமையைக் கண்டிப்பாகச் செய்யும், என்ற உறுதியை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணன் அவர்கள் பேசும்போதும் திரு. சுந்தரராஜன் அவர்கள் பேசும் போதும் ஏன் ஒரு பத்திரிகையினுடைய டைரக்டர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. விதிகளுக்கு மாறாக நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். செக்ஷன் 499 & 500 ஐ. பி. சி. பிரகாரம் நடவடிக்கை எடுக்க முடியாது என்பதனை நான் ஒத்துக் கொள்கிறேன் ஆனால் 292 (எ) பொறுத்தவரைக்கும்

"Whoever causes to be printed in any newspaper, periodical or circular exhibit or causes to be exhibited"

292 (d): Whoever takes part in or received profit from any business in the course of which he knows that there is a reason to place any such Newspaper, Periodicals, Circular, etc.

292 (e): Whoever advertises or makes known by any means whosoever for any person who is ready to engage in any Act which is an offence under this Section".,



என்று இருக்கிறது. சட்டரீதியாக நடவடிக்கை எடுத்தது தவறு என்று சொல்ல முடியாது. சட்டத்தில் நடவடிக்கை எடுக்க இடம் இருக்கிறது என்பதனை மட்டும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். வெள்ளைக்காரன் காலத்தில் இல்லாத சட்டத்தை தற்போது கொண்டு வந்திருக்கிறார்கள் என்று மாண்புமிகு கிருஷ்ணமூர்த்தி சொன்னார்கள். 196... ம் ஆண்டு வெள்ளைக்காரன் பாரதத்தில், தமிழகத்தில் இல்லை என்பதை மாண்புமிகு கிருஷ்ணமூர்த்தி அறிவார் என்று நான் நம்புகிறேன். இந்தச் சட்டம் 1960-லே இருந்த ஒன்றுதான். அப்போது இருந்ததற்கும் இப்போது இருப்பதற்கும் ஒரு மாற்றம் 'பெயிலபிள்' என்று முன்பு இருந்தது. முன்பும் cognisable தான். தற்போதும் cognisable தான். முன்பும் Before the Magistrate தான். இப்போதும் Before the magistrate தான். முன்பு Bailable தற்போது Non-bailable.

மாண்புமிகு உறுப்பினர் சோமு அவர்கள் கூட சொன்னார்கள் போலீஸ்காரர்களே நினைத்தால் கூட பெயிலில் விட முடியாது என்று நீங்கள் சொல்லுகிறீர்கள் காவல் துறை அதிகாரிகள் இந்தச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துவார்கள் என்று. தவறாகப் பயன்படுத்தக் கூடிய அந்த காவல் துறை அதிகாரியிடனிடத்தில் 'பெயிலபிள்" என்ற அதிகாரத்தைக் கொடுத்து உங்களுக்கும் மறுப்பதற்குப் பதிலாக நீதி வழங்குகின்ற நீதி மன்றத்திற்கு நான்-பெயிலபிள் என்று இருக்கின்ற போது நீதி மன்றத்திலே கண்டிப்பாக அவர்களுக்குப் பெயில் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. அதற்கு உதாரணமாக சொல்லுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் சோமு அவர்கள் சொன்னார்கள் மாஜிஸ்டிரேட் கோர்டிலே கிட்டாமல், செஷன்ஸ் கோர்டிலே பெயில் கிட்டாமல் உயர்நீதி மன்றத்திலே கூட சென்று 10 தினங்கள் ஆகிவிடுகின்றது என்று சொன்னார்கள். அப்படி இல்லை, என்று தற்போது கேள்விப் பட்டேன். அண்மையிலே இந்த சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டவர்கள் மாஜிஸ்டிரேட் கோர்டிலே அடுத்த தினமே பெயிலில் வந்திருக்கிறார்கள் என்று கூட கேள்விப்பட்டேன். நடைமுறையிலே நீதிமன்றங்களிலே எப்படி பெயில் கிடைக்கிறது என்பது நமக்கு தெரிந்த ஒன்றுதான். ஆனால் அனைவருக்கும் ஒரு உறுதி மொழியை மட்டும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரைக்கும் எந்த ஒரு எதிர் கட்சியினுடைய பத்திரிகைகளையோ, ஆட்சிக்கு வேண்டாதவர்களுடைய பத்திரிகைகளையோ, அடக்குவதற்கோ நசுக்குவதற்கோ கொண்டுவரப்பட்ட சட்டம் அல்ல இது. மாண்புமிகு உறுப்பினர் இஸ்மாயில் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். இதுபோன்ற சட்டம் தேவை என்பதை வலியுறுத்தி சொன்னார்கள். அதன் காரணத்தையும் சொன்னார்கள். சில பத்திரிகைகளிலே மிகவும் ஆபாசமாக செய்திகள் எல்லாம் வெளியிட்டு அவை கண்டிக்கத்தக்க அளவில் இருப்பதையும், இது போன்ற சட்டங்கள் தேவை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்

[திரு. சி. பொன்னையன்] [1982 பிப்ரவரி 17

இங்மரியில் அவர்கள் பேசும் போது சொன்னார்கள். அதேநேரத்தில் அவர்கள் சொன்னார்கள் பாரபட்சமான முறையிலே இந்தச் சட்டம் பயன்படுத்தப்படக் கூடாது என்பதனை சொன்னார்கள். அவருடைய அந்த நல்ல அலோசனையை கண்டிப்பாக அரசு கடைபிடிக்கும் என்று தெளிவாக சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் பேசும் போது அவர் இந்தச் சட்டம் வந்துவிட்டதைப் பற்றி சற்று அதிகமாக வேதனைப் படுவதாகச் சொன்னார்கள். ஆனால் 1960 ஆண்டிலேயே காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே வந்த சட்டத்தை, இதே ஷரத்தை மத்திய அரசு தற்போது மீண்டும் கொண்டுவருவதற்குக்கூட ஒரு பில்லை அண்மையிலே இன்ட்ரடூஸ் செய்திருக்கிறது. மீண்டும் அந்த பில்லை கொண்டு வர மத்திய அரசே நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் நான் சொல்லி, இந்த சட்ட முன்வடிவை அவைஏற்குமாறு நான் வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"ஆளுநர் அவர்களால் 20-9-1981-ஆம் தேதியன்று பிறப்பிக்கபெற்ற 1981-ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டக் கோவை, குற்றயியல் நடைமுறை விதிக்கோவை (தமிழ் நாடு திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 12/198 ) இப்பேரவை நிராகரிக்கிறது."

திரு. அ. ரகுமான்கான்; மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தின் அடிப்படை உரிமை பத்திரிகை உரிமை. அதைப் படுகொலை செய்யும் கொடுமையான இந்தக் கருப்புச் சட்டத்தை எதிர்க்கிற விதத்தில் எங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கும் விதத்தில், இந்தச் சட்டத்தைக் கிழித்து எறிகிறேன்.

(உறுப்பினர் சட்டத்தைக் கிழித்து எறிந்தார்)

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்யுற்றது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, இந்த ** சட்டத்தை நிறைவேற்றுவதற்கு திராவிட முன்னேற்றக்கழகம் ஒரு பார்டியாக இங்கே இருக்க விரும்பவில்லை. அதை எதிர்த்து, எங்களுடைய வருத்தத்தைத் தெரிவித்து வெளியேறுகிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1982 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன்; *** கட்டுபடுத்துவதற்கும், நீக்கவும் தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது *** வார்த்தை அவைக் குறிப்பில் இருக்கலாமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த வார்த்தையை அவைக்குறிப்பில் இருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

Thiru V. KRISHNAMURTHI: It is a Jungle Law, We do not want to a party to pass it.

(தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: 1982-ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டக்கோவை, குற்றயியல் நடைமுறை விதிக்கோவை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்ற பேரவை சட்டமுன்வடிவு எண் 3/1982 ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டுசட்டமுன்வடிவுபிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: பேரவை விதி 100(2)-ன் படி திரு ரகுமான்கான் அவர்கள் திருத்தத்தை முன்மொழிய அனுமதிக்கப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் பிரிவை எதிர்த்து வாக்களிக்கலாம்.

பேரவை முன்னுள்ள கேள்வி: பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு-3

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை விதி 100 (2)-ன் படி திரு ரகுமான்கான் அவர்கள் திருத்தத்தை முன்மொழிய அனுமதிக்கப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் பிரிவை எதிர்த்து வாக்களிக்கலாம்.

பேரவை முன்னுள்ள கேள்வி: பிரிவு 3 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெறவேண்டும்.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 4 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

---

மாண்புமிகு பேரவை துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் 1982-ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டக்கோவை, குற்றவியல் நடைமுறை விதிக் கோவை (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 3/1982) நிறைவேற்றப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை 18-2-1982 தேதி காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7.57 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

100. தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்க விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உணவு கூட்டுறவுத் துறையின் 10-12-1981-ஆம் தேதியிடப்பெற்ற 932-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு) சட்டம் 119 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

27. தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ்செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 7/1982)



இணைப்பு

(..3ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 221-க்கான விடையைக் காண்க)

விவர அறிக்கை

(அ) ஆம்.

(ஆ) 1978 ஏப்ரல் 1 முதல் 31—3—1981 வரை தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தில் நிகழ்ந்துள்ள ஒழுங்கீனங்கள் பற்றி அரசினுடைய கவனத்திற்கு வந்துள்ளது. அவற்றின் முழு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

கரூர் சேமிப்பு கிடங்கு

1 கரூர் சேமிப்பு கிடங்கின் முன்னாள் சேமிப்புக் கிடங்கு கண்காணிப்பாளர் திரு. வி. சிவசுப்பிரமணியம் மீது ஒரு புகார் மனு வந்தது. அம்மனுவில் உள்ள குற்றச்சாட்டுகளை சென்னை லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநருக்கு அனுப்பி தீர விசாரிக்குமாறு தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிர்வாக இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டார். மேலும் திரு. வி. சிவசுப்பிரமணியத்தினை சங்கரன்கோயில் சேமிப்புக் கிடங்கிற்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார். அரசு இந்த செயற்குறிப்பை பரிசீலனை செய்தது. பின்னர் ஜூலை 1979-ல் அக் குற்றச்சாட்டு மனுவினை விசாரித்து ஓர் அறிக்கை அனுப்பிவைக்குமாறு சென்னை லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநர் கேட்டுக் கொள்ளப் பட்டார். விசாரணை அறிக்கையில் முன்னாள் கரூர் சேமிப்புக் கிடங்கு கண்காணிப்பாளர் திரு. வி. சுப்பிரமணியம், அதிகாரத்தைத் தவறாக பயன்படுத்தி 13—2—1978 ஆம் நாளன்று ரூபாய் 14,450 (ரூபாய் பதினான்காயிரத்து நானூற்று ஐம்பது மட்டும்) மதிப்புள்ள 10 டன் எடையுள்ள யூரியா மூட்டைகளை தன்னுடைய சொந்த நன்மைக்காக திருவாளர்கள் டி. ஸ்டேன்ஸ் அண்டு கம்பெனியின் பிரதிநிதி திரு. கே. ராஜகோபால் மற்றும் சேமிப்புக் கிடங்கின் சில அலுவலர்களின் உதவியுடன் திண்ணப்ப கிடங்கிலிருந்து எடுத்துச் சென்று விட்டதாக தெரிய வந்தது. மேற்கூறிய செயலை மறைப்பதற்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை (records) அதிகார பூர்வமற்ற முறையில் மாற்றி திருத்தி கணக்குகளை சரி செய்துள்ளார் என்றும் தெரிய வந்துள்ளது. மேற்படி விசாரணை அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு சம்பந்தப்பட்ட நபர்கள் மீது, தமிழ்நாடு சிவில் சர்வீஸ் விதிகளின் கீழ் ஒழுக்க நடவடிக்கை எடுக்க அவர்கள் மீது தனிப்பட்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு துறை நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக சேமிப்பு கிடங்கு நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார். கரூர் சேமிப்புக் கிடங்கில் பல்வேறு எடையில் உள்ள பல்லாயிரக் கணக்கான உர மூட்டைகளை ஓரே சீரான எடையாக மாற்றும்போது எடையில் புரியும் துஷ்பிரயோகத்தினால் கிடைக்கின்ற உரங்களையும் மேற்படி பல்லாயிரக் கணக்கான உர மூட்டைகள் கிடங்கிற்கு உள்ளே வரும்போது வெளியே செல்லும்போதும் சிந்துகின்ற உரங்களையும் இவ்வாறு

ஏற்படுகின்ற உபரி உரங்கள் அவ்வப்போது கணக்கில் கொண்டு வரப்படாமல் அவையும் ஸ்டேன்ஸ் நிறுவனம் என்ற பெயரில் கிடங்கு கண்காணிப்பாளரால் வைக்கப்பட்டதாகவும் எடுத்ததாகவும் நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார். இந்த பத்தியில் கூறப்பட்ட ஒழுங்கீனச் செயல் பற்றி விசாரணை நடந்து வருகிறது. இதனால் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்கு எவ்வித பண இழப்பும் ஏற்படவில்லை என்று நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. மதுராந்தகம் சேமிப்பு கிடங்கு—முன்னாள் செங்கல்பட்டு சேமிப்புக் கிடங்கு உதவியாளர் திரு. எம். பாலகிருஷ்ணன், மதுராந்தகம் சேமிப்புக் கிடங்கின் கண்காணிப்பாளராக கூடுதல் பொறுப்பு ஏற்றுக் கொண்டிருந்தகாலத்தில் திரு. பலராமன், இளநிலை உதவியாளர், திரு. என். கோவிந்தராஜன், அடிப்படை ஊழியர் ஆகியோர் உதவியுடன் தட்டாரத் தெருவில் உள்ள சேமிப்புக் கிடங்கிலிருந்து 10 நெல் மூட்டைகளை அப்புறப்படுத்தி விற்பனை செய்துவிட்டார். 23—6—1979 ஆம் நாளிலிருந்து திருவாளர்கள் எம். பாலகிருஷ்ணன், சேமிப்புக் கிடங்கு உதவியாளர் என். கோவிந்தராஜன், அடிப்படை ஊழியர், பீ. பலராமன், இளநிலை உதவியாளர் ஆகிய மூவரும் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். பின்னர் மேல் முறையீடு Appeal செய்து கொண்ட திரு. எம். பாலகிருஷ்ணன், இளநிலை உதவியாளர் என்ற அந்தஸ்துக்கு குறைக்கப்பட்டு, மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட்டார். மேற்கூறிய மூவரிடமிருந்தும் ரூபாய் 5,000 (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) வசூல் செய்யப்பட்டது. இவ்விஷயத்தில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்கு எந்தவித பண இழப்பும் இல்லை என்று நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. விழுப்புரம் சேமிப்பு கிடங்கு—தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கினுடைய விழுப்புரம் சேமிப்புக் கிடங்கிற்கு 10—2—1980 ஆம் நாளன்று ஸ்பிக் நிர்வாகத்தினர் மீளவிட்டான் என்னும் ஊரிலிருந்து 14,900 மூட்டைகள் யூரியாவை அனுப்பினார்கள். மேற்கூறிய மூட்டைகள் உள்ளடக்கிய 26 இரயில்வே ரசீதுகள் 13—2—1980-ல் விழுப்புரம் சேமிப்புக் கிடங்கில் பெறப்பட்டு அந்த ரசீதுகள் ஏற்றி இறக்குதல் மற்றும் போக்குவரவு செய்யும் ஒப்பந்தக்காரர் திரு ஜோதிபிரகாசத்திடம் ஒப்படைக்கப்பட்டன. அவற்றில் 34 மெட்ரிக் டன் எடையுள்ள 680 மூட்டை யூரியாவை இரயில்வேயில் டெலிவரி எடுத்த பின் ஒப்பந்தக்காரர்



அவற்றை சேமிப்புக் கிடங்கிற்கு கொண்டு வந்து சேர்க்கவில்லை. அந்த யூரியா மூட்டைகளின் மதிப்பு ரூபாய் 68,000 (ரூபாய் அருபத்தெட்டாயிரம்) ஆகும். 30—11—1980 ஆம் நாளன்று இது பற்றி காவல் துறையில் புகார் செய்யப்பட்டது. காவல் துறையினர் மேற்கூறிய ஒப்பந்தக்காரரை 15—12—1980 ஆம் நாளன்று கைது செய்தனர். அந்த யூரியா மூட்டைகளின் மதிப்பான ரூபாய் 68,000-ஐ வசூல் செய்து நீதிமன்றத்தில் வைப்புத் தொகையாக செலுத்தியுள்ளனர். காவல்துறையினர் தாக்கல் செய்த வழக்கு நீதிமன்றத்தின் விசாரணையில் உள்ளது. சம்பந்தப்பட்ட நபர்கள் மீது தமிழ்நாடு சிவில் சர்வீஸ் (Civi Service) விதிகளின் பிரகாரம் துறை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சேமிப்புக் கிடங்கு நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார். விழுப்புரம் முன்னாள் கிடங்கு கண்காணிப்பாளர் திரு. பி. நாகராஜன், முன்னாள் இளநிலை உதவியாளர் திரு. பி. தேவன் ஆகிய இருவரும் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**வியாழக்கிழமை, 1982 பிப்ரவரி 18.**

**மாசி 6, துன்மதி—திருவள்ளுவர் 2013.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்
ஆன்ற பெரியார் அகத்து."

அவையில் காதோடு நெருங்கிப் பேசுதலையும், சேர்ந்து சிரித்தலையும் தவிர்க்க வேண்டும்.

### 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

#### பாண்டிக்கண்மாய் கிராமத்தில் புதிய டிரான்ஸ்பார்மர் அமைக்கும் திட்டம்

வினா எண் 241-திரு. செ. சிவசாமி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பரமக்குடி தாலுகா பாண்டிக்கண்மாய் கிராமத்தில் 4 ஆண்டுகளாக டிரான்ஸ்பார்மர் மாற்றும் திட்டம் செயல்படுத்தாததினால் விவசாயம் பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் விரைவில் மாற்றியமைக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ). (ஆ): ஆம் பாண்டிக்கண்மாய் கிராமத்தில் புதிய மின்மாற்றி (Transformer) அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது. இது விரைவில் செயல்படும்.

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் வேலை முடிந்துவிட்டதாகச் சொன்னார்கள். ஆனால் பார்வைக்கு வேலை முடிந்திருந்தாலும்கூட கடந்த மாதங்களாக எந்தவிதமான சப்ளையும் இல்லை. ஸ்டார்ட் செய்தால் ஸ்பார்க்தான் அடிக்கிறதே தவிர கரண்டு வரவில்லை. என்ன காரணத்தினால் கரண்டு வரவில்லை? சீக்கிரத்தில் அந்த வேலையைப்பூர்த்தி செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; தலைவரவர்களே, மின் மோற்றிக்கு உயர் அழுத்த மின் கம்பித்தொடர் தபால் தந்தி இலாகாவினுடைய அந்தக் கம்பித் தொடருக்கு மேலே வருகிறது. அதனால் அவர்கள் அனுமதி தரவேண்டும். அவர்கள் இன்னும் அனுமதி தரவில்லை. அனுமதி கேட்டு வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம்,

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, தபால் தந்தி இலாகா கம்பித் தொடருக்கு மேலே வருகிறதா அல்லது கீழே வருகிறதா என்று தெரியவில்லை. அந்த டிபார்ட்மென்டில் அனுமதி கேட்கப்பட்டு கேபிள் சிஸ்டத்தில் கீழே கம்பி இழுக்கப்பட்டு, தொடர்புகள் ஏற்படுத்தி ட்ரான்ஸ்ஃபார்மருக்கு சப்ளை வரக்கூடிய நேரத்தில் மோட்டாரை ஸ்டார்ட் செய்தால் ஸ்பார்க் அடித்துக்கொண்டிருக்கிறது. இப்போது கீழே கொடுக்கப்பட்ட கேபிள் சிஸ்டத்தை மாற்றி, மேலே லைன் இழுப்பதற்கான வேலை நடக்கிறது. ஏன் இப்படிப்பட்ட அவல நிலை இருக்கிறது? அங்கே இருக்கிற எஞ்சினீயரிங் டிபார்ட்மென்ட் கீழ் வழியாகக் கொண்டு செல்வதா அல்லது மேல் வழியாகக் கொண்டுச் செல்வதா என்று முதலிலே திட்டமிட்டுச் செய்யாத காரணத்தால் இன்றைக்கு இலட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்தும் 4 ஆண்டுகளாக விவசாயிகளுக்கு கரண்டு சப்ளை செய்ய முடியவில்லை. குறைகளை நிவர்த்தி செய்து, உடனடியாக கரண்டு சப்ளைக்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இந்த உயர் அழுத்தக் கம்பித் தொடரானது இரயில்வே மற்றும் தபால் தந்தி இலாகா லைனைக் கடந்து வரவேண்டியுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும்போது அதை கேபிள் மூல கொண்டுவந்ததில் பிரச்சனை ஏற்பட்டு தற்போது அதை 'ஓவர் ஹெட் லைன்' என்ற அளவில் கொண்டு வருவது பற்றி பரிசீலனை நடப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். தகவலுக்கு நன்றி தெரிவித்து, அதை விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, ட்ரான்ஸ்ஃபார்மர், சப்-ஸ்டேஷன் கட்டுவதற்கு தேவையான மெட்டீரியல்ஸ் போதுமான அளவுக்கு இல்லை என்று சொல்லப்படுகிறது. அதனால் தான் காலதாமதம் என்று சொல்கிறார்கள். இந்தக் குறைபாட்டை நீக்க தேவையான மெட்டீரியல்ஸ் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அதனால்தான் காலதாமதம் என்று சொன்னால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை நம்ப வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.





பம்புசெட்டுகளுக்கு வழங்கப்படும் மின் இணைப்பு எண்ணிக்கைகளை பகிர்ந்தளிக்கும் முறை

*வினா எண் 242—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) விவசாயிகளுக்கு மின்சார பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு முன்னுரிமை (Seniority) படி கொடுப்பதில் மாவட்ட வாரியாக மின் இணைப்பு எண்ணிக்கை பகிர்ந்தளிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; (அ) & (ஆ) : இல்லை. மின் திட்ட வாரியாக பகிர்ந்தளிக்கப்படுகிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, மின்சாரக் கம்பிகள் செல்லுகிற வழியில் கம்பிகளுக்கு அருகில் விவசாயிகள் மோட்டார்கள் இருந்தால் அவைகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படுவது மாநிலம் முழுவதும் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் பரிசீலித்து, தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளுக்கு அரசு சலுகைகள் அளித்திருப்பதைப் போல விவசாயத்தில் பின்தங்கிய பகுதியில் 'ஆன் தி லைனில்' இருக்கிற விவசாய மோட்டார்களுக்கு இணைப்பு கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, கம்பித் தொடருக்கு அருகிலேயே இருக்கிற பம்புசெட்டுகளுக்கு மின்சாரம் வழங்கலாம் என்று ஒரு உத்தரவு போடப்பட்டிருந்தது. ஆனால் 30,000 பம்புசெட்டுகளுக்கு மின்சாரம் வழங்கியதில், இந்த கம்பித் தொடருக்கு பக்கத்தில் இருக்கின்றவைகளுக்கே பெரும்பாலும் வழங்கிவிட்டார்கள்.

அடுத்து, சில கிணறுகளின் வழியாகவும் இந்த கம்பித் தொடர் வளைந்து நெளிந்து செல்லவும் ஆரம்பித்துவிட்டது. 1966, 67–ஆம் ஆண்டுகளில் இருந்து கூட மனுக்கள் தேங்கிக் கிடக்கின்றன. அந்த மனுக்களின் மீது எல்லாம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றால் இவ்வாறு கம்பித் தொடர்களுக்கு அருகிலே மின்சாரம் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும் என்ற வகையிலேயும், காலதாமதத்தைத் தவிர்த்து விரைவாகச் செய்யவேண்டும் என்ற காரணத்தினாலும் அது அறவே நிறுத்தப்பட்டுவிட்டது. ஆகவே இதிலே முன்தங்கிய பகுதி பின்தங்கிய பகுதி என்று பார்ப்பதற்கு இடம் இல்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுவது என்பது ரத்து செய்யப்படும் என்று அமைச்சரவர்கள் கூறினார்கள்: ஏராளமான விண்ணப்பங்கள் இருக்கின்றன. ஒரே குடும்பத்திலே உள்ளவர்கள் கூட 4, 5 பேர்கள் விண்ணப்பம் போட்டிருக்

கிறார்கள். ஆகவே குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை என்ற திட்டம் போன்று குடும்பத்திற்கு ஒருவருக்கு என்ற வகையிலே பம்ப் செட்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதற்கு அரசு முன் வந்து அந்த வகையிலே முன்னுரிமை அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, 1966 67 ஆம் ஆண்டில் இருந்தே மனுக்கள் தேங்கி இருக்கின்றன. இப்படி ஏராளமான மனுக்கள் தேங்கி இருக்கின்றன. இப்படி ஏறத்தாழ 15, 16 ஆண்டுகளாக மனுக்கள் தேங்கி இருக்கின்றன. ஆகவே இவ்வளவு காலம் காக்க வைத்ததைத் தவிர்க்கவேண்டும் என்பதுதான் அரசினுடைய நோக்கம். ஆகவே அண்மையில் இது பற்றி பரிசீலித்து 31—3—76 க்கு முன்பு அதாவது 1976 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன்பு சுமார் 48, 215 பேர் மனுப் போட்டிருக்கிறார்கள். வருகின்ற ஆண்டுகளிலே 30,000 பேர்களுக்கு மின் இணைப்பு கொடுக்கவேண்டும் என்று குறியீடு இருந்தாலும் கூட அந்த 48,215 பம்ப் செட்களுக்கும் கொடுத்து விடவேண்டும் என்று பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். இதைக்கேட்டு மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிரமணியம் அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்று நம்புகிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் தலைவரவர்களே, மின் இணைப்பு 90 நாட்களில் தரப்படும் என்ற அளவிலே எங்களுடைய திருவண்ணாமலைப் பகுதியில் ஏராளமான விவசாயிகள் மின்சார இணைப்புக் கிடைக்கும் என்று பம்ப் செட்டுக்களை எல்லாம் வாங்கி வைத்துவிட்டு தவித்துப் போய் இருக்கிறார்கள். ஆனால் போஸ்ட்கள் இல்லை, மற்றவை இல்லை என்ற வகையிலே ........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சரவர்கள் தான் 48,215 பம்ப் செட்டுகளுக்கும் மின் இணைப்பு தரப்போவதாகச் சொல்லிவிட்டார்களே, ஆகவே இனிமேல் இதுபற்றி ஒவ்வொருவரும் கேட்க வேண்டும் என்ற அவசியம் இல்லையே.

திரு. பாபு ஜனார்த்தனன்: தலைவரவர்களே, உடனடியாக அந்த பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க அமைச்சரவர்கள் ஆவன செய்வாரா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, திருவண்ணாமலைக் காரர்களே மிகவும் விசித்திரமானவர்கள்தான். 1978,79—லே 25,000 மனுக்கள் தேங்கி இருந்தன. ஆனால் அப்போது 6500 பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதாகக் குறியீடு நிர்ணயித்து ரெடியாக இருங்கள் என்று 6500 பேர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டதில் 350 பேர்கள்தான் ரெடியானார்கள். ஆனால் அதற்குப் பிறகு 25,000 பேர்களும் ரெடியாக இருங்கள் என்று நோட்டீஸ் கொடுக்கப்பட்டவுடன் 15 000 பேர்கள் ரெடியாகிவிட்டார்கள். அதனால்தான் சிக்கல் ஏற்பட்டது. ஆகவே அதற்காக ஒரு டிவிஷன் போட்டு இப்படி எதிர்பாராத ஊதத்தில் நிலைமை ஏற்பட்டதால் அனைத்து பம்ப்



செட்டுகளுக்கும் கனெக்ஷன் கொடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விசேஷ உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

திரு. எம். சின்னசாமி: தலைவரவர்களே, இந்த சீனியாரிட்டி முறை என்பது ஒருசில இடங்களிலே இருப்பதும் ஒருசில இடங்களிலே இல்லாமல் இருப்பதையும் அரசு அறியுமா? திருச்சி மாவட்டத்திலே பெரம்பலூர் பகுதியிலே 1978—ஆம் ஆண்டு பதிவு செய்தவர்களுக்குக் கூட கொடுக்கப்படுகின்றது. ஆனால் கரூர் பகுதியிலே 1974—ஆம் ஆண்டுக்கு முன்னாலே விண்ணப்பம் கொடுத்தவர்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப் படவேண்டும் என்று சொல்லப்பட்டுவிட்ட பிறகும் மேலே இருந்து உத்தரவு வரவில்லை என்று சொல்லி மின்சார இணைப்பு கொடுக்கப்படாத நிலைமை இருக்கின்றது. ஆகவே அந்த சீனியாரிட்டி முறையைப் பொறுத்தவரையில்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி ஒவ்வொருவரும் தங்கள் தொகுதி பற்றிக் கேட்டுக்கொண்டிருந்தால் நேரம் போதாது. சுருக்கமாக பொதுவாக கேட்க வேண்டும்.

(முற்பகல் 9.10)

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, பம்பு செட்டுகளுக்கு இணைப்பு கொடுக்கிறபோது சிறிய குறுநில விவசாயிகளுக்கு என்று தனியாக ஒரு லிஸ்ட் இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி ஏதாவது ஒரு லிஸ்ட் வைத்துக் கொண்டு, அந்தக் குறுநில விவசாயிகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன் உரிமை கொடுத்து உதவி செய்யும் வகையில் பம்பு செட்டுகளுக்கு இணைப்பு கொடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எப்பொழுது அத்தகைய முறைகள் இல்லை. இப்பொழுது யார் மனு கொடுத்தார்களோ, அந்த மனுவின் அடிப்படையில் முன் உரிமை கொடுத்து 100-க்கு 90 சதவீதம் அந்த சீனியாரிட்டியைப் பயன்படுத்திக்கான் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். மீதி இருக்கும் 10 சதவீதம் ராணுவத்திலே உள்ளவர்களுக்கு, எக்ஸ்—சர்வீஸ்மேன்களுக்கு என்ற வகையில் மின்வாரியமே அவைகளைத் தரலாம் என்று உத்தரவு இட்டிருக்கிறோம்.

திரு. எல் இளையபெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, 1966–69 வரையிலான விவரங்களைச் சொன்னார்கள். அரிசன ஏழை மக்களுக்கு கடலூர் தாலுக்காவிலும், விழுப்புரம், செஞ்சி தாலுக்காக்களிலும் 60-ல், அரசாங்கமே அவர்கள் ஏழை என்பதால் மோட்டார் என்ஜின்கள் கடனுக்கு வாங்கிக் கொடுத்திருக்கிறது. அவைகளுக்கு இன்னும் இணைப்பு கொடுக்கப் பெறாததால் அந்த என்ஜின்களை ஜப்தி செய்யும் நிலை இருப்பது

அரசுக்குத் தெரியுமா? அவர்கள் மொத்தமாகவே 100 பேர்களுக்கு மேல் இருக்க மாட்டார்கள், ஆகவே அவர்களுக்கு உதவி செய்யும் வகையில், முன்னுரிமை கொடுத்து, மின் இணைப்பு கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 100-க்கு 90 சதவீதம் முன்பே நான் குறிப்பிட்ட சீனியாரிட்டியின் அடிப்படையில்தான், மீதி 10 சதவீதம், கீழ்க்கண்டவாறு :

Government departmental pumpsets to the Seed Farms, Research Centres, etc., community wells sunk by Charitable Organizations and Lift Irrigation Co-operative Societies, by Panchayat Unions, Bhoodan and Gramdhan pumpsets, cases relating to loan given by co-operative institutions, by commercial banks under officially sponsored schemes, pumpsets belonging to Army personnel, ex-servicemen, physically-handicapped, pumpsets owned by tribal people and other deserving cases. இவைகளுக்காக என ஒரு 10 சதவீதம் ஒதுக்கி வைத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல் அரசாங்கத்தின் மூலமாக அல்லது கூட்டுறவுத் துறை மூலமாக கடன் வழங்கப்பட்ட என்ஜின்களுக்கு பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புகள் கொடுப்பதும், இதிலேயே எடுத்துக்கொள்ள வாய்ப்பிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. கோபால் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதில், கம்பத்திலிருந்து 50 அடிகளுக்குள் இருந்தால் மின் இணைப்பு கொடுப்பதில் முன் உரிமைகளைக் கவனிக்காமல் இணைப்பு கொடுத்து வந்த பணி தற்போது நிறுத்தப்பட்டிருக்கிறது என்று அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தெரிந்து, நான் ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அது தெரியுமா என்பது தான் கேள்வி.

திரு. என். ஏ. பூங்காவனம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் 48 ஆயிரம் புதிய மின் இணைப்புகள் கொடுக்க விருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அப்படி கொடுக்கிறபோது, இரவில் கொடுப்பதால் விவசாயிகளுக்கு மிகவும் சிரமமாக இருக்கிறது என்பது ஒன்று, அவர்கள் பூச்சி பொட்டு கடித்து பாதிக்கப்படுகின்ற அபாயமும் இரண்டாவதாக இருப்பதால், பகலிலேயே மின்சாரம் கொடுக்க மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதுபற்றி மின்சாரவாரிய நிதிநிலை அறிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



காஞ்சிபுரம் ஒரிகை தொழிற்பேட்டை.

*வினா எண் 243—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் ஒரிகை தொழிற்பேட்டைக்கு எவ்வளவு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது?

(ஆ) எத்தனை தொழிற்கூடங்கள் இப்பொழுது பயன் படுத்தப்பட்டு வருகின்றன?

(இ) மீதமுள்ள இடத்தில் கூடுதலான தொழிற்கூடங்கள் அமைக்க அரசு செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) காஞ்சிபுரம் ஒரிகை தொழிற்பேட்டைக்கு 37.43 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப் பட்டது.

(ஆ) 4 வாடகை தொழிற்கூடங்கள் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

(இ) மீதமுள்ள 28.36 ஏக்கர் நிலத்தை செம்மைப்படுத்தி சீர்திருத்தப்பட்ட மனைகளாக மாற்றி அமைத்து, தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்ய சிட்கோ அனுப்பியுள்ள செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : இந்த் ஒரிகை தொழிற் பேட்டை 1969-ல் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை வளர்ச்சி பெற முடியாததொரு சூழ்நிலையில் இருக்கிறது. அதன் வளர்ச்சியைக் கருதி இந்தப் பகுதியை பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : நான்கு தொழிற்பேட்டைகளை நடத்துவதாகக் கூறினார்கள். அந்த நான்கு தொழிற் பட்டைகளும் அவற்றிற்கு கிடைக்க வேண்டிய அரசு உதவியைப் பெறமுடியாமல் இருக்கிற சூழ்நிலை இருப்பதால் அவர்களது சங்கடங்களை நீக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகள் பரிசீலிக்கப்படும்.

திரு. பாபு ஜனார்த்தனன்: காஞ்சிபுரம் தொழிற்பேட்டையைத் துவங்குவதற்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைவதற்கு முன்பு அந்த இடங்களையெல்லாம் சுற்றிப்பார்த்து, பல முக்கியமான இடங்களைச் சுற்றிப்பார்த்து, அவர்கள் இறுதிநாட்களுக்கு முன்னால் கடைசியாக இந்த இடத்தைப் பார்த்துவிட்டு சென்னை

வந்தார்கள். பிறகு காஞ்சிபுரம் போகவில்லை. ஆகவே அண்ணா அவர்கள் கனவு கண்ட அந்தத் தொழிற்பேட்டையில் அதிகக் கவனம் செலுத்தி அது வளர ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் அந்தத் தொழிற்பேட்டையை மேலும் செம்மைப்படுத்த தமிழக அரசு ரூ. 5.39 இலட்சம் அதற்காக ஒதுக்கீடு செய்து அதை வளர்க்க இன்றைக்கு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

ஆலய ஊழியர்களின் சம்பள விகிதங்கள்.

*வினா எண் 244—திரு. என் கிட்டப்பா : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலய ஊழியர்களின் சம்பள விகிதம் அண்மையில் மாற்றியமைக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை @அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொர்ணம்: அவை முன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் பணக்கார சுவாமிகளைப்பற்றித்தான் சொல்லப்பட்டிருக்கிறது. ஏழை சுவாமிகளைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. வருமானம் குறைவாக உள்ள சில கோவில்களில் வேலை செய்கிற ஊழியர்கள் ரூ. 5,6,7,10, என்று ஊதியம் பெறுகிறார்கள். ஆகவே அந்த ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க அந்தக் கோவில்களுக்கு வருமானம் இல்லாவிட்டாலும் பக்கத்தில் உள்ள கோவில்களோடு அவற்றை இணைத்து அதிகப்படியாக சம்பளம் அல்லது ஊதியம் கொடுக்க அரசு விசேஷ ஏற்பாடுகளைச் செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பணக்கார சுவாமிகளிடத்தில் பணம் இருக்கிற காரணத்தால்தான் அதை எடுத்து அலுவலர்களுக்கு ஊதியம் தருகிறார்கள். பணம் இல்லாத சுவாமிகளிடத்தில் பணம் இல்லாத காரணத்தால் குறைந்த சம்பளம் தருகிறார்கள். எப்படியும் எந்த அடிப்படையிலும் குறைந்தபட்சம் ரூ. 100க்குக் குறையாமல் இருக்கவேண்டும் என்று பார்த்துக் கொள்ளப்படுகிறது. இன்னொரு கோவிலில் இருந்து எடுத்துக் கொடுப்பது என்று ஆரம்பித்தால் சில நூறு ஆலயங்களுக்குக்கூட அப்படி பணம் கொடுக்க முடியாது. ஆயிரக்கணக்கான ஆலயங்கள் பணம் இல்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கின்றன.

@ 422–424ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



நீலகிரி மாவட்டத்திலுள்ள அரசுக்குச் சொந்தமான தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள்.

*வினா எண் 245—திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் தாலூகா மற்றும் பகுதிகளில் உள்ள அரசுக்குச் சொந்தமான தேயிலைத் தோட்டங்களில் தனியார் கொடுக்கும் சம்பளத்தைவிடக் குறைவாகக் கொடுக்கப்படுவது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அதை நிவர்த்தி செய்து ஒரே அளவு சம்பளம் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) விடை அவை முன் @வைக்கப்படுகிறது.

திரு. எம். ஆறுமுகம் : இந்த அறிக்கையில், 'தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் செடிகள் முதிர்ச்சி அடையா இளஞ்செடிகளாக இருப்பதனால் வருமானம் குறைவாக உள்ளது' என்று சொல்லப்பட்டிருக்கிறது. தேயிலைச் செடிகளைப் பொறுத்தவரையில் வளர்ச்சி அடைந்த செடிகளில் மட்டுந்தான் உற்பத்தி அதிகமாகக் கிடைக்கும் என்பதல்ல. ஐந்தாண்டுகளுக்குப் பின்னால் உள்ள செடிகளில் கூட அதிகமான உற்பத்தி எடுக்க முடியும் என்ற நிலையில்தான் தேயிலைத் தோட்டங்கள் இருந்து வருகின்றன. 1980—ல் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தம் காலாவதியாகக் கூடிய சூழ்நிலையில் தொழிற்சங்கங்கள் சம்பளத்தை மாற்றியமைத்து தனியார் தேயிலைத் தோட்டங்களில் உள்ள தொழிலாளர்களுக்குக் கொடுப்பதுபோல் இங்கும் கொடுக்கவேண்டும் என்று கோரிக்கைகள் அனுப்பியிருக்கிறார்கள். எனவே அதை புனர்பரிசீலனை செய்து தனியார் தோட்டங்களில் தொழிலாளர்களுக்குக் கொடுப்பதுபோல் இவர்களுக்கும் சம்பளம் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஐந்து ஆண்டிலிருந்து அது பலன் அளிக்கக்கூடிய திட்டம்தான் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இங்கே இந்த தேயிலைத் தோட்டங்கள் உருவாக்கப்பட்டதின் நோக்கமே இலாபம் சம்பாதிக்க வேண்டும் என்ற அடிப்படையில் அல்ல, இலங்கையில் இருந்து வருகிற தமிழ் மக்களுக்கு, தோட்டத் தொழிலாளர்களுக்கு வேலை அளிக்க வேண்டுமென்பதற்காக கடன் பெற்று இந்தத் தோட்டங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. அதனால் கடந்த சில ஆண்டுகளாகவே இது நஷ்டத்தில்தான் இயங்கிக் கொண்டுவருகிறது. அதனால்தான் பல தோட்ட முதலாளிகள் வைத்துக் கொண்டிருக்கிற தோட்டங்களில், அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கிய

@ 425-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

காரணத்தால் அவை பலன் தந்து கொண்டிருக்கின்ற தோட்டங்களாகவும் நாம் இப்போது புதிதாகத் துவக்கி மேலும் மேலும் வளர்த்துக்கொண்டு வருகிற காரணத்தால், பெருக்கிக்கொண்டு வருகிற காரணத்தால் அப்படிப்பட்ட பலன்களைப் பெறமுடியாதிருப்பதாலும் தனியார் தோட்டங்களில் தருகிற கூலியைவிட குறைவாக இருந்தாலும் வேறு பல வசதிகள் நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற நிபந்தனை காரணமாக அத்தொழிலாளர்களுக்கு அதிக வசதி செய்து தருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9.20)

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லியதைப்போல் தேயிலைத் தோட்டத்திலே நிலைமை இல்லை. ஆனால், இலங்கையிலிருந்து குடியேறிய இலங்கை அகதிகளுக்காக அவைகள் ஆரம்பிக்கப் பட்டிருந்தாலும்கூட, அரசு நடத்துகின்ற இந்தத் தோட்டங்களில் நிர்வாகச் செலவு அதிகரிக்கின்ற காரணத்தினால்தான் நஷ்டம் ஏற்படுகின்றது என்று சொல்லப்படுகின்றது, அதைக் குறைத்து, லாபத்தை அதிகரித்து, அவர்களுடைய சம்பளத்தை சரிக்கட்டிக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகவல் என்னிடத்திலே இல்லை, தோட்டங்கள் தொடக்கக் காலத்தில் இருப்பதாலும், அந்தத் தோட்டப் பரப்பை அதிகப்படுத்தி வருகின்ற காரணத்தினாலும், மற்றத் தனியார் தோட்டங்களிலே உள்ள தொழிலாளர்களுக்கு கொடுக்குன்ற வசதியைவிட நம்முடைய தோட்டத் தொழிலாளர்களுக்கு சேர்ந்த உடனே அவர்கள் நிரந்தரமாக்கப்படுவதாலும், அவர்களுக்கு வீட்டு வசதி உடனடியாக செய்து தருகின்ற செலவினங்கள் ஏற்படுகின்ற காரணத்தினாலும் பொதுவாக தேயிலைககு சந்தை விலையில் குறைவு ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினாலும் இந்த இழப்பு ஏற்பட்டிருப்பதாகத் தகவல் தந்திருக்கிறார்கள். இருந்தாலும், நிர்வாகத்தினுடைய பளு அதிகமான செலவை ஏற்படுத்துகின்றது என்பதை எடுத்துக் கொண்டாலும், அதேபோல் தொழிலாளர்களுடைய பளுவும் அதிகமாகும்போது செலவு அதிகமாகும், அதனால் நஷ்டம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இலங்கை அகதிகள் இந்தத் தோட்டங்களிலே வேலை கொடுப்பதற்காக இந்தத் தொழில் நடக்கிறது, அந்த வகையிலே போதிய அளவு லாபமடைய வாய்ப்பில்லை, அதனால் நிதிநிலை சரியில்லை என்று சொல்லுகிறார்கள். இன்று தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு தனியாராக இருந்தாலும், அதிகமாக ஊதியம் கொடுத்து விடவில்லை. குறைந்தபட்ச சம்பளம் அவர்களால் கொடுக்கப்படுகிறதே தவிர, நியாயமான, வாழ்க்கை நடத்து



வதற்கான சம்பளம் கொடுக்கப்பட வில்லை, எனவே, குறைந்த பட்ச சம்பளத்தை இலங்கை அகதிகளாக இருந்தாலும் அல்லது வேறு யாராக இருந்தாலும், அந்தத் தொழிலாளர்களுக்கு இந்த குறைந்தபட்ச சம்பளத்தைக் கொடுப்பதற்கு, இண்டஸ்ட்ரியல் வேஜ் என்ற முறையில் தொழிலாளர்கள் அனைவருக்கும் அப்படி கொடுக்காமல் இருப்பது நியாயமல்ல. அதைக் கொடுப்பதற்கு என்ன வழி என்பதை ஆலோசிப்பார்களா? அதேமாதிரி, இலங்கையிலே இருந்து வருகின்ற அகதிகளுக்கு மத்திய சர்க்கார் உதவி கொடுக்கிறது. அந்த உதவியை அதிகப்படுத்துவதற்கு, குறைந்த பட்ச சம்பளம் கொடுப்பதற்கு மத்திய சர்க்காரிடம் உதவிபெற்று இந்தத்தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் கொடுக்க இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் தலைவர்களோடு, தொழிலாளர்களோடு பேசி, தொழிற்துறை அதிகாரிகள், ஆணையாளர் ஆகியவர்களை வைத்துத்தான் 3 ஆண்டுகள் ஒப்பந்தம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. தனியார் தோட்டத்திற்கும், நம் தோட்டத்திற்கும் மிகப் பெரிய வித்தியாசம் இல்லை. தனியார் தோட்டங்களிலே ரூ. 11.22 வழங்குகிறார்கள். நம்முடைய தோட்டத்தில் ரூ. 10.02 வழங்குகிறார்கள். ஆனால், தனியார் தோட்டங்களிலே கொடுக்கப்படாத வசதி, நம் தோட்டத் தொழிலாளர்கள் குழந்தைகள் பள்ளிக்குச் சென்றால் ரூ. 15-ம் அவர்களுக்குத் தேவையான புத்தகங்களும் வாங்கித் தருகிறார்கள். சேர்ந்தவுடனே நிரந்தரமாக்கப்படுகிறார்கள், வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. இப்படி அடிப்படையான வசதிகளை எல்லாம் செய்து தருகிறோம். தனியார் துறையிலே எப்படி நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்கிற விவரம் அரசாங்கத்தைவிட, தொழிலாளர் தலைவர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். இருந்தாலும், நாம் அவர்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற வேண்டுமென்பதிலே அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஊதியத்தை கூலியைக் குறைக்க வேண்டுமென்பது அரசின் நோக்கமல்ல. ஆனாலும், மத்திய அரசிடம் சொல்லி நஷ்டத்தைப் பெறமுடியுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள், மத்திய அரசு நஷ்டத்திற்கு தமக்கு உதவி அளிக்காது. ஆனாலும். கடந்த 2, 3 ஆண்டுகளாக நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. 1978–79 ஆம் ஆண்டு 43.06 இலட்சம்; 1979–80 ஆம் ஆண்டு 31·91 இலட்சம் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. கடன் வாங்கித்தான் இந்த நிறுவனத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம், 10½ சதவீதம் வட்டியில். மேலும், தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் அதற்கான முயற்சிகள் தொடர்ந்து செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகவங்கி உதவியுடன் ஊரக ஊழியர்களுக்கான பயிற்சி மற்றும் பார்வையிடல் திட்டம்.

* வினா எண் 246—திரு. பெ. சு. திருவேங்கடம் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் உலக வங்கி உதவியுடன் பயிற்சி மற்றும் பார்வையிடல் திட்டம் செயல்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) அதற்காகும் மொத்த செலவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஆம். விரிவான அறிக்கை ஒன்று பேரவை முன் * வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் தமிழகத்திலே எந்த எந்த மாவட்டங்களில் செயல்படுகின்றன என்பதையெல்லாம் இதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிற கால கட்டத்தின் வரையில் ஒன்றியங்களிலிருந்து இந்தத் துறையை வேளாண்மைத் துறைக்கே மாற்ற இருப்பதாக இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. வேளாண்மைத் துறையின் திட்டங்களையெல்லாம் ஊராட்சிஒன்றியங்கள் நல்ல முறையிலே செயல்படுத்தி வருகின்றன என்பது எல்லாம் அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே இந்தத் திட்டத்தை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட முறையிலே செயல்படுத்தக்கூடாதா? அவ்வாறு செய்வதிலே என்ன சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து 3 ஊர்நல அலுவலர்கள் அதுவும் ஏற்கனவே வேளாண்மைத் தொடர்பு அலுவலர்களாகப் பயன்பட்டு கொண்டிருக்கிறவர்களை மட்டும் தான் இதிலே பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். முழுக்க முழுக்க இந்தத் துறை தான் இந்தத் திட்டத்தை செயல் டுத்திக்கொண்டு வருகிறது. மேலே இருக்கின்ற வேளாண்மை இயக்குநரிலிருந்து கீழே இருக்கின்ற விரிவாக்க அலுவலர் வரையில் இந்தத் திட்டத்திற்குப் பயன்படுத்துவதால் இந்தத் துறையே இதை மேற்கொண்டு நடத்துவது தான் சிறப்பாக இருக்கும்.

திரு. பெ. சு.. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, இந்த பயிற்சி மற்றும் பார்வையிடல் திட்டம்— விவசாயத்திலே முற்போக்கான மாநிலமாக இருக்கின்ற நம்முடைய தமிழகத்தில் வெறும் பயிற்சி மற்றும் பார்வையிடல் திட்டமாக இருந்தால் அது

* 425–427-ம் பக்கங்களில் இணைப்பு III–ஆக அச்சிடப் பெற்றுள்ளது.





விவசாயிகளுக்குப் பயன் தராது.—சிறு விவசாயிகளுக்கும் பெரு விவசாயிகளுக்கும் மானிய விலையில் உரம், மருந்து போன்றவை கொடுக்கின்ற உதவி யச் செய்வதற்கான முறையிலே அரசாங்கம் ஏதாவது வழிவ க செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, வேறு திட்டங்கள் இருக்கின்றன. அவை ளின்மூலம் நாம் உதவியைச் செய்கிறோம். இந்தத் திட்டத்தின் மூலமாக வேளாண்மைத் துறையுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும், அவர்கள் பிரச்சினைகளைத் தெரிந்துகொள்ளவும் அதன் மூலம் நிவாரணம் பெற்றுத் தரவேண்டும் என்பதும் தான் இந்தத் திட்டத்தினுடைய முக்கியமான நோக்கம்.

மாமண்டூரில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுவும் திட்டம்.

* வினா எண் 247—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

மதுராந்தகம் வட்டம் மாமண்டூர் கிராமத்தில் Agro Industry மூலம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை துவக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மதுராந்தகத்தில் இப்போது அதைத் துவக்கும் உத்தேசம் இல்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர் ளே, ஏற்கெனவே இதற்காக செயற்குறி புகள் தயாரிக்கப்பட்டு அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் மிகவும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அது மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால் அரசு இதை மீண்டும் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை இயக்குவது தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம். அவர்கள் இத்தகைய தொழிற்சாலைகள் போச்சம் பள்ளியிலும், நாமக்கல்லிலும் இருக்கின்றன. புதுக்கோட்டை மாவட்டத்திலே பூனக்குளத்திலே வேலை முடிவு அடையும் தறுவாயில் ஒன்று இருக்கின்றது. ஆகவே மதுராந்தகத்தில் துவக்கத் தேவையில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள்.

பருத்தி தீவிர சாகுபடித் திட்டம்.

* வினா எண் 248—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பருத்தி தீவிர சாகுபடித் திட்டம் தற்போது அமுலில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இதற்காக 1981–1982 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) பருத்தி தீவிர சாகுபடி திட்டம் என்ற பெயரில் ஒரு திட்டம் தற்போது அமுலில் இல்லை. ஆயினும் பருத்தி தீவிர சாகுபடி குறித்து தற்போது கீழ்க்கண்ட இரு திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன:

1. தீவிர பருத்தி மாவட்டத் திட்டம்.

2. ஒருங்கிணைந்த பருத்தி பெருக்குத் திட்டம்.

(ஆ) மேற்குறித்த இரு திட்டங்களுக்கு 1981–82 ஆம் ஆண்டிற்கு கீழ்க்கண்டவாறு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| தீவிர பருத்தி மாவட்டத் திட்டம். | ரூ. 54,67,000 |
| ஒருங்கிணைந்த பருத்தி பெருக்குத் திட்டம். | ரூ. 9,17,700 |

திரு. என் பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பருத்தி தீவிர சாகுபடித் திட்டம் தற்போது அமலில் இல்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் தீவிர சாகுபடித் திட்டம் என்றும் ஒருங்கிணைந்த திட்டம் என்றும் சில திட்டங்களுக்கு ஒதுக்கியிருப்பதாக அவர்கள் சொன்னார்களே எனக்கு அது விளங்கவில்லை, அது என்ன என்று விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பருத்தி உற்பத்தியை அதிகரிப்பதுதான் அதனுடைய நோக்கம்.

திரு என். பழனிவேல்: தலைவர் அவர்களே, தமிழகத்திலே பருத்தி நமக்குத் தேவையான அளவு இல்லை என்று சொல்கிறார்கள். இதனால் வெளிமாநிலங்களில் போய் கொள்முதல் செய்வதற்கு அதிகாரம் அளிக்கப் பட்டுருக்கிறதா? அம்மாதிரி செய்வதற்கு மத்திய அரசை கேட்டு இருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கொள்முதல் செய்வது இந்தத் துறையின் நோக்கமல்ல.

(முற்பகல் 9.30)

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னர் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்பொழுது Cotton Corporation of India அந்தப் பருத்தியை வாங்குவதில் பெரிய முதலாளிகளுக்குச் சாதகமாக இருப்பதால் நம் மாநில சர்க்காரே மாநில அளவில் ஒரு காட்டன் கார்ப்பரேஷனை—மகாராஷ்டிராவிலே செய்வதைப்போல உருவாக்க யோசனை உண்டு என்று சொன்னார்கள். அது எந்த ஸ்டேஜில் இருக்கிறது? அது எப்பொழுது அமைக்கப்படும்?



மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அந்த வகையிலே ஒரு திட்டம் அரசிலே மேற்கொள்ளப்பட பரிசீலிக்கப் பட்டது. பருத்தி வாரியம் என்ற வகையிலே நாம் ஒன்றை அமைக்க வேண்டுமானால் பெருந் தொகை தேவைப்படுகிறது; வங்கிகளின் துணை தேவைப்படுகிறது. அவ்வளவு பெருந் தொகை ஒதுக்கத்தக்க நிலையில் மாநில அரசின் நிதி நிலைமை இல்லை. ஆகவே, பருத்தி உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் என்று இதை அமைக்கலாம் என்ற அந்தத் திட்டத்தைக் கூட்டுறவுத்துறை பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிக்கு பொழுது பருத்தி சாகுபடித் திட்ட மாவட்டம் என்று சொன்னார்கள். எந்தெந்த மாவட்டங்களுக்கு அந்தச் சலுகைகள் கொடுக்கப்படுகின்றன? எந்த வகையில் கொடுக்கப்படுகின்றன என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, தீவிரப் பருத்தி மாவட்டத் திட்டம் என்பது கோவை, பெரியார், நெல்லை, முகவை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்படுகிறது. மத்திய அரசிலிருந்து 50 விழுக்காடு பெற்று நிறைவேற்றப் படுகிறது.

பாஞ்சாலங்குறிச்சிக்கு ஒட்டப்பிடாரம் வழியாகச் செல்லும் சாலையை சீர்செய்யும் திட்டம்.

*வினா எண் 249 திரு. க. பாரமலை: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி-எட்டயாபுரம் ரோட்டில் குறுக்குசாலை என்னுமிடத்திலிருந்து பிரிந்து பாஞ்சாலங்குறிச்சிக்கு ஒட்டப்பிடாரம் வழியாகச் செல்லும் சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் இதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) அண்டு (ஆ) பழுதடைந்த சாலையை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வில்லிவாக்கம் தொகுதியிலுள்ள செங்கல் தயாரிக்கும் தொழிற்சாலைகள்.

*வினா எண் 250—திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வில்லிவாக்கம் தொகுதியில்—நொளம்பூர், மதுரவாயல், அடையாளம்பட்டு, மேற்கு அண்ணா நகர், அயனம்பாக்கம், பகுதிகளில் செங்கல் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அரசால்

குறிப்பிடப்பட்ட வரைமுறைகளுக்கு புறம்பாக பொதுமக்கள் குடியிருப்புப் பகுதிகள் பாதிக்கப்படும் விதத்தில் நடத்தப்படுவது பற்றி அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இப்பகுதியில் வரைமுறைகளுக்கு புறம்பாக குடியிருப்பு பகுதிகளில் செங்கல் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு உள்ளாட்சி நிறுவனங்களால் உரிமம் தரப்படவில்லை என்ற தகவல் அரசுக்கு தரப்பட்டுள்ளது.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பகுதிகளில மொத்தம் எத்தனை செங்கல் தொழிற்சாலைகளுக்கு உரிமம் தரப்பட்டிருக்கின்றன? இன்னும் எத்தனை பேர்கள் இதற்காக விண்ணப்பித்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, வில்லிவாக்கம ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அடையாளம்பட்டு ஊராட்சியில் 9 செங்கல் தொழிற்சாலைகளும், நொளம்பூர் ஊராட்சியில் 20 செங்கல் தொழிற்சாலைகளும் உள்ளன. மற்றும் புதிதாகத் தொழிற்சாலைகள் வேண்டுமென்று கேட்டு விண்ணப்பங்கள் வந்ததாக் குறிப்புகள் இல்லை.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் சொல்லும் பொழுது மேலும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் அந்தப் பகுதியிலே 15 அடி, 10 அடி வேண்டுமென்று அரசாங்கத்திற்குச் சொந்தமான இடங்களை நம்முடைய உத்தரவில்லாமல் ஆக்கிரமித்துக்கொண்டு தகவல் கொடுக்காமல் எடுத்திருப்பதை அரசு அறியுமா? மேலும் அந்தப் பகுதிகளில் பள்ளமாக எடுத்துவிடுவதால் நெல் பயிரிடும் விவசாயிகள் அவதிப்படுவது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? அப்படியிருந்தால் அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அப்படிப்பட்ட குறிப்புகள் அரசிடத்தில் இல்லை. அப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தால் அவைகள் உடனடியாகக் கவனிக்கப்படும்.

ஈரோட்டில் திரையரங்கம் மற்றும் திருமண மண்டபம் கட்டும் திட்டம்.

***வினா எண். 251**—திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஈரோடு நகராட்சி ஈரோடு நகரில் திரையரங்கம் மற்றும் திருமண மண்டபம் கட்டுவதற்கு அரசிடம் அனுமதி கோரி உள்ளதா?



(ஆ) ஆம் எனில் அதற்கான அனுமதி வழங்கப்பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) அண்டு (ஆ) திரையரங்கம் கட்ட அனுமதி கோரவில்லை. திருமண மண்டபம் கட்டுவதற்கு நில அடைவு செய்யும் நகராட்சி ஆணையாளரின் பிரேரணை அரசின் பரிசீலனையில் உள்ளது. பரிசீலனைக்குப் பின் தகுந்த ஆணை வழங்கப்படும்.

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு நகரம் வளர்ந்து வரும் நகரமாக இருப்பதால் அங்கே ஒரு திருமண மண்டபம் கட்டுவதற்குப் பரிசீலிப்பதாகக் கூறியதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்திலே அங்கே கல்லூரி மாணவர்கள் விளையாட்டு அரங்கம் இல்லை. எனவே, அரசு அங்கே விளையாட்டு அரங்கம் அமைத்துத்தர முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, விளையாட்டு அரங்கம் தேவை என்று சொன்னால் அது பரிசீலிக்கப்படும்.

கரிகரி பகுதியிலுள்ள தொழுநோய் மருத்வதுமனை

***வினா எண் 252**—திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்ட கரிகரி பகுதியில் உள்ள தொழுநோய் மருத்துவமனைக்கு அரசு மானியம் ஏதேனும் அளிக்கிறதா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு தொகை வழங்கப்படுகிறது?

(இ) தற்போது உள்ள படுக்கைகள் எத்தனை?

(ஈ) மருத்துவர்கள் எத்தனை பேர்?

(உ) சிகிச்சை பெறும் வெளி, உள் நோயாளிகள் எத்தனை பேர்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம். (ஆ) ஒரு ஆண்டிற்கு ரூ. 2 லட்சம் மானியம் அளிக்கப்படுகிறது.

(இ) 180 படுக்கைகள் உள்ளன.

(ஈ) 8 மருத்துவ அலுவலர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்,

(உ) புற நோயாளிகள் எண்ணிக்கை 757 மற்றும் உள் நோயாளிகளின் எண்ணிக்கை 92 ஆகும்.

திரு. என். ஏ. பூங்காவனம்: தலைவர் அவர்களே, இந்த தொழுநோய் சம்பந்தமாக அரசு மானியம் அளிக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். குறிப்பாக வடாற்காடு மாவட்டத்தின் தலைநகர் வேலூரில் வீதியிலே ஏராளமான பேர்கள் இப்படி தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கிறார்களே, அவர்களை அரசு கைது செய்து அழைத்துச் சென்று அவர்களுக்கு அங்கே சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, இவர்களை கைது செய்ய முடியாது. இருந்தாலும்கூட அவர்களை வற்புறுத்தி அவர்களுக்கு நல்ல சிகிச்சை கிடைக்கின்ற வகையிலே எங்கெங்கு தொழுநோய் சிகிச்சைக்கான இடங்கள் இருக்கின்றனவோ அந்த இடங்களுக்கு அவர்களை அனுப்பினால் சௌகரியமாக இருக்கும். அப்படித்தான் இப்போது செய்து கொண்டு இருக்கிறோம். இந்த மருத்துவமனை மிக நல்லமுறையிலே பணியாற்றிக் கொண்டு வருகிறது. இந்தியாவிலேயே ஒரு சிறந்த மருத்துவமனையாக இன்று காட்சி அளித்துக் கொண்டிருக்கிறது.

திரு. என். ஏ. பூங்காவனம்: தலைவர் அவர்களே, நான் கேட்க விரும்புவது, வீதிகளில் திரிகின்ற தொழுநோய்க்காரர்களை அப்புறப்படுத்தி—அந்த நோய் தொற்று நோயா இல்லையா என்பதல்ல பிரச்சினை-பார்ப்பதற்கு அச்சமாகவும் பிறருக்கு அருவருப்பாக இருக்கின்ற சூழ்நிலையில், அவர்களை கைது செய்யாமல், அழைத்துச் சென்று அங்கே சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? குறிப்பாக வேலூரில் பஸ் ஸ்டாண்டு. போக்குவரத்துச் சாலைகள் போன்ற இடங்களில் நிறையபேர்கள் இருக்கிறார்கள். அவர்களை அப்புறப்படுத்த ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழுநோயாளிகளுக்காக சோசியல் வெல்பேர் டிப்பார்ட்மென்டின் கீழ் இயங்குகின்ற 10 பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத்தில் கொண்டு போய் சேர்த்து சிகிச்சை செய்து கொண்டிருக்கிறோம். அது சோசியல் வெல்பேர் டிபார்ட்மென்டின் பிராப்ளம். சோஷியல் வெல்பர் டிப்பார்ட்மென்டும், நல்வாழ்வுத் துறையும் இணைந்து 3, 4 முறை கூட்டம்போட்டு, செக்கரட்டரிகள் லெவலிலே திட்டம் தீட்டி இருக்கிறோம். அதன் அடிப்படையில் எங்கெங்கே இப்படிப்பட்ட தொழுநோயாளிகளுக்கு சேர்ப்பதற்கு இடங்கள் காலி இருக்கின்றன என்று ஒரு லிஸ்ட் தயார் செய்து சோசியல் வெல்பேர் டிப்பார்ட்மென்டிலே ஒரு காப்பியும் நம்மிடத்திலே ஒரு காப்பியும் இருக்கும். அந்த இடத்திற்கு அழைத்துப்போக சௌகரியமாக இருக்கும் என்று திட்டமிட்டு, அதிலே 50% வெற்றி அடைந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல அவர்களை வற்புறுத்திக் கொண்டு போகும் நேரத்தில் அங்கே இருக்கின்ற அதிகாரிகளுக்குத் தெரியாமல் அவர்கள் வெளியே வந்து மீண்டும் பிச்சை எடுக்கும் நிலைதான்



இருக்கின்றது. பரனூரில் இப்படி சிரமம் ஏற்பட்டிருக்கிறது. சட்ட ரீதியாக ஆக்காமல், சமூக ரீதியாக ஆக்கி அதில் 50 சதவிகிதம் வெற்றி அடைந்திருக்கிறோம். நிச்சயமாக முழு அளவுக்கு 100 சதவிகிதம் வெற்றி அடைவோம் என்ற நம்பிக்கை இருக்கிறது.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: தலைவர் அவர்களே, தொழுநோய் தொற்று நோயா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு தொழுநோயை அறவே ஒழிக்கின்ற வகையில், குழந்தைப் பருவத்திலே இருந்து கண்டறிந்து அந்தத் தொழுநோயைத் தடுக்கின்ற வகையிலே அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, இது மிக முக்கியமான அம்சமாகும். இந்தத் தொழுநோயை அகற்றுவதில் நாம் வெற்றிபெறவேண்டும் என்றால் அவர்களுக்குக் குழந்தைப் பருவத்திலே மாக்கில் என்று இருக்கிறது. அந்தக் கட்டத்தில் அந்தக் குழந்தைகளுக்குக் கண்டுபிடித்து 6 மாதம் 1 வருடம் சிகிச்சை கொடுத்தால் அறவே இருக்காது, முழுவதும் நீங்கிவிடும். இப்போது, கல்வித் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை இவைகள் இரண்டும் இணைந்து, டிஸ்டிரிக்ட் மெடிக்கல் ஆபிசர், டிஸ்டிரிக்ட் லெப்ரசி ஆபிசர், டிஸ்டிரிக்ட் எஜுகேஷன் ஆபிசர் இவர்கள் மாவட்டக் கலெக்டர் தலைமையிலே மாவட்ட ரீதியாக கூடிப் பேசி நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். சராசரியாக 5 லட்சம் மாணவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கிறார்கள். அதிலே 60%, 70% மாணவர்களைப் பரிசோதனை செய்து, செக் செய்து இருக்கிறோம். 82-83 ஆம் ஆண்டுக்குள் நூற்றுக்கு நூறு நல்லவகையிலே இவர்களைப் பரிசோதனை செய்வதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9.40)

திரு. கே. ஆர். சுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, 700-க்கும் மேற்பட்ட நோயாளிகள் இருப்பதாகச் சொன்னார்கள். அந்த வைத்திய நிலையம் மெயின் ரோடில் இருந்து 3 கிலோ மீட்டர் இன்டீரியராக இருக்கிறது. அங்கே செல்வதற்கு போக்குவரத்து வசதி இல்லாமல் இருக்கிறது. அந்த மக்கள் அங்கே செல்வதற்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்த அரசு முன் வருமா? அல்லது அவர்களை அங்கே எடுத்துச்செல்வதற்கு ஏதேனும் பிரத்தியேக ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட மருத்துவ மனைகள் நெடுஞ்சாலைகளில் இருப்பது சரியல்ல. ஆகவே, கொஞ்சம் ஒதுக்குப்புறமாக இருப்பதுதான் நல்லதாக இருக்கும். அந்த இடத்திற்குப் போக்குவரத்து வசதி இல்லை என்று சொன்னார்கள். போக்குவரத்து வசதிக்காக இரண்டு மூன்று வேன்கள் இருக்கின்றன. அந்த வேன்கள் மூலமாக அந்த இடத்திற்கு நோயாளிகள் கொண்டு செல்லப்

படுகிறார்கள். அதிலே எந்தவிதமான பிரச்னையும் இல்லை. அங்கே நோயாளிகளும் சிறந்த முறையில் கவனிக்கப்படுகிறார்கள். இந்த நோய் ஒரு 'எமர்ஜென்சி' அடிப்படையில் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று அல்ல என்பதால், யார் அங்கே செல்லவேண்டும் என்று விருப்பப்படுகிறார்களோ அவர்கள் முறைப்படி அந்த வேன்கள் மூலம் அந்த இடத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது: தலைவர் அவர்களே, இந்த தொழுநோய் மருத்துவமனைகளுக்கு அரசாங்கம் குறைந்த மானியம் அளிக்கிறது என்று அறிகிறேன். 2 லட்சம் ரூபாய்தான் கொடுக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்த அளவிற்குக் குறைவான மானியம் வழங்கியிருப்பதால், தனியார் மருத்துவ மனைகள் இந்த நோயைத் தடுக்க சரியான முறையில் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. கும்பகோணத்தில் இருக்கும் தனியார் மருத்துவ மனைக்குத் தேவையான மானியம் தரப்படவில்லை. அதனால் அவர்களுக்கு பல சிரமங்கள் இருக்கின்றன. ஆகவே, கூடுதலாக மானியம் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த கரிகிரி தொழுநோய் மருத்துவமனையைப் பொறுத்தவரையில், அது சுவிடன் நாட்டு திட்டத்தின் அடிப்படையில் அவர்கள் உதவியோடு அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு இரண்டு லட்சம் மானியம் வேண்டும் என்று கேட்டார்கள். கொடுத்து இருக்கிறோம். கும்பகோணம் தொழுநோய் மருத்துவ மனை பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது, தற்போது சங்கராச்சாரியார் அவர்கள் எடுத்துக்கொண்ட மருத்துவ மனை குறித்து என்று கருதுகிறேன். முதலில் பணம்கொடுப்பதில் சில சங்கடங்கள் இருந்தன. இப்போது அந்தச் சிக்கல்கள் எல்லாம் தீர்க்கப்பட்டு, பணம் அவர்களுக்கு ஒழுங்காகப் போய்க்கொண்டு இருக்கிறது என்கிற செய்தியை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சி. சண்முகம்: தலைவர் அவர்களே, திருவண்ணாமலைப் பகுதியில் அதிக தொழுநோயாளிகள் இருப்பதால், அங்கேயுள்ள தொழு நோய் மருத்துவப் பகுதியில் நெருக்கடி அதிகமாக இருக்கிறது. எனவே தொழு நோயாளிகளுக்கென புதிதாக இல்லம் அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, இப்போது இருக்கக்கூடிய 10 இல்லங்களில் நாம் மேக்சிமம் யுடிலைஸ் செய்து விட்டு, அங்கேயுள்ள காலியிடங்களை எல்லாம் நிரப்பிவிட்டு, அதற்குப் பிறகுதான் புதிதாக திறக்கும் யோசனையை பரிசீலிக்க வேண்டும். அந்த அடிப்படையில்தான் எங்கெங்கு காலியிடங்கள் இருக்கின்றன என்பதை அறிந்து அந்த இடத்திற்கு அந்த நோயாளிகள் அனுப்பப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இப்போது புதிதாக கட்டுவதற்கு வாய்ப்பு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



தொழுநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம்

*வினா எண் 253— திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழுநோயாளிகளுக்குசிகிச்சையளிக்கும் டாக்டர்கள் தனியாக பயிற்சி (Practice) செய்ய முடியாததால் அவர்கட்கு உதவித் தொகை (Non-practing allowance) வழங்கிடும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போதிருந்து அளிக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) & (ஆ) தொழு நோய்மருத்துவ நிலையங்களில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு தனியாக பயிற்சி செய்யாமல் இருக்க ஈட்டுத் தொகை 1972 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. எனவே இவ்வினா எழவில்லை.

திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த (நான்:பிராக்டீசிங் அலவன்சு' உயர்த்திக்கொடுக்கப்படுமா? ஏனென்றால் தற்போது பல இடங்களில் தொழுநோய் மருத்துவர்கள் இடங்கள் காலியாக உள்ளன. ஆகவே இந்த அலவன்சு உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு தலைவர்அவர்களே, 1972ஆம் ஆண்டில் இந்த அலவன்சு 75 ரூ.என்று இருந்தது. 1977 ஆம் ஆண்டில் 100 ரூ. என்று உயர்த்தப்பட்டது. அதற்குப் பிறகு, 150 ரூ. உயர்த்தப்பட்டு இருக்கிறது. In addition to this they are paid a sum of Rs, 200/- as Special Leprosy Allowance. ஆகவே, இந்த அளவிற்கு நாம் செய்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, தற்போது கும்பகோணம், திருவிடைமருதூர் வட்டங்களில் உள்ள தொழுநோய் மருத்துவப்பகுதிக்கு ஒரு பாரா மெடிகல் ஒர்க்கர் தான் இருக்கிறார். அந்த இரண்டு ஒன்றியங்களுக்கும் சேர்த்து ஒருவர் தான் இருக்கிறார். ஆகவே, குறைந்தபட்சம் ஒரு ஒன்றியத்திற்கு ஒரு பாரா மெடிகல் ஒர்க்கர் நியமிக்க அரசு முன்வருமா? அடுத்து, கும்பகோணம் இந்து மிஷன் அந்தப் பணியைச் செய்து வருகிறது. அவர்கள் உள்ளிருப்பு நோயாளிகளுக்கான வசதி செய்ய கட்டிடம் கட்ட வேண்டும் என்று விண்ணப்பித்து இருக்கிறார்கள். அதற்கு பண உதவி செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, கும்பகோணம் இந்து மிஷன் பற்றி நான் ஏற்கனவே கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கின்ற நேரத்தில் சொல்லியிருக்கிறேன். அதைப் பரிட் சார்த்தமாக எடுத்துக்கொள்கிறோம் என்று அதை அவர்கள்

எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்வதில் முதலில் சிக்கல்கள் இருந்தன. இப்போது அது நீக்கப்பட்டு, அவர்களுக்குத் தொடர்ந்து உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. அவர்கள் கட்டிட வசதி இன்னும் சில வசதிகள் செய்வதற்கு உதவிகள் செய்ய வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். நிச்சயமாக அது ஆராயப்படும். பாரா மெடிகல் ஒர்க்கர்ஸ் இன்கிரிஸ் செய்வது குறித்து கருத்து சொல்லப்பட்டு இருக்கிறது. அது நல்ல கருத்து.

இன்னொரு கேள்வியையும் எழுப்பியிருக்கிறார்கள். டாக்டர்கள் இல்லாமல் பல இடங்களில் இடம் காலியாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஏற்கெனவே 104 இடங்கள் இருந்ததில் இப்போது 88 இடங்களில் மெடிக்கல் ஆபீசர்ஸ் இருக்கிறார்கள். ஆகவே, படிப்படியாக காலி இடங்களை நிரப்பிக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. பாலன்: தலைவரவர்களே, தொழுநோயாளிகளுக்கு பல இடங்களில் டாக்டர்கள் சிகிச்சை அளித்து வருகிறார்கள். இது அவர்களுடைய சமூகப் பணி, மனிதாபிமான பணி, கருணை உள்ளத்தோடு செய்கிற பணியாக இருக்கிறது. இதற்கு அநேகமாக டாக்டர்கள் வருவதில்லை. ஆகையால் இந்த சிகிச்சை செய்கிற டாக்டர்களுக்கு அலவன்ஸ் கொடுப்பதாகச் சொன்னார்கள். காந்தியடிகள் கூட தொழுநோயாளிகளுக்கு சிகிச்சை அளித்திருக்கிறார்கள் கருணை உள்ளத்தோடு. ஆகையால் இப்படிப்பட்ட டாக்டர்களுக்கு அவர்களை ஊக்குவிக்கும் வகையில் மகாத்மா காந்தி பிறந்த நாளில் தங்கப்பதக்கம் அல்லது ஏதாவது சிறப்புப் பரிசுகள் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, அந்த மாதிரி இல்லாமல் இபபோது முன்னைவிட நிலைமை மாறியிருக்கிறது. தொழுநோய் சிகிச்சையை டாக்டர்கள் ஆர்வமாகச் செய்கிறார்கள். அவர்கள் ஆர்வத்தை அதிகப்படுத்த மாவட்டந்தோறும் 'கரம்படிஷன்' வைத்திருக்கிறோம். அது மட்டுமல்ல, அண்மையில் செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரு கிராஷ் புரோகிராம் வைத்திருக்கிறோம்; பைலட் ஸ்கீம் அங்கே ஆரம்பத்திருக்கிறோம். ஆகவே, முன்பு இருந்த நிலைமை மாறி, டாக்டர்கள் ஆர்வமாக கவனம் செலுத்துகிறார்கள். உறுப்பினர் அவர்கள் கூறும் யோசனை அருமையான யோசனை.

THIRU T. VENKATA REDDY: Hon. Speaker Sir, Though many Leprosy Centres are available in the State, we find many lepers wandering in the Streets of Madras City. What steps the Government have taken to remove them from the streets and to place them in the Leprosy Centres?





Hon. Dr. H.V. HANDE: Hon. Speaker Sir only recently we had a meeting with the Leprosy patients in the City of Madras. They are a well organised sector. During the course of our discussion the main problem they posed before us was that the moment they are transfered to Hospitals no one takes care of them.

திரு. மு. அம்பிகாபதி: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். இது தமிழ்நாடா, அல்லது இந்தியாவின் வேறு ஏதாவது ஒரு மாநிலமா? இங்கே ஆங்கிலத்திலேயே பேசிக் கொண்டிருக்கிறார்கள், எங்களுக்குப் புரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு ஆங்கிலம் தெரியும். இதில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, கேள்வி ஆங்கிலத்தில் இருந்ததால் அவர்களுக்காக ஆங்கிலத்தில் பதில் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட 'பாயின்ட் ஆஃப் ஆர்டர்' என்று ஆங்கிலத்திலேதான் சொன்னார்கள் (சிரிப்பு). அவர்கள் ஒழுங்குப் பிரச்சினை என்று தமிழிலே சொல்லியிருக்க வேண்டும்.

நான் சொல்ல வந்ததெல்லாம், இப்படி இருக்கிற குழந்தைகளை என்ன செய்வது என்ற பிரச்சனை எழுந்தது 'ட்ரான்சிட் கேம்ப்' என்று ஏற்படுத்தி, இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களை, நாம வற்புறுத்தாமல் அவர்கள் விருப்பப்படியே அங்கே வரச்செய்து, சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். குழந்தைகளுக்கு கூட மாற்றுத் திட்டங்களை நாம் எடுத்துக் சொள்ள வேண்டும். அதையும் பரிசீலனை செய்கிறோம். இதிலே வெற்றி பெற்றால் சென்னை மாநகரில் தொழுநோய் பிரச்சனைக்கு தீர்வு பெற முடியும் என்று கருதுகிறேன்.

ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சிகளுக்கான கட்டணங்கள்

*வினா எண் 254— திரு. கு. ரமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெட்ரோல், டீசல் விலைகளை மத்திய அரசு உயர்த்தியுள்ளதால் ஆட்டோரிக்ஷா, டாக்சிகளுக்கு கட்டண உயர்வு கொடுக்க அரசு தீர்மானித்து உள்ளதா?

(ஆ) ஆம் எனில் கட்டண உயர்வின் அளவு என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) அண்மையில் ஏற்பட்ட பெட்ரோல் விலை உயர்வின் காரணமாக 9-12-81 நாளிட்ட உள்துறை அரசாணை எண். (பல்வகை) 2939-ல் ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளது.

(ஆ) ஆட்டோ ரிக்ஷாவின் ஒரு கிலோ மீட்டருக்கான கட்டணம் 0.80 காசிலிருந்து 0.90 காசாக உயர்த்தப்பட்டுள்ளது. டாக்சியில் ஒரு கிலோ மீட்டருக்கான கட்டணம் ரூ. 1.50-லிருந்து ரூ. 1.70 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. குறைந்தபட்ச கட்டணங்களில் மாறுதல் இல்லை.

(முற்பகல் 9.50)

திரு கு. ரமணி: தலைவரவர்களே, இந்தக் கட்டணங்களை எல்லாம் உயர்த்தி நிர்ணயிக்கின்றபோது அரசு அதற்கு என்ன முறை வைத்து நிர்ணயிக்கின்றது? அல்லது குத்துமதிப்பாக நிர்ணயிக்கப்படுகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: தலைவர் அவர்களே, அரசாங்கம் எதையுமே குத்துமதிப்பாக நிர்ணயிப்பது இல்லை. ஏறி இருக்கின்ற பெட்ரோல், டீசல் விலையைக் கணக்கெடுத்து அதன் மூலம் கூடுதலாக எவ்வளவு செலவாகும் என்பதைப் பார்த்து அதற்கேற்பதான் உயர்த்துகிறோம். இப்போது பெட்ரோல், டீசலின் விலை 53 காசு ஏறி இருக்கின்றது. 7 பைசா கூடுதலாக செலவாகக்கூடும் என்று கணக்கிட்டு 10 பைசா உயர்த்திக் கொடுத்திருக்கிறோம்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, நான் என்ன அளவு கோலை அரசாங்கம் வைத்திருக்கின்றது என்றுதான் கேட்டேன். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெட்ரோல், டீசல் விலையினைக் கூறினார்கள். ஆனால் அரசாங்கம் அதனை நிர்ணயிப்பதற்கு என்ன முறையினை வைத்திருக்கின்றது? இப்போது ஏறிய விலைகளுக்கும் கட்டண உயர்வுக்கும் அதிகமான வித்தியாசம் இருப்பதால் ஜனங்களிடத்திலே கடுமையான ஆட்சேபணை இருக்கின்றது. ஆகவே ஜனங்களுக்கும் நியாயம் கிடைக்கின்ற முறையிலே ஆட்டோ, டாக்சி போன்றவற்றை வைத்திருக்கின்றவர்களுக்கும் நியாயமான சம்பளம் கிடைக்கின்ற வகையிலே அந்த வாகனங்களின் ஓட்டத்தைப் பார்த்து அதன் விவரங்களை அறிந்து நிர்ணயிக்கின்ற வகையிலே அரசினிடத்திலே ஏதாவது முறை இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: தலைவரவர்களே, ஏற்கெனவே ஒரு கட்டணத்தை நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால் அதற்குப் பிறகு டீசல், பெட்ரோல் ஆகியவற்றின் விலை உயர்வைக் கணக்கிட்டு அந்தத் தொழிலாளர்களையும் அழைத்துப் பேசி நியாயமான முறையிலேதான் கட்டணம் நிர்ணயிக்கப்படுகின்றதே தவிர தன்னிச்சையாக நாம் எதையும் செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவரவர்களே, பஞ்சாப் மாநிலத்திலே பெட்ரோல், விலை உயர்வு காரணமாக பஞ்சாப் மாநிலத்தின் ஆளுநர் அமோலுநீன் அகமது அவர்களும், அந்த மாநிலத்தில் முதலமைச்சர் தர்பாரா சிங் அவர்களும் மற்றும் அதிகாரிகளும் கலந்து ஆலோசனை செய்து அதிகாரிகள் காரிலே செல்வதைத் தவிர்த்து குதிரையிலே செல்வதற்குத் திட்டமிட்டி



ருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே அதுபோன்று நம்முடைய அதிகாரிகளும் காரில் செல்வதைத் தவிர்க்க மாற்று திட்டங்கள் ஏதேனும் தமிழக அரசினிடத்திலே இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: தலைவரவர்களே, நாம் எல்லாம் அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும் என்று நினைக்கிறோம். நமக்கெல்லாம் குதிரையேற்றம் தெரியாது. ஆகவே குதிரையின் மீது போக முடியாது அதைக் கற்றதற்குப் பிறகு வேண்டுமானால் அதைப் பற்றி யோசிப்பாம்.

திரு. ந. குலசேகர பாண்டியன்: தலைவரவர்களே, தற்போது எல்லா இடங்களிலும் டாக்சிகள், ஆட்டோக்கள் போன்றவற்றிற்கு ஃப்ளாட் ரேட்டாக 5 ரூபாய் கொடுங்கள் 10 ரூபாய் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அப்படி ஓட்டுகின்றவர்களுக்கும் லைசன்ஸ் கிடையாது. ஆகவே அப்படிப்பட்டவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: தலைவரவர்களே, அடுத்த கேள்வி இது சம்பந்தமாகத்தான் வருகின்றது. அரசாங்கம் இப்போது கடுமையான நடவடிக்கை எடுத்து இப்போது அந்த நிலைமை கொஞ்சம் சரி செய்யப்பட்டு இருக்கின்றது. அடுத்த கேள்வி இது சம்பந்தமாக வருவதால் அதற்கு பதில் விளக்கமாகச் சொல்லப்படும்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு அரபு நாடுகளிலே இருந்துதான் இப்போது பெட்ரோலைப் பெற்றுக்கொண்டு வருகின்றது. ஏனென்றால் இந்தியாவிலே பெட்ரோலியம் கிடையாது. ஆகவே அரபு நாடுகளிலே அண்மையிலே பெட்ரோல் விலையை உயர்த்தி இருப்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: தலைவரவர்களே, இங்கே நாம் கட்டணத்தை உயர்த்தி இருக்கிறோம் என்றால் அதிலே இருந்தே தெரிகின்றது, அங்கே விலை உயர்ந்திருக்கின்றது என்று. ஆனால் அரபு நாடுகளிலே விலையினை உயர்த்தி இருப்பதையும் விட சற்று அதிகமாக நாம் உயர்த்தி இருக்கிறோம்.

Issue of meter certificates for Auto-Rickshaws and Taxis

*Q.No 255 —THIRU S.RAJARAMAN: Will the Hon. the Minister for Transport be pleased to state—

a) Whether licenced indivi uals have been allowed to issue meter certificates for Taxis and Auto-Rickshaws in Madras City; and

b) if so, the details there of?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) டாக்சிகளில் பொருத்தப்படும் மீட்டர்களில் உள்ள குறைபாடுகளை நீக்குவதற்காக மீட்டர் திருத்துபவர்களுக்கு (மெக்கானிக்) அதிகாரச் சீட்டுகள் வழங்கப்படும், அதிகாரச் சீட்டு பெற்றவர்களுக்கு தனிப்பட்ட மீட்டர் முத்திரை வழங்கப்படும். அவர் சரி செய்த மீட்டரின் மீது அவருக்கு வழங்கப்பட்ட தனிப்பட்ட முத்திரையை இட வேண்டும். பின்னர் அந்தப் பகுதி வட்டாரப் போக்குவரத்து அலுவலர் மீட்டரை ஆய்வு செய்து அவரின் முத்திரையும் மீட்டர்மீது இடப்படும். இதில் அதிகாரச் சீட்டு பெற்ற மெக்கானிக் ஏதேனும் தவறு செய்வாரேயானால் அவரின் அதிகாரச் சீட்டு இரத்து செய்யப்படும்.

2. சென்னை நகரில் இதுவரை 29 மீட்டர் மெக்கானிக்குகளுக்கு அதிகாரச் சீட்டு வழங்கப்பட்டுள்ளது.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, இன்றைக்கு இந்த பெட்ரோல், டீசல் விலை உயர்வு மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. இதனுடைய உண்மையான விலை 2 ரூபாய் தான். ஆனால் அதன்மீது மத்திய அரசு சுங்கவரி, சலால் வரி என்று போட்டு 4 ரூபாய் உயர்த்தி இருக்கிறார்கள். ஆகவே இப்போது 6 ரூபாய்க்கு விற்கவேண்டிய நிலைமை இருக்கின்றது. அதைக் குறைக்க வேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசுக்கு வற்புறுத்தி இருக்கின்றதா? அல்லது இனிமேலாவது வற்புறுத்துமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: தலைவரவர்களே, ஏற்கெனவே இதைப்பற்றி இதே மன்றத்திலே ஒரு கேள்வி கேட்கப்பட்டது. ஆகவே அந்த அடிப்படையிலே மத்திய அரசுக்கு நாம் எழுதி இருக்கிறோம் என்பதை நினைவுப்படுத்த கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அப்படி எழுதி விடுவதன் மூலமாக எந்தப் பயனும் கிடைக்கவில்லை, கிடைக்கும் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு இல்லை.

திரு. உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்சிகளிலேயும், ஆட்டோ ரிக்ஷாக்களிலேயும், மீட்டர் திருத்தப்பட்டது என்று எழுதியிருந்தாலும் கூட, மேற்கொண்டு மீட்டருக்கு 20 பைசா என்று வசூலிக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அந்த நடவடிக்கையை தடுக்க என்ன முயற்சியை அரசு எடுக்கவிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட தவறுகள் செய்கிறார்கள் என்பது அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறபோதுதான் தெரிகிறது. அவ்வப்போது நாங்கள் அதன்மேல் நடவடிக்கை எடுக்கிறோம்; எனவே பரவலாக இப்படி நடைபெறுவது ஓரளவு குறைக்கப்பட்டிருக்கிறது. எப்படி என்றால், தனியாக இதற்கென்று 12 ஆய்வாளர்களை போட்டு இதை கண்காணித்து வருகிறோம். இப்படிப்



பட்ட நடவடிக்கைகளை தடுப்பதற்காக எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளின் அடிப்படையில் கிட்டத்தட்ட 50 ஆயிரம் ரூபாய் அளவில் அபராதமாக வசூலிக்கப்பட்டிருக்கிறது. எனவே இதை தடுக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கெ. சேக்கலிங்கம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், ஆட்டோ ரிக்ஷாக்களை நாம் கூப்பிடுகிறபோது, அவர்கள் ஒரு கிலோமீட்டர், 2 கிலோ மீட்டர் தூரத்திற்குள் இருந்தால் வர மறுக்கிறார்கள், 3 ரூ. 5 ரூ. கொடு என்று கேட்கிறார்கள் என்று சொன்னால், அதை உடனடியாக அமைச்சருக்குத் தெரிவிக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அதை எப்படி தெரிவிக்க முடியும்? அத்தோடு, அப்படி ஏதாவது செய்தால், அவர்கள் எல்லோரும் ஒன்றாக சேர்ந்து விடுகிறார்கள். அது மட்டுமல்ல இரவு நேரங்களில் 10 மணிக்கு மேல் பயணம் செய்ய நேரிட்டால் மேலும் 1 ரூபாய் கொடுப்பது என்பது பற்றிக் கூறினார்கள். ஆனால் 8 மணிக்கே அவர்களை அழைத்தாலும் அதிகமாகக் கேட்கக்கூடிய நிலைமை இருக்கிறதே, அதை அமைச்சர் அவர்கள் அறிவாரா? அதற்கு ஏதாவது ஆவன செய்ய முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இப்படிப்பட்ட குறைகள் ஏற்படுகிறபோது நேரிடையாக எனக்குத்தான் சொல்ல வேண்டும் என்ற சூழ்நிலை இருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. அங்கே இருக்கும் போக்குவரத்துத் துறை அதிகாரிகளுக்கோ அல்லது காவல் துறை அதிகாரிகளுக்கோச் சொல்லலாம். ஆட்டோ ரிக்ஷாக்காரர்கள் ஒன்றாக சேர்ந்து விடுகிறார்கள் என்று சொன்னார். அதற்கு நமக்கு பங்கு இருக்கிறது. இங்கே இருக்கிற அத்தனை அரசியல் கட்சிகளுக்கும் அங்கே யூனியன்கள் உண்டு. அந்தந்த கட்சிக்காரர்கள் தங்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்களை கட்டுப்படுத்தி வைக்கக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்குமேயானால், அரசாங்கத்தின் பணி எளிதாக இருக்கும்.

### வேதாரண்யத்தில் நகரப் பேருந்து விடும் திட்டம்.

*வினா எண் 256—திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் நகரில் நகரப் பேருந்து விடும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) அது எப்பொழுது நிறைவேற்றப்படும்?

[1982 பிப்ரவரி 18

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) மற்றும் (ஆ) வேதாரண்யத்தில் நகரப் பேருந்து 21—10—81 முதல் விடப்பட்டுள்ளது.

திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரப் பேருந்துகளை அந்தப் பகுதியிலே விட்டதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே விடப்பட்டிருக்கிற பேருந்துகள் 10 கிலோ மீட்டருக்குள்ளாக தான் சென்று வருகின்றன. ஆகவே அரசு அனுமதத்திருக்கிற 30 கிலோமீட்டருக்கு அவைகளை விடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, தேவையானால், அரசு ஏற்பாடு செய்யும்.

மினி பஸ்களுக்கு வரிச்சலுகை அளிக்கும் திட்டம்.

*வினா எண் 257—திரு. செ. செம்மலை: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மினி பஸ்களுக்கு (Mini Buses) வரிச்சலுகை அளிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அந்தச் சலுகை எப்போது முதல் நடைமுறைப்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) மற்றும் (ஆ): சிறு உந்துகளுக்கு ஏற்கனவே வரிச்சலுகை அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற மினி பஸ்களை இயக்குவதற்கு, உரிமம் கேட்டு தனியார்களிடம் இருந்து ஏதாவது கோரிக்கை வந்திருக்கிறதா? அப்படி வந்தால் அவர்களுக்கு உரிமம் வழங்கப்பட அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, 69 மினி பஸ்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அதிலே அரசாங்கத்திற்குச் சொந்தமானவை 49, மீதி 20 வண்டிகள் தனியார்களுக்குச் சொந்தமானவைதாம். தேவையான நேரத்தில் பேருந்துகள் விடவேண்டும் இந்த இடத்தில் என்று சொல்லி அரசு முயற்சி எடுக்கிறபோதுதான் தனியார்கள் அதற்கான மனுக்களைக் கொடுக்க முடியும். அவர்களாகவே கொடுக்க முடியாது.

திரு. செ. செம்மலை: பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான கிராமப்பகுதிகளை இணைப்பதுதான் இந்த மினி பஸ்களை விடுகின்ற நோக்கம். ஆனால் பேருந்துகளுக்கு உரிய கட்டணம் தான் இந்த மினி பஸ்களுக்கும் வசூலிக்கப்படுகிறது. ஆகவே, அந்தக் கட்டண அளவை நகரப்பேருந்துகளுக்கு வசூலிக்கப்படுவதுபோன்று குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?



1982 பிப்ரவரி 18]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மிகவும் பின் தங்கிய உள்ளடங்கியிருக்கும் கிராமங்களுக்கும் பேருந்துகள் வசதி வேண்டும் என்றுதான், இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அத்தகைய இடங்களில் 100-லிருந்து 50 வீடுகள் தான் இருக்கின்றன. அதிலே பயணம் வரக்கூடியவர்கள் மிகவும் குறைவாக இருப்பார்கள். ஏற்கெனவே இந்த மினி பஸ்களுக்கு வரிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது கட்டணத்தையும் குறைத்தால், அதை நடைமுறைப்படுத்துவதே வெற்றி பெறாமல் போய்விடக்கூடும்.

திருவில்லிபுத்தூர் தொகுதியில் பனை பொருள் தொழிற்கூட மையம் ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண். 258—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதியில் பனைபொருள் தொழில்கூட மையம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு மதிப்பீட்டில் ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவில்லிபுத்தூர் தொகுதியில் பனைபொருள் தொழில்கூட மையம் ஆரம்பிக்கும் உத்தேசம் இல்லை. அவசியம் ஏற்பட்டால், ஆராய்ந்து அதற்கான ஒரு முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள் விடைகளின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(முற்பகல் 10.00.)

திரு. இரா. தாமரைக்கனி: திருவில்லிபுத்தூர் தொகுதியில் பனைமரங்கள் அதிக அளவில் இருப்பதால் அங்கே பனை கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: அதற்கான வாய்ப்புக் கூறுகள் இருக்குமானால் அதை ஆய்ந்து முடிவெடுக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி: வேலையில்லாமல் சும்மா இருப்பவர்களைப் பார்த்து பனைமரம் போல் வளர்ந்திருக்கிறாயே, ஒன்றுக்கும் பிரயோஜனம் இல்லை நீ என்று சொல்கிறார்கள். (குறுக்கீடு) திருவில்லிபுத்தூரில் ஆரம்பிக்கும் அந்தக் கூடத்தில் என்னென்ன பொருள்கள் தயாரிக்க இருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: ஒன்றுக்கும் உதவாது இருப்பவர்களைப் பார்த்து பனைமரம் போல் வளர்ந்திருக்கிறாயே என்று சொல்வதாகச் சொன்னார்கள்.

[1982 பிப்ரவரி 18

உலகத்தில் இருக்கிற மரங்களிலேயே அதிகபட்ச பலன் கொடுக்கக் கூடிய மரம் பனைமரமே. 35 பலன்களைக் கொடுக்கக்கூடிய ஒரு மரம் உலகத்திலேயே வேறு எந்த மரமும் கிடையாது பனை மரத்தைப் போல். ஆகவேதான் பனைமரத்தை கற்பக விருக்ஷம் என்று சொல்கிறார்கள். மையக்கூடத்தில் தயாரிக்கக்கூடிய பொருள்கள்; நுங்கு பதப்படுத்துதல், கற்கண்டு உற்பத்தி செய்தல, தும்பு உற்பத்தி செய்தல், நாற்பொருட்கள் உற்பத்தி செய்தல், ஓலைப்பொருள்கள் உற்பத்தி செய்தல், பிரஷ் உற்பத்தி செய்தல் விளக்குமாறு உற்பத்தி செய்தல், பனைசீனி. சர்க்கரை ஆலை நிறுவனம், பின்னர் பாம் கோலா, பாம்டா உற்பத்தி செய்தல். இவற்றைத் தயாரிக்கும் தொழிற் மையக் கூடங்கள் 24 இலட்சம் ரூபாய் செலவில் ஒவ்வொரு மாவட்டத் திலும் இப்படிப்பட்ட தொழிற்மையக் கூடங்கள் ஆரம்பிப்பதாக யிருக்கிறது.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: பனையேறுகிற தொழில் இப்போது குறைந்து வருகிறது. எனவே பனையேறுவதைச் சுலபமாக ஆக்குவதற்கு லிப்ட் போன்ற நவீன சாதனங் களை ஏற்படுத்தினால் அதிகமான அளவில் பனையேறி பனை பொருட்களை அதிகமாக உற்பத்தி செய்து பயன்பெற முடியும். அப்படிப்பட்ட திட்டம் ஏதாவது அரசிடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: பனையேறுவதை சுலபமாக ஆக்க ஏணிகளைப் பயன்படுத்த அதை அறிமுகம் செய்துகொண்டு வருகிறார்கள். தொழில் மையக்கூடங்கள் மாவட்டந்தோறும் உருவாகிக்கொண்டு வருவதால் உறுப்பினர் அவர்கள் அந்தத் தொழிற்கூடங்களைச் சென்று பார்த்தால் என்னென்ன புதுமையான வகைகளில் பனைமரங்களைப் பயன் படுத்துகிறார்கள் என்பதை அறிய வாய்ப்பிருக்கிறது. மேலும் பனையேறுவதற்கு அதிகம் பேர்கள் முன்னுக்கு வராத காரணத் தால், பனைமரங்கள் 35 அடி, 40 அடி என்று வளர்ந்திருப்பதால் அந்தப் பனைமரங்களை 10 அடியில் வளரக்கூடிய பனைமரங் களாக வளர்ப்போமேயானால் சுலபமாக இருக்கும் என்பதற்காக திருவில்லிபுத்தூரில் இதற்கான ஆராய்ச்சி நடைபெற்றுக்கொண்டி ருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை ராமசாமி: தமிழகத்தில் மூலனூர் ஒன்றியம் வறட்சி யானதொரு ஒன்றியமாகும். அங்கே மிக அதிகப்படியான அளவில் பனைமரங்கள் இருக்கின்றன. அங்கே பனையேறும் தொழில் சிறப்பாக இருப்பதால் பெரியார் மாவட்டத்திலுள்ள மூலனூரில் ஒரு காம்ப்ளக்ஸ் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாவட்டத்திற்கு ஒரு தொழிற்கூட மையம் என்று பனைவெல்ல கூட்டுறவு சம்மேளனம் முடிவெடுத்திருப்பதால் பெரியார் மாவட்டத்தில் எந்தயிடத்தில் அந்தக் கூடத்தை அமைப்பது என்பதுபற்றி ஆய்த்து முடிவு எடுக்கும்.



1982 பிப்ரவரி 18]

திரு. டி. மணி: இந்த பனைபொருள் தொழில் மையம் ஒவ் வொரு மாவட்டத்திலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரி வித்தார்கள். இதிலே கன்னியாகுமரி மாவட்டத்தில் எந்த இடத்தில் அந்த மையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. என்னென்ன பணிகள் அங்கே நடைபெற்று வருகின்றன என்பதை அறிவிப் பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரம்பிப்பதற்குப் பதிலாக நெல்லை மாவட்டத் திற்கும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் நடுமையாக உள்ள காவல்கிணறு என்றஇடத்தில் இந்தத் தொழில்மையக்கூடத்தினை ஆரம்பிப்போமானால் ஆறு மாத பலன் நெல்லை மாவட்டத் திற்கும் ஆறு மாத கால பலன் கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் என்று இணைக்கக்கூடிய வகையில் அந்த மையத்தில் 12 மாதங் களுக்கும் தொழில் இருக்கக்கூடிய அளவில் அது செயல்பட்டு வரும். அந்தத் தொழிற்கூடத்தில் என்னென்ன தயாரிப்புகள் செய்கிறார்கள் என்பதை ஏற்கனவே நான் அறிவித்திருக்கிறேன். அந்தத் தொழில் மையக்கூடத்திலே நுங்கு பதப்படுத்தப்படும். கற்கண்டு உற்பத்தி செய்யப்படும். தும்பு உற்பத்தி செய்யப்படும் நாற்பொருள் உற்பத்தி செய்யப்படும், ஓலை உற்பத்தி செய்யப் படும், பிரஷ் செய்யப்படும். பனங் கிழங்குகளைப் பயன்படுத்தி, அதை ரவை மாவாக மாற்றி, உணவுப் பண்டங்களுக்கு பயன் படுத்துவதற்கும் மற்றவற்றிற்கு பயன்படுத்துவதற்கும் இந்த கிழங்கு மாவு உற்பத்தி நிலையம் இருக்கும். இந்த கிழங்கு மாவை அரைத்து உப்பு மாவும், மற்றப் பொருள் களும் தயாரிக்கப்படும். இதைத் தவிர, பனஞ் சீனி, சர்க்கரை உற்பத்தி செய்யப்படும். பாம் கோலா, பாம்டா போன்ற கலர் பானமும் இந்தத் தொழிற் கூடத்திலே தயாரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாலசேவிகாக்களை அரசு ஊழியர்களாக்கும் திட்டம்.

*வினா எண் 259—திரு. ஆர். மணிமாறன் : திரு. செ. செம்மலை: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள பாலசேவிகாக்களை அரசு ஊழியர்களாக ஆக்கும் திட்டம் அரசுக்கு இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில் அது எப்போது அமுல்படுத்தப்படும்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சமூகநலத் துறையிலுள்ள 4444 குழந்தைகள் நல அமைப்பாளர்களில் 79 பேர் முழு நேர அரசு ஊழியர்கள் ஆவர். மீதமுள்ள 4365 பேர்கள் பணி அமைப்பு விதிகளுக்கு உட்படாத பகுதிநேர அரசு ஊழியர்கள். இவர் களையும் முழுநேர ஊழியர்களாக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஆர். மணிமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் பெற்று வரும் மாத ஊதியம் எவ்வளவு? ஆண்டாண்டுக்கு அவர்களுடைய ஊதிய உயர்வு அதிகரித்துக் கொடுக்கப்பட்டு வருகிறதா? அரசு ஊழியர்களாக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கை நீண்ட நெடுநாட்களாக அரசின் பார்வையிலே வைக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி அரசு மீண்டும் பரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால சேவிகாக்கள் மாதம் 175 ரூபாய் பெற்று வருகிறார்கள். இதுவரை ரூ. 60, ரூ. 115, ரூ 165 என்று பெற்று வந்த அவர்கள், இப்போது ஒட்டு மொத்தமாக ரூ. 175 பெற்று வருகிறார்கள். இவர்களை அரசு ஊழியர்களாக்கும் பிரச்னை இப்போது பரிசிலனையில் இல்லை. வருங்காலத்தில் கிராமங்களிலுள்ள குழந்தைகள் காப்பகங்களை நர்சரி பள்ளிகளாக்குவது பற்றி அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அப்படி அவைகள் நர்சரி பள்ளிகளாக்கும்போது, அவர்களை அரசு ஊழியர்களாக்கும் திட்டம் அமுலாக்கப்படும் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாலசேவிகாக்களுக்கு தற்போது மருத்துவ விடுப்பு இல்லை என்று சொல்லுகிறார்கள். எனவே, இந்த விடுப்பை அவர்களுக்கு ஏற்படுத்தித் தருகின்ற வகையில், சம்பளத்தோடு கூடிய மருத்துவ விடுப்பு தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ விடுப்பு சம்பந்தப்பட்ட செயற்குறிப்புகள் எல்லாம் ஒரு நபர் கமிஷனுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஒரு நபர் குழு அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு. சோ. கலிதீர்த்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாலசேவிகாக்கள் என்னுடைய பகுதியிலே உள்ள கல்ராயன் மலைப்பகுதியில் பணியாற்றுகிறார்கள். இவர்களுக்கு அதிகப்படியான படியினை உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதியிலே பணிபுரிகின்றவர்களுக்கு ஒட்டு மொத்தமாக சில சலுகைகள் வழங்கப்படுகிறது. குழந்தைகள் நல அமைப்பாளர்கள், குழந்தைகள் நல உதவியாளர்களுக்கு ரூ. 25 சிறப்புப்படி அளிக்க அரசு ஆணையிட்டுள்ளது.





(முற்பகல் 10.10)

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற பால சேவிகாக்களுக்கு 175 ரூபாய் சம்பளம் வழங்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் எல்லா கிராமங்களிலும் குழந்தைகள் காப்பகங்கள் ஏற்படுத்தவேண்டுமென்ற திட்டம் ஏற்படுத்தப்பட்டு பின்னாலே அது கைவிடப்பட்டது. மொத்தம் ஒன்றியத்திலே குழந்தைகள் காப்பகங்களிலே உள்ள ஒவ்வொரு பால சேவிகாவுக்கும் பஞ்சாயத்து நிதியிலிருந்து 100 ரூபாய் தான் கொடுக்கப்படுகிறது. தற்போது அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கமுடியாத நிலையில் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே எல்லா குழந்தைகள் காப்பகங்களை அரசே எடுத்துக் கொண்டு அரசின் மூலமாக சம்பளம் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, சமூக நல வாரியத்தின் மூலமாக குழந்தைகள் காப்பகங்கள் செயல்படுகின்றன, சமூக நலத்துறையின் மூலமாகவும் குழந்தை காப்பகங்கள் செயல்படுகின்றன. சமூக நல வாரியத்தின் வாயிலாக உள்ளவைகளில் அவர்களுக்கு ஊதியம் வேறுபாடாக வழங்கப்படுகிறது. ஆனால் சமூக நலத் துறை மூலமாக செயல்படுகின்ற எல்லா குழந்தைகள் காப்பகங்களிலும் 175 ரூபாய் சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. இராசம்பாள் : பேரவைத் தலைவர் அவர்களே பால சேவிகாக்களுக்கும் அங்கே பணிபுரியும் ஆயாக்களுக்கும் சம்பளத்தை உயர்த்திக் கொடுத்தமைக்காக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு தற்போது வழங்கப்படும் 175 ரூபாய் அமைச்சர் அவர்கள் கூறும்போது பகுதி நேர ஊழியர்களாக அவர்கள் பணிபுரிகிறார்கள் என்று சொன்னார்கள், அவர்கள் ஆரம்பப் பள்ளிகளில் பணிபுரிகின்றவர்களை விட அதிகமான வேலைநாட்கள் அதிகமான வேலைநேரம் பணி செய்கிறார்கள். ஞாயிற்றுக் கிழமை தவிர வேறு விடுமுறை கிடையாது. அவர்களுக்கு கோடை விடுமுறை கிடையாது. வருடம் முழுவதும் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். பள்ளிகளிலே பணிபுரிகின்றவர்களுக்கு கொடுப்பதைப் போல் [illegible]00 ரூபாய் சம்பளம் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்த இடைநிலை ஆசிரியர்களுக்கு உள்ள தகுதியைப் போல் பெற்றிருக்கின்ற அவர்களுக்கு இடைநிலை ஆசிரியர்களைப் போன்ற சம்பளம் கொடுப்பதற்கு அரசு சிபாரிசு செய்வதோடு அவர்களுக்கு மருத்துவ விடுப்பு, மகப்பேறு விடுப்பு, சிறு விடுப்பு கூட கிடையாது. அவர்கள் வருடம் முழுவதும் பணிபுரிகின்ற நிலைமையைமாற்றி விடுப்பாவது கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : ஏற்கனவே நான் கூறியபோது சொல்லியிருக்கிறேன். பிற்காலத்திலே குழந்தைகள் காப்பகங்கள் நர்சரி பள்ளிகளாக மாறும், அப்போது அவர்கள்

இடைநிலை ஆசிரியர்கள் அளவுக்கு சம்பளத்தைப் பெறுவார்கள். விடுப்பைப் பொறுத்தவரையில் சிறு விடுப்பு அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. யாருக்கு விடுப்பு கொடுக்கப்படவில்லை என்று தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கலாம். மருத்துவ விடுப்பு போன்றவற்றைப்பற்றியெல்லாம் நாங்கள் பரிசீலனை செய்கிறோம்.

குறிஞ்சிபாடி மற்றும் நெய்வேலியில் தாயகம் திரும்பிய தமிழர்களுக்காக கட்டப்பட்ட வீடுகள்.

*வினா எண் 260—திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் குறிஞ்சிப்பாடியில் நெய்வேலியில் தாயகம் திரும்பிய தமிழர்களுக்கு 600 வீடுகள் கட்டி கொடுத்தும் இன்னும் அவர்கள் குடியேறவில்லை என்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் காரணம் என்ன ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம்.

(ஆ) தற்போது அந்த வேலைகள் முடிவுற்று, 530 வீடுகளில் குடிபுகுந்து விட்டனர். மீதி 70 வீடுகளில், சம்பந்தப்பட்டவர்கள் வேலைக்குச் சென்று வீடு திரும்ப வசதியில்லாததால், குடியேறவில்லை. இவற்றை இதர தகுதி வாய்ந்த அகதிகளுக்கு ஒதுக்கீடு செய்ய மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை மேற்கொள்கிறார்.

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது 530 வீடுகளில் குடியேறி இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கே கட்டப்பட்ட வீடுகள் நல்ல நிலையில் இல்லாது பழுது பட்டு இருப்பதால் குடியேறவில்லை என்று சொல்கிறார்கள், ஆகவே அவைகளை ரிப்பேர் செய்து அவர்கள் குடியேறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, நான் பதில் கூறும்போது எல்லா வேலைகளும் முடிக்கப்பெற்று 530 வீடுகளில் குடிபுகுந்து விட்டனர் என்றும் பாக்கி 70 வீடுகளில் குடியேற சம்பந்தப்பட்டவர்கள் 16 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பண்ணையில் வேலை செய்கிற காரணத்தினால் அங்கே இருந்து வருவதற்கு வசதியில்லை என்ற காரணத்தினால் போகாமல் இருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மற்றத்தகுதி வாய்ந்த இலங்கை அகதிகளுக்கு ஒதுக்கீடு செய்வதற்கு மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. தங்கராசு : தலைவர் அவர்களே, அந்தக் குறிப்பிட்ட பகுதியில் குடிநீர் வசதியில்லை, மின்சார வசதியில்லை என்று சொல்லப்படுகிறது. இந்த வசதிகள் அவர்கள் குடியேறும்போது செய்யத் தவறிவிட்டது என்ற நிலையில் வருகிற காலத்திலாவது



இப்படிப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து அவர்கள் குடியேறுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தர அரசு முன் வருமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, குடிநீர் வசதி கொடுக்காத காரணத்தால் அவர்களெல்லாம் குடிபுகாமல் மறுத்துவிட்டார்கள். குடிநீர் வசதிகள் அமைக்கப்பட்டு இப்பொழுது அவர்கள் குடியேறி விட்டார்கள். தெருவிளக்கு சம்பந்தப்பட்டதைப் பொறுத்த வரையில், தெரு விளக்குகள் அமைக்க தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, அவர்களுக்குக் கட்டிக் கொடுக்கும் வீடுகளுக்குக் குடிவராத சூழ்நிலை இலங்கைத் தமிழர்களுக்கு உண்டு. அது அங்கு மட்டுமல்ல, குறிப்பாக நீலகிரி மாவட்டத்திலே அவர்கள் வாழ வழியின்றி அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைப் போக்குவதற்கு அரசு புதிய திட்டங்கள் ஏதாவது வைத்திருக்கிறதா ? அப்படியிருந்தால் அதை விளக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மூலக்கேள்வி தென்னார்க்காடு மாவட்டம் குறிஞ்சிப்பாடி, நெய்வேலி பற்றியது. ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் நீலகிரி மாவட்டத்தைப்பற்றிக் கேட்கிறார்கள். அதைப் பற்றித் தனிக் கேள்வி போட்டால் தகவல் கொடுக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### (அ) ஆளுநரிடமிருந்து வரப்பெற்ற செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து 16–2–1982 ஆம் தேதியிட்ட கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"I have recevied with satisfaction your Resolution thanking me for Address on the 1st February 1982 to the Members of the legislature"

## 3. தகவல் கோரல்.

**(அ) பால் கமிஷன் அறிக்கை மீது நடைபெற்ற விவாதம்—தொடர்பாக**

திரு. அ. ரகுமான்கான் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார் மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவரவர்களே, நேற்று நாவலர் அவர்கள்கூடக் குறிப்பிட்டார்கள். ஏற்கனவே 30 ஆம் தேதி பால் கமிஷன் அறிக்கையின்மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்; காலையிலேயும் கொடுத்திருக்கிறேன். அதை இன்றைக்கு நீங்கள் நிச்சயமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூன்று நாட்கள் பால் கமிஷன் அறிக்கைபற்றி எவ்வளவோ பேசி ஆகிவிட்டது. நம்முடைய பேரவை விதி 64 இல் சொல்லியிருப்பதைக் கூறுகிறேன்.

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு குறிப்பிட்ட நிகழ்வினை விவாதிக்கும் பொருட்டு, பேரவையின் அலுவல்களை ஒத்தி வைக்கக் கோரும் தீர்மானம் பின்வரும் வரையறைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். அவையாவன :

(i) ஒரு நாள் கூட்டத்தில், 61 வது விதியின் கீழ் ஒன்றுக்கு மேற்பட்ட தீர்மானம் விவாதிக்கப் பெறலாகாது.

(ii) ஒரு தீர்மானத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்வுகளை விவாதிக்கக் கூடாது.

(iii) அண்மையில் நடந்த ஒரு குறிப்பிட்ட நிகழ்வினை (recent occurence) பற்றியதாக மட்டுமே தீர்மானம் இருக்க வேண்டும்.

(iv) அதே கூட்டத் தொடரில் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தின் வாயிலாகவோ அல்லது வேறு வகையிலோ பேரவையில் விவாதிக்கப் பெற்ற ஒரு பொருள் பற்றி மீண்டும் விவாதம் எழுப்புவதாகத் தீர்மானம் இருத்தலாகாது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, உங்களுடைய தீர்ப்பை நான் சொல்லுவதற்கு முன் செய்யவில்லை. ஆனால் நேற்றைய தினம் சப்மிஷன் செய்து இந்தத் திருச்செந்தூர் கொலைக் காரர்களைக் கைது செய்வது சம்பந்தமாக ஏதாவது இன்ஃபர்மேஷன் இருக்கிறதா என்று கேட்டால் அதைக்கூட அரசாங்கம் சொல்ல முடியாதா? அரசாங்கத்தைத் தாங்கள் கேளுங்கள், இருந்தால் சொல்லட்டும், இல்லாவிட்டால் இல்லை என்று சொல்லட்டுமே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றி மூன்று நாட்கள் இங்கே விவாதித்திருக்கிறோம்.

*திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவரவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானங்களைத் தாங்கள் எடுத்துக் கொள்ளாததை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் இன்றையதினம் இந்தப் பிரச்னை, ஏறத்தாழ 25,000 பேர்களிலிருந்து 30,000 பேர்கள்



தென் மாவட்டங்களில் ஊர்வலமாகச் செல்லக்கூடிய—எதிர்க் கட்சித் தலைவரின் தலைமையில் செல்லக் கூடிய நிலைமை ஏற்பட்டு நான்காவது நாளாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தச் சூழ்நிலைகள் காரணமாக ஏற்கனவே இந்த மன்றத்தில் விவாதிக்கப்பட்டாலும்கூட ஒரு தகுந்த முடிவு நடைமுறைக்கு வந்ததாகத் தெரியுமானால் இந்தப் பெரும் ஊர்வலம் ஒன்று நடைபெற வேண்டியது தொடர்வது ஒருவேளைத் தவிர்க்கப் படக்கூடும்.

அரசாங்கத்திற்கு நல்ல எண்ணம் இருப்பதாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் இப்படிப்பட்ட துன்பத்தை ஏற்றுக்கொள்வதை நான் விரும்பவில்லை என்று ஒரு கருத்தையும் தெரிவித்து அவருக்குக் கட்டளை இடுவதற்கு நான் யார் என்று வேறொரு இடத்திலே கேட்டிருக்கிறார்கள். எனவே அவர்கள் கட்டளையிடாவிட்டாலும், பால் கமிஷன் அறிக்கையின்மீது அரசு எடுக்கவேண்டிய நடவடிக்கையை இந்த அளவுக்கு எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவிக்கக்கூடிய வாய்ப்பு அரசுக்கு இருக்குமானால் ஒருவேளை முதலமைச்சருடைய நல்ல எண்ணம் அந்த வடிவத்தின் மூலமாக வெளிப்படுமானால் இந்தத் துன்பத்தை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலை எதிர்க்கட்சித் தலைவருக்கு ஏற்படாது அல்லவா என்ற காரணத்தினால்தான் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு ஒருவேளை சட்டமன்ற நடைமுறையிலே, விதிமுறைகளின் மூலமாகக் கொண்டு வர முடியாவிட்டாலும்கூட, எதிர்கட்சித் தலைவர் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்ற காரணத்தினால், தங்கள் மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வர நான் விரும்புகிறேன்.

(முற்பகல் 10.20)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் கமிஷன் பற்றி விவாதம் 2 நாட்கள் என்று எடுக்கப்பட்டு, மூன்று நாட்கள் நடைபெற்ற சூழ்நிலையை தாங்கள் எடுத்துச் சொன்னீர்கள். அரசு எடுத்து இருக்கிற நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை இந்த அவையின் மீது வைக்கப்பட்டிருக்கிறது. அதன்மீது கருத்துக்களும் வழங்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புவார்களானால் அது முறைப்படி கேட்கப்பெறவேண்டுமே தவிர, திடீரென்று எழுந்து கேட்டால் பதில் வராது. ஒரு குறுகிய கால கேள்வி அல்லது வேறு ஏதாவது வகையில் எடுத்துக் கேட்டால், என்ன நிலைமை என்று எடுத்துச் சொல்லலாம். திடீரென்று எழுந்து கேட்டால், அன்றைக்கு இருந்த நிலையோடு இருக்கிறது.

## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்

### தெங்கணிக் கோட்டையில் நடந்த ஊர்வலத்தில் போலீஸ் தடியடி

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் சோ. அழகர்சாமி, எம். ஆறுமுகம், மு. அம்பிகாபதி, ப. நெடுமாறன், கி. சட்டநாத கரையாளர், ரா. உமாநாத், என். வரதராஜன் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், செ. சிவசாமி, எஸ். ஆண்டித் தேவர் ஆகியோர், ''தருமபுரி மாவட்டம், ஒசூர் அருகாமையிலுள்ள தெங்கணிக் கோட்டை நகரத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 14-2-1982 ஆம் தேதி மாலை நடத்திய ஊர்வலத்தில் போலீசார் தடியடி பிரயோகம் செய்ததால் ஒருவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டும், மேலும் சுமார் 10 பேருக்கு மேல் தடியால் தாக்கப் பட்டதால் சிகிச்சை பெற்று வருவதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன். திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14-2-1982 ஆம் தேதி எங்களுடைய கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினரும், தலைவருமான தோழர் அழகர்சாமி அவர்களும் நானும் ஒசூருக்கு அருகாமையில் உள்ள தெங்கணிக் கோட்டா என்ற கிராமத்தில் எங்கள் கட்சி ஏற்பாடு செய்து இருக்கக்கூடிய பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளவேண்டும் என்பதற்காக ஒசூர் அருகாமையில் இருக்கக்கூடிய அண்டலை மரத்தொட்டி, கலவரப்பள்ளி, நெல்லுமாரா, அம்பலப்பள்ளிப் பட்டி ஆகிய இடங்களுக்குச் சென்றுவிட்டு நாங்கள் தேங்கணிக் கோட்டைக்கு மாலை 6 மணிக்குச் செல்லுகின்ற நேரத்தில், காரை நிறுத்திக்கொண்டிருக்கின்ற நேரத்தில், காரை விட்டு இறங்கக்கூட இல்லை, அங்கே எங்கள் கட்சியினுடைய ஊர்வலம் சென்று கொண்டிருக்கின்ற நேரத்தில், காக்கிச் சட்டை அணிந்திருந்த போலீஸ்காரர்களும், 3 சப்-இன்ஸ்பெக்டர்களும், ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டரும், சிகப்புச் சட்டைப் போட்டிருக் கின்ற பயல்களை எல்லாம் அடித்து உதைத்து வெளியே துரத்துங்கள் என்று சொல்லி தடியால் தாக்கி, அங்கே இருக்கக் கூடிய தோழர்களை எல்லாம் படுகாயப்படுத்தி இருக்கிறார்கள். சிவப்பு சட்டை போட்ட எவனும் ரோட்டிலே நடமாடக் கூடாது என்று சொல்லிக் கடுமையாகத் தாக்கினார்கள்.

எங்கள் கார் நின்று கொண்டு இருக்கின்றது. ஊர்வலம் போய்க்கொண்டிருக்கிறது. அந்த இடத்திலே இப்படிப்பட்ட ஒரு தாக்குதலை போலீஸ் அதிகாரிகள் அத்துமீறிய நடவடிக் கையிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லி, காரை விட்டு இறங்கி எதற்காக இப்படி ஆடுமாடுகளை





அடிப்பதைப் போல நீங்கள் அடித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்கின்ற நேரத்தில், கம்யூனிஸ்ட்காரர்களை ஒழித்துக் கட்டுவதுதான் எங்களுடைய வேலை என்று சொல்லி. எங்களுக்கு முன்னாலேயே, எங்கள் கண்முன்னாலேயே போலீஸ்காரர்கள் கடுமையாக அடித்து நொறுக்கினார்கள். லக்குமையா என்ற எங்கள் கட்சியினுடைய செயலாளர், இளைஞர் மன்றப் பொறுப்பாளர், விவசாயத் தோழர்கள் சங்கத்திலே அங்கம் பெறக்கூடியவர்கள், பி.ஏ. படித்த பட்டதாரியினுடைய மண்டையை பிளந்து, அவர் இப்போது பெங்களூர் மருத்துவ மனையிலே உயிருக்கு ஆபத்தான நிலையில், உயிர் ஊசலாடு கின்ற நிலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இத்தனைக்கும் காரணம், தர்மபுரி மாவட்டத்தில் தொடர்ந்து பல சம்பவங்கள் ஓராண்டு காலமாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றது. இது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சரிடத் திலே தர்மபுரி மாவட்டத்தில் நடைபெறுகின்ற சம்பவங்களைப் பற்றி உங்களிடத்திலே நாங்கள் பேசவேண்டும். போலீசினுடைய அத்துமீறல் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தவேண்டும். கம்யூனிஸ்ட் கட்சியின் கொடிமரத்தை வெட்டி வீழ்த்து கின்றனர். கம்யூனிஸ்ட் கட்சித் தொண்டர்கள் மீது பல பொய் வழக்குகளைப் போடுகிறார்கள்.

307 என்ற பிரிவுகளின் அடிப்படையில் பல வழக்குகள் போடப்பட்டு வருகின்றன. ஆகவே, இவைகளையெல்லாம் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்கிற அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கடிதம் மூலம் எடுத்துச்சொல்லியும், நாங்கள் உங்களிடத்திலே நேரிலே இது குறித்து விளக்கவேண்டும் என்று தெரிவித்த பிறகும், அந்த வாய்ப்பு எங்களுக்கு அளிக்கப்படவில்லை இதுவரையில் பேச வாருங்கள் என்று அவர் அழைப்பு அனுப்ப வில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

இங்கே நிலச் சீர்திருத்தச் சட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி மறுத்து இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டு இருக்கின்ற இந்த நேரத்திலும், தருமபுரி மாவட்டத்தில் 1000 ஏக்கர், 2000 ஏக்கர் நிலங்கள் வைத்துள்ள நிலப்பிரபுக்கள் இருக்கிறார்கள், பெரிய பெரிய லேவாதேவிக்காரர்கள் இருக்கிறார்கள். அதனால்தான் அங்கேயிருக்கும் கம்யூனிஸ்ட் தோழர்கள் அங்கேயிருக்கும் லேவாதேவிக்காரர்களுக்கு எதிராகவும், நிலப்பிரபுக்களுக்கு எதிராகவும், சாதாரண மக்களின் பிரச்னைகளுக்காகவும் போராடுகின்ற நேரத்தில், போலீசார்கள் லேவாதேவிக்காரர்களுக்கு ஆதரவாகவும், நிலப் பிரபுகளுக்கு ஆதரவாகவும் செயல்பட்டுக்கொண்டு இருக் கிறார்கள் என்பதை தயவு செய்து தமிழக அரசு புரிந்து கொள்ளவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அண்டமாதொட்டி, கலவரப்பள்ளி, நெல்லுமாரா, அம்பலப்பள்ளிதொட்டி ஆகிய இடங்களுக்கு நானும், தோழர் அழகர்சாமி அவர்களும் சென்று விசாரிக்கும் நேரத்தில் மூன்று

மாதத்திற்கு முன்னாலே அங்கே இருக்கும் சாதாரண விவசாயிகள், 3 ஏக்கர், 2 ஏக்கர் நிலம் வைத்துள்ள விவசாயிகள் வீடுகளில் வைத்துள்ள தானியங்களைப் போலீசார் சென்று கொள்ளை அடித்து இருக்கிறார்கள். அது சம்பந்தமாக போலீஸ் அதிகாரிகளிடத்தில் புகார் கொடுத்தும்கூட எந்த விதமான பாதுகாப்பும் தரவோ அல்லது அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவோ முயற்சிகள் எடுக்கப்படவில்லை, அதற்கு மாறாக அங்கே இருக்கக்கூடிய நிலப்பிரபுக்கள்— அஞ்சலம்மா, சாரதம்மா—2000 ஏக்கர் சொந்தக்காரர்கள்— வீட்டில் வைத்திருந்த தானியங்களை இந்த விவசாயிகள் கொள்ளை அடித்து விட்டனர் என்று சொல்லி, போலீசார் வழக்குத் தொடுத்து இருக்கின்றனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்ற உறுப்பினர்கள் எதிரிலேயே போலீசார் தாக்கினர் என்பதாக கூற்றுச் சொல்லப்பட்டு, அதன் தொடர்பாகத்தான் இன்றைக்கு இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஆகவே, சுருக்கமாக இதைப்பற்றி மட்டுமே பேசவேண்டும். ஒத்திவைப்பு எதற்காகச் செய்ய வேண்டும் என்கிற முக்கியத்துவத்தை விளக்குவதற்காகத்தான் இந்த வாய்ப்பு அளிக்கப்பட்டு இருக்கிறதே தவிர, ஒத்திவைத்தபிறகு விவாதிக்க வேண்டிய விஷயங்களைக் குறித்து இங்கே சொற்பொழிவு நிகழ்த்துவதற்கு அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம் : அதன் காரணமாக அந்த விவசாயிகள் கண்டிஷன் பெயிலில் வெளியே இருக்கிறார்கள். ஊருக்குள் 3 மாத காலமாக வரமுடியாத நிலைமை இருக்கின்றது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

இப்படிப்பட்ட நிலைமையில் அங்கே யிருக்கும் பெண்களை போலீஸ்காரர்கள் ரௌடிகளை விட்டு கற்பழித்து இருக்கிறார்கள் அந்தப் பெண்களிடத்தில் நானும் தோழர் அழகர்சாமி அவர்களும் கேட்கின்ற நேரத்தில் அவர்கள் உருக்கமாகச் சொன்னார்கள். 3 மாதகாலமாக எங்கள் வீட்டில் ஆண்கள் இல்லை. கொஞ்சம் நஞ்சம் இருந்த தானியங்களும் கொள்ளை அடிக்கப்பட்டு விட்டன. சாப்பிடுவதற்கு வேறு ஒன்றும் இல்லை. ஆகவே, எங்களுக்கு விஷத்தைக் கொடுத்து விட்டால் நாங்கள் செத்துப்போவோம். இங்கே போலீசார் செய்யும் அட்ராசிடிசை எங்களால் தாங்க முடியவில்லை என்று சொன்னார்கள். இத்தகைய கொடூரமான முறையில் அங்கே நிலைமைகள் இருக்கின்றன. இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் நாங்கள் எடுத்துச்சொல்லியும் அவர்கள் எங்களை அழைத்து நேரில் விவரங்களை அறிந்து கொள்ள வாய்ப்புக்கொடுக்காமல் இருப்பது வருந்தத்தக்கதாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



அதைத்தொடர்ந்து தான் 14-ம் தேதி ஊர்வலம் நடைபெற்றது. போலீஸ்காரர்கள் எங்கள் கண் முன்னாலேயே 'சிவப்புச் சட்டைக்காரனை அடித்து நொறுக்கு' என்று சொல்லி அவர்கள் மண்டையைப் பிளந்து இருக்கிறார்கள். இந்த முறையில் அங்கேயுள்ள தோழர்கள் அடிக்கப்பட்டு இருக்கிறார்களே என்று சொல்லி, அங்கேயிருக்கிற டி. எஸ். பி. சேஷாத்திரி அவர்களிடத்தில் நாங்கள் கேட்டபோது, இப்படி போலீஸ்காரர்கள் லேவாதேவிக்காரர்களுக்கும், நிலப்பிரபுக்களுக்கும் ஆதரவாக இருக்கிறார்களே, அவர்களுக்கு உடந்தையாக இருக்கிறார்களே என்று சொன்ன நேரத்தில், அவர்கள் சொன்னார்கள் — எங்களுக்கு மேலிடத்தில் இருந்து வந்து இருக்கும் உத்தரவு — கம்யூனிஸ்ட்களை அடியுங்கள், அவர்கள் வைத்து இருக்கும் கொடிமரங்களை, அவர்கள் வைத்து இருக்கும் கிளை அமைப்புகளை ஒழித்துக் கட்டுங்கள் — என்று சொன்னார்கள். எங்கள் எதிரிலேயே டி. எஸ். பி. அவர்கள் இதை ஒப்புக்கொண்டு சொன்னார்கள். ஓசூர், டெங்கனிக்கோட்டை பகுதிகளில் மட்டும் இந்த நிலைமை இல்லை. அந்த தருமபுரி மாவட்டத்தில் பூராவும் இந்த நிலைமை இருக்கிறது. போலீசாருடைய இந்த அட்டகாசத்தை உடனடியாக தடுத்து நிறுத்தவேண்டும். காரணம் இல்லாமல் போலீசார் கம்யூனிஸ்ட்டுகள் பேரில் போட்டு இருக்கும் வழக்குகளை வாபஸ் வாங்கவேண்டும். அங்கே இருக்கும் அனைத்துப் போலீஸ்காரர்கள் மீதும் அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானம் எந்தக்காரணத்திற்காகக் கொண்டு வரப்படுகிறது என்று அதனுடைய முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் பேசவேண்டும். மற்றவற்றை எல்லாம் இப்போது பேசுவது சரியல்ல.

(முற்பகல் 10.30)

திரு. எம். ஆறுமுகம் : முடித்துவிடுகிறேன் காரணம் இன்று போலீசார் நடத்தும் அடக்குமுறையை தடுத்து நிறுத்தியாக வேண்டும். தர்மபுரி மாவட்டத்தில் போலீசாரின் அத்துமீறிய நடவடிக்கைக்கு உடனடியாக உயர்நீதிமன்ற நீதிபதியைக் கொண்டு ஒரு விசாரணைக் கமிஷன் அமைத்து, விசாரணை நடத்த வேண்டும். இதுபோன்ற பல்வேறு பிரச்சனைகள் பற்றி விவாதிக்க வேண்டியிருப்பதால் அவையின் இதர அலுவல்களை இன்றைக்கு ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கேட்டுக்கொண்டு, அமர்கிறேன்.

*திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய துணைத் தலைவரவர்களே, தர்மபுரி மாவட்டத்திலே கடந்த 14-ந்தேதி அன்று நம்முடைய இந்த அவையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக இருக்கிற மதிப்பிற்குரிய அழகர்சாமி அவர்கள்,

திரு. எம். ஆறுமுகம் அவர்கள், மற்றும் பல சட்டமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் கம்யூனிஸ்ட் கட்சியினர் நடத்திய ஊர்வலத்தை போலீசார் கொடுமையாகத் தாக்கி அதன் மூலம் பலர் படுகாயம் அடைந்திருக்கிறார்கள். குறிப்பாக லெகுமையா என்ற தோழர் அபாயகரமான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

சில நாட்களுக்கு முன்னால் அந்த மாவட்டத்தின் கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் முத்து என்ற தோழர் விவசாயிகள் பிரச்னை சம்பந்தமாக அந்த மாவட்டத்து எஸ். பி.யை சந்தித்துப் பேசுவதற்குச் சென்றபோது அவரை எஸ். பி. ஏசி, பேசி, அவரை அடிக்கவும் முயற்சி செய்திருக்கிறார். கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களுக்குத்தான் இந்த கதி என்பதல்ல. அந்த மாவட்டத்திலிருக்கிற சகல கட்சித் தோழர்களும் இன்றைக்கு போலீசாரின் அக்கிரமங்களுக்கு இரையாகி வருகிறார்கள். ஏறத்தாழ ஓராண்டுக்கு முன்னால் எங்கள் கட்சியைச் சேர்ந்த எம். சுப்பிரமணியம், மோகன், இளங்கோ ஆகிய மூன்று தோழர்களும் இரவு சுமார் 8.00 மணிக்கு வெளியே பேசிக் கொண்டிருந்தபோது அரூர் சர்க்கிள் இன்ஸ்பெக்டராக இருந்த ஒருவர் எந்தக் காரணமும் இல்லாமல் அடித்து, துன்புறுத்தி போலீஸ் லாரியில் ஏற்றிக்கொண்டுபோய் அரூர் போலீஸ் ஸ்டேஷனில் வைத்து சித்திரவதை செய்தார். எங்கள் கட்சித் தோழர்களுக்குத்தான் இந்த கதியா என்றால் இல்லை. ஆளும் கட்சி நண்பர்களை கூட அந்த போலீசார் விட்டுவிடுவதாக இல்லை. எங்கள் கட்சித் தோழர்களை லாரியில் ஏற்றிக்கொண்டு போய் அடித்துத் துன்புறுத்தியதைப்போல மத்தியம்பட்டியைச் சேர்ந்த அண்ணா தி. மு. க. தோழர் ஒருவரையும் அவருடைய சித்தாப்பாவையும் போலீஸ் லாரியில் ஏற்றிக்கொண்டுபோய், அடித்துத் துன்புறுத்தி, சித்திரவதை செய்து, இரத்தம் ஒழுக, ஒழுக அடித்து, அவர்களும் மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டார்கள். அவர்கள்மீதும் வழக்குப் போடப்பட்டிருக்கிறது. அந்த அண்ணா தி. மு. க. தோழர் யார் என்று அவருடைய பெயரைச் சொன்னால் ஆளும் கட்சி நண்பர்கள் அதிர்ச்சியடைவார்கள். திரு. எம். ஜி. இராமச்சந்திரன் என்பது அவருடைய பெயர். நம்முடைய முதலமைச்சரின் பெயரை வைத்திருக்கிற அந்தத் தோழர் அண்ணா தி. மு. க. ஆரம்பித்ததிலிருந்து அதில் உறுப்பினராக இருக்கிறார். அதற்கான அடையாள கார்டு இது (ஒரு கார்டை காண்பித்தார்) முதலமைச்சரின் கையெழுத்து இதில் இருக்கிறது. அதைப்போலவே அடுத்து பொதுச் செயலாளராக திரு. ப. உ. சண்முகம் அவர்கள் வந்த போதும் அவர் உறுப்பினராக பதிவு செய்துகொண்டிருக்கிறார். அந்த உறுப்பினர் கார்டு இது (ஒரு கார்டை காட்டினார்). அண்ணா தி. மு. க. தோழருக்கும் எங்கள் கட்சித் தோழர்களைப் போன்ற கதிதான் ஏற்பட்டிருக்கிறது. யாரையும் அங்கே இருக்கிற போலீசார் விட்டுவைக்கவில்லை.



இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் தர்மபுரி மாவட்டத்தில் போலீசார் ஒரு தனி இராஜ்யத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். யாருடைய கட்டுப்பாட்டின் கீழும் அவர்கள் இல்லை. அவர்கள் தொடர்ந்து பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தொண்டர்களையும் அடித்து, துன்புறுத்தி, சித்திரவதை செய்கிறார்கள், சுட்டுத் தள்ளுகிறார்கள், கொலை செய்கிறார்கள். ஏன் என்று கேட்பதற்கு யாரும் இல்லை என்ற நிலைமை தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது.

அது மட்டுமல்ல. அந்த மாவட்டத்தில் இருக்கிற பிரச்சனை என்னவென்றால் I is purely a socio economic problem. அந்த மாவட்டத்தில் இருக்கிற பெரிய நிலப் பிரபுக்களும் வட்டிக் கடைக்காரர்களும் ஒன்று சேர்ந்து ஏழை எளிய மக்களை தொடர்ந்து சுரண்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உடந்தையாக அந்த மாவட்ட போலீஸ் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இதை நானே அந்த மாவட்டத்திற்குச் சென்று நேரில் தெரிந்துகொண்டு வந்து, ஒரு அறிக்கையை முதலமைச்சரிடம் அளித்தேன்; இந்த நாட்டு மக்களுக்கும் தெரிவித்தேன்.

இப்படி பல பிரச்சினைகள். நான் அங்கே சென்றபோது அவர்கள் இதை அம்பலப்படுத்தினார்கள். அப்படியும்கூட போலீசாரின் கொடுமைகள் நிறுத்தப்படவில்லை. சிறு வயதினரைக் கூட அவர்கள் விட்டு வைக்கவில்லை, அவர்களையும் அடித்துத் துன்புறுத்தி இருக்கிறார்கள். பத்திரிகையாளர்களை விட்டு வைத்தார்களா? அவர்களையும் விட்டு வைக்கவில்லை. ஒட்டு மொத்தமாக தர்மபுரி மாவட்டத்திலே போலீசார் அத்து மீறி செயல்பட்டு வருகிறார்கள். அங்கே தனியாக ஒரு காட்டு ராஜா தர்பாரையே போலீஸ் நடத்திக் கொண்டிருக்கின்றது. இது ஆளும் கட்சிக்கும் நல்லதல்ல. இந்த போலீஸ் கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் நடைபெற்ற அநீதிகளுக்குப் பரிகாரம் காணவும் உடனடியாக தர்மபுரி மாவட்டத்திலே என்னென்ன சம்பவங்கள் நடைபெற்றதோ அதைப்பற்றி எல்லாம் முழுமையாக விசாரணை செய்வதற்கு உயர்நீதி மன்றத்தின் நீதிபதி ஒருவரின் தலைமையிலே விசாரணைக் குழு அமைக்க வேண்டும். அப்படி முழுமையாக விசாரணை நடத்துவதுதான் இந்த அரசுக்கும் நல்லது, இந்த நாட்டு மக்களுக்கும் நல்லது என்ற கருத்தைச் சொல்லி முழுமையாக இது குறித்து விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 14 ஆம் தேதி அன்று அங்கே நடந்த சம்பவம் என்ன என்பதைப் பற்றி நேரில் கண்டிருக்கக்கூடிய தோழர் ஆறுமுகம் இங்கே குறிப்பிட்டார்கள். தோழர் அழகர்சாமி அவர்களும் அங்கே இருந்தார். ஆகவே இதைப்பற்றி மேலும் நான் விவரமாகச் சொல்ல விரும்பவில்லை. ஒரு பாயின்ட் மட்டும் சொல்லிக் கொள்கிறேன். அங்கே போலீஸ் அடிக்கின்றபோது ஏற்கெனவே கைது செய்யப்பட்டு பெயிலிலே வெளியே வந்த

சாதிக் என்பவர் — அவர் சந்தனக்கட்டை திருட்டு கேஸிலே கைது செய்யப்பட்டவர். அரசாங்கமே முயற்சி எடுத்து அவரைக் கைது செய்து திருச்சியிலே வைக்கப்பட்டவர். ஆனால் அப்படி ஜாமீனிலே இருக்கின்ற ஒரு ஆள் அன்று அந்த இடத்திலே இருந்தார் என்றால் அது வயலேட்டிங் தி கண்டிஷன் அல்லவா? அங்கே அடிப்பவர்களில் அவரும் ஈடுபட்டிருக்கிறார். இந்த அடிஷனல் ஃபேக்டை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். எஸ். ஐ. அவரைப் பார்த்து இருக்கிறார். அப்படியானால் அது வயலேஷன் அல்லவா? ஆகவே அப்படிப்பட்டவரை அங்கே அடிப்பதற்கு நியமித்திருக்கிறார்கள்.

நேற்று பத்திரிகையிலே நான் பார்க்கின்றபோது எனக்கு ஒரு அச்சம் தோன்றியது. அங்கே நடந்த சம்பவத்தை உண்மையை மறைப்பதற்காக ஸ்தல போலீஸ் ஏதாவது கட்டுக் கதையைத் தயார் பண்ணி அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்களோ என்று அந்தப் பத்திரிகையைப் பார்த்ததிலிருந்து எனக்கு ஒரு அச்சம் ஏற்பட்டிருக்கின்றது. அதாவது சி. பி. ஐ.-தொண்டர்களுக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களுக்கும் இடையிலே ஒரு கை கலப்பு ஏற்பட்டதாகவும், அதை கலைக்க போலீஸ் தலையிட்டதாகவும் போலீஸ் ஒரு கதையைச் ஜோடித்து இருப்பதாக ஒரு பத்திரிகைச் செய்தியிலிருந்து தெரிய வருகின்றது. நிலப்பிரபுக்களுக்கும் ஏழை விவசாயிகளுக்கும் தகராறு இருக்கும் இடத்திலே இப்படிப்பட்ட பிரச்சினை நடக்கக்கூடிய இடத்திலே ஏ. டி. எம். கே.-க்கும், சி. பி. ஐக்கும் தகராறு இருக்கவேண்டிய அவசியம் இல்லை. There is no bassis for that.

அப்படி இருக்க இப்படி ஒரு கதையை ஜோடித்து அதனை அரசுக்கும் அனுப்பி இருப்பார்களேயானால் அதை அரசு நம்பக் கூடாது. அங்கே இருக்கக்கூடிய ஏ. டி. எம். கே. உறுப்பினர் அதை நம்பக் கூடாது. 14 ஆம் தேதி அன்று நடந்த சம்பவங்கள் டிப் ஆஃப் தி ஐஸ் பர்க் என்ற வகையிலே சொல்லப்படுவதுதான். ஆனால் இதிலே ஆழமாக இறங்கிப் பார்த்தால் அங்கே இருக்கக் கூடிய பயங்கரமான நிலைமை தெரியும். அதனுடைய தொடர்ச்சி தான் 14 ஆம் தேதிய சம்பவம்.

ஏற்கெனவே சட்டத்திற்கு அப்பாற்பட்டு ஏராளமான நக்ஸல் பாரிகள் சுட்டுக் கொல்லப்பட்ட இடம் அது என்பது தெரியும். இதற்காக போலீசுக்கு முழு லைசன்ஸ் கொடுத்ததினால் நிலப் பிரபுக்கள் அதைப் பயன்படுத்தி கூலி உயர்வு கேட்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்களையும் நக்ஸல்பாரி என்ற முத்திரையினை வைத்துக்கொண்டு அந்த இடத்திலே சுட்டுக்கொன்றது நமக்குத் தெரியும். அதேபோன்று நிலவெளியேற்றத்தைத் தடுக்கக்கூடிய முறையிலே யாராவது விவசாயிகள் அதுபற்றிச் சொன்னால் அவர்களையும் நக்ஸல்பாரி என்று பெயரிட்டுச் சுட்டுக் கொன்ற இடம் அது என்பதும் தெரியும். அதேமாதிரி அரிஜனங்கள் கோவிலுக்குள்ளே நுழைவதற்குத் துணிந்தால் அவர்களையும் நக்ஸல்பாரி என்று சொல்லி போலீஸ் சுட்டிருக்கக் கூடிய சம்பவமும் நடந்த இடம்.



அங்கே நிலப்பிரபுக்கள் ரிவால்வரையும், துப்பாக்கியையும் வைத்து இருக்கிறார்கள். நிலப்பிரபுக்கள் அங்கே ஆயுதம் தாங்கிய ஒரு தனிப் படையே வைத்துக்கொண்டு அவர்களுடைய சொந்த சட்டத்தை அவர்கள் அமல் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அங்கே உள்ள போலீசின் அத்து மீறிய நடவடிக்கைகளை இந்த அவையிலே நாம் நியாயப்படுத்தி அடிக்கடி பேசுவதால் நிலைமை இன்னும் மோசமாகிக் கொண்டிருக்கின்றது. மெட்ராஸ் சிட்டியிலே போஸ்டர் எங்கே வேண்டுமானாலும் யார் வேண்டுமானாலும் ஒட்டலாம். ஆனால் அங்கே ஒட்டினால் எஸ். ஐ. வந்து அடிக்கிறார். அந்த போஸ்டர்கள் கிழிக்கப்படுவது மட்டுமல்ல, ஆட்களை அடித்து நொறுக்கி 'போலீஸ் வாழ்க' என்று கோஷம் போடவேண்டும் என்றும் அவர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள். இது எவ்வளவு கொடுமை?

(முற்பகல் 10.40)

அடுத்து யூத் பெடரேஷன். இந்த யூத் பெடரேஷன், இளைஞர் சங்கங்கள் என்று இருக்கிறதே, அவைகளிடம் சென்று அந்த பெடரேஷனை டிஸ்பேண்ட் செய்யவேண்டும், கலைக்கச் செய்யவேண்டும் என்று கேட்கிறார்கள். கேட்பது கூட அல்ல பயமுறுத்துகிறார்கள். அப்படி சங்கங்கள் வைத்துக் கொள்வது பண்டமெண்டல் ரைட். அதைக்கூடாது என்று தடுப்பதற்கு போலீசுக்கு என்ன ரைட் இருக்கிறது? மற்ற வட்டாரங்களில் எல்லாம் இல்லாத அளவுக்கு, இங்கே இருக்கும் போலீசுக்கு என்ன ரைட்? என்ன தைரியம்? அந்தத் தைரியம் எங்கேயிருந்து வந்தது? அது மட்டுமல்ல அந்த ஸ்தாபனத்தினுடைய மெம்பர்ஷிப் லிஸ்டையும் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எதற்கு அந்த லிஸ்ட்? அரெஸ்ட் பண்ணினால் ஜெயிலுக்குள் தள்ளி பூட்ஸ் கால்களால் அமுத்து மிதித்து நொறுக்கப்போகிறார்கள். அதற்குத்தானே அந்த லிஸ்ட். இதில் வேடிக்கை என்னவென்றால், எஸ். பி. அவர்களிடம் சென்று இதுபற்றி மேல்முறையீடு செய்தால், அவர்களே உதைக்க வருகிறார்கள் என்று சொல்வது தான். Absolutely no protection ஆகையினாலே இந்த விவாதத்திலே ரெய்ஸ் பண்ண வேண்டிய விஷயம் என்னவென்றால், The Police be haves as thought it is a declare distu bed area. தர்மபுரி மாவட்டத்தை அப்படியே தூக்கி அரசாங்கம் போலீஸ் வசம் ஒப்படைத்து விட்டதா அல்லது கலகப்பகுதி என பிரகடனம் செய்துவிட்டதா? கலகப்பகுதி என்று பிரகடனப்படுத்தாமலேயே, கலகப்பகுதி என்று பிரகடனப்படுத்தியிருந்தால் எப்படி நடந்துக் கொள்வார்களோ, அப்படித்தான் போலீசார்கள் அங்கு நடந்துக் கொள்கிறார்கள்.

கிட்டத்தட்ட அந்த மாவட்ட மக்கள், போலீஸ் ஆட்சியில் Hitlerite Fascist Concentration கேம்பில் வாழ்வதுபோல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதனால்தான் ஜுடிஷியல் என்குயரி வேண்டும் என்று சொல்கிறோம்.

அடுத்ததாக லாஸ்ட் பாயின்ட், புரொசிஜர்படியே இதிலே விவாதம் வையுங்கள் என்று கேட்கிறேன். ஏனென்றால் லோக்சபாவிலே இதற்கு பிரசிடென்ட் இருக்கிறது. ஒரு சம்பவம் நடந்தால், அந்த சம்பவத்திலே லோக்சபாவினுடைய அங்கத்தினர்கள் யாராவது பிரசன்ட் ஆகியிருந்தால், அவர்கள் நேரில் பார்த்திருந்தால், அந்தச் சம்பவம் நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு வந்தால், அதில் போலீசினுடைய வெர்ஷனைக் கேட்க மாட்டார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் அங்கே பிரசன்டாகி அவர் நேரில் பார்த்தவராக இருந்தால், அந்த அங்கத்தினருடைய வாதம் என்னவோ, அதைத்தான் பிரைமா—பேசியாக எடுப்பாரிகள். அப்படி இரண்டு, மூன்று நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன.

ஏனென்றால், அப்படி இல்லையெனில் அவை தன்னுடைய உறுப்பினரை விட போலீஸ் ஆபீசர்களை அதிகமாக மதிப்பதாக ஆகிவிடும். ஆகவே, உறுப்பினர் சொன்ன அடிப்படையில் விவாதத்தை வைத்து, வேண்டும் என்றால் பின்னால் அதற்கு ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லி அவை முடிவு எடுக்கலாம். ஆனால் உறுப்பினரின் வெர்ஷனைத்தான் பிரதானமாக எடுக்க வேண்டும்.

அதேபோல இப்பொழுது அவை முன்னவர் அவர்கள் போலீசுடைய வெர்ஷனைத்தான் இங்கே படிக்கப் போகிறார். ஆகவே அதை மறுக்கக் கூடிய முறையிலே, அந்த சம்பவத்தைப் பார்த்த நமது அவை உறுப்பினர்கள் சொல்கின்ற கருத்தின் அடிப்படையிலே விவாதத்தை வைத்து அதை பிரைமா பேசியாக எடுத்துக் கொண்டு, விவாதித்த பிறகு வேண்டுமானால், நீங்கள் எப்படி வேண்டுமானாலும் முடிவு எடுத்துக் கொள்ளுங்கள். எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆகவே, அந்த முறையில் இந்த விவாதத்தை நடத்துங்கள் என்று சொல்லி, ஜுடிஷியல் என்குயரியை வற்புறுத்தி அமர்கிறேன்.

திரு. எஸ். ஆண்டிதேவர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற 14-2-1982 ஆம் நாள், இந்த அவையிலே ஒரு கட்சியின் தலைவராக இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்களும் தரங்கிணிக்கோட்டை என்ற இடத்திற்குச் சென்றபோது, அவர்கள் இயக்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் கடுமையாக போலீசாரால் தாக்கப்படுவதை பார்த்திருக்கிறார்கள். போலீஸ் அதிகாரிகள், அவர்களை அடிக்கும் போது, ஒரு குறிப்பிட்ட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொன்னால், நன்றாக அடியுங்கள் என்று சொல்லி அடித்தார்கள் என்ற நிலைமைகளையெல்லாம் பார்த்து வந்த மாண்புமிகு உறுப்பினர்கள் அதை தெளிவாக இங்கே தெரிவித்தார்கள். அது மட்டும் அல்ல, அவர்களுடைய இயக்கத்தினுடைய தொழிற் சங்கத் தலைவர் பட்டதாரி ஒருவர், அடித்து நொறுக்கப்பட்டு, மண்டை பிளந்து மிக அபாயமான நிலைமையிலே மருத்துவமனையில் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் வகையில் சேர்க்கப்





பட்டிருக்கிறார் என்றெல்லாம் செய்திகளை தெரிவித்தார்கள். அப்படி நேரிலேயே பார்த்த அந்த அங்கத்தினர்கள் சொல்வதை விட நான் அதிகமாக ஒன்றும் சொல்ல விரும்பவில்லை என்று சொன்னாலும் தர்மபுரி மாவட்டத்தில் இந்த ஓராண்டு காலமாக நக்ஸலைட்ஸ் என்ற பெயரால் நிலப்பிரபுக்களுக்கு ஆதரவாக போலீஸ் இயங்கிக் கொண்டிருக்குமானால் அது இந்த அரசுக்கும் நல்லதல்ல. அரசியல் இயக்கங்களை நசுக்குவதற்காக போலீஸ் அதிகாரிகள் அரசிடம் பிடிக்கு அப்பாற்பட்டுள்ள செயல்களில் ஈடுபடுவார்களானால் எந்த அரசியல் இயக்கமும் அது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் கூட, அரசியல் கட்சிகளுக்கு இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படுமானால் அது ஜனநாயக நாட்டுக்கு உகந்ததல்ல. நாம் பல்வேறு சட்டங்களை வைத்திருக்கிறோம். நில உழவடைச் சட்டம் இருக்கிறது, குத்தகைச் சட்டம் இருக்கிறது. இதுபோன்ற சட்டங்களை எதிர்த்துப் போராடுகிற விவசாயத் தொழிலாளர்களை நக்ஸலைட்ஸ் என்று பட்டம் கட்டிவிட்டு நிலப்பிரபுக்களுக்கு உடந்தையாக இருந்து நிலங்களைக் காலி செய்வதற்கும், குத்தகைதாரர்களை காலி செய்வதற்கும், குத்தகைகளை வசூல் செய்வதற்கும் போலீஸ் பயன்படுத்தப்படுமானால், நாம் நிறைவேற்றுகிற சட்டங்களுக்கு, இந்தச் சட்டமன்றத்தினால் நிறைவேற்றப்படுகிற சட்டங்களுக்கு எதிராக போலீஸ் பயன்படுத்தப்படுமானால் அது நல்லதொரு மரபல்ல. எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல் அங்கே பத்திரிகையாளர்கள் போனாலும் அடித்து நொறுக்கப்பட்டார்கள் என்ற செய்தியையும் பார்த்தோம். அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் போனால் நல்லமுறையில் நடந்துகொள்கிற நிலையிலுள்ள அந்த போலிஸ், அரசியல் கட்சிகளைச் சார்ந்த யாராவது சென்றால் தாக்குவது என்றளவிற்கு தர்மபுரி மாவட்டத்தில் சட்டம்-ஒழுங்கு கெட்டிருக்கிறது. அங்கே போலீஸ் ஆளுகிற பொறுப்பிலிருக்கிற அரசையும் மீறி தன்னிச்சையாகச் செயல்படுமானால் அது இந்த அரசுக்கு நல்லதல்ல. தர்மபுரியில் நடக்கிற இந்த நிகழ்வுகள் குறித்து ஒரு உயர்மட்ட நீதிபதியை வைத்து விசாரிக்க வேண்டுமென்று வற்புறுத்தி அதுபற்றி விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கோரி அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்குக் கிடைத்த தகவலை இந்தப் பேரவையில் வைக்க நான் விரும்புகிறேன். தர்மபுரி மாவட்டம் தென்கனிக்கோட்டையில் 14.2.82 அன்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினரால் அடக்குமுறை எதிர்ப்பு நாள் கடைப்பிடிக்கப்பட்டது. அன்று மாலை சுமார் 4.30 மணியளவில் சுமார் 300 பேர்கள் கலந்து கொண்ட ஊர்வல ஒன்று நடத்தப்பட்டது. ஊர்வலம் 5.30 மணிக்கு முடிவடைந்தது. ஊர்வலம் முடிவடைந்த பின்னர் பேருந்து நிலையத்திற்கு அருகில் கம்யூனிஸ்ட் கட்சியினர் சிலரும் மற்றவர்களும் தேநீர் அருந்திக் கொண்டிருந்திருக்கின்றனர். அப்பொழுது தர்மபுரி மாவட்ட அ. இ. அ. தி. மு. க. பொருளாளரான திரு. தேயன், பொ

சுப்ரமணி என்பவரை சுட்டிக்காட்டி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு நஞ்சப்பன் என்பவர் கேவலமான முறையில் பேசியிருப்பதாகத் தெரிகிறது. இதனைத் தொடர்ந்து இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. அங்கிருந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மற்ற சிலர் திரு தேயன், பொ. சுப்ரமணியத்தைத் தாக்கியுள்ளனர். திரு. சுப்ரமணியத்தின் சகோதரரான திரு தங்கவேலு என்பவரையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினரான திருவாளர்கள் லகுமையா, தர்மராஜ், நஞ்சியப்பன், கேளப்பன், கோவிந்தப்பா, நாராயணசாமி, சூடா நந்தன், வெங்கடசாமி, முனிரத்தினம் ஆகியோரும் மற்றும் சிலரும் தாக்கியுள்ளனர். திரு. சாதிக் என்பவரும் தாக்கப்பட்டுள்ளார். திரு. தேயன், பொ. சுப்ரமணி எறிந்த கல்லினால் திரு. லகுமையாவிற்கு தலையில் காயம் ஏற்பட்டுள்ளது. இச்சச்சரவு ஏற்பட்டபோது காவல் துறை ஆய்வாளர் உடனடியாக விரைந்து சென்று கூட்டத்தினரை கலைக்கும்படி நேரிட்டது. ஒசூர் டி.எஸ். பி. யும் தென்கனிக்கோட்டை வட்டாட்சியரும் தலத்திற்கு வந்து பார்வையிட்டனர். தாக்குதல்களினால் காயமடைந்தவர்களும், காவல் துறையினர் கூட்டத்தினரை கலைந்து செல்ல வைக்க விரட்டிய போது சிறு காயம் அடைந்தவர்களும் மருத்துவமனைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். சம்பவத்தின் தொடர்பாக இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த 5 பேரும் தேயன், பொ. சுப்ரமணியம் ஆகியோரும் கைது செய்யப்பட்டனர். தேவையான காவல்துறை பாதுகாப்பு போடப்பட்டது. மாலை 7 மணியளவில் பொதுக் கூட்டம் அமைதியான முறையில் நடந்துள்ளது. மேற்கொண்டு எவ்வித அசம்பாவிதமும் நடைபெறவில்லை. நிலைமை அமைதியாக உள்ளது.

மாண்புமிகு உறுப்பினர்கள் அங்கே நடைபெற்ற நிகழ்ச்சியையொட்டி இந்த மன்றத்தில் பல கருத்துக்களை எடுத்து தெரிவிக்கிறார்கள். அங்கேயுள்ள காவல்துறை பற்றியும், அங்கே ஏற்பட்டிருக்கிற சூழ்நிலைகளைப் பற்றியும் இங்கே கருத்துக்கள் வழங்கியிருக்கிறார்கள். ஆகவே அரசாங்கத்திற்குக் கிடைத்த தகவலை இங்கே எடுத்துச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் திரு உமாநாத் அவர்கள் எடுத்துச் சொல்லியதைப் போல் அவர்களுக்கு கிடைத்த தகவல்களை, நிலைமைகளை அவர்கள் விளக்கியிருக்கிறார்கள். ஆகவே இப்போது நான் சொல்லக் கூடியதெல்லாம் இந்தக் கருத்துக்களோடு, மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் காவல் துறை பற்றியும் சூழ்நிலைகள் பற்றியும் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் அத்தனையையும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் பார்வைக்குக் கொண்டு வரப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கிற வகையில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஏற்ற முடிவை எடுப்பார்கள் என்பதைமட்டும் இப்போது சொல்லி இது பற்றி விவாதிக்க இந்த அவையை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறிக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களுக்கு உரிய மதிப்பளித்து அவற்றை மாண்புமிகு



முதல் அமைச்சர் அவர்கள் முன் எடுத்து வைப்பேன் என்று எடுத்துச் சொல்லி இதுபற்றி விவாதிக்க அவையை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

(முற்பகல் 10.50)

திரு. ப. நெடுமாறன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக போலீஸ் அக்கிரமங்கள் அதிகமாகி இருக்கிறது. அதைப்பற்றி முழுமையாக நீதி விசாரணை நடத்த வேண்டுமென்று இங்கே பல கட்சியினர் சார்பிலே விடுத்த கோரிக்கையை இந்த அரசு ஏற்காததைக் கண்டித்து, நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. எஸ். ஆண்டித் தேவர் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தர்மபுரியில் நடந்த போலீஸ் அராஜகத்தைக் கண்டித்து அங்கேயிருக்கக் கூடிய நிலைமைகளைப் பற்றி ஒரு நீதி விசாரணை வைக்க வேண்டுமென்று வற்புறுத்தியும்கூட அரசு நீதி விசாரணைக்கு அறிவிப்பு செய்யவில்லை. ஆகவே, இதைக் கண்டித்து வெளிநடப்பு செய்கிறோம்.

(திரு. எஸ். ஆண்டித் தேவர் அவர்கள் வெளிநடப்புச்செய்தார்)

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: துணைத் தலைவர் அவர்களே, அரசுக்கு ஏற்படுகின்ற கெட்ட பெயரை நீக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் காரணமாக கூறிய ஆலோசனையை இந்த அரசு ஏற்காததைக் கண்டித்து காந்தி—காமராஜ் காங்கிரஸ் வெளிநடப்பு செய்கிறது.

(காந்தி—காமராஜ் காங்கிரசைச் சார்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

திரு. இரா. கருப்பையா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் நடைபெறுகின்ற போலீஸ் அக்கிரமங்களைக் கண்டிக்கின்ற முறையிலே, அங்கே நடைபெறுகின்ற சம்பவங்களின் தொடர்பாக, அரசு தன்னுடைய பொறுப்பிலே இதற்கு ஒரு நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், குற்றவாளிகளைக் கண்டுபிடித்து மக்களுக்கு இனம் காட்ட வேண்டுமென்றும் எடுத்துச் சொன்ன இந்தக் கட்சியின்

கோரிக்கையை இந்த அரசு ஏற்க இயலாத நிலைமையில் கம்யூனிஸ்ட் கட்சியானது தன்னுடைய ஆட்சேபணையைத் தெரிவிக்கின்ற முறையில் வெளிநடப்புச் செய்கிறது.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வெளி நடப்புச் செய்தனர்)

திரு. ரா. உமாநாத் : குழந்தை வேண்டுமென்றால், பிரசவ வேதனையை அனுபவித்துத் தான் ஆகவேண்டும். துணைத் தலைவர் அவர்களே, எல்லாக் கட்சிகளும் சேர்ந்து தர்மபுரியில் இவ்வளவு பயங்கரமான சுச்சுவேஷன் இருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னார்கள். பல விஷயங்களில் ஜுடிசியல் என்கொயரி போடப்பட்டிருக்கிறது. இந்த சுச்சுவேஷனிலே என்கொயரி அமைப்பது சம்பந்தமாக உத்தரவிடா விட்டால், அந்த இடத்தில் சுச்வேஷனிலே இன்னும் ஓர்ஸ்ட் கண்டிஷன் ஏற்படும். இந்த அச்சத்தினை நீக்கி, அங்கிருக்கக்கூடிய ஜனங்களுக்கு பாதுகாப்பளிப்பதற்காக, அந்த சென்ஸ் ஆப் பியர்—ஐ நீக்க அரசாங்கத்தை வலியுறுத்தி, நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் அனைவரும் வெளி நடப்புச் செய்தனர்)

## 5. கவன ஈர்ப்புகள்

### (அ) சேலம் பகுதியில் நச்சுச்செடி பார்த்தீனியம் வளர்வது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. செ. செம்மலை அவர்கள் ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார், அவர் இதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, "சேலம் நகரில் அதிக அளவில் பார்த்தீனியம், என்னும் நச்சுச் செடிகள் வளர்ந்துள்ளதால் பொதுமக்கள் கவலை குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

*மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீங்கு விளைவிக்கும் தன்மை வாய்ந்த "பார்த்தீனியம்" (ஆகாயதாமரை) என்னும் ஒரு வகை நச்சுச் செடி தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் வட ஆற்காடு ஆகிய சில மாவட்டங்களில் பரவலாகக் காணப்படுவதாக 1980-ம் ஆண்டு ஜூன் மாதம் கூறப்பட்டது. அதனை தொட்டால் மக்களுக்கு தோல் வியாதி மற்றும் எதிர் விளைவுகள் உண்டாகுமென்று தெரியவந்தது



இவ்வித செடிகள் எங்கு தென்பட்டாலும் உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் மாவட்ட சுகாதார அலுவலர்கள் ஆகியோரின் உதவியைக் கொண்டு உடனடியாக அவற்றை ஒழிக்க தக்க நடவடிக்கை எடுக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் மாவட்ட சுகாதார அலுவலர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கிறது. அச்செடி எங்கு காணப்பட்டாலும் பொது மக்கள் அதனைத் தொடாமல் இருக்கும்படி, அரசு செய்தி வெளியீட்டின் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

2. சேலம் நகரைப் பொறுத்தவரையில் "பார்த்தீனியம்" செடிகள் அதிகமாகக் காணப்படும் பொதுவிடங்கள் மற்றும் தனியாரிடங்கள் பற்றி ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தற்போதுள்ள சுகாதார ஊழியர்கள் தவிர, தனியாக கூலியாட்கள் (மஸ்தூர்கள்) அமர்த்தப்பட்டு பொதுநலப் பணியாளர்களின் மேற்பார்வையில் செடிகள் களைந்தெடுக்கப்பட்டன. களையப்பட்ட செடிகள் அவ்வப்போது எரிக்கப்பட்டன. இச்செடிகளைப் பற்றி கவலைப்பட அவசியமில்லை என்று சேலம் நகர மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தினசரி வேலையின்போது இச்செடிகள் காணப்படின் அவைகளை உடனே களைந்து எரிக்குமாறு நகராட்சி சுகாதார ஊழியர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. இச்செடிகள் மேலும் பெருகாமல் இருப்பதற்கு சேலம் நகராட்சி ஆணையர் எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறார்.

திரு. செ. செம்மலை : துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நச்சுச் செடிகளால் தோல் வியாதி மட்டுமல்ல. ஆஸ்துமா போன்ற வியாதிகளும் பரவுகின்றன என்று சொல்லப்படுகிறது. அந்த வியாதியால் தாக்கப்பட்ட ஒருவருக்கு சிகிச்சை அளித்த டாக்டர் ஒருவர் மரணம் அடைந்துவிட்டார் என்று பத்திரிகையிலே செய்தி வந்தது. அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலிருந்து சேலத்தில் இதுபோன்ற நச்சுச் செடிகளை நகராட்சி ஊழியர்கள் அகற்றுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்தார்கள். குறிப்பாக அந்த ஊழியர்களே கூட இந்தச் செடிகளைத் தாங்கள் அப்புறப்படுத்தினால் தங்களுக்கும் வியாதி வந்துவிடுமோ என்ற முறையிலே அவர்கள் அந்தப் பணியைச் செய்யமுடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே அந்தச் செடிகளை ஆண்டுதோறும் ஏதோ அறுவடையைப் போல் எடுப்பதால் அந்தச் செடிகளின் விதைகள் ஆங்காங்கே பரவி 'ரேபிட் குரோத்' என்ற முறையிலே பரவி விடுகின்றன. ஆகவே அந்தச் செடிகளை ஆண்டுதோறும் எடுக்கிற முறையில்லாமல் நகராட்சி ஊழியர்கள் ஒரு வாரத்திற்குள் தீவிரமாக நடவடிக்கை எடுத்து ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; துணைத் தலைவர் அவர்களே, இந்தச் செடி பட்டால்தோல்வியாதி போன்று அலர்ஜி போன்று ஏற்பட்டுவிடும் என்பதால் தான் அதைக் களைவதற்கு கையிலே உறைகள் (க்ளௌவ்ஸ்) போட்டுக்கொண்டு பிடுங்க வேண்டுமென்று நகராட்சி மூலமாக ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

செடியை களைந்து தூர வீசுவோமானால் அந்த விதைகள் மற்ற இனங்களிலும் பரவிவிடும் என்பதால் அதை எரித்துவிடவேண்டுமென்று கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட தீவிரமான நடவடிக்கைகளின் மூலமாக இவைகளைக் களைந்து எரிப்பதற்கு நடவடிக்கைகள் கண்டிப்பாக எடுக்கப்படும் என்கின்ற உறுதியினைக் கூறுகிறேன்.

திரு. செ. செம்மலை : துணைத் தலைவர் அவர்களே' மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்தப் பகுதி மக்களிடையே உள்ள பீதியை அகற்றுகின்ற அளவுக்கு நகராட்சி சுகாதார அதிகாரிகளை அந்தப் பகுதிக்கு அனுப்பி தடுப்பு நடவடிக்கையாக அங்கே உள்ள மக்களின் உடலை பரிசோதித்துப் பார்த்து தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அது உடனடியாகப் பரிசீலிக்கப்படும்.

(ஆ) மூளைக்காய்ச்சல் நோய் வராமல் தடுப்பது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் இரெ. இராசமாணிக்கம், இரா. தாமரைக்கனி, பெ. சு. திருவேங்கடம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவருவார்.

திரு. இரெ. இராசாமாணிக்கம்: தலைவர் அவர்களே, "தமிழ் நாட்டில் மூளைக்காய்ச்சலால் குழந்தைகள் இறந்துள்ளதால் அதனை உடனடியாகத் தடுக்க வேண்டிய அவசியம் குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

"ஜப்பானிஸ் வைரஸ் மூளைக்காய்ச்சல்" சாதாரணமாக பன்றி, குதிரை முதலிய கால்நடை விலங்கினங்களிடையே ஏற்படும் ஒரு நோயாகும். இந்நோய் ஒரு வகை சாக்கடை கொசுவினால் (culex) பரப்பப்படுகிறது. ஆனால் விலங்கினங்களிடையே இந்நோய் இருப்பது தகுந்த அறிகுறி இல்லாததால் வெளியில் தெரியாது.

2. மழைக்காலங்களில் கொசுக்களின் பெருக்கம் மிகவும் அதிகமாகிறது. அம்மாதிரி அதிகரித்த கொசுக்களுக்கு தேவையான இரத்த உணவு விலங்கினங்களிடம் கிடைக்காதபோது





கொசுக்கள் மனிதரை தாக்குகின்றன. இது ஓர் எதிர்பாராத நோய் பரப்பும் நிகழ்ச்சியாகும். மனிதர்களுக்கு இந்நோய் தோன்றினால் 3 அல்லது 4 நாட்களுக்கு அதிக காய்ச்சலும், பின் நினைவிழத்தலும், வலிப்பு நோயும் தோன்றும். இவ்வகை "மூளைக்காய்ச்சல்" 5 வயது முதல் 15 வயது வரை உள்ளவர்களிடையே பெருமளவில் ஏற்படுகிறது.

3. தமிழ்நாட்டில் ஐயப்பாட்டிற்குரிய மூளைக்காய்ச்சல் நோய் 1977-ம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் தோன்றியது. 1977, 1978, 1979, 1980, 1981-ம் ஆண்டுகளில் இந்நோயினால் வெவ்வேறு மாவட்டங்களில் பாதிக்கப்பட்டோர். இறந்தவர்கள் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| மாவட்டம் | 1977 | | 1978 | | 1979 | | 1980 | | 1981 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | *பா. | இ. | பா. | இ. | பா. | இ. | பா. | இ. | பா. | இ. |
| திருநெல்வேலி | 12 | 7 | 302 | 99 | 64 | 3 | 123 | 15 | 115 | 25 |
| தென்னாற்காடு | .. | .. | 135 | 16 | 5 | .. | 95 | 53 | 649 | 153 |
| மதுரை | .. | .. | 18 | 8 | 14 | 1 | .. | .. | 7 | 1 |
| இராமநாதபுரம் | .. | .. | 35 | 5 | .. | .. | .. | .. | 8 | 2 |
| திருச்சிராப்பள்ளி | .. | .. | .. | .. | 2 | 2 | .. | .. | 244 | 31 |
| வடாற்காடு | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 210 | 55 |
| சேலம் | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 49 | 9 |
| தஞ்சாவூர் | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 31 | 10 |
| செங்கல்பட்டு | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 4 | 1 |
| தர்மபுரி | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 7 | 3 |
| மொத்தம் | 12 | 7 | 490 | 128 | 85 | 6 | 218 | 68 | 1324 | 290 |

*பா=பாதிப்பு இ.+இறப்பு

1979—80-ம் ஆண்டுகளில் சில மாவட்டங்களில் மட்டுமே இந்நோய் தோன்றி இதனால் பாதிக்கப்பட்டவரின் எண்ணிக்கையும் குறைவாக இருந்தது. 1981-ல் பல மாவட்டங்களில் இந்நோய் பரவி பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் கூடியுள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்டு பின் கூடுதல் மழையின் காரணமாக கொசுக்களின் எண்ணிக்கை பெருகியதால் 1981-ம் ஆண்டில் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை அதிகரித்தது.

இந்நோய் அதிக அளவில் தோன்றியதன் காரணமாகவும் அண்டை மாநிலங்களிலும் பலர் பாதிக்கப்பட்டதாலும் இதை பற்றி விரிவான ஆலோசனை செய்ய மைய அரசின் சுகாதார அமைச்சர் அவர்களின் தலைமையில் 27—11—81 அன்று சென்னையில் தென் மாநில சுகாதார அமைச்சர்களும், சுகாதாரத்துறை

அலுவலர்களும் இந்நோய் பற்றி அறிந்த நிபுணர்களும் கூடி விரிவான ஆலோசனை செய்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி முடிவெடுத்தார்கள். இந்நோயைக் கட்டுப்படுத்த இம்மாநிலத்தில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன:—

(1) பாதிக்கப்பட்ட பகுதிகளில் மருந்து தெளிப்பதற்கான குழுக்கள் அமைக்கப்பட்டு வீடுகளிலும், கால்நடை தொழுவங்களிலும் B.H.C. என்ற மருந்து தெளிக்கப்பட்டது.

(2) பாதிக்கப்பட்டவர்களை உடனடியாக ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கோ வட்ட அல்லது மாவட்ட மருத்துவமனைகளுக்கோ எடுத்துச் செல்ல போக்குவரத்து வசதி செய்யப்பட்டது.

(3) மருத்துவ அலுவலர்கள் உடனடியாக சிகிச்சை அளிக்க வேண்டியும் எந்தவிதமான சிகிச்சை எப்படியெப்படி அளிக்க வேண்டும் என்பதற்கு வேண்டிய குறிப்புகள் வழங்கப்பட்டன.

(4) ஏற்கனவே மாநிலத்தில் உள்ள கொசு மருந்தை புகையாக்கி அடிக்கும் இயந்திரங்களுடன் மைய அரசு வேறு மாநிலத்திலிருந்து அனுப்பிய இயந்திரங்கள் மூலமாகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விரிவான அளவில் கொசு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

(5) தேசிய நுண்கிரிமிகள் நிறுவனத்தின் பெங்களூர் கிளையிலிருந்து ஒரு குழு வரவழைக்கப்பட்டு பாதிக்கப்பட்டோரின் இரத்த மாதிரிகளை ஆராய்ச்சிக்காக எடுத்துச் சென்றுள்ளது.

(6) பொது மக்கள் இந்த வியாதியைப் பற்றி எடுத்துக் கொள்ள வேண்டிய தடுப்பு நடவடிக்கைகளைக் குறிக்கும் துண்டு புத்தகங்கள் அச்சிடப்பட்டு பாதிக்கப்பட்ட பகுதிகளில் கொடுக்கப்பட்டன.

இத்தகைய நடவடிக்கைகளின் காரணமாக இந்த வியாதியால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தற்போது வெகுவாகக் குறைந்து கொண்டு வருகிறது. 1982 ஜனவரியில் (25-1-82) வரை பல்வேறு மாவட்டங்களில் 28 பேர் பாதிக்கப்பட்டு இருவர் மட்டுமே இறந்தனர்.

இந்நோயை தடுக்க உபயோகப்படும் ஜப்பானிய வாக்ஸின் என்ற மருந்து போதுமான அளவு கிடைக்காததாலும் அதனுடைய விலை மிகக் கூடுதலாக இருப்பதாலும் மேலும் அதனால் பெருத்தளவு பாதுகாப்பு அளிக்க இயலாது என்பது நிபுணர்களின் கருத்தானதால் இந்நோய் பரவுவதைத் தடுப்பதற் குமுக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று தென் மாநில சுகாதார அமைச்சர்களின் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.



பெருமளவில் சிறுவர்களைப்பாதிக்கும் இந்த நோயைக் கட்டுப் படுத்த எல்லா நடவடிக்கைகளையும அரசு எடுத்துள்ளது என்றும் மேலும் மக்கள் நலம் காக்க வேண்டி எல்லா வித நடவடிக்கைகளையும் அரசு எவ்வித தயக்கமோ தடங்கலோ இன்றி எடுக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையிலே வக்கப்பட்டுள்ள அறிக்கையில் இந்த நோய் சில மாவட்டங்களில் இருந்தது இன்றைய தினம் பரவலாக எல்லா மாவட்டங்களிலும் பரவியுள்ள தக் காட்டுகிறது. நோய் கண்டவர்கள் எண்ணிக்கையும் ஆண்டுக்காண்டு உயர்ந்து வருவதும் அறிக்கையிலிருந்து தெரியவருகிறது. 1977-ம் ஆண்டில் 12 பேர்கள் பாதிக்கப்பட்டு, 7 பேர்கள் இறந்திருக்கிறார்கள். 1978 ஆம் ஆண்டில் 490 பேர்கள் பாதிக்கப்பட்டு 128 பேர்கள் இறந்திருக்கிறார்கள். 1979 ஆம் ஆண்டில் 85 பேர்கள் பாதிக்கப்பட்டு 6 பேர்கள் இறந்திருக்கிறார்கள். 1980 ஆம் ஆண்டில் 218 பேர்கள் பாதிக்கப்பட்டு 68 பேர்கள் இறந்திருக்கிறார்கள். 1981 ஆம் ஆண்டில் 1324 பேர்கள் பாதிக்கப்பட்டு 290 பேர்கள் இறந்திருக்கிறார்கள, இந்த ஆண்டு 25 தினங்களில் 28 நபர்களுக்கு மேல் பாதிக்கப்பட்டு 2 பேர்கள் இறந்திருக்கிறார்கள். இப்படி ஆண்டுக்காண்டு பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கையும் இறந்தவர்களின் எண்ணிக்கையும் உயர்ந்து கொண்டே வருகிறது என்று அறிக்கையிலிருந்து தெரிகிறது. இந்த நோயைத் தடுப்பதற்காக பயன்படுத்தக்கூடிய வாக்ஸின் என்ற ஜப்பானிய மருந்து போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை, மருந்தின் விலை அதிகமாக இருப்பதால் பெருமளவுக்கு பாதுகாப்பு அளிக்கமுடியவில்லை என்றும் நிபுணர்கள் கூறுகிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறது. இந்த வியாதி 5 முதல் 15 வயது வரையில் உள்ள குழந்தைகளைப் பாதிக்கிறது. அந்தக் குழந்தைகளுக்காக அதிகமாகச் செலவானாலும் பரவாயில்லை, தீவிரமாக நடவடிக்கை எடுத்து இந்த நோயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11·00)

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதிலே இரண்டு பிரச்னைகளை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். முதலாவதாக, தடுப்பு வேக்சின் ஏதாவது இருக்கிறதா, அந்த வேக்சின் முறைகளை நாம் கையாளலாமா, கொடுக்கலாமா என்பதை எழுப்பியிருக்கிறார்கள். Japanese encephalitis பொறுத்தவரையிலே, இப்போது உலகத்திலேயே அதற்கு சுலபமாக நாம் கொடுக்கக்கூடிய வேக்சினும், திட்டவட்டமாக நம்பக்கூடிய வேக்சினும், இன்னும் வரவில்லை. அரைகுறையாகத் தான் அதனுடைய ஆராய்ச்சி முன்னேறி இருக்கிறது. ஆகவே

தான், இதில் பணம் குறுக்கே வரவில்லை. எவ்வளவு செலவானாலும்கூட தடுப்பு முறைகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட, உறுதியாக நம்பக்கூடிய தடுப்பு முறைகள் இருக்குமேயானால் நிச்சயமாக நாம் அதை நடைமுறைப்படுத்தி ஏற்றுக்கொள்வதற்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை. அது ஒரு பிரச்னை.

நாம் எங்கே பிரச்னையை அணுக வேண்டுமென்றால் இந்த வியாதி எங்கே வருகிறது என்று பார்த்து, குறிப்பாக அதற்கு ஒரு ரிசர்வாயர் என்று இருக்கிறது. Infection is picked up by the mosquitoes கொசு அந்த வியாதியினுடைய அணுவை எடுத்துக்கொண்டு பிறகு பறவைகள், பன்றிகள், கேட்டில்—இருக்கின்ற அந்த இடத்திற்கு வந்து கொசு கடிப்பதன் மூலமாக இந்த வியாதி மிகைப்படுத்தப்படுகிறது. ஆகவே, கொசுவிற்கும் இந்த பறவைகளுக்கும் இருக்கக்கூடிய அந்தத் தொடர்பை நாம் தடுக்க வேண்டுமென்பதற்கான திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கிறோம். இந்த ஆராய்ச்சிதான் வெற்றி பெற்றிருக்கிறது. ஆனால் அந்த வியாதிக்குச் சரியான வகையிலே தடுப்பு முறைகள் இல்லை. அது ஒன்று.

இரண்டாவதாக இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரையிலே தென்னிந்தியாவிலே எல்லா மாநிலங்களிலும், குறிப்பாக ஆந்திரா மாநிலம், கர்நாடகா மாநிலம், புதுவை மாநிலம் ஆகிய மாநிலங்களிலே இது ஏற்பட்டு, அதற்காக ஒருங்கிணைந்த நடவடிக்கை எடுத்துக்கொண்டு அடுத்த ஆண்டு வராமல் என்னென்ன தடுப்பு நடவடிக்கைகளை நாம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற திட்டத்தைத் தீட்டியிருக்கிறோம். அது நிச்சயமாக வெற்றி பெற முடியும் என்று நம்புகிறேன்.

ஆனால் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்து நூற்றுக்குநூறு உண்மை. இரண்டு மூன்று ஆண்டுகளாகக் கட்டுக்கடங்காத வகையிலே, தென்நாட்டிலே பல்வேறு இடங்களில் பரவி இருப்பதால் அது ஒரு பிரச்னைக்குரிய விஷயமாக ஆகி மத்திய அரசாங்கத்தினுடைய மத்திய அமைச்சரே வந்து எல்லா மாநிலங்களையும் அழைத்துப் பேசக்கூடிய அளவிற்கு நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பேசும்பொழுது பன்றியினால் மூளைக் காய்ச்சல் நோய் வருவதாகச் சொன்னார்கள். அதனால் தமிழ்நாட்டில் பன்றிகளை வளர்ப்பதற்குத் தடை ஏற்படுமா? அது மட்டுமல்லாமல் M ni digene infantine போன்ற வியாதிகள் வருவதும், மூளைக்காய்ச்சலும் ஒரேமாதிரியுள்ளதால் மூளைக்காய்ச்சல்தான் என்று உறுதி செய்ய முடியாமல் பலர் குழம்பிப்போய் இருக்கிறார்கள். எனவே, இது மூளைக்காய்ச்சல் தான் என்று கண்டுபிடிக்க ஏதாவது வழிவகை உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கொஞ்சம் விஷயத்தைக் கண்டுப்பிடித்துத்தான் சொல்லியிருக்கிறார்கள். ஆங்கிலத்திலே சொல்ல வேண்டுமென்றால், There is a risk of over diagnosis சாதாரண காய்ச்சலைக்கூட மூளைக்காய்ச்சல் என்று over diagnosis பண்ணக்கூடிய ஒரு தன்மையிருக்கிறது என்று மத்திய அரசாங்கத்தினுடைய நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு சங்கரானந்த அவர்கள் கூட்டிய அந்தக் கூட்டத்திலே பல்வேறு நிபுணர்கள் சொன்னார்கள். அந்தக் கூட்டத்திலே சொல்லி over diagnosis பண்ணாமல், சரியான முறையில் diagnosis பண்ணினோமானால் எந்த அளவிற்கு அது இருக்கிறது என்று சொல்லி, பிறகு அதைக் கண்டுபிடிப்பதற்கான முறைகளையெல்லாம் எப்படிச் செய்வது என்பதை அறிந்து நாம் நல்ல வழி வகுத்து ஒவ்வொரு மருத்துவமனையிலும்கூட மூளைக்காய்ச்சல் என்றால் உடனடியாக கண்டுபிடிப்பதற்கான சாத்தியக் கூறுகள் இவையிவை என்று அதற்காக ஒரு எஜுகேட் செய்திருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், இங்கே பன்றி வளர்ப்பதைத் தடை செய்யலாமா என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள், அதுவொரு பெரிய பிரச்சினையாக இருப்பதால் பன்றிகளைச் சுததமாக வைத்துக்கொள்ள வேண்டும்; கொசுவிற்கும் பன்றிக்கும் இருக்கக் கூடிய தொடர்பை அறவே நீக்கிவிட வேண்டுமென்று ஒரு உததரவு போட்டிருக்கிறோம்.

அடுத்தபடியாக, மூளைக் காய்ச்சலைப் பொறுத்தவரையில் நம் தமிழகத்திலே எந்த அளவிற்கு எச்சரிக்கையாக இருந்து இருக்கிறோம் என்பதற்காக ஒரு சான்று இங்கே நம்மிடத்திலே இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், கர்நாடகா மாநிலத்திலே அங்கே அந்தத் தென்னாட்டில் நடைபெற்றிருக்கக்கூடிய—தென்னகத்தில் இருக்கக்கூடிய அந்த மாநிலங்களையெல்லாம் கூட்டிப் பேசிய அந்தக் கருத்தரங்கிலே நமக்குக் கிடைத்த தகவல், அங்கே 498 கேசஸ் ரிப்போர்ட் செய்தார்கள்; 130 பேர் இறந்து போனார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 672 பேஷன்ட்ஸ் என்று அங்கே ரிப்போர்ட் செய்தார்கள். 120 பேர் என்று இங்கே நாம் கொடுத்திருக்கிறோம். ஆந்திரப் பிரதேசத்திலே 854 பேர் ரிப்போர்ட்டட் கேஸஸ்; 302 டெத்.

புதுவையிலே 24 கேஸ்கள் 7 பேர்கள் இறந்து போனார்கள். இறப்பு சதவிகிதங்களை பார்க்கும்போது கர்நாடகத்தில் 26% தமிழ்நாட்டில் 17.8 சதவிகிதம், ஆந்திராவில் 35.4 சதம், புதுவையில் 29.2 சதவிகிதம் என்று இருக்கிறது. கணக்கு இருக்கிறது. ஆனால் அதை நாம் வைத்துக் கொண்டு புள்ளிவிவரங்கள் குறைந்திருக்கிறது என்கின்ற மகிழ்ச்சி நிச்சயமாக நமக்கு இல்லை. இருந்தாலும் எச்சரிக்கையாக இருக்க, தற்போது நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மூளைக் காய்ச்சல் பற்றி சொன்னார்கள். குறிப்பாக வடார்க்காடு மாவட்டத்தில் இந்த ஆண்டு பரவலாக இந்த மூளைக்காய்ச்சல் பரவி இருக்கிறது. குறிப்பாக திருவண்ணாமலை, போளூர், கலசப்பாக்கம் பகுதியிலே பலவேறு இடங்களில் பரவி இருந்தது. நானும் சென்று பார்த்தேன். அது அம்மை நோய் போடுகின்ற காலமாக இருந்த காரணத்தினால் இது அம்மை நோயாக இருக்கலாம் என்று பல பெற்றோர்கள் இருந்திருக்கிறார்கள். பல தனிப்பட்ட மருத்துவர்களிடம் சென்றபோது அவர்கள் உடனடியாக இவர்களை வேலூர் சி.எம்.சி.க்கோ அல்லது பாண்டிச்சேரிக்கோ எடுத்துப் போகும்படி சொல்லி இருக்கிறார்கள். அங்கேயும் கூட அவர்கள் இறந்த விவரங்கள் எல்லாம் தெரியும். இங்கே சொல்லப்பட்ட விவரங்கள் கூட, பன்றி, குதிரை போன்ற மிருகங்களைக் கடித்து விட்டு, அந்தக் கொசு குழந்தைகளைக் கடிக்கின்ற போது இந்த மூளைக்காய்ச்சல் வருகிறது என்று பல டாக்டர்கள் சொன்னார்கள். ஆனால் இன்றைய தினம் எப்படி ஆடு மாடுகளை வளர்க்கின்றார்களோ அப்படி பன்றிகளை யாரும் வளர்ப்பது இல்லை. திருவண்ணாமலை நகரத்திலே பார்ப்போமானால் பன்றிகள் யாருடையவை என்று தெரியாமல் நகரம் முழுவதும் மேய்ந்து கொண்டு இருக்கின்றன. திருவண்ணாமலை அரசு மருத்துவமனையிலும் இவைகள். ஏராளமாக மேய்ந்து கொண்டிருக்கின்றன. இதை எல்லாம் எடுத்துச் சொல்லி இருக்கிறோம். அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சுருக்கமாகக் கேளுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கவனஈர்ப்புத் தீர்மானத்தின்போது விளக்கங்கள் தேவையில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அதைப் பற்றிய கேள்வியை மட்டும் கேட்டால் நல்லது. அதுதான் முறை.

(முற்பகல் 11.10)

**மாண்புமிகு டாக்டர். எச். வி. ஹண்டே:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. திருவேங்கடம் அவர்கள் இரண்டு விஷயங்களைச் சொல்லியிருக்கிறார்கள். திருவண்ணாமலை மருத்துவமனை பற்றி சொல்லியிருக்கிறார்கள். திருவண்ணாமலை மருத்துவமனையை நான் அண்மையில் பார்வையிட்ட நேரத்தில் அங்கே சரியான வகையில் காம்பவுன்ட் சுவர் இல்லை, காம்பவுன்ட் சுவர் சரியாக இல்லாததால் பன்றிகள் உள்ளே வந்து விடுகின்றன என்பதும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. உடனடித் திட்டமாக நான் உத்தரவிட்டு இருக்கிறேன், அவைகள் உள்ளே வருவதை எப்படியும் தடுக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த நிலைமை தொடர்ந்து நடைபெற்று வருவதாகச் சொன்னார்கள்.



உடனடியாக அதைத் தடுக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்தகைய அக்கறை அனைவருக்கும் இருப்பதால் அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறோம்.

வடாற்காடு மாவட்டத்தைப் பற்றி ஒட்டுமொத்தமாகச் சொன்னார்கள். மாவட்டத்தில் ஒட்டு மொத்தமாக 203 கேஸ்கள் ரிப்போர்ட்டாகி இருக்கிறது. இதிலே முக்கியமான ஒரு விஷயம், நான் ஏற்கனவே சொன்ன மாதிரி, பறவைகளுக்கும், பன்றிகளுக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது. அதை சயின்டிபிக்காக என்ன சொல்கிறார்கள் என்றால் Rector டிரான்ஸ்மிஷன் அதை உடனடியாகத் துண்டிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த விஷயத்தைக் கவனிக்கிற நேரத்தில் ஒரு சென்சிடிவ் பிரச்னை—மற்றவர்கள் தவறாகப் புரிந்துகொள்ள வாய்ப்பு இருக்கிறது—நாம் பன்றிகளை அறவே ஒரு பகுதியில் இருக்கக் கூடாது என்று சொன்னால், அதை வேறு பலர் வேறு முறையில் எடுத்துக் கொண்டு விடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, பன்றிகளைச் சீராக எந்த இடத்தில் வைக்க வேண்டும் என்று உத்தரவு போட்டு இருக்கிறோம்.

In for egn countries they are having an organisation known as "Pig Farming" ஆனால் இங்கே அவைகள் அப்படியில்லாமல் அவைகள் தெருவில் அலையவிடப்பட்டு இருக்கின்றன. அதற்கு திட்டவட்டமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று உத்தரவு போட்டு இருக்கிறோம். இந்த உத்தரவை அமல்படுத்துவதில் சிக்கல் வராது, அரசியல் பிரச்னை எழாது என்று கருதுகிறேன், அப்படி வந்துவிட்டாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் இதைக் குறித்து நான் விசாரித்து இருப்பதால், எல்லோரும் என்னுடன் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறேன். ஆகவே, அந்த வகையில் இந்தப் பிரச்னை தீர்ந்து விடும் என்று நினைக்கிறேன்.

**திரு. இரெ. இராசமாணிக்கம்:** தலைவர் அவர்களே, எனக்கு ஒரு வாய்ப்புக் கொடுங்கள். திரு செம்மலை அவர்களுக்கு இரண்டு முறை வாய்ப்பு தரப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செம்மலை மட்டுமே அந்த கவனஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அவர் மட்டுமே அதைக் கொண்டு வந்த காரணத்தால், அவருக்கு இரண்டு முறை அனுமதி அளிக்கப்பட்டது. இந்தத் தீர்மானத்தை பொறுத்த வரையில், ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் கொண்டு வந்து இருப்பதால், ஒவ்வொருவருச்கும் ஒரு முறை வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, கவனஈர்ப்புத் தீர்மானம் பல உறுப்பினர்கள் கொடுத்திருந்தால், ஒவ்வொரு உறுப்பினரும் இரண்டு முறை கேள்விகள் கேட்பதற்கு அனுமதிக்கப்பட்டால், அதிக நேரம் ஆகும் என்பதால் ஒவ்வொரு கேள்வி கேட்பதற்கு அனுமதி கொடுப்பது என்கிற முறையை நாம் கடைபிடித்து வருகிறோம். அதைப் போலவே, ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப் பெறுகின்ற போதும், கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் பேச வேண்டும் என்று வைத்து இருக்கிறோம். அந்த முறையில் தான் இப்போது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. இரண்டு கேள்விகள் கேட்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் விரும்பினால், அதனை முதல் வாய்ப்புக் கொடுக்கின்றபோதே பயன்படுத்தி, இரண்டு கேள்விகள் கேட்டுக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

### 6. அரசினர் தீர்மானம்.

விதி 32(1)—ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32(1)—ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக் கொள்ளவேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

### 2. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(ஆ) கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ்க் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவ, 1982.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு:—

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின்கீழ் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 7/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.





### 7. அரசினர் சட்டமுன்வடிவுகள்.

(அ) கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப்பொருள் சட்டத்தின் கீழ்க் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு, 1982.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"ஆளுநர் அவர்களால் 5-1-1982 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருகள் சட்டத்தின் கீழ்க் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 1/1982) இப்பேரவை நிராகரிக்கிறது."

திரு. ப. பொன்னுரங்கம்: துணைத் தலைவரவர்களே, நான் அதை வழிமொழிகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ்க் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்டமுன்வடிவு* (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 7/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: திரு. ரகுமான்கான் அவர்களின் நிராகரிக்கும் தீர்மானமும் அமைச்சரின் தீர்மானமும் அவை முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவரவர்களே, அடக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டு போலீஸ் அராஜகத்தை உருவாக்கி, இங்கே ருத்திரத்தாண்டவம் ஆடுகிற ஆளும் கட்சியால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த அபாயகரமான, ஜனநாயக விரோதமான, சர்வாதிகாரப் போக்குக்கு வழிவகுக்கிற இந்த கறுப்புச் சட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் வன்மையாக எதிர்க்கிறேன்.

---

* 1982 பிப்ரவரி 10-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

திரு. ரா. உமாநாத்: நான் குறுக்கிடவில்லை. ருத்திரத் தாண்டவம் என்று சொன்னார்கள். அப்படியானால் அது எப்படி இருக்கும் என்று சொன்னால் பரவாயில்லை. (குறுக்கீடு—சிதம்பரத்திற்குப் போய் வந்தால் தெரியும்.)

திரு. அ. ரகுமான்கான் : கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், மருந்துப்பொருள் சட்டத்தின் கீழ்க் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்கள் எல்லாம் சமூக விரோதிகள் என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. அவர்கள் உயிருக்கும், உடல் நலத்திற்கும் பொது அமைதிக்கும் ஆபத்து விளைவிப்பவர்கள், சமூக விரோதிகள் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. இந்த சமூக விரோதிகளின் செயல்கள் தடுக்கப்பட்டாக வேண்டும். அதிலே மாறுபட்ட கருத்து யாருக்கும் கிடையாது. ஆனால் இவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்கெனவே சட்டம் இருக்கிறதா என்று கேட்டால் இந்த சமூக விரோதிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்கெனவே சட்டங்கள் இருக்கின்றன. ஏற்கெனவே நீதிமன்றங்கள் இருக்கின்றன. இந்த சமூக விரோதிகளைத் தடுக்க வேண்டும் என்று சொன்னால், கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களாக இருந்தாலும் சரி, உபசாரம் செய்பவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் மீது ஏற்கெனவே இருக்கிற சட்டங்களின்படி குற்றம் சுமத்தலாம். நடவடிக்கை எடுக்கலாம். நீதிமன்றத்திற்குக் கொண்டுவரலாம். நீதிபதிகள் விசாரிக்கலாம். குற்றவாளி என்று நீதிபதி தீர்ப்பு வழங்கலாம். சிறைச்சாலைக்குள்ளே தள்ளலாம். தண்டனை வழங்கலாம். இது ஏற்கெனவே இருக்கிறது. அப்படி இருந்தும் கூட இப்படிப்பட்ட ஒரு அபாயகரமான சட்டத்தை நீங்கள் ஏன் கொண்டு வருகிறீர்கள் என்பதை சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

சமூக விரோதிகள் என்று நீங்கள் யாரைப் பார்த்து வேண்டுமானாலும் சொல்லலாம். ஒரு பெண் விபசாரியா அல்லது பத்தினியா என்று தீர்மானிப்பது யார்? நீங்களா? நான் கேட்கிறேன். இங்கே இருக்கிற சர்க்காரா தீர்மானிப்பது? போலீஸ்காரர்களா தீர்மானிப்பது? இதைக் காட்டிலும் வன்முறையானது இதைக்காட்டிலும் கொடுமையானது இதைக் காட்டிலும் காட்டுமிராண்டித்தனமானது எங்கே இருக்க முடியும்? ஒரு பெண் விபசாரியா அல்லது பத்தினியா என்பதை ஒரு போலீஸ்காரர் சொல்கிறார் என்றால், அவர் சொல்வதை வைத்து அந்தப் பெண்ணை சிறைக்குள்ளே தள்ளுகிறீர்கள் என்றால், தண்டனை வழங்குகிறீர்கள் என்றால் நாம் ஒரு ஜனநாயக நாட்டில்தானா இருக்கிறோம் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. குண்டர்கள் என்று யார் தீர்மானிப்பது? கள்ளச்சாராயம் காய்ச்சுபவர் என்று யார் தீர்மானிப்பது? அப்படிப்பட்ட தவறுகள் நடைபெறுகின்றன என்றால் அதுபற்றி தீர்ப்பு அளிக்க வேண்டியது, அதுபற்றி தீர்மானிக்க வேண்டியது



நீதிமன்றமாகத்தான் இருக்கும். ஆனால் இங்கே என்ன நிலைமை? நீங்களே குற்றச்சாட்டை சொல்கிறீர்கள். நீங்களே விசாரிக்கிறீர்கள். நீங்களே குற்றவாளி என்று சொல்கிறீர்கள்— நீங்களே வழக்கு போடுகிறீர்கள். வழக்கு கூட அல்ல; உடனே கைது செய்து, சிறையிலே தள்ளுகிறீர்கள். நான் கேட்கிறேன். குற்றம் சுமத்துவதும் நீங்களே; தீர்ப்பு வழங்குவதும் நீங்களே; சிறையில் தள்ளுவதும் நீங்களே என்றால் நீதிமன்றம் எதற்கு? நீதிமன்றம் இங்கே இருக்க வேண்டிய அவசியம் இருக்கிறதா? இன்றைக்கு ஜனநாயகக் கோவிலின் மூல விக்கிரகம் என்று சொல்லப்படுகின்ற அந்த நீதிமன்றத்திற்கு இங்கே வேலை இருக்கிறதா? அந்த மூல விக்கிரகத்தை, அந்த நீதிமன்றத்தை அகற்றுகின்ற முறையிலே இன்றைக்கு நீங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதைத்தான் உங்களுடைய சட்டம் காட்டிக்கொண்டிருக்கிறது.

(முற்பகல் 11.20)

அரசாங்கமே நீதிமன்றமாகவும், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும், போலீஸ் அதிகாரிகளும் நீதிபதிகளாகவும் மாறக்கூடிய நிலைமை இருக்குமேயானால் நான் ஒன்று கேட்கிறேன். ஃப்ரெஞ்ச் நாட்டு வரலாற்றை நான் படித்திருக்கிறேன். அங்கே 'ஐ அம் தி ஸ்டேட்' என்று சொன்னானே அந்த லூயி மன்னன் அவனைச் சர்வாதிகாரி என்று சொன்னால் உங்களுக்கும் அவனுக்கும் என்ன வித்தியாசம்? இது என்ன சினிமா கதை விவகாரமா? திரைக்கதை, வசனம், டைரக்ஷன் எல்லாம் நானே என்று சினிமாவிலே சொன்னால் நாங்கள் கவலைப்பட மாட்டோம். ஆனால் இது மக்களின் பிரச்சினையை உள்ளடக்கிய பிரச்சினை. நீங்கள் என்ன மிகப்பெரிய தத்துவஞானிகளா? ஏதோ பகவத் கீதையிலே கண்ணன் எல்லாம் நானே என்று சொல்லியதைப் போலச் சொல்வதற்கு? ஹேபியஸ் கார்பஸ் என்று சொல்லக்கூடிய தனி மனிதனின் சுதந்திரம் புனிதமானது. அந்த உரிமையின்மீது நீங்கள் கை வைக்கிறீர்கள் என்று இந்த அரசை நான் கடுமையாகக் குற்றம் சுமத்துகிறேன்.

நீங்கள் யாரை வேண்டுமானாலும் கைது செய்யலாம், யாரை வேண்டுமானாலும் சமூக விரோதி என்று முத்திரை குத்தி விடலாம். அரசியலிலே பழி வாங்குவதற்காக துடித்துக் கொண்டிருக்கக்கூடிய நீங்கள் இன்றைக்கு உங்களுக்குப் பிடிக்காதவர்களை, உங்களை விமர்சனம் செய்பவர்களை, உங்களுடைய தவறுகளை மக்கள் மன்றத்திலே அம்பலப்படுத்துகிறவர்களை ஓராண்டுக்காலம் அவர்களைக் காவலில் தள்ளி சிறையிலே வைப்பதற்குரிய வழிவகைகளைச் செய்வதற்காகத்தான் இன்றைக்கு இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. அவர்களே தவறு செய்ய வேண்டும் என்று அவசியம் கூட இல்லை. தூண்டிவிட்டார் என்று சொன்னாலே, அந்த ஒரு வார்த்தையிலேயே அவர்களை எல்லாம் கைது செய்து விடலாம். பொது

அமைதிக்கு இடையூறு செய்யப்பட்டது; உயிருக்கும் உடமைக்கும் ஆபத்து விளைவிப்பவர்கள் என்று சொல்லி கைது செய்யலாம். ஆகவே விளக்கம் கேட்பதும் நீங்கள்தான், எப்படி எல்லாம் பாதிக்கப்படுகின்றது என்ற முடிவுக்கு வருபவர்களும் நீங்கள் தான். ஆகவே மிஸ்யூஸ் ஆஃப் பவர்' அதிகார துஷ்பிரயோகம் நடைபெறுவதற்கு ஏராளமான வாய்ப்புகள் இருக்கின்றன. இலங்கைத் தமிழர் பிரச்சினையை எடுத்துக்கொண்டால் அங்கே இருக்கக்கூடிய தமிழர்களுக்கு அனுதாபம் தெரிவிப்பதற்காக நாங்கள் அன்றைக்கு இலங்கைத் தூதரகத்தின் முன்பு அடையாள மறியல் என்று சொன்னோம். இது என்ன பஞ்சமா பாதகமா? இன்னும் சொல்லப் போனால் டெல்லிப் பட்டணத்திலே அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து பாகிஸ்தானத்திற்கு ரீகனுடைய சர்க்கார் ராணுவக் கருவிகளைக் கொடுக்கக்கூடாது என்றும், அவர்களுக்கு ஆதரவு தரக்கூடாது என்றும் டெல்லியிலே இருக்கக்கூடிய அமெரிக்கத் தூதரகத்தின் முன்பு பலர் மறியல் செய்தார்கள், போராட்டம் நடத்தினார்கள். சட்டத்தைப் பாதுகாக்கக்கூடிய கடமை முதலமைச்சருக்கு இருப்பதுபோல் பிரதமருக்கும் இருக்கின்றதல்லவா? அங்கே போராடியவர்கள் மீது வழக்கு உண்டா? அவர்களைச் சிறைக்கு அனுப்பி இருக்கிறார்களா? ஆகவே அரசியல் உள்நோக்கத்தோடுதான் நீங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழர்களைச் சந்தித்தீர்கள்.

தடையை மீறினோம் என்று எங்கள் மீது வழக்கு போட்டீர்கள். நான் இந்திரா காங்கிரஸ் நண்பர்களைத் தப்பாக சொல்வதாக அவர்கள் கருதக்கூடாது. அவர்கள் தடையை மீறினார்களே, அப்போது வழக்கு உண்டா? நண்பர் குமரி அனந்தன் அவர்கள் தடையை மீறினார்களே, வழக்கு உண்டா? இன்னும் சொல்லப்போனால் குமரி அனந்தன் கட்சிக்காரர்கள் மீதும் அவர் மீதும் போடப்பட்ட வழக்குகளை வாபஸ் வாங்கி இருக்கிறீர்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது. அதிகாரம் உங்களிடத்திலே இருந்தால் உங்களுக்கு வேண்டியவர்களுக்குச் சார்பாக அதைப் பயன்படுத்துகிறீர்கள். உங்களை விமர்சித்தால் எதிர்க்கட்சிக்காரர்களை அடக்குவதற்காக அதைப் பயன்படுத்துகிறீர்கள் என்பதுதான் தெளிவாகத் தெரிகின்றது. அதிகாரம் உங்களிடத்திலே மட்டுமல்ல—போலீஸ்காரர்கள் இன்றையதினம் ஆடுகின்ற ஆட்டமே சாதாரணமானதல்ல. இங்கேகூட தோழர்கள் வெளிநடப்பு செய்தார்களே தர்மபுரி மாவட்ட நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டி; நான் ஒன்று கேட்கிறேன். நக்ஸல்பாரி என்ற பெயராலே எவ்வளவு பேர் சுட்டுப் பொசுக்கப்பட்டிருக்கிறார்கள்? மச்சக்காளை என்ற தோழர் உயிரோடு இருக்கின்றாரா இல்லையா என்பதற்கு பல்வேறு கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. அவரைப் போலீஸ் சுட்டுப் பொசுக்கி லாரியிலே கொண்டுபோய் மழையிலே தூக்கி எறிந்து விட்டார்கள் என்ற செய்தியும் சொல்லப்படுகின்றது.



மெட்ராஸ் ஹைகோர்ட்டிலே ரிட்பெட்டிஷன் ஃபைல் பண்ணி ஆளைக் கொண்டுவா என்று சொல்லியபோது ஆளே இல்லை என்று சொல்கின்ற அளவுக்கு நிலைமை இருந்து கொண்டிருக்கின்றது. இந்த வெறியாட்டத்தை இப்போதிருக்கக்கூடிய அதிகாரங்களை வைத்துக்கொண்டு போலீஸ் துறையைச் சேர்ந்தவர்கள் செய்கிறார்கள் என்று சொன்னால் நான் உங்களைக் கேட்க விரும்புகிறேன், நாளைக்கு அவர்களிடத்திலே நீங்கள் யாரை வேண்டுமானாலும் கைது செய்து உள்ளே தள்ளலாம் என்ற அதிகாரத்தையும் கொடுப்பீர்களேயானால் நிலைமை என்ன ஆகும்?

அதுமட்டுமல்ல, அடக்குமுறை எமர்ஜன்சி இங்கே இருந்தது பற்றி பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் சொன்னார்கள். I lost my Govetnment bec.use of emergcncy excesses என்று கடற்கரையிலே பேசுகின்றபோது அவ்வாறு சொன்னார்கள். எனக்குத் தெரியாமலே பல அதிகாரிகள் பல தப்புகளையும், தவறுகளையும் செய்திருக்கிறார்கள் என்று கோடிட்டுக் காட்டினார்கள். அப்படிப்பட்ட வாய்ப்புகள், இன்று ஏராளமான அதிகாரிகள் தவறு செய்வதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன.

அதுமட்டுமல்ல. இன்றைக்கு நீங்கள் யார் மீது குற்றம் சுமத்துகிறீர்கள் என்று சொன்னால் வழக்காடுகின்ற உரிமையும் குற்றம் சுமத்தப்படுகின்றவர்களுக்கு கிடையாது. வக்கீல் வைக்க உரிமை கிடையாது நீதிமன்றத்திற்குப் போக முடியாது. கேட்டால் சொல்கிறீர்கள், அட்வைசரி போர்ட் போட்டிருக்கிறோம் என்று.

அந்த போர்டு என்ன போர்டு? அது நீங்கள் வைக்கக்கூடிய போர்டு. உங்களுடைய கருத்துக்களை பிரதிபலிக்கக்கூடிய போர்டு, அங்கே கூட, நீங்கள் யாரை குற்றம் சுமத்தி வாழ்நாள் முழுவதும் சிறையில் வைக்கிறீர்களோ, அவர்கள் வாதிடுவதற்கு வக்கீல் வைத்துக் கொள்ள முடியுமா என்று கேட்டால், அந்த வக்கீல் வைத்துக் கொள்ளக்கூடிய உரிமையைக்கூட நீங்கள் மறுத்திருக்கிறீர்கள். அப்படி என்று சொன்னால் நீங்கள் ஜனநாயகத்தை அப்பட்டமாக படுகொலை செய்கிறீர்கள் என்றுதான் அதற்குப் பொருள்,

அது மட்டும் அல்ல. இன்றைக்கு சென்னை நகரத்திலே ஏழை எளிய அரிசன மக்கள் ஏராளமானவர்கள் குடிசைகளை போட்டிருக்கிறார்கள். வாழ்வதற்கு வழியற்ற அந்த ஏழை ஜனங்களுக்கு எதிராக, அந்த ஆதிதிராவிட மக்களுக்கு எதிராக, சர்க்கார் நிலத்தில், கார்ப்பரேஷன் நிலத்தில் குடிசை போட்டிருக்கிறார்கள் என்று சொல்லி, ஆயிரக்கணக்கான மக்களை 24 மணி நேரத்திற்குள்ளாக கைது செய்து, வாழ்நாள் முழுவதும் சிறையில் வைக்கக்கூடிய ஒரு அபாயத்தை இந்தச் சட்டத்தின் மூலம் அவர்களுக்கு எதிராக நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல, நீங்கள் தற்போது, தடுப்புக் காவல் ஆணை பிறப்பித்திருக்கிறீர்கள். அப்படி பிறப்பிப்பதற்கு முன்னாலேயே ஒரு நபர் பம்பாய்க்குப் போகயிருக்கலாம். அல்லது பெங்களூருக்குப்போயிருக்கலாம். அவருக்கு விவரம் தெரியாமல் இருக்கலாம். ஆனால் அவர் ஒளிந்துக் கொண்டிருக்கிறார் என்று சொல்லி, அவருடைய சொத்துக்களை, நீங்கள் விற்று, ஏலம்போட்டு, அதை அபகரிக்கின்ற, அநியாயமான, அக்கிரமமான, மோசமான சட்டப்பிரிவு இதிலே இடம் பெற்றிருக்கிறது என்று சொன்னால் இட்லர் கூட இதற்காக வெட்கப்படுவான். முசோலினி கூட இதற்காக வெட்கப்படுவான் என்று நான் நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல, உங்களுடைய ரத்தத்தின் ரத்தமாக இருப்பவர்களானாலும், நீங்கள் யாரை வேண்டுமானாலும், சிறையிலேயிருந்து விடுதலை செய்து கொண்டு வரலாம், அதற்கு உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் அப்பாவிகள் அங்கே போய் தெரியாமல் மாட்டிக் கொண்டால் அவர்கள் உங்களுடைய ஆணைகளின் மூலமாகவே வெளியே வருவதாகவே வைத்துக் கொண்டாலும் அப்படி வெளியே வருகிறபோது, அந்த ஆணையில் அதிகாரி எந்த இடத்தைச் சொல்கிறாரோ, எந்த நேரத்தைச் சொல்கிறாரோ, அந்த இடத்திற்கு, அந்த நேரத்திற்கு போயாக வேண்டும். இல்லையென்று சொன்னால், இரண்டு ஆண்டு சிறை தண்டனை என்று போட்டிருக்கிறீர்கள் என்று சொன்னால் இது எவ்வளவு மோசமான ஒரு நிலைமை என்பதை சற்று எண்ணிப் பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது, இன்றைக்கு நீங்கள் கொண்டு வந்திருக்கிற சட்டத்தினுடைய நிலைமைகள் என்ன என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு ஒரு அதிகாரி தப்பு செய்கிறார் என்றால், அந்தத் தப்பு செய்கிற அதிகாரி மீது வழக்குப்போட முடியாது. அந்த ஆபத்தும் இதில் இருக்கிறது. அடுத்து கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்காக இந்தக் கடுமையான சட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்று சொல்கிறீர்களே, உங்களைப் பார்த்துக் கேட்கிறேன், கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் பட்டியலில் என் கட்சிக்காரரும் இருக்கிறார்கள், அந்தப் பட்டியலில் என்னிடத்திலே இருக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் சபையிலேயே சொன்னாரே, அவர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை. ரத்தத்தின் ரத்தம் என்பதாலா? தயவுசெய்து அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும் என்று கேட்க விரும்புகிறேன். அது மட்டும் அல்ல, கள்ளச்சாராயத்தை ஒழிக்கின்ற முயற்சியில் தோற்று போய்விட்டீர்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் எஸ். டி. எஸ். அவர்களே ஒப்புக்கொண்டார். இன்றைக்கு கள்ளச்சாராயம் பெருக்கெடுத்து ஓடுகிறது. என்ன காரணம்? விலைவாசி ஏற்றத்தைப்போல, கள்ளச்சாராயத்தின் விலையும் ஏறியிருக்கிறது. மிக மோசமாக உள்ள கள்ளச் சாராயமாக இருந்தாலும், நாட்டிலே



அதைத்தான் குடிக்கிறார்கள். இன்னும் ஒரு வேடிக்கை உங்களுடைய ஆட்சியிலே, அது உங்களுடைய பத்திரிகையிலேயே வந்திருக்கிறது. நாகர்கோவில் பக்கத்திலே ஒரு கழுதை கள் குடித்து விட்டு கலாட்டா செய்தது என்று கிண்டலாக அதிலே வெளியிடப்பட்டிருக்கிறது. உங்கள் ஆட்சியில் கழுதைகள் கூட குடித்துவிட்டு களிநடனம் புரிகின்ற காட்சியை பற்றி உங்களுடைய பத்திரிக்கையே எழுதியிருக்கிறது. ஆனால் கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியாமல் நீங்கள் அதை ஒழிப்போம் என்று சொல்லி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, அதன் வாயிலாக பலபேர்களை உள்ளே தள்ளுவதற்காகத்தான் இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறீர்களே தவிர வேறு அல்ல. (மணியடிக்கப் பெற்றது) ஆகவே அந்தக் காரியம் தவறான காரியம் என்று சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன்.

அடுத்தபடியாக, விபச்சாரத்தைப் பொறுத்தவரையில் அதை ஒழிப்போம் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார். ஆண்கள்தான் அதற்குக் காரணம் என்றும் சொன்னார். ஆண்களை தண்டிப்பதற்காக சட்டம் வருகிறது என்று சொன்னார். முதல் தடவை விபச்சாரம் செய்தால் மன்னிப்பு, இரண்டாம் தடவை விபச்சாரம் செய்தால் அபராதம், 3ஆவது தடவை விபச்சாரம் செய்தால் ஜெயில் என்றெல்லாம் சொன்னார்களே அந்தச் சட்டம் என்ன ஆயிற்று என்றே தெரியவில்லையே என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்து குண்டர்களைப் பற்றிய பிரச்னை. உங்களுடைய ஆட்சி கலைக்கப்பட்டபோது நடைபெற்ற போராட்டத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தொண்டர்கள் வன்முறையில் ஈடுபட்டார்கள் என்று வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. போலீஸ்காரர்கள் செய்தது எல்லாம் நியாயம் தான் என்று போலீஸ் மானியத்திலே முதலமைச்சர் அவர்கள் பேசினார்கள். அப்படியானால் அந்தக் குண்டர்கள் மீது தொண்டர்கள் மீது போடப்பட்ட வழக்கு ஏன் வாபஸ் வாங்கப்பட்டது? வாபஸ் வாங்கவேண்டிய அவசியம் என்ன? உங்களுடைய கட்சிக்காரர்கள் என்பதினால் தானே. ஆக சட்டம் கொண்டு வருவது யாரை ஏமாற்றுவதற்காக. எதிர்க் கட்சிக்காரர்களையும் வேண்டாதவர்களையும் தண்டிக்க வேண்டும் என்பதற்காகத்தான் அதைக் கொண்டு வருகிறீர்கள் என்று சொல்கிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், ஆதாரத்தோடு சொல்கிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு அதைக் கொண்டு வர விரும்புகிறேன். நில ஆக்கிரமிப்பை உங்களுடைய கட்சிக்காரர்கள் தான் செய்திருக்கிறார்கள் என்று சொல்ல விரும்புகிறேன். இதே சென்னை நகரத்திலே, அந்த ஆக்கிரமிப்புகளின் விவரங்களை பார்ப்பீர்களேயானால், கோவிலுக்குச் சொந்தமான இடம்

ஒன்றை கோவிந்தராஜ முதலியார் என்பவர் வாடகைக்கு எடுத்திருக்கிறார்கள், உங்களுடைய கட்சிக்காரர்களே அதை ஆக்கிரமித்திருக்கிறார்கள்.

(முற்பகல் 11.30)

அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டிருப்பதாக எனக்கு தகவல் கிடைத்திருக்கிறது. எவிக்ஷன் ஆர்டர், நில ஆக்கிரமிப்பு செய்ததற்குப் பிறகு அவர்களை வெளியேற்றவேண்டும் என்று சொல்லி நிர்வாக அதிகாரி எவிக்ஷன் ஆர்டர் போட்ட பிறகும்கூட இவ்வளவு நாட்களாக நடவடிக்கைகள் எடுக்கவில்லை. யாரைப் பாதுகாப்பதற்காக இந்தக் காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்கிறேன். அமைச்சர் அவர்களின் தலையீடு இதில் இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) ஆகவே நான் சொல்ல விரும்புவது இந்தச் சட்டம் ஜனநாயகத்திற்கு விரோதமான சட்டம். இது சர்வாதிகாரச் சட்டம். மக்கள் உரிமைகளைப் பறிக்கக் கூடிய சட்டம்.

இன்று தேசிய பாதுகாப்புச் சட்டம் என்ற ஒரு சட்டம், இருக்கிறது. அந்த பாதுகாப்புச் சட்டத்தைப் பொறுத்தமட்டில் என்ன நடவடிக்கை எடுத்தாலும் மத்திய அரசுக்கு தகவல் தெரிவிக்கவேண்டும். நாராயணசாமி நாயுடுவை சமூக விரோதி என்று சொல்லி அந்தச் சட்டத்தின்கீழ் கைது செய்தார்கள். திருமதி இந்திரா காந்தி அவர்கள் தலையிட்ட பிறகுதான் நாராயணசாமி நாயுடுவை வெளியே விடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆகவே மத்திய அரசுக்குத் தகவல் தெரிவிக்காமல், மத்திய மரசு தலையிட்டு உங்கள் ஆட்டங்களுக்கு தடைபோடும் என்றுதான் இன்று இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட்டிருக்கிறீர்கள் என்று கூறி என் உரையை முடிக்கிறேன். இதை எதிர்க்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : திரு ரகுமான்கான் அவர்கள் பேசும் போது சொன்னார்கள். தேசிய பாதுகாப்புச் சட்டம் இருக்கும் போது இந்தச் சட்டம் எதற்கு என்றும் தேசிய பாதுகாப்புச் சட்டம் இருந்தால் மத்திய அரசுக்கு தெரிவித்து விட்டு கைது செய்யவேண்டும் என்ற இடர்ப்பாடு இருக்கிறது, ஆகவே இந்தச் சட்டம் என்று சொன்னார்கள். அப்படியானால் மத்திய அரசிடம் தெரிவித்து விட்டு கைது செய்தால் அதை சரி என்று நீங்கள் நினைக்கிறீர்களா? தேசிய பாதுகாப்புச் சட்டத்தை நாங்கள் எதிர்த்தோம், இதையும் நாங்கள் எதிர்க்கிறோம். அதேபோல் இரண்டையும் எதிர்ப்பதற்கு நீங்கள் தயாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாக இருந்தாலும் மாநில அரசாக இருந்தாலும் இது போன்றவை ஜனநாயக விரோதமான சட்டம் என்பதுதான் எங்களுடைய கருத்து. தேசிய பாதுகாப்புச் சட்டத்தைப்



பொறுத்தமட்டில் நாங்கள் கடுமையாக எதிர்த்திருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால் (குறுக்கீடுகள்) கடுமையாக அதை நாங்கள் எதிர்த்திருக்கிறோம். ரிக்கார்ட்டாவதன் காரணமாக வோட்டு போட்ட பிரச்னைக்கு வருகிறேன். திரு. முரசொலி மாறன், எங்கள் கட்சி எம். பி., அவர்கள் பேசிய பேச்சு அப்படியே வெளிவந்திருக்கிறது. அதைச் சொல்கிறேன்.

''ஜனநாயகம், சுதந்திரம் ஆகியவற்றின் அடித்தளமே ஹேபியஸ் கார்பஸ் என்கிற தனி நபர் உரிமைதான். தடுப்புக் காவல் சட்டமும் ஜனநாயகமும் ஒன்றாக இருக்கமுடியாது. தடுப்புக் காவல் சட்டம் எங்கே ஆரம்பிக்கிறதோ அங்கே சட்டத்தின் ஆட்சி முடிவிற்கு வந்து விடுகிறது என்று பல நீதிபதிகள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். துணைத் தலைவர் அவர்களே, அங்கே அவர்கள் குறிப்பிடுகிறார்கள், நம் சட்டப் புத்தகத்திலிருந்து அறவே தடுப்புக் காவல் சட்டம் நீக்கப்பட்டால் தடுப்புக் காவல் சட்டத்திற்கு தேவை இல்லாமல் போய் விடும். போய் விட்டால் நான் மிக்க மகிழ்ச்சியுடையவனாக இருப்பேன். துணைத் தலைவர் அவர்களே, மக்கள் அவையில் பேசும்போது மாண்புமிகு உள்துறை அமைச்சர் இந்த தடுப்புக் காவல் சட்டம் தற்காலிகமானதுதான் என்று கூறியிருப்பதைக் கண்டு நான் மகிழ்கிறேன்.. ஆனாலும் கை எடுத்து கும்பிடுகிறேன், தயவு செய்து இந்தச் சட்டத்தை அகற்றுகிற முயற்சியில் (குறுக்கீடு).

திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்து பொருள் சட்டத்தின்கீழ் குற்றம் செய்பவர்கள், விபசார குற்றம் செய்பவர்கள், சட்ட விரோதமாக பிறர் நிலங்களில் குடிசைகள் போடுகிறவர்கள் ஆகியோர் மீது, அமைதிக்கு பங்கம் விளைவிக்கிற அபாயகரமான செயல்களைத் தடுத்து அவர்களை தடுப்புக் காவலில் வைக்க வகை செய்யும் இந்தச் சட்டத்தையும் இதைக் கொண்டு வந்துள்ள அரசையும் நான் பாராட்டுகிறேன், இந்தச் சட்டத்தை விட கடுமையான தேசிய பாதுகாப்புச் சட்டத்தை மத்திய அரசு கொண்டுவந்தபோது முழுமையான ஆதரவை முகமலர்ச்சியோடு வாக்களித்த திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இந்தச் சட்டத்தை இங்கே எதிர்க்கிறார்கள். (குறுக்கீடு) தமிழ் அரசு கொண்டுவந்தால் அது அடக்குமுறை, மத்திய அரசு கொண்டு வந்தால் அது அடக்கமுறையா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒருவர் பேசும்போது மற்றொருவரை 'ரெபர்' பண்ணி பேசக் கூடாது. அப்படிப் பேசினால், பதில் சொல்வதற்கு வாய்ப்பு கொடுத்தாக வேண்டும். எனவே, யாரையும் 'ரெபர்' பண்ணாமல் பேச வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு அரசியல் இயக்கம். இதிலே உள்ள ஒரு மிக முக்கியமான பிரச்னை என்ன

வென்றால், திராவிட முன்னேற்றக் கழகம் நாடாளுமன்றத்திலே ஆதரவு கொடுத்ததைப் பற்றிச் சொன்னார்கள். அதைப் பற்றித் தெளிவாக்க விரும்புகிறேன். இந்த மசோதாவைப் பொறுத்தவரையில், அதிலே இருக்கின்ற ஷரத்துக்களுக்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், இந்தப் பிரச்னை குறித்து, அதையொட்டிப் பேசுகின்றபோது ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. இங்கேகூட, மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள்......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது பாயின்ட் ஆப் ஆர்டரிலே வராது. கிளாரிபிகேஷன்......(கூச்சல்) நம்முடைய பேரவை விதியை அனுசரித்து நடத்த வேண்டும். இஷ்டம்போல் பேசக் கூடாது.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு துணைத் தலைவர் இவர்களே, நெடுமாறன் அவர்கள் தருமபுரி மாவட்டத்தில் நடந்த போலீஸ் அராஜகத்தைக் கண்டிக்கின்ற வகையில் வாக் அவுட் செய்தார்கள். அப்போது நாங்கள் வாக் அவுட் செய்யவில்லை. அதைப்போல், பால் கமிஷன் பிரச்னை வந்தபோது. நாங்கள் வாக் அவுட் செய்தோம்........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதெல்லாம் முடிந்துவிட்டப் பிரச்னை. திரு. வின்சென்ட்.

**திரு. மி. வின்சென்ட்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே எதிர்ப்பும், மத்தியில் ஆதரவும் தருவது இரட்டை நிலை அல்லவா? இரட்டை வேடம் அல்லவா? என்பதை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். டெல்லியிலே ருத்ரதாண்டவம் ஆடும்போது, அதற்கு பக்க மேளம் அடித்துவிட்டு, தமிழகத்திலே தப்புத் தாளம் போடுவது நியாயம்தானா என்பதைக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கள்ளச் சாராயம் காய்ச்சுவது என்பதும், விற்பது என்பதும் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் உண்டு; தி.மு.க. காலத்திலும் உண்டு; இப்போதும் உள்ளது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். கள்ளச் சாராயம் குடித்து, அங்கம் அங்கமாக அழிந்து இறந்து கொண்டு வரும் மக்கள் உயிரைக் காக்க வேண்டியது. அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டியது அரசின் கடமை. இதை உணர்ந்துதான் மத்திய அரசு 1958லே கள்ளச் சாராயம் பற்றி இந்தியாவிலுள்ள முழுமையான நிலையைக் கண்டறிய ஒரு கமிட்டியை நிறுவியது. அந்தக் கமிட்டி தன்னுடைய அறிக்கையை 1962ஆம் ஆண்டில் சமர்ப்பித்தது. காவிரி நதிக் கரை கள்ளச் சாராயம் காய்ச்ச சொர்க்க பூமியாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறது. 1958ஆம் ஆண்டு முதல் கள்ளச் சாராயம் காய்ச்சுவதை ஒழிக்கவேண்டுமென்று அரசு விரும்பியிருக்கிறது.



ஆனால், முடியவில்லை. ஏன் என்பதைத் தான் சிந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். சட்டத்திலே சற்று கடுமை குறைவு தான் அதற்குக் காரணம். ஆதலால்தான், கள்ளச்சாராயம் காய்ச்சுவதை ஒழிக்கவேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு, இந்த சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது என்பதை சட்டமன்ற உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். தமிழகத்திலே கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டம், மகாராஷ்டிராவில் அமுலில் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன் கள்ளச் சாராயம் ஓடுகிறது என்ற குற்றச்சாட்டை சொல்லும்போது, கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்கும் சட்டம் கொண்டு வருகின்றபோது, இது அராஜகம், அடக்குமுறை என்று சொல்வது தி. மு. கழகத்தினுடைய வாடிக்கை; இப்படி நடந்து கொண்டிருக்கும் வேடிக்கையை தமிழக மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களை நாம் விட்டுவிட முடியாது. கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் கொலைக்காரர்களைவிட மிகவும் கொடியவர்கள் என்பதைத் தெரியப்படுத்த வேண்டியது என் கடமை. வியாபார எண்ணம்கொண்டு, போதை தரும் மருந்துகளை, கண்பார்வையைப் பறிக்கக்கூடிய மருந்துகளைப் படிப்படியாக அதிலே விஷப் பொருள்களைச் சேர்க்கிறார்கள் என்பதை யாரும் மறக்கமட்டார்கள். குளோரைட் போன்ற விஷப் பொருள்களையெல்லாம் அந்தக் கள்ளச் சாராயத்திலே கலக்கி, வியாபாரத்தைப் பெருக்கி, பணம் சம்பாதிக்கும் அந்த எண்ணம் உள்ளவர்களை கைது செய்து, கடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் கொண்டுவர இந்தச் சட்டம் தேவை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெங்களூரில் நடந்ததைப்போல், பம்பாயில் நடந்ததைப் போல் இந்த விஷம் கலந்த கள்ளச் சாராயத்தைக் குடித்து, அதிகப்படியாக பல நூறுபேர்கள் ஒரே நேரத்திலே இறந்த கொடுமை, தமிழகத்திலே நிகழக் கூடாது என்ற காரணத்திற்காக கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டத்தை மாமன்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

(முற்பகல் 11-40)

தமிழகத்தின் பண்பாடு, பெண்களின், தாய்மார்களின் பெருமையைக் காக்கவேண்டுமென்பது; பண்பாட்டைக் காக்க வேண்டுமென்பது. இந்தப் பெண்களின் பெருமையைக் காக்கவே, இந்தச் சட்டம், விபசாரக் குற்றம் புரிபவர்களுக்காக இந்தச் சட்டம் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வருங்காலத்தில் இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும்போது, கல்லூரி மாணவிகள் பஸ்ஸுக்காக காத்து நிற்கும்போது, அந்தப் அப்பாவிப் பெண்களை பலவந்தமாக கார்களில் கடத்திச் சென்று, வியாபாரத்தில்

ஈடுபட, விபசாரத்தில் ஈடுபடச் செய்பவர்களைத் தண்டிப்பதற்காக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. வியாபாரத்தில் ஈடுபட, விபச்சாரத்தில் ஈடுபட கட்டாயப்படுத்தும் கொடியவர்களைத் தடுப்புக் காவலில் அடைக்கவேண்டுமென்ற இந்தச் சட்டத்தை யாரும், எந்த எதிர்க்கட்சியும் மறுக்கமாட்டார்கள், எதிர்க்கமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். விளக்கேற்றிய சீமாட்டி பிளாரன்ஸ் நைட்டிங்கேள் ஆக அன்னிபெசன்ட்டாக, இராணி மங்கம்மாளாக, தில்லையாடி வள்ளியம்மையாக, இராணி லட்சுமி தேவியாக, ராமாபாயாக, கற்புக்கரசி கண்ணகியாக, அமுதசுரபி மணிமேகலையாக, விஞ்ஞான மேதை க்யூரியாக பண்பட்டப வார்க்கும் ஔவையாக, புனிதவதி திரேஸாவாக உருவெடுத்து தமிழகத்திற்குப் பெருமை சேர்த்துத் தரவேண்டிய பெண் இனத்தை, விபச்சாரி எனப் பெயர் எடுக்க கடத்திப் போய் காரிலே கற்பினைச் சூறையாடும் நஞ்சினும் கொடிய வஞ்சகர்களை மாறுகால் மாறுகை வாங்கினாலும் தகும். தாய்க்குலத்தின்மீது பாசமுள்ள எதிர்க்கட்சியினரே இந்தச் சட்டத்திற்கு முழு ஆதரவை நீங்கள் தாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குண்டர்கள் என்றால் யார் என்று கேட்கிறார்கள். இந்தச் சட்டத்திலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஐ.பி.சி.யில் offences affecting the humen body என்ற அத்தியாயமும் offences against property என்ற அத்தியாயமும் criminal intimidation, insult & annoyance என்ற அத்தியாயமும் குண்டர்களைக் குறிப்பது என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அத்தியாயங்களின் கீழ் வருகிறார்கள், கொலைக்காரர்கள், பெண்களைக் கடத்திச் செல்கிறவர்கள், கற்பைச் சூறையாடுகிறவர்கள், திருடர்கள், வழிப்பறிக்காரர்கள், கொள்ளைக்காரர்கள், ஏமாற்றுக்காரர்கள் அத்துமீறி நுழைவோர்கள் இத்தகைய குற்றங்களைச் செய்கிறவர்களை கடுமையாக தண்டிக்கவே இந்தத் தடுப்புக் காவல் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பொது மக்கள் விரோதிகளைத் தடுப்புக் காவலில் வைக்கக்கூடாது என்று வாதாடுவோர் இருக்கமுடியாது. ஆதலால் இந்தச் சட்டத்திற்கு ஆதரவு அளித்து ஒரே மனதாக நிறைவேற்ற முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தச் சட்டத்தை பாராட்டி முடித்துக்கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ்க் குற்றஞ்செய்பவர்கள், குண்டர்கள், விபச்சாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்கள், அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்டமுன்வடிவின் மீது காங்கிரஸ் கட்சியின் சார்பிலே கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக மத்திய அரசாங்கம் நேஷனல் செக்யூரிட்டி ஆக்ட் என்று சொல்லக்கூடிய தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு



களின் கீழ் இன்றைக்கு தமிழக அரசாங்கம் இதைக் கொண்டு வருவதாக நான் அறிகிறேன். மத்திய அரசாங்கம் தேசியப் பாதுகாப்புச் சட்டம் என்பதை, தேச விரோத சக்திகள், பிளாக் மார்க்கட் செய்கிறவர்கள், கடத்தல்காரர்கள் இவர்களைத்தவிர ஆன்டி—சோஷியல் எலிமென்ட்ஸ் என்ற ஒரு சாராரையும் சேர்த்து இருந்தார்கள். தமிழக அரசாங்கம் ஆன்டி-சோஷியல் எலிமென்ட்ஸ் என்பதை எடுத்துக்கொண்டு இவர்கள் சிலவற்றைக் கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவர்கள், விபச்சாரத்தில் ஈடுபடுகிறவர்கள், இடங்களை ஆக்கிரமிப்பவர்கள்—சேர்த்து இவர்களை எல்லாம் தடுப்புக் காவலில் வைக்கவேண்டுமென்ற முறையிலே இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. ஆனால் ஒரு சாதாரண பிரச்சினைக்காக இந்தச் சட்டத்தை நீங்கள் கொண்டுவர வேண்டுமா என்று கேட்க விரும்புகிறேன். கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவர்கள் என்று சொல்லி தடுப்புக் காவலிலே வைக்க அவர்களைக் கைது செய்ய வேண்டும் என்று அரசாங்கம் கருதுமானால் எத்தனையோ சட்டங்கள் இருக்கின்றன. தமிழகத்திலே பல்வேறு சட்டங்கள் அவைகளுக்காக இருக்கின்றன. கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்காக அப்படிக் காய்ச்சுகிறவர்களைத் தடுப்பதற்காக பல்வேறு சட்டங்கள் இருக்கின்றன. அது மட்டுமல்ல, இன்றைக்கு கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவர்கள் யார் என்பதை ஆழமாகச் சிந்தித்தால் ஒருவன் முதன்முறையாக குற்றம் செய்வானேயானால் அவன் அதை காவல் துறைக்குத் தெரியாமலேயே செய்யலாம். இரண்டாவது முறையாக அந்தக் குற்றத்தைச் செய்தால் காவல் துறைக்குத் தெரியாமல் இருக்கலாம்; ஆனால் அதே குற்றத்தை மூன்றாவது முறையாகச் செய்தால் காவல்துறையினரின் அனுமதியோடுதான் செய்கிறான் என்றுதான் பொருளே தவிர, காவல்துறைக்குத் தெரியாமல் செய்வதாக யாரும் கருத முடியாது. ஆகவே, கள்ளச் சாராயம் காய்ச்சப்படுகிறது என்பதை அறுதியிட்டு, உறுதியிட்டுச் சொல்வேன். காவல்துறையினருக்குச் சம்பந்தம் இல்லாமல் கள்ளச் சாராயம் காய்ச்சப்படுவதே இல்லை; தொடர்ந்து மாமூல் முறை இன்றைக்கும் வாங்கப்படுகிறது.

காவல் துறையைப் பற்றி முன்பு சொன்னார்கள். அவர்களுக்குப் போதிய வருமானம் கிடைக்கவில்லை என்று. ஆனால் இப்பொழுது கள்ளுக்கடைகள், சாராயக் கடைகள் எடுத்திருப்பவர்கள் பல இலட்சக் கணக்கான ரூபாய்களை மூலதனமாகப் போட்ட காரணத்தால், அரசாங்கத்தின் சாராயம் அதிக விலையாக இருப்பதால், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களை ஊக்குவித்து, நீங்கள் காய்ச்சும் கள்ளச் சாராயத்தை எங்களிடம் கொடுத்து விடுங்கள்; நாங்கள் அதை அசல் சாராயம் என்று மாற்றி அசல் சாராயத்தை என்ன விலைக்குக் கொடுக்கிறோமோ அந்த விலைக்கு அதை விற்றுக் கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். இதனால் கள்ளச் சாராயக்காரர்களுக்கும் இலாபம் கிடைக்கிறது; அரசாங்கத்தின் கடைகளை எடுத்தவர்களுக்கும்

கூடுதலாக இலாபம் கிடைத்துக் கொண்டிருப்பதை யாரும் மறுத்து விட முடியாது. ஆகவே, அரசாங்க அதிகாரிகள், அரசாங்கத்தோடு தொடர்பு உள்ளவர்கள்தான் இன்றைக்குக் கள்ளச் சாராயத்தை ஊக்குவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே, நீங்கள் இதை முதலில் கட்டுப்படுத்துங்கள்; தானாகவே கள்ளச் சாராயம் காய்ச்சப்படுவது தடுக்கப்பட்டு விட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, குண்டர்கள் என்றால் யார் என்பதற்கு கிளாசிபிகேஷன் இல்லை. உங்களுடைய அகராதியின்படி ரௌடி என்றால் குண்டர்கள். உங்களுடைய ஆட்சியிலேதான் ஒரு ரௌடிக்கு அறங்காவலர் குழுத் தலைவர் பதவியைக் கொடுக்கிறீர்கள். எனவே, இதை நீங்கள் எப்படிக் கட்டுப்படுத்த முடியும்? சட்டத்திலுள்ள பிரிவுகளைப் பயன்படுத்தி அயோக்கியர்களைத் தடுப்பதற்குப் பதிலாக அவர்களைப் பாதுகாப்பாக வைத்துக்கொண்டு இருக்கிறீர்கள் ஏனென்றால் அவர்கள் தங்களுக்கு ஆதரவாகக் கோஷம் போடுவார்கள் அல்லது தங்களுக்குப் பாதுகாப்பாக இருப்பார்கள் என்பதற்காக நீங்கள் குண்டர்களைக் காப்பாற்றுகின்ற அளவிற்கு இருக்கிறீர்கள். எந்தக் காலத்திலேயும் குண்டர்கள் ஆளுங்கட்சிக்கு ஆதரவாகத் தான் இருப்பார்கள் அதை யாரும் மறுக்க முடியாது. காரணம் ஆளுங்கட்சியிலே அவர்கள் இருந்தால்தான் அவர்களுக்கும் பாதுகாப்பு. எனவே, குண்டர்கள், சமூக விரோதிகளெல்லாம் ஆளுங்கட்சிப் பக்கத்திலேதான் இருப்பார்கள். நாளைக்கு நீங்கள் இல்லாமல் இன்னொருவர் ஆட்சிக்கு வரலாம்; அப்பொழுதும் அவர்கள் உங்களை விட்டு அந்த ஆட்சியின் பக்கம் போய் விடுவார்கள்.

திரு. இரா. முத்தையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் பேசும்பொழுது குண்டர்களெல்லாம் ஆளுங்கட்சியின் பக்கம் இருப்பார்கள் என்று அறுதியிட்டுச் சொல்கிறார்கள். அதைப்போலவே, டெல்லியிலேயும், ஏனைய மாநிலங்களிலேயும் இருக்கிறது என்று அவர்கள் சொல்கிறார்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

திரு நா. சுந்தரராஜ்: துணைத் தலைவரவர்களே, அப்படி என்றால் நண்பர் முத்தையா அவர்கள் அதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் உண்மையைச் சொல்கிறேன். அப்படிப்பட்டவர்கள் ஆளுங்கட்சிப் பக்கத்தில் இருந்தால்தான் அவர்களுக்கு ஆதரவு கிடைக்கும். சமுதாய விரோதிகள் என்பவர்கள் இன்றைக்குப் பெரிய மனிதர்கள் என்ற போர்வையில் இருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்களுக்கு ஆளுங்கட்சியின் ஆதரவு இருப்பதால்தான். சமூக விரோதிகள் ஆளுங்கட்சிக்கு ஆதரவாகத்தான் இருப்பார்கள்.





திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ரௌடிகளையெல்லாம் அறங்காவலர் குழுத் தலைவராக நியமித்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். யாரையும் நாம் தெரிந்து நியமிப்பதில்லை.

* * * * * * *

ஆகவே, அறங்காவலர் குழுத்தலைவராகப் போடப்பட்டவர்களெல்லாம் ரௌடிகள் என்று சொல்வது பொருந்தாது என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன்: பாலகிருஷ்ணன் ரௌடி லிஸ்டிலே இருக்கிறாரே....

திரு. நா. சுந்தரராஜ்: துணைத் தலைவரவர்களே, யாரையும் புண்படுத்த வேண்டுமென்பதற்காக நான் சொல்லவில்லை. குண்டர்கள் என்பதற்கு ஆங்கிலத்திலே ரௌடி அல்லது கேடி என்றுதான் வரும்.

அடுத்து, விபச்சாரம் குற்றம் சம்பந்தமாக....

திரு. ஆர். மணிமாறன்: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுங்கட்சியின் சார்பாகத் தான் சமூக விரோதிகளும், குண்டர்களும் இருப்பார்கள், நாளைக்கு வேறு எந்தக் கட்சி ஆளுங்கட்சியாக வந்தாலும் அந்த ஆளுங்கட்சியின் சார்பாகத்தான் குண்டர்கள், சமூக விரோதிகள் இருப்பார்கள் என்று மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் சொல்வது, பாரதத்தினுடைய பிரதம அமைச்சர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் ஆண்டு கொண்டிருக்கிறார்கள், அவர்களை அவமானப்படுத்துவதாக இது அமைகிறதே என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்ல விரும்புகிறேன்.

(முற்பகல் 11.50)

தமிழகம் முழுவதும் இப்படிப்பட்ட நிலைமை இருக்கும் என்று அவர்கள் சொன்னார்கள் என்று சொன்னால், ஒட்டு மொத்தமாக இந்திய அளவில் ஆளுங்கட்சியாக இருக்கின்ற காங்கிரஸ் கட்சிக்கு குண்டர்களும், சமூக விரோதிகளும் இன்றைக்கு கைதூக்கி அவர்களுக்கு ஆதரவு தந்துகொண்டிருக்கிறார்களா என்பதைத்தான் கேட்க விரும்புகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: துணைத் தலைவர் அவர்களே, நண்பர் மணிமாறன் தன்னுடைய வார்த்தை ஜாலத்தால், இன்று புதிய ஒரு விஷயத்தை வைத்திருக்கிறார். அவருக்கு நான் பதில் சொல்லுகிறேன். பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். நான் சாதாரணமாக இருக்கக்கூடிய, சமுதாயத்தில் இருக்கக்

* *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கூடிய ஒழுக்கக் கேடுகளைச் சொல்லுகிறேனே தவிர, நான் பாரதப் பிரதமர் இந்திராகாந்தியை சம்பந்தப்படுத்தியோ, அல்லது உங்களுடைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களைச் சம்பந்தப்படுத்தியோ நான் பேசவில்லை.

இது இயற்கையாக இருக்கின்ற நடைமுறை. இதிலே ஏன் நீங்கள் ஆத்திரப்படுகின்றீர்கள் என்பது புரியவில்லை. சாதாரணமாக நாம் பார்க்கின்ற காலத்திலே இந்தக் கட்சி ஆட்சியிலே இருந்தாலும் இன்றைக்குப் பல பேர்கள் கட்சி மாறி, கட்சி மாறி வருகிறார்கள். அந்தக் காலத்தில் காங்கிரசில் இருந்தவர்கள் காலப்போக்கில் மாறி, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மாறி இருக்கிறார்கள். அதேபோல திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்தவர்கள், மாறி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்திருக்கிறார்கள். நாளைக்கு வேறு கட்சி வரும்போது அவர்கள் அந்தக் கட்சிக்கு ஆதரவாக இருப்பார்கள். ஆனால் அவர்களுடைய சரித்திரத்தை நீங்கள் பார்ப்பீர்களேயானால், ஆரம்பக் காலத்திலே அவன் யோக்கியமான மனிதனாக காட்சி அளித்து இருக்க மாட்டான். அவன் அயோக்கியனாக, ரௌடியாக, கேடியாக வாழ்ந்தவன்தான், இதுபோன்ற நிலைமைக்கு அரசாங்கத்திற்கு அனுசரணையாக மாறி மாறி வந்து. அதன் மூலம் தன்னுடைய சுய லாபத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற நோக்கத்தோடு வருவானே தவிர நீங்கள் சொல்வது போல, இருக்கின்றவர்கள் எல்லாம் ஆளும் கட்சிக்கு ஆதரவாக இருக்கின்றவர்கள் என்று நான் சொல்ல மாட்டேன். ஒரு குறிப்பிட்ட சதம் பெரும்பான்மையானவர்கள் இந்த நிலைமையிலே தான் இருக்கிறார்கள் என்பதை நீங்கள் மறுத்துப் பயனில்லை. அதற்காகத்தான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. சி. கோபால் ; மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், இந்த ஆட்சி ரௌடிகளை எல்லாம் அறங்காவலர் குழுத் தலைவராக நியமித்து இருக்கிறது என்கிற வார்த்தையைச் சொன்னார்கள். இதே ஆட்சியில் காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்களையெல்லாம் கூட அறங்காவலர் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். அந்த வகையில் அந்த வார்த்தை களங்கம் கற்பிக்கும் வகையில் இருப்பதால், அதை அவைக் குறிப்பில் இருந்து நீக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : இந்த ஆட்சி ரௌடிகளை எல்லாம் அறங்காவலர் குழுத் தலைவராகப் போடுகிறது என்று நான் சொல்லவில்லை. இந்த ஆட்சியில் ஒரு ரௌடி அறங்காவலர் குழுத்தலைவராகப் போடப்பட்டு இருக்கிறார் என்றுதான் சொன்னேன். அதை இல்லை என்று சொல்ல முடியாது. அது ரிக்கார்ட்டில் இருக்கிறது.



விபசாரத்தை தடைசெய்ய வேண்டும் என்பதற்காக இந்த தடுப்புக் காவல் சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறோம் என்று சொல்கிறீர்கள். இருக்கின்ற சட்டத்தை வைத்து விபசாரத்தை தடுக்க முடியும். இன்றைக்கு சென்னையில் பெரிய பெரிய மனிதர்கள் தாங்கள் செய்ய நினைக்கின்ற காரியங்களை எல்லாம் எந்த வகையில் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள் என்றால்—பல பத்திரிகைகளில் வந்து இருக்கின்றன—ஒன்று மதுவின் மூலமும் மற்றொன்று மாதுவின் மூலமும் நடைபெறுகிறது. பத்திரிகையில் ஒரு செய்தி பார்த்தேன். ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஒரு விபசாரிக்குத் துணையாக இருந்தவர் கைது செய்யப்பட்டு, அவரிடமிருந்து ஸ்டேட்மென்ட் பெற்றநேரத்தில், பெரிய பெரிய மனிதர்கள் பெயர்கள் அதிலே வந்த காரணத்தால் அவர் மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதைப் போலவே, மதுரையிலோ அல்லது வேறு எங்கோ ஒரு இடத்தில் ஒரு மாஜிஸ்டிரேட் ஒரு விபசாரியை விடுதலை செய்துவிட்டு, அந்தப் பெண்ணோடு பின்னர் தங்கினார் என்று குற்றச்சாட்டு சொல்லப்பட்டது. இப்படி பெரிய மனிதர்கள், யார் யார் நீதியைக் காப்பாற்றவேண்டுமோ அவர்கள், யார் யார் அதிகாரி பொறுப்பிலே இருக்கிறார்களோ அவர்கள், இதிலே ஈடுபட்டு இருப்பதால், அவர்கள் மீது இந்தச் சட்டம் பாயாது. ஆனால், பேவ்மென்ட்டில் இருக்கின்ற பெண்கள், சாதாரணமான அன்றாடம் காய்ச்சிகள், வயிற்றுப் பிழைப்புக்காக, சமூக சிக்கல் காரணமாக இந்த நிலையை அடைந்தவர்கள் மீது இந்தச் சட்டம் பாயும். உண்மையாக இந்தக் குற்றத்தைச் செய்கிறவர்கள் மீது இந்தச் சட்டம் பாயாது. உண்மையாகக் குற்றம் செய்பவர்களைக் கைது செய்து தண்டிப்பதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் இந்தச் சட்டம் சாதாரண மக்கள் மீது பாயும் என்கிற காரணத்தால், அரசாங்கம் இதனை மறு பரிசீலனை செய்து பார்க்க வேண்டும் என்று எடுத்துக் கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சகோதரர் கோவைத்தம்பி அவர்கள் பேசுகின்ற நேரத்தில் ** ** என்று சொன்னது மிகவும் தவறானது. அவர் எல்லோரையும் சொல்ல முடியாது. ஆகவே, இதை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பெறுகின்றன.

* திரு. ஜே. ஹேமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே மிகப்பெரிய ஜனநாயக விரோதமான ஒரு சட்டத்தை இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கிற

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

காரணத்தாலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியானது இந்தச் சட்டத்தைக் கடுமையாக எதிர்க்கிறது என்பதை முதலிலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்றையதினம் உலக மக்களுடைய பொதுவான பிரஜா உரிமைகளைப் பொறுத்த வரையிலும், ஜனநாயக உரிமைகளைப் பொறுத்த வரையிலும், மனித உரிமைகளைப் பொறுத்த வரையிலும் முன்னேறிக் கொண்டு இருக்கும் இந்தக் காலக்கட்டத்தில் இந்த அரசு இப்படிப் பட்ட ஒரு சட்டம் கொண்டுவருவது சரியா என்று கேட்டுக் கொள்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இப்படிப் பட்ட ஒரு சட்டம் தேவைதானா? இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கான காரணம் என்ன சொல்லப்பட்டு இருக்கிறது என்று சொன்னால், கள்ளச்சாராயம்காய்ச்சுபவர்கள், மருந்து பொருள் சட்டத்தின் கீழ் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள் என்று சொல்லி இப்படிப்பட்டவர்களைக் கைது செய்வதற்காக கொண்டு வரப்பட்டு இருக்கிறது என்று சொன்னாலும், இந்தச்சட்டம் 'பிரிவென்டிவ் டிடென்ஷன் ஆக்ட்' என்கிற ஒரு அடிப்படைக் கோட்பாட்டைக் கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(நண்பகல் 12.00)

மற்ற எந்தச் சட்டமும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு அரசிடம் இல்லாமல் இருக்கிறபோதுதான் ஒரு 'பிரிவென்டிவ் டிட்டன்ஷன் ஆக்ட்' கொண்டுவர வேண்டும். ஆனால் இங்கே நிலைமை என்னவென்றால் மதுவிலக்குச சட்டம் இருக்கிறது; மருந்து பொருள்கள் சட்டம் இருக்கிறது; மருந்து ஒப்பனைப் பொருள்கள் சட்டம் இருக்கிறது; பெண்கள் விபசார தடைச்சட்டம் இருக்கிறது; அதற்கு பின்னாலே கிரிமினல் சட்டங்கள் எல்லாம் இருக்கின்றன. அப்படி எல்லாம் சட்டங்கள் இருந்தாலும், அந்தச் சட்டங்களின்படி பிரச்னைகளைத் தீர்க்க முடியாத நிலை, குற்றங்களைத் தடுக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது; இப்படிப்பட்ட ஒரு சட்டத்தின் மூலம்தான நடவடிக்கை எடுக்க முடியும் என்கிற நிலை சர்க்காருக்கு ஏற்பட்டிருக்கிறது என்றால் அதற்கு அஸ்திவாரமாக இருக்கக்கூடிய சட்டங்களை ஒழுங்காக, நல்லமுறையில் அமுல்படுத்த அரசால் முடியவில்லை என்பதுதான். இந்த நேரத்தில் International Commission of Jurists சொல்லப்பட்டிருக்கிற கருத்துக்களை இங்கே சொல்ல விரும்புகிறேன். Preventive De ention Act in p ace times is i consi tent to the norm l rul of law.' அமைதியாக இருக்கிற நேரத்திலே, மற்ற சட்டங்கள் இருக்கிறபோது இந்தச் சட்டத்தை சர்க்கார் கொண்டுவந்திருக்கிறது என்றால் அதை நம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் ஒரு விஷயத்தைச் சொல்வது தவறாக இருக்காது என்று எண்ணுகிறேன். இன்றைக்கு மாநிலத்தின் பல பகுதிகளிலும் இருக்கிற மக்கள் பரவலாகச் சொல்கிறார்கள். இன்றைக்கு 'ஸ்லம் கிராபர்ஸ்' ஆக இருக்கிற மக்களை, ஏழை



எளிய மக்களை அப்புறப்படுத்துவதற்காகத்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று பரவலாக மக்கள் சொல்கிறார்கள். ஸ்லம் கிராபர்ஸ் அகற்றுவதற்குத்தான் இங்கே சட்டம் இல்லாமல் இருந்தது. ஆனால் மத்திய அரசு இயற்றிய ஒரு சட்டம் ஏற்கெனவே இருக்கிறது. நான் அதற்கு பின்னால் வருகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஸ்லம் ஏரியாவில் 1978-க்குப் பிறகு தங்கியிருக்கக்கூடியவர்களை, போடப் பட்டிருக்கிற குடிசைகளை அப்புறப்படுத்துவேன் என்று சொல்லி, அவர்கள் சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்று தடை வாங்கிய காரணத்தால்தான், அவர்களைப் பழி வாங்கும் நோக்கத்தோடு, அவர்களை எப்படியாவது வெளியேற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த மன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்,

ஸ்லம் கிராபர்ஸ் பொறுத்தவரையில் அவர்களை ஒழிக்க வேண்டுமென்று ஒரு சட்டம் கொண்டு வரும்போது, அது ஒரு சாதாரண பிரச்னையா என்று கேட்க விரும்புகிறேன். ஏனென்றால் அது ஒரு முக்கியமான சமூகப்பிரச்னை. இந்த நாட்டில் பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய மக்களுக்கு குடியிருக்க வசதி செய்து கொடுக்க இந்த அரசால் முடியவில்லை என்ற ஒரு நிலையில்தான் அவர்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமான இடங்களிலே தங்கக்கூடிய நிலைமை, குடிசை போடும் நிலைமை ஏற்படுகிறது. ஆனால் இன்று மத்திய சர்க்கார் கூட பப்ளிக் பிரிமிஸஸ் எவிக்ஷன் ஆஃப் அன் ஆதரைஸ்ட் ஆக்குபென்ட்ஸ் என்ற இது சம்பந்தமாக ஒரு சட்டம் இயற்றியிருக்கிறது. 'ஆக்ட் 1971 இருக்கிறது. அதற்கு 1981-ல் ஒரு அமெண்ட்மென்ட் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அப்படி ஒரு சட்டம் இருக்கிற போது இந்தக் குற்றங்களைப் பொறுத்தவரையில், எல்லாக் குற்றங்களையும் அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி தடுக்க முடியும். அந்தச் சட்டத்தை வைத்தே டீல் பண்ணுவதற்கு வாய்ப்பு இருக்கிறபோது இப்படிப்பட்ட ஒரு பிரிவென்டிவ் டிட்டன்ஷன் ஆக்ட் கொண்டுவருவது சரியல்ல.

ஸ்லம் ஏரியாவில் இருக்கிறவர்களை காலி செய்ய 1981-ல் அமெண்ட்மென்ட் வந்தபோது, அதுபற்றி விவாதிக்கும்போது ஒரு பிரச்னை வந்தது. அந்த மக்களுக்கு மாற்று இடம் கொடுப்பதற்கு அரசுக்கு கடமை இல்லையா? அப்படி அந்தக் கடமை நிறைவேற்றப்படாமல் அவர்களை பாதுகாப்பு கைதிகளாக வைத்துக்கொள்வதன் மூலம் இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காண முடியாது. இன்று நாட்டிலே நிலைமை என்ன? பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள், அரசுக்குச் சொந்தமான நிலங்கள் பெரிய, பெரிய நிலச்சுவான்தார்கள் கையில் முதலாளிகளிடம் இருக்கிறது.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 18

அவர்களுக்கும் அரசால் நிலம் கொடுக்கப்படுகின்றது. குறிப்பாக எங்களுடைய மாவட்டத்திலே 2,000 ஏக்கர் நிலம் கையிலே வைத்திருக்கக்கூடிய தோட்ட முதலாளி ஒருவருக்கு 2 ஏக்கர் அரசு நிலம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அதே நேரத்திலே ஏழை எளியவர்கள் வெளியேற்றப்படுகிறார்கள். சென்னை நகரத்திலே கூட 18-வது வார்டிலே சில ஆட்கள் அரசுக்கு வேண்டியவர்கள் வீடுகளை கட்டி இருக்கின்றார்கள் என்று சொல்லப்படுகின்றது. இப்படிப்பட்டவர்களை அப்புறப்படுத்துவதற்கு இன்றைக்கு நடைமுறையிலே இருக்கக்கூடிய சட்டங்களை வைத்து நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக இப்படி ஒரு தடுப்புக் காவல் சட்டம் கொண்டுவருவது சரியாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து இன்டியன் பீனல் கோடிலே இருக்கக்கூடிய ஒரு சில சேப்டர்களில் வரக்கூடிய குற்றவாளிகளை எல்லாம் குண்டர்கள் என்று மாற்றுவது என்று சொன்னால் நாளை ஒரு மாறுபட்ட சூழ்நிலை ஏற்பட்டால், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், என்னையும், இந்த அவையிலே இருக்கக்கூடிய அனைவரையும் குண்டர்கள் என்று சொல்லி மாசு படுத்துவதற்கு அந்தச் சட்டம் வழி வகுக்கும் என்று பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றையதினம் போலீஸ்காரர்களின் கையிலே இந்தச் சட்டம் பராமரிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. குண்டர்கள் என்ற முறையிலே Offences committed under chapter XVI, XVII and XXII of Indian Penal Code இந்த ஐ.பி.சி யிலே வரக்கூடிய குற்றங்களை செய்தவர்களை எல்லாம் குண்டர்களாக மாற்றப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால் எப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். 1978-லே ஒரு பந்து நடந்தது. அது பற்றி அனைவருக்கும் தெரியும். அன்றையதினம் இந்தப் பேரவையிலே கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ஞானசிகாமணி அவர்கள் உறுப்பினராக இருந்தார். அவர் மீது கடை உடைக்க முயற்சித்தார் என்று குற்றம்சாட்டி கைது செய்து அவரை உள்ளே தள்ளினார்கள். விளவங்கோடு சர்கிள் இன்ஸ்பெக்டர் அவர்களுடைய திட்டவட்டமான டைரக்ஷன் அடிப்படையிலே அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அப்படிப்பட்ட நிலைமைகள் நாட்டிலே இருந்திருக்கின்றன.

அடுத்து அறங்காவலர் குழுவின் தலைவராக இருந்தவர்கள் கூட காவல் துறையினரால் ரெளடிகளாகவும் குண்டர்களாகவும் மாற்றக்கூடிய நிலைமை இருக்கின்றது. ஆனால் இப்படிப்பட்ட நிலைமையிலே இந்தச் சட்டம் தேவையா? ஆனால் இந்தச் சட்டம் மூலம் இந்த நாட்டிலே உள்ள எந்த ஆளையும் குண்டர்கள் என்று சொல்லிவிடக்கூடிய சூழ்நிலை ஏற்படும் ஆகவே ஜனநாயக விரோதமான சட்டம் என்ற முறையிலே இந்தச் சட்டத்தை இங்கே நிறைவேற்றுவது சரியல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.



1982 பிப்ரவரி 18] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

இன்றையதினம் நாம் பார்க்கக்கூடிய நிலைமை என்ன? ப்ரொகிபிஷன் சம்பந்தமாக ஒரு சட்டம் இருக்கின்றது. அந்த சட்டத்தை இம்ப்ளிமென்ட் பண்ண முடியவில்லை. ஏனென்றால் இன்றைக்கு போலீஸ்காரர்களே அதற்கு உடந்தையாக இருக்கிறார்கள். அனேகமாக எல்லா காவல் நிலையங்களிலுமே மாமூல் வாங்கிக்கொண்டு அவர்களுக்கு உதவி புரியக்கூடிய நிலைமைதான் இருக்கின்றது. இது சம்பந்தமாக பல எடுத்துக்காட்டுகளை என்னாலே சொல்ல முடியும். ஆனால் இன்று இவர்களை எல்லாம் இந்த முறையிலே வளர விடுவதற்கு காரணம் என்ன? போலீசுக்கு அவர்களிடத்திலே இருந்து ஆதாயம் இருக்கின்றது. இவர்கள் நடத்தக்கூடிய பிஸினஸிலே அவர்களுக்கும் ஷேர் இருக்கின்றது. ஆகவே இதைத் தடுப்பதற்குரிய முறையிலே இருக்கின்ற சட்டத்தினை சரியாக இம்ப்ளிமென்ட் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(பிற்பகல் 12-10)

எங்களுடைய மாவட்டத்திலே சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் 25 ஆம் தேதி கிறிஸ்தவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஊர்வலம் நடத்தினார்கள். அவர்களைத் தாக்குவதற்காக ஆர்.எஸ்.எஸ். காரர்கள் திட்டம் போட்டிருந்தனர். இது காவல் துறைக்கும் தெரியும். அங்கே இருக்கக்கூடிய டி.எஸ்.பி. அவர்களுக்கும் தெரியும். ஆனால் எந்தவிதமான பாதுகாப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அதனுடைய விளைவு என்ன? ஊர்வலம் நடக்கும்போது ஊர்வலம் வந்தவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டார்கள். ஆனால் அதற்குப் பிறகு அப்பாவிகளின் மீது போலீஸ் கேஸ் போட்டது. ஆனால் சம்பந்தப்பட்டவர்கள் வசதி படைத்தவர்கள் என்ற காரணத்தினால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை.

இப்படிப்பட்ட போலீசினுடைய கையிலே, இந்தக் குண்டஸ் சட்டத்தை கொடுத்தால், இந்தியன் பீனல் கோடிலே இருக்கக்கூடிய மிகப்பெரிய சேப்டர்கள் அடங்கிய சட்டத்தை அமுல் செய்யும் அதிகாரத்தை அவர்கள் கையிலே எடுத்து வழங்கக்கூடிய நிலையிலே தந்தால், அது எவ்வளவு பெரிய ஜனநாயக விரோதமானச் செயலாகும் என்று உங்களைக் கேட்கவிரும்புகிறேன். அதைப்போலவே இம்மாரல் டிராபிக் அபென்டர்ஸ் சம்பந்தமாக, ஏற்கெனவே ஒரு சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தின் கீழே நடவடிக்கை எடுக்க வேண்டியதுதானே. அதற்கு பதிலாக அவர்களை பாதுகாப்பு கைதிகளாக காவலிலே வைத்தால் திருந்திவிடக்கூடிய பிரச்னையா அது? அது ஒரு சமூகப் பிரச்னை. இந்த நாட்டிலே பல நூற்றாண்டுகளாக இருக்கக்கூடிய பிரச்னை அது. அதை ஒரு சமூகப் பிரச்னையாகப் பார்த்து அதற்கு மாற்று தரக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, இப்படிப்பட்ட சட்டம் கொண்டுவருவது நியாயம் அல்ல.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 18

இது சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? ரெஸ்கியூ ஹோம்ஸ்ஸூம், கரெக்ஷன்ஸ்ஸூம் எடுக்கப்படவேண்டும் என்று அரசே பொதுவாக ஒரு கொள்கை ஏற்று இருக்கிற காலத்திலே, அவர்களை Preventive Detention Act-லே கூட சரிகட்ட முடியலாம் என்று அரசு ஒரு கொள்கையை உருவாக்குவது மிகப்பெரிய ஜனநாயக விரோதமான கொள்கையாகும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதேபோல இங்கே கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய சட்டம் ஒரு மிகப்பெரிய ஜனநாயக விரோத சட்டம் என்பதற்கு இன்னொரு எடுத்துக்காட்டு இருக்கிறது. அதுதான் அட்வைசரி போர்டு. அந்த அட்வைசரி போர்டை பொருத்தவரைக்கும் சுப்ரீம் கோர்ட்டினுடைய முடிவு என்ன என்று தெரியுமா? பல அட்வைசரி போர்டுகளிலே போடப்பட்ட தீர்மானங்கள் சட்ட விரோதமானது நேர்மையற்றது என்று சுப்ரீம்கோர்ட்டே தீர்ப்பு கொடுத்திருக்கிறது என்ற செய்தி மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் அறிந்திருப்பார்கள். அப்படி ஒரு நிலைமையிலே அட்வைசரி போர்டு ஒன்றை ஏற்படுத்தி ஒரு சட்டத்தைக் கொண்டுவருவது நியாயம் அல்ல, சரியல்ல. அந்தச் சட்டத்திலே 30-வது பக்கத்திலே '"Nothing in this Section shall entitle any person against whom a detention order has been made to appeal by any legal practioner in any matter connected with the reference to the Advisory Board" என்று இருக்கிறது. இது அரசியல் சட்டத்தினுடைய 22-வது ஆப்ஜெக்டுக்கு எதிரானது என்று சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். 'No person who is arrested shall be detained in custody without being informed, as soon as may be, of the grounds for such arrest nor shall he be denied the right to consult, and to be defended by, a legal practitioner of his choice. என்று இருக்கிற இந்தச் சட்டத்தின் கீழே பிடிக்கக்கூடியவர்கள் யார்? சாதாரணமான மனிதர்கள், கள்ளச்சாராயம் காய்ச்சக்கூடியவர்கள், விபச்சாரக் குற்றத்திலே கைது செய்யப்படக்கூடியவர்கள் எல்லாம் சமுதாயத்தில் மிகப் பெரிய மனிதர்களா என்ன? அவர்கள் மீது போலீஸ் அதிகாரிகள் கூறக்கூடிய குற்றச்சாட்டினை மறுப்பதற்கு அவர்களுக்கு சட்டநிபுணரின் உதவி தேவையில்லையா? இப்படிப்பட்ட நிலைமைகளிலே அவர்களுக்கு சட்டநிபுணர்கள் உதவி கண்டிப்பாக கொடுக்கப்படவேண்டும். அதை அனுமதிக்க மறுப்பது நியாயமாகாது. ஆனால் இங்கே கொண்டுவரப் பட்டிருக்கிற சட்டத்திலே என்ன சொல்கிறார்கள் என்றால், அட்வைசரி போர்டு இருக்கிறது என்று சொல்கிறார்கள். அவர்கள் சாதாரணமாக அரசியல் போராட்டத்திலே ஈடுபட்ட குற்றவாளிகள் அல்ல. வாழ்க்கைக்கே கஷ்டப்படக்கூடியவர்கள் கூட இருக்கும். அவர்களை கைது செய்து பாதுகாப்புக் கைதியாக நடவடிக்கை எடுத்து, அவர்களை அட்வைசரி போர்டு முன்னாலே கொண்டுபோகும் போது, அந்த போர்டிலாவது சட்ட நிபுணர்களின் உதவியை அவர்களுக்கு கொடுக்க முடியுமா என்றால், அது கூட முடியாது என்ற ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றுவது ஜனநாயகத்திற்கு விரோதமானதில்லையா என்று கேட்கவிரும்புகிறேன்?



1982 பிப்ரவரி 18] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

அதேபோன்று இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு விஷயத்தை பணிவுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நாஷனல் செக்யூரிட்டி ஆக்ட் இச்சட்டத்தை பொறுத்தவரையில் ஏறத்தாழ அதே ஈ அடிச்சான் காபிதான் இந்தச் சட்டமுன்வடிவு. குற்றவாளிகள் பொறுத்தவரையில் சொல்லக்கூடிய பகுதிகள் தவிர மீதிப் பகுதிகள் எல்லாம் சென்டன்ஸ் பை சென்டன்ஸ், கருத்துக்கள் எல்லாம் நாஷனல் செக்யூரிட்டி அக்டின் ஈ அடிச்சான் காபிதான். அப்படி ஒரு சட்டம் இந்த நாட்டிலே இருக்கும்போது, ஆளும் கட்சியும் அமைச்சரவையும் அந்தச் சட்டத்தை ஏற்றுக் கொள்ளக்கூடிய நேரத்தில் நாஷனல் செக்யூரிட்டி பாதுகாப்பு கைதிகளாக வைக்க இடம் இருக்கிறபோது ஏன் இந்தச் ஆக்ட்படி சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்? லீகல் ஜூரிஸ்ப்ருடன்ஸ் பேசிக்ப்ரின்ஸிபிலில் சொல்வதுபோல் ஒரேமாதிரியான சட்டம் இருக்கிறபோது இந்த ப்ரவின்டீவ் டிட்டன்ஷன் ஆக்ட் கொண்டு வரக்கூடாது என்ற கருத்தைஏற்றுக் கொண்டு இந்தச் சட்டத்தை வாபஸ் பெற வேண்டும் என்று மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சட்ட முன்வடிவில் உள்ள ஆப்ஜக்ட்ஸ் ஆன்ட் ரீஸன்ஸில் என்ன சொல்லப்படுகிறது? ஏற்கனவே நிலவில் இருக்கிற சட்டப்படி To eradicate bootleggers, drug-offenders, goondas, immoral traffic offenders and slum grabbers முடியாததால் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் நான் கேட்கிறேன், காவல் துறை என்ன செய்கிறது? இன்று அரசாங்கத்தினுடைய சட்டம் ஒழுங்கு நிலைநாட்டுகிற மெஷினரி என்ன செய்கிறது? லா ஆன்ட் ஆர்டர் மெஷினரியைப் பொறுத்தவரையில் ஒழுங்கான முறையில் செயலாற்றுகிற விதத்தில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள அரசாங்கம் முன்வர வேண்டுமே தவிர இந்தச் சட்டம் நியாயம் நடத்த உதவாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ப்ரிவென்டிவ் டிடென்ஷன் ஆக்ட்படி பல்லாயிரக்கணக்கான ஆள்களை கைது செய்து உள்ளே வைப்பதன் காரணமாக அரசாங்க பணம், பொது மக்கள் பணம் வீணாக்கப்படுகிறது. விரயம் செய்யப்படுகிறது என்று குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். ஆகவே பி.டி. ஆக்ட் என்ற முறையில் உள்ள இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதன் வழியாக அரசு வீணாக செலவு செய்வதற்கான அஸ்திவாரத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறதே தவிர நீங்கள் இன்று நாட்டில் நிலவியுள்ள சட்டப்படி செய்யவேண்டியதை செய்து கொண்டிருக்கிறீர்களா? ஆகவே, இந்த அண்டெமாக்ராட்டிக் ஆக்ட் இம்மாரல் சட்டத்தை நீங்கள் நிறைவேற்ற முயற்சிக்கக்கூடாது என்று மீண்டும் கேட்டுக்கொண்டு, இந்தச் சட்ட முன்வடிவை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

*திரு. பொ. உத்திராபதி : துணைத் தலைவர் அவர்களே, நமது சட்டத்துறை அமைச்சர் அவர்கள் கள்ளச்சாரயம் காய்ச்சுபவர்கள், மருந்து பொருள் சட்டத்தின் கீழ் தவறு செய்பவர்கள் என்பன போன்று நான்கு பொருட்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தச் சட்டம் உண்மையிலேயே ஜனநாயகத்திற்காக இந்தத்

தேசத்தில் பாடுபட கூடியவர்களுக்கு நேர்விரோதமான சட்டமாக மறைபொருளாக இந்தச் சட்டம் வந்திருக்கிறது. கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களைத் தண்டிக்க கடுமையான சட்டம் கொண்டு வருவதாக சட்ட அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கள்ளச்சாராயம் என்றால் தமிழ்நாட்டில்தான் ஏதோ புதிதாக கள்ளச்சாராயம் காய்ச்சுவதுபோலவும் அதை ஒடுக்க கடுமையான சட்டம் தேவை என்பது போலவும் இந்தச் சட்டம் கொண்டுவரப் பட்டிருக்கிறது. இப்போதுள்ள சட்டங்களையே காவல் துறையினர் மனப்பூர்வமாக நிறைவேற்ற முயற்சித்தால் அதுவே போதுமானது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

கள்ளச்சாராயம் காய்ச்சுவதால், கள்ளச்சாராயத்தை குடித்து மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்லித்தான் அதற்கான மதுவிலக்கை நீக்க சட்டம் கொண்டுவந்தபோது எங்கள் கட்சியும் ஆதரித்தது. ஆனால் சட்டத்தின் பல சந்துபொந்துகள் இருப்பதால் கள்ளுக்கடைகள் எங்கு பார்த்தாலும் வந்தும், சாராயக்கடைகள் வந்தும் கள்ளச்சாராயம் காய்ச்சுவது தொடர்ந்து இருந்து வருகிறது என்றால் இதற்கு காரணம் காவல் துறையினரே. கள்ளச் சாராயம் காய்ச்சுவதில் மாமூலை மேலும் அதிகமாகப் பெறுவதற்கான வாய்ப்புதான் இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக் கிறது. அதனால் ஏலம் எடுத்த கள்ளுக்கடைக்காரர்கள், சாராயக் கடைக்காரர்கள் இன்றைக்கு திணறிக்கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் கள்ளச்சாராயம்தான்.

தமிழ்நாட்டில் சாராயக்கடைகளுக்கு அனுமதி கொடுத்த தற்குப் பிறகு கள்ளச்சாராயம் இன்று நாட்டில் பெருகிக் கொண்டிருக்கிறது. இதை ஒடுக்க ஒரு பாதுகாப்புச் சட்டம் தேவையா? பாதுகாப்பு என்றால் யாரை பாதுகாக்க? மேலும் மேலும் கள்ளச்சாராயம் காய்ச்சி கொள்ளை அடிக்கக்கூடிய அந்தக் கூடாரத்தைத்தான் போலீஸ் பாதுகாக்கிறதே தவிர கள்ளச்சாராயப் பேர்வழிகளை போலீஸ் ஒழிக்காது என்பதுதான் எங்கள் ஆழமான கருத்து.

(பிற்பகல் 12.20)

இதன் மூலமாக காவல் துறை என்ன செய்வார்கள்? மக்களுக் காக பாடுபடக்கூடியவர்களை, காவல்துறையினருக்கு எதிராக இருப்பவர்களை, அவர்கள் கள்ளச்சாராயம் விற்றார்கள் என்று சொல்லி, இந்தப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைதுசெய்து, அவர்களை உள்ளே அடைப்பதற்குத் தான் இது பாதுகாப்பு அளிக்குமே தவிர, கள்ளச் சாராயம் உண்மையிலே விற்கின்றவர் களிடம் மேலும் மாமூல் வாங்குவதற்கு வழியை இந்தச் சட்டம் உருவாக்கும். எனவே, இந்தச் சட்டத்தை எதிர்க்கிறேன்.

அதேபோல், குண்டர்கள். இன்றைக்கு குண்டர்கள் யாரைத் தாக்குகிறார்கள்? எங்கு பார்த்தாலும் கற்பழிப்பு. மோட்டார் பைக்கிலே கணவன், மனைவி சென்றால், பின்னாலே மோட்டார் பைக்கிலே வந்து தங்கச் சங்கிலியை அறுக்கிறார்கள். குண்டர்



களின் அட்டகாசம் எங்கு பார்த்தாலும் தலைவிரித்தாடுகிறது. இதற்கு ஒரு சட்டம் தேவையா? யாருக்கு இது பாதுகாப்பு மேலும், குண்டர்களைப் பாதுகாப்பதற்குத் தான் இந்தச் சட்டம் உதவும். நாம் இந்தச் சட்டத்தை நிறைவேற்றி, காவல் துறையினரிடம் ஒப்படைக்க இருக்கிறோம். குண்டர்கள் என்று சொல்லக் கூடியவர்கள், ஒரு அழகான பையில் 10 ரூபாயை வைத்துக்கொண்டு சென்றாலும், கொலை செய்கிறார்கள். அப்படிப்பட்ட குற்றவாளிகள் எத்தனை பேர்களை காவல் துறையினர் இன்றைக்கு கைது செய்திருக்கிறார்கள். எங்காவது பட்டினி, பசியால் ஒருவன் தேங்காயைப் பறித்துவிட்டால், அதற்கு காவல் துறையினர் நடவடிக்கை எடுப்பார்கள். ஒவ்வொரு மாதத்திற்கும் இத்தனை வழக்குகள் பதிவு செய்ய வேண்டுமென்ற ஒரு கணக்கு இருக்கிறது. அதற்கு அவர்கள் இப்படிப்பட்டவர்களை கைது செய்வார்களே தவிர, மூட்டை மூட்டையாக கொள்ளையடிக்கும் பெருங் கூட்டத்தை காவல் துறையினர் கைது செய்யத் தயாராக இருக்கிறார்களா? இல்லை. எனவே, அவர்கள் இந்த குண்டர்களிடம் மாமூல் வாங்கவும், அரசியல் வாதிகளைப் பழிவாங்குவதற்கும்தான் இந்தச் சட்டம் பயன்படும். எனவே, இந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், பிறர் நிலத்தில் குடிசை போட்டால், அதை அகற்றுவதற்காக இந்தச் சட்டம் என்று சொல்லுகிறார்கள். நான் கேட்கிறேன். திருமதி இந்திரா காந்தி ஆட்சியில் டெல்லியை அழகுப்படுத்துவது என்பதன் பெயரால் ஆயிரக்கணக் கான குடிசைகளை புல்டோசர்களைக் கொண்டு அழித்தார் களே, அது எந்தச் சட்டம்? எனவே, இந்தப் பாதுகாப்புச் சட்டம் யாரை பாதிக்கிறது? இந்த நாட்டில் கள்ளப் பணம் அடிக்கிறார்கள்; கொள்ளை லாபம் அடிக் கிறார்கள். இந்த நாட்டிலே லட்சக்கணக்கான உழைக்கும் மக்களைச் சுரண்டும் கூட்டத்தைப் பாதுகாப்பதற்குத்தான் பாதுகாப்புச் சட்டத்தை திருமதி இந்திரா காந்தி கொண்டு வந்திருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். எங்களுடைய ஆட்சியில் குண்டர்களை, இத்தகைய சமூக விரோதிகளை அடக்குவதற்குத் தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது என்று சொன்னார்கள். இந்தச் சட்டத்தை எதிர்த்து 19ஆம் தேதி ஒருநாள் பொது வேலை நிறுத்தம் தொழிற் சங்கங்கள் நடத்தியபோது, திருமதி இந்திரா காந்தி அவர்கள் இந்த பொது வேலை நிறுத்தத்தை முறியடிக்க சொன்னார்கள்? அதை எதிர்த்துத்தான் பிரசாரம் செய்தார்கள்.

தமிழகத்திலே பிர்லாவுக்கு சொத்து கிடையாதா? இந்தியா முழுவதும் சொத்து வைத்திருக்கிறார் பிர்லா. அப்படிப்பட்ட பிர்லாவிற்கு தமிழகத்திலே தேயிலைத் தோட்டம் கொடுக்கப்பட வில்லையா? இந்தத் தோட்டத்தைப் பறிமுதல் செய்யத் தயாரா என்று பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்? சாதாரண விவசாயத் தொழிலாளர்கள், நிலமற்றவர்கள், வறுமைக்

கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள், அரசு புறம்போக்கு நிலத்தில் குடிசைப் போட்டால், அதிகாரிகள் உடனே அவைகளை அகற்று கிறார்கள். ஆனால், வசதிபடைத்தவர்கள், நகரத்திலோ அல்லது கிராமத்திலோ நூற்றுக்கணக்கான ஏக்கர்கள் நிலத்தை ஆட்படுத்தி வைத்திருந்தால், ரெவின்யூ அதிகாரிகள் அவைகளைப் பறிமுதல் செய்யத் தயாராக இருக்கிறார்களா? ஆகவே, நான் பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டத்தின் மூலம் மேலும் சாதாரண ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படுவார்கள். அதற்குத்தான் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துவார்கள். எனவே, இந்தச் சட்டத்தைத் திரும்பப் பெறவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, விபசாரத் தடுப்புப் பாதுகாப்புச் சட்டம். விபசாரம் யார் செய்கிறார்கள்? ஒரு பகுதி வறுமையால் வாடு கின்றவர்கள், வாழக்கூட வாய்ப்பில்லாதவர்கள் செய்கிறார்கள். . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மொத்தமாகச் சேர்த்துப் பேசுங்கள். ஒவ்வொன்றாகத் தனித்தனியாகப் பேசினால் நேர மாகும். இன்னும் 7 பில்கள் இருக்கின்றன. சீக்கிரம் முடியுங்கள்.

திரு. பொ. உத்திராபதி: விபச்சாரத்திலே பல்வேறு விபச்சாரங்கள் இருக்கின்றன. மாடிவீட்டிலே நடக்கிற விபச்சாரம், வறுமையிலே வாடக் கூடியவர்கள் பசியால் செய்கிற விபச்சாரம் இருக்கிறது. உண்மையிலேயே இந்தச் சட்டத்தைக் காவல் துறையின் கையில் ஒப்படைத்தால் தனக்குப் பிடிக்காதவர்கள்மீது ஏதோ ஒரு காரணத்தால் மறுக்கக்கூடிய குடும்பப் பெண்கள்மீது பயன்படுத்து வார்கள் காவல் துறையினர். சில தினங்களுக்கு முன்னால் தஞ்சை மாவட்டத்திலே அய்யம்பேட்டைக்கு அருகாமையிலே ஒரு அரிசனப் பெண்ணை வசதி படைத்தவர் ஒருவர் கரும்புக் காட்டிலே கற்பழித்தார்; அதுபற்றி காவல் துறையிலே அங்கே ஒருவர் புகார் கொடுத்தும்கூட இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இன்றைக்கு எங்கே கோர்டிலே பார்த்தாலும் விபச்சாரம் செய்கிற பெண்கள் முக்காடு போட்டு நிற்கக்கூடிய நிலைமையைப் பார்க் கிறோம். இப்போதுள்ள சட்டத்தின் மூலமாக விபச்சாரத்தை ஒழிக்கலாம், விபச்சாரம் செய்கிறவர்களை, விபச்சாரத்திற்குப் பயன்படுத்துகிறவர்கள்மீது நடவடிக்கை எடுக்க முடியும்.

திருமதி இந்திரா காந்தி அவர்கள் பாராளுமன்றத்திலே தேசிய பாதுகாப்பு சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அந்தச் சட்டம் உழைக்கின்ற மக்களின் உரிமைகளை நசுக்குவதற்காக, ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைப்பதற்காக டாடா, பிர்லாக்களை ஆதரிக்கக்கூடிய சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அங்கே இரண்டு கட்சிகளும் ஆதரித்தார்கள். இன்றைக்கு அந்தச் சட்டத்திற்கு ஒத்தாசையாக தமிழக அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வன்மையாகக் கண்டித்து இதை





எதிர்ப்பதோடு இந்தச் சட்டத்தை சட்டத்துறை அமைச்சர் அவர்கள் வாபஸ் பெறவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்ட நேரத்திலேயே இது நம்முடைய அரசியல் சட்டத்திற்கு சரியாக இல்லை என்பதை எழுப்பியிருக்கிறேன். அதற்கான பதிலை அமைச்சர் சொன்னாலும் நான் அதைக் கேட்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது, பத்திரிகைகளிலே படித்துத் தெரிந்து கொண்டேன். இருந்தபோதிலும்கூட இந்தச் சட்டத்தை அமுலாக்க நீங்கள் நடவடிக்கை எடுக்கிற நேரத்திலே யாராவது உச்ச நீதிமன்றத்திற்குச் செல்கிறபோது அங்கேதான் நியாயம் கிடைக்கும். அந்த ஃபோரத்தை நான் விடப்போவதில்லை.

அடுத்தபடியாக, இந்தச் சட்டத்தினுடைய நோக்கத்தைப் பார்க்கிற போது, கள்ளச்சாராயம் சாய்ச்சுகிறவர்கள், குண்டர்கள், விபச்சார விடுதி நடத்துகிறவர்கள், புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமிப்பவர்கள் ஆகியவர்களைத் தடுப்பதற்குத் தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே தேசிய பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறபோது தமிழ்நாட்டிலே எல்லா பிரஜைகளுக்கும் அது பொருந்துகிற நேரத்திலே தமிழகத்திலே தனியாக இந்தச் சட்டத்தை இயற்றுவது அவசியந்தானா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இப்படிப்பட்ட சாதாரணக் குற்றங்களைத் தடுப்பதற்கு ஐ.பி.சி. சென்ட்ரல் ஆக்ட், சப்ரஷன் ஆப் இம்மாரல் டிராபிக் ஆக்ட் எல்லாம் இருக்கின்றன. அப்படியிருக்கிறபோது தடுப்புக் காவல் சட்டத்தை உருவாக்கி நீங்கள் அதைத் தடுக்க முயல் கிறீர்கள் என்று சொல்கிறபோது "It is an open confession of the State Government about its inefficiency to administer acts and to maintain public order in the State" என்று உங்கள் ஒப்புதல் வாக்கு மூலம் என்ற அடிப்படையிலே தெரிவித்து இருக்கிறீர்கள். எங்களால் இருக்கின்ற சட்டங்களை வைத்து. போலீஸ் துறையை வைத்து பப்ளிக் லா அன்ட் ஆர்டரை மெயின்டெயின் பண்ண முடியவில்லை என்று நீங்களே ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருக் கிறீர்கள். கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவர்களைப்பற்றிய வழக்கு களை எடுத்துப் பார்ப்போம். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே மதுவிலக்குச் சட்டம் அமலில் இருந்தபோது சாதாரணமாக காங்கிரஸ்காரர்கள் அவர்களுக்கு ஜாமீன் போவது வழக்கமில்லை. மற்றக் கட்சிக்காரர்கள் போவார்கள், பெயிலபிள் அஃபன்ஸாக இருந்தது. கள்ளச்சாராயம் காய்ச்சப்படுவதால் மக்கள் அதிகமாக இறக்கிறார்கள். அதிகமான அளவில் உபாதைகளுக்கு ஆளாகிறார்கள் என்று இந்த அரசு மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரமாக்கியது. அது என்ன ஆயிற்று? முன்பு குடித்துவிட்டு ஒருவன் வந்தால் போலீஸுக்கு 2 ரூபாய் கொடுத்தால் விட்டு

விடுவார்கள். ஆளைக்கொண்டுபோய் காண்பித்தால் ஜாமீனிலே வெளிவரமுடியும் என்ற நிலைமை இருந்தது. இப்போது அப்படி ஜாமீனிலே வெளிவரமுடியாது. இப்படி நீங்கள் சட்டத்தைக் கடுமையாக ஆக்கியதன் விளைவு என்னவென்றால் போலீஸ்காரனுக்கு இரண்டு ரூபாய் கொடுத்த நிலைமை போய் 500 ரூபாய் வரையில் கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கியமான நிலைமையை தமிழகத்தில் உருவாக்குவதைத் தவிர குற்றங்கள் குறைந்தனவா என்றால் குறையவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

கடைசியாக என்ன செய்தீர்கள்? மதுவிலக்கையே ரத்து செய்துவிட்டீர்கள். மீண்டும் மதுவிலக்கை அமல்படுத்தப் போகிறீர்களா? யார் வேண்டுமானாலும் மது அருந்தலாம் என்ற அருமையான தத்துவத்தை உதிர்த்துவிட்டீர்கள். இதேபோன்ற நிலைமைகளில் போனால் Immoral traffic legalise செய்து விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்பதைத் தாழ்மையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மிக வேடிக்கையான, விநோதமான சட்டத்தை நான் பார்க்கிறேன். 'Prosecutor is becoming Judge'. யார் ஒருவன் குற்றம் சாட்டுகிறானோ அவனே அந்தக் குற்றத்திற்கான தீர்ப்பையும் அளிக்கின்ற நீதிபதியாகவும் ஆகின்ற விந்தையை இந்தச் சட்டத்திலே நான் காண்கிறேன். இவன் குற்றவாளி என்று போலீஸ் அதிகாரி கைது செய்கிறார். ஆனால் கைது செய்யப்பட்டவன் கோர்ட்டுக்குப் போக முடியாது; நீதி கேட்க முடியாது. அது அட்வைசரி போர்டுக்குப் போக வேண்டும். அதில் உள்ள மூன்று பேர்கள் உங்களால் நியமிக்கப்பட்டவர்கள். எனவே, யார் குற்றம் சுமத்துகிறானோ அவனிடத்திலேயே — உங்களால் நியமிக்கப்பட்ட அந்த ஆட்களிடத்திலேயே சென்றால் அங்கே நீதி கிடைக்கும் என்று நினைக்கிறீர்களா?

இதுகூடத் தெரியாமல் இந்த அளவிற்கு நாம் செய்கிறோம் என்றால் நிச்சயமாக இது ஜனநாயகத்திற்கு விரோதமானது என்பது மட்டுமல்ல; சாதாரண அடிப்படை நீதிக்கேகூட ஒவ்வாத சட்டம் it is against the fundamental principles of natural justice. It is inhuman law என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் வேடிக்கையான புரவிஷன் ஒன்றைக் கொடுத்திருக்கிறீர்கள். யாராவது குற்றம் செய்து விட்டு if he is absconded அவன் தப்பித்துக் கொண்டு விட்டால் என்ன நடவடிக்கை எடுப்போம் என்று அழகாகச் சட்டம் கொண்டு வந்திருக்கிறீர்கள். அவரை நோட்டிஃப செய்து விடுவோம்; அவர் எங்களிடம் சரணாகதி அடையாவிட்டால் அவருடைய சொத்து பறிமுதல் செய்யப்படுவதற்கான அதிகாரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறீர்கள். நான் தாழ்மையோடு ஒன்றைக் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். சத்தியவேட்டிலிருந்து ஒருவன் இங்கே வந்து, விபச்சார விடுதிகளை நடத்தி, இலட்சக் கணக்கான ரூபாய்களைச் சம்பாதித்து, சத்தியவேட்டிற்குச்



சென்று அங்கே சொத்துக்களை வாங்கியிருந்தால், அங்கேயுள்ள அவருடைய ப்ராப்பர்ட்டிஸையெல்லாம் பறிமுதல் செய்யச் செல்ல முடியுமா என்பதைப்பற்றிச் சிந்திக்கும்படியாகத் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி அவசரம் அவசரமாக, ஓட்டை உடைசல்கள் நிறைந்த சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்; இது அரசியலமைப்புக்கு விரோதமானது; நீதிக்குப் புறம்பானது; நேர்மைக்கும், நியாயத்திற்கும், ஜனநாயகத்திற்கும் புறம்பானது. எனவே, இந்தச் சட்டம் தேவையா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். என்னைப் பொறுத்தவரையில், தேசீய பாதுகாப்புச் சட்டத்தைப் போல, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பாதுகாப்புச் சட்டம் என்று இந்தச் சட்டத்தை வருணித்து, இந்தச் சட்டத்தை உடனடியாக வாபஸ் பெற வேண்டுமென்று சொல்லி, இந்தச் சட்டத்தை வன்மையாகக் கண்டித்து அமர்கிறேன்

**திரு. பி. முகமது இஸ்மாயில்:** தலைவரவர்களே, கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப்பொருள் சட்டத்தின் கீழ்க் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுப்பதற்கு வகை செய்யும் இந்தச் சட்டத்தை ஜனதா கட்சி வன்மையாக எதிர்க்கிறது. ஏற்கனவே, இந்த நாட்டு மக்களைக் கொடுமைப்படுத்திக் கொண்டிருக்கின்ற தேசீயப் பாதுகாப்புச் சட்டத்தின் மறுபதிப்பாகத்தான் நாங்கள் இதைப் பார்க்கிறோம்.

உண்மையிலேயே இத்தகைய குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின் எண்ணமாக இருந்தால் நீங்கள் கோடிட்டுக் காட்டியிருக்கின்ற தண்டனைகளுக்கு ஏற்கனவே பல சட்டங்கள் இருக்கின்றன.

குறிப்பாக, மதுவிலக்குச் சட்டத்தை மீறுபவர்கள், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் போன்றவர்களை மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் கைது செய்ய முடியும்; அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்க முடியும்; அவர்களுக்கு தண்டனை பெற்றுத் தர முடியும். ஏற்கனவே உள்ள சட்டத்தின் பிரிவு 4—ன் கீழ் முதன் முதலாகக் குற்றம் செய்பவர்களுக்கு 6 மாதங்கள் முதல் 2 வருடங்கள் வரையில் சிறைத் தண்டனை கொடுப்பதற்கு அந்தச் சட்டத்தில் இடமிருக்கிறது. மறுபடியும் இதே குற்றத்தை அவர் செய்தால் அதிகப்படியாகத் தண்டனை தண்டனை வழங்கவும் வகையிருக்கிறது. இத்தகைய சட்டங்கள் இருக்கின்றபொழுது நீங்கள் கொண்டு வந்திருக்கின்ற சட்டங்கள் தேவையில்லை என்பதால் நாங்கள் இதை எதிர்க்கிறோம்.

மருந்துப் பொருட்கள் சட்டத்தின்கீழ், குற்றம் இழைப்பவர்களுக்கு இதே சட்டத்தின் கீழ் Indian Drugs and Cosmetics Act என்ற அடிப்படையிலேயும், Dangerous Ac என்ற அடிப்படையிலேயும் தண்டிக்க சட்ட விதிகள் இருக்கின்றன. எனவே, அதைப் பொறுத்தவரைக்கும் இந்தச் சட்டம் தேவையற்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குண்டர்களைத் தண்டிப்பதற்கு Indian Penal Code எத்தனையோ ஷரத்துக்கள் இருக்கின்றன. அதன் துணை கொண்டு நீதிமன்றத்திற்கு எத்தனையோ குண்டர்கள் எடுத்துச் செல்லப்படுகிறார்கள்.

வழக்குகள் போடப்படுகின்றன. அவர்கள் தண்டனை பெற்று வருகிறார்கள். எனவே இந்த இன குற்றவாளிகளைப் பொறுத்த அளவிலே இந்தச் சட்டம் தேவையற்றது என்று நாங்கள் உணர்கிறோம். விபச்சார குற்றம் செய்பவர்களைத் தண்டிப்பதற்கு The Suppression of Immoral Traffic in Women and Girl's Act 1956. என்ற சட்டம் ஏற்கனவே இருக்கின்றது. அந்தச் சட்டத்தின் கீழ் வருகின்ற மூன்றாவது சட்டப் பிரிவின் கீழ் அந்தக் குற்றம் செய்பவர்களை தண்டிப்பவர்களுக்கும், அதிலே குறைந்தபட்சம் 6 மாதம் முதல் 2 ஆண்டுகள் வரை, முதல் குற்றத்திற்குத் தண்டனை வாங்கித் தர வழி இருக்கிறது. மீண்டும் இதே குற்றங்களை செய்வதாக இருந்தாலும் அதிகப்படியான தண்டனை வழங்குவதற்கும் சட்டம் வகை செய்கிறது. எனவே இந்த வகை குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கும் இந்தச் சட்டம் தேவையற்றது என்று நாங்கள் உணருகிறோம்.

அதேபோல, பிறருடைய நிலத்திலே, ஆக்கிரமிப்புச் செய்பவர்களைத் தடை செய்வதற்காக, இண்டியன் பீனல் கோடிலே ஏற்கனவே பல ஷரத்துக்கள் இருக்கின்றன. எனவே இத்தகைய சட்டங்கள் அனைத்தும் இருந்தபோதிலும் புதியதாக இந்தச் சட்டம் கொண்டு வரும் உள்நோக்கம் வழக்குத் தொடரப்பட்டவர்கள் அல்லது கைது செய்யப்பட்டுக் கொண்டு இருக்கின்றவர்கள், நீதி மன்றத்திற்கு அழைத்துச் செல்லப்படாமலேயே அவர்களைக் கைது செய்து காராக்கிரகத்திலே அடைப்பதற்கு அரசாங்கத்திற்குத் துணை நிற்கின்ற ஒரு சட்டமாக இது அமையும். எனவே இந்தச் சட்டம் துஷ்பிரயோகம் செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்று அஞ்சுகிறோம். குறிப்பாக இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்கள் எதிர்வழக்கு ஆடுவதற்காக வழக்கறிஞர்களை நியமிப்பதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இங்கே இருக்கின்ற ஒரு நண்பர் குறிப்பிட்டதைப் போல, இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகின்றவர்கள் சட்ட நுணுக்கங்களைத் தெரிந்தவராக தன்னுடைய டிபன்சைத் தாங்களே நிர்ணயித்துக்கொள்ளுகின்ற ஆற்றல் படைத்தவர்களாக இருப்பார்கள் என்று அரசு எதிர்பார்ப்பது தவறு என்று நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அதேபோல



இந்தச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படுபவர்கள் தாங்கள் தவறான முறையில் கைது செய்யப்பட்டோம் என்று சுட்டிக் காட்டுவதற்கோ அல்லது அதிகார வர்க்கம் தவறாக செயல்பட்டுவிட்டது என்று அவர்கள் மீது குற்றம் சாட்டுவதற்கோ வகை கிடையாது. இந்த சட்டத்தின் கீழ் செயலாற்றுகின்றவர்கள் பாதுகாக்கப்படுகிறார்கள்.

இங்கே தரப்பட்டிருக்கின்ற 16 ஆவது ஷரத்து, அரசு அதிகாரிகள் இந்தச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் அடிப்படையில் இந்தச் சட்டம் துஷ்பிரயோகம் செய்தால்கூட அவர்களுக்கு எதிராக சிவில் வழக்கோ அல்லது கிரிமினல் வழக்கோ போடுவதற்கு இடம் இல்லாத வகையில் அவர்களுக்குப் பாதுகாப்புத் தரப்படுகிறது. அரசாங்கத்தைக் கேட்டால் அவர்கள் சொல்லுவார்கள் சட்டம், சட்டப்புத்தகத்தில் வருமே தவிர, நிச்சயமாக அது துஷ்பிரயோகம் செய்யப்பட மாட்டாது. அதிகமாகப் பயன்படுத்துகின்ற சட்டம் கொண்டு வரப்படவில்லை என்று விளக்கம் தரப்படும். இதே விளக்கம்தான் திருமதி இந்திராகாந்தியின் சர்வாதிகார ஆட்சியின்போது 'மிசா' என்ற சட்டத்தைப் பற்றி ஆளுகின்ற வர்க்கம் விளக்கம் தந்தது. இப்போது அமலில் இருக்கின்ற தேசியப் பாதுகாப்புச் சட்டம் உருவாகி நடைமுறையில் இருக்கிறபோதும் இதே விளக்கம்தான் சொல்லப்பட்டது. அந்தச் சட்டம் தாறுமாறாகப் பயன்படுத்தப்பட மாட்டாது. அரசு இதை அரசியல் காரணங்களுக்காக நிச்சயமாகப் பயன்படுத்தாது என்று உத்தரவாதம் தந்திருந்தபோதும் கூட தேசியப் பாதுகாப்புச் சட்டம் அரசியல் காரணங்களுக்காக அரசியல் தலைவர்களை ஒடுக்குவதற்காக இன்றையதினம் பயன்பட்டு வருகிறது என்பது பல எடுத்துக்காட்டுகளின் மூலம் நாம் கண்டுகொண்டிருக்கிறோம்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு ஜனதா கட்சியின் தலைவர் அவர்கள் இந்திராகாந்தியின் சர்வாதிகார ஆட்சியின்போது இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது என்று பேசினார்கள். அது அவைக்குறிப்பிலே இருக்கலாமா என்பதை தாங்கள்தான் முடிவு செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சர்வாதிகாரம், ஜனநாயகம் எல்லாம் சாதாரணமாக சட்டமன்றத்திலே பேசப்பட்டு வருவதுதான். அவர் சர்வாதிகாரி என்று சொன்னால் அவர்கள் ஆண்ட ஆட்சியை நீங்கள் சொல்லலாம். (குறுக்கீடு) எல்லாவற்றையும் குறித்துதான் இங்கே பேசுகிறார்கள். ஏற்கனவே பல முறை பேசிக் கொண்டிருந்திருக்கிறார்கள். இது புதிதல்ல.

திரு. பி. முகமது இஸ்மாயில்: தலைவர் அவர்களே, எமர்ஜென்சி ஆட்சிக் காலத்தில் சில சட்டங்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டன என்பதை நான் சுட்டிக்காட்டினேன். அதேபோன்ற தவறுகள் இந்தச் சட்டத்தின் கீழ் இருப்பதற்கான வாய்ப்பு

உண்டு என்று நான் அஞ்சுகின்ற காரணத்தினால், இந்தச் சட்டம் தேவையில்லை, கொண்டு வரக்கூடாது என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறோம்.

இந்தச் சட்டத்திலே 17ஆவது பிரிவில் தேசியப் பாதுகாப்புச் சட்டத்திற்குப் பதிலாக இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. இந்தச் சட்டம் வந்த பின்னர் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் ஷரத்துக்கள், விதிகள் பயன்படுத்தப்பட மாட்டாது. இந்தச் சட்டத்தின் கீழ்தான் அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்று சுட்டிக்காட்டி இருப்பது தேசியப் பாதுகாப்பு சட்டத்திற்குப் பதிலாக இந்த சர்க்கார் இத்தகைய ஒரு விரோதமான சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்று நாங்கள் எண்ணுகிறோம். எனவே இந்த சட்டம் தேவையற்றது, ஜனநாயக முறைகளுக்குப் புறம்பானது. அரசியல் காழ்ப்புணர்ச்சியாக அதைப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே கருப்புச் சட்டம் என்ற காரணத்தால் ஜனதா கட்சி இந்த சட்டத்தை வன்மையாக எதிர்க்கிறது.

(பிற்பகல் 12.40)

*திரு. க. அன்பழகன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த அரசாங்கம் கொண்டு வந்து இருக்கிற இந்தச் சட்டத்தைக் குறித்து பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த வெவ்வேறு கருத்து உள்ளவர்கள் இந்தச் சட்டத்தை ஏற்பதற்கில்லை என்பதற்கான நியாயங்களை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அத்தகைய வேறுபட்ட கருத்து உடையவர்கள் கூட ஒருமுகமாக ஒரு கருத்தைத் தெரிவித்து இருக்கும்போது, ஒரு ஆளும் கட்சி, இந்தச் சட்டத்தை எப்படியும் நிறைவேற்றித் தீரவேண்டும் என்று கருதுமானால், அது பெரும்பான்மைக் கருத்துக்கு மாறுபட்ட சிறுபான்மைக் கருத்து என்பதை கருத்தளவிலாவது ஆளும் கட்சி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

பெரும்பான்மை என்பது எண்ணிக்கை அளவிலே என்று ஆளும் கட்சி கருதுமானால், ஒரு புதிய சட்டம் அல்லது புதிதாகக் கொண்டு வரப்படுகிற விதிமுறைகள் பெரும்பாலான கருத்து வேறுபாடுள்ள பல்வேறு கட்சிகளாலே மறுக்கப்படுகிறபோது, ஒருசார்புடைய கருத்துடையவர்களால் அது ஏற்றுக்கொள்ளப் படுவதால், அது பெரும்பான்மையாகிவிடாது என்று கருத வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

அகில இந்தியாவில் பல்வேறு விதமான கொடுமைகள் அல்லது கள்ளக்கடத்தல்கள் அல்லது கேடுகள் விளைவிக்கிற போது தேசிய அளவில் நாட்டினுடைய பாதுகாப்புக்கே அவை மிகப்பெரிய இடையூறு ஆகிவிடும் காரியங்கள் என்ற காரணத் தாலே, அங்கே கொண்டு வரப்பட்டு தேசிய பாதுகாப்புச் சட்டம்





எந்த நோக்கத்திலே கொண்டு வரப்பட்டதோ அந்த நோக்கத்திலே இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது என்று பேசுவது, அதனுடைய பொது நோக்கத்தோடு இது ஒத்து வரவில்லை என்பதை மறந்து விட்டுப் பேசுகிற ஒரு கருத்து என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

சட்டங்கள் என்ற அடிப்படையில் அரசாங்கம் அதிகாரம் எடுத்துக்கொண்டு, தான் நினைத்தபடி அதைப் பயன்படுத்தக் கூடிய வாய்ப்பு, நீதிமன்றத்தின் மூலம் பாதுகாப்பு இல்லாத அளவிற்கு, சட்டத்தின் மூலமாக யாரையும் தண்டிக்கக்கூடிய வாய்ப்பு பெறக்கூடாது என்ற வகையில், தேசிய பாதுகாப்புச் சட்டம் ஏற்றுக்கொள்ளத் தக்கது அல்ல என்ற கருத்துக்கு இடம் உண்டு என்று சொன்னாலும், அது நாட்டினுடைய பாதுகாப்புக்குத் தொடர்புடைய ஒரு அமைப்பிலே பயன்படுத்த வேண்டிய காரணத்தால், ஒரு கோணத்தில் அதைச் சகித்துக்கொள்ள வேண்டிய அவசியம் நாட்டுக்கு ஏற்படக்கூடும். ஆனால் இந்தச் சட்டம் நாட்டின் பாதுகாப்புக்கு இல்லை. பொதுமக்களின் பாதுகாப்புக்காகத்தான் இந்தச் சட்டம் வருகிறது என்று சொல்லமுடியுமா என்று கேட்டால், சமுதாயத்திலே குற்றம் செய்கிறவர்கள் குண்டர்களாகவோ, விபசாரிகளாகவோ, கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களாகவோ, சமூக விரோதக் குற்றங்களில் தொடர்ந்து ஈடுபட்டு உள்ளவர்களோ என்று இருந்தால், இந்த அரசு இந்தச் சட்டத்தைக் காட்டி, இதன் மூலமாக கைது செய்து, அவர்கள் ஜாமீனில் வரமுடியாமல், குறைந்தது 3 மாதமாவது சிறை தண்டனை அனுபவிக்கவேண்டிய அளவிற்கு, தண்டனை பெறும் அளவிற்கு அதிகாரத்தைப் பெறுகிறபோது, எண்ணிப் பார்க்க வேண்டிய ஒன்று, உண்மையிலேயே இந்தச் சட்டம் யார் மீதாவது தவறாகப் பயன்படுத்தப்பட்டு விட்டால், குண்டராக இல்லாத ஒருவர் ஒரு வேளை அவர் வைத்து இருக்கும் மீசையைப் பார்த்து அல்லது மற்றவர்கள் அவரைப் பார்த்து அப்படிச் சொன்னதை வைத்து, அல்லது ஒரு வேளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே யாரையாவது குற்றம் சாட்டுகின்றபோது அவர்களெல்லாம் குண்டர்கள் என்று சொல்லியிருக்கிற அந்தக் காரணத்தை வைத்து, அல்லது ஒரு வேளை அவர் இப்போது ஒரு கண்ணியம் உள்ள மனிதராகக் கூட ஆளும் கட்சியில் சேர்ந்தபிறகு ஆகியிருந்தாலும் கூட, அவர் களையும் கூட ஏற்கனவே குண்டர்கள் என்று முதலமைச்சர் சொன்ன காரணத்தால் அதைநினைவில் வைத்து, இந்தச் சட்டத்தின்மூலம் கைது செய்யப்படுவாரானால் இந்தச்சட்டத்தின் மூலம் கைது செய்ய மாட்டார்கள் என்பதற்கு ஆளும்கட்சியில் இருப்பது பாதுகாப்பாக இருந்தாலும், ஒரு வேளை ஆளும் கட்சியில் இல்லாவிட்டால், இதே சட்டம் அவர் மீது பயன் படுத்தப்படுமானால், அவர் இப்போது அப்படிப்பட்ட குற்றச் சாட்டுக்கு உரியவர் இல்லை என்று சொன்னாலும் கூட இந்த தண்டனையையோ, தொல்லையையோ, இந்த அவமானத்தையோ ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலையிலிருந்து அப்படிப்பட்டவர்கள்

பாதுகாப்பு பெறமுடியாது. ஆகவே, கொடுமையான சட்டம் கொண்டு வருகிறபோது, கொடுமையான தண்டனை உடைய சட்டம்கொண்டு வருகிறபோது, உங்களுக்கு நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். The rigours of law untempted with epuity is not justice but the denial of it. என்று சொல்லப்பட்டு இருக்கிற அந்தக் கருத்தின் அடிப்படையில் இது கொடுமையான சட்டம். நான் மதுவிலக்கு தீவிர தண்டனைச் சட்டம் கொடுமையான சட்டம் என்று அதைக் கொண்டு வந்தபோதே சொன்னேன். இந்தச் சட்டம் தோல்வி அடையுமே தவிர இந்தச் சட்டத்தாலே இம்மி அளவு பலனும் இந்த அரசு எதிர்பார்க்க முடியாது. இதற்கு மாறான விளைவு தான் ஏற்படும் என்பதை அந்தச் சட்டம் வருகிறபோதே எனக்குத் தெரிந்த சமுதாய நல கருத்தை வைத்து ஏறத்தாழ ஒரு மணி நேரம் எடுத்துச்சொல்லி இருக்கிறேன்.

அதைப்போலவே நான் சொல்கிறேன். இந்தச் சட்டத்தினால் ஏற்படுகின்ற நன்மைகளைவிட, பொது நலன்களைவிட, பொது நலன்களுக்கு ஏற்படுகிற அநீதிகள்தான் அதிகமாகும். ஒரு சட்டத்திற்கு இருக்கிற இலக்கணத்தை மீறி இந்தச் சட்டம் வருகிறது என்பதால் அந்த இலக்கணத்திற்கு உட்பட்டே இது கொடுமையான சட்டம் என்ற குற்றச்சாட்டை தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதிகமான தண்டனையே, கடுமையான தண்டனையே நீதி வழங்கி விடாது என்பதை நீங்கள் எண்ணிப்பார்த்திட வேண்டும். அதிகத் தண்டனை கூட சில நேரங்களில் நியாயம் வழங்கும். ஆனால் முறையற்ற தண்டனை அது. குற்றவாளி என்று ஒரு நீதிமன்றம் மூலம் தீர்ப்பு வழங்காத தண்டனை எப்படி இருந்தாலும் அது நிச்சயமாகக் கேடு விளைவிக்கும். சமுதாயத்திலே குற்றவாளிகளாக இல்லாத சிலரை குற்றவாளிகளாக ஆக்க அது பயன்படுமே தவிர குற்றங்களைத் தடுக்கப் பயன்படாது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர நான் விரும்புகிறேன்.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பரம்பரை குண்டர்கள் என்பவர்கள் தங்களுடைய தொழிலை ஒரு தொடர் தொழிலாக, தொடர்ந்து செய்கிறார்கள். அவர்கள் ஏற்கெனவே காவல்துறையின் தயவினால், அவர்களுக்குத் தெரிந்தே செய்கிறார்கள் என்பதை அமைச்சர்கள் மறுக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீண்டகாலமாக கள்ளச்சாராயப் காய்ச்சுபவர்கள் அரசாங்கத்தின் சில இலாகாக்களுக்குத் தெரிந்துதான் காய்ச்சுகிறார்கள். அவர்கள் ஆதரவிலேதான் அந்தக் காரியத்தைச் செய்கிறார்கள் என்பதை இந்த அமைச்சரவை மறுக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





வேண்டுமென்றால் விபச்சாரம் நடைபெறுவது இந்த அமைச்சரவைக்குத் தெரியாமல் இருக்கலா ; தெரியும் என்று நான் சொல்லமாட்டேன். ஆனால் காவல் துறைக்குத் தெரியும் என்பதை மறுக்கமாட்டேன். இந்தக் குற்றத்தைச் செய்கிறவர்கள், அவர்களிடம் சிக்கிக் கொள்ளக்கூடாது; அவர்களிடம் மாட்டிக்கொள்ளக்கூடாது; அவர்களுடைய தயவு வேண்டும் என்பதற்காக ஏதோ ஒரு முறையிலே அவர்களுடைய தயவை, அவர்களுடைய ஆதரவைப் பெற்று இந்தக் குற்றத்தைச் செய்கிற முயற்சியிலே ஈடுபடுகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. இன்றைக்கு இருக்கிற நாட்டு நடப்பில் இதை யாரும் தனிப்பட்ட முறையில், யாருக்கும் தெரியாமல் செய்யவில்லை; சிலருடைய உதவியோடுதான் இந்தக் குற்றத்தைச் செய்கிறார்கள்.

சமுதாயம் மேலும் மேலும் சீரழிந்து வருகிற நிலை இன்றைக்கு இருக்கிறது. இந்தக் குற்றத்தைச் செய்கின்றவர்கள் யாரால் தண்டிக்கப்படுவோம் என்று கருதினார்களோ, யாரிடம் சிக்கிக் கொள்வோம் என்று கருதுகிறார்களோ, யாரால் நிர்ப்பந்தம் ஏற்படும் என்று கருதுகிறார்களோ அவர்களை ஏதோ ஒரு வகையில் தொடர்கொண்டு, ஏதோ ஒரு வகையில் அவர்களை. சரிக்கட்டி, அவர்களை சாதகமாக வைத்துக்கொண்டு இப்படிப்பட்ட குற்றத்தில் ஈடுபடுகிறார்கள் என்பதை இந்த அரசு மறந்துவிடக்கூடாது.

ஏற்கெனவே கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, இந்த அரசின் சார்பிலே முதலமைச்சர் அவர்கள் கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் பட்டியல் எல்லாம் என் கையில் இருக்கிறது என்று அறிவித்தார்கள். அப்படி இருக்கும்போது காவல் துறைக்கு நடவடிக்கை எடுக்க என்ன தடை இருந்தது? அந்தப்பெயர் பட்டியல் அரசாங்கத்திற்குத் தெரிந்த இருந்தபோதிலும் இருக்கிற சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முடியவில்லை. இருக்கிற சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முடியாததால் இந்த சட்டம் வருகிறது என்று சொல்ல இந்த அரசுக்கு வாய்ப்பு இருக்கிறதா? ஏற்கெனவே இருக்கிற சட்டத்தின்படி யாராவது கைது செய்யப்பட்டார்களா? ஏற்கெனவே உள்ள சட்டம் யாரை கைது செய்வதை தடுத்தது? ஏற்கெனவே உள்ள சட்டம் காவல் துறை முறையாக இயங்காமல் எங்கே தடுத்தது? ஏற்கெனவே உள்ள சட்டம் அந்த தண்டனை விதிகள் இல்லாத காரணத்தால் அந்தச் சட்டம் மீறப்பட்டதா, ஏற்கெனவே உள்ள சட்டம் விபசாரத்தைத் தடுக்க பயன்படவில்லையா? ஏற்கெனவே உள்ள சட்டத்தில் விபச்சாரத்திற்கு தண்டனை இல்லையா? குண்டர்களைப் பிடித்து போலீசார் நீதிமன்றத்திலே நிறுத்தினால் தண்டனை கிடையாதா? கொலைகாரர்களைப் பிடித்து நீதிமன்றத்திலே நிறுத்தினால் தண்டனை கிடையாதா? இவ்வளவும் இருந்து கூட நீங்கள் முறையோடு

[திரு. க. அன்பழகன்] [1982 பிப்ரவரி 18

செய்கிறோம் என்ற அந்த நம்பிக்கை எங்களுக்கு இல்லை; இனி நாங்கள் முறையில்லாமல் காரியங்கள் செய்யப் போகிறோம் என்று இந்த அரசாங்கம் சொல்லுமேயானால் நாளையதினம் நீங்கள் மாறி, வேறு ஒரு கட்சி ஆளுங்கட்சியாக வந்து அமருகிறது என்றால், இன்றைக்கு ஆளும் கட்சியில் இருக்கிற பலரை இந்த சட்டத்தின் மூலம் பொய்யாகவாவது, உண்மையில்லாமலே கூட பிடித்து உள்ளே போடும் பழிவாங்கும் நிலைமை ஏற்படாதா? அந்த பழிவாங்கும் எண்ணத்தோடு காவல் துறை செயல்பட்டு, அவர்களை உள்ளே பிடித்துப்போடும் நிலைமை இன்றைக்கு இருக்கிற ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கோ, அமைச்சர்களுக்கோ ஏற்படவே ஏற்படாதா? எல்லோருமே நேர்மையாக இருப்பார்கள் என்று இந்த அரசு நம்புகிறதா?

நான் இன்னும் சொல்கிறேன். மதுவிலக்கைப் பொறுத்த வரையில் இந்த அரசாங்கம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு சாதாரண ஏ. டி. எஸ். பி. என்ற அதிகாரியை நியமித்து, அவருக்குக் கீழே 40 அல்லது 50 காவல் துறையினரை நியமித்து, அவர்களுக்கு ஒரு வேன் கொடுத்து, அவர்களைக் கொண்டு ஒரு மாவட்டத்தில் கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களைக் கண்டு பிடித்து, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஒரு முறையை ஏற்படுத்தியிருக்கிறீர்களே. இந்த 40 பேர்கொண்ட காவல் பிரிவினர் ஒரு மாவட்டம் முழுவதும் சுற்றிவந்து; எந்த இடத்தில் கள்ளச்சாராயம் உற்பத்திச் செய்யப்படுகிறது, எந்த இடத்தில் விற்பனை ஆகிறது என்று அந்த இடங்களைக் கண்டுபிடித்து, கட்டுப்படுத்த முடியும் என்று நம்புகிறீர்களா? காவல் துறையினர் மொத்தமாக இருக்கும் போது தவறு ஏற்படுகிறது, ஆகையால் இவர்களை நியமித்திருக்கிறோம் என்று சொல்வீர்களேயானால் இவர்களால் தவறு நடக்காதா? எந்த ஊருக்குப் போகவேண்டுமென்றாலும் அந்த ஊர் காவல் துறையினர் ஆதரவு இருந்தால் தான் இவர்களால் போக முடியுமே தவிர, தவறு செய்கிறவர்களைக் கண்டுபிடிக்க முடியுமே தவிர, இவர்கள் தனித்துப்போய் செய்யமுடியாது அந்த ஊரில் இருக்கிற காவல் துறையினருக்கு நேரடியாக அங்கே உள்ள கள்ளச்சாராய வியாபாரிகளிடம் தொடர்பு இருந்ததால் இவர்கள் செயல்படுவதைத் தடுத்து நிறுத்திய நிகழ்ச்சிகள் பற்றிய செய்தி அரசாங்கத்திற்கு வரவில்லையா?

(பிற்பகல் 12.50)

காவல் துறையை மொத்தமாக நம்ப முடியாத நீங்கள், சாதாரண கள்ளச்சாராய வியாபாரத்திலே, காவல் துறையினரை மொத்தமாக நம்பி நீங்கள் எந்த இடத்தில் இருந்தாலும் நடவடிக்கை எடுக்கலாம், எல்லா காவல் துறையினருக்கும் இந்த பொறுப்பு உண்டு என்று சொல்லமுடியாத நீங்கள், இந்தச் சட்டத்தை யாரிடத்திலே ஒப்படைக்கப் போகிறீர்கள்? கலெக்டரிடத்திலே மட்டுமா? அமைச்சருக்குத் தெரிந்துதான் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்த வேண்டுமென்பதற்கு ஏதாவது முறை



1982 பிப்ரவரி 18] (திரு க. அன்பழகன்)

உண்டா? நாளையதினம் இந்தச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்பட்டால், அமைச்சரைக் குற்றம் சாட்டினால், அந்த அமைச்சர் பதவியை விட்டு விலக்கத் தயாரா? இந்தச் சட்டம் தவறாகவே பயன்படுத்த முடியாத அளவுக்கு பாதுகாப்பான முறையிலே செய்யப்பட்டிருக்கிறதா? அல்லது, இதை நீங்கள் யாரிடத்திலே ஒப்படைத்து செயல்படுத்த வேண்டுமே, அவர்கள் அம்முறையில் செயல்படுவார்கள் என்று நம்புகிறீர்களா?

விபச்சாரக் குற்றம் என்பது சமுதாயத்திலே யாரோ சில பேர், ஏழைகளோ அல்லது வேறுவிதமாக வாழ வழியில்லாதவர்களோ, அல்லது எப்பொழுதோ கெட்டுப் போனவர்களாக சொல்லப்படுபவர்களோ, அல்லது வசதி மிக்கவர்களோ, யாரோ சிலபேர் இந்தக் குற்றத்தை செய்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர்களை இப்போதுள்ள சட்டத்திலே காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து, அவர்களைப் பிடிப்பதிலே என்ன தடை இருக்கிறது?

நாளையதினம் இந்தச் சட்டத்தின் மூலமாக ஏதோ ஒரு யாரோ ஒரு இளைஞனிடத்திலே பேசிக் கொண்டிருக்கிறாள், பழகிக் கொண்டிருக்கிறாள்; என்பதால் காவல் துறை அந்தப் பெண்மணியினுடைய நடவடிக்கையைச் சந்தேகப்படுகிறது, அந்தப் பெண்மணியைக் கைது செய்கிறது. போர்டுக்குப் போகிற வரை, 3 மாத காலம் அந்தப் பெண்மணி சிறையிலே இருக்க வேண்டும், போர்டுக்கு போயுங்கூட நியாயம் தெரியவில்லையென்றால், அந்தப் பெண்மணி மறுபடியும் சிறையிலே இருக்க வேண்டும், அப்படி 3 மாத காலம் ஒரு பெண்மணி விபச்சாரக் குற்றம் செய்யாமலேகூட தவறாகப் போடப்பட்டிருந்தால், அந்தப் பெண்மணி 3 மாதகாலம் சிறையிலே இருந்ததற்கு பின்னாலே அந்தப் பெண்மணியினுடைய வாழ்க்கை என்னவாகும்? யார் அதற்கு பொறுப்பு? ஒரு விபச்சாரமே நடைபெற்று இரண்டு பேர் பணம் கொடுத்து ஏமாந்து போயிருந்தால் கூட, நோய் வாங்கிக் கொண்டு போனால்கூட இந்த சர்க்காருக்குப் பொறுப்பு இல்லை. ஆனால் ஒரு பெண்மணி தவறாக கைது செய்யப்பட்டு ஒரு குற்றத்திற்கு ஆளாகி 3 மாத காலம் அவள் குற்றம் செய்யாமலே அந்தத் தண்டனையை அனுபவிக்க நேர்ந்து விட்டால், அந்தப் பெண்மணி நம்முடைய வீட்டு பெண்மணியாக இருந்தால், நம்முடைய குடும்பத்தினுடைய கதி என்ன? நம்மைப் போல சமுதாயத்திலே மதிக்கப்படுகிறவர்களுடைய வீட்டு பெண்மணி ஒருத்தி ஏதோ படிக்கிற இடத்தில் அல்லது பயில்கிற இடத்தில் எப்படியோ ஒரு நிலைமைக்கு ஆளாகி கைது செய்யப்பட்டால் யார் காப்பாற்றுவது? எந்த நீதிமன்றத்திலே இதற்கு நியாயம் கிடைக்கும்? அப்பொழுது நீதிமன்றத்திலே நியாயம் கிடைக்கிற வரையில் அந்தப் பெண்மணியினுடைய பெயர் பாழாக்கப்படுவதற்குக் காரணமாகும். இந்த அரசாங்கம் அந்தப் பழியிலிருந்து எப்படி தப்பும்?

நான் கேட்க விரும்புகிறேன், இப்படி யாரையாவது குண்டர் என்றோ, அல்லது கள்ளச்சாராயம் காய்ச்சுபவர் என்றோ, அல்லது அக்கிரமக்காரர் என்றோ, அல்லது விபச்சாரி என்றோ இந்த அரசாங்கம், இந்தச் சட்டத்தைப் பயன்படுத்திக் கைது செய்வதற்கு முன்னால் இரண்டு மூன்று தடவையாவது, ஏற்கனவே உள்ள சட்டத்திலே கைது செய்து, அவர்களை நீதிமன்றத்திலே நிறுத்தி ஒரு முறை, இரு முறை தண்டிக்கப்பட்டு, அப்படி தண்டிக்கப்பட்டவர்கள் மறுபடியும் தொடர்ந்து இந்தக் குற்றம் செய்ததாக காவல் துறைக்கு தெரிந்து மேலே தெரிவிக்கப்பட்ட நீதிமன்றத்திற்கு கொண்டு போனாலும் அவர்கள் ஜாமீலிலே வந்தால் தொடர்ந்து அந்தக் குற்றம் செய்வார்கள் என்று விளக்கம் தந்து, கைது செய்யக்கூடிய வாய்ப்பு இந்தச் சட்டத்திலே இருக்கிறதா? அந்த பாதுகாப்புக் கூட இல்லாமல் அப்படி ஒரு சட்டமா? அக்கிரமத்தை அரசாங்கமே செய்வது என்று ஆரம்பித்தால், நாட்டிலே மற்றவர்கள் செய்தால் மட்டும் எப்படி குற்றம் என்று நான் கேட்கிறேன். அரசாங்கத்திலே எத்தனையோ அதிகாரிகள் இலஞ்சம் வாங்குகிறார்கள் என்ற கதை நாட்டிலே இருக்கிறபொழுது, அரசாங்கத்திலே காவல் துறையிலே சிலபேர் காவல் துறையிலே உள்ளவர்களைக் கற்பழித்தார்கள் என்ற ஒரு கதையோ, செய்தியோ வெளியிலே வருகிறபொழுது, காவல் நிலையத்திலே கொண்டுபோய் வைக்கப்பட்ட பெண்கள் இரவு நேரத்திலே வீட்டிற்கு அனுப்பப்படாமல் அங்கே கற்பழிக்கப்பட்டார்கள் என்ற செய்தி வருகின்றபொழுது சில இடத்திலே பெண்களை விபசாரத்திலே ஈடுப்பட்டதாகக் குற்றத்தைச் சாட்டி அழைத்து வந்து யாரோ பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்ற செய்தி வருகின்றபொழுது, அந்த அநீதிக்கெல்லாம் அப்பாற்பட்ட வகையில் ஒரு பொது நீதியை காப்பாற்றக்கூடிய ஒரு அரசாங்கத்தை இந்த நாட்டிலே யாரும் நடத்த முடியாது, என்ற நிலையில் முதலமைச்சர் எம். ஜி. ஆர். மட்டுமல்ல, யாரும் நடத்த முடியாது. எனவே அவர்மீது மட்டும் சொல்கிற குற்றமாகக் கூடக் கருதவேண்டாம். அவர் அவ்வளவு பெரியவர். ஆனால், நான் திட்டவட்டமாகச் சொல்கிறேன், கடுமையான சட்டம் விபரீதமான விளைவை ஏற்படுத்தும். இந்தச் சட்டத்தைப் பாதுகாக்கக்கூடிய ஆற்றல் இந்த அரசாங்கத்திற்குக் கிடையாது, ஜனநாயகத்திலே இன்றைக்கு ஏறத்தாழ பல அரசாங்கங்களுக்குக் கிடையாது. இந்தச் சட்டத்தைக்கடுமையாக தயாரித்திருக்கிற நீங்கள் இதனை நிறைவேற்றுவதை யாரிடத்திலே ஒப்படைக்கப் போகிறீர்கள்? அதனுடைய விளைவு பேராபத்தானதாக இருக்கும், எனவே என்னுடைய முழு அறிவையும் பயன்படுத்தி, நான் சார்ந்திருக்கிற கட்சிக்காக அல்ல என்னுடைய கட்சியைப் பாதுகாத்துக் கொள்ள எனக்குத் தெரியும், ஆனால், நான் மனித சமுதாயத்தினுடைய நீதி என்ற அடிப்படையில் இதுவரையில் ஏற்பட்டிருக்கிற அனுபவத்திற்குப் பின்னாலும் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவது. அரசாங்கம் தன்னைத் தானே ஒரு சிக்கலுக்கு ஆளாக்கிக்கொண்டு, அபலை



களை, அனாதைகளை பாதுகாப்பற்றவர்களைக் கொடுமைக்கு ஆளாக்கும் வாய்ப்பளிக்கக்கூடிய ஒரு பயங்கரமான நிலைமை இந்தச் சட்டத்திற்குப் பின்னாலே இருக்கிறது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்து, இந்த சட்டத்தை மறுபடியும் வலியுறுத்தி, இந்த அவையிலே நிறைவேறவேண்டிய நிலைமை ஒருவேளை இருக்குமானால், நாங்கள் இங்கேயிருந்து இந்தச் சட்டம் நிறைவேறுவதை ஏற்றுக் கொள்ள முடியாதவர்களாக இருப்போம் என்பதையும் தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுகின்றபோது இந்தத் தடுப்புக் காவல் சட்டத்தின்படி தவறு செய்யாதவர்கள் மீதும் கூட காழ்ப்புணர்வோடு நடவடிக்கை எடுப்பதற்கு பயன்படக்கூடிய சட்டமாக இது அமைந்துவிடக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது என்றும் சிலர் பேசுகின்றபோது என்.எஸ்.ஏ. இருக்கும் போது ஏன் இந்த சட்டம் என்றும் இந்தச் சட்டம் குடிசை வாழ் மக்களையும், பெண்களையும் மிகவும் பாதிக்கும் சட்டமாக அமையும் என்றும் இங்கே சொன்னார்கள். ஆனால் இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரை சட்ட முன் வடிவிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தச சட்டம் சரியான சட்டமா என்ற வினாவை மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌரிராஜன் அவர்கள் எழுப்பினார்கள். Whereas the instructions of the President have been obtained in pursuance of the proviso to clause 1 of Article 213 of the Constitution. என்று இதிலே காட்டப்பட்டிருக்கின்றது. எற்கெனவே குடியரசுத் தலைவரின் அனுமதி பெற்றுதான் இந்த அவசரச் சட்டமே வந்தது. ஆகவே சட்டத்திற்கு உட்பட்டுத்தான் இது வந்திருக்கின்றது. (Interruption). I am coming to it.

அடுத்து என்.எஸ்.ஏ. இருக்கின்றபோது இந்தச் சட்டம் ஏன் என்ற வினாவை எழுப்பினார்கள். என்.எஸ்.ஏ. சட்டத்தைப் பொறுத்தவரை மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுகின்றபோது பாராளுமன்றத்திலே இந்த2 சட்டத்தை நாங்கள் எதிர்த்தோம் என்று சொன்னார்கள். ஆனால் அதற்கு ஆதாரம் இல்லை. இந்தச் சட்டத்தினுடைய பிரிவுகள் தவறாகப் பயன்பட்டுவிடக்கூடாது என்று சொன்னார்கள். ஆனால் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறபோது நான் மகிழ்வடைகிறேன் என்று கூட மாண்புமிகு மாறன் அவர்கள் சொன்னதாக இந்த அவையிலே மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் படித்தார்கள். இவை எல்லாவற்றிற்கும் மேலாக என் எஸ்.ஏ. சட்டத்திற்கு உங்களுடைய ஆதரவைத் தந்திருக்கிறீர்கள். மாண்புமிகு எதிர் கட்சித் துணைத்தலைவர் பேராசிரியர் அவர்கள் பேசுகின்றபோது என்.எஸ்.ஏ. சட்டம் கூட பொதுநோக்கம் உடையது, அந்த

பொது நோக்கம் கூட இதிலே இல்லையே என்றும் நாட்டுப் பாதுகாப்பாவது அதிலே இருக்கின்றதே, இதிலே அது கூட இல்லையே என்று சொன்னார்கள், என்.எஸ்.ஏ. விலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது அதிலே

"If satisfied with respect to any person, that with a view to preventing him from acting in any manner prejudicial to the defence of India." என்று இருப்பது மட்டுமல்ல, அதை அடுத்து

In Clause 3 (2) "the Central Government or the State Government may, if satisfied with respect to any person, that with a view to preventing him from acting in any manner prejudicial to the security of the State or from acting in any manner prejudicial to the maintenance of the public order'.

என்றும் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

"or from acting in any manner prejudicial to the maintenance of the supplies and services essential to the community it is necessary so to do" எனவும் இருக்கின்றது.

in any manner prejudicial to the maintenance of public order. என்று இருக்கின்றது.

என் எஸ்.ஏ.விலே மிகவும் "பிராடாகச்" சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் என்.எஸ்.ஏ.விலே மெய்டனன்ஸ் ஆஃப் பப்ளிக் ஆர்டர் என்று சொல்லி விட்டு, அந்த பப்ளிக் ஆர்டர் என்ன என்பதைப் பற்றி தெளிவாகச் சொல்லவில்லை அதற்கு விளக்கமும் தரவில்லை. அப்படி தெளிவாக்கப்படாத நேரத்திலே என்.எஸ்.ஏ.விலே யாரை வேண்டுமானாலும் கைது செய்வதற்குக் கூட சில நேரங்களிலே வாய்ப்பு இருக்கின்றது. பப்ளிக் ஆர்டர் எந்தெந்த விதத்திலே பாதிக்கப்படுகின்றது என்பதை அங்கே சுட்டிக்காட்டவில்லை.

(பிற்பகல் 1.00)

ஆங்கு அதை கண்டிப்பாக எதிர்த்திருக்க வேண்டும். அந்த Prejudicial to the maintenance of Public Order என்பதை, என்ன வென்றுதான் இந்தச் சட்டத்திலே, இந்த சட்டமுன்வடிவிலே நாங்கள் விளக்கியிருக்கிறோம். அதற்கும் இதற்கும் உள்ள மாறுபாடு, மிக முக்கியமான மாறுபாடு அதுதான். என்.எஸ்.ஏ.வில் வெறுமனே பப்ளிக் ஆர்டர் என்று மட்டும் போட்டு அதை எப்படி வேண்டுமானாலும், யார் வேண்டுமானாலும், யாருக்கு எதிராக வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று இருப்பதை மாற்றி, அதிலே பப்ளிக் ஆர்டர் என்றால் என்ன என்பதை தெளிவுபடுத்தியிருக்கிறோம். தெளிவாக எக்ஸ்பிளனேஷன் சொல்லப்பட்டிருக்கிறது.





"Explanation— For the purpose of this clause (a), public order shall be deemed to have been affected adversely, or shall be deemed likely to be affected adversely, inter alia, if any of the activities of any of the persons referred to in this clause (a) directly or indirectly is causing or calculated to cause any harm, danger or alarm or a feeling of insecurity, among the general public or any section thereof or a grave or widespread danger to life or public health

ஆகவே, இதைத்தான் நான் முக்கியமாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பல சட்டங்கள் இருக்கிறபோது அந்தச் சட்டங்களிலே நடவடிக்கை எடுக்கலாமே, சப்பிரஷன் ஆப் இம்மாரல் பிரிவென்டிவ் ஆக்ட் இருக்கிறதே, டிரக் அபெண்டர்ஸ் ஆக்ட் இருக்கிறதே, இண்டியன் பீனல் கோடு இருக்கிறதே, கிரிமினல் புரொசீஜர் கோடு இருக்கிறதே, டிரபாஸ் ஆக்ட் இருக்கிறதே, குண்டர்களுக்கு என்று தனியாக ஆக்ட் இருக்கிறதே, அப்படி இவைகள் எல்லாம் இருக்கிறபோது இந்தச் சட்டம் தேவைதானா என்று மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசும்போது கூறினார்கள். அதிலே நான் ஒன்றை தெளிவாக்க விரும்புகிறேன். தற்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கிற, பப்ளிக் ஆர்டர் என்றால் என்ன என்பதற்கு விளக்கம் தந்து கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டமுன்வடிவிற்கும், நடைமுறையில் இருக்கிற சட்டங்களுக்கும் பெருத்த மாறுபாடு இருக்கிறது. தற்பொழுது கொண்டு வருகிற சட்ட முன்வடிவினைப் பொருத்தவரைக்கும் This is preventive ஏற்கெனவே இருக்கிற சட்டங்களைப் பொறுத்தவரைக்கும் They are punitive in nature. இதை அவை நன்றாக அறியும்.

இதுகுறித்து சுப்ரீம் கோர்ட்டிலே கூட ஒரு தீர்ப்பிலே சொல்லியிருக்கிறார்கள், A prosecution or the absence of it is not an absolute bar to an order of prenventive detention என்று.

இந்தச் சட்டமே செல்லுமா என்று கூட கேள்வி எழுப்பினார்கள். உச்ச நீதிமன்றமே ஒரு தீர்ப்பை அளித்திருக்கிறது. இதை ஒட்டிய சட்டம் தமிழகத்தில் மட்டும் அல்ல, மற்ற மாநிலங்களிலேகூட நிறைவேற்றப்பட்டிருக்கிறது. பிறகு நான் அதை விளக்கிச் சொல்கிறேன். A prosecution or the absence of it is not an absolute bar to an Order of Preventive Detention. The authority may prosecute the offender for an isolated act or an act of an offence for violation of any Criminal law.. ஏற்கெனவே நடைமுறையில் இருக்கிறது. ஆனால் இதில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். It is not an absolute bar, to an order of detention. The authority may prosecute the offender for an isolated act or an act of offence for violation of any criminal law but if it is satisfied that the offender is an Agency to go on violating such law, then there will be no bar for the State to detain him under the Preventive Act in order to disable him to repeat such offences.

உச்சநீதிமன்றம் சொல்லியிருக்கிறது. ஒருவன் ஒரு குற்றத்தை செய்வானேயானால், அந்தக் குற்றம் செய்ததாக நிரூபிக்கப் படுமேயானால், அதற்குப் பிறகும் தொடர்ந்து அந்தக் குற்றத்தையே அவன் செய்வானேயானால் If he indulges in an offence, not merely because he commits an offence, even if he indulges in an offence . . . . பிறகு அதனை தடுத்தாக வேண்டும். அந்த நடவடிக்கைகளிலிருந்து சமுதாயம் பாதுகாக்கப் பட்டாக வேண்டும். பொது அமைதி பாதுகாக்கப்பட வேண்டும். பொது சுகாதாரம் பாதுகாக்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் உச்ச நீதிமன்றம் சொல்லியிருக்கிறது.

அது மட்டும் அல்ல, Order of detention was essentially a preautionery measureand was based on the reasonable fresh Notice of the futurebehaviour of a person, based on his past conduct judged in law by the surrounding circumstance, என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். The past conduct or antecedent history of a person can appropriately be taken into account in making a detention order. It is indeed largely from prior events showing the tendency or inclination of a person with an inference can be that he is, in future, likely to act in any manner prejudicial to the maintenance of a publicorder or public health.

என்ற அடிப்படையில்தான், இது தடுப்புக் காவல் சட்டமாக கொண்டு வரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுகிறபோது, இந்தச் சட்டம் ஏதோ எங்குமே இல்லாது இங்கு மட்டும் வருகிற சட்டம் என்று பொருள்படச் சொன்னார்கள். அப்படி இல்லை. மத்திய அரசு கூட 16-9-1980-ல் மாநில அரசுகளுக்கு ஒரு தாக்கீது அனுப்பியிருக்கிறது. அதிலே சொல்லியிருக்கிறார்கள். At the meeting recently held by the Home Ministry the Senior Officers of this department discussed various measures with a view to improve the law and order situation in the country. To deal effectively with anti-social elements, it was felt that some legal powers should be made available to the law enforcing Agencies for the extermination of criminal, anti-social elements and goondas. நாடு கடத்தப்படவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். மாநில அரசு சட்டம் கொண்டுவரவேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்கிறபோது அவர்கள் உதாரணத்திற்காகச் சுட்டிக் காட்டுகிறார்கள். The consensus wasthat such power if effectively used, apartfrom having good impact in the public mind, would also help in containing the activities of bad characters. அது மட்டுமன்று, In this regard various Acts such as The Uttar Pradesh Control of Goondas Act of 1970, The Rajasthan Control Act of Goondas 1975, The Punjab prvention of Anti-Social and Hazarduous activities



Bill 1976 which was subsequently made into law, and the Bihar Control of Criminals Bill of 1978 which was subsequently made into law, were passed. The Central Government has stated that the Bills inducted by the Governments of Uttar Pradesh, Rajasthan, Punjab and Bihar were considered to be useful. மாநில அரசு இதைப் பயன்படுத்தவேண்டுமென்று சொல்கிறார்கள். அந்தச் சட்டத்தைப் பார்த்து அதேபோல் சட்டம் கொண்டுவரவேண்டும் என்று சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்)

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு தாக்கீது அனுப்பியிருக்கிறது. இதுபோன்ற சட்டங்களை எல்லாம் போடவேண்டும் என்று கேட்டிருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள் அமைச்சர் அவர்கள். இந்திதான் ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் தமிழகத்தில், அதுதான் ஆட்சிமொழியாக இருக்கவேண்டுமென்று மத்திய அரசு கொண்டு வந்தால் ஆதரிப்பீர்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் ஏதோ தமிழ்நாட்டுக்கு மட்டுமே புதிதாகக் கொண்டு வரப்படுகிற சட்டம் என்ற கருத்துவரும்படி சில உறுப்பினர்கள் பேசியதற்காக சொல்லப் படுகிற பதிலே தவிர—மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் பேசுகிறபோது என்.எஸ்.ஏ.-க்கும் இதற்கும் ஒப்பிட்டுப் பேசுவது அது வேறு இது வேறு என்று, மற்று எங்கும் இப்படிப் பட்ட சட்டம் இல்லை என்ற உணர்வுபட பேசியதற்கு விளக்கம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன், ஆகவே விளக்குகிறேன்.

இந்திமொழியைப் பொறுத்தவரையில் இந்த மாநிலம் ஏற்றுக கொள்ள வேண்டும் என்று மைய அரசு தாக்கீது அனுப்புமானால் அதை அறவே இந்த அரசு ஏற்காது என்பதை நடைமுறைப் படுத்தியிருக்கிறோம். அதை அவையும், உறுப்பினர்களும் அறிவார்கள்.

இது மட்டுமல்ல. நான் ஏற்கனவே சுட்டிக்காட்டியதுபோல், மராட்டிய மாநிலம், ராஜஸ்தான் மாநிலம் போன்ற மாநிலங்களில் எல்லாம் கூட பல ஆண்டுகளாக இது நடைமுறையில் இருந்து வருவதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது இந்தச் சட்டத்தால் கைது செய்யப் படுகிறவர்களுக்கு எந்தவிதமான பரிகாரமும் இல்லை என்ற பொருள்படும்படி சொன்னார்கள். அப்படி இல்லை. என்.எஸ்.ஏ.-க்கும் இதற்கும் எவ்வித வித்தியாசமும் இல்லை என்று சொல்லிவிட்டேன். இந்தச் சட்டத்தில் என்.எஸ்.ஏ -யில் இருப்பதுபோல் இருக்கிறது என்று சொன்னேன். அதுபோல் இதில் தனியாக ஒரு அட்வைசரி போர்டு இருக்கிறது. கைது செய்யப்பட்டவுடன் ஐந்து தினங்களுக்குள் எதற்காகக் கைது

செய்யப்பட்டார் என்ற காரணத்தை அவர்களுக்குச் சொல்லியாக வேண்டும். அப்படி அவர்கள் அதைச் சொன்ன பிறகு 12 தினங்களுக்குள் அரசாங்கத்தினிடம் அதற்கு அனுமதி பெற்றாக வேண்டும். பிறகு 21 நாட்களில், என்ன காரணத்திற்காக இவர்கள் கைது செய்யப்பட்டார் என்பதையும் அந்தக் காரணங்களையும் அப்படிப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அனுப்பி அவர்களிடமிருந்து பெற்ற விளக்கங்களோடு அட்வைசரி போர்டுக்கு அனுப்பவேண்டும். (குறுக்கீடு)

(பிற்பகல் 1.10)

அட்வைசரி போர்டைப் பொறுத்தவரைக்கும், மிகமிகத் தெளிவாக இந்தச் சட்டமுன்வடிவிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. அவர்களுக்கு அங்கே வாய்ப்பு தரப்பட்டிருக்கின்றது. 11-வது பிரிவிலே,

'.......in any particular case the Board considers it essential so to do or if the person concerned desires to be heard, after hearing him in person, submit its report to the State Government, within seven weeks from the date of detention of the person concerned.'

என்றிருக்கிறது. அட்வைசரி போர்டிலே அவர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச்சொல்ல வாய்ப்பு தரப்படுகிறது.

வழக்கறிஞர் ஒருவரை வைக்கலாமா என்று மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் ஏற்கனவே எழுப்பியிருக்கிறார்கள். மற்றவர்களும் இதுகுறித்துப் பேசினார்கள். வழக்கறிஞர் ஒருவரை வைப்பதைப் பொறுத்தவரைக்கும், "For a preventive detention, you cannot engage a Counsel. This is constitutionally prohibited under Article 22(1) (2) and(3) provisos." அரசியல் சட்டத்திலே இந்தத் தடை இருக்கின்ற காரணத்தினாலே, வழக்கறிஞரை வைக்க முடியாது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: அரசியல் சட்டத்திலே என்ன தடை இருக்கிறது என்பதைச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பிரிவு 22(1)லே

'No person who is arrested shall be detained in custody without being informed, as soon as may be, of the grounds for such arrest nor shall he be denied the right to consult, and to be defended by a legal practitioner of his choice.'

Nothing in clauses (1) and (2) shall apply—

(a) to any person who for the time being in an enemy aline; or



(b) to any person who is arrested or detained under any law providing for preventive detention. என மிகத் தெளிவாக இருக்கிறது. 3 (பி) யில் (b) to any person who is arrested or detained under any law providing for preventive detention என்றிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுகின்றபோது, உதாரணமாக விபசாரம் என்ற பிரச்சினையைப் பற்றி எடுத்துச் சொல்லும்போது, பெண்கள் எல்லாம் பாதிக்கப்படுகிறார்கள்—காதலன் ஒருவனோடு காதலி பேசிக் கொண்டிருந்தால், அவளைக்கூட கைது செய்து 3, 4 மாதங்கள் தடுப்பில் வைத்துவிடலாம் என்ற பொருள்பட மாண்புமிகு பேராசிரியர் உள்பட பலர் பேசினார்கள். விபசாரம் செய்வது,

'Under Article 22(5) when any person is detained in pursuance of an order made under any law providing for preventive detention, the authority making the order shall as soon as may be, communicate to such person the grounds on which the order has been made and shall afford him the earliest opportunity of making a representation against the order.'

There is a constitutional prohibition to engage a legal practitioner of his choice. Therefore, under Art. 22(5) சட்டப்படி குற்றமாகும். ஆனால், '[illegible]ர்சி'ப்படி குற்றமாகாது.

இந்த விபசாரத் தொழிலிலே ஈடுபடுகிறவர்களால் எழுகின்ற பிரச்னைகள் காரணமாகத் தான் இந்தச் சட்டம் ஆங்கு பயன்படுத்தப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால், பெண்களுக்கு பாதுகாப்புத் தரவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலே தான் இந்தச் சட்டம் போடப்பட்டது. பெண்களுக்கு கண்டிப்பாக இதனால் பாதிப்பு இருக்காது என்பதை நான் இந்த அவைக்கு முதலிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

விபசாரம் செய்கின்ற காரணத்தினால், 'பப்ளிக் ஆர்டர்' கெட்டுவிடாது.

There cannot be disturbance to public tranquility or peace.

விபசாரத்திலே ஈடுபடுகின்றவர்களைப் பற்றித் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

The Suppression of Immoral Traffic in Women and Girls Act, 1956.

உறுப்பினர் இஸ்மாயில் அவர்கள்கூட சொன்னார்கள். அதிலே பல பிரிவுகள் இருக்கின்றன. செக்ஷன் 3-லே

3. Punishment for keeping a brothel or allowing premises to be used as a brothel.

[திரு. சி. பொன்னையன்] [1982 பிப்ரவரி 18

விபசாரத் தொழில் நடத்துகின்றவர்கள், விபசாரத் தொழிலுக்காக இடத்தைத் தருகின்றவர்கள், விபசாரத் தொழிலை வியாபாரமாக செய்கின்றவர்கள், அதன்மூலம் தொழில் நடத்துகிறவர்கள் அதைப் போலவே,

Punishment for living on the earnings of prostitution.

Procuring, inducing or taking woman or a girl for the sake of prostitution. Detaining a woman or girl in premises where prostitution is carried on. Prostitution in or in the vicinity of public places என்றிருக்கிறது. பெண்களுக்கு முழுக்க முழுக்க பாதுகாப்பு தரப்பட்டிருக்கிறது. விபச்சாரத் தொழில் ஈடுபடுகிறவர்கள் என்றால் பெண்களை இந்தச் சட்டம் கைது செய்யும் என்று நீங்கள் எண்ண வேண்டாம். இந்தச் சட்டம் பெண்களுக்குப் பாதுகாப்பு தருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வின்செண்ட் சொன்னதுபோல் பஸ் நிலையத்திலே பேருந்துக்காக காத்துக் கொண்டிருக்கின்ற பெண்களைக்கூட கடத்திச் சென்று காணாமல் போன பெண் விபச்சார விடுதியில் மீட்கப்பட்டாள் என்ற நிலைகளை பாரதம் தழுவிய பல இடங்களில் கேள்விப்படுகிறோம். நடைபெற்று வருகிற உண்மை. ஒரு பெண்ணைக் கடத்திச் சென்று அவளை ஈடுபடுத்திய பிறகு ஒரு குடும்பப் பெண்ணை விபச்சாரத்தில் ஈடுபடுத்திய பிறகு சட்டம் இருக்கிறது, சப்ரஷன் ஆப் இம்மாரல் டிராபிக் ஆக்ட் இருக்கிறது, ஐ.பி.சி. இருக்கிறது. சி.ஆர்.பி.சி. இருக்கிறது அவைகளின் பிரகாரம் தடுத்துக்கொள்ளலாம் என்றால் அந்தப் பெண்ணுக்கு கண்டிப்பாக பாதுகாப்பு கிட்டாது. விபச்சாரத் தொழிலில் ஈடுபடுகின்ற ஒருவன் ஒரு பெண்ணைக் கடத்திவிட்ட பிறகு விபச்சாரத் தொழிலில் ஈடுபடுத்திய பிறகு அவனை இருக்கின்ற சட்டப்படி தண்டனைக் குள்ளாக்குவதற்காக எத்தனை ஆண்டுக்காலம் ஆகும் என்பதை நாட்டிலே உள்ள நீதிமுறையின் அடிப்படையில், வரைமுறையின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அறியாதது அல்ல. ஆனால் அதற்குள் அவன் தண்டனையை ஒருவேளை பெறுவான் என்றாலும்கூட ஆண்டு பலவாகும் என்ற காரணத்தினால் எத்தனை பெண்களை அவன் விபச்சாரத்தில் ஈடுபடுத்துவான், பெண்களை கிட்நாப் செய்வான், அப்டக்ட் செய்வான் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். கண்டிப்பாக அத்தகைய கொடியவர்களிடமிருந்து நம் தாய்க்குலத்தைப் பெண்களைக் காப்பாற்றியாக வேண்டும். விபச்சாரத்தில் குடும்பப் பெண்களை ஈடுபடுத்துகின்ற தொழிலில் ஈடுபட்டு தாய்க்குலத்திற்கு அச்சமும் பயமும் ஏற்படக்கூடிய அளவுக்கு நமது திராவிடப் பண்பாட்டிற்கு பெண்குலத்திற்கு உள்ள பெருமையைக் கெடுக்கக்கூடிய அளவுக்கு ஈடுபடுகிறவர்களைத் தடுப்புக் காவல் சட்டத்தின் மூலம் இது தாய்க்குலத்திற்கு ஒரு பாதுகாப்புத் தரும் என்ற காரணத்தினால் இதை ஆதரிக்க வேண்டுமே தவிர பாராட்ட வேண்டுமே தவிர இதைப்பற்றிக்குறை கூறவேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1982 பிப்ரவரி 18]

திரு. துரைமுருகன் : சார் பாயின்ட் ஆப் ஆர்டர், வித் தி பர்மிஷன் ஆப் தி சேர் சார்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: The hon. Member can raise the poiut of order after I conclude my speech. Now I am not yielding

திரு. துரை முருகன்: I am raising a point of order. When I raise a point of order, the Hon. Minister should yield.

அமைச்சர் ஒரு அபாண்டமான சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார். கேள்வி கேட்போம், பதில் சொல்லட்டும், இல்லாவிட்டால் போகட்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சட்ட அமைச்சர் பேசுகின்றபோது பாயின்ட் ஆப் ஆர்டர் வராது. பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷனோ அல்லது பாயின்ட் ஆப் எக்ஸ்ப்ளநேஷனோ கேட்கலாம். அதற்குக்கூட இடம் கொடுத்தால்கூட சொல்லலாம். இடம் கொடுக்கவில்லையென்றால் சொல்லக் கூடாது. (குறுக்கீடு) அமைச்சர் கோர்வையாகச் சொல்லிக்கொண்டு வருகிறபோது வேண்டாம். அவர்கள் முடித்த பிறகு விளக்கம் வேண்டுமானால் இருந்தால் கேளுங்கள். குறுக்கீடுகள் வேண்டாம் என்று சொல்வதற்குப் பிறகு அதை கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : நாவலர் அவர்கள் அமைச்சர் பேசி முடித்தவுடன் வாய்ப்புக் கொடுக்கலாம் என்று சொன்னதால் அமர்கிறேன்.

(பிற்பகல் 1.20)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : உதாரணங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன், விபச்சாரத்தின் காரணமாக தாய்க்குலம் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறது என்பதற்காக சில புள்ளி விவரங்களைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

பல ஆண்டுகளினுடைய புள்ளிவிவரங்கள் இருந்தபோதிலும் குறிப்பாகச் சில ஆண்டுகளினுடைய புள்ளி விவரங்களை மட்டும் சொல்கிறேன். 1979 இல் கிட்டத்தட்ட 8,355 பெண்களைக் கடத்திச் சென்று விபச்சாரத்திலே ஈடுபடுத்தியிருக்கிறார்கள். அதனால் 6,839 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். குடும்பப் பெண்களைக் கடத்திச் சென்று, விபச்சாரத்தில் ஈடுபடுத்திய காரணத்திற்காக. அதைப்போல, 8,443 பெண்களை 1980 ஆம் ஆண்டு கடத்திச் சென்று அவர்கள் விபச்சாரத்திலே ஈடுபடுத்தப்பட்டு இருக்கிறார்கள். 8,019 பெண்களை 1981 ஆம் ஆண்டு கடத்திச் சென்று விபச்சாரத்தில் ஈடுபடுத்தியிருக்கிறார்கள். இப்படி வழக்குகள் மட்டுமே ஒட்டுமொத்தமாக இது

காறும் 24,150 வழக்குகள் பல ஆண்டுகளாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 24,150 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. 24,880 குடும்பப் பெண்கள் இப்படிக் கடத்திச் செல்லப்பட்டு, குடும்பப் பெண்கள் கற்பழிப்பு, விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டதற்காக அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதன் காரணமாகத்தான் பெண் குலத்திற்கு இது போன்று இழிவு ஏற்படக்கூடாது என்பதற்காக Those who are perpetually indulging in activities of this sort should be prevented from indulging in such activities in future by wap of preventive detention. That is the intention behind the proposed Bill.

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதைப்போலவே கள்ளச் சாராயத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபொழுது, இருக்கின்ற சட்டத்தில் நடவடிக்கை எடுக்க முடியாதா என்று கேட்டார்கள். இருக்கின்ற சட்டத்தில் நடவடிக்கை கண்டிப்பாக எடுக்கப்படுகிறது. இருந்தபோதிலும் கூட, இந்தத் தடுப்புச் சட்டத்தின் மூலம் நான் ஏற்கெனவே சொன்னேன், ஒருவன் தவறைச் செய்தவுடன் நடவடிக்கை எடுத்து அவன் தண்டனை பெற மூன்றாண்டுகள் ஆகின்றன. ஆனால் தவறு எத்தகைய தவறு என்பதைத்தான் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அரசியல் வாதிகள் மீது பாய்ச்சுவதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டம் அல்ல. பெண்களைக் கடத்தி, விபச்சாரத்தில் ஈடுபடுத்துகின்றவர்கள் அரசியல்வாதிகளாக இருந்தாலும், கட்சி பேதம் இல்லாமல் நாம் அனைவரும் அதைத் தடுத்த க வேண்டும். அதைப்போலவே, கள்ளச்சாராயத்தைக் காய்ச்சுகின்ற காரணத்திற்காக மட்டும் நடவடிக்கை இல்லை; கள்ளச் சாராயத்தைக் காய்ச்சுகின்றபொழுது, இந்தச் சட்டத்தில் If it is prejudicial to Public health என்ற பிரிவும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த அவையிலேயே பல உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள், எத்தகைய பொருட்களைக் கள்ளச் சாராயத்தில் கலக்கிறார்கள் என்பதைப்பற்றியும் எத்தகைய தீங்கு பொது மக்களுக்கு அதனால் விளைகிறது என்பதைப்பற்றியும் அ வயிலே பல சட்டங்களில் கூறியிருக்கிறார்கள். கள்ளச் சர்ராயத்தைக் காய்ச்சுகின்றவர்கள் அந்தக் கள்ளச்சாராயத்தில் ஊமத்தங்காயைக் கலக்கிறார்கள்; அதைப்போலவே கள்ளச்சாராயத்தில் மெத்தனால் என்ற விஷத்தைக் கலக்கிறார்கள். ஊமத்தங்காய் மனிதனுக்கு பைத்தியத்தை ஏற்படுத்திவிடும். ஹார்ட் அட்டாக் கொடுத்துவிடும் எனக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல க்ளோரைட், ஹைப்ரைட் என்று சொல்லப்படும் ஒரு விஷப் பொருள், போதை தரும் விஷப்பொருள்களைக் கலக்கிறார்கள் இவைகள் கண் பார்வையை மங்கச் செய்துவிடுகிறது. ஹார்ட் அட்டாக்கை ஏற்படுத்துகிறது. அதைப் போலவே, விவசாயத்திலே பயன்படுத்துகிறோமே அமோனியம் குளோரைட், அதைக் கலக்கிறார்கள். அதனால் உடலுக்குப் பல தீங்குகள் ஏற்படுகின்றன. இப்படி ஒரு கள்ளச் சாராயப்



பேர்வழி கள்ளச் சாராயத்தைக் காய்ச்சுகின்றபொழுது அவன் விஷப் பொருட்களை இப்படிக் கலந்து விடுவானேயானால் அப்படி கலந்து விட்ட பிறகு அவர் மீது நடவடிக்கை எடுப்பதற்குள் எத்தனை உயிர்கள் மாய்கின்றன என்பதை அவை எண்ணிப் பார்க்கவேண்டும்.

பெங்களூரிலே அண்மையிலே நடந்த நிகழ்ச்சி தெரியும். எத்தனை பேர், நூற்றுக்கணக்கான பேர் கள்ளச் சாராயத்தில் விஷப்பொருள் கலக்கப்பட்ட காரணத்தால் எத்தனை உயிர்களைப் பலி வாங்கியது என்பது தெரியும்.

பம்பாயிலே சில ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த நிகழ்ச்சி தெரியும்.

தமிழகத்தில் கள்ளச் சாராயத்தில் விஷப் பொருள்களைக் கலந்த காரணத்தினால் எத்தனைபேர் மாண்டார்கள் என்பதும், 1976-லே அதற்காகச் சட்டத் திருத்தமே கொண்டு வரப்பட்டதும் கூட அவைக்குத் தெளிவாகத் தெரியும். எனவே, கள்ளச் சாராயம் காய்ச்சுகின்றவர்கள இதுபோன்ற கொடிய பொருட்களைச் சேர்ப்பதன் காரணமாக எவ்வளவு உயிர்கள் போகின்றன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அப்படி உண்டா என்றுகூட நீங்கள் ஒரு ஐயத்தை எழுப்பலாம். தற்போது இந்தச் சட்டம் வந்தபிறகுகூட கைது செய்யப்பட்டவர்களுள் சிலர், அந்தக் கள்ளச்சாராயத்தை போர்ரான்சிக் கெமிகல் லேபாரட்டரிக்குப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது. அந்தக் கள்ளச் சாராயத்தில் பேட்டரி செல்கள், ஊமத்தங்காய், குளோரைட் போன்ற விஷப்பொருட்கள் எல்லாம் கலக்கப்பட்டதாக இரசாயனச் சோதனையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே, இதுகாறும் கிட்டத்தட்ட 45 பேரை இந்தச் சட்டத்தின்கீழ் கள்ளச் சாராயம் காய்ச்சுதலில் ஈடுபட்டு விஷப்பொருளைக் கள்ளச்சாராயத்தில் கலந்து, அதனால் மக்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டு, கண்பார்வை மங்குதல், உடல் நலக் கோளாறுகள் ஏற்படுதல் போன்ற வழக்குகளில் இது வரையில் நாம் நடவடிக்கை எடுத்திருக்கிறோம்,

**திரு. துரை முருகன் :** சாராயம் எப்படிக் காய்ச்சுவது என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதற்குத்தான் நெப்போலியன்களும் மாவீரன்களும் இருக்கிறார்கள்.

Let the Hon. Minister reply to the points raised by the Members. எதிர்க்கட்சிகள் கேட்டதற்கு, இந்த, இந்த பாய்ன்ட்டுக்கு, இது, இது பதில் என்று சொல்லவேண்டாமா? (குறுக்கீடுகள்)......

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற கொடியவர்கள் உயிரைக் கொல்லக்கூடிய விஷச் சாராயத்தைக் காய்ச்சக் கூடாது என்பதற்

காகத்தான் இந்தத் தடைச் சட்டம், இந்தத் தடுப்புக் காவல் சட்டம் கொண்டுவரப்படுகிறது. தமிழகத்திலே இதிலே இதுகாறும், இதுபோன்ற விஷச் சாராயத்தைக் காய்ச்சுகின்றவர்கள், இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்கள் 45 பேர்கள் கைது செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதில் கட்சி பேதமில்லாமல், யார் எந்தத் தொழிலில் ஈடுபட்டாலும் சரி, மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் கேட்டார், அனைவர் மீதும் இந்த நடவடிக்கை எடுக்கப்படுமா என. கட்சிப் பேதமில்லை, இந்தக் கட்சியைச் சேர்ந்தவர், அந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்று இல்லை. ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர் என்றெல்லாம் இல்லை. அதிலே, 'நெக்சஸ்' நிரூபணம் செய்யப்பட வேண்டும். கள்ளச் சாராயப் பேர்வழியாக இருந்து, கள்ளச்சாராயம் காய்ச்சி, அதனால் பாதிப்பு ஏற்பட்டு, நிரூபணம் செய்யப்பட்டு, இரசாயனப் பரிசோதனையிலே நிருபிக்கப்படும் போது, அது யாராக இருந்தாலும், இந்தச் சட்டத்திலேயிருந்து அவர்கள் தப்பிக்க முடியாது.

நிரபராதிகள்மீது நடவடிக்கை கூட எடுக்க முடியாது. The Supreme Court has given several guidelines in this regard. மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் கூடத் தெளிவாக அதை அறிவார்கள்.

குடிசைகளைப் பொறுத்த வரைக்கும் slum grabbers and goondas ஆகிய இரு சாரார்களைப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி போன்றவர்கள் பேசுகின்ற போது, இது ஏழைகளைப் பாதிக்கின்ற ஒரு முறையிலே இருப்பதாகச் சொன்னார்கள். அது மிகத் தவறான கணிப்பு. காரணம் ஏழைகள் மீது இந்த நடவடிக்கை இல்லை. சொல்லப்போனால் Slum grabbers and goondas ஆகிய இரு சாராரும் பணக்காரர்கள் என்ற நிலையிலே இருந்து பல தவறுகளைச் செய்துவருகிறார்கள். அரசுக்குச் சொந்தமான இடத்தை, தனியாருக்குச் சொந்தமான இடத்தை, ஆக்கிரமிப்பு செய்கிறார்கள். ரௌடிகளை வைத்து, தங்களுக்கே இருக்கிற திறமையின் காரணமாய், ஆக்கிரமிப்பு செய்து கொள்கிறார்கள். தனியாருக்குச் சொந்தமான எத்தனையோ இடங்கள் இருக்கின்றன. ஒருவர் அந்த இடத்தை ஆக்கிரமிப்பு செய்கிறார், அடியாட்களை வைத்துக்கொண்டு ஆக்கிரமிப்பு செய்கிறார். இந்த இடத்தில் கட்டிடத்தைக் கட்டுகிறார். வாடகைக்கு விடுகிறார், சம்பாதிக்கிறார். அந்த இடத்தின் சொந்தக்காரர், என் சொந்த இடம், வீடு என்று நீதிமன்றத்திற்குச் செல்ல முயற்சித்தால்கூட, நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த பிறகும்கூட, அவரை அடித்துத் துன்புறுத்தி, உதைத்து, பயமுறுத்தி, வழக்கை வாபஸ் பெற வேண்டுமென்ற நிகழ்ச்சிகள்கூட அங்கங்கே நடைபெற்றிருக்கின்றன.



அதுமட்டுமல்ல, சில இடங்களில் அரசுக்குச் சொந்தமான இடங்களிருக்கின்றன. கண்டிப்பாக அரசுக்குச் சொந்தமான இடங்களில் ஏழைகள் குடிசைகள் போடுவதைத் தடுப்பதற்காகக் கொண்டு வரப்படுகின்ற சட்டம் இது அல்ல.' மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியன் பேசுகின்றபொழுது உச்ச நீதிமன்றத்திற்கு ஒரு வழக்கு சென்று, குடிசைகளை அகற்றக் கூடாது என்று தடை வந்து விட்ட காரணத்தால் இது கொண்டு வரப்பட்டதோ என்று கேட்டார். அது மிகத் தவறு. எங்கே குடிசைகள் அகற்றப்பட்டன? அந்தக் குடிசைப் பகுதியிலே வாழ்கிற மக்கள், குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட குடிசைகளுக்குச் செல்ல வேண்டுமென்று வேண்டி கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். ஆனால், அரசு தருகின்ற, குடிசை மாற்று வாரியம் தருகின்ற, கட்டிய வீடுகளுக்கு அவர்கள் செல்ல மறுத்து, நாங்கள் குடிசையிலேயே இருபபோம், ஆக்கிரமித்த இடங்களிலேயே இருப்போம் என்று சொன்னபொழுது தான் அவர்கள் அங்கிருந்து அகற்றப்பட்டார்கள். அதே போல், குடிசை என்றால், பல இடங்களில் தனியாருக்குச் சொந்தமான இடங்களில் குடிசை போட்டுக்கொள்கிறார்கள். அரசுக்குச் சொந்தமான இடங்களில் குடிசை போட்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் குடிசை மாற்று வாரியம் வேறு இடங்களில் கட்டிடம் கட்டித் தருகிறது. அவர்களை அங்கே அனுப்புகிறது. அவர்களுக்கு அங்கே பாதுகாப்புத் தரப்படுகிறது. ஆனால், சில சமுதாய விரோதிகள் குடிசைகளைப் போட்டு, ஏழைகளிடமிருந்து வாடகை வசூலித்து, அவர்களை நசுக்குகின்ற காரணத்தால், அந்தச் சமுதாய விரோதிகளுக்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 1.30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குண்டர்கள் என்பதற்கு விளக்கம் இல்லை என பல உறுப்பினர்கள் பேசும்போது சொன்னார்கள். 'Goondar' means a person, who either by himself or as a member of or leader of a gang, habitually commits, or attempts to commit or abets the commission of offences, punishable under Chapter XVI or Chapter XVII of Chapter XXII of the Indian Penal Code. என்று தெளிவாக கூறப்பட்டிருக்கிறது. அந்தக் குற்றங்களை அவர்கள் செய்கின்ற காரணத்தினாலேயே குண்டர்கள் என்ற பிரிவுக்கு அவர்கள் கொண்டு வரப்படமாட்டார்கள். அவர்கள், They must habitually indulge in such offences. Offences falling under Chapters containing offences like offences to human body, property or Criminal Intimidation. ஆகிய பிரிவுகளில் அவர்கள் குற்றங்களைச் செய்கின்றபோது ராபரியில் ஈடுபடுகிறபோது, கொலைக் குற்றத்தில் ஈடுபடுகிற

போது, கொள்ளை அடிப்பில் ஈடுபடுகிறபோது, 'House-breaking, Criminal Intimidation, Criminal tresspass with force.' இது போன்ற கொடிய செயல்களில் அடியாட்களை வைத்து வன்முறையில் ஈடுபடுகிறபோது, அது ஏற்கனவே பல முறை நடந்து 'ஹாபிச்சுவல்' தொடர்ந்து அவர்கள் ஈடுபடுகிறபோதுதான் அவர்கள் குண்டர்கள் என்ற பிரிவுக்கு கொண்டு வரப்படுகிறார்கள். அதற்கு ஆதாரம் இருந்தாக வேண்டும், நிரூபிக்கப்படவேண்டும். அட்வைசரி போர்டுக்கு அவர்கள் விளக்கம் கேட்டுத் தருகின்றபோது மாவட்ட ஆட்சித் தலைவர் டிடெய்ன் செய்கிறபோது கூட அந்த நெக்சஸ்—காரணத்தை கண்டிப்பாக சொல்லியாகவேண்டும். எந்த சூழ்நிலையில் நடந்தது, எந்த தேதியிலிருந்து எந்த நேரத்தில், பாதிப்புக்குள்ளாக்கப்பட்டவர்கள் யார் என்ற விவரம் அவர்களுடைய வாக்குமூலம் அனைத்தும் இருந்தால் தான் அது நிரூபணமாகுமே ஒழிய ஏதோ ஒருவரைப் பிடித்து—அரசியல்வாதி வேண்டாதவர்களைப் பிடித்து— குண்டர்கள் என்ற பெயரிலே போட முடியுமா? மாவட்ட ஆட்சித் தலைவர்களே இருக்கின்ற விதிகளின் அடிப்படையில் செய்யமுடியாது. மீறிச் செய்வார்களானால் அட்வைசரி போர்டு கண்டிப்பாக அவர்களைத் தடுத்துவிடும். அதையும் மீறி அட்வைசரி போர்டு கூட தவறு என்று நீங்கள் எண்ணினாலு கூட உச்ச நீதிமன்றம் பல தீர்ப்புகளை வழங்கியுள்ளது. இதுதான் பிரஸ்கிரைப்ட் கைட்லைன்ஸ் என்று சொல்லியிருக்கிறது. அதை மீறி யார் ஒருவர் டிடெய்ன் செய்யப்பட்டாலும் உடனடியாக மாண்புமிகு உறுப்பினர் ஏற்கெனவே சொன்னதைப்போல உயர்நீதி மன்றம் தலையிட்டு அவர்களுக்கு விடுதலை தந்துவிடும். அதற்கான ஆதாரங்கள் பல இருக்கின்றன என்ற காரணத்தினால் அதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விதி 16 இல் No suit, prosecution or other legal proceeding shall lie against the State Government or any Officer or person, for anything in good faith done or intended to be done in pursuance of this Act' என்று சொல்லப்பட்டிருந்தபோதிலு கூட உச்சநீதி மன்றம் சில விதிமுறைகளை, வழிமுறைகளை வகுத்திருக்கிறது. இப்படி இருந்தால் தான் ஒருவரை டிடெய்ன் செய்கிறோம். சிலர் தவறுகள் செய்கிறார்கள். ஒருவர் ஒரு தவறிலே ஈடுபட்டு கொலை செய்துவிடுகிறார், பொதுஅமைதிக்குப் பங்கம் ஏற்படுத்துகிறார், இன்னுமொரு தவறு, அந்தக் கொலையில் அவர் ஈடுபடுகின்றபோது பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்துகின்றபோது வழியிலே ஒரு ஆட்டைத் திருடி சாப்பிட்டுவிடுகிறார் என்றால் அந்த ஆட்டைத் திருடியது திருட்டுக் குற்றமாக இருந்தாலும் கூட That will not leave the provisions of N. S. A. or P.L.O என்ற காரணத்தினால் அந்த அடிப்படையில் அவர் மீது நடவடிக்கை எடுக்க முடியாது. நீதிமன்றம் அவர்களுக்குப் பாதுகாப்பு தரும். பலவழக்குகள் ஏற்கெனவே மிசா, என்.எஸ்.ஏ போன்ற சட்டங்களின் அடிப்படையில் தொடரப்பட்டு அந்த வழக்குகள் எல்லாம் உச்சநீதி மன்றம், உயர்நீதிமன்றங்களிலே சென்று கிட்டத்தட்ட They have given perfected guidelines in regard to detentions.



"There are perfected guidelines in regard to such detention. If such perfected guidlines are violated, definitely the Courts have got the right to interfere taking into account the judgements already delivered by the Supreme Court and High Court concerned" என்று சொல்லக்கூடிய நிலை இருக்கிறது.

எனவே, மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மக்களின் நலன் கருதி சமுதாய விரோதிகளிடமிருந்து மக்கள் பாதுகாக்கப் படவேண்டுமென்ற நல்ல நோக்கோடு கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த சட்டமுன்வடிவை அரசியல் கட்சிகள் யாராக இருந்தாலும் சரி, தாய்க்குலத்திற்காக கொடிய சமுதாய விரோதிகளிடமிருந்து தாய்க்குலத்தைக் காப்பாற்றவும் விஷ சாராயம் காய்ச்சுவது போன்ற கொடிய செயல்களிலிருந்து மனித சமுதாயத்தை, தமிழ்ச் சமுதாயத்தைப் பாதுகாக்க வேண்டுமென்ற நல்ல நோக்கோடு கொண்டுவரப்படுகின்ற இந்த சட்டமுன்வடிவை சந்தேகக் கண்ணோடு பார்க்காமல் அனைவரும் ஆதரிக்க வேண்டி அமைகிறேன்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சட்டத்தின் வரிகளுக்குத் தரவேண்டிய விளக்கங்களை எல்லாம் இங்கே தந்தார்கள். அப்படித் தருகிறபோது பெண்களைக் காப்பாற்றுவதற்காகவும், உண்மையான சமுகக் கேடு செய்கிறவர்களை அடக்குவதற்காகவும், இப்படிப்பட்ட கடுமையான முறையில் விஷம் கலந்து சாராயம் காய்ச்சுகிறார்கள் என்பதையும் எடுத்துச் சொன்னார்கள். அப்படிப்பட்ட குற்றங்கள் தடுக்கப் படவேண்டும் என்பதிலே எனக்கு ஒன்றும் மாறுபாடு இல்லை. ஆனால் கைது செய்யப்பட்டவர்கள் 'ஹேபிச்சுவல் அபன்டர்' என்று இங்கே சொல்லப்படுமானால், அல்லது அதையே தொழிலாகக் கொண்டு இருக்கிறார் என்ற கருத்தில் இருப்பார்களானால் தான் கைது செய்யப்படுவார்கள் என்று சொன்னார்கள். அப்படிக் கைது செய்யப்படுகின்ற நேரத்தில் முறைகேடுகள் இருக்குமானால், அவர் உயர்நீதிமன்றத்திற்கோ அல்லது உச்ச நீதி மன்றத்திற்கோ சென்று மனு கொடுக்கும் வாய்ப்பு இருக்கிறது என்று எல்லாம் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். உச்ச நீதிமன்றம், உயர்நீதி மன்றம் ஏற்கனவே கொடுத்துள்ள கெய்டு லைன்ஸ்படி அவர்கள் மனு கொடுப்பது, விடுதலை பெறுவது என்கிற கட்டம் பின்னாலே வருகிறது.

சாதாரணமாக ஒரு முறை கூட குற்றம் செய்து நீதிமன்றத்தின் முன்னாலே தண்டிக்கப்படாத ஒருவர் தொடர்ந்து குற்றம் செய்து வருகிறார் என்று தவறாகக் கைது செய்யப்பட்டு, அந்த போர்டின் முன்பு அவர் தொடர்ந்து குற்றவாளியாக இருக்கிறார் என்று அரசாங்கத்தின் சார்பில் அதிகாரிகளின் சார்பில் தெரிவிக்கப் பட்டால், அதுவரையில். நீதிமன்றத்திலே நிறுத்தப்படாத பெண்ணோ, நிறுத்தப்படாத குண்டர் என்று சொல்லப்படுகிறவரோ, அல்லது கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களோ, அல்லது

நேற்றைய தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னது போல், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களைத் தூண்டுவதற்கு பணம் கொடுக்கிறவர்களோ இந்த சட்டத்தாலே கைது செய்யப் பட்டால், அப்படித் தவறு செய்யாத ஒருவர் கைது செய்யப் பட்டால், அவருக்குப் பாதுகாப்பு இல்லாத நிலைமை முதலில் ஒரு 2—3 மாதத்திற்கு ஏற்படுகிறது. எனவே இதற்கு முன்னாலே நீதிமன்றத்திலே நிறுத்தப்பட்டு, தண்டிக்கப்பட்டு, 'Habitual offender in that particular respect' என்று சொல்லக் கூடியவர்களைத் தான் இந்தச் சட்டம் அணுகும் என்கிற பாதுகாப்பை இந்தச் சட்டத்திலே அமைச்சர் அவர்கள் கொண்டு வரவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் 'பெண்கள்' என்று சொன்னார்கள். பெண்களை பற்றி இந்தச் சட்டத்திலே என்ன சொல்லப்பட்டு இருக்கிறது என்பதை ஏற்கனவே தெளிவாகச் சொன்னேன். விபச்சாரத்திலே ஈடுபடுகிற பெண்களைத் தடுப்புக் காவல் என்ற முறையில் கைது செய்வதற்கு சட்டத்திலே இடம் இல்லை. பெண்களைக் கடத்திச் சென்று அல்லது 'கிட்நேப்' செய்து, அல்லது 'அப்டக்' செய்து விபசாரத்தில் ஈடுபடுத்துகின்றவர்களை இந்தச் சட்டத்தின் மூலம் கைது செய்வது என்று சொன்னேன். எத்தனை பேர் இது போன்ற கொடிய செயல்களில் ஈடுபட்டுள்ளார்கள் என்றும் சொன்னேன்.

**திரு. க. அன்பழகன் :** 'பெண்கள்' என்ற வார்த்தை இதிலே பயன்படுத்துகிற காரணத்தால், அந்தக் கண்ணோட்டம் ஏற்படுகிறது. கடத்திச் செல்பவர்களில் ஓரிரு பெண்களும் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கு நன்றி. பெண்களும் இது போன்ற கடத்தல் தொழிலில் ஈடுபட்டு, இதுபோன்ற கொடுமைகளைத் தாய்க் குலத் திற்கு இழைப்பார்களானால், அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதிலே சட்டத்திலே இடம் இருக்கிறது. பேராசிரியர் அவர்கள் இதை ஒப்புக் கொள்கிறார்கள் என்று நம்புகிறேன், அதற்காகப் பாராட்டுகிறேன்.

இன்னொரு விளக்கத்தையும் நான் தருவதற்கு விரும்புகிறேன். கைது செய்த 5 தினங்களுக்குள் அவர் என்ன காரணத்தால் கைது செய்யப்பட்டார் என்பது அவருக்குத் தெரிவிக்கப்பட்டாக வேண்டும். 5 தினங்களுக்குள் இன்ன காரணத்திற்காக, இன்ன அடிப்படையில், இந்த விதிகளுக்கு உட்பட்டு, இந்தத் தவறான காரியத்தில் ஈடுபட்டார், என்பதற்கான ஆதாரத்தை எல்லாம் அவருக்குத் தரவேண்டும். அதன் பிறகு அரசு 12 தினங் களுக்குப் பிறகு அந்த டிடன்ஷன் அதாரிட்டி, மாவட்ட ஆட்சித்



தலைவரிடமிருந்து அந்தக் காரணங்களைப் பெறுகிறது. 5 தினங்களுக்குப் பிறகு காரணங்களைப் பெற்றவுடனேயே அவர் உயர்நீதி மன்றத்திற்கு நேரடியாகச் செல்வதற்கு வழிவகை இருக்கிறது.

அந்த வழிவகைகள் சட்டத்திலே இல்லையென்றாலும், சில வற்றைத்தான் சட்டத்திலே போடமுடியும்— சிலவற்றிற்கு ஏற்கனவே உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம் அளித்து இருக்கும் தீர்ப்பின் அடிப்படையில் நாம் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் டிடன்ஷன் செய்யப்பட்ட 5 தினங்களில் "காஸ் ஆப் டிடன்ஷன்" கொடுக்கப்படுவதால் அவர்கள் உச்சநீதி மன்றத்திலோ, உயர் நீதி மன்றத்திலோ அதைச் சாலஞ்ச் செய்யலாம், குறைபாடு இருந்தால் விடுதலை பெறலாம். விடுதலை பெற்றும் இருக் கிறார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 1.40)

**திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, 24 மணி நேரம்கூட ஒரு குற்றமுமே செய்யாத ஒருவர் தவறான முறையிலே பிடித்து வைக்கப்படக்கூடாது, அந்த நிலைமைக்கு அவர் ஆளாக்கப்படக் கூடாது என்பது என்னுடைய கருத்து. 5 நாளைக்குள் விளக்கம் தருவோம் என்ற நிலை இதிலே ஏற்படக்கூடாது. குற்ற வாளிகளை நீங்கள் கடுமையாக நடத்துவதை அல்லது கடுமையாக நடத்தும் வாய்ப்பை உருவாக்குவதை நான் எதிர்க்கவில்லை. அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. குற்றங்களைச் செய்கிற வர்களுக்கு அப்படி வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் குற்றமே செய்யாதவரை பிடித்து வைத்துவிட்டு, 5 நாளைக்குள் விளக்கம், 12 நாள் போர்டு, அதற்குமேல் நீதிமன்றம் என்ற நிலை குற்றம் செய்யாதவருக்கு வரக்கூடாது. ஏற்கெனவே குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டவர்கள்மீது இந்தச் சட்டம் பாயட்டும், அவர்கள் மீது கை வைக்க வேண்டுமேயன்றி மற்றவர்கள் மீது கை வைக்கக் கூடாது. எந்த ஒரு காரணத்தாலும் குற்றம் இழைக்காத ஒருவரை இதிலே சிக்க வைத்து, பின்னால் பரிகாரம் என்பது கூடாது என்பதற்காக நான் வாதாடுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு தலைவர வர்களே, மிகத் தெளிவாக நான் முதலிலேயே விளக்கினேன். யாரையும் இதிலே சிக்க வைக்க முடியாது. மேலும் உயர்நீதி மன்றம், உச்சநீதிமன்றம் கைடுலைன்ஸ்படி கைது செய்யப்பட வில்லை என்றால், Even the Detaining Authority would be subject to strictures passed by the Supreme Court or High Court. என்பது நியதி. எந்த அதிகாரியும் அந்த ரிஸ்கை எடுத்து, அந்தத் தவறைச் செய்யமாட்டார் என்று நாம் நம்ப வேண்டும்.

அது மட்டுமல்ல. ஒரு குற்றத்தை ஒருவர் தொடர்ந்து செய்யாமல் ஒருமுறை அந்தக் குற்றத்தைச் செய்தாலும்கூட சில நேரங்களில் அவரைக்கூட தண்டிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பெங்களூரில் ஒருவர் கள்ளச் சாராயம் காய்ச்சி—அது விஷம் கலந்தது—விற்றதில் நூற்றுக்கணக்கானவர்கள் அதை அருந்தி இறந்துவிட்ட செய்தியை நாம் அறிவோம். அப்படி ஒரு குற்றத்தைச் செய்தவர் தொடர்ந்து விஷம் கலந்த கள்ளச் சாராயத்தை விற்று, இன்னும் பலரை கொன்றபிறகு, நீதிமன்றத்திற்குப் போய் நிரூபணம் ஆனால்தான் கைது செய்ய வேண்டு மென்ற நிலைமை இருந்தால் அதற்குள்ளாக எத்தனையோ உயிர்கள் பலியாகிவிடும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். எனவே, என்னுடைய இந்த விளக்கத்தை ஏற்று, இந்த சட்ட முன்வடிவை சட்டமாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவரவர்களே, ஒரு சிறிய விளக்கம். மாண்புமிகு அமைச்சரவர்கள் குடிசைவாழ் மக்களைப் பற்றி ஒன்றைச் சொன்னார்கள். அரசாங்கத்திற்குச் சொந்தமான இடங்களில் அல்லது தனியார் இடங்களில் அத்துமீறி குடியிருப்பவர்கள் என்று சொன்னார்கள். கடந்த 10 ஆண்டு காலமாக அப்படிப்பட்ட இடங்களிலே அவர்கள் குடியிருந்து, 1977, 1980 தேர்தல்களிலே ஓட்டளித்திருக்கிறார்கள். அவர்களை இந்தச் சட்டத்தின்படி அப்புறப்படுத்த மாட்டோம் என்ற உறுதியை அமைச்சரவர்கள் தருவார்களா? அவர்களுக்கு வேறு இடம் கொடுத்தால், நாளைக்கே கொடுப்பதாக இருந்தால் கூட 10 ஆண்டுகளாக இருந்த இடத்தைவிட்டு போகத் தயாராக இருக் கிறார்கள். அவர்களுக்கு கேடு வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, ஸ்லம் கிராபர்ஸ்' பற்றி நான் குறிப்பிட்டதைச் சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். ஸ்லம்மில் வாழ்கிறவர்கள் ஸ்லம் கிராபர்ஸ் என்ற பகுதியில் வரமாட்டார்கள், தனியாருக்கு அல்லது அரசுக்கு அல்லது ஒரு அட்டானமஸ் பாடிக்கு சொந்தமான நிலத்தில் சில ரௌடிகள் அத்துமீறி பிரவேசித்திருப்பார்கள்; ஆக்கிரமிப்பு செய்திருப் பார்கள். அவர்கள்கூட நேரடியாக அங்கே குடியிருக்கமாட்டார்கள் அங்கே குடிசைகள் போட்டு, ஏழை மக்களை குடியிருக்கச் செய்து, அவர்களிடம் வாடகை வசூல் செய்து கொண்டிருப்பார்கள். அந்த ஏழை மக்களுக்கு அரசாங்கம் வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக வீடு கட்டிக் கொடுத்தால் கூட, அவர்கள் அந்த வீடுகளுக்குச் செல்வதாக இருந்தால், அந்த ரௌடிகள் அவர்களை மிரட்டு வார்கள். நீங்கள் அங்கே போனால் உங்களுக்கு உதை என்று சொல்லுகின்ற ரௌடித்தனத்தை ஒழிப்பதற்கு இந்தச் சட்டம்; அந்த ஏழை எளிய மக்களின் இரத்தத்தை உறிஞ்சுகின்ற ரௌடிகளைக் கட்டுப்படுத்த இந்தச் சட்டம் பயன்படும். குடிசை



களில் வாழ்கிற மக்கள், அவர்கள் தனியார் நிலத்தில் இருந்தாலும் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலத்தில் இருந்தாலும் அவர் களுக்கு எல்லாம் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகளைக் கட்டிக் கொடுத்து, படிப்படியாக அவர்கள் அந்த வீடுகளுக்கு அனுப்பப்படுவதை இந்த அவை அறியும். தொடர்ந்து அதைச் செய்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரகுமான்கான் அவர்கள் தம்முடைய திருத்தத்தை வலியுறுத்துகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, நானும் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். எனவே என்னையும் அனுமதிக்க வேண்டும். ஒரே ஒரு கேள்விதான் கேட்கப் போகிறேன். இந்தச் சட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள், குண்டர்கள் கைது செய்யப் படவேண்டும் என்ற கருத்திலே எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. நான் பார்த்து இன்னின்னார் குண்டர்கள் என்று சொன்னால் அவர்களைக் கைது செய்வீர்களா? துரைமுருகன் சொன்னால் நாங்கள் கைது செய்யவேண்டுமா என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னால் அதன்படி கைது செய்ய வேண்டாமா? * * குண்டா கிங் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருணித்து இருக்கிறார்கள். குண்டர்களைக் கைது செய்கின்ற போது அவர்களை நீங்கள் கைது செய்ய மாட்டீர்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, குண்டர்கள் என்றால் என்ன என்பதற்கு விளக்கத்திலே சொல்லப் பட்டிருக்கின்றது. இண்டியன் பீனல் கோட் சேப்டர் 3-லே offences relating to human body, offences relating to property, offences relating to criminal intimidation என்ற பிரிவுகளிலே ஒருவர் தவறைச் செய்கின்றபோது குற்றத்தைத் தொடர்ந்து இழைக்கின்றபோது if he continues to indulgein such offences நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் குண்டர்கள் என்ற டெஃபனிஷனுக்கு உட்பட்டு அந்தக் குற்றத்தை இழைக்கக் கூடியவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகனுக்கு வேண்டியவர்களாக இருந்தாலும் வேண்டாதவர்களாக இருந்தாலும் கண்டிப்பாக அனைவர் மீதும் சட்டம் பாயும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் பேசுகின்றபோது * * குறிப்பிட்டார்கள் அந்த * * பெயரை மட்டும் அவைக்குறிப்பிலே இருந்து நீக்க வேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

---

(*) மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின்கீழ் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபச்சாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

பேரவையின் 100(2)-வது விதியின்படி திரு. ரகுமான்கான் அவர்கள் கொடுத்துள்ள திருத்தத்தை மொழிய அனுமதிக்கவில்லை. திரு. ரகுமான்கான் அவர்கள் பிரிவை எதிர்த்து வேண்டுமானால் வாக்களிக்கலாம்.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவுகள் 4 முதல் 13 முடிய பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி.

''பிரிவு 14 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

பேரவையின் 100(2) வது விதியின்படி திரு. ரகுமான்கான் அவர்கள் கொடுத்துள்ள திருத்தத்தை மொழிய அனுமதிக்கவில்லை. அவர் பிரிவை எதிர்த்து வேண்டுமானால் வாக்களிக்கலாம்.



பிரிவு 14 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவுகள் 15, 16 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 17

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 17 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

பேரவையின் விதி 100(2) வது விதியின்படி திரு. ரகுமான்கான் அவர்கள் கொடுத்துள்ள திருத்தத்தை மொழிய அனுமதிக்கவில்லை. அவர் பிரிவை எதிர்த்து வேண்டுமானால் வாக்களிக்கலாம்.

பிரிவு 17 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 18 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1 முகப்புரை நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

(பிற்பகல் 1.50)

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் எவ்வளவு நியாய வாதங்களோடு கொண்டு வரப்பட்டாலும்கூட, சட்ட நுணுக்கங்கள் எவ்வளவுதான் எடுத்துக்காட்டப்பட்டாலும் கூட, இதை நடைமுறைப்படுத்துகிறபோது, ஏற்படுகிற விபரீத விளைவுகளிலிருந்து, அந்தக் குற்றஞ் சாட்டுகளுக்கு உண்மையாக காரணம் இல்லாதவர்களும் இதிலே சிக்கி துன்புறுவார்கள் என்று ஐயுறுகிற காரணத்தால், திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில், தன்னுடைய உறுப்பினர்களுடன் வெளிநடப்பு செய்கிறது.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தினுடைய கோட்பாட்டைப் பொறுத்தவரைக்கும், விசாரணையின்றி சிறைப்படுத்துவது என்ற கோட்பாட்டை, எந்த குற்றவாளிகளாக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக இதை உபயோகப்படுத்தக்கூடாது என்று நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம், கடந்த காலத்திலும் சரி. நிகழ்காலத்திலும் சரி

அதைக் கண்டிக்கிறோம். எதிர்காலத்திலும் அதை கடுமையாகக் கண்டிப்போம். இந்தச் சட்டத்தினுடைய கோட்பாட்டுக்கும், தேசிய பாதுகாப்புச் சட்டத்தினுடைய கோட்பாட்டுக்கும் டிஃபரன்ஸ்ஸே இல்லை. Our positi n is entirely distinct. இரண்டிலும் ஒரே கோட்பாடுதான் ஆகவே, அதை எதிர்த்து நாங்கள் நாடாளுமன்றத்திலே வாக்-அவுட் செய்ததைப்போல, அதே கோட்பாட்டை உடைய இந்தச் சட்டத்தையும் எதிர்த்து நாங்கள் இங்கேயும் வெளிநடப்புச் செய்கிறோம்.

(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. இரா. கருப்பையா: விசாரணை இன்றி காவலில் வைக்கக்கூடிய ஒரு சட்டம் முதன்முதல் தமிழகத்தின் சட்டப் புத்தகங்களிலே சட்டமாகக் காணப்படுவதற்காக கொண்டு வரப்படுவதை கம்யூனிஸ்ட் கட்சி எதிர்க்கிறது. தன்னுடைய கண்டிப்பைத் தெரிவிக்குக் வகையில், விசாரணையின்றி காவலில் வைக்கக்கூடிய சட்டம் நிறைவேற்றப்படுவதை எதிர்த்து கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

டாக்டர் கே. சௌரிராஜன்: இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் நான் பங்குதாரராக இருக்க விரும்பாத காரணத்தால், அடிப்படை நியாயத்திற்கே இது விரோதமாக இருக்கிற காரணத்தால், நான் சட்ட சபையிலிருந்து வெளிநடப்புச் செய்கிறேன்.

(டாக்டர் கே. சௌரிராஜன் அவர்கள் வெளிநடப்புச் செய்தார்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ்க் குற்றம் செய்பவர்கள், குண்டர்கள், விபச்சாரக் குற்றம் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/1982) நிறைவேற்றப் பெற வேண்டும்."



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) திருத்தச் சட்டமுன்வடிவு *சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவெற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/1982) நிறைவேற்றப்பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு: தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்) 12/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

(இ) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1982.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

* 1982 பிப்ரவரி 11-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 பிப்ரவரி 18

''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 12/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

இச் சட்ட முன்வடிவு 1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளம் வழங்கல் சட்டத்தின் 12-பி பிரிவினைத் திருத்துவது பற்றியதாகும்.

1952 மார்ச் 1 ஆம் நாளுக்குப் பின்னர் ஓராண்டுக்குக் குறையாமலும் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாமலும் சட்டமன்றப் பேரவையிலோ, சட்டமன்ற மேலவையிலோ அல்லது இவ்விரு அவைகளிலுமோ ஒரு முறை உறுப்பினராகப் பணியாற்றிய ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 250 ஓய்வூதியமும் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் உறுப்பினராக இருக்கும் அதிகப்படியான ஒவ்வொரு ஆண்டுக்கும் திங்கள் ஒன்றுக்குக் கூடுதலாக ரூ. 50-ம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் எவ்வாறாயினும் அவருக்கு எந்த வகையிலும் கொடுக்கப்படுகிற ஓய்வூதியம் திங்கள் ஒன்றுக்கு ரூ. 500-க்கு மேற்படக் கூடாது என்றும் தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 12 பிரிவு வகை செய்கிறது.

முன்னாள் திருவாங்கூர்-கொச்சி, ஆந்திர மாநிலங்களில் இருந்து பின்னால் தமிழகத்துடன் சேர்க்கப்பட்ட தொகுதிகளின் சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றியவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்க வழிவகை செய்யப்படும் என்ற அரசின் உறுதிமொழியை செயல்படுத்தவும், 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15 ஆம் நாளிற்குப் பிறகு முன்னாள் சென்னை மாநிலத்தின் தொகுதிகளில் உறுப்பினர்களாக இருந்தவர்களுக்கு ஓயவூதியம் வழங்கவும், இச்சட்ட முன்வடிவு வகை செய்கிறது. மேற்கூறிய ஓய்வூதியம் ஏற்கனவே வேறு எந்த மாநில சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றி அதற்காக ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும், முன்னாள் சென்னை மாநிலத்தில் இருந்தும் பின்னர் தமிழ்நாட்டிலிருந்து பிரிந்துபோன தொகுதிகளுக்கு உறுப்பினராக பணியாற்றியவர்களுக்கும் கொடுக்கப்படமாட்டாது.

மேலும் மைய அல்லது எந்த மாநில அரசிடமிருந்தோ அத்தகைய அரசு நிறுவனங்கள் முதலியவற்றிடமிருந்து ஓய்வூதியம், மதிப்பூதியம், தியாகிகள் ஓய்வூதியம் பெறுபவர்கள், இந்தச் சட்டத்தின்கீழ் பெறக் கூடிய தொகையைவிட அதிகமாக பெற்றாலும் அவர்களுக்கு இந்தச் சட்டத்தின்கீழ் ஓய்வூதியம் வழங்கப்படமாட்டாது. எனினும், அவ்வாறு பெறும் மற்ற ஓயவூதியம் போன்ற தொகை இச்சட்டத்தின்கீழ்பெறும் தொகையைவிட குறைவாக இருந்தால் அவர்களுக்கு அந்த வித்தியாசம் மட்டும் வழங்கப்படும்.

---

*1982 பிப்ரவரி 17-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1982 பிப்ரவரி 18]

*THIRU T. VENKATA REDDI:- Hon-Speake Sir, I move for the amendm nt as a ready submitted. Before moving the amendment I would submit a few things on this B ll. This Bill has been introduc d to giv salary for those who hav been in the Assembly from 1947 also. Dur ng 1947 our Sta e was a composite State consist ng of many reas which have now been acceded to And ra. P adesh, Karnataka and Kerala. Th se memabers who have b en repre enting this Madras State, are not with as now. But still they have not been drawing any p ns on fr m those States. They are no represen ing the As emblies in those States. Ty y are individua's who have been deprived facil ties in t ose States' On humanitarian grounds, which attitude has be n adopted by our Government, he benefit of pension must be extended tc the representatives who have been representing the compo ite Mad as State and who have not been daawing any emuneration or pens on faom hose States.

Why I am submitting this is, they h ve been represen ing the composite State and they have been discharging the r duties very offi-ciently to the welfare of our State. It will be an hono r for the State of Tamil Nadu if the benefit of p ns on is exten ed to those rep esentatives who have been representing this Auguat Assembly after 1947 and after 1956. The r number may be small. But the gestule we show tc them, wi l enchance the prestige of our State. We also notice anoth r amendmen to this Bill by which the representatives who have been which the representing befo e 1956 those areas' which have been acceded to Tamil Nadu are getting the benefit ot pension. But wh n the b nefit of pension is denied to thosein other States, who have been repre en ing this Madras Sta e, it is natural tha they must also be given t e benefit f pension.

MR. S. PEAKER:- They must also get the benefit. That is the point.

(பிற்பகல் 2.00)

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, 1947 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றதற்குப் பின்னாலே எம். எல். ஏ. வாக வந்தவர்களுக்கெல்லாம், அன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்த அனைவருக்கும் பென்ஷன் தருகிற ஒரு மசோதாவை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இங்கே வைத்திருக்கிறார்கள். உள்ளபடியே நான் இதைக் குறை சொல்லவில்லை. ஏனென்று கேட்டால். 1947 ஆம் ஆண்டு எம். எல். ஏ. வாக வந்தவர்களுக்கும், அதையடுத்து வந்தவர்களுக்கும் பென்ஷன் கொடுக்கப்படும்போது, பெரும் பகுதியினர் தியாகங்களைச் செய்தவர்களாக, உப்பு சத்தியாக்கிரகத்தில் உதைப்பட்டு. ஆகஸ்ட் சத்தியாகிரகத்தில் அடிப்பட்டு, எர்ரவாடா சிறையிலிருந்து, தண்டியாத்திரை வரை சென்று, தடியடி தாங்கியவர்கள் எல்லாம் இன்றைக்கு எம். எல். ஏ. வாக இல்லாமல் இருக்கலாம். அதிலே பல தியாகிகள் இருப்பார்கள்.

எத்தனையோ ஒளி நிறைந்த முத்துக்கள் ஆழ்கடல் தளத்திலே யாரும் அறியாமல் கிடக்கின்றன; எத்தனையோ வண்ணமிகு மலர்கள் காட்டகத்தே யாரும் நுகரப்படாமல் கிடக்கின்றன என்று ஹெல்னஸ் அவர்கள் சொன்னார்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அற்புதமாகப் பேசுகிறீர்கள்; உங்கள் பேச்சை வரவேற்கிறேன். ஆனால், நேரமில்லை. தியாகிக்கு பென்ஷன் கொடுக்கப்படுகிறது. அது தேவையா, வேண்டாமா என்று சுருக்கமாக இரண்டு நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, 1947 ஆம் ஆண்டிற்குப் பிறகு எம். எல். ஏ.க்களாக இருந்தவர்கள், தாங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் என்பதை மறந்துவிட்டு இருக்கிறவர்களுக்குகூட. இன்றைக்கு அவர்களுக்கெல்லாம் பென்ஷன் தருகின்ற திட்டத்தை நான் குறை சொல்லவில்லை. வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன் ஆனால் அப்படி கொடுப்பதிலே சில கன்டிஷன்கள் போட்டிருக்கிறார்கள். என்ன? நாங்கள் கொடுப்பதைவிட, நீங்கள் வேறு எங்கேயும் சம்பளம் வாங்கக் கூடாது; அல்லது அரசாங்கத்திலே வாங்கக் கூடாது; அல்லது வேறு எங்கெயும் பென்ஷன் வாங்கக் கூடாது; ஆனரோரியம் வாங்கக் கூடாது என்று அப்படி ஒவ்வொன்றாகப் போட்டு, அதிலே கழித்துப் பார்த்தால், யாருக்கும் வராது. 47-லே எம். எல். ஏ. வாக வந்தவர்களுக்கு, 82-லே பென்ஷன் கொடுக்கிற போது எந்தவிதமான ஆனரோரியமும் வாங்காமல், சம்பளமும் வாங்காமல், 'போலோ, மகாத்மா, காந்திக்கு ஜே' என்று அப்படியேவா சும்மா உட்கார்ந்து கொண்டிருப்பார்கள். ஆகவே இதைக் கொடுக்க வேண்டுமென்று நினைத்தால் அதை வாங்கக் கூடாது, இதை வாங்கக் கூடாது, அதிலே சேரக்கூடாது, இதிலே சேரக்கூடாது என்ற கண்டிஷன்கள் எல்லாம் இருக்கக்கூடாது.

கொடுக்கிறதை ஸ்ட்ரயிட்டாகக் கொடுங்கள், கொடுக்கிற மாதிரி கொடுத்துவிட்டு சிலபேர்கள் வட்டிக்கடை சேட்களைச் சொல்வார்கள், 6000 ரூபாய் வாங்கினால் 5 வருடங்களுக்கு வாங்கினால், ஐந்து வருடத்திற்கான வட்டியை முதலிலே எடுத்துக்கொண்டுதான் கொடுப்பான், அதைப்போல இல்லாமல் கொடுப்பதை நல்ல எண்ணத்தோடு கொடுக்க வேண்டும் என்பது ஒன்று.

இரண்டாவதாக, 1977-இல் ஒரு நிலைமை ஏற்பட்டது. எல்லோரும் ஜெயித்து வந்தோம் அதிலே ஒன்றரை இரண்டு வருடத்திற்குப் பிறகு ஆட்சி போய்விட்டது. பல பேர்கள் அதிலே எம். எல். ஏ. வுக்கு நின்றார்கள். சில பேர்கள் தோற்று விட்டார்கள், சிலபேர்கள் ஜெயித்து வந்தார்கள். தோற்றுப் போனவர்களுக்கு ஒரு டெர்ம் இருந்தால் 250 ரூபாய் என்று சொல்லிவிட்டீர்கள். 1977 இல் இருந்து எம் எல். ஏ. வாக



இரண்டு வருடம் இருந்து தோற்றுப் போனவர்களுக்கு ஒரு டெர்ம் என்று சொல்லி 250 ரூபாய் வாங்கலாம், ஆனால் அதிலேயே ஜெயித்து மறுபடியும் வந்தவர்களுக்கு எப்படி கால்குலேட் பண்ணுகிறார்கள் என்றால் வருடத்திற்கு 50 ரூபாய் என்று கால்குலேட் பண்ணுகிறார்கள், ஆகவே இரண்டு வருடம் அதற்கு 100 ரூபாய் என்று சொல்கிறார்கள். தோற்றவருக்கு 250 ரூபாய், ஜெயித்து வந்தவருக்கு, செலவு பண்ணி வந்தவர்களுக்கு 100 ரூபாய்.-- இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி எவ்வளவு செலவு செய்தோம் என்று கணக்குக் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. கணக்குக் கொடுக்கவில்லை என்றால் பதவி பறி போய்விடும்--ஆகவே ஜெயித்தவருக்கு 100 ரூபாய், தோற்றவருக்கு 250 ரூபாய் என்றால் அது என்ன முறை. ஒரு டெர்ம் என்று கணக்குப் போடுகிறீர்கள். தோற்றவர்களுக்கு 250, ஜெயித்தவர்களுக்கும் 250 என்று தானே இருக்கவேண்டும். யார் 77-இல் எம். எல். ஏ.க்களாக வந்தார்களோ அவர்களுக்கு 250 ரூபாய், அதற்கப்புறம் இப்போது வந்தவர்களுக்கு ஆண்டுக்கு 50 ரூபாய் என்று கூட்டுவதுதானே முறை, தோற்றவர்களுக்கு அனுதாபத்திற்காக 250 ரூபாய் ஜெயித்தவர்களுக்கு 100 ரூபாய் என்று சொல்வது முறையல்ல. இன்னும் சொல்லப் போனால் உங்கள் பார்டியில்தான் அதிகமாக வரும். நான் அதற்காகச் சொல்லவில்லை, எம். எல். ஏ.க்களாக வந்து விட்டோம். சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறையிலே கொடுக்கின்ற சலுகைகளை அவர்களுக்கும் கொடுக்கவேண்டும்.

நாங்கள் எல்லாம் இருக்கிறோம், பஸ் பாஸ் கொடுத்திருக்கிறீர்கள், எங்களிடம் பாஸ் இல்லையென்றால்கூட எப்படியோ ஏற்றிக் கொள்கிறார்கள். இடம் இல்லை என்றால்கூட சார், கண்டக்டர் சீட்டிலே உட்காருங்கள் என்று சொல்லி காஞ்சிபுரத்திலே மாற்றிக் கொள்ளலாம் என்று சொல்கிற அளவுக்கு இருக்கிறது. ஆனால் 47-ல் எம், எல். ஏ.க்களாக இருந்தவர்கள் எல்லாம் இப்போது எக்ஸ்—எம். எல், ஏ. க்களாக இருக்கிறார்கள், அவர்களிலேயே பலபேர்களுக்கு மறந்துவிட்டது, மக்களுக்கும் மறந்து விட்டது. இவ்வளவு செலவு செய்கிற சர்க்கார் 47-ல் இருந்து வந்த அந்த எம். எல். ஏ.க்களுக்கும் பஸ் பாஸ் கொடுக்க வேண்டும். இந்த இரண்டு குறைகளையும் நீக்கிவிட்டால் நாவலரைப் பாராட்டலாம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, 1967 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திலிருந்து ஏற்கெனவே இருந்த எம்.எல்.ஏ.க்களுக்கு பென்ஷன் வழங்க முடிவு செய்ததை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். அவர்களுக்கு பழைய பாக்கிகள் இல்லை என்று விதி செய்திருக்கிறார்கள். அவர்களுக்கும் 1980 மார்ச்சிலிருந்து எல்லோருக்கும் கொடுப்பது போல் அவர்களுக்கும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மத்திய அரசிடமிருந்தோ, மாநில அரசிடமிருந்தோ

அரசு நிறுவனங்களிலிருந்தோ ஓய்வூதியமோ அல்லது மதிப்பூதியமோ அல்லது வேறு எது வாங்கினாலும் எது குறைவாக இருக்கிறதோ அதிலே உள்ள வித்தியாசத்தைத்தான் வாங்க வேண்டும் என்று சொல்வது அவ்வளவு நியாயம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1946-ல் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள் பெரும்பாலும் சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்டு எல்லாவற்றையும் தியாகம் செய்தவர்கள், இன்றைக்கு நிர்க்கதியாக இருக்கிறார்கள். அப்படி சிரமப்படுகிறவர்களுக்கு உதவுகின்ற வகையில், மனிதாபிமான முறையில் சீர்தூக்கிப் பார்த்து பென்ஷனை தனித்துப் பெற வகை செய்யவேண்டும். வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ள நிலையில் 250 ரூபாய் மிகக் குறைவு. ஆகவே வேறு ஊதியம், இப்பென்ஷன் இரண்டும் சேர்ந்து 500 ரூபாய்க்கு அதிகம் இல்லாத அளவுக்கு ஒரு உயர்ந்த பட்சத் தொகையை நிர்ணயிக்கவேண்டும். இன்றைய எம்.எல்.ஏக்கள் வருங்காலத்தில் முன்னாள் எம்.எல்.ஏக்களாக ஆகக்கூடிய நிலைமை எல்லோருக்கும் இருக்கிற காரணத்தினால் அதனால் சீனியர் எம்.எல்.ஏ.க்கள் மிகச் சிலர்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த அரசாங்கம் அனுதாபத்தோடு சீர்தூக்கிப் பார்த்து அவர்களுக்கு இந்தச் சலுகைகளை வழங்குமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 2.10)

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவை அன்றைக்குத்தியாகிகளாகக் கஷ்டப்பட்டவர்கள் பலபேர்களுக்கு 1947-ஆம் ஆண்டிலிருந்து எம்.எல்.ஏ.க்களாக இருந்திருக்கிறார்கள், அவர்களுக்கு 250 ரூபாய் ஊதியம் கொடுப்போம் என்று இந்தச் சட்டம் கொண்டு வந்திருப்பதற்காக அந்தத் தியாகிகளினுடைய சார்பிலே அந்தப் பரம்பரையிலே வந்தவள் என்ற முறையிலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்; பாராட்டுகிறேன். இன்றைக்கு அவர்கள் தியாகி பென்ஷன் வாங்கினால் இல்லை என்று இருக்கிறது. தயவு செய்து அப்படி இருக்க வேண்டுமா என்று பார்க்க வேண்டும். அவர்கள் பட்ட பலனின் காரணமாகத்தான் என்னைப் போன்றவர்கள் இந்தச் சட்டமன்றத்தில் அமரக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இது அவர்களுக்குக் கொடுக்கப் படக் கூடிய ஊதியம் அல்ல; நம்முடைய முதலமைச்சரவர்கள் சொன்னதைப்போன்று, காணிக்கை. அப்படிக் காணிக்கையாகக் கொடுக்கக்கூடிய இந்தப் பணத்தை 1980 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் தேதியிலிருந்து கொடுப்பதற்கான வழிவகைகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று தியாகிகளின் சார்பிலே கேட்டு இந்த பில்லை வரவேற்று முடிக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திருத்தச் சட்டத்தினுடைய முக்கிய நோக்கம் இதிலே தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது





மாண்புமிகு உறுப்பினர் கூறும்பொழுது 1947-லிருந்து 1953 ஆம் ஆண்டு வரையிலும், பிறகு 1956-ஆம் ஆண்டு வரையிலும் திருவிதாங்கூர்—கொச்சி மாநிலத்தைச் சேர்ந்தவர்களும், ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் ஒன்றாக இருந்த காலத்திலிருந்து இருந்தவர்களுக்கும் தர வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள்.

ஆனால் நம் தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் 1953-க்குப் பிறகு வந்து சேர்ந்த பகுதிகளும், 1956-க்குப் பிறகு வந்து சேர்ந்த பகுதிகளும் உண்டு. தமிழகத்திலே எந்தெந்த பகுதிகள் பிற மாநிலங்களிலிருந்து வந்திருக்கின்றனவோ அதிலே இருக்கின்ற உறுப்பினர்கள் 1947—லிருந்து இருப்பார்களேயானால் அது, திருவிதாங்கூர்-கொச்சியிலே எம்.எல்.ஏ.வாக இருந்தாலும் கூட நாம் அவர்களுக்கு இங்கே பென்ஷன் தருகின்ற முறையை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

அதேமாதிரி தமிழகத்திலிருந்து திருவிதாங்கூர்-கொச்சி பகுதிக்குத் தமிழகப் பகுதி சென்றாலும் அல்லது தமிழகத்திலே சென்னை மாநிலமாக இருந்து அது ஆந்திரா பகுதிக்குச் சென்றாலும் அவர்களுக்கு ஓய்வூதியம் தருகின்ற பொறுப்பை அந்தந்த மாநிலங்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றன.

ஆக, 1947லிருந்து 1953, 1956 வரையிலும் திருவிதாங்கூர்—கொச்சியிலே எம்.எல்.ஏ.வாக இருந்தவர்கள் இப்பொழுது நாகர்கோவில் பகுதியிலே, கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கிறார்கள். அவர்கள் இருந்தது திருவிதாங்கூர்-கொச்சியின் சட்டமன்றத்திலேயே தவிர நம் சட்டமன்றத்தில் இல்லை. இருந்தாலும் நம்முடைய மாநிலத்தில் வந்து விட்டதன் காரணமாக அந்த எம்.எல்.ஏ.க்களுக்கு தர வேண்டுமென்றுதான் கூறுகிறோம்.

ஆனால், தமிழகத்தோடு இணைந்திருந்தவர்களுக்கெல்லாம் தர வேண்டுமென்று நாம் வைத்துக்கொள்வோமேயானால், ஆந்திராவினுடைய பெரும்பகுதி இங்கேயிருந்துதான் பிரிந்து போயிற்று; அதில் இருக்கின்ற அவ்வளவு உறுப்பினர்களுக்கும் நாமே பென்ஷன் கொடுக்கின்ற பொறுப்பை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.

ஆகவே, அந்தந்த மாநிலங்களினுடைய பகுதிகள், இங்கிருந்து அங்கு போய்ச் சேர்ந்திருந்தாலும் சரி, அங்கேயிருந்து இங்கே வந்து சேர்ந்திருந்தாலும் சரி, அந்தந்த மாநிலங்கள் அவரவர்கள் எம்.எல்.ஏ.க்களுக்கு அந்தந்த மாநிலங்களினுடைய ஓய்வூதியம் தருகின்ற விதிமுறைகளின்படி ஓய்வூதியம் வழங்குகிறார்கள். அது ஒன்று.

மற்றொன்று. 1947-வது ஆண்டிலிருந்து 1950-வது ஆண்டு அரசியலமைப்புச் சட்டம் புதிதாகக் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டு இந்தியாவினுடைய அரசியலமைப்புச் சட்டமே புதிதாக குடியரசாக மாற்றியதற்குப் பிறகுதான் தர வேண்டுமென்ற முறையில், அதற்குப் பிறகு வந்த தேர்தலையொட்டி 1952-க்குப் பிறகு தரப்பட்டு வந்தது.

1947-லிருந்து 1952 வரையில் பணியாற்றியவர்களுக்கு ஓய்வூதியம் தரப்படவில்லை. அவர்கள் நீண்ட நாட்களாகத் தங்களுக்கும் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனால் 1947-லே நாடு விடுதலை பெற்றுவிட்டதன் காரணமாக, 1947-வது ஆண்டிலிருந்தே நாம் கணக்கிட வேண்டுமென்று ஒரு முயற்சி எடுத்ததற்குப் பிறகுதான் 1947-லிருந்து 1952 ஆம் ஆண்டு வரையிலும்கூட சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்களாக இருந்தாலும்கூட ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்கிற முறையின் அடிப்படையிலே அப்படிப்பட்ட திருத்தத்தையும் சேர்த்து அதற்குத்தான் வந்தது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடரெட்டி அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆந்திர மாநிலத்திலேயும், மற்ற மாநிலங்களிலேயும் இருப்பவர்களுக்கு அந்த மாநிலம் பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற நியதி இருக்கிறது; இங்கே வந்து சேர்ந்தவர்களுக்கு நாம் பொறுப்பேற்றுக் கொள்கிறோம்.

அந்த வகையிலேதான் நம்முடைய தமிழகத்திலே இன்றைக்கு இருக்கின்ற பகுதிகளில் இருக்கின்றவர்களுக்கு அத்தனைபேர்களுக்கும் அவர்கள் எந்தச் சட்டமன்றத்திலே உறுப்பினர்களாக இருந்தாலும் நமக்குப் பரவாயில்லை; 1947-லேயிருந்து இருப்பவர்கள் இங்கே இருப்பார்களேயானால், அந்தப் பகுதி இங்கே இருக்குமேயானால் அவர்களுக்குத் தருவது என்ற முறையைத் தான் நாம் வைத்திருக்கிறோம். அந்த அடிப்படையிலேதான் இது தரப்பட்டிருக்கிறது.

மற்றொன்றையும் உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஓய்வூதியம் என்கிறபொழுது பென்ஷன் விதிமுறைகளின்படி ஓய்வூதியம், மற்றைய தியாகிகள் ஓய்வூதியம், மதிப்பு ஓய்வூதியம் என்று வருகிறபொழுது ஏதாவது ஒரு பென்ஷன்தான் தர வேண்டும் என்கின்ற ஒரு விதிமுறை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் சொல்வதைப்போன்று அங்கே வாங்கக் கூடாது; இங்கே வாங்கக் கூடாது; எங்கேயும் வாங்கக் கூடாது என்று சொல்லவே இல்லை. எங்கே வேண்டுமானாலும் வாங்கலாம்; எப்படி வேண்டுமானாலும் வாங்கலாம். வேறு வழியில் சொத்து சம்பாதிப்பதைப் பற்றி குறையே இல்லை. ஆனால், ஓய்வூதியம் என்று வரும்போது இரண்டு இடத்திலே பென்ஷன்........





**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு மன்றத்தின் தலைவர் அவர்களே, இங்கே சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்றவர்கள் நாளைக்கு வழக்கறிஞர்களாகவோ, மற்றவர்களாகவோ பணியாற்றுகிறவர்களாக இருக்கலாம். ஹானரேரியம் என்று சொல்கின்றபொழுது, லீகல் அட்வைசராக இருந்து வருகின்ற பணம் கூட ஹானரேரியம் தான். அப்படியானால் ஹானரேரியம் ஆக, ரூ. 100/-ஓ, ரூ. 400/-ஓ, அவர்கள் வாங்குகிறார்கள் என்று சொன்னல், அவர்களுக்கு இந்த ஊதியம் இல்லையென்று சொன்னால் அது சரிய ? ஆகவே, அந்த ஹானரேரியத்தை அவர் விளக்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதனால்தான் ஓய்வூதியம், ஓய்வூதியம் என்று நான் சொன்னேன். ஹானரேரியம் வாங்குவதைப் பற்றி தவறே இல்லை. எவ்வளவு வேண்டுமனாலும் சம்பாதிக்கலாம்.

**திரு. அ. ரகுமான்கான் :** ஆனால், சட்டத்தில் ஹானரேரியம் என்று இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** Honorarium from the Government. அரசாங்கத்திடமிருந்து, வருவதைப் பற்றியது; மற்றைய ஸ்தாபனங்களிலிருந்து வருவதைப் பற்றியதல்ல. (குறுக்கீடு) அரசு, அரசினுடைய வாரியங்கள், கார்ப்பரேஷன்கள் ஆகியவற்றிலிருந்து அவர்கள் ஹானரேரியம் வாங்கினால்தான் இந்தச் சட்டம் தடுக்கிறதே தவிர, விதிமுறைகளின்படிதான் கொண்டு வருகிறோம். சட்டம் இடம் கொடுக்குமானால், எதிர்காலத்தில் பரிசீலிக்கலாம் என்ற அளவுக்குச் சொல்லலாமே தவிர, இப்பொழுது இருக்கிற பென்ஷன் சட்டத்தினுடைய விதிமுறைகளுடைய அடிப்படையில்தான் நாம் தீர்மானம் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்றதை வைத்து, மறுபடியும் வேண்டுமானாலும், சட்டம் இடம் கொடுக்குமானால், அதைப் பற்றி ஆலோசிக்கலாம் என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்ற சலுகைகளைப் பற்றியெல்லாம் மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் சொன்னார்கள். ஆனால், இப்பொழுதாவது அவர்கள் நாமெல்லாம் செவியாறக் கேட்கிற அளவுக்கு ஒரு இலக்கியமாகப் பேசினாரே என்பதே நமக்கு ஒரு மகிழ்ச்சி. இதை ஒட்டியாவது, இப்படி மகிழ்ச்சி அடையத்தக்க அளவுக்கு ஒரு அருமையான, இனிமையான, நல்ல சொற்களாக, இப்பொழுதாவது பேசினாரே என்பதற்குப் பெரு மகிழ்ச்சி. அவரை, கொஞ்சம் தொடரவிட்டிருக்கலாம் போலிருக்கிறது, இலக்கியமாகப் போயிருக்கும். அதற்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்ற சலுகைகளைப் பற்றி, பஸ் பாஸ் கொடுப்பதைப் பற்றி எல்லாம், மானியக் கோரிக்கைகள் வரும்போது பார்த்துக் கொள்ளலாம். (குறுக்கீடு) இந்தச் சட்டத்தில் உள்ளவற்றை நிறைவேற்றுவோம். மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற கருத்துக்களைப் பின்னால் நாம் யோசிக்கலாம் என்ற அளவுக்கு, இந்தச் சட்டத்தை இப்பொழுது நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி: ''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 12/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

THIRU T. VENKATA REDDY : Sir, I move the following amendment standing in my name,—

''(1) In clause 2, in sub-clause (iii), in the proposed item (a) add the following words at the end, namely--

''and representing as a Member in any other State'':

(2) Delete the proposed item (b).''

The amendment was duly seconded.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.12/1982) நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.





2) அறிவிப்புகள்— (தொடர்ச்சி).

(ஈ) பேரவை அலுவல்.

(பிற்பகல் 2.20)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஒரு அறிவிப்பு. 'இன்றைய நிகழ்ச்சி நிரலில், வரிசை எண். 3 'அரசினர் சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)' என்ற தலைப்பின் கீழ் எஞ்சியுள்ள சட்ட முன்வடிவுகளையும், வரிசை எண். 4 'பேரவைமுன் வைக்கப்பெற்ற அறிக்கைகளுக்கான திருத்தங்கள்' என்ற தலைப்பின் கீழ் உள்ள இனங்களையும் பட்ஜெட் கூட்டத் தொடரின்போது, அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்வதற்காக ஒதுக்கப்பெறும் நாட்களில் எடுத்துக் கொள்ளப் பெறும். இன்றைய நிகழ்ச்சிநிரலில் வரிசை எண்.5 'தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகள் மீது விவாதம்' என்ற இனம் இன்று மாலையும் நாளை (19.2.1982) காலையும் பேரவையில் எடுத்துக் கொள்ளப்பெறும் என்று அறிவிக்கிறேன். பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 5.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.21 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(மாலை 5.00)

மாலை 5.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கைகள் விவாதம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981-82 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை குறித்தும், 1980—81 ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கையினை குறித்து நான் ஆற்றவேண்டியஉரையை *நூல் வடிவில் தந்துள்ளேன் அந்த உரையை நான் இங்கே ஆற்றியதாக எடுத்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் அதன் மீது கருத்துக்களையும், ஆலோசனைகளையும், வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*427—453ம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1981-82 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதும், 1980-81 ஆம் ஆண்டுக்கான துணை நிதி நிலை அறிக்கை குறித்தும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு சில கருத்துக்களை நான் சொல்லவிழைகிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில், இந்தியத் துணைக் கண்டத்திலேயே தெரு விளக்கானாலும் சரி, விவசாயத்திற்குக் கொடுக்கப்பட்டு இருக்கும் மின் இணைப்பானாலும் சரி, இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழ்நாடு தான் முன்னணியில் இருக்கிறது என்பதை அறிந்து நாம் எல்லோருமே பெருமைப்படுகிறோம். இந்த ஆட்சியானாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த காலத்திலும் சரி, மின்சாரத்தை ஏராளமான அளவிற்கு விவசாயத்திற்குக் கொடுத்து இருக்கிறோம் என்பதிலே நாம் எல்லோரும் பெருமைப்படுகிறோம்.

இன்றைய தினம் தமிழகம் உணவுத் துறையில் தன்னிறைவு பெற்று விளங்குகிறது என்று சொன்னால், அதற்கு முக்கிய காரணமாக இருப்பது மின்சாரம் தான். இன்றையதினம் பல்வேறு மாநிலங்களில் உணவுப் பற்றாக்குறை இருந்தாலும், தமிழகத்தில் கடுமையான வறட்சி ஏற்பட்ட காலத்தில் கூட, ஆட்சியில் இருக்கின்ற நீங்கள் இந்த மாநிலத்தில் உணவுத் தட்டுப்பாடு இல்லை என்று அறிவித்தீர்கள் என்று சொன்னால், இந்த நாட்டில் அதிகமான அளவிற்கு மின்சாரத்தை விவசாயத்திற்கு அளித்து, அதன் காரணமாக உணவு உற்பத்தி அதிகரிக்கப்பட்டு, அதன் காரணமாக நாம் உணவுத் துறையில் தன்னிறைவு பெற முடிந்தது.

இன்றையதினம் விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறையை விட மின் துறைதான் மிக்க பக்கபலமாக இருந்து வருகிறது. குறிப்பாக இந்த மாநிலத்தில் அதிகமாக விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுத்து இருந்தாலும், உணவுப் பற்றாக்குறையைத் தவிர்த்த நாம், மின் பற்றாக்குறையைத் தவிர்க்க இயலவில்லை. மின்பற்றாக்குறை மாநிலமாகத்தான் உள்ளோம் என்பதை நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும். நாம் மின் துறையில் தன்னிறைவு பெறவில்லை என்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. ஆனாலும் ஒன்றை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

காங்கிரஸ் ஆட்சி காலத்திலேயும் சரி, திராவிட முன்னேற்றக் கழக காலத்திலும் சரி, மின் பற்றாக்குறை வரும் என்கிற கால கட்டம் வருகின்ற நேரத்தில் தொழில் துறையில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மின்வெட்டு கொண்டு வந்து, விவசாயி களுக்கு முழுமையான அளவிற்குக் கொடுத்து அதைக் காப்பாற்றி



வந்தார்கள். ஆனால் இந்த 2-3 ஆண்டுகளாக என்ன நிலைமை என்று சொன்னால், நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்கள் செல்கின்ற இடத்தில் எல்லாம் சொல்கிறார்கள், தொழில்களுக்கு மின் வெட்டு இல்லை, விவசாயிகளுக்கும் மின் வெட்டு இல்லை என்று. அப்படிச் சொல்வதை நாங்கள் வரவேற்கிறோம். பெருமைப்படுகிறோம். ஆனால் உண்மை நிலைமை அப்படி இருந்தால் பரவாயில்லை. உண்மை நிலைமையை நான் அவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஒவ்வொரு ஆண்டும் நீங்கள் இந்த மின் தட்டுப்பாடு வருவதற்கு முன்னதாகவே இந்தக் கட்டுப்பாட்டை தொழில் துறையில் கொண்டு வந்து விவசாயிகளுக்கு நீங்கள் கொடுப்பீர்களானால், நிச்சயமாக விவசாயிகள் பாதிக்கப்பட மாட்டார்கள். ஆனால் நிலைமை இந்த 2, 3 ஆண்டுகளாக தொடர்ந்து எப்படி வருகிறது என்றால் 'கட்' இல்லை என்று சொல்லுகிற நிலையில் அரசாங்கம் இருக்கிறது; இந்த வாரியம் இருக்கிறது. அப்படி இருந்தாலும் திடீர் திடீர் என்று கிராமங்களுக்கு மின்சாரம் வருவதில்லை; நின்று விடுகிறது. அப்படியே மின்சாரம் வந்தாலும் விவசாயிகள் வைத்திருக்கிற பம்புசெட் இயங்க முடியாத அளவுக்கு வோல்டேஜ் கம்மியாக இருக்கிறது. இன்று வரும், நாளை வரும் என்று விவசாயிகள் எதிர்பார்த்து, கடைசியில் என்னைப் போன்றவர்களிடம் கேட்கிறார்கள். நாங்கள் \ சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பார்த்து சொல்லு போது அவர்கள் எங்களிடம் ஏன் சொல்கிறீர்கள், அரசாங்கத்திடம் சொல்லுங்கள் என்கிறார்கள். நாங்கள் அரசாங்கத்திற்கு வந்து, அல்லது அமைச்சரைப் பார்த்து சொல்லி, அமைச்சரவர்கள் இங்கே தொழில் துறைக்கு வழங்கும் மின்சாரத்தில் 'கட்' செய்து பிறகு விவசாயத்திற்கு கொடுக்க ஏற்பாடு செய்கிறார்கள். அதற்குள் விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டு விடுகிறார்கள் என்பதை துணைத் தலைவரவர்கள் மூலமாக மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்கு பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதிலே கௌரவப் பிரச்சனை இல்லை. இங்கே மின்சாரத் தட்டுப்பாடு வருகிறபோது மின்சார கட் கொண்டு வருவதில் அரசாங்கத்திற்கோ அல்லது மின்சார வாரியத்திற்கோ கௌரவப் பிரச்சனை அல்ல. ஏனென்றால் இந்த மாநிலம் மின்சாரத்தில் பற்றாக்குறை மாநிலமாக இருந்துகொண்டிருக்கிறது. அதை நாம் உணர்ந்து இருக்கிறோம். ஆகவே, நீங்கள் தைரியமாகச் செய்யலாம்,

இந்த நாட்டிலே சிறு தொழில்களும், பெரிய தொழில்களும் தொழில் துறையிலே வளரவேண்டும். ஆனால் ஒரு தொழிற் சாலை மின்சாரம் இல்லாமல் ஒரு வாரம் மூடியிருந்தால், ஒரு வாரத்திற்குப் பிறகு மின்சாரம் கொடுத்தால், ஒரு 'ஷிப்ட்' அதிக

மாகப் போட்டு, பொருட்களை அதிகமாக உற்பத்திச் செய்யலாம். ஆனால் விவசாயம் அப்படியல்ல. அது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்களும் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்கள்தான்.

குறிப்பாக வடாற்காடு, தென்னாற்காடு மாவட்டங்களில் இன்றைக்கு அதிகமான விவசாய பம்புசெட்டுகள் இருக்கின்றன. ஒரு காலத்தில் தஞ்சைத் தரணிதான் தமிழகத்தின் நெற் களஞ்சியம் என்று சொல்லப்பட்டு வந்தது; அந்த அளவுக்கு அங்கே காவேரி பாசனத்தின் மூலம் நெல் உற்பத்தியானது ஆனால் இன்றைக்கு வடாற்காடு மாவட்டத்தில் தஞ்சையைவிட அதிகமாக உற்பத்திச் செய்யப்படுகிறது. அதற்கு காரணம் மின்சாரம்தான். பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலேயே பசுமைப் புரட்சியை கொண்டுவந்து, அங்கே அதிகமான கிணறுகள் வெட்டப்பட்டு, மின்சார பம்புசெட்டுகள் வைத்து, இறவைப் பாசனம் மூலம் நெல் பயிர் செய்யப்படுகிறது. அதனால் அதிக அளவில் நெல் உற்பத்திச் செய்யப்படுகிறது அங்கே.

அப்படிப்பட்ட எங்கள் வடாற்காடு மாவட்டத்தில் மின்சாரம் சரியாக விநியோகம் இல்லாத காரணத்தால் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படுகிறது; விவசாயிகள் கஷ்டப்படு கிறார்கள். மின்சாரத்தை நம்பி பம்புசெட் வைத்த ஏராளமான விவசாயிகளுக்கு இன்னும் மின்சார இணைப்பு கிடைக்கவில்லை. அதிலும் குறிப்பாக இங்கே பல நேரம் சொல்லப்பட்டது. திருவண்ணாமலை, கலசப்பாக்கம், தண்டராம்பேட்டை, செய்யாறு போன்ற பகுதிகளில் எல்லாம் இந்த 90 நாள் நோட்டீஸ் ஒரு பயங்கரமான நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது. 1979 ஆம் ஆண்டிலே மோட்டார் வாங்கி வைத்தும், இன்னும் மின் இணைப்பு கிடைக்கவில்லை. நான் இரண்டாவது முறை சட்டமன்ற உறுப்பினராக வந்த பிறகும், இன்னும் இணைப்பு கிடைக்கவில்லையே, நீங்கள் எல்லாம் அமைச்சருக்குச் சொல்லக் கூடாதா என்று கேட்கிறார்கள். 4 ஆண்டுக் காலமாக அந்த மோட்டார்கள் திண்ணைகளிலேயே செயலற்று இருக்கின்றன என்று சொல்கிறபோது நாங்கள் அதற்குப் பதில் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறோம்.

இங்கே அமைச்சரவர்களும், முதலமைச்சர் அவர்களும் தீவிர மான திட்டங்களை எல்லாம் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். என்ன தீவிரமான திட்டங்களைக் கொடுத்தாலும் இன்னும், 4 ஆண்டுகள் ஆகியும் மோட்டார் களுக்கு இணைப்பு கிடைக்கவில்லையே. விரைவிலே மின் இணைப்புக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



ஏராளமான விவசாயிகள் மின்சாரம் கேட்டு விண்ணப்பித் திருக்கிறார்கள். குறிப்பாக வடாற்காடு மாவட்டத்திலே அநேகமாக எல்லோருக்குமே மின் இணைப்பு கிடைத்தபிறகு சிறிய விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். நாம் சிறிய விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும் என்று சொல்கிறோம். ஆனால் நிலைமை என்ன? வசதி படைத்தவர்கள், பெரிய விவசாயிகள், அரசாங்கத்தில் கடன் பெற வாய்ப்பு உள்ளவர்கள் ஏற்கெனவே ஏராளமான இணைப்பு பெற்றுவிட்டார்கள். ஆனால் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் வைத்திருக்கிற சிறிய விவசாயிகள் அப்போது மின் இணைப்பு வாங்கவில்லை. இன்றைய தினம் பெரிய விவசாயிகள் எல்லோருமே மின் இணைப்பு பெற்று, தண்ணீரை இறைத்துவிட்டதால் தண்ணீர் மட்டம் மிகவும் கீழே போய்விட்டது. அதனால் சிறு விவசாயிகள் மாடுகட்டி, கமலை மூலமாக அல்லது ஏற்றம் போட்டு அதன் மூலமாக இறைவை செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. அவர்கள் என்ன செய்வார்கள்? மழை வந்தால் சம்பா பயிர் செய்யலாம். அடுத்த போகத்திற்கு, அல்லது தண்ணீர் தட்டுப்பாடு உள்ள சமயத்தில் பம்புசெட்டு வைத்திருக்கிறவர்களை அணுகி, அவர்களிடமிருந்து தண்ணீர் பெற்று பயிர் செய்ய வேண்டும். மின்சாரம் தட்டுப்பாடு இல்லை என்றால் அவர்கள் தண்ணீர் இறைத்துக் கொடுப்பார்கள் மின்சாரத் தட்டுப்பாடு இருந்தால் அவர்கள் எப்படி கொடுக்க முடியும்? அவர்களுக்கே போதாது. அப்படியானால் இந்த சிறு விவசாயிகள் நிலைமை என்ன? அதுதான் இன்றைய தினம் அவல நிலையாக இருக்கிறது. அவர்களுக்கு நாம் மின்சாரம் தந்தால் தான் விவசாயம் செய்யக்கூடிய நிலைமை ஏற்படும்.

[மாலை 5-10]

அடுத்து இன்னொரு நிலைமையினைப் பற்றியும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இப்போதெல்லாம் வசதி படைத்த வர்கள் கூட அதாவது ஏற்கெனவே மின் இணைப்பு பெற்றிருப் பவர்கள்கூட ஆயில் இன்ஜின் வாங்கி வைத்திருக்கிறார்கள். கரன்ட் கட் ஏற்பட்டால் ஆயில் இன்ஜினை ஓட்டி கொள்கிறார்கள். ஆனால் நடுத்தரக் குடும்பத்தினரால் ஆயில் என்ஜின் வாங்கி வைக்க முடியவில்லை. ஆகவே, அவர்களுக்கு மின்சாரம் கிடைக்காவிட்டால் விவசாயம் செய்ய முடியாத நிலைமை தான் ஏற்படும். அப்படிப்பட்ட விவசாயிகள் இரண்டு ஏக்கர் பயிர் வைத்தால் அறுவடை நேரத்திலே ஒரு ஏக்கர்தான் அறுவடை செய்ய முடிகின்றது. கிராமங்களிலே சொல்வார்கள். ஒரு குடும்பத்திலே பிள்ளைகள் இறந்து விட்டால் கூட அந்த குடும்பம் பாதிக்கப்படாது. ஆனால் அவன் ஓட்டிக்கொண்டிருக்கின்ற உழவு மாடு செத்துவிட்டால் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்று சொல்வார்கள். அதேபோன்று

மின்சாரம் வராவிட்டால் விவசாயிகள் காத்திருக்கின்றார்கள். அதன்பிறகு மின்சாரம் வந்துவிட்டது என்று இயக்கினால் மின்சாரம் சரியாக வராத காரணத்தினால் காயில்தான் தீய்ந்து போய்விடுகின்றது. இன்றையதினம் 3 எச். பி. மோட்டாருக்கு காயில் கட்டவேண்டும் என்றால் கிட்டத்தட்ட 200 ரூபாயி லிருந்து 500 ரூபாய் வரை செலவழிக்கவேண்டிய நிலைமை இருக்கின்றது. அப்போதுதான் மோட்டாரை ஓட்டமுடியும். ஆனால் அவ்வாறு 200 ரூபாய் செலவழிக்கவேண்டும் என்றால் சிறிய விவசாயிகளுக்கு எப்படி முடியும். யார் கடன் கொடுப் பார்கள்? இப்படிப்பட்ட நிலைமையில் அந்த விவசாயிகள் மீதம் உள்ள அந்த ஒரு ஏக்கர் பயிரையும் பாதுகாக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடக்கூடிய நிலைமை இருக்கின்றது.

ஆகவே தொழில்துறைகளை விட விவசாயத்திற்கு முன்னுரிமை அளித்து எப்போது எல்லாம் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படுகின்றது என்பதை அறிந்து முன்கூட்டியே விவசாயத்திற்கு மின்சாரம் தொடர்ந்து கிடைக்கின்ற வகையிலே நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்றையதினம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆளுநர் உரையிலே சொல்லி இருக்கிறார்கள். மின்துறையிலே ஏராளமான நஷ்டம் வருகின்றது என்று சொல்கிறார்கள். இந்த ஆண்டு சொல்லி இருக்கின்ற கணக்கிலே 125 கோடி ரூபாய் அளவுக்கு நஷ்டம் வரும். அடுத்த ஆண்டு எவ்வளவு வருமோ தெரியவில்லை என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால் ஒன்றை மட்டும் நான் நினைவூட்ட விரும்புகிறேன். எந்தக் காரணத்தைக் கொண்டும் விவசாயத்திற்கு மின் கட்டணத்தை உயர்த்தக்கூடாது. அப்படி உயர்த்தவேண்டும் என்ற எண்ணமும் இருக்காது என்றுதான் நான் நம்புகிறேன். ஆனால் யாராவது அதிகாரிகள் அப்படி உயர்த்தினால்தான் சரியாக இருக்கும் என்று புள்ளிவிவரங்கள் ஏதாவது சொன்னாலும்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து அவ்வாறு உயர்த்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி இருந்தபோது கூட ஒரு முறை இரண்டு பைசா உயர்த்தப் பட்டது. அப்போது பெரிய போராட்டம் கூட நடந்தது. நாங்கள் கூட அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களைச் சந்தித்துக் கேட்டோம். அப்போது 2 பைசா உயர்த்தினால் 2 கோடி வரும் என்றெல்லாம் கூடச் சொன்னார்கள், பிறகு அதை 1 பைசாவாக உயர்த்துவது என்று முடிவு செய்யப்பட்டது. ஆகவே அப்படிப்பட்ட நிலைமைக்கு நீங்கள் தயவுசெய்து ஆளாகி விடாதீர்கள்.

விவசாயிகளின் நிலைமை இன்றைக்கு மிகவும் மோசமாக இருக்கின்றது. நெல்லுக்கு கட்டுப்படியான விலை கிடைக் கின்றதா? கரும்புக்கு சரியான விலை கிடைக்கின்றதா? மத்திய அரசுக்கு அதுபற்றி எழுதினாலும் அவர்கள் பதிலளிக்கவில்லை



என்று வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் உணவு அமைச்சர் அவர்கள் பொது வினியோகத்திற்கு நெல் வேண்டும் என்பதற்காக 50 சதவீதம் லெவி போடப்பட்டு வருவதாகச் சொல்கிறார்கள். ஆனால் இதனால் பாதிக்கப்படு பவர்கள் யார்? லெவியினால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் விவசாயிகள்தான். அதை வியாபாரிகளிடத்திலே வாங்கினாலும் கூட பாதிக்கப்படுபவர்கள் விவசாயிகளாகத்தான் இருக்கிறார்கள். மேலும் அவர்களின் நெல் விலையும் குறைந்துவிடுகின்றது. அது அவர்களுக்குக் கட்டுப்படியாகவில்லை. விவசாயிகளை உண்மையிலேயே நாம் தியாகிகள் என்றுதான் சொல்ல வேண்டும், காரணம் என்னவென்றால் அவர்களுக்குக் கட்டுப் படியாகாத நெல்லையும் தானியங்களையும் உற்பத்தி செய்து இந்த நாட்டுக்குக் கொடுத்துவிட்டு அந்தக் குடும்பங்கள் கூட்டுறவுக் கடன்களிலும், மற்ற தனிப்பட்ட கடன்களிலும் தொல்லைப்பட்டு நலிந்துகொண்டு இருக்கிறார்கள். அப்படிப் பட்ட விவசாயிக்கு மின் கட்டணத்தை உயர்த்தவேண்டும் என்ற எண்ணத்தை அறவே கைவிடவேண்டும்.

அடுத்து மின்சாரத் துறையிலே கணக்குகள் பார்க்கின்றபோது பல நிர்வாகச் சீர்கேடுகள் இருக்கின்றன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். நான் ஒன்றைச் சொல்ல விரும்பு கிறேன், மின்சாரம் தயாரிப்பதற்கு நிலக்கரி தேவைப் படுகின்றது, அது வட மாநிலங்களிலே இருந்து வருகின்றது என்று சொன்னார்கள். ஆனால் அப்படி வருகின்ற நிலக்கரியை தனிப்பட்ட வியாபாரிகள் எடுத்துச் சென்று விற்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் அதற்கான பணத்தை வாரியத்திடம் கேட்கிறார்கள். ஆனால் தனிப்பட்ட வியாபாரிகளிடத்திலே பணத்தைப் பெற முடிந்ததா என்றால் பெற முடியவில்லை. இப்படி எத்தனையோ. இதிலே இருக்கிற சீர்கேடுகளை யெல்லாம் சொல்ல வேண்டும் என்று சொன்னால் அதற்கு நேரம் போதாது. அவைகளையெல்லாம் நம்முடைய அமைச்சர் அவர்கள் சீர்திருத்தவேண்டும். எந்த வகையிலே சீர்திருத்த வேண்டுமோ, எப்படியெல்லாம் சிக்கனம் செய்யவேண்டுமோ அவைகளைச் செய்து, அதை ஒழுங்காக கடைபிடித்தால் இந்த நஷ்டத்திற்கு நம்மால் அதை ஈடுகட்டமுடியும். இன்றைய தினம் ஏராளமான மின்சாரத் திருட்டுகள் கூட நடக்கின்றன. கிராமங்களிலே இருக்கிற சிறு விவசாயிகள் மீது கூட அப்படிப் பட்ட திருட்டுகள் செய்கிறார்கள் என்று அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதை நான் பார்த்திருக்கிறேன்.

ஆனால் நான் கூறுவது அந்த சிறு சிறு விவசாயிகள் செய்யும் திருட்டை அல்ல. மிகப்பெரிய அளவிலே இந்தக் காரியங்கள் நடைபெறுகின்றன என்றும், அதற்கு அங்கேயுள்ள அதிகாரிகளே துணையாக இருப்பதாகவும் எனக்குத் தெரிகிறது. அவைகளை முறையாக கண்காணித்து நடவடிக்கை எடுத்தால், இந்த துறையில் ஏற்படுகிற நஷ்டத்தை ஓரளவிற்கு ஈடுகட்ட முடியும். அந்த வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல நாம் பெருமையாக சொல்லிக் கொள்வது ஒன்றிருக்கிறது. ஏராளமான அரிசன மக்களுக்கு, குடிசை வாழ் மக்களுக்கு மின் ஒளி வழங்கும் திட்டம் பற்றியது. இந்த ஆண்டு பார்க்கிறபோது அதில் 99·5 சதவீத அளவுக்கு மின் இணைப்புக் கொடுத்துவிட்டோம் என்று சொல்வது உண்மையிலே இந்த மாநிலத்திலே ஆட்சியிலே இருந்த எல்லோரும் பெருமைபடக்கூடிய காரியம் ஆகும். நண்பர் ஆறுமுகம் அவர்கள் என்னவோ சொல்லி தலையசைக்கிறார்— நான் அவருக்கு கூறிக்கொள்கிறேன், நீங்கள் மட்டுமே அனைத்தையும் கொடுத்துவிடவில்லை. எங்கள் ஆட்சிக் காலத்திலும் பெருவாரியாக கொடுக்கப்பட்டிருக்கிறது என்று. நேற்றையதினம் கூட நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். 40 சதவீத அளவுக்குதான் விளக்குகள் எரிகின்றன என்று. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் ஏதோ இட்டுக்கட்டிச் சொல்வதாக நினைக்கவேண்டாம். உண்மையிலேயே, கிராமப் பகுதிகளிலே 10 சதவீத அளவுக்குக்கூட விளக்குகள் எரிவதில்லை. இது உண்மையான நிலைமை. அமைச்சர் வேண்டுமானால் அங்கு வந்து பார்க்கலாம். நாங்கள்கூட மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலே அதைச் சொல்லியிருக்கிறோம். குண்டு பல்புகளைப் போடுகிறார்கள். அவைகள் சரியாக எரிவதில்லை என்று பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஆனால் இன்றைய தினம் விளக்குகள் எரியாமல் கிராமங்கள் எல்லாம் இருட்டிலே தான் மூழ்கியிருக்கின்றன என்று சொன்னால் அதிலே மிகையே இல்லை.

ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் திருநாளில் பல்வேறு விதமான கொண்டாட்டங்களை கிராமங்களில் கொண்டாடுவார்கள். ஆனால் இந்த ஆண்டு எதுவுமே இல்லை. பொங்கல் திருநாளன்று உழவர்களுக்கு மிகவும் முக்கியமான நாளன்று 4 நாட்களாக என்னுடைய கலசப்பாக்கம் தொகுதியிலே மின்சாரமே இல்லை. சாதாரண ஜனங்கள் அந்த நாளில் மாட்டு வண்டிக் கட்டிக் கொண்டு போய், அருகிலே இருக்கும் டென்ட் கொட்டகையில் நடிகர் திலகம் நடித்த படத்தையோ, மக்கள் திலகம் நடித்த படத்தையோ பார்ப்பார்கள். ஆனால் இந்த வருடம் அதுகூட இல்லை. எந்தப்படமுமே பார்க்க முடியாமல் கரண்ட் கட். டிக்கெட் வாங்கிய மக்கள் வெகுநேரம் உட்கார்ந்து பார்த்துவிட்டு திரும்பி வந்தார்கள். அப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதை கவனிக்க வேண்டும். குண்டு விளக்குகளை எடுத்துவிட்டு, குழல் விளக்குகளைப் போடவேண்டும். உள்ளாட்சியில் மின்சார கட்டணத்தைக் கட்டவில்லை என்றால், உள்ளாட்சித் துறை அமைச்சர் மூலமாக உத்தரவு போட செய்து, அந்த பாக்கிகளை உடனடியாக கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அங்கேயுள்ள தனி அதிகாரிகள் வேறு வகைகளில் எல்லாம் பணத்தை வீணாக்குகிறார்கள். ஆகவே, உடனடியாக இதனை கட்டுவதற்கு உத்தரவு போட்டு, பாக்கிகளை வசூலித்து



உடனுக்குடன் அந்தக் குழல் விளக்குகளை மாற்றி அவைகள் செம்மையாக எரிவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக எனக்குத் தெரிந்த வகையில், எண்ணூர் அனல் மின்நிலையமானாலும் சரி, பேசின் பிரிட்ஜிலுள்ள அனல் மின் நிலையமானாலும் சரி, தூத்துக்குடியிலுள்ள நிலையமானாலும் சரி, அதிகமாக மின் தேவை இருக்கும்போதுதான் பழுதடைகின்றது. மழை வரும்போது விவசாயம் செய்ய வேண்டும் என்றால், ஒரு விவசாயி தேவையானதை எல்லாம் முன்கூட்டியே வைத்திருக்க வேண்டும், ஏர், நிலம், கலப்பை, மாடுகள், எல்லாம் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். அதுபோலத்தான் தேவை அதிகமாக இருக்கும் காலங்களை யூகித்து, அதற்கு முன்னேற்பாடாக அந்த நிலையங்களை பழுது பார்த்து நல்ல முறையில் வைத்திருக்க வேண்டும். இனி மேலாவது அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்னொன்று, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நெய்வேலியிலே இரண்டாவது பிரிவாக தொடங்கவிருக்கிற நிலையத்திலும், திருநெல்வேலியிலே ஏற்படுத்தக்கூடிய நிலையத்திலிருந்தும் கிடைக்கக் கூடிய மின்சாரம் முழுவதும், பற்றாக்குறை மாநிலமாக இருப்பதால், முழுவதையும் நாம் உபயோகிக்கும் வகையில், மத்திய அரசிடமிருந்து மாநில அரசு அனுமதி கேட்கப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அது சரியான முறை. நமது மாநிலம் பற்றாக்குறை மாநிலமாக இருப்பதால், அந்த நிலையங்களில் உற்பத்தியாகிற எல்லா மின்சாரத்தையும் நமக்கே தந்தாக வேண்டும். அப்படி தந்தால்தான் எதிர் காலத்திலாவது நமது பற்றாக்குறையை போக்குகின்ற முறையிலே செயல்படமுடியும். அந்த வகையிலே அந்த மின்சாரம் முழுவதையும் பெறுவதற்கு, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, மின்சார அமைச்சர் அவர்கள் இன்னொன்றைச் சொன்னார்கள், மின்சார பில்கள் சரியாக கட்டப்படுவதில்லை என்று சுட்டிக்காட்டினார்கள். அநேகமாக விவசாயிகளாக இருக்கிற உறுப்பினர்கள் அனைவரும் சென்று மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களை கேட்டோம். எந்தெந்தப்பகுதிகளுக்கு மின்சாரம் வரவில்லையோ அங்கேயெல்லாம் கொடுக்க வேண்டும் என்று கேட்ட போது, நீங்கள் மின்சாரபில்லை ஒழுங்காக கட்டுகிறீர்களா என்று கேட்டார்கள். அது உண்மைதான். அலுவலகத்தில் சென்று கேட்டாலும் முதலில் இதைத்தான் கேட்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், என் பெயரிலே பம்பு செட்டுகள் இருக்கின்றன. நான் ஒழுங்காக கட்டி வருகிறேன். எனக்குத்

தெரிந்து என்னிடம் வந்து கேட்பவர்களுக்கும் சொல்வேன். வேறு எந்தப் பிரச்னை இருந்தாலும் மின்சார பில்லை கட்டி விடுங்கள் என்று சொல்லியிருக்கிறோம். எங்களுக்குத் தெரிந்தவர்களுக்கெல்லாம் அதைச் சொல்கிறோம். ஆனால் அந்த வகையில் நிறைய பாக்கியிருக்கிறது என்று புள்ளி விவரம் கூட அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அது உண்மைதான். ஆனால் நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், அந்த பாக்கிகளைக் கூட தவணை முறையில் வசூலித்தால் நலமாக இருக்கும் என்று.

(மாலை 5.20)

காரணம், நாம் ஒரேடியாக வசூலிக்க வேண்டுமென்று சொன்னால் நிச்சயமாக அவர்களால் கட்டமுடியாது இப்போது. எங்கள் பகுதியில் ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. பில்லை யாரும் வாங்க மறுக்கிறார்கள். அந்த அலுவலகத்திற்கு ஆளை அனுப்பியபோது நாங்களே வாங்கிக் கொள்கிறோம் என்று சொல்லி என் பம்ப் செட்டிற்கான பில்லைக் கூட திருப்பி அனுப்பி விட்டார்கள். இப்போது அட்டைப் பட்டியல் முறையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதுபற்றி சில தொழிற்சங்கங்களிடம் நான் கேட்டேன் என்ன கருத்து வேறுபாடு என்று. அதில் அவர்களுக்குள்ள சந்தேகம் என்னவென்றால் வேலைப் பளு அதிகமாக ஆகிவிடுமோ என்பதாகும். அதை என்னிடம் சொன்னார்கள். அதேபோன்று பதவி உயர்வு பாதிக்கப்படுமோ என்று ஒரு சிலர் ஐயப்படுவதாகச் சொன்னார்கள். மேலும் எல்லாத் தொழிற்சங்கங்களையும் சந்திக்கவில்லையென்று கேள்விப்பட்டேன். முறைப்படி அவர்களைக் கூப்பிட்டுப் பேசவில்லை என்று என்னிடம் சொன்னார்கள். இப்போது கூட காலம் கடந்துவிடவில்லை. ஆகவே எல்லோரையும் அழைத்துப் பேசி, சுமுகமான முறையில் பேசி இந்தத் திட்டத்திற்கு ஒரு ஏற்பாடு செய்யலாம்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் குறிப்பாக, திருவண்ணாமலையில் மூன்று நான்கு ஆண்டுகளாக மின் தட்டுப்பாடு அதிகமாக இருக்கிறது. எங்கேயாவது மின் தட்டுப்பாடு வரப் போகிறது என்றால் அதன் அறிகுறி திருவண்ணாமலையில் தெரியும். திருவண்ணாமலையில் மின்சாரம் இல்லை என்று சொன்னால் ஒரு நான்கு நாட்கள் கழிந்த பிறகு சேலத்தில் இருக்காது, பின்னர் ஈரோட்டில் இருக்காது. வட ஆற்காடு மாவட்டம் மின்சாரத்தைப் பொறுத்து மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்களைக் கேட்கும் போது எட்டுமணி நேரம் மின்சாரம் வருவதாக அதிகாரிகள் கூறுகிறார்களே, நீங்கள் என்ன இப்படி சொல்கிறீர்கள் என்று கேட்பார்கள்.





எனது தொகுதியில் ஒரு துணை மின் நிலையம் ஆரம்பித்து விட்டார்கள். ஆதமங்கலத்தில் துணை மின் நிலையம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றித்தர நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்,

என் தொகுதியில் ஜவ்வாது மலைப்பகுதி இருக்கிறது. என் தொகுதியிலும் வருகிறது. அந்த மலைப்பகுதிகளுக்கு நான் போகும்போது மின் இணைப்பு விவசாயத்திற்கு தருவதில்லை என்று புகார் சொல்கிறார்கள். விளக்குகள் எல்லாம் போடப் பட்டிருக்கின்றன. கிணற்றில் தண்ணீர் இருக்கிறது. நல்ல நெல் போன்ற பயிர்கள் விளைவிக்கலாம். நீண்ட நாட்களாக அந்த மலைவாழ் மக்களின் கோரிக்கை நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அந்த மலைப்பகுதியில் வாழ்கிற மலைவாழ் மக்கள் எல்லாத் துறைகளிலும் மிகவும் பாதிக்கப்பட்ட மக்களாவார்கள். ஆகவே அவர்களை கைத்தூக்கி விடவேண்டும். மாநில அரசும், மத்திய அரசும் ஏராளமாக பணம் செலவு செய்தும் கூட ஜவ்வாது மலையில் உள்ளவர்களுக்கு விவசாயம் செய்ய பம்ப் செட்களுக்கு மின்சாரம் கிடைக்காத நிலை இருக்கிறது. விளக்குகளுக்கு தந்திருக்கிறார்கள். அவர்கள் டீசல் என்ஜின்கள் கூட வாங்கி வைத்திருக்கிறார்கள். ஆனால் எண்ணெய் கூட கிடைக்கவில்லை. ஆகவே அங்குள்ள விவசாயிகளுக்கு பம்ப் செட்களுக்கு மின்சாரம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மங்கலம் கிராமத்தில் ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கு தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும்.

திருவண்ணாமலை மின் திட்டம் தமிழ்நாட்டிலே கடைசியாக ஆரம்பிக்கப்பட்ட மின் திட்டமாகும். அந்தத்திட்டத்தில் செயல் பொறியாளர் கூட இப்போதுதான் ஒருவர் தொடர்ந்து இருக்கிறார். நான்கு மாதங்களுக்கு ஒரு முறை இப்படி பொறியாளரை மாற்றுவதால் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆகவே இந்நிலையைப் போக்குவதற்கு நல்லதொரு செயல் பொறியாளரை இரண்டு மூன்று ஆண்டுகளாவது அங்கே தொடர்ந்து இருந்து பணியாற்றக்கூடிய முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

காந்தி நகர் பகுதிக்குச் சென்றால் ஒரு தெருவில் எல்லோரும் சூப்பரிண்டிங் என்ஜினியர் என்று போர்ட் இருக்கும் புதிதாக ஒருவர் அங்கே சென்றால் எந்த வீட்டுக்குச் செல்வது என்பதைக் கண்டுபிடிக்க முடியாத நிலை இருக்கிறது.

மின் திட்டத்திற்கு தேவையான நல்லதொரு கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டும். நான் ஒன்றை மட்டும் கூறி முடித்துக் கொள்கிறேன்.

மின் உற்பத்தி செய்ய தனிப்பட்டவர்களுக்குக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். நாம் எல்லாம் அண்ணா வழி வந்தவர்கள். 1967-ல் ஆட்சிக்கு வந்தபோது அப்போது மின் விநியோகம் தனிப்பட்டவர்களிடம் இருந்ததை அரசாங்கம் எடுத்துக்கொண்டது. அப்படியிருக்க மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கூட மேலவையில் பேசியதாக பத்திரிக்கைகளில் பார்த்தேன். தனிப்பட்டவர்களிடம் கொடுத்தால் நூறு கோடி ரூபாய் மிச்சமாகும். அதைக் கொண்டு ஏழை எளியவர்களுக்கு அதிகமாகச் செலவழிக்கலாம் என்று பேசியிருக்கிறார்கள். கொள்கை அடிப்படையில தி. மு. கழ விற்கும் அ.தி.மு.க.விற்கும் இதில் வேறுபாடு இருப்பதாக நான் நினைக்கவில்லை. அன்று அண்ணா அவர்கள் சொன்னார்கள், தமிழ்நாட்டில் தி.மு.க. உண்மையான கம்யூனிஸ்ட்கள் என்று: அப்படியிருக்கிறபோது நாம் இன்றையதினம் தனிப்பட்டவர்களுக்கு இதைக் கொடுப்பதில் நியாயமில்லை. நஷ்டம் வரலாம். இப்படி இதில் இன்றைய தினம் போனால் நாளை டிரான்ஸ்போர்டில் நஷ்டம், மற்ற பொதுத் துறைகளில் நஷ்டம் என்று தனிப்பட்டவர்களுக்கு போகக்கூடிய விதத்தில் கொள்கைக்கு விரோதமான காரியங்கள் நடக்கும். ஆகவே அண்ணா வழி வந்த நாம் தனிப்பட்டவர்களுக்கு விடாமல் அரசு பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறி எனக்கு இந்த வாய்ப்பை நல்கிய துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

திரு. ந. குலசேகர பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1981–82 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீதும், 1980-81 ஆம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கையின் மீதும் வரவேற்று பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூற கடமைப் பட்டிருக்கிறேன்.

கடந்த ஆண்டு இதே வாரியத்தின் மீது நிதி நிலை அறிக்கையின் மீது நடைபெற்ற விவாதங்களுக்கு உறுப்பினர் தெரிவித்த கருத்துக்களும், அதற்கு வாரியம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளைப் பற்றியும் விளக்க அறிக்கை நேற்று உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அது நிச்சயமாக நன்றியறிதலுக்கும், பாராட்டுதலுக்கும் உரிய ஒரு செயலாகும். இதே போல், மற்றத் துறைகளிலும் கூட நிதிநிலை அறிக்கையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் என்ன ஆயிற்று? அதுபற்றி அந்த துறை என்ன நடவடிக்கை எடுத்தது? என்பது பற்றி இது போன்ற விளக்கக் குறிப்புகள் தரவேண்டுமென்று மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



நம்முடைய தமிழ்நாடு மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில் ஒரு பற்றாக்குறை மாநிலம் என்பது, மிகவும் தெளிவாகத் தெரிந்த ஒன்று. அந்தப் பற்றாகுறை மின்சாரத்தை வைத்துக் கொண்டு, மிகவும் சீராக விநியோகிப்பதிலே நம்முடைய தமிழ்நாடு மின்சார வாரியம், மாண்புமிகு மின்சார துறை அமைச்சர் அவர்களும் மிகவும் திறமையாக செயல் பட்டனர்; அதற்கு இந்த நேரத்தில் அவர்களைப் பாராட்ட நாம் நிச்சயமாகக் கடமைப்பட்டிருக்கிறோம். ஏனென்றால், தட்டுப்பாடுகள், மின் வெட்டுக்கள் வருமென்று எதிர்பார்த்த நேரத்திலே கூட, அவைகளை மிகவும் திறமையாக இன்றைக்கு தமிழ்நாடு மின்வாரியம் சமாளித்து வருவதை தமிழகம் நன்கு உணரும். சிறிய தொழிற்சாலைகள் நீண்ட நாட்கள் கோரிக்கையான குறைந்த அழுத்த மின்சாரத்தை பயன்படுத்தும் தொழிற்சாலைகள் மீது விதிக்கப்பட்டிருந்த உச்ச நேர கட்டுப்பாடுகளை நீக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருந்தது. தமிழ்நாடு அரசும், மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களும் 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் அந்த உச்ச நேர கட்டுப்பாடுகளை அறவே தளர்த்தியிருக்கிறார்கள்; நீக்கியிருக்கிறார்கள். இதனால், சிறு தொழிற்சாலைகள் 24 மணி நேரமும் இன்றைக்கு இயங்குவதன் மூலம். சிறு தொழில்கள் உற்பத்தி பெருகியிருக்கிறது என்பதை நாம் நிச்சயமாகப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். எண்ணூர், பேசின் பிரிட்ஜ் நிலையங்கள் அபிவிருத்தி செய்வதற்கும், கொதிகலன், டர்பைன், குளிர் நீர் அமைப்பு ஆகியவைகளில் திட்ட காலத்திற்குள் மாற்றங்கள் ஏற்படுத்த 198 —82, 1982—83. ஆண்டு திட்டங்களில் ரூ. 25 கோடி செலவிட திட்டமிடப் பட்டுள்ளது பாராட்டுதலுக்குரிய ஒரு செயலாகும். தமிழ்நாட்டினுடைய பற்றாக் குறையைப் போக்குவதற்கு இப்படிப்பட்ட முயற்சிகள் மேற் கொண்டிருப்பதை நாம் நிச்சயமாக பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். அதே திட்டங்களுக்கு செக்கோஸ்லொவேகிய வின் பொறியாளர்களின் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி கொள்வதற்கும் இந்தத் திட்டத்தை மேம்படுத்துவதற்கும் அரசு முன்வந்திருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த பிரச்சினையின் எதிர் கட்சிகள் அனைத்துமே தங்கள் ஒத்துழைப்பைத் தரவேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே வைக்க முற்படுகிறேன்.

தற்போது நெய்வேலியில் இரண்டாவதாக நிர்மாணிக்கப் பட்டு வரும் மின் நிலையத்தில் உற்பத்தியாகும் 630 மெகா வாட் மின்சாரத்தில் தமிழகத்திற்கு 176 மெகா வாட் அளவுதான் பெறமுடியும் என்பதைப் பார்க்கின்ற போது, அது நிச்சயமாக வருந்ததக்கது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட, அவர்களுடைய உரையிலே சொல்லியிருக்கிறார்கள். இது நம்முடைய எதிர்காலத்தின் தேவைக்கு முற்றிலும் முரணான நிலையை ஏற்படுத்தியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நெய்வேலியில் முதற் கட்ட மின் நிலையத்தில் உற்பத்தியாகும் மொத்த 600 மெகாவாட்

மின்சாரத்தையும் நாம் பயன்படுத்துவதைப் போல, இதையும் நாம் பெறுவதற்கு வழிவகைகளை நிச்சயமாக செய்ய வேண்டும். நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் தரவேண்டிய ராயல்டியைக் கூட நாம் இன்றைக்கு வேண்டாம் என்று சொல்லியிருக்கிறோம். இதை மத்திய அரசிடம் போராடிப் பெறுவதற்கு இங்கிருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்பு தர வேண்டும் என்பது மட்டுமல்ல. தமிழக சட்டமன்றத்திலே நெய்வேலியில் இரண்டாவதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் மின் நிலையத்தில் உற்பத்தியாகும் 630 மெக வாட் எங்களுக்குத் தந்தாக வேண்டும் என்று ஏகமனதாக தீர்மானம் போட்டு மத்திய அரசுக்கு அனுப்பினால்கூட, பயனுள்ளதாக இருக்கும் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(மாலை 5.30)

மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் குறிப்பிட்டார்கள். தமிழகத்திலே 99.15சதவீதம் கிராமங்களுக்கு மின் இணைப்பு இந்த அரசு கொடுத்திருப்பதில் அதற்கு முன்னால் நாங்களும் இருக்கிறோம் என்றவகையில் அவர்களும் சேர்ந்தாலும் கூட, இந்த அளவிற்குத் திறமையாக உருவாக்கி வருவதன் காரணமாக, தற்போது தமிழகத்தில் மொத்தம் 63,034 கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும் மின் வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. இந்திய துணைக் கண்டத்திலே தமிழகம் மட்டும் தான் மின்சாரத்துறையில் முன்மாதிரியான நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. என்பதை நாம் தைரியமாகச் சொல்லி பெருமைப் பட்டுக் கொள்ளலாம் என்று நம்புகிறேன். மீதம் இருக்கக்கூடிய 140 கிராமங்களிலும். 384 சிற்றூர்களிலும் மிக விரைவிலே மின்சார இணைப்பு தந்து, தமிழகத்திலே மின்சாரமே இல்லாத இடமே இல்லை என்ற நிலையை மிக விரைவாக தமிழ்நாடு அரசு ஏற்படுத்தும் என்று நம்புகிறேன்.

1981-லே ஆதி திராவிடர்கள் குடியிருப்புகளுக்கு 25,714 வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருப்பது நிச்சயமாக ஒரு சரித்திர சாதனையாக இருக்கிறது என்பதில் எள்ளளவும் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்கமுடியாது. தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் முதல் கட்டத்தில் 69 ஒன்றியங்களிலும், இரண்டாவது கட்டத்தில் 150 ஒன்றியங்களிலும் குடிசைகளுக்கு மின்வாரியம் இணைப்பு கொடுத்திருப்பது தமிழகத்தில் மட்டுமே செய்திருக்கக்கூடிய போற்றுதலுக்குரிய ஒரு திட்டமாகும். இந்தத் திட்டத்தின் அடிப்படையில் முதற்கட்டமாக 77,871 குடிசைகளுக்கும், இரண்டாவது கட்டத்திலே 1.34 லட்சம் குடிசைகளுக்கும் மின் இணைப்பு வழங்கியிருப்பது இந்தியாவிலேயே ஒரு முன்மாதிரியான காரியம்: இதை தமிழ்நாடு மின் வாரியம் செய்திருப்பது நிச்சயமாக பாராட்டுவதற்குரிய செயலாகும். இந்தத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 1.357 மல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கும், 1,007 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கும் இரண்டாவது கட்டமாகவும், ஆக மொத்தம் 2,364 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு மின்



இணைப்பு வழங்கியிருப்பது நிச்சயமாக பாராட்டக்கூடிய செயலாகும் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட குறிப்பிட்டார்கள். விவசாயிகளுக்கு மின் கட்டணத்தை ஏற்றக்கூடாது என்று. அதேநேரத்தில் மின் வாரியத்திற்கு ஏற்பட்டிருக்ககூடிய இழப்பு 125 கோடி ரூபாயாக இருக்கிறது; அது பெருகிக் கொண்டே போகிறது. இதைச் சரிகட்ட வேண்டுமென்று சொல்லும் போது, மின்வாரியத்திற்கு வர வேண்டிய நிலுவைகள் மட்டும் 55.40 கோடியாக இருக்கிறது அதிலே விவசாயிகளிடமிருந்து வரவேண்டிய அளவு மட்டும் 26.19 கோடியாக இருக்கிறது- மின் வாரியத்திற்கு வர வேண்டிய நிலுவையிலே பாதி விவசாயிகளிடத்திலே இன்றைக்கு வசூல் செய்ய முடியாத நிலையில் இருக்கிறது. இங்கே இருக்கக்கூடிய எல்லாக் கட்சிகளும் ஒட்டுமொத்தமாக மின் பாக்கியை யாரும் வைத்துக் கொள்ளக் கூடாது: அது விவசாயியாக இருந்தாலும் சரி அல்லது தொழில் அதிபர்களாக இருந்தாலும் சரி, மின்வாரியத்திற்கு அந்த பாக்கியைச் செலுத்த வேண்டுமென்ற ஒரு அணுகுமுறை இருந்தால், நிச்சயமாக மின் வாரியம் ஒளிமயமான எதிர்காலத்திற்கு செல்ல நல்ல வாய்ப்பிருக்கிறது. அதே நேரத்தில், மின் கட்டணத்தை பொறுத்தவரையில் இந்தியத் துணைக் கண்டத்திலே, தமிழகத்தில் மட்டும் விவசாயத்திற்கும், மற்றும் உள்ள தொழில்களுக்கும் குறைந்த கட்டணத்திலே, மின்சாரம் வழங்கப்படுகிறது. வேறு எந்த மாநிலத்திலும் இந்தக் குறைவான கட்டணம் இல்லை என்று தைரியத்தோடும், துணிவோடும் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில், வட ஆற்காடு மாவட்டத்தில் சிறு விவசாயிகளுக்கு மின் இணைப்புகளை வழங்குவதற்கு, பாலாறு படுகைச் சான்றிதழ் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த சான்றிதழ் நிச்சயமாகத் தேவையில்லை. அதை ரத்து செய்ய வேண்டுமென்று நான் கருதுகிறேன். ஏனென்றால் மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் குறிப்பிட்டதை போல, அவருடைய தொகுதியும் என்னுடைய தொகுதியும் வடஆற்காடு மாவட்டத்திலேயே இருப்பதால் கூறுகிறேன், இந்த பாலாறு படுகை சான்றிதழ் பெற வேண்டுமென்று கூறுவது அங்கே இருக்கின்ற விவசாயிகளுக்கு பெரும் பாதகமாக இருக்கின்ற காரணத்தால் இதைப் பற்றி அரசு மறுபரிசீலனை செய்து இந்த பாலாறு படுகைச் சான்றிதழ் கேட்பதை நிறுத்தவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டு கொள்ள ஆசைப்படுகிறேன்.

வாணியம்பாடி தொகுதி, தோல் பதனிடு தொழிற்சாலைகள் மிகவும் அதிகமாக இருக்கின்றன. ஏறக்குறைய 200 கோடி ரூபாய் அளவிற்கு அந்நிய செலவாணி ஈட்டக்கூடிய அளவிற்கு அங்கே தோல் தொழில் மிகவும் பெருகி இருக்கின்றது.

அது மட்டும் அல்லாமல் 50 மைல் இடைவெளியில் 3 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. தோல்பதனிடும் தொழிற்சாலைக்கு துணையாக பொறியல் தொழிற்சாலைகள், காலணிகள் மற்றும் தோல்பொருள் தொழிற்சாலைகள் இப்படி ஏராளமான தொழிற்சாலைகள் வாணியம்பாடி, ஆம்பூர் இடையிலே இருக்கக் கூடிய 10 மைல் தூரத்திலே அந்த தொழிற்சாலைக்கு. 'கன்டினியுவஸ் பிராஸஸ்' என்று சொல்வார்களே, அதைப் போன்று தொடர்ந்து 24 மணி நேரமும் மின்சாரம் தேவைப் படுகிறது. ஆகவே அந்தத் தொழில்கள் நசிந்து விடாமல் இருப்பதற்கும் அவைகளுக்குத் தேவையான மின்சாரம் தட்டுப்பாடின்றிக் கிடைப்பதற்கும், அந்தப் பகுதியிலே ஒரு அனல் மின்சார நிலையத்தை அரசு நிறைவேற்ற முன் வரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தொழில் அதிபர்களுக்கு இன்றைக்கு, ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் மின்சாரம் 24 மணிநேரமும் தேவைப்படுகின்ற காரணத்தால் ஜெனரேட்டர் வைத்து இயக்கக்கூடிய நிலைமை இருக்கின்றது. அந்த ஜெனரேட்டர்களுக்கு அவர்கள் மோட்டார் களை இணைத்து வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் 130 கிலோ வாட் என்ற அளவில் மின்சார மோட்டார் வைத்துக் கொள்ள அனுமதியளித்திருக்கிறார்கள். ஆனால் மின்சாரம் உபயோகித்த அளவினைக் கணக்கிட்டு. அதிகாரிகள் தொழிலதிபர்களுக்குத் தொல்லைகள் கொடுத்து வருகிறார்கள். இவ்வாறு தொழிலதிபர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் பல்வேறு சிரமங்களை இந்த நேரத்தில் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மின்சாரத்தை தொழில் அதிபர்கள் திருடுகிறார்கள் என்றால் அதை விடக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்தாகும், அத்தகையவாகள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும். அதிலே மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆனால், சில நியாயமான நேர்மையான காரணங்களாக இருந்தால் கூட அவர்கள் சட்டத்தில் இருந்து தப்பிக்க முடியாத ஒரு அவலமான நிலை இருப்பதை மறுபரிசீலனை செய்து தொழில்துறைக்கு அரசு உதவுவதற்கு முன்வரவேண்டுமென்று இந்த நோத்திலே கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஒக்னேக்கல் மின் திட்டத்தை கடந்த 10 ஆண்டுகளாக செயல்படுத்த முடியாமல் இருக்கிறது. ஒக்னேக்கல் மின்திட்டத்தை தமிழகமும், கர்நாடகமும் இணைந்து செயல்படுத்த முடிவெடுத்து தற்போது திடீரென்று கர்நாடக அரசு மேகதோடு திட்டத்தை செயல்படுத்த இருப்பதாகச் சொல்லப்படுகிறது. மின் பற்றாக்குறை உள்ள இரண்டு மாநிலங்களும் இணைந்து செயல்பட்டால் பலன் அடையும், பயன்பெறும். ஆனால் தனித்து மேகத்தோடு திட்டம் செயல்பட்டால் தமிழக திட்டம் பாதிக்



படும். ஆகவே மத்திய அரசு இதில் தலையிட்டு ஒகேனக்கல் திட்டம் செயல்படுத்த துணை நின்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு எனக்கு பேச வாய்பளித்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். வணக்கம்.

(பிற்பகல் 5-40)

திரு. இல. பலராமன்: துணைத் தலைவர் அவர்களே, மின்வாரிய நிதிநிலை அறிக்கைப்பற்றி குறுகலான நேரத்திலே மின் துறை அமைச்சர் அவர்கள் விவாதிப்பதற்கான ஒரு சூழநிலையை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். இருந்தாலும் அவருக்கு நான் நன்றியைத தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே எல்லா உறுப்பினர்களும் பங்கு எடுத்துக்கொண்டு ஒரு வாரமாவது எடுத்திருந்தால் நலமாக இருந்திருக்கும். அதற்காக என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டு அவசரம் அவசரமாக ஏதோ முடித்துவிட வேண்டுமென்று ஒரு நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அமைச்சர் அவர்கள் எந்தத் துறையை ஏற்றுக் கொண்டாலும் அவர்கள் ஒரு நல்ல நிர்வாகி என்பதை உணர்கிறோம். காரணம், ஏதோ தூர இருந்து பார்த்து சொல்வதல்ல, அவர்கள் ஒரு பொறியாளராக என்னுடைய பகுதியிலே இருந்து பணியாற்றியிருக்கிறார்கள, அவர்களுடைய பணியைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

இன்றைக்கு நிர்வாகம் மிகப் பின்தங்கி இருப்பதற்குக் காரணம் என்ன என்பதைப் பார்க்கிறபோது மிகவும் வருத்தமாக இருக்கிறது. மின்சாரம் என்பது வளரும் சமுதாயத்தில் மிகத் தேவை என்பதை நாம் உணர்கிறோம். தேவைக்கேற்ப அரசு திட்டமிட்டு செயலாற்றித் தேவையை நிறைவேற்றுவது தான் வாரியத்தினுடைய பணியாக இருத்தல் வேண்டும். அரசு திட்டமிட்டதா அல்லது வாரியம் சரியாகச் செயலாற்றியதா என்று பார்த்தால் இல்லை என்பதை நான் குற்றச்சாட்டாகத்தான சொல்லமுடியும்.

அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அரசின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேலவையிலே ஒன்றைக் கூறியிருக்கிறார்கள். நாங்கள் மின்சார உற்பத்தியைத் தனியாருக்கு விடுவோம் என்று. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் தரப்படவேண்டும் என்றும் சாதாரண ஏழை எளிய மக்களுக்கு உறுதுணையாக அவர்கள் பயன்படுத்துகின்ற நிலையை அரசு ஏற்படுத்தவேண்டுமென்று கருதி—எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த முதன்மைப் பொறியாளராக இருந்த திரு. அப்பாத்துரை முதலியார் அவர்கள் ஒரு திட்டத்தைத் தீட்டி — மின்சாரம் வழங்கப்பட்டது.

மின்சாரம் விநியோகம் செய்த மற்ற கம்பெனிகளிலிருந்து அந்தப் பொறுப்பை எடுத்து அதை தேசியமயமாக்கி வாரியம் எடுத்துக் கொண்ட நிலை ஏற்பட்டது. ஆனால் இப்போது

[திரு. இல. பலராமன்] [1982 பிப்ரவரி 18

மின்சார உற்பத்தியை தனியாரிடம் விடவேண்டுமென்ற நிலைமை ஏன் ஏற்பட்டது? அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் கொள்கை தேசியமயமாக்கும் கொள்கையா அல்லது தனியாரிடம் விடும் கொள்கையா என்று தெரியாத நிலையைப் பார்க்கிறபோது வருந்தமாக இருக்கிறது.

ஒரு முன்னேற்ற அரசாங்கமாக, சோஷலிஸ சித்தாந்த அரசாங்கமாக எல்லாம் அரசு மயமாக இருக்கவேண்டிய நிலையை அமைச்சர் அவர்கள் உருவாக்கித்தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1980-81 ஆம் ஆண்டிலே வாரியத்திலே ஏற்பட்டிருந்த இழப்பு 117 கோடியாக இருந்தது. 1981-82 ஆம் ஆண்டிலே 125 கோடி ரூபாயை அது எட்டியிருக்கிறது. இதற்குக் காரணங்கள் என்ன என்பதை எல்லாம் அமைச்சர் அவர்கள் கூறியிருந்தாலும், அதைச் சிக்கனப்படுத்தி மேலும் நல்ல முறையிலே ஒரு நிர்வாகமாக இதை ஆக்கியிருக்க முடியும் என்பது எங்களுடைய எண்ணம். அந்த அளவுக்கு ஆக்கப்படவில்லை என்பதை மத்திய அரசு சுட்டிக் காட்டியிருக்கிறது. வாரியத்திலே அதிகமான ஊழியர்கள் இருப்பதால் நிர்வாகம் சரியாகச் செய்யாததால் வாரியத்திற்கு நட்டம் ஏற்பட்டது என்றுகூட மைய அரசு சுட்டிக்காட்டி இருப்பதை நீங்கள் ஞாபகத்திலே எடுத்துக்கொள்ளவில்லை.

இந்த அறிக்கையிலே ஒரு பட்டியலைத் தந்திருக்கிறார்கள். அதிலே 12951 இடங்கள் காலியாக இருப்பதாக தெரிவித்திருக்கிறார்கள். முதல் நிலையிலே 400 நபர்கள் பணியாற்றுகிறார்கள், நியமிக்க 6 இடங்களும், இரண்டாவது நிலையில் 4719 பேர்கள் பணியாற்றுகிறார்கள், நியமிக்கப்பட வேண்டிய இடங்கள் 326-ம் 3-வது நிலையில் 88448 பேர்களும் இருக்கிறார்கள், நியமிக்கப் படவேண்டியவர்கள் 11987 பேர்களும், நான்காவது நிலையில் 15704 பேர்கள் பணியாற்றுகிறார்கள், நியமிக்கப்பட வேண்டியவர்கள் 607-ம் ஆக மொத்தம் சுமார் 12951 இடங்கள் நிரப்பப் படவேண்டும் என்று கொடுத்திருக்கிறார்கள். இந்த இடங்களை நியமித்திருந்தால் வாரியத்திற்கு அதிகப்பளு ஏற்பட்டிருக்கும். இன்றைக்கு முதன்மை பொறியாளர் என்று சொல்கின்றபோது அதிகமான நபர்களை வைத்துக் கொண்டு, ஒரு அதிகாரி இடத்திலே அதிகாரிகளுக்கு மேல் வைத்திருக்கின்ற காரணத்தினால்தான் அதிகப்படியான செலவு என்று கருதுகிறேன். அதிலும் முதல் நிலை, இரண்டாம் நிலை இடங்களில் காலியிடம் என்பது குறைவு என்பதையும், ஆனால், அடித்தட்டிலே காலியிடங்கள் என்பது மிகவும் அதிகமாக இருக்கிறது என்பது நீங்கள் கொடுத்திருக்கின்ற புள்ளி விவரங்களிலேயிருந்தே தெரிய வருகிறது. இது நிர்வாக நடவடிக்கையில் நல்லதா என்ற கேள்வியைத் நான் நான் எழுப்ப விரும்புகிறேன். இது போன்ற நிலைமைகளை ஏற்படுத்தாமல் நிர்வாகச் சீர்திருத்தம் செய்வது நல்ல நிலையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1982 பிப்ரவரி 18] [திரு. இல. பலராமன்]

எதிர்காலத்தில் நல்லதொரு திட்டத்தைத் தர வேண்டுமென்று நோக்கோடு திட்டத்தைத் தீட்ட வேண்டும். ஆராய்ச்சிக்காக 100 கோடி ரூபாயை ஒதுக்குவதாக அறிக்கையில் கூறியிருக்கிறீர்கள். அந்தப் பணத்தைக் கொண்டு என்ன செய்யப் போகிறீர்கள்? அந்தப் பணத்தைக் கொண்டு மக்களின் எதிர் காலத்திற்காக நீண்ட கண்ணோட்டத்தோடு உள்ள திட்டங்களுக்குப் பயன்படுத்தக் கூடிய அளவிற்குச் செய்யப் போகிறீர்களா என்று பார்த்தால் அவ்வாறு இல்லை. அறிக்கையிலே ஏதோ கடல் அலைகளைக்கொண்டு ஆய்வு செய்கிறோம் என்ற ஒரு நிலையைக் கூறுகிறார்கள். அந்த ஆய்வு எப்பொழுது மேற்கொள்ளப்படும்? அதை விரைவாக முடித்து 10,000 மெகாவாட் மின்சார உற்பத்தி உடையதாக ஆக்குவோம் என்ற நிலைக்கு நீங்கள் அறிக்கை வைத்திருக்கிறீர்கள். இதன் மூலம் இப்பொழுதுள்ள நிலையை எப்பொழுது சரிப்படுத்த முடியும்? இந்தத் திட்டம் எப்பொழுது நிறைவேறும்? இன்றையதினத்திலிருந்து திட்டத்தைத் தீட்டி அதற்கான ஏற்பாடுகளைச் செய்தால்தான் வளரும் சமுதாயத்திற்கு நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். 100 கோடி ரூபாயை இதற்காக ஒதுக்கும்பொழுது, இதுபோன்ற ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு தீவிரப்படுத்திக்கொண்டிருக்கும் அமெரிக்க நிறுவனங்கள் போன்றவைகளைக் கொண்டு விரைவில் இவற்றைச் செய்கின்ற சூழ்நிலைகளை மாண்புமிகு அமைச்சரவர்கள் உருவாக்க வேண்டுமென்று பேரவைத் துணைத் தலைவரவர்களின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நீண்ட நெடுங்காலமாக இந்த அவையிலே பேசப்பட்டு வந்த ஒன்று ஒஹேனக்கல் திட்டம். அந்தத் திட்டம்தான் மிகவும் நேர்த்தியானது; அதிக மின் திறனைச் சிக்கனச் செலவின் மூலம் கொண்டு வர முடியும் என்ற விவரங்களெல்லாம் பேசப்பட்டன. ஆனால் இன்றைக்குக் கர்நாடகத்தில் மேகதாடு என்ற திட்டத்திற்கு ஆணை தருகிறார்கள். இதுபற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் மேலவையிலே கூறியிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். மேகதாடு திட்டத்திற்கு மத்திய அரசு தடை விதித்திருக்கிறது என்று சொன்னதாகத் தெரிகிறது. யாரால் அந்தத் தடை ஏற்பட்டது? கர்நாடக மாநிலம் நம்மிடம் வரவில்லையா? அல்லது நீங்கள் அவர்களை அணுகிய முறை சரியில்லையா என்று கேட்க வேண்டியிருக்கிறது. இதையெல்லாம் சரிப்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வர வேண்டும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

நீர் மின் திட்டங்களை விரைவிலே கொண்டு வருவதோடு கூட, அனல் மின் திட்டங்களையும் கொண்டு வர வேண்டும். ஆங்காங்கு அனல் மின் திட்டங்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிறுசிறு மின் உற்பத்தி நிலையங்களை உற்பத்தி செய்வோம் என்று கடந்த காலங்களில் சொல்லி வந்தார்கள். அது எந்த நிலையில் உள்ளது? அந்தத் திட்டங்கள்

என்னவாயின? அப்படி ஏதாவது திட்டம் இருக்கிறதா? இவைகளைப்பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் பதிலுரையில் சொல்வார்கள் என்று நான் கருதுகிறேன். அவைகளையெல்லாம் செய்து பயன்படுத்துகின்றவர்களுக்கு அதிகமான மின்சாரத்தை வழங்குவதற்கு நீங்கள் ஆளாக வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தனி நபருக்கு 157 யூனிட் என்று இருந்தது 182 யூனிட் என்று உயர்ந்திருப்பதாகச் சொல்கிறார்கள். இது 16 சதவீத உயர்வு என்று கூறுகிறார்கள். இதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இப்படிப்பட்ட நிலைமை வளரும் சமுதாயத்திற்கு மிகவும் தேவையானதாகும். ஆனால் நகர்ப்புறங்களில் அதிகமாகப் பயன்படுத்துகின்ற அளவிற்கு கிராமப்புறங்களில் பயன்படுத்த முடியவில்லை. பொதுவாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு விவசாயிகளுக்கு அதிகமான பளுவைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள்தான் அதிகமாகப் பாக்கியை வைத்திருக்கிறார்கள் என்பதைப்போல் சொல்கிறார்கள். இளிச்சவாயனாக இருக்கின்ற விவசாயிகளைக் குறை கூறும் அளவிற்கு நீங்கள் இருக்கிறீர்களே தவிர அந்த விவசாயிகளுக்கு இருக்கின்ற கடன் பளு எவ்வளவு, தொழிற்சாலைகளில் இருக்கின்ற கடன் பளு எவ்வளவு என்று பார்க்க வேண்டும்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, விவசாயிகளெல்லாம் இளிச்சவாயர்கள் என்று சொன்ன வார்த்தையை எடுத்து விடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இல. பலராமன்: துணைத் தலைவரவர்களே, விவசாயிகளுக்கு வழங்குவதால் அதிகக் கடன் ஏற்பட்டுவிடவில்லை வாரியத்திற்கு என்பதைக் கூற முடியும். இந்த பட்ஜெட்டைப் போடும்பொழுது அர்பன் பட்ஜெட், ரூரல் பட்ஜெட் என்று போட்டால் என்ன என்ற கேள்வியைக் கேட்க முடியும். இது நீண்ட நாள் கோரிக்கை என்று கூட நான் கருதுகிறேன்.

(மாலை 5.50)

அந்த அளவுக்கு கிராமப்புறங்களுக்கென ஒரு நிதிநிலை அறிக்கையை அமைச்சர் ஏற்படுத்தினால் நலமாக இருக்கும். 80% கிராமப்புறங்களை வைத்துள்ள நமது நாட்டில், கிராமப்புறங்களுக்கு மின்சாரம் வழங்க உதவியாக இருக்கும். அவர்களுக்கென வழங்கப்படும் நிதி, மத்திய அரசு தரும் நிதி, உலக வங்கியினாலே தரப்படும் கடன்கள், இவைகளை நல்லமுறையிலே பயன்படுத்தி, கிராமப்புற மக்களுக்குத் தனி நிதிநிலை அறிக்கையினை ஏன் உருவாக்கக் கூடாது? அதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சிக்க வேண்டும். அதற்கு மின்வாரியம் துணையாக இருக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.





மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: விவசாயிகளுக்கு அதைவிட வேறு கெடுதல் தேவையில்லை. ஏனென்றால், நகர்ப்புறங்களிலிருந்து, மின்சார விநியோகத்தின் மூலம், எப்பொழுதும் கூடுதல் வருவாய் வரும். நாம் இருக்கின்ற கம்பித் தொடர்களின் அளவு குறைவு. ஆனால், அங்கு பயன்படுத்தப்படுகின்ற மின்சாரத்தின் அளவு அதிகம். வருகின்ற வருமானமும் அதிகம். கிராமப்புறங்களுக்கு நீண்டதூரம் கம்பிகள் இழுக்க வேண்டியிருக்கிறது. செலவும் அதிகம். ஆனால், உபயோகிக்கின்ற மின்சாரத்தின் அளவும் குறைவு, வருமானமும் குறைவு. ஆகவே, பெரும்பாலும் கிராமப்புறங்களுக்கு மின்சாரம் எடுத்துச் செல்வதில் ஏற்படும் இழப்பை, நகர்ப்புறங்களுக்கு அளிக்கப்படும் மின்சாரம்தான் ஓரளவு சரிசெய்கின்றன. ஆகவே, இது மிக ஆபத்தான யோசனை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கிராமப்புறங்களுக்கு இதுபோன்ற நிதிநிலை அறிக்கையினைத் தனியாக வைப்போமானால், விவசாயிகளுக்குப் பாதகம் அதிகம் ஏற்படும் என்று கூறினார்கள். நான் அவ்வளவு ஆழமான அளவு பார்த்து அதைச் சொல்லவில்லை. என்றாலும், அமைச்சர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், மைய அரசு வழங்குகின்ற உதவி, கடன்கள், உலக வங்கியின் கடன்கள், இவைகளையெல்லாம் வைத்து, கிராமப்புறங்களுக்கு உபயோகிக்கும்போது, ஒட்டு மொத்தமாக ஓரளவுக்கு இலாபகரமாக இருக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

புதிய திட்டங்களையெல்லாம் நீண்ட கண்ணோட்டத்துடன் நோக்கி, அனுமதி தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். புனல் மின் திட்டத்தின் மூலம் 1,369 மெகாவாட்டும், அனல் மின் திட்டத்தின் மூலம் 540 மெகாவாட்டும், நெய்வேலி அனல் மின் நிலையத்தின் மூலம் 600 மெகாவாட்டும், ஆக மொத்தம் 2,509 மெகாவாட் நமக்கு வரவேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறார்கள். ஆனால், தேவை 1779 மெகாவாட். அதிகப்படியாக 730 மெகாவாட் இருக்குமென திட்டமிட்டிருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு இந்த அனல் மின்சார நிலையங்கள், எந்த அளவு குறியீட்டளவுடன் மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டுமென்று நாம் திட்டமிட்டோமோ, அந்த அளவு செயல்படுகின்றனவா, என்று பார்த்தால் இல்லை. அதற்கு யார் காரணம்? இந்த ஆண்டு எவ்வளவு உற்பத்தி என்று திட்டமிட்டிருந்தோமோ அந்த அளவு செயல்படாததால், நமக்குப் பற்றாக்குறை என்று கூறக்கூடிய அளவுக்குத்தான் இன்றைக்கு மின்சார வாரியம் இருக்கிறது. அதற்கு யார் பொறுப்பு? அந்த அதிகாரிகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? இவற்றிற்கெல்லாம் என்ன காரணம் என்பதை நீங்கள் சற்று யோசிக்க வேண்டும். இந்த வேலைகளைத் துரிதப்படுத்துவதற்கான சூழ்நிலைகளை வாரியம் உருவாக்க வேண்டும்.

[திரு. இல. பலராமன்] [1982 பிப்ரவரி 18

தூத்துக்குடி அனல் மின்சார நிலையப்பணிகள் இந்த ஆண்டு முடிவுற்று, முழு உற்பத்தியும் தொடங்கும் என்று கூட அமைச்சர் அவர்கள் முன்பு சொன்னார்கள். ஆனால், அந்த அளவிற்கு வேலைகள் பிடிந்திருக்கின்றனவா. உற்பத்தியாகின்றதா என்று பார்த்நால், இல்லையென்று தெரிகிறது. இதற்கு நிர்வாகச் சீர்கேடுதான் காரணமா? நிர்வாகத் திறமையில்லையா? அல்லது நிர்வாகத்தில் போதிய ஆட்கள் இல்லையா? ஆனால், இருக்கின்ற நிலையைப் பார்க்கும்போது மிகவும் வருத்தமாக இருக்கிறது. உற்பத்தியை அதிகமாக்க நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய உற்பத்தித் திறன் இலக்கை அடைவதற்கான சூழ்நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருவாக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆயிரம் மெகாவாட் பற்றாக்குறை இருக்கிறது என்று கூறுகிறார்கள். இதை எப்படி சரி செய்யப் போகிறீர்கள் என்பதுதான் கேள்விக்குறியாக இருக்கிறது.

என்னுடைய தொகுதியிலே, என்னுடைய பகுதியிலே, கடந்த டிசம்பர் மாதத்திலிருந்து, மின்சார வெட்டு எப்பொழுது வரும் என்ற அறிவிப்பு இல்லாமலேயே இன்றைக்கு வெட்டு வந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மின்சார வெட்டு என்று சொல்லாமலேயே அங்கு மின்சாரம் வெட்டப்படுகிற நிலைமை பரவலாக இருக்கிறது. ஒரு நாள் காலையில் மின்சாரம் இருக்கும். 8 மணிக்கு நின்றுவிடும். இரவு 8 மணிக்கு வரும். பிறகு நின்றுவிடும். ஒரு நாள் மாறி வரும். எப்பொழுது போகும், எப்பொழுது வரும் என்று தெரியாது. 1 மணி நேரம் வரும், 1 மணி நேரம் போகும். மின்சாரம் வரக்கூடிய நேரம், போகக்கூடிய நேரம்கூட தெரியா அளவு, தெரிவிக்க முடியாத அளவு, அங்கே நிலை இருக்கிறதென்றால், நல்லதொரு அமைச்சர், நல்லதொரு நிர்வாகி, திறமையான அமைச்சர் என்பதால் அதிகமாக குறைகூற ஆசைப்படவில்லையென்றாலும், சொல்லாமல் இருக்க முடியவில்லை.

அதை எல்லாம் சரிசெய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வடார்க்காடு மாவட்டத்திலே இன்றைக்கு இருக்கக் கூடிய நிலை 60 அயிரம் பம்ப் செட்டுகளைக் கொண்ட மாவட்டமாக இருக்கிறது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேற்றைய முன்தினம். ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது என்று எண்ணுகிறேன். ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ 30 ஆயிரம் மின் இணைப்புகள் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் எங்கள் மாவட்டத்தில் கடந்த ஆண்டு கொடுக்கப்பட்ட மின் இணைப்பு 5 ஆயிரம் ஆகும். கடந்த ஆண்டே அங்கு 60 ஆயிரம் மனுக்கள் இருந்தன. இந்த ஆண்டு அது உயர்ந்து 70 ஆயிரமாக ஆகியிருக்கும் என்று நம்புகிறேன். இதைக் கொடுப்பதற்கு எத்தனை ஐந்தாண்டு திட்டம் போடுவது என்று யூகிக்க முடியவில்லை.



[1982 பிப்ரவரி 18 [திரு. இல. பலராமன்]

நான் கூட ஒரு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன். என் காலத்திலேயே ஒரு பம்ப் செட்டு போட்டு என் மகனுக்கு வைத்து விட்டுப் போகலாம் என்றால், அது என் காலத்திலேயே வருமா என்றால் வராத நிலைதான் இருக்கிறது. அமைச்சர் கூறலாம், உங்கள் மாவட்டத்திற்குத்தான் அதிகமான இணைப்பு கொடுத்திருக்கிறோம் என்று சொல்லலாம். அதை மேலும் உயர்த்த வேண்டும் என்று கோருகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் கூறியது போன்று எங்கள் மாவட்டம்தான் அதிகமான அளவுக்கு நெல்லை உற்பத்தி செய்கின்றது. அங்கே 2½ லட்சம் கிணறுகள் இருக்கின்றன. 6,20,781 ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. தஞ்சைக்கு போட்டியிடக்கூடிய அளவுக்கு இந்த மாவட்டம் இருக்கிறது என்றால் அது இந்த மின் இணைப்புகளை வைத்துதான் என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அண்ணா தி. மு. க. அரசு சிறு விவசாயிகளுக்குப் பாதுகாப்பாக இருப்போம். ஏழை எளிய மக்களுக்குப் பாதுகாப்பாக இருப்போம், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களுக்குப் பாதுகாப்பாக இருப்போம் என்று கூறியிருக்கிறீர்கள். ஆனால் எங்கள் மாவட்டத்திலேதான் 2½ ஏக்கருக்குக் கீழே இருக்கக் கூடிய நில உடைமையாளர்களின் எண்ணிக்கை 4,65,095. அவர்கள் அனைவருக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறதா என்றால் அதுதான் இல்லை. அவர்களுடைய எண்ணிக்கை 80 சதவிகிதம் ஆகும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அவர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படுகின்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதை கூற ஆசைப்படுகிறேன்.

திரு. திருவேங்கடம் அவர்கள் கூறினார்கள். திருவண்ணாமலைக் கோட்டத்தில்தான் அதிகமான மனுக்கள் நிலுவையில் இருக்கின்றன என்று. அவர்களுக்கு மின் இணைப்புகள் வழங்கப் படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி அளித்து இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்கள். ஆகவே இணைப்புகள் கொடுக்கப்படும் என்று கூறி இருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அங்கே வேலைகளை துரிதமாக நடக்கிறதா என்று பார்த்தால், நடைபெறவில்லை. இன்னும் பல மனுக்கள் தேக்கமாக இருக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அந்தப் பகுதியிலே நடப்பதை கூறவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். 1 பிளஸ் 1 என்ற அளவில், மின் கட்டண பழைய பாக்கிகளை வசூல் செய்ய அரசு ஆணையிட்டிருக்கின்றது. அதையே கேலி செய்யக்கூடிய அளவுக்கு அங்கே இருக்கக் கூடிய

மின்துறை ஊழியர்கள் இருக்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எல்லா பணத்தையும் வசூலிக்கவேண்டும் என்று கூறி இருக்கிறீர்கள். ஆனால் அங்கே கணக்கே வைப்பது இல்லை. கட்டிய பணத்தை மீண்டும் கட்டுகின்ற நிலை இருக்கின்றது. அதற்கு நானே ஆளாகி இருக்கின்ற நிலை இருக்கின்றது. அந்த அளவுக்கு இல்லாமல் ஒழுங்காக கணக்குகளை வைத்து, முறையாக 1 பிளஸ் 1 என்ற விகிதத்தில் வசூலிக்கும் உத்தரவை பிறப்பிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இந்தப் பாலார் படுகை விதி எல்லா இடங்களிலும் இருக்கின்றது. இது ஒரு நீண்ட நாள் கோரிக்கையாகும். அங்கே மலைப் பகுதியில் இருப்பவர்கள் பாலார்படுகை விதியைத் தளர்த்த வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆகவே வாரியம், இந்த விஷயத்தில் அமைச்சருக்கு உறுதுணையாக இருந்து அந்தப் பகுதி விவசாயிகளுக்கு உதவி செய்யவேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

(மாலை 6-00)

சிறு விவசாயிகளைப் பொறுத்த வரையில் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒருவர் 5 எச். பி. மோட்டார் ஒரு கிணற்றுக்குப் போடலாம் என்று இருக்கிறது. ஆனால் ஒரு வீட்டில் இரண்டு மகன்கள் இருந்து, அவர்கள் இருவருக்கும் ஆளுக்கு 3 எச். பி. மோட்டார் போட வேண்டும் என்று எண்ணினால் அதற்கு இணைப்புத் தருகிறபோது, ஸ்பெஷல் பர்மிஷன் வேண்டும் என்று சொல்கிறார்கள். ஏனென்றால், மொத்தம் 6 எச். பி. ஆகிவிடுகிறது என்று சொல்கிறார்கள். இதை தனியாகப் பார்த்தால் ஒருவருக்கு 0.5 சதவீதம் உயர்வு இருக்கிறது. இதைத் தளர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களும், வாரியமும் நடவடிக்கைகளை எடுத்து ஆணையிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திருவண்ணாமலை கோட்டத்தில் திருவண்ணாமலை எஸ். இ. அலுவலகம் 6 கட்டிடங்களில் இருக்கிறது. அவைகள் எதுவும் சொந்தக் கட்டிடங்களில் இல்லை, அந்த எஸ். இ. அலுவலகம் அந்த மாவட்டத்தின் தென் கோடியில் இருப்பதால் வந்தவாசி, ஆரணி போன்ற பகுதியில் இருந்து வரவேண்டிய விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள், ஆகவே, அந்தக் கோட்டத்தின் மையப்பகுதியாக உள்ள போளூருக்கு அந்த மாற்றினால், செங்கம். வந்தவாசி ஆரணிப் போன்ற இடங்களில் இருந்து வருகின்ற. விவசாயிகளுக்கு உதவிகரமாக இருக்கும், திருவண்ணாமலையில் இருந்து வருவதற்கும் வசதியாக இருக்கும். ஆகவே அந்த அலுவலகத்தை போளூருக்கு மாற்றுவதற்கு அரசாங்கமும். வாரியமும் நடவடிக்கை எடுத்து, ஆணைகள் பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



நீண்ட நாளாக ஒரு குறை உள்ளது. கரும்பு கிரஷ் செய்கிறபோதோ அல்லது நெல் அடிக்கும் போதோ அதற்கென தனியாக அவர்கள் பெரிதாக மின்சாரம் எடுத்து விடுவது இல்லை. எற்கனவே அங்கேயுள்ள மின்இணைப்பிலிருந்துதான், அதை எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் அதற்குத் தனியாக பர்மிஷன் வாங்க வேண்டும். அப்படியில்லையென்றால் நடவடிக்கை எடுப்போம் என்று அதை ஒரு பெரிய காரியமாக நினைத்து அதிகாரிகள் மிரட்டுகிறார்கள். ஆகவே, அதற்கென தனி பர்மிஷன் தேவையில்லை என்கிற சலுகையை அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் பல இடங்களில் விவசாயிகள் நிலத்திற்கு அருகிலேயே ஊட்டைக் கட்டிக் கொண்டு, இருக்கிறார்கள். பம்ப் செட்டுக்குபெற்று இருக்கிற இணைப்பிலிருந்து மின்சாரம் எடுத்துக் கொண்டு இருப்பார்கள். ஆனால் அவர்கள் அந்த இடத்தில் ஒரு ஓவர் ஹெட் டாங்க் கட்டி, அதில் ஒரு குழாய் பொருத்தி இருந்தால் அதற்குத் தனியாக பர்மிஷன் வாங்க வண்டும் என்று சொல்கிறார்கள். கோவை மாவட்டத்தில் இதற்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்று அறிகிறேன். ஏன் அதை வடாற்காடு மாவட்டத்திற்கு விஸ்தரிக்கக் கூடாது என்றுக் கேட்டுக் கோள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிட்டத்தட்ட 1960 ஆண்டு அல்லது 1957-ஆம் ஆண்டுகளுக்கு முன்னால் இந்தக் கம்பிகள் போட்டு இருப்போம் என்று நினைக்கிறேன். அதனால் தான் அடிக்கடி மோட்டார்கள் தீய்ந்து விடுகின்றது. விவசாயிகள் அவர்களுடைய சொத்துக்களை விற்று இந்த மோட்டார்களை வாங்கி வைத்திருக்கும் நிலைமை இருப்பதால், இப்படி அடிக்கடி மோட்டார் தீய்ந்து போய் விடுவதால் அவர்கள் மேலும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இது நன்கு தெரியும். ஆகவே, அந்தக் கம்பிகளை மாற்றுவதற்கான செலவை விவசாயிகள் தலையில் போடாமல், அந்தக் கம்பிகளை மாற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, அதை மாற்றுவதற்கான நடவடிக்கை எடுத்து, அரசாங்கம் அந்த விவசாய மோட்டார்கள் அடிக்கடி எரிவதைத் தடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்- மேலும், வரக்கூடிய மின்சாரம் டிராப் ஆகாமல் வந்தால் மின்சார மோட்டார்கள் நல்ல முறையில் இயங்கும். ஆகவே, அதையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், இதனால் சில நேரங்களில் மீட்டர்கள் கூட எறிந்து விடுகின்றன. அதற்கும் விவசாயிகளிடமிருந்து பணம் வசூலிக்கும் நிலைமை இருக்கிறது. ஆகவே, இநதக் குறைவைப் போக்குவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்,

அதைப்பேன்று புதிய பம்பு செட்டுகள் போடுகிறார்கள். அதற்கு எஸ்டிமேட் போடும் போது 3 ஹார்ஸ் பவர் உள்ள மோட்டார் பொருத்த வேண்டுமென்றால் அதற்கு 1500 ரூபாய் ரேட் போடுகிறார்கள். இப்போது எவ்வளவோ விலைவாசி ஏறியிருக்கிறது. இருந்தாலும் பழைய ரேட்டிலேயே போடுகிறார்கள். அப்படிப் போட்டுவிட்டு, லிமிடேஷன் வரவில்லை; அதனால் லைன் போடமுடியாது என்று சொல்லிவிடுகிறார்கள், இந்த நிலை எங்கள் மாவட்டத்தில் அதிகமாக இருக்கிறது.

மாண்புகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற மாதிரி இப்போது ரெமூனரேட்டிவ் ஒன்றும் பார்க்கப்படுவதில்லை. ஆகையால் அவர்கள் எப்படி இதைச் சொல்கிறார்கள் என்று புரியவில்லை.

திரு இல. பலராமன். : எங்கள் மாவட்டத்தில் பல இடங்களில் இந்த மாதிரி சொல்லப்படுகிறது. ஒரு செக்ஷன் ஆபீசர் இதையும் கூறினார். இந்த நிலை இல்லை என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். நன்றி. அதனால் சாதாரண விவசாயிகளுக்கு நல்ல பலன் கிடைக்கும்.

மேலும் எங்கள் பகுதியிலே புதிய டிரில்லிங் சிஸ்டம் பற்றி அறிவித்திருக்கிறார்கள். அது வரவேற்கத் தக்கது. விவசாயிகளுக்கு பாதுகாப்பாக இருக்கும். ஆகையால் அதற்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தில் கரண்டு பில் சம்பந்தமாக பலர் போராட்டத்திற்கு கூட ஆளாகியிருக்கிறார்கள். இன்றைக்கு நீதிமன்றம் வரையில் போய் இருக்கிறார்கள். 4, 5 மாதங்களாக விவசாயிகளுக்கு பில் வரவில்லை. அதற்குக் காரணம் வாரியத்தின் நடைமுறை தான். வாரியமே தவறு செய்து விட்டு, ஒட்டுமொத்தமாக பணத்தைக் கட்ட வேண்டுமென்று சொன்னால் சாதாரண விவசாயிகளால் எப்படி கட்ட முடியும்? அதனால் மின் துண்டிப்பு செய்கிறார்கள். விவசாயிகளுக்கு அது பெருத்த பாதகத்தை ஏற்படுத்துகிறது. ஆகவே, அமைச்சரவர்கள் இந்தக் குறையை நிவர்த்தி செய்கின்ற வகையில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொல்கிறேன்.

தற்போது மீட்டர் ரீடிங், பில் இந்த இரண்டுக்கு ஒரு நபர் இருந்தால் போதும் என்று நீங்கள் முடிவு செய்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஒரு நபர் இருந்தால் நலமாக இருக்கும் என்று சொல்வதாகத் தெரிகிறது. ஒருவரால் இரண்டு வேலைகளையும் செய்வது கஷ்டமாக இருக்கும், மீட்டர் ரீடிங் செய்கிறவர்களே பில் வசூல் சய்யவேண்டும் என்று சொல்லும் போது கிராமங்களில்





மிகவும் கஷ்டமாக இருக்கும். அரை பர்லாங் தூரத்திற்கு ஒரு பம்ப்செட் என்று இருந்தாலும் ஒருவர் 100 பில் வசூல் செய்வது மிகவும் சிரமமானது. அதுமட்டுமல்ல, உடனே பணத்தைக் கட்ட விவசாயிகளிடம் பணம் இருக்காது. இதைப்பற்றி விரிவாக பரிசீலனை செய்து. அந்தப் பணியாளர்கள் நல்ல முறையில் பணியாற்ற தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதுமட்டுமல்லாமல் இந்த புதிய முறையினால் விவசாயிகள் பணம் கட்டாதவர்கள் என்ற நிலையை, அந்த எண்ணத்தை உருவாக்கிவிடக் கூடாது. அதிலும் குறிப்பாக வடாற்காடு மாவட்டத்தில் விவசாயிகள் தாங்கள் பயன்படுத்திய மின்சாரத்திற்கு ஒழுங்காகப் பணம் கட்டக் கூடியவர்கள்; கட்டி வருகிறார்கள். தொடர்ந்து அந்த முறையில் கட்டத் தயாராக இருக்கிறார்கள். அவர்கள் பில்லுக்கு உடனே பணம் கட்டவில்லை என்ற நிலையை ஏற்படுத்திவிடக் கூடாது. அந்த நிலைக்கு ஆளாக்காமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போளூரில் 3700 இணைப்புகள் இருக்கின்றன. அதைப்போல கணியம்பாடியிலும் இருக்கிறது. பணம் கட்ட சென்றிருந்தோம். அவர்கள் வாங்கவில்லை. 300 பில்லுக்குத்தான் பணம் வாங்குகிறார்கள். 300-க்கு மேல் வாங்க முடியாது என்று போளூரில் சொல்கிறார்கள். அந்த ஊழியர்களின் போக்கை சீர் செய்து, அவர்களை எப்படி வேலை வாங்க வேண்டுமோ அப்படி வேலை வாங்கி, ஒழுங்காக பில்லுக்கு பணத்தை வாங்க எற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவில்களுக்கு பயன்படுத்தும் மின்சாரத்திற்கு யூனிட்டுக்கு 75 பைசா கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. அது சரியல்ல. 75 பைசா என்பது மிகவும் அதிகம். வீட்டுக்குப் போடும் கட்டணம் போன்று கோவிலுக்கும் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நகர்ப்புறங்களில் இருக்கிறவர்கள் தாராளமான மின்சாரம் பெறுகிறார்கள். வீட்டிலே ஏர்கண்டிஷன் எல்லாம் செய்து கொள்கிறார்கள். 300, 400 யூனிட் என்று அவர்கள் பயன்படுத்தும் போது கிராமப்புறங்களில் இருக்கிற மக்களுக்கும் மின்சாரத்தை தட்டுப்பாடு இல்லாமல் கொடுத்து, 15 அல்லது 20 பைசா கட்டணத்தில் குறைந்தது 10 யூனிட்டாவது வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச்செய்தால் தான் ஒரு பக்கம் வசதி பெருகிக் கொண்டே போக இன்னொரு பக்கம் வசதியே இல்லாத நிலை குறையும். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

(திரு. இல. பலராமன்) [1982 பிப்ரவரி 18

(இரவு 6.10)

அடுத்து இன்றைக்கு அதிகமான அளவிலே மின் இணைப்பு வழங்கப்படாமல் இருக்கின்றது. அந்த இணைப்புகளை எல்லாம் வழங்கி நல்ல முறையிலே செயலாற்றி விவசாயத்திற்கு மின்சாரம் நல்ல முறையிலே கிடைப்பதற்கு வழிவகை செய்யவேண்டும். வளரும் சமுதாயத்திற்கு மின்சாரம் தேவை. கிராமப்புற விவசாயத்திற்திற்கும் மின்சாரம் தேவை. தமிழ்நாட்டுப் பொருளாதாரமாக இருந்தாலும் சரி, இந்தியப் பொருளாதாரமாக இருந்தாலும் சரி விவசாயப் பொருளாதாரத்தையே அடிப்படையாகக் கொண்ட இந்த நாட்டுக்கு மின்சாரம் தான் உறுதுணையாக இருக்கும் என்ற நிலைமையிலே அந்த மின்சார உற்பத்தியை நன்கு அதிகப்படுத்தி கிராமப்புறங்கள் வாழ-வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு எனக்கு இந்த அளவிற்கு பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழக மின்வாரியத்தினுடைய 1981-82-ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் மீதும் 1980-81 ஆம் ஆண்டுக்கான துணை நிதி நிலை அறிக்கையின் மீதும் ஒருசில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்புதந்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவில் இருக்கக்கூடிய அரசுப் பொதுத்துறை நிறுவனங்களில் தமிழகத்தில் உள்ள மின்வாரியம் ஒன்றுதான் இன்றையதினம் மிகப்பெரிய ஒரு வாரியமாக கருதப்படுகிறது. ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் மூலதனம் உள்ள இந்த வாரியம் கடந்த பல ஆண்டுகளில் கடுமையான சோதனைக்கு ஆளாகி இன்றையதினம் பல சாதனைக்குச் சொந்தமான நிறுவனமாக மாறி இருக்கின்றது. மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள் கூறியதைப் போன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறந்த நிர்வாகி, அப்படிப்பட்ட சிறந்த நிர்வாகியினுடைய சிறந்த திட்டங்களினால்தான் இன்றையதினம் தமிழகத்திலே மின் உற்பத்தியிலே மறுமலர்ச்சி ஏற்பட்டது என்று சொல்ல வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் நண்பர் திருவேங்கடம் அவர்கள் பேசுகின்றபோது மின் உற்பத்தியிலே இந்த ஆட்சி தன்னிறைவுப் பெறவில்லை என்று கூறினார்கள். ஆனால் அவர்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். 7½ ஆண்டுக்கால திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியிலே அவர்கள் வகுத்து நடைமுறைப்படுத்திய திட்டங்கள் எத்தனை? அதன் மூலம் எவ்வளவு மின் உற்பத்தியைப் பெருக்கினார்கள்? அதன் மூலம் இந்த நாட்டிலே பசுமைப் புரட்சியை உண்டாக்கினார்களா? விலைவாசியை கட்டுப்படுத்தினார்களா என்பதை எல்லாம் மக்கள் அறிவார்கள். ஆனால் இன்றையதினம்



1982 பிப்ரவரி 18] [திரு. சேலம் மு. ஆறுமுகம்]

கடுமையான வறட்சி ஏற்பட்டாலும் கூட விலைவாசி ஏறாததற்குக் காரணம் இந்த அரசு மின் உற்பத்தியைப் பெருக்கி விவசாயத்துறைக்கு அதிகமான மின்சாரத்தை வழங்கியதுதான்

இன்றைக்கு எண்ணூர் அனல் மின் நிலையம் 44 சதவீதம் உற்பத்தியை எட்டி இருக்கின்றது. தூத்துக்குடி அனல் மின் நிலையமும் மின் உற்பத்தியிலே 47 சதவீதம் எட்டியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் கடந்த காலத்தில் ஆட்சி செய்தவர்கள் மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு எந்தத் திட்டமும் வகுக்காதவர்கள் அவர்கள். சமயநல்லூர் அனல் மின் நிலையத்தையே விற்கத்துணிந்தவர்கள்தான் அவர்கள். அப்படிப்பட்டவர்கள் இன்றைய தினம் இந்த ஆட்சியைப் பார்த்துதன்னிறைவுப் பெறவில்லை என்று சொல்கிறார்கள்.

ஆனால் இன்றையதினம் இந்தியாவிலேயே மிகச் சிறந்த திட்டமான ஸ்பாட் பில்லிங் சிஸ்டத்தை தமிழ்நாட்டிலே ஏற்படுத்தி இருக்கிறோம். மின் கட்டணத்தை நிர்ணயிப்பதிலே இப்படிப்பட்ட புதுமையான திட்டம் இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் அமல்படுத்தப்படவில்லை. ஆகவே இது புதுமையா இல்லையா என்பதை நாமெல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டும். முன்பெல்லாம் மக்கள் 6 மாதம் ஆகியும், 8 மாதம் ஆகியும் பில் வரவில்லையோ என்று வருந்தினார்கள். அப்படிப் பட்ட கஷ்டத்தைப் போக்குவதற்காகத்தான் இந்த ஸ்பாட் பில்லிங் சிஸ்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள்.

இந்த ஸ்பாட்பில் என்ற முறையை இந்த நாட்டிலே அமுல்படுத்தக்கூடிய இந்த நேரத்திலே, ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இதுபோன்ற எத்தனை நல்ல காரியங்களை நாம் இன்றைக்கு இந்த நாட்டிலே கொண்டு வந்தாலும், அதற்கு படிகல்லாக இருக்க வேண்டியவர்கள், தடைக்கல்லாக இருந்துக் கொண்டிருக்கிற நிகழ்ச்சியை நாம் பார்க்கிறோம். மின்சார வாரியம் 100 கோடி ரூபாய்க்கு மேல் இழப்பினை ஆண்டு ஒன்றுக்கு சந்திக்க வேண்டியிருக்கிறது. ஆனால் அதை நிந்திப்பவர்கள் சிந்திக்க வேண்டும். 100 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பை எப்படி ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை சிந்திக்க வேண்டும். கடந்த காலத்தில் தேவைக்கு அதிகமான ஊழியர்களை நீங்கள் அந்த வாரியத்தில் புகுத்தியதின் விளைவாக அதிகமான நிர்வாகச் செலவு ஏற்பட்டு,அதனால் நாம் ஈடுகட்ட முடியாத, சரிகட்ட முடியாத, ஒரு நட்டத்தை எதிர்நோக்கியிருக்கிறோம். ஸ்பாட்பில் என்ற முறையை அமுல்படுத்துகிற இந்த நேரத்தில் அந்த ஊழியர்கள் விஸ்வாசமாக உழைக்க முன் வரவேண்டும். ஒத்துழைப்புக் கொடுக்க முன்வர வேண்டும். ஆனால் தடைகற்களாக இருக்கிறார்கள். இதற்கு மக்கள் தான் விடையளிக்க வேண்டும்.

திரு. சேலம். மு. ஆறுமுகம்] 1982 பிப்ரவரி 18

இதில் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஸ்பாட்பில் முறையை புகுத்தும் போது, அதே இடத்திலே ஒருவர் எவ்வளவு மின்சாரம் உபயோகப்படுத்துகிறார் என்று ஒரு அட்டையில் குறிப்பிட்டு, அதற்கான கட்டணத்தையும் குறித்துவிடுவதைப் போல,—நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சட்டமாவது வழிவகுத்தால், அல்லது விதியை திருத்தியாவது ஒரு புது முறையை வகுக்க வேண்டும் என்று இந்த ஸ்பாட் பில்லில், எவ்வளவு மின்சாரம் உபயோகப்படுத்தபட்டது என்ற அளவைக் குறிக்கக்கூடிய ஊழியர்களே, எப்படி நகராட்சியில் சொத்துவரி, தொழில் வரி, போன்றவை வசூலிக்கப்படுகிறதோ, அதேபோன்று, அவர்களே மின்சாரக் கட்டணத்தையும் அதே இடத்தில் பெற்றுக் கொண்டு, அதற்கான ரசீதுகளையும் தரவேண்டும் என்கிற முறையை வகுத்தால், மின்சார வாரியத்திற்கோ, அல்லது, அலுவலகங்களுக்கோ மக்கள் சென்று கியூவிலே நின்று அதிகமான நேரத்தை செலவிட்டு, பணத்தைக் கட்டுவதில், கால தாமதமும் தவிர்க்கப்படும், • போக்குவரத்து செலவும் மிச்சப்படும். ஆகவே இந்த முறையை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த காலத்திலே திடீர் திடீர் என்று மின்வெட்டு வந்தது. காரணம் அந்தக்காலங்களில் வேண்டியவர்களுக்குச் சலுகை அளிப்பதற்காகத்தான் அப்படி அவர்கள் அமுல் செய்தார்கள். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். மின்வெட்டு அமுலில் இருந்த காலத்தில் மால்கோ நிறுவனத்திற்கும் மின்வெட்டு அமுலில் இருந்திருக்க வேண்டும். ஆனால் அந்நிறுவனத்தினர் மின்சாரத்தை உபயோகப்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டார்கள். அதுவும் சட்டத்திற்குப் புறம்பாக, அதன் விளைவாக 8½ கோடி ரூபாய்க்கு மின்சார கட்டணம் அந்நிறுவனத்திடமிருந்து பாக்கியாக இருக்கிறது, ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் க்காண்போம் என்பவர்கள் 8½ கோடி ரூபாய் அளவிற்கு மின்சார பாக்கி வைத்திருக்கக்கூடிய அந்த மால்கோ நிறுவனத்திடம் தான் அன்று இறைவனைக்கண்டார்களா என்று கேட்க விரும்புகிறேன்.?

1975 ஆம் ஆண்டில் நிலக்கரியின் விலை என்ன? ஆயில் விலை என்ன? வாகனங்களின் கட்டண வீதம் என்ன? இன்றைக்கு 1982 ஆம் ஆண்டில் அவைகள் எல்லாம் எத்தனை மடங்கு அதிகரித்திருக்கிறது என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அன்றைக்கு 1925ஆம் ஆண்டில் நெருக்கடி நேரத்தைப் பயன்படுத்தி விவசாயத்திற்கு 12 பைசா என்று இருந்த மின்சாரக் கட்டணத்தை 14 பைசாவாக உயர்த்தினீர்கள். மாதம் ஒன்றுக்கு மீட்டருக்கு 5 ரூபாய் என்று கட்டணம் வகுத்தீர்கள். ஆனால் இன்றைக்கு



1982 பிப்ரவரி 18] [திரு. சேலம் மு. ஆறுமுகம்]

மின்சார வாரியத்தில் ஆண்டொன்றுக்கு இழப்பு 100 கோடிக்கு மேலே இருப்பதாகச் சொல்லும் நேரத்திலும் மின்சார கட்டணத்தை இந்த அரசு உயர்த்தக்கூடாது என்று சொல்கிறீர்கள் அது எப்படி பொருந்தும் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக ஆண்டு ஒன்றுக்கு 100 கோடி ரூபாய் இழப்பு இருப்பதாகச் சொல்லி, அதையே தனியார் துறையிலே தந்தால் 100 கோடி ரூபாய் லாபத்திற்கு உற்பத்தி செய்ய முடியும் என்று சொல்கிறார்கள். அதைப் பரீட்சித்துப் பார்ப்பதில் என்ன தவறு இருக்க முடியும்? இந்த அரசாங்கம் போக்குவரத்துத் துறையில் 60 சதவீதம் பேருந்துகளை நடத்திக் கொண்டு வருகையில், 30, 40, சதவீத பேருந்துகளை தனியார்தான் நடத்திக் கொண்டு வருகிறார்கள். அதை 100-க்கு 100 அப்படியே தேசிய உடைமையாக ஆக்கவில்லை. ஆகவே, அவர்கள் எப்படித்தான் நஷ்டத்தில் ஓடக்கூடிய ஒரு வாரியத்தை லாபகரமாக்க முடியும் என்று சொல்கிறார்களோ, அதை பரிட்சித்துப் பார்ப்பதில் என்ன தவறு இருக்கமுடியும் என்று எண்ணி, அதை தனியார்களிடத்தில் கொடுத்துப் பார்க்கலாம் என்று சொல்லிக் கொள்கிறேன். ஆண்டு ஒன்றுக்கு 100 கோடி ரூபாய் நஷ்டம் என்றால், அதை அவர்களால் 100 கோடி ரூபாய்க்கு லாபமாக மாற்றமுடியும் என்றால், 200 கோடி ரூபாய் அளவிற்கு அதன் மூலமாகக் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருப்பதால், அதை ஏன் ஏழை எளிய மக்களுக்கு பயன்பெறும் வகையில் வேறு திட்டங்களுக்குப் பயன்படுத்தக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்ததாக நான் சொல்ல விரும்புவது, திராவிட முன்னேற்றக்கழக ஆட்சிக் காலத்தில், மின் உற்பத்தியைப் பெருக்க அவர்கள் வழி வகுக்கவில்லை என்றாலும், மின்சார கம்பிகளை மட்டும் பல இடங்களில் போட்டுவிட்டுப் போய்விட்டார்கள். வெறும் மின்சார கம்பிகளை மட்டும் போட்டுவிட்டு போய் விட்டார்கள். இதனால் மின்சார வாரியம் கடுமையான சோதனைக்கு, பற்றாக்குறைக்கு ஆளாக நேரிட்டது. ஆனால் இன்றைக்கு படிப்படியாக மின் உற்பத்திக்கான திட்டங்களை பத்திரிகைகளிலே பார்க்கலாம்.

(இரவு 6.20)

இன்று சேலம், மேட்டூரை எடுத்துக்கொண்டால் 420 மெகா வாட்ஸ் உற்பத்தித் திறன் கொண்ட அனல் மின் நிலையம், 120 மெகா வாட்ஸ் திறன் கொண்ட புனல் மின் நிலையம் இவற்றிற்காக ஏறக்குறைய 400 கோடி ரூபாய் அளவில் திட்டமிட்டு இன்று களப் பணிகளும் துவக்கப்பட்டு விட்டன. அதேபோன்று நெய்வேலியில் 630 மெகா வாட்ஸ் உற்பத்தித் திறன் கொண்ட இரண்டாம் கட்ட நிலை உற்பத்திப் பணி

துவங்கப்பட்டுள்ளது. அதேபோன்று இன்றைக்கு தூத்துக் குடியிலும் பணிகள் முடியும் தறுவாயில் இருக்கிறது. கல்பாக்கத்தை எடுத்துக் கொண்டால் அங்கே அனல் மின் நிலையம் முடிவுறும் நிலையில் இருக்கிறது.

அடுத்து, காஸ் டர்பைன் என்று சொல்லக்கூடிய ஹைபவர் டீசல் கொண்டு 117 கோடி ரூபாய் செலவில் ஒரு மின் நிலையத்தை ஏற்படுத்த மைய அரசின் அனுமதியை இந்த அரசு கோரியிருப்பதாக அறிகிறேன். இத்திட்டத்திற்கு உடனடியாக மைய அரசின் அனுமதி பெற்று அமலாக்குவதன் மூலம் இந்த மாநிலம் 2500 மெகா வாட்ஸிலிருந்து 3000 மெகாவாட்ஸ் என்றளவில் உற்பத்தியை அதிகமாகப் பெற்று தன்னிறைவு பெற்றதொரு மாநிலமாக திகழும் என்று கருதுகிறேன். இன்னும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் மின் வெட்டு என்ற சொல்லே தமிழ்நாட்டில் இல்லை என்ற நிலைமையை நிச்சயமாக உருவாக்க முடியும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மிகக் குறைந்த அழுத்தத்தைப் பயன்படுத்தி தொழிற்சாலைகள் நடத்தக்கூடிய தொழில் அதிபர்களுக்கு உச்சபட்ச நேரங்களில் மின் கட்டுப்பாட்டை தளர்த்தவேண்டும் என்று கேட்டார்கள். அதை இந்த ஆண்டு தளர்த்தி இருப்பது வரவேற்கத்தக்கது. முன்பெல்லாம் கிராமங்களில் கழனியில் வேலை செய்யக்கூடிய பழனியிடம் கேட்டால் அவன் சொல்வான், நீ சம்சாரத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறாயா என்று கேட்டால் சம்சாரத்தை எதிர்பார்க்கவில்லை, மின்சாரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறேன் என்பான். மின்சாரம் எப்போது வரும் எப்போது போகும் என்று சொல்லமுடியாத நிலை இருந்தது, 1975-க்கு முன்பு. ஆனால் இன்றைக்கு 24 மணி நேரமும் மின் சப்ளை கிடைக்கும் நிலையில் தமிழ்நாட்டில் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அரசின் சிலபல சாதனைகளை மட்டும் வரவேற்றார்கள். இன்று தொழில் துறையிலும் விவசாயத் துறையிலும் எத்தகைய முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்ற புள்ளிவிவரங்களை அறியாமல் போய் விட்டார்கள். இன்னும் ஒன்றிரண்டு ஆண்டுகளில் 710 முதல் 730 மெகாவாட்ஸ் வரை மின் உற்பத்தி பெற்று தமிழ்நாட்டில் மின் பற்றாக்குறை என்பதே இல்லாமல் அப்படிப்பட்டதொரு புரட்சி ஏற்பட இருக்கிறது.

அடுத்து, சென்னையில் இருக்கக்கூடிய மின்சார வாரியத்தில் உள்ள தலைமைப் பொறியாளர்கள் 12 பேர்கள் இருக்கிறார்கள். அவ்விதம் தலைமைப் பொறியாளர்கள் அத்தனை பேர்களும் ஒரேயிடத்தில் இருப்பதால் மற்ற மாவட்டங்களின் உண்மை நிலைமைகளை அவர்கள் சரியாக உணர முடியாமல் போய்



விடுகிறது. அது மட்டுமல்ல. அதனால் நிர்வாகச் சிக்கல்களும் வீண் காலதாமதமும் ஏற்படுகின்றன. ஆகவே ஜெனரேஷன், டிரான்ஸ்மிஷன் என்று ஒரு மூன்று தலைமைப் பொறியாளர்களை மட்டும் சென்னையில் வைத்துக் கொண்டு தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களை இரண்டு மாவட்டங்களை ஒரு மண்டலமாக. ரீஜனலாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு தலைமைப் பொறியாளர் நியமிப்பதன் மூலம் காலதாமதம் தவிர்க்கப்பட்டு செம்மையான முறையில் மக்களுக்கு மின்சாரம் அளிக்கமுடியும் என்று கூறிக் கொள்கிறேன்.

அதோடு இன்றைக்கு, டிரெயினிங் ஆன்ட் ப்ளானிங் போர்ட் செயலாளர் வசமயில் இருக்கிறது. அது ஒரு தலைமைப் பொறியாளரிடம் இருந்தால்தான் செம்மையாக செயல்படுத்த முடியும். இன்றைக்கு பலயிடங்களில் நிர்வாக வசதிக்காக சேலம், திருச்சி போன்றயிடங்களில் அடிஷனல் டிவிஷனல் என்ஜினியர் என்று ஒரு நகரத்தை எட்டு டிவிஷன்களாகப் பிரித்திருக்கிறார்கள்.

ஆனால், அவர்களுக்கு தொலைபேசி வசதி கொடுக்கப் படவில்லை. அதனால், அவர்களுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. அது மட்டுமல்ல. ஒவ்வொரு பெருநகரத்தையும் 5, 5 கோட்டங்களாகப் பிரித்து, அந்த 5, 5 கோட்டங்களுக்கு டெலிபோன் வசதி, ஒயர்லெஸ் வசதி போன்றவைகளை ஏற்படுத்தி, 5 வேன்களைக் கொடுத்து அவைகளிலே ஒயர்லெஸ்ஸைப் பொறுத்தி, அதிலே ஏணியைப் பொறுத்தி, ஒவ்வொரு கோட்டத்திற்கும் செல்லுமாறு செய்ய வேண்டும். மக்கள் தங்களுடைய இல்லங்களில் பியூஸ் போய்விட்டால், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டவுடன், அவர்கள் அந்தக் கோட்டத்திலே சுற்றிக் கொண்டிருக்கின்ற வேனிலே உள்ள ஒயர்லெஸ் மூலம் தகவலைத் தெரிந்து உடனடியாக மக்களுடைய இன்னல்களை மின்னல் வேகத்திலே போக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள இந்தத் திட்டம் மிகவும் உதவியாக இருக்கும் என்று இதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. இன்றைக்கு மின்சார வாரியத்தில் களப் பணியாளர்கள் மிகவும் குறைவாக இருக்கிறார்கள். பல இடங்களில் திட்டங்களுக்காக உடனடியாக லயன் போடுவது, கம்பங்கள் நடுவது போன்ற காரியங்களைச் செய்ய முடியாத அளவிலே அங்கே களப் பணியாளர்கள் குறைவாக இருக்கிறார்கள். 1973–74 ஆம் ஆண்டிலே தமிழ்நாட்டிலே 7 தனியார் மின் நிறுவனங்கள் அரசுரிமையாக்கப்பட்டிருக்கின்றன. அதற்குப் பிறகு அந்த நிறுவனங்களிலே களப் பணியாளர்கள் நியமிக்கப் படவில்லை. அது மட்டுமல்ல. 7 தனியார் நிறுவனங்களை அரசுடைமையாக்கிய நேரத்தில், அவர்களுடைய நலனுக்கு விரோதமாக பிக்சேஷன் முறை வகுக்கப்பட்டிருக்கிறது என்பதை

[திரு. சேலம் மு. ஆறுமுகம்] [1982 பிப்ரவரி 18

வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். மின் வாரிய போர்டு ஒரு சிறந்த முடிவை எடுத்தது, அந்தச் சிறந்த முடிவை, அவர்களுக்கு நியாயமாக கிடைக்க வேண்டியதை, பின்னால் அமுலாக்கவில்லை. திருநெல்வேலிக்கு ஒருவிதமாகவும், சேலத்திற்கு ஒருவிதமாகவும் அவர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய 3:1 என்ற அடிப்படையிலே இல்லாமல், அவர்களுக்கு இன்றைக்கு வேறுவிதமான முறையிலே பிக்சேஷன் செய்திருக்கிறார்கள். 15, 20 ஆண்டுகளாக உள்ள பொறியாளர்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குள் வேறுபாடுகள், வித்தியாசங்கள் கற்பிக்கக் கூடாது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்

சேலம் நகரத்திலே இருக்கக்கூடிய ஒரே ஒரு பவர் அவுஸ் திடீரென்று அதிக மின் அழுத்தத்தால், பழுதடைகின்ற நேரத்தில், சேலம் நகரமே பெரும் இருளிலே மூழ்கிவிடுகிறது. ஆகவே, சேலம் நகரத்திலே இருந்து 10 மைல் சுற்றளவிற்குள் மற்றொரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சேலத்திலே இரும்பாலை இருக்கிறது. மற்றும் பெரிய தொழில்கள் உள்ள கேந்திரமான நகரம். 20,30 ஆண்டுகளுக்கு முன்னாலே ஏற்பட்டதால், தற்போதைய தேவைகளைச் சரிக்கட்ட முடியாத நிலையில் இருக்கிறது. இன்றைக்கு நாட்டிலே தொழில் வளம் பெருகிக் கொண்டிருக்கிறது. மக்கள் தேவைகள் பெருகிக் கொண்டிருக்கிறது. ஆனால், அந்தத் தேவைக்கும், இன்றைக்கு தொழில் வளர்ச்சிக்கும், அதே நேரத்தில் வளர்ச்சியின் மேம்பாட்டிற்கும் இன்றைக்கு மின்சாரம் அதிகமாகத் தேவைப்படுகின்றது. இன்றைக்கு நம்முடைய நாட்டிலே உணவு உற்பத்தியைப் பொறுத்த அளவில், எந்த அளவிற்கும் ஒரு சர்ச்சை வராமல், விமர்சிக்கக்கூடிய கட்டத்தைத் தாண்டிவிட்டோம். மின்சாரத்தைப் பற்றி நாம் அடிக்கடி சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். எல்லாவிதமான தொழில்களுக்கும் , அத்தியாவசியமான ஒரு பொருள் மின்சாரம் தான். அந்த மின்சாரத்தை இன்றைக்கு—மின்சாரத்தைத் தொட்டால் ஷாக் அடிக்கும் என்று சொல்வார்கள்—அப்படிப்பட்ட மின்சார இலாகாவை தன்வசம் வைத்துக் கொண்டிருக்கும் மின்சார அமைச்சர் அவர்கள் அடிக்கடி அதிர்ச்சிக்கு ஆளாகாமல், இன்றைக்கு எல்லா உறுப்பினர்களும் பாராட்டக்கூடிய அளவிலே கவர்ச்சிகரமாக இந்த மின்வாரிய வரவு செலவுத் திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்திருப்பதை வரவேற்று, நல்ல பல பணிகளை வரவேற்று மாண்புமிகு உறுப்பினர் பலராமன் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன், நண்பர் திருவேங்கடம் அவர்கள்கூட என்னையும் ஏன் விட்டுவிட்டீர்கள் என்று கேட்கிறார்கள். அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்து, இந்த மின்சார நிறுவனத்தின் திறமையைப் பாராட்டி, அந்த அளவிலே அவர்களுக்கு நாம் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் என்று சொல்லி, வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.



1982 பிப்ரவரி 18]

(இரவு 6·30)

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1981—82 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

இன்று நம்முடைய மாநிலத்தினுடைய ஆண்டு மின்சாரத் தேவை சராசரி 2500 மெகா வாட் என்று எடுத்துக்கொள்ளலாம். ஆனால், நமக்கு இன்று ஆண்டுக்கு கிடைத்து வருவது 1,600, 1,700 மெகா வாட்தான். ஒவ்வொரு ஆண்டும் வளர்ச்சியின் தேவையும் ஆண்டுக்கு மேலும் ஒரு 300 மெகா வாட் தேவையென்ற நிலையில் இருந்து வருகிறது. ஆகவே, நம்முடைய தேவைக்கும், இன்றைய மின்சார உற்பத்திற்கும் இடையில் மிகப் பெரிய ஒரு இடைவெளி இருக்கக்கூடிய அளவிலே, தமிழகத்தில் மின்சார வாரிய நிதி நிலை அறிக்கையின் மீது பேசிக் கொண்டிருக்கிறோம் என்பதை ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டும். அப்படியானால், இன்றையதினம் அதற்குக் குறுக்கே நிற்கின்ற நிலையை மாற்ற என்ன முயற்சி என்பதுதான் அரசின் பக்கத்திலே இருக்கக்கூடிய கொள்கை என்பது ஒரு தெளிவான முடிவு என்பதை நாம் பார்க்கிறோம்.

கடந்த ஆண்டு இதே நிதி நிலை அறிக்கையின்மீது அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை கொஞ்சம் அழுத்தமாக இருந்தது. இதிலே கொஞ்சம் 'சாப்டாக' அவருடைய பேச்சு அமைந்திருக்கிறது. இதிலே 11வது பக்கத்திலே, நெய்வேலியிலே தற்போது உற்பத்தியாகும் மின்சாரம்கூட முழுமையாக இரண்டாவது கட்டத்தில் கிடைக்க முடியாத ஒரு கொள்கையை இன்று மத்திய அரசு வைத்திருக்கிறது என்று இலேசாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். சாதாரணமாகச் சுட்டிக்காட்டுவதில் பிரயோஜனமில்லை என்ற நிலைமையிலே இருக்கிறீர்கள் என்பதை முதலிலே நம்முடைய அமைச்சர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இன்று மத்திய அரசாட்சி மிகப் பெரிய அளவிலே ஐ எம்.எப். லோன் பெறுவதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். 5,000 கோடி அளவிலே வந்தால்தான் அவர்களது ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்ற நிலையிலே இருக்கிறது. இன்னும் சில நாட்களில் மத்திய பட்ஜெட்டை எதிர்பார்க்கிறோம். ஆகவே, உங்களுடைய வர்ணனை பல இடங்களிலே மிகப் பெரிய அளவிலே இல்லாவிட்டாலும், அமைச்சர் அவர்கள் பல பகுதிகளில் இன்று மத்திய அரசாட்சி, அதிலே இருக்கக்கூடிய நிர்வாகம் நம்மை எப்படிப் புறக்கணிக்கிறார்கள், ஓரக்கண்ணால் பார்க்கிறார்கள் என்பதை சரியாக மதிப்பிட்டு, தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அழுத்தமாக இல்லாவிட்டாலும், தெளிவாகப் புரிந்துக்கொள்ளக்கூடிய முறையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நான் சொல்ல விரும்புவதெல்லாம், இன்றைக்கு ஒரு உறுதியான கொள்கை நமக்குத் தேவை. அந்தத் தரப்பிலே இருந்து குலசேகரபாண்டியன் அவர்கள் சொன்னார்கள். நாம் அழுத்தமாக, ஏகமனதாக ஒரு தீர்மானம் போட்டு, நமக்கு முழுமையான மின்சாரத்தைக் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசாட்சியை நாம் அணுகவேண்டும் என்று சொன்னார்கள். அந்த அளவுக்கு அவர் சொன்னதை பாராட்டுகிறேன். இந்த நிலையில்தான் இன்றைக்கு மத்திய அரசின் கொள்கைகள் இருக்கின்றன என்பதை புரிந்துகொள்ள வேண்டும். நம்முடைய தேவைகள் அதிகம். நம்முடைய தேவைகளுக்கேற்ப, மத்திய அரசைப் பார்த்துக் கேட்பதிலே நமக்கு அழுத்தமான கொள்கை இன்று தேவைப்படுகிறது என்பதை இந்த இடத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

புராணத்திலே உள்ள மார்க்கண்டேயனைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். ஆனால், கல்பாக்கத்திலே இருக்கின்ற அனல் மின்சார நிலையத்தைப் பற்றி என்ன நிலைமை என்று நமக்குத் தெரியாது. இதுவரை அங்கேயிருந்து நமக்கு மின்சாரம் கிடைக்கவில்லை. ஆகவே, நம்முடைய திட்டங்களிலே எது சிறந்த திட்டங்கள் என்பதை எடுத்துக்கொண்டு, அந்தத் திட்டங்களின் மூலம் உற்பத்தியை நாம் முழுவதற்கும் பெற முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அதிலே மற்றும் பல திட்டங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே மிகவும் முக்கியமானது நெய்வேலி, கல்பாக்கம் அனல் மின் நிலையங்கள்; வட சென்னையிலுள்ள தெர்மல் ஸ்டேஷன்; மேட்டூரிலுள்ள தெர்மல் ஸ்டேஷன் ஆகிய திட்டங்களை முறைப்படுத்தி, இந்தத் திட்டங்களில் எதிலே அதிகமான உற்பத்தி வருமென்பதைப் பார்த்து, அதற்கு முதலிடம் கொடுப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

கடந்த ஆண்டு சொல்லுகிறபோது, மதுரை மாவட்டத்திலுள்ள பழனியிலுள்ள சண்முகா நதித் திட்டம், ஒரு நல்ல திட்டம் என்று சொல்லப்பட்டது. ஆனால், அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லுகிறபோது, இந்த சண்முகா நதித் திட்டத்திலே சில சிக்கல்கள் இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், இந்த அறிக்கையிலே பார்க்கும்போது, மீண்டும் அந்த சண்முகா நதித் திட்டம் வந்திருக்கிறது. அப்படிப்பட்ட ஊசல் இல்லாத நிலையில், உற்பத்தி ஏற்படக்கூடிய திட்டங்களுக்கு நாம் முயற்சிக்க வேண்டும்.

இதிலே பல திட்டங்கள் ஆய்விலே இருப்பதாகச் சொன்னார்கள். இன்றையதினம் 1 மெகா வாட், 2 மெகா வாட் உற்பத்தி செய்யக்கூடிய அனல், புனல் மின் நிலையங்களை பெரு நகரங்களில் உருவாக்கினால், அந்த நகருக்கு வேண்டிய மின் உற்பத்தியை உருவாக்க முடியும். இன்றைக்கு ஆசிய நாட்டிலே பெருநாடாக இருக்கக்கூடிய சைனாவில் இப்படி மின் உற்பத்தி





செய்யப்படுவதாக, 1 மெகா வாட், 2 மெகா வாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய சிறிய சிறிய மின் நிலையங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்ற தகவல் நமக்கு வந்திருக்கிறது. அதையெல்லாம் அரசு கவனத்தில் கொண்டு, இந்த விஷயங்களை நாம் ஆராய்ந்து பாக்கவேண்டும். அதற்கும் மேலாக இன்றைக்கு நாம் குறுக்கு வழியிலே சென்று மின் உற்பத்தியை பூர்த்தி செய்ய இயலாது.

சமீப காலத்தில், மாநில அரசின் சிந்தனைக்கு வந்திருக்கும்படியான சில விஷயங்கள் வருந்தத்தக்கதாக இருக்கிறது; கவலையளிக்கக்கூடியதாக இருக்கிறது. தனியார் துறையில் மின் உற்பத்தியை கொடுத்து, சமாளித்து விடலாம் என்று நினைக்கிறார்கள். மத்திய அரசு, மாநில அரசு இவ்வளவு பொருளாதார நெருக்கடியில் சிரமப்படுகிறபோது, இந்தப் பவரை தனியார்களிடத்தில் கொடுத்தால், இன்றைக்கு என்னவாகும் என்பதைப் பார்க்கவேண்டும்.

முதல், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் ஒரு சீரிய கொள்கையை நாம் நம் நாட்டினுடைய நிர்ப்பந்தத்தின் காரணமாக மத்திய அரசு கடைபிடித்தது. அதன் காரணமாகத்தான் இந்த ஹெவி இன்டஸ்ட்ரீஸில் தனி நபர்களுடைய ஆதிக்கத்தை விட்டு அவை அரசினுடைய பொதுத்துறையாக இருக்க வேண்டுமென்றுதான் நாம் பல்வேறு தொழில்களை உருவாக்கியிருக்கிறோம். அதை நம்பித்தான் நாம் ஓரளவு வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதிலே தனியாரைப் புகுத்துவது என்பது ஒரு ஆபத்தான நிலையை உருவாக்கிவிடும். நம்முடைய அமைச்சருடைய இந்த உரையைப் படித்துப் பார்த்தேன். அதிலே எதுவும் விரிவாக இல்லை. தெளிவாக இல்லை. சொல்லப்படவேயில்லை. இதுதான் உங்கள் நிலை என்று சொன்னால் நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே இந்த சரிவு வரக்கூடாது என்று எடுத்துக் காட்டுகிறேன். எச்சரிக்கிறேன். அது பாதகமான போக்காகப் போய் முடியும் என்பதை நான் எடுத்துச் சொல்லியாக வேண்டும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)

அடுத்து நாம் உண்மை நிலையை அறிந்து கொள்ளவேண்டும். இன்றைக்கு அறிவிக்கப்படாத ஒரு மின் தட்டுப்பாடு நாட்டிலே இருக்கிறது என்பதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் திண்டுக்கல்லில் இருந்து வருகிறேன். இன்றையதினம் அங்கே ஒரு நாளைக்கு 20 தரம் மின் தட்டுப்பாடு வருகிறது. அந்தப் பெரிய நகரத்திற்கு இப்படிப்பட்ட மின் தட்டுப்பாடு ஏன் வருகிறது என்று அங்கே இருக்கக்கூடிய மின்சார இலாகா உயர் அதிகாரிகளைச் சந்தித்துப் பேசுகிறபோது அவர்களால் ஒன்றும் சொல்லமுடியவில்லை. ஒரே வார்த்தை சொல்கிறார்கள்' ''ஈரோட்டிலேயிருந்து வரவேண்டும், எங்களுக்கு வரவில்லை', என்று. அப்படிப்பட்ட பெருநகரங்களிலே இன்றைக்கு பலமணி நேரம் மின் தட்டுப்பாடு இருக்கக்கூடிய ஒரு காட்சியை பார்க்கிறோம்.

[திரு. என். வரதராஜன்] [1982 பிப்ரவரி 18

நம்முடைய மாநிலத்திலே கிராமங்களிலே ஏற்கனவே நாம் அதிகமான அளவிற்கு மின்சாரத்தை உபயோகப்படுத்த ஏற்பாடு செய்திருக்கிறோம். ஆனால் நான் சொல்ல விரும்புவது 105க்கு 50 சதவீதம் கிராமங்கள் இன்றையதினம் இருளில் இருக்கின்றன என்று சொன்னால் அது தவறு அல்ல. ஆனால் நம்முடைய கஷ்டத்தினால்தான் அது அவ்வாறு இருக்கிறது. அதை நாம் உணர வேண்டும்.

சிறிய சிறிய தொழிற்சாலைகளிலே மின் தட்டுப்பாடு என்று சொன்னால் அந்தத் தொழில்கள் இயங்கமுடியாது. அவர்களுக்கு எப்போது மின்சாரம் வரும் என்று தெரியாது. மாலையில் ஒரு 7 மணிக்கு நைட் ஷிப்ட் வேலை ஆரம்பிக்கிறது என்று சொன்னால் 8 மணிக்கு மின்சாரம் நின்றுவிடுகிறது. பிறகு 10 மணிக்கு வருகிறது, 12 மணிக்கு நின்றுவிடுகிறது. இவ்வாறு சிறிய சிறிய தொழிலதிபர்கள், சாதாரண குடிமக்கள் இன்று மிகப் பெரிய அளவிற்கு சிரமப்படுகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை சவனித்து ஏன் விசேஷமாக ஒரு ஏற்பாடு செய்யக் கூடாது. இப்படிப்பட்ட பகுதிகளிலே இன்றையதினம் இந்த நிலைமை ஏற்படுகிறதென்பதை நாம் பார்க்கவேண்டும். அது மட்டும் அல்ல. நம்முடைய நகரங்களும் கிராமங்களும் விஸ்தாரமாகிக் கொண்டே வருகின்றன. ''எக்ஸ்டன்ஷன் பிரதேசம்'' ஏராளமாக இருக்கின்றன. நாம் ஏற்கனவே இருக்கிற பிரதேசங்களுக்குத்தான் விளக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்தப் பிரதேசங்கள் நம்முடைய கவனத்திலே இல்லாமல் இருப்பதை நாம் பார்க்கவேண்டும். நம்முடைய தேவை கூடிக்கொண்டே இருக்கிறது. அந்தத் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவிற்கு நம்முடைய உற்பத்தி போதவில்லை, வேலைகளும் முன்னேறவில்லை.

தொடர்ச்சியாக விவசாயத்திற்கு மின்சாரம் கொடுக்கப்படுவது இல்லை. அது இன்றைக்கு கிராமங்களிலே ஒரு பெரிய தொந்தரவாக இருக்கிறது. அதற்கு நாம் பெரும் முயற்சி செய்ய வேண்டும். இன்று பம்பு செட்ஸ் ஏராளமாக பொருத்தப்பட்டு இணைப்புகள் கிடைக்காமல் மக்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அமைச்சரவர்கள் காலையிலேகூட ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது, ஒரு குறி அளவிட்டு நாங்கள் எண்ணிக்கையை நிறுத்தியிருக்கிறோம் என்று சொன்னார்கள்.

1982-83ப் ஆண்டிலாவது நாம் ஒரு லட்சம் பம்ப் செட்களுக்கு இணைப்புக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்ற குறிக்கோளோடு நீங்கள் முயற்சி செய்தால் நம்முடைய கிராமங்களில் உற்பத்தியைப் பெருக்கவும், மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்யவும், வாங்கும் சக்தியை உயர்த்தவும், கிராமப் பொருளாதாரத்திற்கு ஊக்கமளிக்கக்கூடிய நிலைமை ஏற்படும் என்பதையும் நான் இந்த இடத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



1982 பிப்ரவரி 18] [திரு. என். வரதராஜன்]

[இரவு 6.40]

அடுத்து இங்கே நான் வற்புறுத்த விரும்புவது, அட்டைப் பட்டியல் முறை கொண்டு வந்தீர்கள். அதனுடைய சாதக பாதகங்களுக்குள்ளே நான் போக விரும்பவில்லை. இதனை இத்தனை அவசரமாகக் கொண்டு வந்து இருக்கவேண்டியது இல்லை. ஏதோ ஒரு மாவட்டத்திலேயோ அல்லது இரண்டு மாவட்டங்களிலேயோ பரீட்சார்த்தமாகச் செய்து பார்த்துவிட்டு அதனுடைய வளர்ச்சியைக் கண்டு கொண்டபிறகு பிற மாவட்டங்களுக்கு விஸ்தரித்து இருக்கக்கூடாதா? அமைச்சரவை இதனை ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டும். அலுவலர்கள், உயர் அலுவலர்கள் எஞ்சினியர்கள் ஆலோசனை சொல்லியிருக்கலாம். ஆழ்ந்து அதைப் பரிசீலித்த பிறகு கொண்டு வந்திருக்கவேண்டும். திண்டுக்கல்லிலே நான் பிப்ரவரி 1 ஆம் தேதி போயிருந்தபோது அங்கே இருக்கின்ற மக்களுக்கு பில் வரவில்லை என்று சொல்கிறார்கள். அங்கே அட்டை பட்டியல் முறை வருகிறது என்றே அவர்களுக்குத் தெரியாது, ஆனால் பிப்ரவரி 1, 2 ஆம் தேதிகளில் அங்கே கட்டைகளைப் பிடுங்கிக்கொண்டு போய்விட்டார்கள். அங்கே இருக்கின்ற சப்-கலெக்டர் இடத்திலேகூட கட்டையை பிடுங்கிக்கொண்டு போய்விட்டார்கள், அவரைக் கேட்டால் நோட்டீஸ் எனக்குக்கூட வரவில்லை என்று அவரே சொல்கின்ற அளவுக்கு மோசமான நிலைமை இருக்கிறது பல கோடி ரூபாய் வருமானம் இதனால் குறைகிறது. ஆகவே இதை இவ்வளவு அவசரம் அவசரமாகக் கொண்டுவர வேண்டியதில்லை. திண்டுக்கல் நகரத்திலே, நாம் தவறு செய்துவிட்டு, அவர்கள் பணம் கட்டவில்லை என்று சொல்லி ஒவ்வொருவருக்கும் 6 ரூபாய் வீதம் அபராதம் வசூலித்து கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொகைகளைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். ஆகவே இதிலே கவனமாக நாம் வேலை செய்யவேண்டும், ஏனோ தானோ என்று இருக்கின்ற போக்கினைத் தடுத்தாக வேண்டும். இப்போதைக்கு அட்டை பட்டியல் முறைபற்றி நான் இதைத் தான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதனுடைய சாதக பாதகங்களைப்பற்றி எல்லாம் பின்னாலே பார்க்கலாம்.

அடுத்தபடியாக விவசாயிகளிடத்திலிருந்து 37 கோடி ரூபாய் பாக்கி இருந்தது கொஞ்சம் முயற்சி செய்து 13 கோடி ரூபாய் வசூலாகியிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் வசூலாக வேண்டியது 24 கோடி ரூபாய் இருக்கிறது என்பதை மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். பாக்கி இருக்க வேண்டுமென்று நாங்கள் விரும்பவில்லை, அது வரவேண்டும், மாநில அரசுக்கு வரவேண்டும். நீங்கள் கையாள்கின்ற கொள்கைகளில் மாறுதல் வேண்டும். தமிழ்நாட்டிலுள்ள நகர்ப்புற வியாபாரிகள், நடுத்தரத் தொழில் செய்கின்றவர்கள் இவர்களுக்கு யூனிட் ஒன்றுக்கு 75 காசு வீதமும் குடியிருப்பில் உள்ளவர்களுக்கு 45 காசு வீதமும் செலுத்தக்கூடிய நிலைமை இருக்கிறது. தமிழகத்

திலே ஒரு பழமொழி இருக்கிறது. தேனைத் தின்றுவிட்டு
ஏமாந்தவன் தலையிலே தடவுவது என்று, அப்படிப்பட்ட
நிலைமை இருக்கிறது. நாங்கள் ஏற்கெனவே சொன்னோம், மின்
அழுத்தம் அதிகமாக இருக்கக்கூடிய தொழில்களை நடத்து
கின்றவர்கள், பெரியவர்களிடம் குறைத்து வசூலிக்கிறீர்கள்.
அதைக் கூட்டவேண்டும் என்று இன்றைக்கு அதைக் கூட்டியிருக்
கிறீர்கள் ஓரளவுக்கு அதை நாங்கள் வரவேற்கிறோம். 30வது
பக்கத்திலே ரெபர் பண்ணி இருக்கிறீர்கள் மத்திய சர்க்காரிலே
சொன்னார்கள் என்று. அப்படி நீங்கள் அவர்கள் சொல்வதை
கோட் பண்ணுவதே தவறானது. அவர்கள் இப்போது சிக்கலிலே
மாட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு
பொருளுக்கும் விலையை உயர்த்த வேண்டிய நிலையிலே இருக்
கிறார்கள். கட்டணத்தை உயர்த்தவேண்டிய நிலையில் இருக்
கிறார்கள், அதற்காக பாதுகாப்புச் சட்டங்களையெல்லாம்
போட்டு வைத்துக்கொண்டு பத்திரப் படுத்திக் கொண்டிருக்
கிறார்கள். ஆனால் ஜனங்கள் அதை விடப்போவதில்லை.
நீங்கள் அவர்கள் சொல்வதை கோட் பண்ணினால் உங்களுக்கு
அது ஆபத்திலே போய் முடியும். டீசல் விலை உயர்கிறது, கரி
விலை உயர்கிறது, மின்கம்பி விலை உயர்கிறது, உங்களால் உயர
வில்லை, மத்திய அரசினுடைய கொள்கையால் உயர்கிறது.
அதை சமாளிக்க வேண்டியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில்
மக்களுடைய ஆதரவோடு எப்படி நீங்கள் சமாளிக்க போகிறீர்கள்
என்பதை அமைச்சர் அவர்கள் பதிலுரையின்போது சொல்ல
வேண்டும் அல்லது கொள்கையை அவர்கள் சொல்லவேண்டும்.
மக்களுக்கு வாக்குறுதிகள் அளித்துவிட்டு அதே நேரத்திலே மத்திய
சர்க்கார் சொல்கிறது என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கு
மானால். முரண்பாடு ஏற்படக்கூடிய நிலைமை இருக்கிறது. பல
கோடி ரூபாய் லாபம் வரக்கூடிய தொழிற்சாலைகள் தமிழ்
நாட்டிலே உங்களுடைய கணக்குப்படி பார்த்தால்கூட மின்சார
உற்பத்தியிலே 43 சதவீத மின்சாரத்தை எடுத்துக்கொள்கின்றன.
அப்படி யாரால் ஏன் அவர்களிடமிருந்து 30,35,40 பைசாக்கள்
வாங்கக்கூடாது. அதேமாதிரி சாதாரண விவசாயிகளிடத்திலே
இருக்கக்கூடிய கட்டணத்தை உயர்த்தினால் அதிருப்திதான்
வளரும், காரணம் அவர்களுக்கு இன்றைக்கு கரும்புக்கு நெல்லுக்கு
பருத்திக்கு கட்டுபடியாகக்கூடிய விலை கிடைக்கவில்லை. ஆகவே
சீர்படுத்தவேண்டிய அவசியத்திலே நாம் இருக்கிறோம். 1 ப்ளஸ்
1 கொள்கையை நாம் அமல்படுத்தினோம், அந்தக் கொள்கையை
சரியாக நடத்துவதற்கு முயற்சி செய்யவேண்டும். சிலர் தகராறு
செய்திருக்கலாம், சிலர் கொடுக்காமல் இருந்திருக்கலாம். உயர்
மட்டக் குழு கூட சிபாரிசுகளைச் செய்திருக்கிறது. அதையும்
அரசு கணக்கிலே எடுத்துக்கொள்ள வேண்டும். 1 ப்ளஸ் 1 என்ற
அடிப்படையிலே வசூலிக்க வேண்டும். விவசாயிகளிடத்தில்
எந்தக் காரணத்தைக் கொண்டும் கட்டணத்தை உயர்த்தக்
கூடாது. உயர்த்தினால் மீண்டும் தகராறுதான் வரும்.
உயர்த்துவோம் என்று நீங்கள் அறிவிக்கவில்லை. 30 வது
பக்கத்திலே ஆலோசனை செய்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்



கிறது. மிக அழுத்தமான மின்சாரம் பெறுகின்ற லாபம் அதிக மாகப் பெறுகின்ற 43 சதவீதம் மின்சாரம் பெறுகின்ற கோடிக் கணக்கான ரூபாய் லாபம் பெறக்கூடியவர்களுக்கு கட்டணத்தை உயர்த்தியாக வேண்டும். இல்லாவிட்டால் சிக்கலில் மாட்டிக் கொள்ளக்கூடிய நிலை வந்துசேரும்.

இன்றைக்கு அரிசனங்களின் குடிசைக்கு மாதம் 2 ரூபாய் அளவிலே வாங்கிக்கொண்டு மின் இணைப்புக் கொடுக்கிறோம். நல்லது அவர்களுடைய வீடுகள் வலுவாக இருந்தாலும் பலமாக இருந்தாலும் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். ஆனால் கிராமப்புறங்களிலே பேரூராட்சி, நகராட்சிகளுக்கு விஸ்தரிக்கக்கூடிய முறையிலே திட்டத்தைக் கொண்டுவர வேண்டும். சாதாரண, தாழ்த்தப்பட்ட பின்தங்கிய மக்களுக்கு உதவி என்ற அடிப்படையிலே இதைச் செய்ய வேண்டும். என்னுடைய தொகுதியிலே பேரூராட்சியிலே அது இருக்கிறதா இல்லையா என்று தெரியாமல் சொல்லிவிட்டதால் அவர்கள் எல்லா சாதனங்களையும் வாங்கி வைத்துவிட்ட பிறகும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்று திண்டாடிக் கொண்டு இருக்கிறார்கள். முதலில் பேரூராட்சிகளுக்கு விஸ்தரிப்போம்; பிறகு நகராட்சிகளுக்கு விஸ்தரிப்போம் என்ற நிலையைக் கொண்டு வர வேண்டும்.

கிராமப்புறங்களில் பம்பு செட்டுகளுக்கு இணைப்பு கொடுக்கின்ற பொழுது உதிரி பாகங்களை விவசாயிகளே வாங்கி விடுகிறார்கள். நாம் வாங்கிக்கொடுக்கின்ற இயந்திரங்கள், சாமான்கள் எங்கே போகின்றன என்பது எனக்குத் தெரிய வில்லை. பொறியாளர்கள் இவைகளைக் கொண்டு இணைப்பு கொடுத்து விட்டு மாநில அரசு அல்லது மின்வாரியத்திலிருந்து பணத்தைப் பெறுகிறார்கள்; அந்த விவசாயிகளிடமிருந்தும் பணத்தைப் பெறுகிறார்கள் என்ற சூழ்நிலை ஊழலுக்கு இடம் அளிக்கிறது; இதை அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் இருக்கின்றவர்களுக்குத் தொடர்ச்சியாக மின்சாரம் கிடைக்க வேண்டும்; அவர்களுக்கு மின்சார இணைப்புகளை அதிகப்படுத்த வேண்டும்; கிராமப்புற மக்களுக்கு மின்சாரக் கட்டணத்தை உயர்த்தாமல் இருக்க வேண்டும்; 1 பிளஸ் 1 என்ற முறையில் பாக்கிகளை வசூல் செய்ய வேண்டும்; இப்படிப்பட்ட சீரான கொள்கைகளைக் கிராமப் புறங்களில் கடைப்பிடித்தால் அந்த மக்களுக்கு நம்பிக்கையை ஊட்ட முடியும்; வசூலையும் துரிதப்படுத்த முடியும்; மின்சார வாரியத்தின் வருவாயையும் பெருக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மாவட்ட அளவிலே ஆலோசனைக் குழுக்கள் அமைத்திருக்கிறோம். ஆனால் அது பெயரளவிற்குத்தான் இருக்கிறது. நானும் அதில் உறுப்பினர் தான். இவைகளுக்கு ஆழ்ந்த நிதர்சனத்தோடு ஆக்கப்பூர்வமான காரியங்களைச் செய்யக்கூடிய, கட்டுப்படுத்தக்கூடிய சூழ்நிலை இல்லாவிட்டால் சரியாக இருக்காது. அதிகாரிகளைப் பொறுத்த வரையில் எல்லோரையும் நான் சொல்லவில்லை. நல்ல முறையில் இருக்கக் கூடிய சரியான அதிகாரிகளும் இருக்கிறார்கள்; தவறான அதிகாரிகளும் இருக்கிறார்கள். எனவே, மக்களும் அலுவலர்களும், அரசும் இணைந்து காரியங்களைச் செய்ய வேண்டும். கட்டுப்படுத்தக் கூடியவைகளைக் கட்டுப்படுத்தியும், மட்டுப்படுத்தக் கூடியவைகளை மட்டுப்படுத்தியும், பிரச்னைகள் எதுவும் ஏற்படாமல் இருக்க என்ன செய்ய வேண்டுமென்று அறிந்து அதைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறெல்லாம் இல்லாமல் பெயரளவில் ஆலோசனைக் குழுக்களைப் போட்டோம் என்ற நிலைமைகள் இருக்கக் கூடாது.

அலுவலகங்கள் பிரிந்து கிடக்கின்றன. மதுரையிலும், திண்டுக்கல்லிலும் அப்படி இருக்கின்றன. ஏ.ஈ. ஒரு இடத்தில் இருப்பார்; ஜே.ஈ. ஒரு இடத்தில் இருப்பார்; டி.ஈ. ஒரு இடத்தில் இருப்பார். பயனீட்டாளர் ஒவ்வொரு காரியத்திற்கும் எத்தனை இடங்களைச் சுற்றிவது? எனவே, அவ்வாறில்லாமல் அலுவலர்கள் ஒரேயிடத்தில் இருந்து பணிகளைக் கவனிக்கச் செய்தால் நல்ல முறையில் அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசும் பொழுது ஒரு பிரச்னையைக் குறிப்பிட்டார்கள். பாலாறு பேசின் பாலாறு படுகைச் சான்றிதழ் வாங்க வேண்டுமென்று வடார்க்காடு மாவட்டத்தில் இத்தகைய கதை நீண்ட காலமாக இருந்து வருகிறது. இதனால் அந்த வட்டார விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது என்று சொன்னார்கள். எனவே, அதற்குத் தளர்வு ஏற்படுத்தி, தவிர்க்க வேண்டும். அந்தப் பகுதிக்கு மின்சார இணைப்பு கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பில் போடுவதில் தவறு ஏற்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள் சொன்னார்கள். இது நடைபெறுகிறது. பில் போட்டு, பணம் கட்டிய பிறகு, மீண்டும் பில் வருகிறது பணத்தைக் கட்ட வேண்டுமென்று. பிறகு போய் வாதாடினால் கணக்குகளைப் போட்டுப்பார்த்துவிட்டு, ஆமாம் ஆமாம், தவறு நடந்து விட்டது என்று சொல்கிறார்கள். எனவே இது சம்பந்தமாக உஷாராக இருப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



மின்வாரியத்தில் மேலும் அபிவிருத்தி ஏற்படுவதற்கான ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளைப் பெற்று அபிவிருத்தியை நோக்கிச் செல்ல வேண்டுமென்ற முறையில் என்னுடைய ஆலோசனைகள் சிலவற்றை நான் முன் வைத்திருக்கிறேன். எனக்குப் பின்னால் நாளைய தினம் பேசும்பொழுது தோழர் ரமணி அவர்கள் இன்னும் பல்வேறு விவரங்களையும் அரசுக்கு வழங்குவார்கள் என்று கூறி முடிக்கிறேன்.

3. தகவல் கோரல்—(தொடர்ச்சி)

(ஆ) எதிர்க்கட்சித் தலைவர் செல்லும் பாதையில் வெடிகுண்டு வெடித்துள்ளது என்ற செய்தி.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய மாற்றுத் தலைவரவர்களே, இந்தச் சபையிலே இருக்கக்கூடிய உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு தரவேண்டியவர் நீங்கள்தான். எனவே, உங்களின் கவனத்திற்கு ஒரு விஷயத்தை நான் கொண்டு வர விரும்புகிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் பாத யாத்திரை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர் செல்லுகின்ற வழியில் ஒரு பாலத்திலே நான்கு வெடிகுண்டுகள் வைக்கப்பட்டு, குண்டு வெடித்து, பலபேர்கள் காயப்படுத்தப்பட்டு இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், அவர் சிவகாசியில் தங்கியிருந்த நேரத்தில், கொலை செய்வது என்ற முயற்சியில் ஈடுபட்ட ஒரு நபர் பிடிக்கப்பட்டிருக்கிறார். சுப்பிரமணியம் என்பது அவர் பெயர்.........(குறுக்கீடு).

திரு. துரைமுருகன்: மாற்றுத் தலைவரவர்களே, உங்கள் அனுமதியுடன் அங்கத்தினர் பேசுகிறார். (கூச்சல்-குழப்பம்)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. துரைமுருகன்: துணைச் சபாநாயகர் அவர்களே, நீங்களே சொல்லுங்கள். திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டரை எழுப்பி இருக்கிறார்கள், மாற்றுத் தலைவர் அவர்கள் அவருக்கு அனுமதி தந்துள்ளார்கள். அது முக்கியமான பிரச்னை. அந்த பிரச்னையைக் கேட்டுவிட்டு நீங்கள் தீர்ப்புச் சொல்லுங்கள், அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இடையில் அவரது பேச்சை தடை செய்யக் கூடாது.

(இரவு 6.50)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதத்தை ஒட்டிய பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்றால் பரவாயில்லை (கூச்சல்—குழப்பம்) நடைபெற்றுக்கொண்டிருக்கிற விவாதத்தை ஒட்டித்தான்

நீங்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்ப முடியும். அவையிலே இருக்கிற உறுப்பினர்கள், வெளியிலே நடப்பதைப் பற்றி இங்கே எழுப்ப முடியாது. (கூச்சல்—குழப்பம்).

திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கானும் துரைமுருகனும் எழுப்பியிருப்பது மிகவும் முக்கியமான பிரச்னை தான். அதில் எந்தவிதமான கருத்து வேற்றுமையும் இருக்கக் கூடாது என்று நான் கருதுகிறேன். காரணம், எதிர்க்கட்சித் தலைவர் போயிருக்கின்ற பாதையிலே வெடிகுண்டு வெடித்திருக்கின்றது என்ற செய்தி அதிர்ச்சி தரக்கூடியதுதான். அதைப் பற்றி அரசாங்கத்திடம் ஏதாவது 'தகவல் இருக்குமானால் தெரிவிக்கலாம். அமைச்சரிடம் ஏதாவது தகவல் இருக்குமானால் தெரிவிக்கலாம். (கூச்சல்—குழப்பம்.)

திரு. துரைமுருகன்: எங்கள் தலைவருடைய உயிருக்கு ஆபத்து என்றால் எங்களுக்குப் பதட்டம் இருக்காதா? ஒரு எதிர்க்கட்சித் தலைவருக்கு இந்த நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்றால், அது குறித்து அரசாங்கத்திலே ஏதாவது விவரம் தெரியுமா? அமைச்சர் உட்கார்ந்துகொண்டு இருக்கிறார்கள். அவராவது தகவல் அறிந்து சொல்கிறேன் என்று சொல்லட்டும். (கூச்சல்—குழப்பம்).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, தங்களுக்குத் தெரியும் தற்போது மின்வாரிய நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. அவர்கள் குறிப்பிடுவது என்ன விவரம் என்றே தெரியவில்லை. நான் ஏதாவது சொல்ல, பின்னர் அமைச்சர் அவைக்குத் தவறான தகவலைத் தந்தார் என்று அவர்கள் என் மேலேயே உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வருவார்கள். என்னை ஏன் இந்த வம்பில் மாட்ட வைக்கிறார்கள் என்று தெரியவில்லை.

திரு. துரைமுருகன்: துணைத் தலைவர் அவர்களே, இப்போது இன்பர்மேஷன் இல்லை, நாளைக்கு விசாரித்துத் தருகிறேன் என்று சொல்லட்டும் நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். (கூச்சல்—குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எனக்குத் தகவல் வந்தால் உங்களுக்கு அதைத் தெரியப்படுத்துவேன்.

## 8 தமிழ்நாடு மின் வாரியத்தின் நிதிநிலை அறிக்கை.— விவாதம் (தொடர்ச்சி)

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: பேரவை துணைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற மின்வாரிய நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.



நம்முடைய மாநிலத்தில் நீர்மின்சாரம், பிறகு அனல் மின்சாரம் என்று ஏற்கனவே இருந்து காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் மின் உற்பத்தி ஆங்காங்கே ஓரளவு செய்யப்பட்டது. அதற்குப் பிறகு காங்கிரஸ் ஆட்சி வெளியே வந்த பிறகு, அடுத்து ஆண்டவர்கள் இந்த மின்சாரத்தை எந்தெந்த அளவிலே மக்களுக்குப் பயன்படச் செய்யலாம் என்று கவனம் செலுத்தாமல் எங்கெங்கு எல்லாம் கம்பிகளை இழுக்க முடியுமோ, அங்கெங்லாம் வெறும் கம்பிகளை இழுத்துவிட்டார்கள். அப்படி கம்பிகளை இழுத்து விட்ட காரணத்தினால், இன்றைக்குப் பற்றாக்குறை அதிகப்படியான அளவுக்கு பம்ப்செட்டுகளைக் கொடுத்து விட்டதால், விவசாயிகள் இன்றைக்குக் கஷ்டப் பட்டுக் கொண்டு இருக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது.

அடுத்தபடியாக, முருகப்பா செட்டியார் ஆராய்ச்சி நிலையத்தின் சார்பாக, சவுக்கு மரத்திலிருந்தும், கடல்நீரில் இருந்தும், சூரியஒளியில் இருந்தும், மின்சாரம் தயாரிக்கலாம் என்று அறிக்கை கொடுத்திருப்பதாக தெரிகிறது. அதை வைத்து இந்த மின்சார உற்பத்தியை அதிகமாக்குவதற்கு, கடலிலே இருந்தும், சவுக்கு மரத்திலிருந்தும், சூரிய ஒளியில் இருந்தும், எவ்வளவு அதிகம் பணம் செலவானாலும் கூட, இதை ஏற்பாடு செய்வது சால சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

அடுத்து, சென்றமுறை நான் சட்டமன்றத்திலே பேசிய போது என் தொகுதியில் உள்ள சாத்தியார் திட்டம், மஞ்சளாறு திட்டம் இவைகளில் இருந்து மின்சாரம் உற்பத்தி செய்யலாமா என்று கேட்டதற்கு, அப்போது இது ஆய்விலே இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அதுகுறித்து இந்த அறிக்கையிலே ஒன்றும் சேர்க்கப்படவில்லை. நீர் மின்சாரம் உற்பத்தி செய்வதிலே சற்றுக் கவனம் செலுத்தினால் 14 மெகாவாட் மின்சாரம் கூடுதலாகக் கிடைக்கும். முன்னாலே இருந்த சமயநல்லூர் மின்நிலையத்தை காங்கிரஸ் கட்சிக்குப் பின்னால் ஆட்சிக்கு வந்தவர்கள், என்ன காரணத்திற்காகவோ விற்றுவிட்ட காரணத்தினாலே அங்கே பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. மதுரை மாவட்டத்தில் உள்ள மின் பற்றாக்குறையைப் போக்குவதற்காக சாத்தியாறு, மஞ்சளாறு திட்டங்களை அமல்படுத்தவேண்டும் என்று கேட்டபோது, பரிசீலிக்கப்படும் என்று கூறினாலும், அதைப் பற்றிய விவரம் ஒன்றும் இப்போது காணோம் என்பதால். அதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(இரவு 7.00)

ஆங்காங்கு டிரான்ஸ்பார்மர்கள் பொருத்தப்பட்டுள்ளன. ஒரு டிரான்ஸ்பார்மரில் 400 வோல்டேஜ் வருகிறது என்று சொன்னால், ஒரு 200 மின் இணைப்புகள் கொடுக்கமுடியும் என்று நிலைமை இருந்தாலும்' பல்வேறு பம்ப்செட்டுகளுக்கு மின் இணைப்புத் தரவேண்டும் என்கிற அடிப்படையில், அதற்கும் மேலும் இணைப்புகள் கொடுக்கப்படுவதால், அடிக்கடி வோல்

டேஜ் டிராப் ஆகி, அந்தப் பம்ப்செட்டுகளே தீய்ந்து போய்விடுகிற நிலைமை இருக்கிறது. மேலும் அந்த டிரான்ஸ்பார்மரில் உள்ள பியூஸ் ஒயர்களுக்குப் பதில் காப்பர் ஒயர் பொருத்தப்பட்டு இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அதனாலும், அடிக்கடி பியூஸ் ஆகிறது என்று சொல்கிறார்கள். இப்படி அடிக்கடி பியூஸ் ஆகிவிடுவதால் விவசாயிகள் மிகவும் பாதிப்புக்குள்ளாகி விடுகிறாகள். என்னுடைய தோட்டத்திலேயே கூட இரண்டு பம்ப்செட்டுகள் ஒரே நாளில் பர்னாகி விட்டது. கிட்டத்தட்ட அந்தக் காயில்களை ரி-வைன்ட் செய்வதற்கு 1,000 ரூ. செலவாகிவிட்டது. ஒரு சாதாரண விவசாயி எப்படி இந்தச் செலவை ஈடு செய்யமுடியும். ஆகவே, அந்த டிரான்ஸ்பார்மர் களுக்கு காப்பர் ஒயர் போடாமல் பியூஸ் ஒயர்கள் போடுவதோடு குறிப்பிட்ட அளவிற்கு மேல் டிரான்ஸ்பார்மர்களில் இருந்து பம்ப் செட்டுகளுக்கு கனெக்ஷன் கொடுக்காமலும் இருக்க அரசு நடவடிக்கை எடுத்து, அதன் மூலம் விவசாயிகளின் பம்புசெட்டுகள் பழுதாகாத நிலைமையை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மின் சப்ளை கொடுப்பதிலும் பல்வேறு சிக்கல்கள் இருக் கின்றன. முன்பு விவசாயத்திற்கு ஒரு பகுதிக்கு காலை 6 மணி நேரம் என்றும், மற்றொரு பகுதிக்கு மாலை 6 மணி நேரமும் என்றும் இருந்தது. ஆனால் அப்படிப்பட்ட நிலைமைகள் தற்போது இல்லை. மின்சாரம் ஒழுங்காக வருவது இல்லை. ஒவ்வொரு இடத்திலும் 3 பேசில் ஓடவேண்டிய கரண்ட், இரண்டு பேஸ், அல்லது ஒரு பேசில் தான் ஓடுகிறது. அதனாலும் மோட்டார் பம்ப்செட்கள் பர்னாகும் நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை விவசாயிகளுக்கு மட்டுமல்லாமல். தொழில் துறையிலும் இருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய நிலக்கோட்டைத் தாலுக்காவில் உள்ள பாண்டிய ராஜபுரம் சர்க்கரை ஆலையில், திடீர் திடீரென்று மின்சாரம் சப்ளை நின்றுவிடுகிறது. அவர்கள் ஜெனரேட்டர் வைத்து இருந்தாலும், சில நேரங்களில் திடீரென்று நின்று விடுவதால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. சர்க்கரை பாகு இறுகிபோய் அதன் காரணமாக சரியான முறையில் ஙர்க்கரை உற்பத்தி செய்ய முடியாமல் போய்விடுகிறது. மேலும் அந்தப் பாகை பின்னர் இளகிச் செய்வதற்கும் சிரமப்படவேண்டி யிருக்கிறது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் கொடுத்த கரும்பு சரியான ஈல்டு தரவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் இவற்றை கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், விவசாயத்திற்கு மின்சாரம் இத்தனை மணியில் இருந்து இத்தனை மணி வரையில் கண்டிப்பாகக் கிடைக்கும் என்கிற உறுதியையும் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி திட்டவட்டமான முறையில் அறிவித்தால்தான் அந்த ஏழை விவசாயிகள் வாழ்வு சிறப்புற அமையும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



இப்போது அரிசனங்கள் வாழும் குடிசைகளுக்கு மின் இணைப்பு கொடுக்கிறோம். பலபேர் ரூ. 12.50 கட்டி விட்டு இன்னும் மின் இணைப்புக் கிடைக்காமல் இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 25,000 கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுத்துள்ளதாகச் சொன்னார்கள். ஆனால் நிலைமை அப்படி அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நூற்றுக்கணக்கான கிராமங்களில் இந்த மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. ஆகவே, எங்கெங்கே இதுவரையில் கொடுக்கப்படாமல் இருக் கிறதோ அங்கெல்லாம் இந்த மின்இணைப்பை உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே ரூபாய் 12.50 கட்டிவிட்டு, மின்இணைப்பு எதிர்பார்த்து நிற்கும் குடும்பங்களுக்கும் உடனடியாக மின் இணைப்புக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ரூரல் உறவுசிங் ஸ்கீம் அடிப்படையில் ரூ. 3,000 செலவில் வீடுகள் கட்டிக்கொடுக்கிறோம். அது கல்சுவர் வீடாக இருக்கிறது. இந்த வீடுகளுக்கு மாறி குடிபோகும் அரிசன மக்களுக்கும், மின் வசதி கொடுக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள் எல்லாம் ஏற்கனவே குடிசையில் வாழ்ந்து இந்த வசதியை அனுபவித்தார் கள். ஆகவே, அரசு இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறென்.

அதன் பிறகு தெருவிளக்குகள் இருக்கின்றன. இங்கே ஒரு கேள்வியின்போது அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள். குண்டு பல்புகளுக்குப் பதிலாக 4 அடி நீளம் உள்ள டியூப் விளக்கு கள் போடப்படும் என்று சொன்னார்கள். 4 அடி நீளம் உள்ள டியூப் விளக்குகளைப் போட்டால் கூட பலமாக காற்று அடித்தால் பியூஸ் ஆகிவிடுகிறது, சரியாக எரியவில்லை. அதனால் டியூப் விளக்குப்போட்டும் பயனில்லை. இதற்குக் காரணம் லோ டென்டர் தான். லோடென்டர் கொடுக்கிறவர்களிடமிருந்துதான் இந்த பல்புகள் வாங்கப்படுகின்றன என்று சொன்னார்கள். லோ டெண்டர் என்றால் அவர்கள் மோசமான பல்புகளைத்தான் கொடுப்பார்கள். ஆகவே, பணம் அதிகமானாலும் விலை உயர்ந்த பல்புகளாக பார்த்து வாங்கிப்போட வேண்டும். குறைந்தது 6 மாதமாவது ஒரு பல்பு எரியக் கூடிய அளவில் இருக்க வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது கிராமங்களில் திடீர்' திடீர் என்று பல்பு பியூஸ் ஆகி, எரியவில்லை என்றால் எங்கள் பகுதியைப் பொறுத்த வரையில் அங்கே இருக்கிற டி.இ.-யைப் பார்த்துச் சொன்னால் உடனே லைட் எரியச் செய்கிறார்கள். அவர்களுக்கும் ஒரு சங்கடம் இருக்கிறது. ஒரு டி.இ-க்கு 2,500 ரூபாய்க்கு தான் பல்பு இதர பொருள்கள் வாங்குவதற்கு அதிகாரம் இருக்கிறது. ஆகையால் அந்த அளவுக்குள் மட்டும் அவர்கள் வாங்கிக்கொள் கிறார்கள். அதற்குமேல் வாங்க அவர்களுக்கு அதிகாரம் இல்லாத காரணத்தால், பல்புகள் வாங்க முடியவில்லை; அதனால் லைட்

எரியச் செய்வதில் சங்கடங்கள் ஏற்படுகின்றன. அந்த டி.இ-க்கு
எவ்வளவு பல்புகள் வேண்டுமானாலும் வாங்கிப்போடலாம்.
அதற்கு 2,500 ரூபாய்க்கு மேல் போனாலும் பரவாயில்லை என்று
சொன்னால் அவர்கள் உடனுக்குடன் பியூசான பல்புகளை
மாற்றி எல்லா தெருவிளக்குகளையும் நல்லமுறையில் எரிய
வைக்க முடியும். அமைச்சரவர்கள் அதை பரிசீலிக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மின்சாரக் கட்டணப் இருக்கிறது. தயவு
செய்து இந்த மின்சாரக் கட்டணத்தை எந்தக் காரணத்
தைக்கொண்டும் உயர்த்தக் கூடாது. மின் ாரக் கட்டணத்தை
உயர்த்தினால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். அது
மட்டுமல்ல. ப்போது இருக்கின்ற கட்டணத்தையே அவர்களால்
கட்ட முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். இடைக் காலத்திலே
யாரோ மின்சாரக் கட்டணத்தைக் கட்டக்கூடாது என்று சொன்ன
தால் கட்டாமல் இருந்தாலும் அவர்கள் இப்போது ஒழுங்காக கட்டி
வருகிறார்கள்; மின்சாரக் கட்டணத்தைச் செலுத்த வேண்டுமென்ற
எண்ணம் விவசாயிகளுக்கு இப்போது வந்திருக்கிறது. இந்த
நிலையிலே மேலும் கட்டணத்தை உயர்த்தாமல் பார்த்துக்
கொள்ள வேண்டும்.

இப்போது விவசாயிகள் இரண்டு மாதங்களுக்குச் சேர்த்து
கட்ட வேண்டுமென்பதிலே கூட கஷ்டம் இருக்கிறது.
எங்களுக்கே சிரமமாக இருக்கும்போது அவர்களுக்கு இன்னும்
கஷ்டமாகத்தான் இருக்கும். ஆகையால் இதிலே கொஞ்சம்
தாராளமாக இருந்து, கட்டணத்தைச் செலுத்துவதில் சிறிது
தாமதம் ஏற்பட்டாலும் அதற்காக மின் துண்டிப்பு செய்வது
சரியல்ல. இன்றைக்கு பெரிய, பெரிய தொழிற்சாலைகளில்
எல்லாம் கட்டாமல் இருந்தாலும், மால்கோ போன்ற நிறுவனங்கள்
எல்லாம் கட்டாமல் இருந்தாலும் பியூஸ் எடுக்கப்படுவதில்லை.
ஆனால் ஒரு விவசாயி தன்னுடைய பம்பு செட்டுக்கோ அல்லது
வீட்டுக்கோ பயன்படுத்திய மின்சாரத்திற்கு கட்டணம் செலுத்த
4 நாட்கள் கடந்துவிட்டாலும் கூட பியூசை எடுத்துவிடுகிறார்கள்.
அப்படி பியூசை எடுத்துவிட்டால் அபராதம் கட்டி, கரண்டு
கட்டணத்தையும் கட்டினால்தான் மீண்டும் மின்சாரம் வழங்கப்
படுகிறது. இப்படிப்பட்ட நிலையை அமைச்சரவர்கள் பரிசீலனை
செய்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு கிராமப்புறங்களில் தன்னிறைவு
திட்டத்தின்கீழ் ரோடு வசதி, தண்ணீர் வசதி எல்லாம் செய்து
கொடுக்கிறார்கள். குடிதண்ணீர் வசதிக்காக மின் இணைப்பு
கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுக்கும்போது பம்புகளுக்கு
ஒரு உறார்ஸ் பவ்வர் அல்லது இரண்டு ஹார்ஸ் பவர் மோட்டார்
வைக்கிறார்கள். பெண்கள் போய் தண்ணீர் எடுக்க இரண்டு
ஸ்டார்ட் அடித்தாலே அது தீய்ந்து போய்விடுகிறது. இந்த
நிலையை மாற்ற வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டு





மென்றால் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கும்போது
2 ஹார்ஸ் பவர் சரியாக இருக்குமா, 3 ஹார்ஸ் பவர்
சரியாக இருக்குமா என்று பார்த்து எது சரியாக இருக்கும் என்று
பார்த்து, அதற்கு தகுந்த ஹார்ஸ பவர் கொடுக்க அமைச்ச
ரவர்கள் பரிசீலனை செய்து, அதைக்கொடுத்தால் சாலச்சிறந்ததாக
இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இப்போது நாம் தன்னிறைவுத் திட்டத்திலே
இணைப்புச் சாலைகள் போடுகிறோம். ஆங்காங்கே லைட்
தேவையானால் அதற்கு ஏற்பாடு செய்கிறோம். குறிப்பாக
மயானத்திற்குச் செல்லும்போது, பிணத்தைக்கொண்டு போகும்
போது அடிஷனல் பல்பு போட வேண்டுமென்றால் கஷ்டமாக
இருக்கிறது. பஞ்சாயத்து யூனியனிலிருந்து பணத்தைக் கட்டிவிட்டு,
பிறகு சாங்ஷன் வாங்கக்கொள்கிற சூழ்நிலை இருக்கிறது.
பணத்தைக் கட்டி விட்டாலும் கூட கம்பம் இல்லை, வேறு
சாமான்கள் இல்லை என்று சொல்லுகின்ற ஒரு குறைபாடு இருந்து
கொண்டிருக்கிறது. இதை எல்லாம் பரிசீலனை செய்ய வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த 1982 ஆம் ஆண்டு முடிவ
தற்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின் இணைப்பு கொடுப்ப
தோடு இணைப்புச் சாலைகள், சுடுகாட்டிற்குப் போகும்
பாதையில் மின்சரா விளக்குகள் போடுதல் போன்ற பணிகளையும்
செய்து முடிக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய
உரையை முடித்துக் கொள்கிறேன்.

(இரவு 7.10)

திரு. கே. ஆர். கணபதி: சட்டப்பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, 1981—82 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு மின்சார
வாரியத்தின் நிதிநிலை அறிக்கையை எடுத்த எடுப்பிலேயே
வரவேற்கிறேன். அதைக் கொண்டு வந்த மாண்புமிகு மின்துறை
அமைச்சர் அவர்களைப் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

பற்றாக்குறை பட்ஜெட்டாக இருந்தாலும் பரவாயில்லை.
வேறு எந்தக் கட்சி ஆளும் பொறுப்பிலே தமிழ்நாட்டிலே
இருந்தாலும் இதைவிட நல்ல பட்ஜெட்டை மாண்புமிகு
பண்ருட்டியார் அவர்களைத் தவிர வேறு யாராலும் போட
முடியாது. மத்திய அரசு மேலும் ஒத்துழைத்து, மாற்றுக்
கட்சிகள் மின்சாரவரி பாக்கியை தள்ளுபடி செய், மின்சாரக்
கட்டணத்தை ஏற்றாதே என்று வற்புறுத்தாமல் இருப்பார்களா
னால் இந்தியாவிலேயே தமிழ்நாடு புரட்சித் தலைவர் காலத்தில்
நிச்சயம் உபரி மின்சார பட்ஜெட்டைப் போட முடியும்.

தமிழ்நாட்டின் ஆண்டு மின்சாரத் தேவையை குறைத்து
மதிப்பிடுவதும் அது தவறு என்று மத்திய சர்க்கார் தரும் புள்ளி
விவரங்களையே ஆதாரமாக எடுத்து மின்துறை அமைச்சர்
காட்டினாலும் தமிழ்நாட்டின் ஆண்டு தேவையை உணர மத்திய
அரசு மறுக்கிறது. ஆண்டுக்கு ஆண்டு மின் உற்பத்தியைப் பெருக்கி
இருக்கிறோம். ஏற்கெனவே உள்ள மின் உற்பத்தித் திறனை

அதிகப் படுத்தியதோடு புதிதாக மின் உற்பத்தி செய்ய ஏற்பாடு
செய்திருக்கிறோம். மின்வழி இழப்பு கூட இந்திய நாட்டின்
சராசரிக்கு குறைவாக தி.மு.க. காலத்திலே இருந்ததை விட
குறைத்ததற்கு யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது.

இந்தியாவில் எல்லா ஆதிதிராவிடர்கள் குடியிருப்புக்கும்
மின் இணைப்பு கொடுத்த பெருமை தமிழ்நாட்டைச் சாரும்.
புகழ், புரட்சித் தலைவருக்கும் மின்துறை அமைச்சர் அவர்
களுக்கும் உரித்தாகும்.

இந்தியாவிலே இந்திரா காங்கிரஸ், இந்திய மார்க்ஸிஸ்ட்
கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆளுகின்ற எல்லா மாநிலங்
களையும் விட குறைவாக விவசாயிகளுக்கு மின் கட்டணத்தை
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வசூலித்
தாலும் அதை மேலும் குறை அல்லது ஏற்றாதே என்றால் அதில்
நியாயம் ஏதும் இருப்பதாகத் தென்படவில்லை.

குடிசைக்கு ஒரு விளக்கு திட்டம் ஒரு புரட்சிகரமான திட்டம்.
ஏழை எளியவர்கள் இத்திட்டத்தை வரவேற்று வாழ்த்து
கின்றனர். அடிக்கடி அத்திட்டம் வெற்றிபெற மெட்டீரியல்ஸ்
இல்லை என்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள். அந்தத்
தேவையைஅமைச்சர் பூர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

தென்னாற்காடு மாவட்டம் பெரிய மாவட்டம். வருவாய்
துறையை இரண்டாகப் பிரிக்க தாமதமானாலும் மின்துறை
யினை இரண்டாகப் பிரித்து சிறந்த முறையிலே பணியாற்ற வழி
வகுக்கவேண்டும். வருவாய்த்துறை மனுநீதி கேட்பதுபோல்
ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் மாதம் ஒரு நாள் வந்து மனுக்களை
வாங்கி மக்கள் குறைகளைப் போக்கப் பாடுபடவேண்டும்.

எல்லா குண்டு பல்புகளையும், 2 அடி குழாய் விளக்குகளை
யும் 4 அடி குழாய்களாக மாற்ற அமைச்சர் அவர்கள் உத்தர
விட்டதற்கு உள்ளபடியே ஊராட்சி பேரூராட்சிகள் புரட்சித்
தலைவர் அரசுக்கு நன்றி செலுத்தவேண்டும்.

அடிக்கடி ஊமங்கலத்தில் ட்ரான்ஸ்பார்மர் எறிந்துவிடுகிறது.
இரண்டு ட்ரான்ஸ்பார்மர்களில் ஒன்றுதான் வேலை செய்கிறது.
அதனால் சுற்றுலாப் பயணிகள் வரும் இடமாகவும், யாத்ரீகர்
தலமாகவும் உள்ள சிதம்பரம் டவுன், அண்ணாமலைப் பல்கலைக்
கழகம் ஆகிய பகுதிகள் சில நேரங்களில் இருளில் மூழ்கிவிடு
கின்றன.

சிதம்பரம், கிள்ளை, பரங்கிப்பேட்டை, சாமியார்பேட்டை
போன்ற கடலோரப் பகுதிகளில் மின் அழுத்தமாகப் பாயாததால்
விளக்குகள் எரிவதில்லை. பலமுள்ள புதிய ட்ரான்ஸ்பார்மர்
கள் போடச் சொன்னால் தொழிற்சாலை வைக்கிறீர்களா
என்கிறார்கள். தொழிற்சாலை வையுங்கள் என்றால் மின்
சாரமில்லை என்கிறார்கள். சிதம்பரம் புவனகிரி தொகுதிகளை



திராவிட முன்னேற்றக் கழகத்திடமிருந்து மீட்டு, அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொகுதிகளாக
மாற்றி இருக்கிறோம். ஆகவே தொழிற்சாலைகளையும்
கொண்டு வாருங்கள், சக்தி வாய்ந்த ட்ரான்ஸ்பார்மர்களையும்
கொண்டு வாருங்கள் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்
கொள்கிறேன்.

பாதகமான சூழ்நிலையிலும் சாதகமான பட்ஜட்டை சமர்ப்
பித்ததற்கு பட்ஜெட்டை வரவேற்று மின்துறை அமைச்சருக்கு
மீண்டும் ஒருமுறை பாராட்டைத் தெரிவித்து அவர்களுக்கு நன்றி
கூறி விடைபெறுகிறேன், நன்றி வணக்கம்.

* திரு. செ. சிவசாமி. பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய பட்ஜெட்டை
நமது மதிப்பிற்குரிய மின்துறை அமைச்சரவர்கள் நமக்கு
முன்னாலே வைத்திருக்கிறார்கள். 117 கோடி ரூபாய் துண்டு
விழுகின்றது என்றும் அடுத்த ஆண்டு கிட்டத்தட்ட 125 கோடி
அளவுக்கு துண்டு விழும் என்றும் சொல்லப்படுகின்றது.
ஆனால் எதிர்காலத்திலே தமிழ்நாடு தொழில் வளர்ச்சியிலே
முன்னேற வேண்டும் என்றால் நாம் இருக்கின்ற இந்த நிலை
யிலே நல்ல திட்டங்களைத் தயாரித்தால்தான் முடியும்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களுக்குத் தெரியும் தமிழ்நாட்டைப் பொறுத்த அளவிலே
கடந்த காலத்திலே தொழில் வளர்ச்சியிலே 3-வது இடத்திலே
இருந்தது. இன்றைக்கு 11-வது இடத்திற்கு தள்ளப்பட்டிருக்
கிறது என்று சொன்னால், மின்சார உற்பத்தியில் நமக்கு
ஏற்பட்டிருக்கிற சங்கடங்கள்தான் அதற்குக் காரணம் என்று
குறிப்பாக எடுத்துச் சொல்லலாம். நிச்சயமாக நம்முடைய
தமிழ்நாட்டிலே எந்த அளவுக்குப் அதிகமாக மின்சாரம் உற்பத்தி
யாகிறதோ அந்த அளவுக்கு தொழில் மட்டும் அல்ல, விவசாயத்
திலும் இன்னும் இதர பல தொழில்களுக்கும் மேன்மேலும்
முன்னுக்கு வரக்கூடிய அளவுக்கு பெரிய சந்தர்ப்பங்கள் உண்டு.
ஆனால் திட்டமிட்டு செயல்படாததன் காரணமாக நமக்கு
இப்படிப்பட்ட மிகப்பெரிய நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

உதாரணமாக, ஒரு பகுதியிலேயிருந்து மின் இணைப்பு
இன்னொரு இடத்திற்கு போகக்கூடிய இடத்திலே போடப்
பட்டிருக்கிற பல லட்சம் பெறுமானமுள்ள செப்புக் கம்பிகளை
யெல்லாம் களவாடி விடுகிறார்கள். அதன் காரணமாக மின்
ஓட்டமே தடைபட்டுக் கொண்டிருக்கிறது. உதாரணமாக
மானாமதுரையிலிருந்து தெற்கு புதுக்கோட்டைக்கு மின்சாரம்
செல்லும் இடத்திலே கிட்டத்தட்ட 9 போல்களுக்கிடையில்
செப்புக் கம்பிகளையெல்லாம், பட்டப்பகலிலே லாரியைக்
கொண்டு வந்து, மின்சார ஓட்டத்தை நிறுத்து, வெட்டி
கொண்டு போகப்பட்டிருக்கிறது. இது நடந்து 2 மாதங்களுக்கு
மேல் ஆகிறது. ஆனால் இதுவரையில ஏதாவது நடவடிக்கை
எடுக்கப்பட்டிருக்கிறதா என்றால், கிடையாது.

[திரு. செ. சிவசாமி] [1982 பிப்ரவரி 18

அதைப்போலவே ஆர். எஸ். மங்கலம் பகுதியிலே இதே மாதிரி 13 போல்களுக்கு மத்தியிலே உள்ள மின் கம்பிகளையெல்லாம் வெட்டி, பட்டப்பகல்லே லாரியிலே ஏற்றிக் கொண்டு போகக்கூடிய களவு நடைபெற்றிருக்கிறது. இது கடந்த ஆண்டு நடந்த சம்பவம் இப்படி மின் இணைப்பிலே மின் கோளாறு செய்கிறார்கள். இப்படி கொள்ளை அடிப்பது, திருடுவது போன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுவதன் காரணத்தால்தான், 117 கோடி ரூபாய் அளவுக்கு மின்சார வாரியத்தில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. நல்ல முறையிலே இவைகளையெல்லாம், ஆங்காங்கே இருக்கக்கூடிய ஆபிசர்கள் அடிக்கடி செக்—அப் செய்திருந்தால், இப்படிப்பட்ட திருட்டுகளை தவிர்த்திருக்கலாம்.

ஆனால் இப்படிப்பட்ட திருட்டுகள் அதிகமாக நடைபெறுகின்றன. இதற்குக் காரணம் ஆபிசர்களும் இன்னும் டிபார்ட்மெனட்டில் இருக்கக்கூடிய ஒரு சில பேர்களும் இதற்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்பதோடு, இதில் பங்கு கொண்டிருக்கிறார்கள், பங்கை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் குற்றம் சாட்டுகிறேன். அந்த அளவுக்கு மோசமான நிலையிலே மின்சார இலாகா போய்க்கொண்டிருக்கிறது. பட்டப்பகலிலே லாரிகளில் ஏற்றிக்கொண்டு போகக்கூடிய அளவுக்குச் சம்பவங்கள் நடைபெறுகின்றன. எந்த இடத்திலே எந்த அளவுக்கு அந்த செப்புக் கம்பிகள் இருக்கும் என்பது யாருக்குத தெரியும். எந்த இடத்திலே எதை நிறுத்தினால் மின்சார துண்டிப்பு ஏற்படும் என்ற விவரம் யாருக்குத் தெரியும். ஆகவேதான் சொல்கிறேன். இதில் ஒரு சிலர் பங்குக் கொண்டிருக்கிறார்கள் என்று. எதிர் காலத்திலாவது இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறாத அளவுக்கு, மாற்றி அமைக்கும் முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயத்தையும் உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பாண்டி கொம்மாய் என்ற இடத்திலே, கிட்டத்தட்ட 4 ஆண்டுக்காலமாக மின் இணைப்பே கொடுக்கப்படவில்லை. விவசாயிகள் தொடர்ந்து அதற்காக வற்புறுத்தி வந்தார்கள். அதன் காரணடாக தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு மின்சாரம் கொடுப்பதற்கான எல்லாவிதமான வேலைகளும் செய்யப்பட்டு விட்டது. அண்டர்கிரவுண்டிலே இருந்து கேபிள் சிஸ்டத்தில் போடப்பட்டு, 35 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கி வேலைகள் செய்யப் பட்டன. சப்ளை எல்லாம் கொடுக்கப்பட்டு, வேலைகள் முடிந்தவுடனே நானே டிரான்ஸ்பார்மரை ஓபன் செய்வதற்காக சென்றபோது, அங்கே ஸ்பார்க்கிள்தான் அடித்துக் கொண்டிருந் தது. பல ஏற்பாடுகளைச் செய்து, மிகவும் பாடுபட்டு, இரயில்வே பி அண்டு டி டிபார்ட்மெண்டிலேயெல்லாம் பெர்மிஷன் வாங்கி, கேபிள்கள் போடப்பட்டு, அங்கே ஸ்பார்க்கிள் அடிக்கிறது என்றால் என்ன காரணம்? அப்படிப்பட்ட மோசமான நிலை மையில், அந்த விலையுயர்ந்த கேபிள்கள் அப்புறப்படுத்தப்பட்டு,



1982 பிப்ரவரி 18] [திரு. செ. சிவசாமி]

தூக்கி எறியப்படவேண்டிய, மகாமட்டமான உதவாக்கரை கேபிள்களை வாங்கி போட்டு அதிலே ஏதோ மோசடி நடந்திருக்கிற காரணத்தினால்தான் அந்தப் பகுதியிலுள்ள விவசாய மக்களுக்கு மின்சாரம் கிடைக்கவில்லை.

அது மட்டுமல்லாமல், கடந்த 4 வருஷங்களாக அதற்காக செய்யப்பட்ட வேலைகள் அனைத்தும் பாழாகிவிட்டன. இப்படிப்பட்ட நிலைமைகள் மாறவேண்டும். அங்கே இன்றைய நிலைமை என்னவென்றால், டி. டி. சி. யில் கேள்விகள் பிறப்பிக்கப்பட்ட பிற்பாடு, அமைச்சர் அவர்கள் எழுதிக்கொடுத்த பிற்பாடு, அண்டர்கிரவுண்டிலே போடுவதற்கு பதிலாக பூமிக்கு மேலே கொண்டு வந்து போடலாமா என்று ஆராய்ந்து வருகிறார்கள். அதற்காக பி. அண்டு டி. டிபார்ட்மென்ட்டுக்கு மறுபடியு சம்பந்தப்பட்ட பைல்கள் போய் வரவேண்டுமே, மீண்டும் எத்தனை ஆண்டுகள் ஆகுமோ தெரியாதே, என்று அந்தப்பகுதி மக்கள் கலக்கமடையும் வகையில் நிலைமை இருக்கிறது.

(இரவு 7 20)

ஆக இப்போது விவசாயிகளின் நிலைமை கேவலமான நிலைமைக்குப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை இந்த நிலைமைகளில் இருந்து புரிந்து கொள்ளலாம். ஆக பல அபிவிருத்தி வேலைகள் செய்யப்பட்டும்கூட இன்றைக்கு கெட்ட பெயர் வரக்கூடிய சந்தர்ப்பங்கள்தான் இருக்கின்றன.

அடுத்தப்படியாக பம்ப் செட்களுக்கான கனக்ஷன்ஸ் இன்னும் பல ஆயிரக்கணக்கான பம்ப் செட்டுகளுக்கு கனக்ஷன் கொடுப்பது பெண்டிங்கில் இருக்கிறது. பெரும்பாலான பம்ப் செட்களுக்கு இன்னும் சரியான முறையில் கணக்ஷன் கொடுக்கப்படவில்லை, ஆகவே பம்ப் செட்களுக்கு மின்சாரம் கொடுப்பதில் முன் உரிமை அளிக்கப்படவேண்டும்.

இன்றைக்கு மின்சார இலாகாவில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். இன்று கலியாணங்களில் தாலி கட்டும்சமயத்தில் மின்சாரம் போய் விடக்கூடாதே என்று ஆண்டவனை பிரார்த்தித்து தாலி கட்டுகிறார்கள். அதேபோல் ஆஸ்பத்திரிகளில் ஆப்பரேஷன் தியேட்டர்களில் பிரார்த்தித்துக் கொண்டுதான், ஆப்பரேஷன் நடத்துகிறார்கள். நல்லபடியாக ஆப்பரேஷன் செய்து முடியவேண்டுமே, நடுவில் கரெண்ட் நின்று போகக் கூடாது என்று ஆண்டவனை பிரார்த்தித்துத்தான் தொடங்குகிறார்கள். அதுபோல்தான் தெரு விளக்குகள். அவற்றிற்கும் அதே கதிதான். விவசாயிகள் பம்ப் செட்களைப் போடும்போது மோட்டாரை ஸ்டார்ட் செய்யும்போதே எரிந்து விடாமல் ஒழுங்காக ஓட சாமி கும்பிட்டுவிட்டுத்தான் காலையில் போக வேண்டும். காலையில் பம்ப் செட்டுக்காக மோட்டாரை

போட்டுவிட்டால் இரண்டு மணி நேரங்களில் மின்சாரம் தடைபட்டு விடுகிறது. கட்டாகி விடுகிறது. அப்படி மின்சாரம் கிடைக்காததன் காரணமாக அது வரை எடுத்த தண்ணீர் பூமிக்குள்ளே போய் விடுகிறது. பின்னர் சில மணி நேரங்கள் கழித்து மோட்டார் போட்டு அதுவும் இரண்டு மணி நேரம் சென்று மின்சாரம் கட்டாகி விட்டால் அதுவரை எடுத்த தண்ணீரும் பூமிக்குள்ளே சென்று விடுகிறது, ஆகவே ஒவ்வொரு முறையும் விவசாயி மோட்டாரைப் போடும்போது நிற்காமல் ஓட சாமியைக் கும்பிட்டுவிட்டுத்தான் போடவேண்டிய நிலை இருக்கிறது. ஒவ்வொரு முறையும் மின்சாரம் திடீரென்று கட் ஆகி விடுவதால் ஆண்டவனே என்னைக் காப்பாற்று என்று வேண்டிக் கொண்டுதான் மோட்டாரைப் போடவேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** சாமி கும்பிடுகிறார்கள் என்று தெரிகிறது. ஆனால் அது சிவசாமியைக் கும்பிடுவதாகக் கேள்விப்படுகிறேன்.

**திரு செ. சிவசாமி:** சிவசாமியையும் பலபேர் கும்பிட்டுக் கொண்டுதானிருக்கிறார்கள் இராமச்சந்திரனையும் சிலர் கும்பிட்டுக் கொண்டுதானிருக்கிறார்கள். இப்படியாக சாமி கும்பிடுவது என்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது,

அடுத்தபடியாக மின் இழப்பு கடந்த பட்ஜட் கூட்டத்தில் கூட 18.5% என்றுதான் சொல்லப்பட்டது இப்போதும் அதுவே இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையை மாற்றுவதற்கு நல்ல சந்தர்ப்பங்கள் உள்ளன. இன்றைக்கு விஞ்ஞான ரீதியில் கடல் நீரிலிருந்து கரென்ட் எடுக்கலாம். சூரிய வெப்பத்தின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யலாம். சவுக்குமரம் மூலம் கரன்ட் எடுக்கலாம் இவைபற்றியெல்லாம் ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு நல்லமுறையில் மின் உற்பத்தியைப் பெருக்க நம் செயல்பட்டால் நிச்சயமாக தற்போதிருக்கிற நிலையை மாற்றியமைக்கமுடியும்.

பம்ப் செட்களை எடுத்துக்கொண்டால் ஒன்பது இலட்சத்து நாற்பத்தேமு ஆயிரத்துக்கு அதிகமான அளவிற்கு தமிழ்நாட்டில் இருப்பதுகுறித்து பெருமையடைகிறேன். இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் இதில் முதல் இடம் வகிக்கக்கூடிய மாநிலமாக இருக்கிறது நம் மாநிலத்தில் உள்ள பம்ப் செட்கள் அனைத்தும் நல்லமுறையில் வேலை செய்தால் இன்னும் நம் உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்கமுடியும். இப்போது இருப்பதை விட, அதிகப்படியாக ஏற்றுமதி செய்யக்கூடிய வகையில் உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்கமுடியும். ஆனால் மின்சாரத்தைப் பொறுத்து சில நேரங்களில் பற்றாக்குறை இருந்து கொண்டு தானிருக்கிறது. வரை படத்தைப் பார்த்தால் தெரியும். கிராமங்களுக்கு அளிக்கப்படும் மின்வசதி 76க்குப் பின்னால் போதிய

அளவு அதிகப்படவில்லை. 1975—76 வரை மின்வசதி அளித்து வந்தது. பின்னர் படுத்துவிட்டது. கிராமங்களைப் பொறுத்த வரை, 1976க்குப் பின்னால் 1981 வரை முன்பிருந்தளவு அபிவிருத்தி அடையவில்லை.

மேன்மேலும் எந்த இடத்தில் [illegible] ஏற்படுகிறது என்பதை அறிந்து, அந்த இடத்திற்கு உடனடியாக மின்சாரத்தைக் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும், அதன் காரணமாக, அரிசனங்களுக்குத் தற்போது கிட்டத்தட்ட [illegible]6,000 வீடுகளுக்கு கொடுக்கப்பட்டிருப்பதோடு மட்டுமல்லாமல், அதிலே மேலும் கொடுப்பதற்கு வழி வகை ஏற்படும்.

மால்கோ நிறுவனத்திடமிருந்து கிட்டத்தட்ட 9.49 கோடி ரூபாய் இன்றைக்குப் பாக்கியிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இந்தச் சபையிலே 1975 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக சட்டசபையில் சொல்லப்பட்டு வருகிறது. மால்கோ நிறுவனம் என்ற ஒரு நிறுவனம் மட்டுமல்ல. இந்தத் தமிழ்நாட்டிலே இன்னும் எத்தனையோ கம்பெனிகள் இருக்கும். மொத்தமாக 14.96 கோடி என்று கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலைமைகள் எல்லாம் மாறவேண்டும். இதையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டால், நிச்சயமாக 117 கோடி ரூபாய் அளவிற்கு நஷ்டம் ஏற்படுவதை கணிசமான அளவிற்குக் குறைக்க முடியும் என்பதைப் பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, டிபார்டுமென்டு மூலமாக, குறிப்பாக உள்ளாட்சித் துறையிடமிருந்து கிட்டத்தட்ட 3 கோடியோ, 4 கோடியோ பாக்கி வர வேண்டுமென்று கணக்கு சொல்லப்படுகிறது ஏன் அவற்றையெல்லாம் வசூல் செய்யக்கூடாது? மற்ற டிபார்டுமென்ட் மூலமாக மேலும் கிட்டத்தட்ட 5 கோடி அல்லது 6 கோடிக்கு மேல் வரவேண்டும் என்று கணக்கு சொல்லப்படுகிறது. இதனை வசூல் செய்வதிலே என்ன கஷ்டம இருக்கிறது? மால்கோ போன்ற நிறுவனத்திடமிருந்து பாக்கியை வசூல் செய்யாமல், ஏழை எளிய மக்களிடத்திலே வசூல் செய்கிறோம். இன்றைக்கு விவசாயிகளிடமிருந்து கிட்டத்தட்ட 10 கோடி ரூபாய் வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், டிபார்டுமென்ட் மூலம் வரக்கூடிய பணத்தை வசூல் செய்வதில் ஏன் காலதாமதம் செய்யப்படுகிறது என்பது எனக்குப் புரியவில்லை. உடனடியாக வசூல் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 300, 400 மெகா வாட் ஒவ்வொரு ஆண்டும் தேவை அதிகரித்துக் கொண்டே போகிறது, அந்தத் தேவையின் அடிப்படையில் நாம் மின்சார உற்பத்தியைப் பெருக்க வேண்டும். இந்தமாதிரி

பெருக்குவதற்கு ஏற்கனவே சட்டசபையில் பல முறை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நெய்வேலி திட்டத்திலே கணிசமான அளவு உற்பத்தி செய்தாலும்கூட, மத்திய அரசின் தலையீட்டின் காரணமாக, அதிலே உற்பத்தி யாகக்கூடிய அத்தனையும் நமக்கு கொடுக்க முடியாத நிலையில் பல சிக்கல்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அது மட்டு மல்ல, நெய்வேலியில் கோளாறு ஏற்பட்டதன் காரணமாக ஒன்றிரண்டு தினங்கள் அங்கு உற்பத்தியில் தடங்கல் ஏற்பட்ட தன் காரணமாக, தமிழ்நாடு பிரமிக்கத்தக்க அளவிலே இழப்பு ஏற்பட்டது; ஒரு சிக்கலான சங்கடமான நிலை ஏற்பட்டது. அதே நேரத்திலே. தூத்துக்குடியிலுள்ள பிளாண்டிலும் சிக்கல் ஏற்பட்டது இப்படி சிக்கலுக்குச் சிக்கல் ஏற்பட்டதன் காரண மாக, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அத்தனை மக்களும். விவசாயிகளும் தமிழக அரசாங்கம் தவறு செய்துவிட்டது என்று நினைக்கின்ற அளவிற்கு ஒரு நிலைமை ஏற்பட்டது. நெய்வேலியில் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரம் முழு வதையும் தமிழ்நாட்டிற்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும், தமிழக விவசாயிகளுக்கும் மத்திய அரசாங்கம் கொடுக்கவேண்டும் என்று நீங்கள் முழுமனதுடன் கேட்டால், அதற்குப் போராடு வதற்குப் பக்கபலமாக நாங்கள் மட்டுமல்ல, தமிழ் மக்களும் ஆதரவாக இருப்பார்கள். அந்த நடவடிக்கையில், அந்த முயற்சியில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்,

நெய்வேலியில் கிட்டத்தட்ட 610 மெகாவாட் உற்பத்தி செய்யப்படுகிறது. இன்னும் மேலும் நெய்வேலியில் உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடுகள் செய்தால், நிச்சயமாக இந்த மின்சாரப் பற்றாக்குறை வராது. 1?7 கோடி ரூபாய் நஷ்டம் வந்துவிட்டது; அது நாளை 120 கோடியாக, 1?5 கோடியாக உயரும். அதனால், இந்த நிலைமையை மாற்றி, வேறு தனி யாருக்குக் கொடுக்கலாமா என்ற யோசனையை இன்றைக்கு அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருந்தால், அது ஆபத்தான கட்டத்திற்குக் கொண்டுபோய்விடும். தூத்துக்குடி, நெய்வேலி ஆகிய அனல் மின் நிலையங்களை அதிகமான அளவிலே அபி விருத்தி செய்தால், அதே போல் புனல் மின் நிலையங்களையும் அபிவிருத்தி செய்தால், நிச்சயமாக தமிழகத்தில் இப்படிப்பட்ட பற்றாக்குறை, அவல நிலை, நஷ்ட நிலை ஒருக்காலும் வராது. அதனால் இந்தத் திசையிலே நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, சமயநல்லூரில் ஏற்கனவே உள்ள பிளான்டை விற்கப்பட்ட இடத்தில் புதிய பிளாண்ட் அபிவிருத்தி செய்யவேண்டும். சமயநல்லூரிலே உள்ள அந்த இடத்தில் மேம் பாடு செய்வதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



(இரவு 7.30)

மின்கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்று சொல்லப்படு கிறது. நாம் உற்பத்தியில் அதிகமான கவனம் செலுத்தினால், நிச்சயமாக அந்தக் கட்டண உயர்வு அவசியமில்லை. எக்காரணத்தைக் கொண்டும், மின்சாரக் கட்டணத்தை உயர்த்து வது சரியல்ல. அந்தக் கட்டணத்தை உயர்த்தியதன் காரண மாகத்தான், ஏற்கனவே இருந்த தி.மு.க. அரசாங்கம் வீட்டுக்குப் போனது உங்களுக்குத் தெரியும், 1? பேர்களை சுட்டுக் கொன்றதன் காரணமாக, அவர்கள் வீட்டுக்குப் போனதை ஞாபகப்படுத்துகிறேன். எந்தக் காரணத்தைக் கொண்டும் மீண்டும் கட்டணத்தை உயர்த்தாதீர்கள், கட்டணத்தை உயர்த்தினால், மிகப் பெரிய அதிருப்தி விவசாயி கள் மத்தியில் வரும். அந்த அதிருப்தியின் காரணமாக சங்கடங்கள் வருமென்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

கல்பாக்கம் அனல் மின்நிலையத்தைப் பற்றி 1977 ஆம் ஆண்டிலே இருந்து சொல்லப்படுகிறது. அங்கே வேலைகள் சீக்கிரமாக முடிந்து விடும் என்று சொல்லுகிறார்கள். கல்பாக்கத்திலே அனல் மின் நிலையம் வந்துவிட்டால், தமிழகத்திலே மிகப் பெரிய அளவிலே எல்லாவிதமான ஏற்பாடு களும் செய்யப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால், கிட்டத் தட்ட ஆண்டுகளாக இன்னும் அது பூர்த்தியடையாத நிலை யில் இருந்து கொண்டிருக்கிறது. இந்த அனல் மின்நிலையம் மட்டுமல்ல. அதேபோல், பல அனல் மின் நிலையங்களைத் தமிழகத்திற்கு கொண்டு வர வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

கடைசியாக வைகைத் திட்டம், சிழ்பவானித் திட்டம், பைக்காரா திட்டம், தூத்துக்குடி திட்டம், மேட்டூர் திட்டம், வட சென்னை போன்ற பல திட்டங்களை உடனடியாகக் கொண்டு வரவேண்டும். காடம்பாறையில் கிட்டத்தட்ட 400 மெகா வாட் உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடு நடந்து கொண்டிருக் கின்றது என்று சொல்லப்படுகின்றது, பட்ஜெட்டிலே, அந்த காடம்பாறைத் திட்டத்தை, உடனடியாக அமுல் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981–82 ஆம் ஆண்டிற்கான மின்சார வாரியத் தினுடைய நிதி நிலை அறிக்கை இன்றைக்கு இம்மாமன்றத்தில் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே தாக்கல் செய்திருக்கின்ற சூழ்நிலை எப்படி இருக்கின்றது என்று சொன்னால் அது மிகவும் சிக்கலான சூழ்நிலையில், தனக்கே

[டாக்டர் கே. பி. இராமலிங்கம்] [1982 பிப்ரவரி 18

உரித்தான திறமையின் காரணமாக, இந்தத் துறையிலே பணி
யாற்றிய நல்ல அனுபவத்தின் காரணமாக, ஒரு பொறியாள
ராக இருந்ததன் காரணமாக, இன்றைக்குப் பல்வேறு சிக்கல்கள்
உள்ளிட்ட இந்தத் துறையிலே, இன்றைக்குச் சிக்கல்களை களை
கின்ற வகையிலே, இந்நாட்டு மக்களுக்கு நன்மையைப் பயக்
கின்ற வகையிலே, எதிர்கால தமிழ் சமுதாயத்தை, தமிழகத்தை
காப்பாற்றுகின்ற வகையிலே இன்றைக்கு இந்த நிதி நிலை
அறிக்கையை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்
உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அந்த வகையிலே, இந்த
மாமன்றத்திலே இருக்கின்ற அனைத்து மன்ற உறுப்பினர்களும்,
அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் வரவேற்றாலும் ஒருசிலர்
இதிலே குறைகளைச் சொன்னாலும் கூட, ஏகமனதாக.
மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் திறமையை,
வலிமையைப் பாராட்டியிருக்கிறார்கள் என்பதை எண்ணுகின்ற
நேரத்தில், நான் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

அதே நேரத்திலே இங்கே மின்சார வாரியத்தில் இருக்கின்ற
குறைகளையும், ஏற்படுகின்ற இடைஞ்சல்களையும் பற்றிப் பேசு
கின்ற நாம் ஒன்றை கவனத்தில் கொள்ளவேண்டும். இன்றைக்கு
மின்சார வாரியம் வழியாகக் கொடுக்கப்படுகின்ற மின்சாரத்தைப்
பொறுத்த அளவில், அது கிராமங்களாக இருந்தாலும் சரி,
நகரீயங்களாக இருந்தாலும் சரி, அங்கு வைக்கப்பட்டிருக்கின்ற
டிரான்ஸ்பார்மர்களின் மூலமாக விவசாயிகளுக்குக் கொடுக்கப்படு
கின்ற மின் அழுத்தத்தின் அளவு ஓரளவுக்குச் சீராக இருந்தாலும்
கூட, மின்சாரத் துறையிடமிருந்து அனுமதி பெறுகின்ற
அளவைவிட, அதிக குதிரை வேகமுள்ள இயந்திரத்தை விவசாயி
கள் உபயோகிக்கிறார்கள். நான் அனைத்து விவசாயிகளையும்
சொல்லவில்லை. அங்கொன்றும், இங்கொன்றுமாக சிலர் இருக்
கலாம். விவசாயப் பெருங்குடி மக்கள் சிலர் 5 ஆர்ஸ் பவர்க்கு
அனுமதி பெற்று, 7½ அல்லது 10 ஆர்ஸ் பவர் எஞ்சினை
உபயோகப்படுத்துகிறார்கள். இப்படி 5 குதிரை சக்திக்கு
அனுமதி பெற்று 7½ ஹார்ஸ்பவர் மோட்டார் வைத்துக்
கொள்வது, அல்லது 10 குதிரை சக்தி மோட்டார் வைத்துக்
கொள்வது, அதிகமான குதிரை சக்தி கொண்ட விசைகளைப்
பொருத்திக்கொள்வது போன்ற காரணங்களால். அளவிட்டு
சீராக வைக்கப்பட்டிருக்கிற டிரான்ஸ்பார்மர்கள் பல்வேறு
நேரங்களில் எரிந்து போகின்ற சூழ்நிலை உண்டாகி விடுகின்றது
என்பதை, விவசாயிகளுக்குப் பரிந்து பேசுகிற நாம் உணர்ந்தாக
வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கு நாம், இங்கே இத்தனை
குதிரை சக்தி அளவிற்குத்தான் இந்த டிரான்ஸ்பார்மர் சப்ளை
செய்ய முடியும், ஆகவே அதற்கு மேலே நாம் வைத்துக்
கொள்ளக்கூடாது என்று உணர்த்தியாக வேண்டும்.



1982 பிப்ரவரி 18] [டாக்டர் கே.பி. இராமலிங்கம்]

இன்றைக்கு இந்தியத் துணைக்கண்டத்திலேயே வேறு எந்த
மாநில அரசும் செய்யத் துணியாத கார்டு பில்லிங் ஆப் எனர்ஜி
சார்ஜ் என்ற அட்டை முறையை தமிழகத்திலே இருக்கிற
மின்சார அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்.
அதிலே பல்வேறு இன்னல்கள் இருக்கின்றன என்பதை மாமன்ற
உறுப்பினர்கள் குறிப்பிட்டிருந்தாலும் தற்சமயம் இருக்கிற
முறையில் இருந்து இது சற்று மாறுபட்டு இருக்கிறது. இந்த
முறை மிக நேர்த்தியாகவும். 4½ கோடி தமிழ்மக்களின்
6½ லட்சம் குடும்பங்களுக்கும் நேரடியாகச் சென்று இந்த
மாதம் இத்தனை யூனிட்டுகள் உங்களுக்கு ஓடியிருக்கின்றன என்று
அவ்வப்போது அவர்கள் தெரிந்து கொள்கின்ற அளவிற்கு இந்தத்
திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் நிச்சயமாகப்
பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதே நேரத்திலே கணக்கு எடுப்பதிலே, அதற்காக
நியமிக்கப்பட்டிருக்கும் அசெசர்கள் என்ற பணியாளர்களின்
எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கிறது என்பதை இந்த
நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதனால்
தான் பல்வேறு நகரங்களிலும் கிராமங்களிலும் இங்கே இருக்
கின்ற மாமன்ற உறுப்பினர்கள் பேசுகிற நேரத்திலே குறிப்
பிட்டதைப்போல, குறிப்பாக ரீடிங்குகள் போன்ற பகுதியிலே
சரியாகப் போய் எடுக்கப்படவில்லை, எடுப்பதற்கு வழியில்லை
என்று சொன்னது போன்ற நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன.
அப்படி தொழிலாளர்கள் பற்றாக்குறை காரணமாக இந்த
முறையிலே சற்று இடர்ப்பாடு ஏற்பட்டிருந்தாலும் கூட, இந்த
முறையை ஆரம்பிக்கிற இந்த நேரத்திலே சற்று இடர்ப்பாடுகள்
இருந்தாலும் கூட, நல்லதொரு நிலைமை பின்னாலே நமக்கு
வரும் என்ற நம்பிக்கையோடு இதை நாம் வரவேற்கக் கடமைப்
பட்டிருக்கிறோம்.

தமிழகத்தைப் பொறுத்தவரை இன்றைக்கு எந்த மட்டத்திலும்
பவர் கட் இல்லாத நிலை இருக்கிறது. மின்சாரத்தைப் பொறுத்த
வரை பற்றாக்குறை மாநிலமாக இருந்தாலும்கூட நாம் இப்படி
100-க்கு 100 சதவீதம் மின்சாரம் கிடைக்கின்ற வகையில்
வைத்திருப்பது மின்சாரத் துறையினுடைய திறமையைத்தான்
காட்டுகிறது.

சில நாட்களுக்கு முன்னாலே தூத்துக்குடி, நெய்வேலி போன்ற
இடங்களில் உள்ள இடர்ப்பாடு காரணமாக, அங்கே லோட்
ஷெட்டிங் இருக்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மை
தான். ஆனால் அதை வைத்துக் கொண்டு மின்சாரத்துறையில்
பவர் கட் இருப்பதுபோலவும், தமிழக அரசு சரியாக
நடவடிக்கை எடுக்காத காரணத்தால் விவசாயப் பெருங்குடி
மக்கள் பாதிக்கப்படுவது போலவும் ஒரு பிரச்சாரம் பல்வேறு
மட்டத்திலும் நடந்து கொண்டிருந்தாலும் உண்மையை அறிந்த
மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இதை உணர்ந்து
கொண்டிருப்பார்கள் என்று நான் கருதுகிறேன்.

[டாக்டர் கே. பி. இராமலிங்கம்] [1982 பிப்ரவரி 18

லோ ஷெட்டிங் என்று சொல்லப்படுகிற பவர் அதிகமாக வருகின்ற நேரத்திலே ஆங்காங்கு இருக்கிற சில டிரான்ஸ்பார்மர்களில் சில விசைகள் பழுதுபடுகின்ற சூழ்நிலை கடந்த 10 ஆண்டுகளாக நடந்து கொண்டு வருகிறது என்பதை இங்கே இருக்கிற மாமன்றத்து உறுப்பினர்கள் உணர்வீர்கள் என்று கருதுகிறேன். உண்மையான காரணத்தை இங்கே இருக்கின்ற மாமன்றத்து உறுப்பினர்கள் உணர்ந்து கொள்ளவேண்டுமென்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

(இரவு 7.40)

இங்கே திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்ட நேரத்திலே மின்சாரத் துறையிலே இருக்கின்ற பல்வேறு விசைகளை அதிகரித்து வந்தார்களா என்றால் இல்லை. மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு பவர் ஜெனரேஷனை அதிகப்படுத்துவதற்கு வழிவகைகள் செய்யவில்லை. ஆனால் உற்பத்தி இல்லாமல் இருக்கின்ற கம்பிகளை மாற்றியமைத்து வீட்டு மின்விசை அதிகம் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு அடிக்கல்லை நாட்டாமல், அஸ்திவாரம் போடாமல் கூரையை வேய்ந்த கதையாகத்தான் அவர்கள் விட்டுவிட்டுச் சென்றார்கள். அதனால் நான் இன்றைக்கு இப்படிப்பட்ட இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து அமைச்சர் அவர்களுடைய நேர்த்தியான திட்டம் பீக் ஹவர் ஷிப்ட் என்ற முறையை மாற்றியமைத்திருப்பது. ஏதோ பெயரளவிலே, ஏட்டளவிலேதான் அந்தத் திட்டம் இருந்தது. அந்தத் திட்டத்தை வசதி படைத்தவர்களும், திறமை படைத்தவர்களும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள். அதை மாற்றியமைத்த பிறகு எங்கேயும் எந்தக் குறையும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே இருந்த சீர்கேட்டைக் குறைத்ததற்காக நான் அமைச்சர் அவர்களின் திறமையைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இன்றைக்குத் தமிழக அரசு, புரட்சித் தலைவர் அரசு, பல்வேறு சிறிய திட்டங்கள் மூலமாக இன்னும் 5 ஆண்டுக் காலத்திற்குள்ளாக அதிக மின் உற்பத்தியை உருவாக்க முடியும் என்ற முறையிலே பல்வேறு திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். அதே நேரத்திலே மத்திய அரசைப் பொறுத்த வரையிலே அன்ட புலத்திலே பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் பிரதமராக இருந்தபோது பக்ரா நங்கல் திட்டத்தை எவ்வளவு வேகமாக நிறைவேற்ற முடியுமோ நிறைவேற்றி தானே முன்வந்து 900 மெகாவாட் மின் உற்பத்தியை ஏற்படுத்தி பஞ்சாப் மாநிலத்திற்கும் அரியானா மாநிலத்திற்கும் தேவையான மின்சாரத்தைக்



1982 பிப்ரவரி 18] [டாக்டர் கே. பி. இராமலிங்கம்]

கொடுக்கக்கூடிய சரித்திரத்தை உண்டாக்கினார்கள். அதைப் போன்று அவர்களுடைய புதல்வியார் திருமதி இந்திராகாந்தி அவர்களும் தமிழகத் திட்டத்திற்கு தானே முன்வந்து நின்று ஒகேனக்கல் திட்டத்தை துவக்கி வைத்து தமிழ்நாட்டிற்கும் கர்நாடக மாநிலத்திற்கும் மின்சாரத்திலே தன்னிறைவு பெறுவதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்றும் தேசியப் பாரம்பரியம் பேசுகின்ற தமிழக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற, தமிழக மக்களுக்காக வாதாடுகிறோம் என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைத்து அவர்களுடைய தலைவியாரிடம், இந்தியத் துணைக் கண்டத்தின் பிரதமரிடம் வாதாடிப் பெற்றுத்தருவார்கள் என்ற வேண்டுகோளை விடுக்கிறேன், அதிவேக டீசலினால் உருவாக்கப்படுகின்ற பிளான்ட் கேஸ்ட் அயர்ன் பிளான்ட்டை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இந்த ஆண்டு கொண்டுவருவதற்கான வழிவகைகள் செய்துகொண்டிருக்கிறார்கள். அதற்கு வேகமாக மத்திய அரசு அனுமதி அளித்து தமிழகத்திற்கு உலக வங்கியிலிருந்து மத்திய அரசின் மூலமாக அளிக்கப்படுகின்ற கடனுக்கு நிர்வாகச் செலவுக்கு என்று முக்கால் சதவீதம் வட்டியைத் தந்தாலும்கூட தமிழகத்திலே தருகிற நேரத்திலே 5 சதவீதம் நீங்கள் பெறுகிறீர்கள். முக்கால் பங்கை நிர்வாகச் செலவிற்கு மட்டும் எடுத்துக்கொண்டு வட்டியேதுமின்றி தமிழகத்திற்கு அதைத் தந்து உதவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தனியார் துறைக்கு மின்சார உற்பத்தியைத்தருவதைப்பற்றி திரு. திருவேங்கடம் மற்றும் உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அண்ணா அவர்களின் கொள்கையை விட்டு விலகியதாக ஆகாதா என்று கேட்டார்கள். இன்றைய சூழ்நிலையில் அவர்கள் தமிழகத்தின் நிலையை நன்றாகப் புரிந்து இருப்பார்கள் என்று கருதுகிறேன். தொழிலாளர்கள் பிரச்சினையாக இருந்தாலும், தொழிலாளர்களுக்கு வேலை வேலைவாய்ப்புக் கொடுக்க வேண்டிய பிரச்சினையாக இருந்தாலும் தொழிலாளர்கள் நிலை இங்கே நன்றாக இருந்தாலும்கூட தமிழகத்திலே தொழில்களைத் தொடங்க போதுமான வாய்ப்புகள் இருந்தாலும்கூட தொழிலதிபர்கள் இருந்தாலும்கூட, மன்றத்திலே உறுப்பினர்களாக இருக்கின்றவர்கள் சிலர் தொழிலதிபர்களாக இருந்தாலும்கூட அவர்கள் எல்லாம் இன்றைக்குத் தமிழகத்தை விட்டு வேறு மாநிலத்திற்குச் செல்கிறார்களே காரணம் என்ன என்பது அவர்களுக்குப் புரியும் என்று நினைக்கிறேன். மின்சாரப் பற்றாக்குறைதான் காரணமாக இருக்கிறது. மின்சாரம் இல்லையென்றால் மாண்புமிகு உறுப்பினர் வீட்டில் காலையிலே சட்டினிகூட அரைத்துத்தரமாட்டார்கள் மிக்ஸி வேலை செய்யாவிட்டால். இதையெல்லாம் அவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று கருதுகிறேன். அந்த வகையில் பவர் இல்லை, மின்சாரம்

[டாக்டர் கே. பி. இராமலிங்கம்] [1982 பிப்ரவரி 18

இல்லை என்றால் எந்தத் தொழிற்சாலையையும் துவங்க முடியாது; எந்தத் தொழிற்சாலையையும் நடத்துவதற்கான தகுதி இல்லாத சூழ்நிலை உருவாக்கப்பட்டுவிடும்.

இங்கே மாமன்றத்திலே பேசுகின்றபொழுது குறிப்பிட்டார்கள். இந்தியத் துணைக்கண்டத்திலேயே இரண்டாவது இடத்தைப் பெற்றிருந்த தமிழகம் ஏன் 11-வது இடத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறது என்று கேட்டார்கள். நான் தெரிவித்துக் கொள்கிறேன், 11-வது இடத்திற்கு தள்ளப்படவில்லை; நான்காவது இடத்தில்தான் நாம் இருக்கிறோம். அந்த நான்காவது இடத்திற்குக்கூட ஏன் தள்ளப்பட்டிருக்கிறோம் என்றால் மின்சாரப் பற்றாக்குறைதான் அதற்குக் காரணமே தவிர வேறொன்றுமில்லை. எனவேதான், அந்த வகையில் மின்சார உற்பத்தியை நம்மால் முடிந்த அளவிற்குச் செய்ய நாம் முயற்சியைச் செய்து கொண்டுதான் இருக்கிறோம். அதற்கு மேலும் நம்மால் மின்சாரத்தை உற்பத்தி செய்ய இயலவில்லை என்றால், மத்திய அரசு பல்வேறு சுணக்கங்களை உருவாக்கினாலும்கூட, தடைக் கற்கள் இருந்தாலும்கூட, தனியார் துறையாவது ஆரம்பித்துத் தனியார் தங்களுக்கு வேண்டிய மின்சாரத்தைத் தாங்களே தயாரித்து பல்வேறு தொழிற்சாலைகளை உருவாக்கி, அந்த தொழிற்சாலைகளின் மூலம் பல்வேறு தொழிலாளர் நண்பர்களுக்கு வேலை கொடுத்து பல்வேறு தொழிலாளர்களை உருவாக்குகின்ற கம்யூனிசக் கொள்கையின் அடிப்படையாகத்தான் அது அமையும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். தொழிலாளர்களை அதிகப்படுத்தி, தொழிலாளர்களுக்கு வேலை அதிகம் கொடுத்தால் அது கம்யூனிச கொள்கை வளர்வதற்கான வாய்ப்பாகத்தான் அமையும்.

**திரு. சி. கா. நல்லப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே. தனியாருக்குக் கொடுத்தால் அது நிறைவேற்றுவது என்பது கம்யூனிசக் கொள்கை அல்ல. இருக்கக் கூடிய உற்பத்திச் சாதனங்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்குவது என்பதுதான் அது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவை துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தியத் துணைக் கண்டத்திலே வேறு எந்த மாநிலத்திலேயும் பொதுவுடைமைக் கொள்கை முழுமையாகக் கடைப்பிடிக்கப்படுகிறதா? மேற்கு வங்கமானாலும் சரி, திரிபுரா மாநிலமாக இருந்தாலும் சரி, அங்கெல்லாம் முழுக்க முழுக்கப் பொதுவுடைமைக் கொள்கை கடைப்பிடிக்கப்படுகிறதா? என்றால், அவ்வாறு எடுத்துக் காட்ட முடியுமா என்றால் அங்கேயும் பொதுவுடைமைக் கொள்கை மட்டுமல்ல: முதலாளித்துவத் தத்துவக் கொள்கைகளும் பல்வேறு நேரங்களிலே கடைபிடிக்கப்பட்டு வருகிறது என்பதை உணர்த்த ஆசைப்படுகிறேன்.



1982 பிப்ரவரி 18] [டாக்டர் கே. பி. இராமலிங்கம்]

ஆனால் சமுதாயத்திலே வறுமையின் கீழ் இருப்பவர்களுக்கும், சமுதாயத்தில் நெரிசலிலே சிக்கி நலிந்து இருக்கிறவர்களுக்கும் வேலை வாய்ப்பை அளிக்கவும், பல்வேறு தொழிற்சாலைகளை உருவாக்கவும் இது அடிகோலியாக அமையும் என்பதற்காகத்தான் இந்தத் திட்டத்தைத் தமிழக அரசு கொண்டு வருகிறது என்பதை நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், நாமகிரிப்பேட்டையில் ஒரு துணை மின் நிலையத்தை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியாரிடம் கொடுப்பதைப்பற்றிப் பல்வேறு குறைபாடுகளைச் சொல்லுகிறார்கள். ஆனால் அரசுத் துறையில் இருந்த சமயநல்லூர் பிளாண்டையே விற்றவர்கள், கம்பராமாயணக் கதாநாயகனைப்போல ஓடிப்போனவர்களெல்லாம் உண்டு என்று சொல்லி, வாய்ப்புத் தந்தமைக்காக நன்றி கூறி விடை பெறுகிறேன்.

**திரு. கு. ராமணி:** துணைத் தலைவரவர்களே, கம்யூனிஸ்டுகள் ஆளுகின்ற மேற்கு வங்காளத்திலும், மற்ற இடங்களிலும் கம்யூனிசக் கொள்கைகளை ஒழுங்காக முற்றிலும் அமல் நடத்துகிறார்களா என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமலிங்கம் அவர்கள் கேட்டார்கள். இந்திய நாட்டினுடைய சமுதாய அமைப்பைப் பொறுத்த வரையில் இன்றையதினம் முதலாளித்துவ சமுதாய அமைப்பாகத்தான் இருக்கிறதே தவிர இது கம்யூனிச சமுதாய அமைப்பு அல்ல. இன்றைக்கிருக்கின்ற நிலையில் அவ்வாறு கம்யூனிச அமைப்பை உருவாக்க முடியாது. இன்றைக்கு மந்திரி சபைகளை நடத்துகிறோம், இங்கே இருக்கின்ற சட்டத்தின் கீழ், கம்யூனிசத்தையும், சோஷலிசத்தையும் அமலாக்குவதற்கு இன்னும் எத்தனை படிகள் தாண்ட வேண்டுமென்ற தத்துவத்தைப்பற்றி அவர் புரியாத தத்துவ வறுமையில் பேசுகிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் அளிவிற்கு நான் அனுபவம் பெறாவிட்டாலும் கூட, நான் குறிப்பிட்டு ஒரு துறையைப் பற்றிச் சொல்லவில்லை: அனைத்துத் துறைகளிலேயும் எந்தவொரு மாநிலத்திலேயும் இந்தியத் துணைக் கண்டத்திலே முழுக்க முழுக்க பொதுவுடைமைக் கொள்கையை அமல் நடத்துவதற்குத் தகுதியற்றிருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் எங்களை மட்டும் கேட்பது எப்படிச் சரியாகும் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

**திரு. என். வரதராஜன்:** துணைத் தலைவரவர்களே, தவறான கருத்துக்குப் போகக் கூடாது என்பதற்காகத் ஒரு விளக்கம் அளிக்க விரும்புகிறேன்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தப் பிரச்னையில் மேலும் விவாதம் வேண்டாம்.

*திரு. கெ. சொக்கலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1981–82 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை குறித்தும், 1980-81 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கை குறித்தும் நடைபெறுகின்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்காகத் தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இரவு 7.50)

இந்த இலாகா பொறுப்பை ஏற்றிருக்கிற அமைச்சர் அவர்கள், பி. இ. பட்டம் பெற்றவர். இந்த இலாகாவிலே திறமையாக செயல் படுவதிலே எந்தவித மாறுபட்ட கருத்தும் இல்லை. அவர் இங்கே கொடுத்திருக்கிற நிதிநிலை அறிக்கையிலே சில புள்ளி விவரங்களையெல்லாம் தெரிவித்திருக்கிறார்கள். அதில், 1600 மெகாவாட்டை, 2101 மெகா வாட்டாக, இந்த அரசு கூடுதலாக்கி இருக்கிறது என்று இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அப்படிக் கூடுதலாக்கியிருப்பதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் பெ. சு. திருவேங்கடம் கூறியதைப் போல, எவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்தாலும்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அண்ணன்-தம்பி என்றெல்லாம் பேசக்கூடாது.

திரு. கெ. சொக்கலிங்கம்: விவசாயிகளுக்குப் போதிய நன்மைகள் கிடைக்கவில்லை. இங்கே உறுப்பினர் சேலம் ஆறுமுகம் கூடச் சொன்னார். தி.மு.க. ஆட்சிக் காலத்திலே மின்சாரம் அடிக்கடி நின்றுவிடும் என்று அப்பட்டமாக உண்மைக்கு மாறாகச் சொல்கிறார். ஆனால். அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கிறது என்று இங்கே சொல்கின்றார். இப்பொழுது உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஒரு பம்ப் செட்டை உபயோகிக்க வேண்டுமென்றால், 3 மணி நேரம், 4 மணி நேரம்தான் உபயோகிக்கக்கூடிய நிலையிருக்கிறது. குறிப்பாக ஒரு பகுதியிலே 5,6 பம்ப் செட்கள் இருக்கின்றன என்றால், அங்கு லோட் அதிகமாகி, மின்சாரம் வருவதில்லை, இப்படிப்பட்ட நிலைமைகள், குறிப்பாக, செங்கல்பட்டு மாவட்டத்தில் அதிகமாக இருக்கின்றன. இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், கலைஞர் காலத்தில் எண்ணூர் அனல் மின்சார நிலையம், கல்பாக்கம் அனல் மின்சார நிலையம், தூத்துக்குடி அனல் மின்சார நிலையம் எல்லாம் உருவாக்கப்பட்டது. அப்பொழுது சேலம் ஆறுமுகம் எந்த இயக்கத்தில் இருந்தாரோ எனக்குத் தெரியவில்லை, இப்பொழுது அங்கே இருக்கிறார்.





திரு. சேலம் மு. ஆறுமுகம்: பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷன். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்பாக்கம் அனல் மின் நிலையத் திட்டம் யாருடைய ஆட்சிக் காலத்தில், எந்த அரசால் நிறுவப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அறிவிப்பாரா?

திரு. கெ. சொக்கலிங்கம்: குறிப்பாக, எந்தக் கிராமத்தை எடுத்துக் கொண்டாலும் விளக்கே கிடையாது. மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் 10 சதவிகிதம் விளக்குகூட எரியவில்லை என்று சொன்னார்கள். அது உண்மைதான். உங்களுக்கு நன்றாகத் தெரியும், எந்தக் கிராமத்திலும் இப்பொழுது பஞ்சாயத்து தலைவர் இல்லை. தலைவர் இருந்தாலாவது, விளக்கு எரியவில்லையென்று அவரிடம் சொல்லலாம். அந்த வாய்ப்பும் இப்பொழுது கிடையாது. எந்தக் கிராமத்திலும் தெரு விளக்குகள் எரிவது கிடையாது. பல்புகள் போடுகிறார்கள், 1 வாரம்கூட எரிவதில்லை. காரணம், தயாரிப்பிலேயே தரம் குறைந்திருக்கின்றன என்று நான் தலைவர் மூலமாக சொல்லிக் கொள்கிறேன். குறிப்பாக எல்லா கிராமங்களிலும் இப்படிப்பட்ட நிலைமையே இருக்கிறது. அது மட்டுமல்ல, இப்போதிருக்கிற கம்பங்கள் தரம் வாய்ந்தவையாக இல்லை. சென்ற வாரம்கூட ஒரு கிராமத்தில் சுற்றுப்பயணம் செய்கிற நேரத்தில் பார்த்தேன். கம்பங்களைக் கொண்டு வந்து இறக்குகிறார்கள். இறக்கிப் போட்ட உடனே உடைகிறது. சிமென்ட்டெல்லாம் போய் கம்பி மட்டும்தான் இருக்கிறது. கம்பங்கள் தயாரிப்பதிலும் தரம் குறைந்திருக்கிறது என்பதை நான்தலைவர் மூலமாக அமைச்சருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்,

6-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், அதாவது, 1980-85-ல் மொத்தம் ரூ. 1,023 கோடி அளவுக்குத் திட்டங்களைச் செயல்படுத்த திட்டக் கமிஷன் அனுமதி கிடைத்துள்ளது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அவர் எவ்வளவு வேண்டுமானாலும் பணம் பெறலாம். ஆனால், செலவழிக்கின்ற விதத்தில்தான் சிரமம் இருக்கிறது. அமைச்சர் கெட்டிக் காரத்தனமாகச் செயல்படுபவர் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

இருந்தாலும்கூட தனியார் தொழிற்கூடங்களுக்கு மின் இணைப்பு கிடைப்பதில்லை. இதிலே கூட சொல்லப்பட்டிருக்கிறது. 24 மணி நேரத்தில் மின் இணைப்பு கொடுக்கப்படும், மின்சாரம் தவறாமல் கிடைக்கும் என்று சொல்லி இருக்கிறீர்கள். ஆனால் என்னுடைய தொகுதியில் மறைமலை நகரில் சிறு தொழிற்சாலைகள் துவங்கப்பட்டு, 3 வருடம் 4 வருடம் ஆகியும் கூட, இன்னும் மின் இணைப்பு அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிறு தொழிற்சாலைகளின் நிலை இப்படி இருக்கின்றது.

அது மட்டுமல்ல, நீர்தேக்கத் தொட்டிகளுக்கும் மின்
இணைப்பு கிடைக்கவில்லை. என்னுடைய திருப்போரூர்
தொகுதியில் ஒரகடம் என்னும் கிராமத்தில் நீர்த்தேக்கத் தொட்டி
கட்டப்பட்டு 3 வருட காலம் ஆகியும் இதுவரையில் மின்
இணைப்பு கொடுக்கப்படவில்லை என்பதை இந்த அவையின்
மூலமாக அமைச்சருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். பல
ஒன்றியங்களில் இப்படிபட்ட நிலை இருக்கின்றது. குறிப்பாக
என்னுடைய தொகுதியில் உள்ள ஒரகடம், கேளம்பாக்கம்
பகுதிகளில் இப்படிப்பட்ட நிலை இருந்து, அதற்கு உடனடியாக
மின் இணைப்பு கொடுக்கப்படாமல் தாமதம் ஏற்படுகிறது
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து அரிசனக் குடியிருப்புகளுக்கு ஒரு லைட் என்னும்
திட்டத்தைக் கொண்டு வந்தீர்கள். அதை நான் வரவேற்
கிறேன். பாராட்டுகிறேன். ஆனால் அந்த திட்டம் முழுமை
யான அளவில் நடைபெறுகிறதா என்றால் நிச்சயமாக இல்லை
என்றுதான் சொல்லவேண்டும். என்னுடைய தொகுதியில்
பையனூர் என்னும் கிராமத்தில் 500 வீடுகள் இருக்கின்றன.
ஆனால் அங்கே 10 வீடுகளுக்கு மட்டும் மின்விளக்கு கொடுக்கப்
படுகிறது. மற்றவர்கள் தங்களுடைய வீடுகளுக்கு வர
வில்லையே என்று சொல்லி ஒரு போராட்டமே நடத்தி கொண்டு
இருக்கிறார்கள். ஒரு கிராமத்தில் 200 வீடுகள் இருந்தால் அங்கே
5 வீடுகளுக்குத்தான் இணைப்பு கொடுக்கும் நிலை இருக்கின்றது.
இந்த நிலை மாற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் குறிப்பாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புவது,
1977லே இந்த சட்டமன்றத்திலே கூட நான் சொல்லி
இருக்கிறேன். மீனவர்கள் வாழ்கின்ற பகுதிகளிலே
இருக்கின்ற மின்சார கம்பிகள் துருப்பிடித்து விடுகின்றன.
முட்டுக்காட்டிலிருந்து மாமல்லபுரம் வரையில் . மீனவர் குடி
யிருப்புப் பகுதிகளில் ஒரு கிராமத்தில் கூட தெருவிளக்கு
எரிவதில்லை. அமைச்சர் அவர்கள் கூட ஒருமுறை ஒரு
கேள்விக்குப் பதிலளிக்கும்போது சொன்னார்கள், அலுமினியம்
கலந்த உலோகத்திலான கம்பிகளைப் போடலாம்
என்றார்கள். ஆனால் இதுவரையில் போடவில்லை என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த 3, 6 ஆணடு காலமாக
மீனவர்கள் வாழும் பகுதியில் ஒரு இடத்தில் கூட தெரு
விளக்குகள் எரியாத அவல நிலை இருக்கின்றது.

அடுத்து, விவசாயிகளுக்கு பம்ப் செட்டு இணைப்பு கொடுக்கப்
படுகிறது. நான் ஏற்கனவே சொன்னேன். விவசாயிகள்
யாரும் சொந்த முதலீடு செய்து பம்ப் செட்டு வாங்குவதில்லை
கடன் பெற்றுத் தான் வாங்குகிறார்கள்: அப்படி கடன் வாங்கி
மோட்டார் வாங்கி, 5, 6 வருடம் ஆகியும் அவர்களுக்கு
இணைப்பு கிடைப்பது இல்லை. ஆனால் ஒன்றைச் சொல்ல
விரும்புகிறேன். இந்த ஆட்சியில் விவசாயிக்குக் கிடைக்கிறதோ
இல்லையோ, சினிமாக் கொட்டைகளுக்கு மட்டும் மின் இணைப்பு



உடனடியாகக் கிடைத்து விடுகிறது. அவர்களுக்கு முன்னுரிமை
கொடுக்கப்படுகிறது. அந்த நிலைமை நீடிக்கவிடாமல் இருக்க
வேண்டும் என்று அமைச்சர் அவர்களைத் தலைவர் மூலமாகக்
கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல என்னுடைய தொகுதியில் உள்ள மறைமலை
நகர்ப்பகுதியில் தொழிற்பேட்டைகள் அதிகமாக இருக்கின்ற
காரணத்தால் அங்கே மின்சாரம் நிச்சயமாகப் போதவில்லை.
அதனால் அந்தத் தொழிற்சாலைகளில் அடிக்கடி மின் கட்டுப்பாடு
வருகிறது. அதைத் தடுக்கும் வகையில் அங்குள்ள தொழிற்சாலை
களுக்குத் தேவையான மின் இணைப்பும், கூடுதலான மின்சாரமும்
கொடுக்க வேண்டும் என்றுகேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி
கூறி முடிக்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின்
இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 19-2-82
காலை 9·00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7·58 மணிக்கு ஒத்திவைக்கப்
பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

101. தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின்
1980-81 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் ஆண்டு அறிக்கை
(ஆங்கிலம், தமிழ்) 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின்
(மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன்
வைக்கப் பெற்றது).

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்

28. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1981-82 ஆம் ஆண்டுக்
கான நிதிநிலை அறிக்கை குறித்தும் 198 -81-ஆம் ஆண்டுக்கான
துணை நிதிநிலை அறிக்கை குறித்தும், விவாதத்தைத் தொடங்கி
வைத்து மின்சாரத்துறை அமைச்சர் மாண்புமிகு
திரு ச. இராமச்சந்திரன் அவர்கள் ஆற்றும் உரை (தமிழ்,
ஆங்கிலம்).

29. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1980-81-ஆம் ஆண்டுக்
கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின் போது, சட்ட
மன்ற உறுப்பினர்கள் வழங்கிய கருத்துரைகளும் அக்கருத்
துரைகள் மீதான குறிப்புரைகளும் அடங்கிய விவர அறிக்கை
(தமிழ், ஆங்கிலம்).

30. 1982 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழக, அண்ணா
மலைப் பல்கலைக்கழக, பேரறிஞர் அண்ணா தொழில்நுட்பப்
பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பு
(சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண். 8/1982)

31. 1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 9/1982).

32. 1982 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்ப வியல் பல்கலைக் கழக (திருத்தம், தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 10/1982).

33. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) திருத்த சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண், 11/1982).

## இணைப்பு I

232-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினாதாள் 244-க்கான விடையைக் காண்க).

### விவர அறிக்கை.

ஆலய ஊழியர்களின் சம்பள விகிதம் அண்மையில் மாற்றியமைக்கப்பட்டது குறித்து :

2. துணை/உதவி ஆணையர்கள் செயல் அலுவலர்களாக உள்ள ஆலயச் சிப்பந்திகளுக்கு 1-7-1979 முதல் ரூபாய் 10 முதல் ரூபாய் 40 வரை ஊதிய உயர்வு கிடைக்கும் வகையில் திருத்தப்பட்ட சம்பள விகிதம் அனுமதிக்கப்பட்டது. ஆதாவது ஆலய ஊழியர்களுக்கான சம்பளம் அந்தந்த ஆலயங்களின் மொத்த வருவாயில் 30 சதவீதத்திற்கு மிகாவண்ணம் வழங்கப் பட்டது. இதர ஆலய ஊழியர்களுக்கும் மேல் நிலை சிப்பந்திகளுக்கு மாதம் ரூ. 10 வீதம் கீழ்நிலை சிப்பந்திகளுக்கு மாதம் ரூ. 5 வீதமும் 1-7-1979 முதல் சம்பளத்தில் உயர்வு அளிக்கப் பட்டது. தற்போது ஆலயச் சிப்பந்திகள் சம்பளச் செலவு அனைத்து வருவாயில் 30 சதவீதத்திலிருந்து 40 சதவீதம் வரை உயர்த்தப்பட்டுள்ளது.

3. ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசாமி ஆலய பணியாளர்களின் அகவிலைப்படி மற்ற ஆலயங்களின் அகவிலைப்படிக்கு வித்தியாசமாக இருந்ததால், அகவிலைப்படியை சம்பளத்தில் சேர்த்து மீண்டும் 1-2-1980 முதல் சம்பள விகிதம் திருத்தி புதிய சம்பளப் பட்டியல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசாமி ஆலயத்தின் சிப்பந்திகள் சம்பள விகிதம் மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் கோவில் பணியாளர்களுக்குக் கொடுக்கப்படும். சம்பள விகிதத்தினையொட்டி 1-2-1981 முதல் திருத்தி 28-2-1981-ல் புதிய சம்பளப்பட்டியல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.



மைலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் ஆலயப் பணியாளர்களுக்கு 1-7-1980 முதல் சம்பள விகிதத்தை திருத்தி அளிக்கப் பட்டுள்ளது. உதவி ஆணையர்/துணை ஆணையர் அந்தஸ்தில் செயல் அலுவலர் உள்ள ஆலயங்கள் தவிர இதர ஆலயங்களில் 1979 முதல் சுமார் 220 ஆலயங்களில் சம்பள விகிதம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. குறைந்த பட்சம் ரூ. 5, அதிக பட்சம் ரூ. 40-ம் ஊதிய உயர்வு கிடைக்கும் வகையில் சம்பளப் பட்டியல்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

1-2-1980 முதல் சிப்பந்திகள் சம்பளச் செலவு ஆலய வருமானத்தில் 30 சதவீதத்திற்குள் உள்ள எல்லா ஆலயங்களில் உள்ள ஊழியர்களுக்கும் கீழ்க்கண்ட விகிதங்களின்படி அகவிலைப் படி இந்து சமய அறநிலையத் துறை ஆணையாளர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

| அடிப்படைச் சம்பளம். | அகவிலைப்படி நிர்ணயம். |
|---|---|
| ரூ. 199 வரை | ரூ. 10 |
| ரூ. 200 முதல் ரூ. 299 வரை | ரூ. 15 |
| ரூ. 300 முதல் ரூ. 399 வரை | ரூ. 20 |
| ரூ. 400 முதல் ரூ. 499 வரை | ரூ. 25 |
| ரூ. 500 முதல் ரூ. 599 வரை | ரூ. 30 |
| ரூ. 600 முதல் ரூ. 899 வரை | ரூ. 35 |
| ரூ. 900-க்கு மேல் | ரூ. 40 |

மேலும், ஆலய ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி முதலியன கீழ்க்கண்டவாறு 1-2-1980 முதல் வழங்க இந்து சமய அறநிலையத் துறை ஆணையாளர் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது.

| | வீட்டு வாடகைப் படி. | நகர ஈட்டுப்படி. |
|---|---|---|
| மேல் நிலைப் பணியாளர்கள் | ரூ. 15 | ரூ. 10 |
| கீழ்நிலைப் பணியாளர்கள் (பாரா, திருவலகு, மாலைகட்டி தோட்டம், காவல் கடைநிலை மற்றும் அதற்கு குறைவான அந்தஸ்தில் உள்ளவர்கள்), | ரூ. 10 | ரூ. 5 |

துணை மற்றும் உதவி ஆணையர் அந்தஸ்தில் செயல் அலுவலர்களாக உள்ள ஆலயங்களில் சிப்பந்திகளுக்கு 1-10-1980 முதல் கீழ்க்கண்ட விகிதப்படி அகவிலைப்படி உயர்த்தி வழங்க ஆணையரால் உத்திரவிடப்பட்டுள்ளது.

| அடிப்படைச் சம்பளம். | அகவிலைப்படி நிர்ணயம்: |
|---|---|
| ரூ. 199 வரை | ரூ. 20 |
| ரூ. 200 முதல் ரூ. 299 வரை | ரூ. 25 |
| ரூ. 300 முதல் ரூ. 399 வரை | ரூ. 30 |
| ரூ. 400 முதல் ரூ. 499 வரை | ரூ. 35 |
| ரூ. 500 முதல் ரூ. 599 வரை | ரூ. 40 |
| ரூ. 600 முதல் ரூ. 899 வரை | ரூ. 50 |
| ரூ. 900-க்கு மேல் | ரூ. 60 |

மேலும் 1-1-1981 முதல் கிராமப்புறங்களில் வீட்டு வாடகைபபடி கிடைக்காத இடங்களில் கிராமப்படியாக ரூ. 5 வழங்க இந்து சமய அறநிலையத் துறை ஆணையரால் உத்தரவிடப்பட்டுள்ளது. இதுவரை ஆலயச் சிப்பந்திகள் சம்பளச் செலவு ஆலயத்தின் வருவாயில் 30 சதவீதமாக இருந்ததை 40 சதவீதமாக உயர்த்தி இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையரால் உத்தரவிட்ட பின்பு 1-4-1981 முதல் உதவி ஆணையர் நிலையிலுள்ள செயல் அலுவலர் உள்ள ஆலயங்களின் பணியாளருக்கு ரூ. 650 வரை அடிப்படை சம்பளத்தில் 20 சதவீதமும் அதற்கு மேல் 15 சதவீதமும் அகவிலைப்படி வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி ஈமி கோயில் பணியாளர்களுக்கும் அடிப்படைச் சம்பளத்தில் 15 சதவீதம் முதல் 20 சதவீதம் வரை 1-7-1981 முதல் அகவிலைப் படி வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதர ஆலயப் பணியாளர்களுக்கு 1-7-1981 முதல் ரூ. 400 மாத அடிப்படைச் சம்பளம் வாங்குபவருக்கு ரூ. 45-ம் அதற்கு மேல் ரூ. 60-ம் அகவிலைப்படி உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், எந்த ஆலயப் பணியாளர் ஒருவரின் அடிப்படைச் சம்பளம், அகவிலைப்படி ஆகியவைகளின் மொத்தம் மாதம் ஒன்றுக்கு ரூ. 100-க்கு குறைவாக இருக்குமானால், இது குறித்து விவரங்கள் பெற்று இதனை நிவர்த்திக்க ஆணையர் தனி நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இவ்வாறாக அவ்வப்போது ஆலய ஊழியர்களின் கோரிக்கைகள் ஆணையரால் பரிவுடன் பரிசீலிக்கப்பட்டு நிவாரணம் வழங்கப் பட்டு வருகிறது.



## இணைப்பு II

(233ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 245-க்கான விடையைக் காண்க)

### விடை

(அ) மற்றும்(ஆ) நீலகிரி மாவட்டத்திலுள்ள அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில், 1980-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20-ஆம் நாள் உதவி தொழில் ஆணையர் முன்னிலையில் தொழில் தகராறு சட்டத்தின் விதி 12(3)-ன் கீழ் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி, தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது. இவ்வொப்பந்தத்தின்படி அரசு தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம், தனியார் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தைவிட சற்று குறைவாக உள்ளது. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் செடிகள் முதிர்ச்சி அடையா இளஞ்செடிகளாக இருப்பதனால் வருமானம் குறைவாக உள்ளது. எனவே, கழகம் இழப்பிலேயே இயங்கி வருகிறது. இதற்கு மாறாக தனியார் தேயிலைத் தோட்டங்கள் நன்கு நிலைப்படுத்தப்பட்டுள்ளதால் அதிக வருமானம் ஈட்டி வருகின்றன. மேலும் தனியார் தேயிலைத் தோட்டங்கள் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழக செய்வதுபோல் ஆண்டுதோறும் குறிப்பிட்ட அளவு இலங்கை அகதிகளை வேலைக்கு அமர்த்துவதோ, புதிய தோட்டங்களை உருவாக்குவதோ இல்லை. மேற்கூறிய காரணங்களால் நீலகிரி மாவட்டம் கூடலூர் தாலூகா மற்றும் பகுதிகளில் உள்ள அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தனியார் தேயிலைத் தோட்டங்களில் கொடுக்கும் அளவு சம்பளம் கொடுக்க இயலவில்லை.

## இணைப்பு III

(236-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 246-க்கான விடையைக் காண்க)

### விரிவான அறிக்கை

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) ஊரக ஊழியர்கள் பயிற்சி பெற்று புதிய நுட்ப முறைகளை உழவர்களிடையே பரப்புவதற்கு வகை செய்யும் முறையில் விரிவாக்கப் பிரிவினை வலுப்படுத்த உத்-

தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் வேளாண்மைத் துறையிலும், தோட்டக்கலைத் துறையில் நீலகிரி மாவட்டத்திலும் அமுல க்கப் படும். உலக வங்கியின் உதவியுடன் நாடு முழுவதும் இத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளதால் தமிழ்நாடும் இதில் சேர்ந்து கொள்ள வேண்டுமென்று மத்திய வேளாண்மை அமைச்சர் குறிப்பிட்டார். ரூபாய் 36,47 கோடி செலவில் இத் திட்டம் தய ரிக்கப்பட்டுள்ளது. இதில் 70 சதவிதம் உலக வங்கி கடனாக வழங்கும். மற்ற செலவு மத்திய அரசும் மாநில அரசும் ஏற்கும். உலக வங்கி இத்தொகையை 1982 முதல் 1987 வரை ஆறு ஆண்டுகளில் வழங்கும். இக்கடனுக்கு ஆண்டிற்கு ¾ சதவிகிதம் பணி செலவாக (Service ch rge) கொடுக்க வேண்டும். கடன் தொகை 1991லிருந்து 2031 வரையில் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

2. இத்திட்டம் இரண்டு கட்டமாக அமுல க்கப்படும்; முதலில் 1981ல் செங்கல்பட்டு, தஞ்சை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், மதுரை, கோவை: தர்மபுரி மற்றும் நீலகிரி மாவட்டங்களிலும், பிறகு 1982ல் மற்ற ஏழு மாவட்டங்களிலும் அமுலுக்கு கொண்டு வரப்படும். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு செலவு முழுவதும் தமிழ்நாடு அரசு ஏற்கும். இத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன—

(1) வேளாண்மை இயக்குநர் முதல் கீழே கிராம விரிவாக்க தொழிலாளர் வரை ஓரே கட்டுப்பாட்டின் கீழ் இத் திட்டம் அமையும். தற்போது ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள வேளாண்மைப் பணியும் வேளாண்மைத் துறைக்கு மாற்றப்பட்டு ஊரகு வளர்ச்சி துறையில் ஒவ்வொரு வட்டாரத்திலிருந்தும் மூன்று ஊரகு வளர்ச்சி அலுவலர்கள் வேளாண்மை துறைக்கு மாற்றப் படுவர். இடுபொருள் அளிப்பது, தரக்கட்டுப்பாடு, விதை உற் பத்தி, இவைகள் தவிர மற்ற எல்லா திட்டங்களும் இத் திட்டத் தின் கீழ் அமையும், நீலகிரி மாவட்டத்தில் இத் திட்டம் தோட்டக்கலை இயக்குநரின் கீழ் செயல்படும்.

(2) தமிழகத்திலுள்ள 38·22 லட்சம் பண்ணை குடும்பங்கள் 4,777 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவும் ஒரு கிராம விரிவாக்கப் பணியாளர் பொறுப்பில் இருக்கும். ஒரு பணியாள ரிடமுள்ள 800 பண்ணைக் குடும்பங்களும் 100–150 குடும்பங்கள் கொண்ட எட்டு தொகுதிகளாக பிரிக்கப்படும். ஒவ்வொரு தொகுதியும் இப் பணியாளர்களால் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை ஒரு குறிப்பிட்ட நாளன்று சென்று பார்க்கப்படும். பண்ணைக்குச் செல்லுதல், கிராம கூட்டங்கள் நடத்துதல், பயிற்சி பெறுதல், மேல் அலுவலர்களிடமிருந்து தரப்படும் வேளாண்மை உத்திகளை விவசாயிகளுக்கு அறிவுறுத்தல் போன்ற பணிகளை ஒவ்வொரு பணியாளரும் செய்ய வேண்டும். இரண்டு வாரங் களில் எட்டு நாட்கள் இவ் வேலைகளுக்கும், ஒரு நாள் பயிற்சிக்கும், ஒருநாள் மேல் அலுவலர்களுடன் கலந்தாலோசிப்பதற்கும் மற்ற



நாட்களில் விவசாயிகளுக்கு வேண்டிய இடுபொருள்களும் இருக் கின்றனவா என்று அறிந்து துறையின் நடவடிக்கைகளை ஒருங் கிணைக்கவும் பயன்படுத்தப்படும். இப்பணியாளர்கள் தற் போதுள்ள உதவி வேளாண்மை அலுவலர் தரத்தில் இருப்பார்கள்

(3) தொழில் நுட்ப வல்லுநர்கள் பணியாளர்களுக்கு பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை முக்கிய பயிற்சி அளிப்ப துடன் ஆறு மாதத்திற்கு ஒரு முறை பருவத்திற்கேற்ப பயிற்சி யும் அளிக்கப்படும். விரிவாக்கப் பணியாளர்களுக்கு பதினைந்து நாட்கள் முதல் ஒரு மாதத்திற்கு பயிற்சி அளிக்கப்படும். இது தவிர, மாநிலத்திற்கு வெளியிலும் குறைந்த கால பயிற்சி பணி யாளர்களுக்கும் உதவி அலுவலர்களுக்கும் அளிக்கப்படும்.

(4) 6-10 உதவி வேளாண்மை அலுவலர்களையும், 50 பணி யாளர்களையும் மேற்பார்வையிட ஒரு வட்டத்திற்கு (சிறியதாக இருந்தால் இரண்டு வட்டங்களுக்கு) ஒரு உதவி வேளாண்மை இயக்குநர் அமர்த்தப்படுவர். ஒவ்வொரு வட்டத்திற்கும் வேளாண்மை இயலறிஞர்களும், பயிர் பாதுகாப்பு வல்லுநர்களும் தகவல் மற்றும் பயிற்சி வல்லுநர்களும், உதவி வேளாண் மை அலுவலர்களும் (இடுபொருள்) உதவியாக இருப்பார்கள்.

(5) ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு இணை வேளாண்மை இயக்குநர் இத்திட்டத்துடன் மற்ற எல்லா வேளாண்மை நடவடிக்கைக்கும் பொறுப்பேற்றிருப்பார்கள். இத்திட்டத்திற்கு மட்டும் தனியாக துணை இயக்குநர்களும் இருப்பார்கள். ஒவ் வொரு வட்டத்திற்கும் இருப்பது போன்று மாவட்டத்திற்கும் இணை இயக்குநருக்கு உதவியாக துணை இயக்குநர் பதவியிலும் தொழில் நுட்ப அலுவலர்கள் இருப்பார்கள்.

(6) இத்திட்டத்தின் அலுவலர்களுக்கு அவர்கள் வேலை செய்யும் இடத்திற்கு அருகில் வீடு கட்டிக் கொடுக்கப்படும். சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் வாங்குவதற்கு எளிய முறையில் கடன் வசதி வழங்கப்படும்.

(7) பணியாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் பயிற்சி அளிக்க ஒளி ஒலிக் கருவி பயன்படுத்தப்படுவதுடன் அவர்களுக்கு செய்தி அறிவிப்பு முறைகளும் கற்பிக்கப்படும்.

## இணைப்பு IV

(355ம் பக்கத்தில் அடிக்குறிப்பைத் காண்க.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அவை முன் வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின் வாரியத்தின் 1981–82ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை, 1980–81 ஆம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கை, ஆகியவற்றை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் முன் மொழிகிறேன்.

2. தமிழ்நாடு மின் வாரியம், தமிழ்நாடு மின்சார ஆலோசனைக் குழுவின் ஒப்புதலுடன், இந்த நிதிநிலை அறிக்கைகளை 1948-ம் ஆண்டு மின்சக்தி (வழங்கல்) சட்டத்தின் 61-ம் பிரிவின்படி அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது. மின் வாரியம் செயல்படுவது பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை அரசும், வாரியமும் கருத்தில் கொள்ளும். கடந்த ஆண்டு நடைபெற்ற விவாதத்தின்போது மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் மீது வாரியம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை விளக்கும் அறிக்கை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தனியே அனுப்பப் பட்டுள்ளது.

3. மின்சாரத்துறையின் முக்கிய அம்சமான நிறுவப்பட்டுள்ள மின் உற்பத்தித் திறனை முழுவதும் பயன்படுத்துவதே நம் முடைய தலையாய குறிக்கோளாக உள்ளது. 1981-ம் ஆண்டு சனவரித் திங்கள் நான் அளித்த விளக்கத்தில் இம்மாநிலத்தில் உள்ள அனல் மின் நிலையங்களின் செயல்பாட்டுத் திறனை அதிகரிப்பதற்காக எடுத்துக் கொண்ட பல்வேறுபட்ட நடவடிக் கைகள் பற்றிக் குறிப்பிட்டேன். இந்நடவடிக்கைகளின் விளை வாக, குறிப்பாக, 1981-ம் ஆண்டின் முதல் அரை ஆண்டில் அனல்மின் நிலையங்களிலிருந்து பெறப்படும் மின்சார அளவில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

4. கீழ்க்கண்ட அட்டவணை கடந்த இரண்டு வருடங்களில் இருந்த மின்சக்தி நிலவரத்தைக் காட்டுகிறது.

(மில்லியன் யூனிட்களில்)

| | 1981 | | 1980 | |
|---|---|---|---|---|
| | சனவரி டிசம்பர். | சனவரி ஜூன். | சனவரி டிசம்பர். | சனவரி ஜூன். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| எண்ணூர் | 1,577 | 859 | 1,350 | 815 |
| பேஸின் பிரிட்ஜ் | 259 | 152 | 342 | 209 |
| தூத்துக்குடி | 1,357 (3,193) | 868 (1,879) | 464 (2,156) | 265 (1,289) |



(மில்லியன் யூனிட்களில்)

| | 1981 | | 1980 | |
|---|---|---|---|---|
| | சனவரி டிசம்பர் | சனவரி ஜூன் | சனவரி டிசம்பர் | சனவரி ஜூன் |
| நெய்வேலி | 2,537 | 1,401 | 2,289 | 1,121 |
| கேரளா | 1,017 | 548 | 910 | 478 |
| நீர்மின்சாரம் | 4,364 | 1,497 | 5,280 | 2,161 |
| மற்றவை | (—)3 | (—)12 | (+)52 | 1 |
| மொத்தம் | 11,108 | 5,313 | 10,687 | 5,950 |
| நாள் ஒன்றுக்கு சராசரி | 30 | 29 | 29 | 28 |

1981-ம் ஆண்டு மார்ச் திங்களில் 203 மெகவாட் அளவு மின்சார உற்பத்தியைச் செய்து எண்ணூர் அனல்மின் நிலையம் தன் உற்பத்தித் திறனில் 44 சதவீதத்தை எட்டியது. அவ்வாறே 1981-ம் ஆண்டு மே திங்களில் 201 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்து தூத்துக்குடி அனல்மின நிலையம் தன் ஆலைத் திறனில் 47 சதவீதத்தை எட்டியது. தமிழ்நாட்டின் மின் கட்டமைப்புக்கு நெய்வேலியால் வழங்கப்படும் மின்சாரத்தின் அளவு தொடர்ந்து திருப்திகரமாக இருந்து வருகிறது. இம் மாநிலத்தில் ஏற்பட்ட மின்சாரப் பற்றாகுறையைச் சமாளிப்ப தற்கு இவைகள் மிக முக்கியமாகும்; மேலும் 1981-ம் ஆண்டு ஜூன் மூன்றாவது வாரத்தின் இறுதிவரை மின் வெட்டை 30 சதவிகிதத்தில் நிறுத்திக் கொள்வதற்கு இவைகள் உதவியாக இருந்தன, மின் வாரிய அலுவலர்களும், பணியாளர்களும், மின் விநியோகத்தை திறமையாக நிர்வகித்தது பெருமைப்படத் தக்கதாகும்.

5. 1981-ம் ஆண்டு ஜூன் திங்கள் துவக்கத்தில் தென்மேற்கு பருவமழை ஆரம்பமானது. வட கிழக்குப் பருவமழை சில மாவட்டங்களில் சராசரி விகிதத்திற்கும் அதிகமாக இருந்தாலும் சென்னையிலும் அதன் அருகில் உள்ள மாவட்டங்களிலும் வழக்கத்திற்கும் குறைவாகவே இருந்தது. மேலும் அது கால தாமதமாகவே துவங்கியது.

கடந்த ஆண்டு கிடைக்கப்பெற்ற மழைநீர் அளவு முறை முந்தய ஆண்டுடனும், ஒரு சராசரி ஆண்டுடனும் ஒப்பிடப்பட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| | கிடைக்கப்பெற்ற நீர் அளவு (மில்லியன் யூனிட்டுகளில்) (மேட்டூர் நீங்கலாக.) | | |
|---|---|---|---|
| | 1981 | 1980 | சராசரி ஆண்டு |
| சூலை-செப்டம்பர் (தென்மேற்கு பருவமழை) | 2,559 | 2,018 | 1989 |
| அக்டோபர்-டிசம்பர் (வடகிழக்கு பருவமழை) | 887 | 763 | 953 |
| மொத்தம் சூலை—டிசம்பர் | 3,446 | 2,781 | 2,939 |

முன் கூட்டியே ஆரம்பமான தென்மேற்கு பருவ மழையை சாதகமாக எடுத்துக் கொண்டும், கிடைக்கும் மழைநீரின் அளவு சாதகமாக இருக்கும் என்ற கணிப்பின் அடிப்படையில், நீர்த் தேக்கங்களில் 1981 ஆம் ஆண்டு சூன் திங்களிலிருந்து நீர் தேக்கி வைக்கப்பட்டது.

6. 1981-ம் ஆண்டு சூன் 25-ம் நாளிலிருந்து உயர் அழுத்த மின் உபயோகிக்கும் தொழிற்சாலைகள், மற்ற உபயோகிப் பாளர்கள் மீது இருந்த மின்சார வெட்டு அகற்றப்பட்டது. கிராமப்புறங்களுக்கு மின்சாரம் வழங்குவதில் இருந்த மூன்று பிரிவுகள் இரண்டு பிரிவுகளாக 1981-ஆம் ஆண்டு சூலை திங்கள் 12-ம் நாளிலிருந்து பழைய முறைக்கு மாற்றப்பட்டு அதன் பின்னர் 1981-ம் ஆண்டு செப்டம்பர் திங்களில் இப்பிரிவு முறையும் அகற்றப்பட்டது. குறைந்த அழுத்த மின்சாரத்தை பயன்படுத்தும் தொழிற்சாலைகளின் மீது விதிக்கப்பட்டிருந்த உச்ச நேரக்கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டும் என்று சிறு தொழிற்சாலைகள் நீண்டகாலமாக வேண்டி வந்தன. மின் நிலைமையில் ஏற்பட்ட முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு குறைவு அழுத்தத் தொழிற்சாலைகளின் மீது விதிக்கப்பட்டிருந்த உச்ச நேரக் கட்டுப்பாடுகள் 1981-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் முதல் நாளிலிருந்து அறவே அகற்றப்பட்டுள்ளன. இதனால் குறை வழுத்த சிறு தொழிற்சாலைகள் முழுமையாக 24 மணி நேரமும் உற்பத்தியில் ஈடுபடலாயின. தொடர்ந்து 1981-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் நாளிலிருந்து பிரிவு முறையும் உச்ச நேர கட்டுப்பாடுகளும் அறவே தளர்த்தப்பட்டன. இடைவெளியின்றி உற்பத்தியில் ஈடுபடாத உயர் அழுத்த தொழிற்சாலைகளுக்கும், விவசாய மின் இணைப்புகளுக்கும், கிராமப்புறத் தொழிற்சாலைகளுக்கும் 24 மணி நேர மின் விநியோகம் அனுமதிக்கப்பட்டது. அவ்வாறே, கட்டுப் பாடின்றி, மின்சாரத்தைப் பெற்று வாரத்தில் ஏழு நாட்களும் வேலை செய்திடும் வகையில் துணி ஆலைகளும் அனுமதிக்கப் பட்டன. தொழில் உற்பத்தியை அதிகரிக்கவும் உற்பத்தி பெருக்கத்திற்கு ஊக்கம் அளிக்கவும் எடுக்கப்பட்ட சரியான நடவடிக்கை இது என தொழில் அதிபர்களால் வரவேற்கப்பட்டது.



7. 1981-ம் ஆண்டு செப்டம்பர் திங்களிலிருந்து எல்லாக் கட்டுப்பாடுகளும் அகற்றப்பட்ட பின், 1980-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1600 மெகாவாட் ஆக இருந்த மொத்த மின்சாரத் தேவையின் அளவு 1981-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதியில் 2,101 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது. விவசாயத்திற்காக மின்சாரத் தேவை உயர்ந்திருக்கும் காலமான 1982ம் ஆண்டு மார்ச் திங்களில் உச்ச நேர மின்சாரத் தேவையின் அளவு 2;400 மெகாவாட்டாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

8. துரதிருஷ்டவசமாக, பேசின் பிரிட்ஜ் மின் நிலையத்தில் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் தீ விபத்து ஏற்பட்டது. பின்னர், 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதி வாரத்திலும் 1982 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் இரு வாரங்களில் எண்ணூர் மற்றும் தூத்துக்குடி அனல்மின் நிலையங்களில் ஏற்பட்ட பாதிப்பினால் மின் உற்பத்தி சுணக்கமேற்பட்டது. ஆகையால், தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் 100 மில்லியன் யூனிட்டுகளும் எண்ணூரில் 108 மில்லியன் யூனிட்களும் மின்சார இழப்பு ஏற்பட்டது,

9. எண்ணூர் மற்றும் பேசின்பிரிட்ஜ் மின் நிலையங்களில் அபிவிருத்திகள் செய்வதற்கும் கொதிகலன், டர்பைன், குளிர்நீர் அமைப்பு ஆகியவைகளில் திட்ட காலத்திற்குள் மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கும் 1981-82, 1982-83 ஆண்டு திட்டங்களில் ரூ. 25 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. செக்கோஸ்லோவோகியா நாட்டு பொறியாளர்களின் பணியினைப் பயன்படுத்தி எண்ணூர் அனல்மின் நிலையத்தின் மேம்பாட்டுப்பணிகளை நிறைவேற்றிட மின் வாரியம் முடிவெடுத்துள்ளது.

10. பிப்ரவரித் திங்கள் 15ந் தேதியிலிருந்து மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து பாசனத்திற்கு விடப்படும் நீர் நிறுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுவதால், மின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான நிலைமையில் பற்றாக்குறை ஏற்படக்கூடும். ஆந்திரப் பிரதேசம் மற்றும் கேரளம் ஆகிய மாநிலங்களிலிருந்து உச்ச நேரத்தில் மேலும் கூடுதலாக மின் உதவியைப் பெறுவதன் மூலம் இந்நிலையை சமாளிக்கலாம், எனக்கருதி இதற்குத் தேவையான நடவடிக்கைகள் துவக்கப்பட்டுள்ளன.

11. சுய மின் உற்பத்தி சாதனங்களை வைத்துள்ள தொழிற்சாலைகள் தங்களுடைய மின் உற்பத்தி சாதனங்களைப் பயன்படுத்தி உச்ச நேர மின் தட்டுப்பாட்டுக் காலங்களில் எவ்வளவுக்கெவ்வளவு மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியுமோ அந்த அளவு உற்பத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன, இது அவர்களின் மின் தேவையில் வெட்டுதலை ஏற்படுத்தாமல் மின்சாரவாரியம் பிரச்சனையைச் சமாளிக்க உதவும். நீர் மின் நிலையங்களின் எண்ணிக்கையில் பெரும்பகுதி பாசனத்தேர்டு

சம்பந்தப்பட்டவை. இந்நிலையில். கோடைகாலத்தில் விவசாயத்திற்காக மின்சாரம் அதிகம் தேவைப்படும்போது நீர் மின் திட்டங்களின் மின் உற்பத்தித்திறன்—புதிய நீர் மின் திட்டங்கள் உருவாக்கப்பட்டு வந்தாலும் கூட, போதுமானதாக இருப்பதில்லை. இதனை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர்.

12. பருவ மழைக்காலங்கள், நீர் மின் நிலையத்தின் செயல் திறனில் ஏற்படுத்தும் விளைவுகள் தவிர அனல் மின்நிலையங்களின் செயல்திறன் போதிய அளவு நிலக்கரி தகுந்த நேரத்தில் கிடைப் பதில் இருக்கிறது. இது, 1981 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மிகுந்த அளவு கவனத்தை ஈர்த்தது. சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தால் எண்ணூருக்கு மாதமொன்றுக்கு அனுப்பப்பட்ட நிலக்கரியின் அளவு 1·5 லட்சம் டன் என்ற அளவிலிருந்து 1·05 லட்சம் டன் என்று குறைந்தது. மின்வெட்டு அமுலில் இருந்த நேரத்தில் நடை முறையில் பெறப்பட்ட நிலக்கரியின் வரவு மேலும் குறைந்தது. 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் மே திங்களில் 75 சதவிகித மாகவும், 1981 சூன் திங்களில் 50 சதவிகிதமாகவும் குறைந்தது. நிலக்கரித் தட்டுப்பாட்டால் இந்நிலையத்தில் மின் உற்பத்தியை ஒரு கட்டத்தில் நிறுத்த வேண்டிய சூழ் நிலை கூட ஏற்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடித்தலையீட்டினாலும் மைய அரசின் எரிசக்தி அமைச்சருடன் நான் தொடர்பு கொண்ட தாலும் நிலக்கரி கிடைப்பதில் முன்னேற்றம் ஏற்பட்டது. திட்டப் பணிகள் ஆய்வுக்காக சென்னைக்கு 1981ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் வந்து சென்றதைத் தொடர்ந்து இதில் மேலும் முன்னேற்றம் ஏற்பட்டது.

13. நிலக்கரி உற்பத்தி செய்வது மற்றும் அதைக் கொண்டு செல்லுதல் முதலியவற்றில் ஏற்படும் தடங்கல்களை கணக்கில் வைத்துப் போதிய அளவு நிலக்கரியை சேர்த்து வைக்க வேண்டிய தேவையை நாம் இதுபோன்ற சந்தர்ப்பங்களில் வலி யுறுத்தியுள்ளோம். 1981—ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் மாண்புமிகு முதலமைச்சரை மத்திய திட்டக்குழு உறுப்பினர் திரு. முகமது பாசல் அவர்கள் சந்தித்த போது ஒரு ஆண்டின் மின் உற்பத்தித் திட்டத்தின் அடிப்படையில் நிலக்கரியை அனுப்ப வேண்டும் என்றும், காலாண்டு காலத்தில் நடைமுறை யில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சார அளவின் அடிப்படையில் இருக்கக்கூடாது என்றும் நாம் தெரிவித்தக் கருத்து கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப் பட்டது. இந்த சந்திப்புகளின்போது மாதமொன்றுக்கு 40,000 டன் நிலக்கரியைப் பெற்று வருவ தால், தூத்துக்குடி மின் நிலையத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல்களை திட்டக்குழு உறுப்பினர் மற்றும் இந்திய பிரதமர் ஆகியோரின்



கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இது தவிர, நிலக்கரி கிடைப்பது, அதை ரயில் மூலம் கொண்டு வருவது; ஹால்டியா துறைமுகத்தில் அவற்றை ஏற்றுவது ஆகியவற்றில் உள்ள சிரமங்கள். ஹால்டியா துறைமுகத்தில் கப்பல் வரும் வரை ஏற்படும் கால தாமதத்தை தவிர்க்க நிலக்கரியைக் குவித்து வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்வது ஆகியவற்றைப் பற்றி யெல்லாம் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இப்பிரச்சனை மைய அரசின் சிரத்தையான கவனத்தில் இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

14. எல்லா மாநில மின்வாரியங்களுக்கும் பொதுவாக உள்ள சிக்கல்கள் பிரச்னைகள் குறித்து விவாதிப்பதற்காக அகில இந்திய மின்சார அமைச்சர்கள் மாநாடு 1981 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் நடைபெற்றது. மின் உற்பத்தித் திறனை பயன்படுத்துதல் மற்றும் அந்தத் திறனை வளர்த்தல் ஆகியவை தவிர, மின் உற்பத்தி நிலை, மின் திட்டங்களை உரு வாக்குதல் ஆகியவை இம்மாநாட்டில் பரிசீலிக்கப்பட்டன. இந்த அரசின் கவனத்தில் உள்ள பிரச்சனைகளை மைய அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வந்தேன். அவையாவன:—

(1) மேற்குறிப்பிட்டவாறு போதிய அளவு நிலக்கரி வழங்குவதை உறுதிப்படுத்துதல்;

(2) உதிரிப் பாகங்கள் மற்றும் இவைகளுக்குப் பணிபுரியும் பிரிவுகள் சம்பந்தமாக பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் உடன் நிரந்தர ஏற்பாட்டைச் செய்தல்;

(3) மின் தட்டுப்பாட்டின் அடிப்படையில், மைய அரசுக்குச் சொந்தமான மின் திட்டங்களில் உற்பத்தியாகும் மின்சாரத்தை அந்த வட்டார மாநிலங்கள் பகிர்ந்து கொள்ளுதல்;

(4) மாநிலங்களுக்கு இடையே ஆன மின் திட்டத்தைக் கூட்டு செயலாக ஏற்று நிறுவுவது அல்லது மைய அரசின் அதி காரத்தில் உள்ள ''நேஷனல் ஹைட்ரோ பவர் கார்ப்பரேஷன்'' மூலம் நிறுவுவது;

(5) மத்திய அரசின் வருடாந்திர மின்சார ஆய்வுக் குழுவி னரால் முன் மதிப்பீடு செய்வது நம்முடைய மதிப்பீட்டுடன் ஒப்பிடும்போதும் சரியானதாக இருப்பதில்லை எனவே ஒரு மூன்றாவது அமைப்பினால் சுயேட்சையான மதிப்பீடு செய்ய வேண்டும்.

15. இப்பிரச்சனைகள் அனைத்தும் மாநில மின்சார வாரியங்களின் பணியுடன் நெருங்கிய சம்பந்தம் உடையவை யாகும். இப்பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பது தமிழ்நாடு மின்சார வாரியம் அனுபவித்து வரும் சிரமங்கள் மற்றும் இடர் பாடுகள் நீங்க வழிவகுக்கும், உதாரணமாக, மைய அரசின்

மின் திட்டங்களில் உற்பத்தியாகும் மின்சாரத்தைப் பங்கீடு செய்வது நம்மைப் பாதித்துள்ளது; நெய்வேலி மின் நிலையத்தில் தற்போது உற்பத்தியாகும் மின்சாரத்தையும், புதிய மின் நிலையங்களின் மூலம் உற்பத்தியாகும் மின்சாரத்தையும் முழுமையாக பெற்றுக் கொள்வதாக இந்த அரசு ஏற்கெனவே உறுதியளித்துள்ளது. மின் பயனீட்டளவு, மைய அரசு உதவி ஆகியவற்றின் அடிப்படையில் வகுக்கப்பட்டுள்ள கோட்பாடுகளின் படி 1978 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் அனுமதி அளிக்கப்பட்டு தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் நெய்வேலி இரண்டாவது அனல் மின் நிலையத்தில் உற்பத்தியாகும் 630 மெகாவாட் மின்சாரத்தில் 176 மெகாவாட் அளவு மின்சாரத்தை மட்டுமே தமிழ்நாடு பெற முடியும், இது ஏற்கெனவே ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள நிலைமைகளுக்கும் நமது எதிர்பார்ப்புகளுக்கும் முற்றிலும் முரணாக அமைந்துள்ளது. மைய அரசின் இந்தக் கோட்பாடு இம்மாநிலத்தின் மின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு திட்டமிடப்பட்ட இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் பலன்களை இம்மாநிலம் பெற முடியாமல் இழப்பை ஏற்படுத்துவதுடன் அதே நேரத்தில் மின்சார உற்பத்தியில் உபரியாக உள்ள மற்ற மாநிலங்கள் இதிலும் ஒரு பங்கை பெறும் நிலைமையை ஏற்படுத்துவதாக உள்ளது என்பதை மைய அரசுக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. நெய்வேலியின் முதல் கட்ட மின் நிலையத்தில் உற்பத்தியாகும் 600 மெகாவாட் மின்சாரத்தை முழுமையாக நாம் ஏற்றுக் கொண்டிருப்பதைப் போலவே இரண்டாவது நிலையத்தின் மின்சாரத்தையும் முழுமையாக நம் மாநிலத்திற்கு மட்டுமே அளிக்கப்படும் என்பதனாலேயே நம் அரசுக்கு நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் தரவேண்டிய ராயல்டியைக்கூட வேண்டாமென்று நாம் கூறியுள்ளோம். இம்மாநிலத்தின் தேவை போக உபரியாக உள்ள மின்சாரத்தை அண்டை மாநிலங்களுக்குக் கொடுப்பதில் நமக்கு எவ்வித மாறுபாடும் இல்லை.

16. ஆறாவது திட்டக் காலமாகிய 1980—85 ஆண்டுகளில், இந்த நாட்டிற்காக ஒட்டு மொத்தமாக நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 19,666 மெகாவாட் உற்பத்தித் திறனில் தமிழ்நாட்டிற்கென்று 230 மெகாவாட் உற்பத்தித் திறனே ஒதுக்கப்பட்டுள்ளது. (தூத்துக்குடியின் 3 வது நிலையம் 210 மெகாவாட், சேர்வலாறு 20 மெகாவாட்). இதில், காடம்பாறை நீர் ஏற்று மின் திட்டத்தின் உச்ச நேர மின் உற்பத்தித் திறனான 400 மெகாவாட் சேர்க்கப்படவில்லை. ஆனால் இம்மாநிலத்தின் பயனுக்காக மைய அரசின் பொறுப்பில் 1,100 மெகாவாட் உற்பத்தித் திறனும் மாநில அரசுத் துறையில் 1,160 மெகாவாட் உற்பத்தி திறனும் புதிதாக நிறுவ வேண்டும் என்பதே நம்முடைய ஆரம்ப கால செயற்குறிப்பாகும் இந்தத் திட்டக் காலத்திலாவது இம்மாநிலம் ஆண்டொன்றுக்கு 10 சதவிகித மின் உற்பத்தி வளர்ச்சி பெறுவதற்கான தகுதி பெற்றுள்ளது. எனவே, ஒவ்வொரு ஆண்டும் 250 முதல் 300



மெகாவாட் அளவு மின் உற்பத்தி அதிகரிக்க வேண்டும். இது, ஆண்டொன்றுக்கு 300 முதல் 400 மெகாவாட் மின் உற்பத்தித் திறனை ஏற்படுத்துவதற்கு சமமாகும். எழுபதாம் (1971-80) ஆண்டுகளில் ஏற்பட்டது போன்ற தொடர்ந்த மின் வெட்டுகளைத் தவிர்க்க வேண்டுமானால் இது மிகவும் அவசியம். 1981 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நடைபெற்ற மாநாட்டை தொடர்ந்து மைய அரசின் எரிசக்தி அமைச்சர் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சகங்களாலும், கொள்கை அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கீழ்க்கண்ட திட்டங்கள் பற்றிய விரிவான திட்ட அறிக்கைகள் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன;—

(1) வடசென்னை அனல் மின் நிலையம். — 5×210 மெ. வா.

கணிக்கை செலவு: ரூபாய் 615 கோடி.

(2) மேட்டூர். அனல் மின் திட்டம் விரிவாக்கம். — 2×210 மெ. வா.

கணிக்கை செலவு : ரூபாய் 206 கோடி.

(3) தூத்துகுடி விரிவாக்கம் — 1×210 மெ. வா. மேலும். 1×500 மெ. வா.

கணிக்கை செலவு: ரூபாய் 4?1 கோடி.

17. 1982 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இத்திட்டங்களுக்கு அனுமதியளிக்கப்படுமானால், 1987-88-ம் ஆண்டுகளில் முதல் கட்டப் பணிகளினால் மின் உற்பத்தி கிடைக்கும். இத்திட்டங்களுக்கு விரைவில் அனுமதியளிக்க வேண்டுமென வலியுறுத்தி வருகிறோம்.

18. இருக்கின்ற நீர்மின் சக்தியை முழுவதுமாக பயன்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு, 1981-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் அனுமதி வழங்கப்பட்ட பைகாரா (2 மெகாவாட்) கீழ் பவானி (8 மெகாவாட்) மற்றும் வைகை அணை (6 மெகாவாட்) ஆகிய மூன்று நீர்மின் திட்டங்களை ரூ. 11.75 கோடி செலவில் இம் மாநிலம் செயல்படுத்தி வருகிறது.

19. இம்மூன்று திட்டத்தைத் தவிர, ரூபாய் 113 கோடி செலவில் ஒவ்வொன்றும் 50 மெகாவாட் திறன் கொண்ட ஆறு காஸ் டர்பைன்களை நிறுவதற்கான செயற்குறிப்புகள் 1981-ம் ஆண்டு டிசம்பர் திங்களில், மைய அரசுக்கு அனுப்பப்பட்

டுள்ளன. காஸ் டர்பைன்கள் செயல்படுத்துவதற்கான நிர்மானக் காலங்கள் குறைவு. (12 முதல் 18 மாதங்கள்) இவைகள் இரண்டே ஆண்டுகளில் பயனுக்குக் கொண்டு வர முடியும். உச்ச நேரத் தேவைகள் மிகும்போது மின் நிலையங்களோடு இணைந்து நிலைமைகளை சமாளிக்கவும் மின் நிலையங்களுக்கு நிவாரணம் அளிக்கவும் இத்திட்டம் ஒரு சிறந்த நடவடிக்கையாகும். பம்பாய் மற்றும் காவேரிக் கரைப்பகுதியில் கிடைக்கவிருக்கின்ற எண்ணை வளத்தின் உதவியுடன் இந்த அமைப்புகளை இயக்குவதற்குச் சிரமம் இருக்காது. ஏனெனில், இத்திட்டங்கள் அதிகச் செலவுள்ள தேவைக்கட்டுப்பாடுகள் மற்றும் மின்பளு மாற்றங்கள் போன்ற நிலைமைகளைத் தவிர்க்கும்.

20. 1981-ம் ஆண்டு செப்டம்பரில் இருந்து மின் வழங்குதலின் மீது இருந்த கட்டுப்பாடுகளை ஒரு சோதனைமுறை நடவடிக்கையாக நீக்கப்பட்டிருப்பதை நான் சுட்டிக்காட்டியுள்ளேன். மின் கட்டமைப்பின் உச்ச நேரத்தேவை 2,101 மெகாவாட்டாக் 1981-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் உயர்ந்துள்ளது. இது சென்ற ஆண்டு 1779 மெகாவாட்டாக இருந்தது மத்திய அரசினரின் ஆண்டின் மின் வளர்ச்சி மதிப்பீடு மின் வெட்டுக்கு இலக்கான ஆண்டுகளின் அடிப்படையிலேயே உள்ளது. இருக்கும் அளவை பொறுத்தே பயன்படுத்தும் அளவு இருக்குமாதலால் இந்த அணுகும் முறை சரியல்ல என்று நாம் வாதாடி வருகிறோம். மின் தொகுதியின் உச்ச நேர அளவு 2,101 மெகாவாட் அளவுக்கு உயர்ந்துள்ளதே நமது நிலையை உறுதிபடுத்துவதற்கான ஒரு எடுத்துக்காட்டாகும். மின்சார அதிகார மன்றம், மின்சார மதிப்பீட்டுக் குழு ஆகியவற்றின் மதிப்பீட்டின் படி ஆண்டு மின் வளர்ச்சி 7 சதவிகிதம என்ற அளவில் இருக்கும் என்ற வாதம் சரியானால் இந்த அளவுக்கு மின் தொகுதியின் உச்ச நேர அளவு உயர்ந்து இருக்காது. இதில் வியப்புக்குரியது என்னவென்றால், தமிழ்நாட்டைப் பற்றிய அவர்களது அறிக்கையிலே 1977–78 ஆம் ஆண்டுகளில் 11,3 சதவீதம் அளவுக்கும், 1978-79 ஆம் ஆண்டுகளில் 15.1 சதவீதம் அளவுக்கும் மின் வளர்ச்சி உயர்ந்துள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளதாகும்.

21. செயலாக்கப்பட்டு வரும் மின் திட்டங்களை குறித்த காலத்தில் நிறைவேற்றி அதன் திரண்ட பயன்களை பெற திட்டமிட்டபடி உறுதி செய்து கொள்ளவும், திட்டக்காலத்தை நீடித்து திட்ட மதிப்பீடு அதிகமாவதைத் தவிர்க்கவும் நாம் தீவிர கவனம் செலுத்த வேண்டும். செயலாக்கப்பட்டு வரும் மின் உற்பத்தித் திட்டங்கள் இவை செயலுக்கு வரவேண்டிய கால இலக்கு ஆகியவற்றின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.



| திட்டம். (1) | திறன். (2) | செயலுக்கு வரவேண்டிய கால இலக்கு. (3) |
| --- | --- | --- |
| 1 தூத்துக்குடி அனல் மின்திட்டத்தின் மூன்றாவது பிரிவு. | மெ. வா. 210 | மார்ச் 1982. |
| 2 சேர்வலாறு புனல் மின் திட்டம். | 20 | 1983-84 |
| 3 காடம்பாறை நீரேற்று மின் திட்டம் (உச்ச நேரத்தில் உதவி செய்ய மட்டும்). | 400 (4×100). | முதல் பிரிவு 1983–84<br>2-வது பிரிவு<br>3–வது பிரிவு 1984-85<br>4-வது பிரிவு 1985–86. |
| 4 கீழ்மேட்டூர் புனல் மின் திட்டம். | 120 (4×2×15) | 2 பிரிவுகள் (30 மெ. வா.) 1983-84.<br>4 பிரிவுகள் (60 மெ. வா.) 1984-85<br>2 பிரிவுகள் (30 மெ. வா.) 1985-86. |
| 5 குந்தா ஐந்தாவது மின் நிலையத்தில் கூடுதல் பிரிவு. | 20 | 1984-85 |
| 6 மேட்டூர் அனல் மின் திட்டம். | 420 (2×210). | 1985-86 |

22. மின் வளர்ச்சித் திட்டங்களை விரைவுபடுத்துவதற்கான முயற்சிகள் அவசியம் என்பது தெளிவு. எனவே, கல்பாக்கத்தில் உள்ள சென்னை அணு மின் உற்பத்தி நிலையத்தின் ஒவ்வொன்றும் 235 மெகாவாட் திறன்கொண்ட இரண்டு பிரிவுகள் செயலாக்கப்படுவதை இம்மாநிலம் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. இதன் முதல் பிரிவு அடுத்த ஆண்டின் முதல் பகுதியிலும் இரண்டாவது பிரிவு இதற்கு ஓராண்டிற்குப் பிறகும்

தயாராகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நெய்வேலியின் இரண்டாவது அனல் மின் நிலைய கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் 210 மெ. வா. திறன் கொண்ட முதல் பிரிவு 1984-85 ஆம் ஆண்டில் செயலுக்கு வரும் என்று கால இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது அணுமின் நிலையம் ஒன்றை கூடன்குளத்தில் அமைக்க வேண்டும் என்ற முயற்சியில் விரைவாக முடிவெடுக்கும்படி மத்திய அரசை இம் மாநில அரசு வலியுறுத்தி வருகிறது. அணுமின் சக்தித்துறை கூடன்குளம் இந்த திட்டத்திற்கு ஏற்ற களம் என்று ஏற்கனவே ஒப்புக் கொண்டுள்ளது. வேறு தக்க கலங்களும் அணுமின் நிலையத்தை அமைக்க உகந்ததாக இருக்குமா என்று கண்டறியும் முயற்சியில் குழுவினர் தமிழ்நாடு மின்சார வாரியத்துடன் பேச்சு வார்த்தைகளை நடத்தி வருகிறார்கள்' தமிழ்நாடு மின்சார வாரியமும் சிறிய-மிகச் சிறிய புனல் மின்நிலையங்களை கால்வாய்களிலும் வேளாண்மை பாசனத் திட்ட தேக்கங்களிலும் அமைக்கக்கூடிய வாய்ப்பிருக்கிறதா என்பதை கண்டறிய முழு வேகத்துடன் ஆய்வு செய்துவருகிறது. மொத்தமாக 350 மெ.வா. மின் திறன் அளிக்கக்கூடிய குறைந்த அளவு 100 களங்கள் இதற்கென ஆய்வு செய்ய தேர்ந்தெடுக்கப்படக்கூடும். இத்தகைய சிறிய-மிகச்சிறிய மின் நிலையங்கள் வட்டார மின் தேவையை பூர்த்தி செய்வதோடு அதிக அளவிற்கு மின் செலுத்துகைக்கான நீண்ட மின் தொடர்களை அமைப்பது, மின்வழி இழப்பு போன்றவற்றையும் தவிர்க்கும்.

23. தமிழ்நாடு மின்வாரியம் 800 மெ. வா. திறன் கொண்ட ஓஹேனக்கல் திட்டத்தை செயலாக்க கருநாடக அரசிடமிருந்தும் 150 மெ. வா. திறன் கொண்ட பாண்டியாறு, புன்னம்புழா, 60 மெ. வா. திறன் கொண்ட சோளத்திபுழா ஆகிய திட்டங்களை அமலுக்குக் கொண்டு வர கேரள அரசிடமிருந்து சாதகமான பதில்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. மாநிலங்களுக்கிடையேயான இத்திட்டங்களை செயலாக்க இணக்கமான ஒரு உடன்பாடு உருவாவது மூன்று மாநிலங்களுக்கும் பயன் அளிக்கும் என்பதோடு விலை மதிப்பில்லா இயற்கைச் செல்வங்கள் மேலும் வீணாவதையும் தவிர்க்கும்.

24. வருங்காலத் தேவையைக் கணக்கில் கொண்டு மாற்று மின் விசைக்கான ஆதாரங்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தீவிரமாக தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வருகிறது. 25 மெ. வா. திறன் கொண்ட கடல் நீரிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்கு அமெரிக்கா போன்ற நாடுகளில் கூடவணிக அடிப்படையில் செயலாக்கப்படும் நிலைக்கு வளரவில்லை என்ற காரணத்தைக்காட்டி இந்திய அரசு அனுமதி வழங்கவில்லை. ஆயினும், ஐ. ஐ. டி., தமிழ்நாடு மின்சார வாரியம், பாரத மின் கனரக நிறுவனம், என். ஐ. ஓ. போன்றவற்றின் கூட்டு முயற்சியோடு 1 மெ. வா. திறன்கொண்ட கடல்நீரிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் மின்நிலையத்தை



தமிழ்நாட்டின் கடற்கரையிலும் மற்றொன்றை லக்ஷதீவிலும் அமைக்கவல்லதாக இரண்டு நிலையங்களை வடிவமைக்கும் முயற்சி தொடரப்பட்டு வருகிறது. முருகப்பச் செட்டியார் ஆராய்ச்சி நிலையம் பரிந்துரைத்துள்ள சவுக்கு மரத்திலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் முறையும் வாரியத்தின் கவனத்தில் உள்ளது. சூரியவிசை, பையோகேஸ். காற்றுவிசை போன்றவற்றிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் சாத்தியக்கூறுகளையும் தமிழ்நாடு மின்சார வாரியம் பரிசீலித்து வருகிறது.

25. நிர்வாக அமைப்பு, மாநில அளவில் மின்சார அதிகார மன்றம் அமைப்பது, நிதியைப் பயன்படுத்துதல், மின் கட்டண விதம், மத்திய மின்சார அதிகார மன்றம் போன்றவை குறித்து இராஜ தயாக்ஷா குழு அனேக பரிந்துரைகளைச் செய்துள்ளது. 1981 ஆம் ஆண்டு நவம்பர் 8, 9 தேதிகளில் புதுடில்லியில் நடைபெற்ற மாநில மின்துறை அமைச்சர்கள் மாநாட்டிலும் இது விவாதத்திற்கு வந்தது. இந்தக் குழுவின் பரிந்துரைகளை ஏற்பது நீண்ட கால விளைவுகளை ஏற்படுத்தும்; இவை மாநில அரசினரின் வரம்பை மீறக்கூடியதாக இருக்கக்கூடும் என்பதால் இக்குழுவின் பரிந்துரைகளைப் பரிசீலிக்க மாநில மின்துறை அமைச்சர்கள் அடங்கிய குழு ஒன்றை அமைத்து அவர்களது கருத்தை தெரிவுக்கும்படியான யோசனை ஒன்றை நான் தெரிவித்தேன். இந்திய அரசினரின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

26. இராஜதயாக்ஷா குழு பரிந்துரைத்துள்ளது போல் மின் சக்தியை சேமிக்கும் முயற்சியை கண்டறிய தொழிலக மின்சக்தி மேலாண்மைக் குழுமம் என்ற ஓர் அமைப்பை மின்சார வாரியம் உருவாக்கியுள்ளது. உயர்வழுத்த மின்னிணைப்புகளில் மின் சாரத்தைப் பயன்படுத்தும் முறை, மின்சாரத்தின் தேவை, உற்பத்தியில் இழப்பு ஏற்படாவண்ணம் மின்சாரத்தைப் பயன்படுத்துவது போன்றவை குறித்து இக்குழுமம் ஆய்வு செய்து வருகிறது. இந்த ஆய்வுகளின் அடிப்படையில் மின்சக்தி பயனீட்டளவையும், மின் சக்தி தேவை அளவையும் எவ்வகைகளில் குறைக்கலாம் என்பதுபற்றி தனது கண்டுபிடிப்புகளை நுகர்வோருக்கு இக்குழுமம் எடுத்துரைக்கும். மொத்த நுகர்வோரில் தொழிலக மின்னிணைப்புகள் கிட்டத்தட்ட 50 சதவிகிதம் என்பதால் இது மிகவும் கவனிக்கப்பட வேண்டிய முயற்சியாகும். குஜராத் மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் தகுந்த அளவுகள் கொண்ட குழாய்கள், பம்புகள், புட் வால்வுகள்களை, விவசாய பயனிட்டாளர்கள் பயன் படுத்துவதன் மூலம் மின்பயனீட்டளவை கணிசமாகக் குறைக்கலாம் என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியமும் இத்தகைய ஆராய்ச்சிகளை தொடங்கியுள்ளது. இவற்றின் அடிப்படையில் எத்தகைய சாதனங்களை பயன்படுத்தலாம் என்பது பற்றி விவசாய மின் நுகர்வோருக்கு இது ஆலோசனைகளை வழங்கும்.

27. இந்திய அரசினரால் அமைக்கப்பட்டுள்ள மின்சக்திக்கான குழு மின்வழி இழப்புகளைக் குறைப்பதற்கான முயற்சிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டியதின் அவசியத்தை மற்ற ஆலோசனைகளுடன் கூடவே பரிந்துரைந்துள்ளது. இது நம்மால் ஏற்கக் கூடியதே. இன்னும் கூறப்போனால் தீவிர முயற்சிகளை எடுத்து நாம் 1974–75-ல் 21.5 சதவீத அளவுக்கு இருந்த மின்வழி இழப்பின் அளவை 18.5 சதவீத அளவுக்கு குறைத்துள்ளோம் இது தேசிய சராசரி அளவோடு ஒப்பிட்டு பார்க்கும் பொழுது குறைவாக இருந்தாலும் மேலும் இதன் அளவைக் குறைக்க வாய்ப்புகள் உள்ளன. மின்வழி இழப்புகளைக் குறைப்பதற்கான தீவிர ஆய்வுகளைச் செய்து மின் திருட்டுகளை ஒழிக்கவும், உரிய நடவடிக்கை எடுக்கவும், மின் வழி இழப்புகளை அறவே அகற்றவும் அரசினரால் உயர்மட்டக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் அறிக்கை விரைவில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு மின்சார வாரியமும் மின் அமைப்பு அளவில் பணிகளை மேம்படுத்தி மேற்பார்வையிடவும், மின் விநியோக முறைகளைச் சீராக்கி அதிக அளவில் பயன்படுத்திக்கொள்ளவும் ஒரு தனி ஏற்பாட்டு முறையை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய திட்ட மேம்பாட்டு பணிகளுக்கென ஆண்டுக்கு ரூபாய் 20 முதல் 25 கோடி வரையில் செலவிடத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

28. மின் செலுத்துகை, மின் விநியோகத்திற்கான நிதி ஒதுக்கீடுகளின் அளவு கடந்த ஆண்டுகளில் பலமடங்காக அதிகரித்துள்ளன. 1976–77 ஆம் ஆண்டில் வெறும் 13 கோடியாக மட்டுமே இருந்த இந்த ஒதுக்கீட்டின் அளவு ஆறாவது திட்டகால ஆண்டாகிய இன்று 65 கோடி அளவுக்கு உயர்ந்துள்ளது. மின் செலுத்துகை மின் விநியோக முறைகள், மின் தொகுதியின் திறன் வலுப்படுத்தப்படும் அளவுக்கு ஏற்ற முறையில் மேம்பட்டு அமையவேண்டும் என்ற காரணத்தைக் கருத்தில்கொண்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளே இதற்கு காரணம். 1980–81 ஆம் ஆண்டில் 662 கி.மீ. நீளமுள்ள புதிய மிகை உயர்வழுத்த கம்பித் தொடர்களும், எட்டு புதிய துணை மின் நிலையங்களும் நிறுவப்பட்டன. 1981-82 ஆம் ஆண்டுக்கான குறியளவு 809 கி.மீ. நீளமுள்ள மிகை உயர்வழுத்த கம்பித் தொடர், 15 புதிய மிகை உயர்வழுத்த—துணை மின் நிலையங்களாகும். 1982-83 ஆம் ஆண்டுக்கான இதுபோன்ற குறியளவு 936 கி.மீ. மிகை உயர்வழுத்த கம்பித்தொடர் 48 துணை மின் நிலையங்கள் (2897 எம்.வி.ஏ.) ஆகும்.

29. 1980–81 ஆம் ஆண்டில் 36 கிராமங்களுக்கும் 9 சிற்றூர்களுக்கும் மின் வசதி அளிக்கப்பட்டது. இத்துடன் மின் வசதி அளிக்கப்பட்ட கிராமங்கள் சிற்றூர்கள் ஆகியவற்றின் மொத்த எண்ணிக்கை 63,034 ஆகும். இது மொத்தமுள்ள கிராமங்கள்—சிற்றூர்களின் எண்ணிக்கையில் 99.15 சதவீதம்



ஆகும். தற்பொழுது மின்வசதி பெற்றுள்ள கிராமங்கள்—சிற்றூர்களின் எண்ணிக்கை 63,049 ஆகும். மீதமுள்ள 140 கிராமங்களும், 384 சிற்றூர்களும் அணுக இயலாத அளவுக்கு சரியான பாதைகள் இல்லாத இடங்களில் அமைந்துள்ளன. ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில் மேற்கூறியவற்றுள் 218 கிராம—சிற்றூர்களுக்கு மின்வசதி அளிக்க திட்டக்குறியளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

30. அறுபத்தி ஒன்று புதிய குடியிருப்புகளுக்கு மின் வசதியளிக்கப்பட்டதையும் சேர்த்து மார்ச் 1981-ல் மின்வசதி அளிக்கப்பட்ட அரிசன குடியிருப்புகளின் மொத்த எண்ணிக்கை 25,714 ஆகும். தற்பொழுது இவற்றின் எண்ணிக்கை 25,816 ஆகும். தற்பொழுதுள்ள அரிசனக் குடியிருப்புகள் அனைத்துக்கும் மின்வசதி அளிக்கப்பட்டுவிட்டதால் புதிதாக தோன்றும் குடியிருப்புகளைப் பொறுத்தவரை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து தெரு விளக்குகளை அமைப்பதற்கான விண்ணப்பங்கள் வரவர மின்னிணைப்புகள் வழங்கப்படுகின்றன. அரிசனக்குடியிருப்புகள் அனைத்திற்கும் மின்வசதி அளிக்கப்பட்டுள்ள ஒரே மாநிலம் எனத் தகு பெருமை தமிழ் நாட்டிற்குரியதாகும்.

31. 1980–81 ஆம் ஆண்டில் 31,935 மின்விசையேற்றங்களுக்கு மின்னிணைப்புகள் வழங்கப்பட்டன. ஆனால் நிர்ணயிக்கப்பட்ட குறியளவு 30,000 மட்டுமே ஆகும். நடப்பு ஆண்டில் 31-12-81 முடிய 19,342 மின்விசையேற்றங்களுக்கு மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளன. ஆண்டு முழுவதற்குமான குறியளவு 30,000 ஆகும். இயங்கிக் கொண்டிருக்கும் மின்விசையேற்றங்களின் எண்ணிக்கை 31-12-81 அன்று 9.39 இலட்சமாகும். சுமார் 2.61 இலட்சம் விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன.

32. சமுதாயத்தில் நலிவுற்ற மக்களும் மின்சாரத்தின் பயனை நுகரவேண்டும் என்ற நோக்கோடு ஊராட்சி பகுதிகளில் அமைந்துள்ள குடிசைகளுக்கு மின்வசதி அளிக்கும் சிறப்புத் திட்டமொன்று 1979 ஆம் ஆண்டு சூலை மாதம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இவ்வசதி பெறும் மக்களிடமிருந்து நல்ல வரவேற்பு இருக்கிறது. இதுவரை 4.05 இலட்சம் குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டுக்கு முன்னதாக அனைத்துக் குடிசைகளுக்கும் மின் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

33. தன்னிறைவுத் திட்டத்தின்கீழ், முதல் கட்டத்தில் 69 பிளாக்குகளிலும், இரண்டாவது கட்டத்தில் 150 பிளாக்குகளிலும் பணிகள் துவக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு மின்சார வாரியம், இவற்றில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும் ஊராட்சிகளும் அமைத்துள்ள மேல்நிலை நீர்த்தேக்கங்களுக்கும்,

தகுதியுள்ள குடிசைகளுக்கும், மின்இணைப்புகள் வழங்கியுள்ள தோடு தெரு விளக்குகளை எரியும் நிலையில் பராமரித்து வந்துள்ளது. முதல் கட்டத்தில் 77,871 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கியதுடன், 1,357 மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கும் தரை நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளன. இரண்டாவது கட்டத்தில் 1.34 இலட்சம் குடிசைகளுக்கும், 1007 மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் தரை நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளுக்கு மின் இணைப்பு வழங்கப் பட்டுள்ளன.

34. ஊரக குடிநீர் விநியோகத்திற்கு தொடர்ந்து மின்சாரம் தடையின்றி கிடைக்கவேண்டும் என்ற நோக்கில், வறட்சி நிவாரணப் பணி திட்டத்தின்கீழ் தனியாக மின்கம்பித் தொடர்கள் அமைக்கப்பட வேண்டுமென்று அரசு உத்திரவிட்டுள்ளதற்கு ஏற்ப இவற்றிற்குத் தனி மின் கம்பித் தொடர்கள் அமைக்கப் படுகின்றன. இவற்றிற்கென ஒதுக்கப்பட்ட ரூபாய் 50 இலட்சத் திலிருந்து 21 ஊரக குடிநீர்ப் பணிகள் தொடர்பானவை நடப்பு ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளன.

35. இந்திய ஊரக மின்மயமாக்கு கழகம், ஊரக மின் மயமாக்கு திட்டத்தை செயலாக்க மாநில மின்வாரியங்களுக்கு கடனுதவி அளிக்கிறது. 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 6.18 கோடி அளவுக்கு இதற்கான கடன் தொகையை தமிழ்நாடு மின்சார வாரியம் இக்கழகத்திடமிருந்து பெற்று பயன்படுத்திக் கொண்டது. 1981-82-ஆம் ஆண்டிலும்கூட ரூ. 9.02 கோடி அளவுக்கு கடனாகப் பெறப்படவுள்ளது.

36. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில் மின்சாரம் வகிக்கும் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு இந்த அரசு மின் வளர்ச்சிக்கான முயற்சிகளுக்கு முதலிடம் தந்து வருகிறது. 6—வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (1980—85) மொத்தம் ரூ. 1,023 கோடி அளவுக்குத் திட்டங்களைச் செயலாக்க திட்டக் கமிஷன் அனுமதி அளித்துள்ளது. இதில் ரூ. 572 கோடி மின் உற்பத்திக்கும், ரூ. 325 கோடி மின் செலுத்துகை—மின் விநியோகத்துற்கும், ரூ 115 கோடி ஊரக மின் மயமாக்கு திட்டத்திற்கும், ரூ. 11 கோடி பலவகை இனங்களுக்கும் செலவழிக்கப்படும். 1980—81-ஆம் ஆண்டுக்கான திட்ட காலத்தில் ரூ. 159.13 கோடி செலவிடப்பட்டது. 1981—82 ஆம் ஆண்டில் ரூ. 167.06 கோடி முதலீட்டுச் செலவுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மின் உற்பத்திக்கான ரூ. 79.56 கோடியும், மின் செலுத்துகை—மின் விநியோகத்திற்கான ரூ. 65 கோடியும் ஊரக மின் மயமாக்கு திட்டத்திற்கான ரூ. 21.50 கோடியும், பலவகை இனங்களுக்கான ரூபாய் ஒரு கோடியும் இதில் அடங்கும். 1982—83 ஆம் ஆண்டிற்கென அனுமதிக்கப்பட்டுள்ள முதலீட்டுத் தொகையின் அளவு ரூ. 220 கோடியாகும். இதில் மின் உற்பத்திக்கான ரூ. 126.5 கோடியும், மின் செலுத்துகை



மின் விநியோகத்திற்கான ரூ. 63.05 கோடியும், ஊரக மின் மயமாக்கு திட்டத்திற்கான ரூ. 29 கோடியும், பலவகை இனங்களுக்கான ரூபாய் ஒரு கோடியும் அடங்கும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மீதமுள்ள இரண்டு ஆண்டுகளில் முதலீட்டுத் தொகை கணிசமான அளவிற்கு உயர்த்தப்பட வேண்டும்.

37. 1980—81-ஆம் ஆண்டுக்கான மின் வாரியத்தின் வரவு செலவு விவரங்களும், 1981—82-ஆம் ஆண்டில் எதிர் பார்க்கப் படும் வரவு-செலவுக்கான விவரங்களும் கீழே அளிக்கப் பட்டுள்ளன:

| வரவினங்கள். | 1980–81. | 1981–82. |
|---|---|---|
| | (ரூபாய் கோடிகளில்) | |
| 1. மின்சார விற்பனை வாயிலாக .. .. | *260.50 | 253.90 |
| 2. பலவகை இனங்களின் வாயிலாக .. .. | 6.00 | 6.50 |
| | 266.50 | 260.40 |
| **செலவினங்கள்** | | |
| 1. எரிபொருள், மின்சாரம் வாங்கியது, மின் உற்பத்திக்கான தீர்வை வகையில் .. .. | 180.24 | 167.94 |
| 2. ஊதியம், சம்பளம் உட்பட இயக்கி பராமரிக்கும் வகையில் .. | 102.54 | 108.04 |
| 3. சேமநிதி .. .. | 32.24 | 35.39 |
| 4. வட்டி .. .. .. | 57.58 | 66.84 |
| | 372.60 | 378.21 |
| துண்டுவிழும் தொகை .. | 106.10 | 117.81 |

* முந்தைய வருடங்களைச் சார்ந்த ரூ. 8.5 கோடியும் உள்ளடக்கியுள்ளது.

38. 1980—81-ஆம் ஆண்டில் வாரியத்திற்கு ஏற்பட்ட இழப்பு ரூ. 117 கோடி. 1981—82 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் இழப்பின் அளவு ரூ. 125 கோடியாகும். இந்த இழப்புக்கான முக்கிய காரணங்கள் நிலக்கரி, எண்ணெய், சரக்குக் கட்டணம், விலைக்கு வாங்கப்படும் மின்சாரத்தின் விலை ஆகியவற்றில் ஏற்பட்ட சீரிய உயர்வும் விவசாயத்திற்கென சலுகை அடிப்படையில் மின்சாரம் வழங்கப்பட்டதுமேயாகும்.

39. 1976—77 ஆம் ஆண்டில் ரூ. 188.13 கோடியாக இருந்த வாரிய வருவாயின் அளவு 1980—81 ஆம் ஆண்டில் ரூ. 266.50 கோடி அளவுக்கு (41 சதவீதம்) உயர்ந்துள்ளது. வருவாய்க்கான செலவினங்களின் அளவும் ரூ. 210.03 கோடியிலிருந்து ரூ. 372.60 கோடி அளவுக்கு (77 சதவீதம்) உயர்ந்துள்ளது. எரிபொருள்களின் தொடர்ந்த விலையேற்றம் இக்குறிப்பிட்ட ஆண்டுகளில் ரூ. 27.74 கோடியிலிருந்து ரூ. 65.38 கோடி அளவுக்கு உயர்ந்துள்ளது. இதுபோலவே விலைக்கு வாங்கப்படும் மின்சாரத்தின் அளவும் ரூ. 63.37 கோடியிலிருந்து ரூ. 107.42 கோடிக்கு உயர்ந்துள்ளது. 1980—81-ஆம் ஆண்டுகளில் மட்டும் அபரிமிதமாக உயர்ந்த நிலக்கரி, உலை எண்ணெய், இரயில்வே சரக்கு கட்டணம் ஆகியவை ஆண்டுக்கு ரூ. 36 கோடியளவு கூடுதலாக செலவினங்களை அதிகரிக்கச் செய்துள்ளது.

40. மின்கட்டண நிலுவையின் அளவு 31—3—81 அன்று ரூ. 55.40 கோடிகளாகும். இவற்றின் விவரங்கள் :—

| | | (ரூபாய் கோடிகளில்.) |
|---|---|---|
| 1. | தொழிலகங்களிலிருந்து .. .. | 14.67 |
| 2. | விவசாயிகளிடமிருந்து | 26.19 |
| 3. | குடியிருப்புகள், வணிக நிலையங்களிலிருந்து .. .. .. .. | 8.12 |
| 4. | உள்ளாட்சித் துறைகளிலிருந்து .. | 3.58 |
| 5. | அரசுத் துறைகளிலிருந்து மற்றமர நிலங்களிலிருந்தும் .. .. | 2.84 |
| | | 55.40 |



தொழிலகங்களைப் பொறுத்தவரை நிலுவையாக உள்ள ரூ. 14.67 கோடியில் மால்கோவிலிருந்து மட்டும் வரவேண்டியது ரூ. 9.43 கோடியாகும். இந்த நிறுவனம் திருத்தப்பட்ட மின் கட்டண வீதம் மின்வெட்டு காலத்தில் பயன்படுத்தியதற்காக விதிக்கப்பட்ட அபராதத் தொகை செலுத்தப்பட்ட மேல்வரி அளவை உயர்த்தியது போன்றவை குறித்தும் எதிர்ப்பு தெரிவித்து உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்து உள்ளது. நிலுவைகளை வசூல் செய்வதற்காக வாரியமும் வழக்கு தொடுத்துள்ளது. இவ்வழக்கு 6—1—82 அன்றி விசாரணைக்கு வந்து ஒத்திவைக்கப்பட்டுள்ளது, விவசாய நிலுவைகளை பொறுத்தவரை 1980 நவம்பர் மாத முடிவில் 5.64 இலட்சம் மின் நுகர்வோர் ரூ. 37.59 கோடி அளவுக்கு நிலுவைகளைச் செலுத்தாது இருந்தனர். விவசாயிகளின் பிரதிநிதிகளோடு தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்திய பிறகு நிலுவைகளைத் தவணைமுறையில் கட்டலாம் என்று அரசு அறிவித்தது. பெருமளவுக்கான மின்நுகர்வோர்கள் மின்கட்டண நிலுவையைச் செலுத்த முன் வந்ததன் காரணமாக இந்த நிலுவையின் அளவு 1981 டிசம்பர் மாத இறுதியில் ரூ. 24.45 கோடி அளவுக்குக் குறைந்துள்ளது.

41. வருவாய் பெருகுவதற்கு வாய்ப்பில்லாத ஒரு மின் கட்டண வீதத்தை நீண்டகாலமாக நாம் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறோம். திட்டக் கமிஷன் திரும்பத் திரும்ப இதைப்பற்றிக் குறிப்பிட்டு, இம்மாதிரி சலுகை கட்டணத்தில் மின்சாரம் வழங்க நியாயம் இல்லை என கூறி வந்திருக்கின்றது.

மின்கட்டணச் சலுகை வழங்கப்படுவதெனில் நலிவுற்ற பிரிவினருக்கு ஒரு குறிப்பிட்ட கால அளவுக்கே வழங்கப்பட வேண்டும் என்றும் மின் கட்டண வீதம் மின் உற்பத்தி விலை அடிப்படையிலும் சலுகைகள் ஏதாவது இருப்பின் அதன் அடிப்படையிலும் அமைந்திருக்க வேண்டும் என்று இராஜதயாக்ஷா குழுவும் பரிந்துரைத்துள்ளது 1981 ஆம் ஆண்டு ஜூலை திங்களில் தூத்துக்குடியில் கூடிய மின்சார ஆலோசனைக் குழுவும் இதைப் பரிசீலித்து மின்கட்டண வீதமும் உடனடியாக திருத்தப்பட வேண்டியதன் அவசியத்தை ஒப்புக்கொண்டுள்ளது. அரசினரால் அமைக்கப்பட்ட மின்கட்டண வீத திருத்தக் குழுவும் தனது இறுதி அறிக்கையை அரசுக்கு அனுப்பியுள்ளது. இதன்மீது அரசு விரைவாக ஒரு முடிவு எடுக்கும். பாரதப்பிரதமரும், அண்மையில் நடைபெற்ற ஐந்தாண்டு திட்ட விவாதத்தின்போது திரு. எஸ். பி. சவானும் மின்கட்டண வீத மாற்றத்தை உடனடியாகச் செயல்படுத்துவதின் அவசியத்தைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

42. மின்நுகர்வோருக்கு மன நிறைவு அளிக்கக்கூடிய வீதத்தில் செயல்பட வாரியம் தன்னால் இயன்ற அளவு பணியாற்றி வந்துள்ளது, இருப்பினும், வழங்கப்படு மின்சாரத்தின் தன்மை, மின்கட்டணப் பட்டியல் ஆகியவற்றிலுள்ள குறை

பாடுகள் குறித்து புகார்கள் உள்ளன. வாரியம் ஏற்கனவே துவங்கியுள்ள மின் அமைப்புகளிலான மேம்பாட்டுத் திட்டங்களும். மின் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் முயற்சிகளும் நீண்டகாலத் திட்டங்கள் ஆதலால் இவற்றின் பயனைப்பெற இன்னும் சிறிது காலமாகும்.

43. மின்பயனீட்டளவைக் குறிப்பதிலும் மின் கட்டணத்தை கணக்கிடுவதிலும், வசூலிப்பதிலும் உள்ள புகார்களுக்கு இடமளிக்கும் குறைபாடுகளைக் களைவதற்கென அட்டைபட்டிவாயிலாக மின்கட்டணத்தைக் கணக்கிடும் புதிய முறை ஒன்று 1–1–1982 முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி மின் நுகர்வோர் ஒவ்வொருவருக்கும் வெள்ளை வண்ண அட்டை ஒன்று வழங்கப்படும். இதேபோல், பச்சைவண்ண அட்டை ஒன்று வாரிய பணியாளர்களிடம் இருக்கும். மின்நுகர்வோரின் இல்லத்திலேயே மின் பயனீட்டளவைக் குறிப்பதோடு, மின் கட்டணமும் கணக்கிடப்படும். வெள்ளை வண்ண அட்டையில் மின்பயனீட்டளவோடு மின்கட்டண விவரமும் குறித்துக் கொடுக்கப்படும். இதுவே மின் கட்டணத்திற்காக பட்டியலாக இருக்கும். தனியாக பட்டியல் எதுவும் இதுவரையில் வழங்கப்பட்டதுபோல் வழங்கப்படமாட்டாது. நுகர்வோர் இந்த வெள்ளை வண்ண அட்டையையே பண வசூல் நிலையத்தில் காட்டி மின் கட்டணத்தைக் கட்டலாம். இம்முறையினால் மின் பயனீட்டளவைக் குறிப்பதில் ஏற்படும் தவறுகளையும், மின்கட்டணத்தைக் கணக்கிடுவதில் ஏற்படக்கூடிய தவறுகளையும் குறைப்பதோடு, வாரியத்திற்கு வரவேண்டிய வருவாயை விரைவாக பெறவும் முடியும்.

44. வாரியத்திற்கும், அதன் தொழிலாளர்களுக்கும் இடையே உள்ள உறவு இணக்கமாகவே இருந்து வருகிறது. தொழிலாளர் பிரச்சினைகள் எல்லாம் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களோடும், மற்ற சங்கங்களோடும் விவாதிக்கப்பட்டு இணக்கமாகவே தீர்க்கப்பட்டு வருகின்றன.

45. 1948 ஆம் ஆண்டு மின் வழங்கு சட்டத்தின் கீழ் மின்சார வாரியம் சுய நிர்வாக அமைப்பு உடையதாக உருவாக்கப்பட்டுள்ளது. மின்வழங்கு சட்டத்தின் 79 ஆம் பிரிவின் கீழ் சட்டத்திற்கும் அதன் விதிகளுக்கும் முரண்படாத அளவில் தனது விதிமுறைகளை இயற்றுவதற்கான அதிகாரம் வாரியத்திற்கு உள்ளது. ஆனால் விதி ?0-க்கு ஏற்ப தனது நிதி மற்றும் ஏனைய உடைமைகளையும் கணக்கு வைப்பு முறைகளையும் மற்ற அவசியமான அல்லது விரைந்து முறைப்படி செயல்படுத்தப்பட வேண்டியவை தொடர்பாக செயல்பட அரசினரின் முன் அனுமதி தேவை. பிரிவு 78-ஏவின் கீழ் கொள்கை அளவிற்கான உத்தரவுகளை ஏற்று வாரியத்தைச் செயல்படும்படி அரசு வாரியத்திற்கு உத்தரவிடலாம். உருவாக்கப்பட்ட வரம்பு



களுக்கு ஏற்றாற்போல் அரசினரின் கொள்கைகளை அமுல்படுத்துவதில் வாரியம் அரசுக்கு கட்டுப்பட்டது. மற்றவற்றைப் பொறுத்தவரை வாரியமே முடிவு எடுக்கலாம். வாரியத்தின் சுய நிர்வாகத்தன்மையை உறுதிப்படுத்தும் விதத்திலேயே இந்த உறவு முறை கடைபிடிக்கப்படுகிறது.

46. மாண்புமிகு மன்ற உறுப்பினர்களின் மேலான கருத்துக்களை நாடி நான் அமைகிறேன்.

ச. இராமச்சந்திரன்,
மின்துறை அமைச்சர்.

அட்டவணை.

இணைப்பு 1
திட்டக் காலங்களில்

| விவரங்கள். | முதலாவது திட்டத்திற்கு முன்பு (1951 மார்ச் திங்கள் 31-ம் தேதி). | முதலாவது திட்டம் 1951-56 | இரண்டாவது திட்டம் 1956-61 |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| அ. மின் உற்பத்தி— | | | |
| 1. நிறுவப்பட்ட திறனளவு (மெகாவாட்டுகளில்). | 156 | 256 | 571 |
| 2. மின் உச்சத் தேவை (மெகாவாட்டுகளில்). | 110 | 172 | 381 |
| 3. உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரமும் வாங்கப்பட்ட மின்சாரமும் (மில்லியன் யூனிட்டுகளில்). | 630 | 1,053 | 2,214 |
| இ. மின் அனுப்புதலும் வினியோகித்தலும்— | | | |
| 1. கூடுதல் உயர் அழுத்த கம்பிகளின் நீளம் (கிலோ மீட்டர்களில்) | 6,936 | 11,479 | 24,194 |
| 2. குறைவு அழுத்தக் கம்பிகளின் நீளம் கிலோ மீட்டர்களில்). | 5,728 | 13,055 | 35,352 |

| | | | |
|---|---|---|---|
| 3. கூடுதல் உயர் அழுத்தத் துணை நிலையங்கள். | 31 | 48 | 70 |
| 4. உயர் அழுத்தத் துணை நிலையங்கள். | 25 | 41 | 73 |
| 5. மின் பங்கீட்டு நிலை யங்கள். | 1,591 | 3,773 | 6,004 |
| 6. மின்சாரம் பயன்படுத்துவோர் எண்ணிக்கை (இலட்சத்தில்). | 2.5 | 4.5 | 7.7 |
| 7. நபர் ஒருவர் பயன் படுத்தும் மின்சாரத்தின் அளவு (யூனிட்டுகளில்) | 12 | 21 | 60 |

* நெய்வேலி
நாட்டின் மின் வளர்ச்சி.

| மூன்றாவது திட்டம் 1961—66 (5) | வருடாந்திர திட்டம் (1966—69) மூன்று ஆண்டுகள். (6) | நான்காவது திட்டம் 1969—74 (7) | ஐந்தாவது திட்டம் 1974—78 (8) | 1980—81 தோராயமாக (9) |
|---|---|---|---|---|
| 1,070+ *300 | 1,070+ *400 | 1,654+ *600 | 1,824+ *600 | 2,329+ *600 |
| 717 | 997 | 1,207 | 1,641 | 1,673 |
| 4,041 | 5,260 | 6,948 | 9,453 | 10,913 |
| 39,806 | 48,336 | 68,737 | 72,689 | 77,987 |
| 73,198 | 1,04,977 | 1,97,017 | 2,22,659 | 2,57,273 |
| 98 | 119 | 146 | 174 | 207 |
| 103 | 114 | 125 | 150 | 173 |
| 17,360 | 22,842 | 37,453 | 43,666 | 50,750 |
| 13.6 | 18.22 | 27.07 | 34.00 | *43.14 |
| 92 | 116 | 127 | 157 | 185 |

* நடப்பாண்டில் 3.06 லட்சம் குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டதும் உள்ளடங்கும்.



இணைப்பு

| விவரங்கள். (1) | முதலாவது திட்டத்திற்கு முன்பு (1951 மார்ச்சுத் திங்கள் 31 ஆம் தேதி. (2) | முதலாவது திட்டம் 1951—56. (3) | இரண்டாவது திட்டம் 1956—61. (4) |
|---|---|---|---|
| உ. கிராம மின் வசதி— | | | |
| 1. மின்வசதி அளிக்கப்பட்ட நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்களின் எண்ணிக்கை. | 1,813 | 3,543 | 18,760 |
| 2. மின் வசதி அளிக்கப்பட்ட அரிசன குடியிருப்புகளின் எண்ணிக்கை. | .. | .. | .. |
| 3. மின் இணைப்பு அளிக்கப் பட்ட வேளாண்மை விசை யேற்றங்களின் எண்ணிக்கை | 14,373 | 32,440 | 1,17,695 |
| 4. குடிசைகளுக்கு மின் இணைப்பு (இலட்சத்தில்). | — | — | — |
| எ. செலவும் வருவாயும்— | | | |
| 1. மூலதனச் செலவு (ரூபாய் கோடிக்கணக்கில்). | 23.82 | 54.02 | 133.21 |
| 2. மொத்த வருவாய் (ரூபாய் கோடிக்கணக்கில்). | 3.12 | 5.94 | 15.82 |

தமிழ்நாட்டின் மின் வளர்ச்சி.

| மூன்றாவது திட்டம் 1961—66. (5) | வருடாந்திர திட்டம் (1966—69) மூன்று ஆண்டுகள். (6) | நான்காவது திட்டம் 1969—74. (7) | ஐந்தாவது திட்டம் 1974—78 (8) | 1980—81 தோராயமாக (9) |
|---|---|---|---|---|
| 22,137 | 31,727 | 61,072 | 63,339 | 63,473 |
| .. | 6,280 | 23,768 | 24,797 | 25,714 |
| 2,56,594 | 4,10,119 | 8,81,205 | 8,05,616 | 9,19,164 |
| .. | .. | .. | .. | 3.06 |
| 293.28 | 356.07 | 552.20 | 799.09 | 1,184.71 |
| 34.67 | 50.22 | 114.28 | 223.14 | 261.79 |

## இணைப்பு—2.

திட்டக் கால செலவு.
(ரூபாய் கோடியில்.)

| திட்டத்தின் பெயர். | ஏற்பட்ட செலவு. 1977-78. | 1978-79. | 1979-80. | 1980-81. | 1981-82ஆம் ஆண்டுக் கான மதிப்பீடு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. உற்பத்தி— | | | | | |
| அ. முடிவுற்ற திட்டங்கள் (8)* | 2.24 | 0.21 | 0.18 | 7.47 | 0.63 |
| இ. தொடர்ந்துவரும் திட்டங்கள்— | | | | | |
| 1. மேல்கொடுமண்டு 1-ம் நிலை | 0.26 | 0.22 | 0.32 | 0.11 | 0.15 |
| மேல்கொடுமண்டு 2-ம் நிலை | | | | | |
| 2. சுருளியாறு .. .. | 5.16 | 3.24 | 1.61 | 5.13 | 0.41 |
| 3. சேர்வலாறு .. .. | 0.43 | 1.05 | 1.41 | 2.78 | 5.00 |
| 4. காதம்பாறை .. .. | 0.42 | 12.19 | 14.52 | 13.64 | 23.00 |
| 5. பாண்டியாறு—புன்னம்புழா | (—)0.20 | (—)0.13 | (—)0.25 | .. | 1.00 |
| 6. நெல்லித்துறை .. .. | (—)0.03 | (—)0.01 | .. | .. | 1.00 |
| 7. தூத்துக்குடி அனல்மின் திட்டம்— | | | | | |
| 1 ஆம் நிலை .. .. | 42.81 | 36.34 | 29.85 | 7.86 | 3.30 |
| தூத்துக்குடி அனல்மின் திட்டம்— | | | | | |
| 8. 2 ஆம் நிலை .. .. | 4.07 | 15.44 | 28.97 | 2.68 | 10.00 |
| 9. கீழ் மேட்டூர் .. .. | .. | 0.06 | 3.17 | 3.90 | 10.00 |
| 10. மேட்டூர் அனல்மின் திட்டம். | .. | .. | .. | 0.10 | 12.00 |
| 11. குந்தா 5 ஆம் நிலை கூடுதல் திட்டம். | .. | .. | .. | 0.15 | 1.97 |
| உ. மேம்பாடு திட்டங்கள்— | | | | | |
| 12. எண்ணூர் மேம்பாடு திட்டம் | 0.69 | 0.95 | .. | .. | 3.10 |
| 13. பேசின்பிரிட்ஜ் மேம்பாடு திட்டம். | 0.05 | 0.47 | .. | .. | .. |
| 14. பேசின்பிரிட்ஜ் அனல்மின் நிலையம் (மாற்றம்). | .. | .. | .. | .. | 4.50 |

| திட்டத்தின் பெயர். | ஏற்பட்ட செலவு. 1977-78. | 1978-79. | 1979-80. | 1980-81. | 1981-82 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| ஊ. புதிய திட்டங்கள்— | | | | | |
| 15. மேல் அமராவதி .. .. | .. | .. | .. | .. | 1.50 |
| 16. சண்முகா நதி .. .. | .. | .. | .. | 0.03 | 1.50 |
| 17. வடசென்னை அனல்மின் திட்டம். | .. | .. | .. | .. | 0.50 |
| மொத்த உற்பத்தி ('அ' முதல் 'ஏ' முடிய) | 55.90 | 70.03 | 79.78 | 62.65 | 79.56 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| II மின் அனுப்புதல், பங்கிடு செய்தல். | 19.75 | 32.96 | 51.01 | 59.79 | 65.00 |
| III கிராம மின்வசதி .. .. | 13.74 | 18.00 | 26.30 | 36.11 | 21.50 |
| IV மின் நிறுவனங்களைக் கையகப்படுத்துதல். | 0.01 | 2.24 | 1.31 | | |
| V புதிய திட்டங்கள் குறித்து ஆய்வு. | 0.20 | 0.25 | 0.23 | 0.38 | 1.00 |
| VI மின்சக்தி குறித்து ஆராய்ச்சிகள் மற்றும் பயிற்சி | 0.04 | 0.04 | 0.04 | | |
| நிகர மொத்தம் .. | 89.64 | 123.52 | 158.67 | 159.13 | 167.06 |

(The figures 0.38 and 1.00 are bracketed together for items IV, V and VI.)

* 1. குந்தா நீர்மின் திட்டம் 3ஆம் நிலை, 2. பரம்பிக்குளம் ஆளியாறு, 3. கோதையாறு 4. சென்னை அனல்மின் திட்டம் விரிவாக்குதல், 5. எண்ணூர் அனல்மின் நிலையம், 6. எண்ணூர் அனல்மின் நிலையம் விஸ்தரிப்பு, 7. குந்தா 4ஆம் நிலை, 8. நடுவட்டம் திருப்புதல் திட்டம்.

### தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### வெள்ளிக்கிழமை 1982 பிப்ரவரி 19,

### (மாசி 7, துன்மதி - திருவள்ளுவர் ஆண்டு 2013.)

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

''ஒல்லும்வாய் எல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கி செயல்''

எளிதாகச் செய்து முடிக்கும் இடங்களில் எல்லாம் வினையைச் செய்து முடித்தல் நல்லதாகும். இயலாதபோது இருக்கும் வழிகளை ஆராய்ந்து செய்ய வேண்டும்.

### (1) வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### பின்தங்கியவர்களுக்கான வேலை வாய்ப்பு

*வினா எண் 261—திரு. இல. பலராமன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) அரசு பின் தங்கியவர் பட்டியலில் உள்ள ஜாதிகள் எண்ணிக்கை யாது?

(ஆ) இவர்கள் வேலை வாய்ப்புக்கு கம்பார்ட்மெண்டல் ரிசர்வேசன் செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட 70 இனத்தவரையும், கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டை வட்டத்தில் 21 வகுப்பினரையும் சேர்த்து மொத்தம் 213 வகுப்பினர்கள் பிற்பட்ட வகுப்பினர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கல்வி நிறுவனங்களில் சேருவதற்கும் பொதுப் பணியிடங்களில் சேருவதற்கும் பிற்பட்டோருக்கென 50 விழுக்காட்டு இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. பின் தங்கிய வகுப்பினரிலேயே மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளவர்களுக்கு தனி ஒதுக்கீடு செய்வது பற்றிய செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் தலைவர் அவர்களே, பின் தங்கியோர் பட்டியல் நீண்ட நாட்களுக்கு முன்பு தயாரிக்கப் பட்டதாகும். இன்றுள்ள நிலைமையில், முன்பு பிற்படுத்தப் பட்டவராக இருந்தவர்கள், முற்படுத்தப்பட்ட நிலையிலும், முன்பு முற்படுத்தப்பட்டவர்கள் என்ற நிலையில் இருந்தவர்கள் இன்று பிற்படுத்தப்பட்ட நிலையிலும் இருக்கின்றனர். ஆகவே, இதை மீண்டும் பரிசீலனை செய்து எவையெவை பிற்படுத்தப் பட்டோர் பட்டியலில் இன்றுள்ள நிலையில் சேர்க்க வேண்டும் என்பதற்கு அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் பட்டியல் நீண்டகாலத்திற்கு முன்பே தயாரிக்கப்பட்டிருந்தாலும் கூட, அவற்றில் பல்வேறு வகுப்பினர் பிற்பாடு சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது பல்வேறு வகுப் பினர்கள் அந்தப் பிற்பட்டோர் பட்டியலில் தங்கள் வகுப்பையும் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள் ஆனால் சென்சஸ் கணக்கு எடுக்கப்பட்டு. அதன் மூலம் ஒவ்வொரு வகுப்பினரின் கல்வித் தகுதி, பொருளாதார சூழ்நிலை மற்றும் பல விவரங்கள் தொகுக்கப்பட்டபின்தான் அது குறித்து முடிவு செய்ய வேண்டும். இந்த பட்டியலில் சேர விரும்புகின்ற அனைவரும் மாணவர்கள் பெறும் சலுகைகள், வேலைவாய்ப்பில் முன்னுரிமை ஆகியவற்றை பெறவேண்டும் என்று விரும்பு கிறார்கள். அரசு அதனை அவ்வப்போது ஆராய்ந்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, 218 வகுப்பினர்கள் பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் இருப்பதாகச் சொன்னார்கள். நீண்டகாலத்திற்கு முன்பு தயாரிக்கப்பட்ட இந்தப் பிற்படுத்தப் பட்ட பட்டியலில், குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப் பட்டவர்களுக்கு ஆங்கிலேயர் காலத்தில் இருந்தே பல சலுகைகள் கொடுக்கப்பட்டு வந்து இருப்பதால், இந்த ஆட்சி காலத்திலே அந்த வகுப்பினருக்கு என்று ஒரு 50 சதவீதம் தனியாக ஒதுக்கீடு செய்து, அவர்களுக்கு தனிச் சலுகைகள் அளிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்திற்கு பல்வேறு கல்வி வசதிகள், மற்றவைகள் தனியாகத்தான் கவனிக் கப்பட்டு வருகின்றன. அவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வர்கள் என்ற முறையில் கவனிக்கப்பட்டு வருகிறார்கள். ஆனால் அவர்களுக்கு என்று 50 சதவிகிதம் தனியாக ஒதுக்க வேண்டும் என்று முன்பு இருந்த அரசே பரிசீலித்தது. அப்போதே இயலாது என்று எடுத்துச் சொல்லி விட்டார்கள். இந்த அரசு அதை மீண்டும் பரிசீலித்து வருகிறது. ஏற்கெனவே ஒதுக்கப்பட்டுள்ள 50 சதவிகிதத்தில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை இந்த மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்று ஒதுக்குவது குறித்து சட்டத்



துறையும் அட்வகேட் ஜெனரலும் மற்றவர்களும் ஆலோசித்துக் கொண்டு இருக்கிறார்கள். எந்த நிலைமையிலும் நாம் செய்ய இருக்கின்ற வழிமுறைகள் உச்ச நீதிமன்றத்திலோ, உயர்நீதி மன்றத்திலோ அடிபடாமல் இருக்கும் அளவிற்கு, விதி முறைகள் ஆராயப்பட வேண்டும் என்று சொல்லி இருக்கிறோம். அது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. பி. துரைராஜ்: தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களைச் சேர்ந்தவர்கள் மதம் மாறிவிட்டால் அவர்களை முற் பட்ட சமூகத்தினராகக் கருதி, அவர்களுக்கு எந்தவிதமான சலுகைகளும் அளிக்கப்படுவது இல்லை. அவர்கள் எல்லாவகை களிலும் பின்தங்கிய நிலையில் தான் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் என்ற பட்டியலில் சேர்த்துக் கொள்வதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்போது மிகவும் பிற்பட்ட வகுப்பினருக்கு என்று சில பொருளாதார சலுகைகள் தனியாக அளித்து வருகிறோம். ஆனால் இட ஒதுக்கீட்டில் அப்படி தனியாக சலுகை செய்ய இப்போது இயலவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்று அவர்களுடைய நிலை என்ன என்ற விவரமும் இல்லை; அவர்களுக்குத் தனியாக சலுகைகள் அளிக்கும் உத் தேசமும் இல்லை.

திரு. கே. ஆர். சுந்தரம்: தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டத்திலும் தருமபுரி மாவட்டத்திலும் ஒட்டர்கள், போயர்கள் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருப்பதாக கூறியிருக்கிறார்கள். அவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதால் அவர்களுக்கு தனியாக ஏதாவது சலுகைகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஒட்டர்கள், போயர்கள் ஏற்கெனவே பிற்பட்ட பட்டியலில் இருக் கிறார்கள். அவர்களை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில்தான் சேர்த்திருக்கிறோம்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அரிசனாக இருந்த ஒருவர் கிறிஸ்தவராக மதம் மாறிவிட்டால் அவர் குறிப்பிட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க் கப்படுவதாகச் சொன்னார்கள். தமிழ்நாட்டிலே அவர்கள் கிறிஸ் தவர்களாக மாறினாலும், ஆறுமுகம் என்ற இந்து அரிசன் ஆரோக்கியசாமி என்று பெயரிலே மாற்றம் ஏற்படுகிறதே தவிர வேறு எந்த நிலையிலும் மாற்றம் இல்லை. டீ கடைகளிலானாலும் ஓட்டல்களிலானாலும். மற்ற இடங்களிலானாலும் இந்துவாக இருந்த அதே நிலையில்தான் இருக்கிறார்கள். இந்த அவல நிலை இருப்பதால்தான் அவர்களுக்கு அரசியல் சாசனத்திலேயே சில சலுகைகளை வரையறுத்து வைத்திருக்கிறார்கள். சமூகத்திலே, பொருளாதாரத்திலே எந்த முன்னேற்றமும் அடையாமல் இந்துவாக இருந்தவர் கிறிஸ்தவராக மாறினார் என்ற ஒரே

காரணத்திற்காக பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்துவிட்டால் அரிசன மக்களுக்குள்ள சலுகைகள் கிடைப்பதில்லை. எதிர்காலத்திலாவது அமைச்சரவர்கள் இதுபற்றி பரிசீலிப்பார்களா? அவர்களுக்கு வேறு வகையிலே நிவாரணம் அளிப்பதற்கு சலுகைகள் அளிப்பதற்கு மதம் காரணமாக இல்லாமல் பார்த்துக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, பொது இடங்களில் அரிசனாக இருந்தாலும், பிற்பட்டவராக இருந்தாலும் வேறுபாடு காட்டக் கூடாது; வேறுபாடு காட்டினால் நடவடிக்கை எடுக்க சட்டங்கள் இருக்கின்றன. ஆனால், அரிசனங்களுக்கு என்று கொடுக்கப்பட்டிருக்கிற சலுகைகள் எல்லாம் அவர்கள் இந்து அரிசனங்களாக இருக்கும் வரையில்தான் கிடைக்கும்; கிறிஸ்தவர்களாக மாறிவிட்டால் அந்த சலுகைகள் கிடைக்காது. சலுகைகள் இல்லை என்று திட்டவட்டமாகச் சொல்கிறோம். அரிசன கிறிஸ்தவர் என்று சொன்னால் அவர்கள் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டு, அதற்குள்ள சலுகைகளைப் பெற தகுதியுடையவர்கள் ஆவார்கள். மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டுமென்றால் அவர்கள் எந்த இடத்திலிருந்து, எந்த இனத்திலிருந்து வந்தார்களோ அதைப் பொருத்திருக்கிறது. மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டால் அதற்குரிய சலுகைகளைப் பெற அவர்கள் தகுதி உடையவராவார்கள்.

## சிறுசேமிப்புத் திட்டம்

***வினா எண் 262—திரு. ஜே. எஸ். இராசு:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

சிறு சேமிப்பு பற்றி பொதுமக்களுக்கு விளக்கிட அரசு ஏதேனும் தீவிரமான திட்டம் தயாரித்து வருகிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** விவர அறிக்கை சட்டப் பேரவையில் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ஜே. எஸ். இராசு:** தலைவரவர்களே, சிறு சேமிப்பு இயக்கத்தைப் பற்றி பொதுமக்களுக்கு மேலும் விளக்குவதற்காக திரைப்படம் ஒன்று தயாரிக்க திட்டமிடப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். ஆம் எனில் கதை, வசனம், பாடல்கள் தயாராகிவிட்டனவா? நடிகர்கள், நடிகைகள் யார், யார்? அந்தப் படம் எப்போது வெளிவரும்?

**மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, ஒரு கருத்தை பொதுமக்களுடைய உள்ளத்தில் ஆழப் பதியவைப்பதற்கு திரைப்படம் சிறந்த சாதனமாகும். கல்வியைப் பொறுத்த வரையில்கூட மேலை நாடுகளில் இந்தத் திரைப்பட முறையை பயன்படுத்துகின்றார்கள். குடும்ப நலம் திட்டம், சிறு சேமிப்புத்

*122 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.



திட்டம், பொதுமக்களுக்கு சுகாதாரம் பற்றிய பல்வேறு திட்டங்கள் பொதுமக்களிடத்திலே பரப்பப்படுவதற்கு இந்த விளம்பர சாதனம் தலைசிறந்ததாக இருக்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற விவரங்கள் தற்போது என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் முழு விவரமும் அளிக்கப்படும்.

**திரு ஜே. எஸ். இராசு:** தலைவரவர்களே, சிறு சேமிப்புத் திட்டத்தின் துணைத் தலைவராக இருக்கிற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் எஸ். எஸ். இராஜேந்திரன் அவர்கள் இந்தத் திட்டத்தை விளக்குவதற்கு திரைப்படம் ஒன்று தயாரிக்க இருக்கிறோம் என்று ஒரு கூட்டத்திலே தெரிவித்து ஆறு மாதங்களுக்கு மேலாகிறது. அதனால்தான் இந்தக் கேள்வியை நான் கேட்டேன்.

அடுத்து, அதைத் தொடர்ந்து நாம் சேர்க்கின்ற அந்த சிறு சேமிப்புக்கு ஈடாக ஈட்டுத் தொகையாகவோ அல்லது மானியமாகவோ மத்திய அரசு எந்த வகையிலே உதவி செய்கின்றது? இந்த ஆண்டு எந்த அளவுக்கு அந்த உதவி நமக்கு கிட்டி இருக்கின்றது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

(முற்பகல் 9.10)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, சிறுசேமிப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையிலே மத்திய அரசின் உதவி என்பது இல்லை. பொதுமக்களிடத்திலே சிறு சேமிப்புத் திட்டம் என்ற வகையிலே பணம் திரட்டப்படுகின்றது. அப்படி மொத்தமாகச் சேர்கின்ற அந்த நிதியிலிருந்து மூன்றில் ஒரு பங்கு மத்திய அரசுக்கும் மூன்றில் இரண்டு பங்கு மாநில அரசுக்கும் பயன்படுகின்ற வகையிலே மத்திய அரசு நமக்கு அனுமதி தந்திருக்கின்றது. ஆனால், மத்திய அரசு இதற்கு எந்தவிதமான உதவியும் செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். வரதராஜன்:** தலைவரவர்களே, இந்த சிறு சேமிப்புத் திட்டத்திலே எந்தெந்த துறையினர் பணம் போட்டு வருகிறார்கள் என்று கடந்த ஆண்டுகளிலே அரசு ஆய்வு செய்திருக்கின்றதா? நம்முடைய மக்களின் வாழ்க்கைத்தரம் பின்னோக்கிப் போய்க்கொண்டிருக்கின்ற இந்த நிலைமையிலே பெரிய சேமிப்பிலே போடுகின்றவர்கள்தான் இந்த சிறுசேமிப்பிலும் பணத்தைப் போடுகிறார்கள் என்பது பற்றி அறியப்பட்டிருக்கின்றதா? அதுபற்றி ஆராய்ந்து அதிலுள்ள சில விவரங்களை நாட்டுக்கு அறிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, சிறு சேமிப்புத் திட்டத்தினை எல்லா தரப்பிலே உள்ளவர்களும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற முறையிலே அதற்கென்று ஒரு இலாக்காவே ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இந்த சிறு சேமிப்புத் திட்டத்தை பலரும் பயன்படுத்தி வருகிறார்கள்.

பொதுவாக கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் இதற்கான அலுவலகங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்ற அந்தத் தவறுகள் அவ்வப்போது அறியாது நடந்துகொண்டு வருகின்றது, அதிலே ஏதாவது சிக்கல்கள் ஏற்படுகின்றன என்றாலும், அல்லது அதை மேம்படுத்துவதற்குரிய வழிவகைகள் இருக்குமே யானாலும் அதைப்பற்றி எல்லாம் ஆராய்ந்து ஆவன செய்யலாம். மத்திய அரசும் ஆராய்ந்து வருகின்றது. மநில அரசும் ஆராய்ந்து வருகின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. செம்மலை. தலைவரவர்களே, மற்ற தேசிய வங்கிகள் தருகின்ற வட்டி விகிதத்தை விடமற்ற கூட்டுறவு வங்கிகள் தருகின்ற வட்டி விகிதத்தைவிட, இந்த சிறு சேமிப்புத் திட்டத்தின் மூலம் அதிகமான வட்டி தரப்பட்டாலும் கூட இதிலே அதிகமான சேமிப்பு இல்லை என்ற நிலைமை இருக்கின்றது. மேலும் அதிலே ஈடுபட்டிருக்கின்ற அலுவலர்கள் அந்த அளவுக்கு ஆர்வம் காட்டாத நிலைமை இருப்பதால், அவர்களுக்கு ஆர்வம் ஏற்படுகின்ற வகையிலே அவர்களுக்கு இன்செண்டிவ் ஏதாவது வழங்கப்படுகின்றதா? அல்லது அந்த முறை அமல்படுத்தப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சிறு சேமிப்புத் திட்டத்திலே ஆங்காங்கே ஏஜெண்டுகள் என்ற முறையிலே பலர் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கு ஓரளவுக்கு இன்செண்டிவ் தரப்படுகின்றது. சிறு சேமிப்புக்களைச் சிறந்த முறையிலே சேர்த்துத் தருகின்றவர்களுக்கு அவர்களை ஊக்கப்படுத்துகின்ற அளவுக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 16 மாவட்டங்களில் எந்த மாவட்டம் சிறந்த முறையிலே அதனுடைய இலக்கையும் நிறைவேற்றி, மேற்கொண்டும் நிதி சேர்த்துத் தருகின்றதோ அதை ஊக்குவிக்க வேண்டும் என்ற முறையிலே ஆண்டுதோறும் ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட பரிசுகளை வழங்கி, மேலும் அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே சிலபல நல்ல திட்டங்களைத் தீட்டி அதற்கு அந்த நிதியினை செலவழிக்கலாம் என்று கூறிக்கொண்டு வந்திருக்கின்றது.

## மண்டபம் பகுதியிலுள்ள புறம்போக்கு நிலம்

*வினா எண் 163 திரு ச. அங்குசாமி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பார —

(அ) மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகம் முகவை மாவட்டத்தில் உள்ள மண்டபம் பகுதியில் இருக்கும் அரசு புறம்போக்கு நிலத்தை தமது உபயோகத்திற்காக தமிழக அரசைக் கேட்டு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், தமிழக அரசு எடுத்த நடவடிக்கை என்ன?



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகம் முகவை மாவட்டத்தில் உள்ள மண்டபம் பகுதியில் இருக்கும் அரசின் புறம்போக்கு நிலங்களை தனது உபயோகத்திற்காகக் கேட்டிருக்கிறார்கள். அரசு அதை அவர்களுக்கு அளித்துள்ளது.

திரு. ச. அங்குசாமி: தலைவரவர்களே, மத்திய அரசு தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான பல புறம்போக்கு நிலங்களை வேண்டும் என்று கேட்டு வருகின்றது. அப்படியானால் இது வரை எவ்வளவு இடம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதற்கெல்லாம் மத்திய அரசு தமிழ்நாடு அரசாங்கத்திற்கு எவ்வளவு பணம் கொடுத்திருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் நிறுவனங்களுக்காகவும், மற்றவைகளுக்காகவும் மாநில அரசு நிலங்களைக் கொடுக்கின்றபோது சில இடங்களைப் பணத்திற்கும், சில இடங்களை இலவசமாகவும் கொடுத்து வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ச. அங்குசாமி. பேரவைத் தலைவர் அவர்களே, மண்டபம் பகுதியில் துப்பாக்கி தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்காக மத்திய அரசு அங்கே வந்து பார்வையிட்டதாக அறிகிறேன். அப்படி பார்வையிட்ட பிறகு, தமிழ்நாடு அரசாங்கத்திடம் துப்பாக்கி தயாரிக்கும் தொழிற்சாலைக்கு இடம் கேட்டு விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார்களா? அப்படியானால் அது எந்த இடத்திலே அமைக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, பார்வையிட்டதும், அதற்கான நிலம் கேட்டதுமான தகவல்கள் என்னிடத்திலே இல்லை.

திரு. எம். எஸ். மாணிக்கம். மாண்புமிகு தலைவர் அவர்களே, மண்டபத்திற்கு பக்கத்திலே மத்திய அரசு, பாதுகாப்பு வேலைகளைச் செய்வதற்கு இடம் கேட்டிருக்கிறதா அல்லது எந்தத் தொழிற்சாலையையாவது ஆரம்பிக்க என்று இடம் கேட்டதா? அல்லது கப்பல் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்க அங்கே இடம் கேட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கப்பல் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைப்பதாக இருந்தால் கடற்கரைக்கு பக்கத்திலே அமைப்பார்கள். கப்பலிலே வேலை செய்யும் பணியாளர்களுக்கு குடியிருப்புக் கட்டுவதற்காகத்தான் மண்டபம் பகுதியிலே நிலத்தைக் கேட்டிருக்கிறார்கள்.

## சென்னையில் குடியிருக்கும் ஆதி ஆந்திரர் குடிகளுக்கு பட்டா வழங்கும் திட்டம்

*வினா எண் 294 திரு. இரா. அருணாசலம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னையில் வண்ணார்ன்துறை, கக்கன் காலனி, ஊரூர் பகுதி ஆகிய இடங்களில் ஆதி ஆந்திரர்கள் குடிமனைகள் கேட்டுள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், அந்த இடங்களை அவர்களுக்குப் பட்டா வழங்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (அ) மற்றும் (ஆ) சென்னையில் வண்ணான் துறை, கக்கன் காலனி, ஊரூர் ஆகிய பகுதிகளில் உள்ள ஆதி ஆந்திரர்கள் நிலம் கேட்டிருக்கிறார்கள்; பலர் கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிலம் கொடுக்க ஏற்பாடு ஆகிக்கொண்டிருக்கிறது.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி ஆந்திரர்களுக்கு இதுவரையில் தமிழக அரசு வீட்டுமனைப்பட்டாக்களையோ அல்லது நிலப்பட்டாக்களையோ வழங்கியுள்ளதா? ஆம் எனில், எத்தனை பேர்களுக்கு எவ்வளவு வழங்கியுள்ளது என அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு தலைவரவர்களே, ஆந்திர ஆதி திராவிடர்களில் பெரும்பாலும் சென்னை மாநிலத்திலேதான் இருக்கிறார்கள். மற்ற மாநிலங்களில் இருக்கக் கூடியவர்களின் பட்டியல் என்னிடத்தில் இல்லை. சென்னையில் இருக்கக் கூடியவர்களுக்கு மட்டும் ஏறக்குறைய 900 பேர்களுக்கு அதிகமாக இதுவரையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் 846 பேர்களுக்கு கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



திரு. எஸ். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி ஆந்திரர்கள் புல்லா ரெட்டிபுரம் என்ற இடத்தில் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும்; அவர்கள் அனேகமாக அனைவருமே துப்புறவுத் தொழில் இருக்கிறார்கள் என்பது. ஆகவே நகரத்தில் உள்ள எல்லா ஆதி ஆந்திர மக்களுக்கும் வேறு இடம் என்று இல்லாமல், அனைவருக்கும் பட்டா கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்:

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:—தலைவர் அவர்களே பரிசீலனை செய்யப்படுமா என்ற கேள்விக்கே இடமில்லை. முன்பே பரிசீலனை செய்யப்பட்டு, 900-க்கு அதிகமான பேர்களுக்கு நிலம் கொடுக்கப்பட்டு, இன்னும் 800-க்கு அதிகமான பேர்களுக்கு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

## கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் பாடல்களை பள்ளிப்பாட நூலில் சேர்க்கும் திட்டம்

*வினா எண் 265- திரு. ஆர். மணிமாறன்.—மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் பாடல்களை பள்ளிப் பாடத் திட்டத்தில் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: — 1982-83 ஆம் ஆண்டில் தயாரிக்கப்படும் 4 அல்லது 6 ஆம் வகுப்புக்கான தமிழ்ப் பாடநூலில் சேர்க்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 9.20)

திரு. மு. அம்பிகாபதி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் கவிஞரான பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் பாடல்களை 4-வது, 5-வது வகுப்புகளில் சேர்க்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் பிறந்தநாளை அரசு விழாவாக நடத்துவதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனாரின் பாடல்களை 4 ஆவது வகுப்பு அல்லது 6 ஆம் வகுப்புக்கான பாடங்களில் சேர்க்கப்படும் என்றுதான் சொன்னேன். அவர்களின் பிறந்தநாள் விழாவினைப் பற்றிக் கேட்டார்கள். தனிக்கேள்வியாகப்போட்டால் விடையளிக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி; கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்களுடைய பாடல்களை பாடப் புத்தகங்களில் வைப்பதுபோல் அமரர் கவிஞர் கண்ணதாசன், இன்றைய மேலவைத் துணைத் தலைவர் புலமைபித்தன் போன்ற சிறந்த கவிஞர்களின் பாடல்களை பாடப்புத்தகங்களில்

சேர்த்து, எதிர்காலத்தை ஒளிமயமாக்கிக் கொள்ளத் தக்க
வகையில் மாணவ மாணவியருக்கு சொல்லித்தர அரசு முன்
வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: குழந்தைகளுடைய
வளர்ச்சிக்குத் தேவையான ளவில் நடவடிக்கைகள் எடுத்து
வருகிறோம். ஆ வே அதற்குத் தகுந்த பாடல்களை நாம்
எடுப்பதில் எந்தவிதமான கட்டுப்பாட்டையும் தடையையும்
நாம் விதிக்கவில்லை. நல்ல கவிஞர்களின் நல்ல பாடல்களை
வைக்கவேண்டும் என்பதுதான் அரசின் விருப்பம். அந்த வகை
யில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் பாடல்களை
4, 6 வகுப்புகளில் பாடப் புத்தகத்தில் சேர்ப்பதற்கான
நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது.

திரு. செ. சிவசாமி: பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்
களின் பாடல்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை. தூங்காதே
தம்பி தூங்காதே என்ற பாடல் தமிழ்நாட்டு மக்களுக்கு எழுச்சி
யூட்டிய பாடலாகும். அந்த பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
அவர்களின் 52-வது பிறந்தநாள் 17-4-1982 அன்று வருகிறது.
ஆகவே அவர்கள் பெயரில் ஒரு நிரந்தரமான ட்ரஸ்ட் ஏற்படுத்த
முடியுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அறக்கட்டளை
ஏற்படுத்துவது குறித்து பல்கலைக் கழகத்தோடு பேசப்படும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: கவிஞர் பட்டுக்கோட்டை
கல்யாணசுந்தரம் அவர்களின் பாடல்களை பள்ளிப் பாடப்
புத்தகங்களில் சேர்ப்பது போன்று பெரும் தலைவர் முத்து
ராமலிங்கத் தேவர் அவர்களுடைய சரித்திரத்தை பாடப்
புத்தகங்களில் சேர்த்து மாணவர்களுக்கு சொல்லிக்கொடுக்கும்
ளவிற்கு சேர்ப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா?
தோடு நேத்தாஜி அவர்களின் சரித்திரத்தை ஒன்பதாவது
வகுப்பு பாடப்புத்தகத்தில் வைத்திருக்கிறார்கள். ஆனால்
அதில் சில தவறான தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆகவே
அதைப்பற்றி விசாரித்து அடுத்த ஆண்டிலாவது அப்படிப்பட்ட
தவறுகள் வராமல் பார்த்துக் கொள்ள அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பாடப்புத்தகங்களைத்
தயாரிப்பது என்பது ஒரு மிக முக்கியமான பொறுப்பாகும்.
அதில் அரசாங்கம் இதுபோன்ற யோசனைகளைச் சொல்லலாமே
தவிர அதைத் தயாரிக்கிற வல்லுனர்கள் அந்தந்த வயதுக்
குழந்தைகளுக்கு எது எது தேவை என்பதைப் பார்த்து
அத்தகைய பாடங்களைச் சொல்லித் தரவேண்டியவர்களாக
இருக்கிறார்கள். இப்படி மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்விகள்
கேட்க ஆரம்பித்தால் அதற்குப்பிறகு பாடப்புத்தகங்கள் என்பது
பல பேர்களுடைய சரித்திரப் புத்தங்களாகத்தான் இருக்குமே
தவிர அந்த அந்த வகுப்புக் குழந்தைகளுக்குத் தேவையான
அளவில் அறிவைத் தரமுடியாது. இப்போது உயர்நிலைப் பள்ளி
வரை பொருளாதாரத்தைப் பற்றி ஒன்றுமே சொல்லித் தருவ
தில்லை. எக்னாமிக்ஸ் சொல்லித் தருவதேயில்லை. ஆனால்
பொருளாதார அறிவு இன்று நம் குழந்தைகளுக்கு எவ்வளவு
தேவை என்பதை நாம் அனைவரும் உணருவோம். ஆகவே
இப்போது பல்வேறு வகையில் வளர்ந்துவருகிற விஞ்ஞானக்



கருத்துக்கள் தமிழ்ப் பாடப் புத்தங்களில் இடம் பெறவேண்டும்
என்ற நல்ல கொள்கையை எடுத்தாக வேண்டும். இப்படி
புதிதாக கருத்துக்களைச் சேர்க்கும்போது ஒரு 10, 1 பாடங்கள்
என்று வரும்போது அப்படிப்பட்ட சிக்கல்கள், இதுபோன்று
மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்கள் எல்லாம் பரிசீலிக்கப்பட
வேண்டியதாக இருக்கிறதே தவிர இப்படிப்பட்ட கருத்துக்களைச்
சொல்கிறபோது மாபெரும் தலைவர்களுடைய பெயர்களைச்
சொல்கிறார்கள். அங்கே பாடபுத்தகங்கள் தயாரிக்கும்போது
இப்படிப்பட்ட இக்கட்டான நிலையில் ஏதாவது செய்யவில்லை
யென்றால் அதைத் தவறாக யாரும் எடுத்துக் கொள்ளக்
கூடாது.

## கல்வியை மாநில அதிகாரப்பட்டியலில் சேர்க்க மேற்கொண்ட முயற்சிகள்.

*வினா எண். 266 திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு கல்வி,
அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கல்வியை பொது அதிகாரப்பட்டியலிலிருந்து நீக்கி
மாநில அதிகாரப்பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று மத்திய
அரசை மாநில அரசு வலியுறுத்தியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) இந்திய அரசியல்
சட்டத்தின் 42 வது திருத்தத்துக்கு முன் கல்வி மாநிலப்பட்டிய
லில்தான் இருந்து வந்தது அத்திருத்தத்தின்படி கல்வி பொதுப்பட்டி
யலுக்கு மாற்றப்பட்டது. கல்வி மாநிலப்பட்டியலில் இருப்பது
தான் பொருத்தமானது என்பது தமிழக அரசின் கருத்து மட்டு
மன்றி கல்வி வல்லுநர்களின் கருத்துமாகும். மாநில அரசின்
இக்கருத்து உரிய கட்டங்களில் மைய அரசுக்கு வலியுறுத்தப்பட்டு
வருவதோடு இந்த மாற்றத்தைச் செய்வதன் இன்றியமையாமை
குறித்த ஒரு பொதுவான கருத்து உருவாகவும் இவ்வரசு
தன்னாலியன்ற முயற்சிகளை அவ்வப்பொழுது மேற்கொண்டு
வருகிறது.

திரு. ரா. உமாநாத்: பொதுப்பட்டியலில் கல்வித் துறையை
மாற்றியதற்குப் பிறகு நம்முடைய மாநிலத்திற்கு பாதகமான
விளைவுகள் ஏற்படலாம் என்ற அச்சம் பொது மக்களிடையே
இருக்கிறது. மாநில அரசின் கொள்கை இருமொழிக் கொள்கை,
டூ லாங்குவேஜ் பார்முலா. மத்திய அரசின் கொள்கை த்ரீ
லாங்குவேஜ் பார்முலா. ஆகவே இதைப் பயன்படுத்தி த்ரீ
லாங்குவேஜ் பார்முலாவை பிறகு என்போர்ஸ் செய்வார்களா?
இந்தியைக் கட்டாயப்படுத்தக்கூடாது என்பது நம் பொஸிஷன்.
அதைக் கட்டாயப்படுத்தி பள்ளிக்கூடங்கள் மூலம் இந்த
அதிகாரத்தை அவர்கள் பயன்படுத்தமாட்டார்களா? பாடப்
புத்தகங்கள் பொறுத்து நம் கொள்கை ஒன்று. ஆனால் அவர்
களுக்கு அது மாறாக வரலாம். அதில் அவர்கள் அவர்களது
அவர்களது கருத்துக்களை போர்ஸ் செய்யலாம் என்று ஒரு
அச்சம் இருக்கிறது. அந்த நிலை ஏற்படும் என்பது உண்மையா?
உண்மையானால் அதை ரெக்டிபை செய்ய நடவடிக்கை
எடுக்கப்படுமா?

[1982 பிப்ரவரி 19

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர்
அவர்களே, கல்வி மாநில பட்டியலில்தான் இருக்க வேண்டு
மென்பது இன்றைய தமிழக அரசினுடைய கருத்தாகும். நாம்
அதை அவ்வப்போது மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு
வந்திருக்கிறோம். அது சார்பாக கல்கத்தாவில் கூட்டப்பட்ட
கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு, அவர்கள்
இதற்கு ஆதரவு தரவேண்டும் என்று தெரிவித்திருக்கிறோம்.
இங்கே தமிழக அரசின் சார்பாக கூட்டப்பட்ட கல்வி அமைச்சர்கள்
மாநாட்டிலும் இந்தக் கருத்தை வலியுறுத்தினோம். நமக்குக்
கிடைக்கின்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் மாநில அரசு பேசுகின்ற
போது, கல்வி மாநில பட்டியலில் இருக்கவேண்டுமென்ற
கருத்தை வலியுறுத்திக் கொண்டு வருகிறோம். இதற்கு இரண்டு
காரணங்கள். கல்வி என்பது அந்த மாநில மக்களுடைய நேரடித்
தொடர்பாக இருக்கின்ற காரணத்தால், ஒரு மாநில அரசு
நேரடியாக அதற்கு நடவடிக்கை எடுக்கின்ற வகையில் அந்த
அதிகார பங்கீடு இருக்க வேண்டும் என்ற பொதுவான நல்ல
கொள்கையை வலியுறுத்தியிருக்கிறோம். அதைப்போலவே,
இன்றைய அரசியல் சூழ்நிலையில் மாண்புமிகு உறுப்பினர் கேள்வி
கேட்டதைப்போல், இப்போது இந்தி கட்டாயப் பாடமாக
வேண்டுமென்றிருக்கிறது. ஆனால், நாம் இரு மொழிக் கொள்கை
திட்டத்தை நடைமுறைப் படுத்திக் கொண்டு இருக்கிறோம்.
ஆனால் மற்ற மாநிலங்களிலே மூன்று மொழிக் கொள்
கையை நடை முறைப் படுத்திக் கொண்டு, அதனால் பல்வேறு
சிரமங்களை அந்த மாநில மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்
கிறார்கள். அல்லது மூன்று மொழிக் கொள்கை என்று சொல்லி,
ஒரு மொழியை சொல்லித் தருகின்ற நிலைமை இந்தி மாநிலங்
களிலே இருந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு கர்நாடகாவிலே
கன்னடத்தை முதல் மொழியாக ஆக்கியதன் காரணமாக,
அங்கே வசிக்கின்ற தமிழ் மக்கள் தமிழைப் படிக்க முடியாத
ஒரு நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதேபோல்,
உருது மொழியையும் அங்கே படிக்க முடியவில்லை. இதனால்
பல்வேறு பிரச்னைகள் ஏற்பட்டிருக்கிறது. தமிழக அரசு
இரு மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்திக் கொண்டி
ருக்கிறது. அந்த வகையிலே தங்களுக்கு இருக்கின்ற அதிகாரத்
தைப் பயன்படுத்தி மூன்று மொழிகளைக் கொண்டுவரக்கூடிய
அபாயம் இருக்கிறது. இப்படியெல்லாம் இருக்க வேண்டுமென்று
கலாசார ரீதியாக பல்வேறு திணிப்புகள் நடைபெறுகின்ற
நிலைமைகள் இருக்கின்றன. இவைகளையெல்லாம் தமிழக
அரசு ஏற்றுக் கொள்ளாதது மட்டுமல்ல. இதனால் விளைவுகள்
ஏற்பட்டு, அதற்குப் பிறகு தமிழ் மக்கள் கொதித்தெழுந்து
அதற்கான போராட்டத்தை நடத்த வேண்டிய சூழ்நிலைகள்
எல்லாம் ஏற்படாமல் தடுக்கப்பட வேண்டும். அப்படி நிகழக்
கூடாது என்பது இந்த அரசின் கருத்தாகும். ஆகவே, அத்தகைய
தவறான நிலைமைகளைத் தடுத்து நிறுத்தவும், நல்ல கல்வி,
சிறந்த முறையில் தமிழ் மக்களுக்குக் கிடைக்கவும் கல்வி மாநிலப்
பட்டியலில் இருப்பதுதான் நல்லது என்பதை நான் இங்கே
வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு தலைவர் அவர்களே,
மொரேசியஸ், பிஜி ஆகியத் தீவுகளில் தமிழ் மக்கள் ஏராளமாக
[illegible]



1932 பிப்ரவரி 19]

மென்று, அங்கே இருக்கக்கூடிய பெற்றோர்கள் விரும்புகிறார்கள்.
ஆனால், அட்மிஷன் அதிகாரம் மத்தியிலே இருப்பதனால்,
இங்கே அந்த மாணவர்களை. அதாவது தமிழ் மாணவர்கள்
வருவதற்குப் பதிலாக வேறு மொழி மாணவர்கள் வருகின்ற
நிலைமை ஏற்படுவதாக அறிகிறேன். அது உண்மைதானா?
அதனால் தமிழ் மாணவர்களுக்கு வாய்ப்பில்லாமல் போகிறது.
இந்த விளைவைத் தடுத்து, அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க
அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர்
அவர்களே, தமிழ்நாட்டிலே அந்த மாணவர்கள் வந்துசேரவேண்டு
மென்றால், அது டெல்லி வழியாக, மத்திய அரசின் அனுமதி
யைப் பெற்று, அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, இங்கே
அவர்கள் வந்து சேரவேண்டுமென்ற நிலைமை இன்றிருக்கிறது.

ஆனால், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள், மொரேசியஸ், பிஜி
தீவுகளில் உள்ளவர்கள் தமிழ் நாட்டிற்கு வரவேண்டும் என்று
எண்ணுவதற்குக் காரணம், தமிழ் நாட்டின் கலாசாரத் தொடர்பு
கெடாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையிலே
இங்கே வந்து, படிப்பதற்கான முயற்சிகளை எடுக்கிறார்கள்.
ஆனால், டெல்லி வழியாக வர வேண்டுமென்ற காரணத்
தால், சில சமயம் தமிழ் மாணவர்களுக்கு இடம் இல்லாமல்,
குஜராத் பேசுகின்ற மற்ற மாநிலத்தவர்களுக்கு அது கிடைக்
கிறது. அவர்களைக் குஜராத் மாநிலத்திலே அனுப்பலாம்.
ஆனால், அப்படிச் செய்யாமல், இந்தமாதிரியான காரியங்கள்
செய்கின்ற நிலையில் இப்படி வருகிறது. அப்போது தமிழ்
மாணவர்கள் தங்கள் எண்ணத்தை பூர்த்தி செய்யமுடியாமல்
போகிறது. ஆகவே, மாணவர்களைச் சேர்க்கின்ற ஒரு அதிகாரம்
அந்தந்த யூனிவர்சிடி, கல்லூரிக்கு தந்து விட்டு, மாணவர்களுக்கு
விசா தருகின்றபோது, அந்த மாணவரை நாட்டுக்குள் வர
விடலாமா, வேண்டாமா என்பதை டெல்லி பரிசீலனை செய்து,
மற்றவற்றைக் கேட்காமல் இருப்பது என்பது நாட்டின் பாது
காப்புக்குத் தேவையான ஒன்றாக இருக்கும். மாணவர்களை
சேர்த்துக் கொள்வதும், சேர்த்துக் கொள்ளாமல் இருப்பதும்
அந்த மாநிலத்திலே இருக்கிற யூனிவர்சிடிக்கு அந்த உரிமை
இருந்தால் நல்லதாகும்.

(முற்பகல் 9.30)

திரு ப. நெடுமாறன்; மாண்புமிகு தலைவர் அவர்களே,
கன்கரன்ட் லிஸ்டிலே இருக்கக்கூடிய கல்வியை மத்திய அரசின்
பொறுப்பிலே எடுத்துக்கொள்ளவேண்டுமென்று முன்பு மத்திய
கல்வியமைச்சராக இருந்த திரு. மௌலானா அபுல்கலாம் ஆசாத்
அவர்கள்முயன்றபோது அதை எதிர்த்து அப்போது உத்திரப்
பிரதேச முதலமைச்சராக இருந்த திரு.கோவிந்த வல்லபந்த் அவர்
களும் பம்பாய் மாநில முதலமைச்சராக இருந்த திரு.பி. ஜி. கேர்
அவர்களும் பல்வேறு மாநில முதலமைச்சர்களை ஒன்றாகச்
சேர்த்துக்கொண்டு அன்றைய தினம் பிரதமராக இருந்த

திரு.நேருஜி அவர்களிடம் சொல்லி கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். அதற்குப் பின்னால் அந்தத் திட்டத்தை மத்திய அரசு கைவிட்டுவிட்டது. அதைப்போல் நம்முடைய கல்வியமைச்சர் அவர்கள் பல்வேறு மாநில கல்வியமைச்சர்களை அழைத்து ஒரு மாநாட்டை சென்னையிலே நடத்தி கல்வியை மாநிலப் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்ற தீர்மானம் போட்டு அதன் மூலமாக மத்திய அரசை வற்புறுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இது மாநில பட்டியலில் இருக்கவேண்டும் என்கின்ற முயற்சியில் தமிழக அரசு இருந்துகொண்டிருக்கிறது. நம்மால் முடிந்ததை அந்தந்தக்கால கட்டத்தில் நாம் செய்வோம் என்ற உறுதியை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தர விரும்புகிறேன். இது மாநிலப் பட்டியலில் இருந்தபோது உயர்கல்வி, தொழில் நுட்பக் கல்வி, அறிவியல் ஆராய்ச்சி ஆகிய அந்தப் பொறுப்புகள் எல்லாம் மத்திய அரசினிடத்திலேதான் இருந்தன. அதுகூட ஒரு இடத்திலே நடந்தது, இன்னொரு இடத்திலே நடப்பதால் அதன்மூலமாக பணச் சேதம், நேரச் சேதம் ஆகக்கூடாது என்ற அடிப்படையிலே அவர்கள் அந்தப் பொறுப்புக்களை ஆரம்பத்திலேயிருந்து வைத்துக் கொண்டிருந்தார்கள். அது மட்டுமல்லாமல் ஒரு ஸ்தாபனம் நடத்துகின்ற ஆராய்ச்சியை இன்னொரு ஸ்தாபனம் நடத்துவதைத் தடுக்கின்ற வகையில் இருக்கவேண்டுமென்ற முறையில் ஆரம்பத்திலே உயர்கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் ஆராய்ச்சி எல்லாம் அவர்களிடத்திலே இருந்தன. அது போதாது என்று எல்லாவற்றையும் கன்கரன்ட் லிஸ்டிலே கொண்டுவந்தது தான் நம்போன்ற மாநில அரசுகளின் எதிர்ப்பை உண்டாக்கிக்கொண்டிருக்கிறது. 2—9—1949 ஆம் நாளன்று அரசியல் சட்ட நிர்ணய சபையில் இந்த விவாதம் வந்தபோது அப்போது அதிலே உறுப்பினராக இருந்த திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் சொல்கிறபோது, மாநிலங்கள் பெரும் அளவுக்கு தன்னுரிமை உள்ளவையாக இருக்க வேண்டும், நாட்டுப் பாதுகாப்பு, போர்ப்படைகள், நாட்டின் பொதுநலன் ஆகியவற்றை மத்திய அரசு கவனித்துக் கொண்டு மற்றக் காரியங்களை மாநில அரசுகளுக்கு விடவேண்டுமென்ற அடிப்படை இவ்விஷயத்தில் கல்வி விஷயத்தில் இதுதான் நாம் செய்யக்கூடிய சிறந்த காரியம் என்று அரசியல் சட்ட நிர்ணய சபையில் தமிழகத்தின் சார்பிலே உறுப்பினராக இருந்த அவர்கள் தெளிவாகச்சொல்லி இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய நல்ல கருத்தை ஏற்றுக்கொண்டு தான் அது மாநிலப் பட்டியலிலே இருந்தது. இன்றைக்குத் தவறான அடிப்படையில் பொதுப் பட்டியலில் கொண்டு சேர்க்கப்பட்டிருக்கிறது. அது தவறு என்பதை நாம் சுட்டிக்காட்டியிருக்கிறோம். தவறு, தவறுதான்.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, மத்திய அரசு பொதுப் பட்டியலில் கல்வித் துறை இருக்க வேண்டும் என்பதனுடைய நோக்கம் உலக நாடுகளிலுள்ள மாணவர்களுக்குச் சமமாக நம்முடைய மாணவர்களும் இருக்கவேண்டுமென்பதுதான்



அதுதான் காரணமா அல்லது வேறு என்ன நோக்கம்? என்ன என்ன பொது நோக்கத்தோடு பொதுப் பட்டியலில் சேர்த்து இருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, கல்வி பொதுப் பட்டியலில் இருக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். என்ன என்ன காரணங்களுக்காக அப்படிக் கொண்டு வந்திருக்கிறோம். என்ன என்ன செய்யப் போகிறோம் என்று அவர்கள் சொல்லவில்லை. அதைச் மாண்புமிகு உறுப்பினர் சொல்வார்களானால் நாம் தெரிந்துகொள்ளலாம்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, 42—வது அரசியல் சட்டத் திருத்தம் வந்தபோது கன்கரன்ட் லிஸ்டிற்குக் கொண்டுபோகப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மறுபடியும் அந்த 42-வது திருத்தத்தை முழுவதும் மாற்றியபோது இதைமட்டும் திருத்தி அமைக்காத நிலை இருக்கிறது. இந்த நிலைமையினால் அமைச்சர் அவர்கள் சொல்கிற முயற்சிகளை எடுக்கிற நேரத்திலே இந்த அவையிலேயே ஏக மனதாக அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து ஒரு தீர்மானமாக நிறைவேற்றி மாநிலப் பட்டியலில் அதைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிற முயற்சியை அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவரவர்களே, அதுகுறித்து நான் யோசிக்கின்றேன்.

## புதுக்கோட்டை மன்னர் கல்லூரி

*வினா எண் 267— திரு.பெ. திருமாறன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் முதுகலை வகுப்புகள் (M.A.Ec.,M.A.His,M.S.C.) தொடங்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் (1981—82) இவ்வாண்டு முதல் எம்.ஏ. வரலாறு தொடங்கப்பட்டுள்ளது.

எம். ஏ. பொருளாதாரம், எம்.எஸ்ஸி. போன்ற வகுப்புகள் தொடங்க திட்டம் ஏதும் இல்லை.

திரு. பெ. திருமாறன்: பேரவைத் தலைவரவர்களே. புதுக்கோட்டை கல்லூரி நூற்றாண்டு விழா நடத்தியிருக்கிறது. நூறு ஆண்டுகள் ஆன அந்தக் கல்லூரியில் இவ்வாண்டு முதல் எம்.ஏ. வரலாறு தொடங்கப்பட்டுள்ளதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களுக்கும், கல்வியமைச்சரவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதுக்கோட்டை மாவட்டம் தனி மாவட்டம் ஆகையால் புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் எம்.ஏ. (எகனாமிக்ஸ்,) எம்.எஸ்.ஸி. பட்டப் படிப்புகளையும் கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே அந்தக் கல்லூரிகளில் எது தேவை என்பதை உணர்ந்து அங்குள்ள முதல்வரவர்கள் அதற்குரிய விவரங்களோடு பல்கலைக் கழகத்திற்கு மனுச் செய்ய வேண்டும். அதை அவர்கள் பரிசீலித்த பிறகு அது சார்பான இன்னொரு சிறப்புக் குழு இருக்கிறது அதிலே முடிவெடுப்பார்கள். ஆகவே என்ன தேவை என்று பல்கலைக் கழகத்திற்கு மனுச் செய்து கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. திருமாறன்; பேரவைத் தலைவரவர்களே ஏற்கெனவே புதுக்கோட்டை மன்னர் கல்லூரி முதல்வரவர்கள் இதுபோன்ற எம்.ஏ. (எகனாமிக்ஸ்) எம்.எஸ்ஸி. போன்ற வகுப்புக்களைத் தொடங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். புதுக்கோட்டை வறட்சி மாவட்டம். ஆகவே, அங்கேயுள்ள மாணவர்கள் காரைக்குடிக்கோ அல்லது திருச்சிக்கோ செல்வதற்கான வாய்ப்பு இல்லை. ஆகவே, இந்த ஆண்டே கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்; மாண்புமிகு தலைவர் அவர்களே, அதை அந்தக் குழுவிலே பரிசீலித்து முடிவெடுத்தால் அரசு அதைச் செய்யும். அரசே எந்தக் கோர்ஸையும் கல்லூரியில் ஆரம்பிப்பது இல்லை.

**சென்னையில் உச்சநீதி மன்றத்தின் பிரிவு ஒன்றை அமைக்கும் திட்டம்**

*வினா எண் 268— திரு. நா. பழனிவேல். திரு. து. புருஷோத்தமன், திரு. எம். சின்னசாமி திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் சுப்ரீம் கோர்ட்டின் பெஞ்ச் ஒன்றை அமைக்க வேண்டுமென்று மைய அரசை, நமது மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) ஆம்.

(ஆ) உச்ச நீதிமன்றத்தின் பிரிவு ஒன்றை சென்னையில் அமைப்பதற்கு மைய அரசின் இசைவு வேண்டியுள்ளது. எனவே இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு மைய அரசுக்கு இம்மாநில அரசு 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் வேண்டுகோள் விடுத்தது, இம்மாநில அரசின் செயற்குறிப்பின் மீது உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியின் கருத்தினை மைய அரசு



கோரியுள்ளது. நமது அரசின் கருத்தை வலியுறுத்தி நமது மாண்புமிகு முதல்வரவர்கள் 16-2-81 மற்றும் 24-9-81 தேதிகளில் மீண்டும் மைய அரசிற்கு நினைவூட்டியுள்ளார்கள். உச்ச நீதிமன்றத்தின் கருத்தும் அதன் மீதான மைய அரசின் முடிவும் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது டெல்லியில் இருக்கும் இந்த ஹைகோர்ட்டினுடைய ஒரு பெஞ்ச் நமது மாநிலத்தில் இல்லாத காரணத்தால் இங்கிருந்து பாதிக்கப்பட்டு அங்கே அப்பீல் போன்ற வழக்குகளை நடத்திச் செல்லக்கூடிய நபர்களுக்கு மிகப் பெரிய அளவில் செலவும், நெடுந்தூரமாக இருப்பதாலே நீண்ட நாட்கள் வீண்விரயமும் ஆகக் கூடிய சூழ்நிலை இருப்பதால் சுப்ரீம் கோர்ட்டின் பெஞ்சை சென்னையிலே ஏற்படுத்த நம்முடைய அரசு வற்புறுத்தியிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இதே போன்ற ஒரு முயற்சியில் கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களும் ஈடுபட்டிருப்பதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ளனவே, ஆகவே அம்மாதிரி போய்விடாமல் எப்படியாவது நம்முடைய தமிழ்நாட்டிற்கு அதைக் கொண்டு வருவதற்குத் தீவிரமாக முயற்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசியல் சட்டம் 130-வது பிரிவின்படி டெல்லியில் அல்லாமல் மற்ற மாநிலத்தின் எந்தப் பகுதியில் வேண்டும் என்றாலும் குடியரசுத் தலைவரினுடைய அனுமதியைப் பெற்று உச்ச நீதிமன்றத்தினுடைய பிரிவை அமைக்கலாம். தென்னகத்தில் அமைக்கின்ற பிரச்னையைப் பொறுத்தவரைக்கும் ஆந்திர மாநிலமும் கோருகிறது. கர்நாடக மாநிலமும் கோருகிறது; கேரளா மாநிலமும்கூடக் கோருகிறது; ஆனால் எந்த இடம் சரியான இடமாக இருக்கும், மைய இடமாக இருக்கும் என்பதனை மைய அரசு முடிவு செய்ய வேண்டியுள்ளது. மைய அரசு அந்த முடிவைச் செய்வதற்கு கொள்கை அளவிலே தமிழகத்தில் இதைச் சென்னையிலே அமைக்க வேண்டுமென்று நாம் சொன்னதை கொள்கை அளவில் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்றே நாம் நம்புகிறோம். காரணம், உச்சநீதி மன்றத்தினுடைய பரிந்துரை வந்தால் இதைக் கவனிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதியும்கூட கட்டிடம், அதற்கு இடவசதி நீதிமன்றம் அமைப்பதற்கு இடவசதி, நீதிபதிகள் தங்குவதற்கு இடவசதி ஆகியவை உடனடியாக எந்த மாநிலம் தருகிறதோ அந்த மாநிலத்திற்கு அதைத் தரலாம் என்று கூடக் கூறியிருக்கிறார்கள். நம் தமிழகத்தின் சார்பில் தற்போது சட்டக் கல்லூரி இருக்கின்ற இடத்தை மிக்க வசதிகள் உள்ள இடமாக இருக்கின்ற காரணத்தால் சட்டக் கல்லூரி இடத்தை அப்படியே உச்ச நீதிமன்றத்தினுடைய பிரிவிற்குத் தருவதாகவும்.

(முற்பகல் 9·40)

நீதிபதிகள் இங்கே தங்குவதற்கு இருப்பிட வசதியும் அவர்கள் அனைவருக்கும் தருவதாகவும் கூட நமது முதல்வர் அவர்கள் மைய அரசுக்கு எழுதி இருக்கிறார்கள், அடுத்த மாதம் முதல் வாரத்திலே உச்சநீதி மன்றத்தின் தலைமை நீதிபதி அவர்கள் நம் தமிழகத்திற்கு வருகை தர இருக்கிறார்கள். அப்போது சென்னை சட்டக் கல்லூரியைக்கூட பார்வையிடுவதாக இருக்கிறார்கள். பிறகு மைய அரசு முடிவு எடுக்கும் என நம்புகிறேன்.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தின் பெஞ்சை நமது தமிழகத்தில் அமைப்பதற்கு நமது தமிழக அரசு தொடர்ந்து முயற்சியை செய்து வருவதைப் பற்றி நான் பாராட்டுகின்றேன். அதேபோல சென்னையிலே இருக்கக்கூடிய உயர்நீதி மன்றத்தினுடைய ஒரு பிரிவை மதுரையிலே ஏற்படுத்த வேண்டும் என்று நீண்ட நாட்களாக தென் மாவட்ட மக்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள், ஆகவே அது சம்பந்தமாக அரசு என்ன நிலை எடுத்திருக்கிறது. மதுரையிலே அமைத்துக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றம் அந்தக் கருத்தினை முழுமையாக ஏற்றுக்கொள்ளா விட்டாலும் கூட, அரசைப் பொறுத்தவரைக்கும் உயர்நீதி மன்றத்தினுடைய ஒரு பிரிவு மதுரையிலே ஏற்படுத்த வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் மைய அரசுக்கு அதை எழுதி இருக்கிறது, வற்புறுத்தி இருக்கிறது, அனுமதி கிட்டும் என நம்புகிறேன். உச்சநீதி மன்றத்தினுடைய தலைமை நீதிபதி அடுத்த மாதம் முதல் வாரத்தில் இங்கே வருகிறபோது மதுரைக்கும் செல்ல இருக்கிறார். அதற்கும்கூட நாங்கள் இடத்தைத் தருகிறோம் என்று சொல்லி விட்டோம். நீதிபதிகள் தங்குவதற்கு இடம் தருகிறோம் என்று சொல்லி இருக்கிறோம்.

திரு. து. புருஷோத்தமன்: தலைவர் அவர்களே, அதே கேள்வியைத்தான் ஓரளவு மாற்றி கேட்க நான் விரும்புகிறேன். நம்முடைய மாநில அரசு உச்சநீதி மன்றத்தினுடைய பெஞ்சு ஒன்றை தமிழகத்திற்கு சென்னையிலே கொண்டு வருவதற்கான முயற்சியை நான் உள்ளபடியே பாராட்டுகின்றேன். அந்த முயற்சி துரிதப்படுத்தப்படவேண்டும். உச்சநீதிமன்றத்தின் பிரிவு ஒன்று தமிழகத்திற்கு வருகிற வகையில் ஏற்படுகின்ற காலதாமதத்தைவிட சென்னையிலே இருக்கின்ற உயர்நீதி மன்றத்தின் பிரிவு ஒன்று மதுரையிலே ஏற்படுத்த வேண்டும் என்ற நிலையில் ஏற்படுகின்ற காலதாமதம் மிக மிக அதிகமாக உள்ளது. ஆகவே அதைத் துரிதப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையோடு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூட முன்னாலே நம்முடைய இந்தியத் துணைக் கண்டத்தின் தலைநகர் டெல்லியிலே இருப்பதைவிட வேறு ஒரு மையப் பகுதியிலே இருக்கலாம் என்று....



மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வியை ஒட்டிய கேள்வியாகத்தான் கேட்க வேண்டும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்சநீதி மன்றத்தின் பிரிவுக்கு மட்டுமே மைய அரசின் அனுமதி வேண்டும் என்பது அல்ல, உயர்நீதி மன்றத்தின் பிரிவு மதுரையிலே வைக்க வேண்டும் என்றாலும் கூட, மைய அரசின் அனுமதிதான் தேவையாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் மாநில அரசுக்கு அந்த அதிகாரத்தை டெல்லியிலே வாதாடி வாங்கித் தருகின்ற பணியினை மேற்கொள்வார்களானால் நான் மகிழ்ச்சி அடைவேன்.

திரு. து, புருஷோத்தமன்: தலைவர் அவர்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து உட்காருங்கள்' இரண்டு கேள்விகள் கேட்டுத்தான் ஆக வேண்டும் என்ற நியதி இல்லை, இங்கே கேட்கப்பட்ட கேள்வி சுப்ரீம் கோர்ட்டினுடைய பெஞ்சு வருமா, வராதா என்பதுதான். அதற்கு அமைச்சர் பதில் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) பொதுவான கேள்வியாக இருப்பதால் மூலக் கேள்வியை ஒட்டி கேட்பதுதான் முறை.

திரு. து. புருஷோத்தமன்: தலைவர் அவர்களே** * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த மாதிரியான முறையில் வார்த்தைகளை உபயோகித்துக்கொண்டு இருந்தால், நான் கடுமையான முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். பேசுகின்ற உறுப்பினர்கள் முறையோடு பேச வேண்டும். சபையில் என்னென்ன வார்த்தைகளைப் பயன்படுத்தலாம் என்பதை அறிந்து பேச வேண்டும். இப்படி பேசிக்கொண்டு இருப்பதை நான் அனுமதிக்க முடியாது.

திரு. எம். சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே. நமது மாநிலத்தில் இருக்கிற ஏழை எளிய மக்கள் உச்ச நீதிமன்றத்தில் நீதி கேட்டு நெடிய பயணம் போவதைத் தடுப்பதற்காக மாநில அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை முயற்சிகளைப் பாராட்டுகிறேன். இப்போது சட்டக் கல்லூரி இருக்கும் இடத்தை சுப்ரீம் கோர்ட் பெஞ்சுக்குக் கொடுத்துவிடுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் சட்டக் கல்லூரியை எங்கே வைப்பது என்று அரசு உத்தேசித்துள்ளது.

---

** பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க, அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி பொன்னையன்: தலைவர் அவர்களே, சென்னையிலே மட்டும்தான் முன்பு சட்டக்கல்லூரி இருந்தது. தற்போது திருச்சி, கோவை, மதுரை போன்ற பகுதிகளிலும் சட்டக் கல்லூரி வைக்கப்பட்டு இருப்பதால், சென்னையில் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், இவர்களுக்கு அக்காமெடேசன் பெசிலிடிஸ் போன்ற பிரச்னை இருக்காது. அதைப்பற்றி அரசு தனியாக பரிசீலித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட சம்பந்தமாக வருகிற எல்லாவற்றையும் இந்தக் கேள்வியிலேயே கேட்டுவிட முடியாது. மூலக் கேள்வியை ஒட்டித்தான் துணைக் கேள்விகள் இருத்தல் வேண்டும். மாண்புமிகு அமைச்சர்களும் அதை ஒட்டித்தான் பதில் சொல்ல வேண்டும். அந்த வகையில் ம்மாண்புமிகு அமைச்சர்களும் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் உச்ச நீதிமன்றம் பில்லா, ரங்கா வழக்கை விசாரிப்பதற்காக சுப்ரீம்கோர்ட் தலைமை நீதிபதி வீட்டிலேயே கோர்ட்டை நடத்தினார். அதே போன்று மக்களின் நன்மையைக் கருதி, சென்னையிலே உச்ச நீதி மன்றத்தின் பெஞ்ச் ஒன்றை அமைக்க மத்திய அரசு முன்வருமா? அதற்கு மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தக் கேள்விக்கு விடையளித்து இருக்கிறேன்.

### படித்த இளைஞர்களின் சுயவேலை வாய்ப்புக்கான தனி கூட்டுறவு அமைப்பு.

*வினா எண். 269—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் படித்த இளைஞர்களில் சுய வேலை வாய்ப்புக்காக தனி கூட்டுறவு அமைப்பு அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் யாது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) மற்றும் (ஆ) ஆம். சென்னையில் உள்ள படித்த சுயவேலை வாய்ப்புள்ள இளைஞர்களின் சங்கம் அதன் சங்கத்தின் உறுப்பினர்களுக்காக சுயவேலை வாய்ப்பு பெற வசதிகள் செய்யும் நோக்கத்துடன் ஒரு கூட்டுறவு அமைப்பினை நிறுவ முன்மொழிவுகள் அனுப்பி இருந்தது. இதனை பரிசீலித்து சென்னை நகரை விவகார எல்லையாகக் கொண்டு ஒரு கூட்டுறவு அமைப்பினை "NASEY Cooperative Thrift and Credit Society Limited" என்ற பெயரில் இயங்க அனுமதி வழங்கப்பட்டு சங்கம் 22-10-81 அன்று பதிவு செய்யப்பட்டு, 9-11-81 அன்று அது துவக்கப்பட்டுள்ளது.



திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, ஜப்பானில் படித்த இளைஞர்கள் அரசாங்கத்தையும் மற்றும் தனியாரையும் எதிர்பாராமல் அவர்களே தொழில் நடத்தி நாட்டையும், அவர்களையும் முன்னேற்றம் அடையச் செய்கிறார்கள். அதைப் போலவே, தமிழ்நாட்டை ஜப்பானாக மாற்றவும், செல்வம் கொழிக்கும் பூமியாக, பசி, பட்டினி, பிணி போன்றவைகள் இல்லாமல் ஆக்கவும், இந்தத் திட்டத்தை மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை அரசு ஊக்குவிப்பதன் நோக்கமே அதுதான். பரிட்சார்த்தமாக சென்னையிலே முதலிலே இந்த self-employment co-operative society அமைக்கப்பட்டு இருக்கிறது. இந்த 3-4 மாதங்களிலே, ரூ. 4,12,000 என்கிற அளவிற்கு அந்த சொசைடிக்கு கடன் உதவி அளிக்கப்பட்டு இருக்கிறது. அது வெற்றிகரமான திட்டமாக உள்ளதால், அரசிலும், தனியாரிடத்திலும் வேலை வாய்ப்பு பெற முடியாத இளைஞர்கள் சுயவேலையில் ஈடுபடுகிற காரணத்தால், அது பல் நன்மைகளை ஈட்டும் என்ற அடிப்படையில் அதனை உற்சாகப் படுத்த அரசு முடிவு செய்துள்ளது. அனைத்து மாவட்டங்களிலும் இந்த self-employment cooperative society அமைக்கப்பட்டு, சுய வேலைவாய்ப்புத் திட்டம் ஊக்குவிக்கப்படும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, படித்த இளைஞர்கள் மட்டும் தான் இந்தச் சங்கத்தில் சேருவதற்கு வாய்ப்பு உள்ளதா? படித்த இளம் பெண்களும் இந்த சுயவேலை வாய்ப்பு சங்கத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார்களா? அந்தக் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேருவதற்கு என்ன விதிமுறைகள் உள்ளன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Co-operative society for self-employment of educated youth என்று இதற்குப் பெயரிடப்பட்டுள்ளது.

(Educated youth includes women also)

### நாகர்கோவில் பாதாள சாக்கடைத் திட்டம்.

* வினா எண் 270— திரு. மி. வின்செண்ட் :—மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நாகர்கோவில் பாதாள சாக்கடை திட்டத்திற்கு கடைசி ஆய்வு வரைவும் முடிவுற்று, மதிப்பீடும் செய்ததற்குப் பிறகு ஓராண்டுக்கும் மேல் இதை துவங்காதிருப்பது ஏன்?

(ஆ) உடனடியாக வேலை துவங்க அரசு வேகமாக பணிதனை மேற்கொள்ளுமா?

[1982 பிப்ரவரி 19

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) நாகர்கோவில் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டத்தை தனது சொந்தச் செலவில் நிறைவேற்ற முன் வரவில்லை.

(ஆ) அந்த நகராட்சி இத் திட்டத்தை தன் சொந்த் செலவில் நிறைவேற்ற முன் வந்தால் திட்டம் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

[முற்பகல் 9.50.]

திரு. மி. வின்செண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவிலுக்கு இத்திட்டத்தை முழுமையாக எடுக்கா விட்டாலும், செக்ஷன், செக்ஷனாக, ஃபேஸ்ட் ப்ரொகிராம் அடிப்படையிலாவது தாங்கள் தேவையை உணர்ந்து, பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவிலுக்கு முழுமையாக பாதாள சாக்கடைத் திட்டத்துக்கு ரூ. 93ப இலட்சம் ஆகிறது. அதற்கு மெயின் டெனன்ஸ், ஆண்டுச் செலவு ரூ. 32.50 இலட்சம் ஆகிறது. எனவே, நாகர்கோவிலை 4 பிரிவுகளாகவோ 3 பிரிவுகள கவோ பிரித்து, இந்தக் குறிப்பிட்ட பிரிவுக்கு முதலில் நீங்கள் பாதாள சாக்கடை கொண்டு வாருங்கள். முக்கியமான தேவையாக இருக்கிறது. அதற்கு என்ன தொகையோ அதை மாநகராட்சி ஏற்றுக்கொள்ளும் என்று சொன்னால், அப்படிச் செய்வதையும் அரசு பரிசீலனை செய்யும்.

திரு. மி. வின்செண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ள பல நகராட்சிகள் பணத்தை ஒழுங்காகத் தற்போது கட்டவில்லையென்பது உண்மையா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போட்டால் தகவலைச் சேகரித்து சரியான பதில் தருகிறேன். ஆஃப் ஹாண்டாக'ப் பதில் சொல்வது அவ்வளவு சரியாக இருக்காது.

திரு. ஜே ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கன்னியா குமரி என்ற இடத்திலே பல ஆயிரக்கணக்கான பிரயாணிகள் வந்து சென்றுகொண்டிருப்பதன் காரணமாக, அங்கே போதுமான ஹெல்த் கண்டிஷன்ஸ் இல்லை என்பதன் காரணமாக, அங்கே பாதாள சாக்கடைத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ? அதற்கு அரசே பணம் செலவு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஊராக இருந்தாலும் ஆகக்கூடிய செலவை, அது நகராட்சியாக இருந்தாலும் சரி, மாநகராட்சியாக இருந்தாலும் சரி, பணத்தைக் கட்டுவதாக இருந்தால், இந்த அரசு மிகத் தீவிரமாக அந்தப் பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றும். மானியம் என்ற பிரச்னை எழவில்லை.



1982 பிப்ரவரி 19]

கடல் நீரை குடிநீராக மாற்றும் திட்டம்.

* வினா எண் 271— திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கடல்நீரை சுத்தம் செய்து உப்பினை நீக்கி குடிநீராக மாற்றி மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு?

(இ) எப்பொழுது இத்திட்டம் அமுலாக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ரூ. 60,000 ஆகும்.

(இ) இதற்கான முன்னோடித் திட்டம் செங்கல்பட்டு மாவட்டம் கோவளம் என்ற சிற்றூரில் அமுலாக்கப்பட்டுள்ளது. அதன் வெற்றியைப் பொறுத்து, இத்திட்டம் விரிவாக்கப்படும்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, நமது நாடு உலகிலேயே நீண்ட கடற்கரையைக் கொண்டுள்ள நாடாக இருக்கிறது. எனவே, அந்தத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன. எனவே, எவ்வளவு பணம் செலவாகும் என்பதைக் கருத்திலே கொள்ளாமல், வெளிநாடுகளிலேயிருந்து இத்துறையிலே சிறந்த நிபுணர்களைக் கொண்டு வந்து செயல்படுத்த அரசு முன் வருமா ? அரபு நாடுகளிலே கூட இந்த முறையிலே குடிநீர்த் திட்டம் செயல்பட்டு வருவதாக அறிகிறோம். அதே முறையில் செயல்படுத்தி சென்னை நகர மக்களுக்குக் குடிநீர்த் தேவையை நிறைவு செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, கோவளத்தில் பரிசீலனை செய்வதைப் போல, தமிழ்நாட்டில் சில பகுதிகளிலுள்ள கிணறுகளில் கிடைக்கும் உவர் நீரை நுண்கலை வடிப்பு 'ஹைப்பர் ஃபில்ட்டரேஷன்' என்னும் முறையில் மாற்றியமைக்க முன்னோடியாக சில சிற்றூர்களில் மேற்சொல்லப்பட்ட அமைப்பு கொண்ட கருவிகளை ரூ. 4.36 இலட்சம் செலவில் அமைக்க பரிசீலிக்கப்பட்டு வருகிறது. தவிர, இது சம்பந்தமாக தமிழக அரசு தொழில் துறை அரசுச் செயலர், மற்றும் மாநிலத் திட்டக் குழுத் துணைத் தலைவர் அவர்கள் கடல் நீரைக் குடிநீராக மாற்றும் திட்டத்தைப் பற்றி, குறிப்பாக சுதர்சன் அனைத்துலக முன்னேற்ற ஆலோசகர்கள் கொடுத்த ஒருங்கிணைந்த மின்சக்தி நிலையம் மற்றும் கடல் நீரைக் குடிநீராக மாற்றும் நிலையம், இரண்டும்—டபுள் பர்ப்பஸ் அதிலே, ஒருங்கிணைந்த மின்சக்தி நிலையமும், மற்றும் கடல் நீரைக் குடிநீராக மாற்றும் நிலையமும் சென்னையில் அமைத்தல்

பற்றி விவாதிப்பதற்காகப் பல கூட்டங்களை நடத்தினர். ஆனால், எந்த முடிவும் இந்த இரட்டைத் திட்டம் சம்பந்தமாக இதுவரை எடுக்கவில்லை. ஆனால், அரசைப் பொறுத்த வரைக்கும் எவ்வளவு 'ஆப்ஸ்டக்கில்ஸ்' இருந்தாலும்கூட, இந்த முயற்சிகளை தொடர்ந்து ,எடுக்கும்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலே வேறு எந்த மாநிலமாவது இந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறதா ? இத்திட்டத்திற்கு மத்திய அரசிடம் நிதி உதவியும் ஒத்துழைப்பும் கேட்கப்பட்டுள்ளதா ? கேட்கப்பட்டிருந்தால் மத்திய அரசு எந்த வகையிலே உதவ முன் வந்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, இந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி கேட்டால் விவரமான பதில் தருகிறேன்.

**திரு. பி. எம். தங்கவேல்ராஜ் :** தலைவரவர்களே, கடல் நீரை குடிநீராக்குவோம்; கடல் பாசியில் அல்வா செய்வோம் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தேர்தல் வாக்குறுதியாகக் கொடுத்திருந்தார்கள். பேரறிஞர் அண்ணா வழியில் நடக்கும் இந்த அரசு கடல் பாசியிலிருந்து அல்வா செய்யும் திட்டத்தைப் பரிசீலிப்பார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் 31–12–1981-க்குள் கடல் பாசியிலிருந்து அல்வா செய்வோம் என்று சொல்லவில்லை. அது ஒரு 'ஆம்பிஷன்'. அது ஒரு ஆசையால். அவாவால், சொல்லப்பட்டது. அதை ஒரு கொள்கையாக வைத்து........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கடல் பாசியில் அல்வா தயாரிக்கும்போது பார்க்கலாம். இது மூலக்கேள்விக்கு சம்பந்தப் பட்டது அல்ல.

**கிராமக் குடிநீர் வழங்கு திட்டங்கள்.**

*வினா எண் 272—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கிராம குடிநீர் சப்ளை விரைவுத் திட்டங்களுக்காக 1981–1982 ஆம் ஆண்டில் தமிழக அரசு எவ்வளவு செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது?

(ஆ) மத்திய அரசின் உதவி இதற்கு கிடைக்குமா? எவ்வளவு?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) ரூபாய் 30 கோடி.



(ஆ) இதில் ரூ. 5 கோடி மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**சாத்தனூர் அணையிலிருந்து புதிய வாய்க்கால் வெட்டும் திட்டம்.**

*வினா எண் 273—திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தனூர் அணையிலிருந்து வலதுபுறம் வாய்க்காலுக்கு மேல்புறம் புதிதாக வாய்க்கால் பாசனத்திற்கு பயன்பட அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படத் துவங்கும்?

**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது :** (அ) & (ஆ) இத் திட்டம்பற்றி தலைமைப் பொறியாளரின் செயற்குறிப்பு ஆய்வு செய்யப்பட்டது. புதிதாக திட்டமிடப்படும் வாய்க்கால் வெட்டும் பணியை, பொன்னையாற்றை நவீனப்படுத்தும் திட்டத்துடன் இணைத்து செயல்படுத்தினால், இத்திட்டத்தின்மூலம் கிடைக்கக்கூடிய நீரியல் பயன் அதிகரிக்குமென்று கருதப்படுவதால் பொன்னையாற்றை நவீனப்படுத்தும் திட்டத்தோடு புதிய கால்வாய் வெட்டும் திட்டத்தை இணைத்து அனுப்பும்படி தலைமைப் பொறியாளர் (ஆய்வு) கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். அவரது அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. சோ. கலிதீர்த்தான் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் ஏற்கெனவே மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தபோது ஆய்வு செய்யப்பட்டது. அது என்ன காரணத்தால் தாமதம் ஆகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது :** தலைவரவர்களே, நான் என் பதிலிலேயே சொல்லியிருக்கிறேன். பொன்னை ஆற்றை நவீனப்படுத்தும் திட்டத்துடன் இணைத்து செயல் படுத்தினால் இத்திட்டத்தின்மூலம் கிடைக்கக்கூடிய நீரியல் பயன் அதிகரிக்குமென்று எதிர்பார்க்கிறோம். மேலும் ஒரு குறிப் பிட்ட பகுதியில் உள்ள உபரி நீரை கணக்கில் கொண்டு திட்டத்தை மேற்கொள்வதாக இருந்தால் பருவமழை பொய்த்து அல்லது வேறு காரணங்களினால் அந்தப் பகுதியில் உபரி நீர் கிடைக்கவில்லையானால் திட்டம் பயனற்றதாகிவிடும். பொன்னை ஆற்றின் மேல் பகுதியில் சில நீர்த்தேக்கங்கள் அமைக்கப்படுவதால் அதனால் நீர் வரத்து குறைந்துவிடுமா என்பதை எல்லாம் பரிசீலனை செய்து, இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள இருக்கிறோம்.

திரு. சோ. கலிதீர்த்தான் : தலைவரவர்களே, நம்முடைய நாடு விவசாயத்தில் மிகவும் கஷ்டமடைந்துகொண்டு வருகிறது. இந்தத் திட்டத்தினால் என்னுடைய தொகுதியாகிய சங்கராபுரம் தொகுதியிலும் தண்டராம்பட்டுத் தொகுதியிலும் சுமார் 50,000 ஏக்கர் பாசன வசதி பெறும். ஆகவே இந்தத் திட்டத்தை விரைவிலே செயல்படுத்த ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு. திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, ஏற்கெனவே திட்டமிட்டபோது 750 மில்லியன் கன அடி தண்ணீர் உபரியாகக் கிடைக்கும் என்றும், 5789 ஏக்கர் புன்செய் நிலம் பாசன வசதி பெறும் என்றும், 1920 ஏக்கர் நன்செய் நிலம் பாசன உறுதி பெறும் என்றும், 411.3 ஏக்கர் நன்செய் நிலத்திற்கு பாசன பற்றாக்குறை நீங்கும் என்றும் வரிவிதித்திருக்கிறார்கள். 470 இலட்சம் ரூபாய் செலவில் இத்திட்டத்திற்கு மதிப்பீடு செய்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போல இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்போது வடாற்காடு மாவட்டத்திலே, அதிலும் குறிப்பாக ஆண்டுதோறும் வறட்சியால் பாதிக்கப்படும் கராம்பட்டு, தண்டராம்பட்டு பகுதிகளுக்கு நிச்சயமாகப் பயன்படும். ஆகையால்தான் இத் திட்டத்தை நல்லமுறையில் செயல்படுத்த அரசு துரித நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மேல் அணையிலிருந்து வலதுபுற கால்வாய்த் திட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். ஏற்கெனவே இடதுபுறக் கால்வாய்த் திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் இருந்தது. இந்தத் திட்டத்தினால் அது பாதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, ஒரு திட்டத்தை ஆராயும்போது ஏற்கெனவே இருக்கிற எந்த ஒரு திட்டமும் பாதிக்காது. பொன்னை ஆற்றின் மேல்பகுதியில், தர்மபுரி மாவட்டத்தில் 5 புதிய நீர்த்தேக்கங்களைக்கட்டுகிறோம். அதனால் உபரி நீர் வரத்து குறைந்தால் இந்தக் கால்வாய்த் திட்டம் பயனற்றுப்போகும். அப்படி ஏற்படக்கூடாது என்று முன் எச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்கிறோம். ஆகவே, இருக்கிற திட்டம் எதுவும் பாதிக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குள்ளாசெட்டி அணை மராமத்துப்பணி.

*வினா எண் 274—திரு. பி. எஸ். துரைசாமி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கருக்கும் எமகல் நத்தத்திற்கும் இடையில் உள்ள குள்ளாசெட்டி அணை பழுது அடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?



(ஆ) ஆம் எனில் பழுதுபார்க்கும் பணி எப்போது எடுத்துக் கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ஆம்.

(ஆ) குள்ளாசெட்டி அணையை மராமத்து செய்வதற்கான வேலை வறட்சி நிவாரணத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, முடிவடையும் நிலையில் உள்ளது.

அமராவதி ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம்,

* வினா எண் 275—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அமராவதி ஆற்றில் மயில்ரங்கம் அருகே அணைகட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) & (ஆ) இத் திட்டம் முதல்நிலை ஆய்வில் உள்ளது என தலைமைப் பொறியாளர் (ஆய்வு) தெரிவித்துள்ளார்.

குதிரை ஆறு அணைக்கட்டும் திட்டம்.

* வினா எண் 276—திரு. ப. நெடுமாறன், திரு. நா. பழனிவேல்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தாலுகா குதிரை ஆறு அணைக்கட்டும் திட்டம் பற்றிய பரிசீலனை எந்தக் கட்டத்தில் உள்ளது?

(ஆ) அது எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு வினாக்கள் விடைகள் நேரம் நீட்டிக்கப் பெறுகின்றது.

திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இந்தத் திட்டம் அரசின் பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தின் முழுப்பயனும் மிகவும் பின்தங்கிய வறண்ட பகுதியான பழனிதாலுக்கா, வேடசந்தூர் ஆகிய இரண்டு தாலுக்காக்களுக்கும் கிடைக்கின்ற வகையிலே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தினை பழனி வட்டத்திலே உள்ள குதிரையாற்றின் குறுக்கேதான் கட்டுவதற்குத் திட்டமிட்டிருக்கிறோம். இருந்தாலும் முழு அளவுக்கு என்று சொல்வதை விட தேவையை ஒட்டி அந்தப் பகுதியினுடைய வறண்ட நிலைமையை மனதிலே கொண்டு கொஞ்சம் கூடுதலாக ஏதாவது கிடைப்பதற்கு முயற்சிகளைச் செய்ய முடியுமா என்பது பற்றி அரசு நிச்சயமாக ஆலோசிக்கும்.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, இந்தக் குதிரையாறுத் திட்டம் என்பது நமது அமைச்சருக்கே தெரியும். நீண்ட நாட்களாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்திலேயே ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டம். ஆனால் இவ்வாட்சி வந்ததற்குப் பின்னாலும் இது அடுத்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லி சென்ற ஆண்டு அதற்குத் தொகை ஒதுக்கினார்கள். ஆனால் இந்த ஆண்டிலே அந்த வேலையை எந்தவிதத்திலும் ஆரம்பிக்கவில்லை. இதனால் அந்தப் பகுதி விவசாயிகளிடையே பெரிய அதிர்ச்சி ஏற்படக்கூடிய நிலைமை இருக்கின்றது. ஆகவே இந்த ஆண்டாவது அதைச் செயலாற்றுவதற்கு அமைச்சரவர்கள் உத்தரவாதம் கொடுப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் பயன் விகிதங்களைப் பார்க்கின்றபோது நல்ல திட்டம், ஆகவே இதை எடுத்துச் செய்ய வேண்டும் என்பதிலே எந்தவிதமான சிக்கலும் அரசுக்கு இல்லை. ஆனால் 44.63 ஏக்கர் வன இலாக்காவினுடைய நிலத்தைக் கையகப்படுத்த வேண்டி இருக்கின்றது. புதிதாக அவ்வாறு நாம் கையகப்படுத்துகின்றபோது காடுகளை 'நான் —ஃபாரஸ்ட்' பணிக்கு பயன்படுத்துகின்றபோது மத்திய அரசினுடைய ஒப்புதலைப் பெறவேண்டி இருக்கின்றது. அப்படி ஒப்புதலைப் பெற்றதற்குப் பிறகு நிச்சயமாக அந்தத் திட்டத்தை அரசு நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது ஒரு புதிய தகவலைச் சொல்கிறார்கள். வனத்துறையின் நிலங்களைக் கையகப்படுத்தவேண்டும் என்றால் மத்திய அரசு ஒப்புதல் அளிக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். இந்தக் குதிரையாற்றுத் திட்டம் பற்றி ஏற்கெனவே பலமுறை சட்டமன்றத்திலே பதிலளிக்கப்பட்டிருக்கின்றது. அப்போது இந்தமாதிரியான தகவலை மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லவில்லை. சென்ற ஆண்டிலே நானே கேட்டபோது கூட இந்தக் குதிரையாற்றுத் திட்டம் ரொம்ப வேகமாகத்தான் நடக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இப்போது ஒரு புதிய திட்டத்தைச் சொல்வது பொருத்தமாக இருக்குமா? ஆகவே இது தட்டிக்கழிப்பதற்குச் செய்யப்படுகின்ற முயற்சியா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும், நானே இந்த இடத்திற்கு வந்து அதை எல்லாம் பார்வையிட்டு அதைத் துரிதப்படுத்த வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை காட்டுகிறேன். ஆனால் மத்திய அரசினைப் பொறுத்தவரை காடுகளை 'நான்—ஃபாரஸ்ட் பர்ப்பஸுக்கு' பயன்படுத்தவேண்டும் என்றால் அவர்கள் அனுமதி வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்று இது புதிதாக எழுந்துள்ள பிரச்சினைதான். என்றாலும் அதன் காரணமாக இது நிற்காது. இருக்கின்ற தகவலைச் சொல்கிறோம். இது சம்பந்தமாக மதுரை மாவட்ட ஆட்சியாளரின் கருத்தும் பெறப்பட்டது, கோவை மாவட்ட ஆட்சியாளரின் கருத்தும் பெறப்பட்டது. நீர் நிர்வாக அணையாளரின் கருத்தும் பெறப்பட்டது. எல்லாமே சாதகமாகத்தான் இருக்கின்றன. ஆகவே அனுமதி கிடைத்தவுடன் சீக்கிரமாக இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள முடியும் என்று எழுதி இருக்கிறார்கள். ஆகவே இன்னும் ஒரு மாதம், இரண்டு மாதங்களுக்குள்ளாக அனுமதி கிடைக்கக்கூடும். அனுமதி கிடைத்தவுடன் திட்டத்தை ஆரம்பித்துவிடவேண்டியதுதான். ஆகவே இந்தக் குதிரை நிற்காமல் ஓடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## வேதாரண்யத்தில் இரசாயனத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

* வினா எண் 277—திரு. பெ. உத்திராபதி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யத்தில் இரசாயனத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் திட்ட மதிப்பீடு என்ன?

(இ) எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, வேதாரண்யம் சதுப்பு நிலப்பகுதியில் இயற்கை சமநிலை, தாவர இனங்கள் மற்றும் பறவை இனங்கள் ஆகியவற்றைப் பாதிக்காதபடி எந்தெந்த பகுதிகளில் உப்பு தொழிற்சாலைகள் மற்றும் இரசாயனத் தொழிற்சாலைகள் ஆகியவற்றை அமைக்கலாம் என்பது பற்றி பம்பாய் இயற்கை மற்றும் சரித்திர சங்கம் சமீபத்தில் ஓர் அறிக்கை தந்துள்ளது. அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டு இது பற்றி விரைவில் ஒரு முடிவு எடுக்கப்படும்.

இதற்கிடையில் மரவக்காடு வடகாடு பகுதிகளில் சுமார் 6,000 ஏக்கர் நிலப்பரப்பில் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உப்பு தயாரிக்கும் ஒரு தொழிற்சாலையைத் துவங்குவதற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

**திரு. எம். எஸ். மாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு அங்கே மாவட்ட ஆட்சித்தலைவராக இருந்த இன்றைய கல்விச் செயலாளருடைய முயற்சியினாலே அங்கே 100 கோடி ரூபாய் அளவிலே ஒரு திட்டம் பற்றி ஆய்வு செய்தபோது, அங்கே பறவைகள் வருகின்றன என்று காரணம் காட்டி அந்தத் தொழிற்சாலையைத் துவங்காமல் விட்டு விட்டார்கள். அந்தத் தொழிற்சாலையை அங்கே ஆரம்பிக்க முடியவில்லை. அதேநேரத்தில் அந்தப் பறவைகளினால் அந்தப் பகுதி மக்களுக்கு ஏதாவது பலன் இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. இந்த ஆண்டு கூட அங்கே பறவைகள் அவ்வளவாக வரவில்லை என்ற நிலைமை இருக்கிறபோது, மக்களுடைய பொருளாதார நிலைமைய வளப்படுத்துகின்ற முறையிலாவது அங்கே தொழிற்சாலையைத் துவங்குவதற்கு........

(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பறவைகள் தாமாகவே குறிப்பிட்ட இடத்தில் வரும். அவைகளை வேறு இடத்திற்கு போகும்படி வற்புறுத்த முடியாது. கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. எம். எஸ். மாணிக்கம் :** எனவே மக்களுடைய வாழ்க்கையை வளப்படுத்தக்கூடிய அளவிலே அந்தத் தொழிற்சாலைகளை அங்கே துவங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில், தன் தொகுதிக்கு தொழிற்சாலை வரவேண்டும் என்ற ஆவலில் கேட்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, பல்வேறு பகுதிகளிலிருந்தும், உலக நாடுகள் பலவற்றிலிருந்தும் பறவைகள் வந்து அங்கே தங்கி வசிக்கின்றன என்று சொல்லப்படுகிறது. ஆனால் அந்தப்பகுதியிலே ஏறக்குறைய 1 இலட்சம் ஏக்கர் பெறுமானமுள்ள நிலம் கடலோரப்பகுதியிலே இருக்கின்றது. அவ்வளவு நிலமும் அப்படியே பறவைகளுக்கு விடப்படவேண்டுமா அல்லது பறவைகளுக்குத் தேவையான பகுதி போக மீதி இடத்தை இப்படி ஏதாவது தொழிற்சாலை துவங்க பயன்படுத்தலாமா என்பதுதான் இப்போது ஆய்வில் இருக்கிற பிரச்னை. அது பற்றிய ஆய்வறிக்கையும் பரிசீலனையில் உள்ளது. விரைவில் அதைப் பார்த்து முடிவு எடுக்கலாம்.

**திரு. மு. அம்பிகாபதி :** பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் பகுதியிலே கொள்கை அடிப்படையிலே 100 கோடி ரூபாய் செலவில் மரைன் காம்பிளக்ஸ் அமைக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்கான செயற்குறிப்பு எந்த நிலையில் இருக்கிறது? அதற்கான வேலைகள் துவக்கப்பட இருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்?





**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 10 கோடி மதிப்பீட்டில் மாருதி கன்சல்டன்ட் என்ற நிறுவனத்தின் மூலம் டிட்கோ நிறுவனம்தான் இதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொண்டது. தொழிற்சாலை துவங்க இருக்கும் பகுதிகளை ஆய்வு செய்கின்ற நேரத்தில், பல்வேறு உலக நாடுகளில் இருந்தும் அங்கு வந்து தங்குகின்ற ஏராளமான பறவைகள் பாதிக்கப்படக் கூடாது என்ற காரணத்தால், பம்பாயில் உள்ள சம்பந்தப்பட்ட சொசைட்டியோடு தொடர்பு கொண்டு விவரங்கள் கேட்கப்பட்டன. அதுகுறித்து விவரங்கள் முழுமையாக இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் பல பத்திரிகைகளிலும வெளிவந்துள்ளன. அந்தப் பறவைகள் தங்கும் பகுதிகள் அபபடியே விடப்பட வேண்டும் என்பதுதான் அவர்கள செய்துள்ள சிபாரிசு.

எனவே இப்போதுள்ள பிரச்னை என்னவென்றால், கிட்டத்தட்ட 1 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்புள்ள அந்தப்பகுதி முழுவதும் அபபடியே பறவைகளுக்கு விடப்படவேண்டுமா அல்லது, பறவைகளின் தேவைகளுக்குப் போக, மிச்சமுள்ள நிலங்களில் இந்த உப்பு தயாரிக்கும் அல்லது உப்பு சார்ந்த பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலையைத் துவங்கலாமா என்பது குறித்துதான். அதை இப்போது ஆய்வு செய்து வருகிறோம். விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

### கிருஷ்டியான்பேட்டை அருகே வெடிமருந்து தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

* வினா எண். 278—திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் கிருஷ்டியான்பேட்டை அருகில் வெடிமருந்து தொழிற்சாலை அமைக்கப்போவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கும்?

(இ) எத்தனை பேர்களுக்கு வேலை கொடுக்கப்படும்?

(ஈ) மதிப்பீடு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வடாற்காடு மாவட்டம் கிறிஸ்டியான் பேட்டை அருகிலே வெடி மருந்துத் தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் இல்லை. ஆனால் அதே மாவட்டத்தில் காட்பாடி அருகில் உள்ள பனமடங்கி என்ற இடத்தில் ஏறக்குறைய 20 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 15,000 டன் வெடி மருந்துகள் தயாரிக்கின்ற அந்தத் தொழிற்சாலை ஸ்வீடன் நாட்டின் ஒத்துழைப்போடு துவங்கப்படவிருக்கிறது. கிட்டத்தட்ட 500 பேர்களுக்கு அந்தப் பகுதியிலே வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

**திரு. என். ஏ. பூங்காவனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்தில் அறிவிக்கப்பட்டபோது கிறிஸ்டியாவ பேட்டை பகுதி என்று அறிவித்தார்கள். இப்போது பனமடங்கி என்ற இடத்தில் ஆரம்பிக்கப்போவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படி என்றால், பனமடங்கிப் பகுதியிலுள்ள அந்த நிலம் ஆய்வு செய்யப்பட்டு, ஆர்ஜிதம் செய்யப்பட்டு விட்டதா; இரண்டாவதாக, அந்த வெடி மருந்து தயாரிக்கும் தொழிற்சாலையை வேறொரு நாட்டுடன் சேர்ந்து தயாரிக்கப் போவதாகச் சொன்னார்கள். மைய அரசு ஸ்வீடன் நாட்டுடன் சேர்ந்து அதை ஆரம்பிக்கப் போகிறார்களா? அல்லது மாநில அரசே எடுத்து இம்மாதிரி செய்யப்போகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.10)

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** இந்தத் தொழிற்சாலைத் துவங்கும்போது சில விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டியிருக்கிறது. இது வெடிமருந்து தயாரிக்கும் தொழிற்சாலை என்பதால் சுற்றி கிராமப்புறங்களில் மக்கள் வாழ்கிற பகுதி, தொலைதூரத்தில் உள்ள வனப்பகுதி, அதேபோறு மேட்டுப்பாங்கான, பள்ளங்கள் நிறைந்த பகுதி போன்ல் இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு அந்தப் பகுதி தேர்வு செய்யப்பட்டது. அப்படி தேர்வு செய்த அடிப்படையில்தான் காட்பாடி பகுதி தேர்வு செய்யப்பட்டது. இந்த அமைப்பு, தமிழ்நாட்டு நிறுவனமான டிட்கோ ஸ்வீடன் நாட்டு ஒத்துழைப்போடு இந்தத் தொழிற்சாலை இருபது கோடி ரூபாய் மதிப்பீட்டில் துவங்கப்பட இருக்கிறது. தனியாக தமிழ்நாடு தொழில் இயல் வெடிமருந்து நிறுவனம் என்ற நிறுவனம் தோற்றுவிக்கப்பட அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு அமைப்பின், அப்படிப்பட்ட நிறுவனத்தின் பெயரில் இந்தத் தொழிற்சாலை கட்டபடும், நிர்வகிக்கப்படும்.

**திரு. என். ஏ. பூங்காவனம்:** நான் கேட்டதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய, மாநில அரசுக்கு இல்லை என்ற நிலையில்தான் அவர்கள் பதில் வந்திருக்கிறது. தனி நிறுவனம் என்று சொல்கிறார்கள். அப்படி தனி நிறுவனம் நிறுவப்பட வேண்டுமென்று சொன்னால் என்னுடைய வேண்டுகோள் எல்லாம் அந்த பனைமடங்கி வட்டாரத்தில் மலைகள் அதிகமாக இருப்பதால் விவசாயம் செய்யக்கூடிய நிலங்களாக இல்லாமல் காட்டுப் பகுதியை இந்தத் தொழிற்சாலைக்காக பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட நிலையில் இடம் ஆய்வு செய்யப்படுகிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மத்திய அரசினுடைய நேரடி முதலீடுதான் இல்லை என்று சொன்னேனே தவிர, மாநில அரசின் நிறுவனமான டிட்கோதான் நடத்துவார்கள் ஸ்வீடன் நாட்டு ஒத்துழைப்புடன் என்று சொன்னேன். மாநில அரசுதான் இந்தத் தொழிற்சாலையைப் போடுகிறது. பலயிடங்கள் ஆய்வு செய்யப்பட்டன. அதில் காட்பாடி பகுதி தேர்வு செய்யப்பட்டிருக்கிறது.



**திரு. உ. சுப்பிரமணியன்:** இந்தத் தொழிற்சாலை முதலில் இராமநாதபுரம் மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்டது. சாய லோடைக்கரை என்ற பகுதியில் நிலம் எல்லாம் பார்த்து முடிவு செய்யப்பட்டு பிறகு வடாற்காடு மாவட்டத்திற்கு எப்படி மாற்றப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்தத் தொழிற்சாலையைத் போடுவதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான ஆதாரங்கள் என்னிடம் இல்லை. நான் அப்படி அறிவித்ததாகவும் எனக்கு நினைவில்லை. நான் முன்னாலேயே இந்தத் தொழிற்சாலை பற்றி பேசியபோது வட ஆற்காடு மாவட்டத்தில் வரும் என்று சொல்லியிருக்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவலைப் பட வேண்டியதில்லை. பின்தங்கிய மாவட்டமாகிய இராமநாதபுரம் மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி ஏற்பட புரட்சித் தலைவர் அவர்கள் அரசு பல்வேறு பணிகளை மேற்கொண்டிருக்கிறது.

**திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது ஸ்வீடன் நாட்டு ஒத்துழைப்பின் பேரில் ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். ஒத்துழைப்பு என்றால் பைனான்ஷியல் ஒதத்துழைப்பா அல்லது டெக்னிக்கல் கொலாபரேஷனா? எப்படிப்பட்ட ஒத்துழைப்பு என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** டெக்னிக்கல் ஒத்துழைப்புதான்.

### அலிவலம், ஆண்டிவயல் கிராம ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கு நிரந்தரக் கட்டிடம் கட்டும் திட்டம்.

* வினா எண் 279—திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணித் தொகுதி அலிவலம் மற்றும் ஆண்டிவயல் அரிசன நலப்பள்ளிகளுக்கு நிரந்தரக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** ஆம். தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணித் தொகுதியில் உள்ள அலிவலம் ஆதிதிராவிடர் நலப்பள்ளிக்கு ரூ. 60,000 மதிப்பீட்டுச் செலவில் புதிய கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. ஆண்டிவயல் ஆதிதிராவிடர் நலப்பள்ளிக்கு ரூ 60,000 மதிப்பீட்டில் கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எம். ஆர். கோவேந்தன் : ஆண்டிவயல் அரிசன நலப் பள்ளி தொடர்ந்து மாதா கோவிலில் நடந்துவருகிறது. நீண்ட நாட்களாக அப்படியிருப்பதால், மாதா கோவிலில் ஏதாவது நடக்கிற காலத்தில் லீவ் விட்டுவிடுகிறார்கள். ஆகவே அந்தப் பள்ளிக்கூடத்திற்கு என்று உடனடியாக ஒரு கட்டிடம் கட்டு வதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : ஆண்டிவயல் பொறுத்த வரையில் சென்ற ஆண்டே அதற்கான ஒரு கட்டடம் கட்டப் படும் ஒரு சூழ்நிலை இருந்தது. இருந்தாலும், இந்தப் பகுதி கடற்கரைக்கு அருகாமையில் அமைந்திருக்கிற காரணத்தால் அங்கே ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் போட்டு கூரை வேயப்படுமானால் அங்கிருக்கக்கூடிய காற்றின் காரணமாக அந்தக் கட்டடம் பழுதடையக் கூடிய நிலை காரணமாக தற்போது அதிகாரிகள் ஆர். ஸி. ஸி. ரூஃபிங்க் போடுவதற்கான பரிந்துரையை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதற்கான திருத்த மதிப்பீடு ஏறத்தாழ ஒரு இலட்சம் ரூபாயாகிறது. அது தற்போது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### ஆதிதிராவிடர் நலத்துறை விடுதிகள்

* வினா எண் 280—திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : திரு எம். சின்னசாமி : திரு எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழகத்திலுள்ள ஆதிதிராவிடர் நலத்துறை விடுதியில் மாணவர் மாணவியர்கள் குலுக்குச்சீட்டு முறையில் தேர்ந்தெடுக்கப் படுகிறார்களா?

(ஆ) ஆம் எனில் அந்த முறையை ரத்து செய்ய அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) மற்றும் (ஆ) தமிழகத்திலுள்ள ஆதிதிராவிடர் நலத்துறை விடுதியில் மாணவர் மாணவியர் குலுக்குச் சீட்டு முறையில் தேர்ந்தெடுக்கப் பட வேண்டுமென்று கடந்த பிப்ரவரி திங்களில் ஆணையிடப் பட்டது. இம்முறையில் குறைபாடுகள் தெரிவிக்கப்பட்டதை யொட்டி அரசு இதனை மறுபரிசீலனை செய்து அம்முறையை ரத்து செய்து தேர்வு குழு மூலம் தேர்ந்தெடுக்கும் முறையையே அமுல்படுத்தும்படி நவம்பர் திங்களில் மறு ஆணை வெளியிடப் பட்டுள்ளது.



திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்திலே இயங்கி வருகின்ற ஆதிதிராவிட நல விடுதிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு ஆதி திராவிடர்களுக்கு இத்தனை சதவிகிதம். பின்தங்கிய வகுப்பினருக்கு இத்தனை சதவிகிதம் என்றிருக் கிறது. அதைப்போல் உடல் ஊனமுற்றோர், விதவைகளின் குழந்தைகள் ஆகியோருக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகித இடத்தை ஒதுக்குவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் எடுத்துச் சொன்னதைப் போல் தற்போது விடுதிகளில் மாணவர்களைச் சேர்க்கின்ற போது, அவர்கள் சார்ந்த இனங்களின் அடிப்படையிலே வருமானத்தின் அடிப்படையிலே சேர்க்கப்படுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துகளை இந்த அரசு பரிவோடு பரிசீலனை செய்யும்.

வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநிலத்திலே பிளஸ் இரண்டு படிப்பை அமுல்படுத்தியதால். உயர்நிலைப் பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்கள் 11 ஆவதுக்குப் பிறகு மேலும் ஓராண்டு படிக்கின்ற நிலையில், கூடுதலாக 100 மாணவர்கள் சேரக்கூடிய நிலைமை இருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டு, இந்த மாநிலத்திலே இருக்கின்ற அனைத்து ஆதி திராவிட நல விடுதிகளிலும் ஒரு குறிப்பிட்ட சதவிகித மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுகூட அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் 10 சதவீதம் கூடுதலான மாணவர்களைச் சேர்க்க வேண்டுமென்ற ஆணையை இந்த அரசு பிறப்பித்திருக்கிறது. வருகின்ற ஆண்டில் இருக்கின்ற இட வசதிகளையும், அரசின் நிதி நிலைமையையும் பார்த்து, இதுபற்றி மேலும் பரிசீலனை செய்யலாம்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களை குலுக்குச் சீட்டு மூலம் தேர்ந்தெடுக்கும் முறை இதுவரையில் எப்போதும் நடந்ததில்லை என்பது அரசுக்குத் தெரியும். இது சம்பந்தமாக முதலமைச்சர் அவர்களிடம் சொல்லியபோது, 1000 மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதாக உறுதி தந்தார்கள். இப்போது உள்ளூரிலே இருக்கின்ற மாணவர்கள் சிலருக்கு கிடைத்து, பல மாணவர்கள் 3, 7 மைல்களிலிருந்து பள்ளிக்கு வர வேண்டிய ஒரு அவலமான நிலைமை இருக்கிறது. எனவே, முதலமைச்சர் அவர்கள் தந்த உறுதியின் அடிப்படையில், ஆதி திராவிட நல அமைச்சர் அவர்கள் நீண்ட தூரத்திலே இருந்து நடந்து வருகின்ற மாணவர்கள் அனைவருக்கும் ஒரு தனி ஸ்கீம் போட்டு, உடனடியாக அவர்களுக்கு வசதி செய்து தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே பதிலளித்திருக்கிறேன். அரசின் நிதிநிலைமையைப் பார்த்து, அதைப்பற்றி நிச்சயமாக இந்த அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விடுதிகளிலே மாணவர்களைச் சேர்ப்பதற்கு அவர்களின் வருமான வரம்பு, விடுதியிலே இருந்து இருக்கின்ற தூரம் ஆகியவற்றின் அடிப்படையிலே எடுத்துக் கொள்கிறார்கள் அந்தப் பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்திலேயே, ஒரு வேளை உணவுக்கு வழியில்லாமல் பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களுடைய வறுமையை கணக்கிலெடுத்து, அவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு தனி கவனம் செலுத்துவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற நிலைமைகளை உணர்ந்து தான், ஏற்கனவே அரசு அறிவுரைக் குழு அமைத்து, அவர்கள் மாணவ, மாணவிகளை தேர்ந்தெடுக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அதிலே, அந்தக் குழுவிலே இருக்கிறார்கள். அவர்களும் அதுபற்றி நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சபை கூட்டத்தின் கடைசி நாள் ஸ்டேட் முழுவதும் ஸ்ட்ரைக் ஏற்படக்கூடிய சிட்சுவேஷன் வரக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. திரு கே. டி. கோசல்ராம் என்ற எம். பி. ஒரு ஊழியரை அடித்து...

(முற்பகல் 10.20)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு கடைசி நாள். எல்லாவற்றையும் இன்றைக்கே எடுத்துக் கொள்வது என்பது கடினமான காரியம். ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தை இன்று எடுத்துக் கொள்ளப் போகிறோம்.

திரு. ரா. உமாநாத்: எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லவில்லை. ஒருவரை ஒரு ரெஸ்பான்சிபிள் எம். பி. அடித்திருக்கிறார். அவரை அரஸ்ட் கூட பண்ணவில்லை.





What the people would think about the house. Atleast ask the Minister to make a Statement about it.

அல்லது ஒரு அட்ஜர்ன்மென்ட் மோஷனோடு இந்த தீர்மானத்தையும் எடுத்துக் கொள்ள ரூலை சஸ்பெண்டு செய்ய தீர்மானம் கொண்டு வர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவரின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கப் பட்டிருப்பதாக திரு. கிருஷ்ணமூர்த்தி, திரு. ரகுமான்கான் போன்றவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். தாங்கள் இதை எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிறீர்கள். எல்லாவற்றையும் இன்றைக்கே எப்படி எடுத்துக் கொள்ள முடியும்?

திரு ரா. உமாநாத்: இது முக்கியமான விஷயமாக இருப்பதால் இன்றைக்கு கடைசி நாள் கூட்டமாக இருப்பதால் வேறு வழியில்லை என்பதால் ஜனங்கள் அஜிட்டேட் ஆகக்கூடிய, இந்த அவையை அச்சப்படுத்தக்கூடிய விஷயமாக இருப்பதால் எம். பி. அடித்த விஷயம்

Let the Ministers make a Statement or take this Adjourment Motion also by suspending the relevant Rule

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு 3,4 பிரச்னைகள் இருக்கின்றன. அவைகளை யெல்லாம் எடுத்துக் கொண்டால் மின்துறை விவாதத்தை எப்போது எடுத்துக் கொள்வது? எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம், திரு நெடுமாறன் திரு ஆண்டித் தேவர் எல்லோரும் பேசியாக வேண்டும். அதற்குப் பிறகு இந்தச் சபையை ஒத்தி வைத்தாக வேண்டும். இது சிறிய சம்பவம் தான், பெரியதாகத் தெரியவில்லை. (குறுக்கீடு) அடித்ததாகச் சொல்கிறார். ஆனால் அவர் இல்லை என்று. ஸ்டேட்மெண்ட் கொடுக்கிறார். ஆகவே சபையிலே இதை எப்படி எடுப்பது என்று தெரியவில்லை.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரீப்: ஒரு ரெஸ்பான்சிபிள் எம். பி. அந்தமாதிரிச் செய்யவில்லை என்று கூறியிருக்கிறார். பத்திரிகையிலே வந்து இருக்கிறது. இங்கே இர்ரெஸ்பான்சிபிள் ஸ்டேட்மெண்டை உறுப்பினர் கொண்டு வந்திருக்கிறார்கள்.

திரு. ரா. உமாநாத்: இர்ரெஸ்பான்சிபிள் ஸ்டேட்மெண்ட் என்று எப்படி சொல்லமுடியும்?

The intervention of Mr. Haja Shariff is only irresponsible

தங்கள் அனுமதியோடுதான் நான் பேசியிருக்கிறேன். திரு. ஹாஜா செரீப் தான் மோஸ்ட் இர்ரெஸ்பான்சிபிளாகச் சொல்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் சொன்னார். தாங்கள் சொன்னீர்கள். சரியாகப் போய் விட்டது. அவ்வளவுதான்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று நாட்களாகவே நாங்கள் இதையெல்லாம் சொல்லவேண்டுமென்றாலும் அதற்கு விதியில் இடமில்லை என்று அப்படியே போய்க் கொண்டிருக்கிறது. நேற்றைய தினம் இங்கே எழுப்பப்பட்டிருக்கிறது, நான் மாலையிலே வர முடியவில்லை. நேற்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் செல்கிற சாலையில் வெடிகுண்டு வைத்திருக்கிறார்கள். ஒன்று வெடித்து......

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு-குழப்பம்) நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதை கேட்டுவிட்டு, நான் பேசலாமா வேண்டாமா என்று சொன்னால் நன்றாக இருக்கும். எழுந்தவுடனே பேசக் கூடாது என்றால்?

திரு துரைமுருகன் : நாவலர் அவர்கள் பேசக் கூடாது என்று நாங்கள் சொல்லவில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுதான் சொன்னீர்களே விதியைத் தளர்த்தி, இந்தப் பிரச்சினை குறித்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை, இன்றைக்கு எடுத்துக் கொள்ளலாம். இருக்கின்ற பிரச்னையை நான் விளக்கிச் சொல்கிறேன், அப்பொழுது இருக்கின்ற நிலைமைகளைத் தெரிந்து கொள்ளலாம். அதற்குள் ஏன் அவசரப்பட வேண்டுமென்றுதான் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடு)

### 3. அரசினர் தீர்மானங்கள.

### (அ) விதி 58ஐத் தளர்த்தல்

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஒரு நாள் கூட்டத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பிரச்னைகளை எடுத்தக் கொள்ளக் கூடாது என்றுள்ள விதி 58-தளர்த்தப்பட்டு இன்று (19-2-82) இரண்டுப் பொருள்கள் எடுத்துக் கொள்ளப் பெறலாம்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

### 4. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

### (அ) வாடிப்பட்டி காவலர்கள் ஊராட்சிப்பள்ளியில் பணிபுரியும் சீனியம்மாளைத் துன்புறுத்தியது

மாண்புமிகு பேரவைத் தலைவர். மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் உதவி ஆசிரியையாகப் பணியாற்றும் திருமதி எம். சீனியம்மாள் என்பவரை 1-2-82 அன்று காலை பள்ளியில் வேலை செய்து கொண்டிருந்தபோது போலீசார் அவரை பலவந்தமாக



அழைத்துச் சென்று வாடிப்பட்டி காவல் நிலையத்தில் தாக்கியுள்ளனர். அவருடைய கணவர் முன்னாள் ராணுவ வீரர் திரு. நல்லகாமன் என்பவரையும், அவர் மகன் மதிவாணன் என்பவரையும் காவல் நிலையத்தில் வைத்து தாக்கி பலத்த காயங்களை ஏற்படுத்தி அந்த இருவரையும் கையில் விலங்கிட்டு தெருவில் ஊர்வலமாக இழுத்துச் சென்றதோடு மட்டும அல்லாமல் அந்த மூவர் மீதும் தவறான வழக்குப் போட்டு அவர்களைச் சிறைக்கு அனுப்பியது அந்தப் பகுதியில் உள்ள மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ள பதட்டநிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்னும் தீர்மானத்தை முன்மொழிய அனுமதி கேட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆண்டித்தேவர் அவர்களிடமிருந்து ஒரு அறிவிப்பு வந்துள்ளது. இதே பொருளில் கீழ்க்கண்ட உறுப்பினர்களிடமிருந்தும் அறிவிப்புகள் வந்துள்ளன. திருவாளர்கள் ப. நெடுமாறன், ஏ. சந்திரசேகரன், என். வரதராசன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், சோ. அழகர்சாமி, ஆர். கருப்பையா, மு. அம்பிகாபதி, பொ. உத்திராபதி, ந. பழனிவேல், கே. தனுக்கோடி தேவர், பாபு ஜனார்த்தனம், ப. பொன்னுரங்கம், உ. சுப்பிரமணியம், சு. பாலன், அ. ரகுமான்கான், கே. எம். தங்கமணி, நா. சுந்தரராஜ், பொ. விஜயராகவன், ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன், எஸ். என். இராமசாமி, மற்றும் குமரி அனந்தன்.

இது எப்படி அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன். திரு. எஸ். ஆண்டித் தேவர் அவர்கள்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் உதவி ஆசிரியை சீனியம்மாள் அவர்களை வாடிப்பட்டி காவல் நிலையத்தைச் சேர்ந்தவர்கள் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று கொடுமைப்படுத்தியதோடு மட்டுமல்லாமல், அந்த அம்மையாருடைய கணவர் முன்னாள் இராணுவ வீரர் நல்லகாமன் என்பவரையும், அவருடைய மகன் மதிவாணன் என்பவரையும் விலங்கிட்டுத் தெருக்களிலே இழுத்து, அடித்து கொடுமைப்படுத்தியது சம்பந்தமாக இந்த ஒத்தி வைப்புத் தீர்மானங்களை கொடுத்திருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சீனியம்மாள் என்ற ஆசிரியை வாடிப்பட்டியிலே ஆயுதக் காவல் படையைச் சேர்ந்த பைரம்சிங் என்பவர் வீட்டில் 5000 ரூபாய் ஒத்தி கொடுத்து வாடகைக்கு இருந்திருக்கிறார்கள். அந்த பைரம்சிங் என்பவர் ஆயுதப் படையில் இருந்தாலுங்கூட இங்குள்ள வாடிப்பட்டி காவல் நிலையத்திற்கு வந்து வீட்டில் குடியிருக்கக்கூடாது என்று சொல்லி சீனியம்மாளையும், அவருடைய கணவரையும் காலி செய்ய வேண்டுமென்று கேட்டு, காவல்துறையை அணுகி, வெளியேற்ற வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

அந்த அம்மைய ரும், கணவரும் நாங்கள் கொடுத்த 5,000
ரூபாயை கொடுத்துவிட்டால் நாங்கள் வீட்டை காலி செய்கிறோம்
என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மேலும் பலவந்தமாக
அவர்களைக் காலி செய்ய வேண்டுமென்று கேட்ட நேரத்தில்
சிவில் கோர்ட்டிற்குச் சென்று அந்த ஆசிரியை தடை
உத்தரவை வாங்கி வைத்திருந்தும், சிவில் கோர்ட்டின்
அனுமதியையும் மீறி, காவல்துறையைச் சார்ந்த அங்கேயுள்ள
சப்-இன்ஸ்பெக்டரும், காவல் துறையினரும் அவர்களை
பலவந்தமாக வெளியேற வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்
கள். அவர்கள் அந்த வற்புறுத்தலுக்கு மாறாக, சிவில்
கோர்ட்டில் உத்திரவு இருக்கிறது என்று சொல்லியும், அந்த
ஆசிரியைப் பள்ளிச் சென்று காலை 8.30 மணி அளவில்
ஆசிரியர் பட்டியலில் கையெழுத்துப் போட்டுவிட்டு வேலைக்கு
சென்ற நேரத்திலே, பெண் காவலர்களை அனுப்பி, தலைமை
ஆசிரியருடைய அனுமதியும் இன்றி காவல் நிலையத்திற்கு
இழுத்துச் சென்றிருக்கிறார்கள்.

(முற்பகல் 10-30)

அங்கே வைத்து, அந்த ஆசிரியையை, அந்தக் காவல் துறையை
சேர்ந்தவர்கள், 'போடி, வாடி' என்றெல்லாம் அவமானமாகப்
பேசி, அந்த அம்மையாரைச் சங்கிலியைக் கட்டி அறையிலே
அடையுங்கள் என்று அந்தக்காவல் துறையைச் சேர்ந்த போலீஸ்
அதிகாரி சொல்லியிருக்கிறார். அப்பொழுது பக்கத்தில் இருந்த
கணவர் ஏன் ஒரு பெண்ணை அவமானமாகப் பேசுகிறீர்கள்?
எதற்காகச் சங்கிலியில் கட்டிப் போடச் சொல்கிறீர்கள் என்று
கேட்டதற்காக, அவரைக் கடுமையாகத் தாக்கியிருக்கிறார்கள்
அந்த அம்மையாரின் சேலையை உருவி, பாவாடை,
ரவிக்கையோடு ஒரு அறையிலே அடைத்துவிட்டு' அந்த
இராணுவ வீரரைப் போலீசார் கடுமையாகத் தாக்கி, படுகாயத்
திற்கு உள்ளாக்கியிருக்கிறார்கள். அதோடு அவர்கள் நிற்கவில்லை.
அங்கே, தாயும் தகப்பனும் கொடுமைப்படுத்தப்படுகிறார்களா
என்று பார்க்க வந்த அவர்களது மகன் மதிவாணன் என்பவரையும்
காவல் துறையைச் சேர்ந்தவர் அடித்ததோடு மட்டுமல்ல.
ஆயுதப்படையைச் சேர்ந்த பைரங் சிம், அந்த காவல் நிலையத்
திற்குச் சம்பந்தப்படாதவராய் இருந்தாலுங்கூட, அவர்தான்
அந்த மதிவாணன் என்ற பையனை இழுத்துச் சென்று காவல்
நிலையத்திலே ஒப்படைத்திருக்கிறார். அப்படிக் கடுமையாகத்
தாக்கியதோடு நில்லாமல், அந்த அம்மையாரைப் பாவாடை,
ஜாக்கெட்டோடு, அறையிலே அடைத்துவிட்டு, படுகாயத்திற்கு
உள்ளாக்கிய அந்த இராணுவ வீரரையும், அவருடைய மகனையும்
சங்கிலியால் கட்டி, வாடிப்பட்டி தெருவிலே பொதுமக்கள்
ஆயிரம் பேர், இரண்டாயிரம் பேர் கூடி வேடிக்கைப் பார்க்கின்ற
அளவுக்கு பஸ் நிலையம் வரை இழுத்துச் சென்று, கொடுமைப்
படுத்தியதோடு மட்டும் அல்லாமல், அவருக்கு மருத்துவ உதவி
கூடக் கொடுக்காமல் அவர் மீது, கொலை செய்ய முயற்சித்தார்



என்ற ஒரு வழக்கினைப் போட்டு, நிலக்கோட்டை மாஜிஸ்திரேட்
கோர்ட் முன்னால், ஆஜர்படுத்திய பொழுது, அந்த மாஜிஸ்டிரேட்
அவர்களே பரிதாபத்தோடு பார்த்து இவ்வளவு அடிபட்டு
காயத்தோடு உள்ளவருக்கு முதல் உதவி செய்ய வேண்டிய
கடமைப்பட்ட போலீசார் கொடுமையாகக் கொண்டு வந்து
ஆஜர்படுத்தியிருக்கிறார்கள். அவருக்கு சிகிச்சை அளியுங்கள்
என்று மருத்துவ மனைக்கு அனுப்பச் சொல்லியிருக்கிறார்கள்.
அந்த மாஜிஸ்திரேட் உத்தரவை மீறி. மருத்துவ மனையில் சிகிச்சை
அளிக்காமல் சிறையிலே அடைத்து, சிறை மருத்துவர் அவருக்கு
சிகிச்சை அளிப்பார் என்று அறிவித்துவிட்டார்கள். ஜாமீனில்கூட
விட முடியாத, கொலைக் குற்றம்—307-வது செக்ஷன் கீழ்,
அந்த அம்மையாரையும் அவருடைய கணவரையும் மதிவாணன்
என்ற பையனையும் நீதிமன்றத்திற்கு அனுப்பி சிறையிலே
அடைத்திருக்கிறார்கள். 15 நாள் கொடுங்காயத்தோடு கூட
அவர்கள் ஜாமீனில் வர முடியவில்லை. ஆனால், மாஜிஸ்திரேட்
அவர்கள் காயத்தோடு இருக்கிற காரணத்தால், பெண் ஆசிரியை
மட்டும் பெண் என்ற 'எக்ஸப்ஷனை' உபயோகப்படுத்தி,
அவர்களை ஜாமீனில் விட்டிருக்கிறார்கள். அப்படிக் கொடுமை
நடத்திய அந்த காவல் துறை அதிகாரிகள் மீது கடும்நடவடிக்கை
எடுப்பதோடு மட்டுமல்லாமல், போடப்பட்டிருக்கிற பொய்
வழக்கையும் உடனடியாக வாபஸ் பெறவேண்டும். அவர்மீது
கொலை செய்ய முயற்சி என்ற வழக்கு போடப்பட்டிருக்கிறது.
இதற்காக, அங்கே அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகம் உட்பட அனைத்துக் கட்சிகளும்
கடையடைப்பு செய்திருக்கிறார்கள். ஆசிரியர் சமுதாயம்
கொந்தளித்திருக்கிறது. நாடு முழுவதும் போராட்டங்களும்
பதட்ட நிலைகளும் இருக்கின்றன. இதையெல்லாம் கருத்தில்
கொண்டு இந்த அரசு அந்த ஆசிரியை மீதும் அவர் கணவர்
மீதும் போடப்பட்டிருக்கிற வழக்கினை வாபஸ் பெற வேண்டும்
என்பதோடு, இதனால் மிகவும் பதட்டமான நிலையிருக்கிறது
என்பதால், முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையாக இருப்பதால்,
இந்த அவையினுடைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து,
இது குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்
ஆண்டித் தேவர் வாடிப்பட்டியிலே, அண்மையிலே நடைபெற்ற
இந்த நிகழ்ச்சியைப் பற்றி விவரமாகச் சொன்னார். இதிலே
நாம் கவனிக்க வேண்டிய சில முக்கியமான அம்சங்கள் உண்டு.
ஒத்திக்கு வாங்கியிருந்த வீட்டில் குடியிருப்பவர் அவர். அந்த
வீட்டுக்காரருக்கும் அவருக்கும் ஏற்பட்டது ஒரு சிவில் சம்பந்தமான
தகராறு. அதிலே போலீஸ் தலையிடுவதற்கு எந்தவிதமான
நியாயமும் இல்லை. இது சிவில் சம்பந்தமான தகராறை, சிவில்
நீதிமன்றத்திலே போய் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று
விட்டு விட வேண்டிய போலீஸ் அதிகாரி, வீட்டிலே குடியிருக்கக்
கூடிய ஆசிரியையை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்து வரச்
செய்து, அங்கே அவமானகரமாக திட்டி அடித்து, அவரை சட்ட

விரோதமான முறையிலே லாக்-அப் செய்திருக்கிறார். இதை ஏன் என்று கேட்பதற்கு வந்த அந்த ஆசிரியரின் கணவரையும், அதற்குப் பின்னாலே வந்த அவரது மகனையும் அடித்து, ஏதோ மிகப்பெரிய கிரிமினல் குற்றவாளிகளை இழுத்து வருவதைப் போல, இரண்டு பேருக்கும் விலங்கிட்டு அந்த வாடிப்பட்டி நகர வீதிகள் வழியாக அடித்து இழுத்து அவமானப்படுத்தியிருக்கிறார்கள்.

முற்றிலும் சிவில் சம்பந்தமான ஒரு விவகாரத்திலே போலீஸ் அதிகாரி இப்படி அத்துமீறி-அன்லாஃபுல் லாக்கப்-செய்து சட்ட விரோதமான முறையிலே அவர்களைக் கைது செய்து, அடித்து பகிரங்கமாக வாடிப்பட்டி நகர வீதிகளிலே இழுத்துச் சென்று கொடுமை செய்திருக்கிறார்கள். அதிகாரிகள் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொன்னால்மட்டும் போதாது. போலீஸ் அதிகாரிகள், இப்படி அத்துமீறி மாநிலம் பூராவும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்திகள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. அதற்கு இதுஒரு சரியான சான்றாக அமைந்திருக்கின்றது இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடக்காமல் இருக்க வேண்டும் என்று அரசு ஆவன செய்ய வேண்டும். போலீஸ் அதிகாரிகள், சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டியவர்கள், அவர்களே, இப்படி அத்துமீறி ஒழுங்கற்ற முறையிலே மக்களை அச்சுறுத்துகின்ற முறையிலே தங்கள் விருப்பு வெருப்புக்கேற்ப, அராஜகமாக வேலியே பயிரை மேயுமானால், பின்னால் நாட்டில் சாதாரண ஏழை எளிய மக்களுக்கு யார் பாதுகாப்பு கொடுப்பது என்ற பிரதான கேள்வி இந்த நிகழ்ச்சியால் எழுகிறது.

பள்ளியிலே வேலை பார்க்கும் அந்த ஆசிரியைக்கு அந்த வீட்டிலே இருக்க உரிமை இருந்து கூட, அதை ஒத்திவைத்த பத்திரம் இருந்தாலும் கூட, அவர்களிடம் எழுதி வாங்கியிருக்கிறார்கள். வீட்டுக்காரர் அந்த சிவில் கோர்ட்டுக்கும் போய் நடவடிக்கை எடுக்காமல், வேறு விதத்திலே சரிகட்டிக் கொண்டு அந்தப் போலீஸ் அதிகாரியின் உதவியால் இதுபோன்ற அக்கிரமங்களைத் தொடர்ந்து நடத்தப்படுமானால் இந்த நாடு ஜனநாயக நாடாக இருக்க முடியாத, பரிதாபகரமான சூழ்நிலை ஏற்படும். ஆகவே இதுபோன்ற போலீஸ் அதிகாரிகளின்மீது மிகக் கடுமையான முறையிலே நடவடிக்கை எடுப்பதன் மூலமாகத்தான் எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்களைத் தடுக்க முடியும் என்று சுட்டிக்காட்டி, இந்த நிகழ்ச்சியைப்பற்றி விவாதிப்பதற்கு இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஏ. சந்திரசேகரன்:** மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னாலே இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஆண்டித் தேவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்களும், மதுரை மாவட்டத்திலே வாடிப்பட்டியிலே ஒரு ஒன்றியத்தின் பள்ளி ஆசிரியை எந்த வகையிலே இங்கே துன்புறுத்தப்பட்டார் என்பதை மிகத் தெளிவாகச் சொன்னார்கள்.



இந்த பிரச்சினையைப் பொறுத்தவரையில் வாடிப்பட்டியிலே ஒன்றிய ஆசிரியையாக இருக்கக் கூடிய சீனி அம்மாள் என்பவரும் அவருடைய கணவர் நல்லக்காமன் என்பவரும் பைரம் சிங் என்பவர் வீட்டை ஒத்தியாக எடுத்து இருந்து வந்திருக்கிறார்கள். 5 ஆண்டுகளுக்கு 5 ஆயிரம் ரூபாய் என்ற முறையிலே குடியிருந்து வந்திருக்கிறார்கள். அப்போது பைரம் சிங் அந்த வீட்டை காலி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க, வாடிப்பட்டி சப் இன்ஸ்பெக்டராக இருக்கக் கூடிய பிரேம்குமார், இது சிவில் சம்பந்தப்பட்ட வழக்கு என்ற போதிலும் அவர் இந்த விவகாரத்திலே எந்தவித காரணமும் இல்லாமல் தலையிட்டு 1-2-1982 அன்று அவர்களை அழைத்துக் காவல் நிலையத்தில் போயிருக்கிறார்கள். நல்லக்காமன் என்பவரைத்தான் முதலில் அழைத்து வந்திருக்கிறார்கள். அடுத்தபடியாக சீனி அம்மாளை அழைத்து தகாத முறையிலே அவர்களைக் கடுமையாக நடத்தியிருக்கிறார். அவர்களை அடித்து அவமானப்படுத்தியிருக்கிறார்கள். அவமானப்படுத்தப்பட்ட அவர்களை ரோட்டிலே சங்கிலியால் கட்டி இழுத்து வேதனைப்படுத்தி இருக்கிறார்கள்.

ஆகவே, அந்தப் பகுதியிலேயிருந்த கொந்தளிப்பான நிலை ஏற்பட்டிருக்கிறது. வாடிப்பட்டி ஒன்றியத்தில் உள்ள ஆசிரியர்கள் ஒன்றாகக் கூடி போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். 6-2-82 அன்று சர்வ கட்சியின் சார்பாக அங்கே கூட்டம் நடத்தப்பட்டது.

ஆகவே, இந்தக் கொந்தளிப்பான நிலை உருவாவதை தடுக்கும் வகையில், இது குறித்து விரிவாக விவாதிக்கும் வகையில் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன.

[முற்பகல் 10.40]

**திரு. என். வரதராஜன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் வாடிப்பட்டி காவல் சரகத்தைச் சேர்ந்த ஒன்றியப் பள்ளி ஆசிரியை சீனி அம்மாளும், அவரது கணவரும், அவரது குமாரரும் 1-2-1982-ஆம் தேதி வாடிப்பட்டி காவல் நிலையத்தில் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டு இருக்கிறார்கள் என்ற மிகக் கவலைப்படக்கூடிய முக்கியமான நிகழ்ச்சி நடந்து இருக்கிறது. அந்த ஆசிரியை வேலை செய்யும் இடத்திலிருந்து கைது செய்து, சட்டவிரோதமாக அடைத்து இருக்கிறார்கள். அவருடைய ஆடைகளைக் களைந்து எந்த அளவிற்குச் அவரை மானபங்கப்படுத்த முடியுமோ அந்த அளவிற்கு செய்து இருக்கிறார்கள். கையில் விலங்கிட்டு நகர வீதிகளில் அவருடைய கணவரை அடித்துக்கொண்டே அழைத்துக்கொண்டு வருகிறார்கள். ஒரு வேளை அந்த வாடிப்பட்டி காவல் நிலையத்தில் இருக்கும் எஸ். ஐ. அவர்களுக்கு நம்முடைய தமிழ்நாட்டின் கதாசிரியர்கள் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை அவர்கள் எழுதிய கதை பிடிக்கவில்லையோ என்னவோ தெரியவில்லை, ஒரு புதிய கதையை எழுதி

இருக்கிறார்கள். ஆகவே தான், நடுரோட்டிலேயே கையில் விலங்கிட்டு அடித்துக்கொண்டே வந்திருக்கிறார்கள். விசாரிப்பதைக் கூட போலீஸ் ஸ்டேஷனில் வைத்து விசாரிக்க மாட்டாராம். இப்படிப்பட்ட நிலைமைகள் வாடிப்பட்டி காவல் நிலையத்தில் நடைபெற்று இருக்கின்றன.

இருந்தாலும், அந்த எஸ். ஐ. என்ன செய்திருக்கின்றார் என்றால் தன்னைக் கத்தியால் குத்த போலீஸ் ஸ்டேஷனுக்கு அவர்கள் சேர்ந்து வந்தார்கள் என்று கூறி, ஒரு வழக்கை ஜோடித்து, பக்கத்தில் இருக்கின்ற-வாடிப்பட்டிக்குப் பக்கத்தில் இருக்கின்ற கொடைரோடு, சோழவந்தான் போன்ற காவல் நிலையங்களில் இருந்து போலீசை அழைத்து, மதுரை வடக்கு மாவட்ட காவல் துறை அதிகாரிகளுக்கும் தகவல் கொடுத்து, ஒரு மிகப் பெரிய தர்பாரை நடத்தி, அங்கே ஒரு ரத்தக்களரியை நடத்தி முடித்திருக்கும் ஒரு சோக சம்பவம் நடந்து இருக்கிறது. இன்று அதையும் நடத்திவிட்டு, மாநில அரசுக்கும் என்ன ரிப்போர்ட் கொடுத்து இருக்கிறார் என்றால், எங்களையெல்லாம் அடிக்க வந்தார்கள், ஆகவே இதையெல்லாம் செய்தோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அங்கே இருக்கும் மக்கள் உண்மை நிலைமைகளை, உண்மை சம்பவத்தை அறிந்த காரணத்தால், அனைத்துக் கட்சிகளும்-அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் உள்பட அதற்கு எதிராக ஒரு பேரியக்கம் நடத்தி இருக்கிறார்கள். அந்த நகரத்தில் உள்ள வியாபாரிகள் கடை முழுவது அடைத்து இருக்கிறார்கள். அந்த வட்டாரத்தில் இருக்கும்படியான ஆசிரியப்பெருமக்கள் வேலை நிறுத்தம் செய்து இருக்கிறார்கள். ஆகவே, இந்தக் காவல் அதிகாரிகளின் அத்து மீறிய செய்கை அந்தப் பகுதி மக்கள் மத்தியில் ஒரு பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை இந்த நிகழ்ச்சிகள் நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றன.

ஏற்கனவே நாம் சில கெய்டு லைசென்ஸ் கொடுத்து இருக்கிறோம். போலீஸ் அதிகாரிகளுக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் மூலமே அவற்றைத் தெரிவித்து இருக்கிறார்கள். சிவில் வழக்குகளிலே போலீசார் தலையிடக்கூடாது என்று உறுதியான கெய்டு லைசென்ஸ் கொடுத்து இருக்கிறோம். ஆனால் நாம் கொடுத்து இருக்கும் கெய்டு லைன்ஸ்களை அவர்கள் அனுஷ்டிக்க மாட்டார்கள். அதற்குப் புறம்பாக வேலை செய்வார்கள். நடந்து இருக்கும் உண்மைச் சம்பவம் என்ன? ஒரு சிவில் வழக்கு. அந்த ஆசிரியை 20 ஆண்டு காலமாக ஒரு வீட்டில் குடியிருக்கிறார்கள். அந்த வீடு ஒரு ஆயுத காவல் எஸ். ஐக்குச் சொந்தமான வீடு. அதை அவரிடத்தில் இருந்து பறிக்க வேண்டும் என்று சொன்னால், சிவில் கோர்டில் தான் விசாரிக்கப்படவேண்டும். அதற்கு மாறாக போலீஸ் நிர்பந்தமாக அதைக் கையில் வைத்துக் கொண்டு, அடிதடி நடத்தி, படுகாயம் உண்டாக்கி, சர்க்கார் கொள்கைக்கு எதிராக இருந்தாலும் அதையும் மீறி, ஜனங்களிடத்தில் ஒரு வேதனையை உண்டாக்கும் சம்பவத்தை வாடிப்பட்டியில் உருவாக்கி இருக்கிறார்கள்.



இந்தச் சம்பவத்தை ஒட்டி அந்த வட்டாரத்தில் நடந்து இருக்கும் சிலபல பிரசனைகளையும் நான் கவனிக்க வேண்டும். நான் இங்கே வற்புறுத்த விரும்புவது எல்லாம் அரசு இன்றைக்கு பல்வேறு பிரச்னைகளை விவாதித்து வருகிறது. திருசசெந்தூரில் நடந்து இருக்கும் சம்பவம். அதைத் தொடர்ந்து, அதற்கு அடுத்து திருச்செந்தூரில் மற்றொரு சம்பவம். அர்ச்சகர் அண்ணாவி தாக்கப்படுகிறார். நேற்றையதினம் இங்கே தருமபுரி மாவட்டத்தில் நடந்ததைபற்றி பலவற்றை விவாதித்தோம். இன்றைக்கு போலீஸ் அதிகாரிகள் வரம்பு மீறி தவறான செயல் களை இழைத்து விட்டு, தவறான ரிப்போர்ட்டை அனுப்பிவிட்டு, ஜனங்களிடத்தில் ஒரு கொடுமையான சூழ்நிலையை உருவாக்கி விட்டு, அரசுக்கும் ஜனங்களுக்கும் இடையே விரோதம் உண்டாக்கும் சூழ்நிலை வளர்ந்து வருகிறது என்பதை அரசு கவனிக்க வேண்டும். மேலும் மக்களிடத்தில் இருந்து இந்த அரசை தனிமைப்படுத்தும் போக்கில் இது போகிறதா என்பதையும் கவனிக்க வேண்டும்.

ஏற்கெனவே திருச்சி சம்பவத்தை நாம் இங்கே விவாதித் தோம். சிறையிலே இருவரை அடித்துக்கொன்றுவிட்டு, தற்கொலை என்று சொன்னார்கள். அதற்கு முருகேசன் கமிஷன் வைக்கப்பட்டு, நீதி விசாரணை நடத்தினோம். அந்த விசாரணையினால்சில உண்மைகள் நமக்குக்கிடைத்தன. தவறான முறையிலே அதிகாரத்தைப் பயன்படுத்தி கொடுமைகள் புரியும் இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. ஆகையால் ஒரு விசாரணைக் கமிஷன் வைத்து, உண்மையைக் கண்டறிவது அரசுக்கு நல்லது.

இந்த சீனியம்மாள் சம்பந்தப்பட்ட பிரச்னையில் தாக்குதல் நடத்தியதும் அல்லாமல் அவர்கள் மீது பொய் வழக்கும் போட்டிருக்கிறார்கள். அந்த சீனியம்மாள் என்ற ஆசிரியையின்கணவன் மீது வழக்கு போட்டிருக்கிறார்கள், அந்த வழக்குகளை எல்லாம் வாபஸ் பெற வேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், இனி வருங்காலத்திலே இப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் தடுக்கப்பட வேண்டும். இது சம்பந்தப்பட்ட உண்மை என்ன என்பதை தெளிவாகக் கண்டறிய வேண்டும். அதற்கு ஒரு நீதி விசாரணை கமிஷன் வைத்து, விசாரணை நடத்தினால் அரசுக்கு நல்லது என்று கூறி, இத்தகைய பல்வேறு பிரச்சனைகளைப்பற்றி எல்லாம் விவாதிக்க வேண்டியிருப்பதால் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் துணைத் தலைவரவர் களே, மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் ஆசிரியை சீனியம்மாள் பிரச்சனை சம்பந்தமாக அங்கே இருக்கிற காவல் துறையினர் கடுமையான நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அவர்கள், வீட்டுக்கு பணம் கொடுத்து குடியிருக்கிறார்கள். அப்படி குடி யிருக்கிறவர்களை காவல் துறையினரைப் பயன்படுத்தி வெளிப் யேற்றும் முயற்சியில் ஆயுதப்படையைச் சேர்ந்தவர் ஈடுபட்டி ருக்கிறார். இதில் பாதிக்கப்பட்டிருப்பவர் முன்னாள் இராணு வத்தினர். அந்த முன்னாள் இராணுவ வீரர் சீனியம்மாளுடைய

கணவர். ஒரு ஆசிரியை குடும்பத்திற்கு, ஒரு முன்னாள் இராணுவ வீரர் குடும்பத்திற்கு தமிழ்நாட்டில் இந்த கதி என்றால் தமிழக காவல் துறையினர் சாதாரண மக்கள் மீது யுத்தம் தொடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இன்றைக்கு தர்மபுரி மாவட்டமாக இருந்தாலும் சரி, வடாற்காடு மாவட்டமாக இருந்தாலும் சரி, காவல் துறையைச் சேர்ந்த சிலர் மக்கள்மீது யுத்தத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். அதனுடைய அடையாளம்தான் இந்தச் சம்பவம்.

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி வீதியிலே சீனியம்மாள் கணவன் நல்லராமன் என்பவரும், அவருடைய மகன் மதிவாணன் என்பவரும் சங்கிலியால் பிணைக்கப்பட்டு இழுத்துச் செல்லப் பட்டிருக்கிறார்கள் என்றால் இது என்ன புருஷோத்தமன் ஆட்சியா? மன்னர் ஆட்சியிலேதான் இப்படிச் செய்வார்கள். திருமலை மன்னர் ஆட்சியிலே மதுரை வீரனை சங்கிலியால் கட்டி இழுத்துச் சென்றார்கள், மதுரையிலே. அதைப்போல மனோகராவில் சிவாஜியை இழுத்துச் சென்றார்கள். ஆனால் இங்கே நடப்பது அப்படிப்பட்ட மன்னர் ஆட்சியா? எந்த மக்களிடத்திலே ஓட்டு வாங்கி ஆட்சிக்கு வந்திருக்கிறீர்களோ அந்த மக்களை காவல் துறையினர் இப்படிக் கொடுமைப்படுத்து கிறார்கள்

எனக்கு முன்னால் பேசிய தோழர் வரதராஜன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல ஒரு விசாரணைக் கமிஷன் அமைத்தால் காவற் துறை செய்வது எல்லாம் அக்கிரமம், அநியாயம் என்பது வெளிப்படும். ஏற்கனவே வந்த கமிஷன் தீர்ப்புகள் அப்படி அமைந்திருக்கின்றன. சாதாரண மக்களுக்கு இழைக்கப் படும் இத்தகைய அநீதிகளை பற்றி இந்த அவையிலே தெளிவாக விவாதிக்க வேண்டும். இது மட்டுமல்லாமல் இன்னும் பல பிரச்சனைகள் இருக்கின்றன. அவைகளையும் விவாதிக்க வேண்டும். ஒரு மன்னர் ஆட்சியில் நடப்பதுபோல சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. காவல் துறையினர் இன்றைக்கு கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறார்கள். காவல் துறையிலே காக்கிச் சட்டைப் போட்ட குண்டர்களை இதற்காக வைத்திருக் கிறார்களோ என்று கருதுகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட பல் வேறு பிரச்சனைகளைப் பற்றி விவாதிக்க இன்றைக்கு இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : துணைத் தலைவரவர்களே. மதுரை மாவட்டம் வாடிப்பட்டி போலீஸ் ஸ்டேஷன் சப் இன்ஸ் பெக்டர் பிரேம்குமார் என்பவர் சீனியம்மாள் என்ற ஆசிரியை, அவருடைய கணவன், அவருடைய மகன் மதிவாணன் ஆகி யோரை எந்த அளவுக்கு கொடுமைப்படுத்தினார்கள் என்பதை எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் சொன்னார்கள். நம்முடைய தமிழ்நாட்டில் இன்றைக்கு இதைப்போன்ற பல்வேறு சம்பவங்கள் தொடர் நிகழ்ச்சியாக வந்து கொண்டிருக்கின்றன, இப்படிப்பட்ட பல்வேறு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் மீது நாம் இங்கே பேசியிருக்கிறோம். கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு கைதியை அடித்து கொலை செய்து விட்டு, தப்பி ஓடும்போது கிணற்றில் விழுந்து செத்தார் என்று சொன்னார்கள்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தச் சம்பவத்தைப் பற்றி மட்டும் சொல்லுங்கள். சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : நான் இந்தப் பிரச்சனைப் பற்றி தான் பேசுகிறேன். தொடர்ச்சியாக காவல்துறையினர் நட வடிக்கை எப்படி இருக்கிறது என்பதற்காக அந்த சம்பவத்தைக் குறிப்பிட்டேன். இப்படி தொடர்ச்சியாக அக்கிரமங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானத்திலே எந்தக் காரணம் சொல்லப் பட்டிருக்கின்றதோ அதைப்பற்றி விவாதிக்க வேண்டும் என்பதற்காக இந்த அவையின் அலுவல் களை ஒத்திவைக்க வேண்டும் என்ற வகையிலே எந்த அளவுக்குச் சொல்ல முடியுமோ அதைச் சொல்வதுதான் நியாயமே தவிர மற்ற உதாரணங்களை மட்டுமே எடுத்துப் பேசிக்கொண்டிருப்பது பொருத்தமாக இருக்காது என்று கருதுகிறேன், இதற்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் தீர்ப்பை வேண்டு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதர அலுவல்களை ஒத்தி வைத்து இப்பிரச்சினை குறித்து விவாதிக்க வேண்டிய அவசியம் என்ன என்பதைச் சொல்ல வேண்டுமே தவிர மற்ற உதாரணங்கள் எல்லாம் இங்கே சொல்ல வேண்டாம்.

திரு. ப. பொன்னுரங்கம் : துணைத் தலைவரவர்களே,

* * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டு விவாதிக்கிறபோது தான் பிரச்சினைக்குள் போய் விளக்கங்கள் சொல்லலாம்.

திரு. ப. பொன்னுரங்கம் : துணைத் தலைவரவர்களே,

* * *

* * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; நீங்கள் எல்லோ ரையும் விட அதிகமாக நேரம் எடுத்துக் கொண்டு பேசிக் கொண் டிருக்கிறீர்கள். சம்பந்தம் இல்லாததை எல்லாம் பேசிக் கொண் டிருக்கிறீர்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : துணைத்தலைவர் அவர்களே,

* * *

(*) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சம்பந்தம் இல்லாமல் கடைசியிலே பேசிய வாக்கியங்களை எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : துணைத் தலைவர் அவர்களே,

* * *

(மணியடிக்கப் பெற்று அடுத்த உறுப்பினர் பேச அழைக்கப் பட்டார்)

திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே; மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் கடந்த பிப்ரவரி மாதம் 1 ஆம் தேதி, திருமதி சீனி அம்மாள் என்று சொல்லப்படுகிற ஆசிரியை ஒருவரை வாடிப்பட்டி காவல் நிலையத்தைச் சேர்ந்த பிரேம்குமார் என்ற ஒரு சப்-இன்ஸ்பெக்டர் வற்புறுத்தி காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று அங்கே துன்புறுத்தியதைப் பற்றி இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

சீனி அம்மாள் என்பவர் திரு. பைரவசிங் என்பவருடைய வீட்டில் குடியிருக்கிறார் என்று நினைக்கிறேன். அந்த வீட்டுச் சொந்தக்காரருக்கும் அவருக்கும் இடையே நடைபெற்ற சிவில் தகராறையொட்டி எழுந்த இந்தச் சம்பவத்தில், அது சிவில் தகராறு என்ற அளவிலே மட்டும் இருக்கிற காரணத்தைக் கூட மறந்து விட்டு, போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர், அந்த அம்மாளைக் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று அடித்து, துன்புறுத்துவது என்பது தன்னுடைய பதவியை தவறாகப் பயன்படுத்தினார் என்பதற்கே ஆதாரமாகிறது. தமிழகத்தில் இது போன்ற நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடந்த வண்ணம் உள்ளன. இவைகளையெல்லாம் பார்க்கிறபோது, போலீஸ் ராஜ்யம் தான் நடைபெறுகிறதா என்ற எண்ணத்தை உண்டாக்குகிற அளவுக்கு, மனவேதனை தரக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துகிறது.

அந்த ஆசிரியைக்கும், அவருடைய வீட்டுச் சொந்தக்காரருக்கும் இடையே ஏற்பட்ட தகராறு என்பது ஒரு சிவில் சம்பவம். அந்த சிவில் சம்பவத்தில் போய் போலீசார்கள் நுழைய வேண்டிய காரணமே, அவசியமே கிடையாது. அப்படி இருந்தாலும் அந்த வீட்டுக்குச் சொந்தக்காரர் சிவில் கோர்ட் மூலம் வேண்டிய பரிகாரத்தை தேட முடியும். அப்படி இருக்கிற நிலையில், தன்னுடைய போலீஸ் அதிகாரி என்ற பதவிச் சலுகையைப் பயன்படுத்திக்கொண்டு, தனக்கு இருக்கிற சொந்த செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு இதுபோன்ற பொது மக்களை—ஆசிரியைகளை துன்புறுத்துவது போன்ற செயல்களெல்லாம், எந்தநாகரிகத்திலேயும் ஒப்புக்கொள்ள முடியாத செயல். இதுபோன்ற நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறாத வண்ணமும் நடைபெற்றஇந்த நிகழ்ச்சிக்கு நீதி கிடைக்கும் வண்ணமும், இதுபற்றி

---

(*) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.



கொண்டு விரிவாக விவாதிக்கும் பொருட்டும், இந்தச் சபை இது குறித்து மிகுந்த கவலை கொண்டிருக்கிறது என்று தெரிவிக்கும் வகையிலும், இது குறித்து விரிவாக விவாதிக்க, இந்தச் சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த பிப்ரவரி மாதம் 1 ஆம் தேதி, மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில், வாடிப்பட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் வேலை பார்க்கிற சீனி அம்மாள் என்ற ஆசிரியையை, வாடிப்பட்டி போலீஸ் ஸ்டேஷனில் வைத்து கடுமையாகத் தாக்கப்பட்டதையும், அதை ஏன் என்று விசாரிப்பதற்காகச் சென்ற அவருடைய கணவர் நல்லகாமுத் தேவர், மகன் மதிவாணன் ஆகியோரை மிருகத்தனமாகத் தாக்கி திரும்பத் திரும்ப அடித்துச் சித்திரவதை செய்திருக்கிற காரியத்தைப் பற்றியும் எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் எல்லோரும் எடுத்துச் சொன்னார்கள். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், தவறு என்று தெரிந்து செய்தால் அவன் தேவன் என்றாலும் விட மாட்டேன் என்று சொன்னாரே, இந்த நிகழ்ச்சிக்கு என்ன பதில் சொல்லப் போகிறார் என்று தான் கேட்க விரும்புகிறேன்.

இன்றைக்கு வாடிப்பட்டி போலீஸ் ஸ்டேஷனில் நடந்த அக்கிரமத்தை அந்தப் பகுதியிலே உள்ள அனைத்துக் கட்சிக்காரர்களும் எதிர்த்து ஊர்வலம் நடத்தி, கடை அடைப்புகள் செய்து, தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார்கள்.

இங்கே நம்முடைய சட்டமன்றத்தில் தகவல்கள் தருகிறபோது காவல் துறையினர் தருகிற அந்த அறிக்கையை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதியிலே உள்ள உங்களுடைய கட்சிக்காரர்களான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினரை விசாரித்தால் கூட அதனுடைய உண்மையான நிலையை விளங்கிக் கொள்ள முடியும். ஆகவே, வல்லவன் வகுத்ததே வாய்க்கால் என்று சொல்லக்கூடிய வாய்ப்புக்கு இடம் இல்லாமல், சமுதாயத்திற்கு, ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்வதற்காகவே காவல் துறை இருக்க வேண்டும் என்ற நியாயத்தை ஏற்படுத்துகிற வகையில், இந்த விஷயத்தில் கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, இதுபற்றி விரிவாக விவாதிக்கவேண்டும் என்பதற்காக இந்தச் சபையினுடைய இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

(முற்பகல் 11-00)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாடிப்பட்டியில் நடந்த நிகழ்ச்சியையொட்டி மன்ற உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொண்டு வந்து ஏன் அவையை ஒத்திவைக்க வேண்டும் என்பதற்கான காரணங்களை விளக்குகிறபோது சில பல நிகழ்ச்சிகளை விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். அங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகள் குறித்து எங்களுக்குக் கிடைத்திருக்கிற தகவலின் அடிப்படையில் சிலவற்றை அவைமுன் வைக்க விரும்புகிறேன்.

மதுரை மாவட்ட ஆயுதப் படைப் பிரிவு உதவி சார்பு ஆய்வாளர் திரு. பைரவசிங் என்பவருக்கு வாடிப்பட்டியில் சொந்தமாக ஒரு வீடு உள்ளது. அன்னார் அவ்வீட்டினை சீனியம்மாள் என்ற ஆசிரியைக்கு ரூ. 5,000-க்கு வாய்மொழி ஒத்திக்கு விட்டுள்ளார். மேற்படி ஆசிரியையின் கணவர் திரு. நல்லகாமுத்தேவர் முன்னாள் இராணுவத்தினர். அவர்களின் மகன் மதிவாணன். ஒத்தி காலவரையறையான ஐந்து ஆண்டுகள் முடிவுற்றவுடன் வீட்டினைக் காலி செய்து தரும்படி வீட்டின் உரிமையாளர் ஒத்திதாரர்களைக் கோரியுள்ளார். ஒத்தித் தொகையைத் திருப்பிக் கொடுப்பதோடு மூன்று மாத கால அவகாசம் கொடுத்தால் வீட்டினைக் காலி செய்வதாக ஒத்திதாரரான சீனியம்மாள் தெரிவித்துள்ளார். அதன் தொடர்பாக வாடிப்பட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு. பிரேம்குமார் 1982-ம் ஆண்டு ஜனவரி முதல் வாரத்தில் திரு. நல்லகாமுத் தேவரையும் திருமதி சீனியம்மாளையும் அழைத்து வீட்டை இரு தினங்களில் காலி செய்ய வேண்டுமென்று அறிவுறுத்தியுள்ளார். ஆனால் ஒத்திக்காரர்கள் கூடுதலான காலவரையறை வேண்டுமென்றும் ஒத்தித் தொகை ரூ. 5,000 திருப்பிக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் கூறியுள்ளனர். பின்னர் 1-2-82-ம் நாள் காலை 8.00 மணிக்கு திரு. நல்லகாமுத் தேவர் காவல் நிலையத்திற்கு அழைக்கப்பட்டுள்ளார். பள்ளி சென்றிருந்த திருமதி சீனியம்மாள் மூன்று பெண் காவலர்களால் அன்றையதினம் காலை 8.45 மணிக்கு காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளார். திரு. நல்லகாமுத் தேவர், சீனியம்மாள் ஆகியோர்களுக்கும், காவல் சார்பு ஆய்வாளருக்கும் இடையில் வாக்குவாதம் வளர்ந்து, காவல் நிலையத்தில் திரு. நல்லகாமுத்தேவரும் திருமதி சீனியம்மாளும் தாக்கப்பட்டதாகத் தெரிகிறது. காவல் சார்பு ஆய்வாளருக்கும் கைகலப்பில் காயமேற்பட்டதாக காவல் துறையினர் சார்பில் கூறப்படுகிறது. பெற்றோருக்கு நேரிட்ட அவமரியாதைக்கு ஆட்சேபம் தெரிவிக்க, காவல் நிலையம் வந்த அவர்கள் மகன் மதிவாணனும் தாக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. திரு. நல்லகாமுத்தேவர், அவரது மனைவி, மகன் ஆகிய மூவர்மீதும் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. திருமதி சீனியம்மாள் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். திரு. நல்லகாமுத் தேவர் மதுரை அரசு மருத்துவமனையில்



சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். திரு. மதிவாணன் காவலில் வைக்கப்பட்டுள்ளார். திரு. நல்லகாமுத் தேவருக்கு, தலை, கை, கால் போன்ற பாகங்களில் காயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. திரு. மதிவாணனுக்கும் காயமேற்பட்டதாகத் தெரிகிறது. முதல் தகவல் அறிக்கையின்படி வாடிப்பட்டி காவல் சார்பு ஆய்வாளருக்கு காயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. மேற்கண்ட சம்பவத்தைக் கண்டித்து 2-2-82 அன்று பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்கள் ஊர்வலம் நடத்தினர். 3-2-82 அன்று வாடிப்பட்டியில் கடை அடைப்பு நடந்துள்ளது. 4-2-82 அன்று ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் சங்கச் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் காவல் துறையினர் மீது புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. 6-2-82 அன்று பல கட்சியினர் காவல் துறை நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கண்டன ஊர்வலம் நடத்தியுள்ளனர்.

இவை அனைத்தையும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்ததோடு மட்டுமல்லாமல் காவல் துறை அறிக்கையை மட்டும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் ஆங்காங்கு கொடுத்த புகார்கள் மற்றவை எல்லாம் ஆராய்ந்து பார்த்த பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையின் பேரில் வாடிப்பட்டி காவல் நிலையத்தைச் சேர்ந்த சார்பு ஆய்வாளர், தலைமைக் காவலர் மற்றும் இரண்டு காவலர்கள் இப்போது தாற்காலிக வேலை நீக்கம் செய்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அதோடு மட்டுமல்ல. உண்மை நிலையைக் கண்டறிந்து அரசுக்கு அறிக்கை அறிவிக்க அதன்மீது தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று விரும்பியதன் காரணமாக உசிலம்பட்டி கோட்டாட்சித் தலைவர் மூலம் பி.எஸ்.ஓ. 145 விசாரணை நடத்துமாறும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்பாடு செய்து ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அந்த விசாரணை அறிக்கை வந்தபிறகு—இதில் கட்சி வேறுபாடு கிடையாது. மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்ததற்கு இணங்க, எல்லாக் கட்சியினரும் இந்தப் பிரச்னை பற்றி குமுறியெழுந்திருக்கிறார்கள். நான் படித்துக் காட்டியதிலிருந்தே காவல்துறையினரால் அவர்கள் அடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரங்களும் அவர்கள் காயப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் அறிந்துதான் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இதுபற்றி தக்க நடவடிக்கைகள் கட்டாயம் எடுத்தே தீரவேண்டும் என்ற முறையில் சார்பு ஆய்வாளர், மூன்று காவலர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டது மட்டுமல்லாமல் உண்மை நிலையை முழுவதும் கண்டறிந்து அதன்மீது என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அதை எடுக்க ஏற்பாடு செய்து உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த விசாரணை விரைவில் தொடங்கி அறிக்கை வந்த பிறகு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதால் அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து இது பற்றி விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால் இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

(ஆ) எதிர்க்கட்சித் தலைவர் செல்லும் பாதையில் வெடி குண்டு வெடித்துள்ளது

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் செ. இராமலிங்கம், அ. ரகுமான்கான், இரெ. இராசமாணிக்கம், பெ. சு. திருவேங்கடம், பாபு ஜனார்த்தனன், செ. சொக்கலிங்கம், துரை முருகன், சு. பாலன், து. புருஷோத்தமன், மு. அம்பிகாபதி, ரா. உமாநாத், எம். அப்பாதுரை, ப. பொன்னுரங்கம், என்.வி.என். சோமு, வி.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர், ''மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை 18-2-1982 அன்று விருதுநகர் அருகில் கொலை செய்ய முயற்சித்து, சமூக விரோதிகளால் வெடிகுண்டு வீசப்பட்டுள்ளது. இதனால் நூற்றுக் கணக்கானவர்கள் படுகாயமடைந்து உயிருக்கு ஆபத்தான நிலையில் இருப்பதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி திரு. ரகுமான்கான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, பால் கமிஷனுடைய அறிக்கையின் அடிப்படையில் குற்றவாளிகள் கைது செய்யப்பட வேண்டும்; சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை அரசாங்கம் கவனிக்காத காரணத்தினால், நடவடிக்கை எடுக்காத காரணத்தினால், இறுதித் தீர்ப்பு வழங்கும் 'எஜமானர்கள் மக்கள்தான் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் கலைஞர் அவர்கள் சட்டத்திற்கு உட்பட்டு, ஜனநாயக முறைக்கு உட்பட்டு எப்படி அண்ணல் காந்தியும், வினோபாவும், இந்திராவும் பாத யாத்திரை சென்றார்களோ, அதைப் போல் அந்தப் பகுதியில் திருச்செந்தூரை நோக்கி பாத யாத்திரை நடத்தி வருகிறார்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூட பாதயாத்திரையை கலைஞர் அவர்கள் நடத்த வேண்டாம் என்ற நல்ல எண்ணத்தோடு கேட்டுக் கொள்வதாகச் சொன்னார்கள். ஆனால், அந்தப் பகுதியில் கலைஞர் அவர்கள் நடத்தி வருகின்ற பாத யாத்திரையைக் கேலியும், கிண்டலுமாக, அருவருக்கத்தக்க முறையிலே, உணர்ச்சியைத் தூண்டக்கூடிய போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருக்கின்றன. அது ஒரு புறம் இருக்கட்டும். இப்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது. நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். விருதுநகருக்கும், சாத்தூருக்கும் இடையே



துலுக்கப்பட்டிக்கு அருகில் வெடி குண்டு, அவர் செல்லுகின்ற பாதையில் வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு சலவைத் தொழிலாளி அந்தப் பக்கமாக நடந்து போகின்ற போது, ஒரு வெடி குண்டு வெடித்து, அதனால் காயமேற்பட்டு, மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார். இன்னும் சொல்லப்போனால், அங்கே பக்கத்திலே இருக்கக்கூடிய போலீஸ் ஸ்டேஷனிலே இது குறித்து புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான்கு வெடி குண்டுகளைப் போலீஸார் கைப்பற்றியிருக்கிறார்கள். இந்தச் செய்தி எனக்குக் கிடைத்திருக்கிறது. பத்திரிகைகளிலேகூட இந்தத் தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

அது மட்டுமல்ல. கலைஞர் அவர்கள் சிவகாசியிலே இருக்கின்ற ஒரு லாட்ஜிலே தங்கியிருக்கும் போது கொலை செய்வதற்கான முயற்சியிலே ஒரு நபர் ஈடுபட்டிருக்கிறார். அவரை கட்சியைச் சார்ந்தவர்களே பிடித்து போலீசாரிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். இங்கே, தலைவராகிய உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய உயிரை இன்றைக்கு பறிக்கக்கூடிய காரியம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு இதனால் நாட்டிலே பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. நான் இதைக் குற்றச்சாட்டாக சொல்லவில்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூட என்னுடைய உயிரைப் பறிக்க, கொலை செய்கிற முயற்சியை எதிர்க்கட்சிக்காரர்கள் தூண்டி விடுகிறார்கள், என்னை ஒருவர் கொலை செய்ய முயற்சித்தார், விசாரணை ஒரு மாத காலமாக நடைபெறுகின்றது என்று நெய்வேலியிலே பேசியிருக்கிறார்; மேலவையிலும் பேசியிருக்கிறார்..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது சம்பந்தமாக மட்டும் பேசுங்கள். அடுத்த விவகாரத்திற்குள் போக வேண்டாம்.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே, நான் இதைக் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. நான் இப்போது கேட்பதெல்லாம், இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு அவருடைய உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்புத்தரவேண்டியது அவசியம். இந்த அவையின் உறுப்பினராக இருப்பதால், நான் இதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இன்றைக்கு இது போன்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த பதட்ட நிலைமைக்கு அடிப்படைக் காரணம் என்ன?

* * * * * * * * *

கலைஞர் உயிர் பாதுகாப்பாக இருந்தால் தான், நாட்டில் பல பேர்கள் பாதுகாப்பாக இருக்க முடியும் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. இன்றைக்கு போலீஸ் இது குறித்து என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? *

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: மற்ற விஷயங்களுக்குப் போக வேண்டாம். அது வேறு மாதிரியாகப் போய்விடும். கடைசியிலே சொன்ன வார்த்தைகள் வேண்டாம்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு என்ன காரணம் என்பதைப் பற்றி ஆரம்பத்திலே யிருந்து தொடங்கி பேசி வந்திருக்கிறார்கள். இதற்குச் சம்பந்த மில்லாத, முன்னால் நடந்த நிகழ்ச்சிகளைச் சொல்லி, அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்ற கேள்வியையும் அதற்குள் சேர்த்துச் சொல்வது சரியாகாது. ஆகவே, இது அவைக் குறிப்பிலே இருக்க வேண்டியது அவசியமா, இல்லையா என்பதைத் துணைத் தலைவர் அவர்கள் முடிவு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: அதை நீக்கும்படி உத்திர விடுகிறேன். நேற்றைய தினமே இதுபற்றி 15 நிமிடம் பேசியாகி விட்டது. நானும் கேட்டுச் சொல்கிறேன் என்று சொன்னேன். ஆகவே மீண்டும் விளக்கமாகப் பேச வேண்டாம். இதனுடைய அட்மிஸ்பிளிட்டி பற்றி மட்டும் பேசினால் போதும்.

(முற்பகல் 11-10)

**திரு. அ. ரகுமான்கான்**: அந்தப் பகுதி மக்கள் மத்தியிலே ஒரு பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பயணத்திலே 50 ஆயிரம் பேர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். நாட்டு மக்கள் மத்தியிலே கழகத் தொண்டர்கள் மத்தியிலே கொதிப்பு நிலை ஏற்பட்டு இருக்கிறது. எதிர்பாராத நிலை ஏற்படக் கூடாது என்ற எண்ணம் எங்களுக்கு இருக்கிறது. உங்களுக்கும் இருக்க வேண்டும், அந்தப் பதட்டமான நிலையைத்தடுப்பதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைப்பற்றி விவாதித் தாக வேண்டும். போலீசார் தருகிற தகவல் உண்மைக்குப் புறம் பானது, அதைச் சரி என்று அரசு சொல்லிவிட்டால் நியாயமான தல்ல. இது அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த பிரச்சினை ஆகும். ஆகவே இதை விவாதிப்பதற்காக சபையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஜனநாயகத்திலே பொறுப்பானவர்கள். இந்தச் சபையிலே இருக்கக் கூடியவர்கள். அவர்களுக்குப் பாது காப்புத் தருவது அரசினுடைய கடமையாகும். ஆகவே இந்தச் சபையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து இதைக் குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ரா. உமாநாத்** : தலைவர் அவர்களே, முதலிலே நான் அவை முன்னவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். ரூலை சஸ்பெண்ட் பண்ணி, இந்தத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொண்டபோது அதற்கு ரெஸ்பாண்ட் பண்ணி ஏற்றுக்கொண்டதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுங் கட்சித் தரப்பிலே இப்படித் தொடர்ந்து நடந்து கொண்டால் டெமாக்ரடிக் ரெஸ்பான்ஸ் இருந்தால் சபையிலே பலவித பிரச்சனைகள் ஏற்படாமல் தவிர்க்கப்படும். ஆகவே இதைத் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டுமென்று ஆளுங்கட்சித் தரப்பையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.



ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் எதிர்க் கட்சித் தலைவரைக் கொலை செய்ய முயற்சி என்பதைப்பற்றி இங்கே திரு. ரகுமான்கான் அவர்கள் விவரமாகக் கூறியிருக் கிறார்கள். நான் மீண்டும் ரிப்பீட் பண்ண விரும்பவில்லை. இது சீரியஸான பிரச்சினையாக இருப்பதால் அரசாங்கம் இது குறித்து தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு முன்னாலே ஒரு சம்பவம் நடந்தபோது நாங்கள் எங்கள் கட்சியின் சார்பிலே ஏற்கெனவே தெரிவித்திருக்கிறோம். இதை லைட்டாக எடுத்துக் கொள்ளக் கூடாது, கேலி, கிண்டல் இருக்கக் கூடாது. யாருக்கு த்ரட் வந்தாலும் மறு பக்கத்தார் கேலி கிண்டல் செய்யக்கூடாது, இந்த சைடுக்கு வந்தால் அந்த சைடு செய்யக்கூடாது, அந்த சைடுக்கு வந்தால் இந்த சைடு செய்யக் செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் அந்த முயற்சியிலே ஈடு படக்கூடியவர்களுக்கு மேலும் ஊக்கம் கொடுப்பதாகிவிடும், அது மட்டுமல்ல, அந்த முயற்சியிலே மேலும் ஈடுபடுகிறவர்களுக்கு ஊக்கம் கொடுக்கக் கூடும் என்பதால் இதை சீரியஸாக எடுக்க வேண்டும் என்று முன்பே சொல்லியிருக்கிறோம். எதிர்க்கட்சித் தலைவருக்கு அப்படிப்பட்ட முயற்சி நடந்திருக்கிறது. அவருக்கு வேண்டிய புரட்டக்ஷன் கொடுக்க சகல பாதுகாப்பு நடவடிக்கை களும் எடுக்கப்பட்டிருக்கின்றனவா, என்ன எடுக்கப் பட்டிருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும், ஆகவே இந்தச் சபையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும். இப்படிப்பட்ட ஒரு டென்டன்ஸி டெவலப் ஆகிக் கொண்டிருக்கிறது. நான் ஒரு விஷயத்தைக் கேள்விப்பட்டபோது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் ஒரு செய்தியை வெளியிட்டார்கள், தன்னைக் கொல்வதற்கு ஏற்பாடு களையெல்லாம் பண்ணி பணமும் கொடுக்கப்பட்டதாகச் சொல்லி யிருக்கிறார்கள். இதை எல்லாம் ஜனங்கள் படிக்கிறார்கள். படிக்கிறபோது சீரியஸான நிலைமை ஏற்படுகிறது. முதலமைச்சர் அவர்களுக்கு இந்த த்ரட், எதிர்க்கட்சித் தலைவருக்கு இப்படி த்ரட் என்றால் சாதாரண மக்களுக்கு அவர்களுடைய கதி என்ன ஆகும் என்ற அச்சமான பீலிங் வரும் இல்லையா? பெரிய தலைவர்களுக்கே இப்படிப்பட்ட கதி என்றால் நமக்கு என்ன ஏற்படுமோ என்று அச்சப்படக்கூடிய நிலைமை ஏற்படும், ஆகவே அதைத் தடுக்கக்கூடிய முறையிலே நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இந்தப் பிரச்சினைகளை ட்ரயிட்டன் அவுட் பண்ணவேண்டுமென்று தான் கூறுகிறேனே தவிர சப்ஜெட்டுக்கு அப்பாற்பட்டு நான் கூறவில்லை. இப்போது போகிற போக்கில் கொலை அட்மாஸ்பியர் ஏற்பட்ட என்று சொன்னால் எது நடக்கும் என்று சொல்லமுடியாது. ஆவானப்பட்ட அமெரிக்க ஜனாதிபதி, எகிப்து ஜனாதிபதி அப்படிப்பட்ட சம்பவங்களை யெல்லாம் நாம் பார்க்கிறோம். ஆகவே அப்படிப்பட்ட அட்மாஸ்பியருககு நாம் இடம் கொடுக்கக்கூடாது. அரசியல் கொலையினால் பிரச்சினை தீராது என்பது எங்கள் கட்சியி னுடைய உறுதியான நம்பிக்கை; இது இன்னும் பிரச்சினையை முற்றவைக்கும் என்பதைத் தவிர பிரச்சினை தீராது. அரசியலை அரசியலோடு சந்திக்க வேண்டுமே தவிர இன்னொரு விஷயத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன்,

[1982 பிப்ரவரி 19

* * * * * * * *

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, விவாதிப்பதற்கு அவையை ஒத்தி வைக்க வேண்டுமென்று சொல்வதுதான் இதை எடுத்துச் சொல்பவரின் கருத்தாக இருக்க வேண்டும்.

* * * * *

என்ற குறிப்பை நீக்கிவிட வேண்டுமென்றும், அவையை இதற்காக ஒத்தி வைக்க வேண்டும் என்பதற்கான காரணங்களை மட்டும் அவர்கள் சொல்ல வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள்

* * * * *

என்று சொன்ன அந்தக் கருத்துக்களை அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி ஆணையிடுகிறேன்.

திரு. ரா. உமாநாத்: கடைசியாக ஒரு கருத்தை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பாதயாத்திரை தொடங்கி ஐந்து நாட்கள் ஆகிவிட்டன என்று கருதுகிறேன். அவர்கள் எந்த பர்ப்பசை விரும்பினாரோ அந்தப் பர்ப்பசை கிட்டத்தட்ட போகஸ் செய்தாகிவிட்டது. எனவே, அந்தப் பாதயாத்திரையை இத்துடன் நிறுத்திக்கொள்ள வேண்டுமென்று எங்களுடைய கட்சியின் சார்பில் வேண்டுகோள் விடுக்கிறேன். முதலமைச்சரவர்கள் அதை நிறுத்தத் தன்னால் இயன்ற வகையில்...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒத்திவைத்து இதைப் பற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் என்ன என்பதை மட்டும் சொல்லுங்கள்.

திரு. ரா. உமாநாத்: ஆகவே இவர்களைப்பற்றியெல்லாம் விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழகத்திலே ஒரு பதட்டமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. என்ன பதட்டமான நிலைமை என்றால் எனக்கு முன்னால் பேசிய தோழர் உமாநாத் அவர்கள் குறிப்பிட்டது மாதிரி பத்திரிகைகளில் கடந்த நான்கைந்து நாட்களாகச் செய்திகள் வருகின்றன.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



1982 பிப்ரவரி 19] [திரு. மு. அம்பிகாபதி]

* * *

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே,

* * *

என்று குறிப்பிட்டிருப்பதை அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒத்தி வைப்பதற்கான காரணங்கள் என்ன என்பதைப் பற்றி மட்டும் பேசுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. அம்பிகாபதி அவர்கள் **என்று பேசிய வாசகங்களை நீக்கிவிடும்படி ஆணையிடுகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: எனவே இப்படிப்பட்ட சூழ்நிலைகளைப் பார்க்கின்றபொழுது எங்களுக்கு பயமாக இருக்கிறது. நாங்களே பயப்படுகிறோம் என்றால் மக்கள் மத்தியிலும் அந்தப் பயம் ஏற்படுகிறது. எனவே, இத்தகைய ஒரு நிலையைப்பற்றி இந்தச் சபையிலே விவாதிக்க வேண்டியிருக்கிறது. அவர்களுடைய கட்சியின் முடிவுப்படி திருச்செந்தூருக்குப் பாத யாத்திரை மேற்கொண்டிருக்கிறார்கள். தோழர் உமாநாத் அவர்கள் சொன்னபடி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலேயும் கேட்டுக் கொள்கிறேன், அந்தப் பாத யாத்திரையை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று. இப்படி ஏற்பட்டிருக்கின்ற பிரச்னைகளைப் பற்றி இந்த அவையில் விவாதிக்க வேண்டியிருக்கிறது. எதிர்க் கட்சித் தலைவர் போகின்ற பயணத்தில் குண்டு வெடித்தது அல்லது அதற்குப் பக்கத்திலே, லாட்ஜ்க்குப் பக்கத்திலே ஒருவர் குண்டு வைத்திருந்தார் என்ற இப்படிப்பட்ட தகவல்கள் பதட்ட நிலையை ஏற்படுத்தியிருக்கின்றன. எனவே, இதைப் பற்றி விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 11.20]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மேற்கொண்டிருக்கிற நெடிய பயணத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளை ஒட்டி, செய்தித் தாள்களிலே வந்த சில குறிப்புகளை வைத்து, இந்த அவையை ஒத்தி வைத்து, அதுபற்றி விரிவாக விவாதிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் மூலம் கருத்தினை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உமாநாத் அவர்கள் எடுத்து தெரிவித்த மாதிரி, அரசியலை அரசியல் ரீதியிலே சந்திக்கவேண்டுமென்ற எண்ணத்தை அடிப்படையாக வைத்துப் பணியாற்றவேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அல்லது எந்த உறுப்பினராக இருந்தாலும், அவருக்குப் பாதுகாப்புத் தருவதும், அவரை மதிக்க வேண்டியதும் கடமையாகும். குறிப்பாக, எதிர்க் கட்சித் தலைவரிடத்தில் ஆளுங்கட்சிக்கும் சரி, மாண்புமிகு முதல்வருக்கும் சரி, எப்போதும் மதிப்பு உண்டு என்பதையும், அவர்களை மதிக்கத் தவறியதில்லை என்பதையும் உணர்த்தக் கடமைப்பட்டிருக்கிறோம். மனிதனுக்கு மனிதன் காட்ட வேண்டிய மதிப்பு, அன்பு உள்ளம் ஆகிய தன்மைகள் என்பது வேறு. ஆனால், கருத்துக்களிலே மாறுபடுகிறோம். ஆனாலுங் கூட, நெடிய பயணத்தைத் துவக்கிய நாளிலிருந்து—அந்தப் பயணத்தைப் பொறுத்தவரைக்கும் காரணம் எதுவாக இருந்தாலும், அதைப் பற்றி முடிவு செய்ய வேண்டியவர்கள், அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள், அந்தக் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் என்றாலும், அந்தப் பயணத்தை ஓட்டி எந்தச் சிறு சம்பவமும் ஏற்படக்கூடாது என்ற நோக்கத்தினுடைய அடிப்படையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்ன, என்ன முறைப்படியான பாதுகாப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டுமோ, அவை அத்தனையையும் மேற்கொள்ள வேண்டுமென, தக்க ஆணைகளை, உரிய அதிகாரிகளுக்குப் பிறப்பித்து, அவைகளெல்லாம், முறைப்படி எடுத்துக் கொள்ளப் படுகின்றன. நேற்று மாலை 'மாலை முரசு' பத்திரிகையிலே திடீரென்று வெடிகுண்டு செய்தி வந்ததற்குப் பிறகு, வெடிகுண்டு நிகழ்ச்சிகள் ஏற்பட்டன என்று வந்தவுடனே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், உடனே அதைப்பற்றி, முழுவிவரம் தெரிந்து கொள்வதற்காக நடவடிக்கைகளை எடுத்தார்கள். பத்திரிகைகளிலே பல்வேறு செய்திகள் வந்திருக்கின்றன. அங்கொன்றும், இங்கொன்றுமாகச் செய்திகள் வந்திருக்கின்றன. அதனுடைய தன்மைகளை மட்டும் நான் இப்பொழுது விளக்கிக் காட்ட விரும்புகிறேன். 14–2–1982 அன்று சிவகாசி—விருதுநகர் சாலையும், துலுக்கப்பட்டிப் பாதையும் சந்திக்கும் சந்திப்பிற்கு அருகில், வெள்ளைச்சாமி என்பவரின் மனைவி கருப்பாயி என்ற பெண் நடந்து வந்து கொண்டிருந்த பாதையில் கிடந்த ஒரு பொட்டலத்தை மிதித்து விட்டார்கள். அந்தப் பொட்டலத்தில் வெடி மருந்து நீலநிறத் துணியால் கட்டப்பட்டிருந்தது. அந்த வெடி மருந்து அந்தப் பகுதியில் நரிகளை விரட்டுவதற்காகப் பயன்படுத்துவதாகத் தெரிகிறது. பாதையின் ஓரத்தில் கிடந்த அந்தப் பொட்டலத்தில் அந்தப் பெண்ணின் வலது கால் பட்டதன் காரணமாக, வலது கால் பட்டவுடனே அது வெடித்தது. அவர் விருதுநகர் மருத்துவ மனைக்குஎடுத்துச் செல்லப்பட்டார். பின்னர், அங்கிருந்து அவர் இராஜாஜி மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அவர் தனது வலது காலில் இரண்டு விரல்களை இழந்துள்ளதாகத் தெரிகிறது. அது விஷயமாக, வாச்சாகரப்பட்டி காவல் நிலையத்தில் குற்றவியல் 22/82-ன் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை செய்யப்பட்டு வருகிறது. ஆனால், இது பாலத்திற்கு கீழே என்றோ, பாலத்தில் இருந்தது என்றோ செய்தி இல்லை. இரண்டு சாலைகள் குறுக்கிடுகின்றபொழுது, குறுக்கிடுகின்ற இடத்திலே அது கிடந்ததாகவும் தவறிக் கால் பட்டதன்காரணமாகவே, அது வெடித்ததாகவும் உடனே கால் விரல்கள் பழுதுபட்டதாகவும், அதன் காரணமாகத்தான் மருத்துவச் சிகிச்சை





அளிக்கப்பட்டது என்றும், இது நடந்தது 14 ஆம் தேதி என்றும் குறிப்பிடப்படுகின்றது. விபத்து, 14-2-1982 பகல் சுமார் 3-30 மணி அளவில் நடந்தது. ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் விருதுநகர் அடைந்த தேதி 16-2-1982. விருதுநகரில் 16-2-1982 அன்று இந்த வெடிகுண்டு வீசப்படவில்லை. நூற்றுக்கணக்கானவர் காயத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றனர் என்று சில பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. இன்றைக்குக் காலையிலே வந்த தினமணியிலே கூட இந்தச் செய்தியைப் பற்றி சொல்கின்ற பொழுது, 14 ஆம் தேதி நடந்த வெடிகுண்டு நிகழ்ச்சிக்கும் டாக்டர் கலைஞர் அவர்கள் மேற்கொண்ட நடைபயணத்தை ஓட்டி ஏற்பட்டிருக்கிறவைகளுக்கும் சம்பந்தம் இல்லையென்ற கருத்து வந்திருக்கிறது. எனவே, 14-2-1982 அன்று நடந்த விபத்திற்கும் எதிர்க்கட்சித் தலைவர் நடைபயணத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லையென்று இதைப் பொறுத்த வரைக்கும் தெரிகிறது.

தவிர, 18-2-1982 அன்று விடியற்காலை 3-00 மணி அளவில் எதிர்க்கட்சித் தலைவர் தங்கியிருந்த சிவகாசி பாலகிருஷ்ணா லாட்ஜில் அடையாளம் தெரியாத ஒருவர் அங்கே உலவிக் கொண்டிருந்து திடீரென்று கூச்சல் போட ஆரம்பித்தார். லாட்ஜின் பணியாளர் ஒருவர் அதைப் பார்த்தார். அங்கே காவலுக்கு வைக்கப்பட்டிருந்த போலீசார் விரைந்து சென்று அவரைப் பிடித்தனர். பிடிக்கப்பட்ட அந்த நபரின் பெயர் சுப்பிரமணியம் என்றும், அவர் மனநிலை சரியில்லாதவர் என்றும் புலன் விசாரணை அடிப்படையில் தெரிய வந்தது. அவரிடம் எந்தவிதமான கைத்தடியோ, ஆயுதமோ இல்லை. அவரைக் கைது செய்து, சிவகாசி டவுன் போலிஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு வந்தனர். அவர்மீது வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, இது சம்பந்தமாக மேலும் புலன் விசாரணை நடந்து வருகிறது. (குறுக்கீடு) வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. புலன் விசாரணை நடந்து வருகிறது. அவரை விடுவிக்கின்ற நிலையிலே இல்லை. வழக்குப் பதிவு செய்திருப்பதால், உண்மை நிலைமைகள் என்ன என்பதைக் கண்டறிந்த பின்னர் மற்றவற்றைக் கூற முடியும். திடீரென்று கூறமுடியாது. அவர் இராஜாஜி மருத்துவ மனைக்குப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டிருக்கிறார். இந்தச் சம்பவம் குறித்து மேலும் புலன் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஊர்வலத்திலே செல்லும் எதிர்க்கட்சித் தலைவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு பின்வருமாறு :—

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பாதுகாப்புக்காக எஸ்.பி. தலைமையில் கீழ்க்கண்டவாறு பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது:

ஊர்வலத்தின் முன்னால் ஒரு டி.எஸ்.பி. தலைமையில் 4 ஆய்வாளர்கள், 8 உதவி ஆய்வாளர்கள் உள்பட 100 போலீசார் கண்காணித்து முன்னால் செல்லுகின்றனர். ஊர்வலத்திற்குப் பின்னால் அதே மாதிரி ஒரு அணி டி.எஸ் பி. தலைமையிலே செல்கிறது. ஊர்வலத்துக்கு உள்ளும் சீருடை அணியாத காவலர்கள் நிலைமையைக் கண்காணித்துப் பாதுகாப்பாக

அழைத்துச் செல்கின்றனர். எதிர்க் கட்சித் தலைவருக்கு அருகாமையிலேயே ஒரு துணை ஆய்வாளர் தலைமையில் ஒரு பாதுகாப்பு வட்டம் 'ரிங் ரவுண்டு' ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

13-2-1982 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நெடிய பயணம் செல்லும் எதிர்க்கட்சித் தலைவருக்கு, திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் பிரதமராகப் பதவி வகிக்காமல் இருந்தபோது தமிழகம் வந்திருந்த சமயத்தில், அவருக்கு என்னவிதமான பாதுகாப்பு வழங்கப்பட்டதோ, அதே போன்று இவருக்கும் கொடுக்கவேண்டும் என்று, இது சம்பந்தமாக 13-ந் தேதியே மதுரை, திருநெல்வேலி டி.ஐ.ஜி.க் களுக்கு அறிவுரை வழங்கப்படவேண்டும் என்று தலைமைச் செயலாளர் மூலமாக அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. உத்தரவுகள் உத்தரவிடப்பட்டிருக்கின்றன.

அந்த வகையிலேதான் காவல் துறையினுடைய பாதுகாப்பு எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் மேற்கொண்டிருக்கின்ற இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரை எல்லாவிதமான பாதுகாப்பும் தரவேண்டும் என்றும் அவருக்கோ, அவருடைய உயிருக்கோ எந்தவித ஆபத்தும் ஏற்படுகிற சூழ்நிலை இல்லை என்றும் இந்த அரசு கவனித்துக் கொண்டு வருகிறது. ஆகவே இதிலே அச்சப்படவோ வேறு தன்மைகள் எதுவும் இல்லை என்றும், இந்த சம்பவங்களைப்பற்றி இத்தோடு விட்டுவிடவில்லை என்றும், மேலும் புலன் விசாரணை விசாரித்து, அதிலே உண்மை இருக்குமானால் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும். அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். கைது செய்யப்பட்டதற்குப் பின்னர் அவர் மருத்துவ மனையில் ஆராயும்படியாகவும் அந்தக் கூச்சல் இட்டவர் அனுப்பப்பட்டிருக்கிறார். வழக்கும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் மறுபடியும் விசாரணை செய்து கொண்டிருக்கிறோமே தவிர, அதை விட்டுவிடுகின்ற நிலை இல்லை. விட்டுவிடுவதால் எந்த ஒரு லாபமும் இல்லை. ஆனால் உள்ளபடியே கண்டறிந்து, மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துக் காட்டி தெரிவித்ததற்கு இணங்க இப்படிப்பட்ட சம்பவங்கள் குறித்து எதிர்காலத்திலே சிறிதும் ஐயப்பாடு இருக்குமானால் அந்த ஐயப்பாட்டுக்குக் கூட இடம் இல்லாத வகையில் எதிர்காலத்தில் இருப்பதற்கான நடவடிக்கைகள் எல்லாவற்றையும் எடுக்கவேண்டும் என்ற முறையிலே இந்த அரசு முனைந்து செயல்பட்டு வருகிறது.

ஆகவே, இந்த நிலைமையில் நாம் ஐயப்படுவதற்கோ, சஞ்சலப் படுவதற்கோ எந்தக் காரணமும் இல்லை. இன்றைக்குக் காலையிலே கூட அவர்கள் தொடர்ந்து சென்று கொண்டிருக்கிறார்கள். அமைதியாக சென்று கொண்டிருக்கிறது. ஆங்காங்கு கூட்டங்கள் அமைதியாகச் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்ற தகவல் வருகிறது. ஆகவே பாதுகாப்பு முறைகள் எல்லாம் சிறப்பாகவும் செம்மையாகவும் அளிக்கப் பட்டிருக்கின்றன என்பதை எடுத்துக் கூறி, இதற்கு மேல் இதை விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைச் சொல்லி, இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டாம் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப்பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

அடுத்து 54-விதியின்கீழ்.....

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : துணைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். அமைச்சர் பதிலளித்ததற்குப் பின்னர் நீங்கள் பேச முடியாது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அமைச்சர் பதில் சொன்னதற்கு எங்கள் ரியாக்ஷனை நாங்கள் சொல்லவேண்டும். நீங்கள் ** நான் சொல்லிவிடுகிறேன். (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எந்த விதியின் கீழ் நீங்கள் எழுந்திருக்கிறீர்கள். நான் 54-வது விதியின்கீழ் அலுவலை எடுத்துவிட்டேன். நீங்கள் விதியை மீறுகிறீர்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எவ்வளவு விவரம் தெரிந்தவராக இருந்தாலும்கூட, தலைவரைப் பார்த்து ** என்று கூறுவது முறையல்ல. அதை அவைக் குறிப்பிலே இருந்து எடுத்துவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த வார்த்தையை அவைக்குறிப்பில் இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : எங்கள் கருத்தைச் சொல்ல வாய்ப்புக் கொடுக்காத காரணத்தினாலும், எங்கள் தலைவருக்குப் பாதுகாப்பு கொடுக்காததாலும், அதைக் கண்டித்து திராவிட முன்னேற்றக் கழகம் வெளிநடப்புச் செய்கிறது. (கூச்சல், குழப்பம்)

(தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

## 5 கவன ஈர்ப்புகள்.

### (அ) குடும்ப ரேஷன்கார்டுதாரர்களுக்கு சர்க்கரை அளவைக் குறைக்க இருப்பது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருவாளர்கள் என். பழனிவேல், அ. ரகுமான்கான் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. என். பழனிவேல் :** துணைத் தலைவர் அவர்களே, "தமிழகத்திலே உள்ள குடும்ப ரேஷன் கார்டுதாரர்களுக்கு மார்ச் முதல் விநியோகிக்கப்படும் சர்க்கரை அளவை குறைக்க இருப்பதால் மக்களிடையே நிலவும் கவலை குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### விவர அறிக்கை.

1979ம் ஆண்டு டிசம்பர் 17ம் நாள் முதல் மத்திய அரசு லெவி சர்க்கரை முறையை செயற்படுத்தியது. நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளின் மொத்த உற்பத்தியில் 65 சதவிகிதம் மாநிலங்களிடையே லெவி சர்க்கரையாக, மத்திய அரசால் விநியோகிக்கப் படுகிறது. தமிழகத்திற்கு மாதந்தோறும் ஏறத்தாழ 19,790 டன்கள் லெவி சர்க்கரை ஒதுக்கீடாக செய்யப்படுகிறது.

2. இச்சர்க்கரை 1-3-81-க்கு முன்னர், குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு சென்னை நகரம் அதனைச் சார்ந்த புறநகர்ப் பகுதி மற்றும் மாவட்ட தலைநகர் ஆகியவற்றில், 5 கிலோ சர்க்கரை வீதமும் ; மற்ற நகராட்சிகள், மாவட்ட தலைநகர்களின் புறநகர்ப் பகுதிகள் ஆகியவற்றில் 3 கிலோ சர்க்கரை வீதமும்; நகர பஞ்சாயத்துக்கும், கிராமப்புற பகுதிகள் ஆகியவற்றில் 1 கிலோ சர்க்கரை வீதமும் வழங்கப்பட்டு வந்தது.

3. நம் மாநிலம் முழுவதும் ஏறக்குறைய 1,09 கோடி குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் கிராமப் புற பகுதிகளிலும் நகரிய பஞ்சாயத்து பகுதிகளிலும் மட்டும் ஏறத்தாழ 77 லட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. கிராமப்புற பகுதிகளில், மாதம் ஒன்றுக்கு வழங்கப்படும் ஒரு கிலோ சர்க்கரை மிக குறைவாக உள்ளதென்றும், நகரப்பகுதி களில் வழங்கப்படுவதைப்போலவே ஒரே சீரான விதத்தில் கிராமப் புறங்களிலும் வழங்க வேண்டும் என்றும் பலமான கோரிக்கைகள் வந்தன. ஏறத்தாழ 77 லட்சம் குடும்ப அட்டைகள் கிராமப் பகுதிகளில் வழங்கப்பட்டுள்ள காரணத்தால் இந்த பகுதிகளில் வழங்கப்பட்டு வந்த 1 கிலோ சர்க்கரையை 2 கிலோவாக உயர்த்தினால்கூட கூடுதலாக நமக்கு 7,700 டன் லெவி சர்க்கரை தேவைப்படும். மத்திய அரசு நம்முடைய மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யும் லெவி சர்க்கரையின் அளவை அதிகரிப்பதற்கான [illegible] மாற்றங்களையும்



ஆலோசித்து இறுதியில் மேலே குறிப்பிட்டவாறு விநியோகம் செய்ய முடிவு செய்யப்பட்டது. ஆனால் கிராமப்பகுதிகளில் உள்ளவர்களுக்கு மிகவும் குறைவாக சர்க்கரை கிடைக்கிறது என்ற முறையீடு பரவலாக இருந்து வந்தது. கிராமப் பகுதிகளிலும், நகரியம், பஞ்சாயத்து பகுதிகளிலும் 1 கிலோ சர்க்கரை பெற்று வந்தோர்க்கு மேலும் 1 கிலோ அதிகப்படுத்தி, இரண்டு கிலோ என வழங்க முற்பட்டால் கூடுதலாகத் தேவைப்படும் சர்க்கரையின் அளவு மாதத்திற்கு சுமார் 7,700 டன்கள் ஆகும் என முன்னால் கூறப்பட்டுள்ளது. அரை கிலோ அளவு சர்க்கரையை கூட்டித் தருவது என்றால் கூட கூடுதலாகத் தேவைப்படும் சர்க்கரையின் அளவு மாதம் ஒன்றுக்கு 3,850 டன்கள். சர்க்கரைக்கான தட்டுப்பாடு நிலைமையில், மைய அரசிடமிருந்து கூடுதல் ஒதுக்கீடு எதையும் எதிர்பார்க்க முடியாது என்ற நிலையிலும் நம் மாநிலத்துக்கு ஒதுக்கீடாக கிடைத்துவரும் 19,790 டன்கள் சர்க்கரையில் எல்லா தரப்பினரையும் திருப்திப் படுத்தும் வகையில் சர்க்கரை விநியோகத்தை நிர்ணயிப்பதென்பது கடினமானதாகும் என்ற நிலையிலும் வருவாய் அடிப்படையில் சர்க்கரை விநியோகம் அமையலாம் என பரவலாக கோரிக்கை எழுப்பப்பட்டு வந்ததாலும், அம்முறை ஓரளவுக்கு எல்லோருக்கும் திருப்தியளிக்கும் என்ற நிலையிலும் நகர்ப்புற மக்களுக்கு அளிக்கப் பட்ட சர்க்கரையின் அளவுக்கும் கிராமப்புற மக்களுக்கு அளிக்கப் பட்ட சர்க்கரையின் அளவுக்கும் இடையே இருந்த ஏற்றத்தாழ்வை ஓரளவுக்கு குறைத்து 1-3-81 முதல் குடும்ப அட்டைதாரர் களுக்கு, வருமான அடிப்படையில் சர்க்கரை விநியோகம் செய்யலாம் என அரசு முடிவு எடுத்தது.

4. மேற்கண்ட முடிவின்படி 1-3-81 முதல் நகர்ப்புறத்தில் ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு மாதத்திற்கு மாதவருமானம் ரூ. 1,000-ம் அதற்கு மேலும் உள்ளோர்க்கு 5 கிலோ சர்க்கரையும் ரூ. 500 முதல் ரூ. 999 வரை மாத வருமானம் உள்ளோர்க்கு 3 கிலோ சர்க்கரையும், ரூ. 499 வரை மாத வருமானம் உள்ளோர்க்கு 2 கிலோ சர்க்கரையும் வழங்கப்பட்டது. கிராமப் பகுதிகளில் அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு மாத வருமானம் ரூ. 1000 ம் அதற்கு மேலும் உள்ளோர்க்கு 3 கிலோ சர்க்கரையும் ரூ. 500 முதல் ரூ. 999 வரை மாத வருமானம் உள்ளோர்க்கு 2 கிலோ சர்க்கரையும் ரூ. 499 வரை மாத வருமானம் உல்ளோர்க்கு 1 கிலோ சர்க்கரையும் வழங்கப்பட்டு வந்தது. இப்புதிய முறையினால் கிராமத்தில் உள்ளோர்க்கு விநியோகிக்கும் சர்க்கரையின் அளவு கணிசமாக உயர்த்தப்பட்டது.

5. மேற்கூறியபடி வருமானம் அடிப்படையில் சர்க்கரை விநியோகிக்க எடுத்த முடிவு சரி அல்ல என சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு ஒன்று நுகர்வோர் ஒருவரால் தாக்கல் செய்யப்பட்டது. அந்த ரிட்மனுவை ஏற்று, எல்லோருக்கும் சமமான அளவில் சர்க்கரை கிடைக்கும் வகையில் விநியோக முறையை மாற்றி அமைக்குமாறு உயர்நீதி மன்றம் ஆணையிட் டுள்ளது. இந்த ஆணையை எதிர்த்து ரிட் மேல்முறையீடு ஒன்றை அரசு தாக்கல் செய்து அந்த ஆணையின் [illegible]

உத்தரவு வாங்கியது. ரிட்மேல்முறையீட்டின்மீது உயர்நீதி மன்றம் ஆணை பிறப்பிக்கும் வரை வருமான அடிப்படையில் சர்க்கரை விநியோகிப்பது தொடரப்பட்டது, ஆனால் ரிட் மேல் முறையீடு, சென்னை உயர்நீதி மன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டதுடன் சமமான முறையில் எல்லோருக்கும் லெவி சர்க்கரை கிடைக்கும் வகையில் மாற்று விநியோகமுறை ஒன்றை 1-3-1982 முதல் அமுல்படுத்தவேண்டும் என்றும் ஆணையிடப்பட்டது. அவ்வாறே வருமான வேறுபாடு இன்றி நபர் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 425 கிராம் என்ற அளவில் எல்லா குடும்ப அட்டைதாரர்களுக்கும் லெவி சர்க்கரை வழங்கப்படவேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இந்த மாற்று விநியோக முறை 1-3-1982 முதல் அமுலுக்கு வரும். தமிழ்நாட்டின் மக்கட்தொகைக் கணக்கின்படி மேற்கூறிய புதிய விநியோக முறைப்படி கூடுதலாகத் தேவைப்படும் லெவி சர்க்கரை மாதம் ஒன்றுக்கு சற்றேறக் குறைய 2000 டன்கள். இவ்வாறு கூடுதலாக சர்க்கரை தேவைப் படுவதை கருத்தில் கொண்டு, நம் மாநிலத்துக்கான லெவிசர்க்கரை ஒதுக்கீட்டை மாதத்திற்கு 2,000 டன்கள் கூடுதலாக்கும்படி மைய அரசுக்கு கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தில் குடும்பக் கார்டுகள் பெற்று சீனி வாங்கி உபயோகிப்பவர்களுடைய நிலை குறித்து அரசுக்கு அடிக்கடி இப்படி சிக்கல்கள் ஏற்பட்டுக்கொண்டு வருவதன் காரணம் இன்றைக்கு ஆலைகளில் உற்பத்தியாகக்கூடிய சர்க்கரையிலிருந்து 65 சதவிகிதத்தை மாநிலங்களுக்கு பகிர்ந்து கொடுப்பதாக மாநில அரசு அதன் மூலம் 19,790 டன்கள் லெவி சர்க்கரை ஒதுக்கீடு செய்வதாக இந்தக் குறிப்பிலே சொல்லி இருக்கிறார்கள்.

(முற்பகல் 11-30)

இன்றைக்கு கார்டுதாரர்களுக்கு நகரங்களில் இருக்கக் கூடியவர்களுக்கு 5 கிலோவும், நகர்ப்புறங்களில் இருக்கக்கூடிய வர்களுக்கு 3 கிலோவும், பேரூராட்சிப் பகுதிகளில் உள்ளவர் களுக்கு 2 கிலோவும் என்கிற அடிப்படையில் இன்றைக்கு வினியோகிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் சமீப காலத்தில் ஓரளவிற்கு அந்த கார்டுதாரர்கள் வெளியே வாங்கக்கூடிய சர்க்கரையின் அளவு கொஞ்சம் குறைந்திருந்தது. ரூ. 6 ஒரு கிலோ என்ற நிலைமையில் வெளிமார்க்கெட் சர்க்கரை விலை இருந்தது. ஆனால் இன்று திடீரென்று அரசு இந்த நிலையிலே சர்க்கரை வினியோகித்தால் மாதம் ஒன்றுக்கு 7,000 அல்லது 7,500 டன் பற்றாக்குறை ஏற்படும். ஆகவே, அதையும் குறைக்க வேண்டும் என்று முடிவு செய்து, வரும் 1-3-1982-ல் இருந்து ஒரு நபருக்கு 425 கிராம் மட்டும் சர்க்கரை சப்ளை செய்யப் படும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. இதனால் நாட்டிலே என்ன நிலைமை ஏற்படும் என்று சொன்னால், இந்த நாட்டிலே, தற்போது வெளிமார்க்கெட்டிலே 6 ரூபாய்க்குக் கிடைக்கும் சர்க்கரையும் கிடைக்காமல் போய்விடும். ஒரு குடும்பத்தில் கணவன், மனைவி என்று இரண்டு பேர் இருந்து, ஒரு குழந்தை இருந்தால் அவர்களுக்கு ஒரு கிலோ அல்லது 1 கிலோதான் கிடைக்கும். ஆகவே அவர்களுடைய தேவை முழுவதும் ... நிலைமை ஏற்படும். இந்த



அளவிற்குச் சர்க்கரை அளித்தால் அவர்களுக்கு நிச்சயமாக ஒரு 10 நாளைக்குக்கூட வராது. ஒரு குடும்பத்தில் 5 பேர் இருந்தால் அவர்கள் நிலைமை என்னவாகும் என்பதையும் சிந்திக்க வேண்டும்.

ஆகவே, இந்தப் புதிய முறையினால் கள்ள மார்க்கெட் அதிகரிக்கும், சர்க்கரை விலை பழையபடி 10 ரூபாய்க்குப் போனாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஆகவே, இன்றைக்கு வினியோகிக்கும் முறைபில வினியோகித்தால் மேலும் 7,000 அல்லது 7500 டன் வேண்டும் என்று சொல்கிறீர்களே, அதை மத்திய அரசிடமிருந்து பெற்று, அந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும். அதன் மூலம் இன்றைக்கு அமல்படுத்தப் பட்டு வருகிற முறையைத் தொடர்ந்து அமல்படுத்த வேண்டும் என்று கேட்டு, அதற்கேற்ற நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு. டாக்டர். இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகுப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சர்க்கரையைப் பொறுத்தவரையில் நாம் எந்த முடிவும் எடுக்கவில்லை. ஏற்கனவே இருக்கிற நிலைமைகளை ஒட்டி சில முடிவுகளை எடுத்தோம். தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் மாதம் ஒன்றுக்கு 19,790 டன் சர்க்கரை தருகிறார்கள். அதை எந்த வகையில் அதிகரித்துத் தரும் நிலைமையில் மத்திய அரசு இல்லை. ஆகவே, ஏற்கெனவே சென்னை, சென்னை புறநகர் மாவட்ட தலைநகர் ஆகியவற்றில் 5 கிலோ என்றும், நகராட்சி களில் 3 கிலோ என்றும் நகர பஞ்சாயத்து கிராம பஞ்சாயத்து, ஆகியவைகளில் 1 கிலோ என்றும் வைத்தோம். அதற்குப் பிறகு 1-3-81 முதல் 1,000 ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்குகிறவர்களுக்கு 5 கிலோ என்றும், 500 முதல் 999 வரை சம்பளம் வாங்குகிறவர்களுக்கு 3 கிலோ என்றும், 499 வரை சம்பளம் வாங்குகிறவர்களுக்கு 2 கிலோ என்றும் கொண்டுவந்தோம். முறையே, மற்ற பகுதி களில் 3 கிலோ, 2 கிலோ, 1 கிலோ என்ற அடிப்படையில் வைத்தோம். இதற்குப் பிறகு உயர்நீதி மன்றத்தில் சிலர் வழக்குத் தொடுத்ததன் காரணமாக, உயர்நீதி மன்றம் வருமான அடிப்படையில் சர்க்கரை தருவது கூடாது கிராமம், நகரம் என்று வேறுபாடு கூடாது, பங்கீட்டு முறை சமமாக இருக்க வேண்டும், எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்று சொன்னதன் அடிப்படையில் தான் இந்த முடிவுகளை எடுக்கவேண்டி வந்தது. அதுவும் இந்த மார்ச் மாதத்தில் இருந்து தான் தீர்ப்பின் அடிப்படையில் முடிவு எடுக்க வேண்டும் என்பதால், இந்த உத்தரவைப் போட்டு இருக் கிறோம்.

காரணம் நமக்குக் கொடுக்கப்படுகின்ற 19700 டன் சர்க்கரையை வைத்துக் கொண்டு, 1 கோடியே 9 லட்சம் குடும்ப அட்டைகளுக்கு பிரித்துக் கொடுக்கின்ற நேரத்தில், ஒரு நபருக்கு 425 கிராம் என்ற அளவிற்குத்தான் வருகிறது. அதிலும் 2,000 டன் கூடுதல் தேவை உள்ளது. அதை எப்படிச் சமாளிப்

பது என்கிற வகையில் மத்திய அரசுக்கு நாம் எழுதுகின்ற நிலையில் இருக்கிறோம். 425 கிராம் கொடுப்பதற்கே 2,000 டன் அதிகம் வேண்டும் என்கிற நிலையில் நாம் ஒரு நபருக்கு 1 கிலோ என்று கொடுக்க வேண்டும் என்று சொன்னால் 36 ஆயிரம் டன் அதிகம் தேவைப்படுகிறது. ஆகவே தான் உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பை ஒட்டி இந்த முடிவு எடுக்க வேண்டி வந்ததே தவிர நாமாக எந்த முடிவையும் எடுக்கவில்லை. அதுவும் மார்ச் 1-ஆம் தேதிக்குள் முடிவு எடுக்க வேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டு இருப்பதால் நமக்கு வேறு வழி இல்லாத நிலையில் இந்த உத்தரவைப் போட்டு இருக்கிறோம்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடும்பக் கார்டுகளுக்கு தரப்படும் சர்க்கரையின் அளவு மிகவும் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு சர்க்கரையின் அளவை அதிகப்படுத்திக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா? வெளி மார்க்கெட்டில் சர்க்கரை விலை கூடுதலாக இருக்கிறது. அதைத் தடுத்து விலையைக் கட்டுப் படுத்த சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? நியாய விலைக் கடைகளில் சர்க்கரை, மண்ணெண்ணெய், பாமோலின் ஆயில், ரவை, மைதா, கோதுமை சரியாக விநியோகம் செய்யப்படாமல் பதுக்கி வைக்கப்படுகிறது. அதைத் தடுத்து நிறுத்தி, கார்டுதாரர்களுக்கு சரியாக கொடுக்க இந்த சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவ ரவர்களே, ஏற்கெனவே குடும்பக் கார்டுக்கு 5 கிலோ, 3 கிலோ, 2 கிலோ என்ற அடிப்படையில் சர்க்கரை வழங்கப்பட்டது, இப்போது எல்லோருக்கும் சமமாகக் கொடுக்க வேண்டுமென்று சொன்னதால் ஒரு நபருக்கு 425 கிராம் என்ற அளவில் வழங்கப்படும். பெரியவர், சிறியவர், குழந்தை என்ற வேறுபாடு இல்லாமல் எல்லோருக்கும் சர்க்கரை சமமாகத் தேவைப்படும் என்பதால் சமமாகப் பிரித்துக் கொடுக்கிறோம். அந்த அடிப்படையில் ஒரு வீட்டில் ஒரு குடும்பத்தில் எத்தனை பேர் இருந்தாலும் அத்தனை பேர்களுக்கும் 425 கிராம் வீதம் கொடுக்கப்படும். 5 பேர் இருந்தால் 425 கிராம் வீதத்தில் 2,125 கிராம் கிடைக்கும். கூடுதலாக சர்க்கரை ஒதுக்கீடு தேவை என்று மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். அவர்கள் கூடுதலாகக் கொடுத்தால் நாமும் கூட்டிக் கொடுக்கலாம்.

திரு. என். பழனிவேல்: துணைத் தலைவரவர்களே....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தவர்கள் ஒன்றுக்கு மேற் பட்டவர்களாக இருந்தால் ஒருவருக்கு ஒரு துணைக் கேள்வி கேட்க வாய்ப்பளிப்பது என்ற நடைமுறையை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். உங்களுக்கு ஏற்கனவே ஒரு கேள்விக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, உட்காருங்கள். அடுத்த கவனஈர்ப்பு.



## (ஆ) உணவு விடுதிகளில் பலகாரங்களின் விலை உயர்வு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் ப. தீர்த்தராமன், ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன், இ. முத்து ராமலிங்கம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ''ஓட்டல்களில் இட்லி, காபி மற்றும் பலகாரங் களின் விலை உயர்த்தப்பட்டுள்ளதால் பொது மக்கள் படும் இன்னல் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவ ரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

விவர அறிக்கை.

உணவு விடுதிகளில் பண்டங்களின் விலைகளைக் கட்டுப் படுத்துவது பற்றி அரசு பலமுறை ஆராய்ந்து வந்துள்ளது. உணவு விடுதி உரிமையாளர்களுடன் பேச்சு வார்த்தைகளும் நடைபெற்றுள்ளன.

தமிழகத்தில் பல ஆயிரக்கணக்கான உணவு விடுதிகள் உள்ளன. இதில் நட்சத்திர ஓட்டல்கள் முதல் மிகச்சிறிய தேநீர் விடுதிகள் வரை அடங்கும். எல்லா உணவு விடுதிகளுக்கும் ஒரே மாதிரியான விலைவாசிகள் நிர்ணயிக்க முடியாது. ஒவ்வொன்றிலும் இருக்கும் வசதிகள், செலவினங்கள் போன்ற வையை கணக்கில் எடுத்துக் கொண்டுதான் விலைகள் நிர்ணயிக் கின்றார்கள். இருந்தாலும் ஏழை, நடுத்தர வர்க்கத்தினர்கள், சிற்றுண்டி அருந்தும் விடுதிகளிலாவது விலைகளைக் கட்டுப் படுத்த வேண்டுமென்பதே அரசின் நோக்கம்.

உணவு விடுதி உரிமையாளர்கள் சங்கம் எல்லாப் பொருட் களுக்கும் விலைகள் உயர்ந்து வருவதாலும் மற்ற பல செல வினங்கள் கூடிக்கொண்டே வருவதாலும் விலைகளை உயர்த் தாமல் இருக்க முடியவில்லை என்றும், அரசு அத்தியாவசியப் பொருட்களை குறிப்பிட்ட விலைக்கு கொடுத்துக் கொண்டிருந் தால் இட்லி, காபி, தேநீர் போன்ற பொருட்களுக்கு மட்டும் விலைகளைக் குறைப்பதாகவும் கூறினார்கள். இந்த அடிப் படையில் 1980 செப்டம்பர் மாதம் 15-ம் நாள் முதல் கீழ் கண்டவாறு விலைகளை நிர்ணயித்தார்கள்.

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| வரிசை எண். | உணவுப் பண்டங்கள். | 'ஏ' பிரிவு | 'பி' பிரிவு | 'சி' பிரிவு |
| | | (விலைகள் பைசாவில்) | | |
| 1. | இட்லி (2) | 35 | 30 | 30 |
| 2. | காபி (120 மி.லி.) | 50 | 45 | 40 |
| 3. | தேநீர் 120 (மி.லி.) | 35 | 30 | 25 |

உணவு விடுதிகளை 'ஏ' 'பி' மற்றும் 'சி, என்று தரம் பிரிக்கும் பொறுப்பையும் அவர்களிடமே விடப்பட்டது. அரசு அவர்களுக்கு வெளிச்சந்தை சர்க்கரை. மண்ணெண்ணெய், ரவை, மைதா, அரிசி, போன்ற பொருட்களை குறைந்த விலையில் கொடுக்க முயன்றது. ஆனால் இந்தப் பொருட்களில் தட்டுப்பாடு வரும்பொழுது தொடர்ந்து ஓரே விலைக்குக் கொடுப்பது சிரமம். இதைக் காரணமாகக் கூறி உணவு விடுதி உரிமையாளர்கள் விலைகளை மறுபடியும் உயர்த்தியுள்ளார்கள். விலைகளை உயர்த்தியுள்ளவர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் கொடுப்பது நிறுத்தப்பட்டுள்ளது.

சமீபத்தில் நடந்த பேச்சுவார்த்தைகளின் பயனாக இன்றியமையாப் பொருட்களை மீண்டும் கொடுக்கத் தொடங்கினால் 1–1–1982 முதல் ஏற்றிய விலைகளை 5 காசு அளவில் குறைப்பதாக் கூறியுள்ளார்கள். இது ஆராயப்பட்டு வருகிறது. அரசின் முடிவு விரைவில் எடுக்கப்படும்.

விலைகளை கட்டுப்படுத்துவதுடன் பொருட்களின் தரமும் அளவும் சரியாக இருக்க வேண்டுமென்பதும் முக்கியம்.

தேவையென்றால் சட்டப்படி விலைகளை நிர்ணயிப்பதும் ஆராயப்படும். விதவைத் தாய்மார்களுக்கு முன்னுரிமை அளித்தும், இட வசதியும், குறைந்த வட்டியில் கடன் கொடுத்தும் இட்லி, தயிர் சாதம், சாம்பார் சாதம் போன்ற உணவுப் பண்டங்களை மலிவு விலையில் விற்பனை செய்வதற்கான திட்டம் ஒன்றும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ஆர் நவநீதகிருஷ்ணன் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஓட்டல்களில் சமீபத்தில் இட்லி, தோசை, காபி, பலகாரங்கள் விலை மிகவும் உயர்ந்துள்ளது, அதுபற்றி மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன்; காங்கிரஸ் ஆட்சியின் போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு. மதியழகன் அவர்கள் இட்லி இளைத்து விட்டது என்று சொல்லி இட்லியை சட்ட மன்றத்தில் கொண்டுவந்து காட்டினார்கள், அப்போது இரண்டு இட்லி 20 பைசா. அப்போது இரண்டு இட்லிக்கு ஒரு பிளேட் நிறைய சாம்பார் கொடுப்பார்கள். இப்போது இரண்டு இட்லி 60 பைசா. இந்த விவர அறிக்கையிலே 1980 ஆம் வருஷத்திய விலைப்பட்டியலைக் கொடுத்திருக்கிறார்கள். இப்போது இரண்டு இட்லிக்கு 60 பைசா கொடுத்தாலும் ஒரு சிறிய தட்டில் சாம்பார் கொடுக்கிறார்கள். அதுமட்டுமல்ல, கவனமாக இருந்தால்தான் இட்லி தட்டில் இருக்கும். இல்லை என்றால் 'ஃபான் காற்றில் பறந்துவிடும். 3 மாதத்திற்கு முன்னால்கூட இரண்டு இட்லி விலை 50 காசாகத்தான் இருந்தது. அப்போது விலையைக் குறைக்கச் சொல்லி ஒரு போராட்டம் எல்லாம் நடந்தது. ஆனால் இன்றைக்கு இரண்டு இட்லி விலை 60 காசுக்கு வந்திருக்கிறது.





முன்பெல்லாம் ஒரு ரூபாய் கொண்டுபோனால் ஒருவருடைய காலை உணவு முடிந்துவிடும். இப்போது 3 ரூபாய் கொண்டுபோனால் கூட போதவில்லை. இதனால் ஏழை எளிய மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது ஒரு படி அரிசி 10 ரூபாய்க்கு விற்றபோதிலும் இட்லி விலை ஏறவில்லை; இப்போது ஏறியிருக்கிறது. இந்த விலைவாசியைக் குறைக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

(முற்பகல் 11.40)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்போது எதிக்கட்சித் தலைவராக இருந்தவன் நான்தான். ஆகவே நான் அப்போது எந்த இட்லியையும் இந்த அவையிலே கொண்டுவந்து காட்டவில்லை என்பதைத தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) இப்போது விலைவாசி ஏற்றத்தைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். விலைவாசி ஏற்றம் என்பது பற்றி இரண்டு நாட்களுக்கு முன்பு பிரதமர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். உலகம் முழுவதும் இந்தப் பிரச்சினை இருக்கிறது என்று அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். டன் ஒன்றுக்கு 1300 ரூபாய்க்கு விற்ற கோதுமையின் விலை இப்போது 1550 ரூபாய் என்ற அளவுக்கு ஏறி இருக்கிறது. அப்படி விலைகள் எல்லாம் ஏறி இருக்கின்றன. இருந்தாலும் அதற்கேற்ப மற்றைய ஊதியங்கள் எல்லாம் எப்படிஏறி இருக்கின்றன என்பதையும் பார்க்க வேண்டும். பொருளாதாரத்திலே அப்படித்தான் கணக்கெடுக்கிறார்கள். ஆகவே அந்த விலைவாசி பற்றிய விவரங்கள் முழுவதையும் இங்கே விளக்குவதற்கு நேரம் இல்லை. ஆனால் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். இந்தியாவிலே எந்த மாநிலத்திற்குப் போனாலும் அந்த மாநிலத்தோடு தமிழகத்தைப் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது விலைகள் குறைவாகத்தான் இருக்கின்றன. இதைக் கூடுதலாக ஆக்கி விடாமல் முடிந்தால் இன்னும் குறைக்க முடியுமா என்ற வகையிலே முயற்சிகளை எடுக்கலாம் என்பதை ஒப்புக்கொள்கிறேன். அதற்காக அவர்களை எல்லாம் அழைத்து வைத்துப் பேசி ஏ.பி.சி. என்ற வகையிலே பிரித்து 35 பைசா 30 பைசா என்று நிர்ணயித்து இருக்கிறோம். ஆனால் ஒப்பந்தத்தை மீறி இப்போது 5 காசு கூட்டி இருக்கிறார்கள். ஆகவே மறுபடியும் அவர்களை அழைத்து வைத்துப் பேசி இதுபற்றிச் சொன்னபோது அவர்களுக்குக் கட்டுப்படியாகின்ற அளவுக்குப் பொருட்களை வழங்கினால் அவர்களும் விலையை இறக்க முடியும் என்று சொன்னார்கள். ஆகவே நீங்கள் எந்தப் பொருளையும் அடக்கமான விலைக்குத் தராதபோது நாங்கள் எப்படி விலையைக் குறைக்க முடியும் என்ற அந்தக் காரணத்தை அவர்கள் சொல்கிறார்கள். கட்டுப்படியான விலைக்குக் கோதுமை, சீனி ஆகியவற்றைத் தந்தால் கட்டுப்படியான விலைக்கு விற்கிறோம், எதையுமே அப்படித் தராமல் எங்களை மட்டும குறைத்து விற்கச் சொன்னால் எப்படி விற்போம் என்று சொல்கிறார்கள்,

[டாக்டர். இரா. நெடுஞ்செழியன்] ['982 பிப்ரவரி 19

ஆனால் எப்படி இருந்தாலும் அவர்களை அழைத்துப் பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். ஆனால் குடும்பக் கார்டுகளுக்கு விநியோகிப்பதற்கே நமக்கு 10 ஆயிரம் டன் தேவைப்படுகின்ற நேரத்திலே 3 ஆயிரம் டன்தான் கிடைக்கின்றது. இந்த நிலையிலே நம்மால் எப்படி அவர்களுக்கும் விநியோகிக்க முடியும். அதைப் போல அரிசியைப் பொறுத்தவரையில் குடும்பக் கார்டுகளுக்கு கொடுப்பதற்கே போதுமானதாக இல்லை என்கின்றபோது அவர்களுக்கு நாம் எப்படி வழங்க முடியும், இருந்தாலும் பேசிப் பார்க்கலாம்.

ஆனால். இந்த விலைகள் பற்றி சட்டம் கொண்டுவரலாம் என்றால் சரியாக இருக்குமா என்பதைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறோம், அப்படிச் சட்டம் கொண்டுவந்தால் அதன் எடையை நாம் நிர்ணயிக்க வேண்டும், அதற்குப் பிறகு அதன் விலையை நிர்ணயிக்க வேண்டும். அதற்குப் பிறகு அதைக் கண்காணிப்பதற்கு அதிகாரிகளை நியமிக்கவேண்டும். அதனால் அதிகாரிகளால் வியாபாரிகள் மற்றவர்களுக்குத் தொல்லை ஏற்படும், ஆகவே கூடுமான வரையிலே பேச்சு வார்த்தையின் மூலம் அவர்கள் விற்கின்ற விலையினைக் குறைக்க வேண்டும் என்று நாங்கள் முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். சட்டம் கொண்டுவருவது பற்றியும் ஒரு பக்கம் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். விதவைத் தாய்மார்கள் போன்றவர்களுக்கு உதவுகின்ற வகையிலே அவர்களே இட்லி, சாம்பார் போன்றவற்றைக் குறைந்த விலையிலே தயாரித்து விற்பதற்கு ஏற்பாடு செய்யலாமா என்பது பற்றியும் ஒரு செயற்குறிப்பு இருக்கிறது. இதன் மூலம் ஏழை விதவைகளுக்கு உதவக்கூடிய ஒரு நிலைமையும் ஏற்படும். ஆகவே இதுபற்றி எல்லாம் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (6) சட்டமுன்வடிவுகள்

### பொதுச், சொத்து (அழித்தல் இழப்பு ஆகியவற்றை தடுத்தல்) சட்ட முன்வடிவு, 1982

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பொதுச் சொத்து (அழித்தல், இழப்பு ஆகியவற்றைத் தடுத்தல்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்

திரு. ரா. உமாநாத்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த பில்லை இன்ட்ரொடக்ஷன் ஸ்டேஜிலேயே நான் எதிர்க்கிறேன். மீண்டும் வேலை நிறுத்தம் கிளர்ச்சி ஆகியவைதான் இந்த பில்லுடைய டார்கெட், ரொம்ப தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். "During Strikes and other agitations it, is noticed that.... என்று சொல்லி இருக்கிறார்கள், ஆகவே,



1982 பிப்ரவரி 19] [திரு. ரா. உமாநாத்]

மீண்டும் அதனுடைய இலக்கு ஸ்ட்ரைக்தான். ஸ்ட்ரைக்கைத் தடுப்பதுதான் நம்முடைய சர்க்காரின் வேலையா? தேசியப் பாதுகாப்புச் சட்டம் இருக்கையிலே ஸ்ட்ரைக் தடைச்சட்டம் எஸ்மா இருக்கையிலே இப்படிப்பட்ட ஒரு சட்டமும் தேவையா அவையெல்லாம் போதாதென்று இந்தச் சட்டமும் இப்போது கொண்டுவரப்படுகின்றதா? இத்தனைச் சட்டங்களையும் பாஸ் பண்ணி என்ன செய்யப் போகிறீர்கள் நேற்று திரு. ரகுமான்கான் சொன்னமாதிரி இந்த சட்டங்களை எல்லாம் சேர்த்து மாலையாகப் போட்டுக்கொண்டு பத்ரகாளி மாதிரி ருத்ரதாண்டவம் ஆடப்போகிறீர்களா அதற்காகத்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தீர்களா என்பது தெரியவில்லை, நீங்கள் பதிலுக்குக் கேட்பீர்கள். கல்லால் அடித்தால் சும்மா விடுவதா? பஸ்ஸை எரித்தால் விட்டுவிடுவதா என்று கேட்பீர்கள், இது ஒரு சீரியஸான விஷயம். கல்லாலே அடிப்பது என்றால் ஏன் அடிக்கிறார்கள். ஸ்டிரைக் செய்து ஊர்வலம் போகிறபோது 'ஏஜன்ட்ஸ் ப்ரொவொகேஷன்' என்று சொல்வார்களே, அது போல் அவர்களே தங்களுடைய ஆட்களை மப்டியிலே அந்த ஊர்வலத்தில் கலந்து கொள்ளச் செய்து, அவர்களைக் கொண்டே கல்லால் அடிக்க வைத்து உடனே, தடியடி ஃபயரிங் கண்ணீர் புகை எல்லாவற்றையும் செய்ய வேண்டியது, இது ஒரு யூஷுவல் ப்ரொசீஜராக அல்லவா இருக்கிறது. இது இங்கே கூடியிருக்கும் எல்லோருக்கும் தெரியும்.

History establlshed thls fact இது இப்போது என்று அல்ல. ஹிட்லர் காலத்திலிருந்து நடக்கிறது. கம்யூனிஸ்டுகளும் சோஷியலிஸ்டுகளும் ஜெயித்து விட்டார்கள் என்று சொன்னவுடனேயே நாடாளுமன்ற கட்டிடத்திற்கே நெருப்பு வைத்துவிட்டார்.

In fact Hiteer himself camc to power by thls method only. அந்தக் காலத்திலேயே நாடாளுமன்றத்தில் நெருப்பு வைத்த கேஸ் அது. அதுபோலவே, இப்போது இந்தக் சட்டமுன்வடிவின் பேஸிஸ் என்ன தொழிலாளர்களை கைது செய்து அவர்களை கஷ்டப்படுத்த வேண்டும் என்பதுதானே ஆகவே தாங்களாகவே கல்லெடுத்து அடித்துவிட்டு அதை தொழிலாளர்கள் மீது போடும் இப்படிப்பட்ட ஒரு மெத்தட் ஏற்கெனவே போலீசுக்கு இருக்கிற போது இந்தச் சட்டம் கொண்டுவந்து தொழிலாளர்களுக்கு எதிராக, ஸ்டிரைக்குக்கு எதிராக அதை பயன்படுத்துவதற்காகத்தானே.

விவசாயிகள் ஸ்டிரைக் நடக்கும் போது போலீஸ்காரர்களே ஒரு ஆளை விட்டு எங்காவது ஒரு பாலத்தை வெடிகுண்டு வைத்து தகர்க்கலாம் பின்னால் வேண்டுமானால் ரிப்பேர் செய்து கொள்ளலாம். இப்போது இதை பயன்படுத்தி விவசாயிகளை அடக்கலாம் என்று நினைக்கலாம். ஆனால் அதன் விளைவாக அப்பாவி விவசாயிகள் கைது செய்யப் படுவார்கள். ஆகவே. இது தொழிலாளர்களுக்கு விரோதமாக ஸ்டிரைக் செய்யும்

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். எதற்கெடுத்தாலும் சட்டம் சட்டம் என்று கொண்டுவருவது இந்த அரசுக்கு சரியல்ல. லா டிபார்ட்மென்ட் அட்வைஸ் செய்யவேண்டாமா? யாருக்காக சட்டம் போடுகிறீர்கள். இலங்கை தமிழர்கள் பிரச்னை மாநிலத்தில் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருக்கும்போது, நாங்கள் சிறைச்சாலைகளில் இருந்தபோது இந்த மாநிலத்தில் ஐ.ஜி. யாக இருக்கிற மதிப்பிற்குரிய ராதாகிருஷ்ணன் சொன் னார்கள், பஸ்மீது கல் எறிவதைத் தடுப்பதற்கு ஒரு சட்டம் கொண்டுவரலாம் என்று அப்போதே அவர் சொன்னார். சட்டத்தை உருவாக்குவது யார்? நாம்தான். அதில், எவ்வளவு ஆண்டு தண்டனை கொடுக்கவேண்டும் என்று சொல்வது நாம். அதுபற்றி விவாதித்து வோட்டு போடுவது நாம்; ஆனால் ராதா கிருஷ்ணன் சொல்கிறார். ஐந்தாண்டுகளிலிருந்து ஏழு ஆண்டுகள் வரை தண்டனை சட்டம் வரும் என்று. அவர் என்ன மந்திரி சபை உறுப்பினரா அல்லது சட்டசபை உறுப்பினரா? ஆப்டர் ஆல் ஒரு ஐ.ஜி. ஆனால் அவர் சொல்கிறார். அவர் சொன்ன வுடன் நம் லா மினிஸ்டர் அல்லது சர்க்காரில் இருப்பவர்கள் உடனே ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து விடுகிறார்கள். அதில் உருப்படியாக ஏதாவது இருக்கிறதா? பாலத்தை உடைத்து விட்டால் பாலத்தைக் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று சொன்னால் அது நடக்கக்கூடிய காரியமா என்று எண்ணிப் பார்க்கவேண்டும். திரு. உமாநாத் அவர்கள் அழகாகக் குறிப் பிட்டார்கள். அறுக்காதவள் இடுப்பில் 68 அரிவாள் என்பார்கள். இப்படி இருக்கிறது நீங்கள் சட்டங்கள் இயற்றுவது! இருக்கிற சட்டங்களை வைத்துக்கொண்டு குற்றங்களைத் தடுக்கமுடியாத வர்களுக்கு தினத்திற்கு ஒரு சட்டம். நமது சட்டசபையிலே இரண்டு மந்திரிகளுக்கு அதிக வேலை. ஒன்று உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள். பஞ்சாயத்து தேர்தல்களை நீட்டுவதற்கு ஒரு சட்டம். அடுத்து, ஒரு லா மினிட்டர்.

HON. THIRU C. PONNAIYAN; Mr. Deputy Speaker Sir, they cannot go deep into the matter at this stage. They will get an opportunity to go deeper into the matter when the Bill is taken up for consideration.

திரு. துரைமுருகன்: ஆக, இந்த பில்லை வாபஸ் வாங்கு வார்கள் என்ற நல்லெண்ணத்தில்தான் சொல்கிறேன். துரை முருகன் என்ன கத்திக் கத்திப் பேசினாலும் நாங்கள் செய்யத் தான் போகிறோம் என்று விடாப்பிடியாக இருந்தால் ஆட்சேபணையில்லை. ஆனால் ஒன்றை இந்த அரசுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

You are using the Police method, not the political method. எல்லாவற்றிற்கும் போலீஸ்தானா? அப்படிப்பட்டதொரு நிலையில் சட்டங்கள் கொண்டுவருகிறீர்கள். கடைசியாக இந்த பில்லை கொண்டுவருகிற அமைச்சர் அவர்களையும். அரசையும் கேட்டுக்கொள்கிறேன், நீங்கள் இதை வாபஸ் வாங்குங்கள், வாங்கினால் உங்களுக்கு நல்லது. இல்லாவிட்டால் வருங்காலத்தில் இந்தச் சமுதாயம் உங்களைச் சபிக்கும் என்று கூறி முடிக்கிறேன்.





மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை அறிமுகம் செய்வதற்கு முன்பாக, மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் முதல்வர் அவர்கள் இரும்புக் கரம் வைத்துக் கொண் டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்தவரையில், இரும்புக் கரம் அல்ல; கரும்புக் கரம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இது யாரையும் பாதிக்கக்கூடிய அளவிலே கொண்டு வரப்படவில்லை. பொதுமக்களுக்கு சவுகரியம் செய்து கொடுப்பதற்காக, அவர் களுக்கு பாதுகாப்பு கொடுக்கக்கூடிய சட்டமே ஒழிய, இதிலே வேறு எந்தவிதமான அரசியல் நோக்கம் இல்லை, இந்த அரசுக்கும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இந்த சட்டமுன் வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பொதுச் சொத்து (அழித்தல், இழப்பு ஆகியவற்றைத் தடுத்தல்) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று; நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

## (7) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகள்— விவாதம் (தொடர்ச்சி)

*திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1981–82 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை குறித்தும் 1980–81 ஆம் ஆண் டிற்கான துணை நிதி நிலை அறிக்கை குறித்தும் நான் சார்ந் திருக்கும் இந்திரா காங்கிரஸ் சார்பாக பேச வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியையும், வணக்கத்தையும் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியம் தமிழ்நாட்டிற்கு அத்தியாவசிய மான ஒரு துறை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். மின்சாரம் ஒரு ஆடம்பரம் என்பதுபோய், மனித வாழ்க்கையில் மிகமிக அத்தியாவசியமாக்கிவிட்ட நிலையில் இப்போது இருக்கிறது. தமிழகத்தில் ஏறக்குறைய 75 சதவீதம் விவசாயிகள். அவர்கள் விவசாயத்தற்குரிய; பம்பு செட்டுகள். மோட்டார்களை வைத்து, பயிர் செய்து வாழக்கூடிய நிலையிலே

[திரு. ரா. உமாநாத்] [1982 பிப்ரவரி 19

உரிமைக்கு எதிராக, விவசாயிகளுக்கு எதிராக இருப்பதால் இந்தச் சட்ட முன்வடிவினை அறிமுகம் செய்ததிலிருந்து நீங்கள் வாபஸ் வாங்க வேண்டும். இல்லையென்றால் நீங்கள் தமிழகதைதை இரும்புக்கரம் கொண்டு ஆட்சி நடத்தி வருகிறீர்கள் என்று தமிழக மக்கள் நினைப்பார்கள். தொழிலாளர்களை ஒடுக்குவதற்கு அவர்கள் ஸ்டிரை செய்வதை தடுப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் எவ்வளவு உறுதியோடு, அக்கறையோடு இருக்கிறார்களோ அதைவிட 10 மடங்கு உறுதியோடு அவைகளை எதிர்ப்பதற்கு நாங்கள் இருக்கிறோம். Some of workers and peasants may have to give thier lives ஆனால் அவர்கள் தங்கள் உயிரை இழக்கவேண்டி வரும். அந்தப் பிரைஸை கொடுப்போம் உரிமையை டிபெஃண்ட் செய்வோம் ஆகவே அவ்வளவு தூரத்திற்குப் போகாமல் இதை வாபஸ் வாங்குவதுதான் நல்லது. அப்படி அது கண்டிப்பாக அறிமுகப் படுத்தப்படுமேயானால் அதை நாங்கள் வன்மையாகக் ண்டிக்கிறோம் என்று கூறிக்கொள்கிறேன்,

திரு. மு, அம்பிகாபதி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை அறிமுகப்படுத்துகிறபோதே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே அதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். வேலை நிறுத்தத் தடைச்சட்டம் என்ற ஒரு சட்டத்தை மைய அரசு கொண்டு வந்ததற்குப் பிறகு தான் ஜனவரி 19 ஆம் தேதி இந்தியா முழுவதும் வேலை நிறுத்தம் நடைபெற்றது. தமிழகத்திலும் துப்பாக்கிச் சூடு நடைபெற்றது. அனைத்திந்தியாவிலும் நடைபெற்றது. அதன் விளைவாக 20 பேர்கள் மாண்டார்கள்: எனவே தொழிலாளர் வர்க்கத்தை இப்படி சட்டத்தின் மூலம் சவாலுக்கு அழைப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

நேற்றைக்கு ஒரு சட்டம் கொண்டு வந்தீர்கள். குண்டர்கள் தடைச் சட்டம் குடிசை போட்டால் சிறையிலே தள்ளுகின்ற சட்டம். இன்றைக்கு என்னவென்றால் வேலை நிறுத்தக்காலத்தில் பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்பட்டால் அதைத் தடுக்கச் சட்டம் என்கிறீர்கள். பொதுச் சொத்துக்குச் சேதத்தை விளைவிப்பவர்கள் தொழிலாளர்கள் அல்ல. அவர்கள் வேறு யாரோ. ஏனென்றால் தொழிலாளர்கள்தான் பொருள்களை உற்பத்தி செய்கிறார்கள். ஆகவே, இந்தச் சட்டங்களின் மூலமாக தொழிலாளர்களை அடக்கிவிட முடியும் என்று நீங்கள் நினைத்தால், அதை விட மிக உறுதியோடு, பன்மடங்கு உறுதியோடு அதை எதிர்த்துப் போராடி, இந்தச் சட்டங்களை எல்லாம் தீ வைத்துக் கொளுத்த தயாராக இருக்கிறார்கள் என்பதை எச்சரிக்கையாகச் சொல்லிக் கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 'தீ பரவட்டும்' என்று சொன்னார். இத்தகைய சட்டங்களை எதிர்த்து அதற்காகவே தீ பரவட்டும் என்று தொழிலாளர்கள் போராடுவார்கள். தொழிலாளர்களை அடக்குவதற்காக கொண்டு வரப்பட்ட சட்டம் என்ற முறையிலே இந்தச் சட்டமுன் வடிவின் நகலைப் பார்க்கவே அறுவறுப்பாக இருக்கிறது என்று இங்கேயே அதை கிழித்து எறிகிறேன். இத்தகைய சட்ட முன்வடிவு இங்கே அறிமுகம் செய்யப் பெறுவதிலிருந்து வாபஸ் வாங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது ஒரு தொழிலாளர் விரோத சட்டம் என்ற வகையில் தொழிலாளர்களின் சார்பில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், இதை அறிமுகம் செய்யும்போது இந்த அவையில் இருக்க விரும்பாமல், நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம் (திரு. அம்பிகாபதி சட்ட முன்வடிவின் நகலை கிழித்து எறிந்தார்) (கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தார்கள்).



1982 பிப்ரவரி 19] [திரு. மு. அம்பிகாபதி]

(முற்பகல் 11.50)

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாளொருவண்ணமும் பொழுதொரு வண்ணமும் என்று சொல்வார்கள், அப்படி இந்த அரசு ஒரு நாளைக்கு ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறது. கொண்டுவரப்படுகிற சட்டங்கள் எப்படி இருக்கின்றன என்று கேட்டால் எல்லாம் மக்களை அடக்கி ஒடுக்க, அவர்களை நிமிர வைக்காத சட்டங்கள்தான். நாளைக்கு ஒரு சட்டம் என்று வருகிறது. நேற்று குண்டர்கள் சட்டம், அதற்கு முன்னால் பத்திரிகைகளை அடக்கும் சட்டம், இன்று கல் எறிந்தான் என்று சொல்லி அவன் மீது ஒரு சட்டம். இப்படிச் சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன. மக்களின் நெஸஸிட்டீஸ்—க்கு ஏற்றமாதிரி சட்டங்கள் இருக்கவேண்டும். இல்லை என்றால் அந்த மக்கள் அந்தச் சட்டத்தை உடைத்துவிடுவார்கள். ஒரு சட்டத்தைப் போடுவதற்கு முன்னால் அந்தச் சட்டத்தினால் சமுதாயத்திற்கு என்ன நன்மை ஏற்படும் என்று பார்க்கவேண்டும். இல்லாவிட்டால் மக்கள் அந்தச் சட்டத்தை நொறுக்குகிற ஒரு காலம் உருவாகிவிடும். சட்டம் என்றால் சாதாரண சரளைக் கற்கள் போன்று உங்கள் ஆட்சியில் மாறிவிட்டது.

சாதாரணமாக தொழிலாளர்கள் ஒரு போராட்டம் நடத்துகிறார்கள் என்றால் மாணவ சமுதாயம் ஒரு போராட்டம் நடத்துகிறது என்றால் அதில் ஓரிருவர் கல் எறிந்து விடலாம். உடனே அதற்காக ஒரு சட்டமா? 100 ரூபாய் பொருள் சேதமானால் ஒரு ஹெட் லைட்டை உடைத்தாலும் கூட அது ரூ. 500 க்கு வந்துவிடும். ரூ. 100க்கு மோட்டார் சம்பந்தப்பட்ட சாமானே கிடையாது இன்று. காரில் உள்ள ஒரு கண்ணாடி உடைந்தால்கூட அதை வாங்குவதற்கு ரூ. 500 ஆகிவிடும். ஆகவே காரில் உள்ள ஒரு கண்ணாடி உடைந்தால் கூட அது சட்டத்திற்குள் வந்துவிடும். அப்படி வந்தால் ஆறு மாதங்களிலிருந்து ஐந்து ஆண்டுகள் வரை தண்டனை நமக்குக் கிடைத்திருக்கிறார் பாருங்கள் ஒரு லா மினிஸ்ட்டர். சட்டம், புதிதாக எது வந்தாலும், படிக்க வேண்டியது ஒரு அமென்ட்மென்ட்டைக் கொண்டுவருவது, பால்கிவாலா என்று நினைத்துக் கொண்டு ஒரு அமென்ட்மென்ட் கொண்டு வந்துவிடுவது, ஒரு சட்டம் போடவேண்டியது.

இருப்பவர்கள். இந்த மின்சாரம் அந்த விவசாய மக்களுக்கு சென்றிருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும். வருடாவருடம் மேலும் 15 சதவிகிதம் மின்சாரம் அதிக அளவிலே தேவைப்படுகிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்-தலைமை)

ஆனால், இன்றைய தினம் அரசாங்கம் மின் உற்பத்தியை அதிகரிக்காமல், ஏற்கனவே 1977 ஆம் ஆண்டிற்கு முன் ஆட்சியிலே இருந்தவர்கள் வைத்திருந்த நிலையில் மின்சக்தியை வைத்துக் கொண்டு, வெறும் கம்பியை மட்டும் இந்த அரசு நீட்டிக் கொண்டிருக்கிறது. எங்கள் பெருந் தலைவர் காமராஜ் அவர்கள் ஒரு முறை குறிப்பிட்டார்கள். இந்த அரசு புதியதாக மின் நிலையங்களை ஏற்படுத்தி உற்பத்தியைப் பெருக்காமல், வெறும் கம்பியை மட்டும் நீட்டிக் கொண்டிருக்கிறது; ஆகவே, அவர்களை சும்மா விடக்கூடாது; பொதுமக்கள் அவர்களை கம்பி நீட்டச் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, மின்சார உற்பத்தியைப் பெருக்க வேண்டும். அனல் மின் நிலையங்களை ஆரம்பிக்க வேண்டும். அதன்மூலம் தொழிற் பேட்டை தமிழ்நாட்டிலே அமைத்து, அதிகமான தொழிற் சாலைகளை அமைத்து வருகிறபோது, அந்தத் தொழிற்பேட்டைகளுக்கு அதிக அளவிலே மின்சாரத்தைக் கொடுக்கவேண்டும்.

ஒரு முறை மாமேதை லெனின் அவர்கள் குறிப்பிட்டார்கள்:

"Give Elecr city to Soviet Council. I will change the face of Russia."

இந்த மாதிரி ரஷ்யாவில் மின்சார உற்பத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து மின்சாரத்தைப் பெருக்கி, அந்த ரஷ்ய நாட்டிலே பெரும் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி, அங்குள்ள ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு கொடுத்து அவர்கள் வாழ்வில் ஒளிநிலை ஏற்பட்டதை காண்கிறோம். ஆகவே, மின்சாரத் துறை அமைச்சர் அவர்களை நான் வேண்டுவதெல்லாம்; நாம் மின்சார உற்பத்தியை அதிகமாகப் பெருக்க வேண்டும். அப்படி அதிகமாகப் பெருக்கி தொழிற்சாலைகளை ஏற்படுத்தி, தாழ்த்தப்பட்டவர்களுக்கும்...............

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்): அங்கத்தினர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அமைச்சர்கள் வரிசையிலே அங்கத்தினர்கள் அதிகமாக உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த மன்றத்திலே நானே 10 ஆண்டு காலம் இருந்திருக்கிறேன். அதைவிட நீண்ட நாட்களாக இருக்கும் அங்கத்தினர்களும் இருக்கிறார்கள். கூடுமான வரையில் அங்கத்தினர்கள் அமைச்சர்கள் இருக்கையில் அமருவதைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு முறை எஸ். ஜே. இராமசாமி அவர்கள் பாயிண்ட் அப் ஆர்டர் எழுப்பி, அப்படி உட்காரக் கூடாது என்று சொல்லி, உட்கார வைக்கப்படவில்லை. அங்கத்தினர்கள் அவ்வாறு உட்காருவதைத் தவிர்க்க வேண்டும். நீங்கள் 5 பேர்கள் அமைச்சர் [illegible] உட்கார்ந்திருப்பதால், அவர்கள் வேலை செய்ய



முடியவில்லை; பேச்சை கேட்க முடியவில்லை. எனவே, அருள் கூர்ந்து அங்கத்தினர்கள் தங்கள் இருக்கைக்குப் போக வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(நண்பகல் 12–00)

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழக அரசு அதிகமான மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்கு முன்வரவேண்டும். மேலும் புதிய புதிய தொழிற்பேட்டைகளுக்கு தட்டுப்பாடு இல்லாமல் மின்சாரம் கிடைக்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டும். காங்கிரஸ் கட்சி ஆட்சி காலத்திலே அம்பத்தூர் தொழிற்பேட்டைக்கு ஜென–ரேட்டர் மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்து, தொழிற் பேட்டையை நல்லமுறையில் வளர்த்தார்கள். ஆகவே, புதிய தொழிற்பேட்டைகளுக்கு ஜெனரேட்டர்கள் மூலம் தட்டுப்பாடின்றி மின்சாரம் கொடுத்து, உற்பத்தியைப் பெருக்குவதோடு மட்டுமல்லாமல், புதிய தொழிற்பேட்டைகளைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும்.

மேலும், இங்கே மதிப்பிற்குரிய உறுப்பினர் சிவசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள், மின்சார உற்பத்தி குறைவாக இருக்கிறது என்பது மட்டுமல்ல, மின்சார உற்பத்தியைச் செய்வதற்கு, பெருக்குவதற்கு இந்த அரசு முயற்சி செய்யவில்லை என்று சொன்னார்கள். மின்சாரக் கம்பிகள், சாமான்கள் திருட்டு ஆங்காங்கே பரவலாக இருக்கிறது. ஆகவே, மின்சார சம்பந்தப் பட்ட பொருள்கள் திருட்டை சரிவர கண்காணிக்கவில்லை. ஆகவே தான் மின்வாரியத்திற்கு உயர்ந்த அளவிலே நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. பலவிதமான உதாரணங்களைச் சொன்னார்கள். நாம் போதிய அளவுக்கு மின்சார உற்பத்தியைச் செய்யவில்லை. மின்சராம் தவறான முறையிலே பயன்படுத்தப் பட்டு வருகிறது. வேண்டியவர்களுக்கு அவர்களுக்கு திறமை இருந்தாலும், இல்லாவிட்டாலும் பதவி உயர்வு கொடுக்கப்படுகிறது. மின்வாரியத்தில் ஒழுங்காக அந்தக் குறைகள், தவறுகள் களையப்படவில்லை. இதனால் நிர்வாகத்தில் முறைகேடுகள் நடைபெறுகின்றன.

சென்ற ஆண்டில் ஏறக்குறைய 117 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள். நடப்பு அண்டில் அது 125 கோடியாக உயரும் என்று கணக்கிடுகிறார்கள். இதை மின்துறை அமைச்சர் அவர்கள் மனதிலே கொண்டு, மின்துறை நல்ல முறையிலே பணியாற்ற நல்ல பல குழுக்களைப் போட்டு, எந்த விதமான நஷ்டமும் நிர்வாகத்திற்கு இல்லாமல், சீரான முறையிலே மக்களுக்கு மின்சாரம் வழங்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்,

காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்திலே போடப்பட்ட டிரான்ஸ் பார்மர்கள், அவர்கள் காலத்தில் போட்ட அந்தக் கம்பிகள் தான் இன்றும் அதிகமாக இருக்கின்றன. புதிதாக டிரான்ஸ் பார்மர்கள் எதுவும் போடவில்லை; ஆகவே, ஆங்காங்கே பழைய டிரான்ஸ்பார்மர்கள் இயங்குவதால் போதிய சப்ளை கிடைக்கவில்லை; மின்சாரம் கிடைக்கவில்லை. மேலும் மூன்று பேஸ்

கரண்டு இல்லாமல், கிராமங்களுக்கு எந்தவிதமான உபயோகமும் இல்லாமல். இரண்டு பேஸ் கரண்டு வந்தால், அந்த மின்சார பம்பு செட்டுகள் பழுதுபட்டு, விவசாயிகள் மிகவும் வெகுவாக பாதிக்கப்படுகிறார்கள் என்பதை இந்த சமயத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்,

மேலும், எதற்கெடுத்தாலும் மத்திய அரசு மத்திய அரசு என்று மாநில அரசு கையைக் கட்டிக் கொண்டிருப்பது சரியல்ல. இந்த அறிக்கையிலே 31-வது பக்கத்திலே, ''பாரதப் பிரதமரும்'' அண்மையில் நடைப்பெற்ற ஐந்தாண்டுத் திட்ட விவாதத்தின்போது திரு. எஸ். பி. சவானும் மின்கட்டண வீத மாற்றத்தை உடனடியாகச் செயல்படுத்துவதின் அவசியத்தைக் குறிப்பிட்டுள்ளார் என்று ஏதோ மத்திய அரசுதான் மாநில அரசை உயர்த்த வேண்டுமென்று சொல்வது போலவும், மாநில அரசுக்கு உயர்த்தக்கூடிய அந்த நிலை இல்லாதது போலவும், மத்திய அரசின்மீது தவறான கருத்தை மாநில அரசு கொண்டு வந்திருக்கிறது. ஆகவே, இதுபோன்ற கருத்துக்களைக் கூறுவதன் மூலம், மத்திய அரசு செயல்படாதது போல் எடுத்துக் காட்டுவது மாநில அரசுக்கு நல்லதல்ல என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஏற்கனவே இதுபோன்ற சம்பவங்கள் பலமுறை நடந்து இருக்கின்றன. உதாரணத்திற்காக, ஒன்றை மட்டும் சொல்கிறேன். விவசாயிகளுடைய கடன் அத்தனையும் நாங்கள் தள்ளுபடி செய்வோம் என்று தேர்தல் காலத்திலும், மற்ற சமயங்களிலும் அமைச்சர்களும், முதலமைச்சர் அவர்களும் சொன்னார்கள். தேர்தல் சமயத்தில் அப்படிச் சொல்லிவிட்டு, முன்னால் மத்திய நிதியமைச்சர் அவர்கள் வந்த சமயத்தில், விவசாயிகளுக்கு கட்டண பாக்கிகளைத் தள்ளுபடி செய்வதில் சட்டத்தில் சிக்கல் இருக்கிறது, சட்டத்திலே இடமில்லை என்ற ஒரு தவறான கருத்தைக் குறிப்பிட்டார்கள். இதைப்பற்றி நிருபர்கள் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்துக் கேட்டபோது, மத்திய அரசின் உதவியைக் கேட்டிருக்கிறோம், அவர்கள் உதவினாலும், உதவாவிட்டாலும், விவசாயிகள் கட்டண பாக்கியை நாங்களே, தள்ளுபடி செய்வோம் என்று சொல்லிவிட்டு, இன்றைக்கு மத்திய அரசு தள்ள வேண்டாம் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, எங்களால் இயலாது என்று இன்றைக்கு தவறான ஒரு தகவலைத் தருகிறார்கள். இதைப் பத்திரிக்கையில் நாம் பார்க்கிறோம். எனவே மத்திய அரசின் மீது பழிபோடும் இப்படிப்பட்ட தவறான காரியத்தை இனிமேலாவது நிறுத்த வேண்டும் என்று மாநில அரசை நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும், நீங்கள் சொன்னதை நம்பி விவசாயிகள் யார் யாரோ ஐ. ஆர். டி. பி. லோன் எல்லாம் வாங்கி மோட்டார், பம்பு செட்டுகள் ஆகியவற்றைப் போட்டிருக்கிறார்கள். அத்தனை பேர்களுக்கும் உடனடியாக மின்சாரம் சப்ளை வழங்கப்படும் என்ற ஒரு தவறான எண்ணத்தைக் உருவாக்கியதனால், தமிழகத்திலுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களுடைய ஆடு மாடுகளை விற்று, நிலங்களையும் நகைகளையும்அடமானம் செய்து ஏறக்குறைய 4, 5 ஆண்டுகளுக்கு முன்பே ஒவ்வொரு





வீட்டிலும் மோட்டார்கள் வாங்கி வைத்திருக்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்களுக்கு இதுவரையில் ஏறக்குறைய 1972 லிருந்து 1982 ஆம் ஆண்டு வரையில், 10 ஆண்டு காலமாக புதிதாக மின்சார கனெக்ஷன் கொடுக்கவில்லை. இதனால், அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் கஷடப்படுகிறார்கள் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும்.

மேலும் மின்சார கனெக்ஷன் கொடுப்பதில் உள்ள டிஸ்கிரிமினேஷனைப் பற்றிக் குறிப்பிட விருமபுகிறேன். வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களுக்கு 1978 வரை சர்வீஸ் கனெக்ஷன் கொடுத்துவிட்டு, அதைப்போல் திருச்சி மாவட்டத்திலே பெரம்பலூர் பகுதிக்கு 1978 வரை மின்சார கனெக்ஷன் கொடுத்துவிட்டு. கரூர் பகுதிக்குமட்டும் 1974லிருந்து கொடுக்கப்படவில்லை. இந்த நிலை மாறவேண்டும். ஆகவே, விவசாயிகள் அத்தனைப் பேர்களுக்கும் மின்சார சப்ளை கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும், தமிழக விவசாயிகள் முழுக்க முழுக்க அந்த பம்புசெட்டுகளை நம்பியிருக்கிறார்கள். ஆகவே ஒரு எண்ணத்தை மனதிலே கொள்ளவேண்டும். எந்த விவசாயி மோட்டார் கனெக்ஷன் கேட்டாலும் எத்தனை விவசாயிகள் கேட்டாலும் அவர்களுக்குஅத்தனை பேர்களுக்கும் நாம் கொடுத்தால் தான அவர்கள் விருத்தி அடைவார்கள். அப்போது தான் நாம் சொல்லக்கூடிய வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு விவசாயிகளை முனனேற்றுவதற்கு வசதியாக இருக்கும். விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுப்பதோடு, புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற தொழிற்பேட்டைகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் மின்சாரம் வழங்குவதிலே முன்னுரிமை கொடுத்தால்தான் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கிறவர்கள் அதற்கு முன்வருவார்கள், அது மட்டுமல்ல, தொழிற்சாலைகளை நடத்துகிறவர்களுக்கு லாபம் இல்லையென்றாலும்கூட நட்டம் இல்லாமல் நடத்தக்கூடிய நிலைமை ஏற்படும், மேலும் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க முன்வர முடியும்.

ஜப்பான் போன்ற நாடுகளிலே டிரான்ஸ்பார்மர்களைப் பொறுத்தவரையில் நம் நாட்டிலே 250 கே. வி. வைத்து கொள்கிறோம்--110 கே. வி. வைத்து நல்ல முறையிலே நடத்துகிறார்கள். இங்கே நாம் 250 கே, வி. வைத்து சப்ளை செய்வதால் அதிகமாக வோல்டேஜ் ஆகிறது. ஆகவே ஜப்பான் போன்ற நாடுகளிலே உள்ளதைப்போல் 110 கே. வி. வைத்து நடத்தினால் இருக்கின்ற மின்சார சக்தியை வைத்தே நாம் மக்களுக்கு பலன் ஏற்படும்படி செய்ய முடியும்.

இப்போது புதிதாக ஒன்றை அறிமுகம் செய்திருக்கிறார்கள். தமிழகத்திலே ஏராளமான கோயில்கள் இருக்கின்றன. மசூதிகள், சர்ச்சுகள் இருக்கின்றன. இவைகளுக்கு எல்லாம் ஒரு வருடத்திற்கு முன்பாக மின்சாரம் வழங்குகிறபோது டொமஸ்டிக் பாப்பஸ் என்று சொல்லி வீட்டிற்கு எந்த அளவிற்கு மின்சாரக் கட்டணம் இருந்ததோ அதைப்போல்கோவில்களுக்கும்வசூலித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் ஆறு மாத காலமாக அவைகள்

எல்லாம் கமர்ஷியல்பர்ப்பஸ் என்று பாவித்து தொழிற்சாலைக்கு என்ன மின்சாரக் கட்டணம் வசூலிக்கிறார்களோ அதுமாதிரி. அரசு வசூலித்துக் கொண்டிருக்கிறது. ஆளுங்கட்சியிலே உள்ள வர்களுக்கு சாமியிடம் பக்தியோ அன்போ இல்லாமல் இருக்கலாம். ஆனால் தமிழகத்திலே உள்ள இந்து, முஸ்லீம், கிறித்துவ மக்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது போன்ற நிலைமையை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்திலே மத்திய அரசின் சார்பிலே திருமயத்திலே கூட்டுறவு மின்சாரக் கழகம் ஒன்று ஆரம்பிக்கப் பட இருக்கிறது. மத்திய அரசு அதற்காக 3 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறது. அதை இந்த அரசு எந்த அளவுக்குப் பயன் படுத்தப் போகிறது என்பதை அறிய ஆவலாக இருக்கிறோம். அதோடு இதுபோன்று மற்ற மாவட்டங்களிலேயும் மின்சார சப்ளை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்): இங்கே உறுப்பினர்கள் அமைச்சர்களுக்குப் பக்கத்திலே அமர்ந்து சீட்டு களைக் கொடுப்பதைப் பார்க்கிறேன். அமைச்சர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நீங்கள் உறுப் பினர்களை அப்படி என்கரேஜ் பண்ணக் கூடாது. அமைச்சர்களை அவர்களது அறையில் சந்தித்துக் கொடுப்பதுதான் முறை. அவசரமாக ஏதேனும் கொடுக்க வேண்டுமென்றாலும்கூட அமைச் சர்களுக்குப் பின்னாலே இருந்து கொடுப்பதுதான் முறை.

So, I will not allow any Hon. Member to sit in the Treasury Bench while I am in the Chair.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவரவர்களே, இங்கே நீங்கள் ஒரு ரூலிங் கொடுத்தீர்கள்; அதாவது அமைச்சர்களிடம் ஏதாவது கடிதம் கொடுக்க வேண்டுமென்றால் அவர்கள் பின்னாலே போய் நின்று கொடுக்க வேண்டுமென்று சொன்னீர் கள். பக்கத்திலே 'இருந்து கொடுக்கக் கூடாதா? பின்னால் இருந்துதான் கொடுக்க வேண்டுமா?

மாண்புமிகு மாற்று தலைவர் (திரு. துரை முருகன்): நான் அப்படிச் சொன்னது எதற்காக என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துக் கொள்ள வேண்டும். அவையில் ஒரு பிரச்சினை விவாதிக்கப் பெறுகையில், அவையில் உள்ளவர்களின் கவனம் வேறு திசையில் திரும்பக் கூடாது. அவையில் அமைதி இருக்க வேண்டும். அமைச்சருக்கு அருகில் ஒருவர் மாற்றி ஒருவர் உட்கார்ந்துக் கொள்கிறார்கள். அது அமைச்சர் களுக்கும் சங்கடம், சில சமயங்களில் அவர்கள் ஏதாவது இரகசிய பைல்களைப் பார்க்க வேண்டியிருக்கும். எனவேதான் இந்த மன்றத்திலே நீண்ட நாட்களாகப் பின்பற்றப்பட்டு வரும் மரபு, கூடுமான வரையில் அந்த இடத்திலே மற்ற உறுப்பினர்கள் போய் உட்காருவது இல்லை. இது சம்பந்தமாகப் பல எடுத்துக்காட்டுகள் இருக்கின்றன. 1962 ஆம் ஆண்டிலிருந்து



கூட இந்தச் சட்டமன்ற நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்து வருபவர்களுக்குத் தெரியும்—அதிலே ரொம்பவும் கண்டிப்பாக இருந்தவர் இந்தப் பேரவையை அலங்கரித்த செல்லபாண்டியன் அவர்கள். அதற்குப் பிறகு வந்த ஸ்பீக்கர் பெருமக்களும் அதைச் செய்திருக்கிறார்கள். உட்காரக்கூடாது என்பது விதிமுறை என்பது கூட அல்ல, நாம் விதிமுறைகள் மரபு, பழக்கப்போன்ற இவ்வளவையும் வைத்துத்தான் இந்த அவையை நடத்துகிறோம். எனவே, அமைச்சர் பெருமக்கள் என்று நம்மால் ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கின்ற அவர்களுடைய இடங்களுக்குப் போய் உறுப்பினர்கள் மாறி மாறி உட்கார்ந் திருப்பார்களேயானால் அது அவர்களுக்கும் நல்லதல்ல, அந்த பெஞ்சுக்குரிய மரியாதையும் அல்ல என்பதற்காகத்தான் சொல்கிறேனே தவிர. எல்லோரும் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருப்பவர்கள்தான், அதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆகவே, கொடுக்கின்றவர்கள் கூடுமானவரையில் பின்னாலே ஒரு நிமிஷம் இருந்து கொடுக்கலாம், இல்லை யென்றால் முன்னாலே உட்கார்ந்து கொடுக்கலாம். அதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு தலைவரவர்கள் இங்கே இருக்கின்ற சொல்லியகருத்தை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இங்கே சட்டமன்ற உறுப்பினர் களை அமைச்சர்கள் கட்டுப்படுத்தக் கூடாது என்பது மரபு, அதனால்தான் தலைவரவர்கள் தாங்கள் சொல்ல வேண்டுமென்று நாங்கள் விட்டுவிட்டோம். மாண்புமிகு தலைவரவர்கள் இந்த மன்றத்தினுடைய மரபு காக்கப்பட வேண்டும், நல்லமுறையிலே நடக்க வேண்டும், சப்தம் இருக்கக் கூடாது என்பதிலே அக்கறை காட்டுவதற்காக உண்மையிலேயே நான் மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: அரிசன மக்களுக்கு குடிசை களுக்கு மின்சாரம் இலவசமாக வழங்குகிறோம் என்று குறிப் பிட்டார்கள். மின்சார வாரியத்திலே 10 ஆயிரத்திற்கு மேற் பட்ட உத்தியோகஸ்தர்கள் வேலை செய்கிறார்கள். அவர்களிலே 8 சதவீதம் கூட அரிசனங்கள் இல்லையென்ற விவரம் எங்களி டத்திலே வந்திருக்கிறது. இரண்டாயிரம் ஜூனியர் அசிஸ்டெண்ட் வேலைக்கு நேர்முகத் தேர்வு எல்லாம் நடந்துங்கூட ஒரு ஆண்டுக் காலமாக வேலையில்லாமல் அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டி ருக்கிறார்கள்,

மேலும் அரிசனங்களுக்கு கிளாஸ்-4 என்ற பிரிவிலே இன்னும் 60, 70 பேர்களுக்கு வேலை கொடுக்க வேண்டிய நிலை பாக்கி யிருக்கிறது.

பினாமியாக, அந்த அதிகாரிகளை அப்படிச்செய்ய விடுவது என்பது கட்டுச் சோற்றில் பெருச்சாளியைக் கட்டி கொண்டு செல்லும் நிலைக்குக் கொண்டு செல்லும் என்று நான் எச்சரிக்கையாகச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, அந்த நிலைமைக்கும் நாம் போகக்கூடாது. 15,000 தொழிலாளர்கள் இன்றைக்குக் கான்ட்ராக்ட் வேலைகளுக்குத் தேவை என்றால், அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று, இன்றைக்கு கார்ட் பில்லிங் முறை மிகப் பெரிய சிக்கலான பிரச்னையாக இருக்கிறது. மின்வாரியம் முழுவதும் வேலைகள் நடைபெறாமல், தயக்கமும் குழப்பமும் ஏற்படுத்தும் ஒரு ஏற்பாடாக இருக்கிறது. இதே மாமன்றத்தில் இந்த கார்ட் பில்லிங் முறையைப் பற்றி முன்பு நான் எடுத்துச் சொன்ன நேரத்தில், மக்களுக்கென்று நல்ல ஒரு திட்டத்தை அரசாங்கம் கொண்டு வரப்போகிறது. இதனால் எல்லா கஷ்டங்களும் நீங்கப் போகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் அவருக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அன்றைக்கே நாங்கள் எடுத்துச் சொன்னோம், இது ஆட்குறைப்புத் திட்டமாக இருக்கும் என்று இன்றைக்கு என்ன நடந்திருக்கிறது? அதுதான் உண்மையாக நடந்திருக்கிறது.
காசாளர்கள், ஒருசில, ஆயிரம் பேர்கள் வேலையற்றவர்களாகி, அவர்களுக்குக் கொடுத்த, மேஜை, நாற்காலி, மற்றவைகள் எல்லாம் பிடுங்கப்பட்டு, அவர்கள் அதற்சாக, வழக்குமன்றத்திற்குப் போக வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

இப்பொழுது அசெசர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இந்தப் புதிய பதவிக்கு வருபவர்களை ஆர்கனைஸ் செய்யவேண்டும். மொத்தம் 5,400 அசெசர்கள் வேண்டும். ஆனால், 4.000 பேர்கள்தான் கிடைத்திருக்கிறார்கள். பியூனிலிருந்து, ஸ்வீப்பர் வேலை செய்யவர்களிலிருந்து யாராக இருந்தாலும் அந்த வேலைக்கு வரலாம். எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றிருந்தாலும் சரி, தேர்ச்சி பெறாமலிருந்தாலும் சரி, இந்த வேலைக்கு வந்தால், உடனே அவர்களுக்கு எல்லாவிதமான சலுகைகளும் கிடைக்கும் என்று ஆசை வார்த்தைகள் கொடுத்தாலும், 4 000 பேர்கள்தான் கிடைத்திருக்கிறார்கள். அதனால் என்ன நிலை ஏற்பட்டிருக்கிறது? இன்றைக்கு என்ன நிலை? இன்றைக்கு 2800 இணைப்புகளை ஒரு பிளாக் ஆக்கி அந்தந்த பிளாக்குக்கு அவர்கள் போக வேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். ஆனால், குறிப்பிட்ட காலத்தில் அந்த வேலை செய்ய முடியாமல் அவர்கள் பல கஷ்டங்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள், சோர்வு அடைகிறார்கள், டீ மாரலைஸ் ஆகிறார்கள். அவர்கள் விட்டுப்போன இடங்களிலே ஆபீஸிலே வேலை நடக்காத குழப்ப நிலை ஏற்பட்டிருக்கிறது. இது அதிகாரிகளுக்குத் தெரியும். அவர்களும் இன்றைக்குத் தவிக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் இன்றைக்கு கார்ட் பில்லிங் நடந்து கொண்டிருக்கிறது. ஒரு பிளாக் என்று சொல்லி, இரண்டு அசெசர்ஸ், 2800 கார்டுகளை, அந்தந்த வீடுகளுக்குச் சென்று, வீட்டுக்காரர் இருக்கும்போது அவரிடம் வாங்கி, எழுதிக்கொடுத்து, தானும்



ஒன்றில் எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். இப்படி 10 நாட்களுக்குள்ளே 1400 கார்டுகளை ஒரு ஆள் செய்ய வேண்டும். இப்படி இரண்டு பேர் மாற்றி, மாற்றி செய்ய வேண்டும். ஒருவர் வெளியே போனால், ஒருவர் ஆபீசிலே இருந்து கொடுத்த கார்டினுடைய பணத்தை வாங்கித் தயாராக இருக்கவேண்டும். இப்படி அவர்களுக்கு வேலை வருவதால், இதில் அவர்கள் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். 10 நாட்களுக்குள் இப்படிப்பட்ட வேலைகளை அவர்களால் செய்ய முடியாது. அதற்குள் பில்லை எழுதி, தயார்படுத்தி, பணமும் வாங்க முடியாத நிலையிருக்கிறது. 1400 கார்டுகள் என்று போட்டதில 700 தான் அவர்களால் செய்ய முடிகிறது. அந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆகவே, அப்படிப்பட்ட ஒரு நிலை உருவாகியிருப்பதற்கு இன்றைக்கு அவர்கள் மட்டும் காரணம் அல்ல. துறை முழுவதும் குழப்பமான சூழ்நிலை உருவாகியிருக்கிறது; இந்த நிலை சரியில்லை. உடனடியாக, அமைச்சர் அவர்களும், மின் வாரியத் தலைவர்களும், இதைப் பற்றி தொழிலாளர்களிடம் சீரியசாகக் கலந்து பேசி, நியாயமான முடிவிற்கு வந்தாக வேண்டும் இதனால், எந்த அளவுக்குக் கஷ்டம் ஏற்பட்டுள்ளது? வீட்டிலே ஆள் இல்லாத சமயத்திலே போனால் கார்டு கிடைக்காது. ஆள் இருக்கிற சமயமாகப் போக வேண்டும். முன்னே, கார்டை வாங்கிக் கொண்டபிறகு அதற்கானப் பணத்தைக் கட்டுவதற்கு வேறுபல வசதிகள் இருந்தன. கார்டு வந்தபிறகு, மின்வாரியத்தின் எந்த ஆபீசிலும் பணத்தைக் கட்டலாம். அல்லது பாங்கிலே கட்டலாம். ஆனால், இப்பொழுது அப்படி அல்ல, அந்த கார்டில் போடப்பட்டிருக்கிற பிளாக்கிலேதான் பணம் கட்ட வேண்டும்.

(முற்பகல் 12.20)

ஆகவே பணம் கட்டுகின்றவர்களுக்குக் கஷ்டம். கிராமத்திலே இந்த பிளாக் ரொம்ப விரிவான இடத்திலே இருக்கும், பெரிய இடத்திலே ரொம்ப விஸ்தீரணமான இடத்திலே முன்பு இந்த கேசுவல் லேபரர்ஸ் இருந்தபோது அவர்களே கிராமங்களுக்குச் சென்று விவசாயிகளை நேரில் சந்தித்து அந்தப் பணத்தை வாங்கும் வழி இருந்தது. இப்போது அவர்கள் மைல் கணக்கில் நடந்து வந்து அந்தப் பணத்தை கட்டவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. அந்த கன்சூமர்கள் இதனால் பெரிய நன்மை அடைவார்கள் என்று நினைத்தது தப்பாகப் போய், அவர்களும் இன்றைக்குக் கஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள், இப்படிப்பட்ட நிலை அமலுக்கு வருவதற்கு முன்னரே நல்ல முறையிலே பரிசீலனை செய்திருக்கவேண்டும். அங்கீகரிக்கப்பட்ட இரண்டு சங்கங்கள்——அவர்களை வைத்துக் கொண்டு இதைச் செய்யலாம் என்று ஒரு முடிவுக்கு வந்ததே ஒரு தவறு என்பதை தாழ்மையோடு அமைச்சர் அவர்களுக்குத் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதைப் பற்றி திட்டத்தை தயாரித்த ஆரம்ப காலத்தில் அமைச்சரை, அதிகாரிகளை சி.ஐ.டி.யு சங்கத்தின் சார்பில் நானும் மற்ற பிரதிநிதிகளும் அங்கே சந்தித்து எங்கள் கஷ்டங்களை எல்லாம் எடுத்துச் சொன்னோம். அதை எல்லாம் மேலும் விரிவாக விவாதித்து முடிவுக்கு வரவேண்டும் என்று சொன்னோம். அன்றைக்கு நாங்கள் போய் பேசியபின் எல்லா சங்கங்

(பிற்பகல் 12.10)

நாம் கிராமங்களில் உள்ள அரிசனத் தெருக்களுக்குச் சென்று பார்த்தால் போதிய அளவு மின்சாரக் கம்பங்கள் இல்லை. மின்சார லைட் எரிவதில்லை, புதிதாகப் போடுவது இல்லை என்பதை அறிய முடியும். இந்த நிலை தமிழகம் முழுவதும் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இதை மனத்திற்கொண்டு அரிசனத் தெருக்கள் அத்தனைக்கும் மின்சாரம் வழங்க வேண்டும், இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். நன்றி

**திரு. கு. ரமணி:** மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தில் திருப்திகரமான அளவிற்கு விவாதிப்பதற்கு நமக்கு அவகாசம் கிடைக்காத குறை இருக்கிறது என்பதை இந்தத் தடவையும் நான் எடுத்துக் காட்ட வேண்டியுள்ளது. போன தடவையும் இதேமாதிரி விவாதத்தின் பொழுது நான் அதைக் கூறியுள்ளேன். ஒரு பெரிய மின் வாரியத்தினுடைய இந்த பட்ஜெட்டைப் பற்றி விவாதிப்பதற்கு நியாயமான அளவிற்குச் சமயம் ஒதுக்க வேண்டியது அவசியமாகும். அதை பிற்காலத்திலேயாவது கவனிப்பார்கள் என்று நினைக்கிறேன்.

மின் வாரியத்தினுடைய நிலைமைகளைப் பற்றியும், மின் உற்பத்தி, விநியோகம் ஆகியவைகளைப் பற்றியெல்லாம் பல விஷயங்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது. நான் அவற்றை யெல்லாம் கொஞ்சம் பின்னால் வைத்துக் கொள்கிறேன். எனக்கு எந்த அளவிற்கு நேரம் இருக்கிறது என்று தெரியவில்லை. எனவே, தொழிலாளர்களைப் பற்றிய ஒரு விஷயத்தை முதலில் எடுத்துக் கொண்டு மற்றவற்றிற்குப் பிறகு வருகிறேன்.

மொத்தமாக இந்த மின்வாரியத்திலே சுமார் ஒரு இலட்சம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதிலே கொஞ்சம் குறைவாகத்தான் இருக்கும். இன்றைக்கு இந்த அளவிற்குத் தொழிலாளர்கள் இருந்தும்கூட, 12,000 பேர் ஆள் குறைவாக உள்ளது, அதனால் பல வேலைகள் முறையாக நடக்க முடியவில்லை என்பதை இந்த மன்றத்திலே பேசிய அநேக மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

63,000 கிராமங்களுக்கு மின்னிணைப்புக் கொடுத்திருக்கிறோம்; 99 பர்சன்ட்க்கு மேலே தமிழகம் முழுவதும் மின்மயம் ஆக்கியிருக்கிறோம்; 4 இலட்சம் குடிசைகளுக்கு விளக்கு கொடுத்திருக்கிறோம்; 9 3 இலட்சம் பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் கொடுக்கிறோம். இப்படி இவ்வளவு பரவலாக தமிழகம் முழுவதும் மின்சாரம் கொடுக்கும்பொழுது இதை நிறைவேற்றி வைக்கும்படியான அதனுடைய பொறுப்பாளிகளாக உள்ளவர்கள் அதிகாரிகள் மட்டுமல்ல, இந்த ஒரு இலட்சத்திற்குப் பக்கமான தொழிலாளர்களும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அவர்களுடைய வேலை எந்த அளவிற்கு அதிகப்பட்டுப் போயிருக்கிறது என்பதைக் கணக்கில் எடுக்காமல் எப்படி நல்ல நிலை ஏற்படும்? அதற்குப் பதிலாக, தொழிலாளர்களைக் குறைப்பதற்கும், வேலைப் பளுவைச் செய்வதற்குமான திட்டம்



ஒரு பக்கமும், இதை விஸ்தரித்து நாடு முழுவதும் ஒளிமயமாக்க வேண்டுமென்ற திட்டம் மறுபக்கமும் இருக்குமேயானால் இந்த முரண்பாட்டிற்கு இறுதி கிடையாது. இப்படிப்பட்ட நிலைமை வரக் கூடாது. ஆகவே, அந்தப் பற்றாக்குறையான 12,000 தொழிலாளர்கள் வரையில் இன்றைக்கு இந்த மின்சார வாரியத்திலே வேலைக்கு அமர்த்தப்பட வேண்டியுள்ளது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இதற்கு மேலே காண்ட்ராக்ட் முறை இன்றைக்கு நடக்கிறது. சுமார் 15,000 தொழிலாளர்கள் பினாமி காண்ட்ராக்ட் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். உண்மையிலேயே காண்ட்ராக்ட் தகுதி பெற்றிருக்கக்கூடிய காண்ட்ராக்டர்களுக்கு காண்ட்ராக்ட் கொடுத்துச் செய்யக் கூடிய முறை கட்டுமானப் பணிகளிலே யெல்லாம் நடக்கின்றன.

இந்த விநியோகப் பகுதிகளில் முழுவதிலும், அதே மாதிரி, கட்டுமானப் பணிகள் நடக்கும் இடங்களிலும், தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எப்படியிருக்கிறார்கள்? அங்கே இருக்கும்படியான அதிகாரிகள், ஒருவிதமான எழுதப்படாத, ரெக்கார்டு இல்லாத காண்ட்ராக்ட்களாக்கிக் கொண்டு, அத்தக் கூலிகள் கொடுத்து ஆட்களை வேலையிலே வைத்திருக்கிறார்கள். அந்த அதிகாரிகள், ஏதோ ஒரு தொகையைகையிலே வைத்துக் கொள்ளலாம், அதை வைத்துக்கொண்டு எந்த வேலை வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளலாம், அதற்குக் கணக்குக் கிடையாது எந்தக் கட்டுப்பாடும் கிடையாது, தணிக்கையும் கிடையாது, கேள்வியும் கிடையாது என்ற நிலையிருக்கிறது. ஆனால், அந்தத் தொழிலாளிகளைப் பொறுத்தவரையில் கஷ்டத்திற்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். அதுவே, இன்றைக்கு அங்கு ஒரு முறையாக்கப்பட்டிருக்கிறது. இந்த மின் வாரியத்திலே 32,000-க்கு மேற்பட்ட டி.சி.எல். தொழிலாளர்கள் இருந்தனர். தொழிற்சங்கங்கள் முழுவதும் பெரிய போராட்டங்களை, கிளர்ச்சிகளை நடத்தி அரசாங்கம் கீழே இறங்கிவந்து ஒப்பந்தம் செய்து, அத்தனை பேரையும் நாம் நிரந்தரமாக்கியிருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு நல்ல காரியத்தைச் செய்ததற்கு மாறாக, மறுபடியும் இன்றைக்கு இப்படிப்பட்ட காண்டிராக்ட் தொழிலாளிகளை உருவாக்கிவிடுவது எக்காரணத்தினாலும் மின்வாரியத்திற்கு நல்லதல்ல. இது ஊழலுக்குத் கொண்டு போய்விடும் என்று எச்சரிக்கிறேன். இந்த அத்துக்கூலிகள் செய்யும் வேலைகள் என்னவென்றால், தொழிலாளிகள் செய்யக்கூடிய எல்லா வேலைகளையும் செய்கிறார்கள். லைன் விஸ்தரிப்பு வேலையில் ஈடுபடுகிறார்கள். சர்வீஸ் இணைப்பு கொடுக்கிறார்கள். கம்பங்கள் கொண்டு போய் வைக்கிறார்கள், டிரான்ஸ்பார்மர்களைப் பல இடங்களிலிருந்து கொண்டு போய் வைக்கிறார்கள். கட்டுமானப் பணிகளில் ஈடுபடுகிறார்கள். விநியோகத்தில் ஈடுபடுகிறார்கள். ஆக, இத்தனை வேலைகளிலும் அந்தத் தொழிலாளர்கள் ஈடுபடுகிறார்கள். அந்தத் தொழிலாளிகளை ஏன் நிரந்தரமாக்கக் கூடாது என்பதை அமைச்சர் அவர்கள் சீரியஸாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

களையும் கலந்து பேசி இதைப் பற்றி தகுந்த ஏற்பாடுகளைச் செய்யலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதோடு சரி. பிறகு அதைப் பற்றி பேச்சு இல்லை. அடுத்து என்ன நடக்கிறது என்றால், இந்தக் கார்டு பில்லிங் சிஸ்டத்தை அமுலாக்குவதற்கான ஒப்பந்தம் நகல் தயாரித்து அந்த நகலில் கையெழுத்துப் போடுகிறீர்களா என்று சங்கத்தைக் கேட்கும் நிலை ஏற்பட்டது.

அவர்கள் அங்கீகரிக்கப்பட்ட சங்கம், என்னவேண்டுமானாலும் அவர்கள் செய்யலாம். அதைப்பற்றி குறை சொல்லவில்லை, (மணி அடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்): இன்னும் 9 பேர்கள் பேசி, அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். ஒரு அங்கத்தினர்க்குப் பத்து நிமிடங்கள் கொடுக்கவேண்டும் என்று பேரவைத் தலைவர் பணித்திருக்கிறார். அந்த நேரத்தை ஒதுக்குவது என்னுடைய வேலை. தயவு செய்து முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. கு. ரமணி: தொழிலாளர்கள் மத்தியிலே இருக்கும்படியான நிலைமையை புரிந்து கொண்டு, அதற்குத் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இங்கே அச்சடித்து கொடுக்கப்பட்டுள்ள அமைச்சருடைய பிரசங்கத்திலே வாரியத்திற்கும் அதன் தொழிலாளர்களுக்கும் இடையே உள்ள உறவு இணக்கமாகவே இருந்து வருகிறது. தொழிலாளர்கள் பிரச்சினைகள் எல்லாம் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களோடும். மற்ற சங்கங்களோடும் விவாதிக்கப்பட்டு இணக்கமாகவே தீர்க்கப்பட்டு வருகின்றன. என்று சொல்லி இருக்கிறார்கள். இது நல்லது. அதை நான் வரவேற்கிறேன், ஆனால் அமைச்சர் அவர்களுக்கு. இந்த கார்டு பில்லிங் சிஸ்டத்தை நாங்கள் ஒத்துக் கொள்ளவில்லை என்று சொல்லிய நேரத்திலே அமைச்சர் அவர்களுக்கு கோபமே ஏற்பட்டு ஒரு நாள் பேசியிருக்கிறார்கள். அதை அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். மின்சார வாரியத்தில் பல சங்கங்கள் உள்ளன. அவர்கள் அரசுக்கு விஸ்வாசத்துடன் நடப்பதை விட அவர்கள்சார்ந்திருக்கின்ற அரசியல் கட்சிகளுக்கு விஸ்வாசமாக நடக்கின்றனர். அவர்கள் பொது மக்களை அலட்சியமாக நடத்துகிறார்கள். அதனால் அரசு அந்த சங்கத்திற்கும் அங்கீகாரம் அளிப்பதாக இல்லை. இப்படிப்பட்ட சங்கங்களோடு எந்தவிதமான தொடர்பும் அரசு வைத்துக் கொள்ளப்போவதில்லை என்று 15-1-1981 அன்று அமைச்சர் பேசியிருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட நிலையை கையாளக்கூடாது என்று அவர்களுக்குச் சொல்லி, அனைத்துச் சங்கங்களோடும் அமைச்சர் அவர்கள் கலந்து பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிருஷ்ணசாமி நாயுடு கமிஷன் தந்திருக்கக் கூடிய தீர்ப்பை அமலாக்குவதில் எதிராக பாரபட்சம் காட்டுகின்ற வகையில் ஆளும்கட்சி சங்கத்தைச் சேர்ந்த 88 பேர்களுக்கு முறைகேடாக புரமோஷன் கொடுக்கப்பட்டு உள்ளது. மாறாக 120 பேர் கொண்ட பட்டியலை சி.ஐ.டி.யு. கொடுத்தது. அதை கவனிக்கவில்லை. பென்சன் திட்டம் என்று 1973 ஆம் வருடத்திலே



இருந்து வசூலிக்கப்பட்டு, இன்று வரையிலும் யாருக்கும் பென்சன் கொடுத்ததாகத் தெரியவில்லை. பி. எப். கணக்கு 4 ஆண்டு காலமாக காட்டப்படவில்லை. அதே மாதிரி இன்று சில அன்டர் டேக்கிங்களை இன்டிக்ரேட் பண்ணியும் இன்று வரையிலும் கணக்கு இல்லை. அந்த ஸ்டாப் முழுவதும் மின்வாரியத்தில் இணைக்கப்படவில்லை.

எல்லாவற்றிக்கும் மேலாக வேறொரு ஊழல் பிரச்சினை எனக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அது,

Lower Mettur Hydro-electric Project. Barrage No.1 Name of works ports Tail Reach I. Earth work excavation bank of the river On June 11, 1981 from Mettur dam. carry very water allowed down stream So earthwork could not be excavated. Superintending Engineer, Thiru R. S. Venkataraman passed bill to one contractor N. Ramaswami, for Rs. 69,000 on 18 11 82 labour muster roll record not maintained.

இது கண்டுபிடிக்கிறபோது பார்த்துக் கொள்ளலாம்.
Lorry and log book not maintained.

இந்த விஷயத்தைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். உண்மையிலேயே எனக்கு சொல்ல வேண்டிய விஷயங்கள் இருந்தும். சொல்ல முடியாத நிலையை உருவாக்கி இருப்பது கொஞ்சம் கூட சரியில்லை என்பதைச் சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவை மாற்றுத்தலைவர் அவர்களே, 1980—81-ஆம் ஆண்டின் மின்சார துணை நிதிநிலை அறிக்கை மீதும், 1981—82-ஆம் ஆண்டு மின்சார நிதிநிலை அறிக்கையின் மீதும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். சென்ற ஆளுநர் உரையின் போது தமிழ்நாட்டில் மின்சாரம் உற்பத்தி செய்யும் அதிகாரத்தை தனியாருக்குக் கொடுக்கப்படும் என்று அந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டு இருந்தது. ஆனால் இந்த நிதி நிலை அறிக்கையிலே அப்படி ஒரு அறிவிப்பு இருப்பதாகத் தெரியவில்லை இந்த நிலை தமிழ்நாட்டில் ஏற்பட்டால், அது தொழில் வளர்ச்சிக்கும் ஏனைய விவசாய வளர்ச்சிக்கும் பெரிதும் பாதகத்தை ஏற்படுத்தும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

1981—ஆம் ஆண்டில் நஷ்டம் 118 கோடி என்றும், 1982—ஆம் ஆண்டில் நஷ்டம் 125 கோடி என்றும் இந்த அறிக்கையில் சொல்லப்பட்டு இருக்கிறது. அதற்குக் காரணம் ஏனைய பகுதிகளில் இருந்தும், ஏனைய மாநிலங்களிலிருந்தும் மின்சாரம் பெறுவதும், நிலக்கரி, எண்ணை போன்ற சாமான்களை வாங்குவதும் வாங்கிய பொருள்களை டிரெயினில் கொண்டு வருவதற்குமான கட்டணம் உயர்ந்து விட்டதால் இந்த நஷ்டம் ஏற்பட்டது. அதன் காரணமாக அதிகப்படியான மின் கட்டணத்தை உயர்த்த

இடத்தில் இருக்கிறேன் இந்த இடத்தில் இருக்கும்போது நான் எந்தப்பக்கமும் சாயாமல், இம்மியளவும் சாயாமல், நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும் அப்படியே நடந்துகொள்வேன். நீங்கள் ஒரு கட்சியின் சார்பில் பேசுகிறீர்கள் அதற்கு ஏதாவது மறுப்புத் தெரிவிக்க வேண்டுமென்றால் சம்பந்தப்பட்ட கட்சியினர் தெரிவிப்பார்கள். நான் இந்த இடத்தில் இருக்கும் வரையில் உறுப்பினர்கள் எதாவது குற்றச்சாட்டு சொல்வதாக இருந்தால் இங்கே இருக்கின்ற என்னைப் பார்த்து, 'உங்களுக்குத் தெரியும்' என்று சொல்லக் கூடாது. இந்த இடத்தில் துரைமுருகன் என்பவர் ஒரு கட்சியின் சார்பில் இல்லை; நடுநாயகமாக விளங்குகின்ற நீதிபதியாக, அவைத் தலைவர் பொறுப்பிலே இருக்கிறார் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு கோவைத்தம்பி: முந்தைய அரசு இடுக்கி மின் திட்டத்திலே பங்கு கேட்டிருந்தால், இந்த நிலைமை வந்திருக்காது என்பதை தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆகவே முந்தைய அரசு செய்ய மறந்ததை இன்றைய மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் செய்யத் தவறுவாரேயானால் எதிர் காலத்திலே நாம் பெறவேண்டிய தொழில் வளம் கெட்டுவிடும் என்ற காரணத்திற்காக அவர் கொண்டு வந்திருக்கின்ற நல்ல திட்டங்களைப் பாராட்டி, அவர் கொண்டு வந்த நிதிநிலை அறிக்கையினைப் பாராட்டி ஒரு சில கருத்துக்களை இந்த மாமன்றத்திலே வைக்க நான் ஆசைப்படுகின்றேன்.

தலைவரவர்களே, கேரள அரசோடு நாம் ஒரு ஒப்பந்தத்தை கடந்த காலத்திலே மின்சாரம் பெறுவதற்காக யூனிட்டுக்கு 10 பைசா என்ற அடிப்படையிலே ஆண்டு ஒன்றுக்கு, ஒரு பைசா கூட்டி 10 ஆண்டுகளுக்கு ஒப்பந்தத்தை நாம் நிலை நிறுத்தியிருந்தால் இவ்வளவு விலை கொடுத்து கேரள அரசிடம் மின்சாரம் வாங்க வேண்டிய சூழ்நிலை தமிழ்நாட்டிற்கு ஏற்பட்டிருக்காது என்பதைத் தலைவராகிய தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இடுக்கி மின்திட்டத்தை ஆரம்பிக்கின்றபோது கேரள அரசோ அல்லது தமிழக அரசோ இடுக்கி மின்திட்டத்திலே பங்கு பெறுகின்றதா என்ற கேள்வியை எழுப்பிய நேரத்தில் அன்றைய நமது அரசு இந்தத் திட்டத்திலே 25 விழுக்காடாவது நாம் பங்கேற்க கடமைப் பட்டிருக்கிறோம் என்று சொல்லி முன்வந்திருக்குமேயானால் இன்றையச் சூழ்நிலை ஏற்பட்டிருக்காது. மின்சாரத் தட்டுப்பாடு அடைய வேண்டிய தேவை இல்லை என்பதையும் தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நகரப்புறங்களிலே உள்ள ஆலைகளின் சக்கரங்கள் சுழல வேண்டும் என்று சொன்னாலும் கிராமப் புறங்களில் விவசாயம் நன்கு நடைபெற வேண்டும் என்று சொன்னாலும், மின் திட்டங்கள் மிகவும் தேவை என்பதை முந்தைய அரசுகள் கவனத்தில் கொண்டு செயலாற்றவில்லை என்பதையும் திட்டமிட்டு ஆய்ந்து நாட்டு நடப்புக்கு ஏற்றதான நல்ல திட்டங்களை உருவாக்கிக் கொள்ளவில்லை என்பதையும், உருவாக்கி வைக்கவில்லை என்



பதையும் இந்த நேரத்திலே தங்களுடைய மேலான கவனத்திற்கு நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய அரசில் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் பைக்காரா மின் திட்டம் என்றும் கீழ்பவானி மின்திட்டம் என்றும், வைகை மின் திட்டம் என்றும் பல திட்டங்களை உருவாக்கி இருக்கிறார்கள்........

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே........

Mr. CHAIRMAN (THIRU DURAI MURUGAN):- I want to know whether the Hon. Member wants to raise any Point of order, or point of clarification.

THIRU RAHMAN KHAN:- Point of Information.

Mr. CHAIRMAN (THIRU DURAI MURUGAN): Is the Hon. Member Thiru Kovai Thambi going to yield.

THIRU KOVAI THAMBI: I am not yielding.

Mr. CHAIRMAN (THIRU DURAI MURUGAN:- The Hon. Member Thiru Rahmau Khan may resume his seat, The Hon. Member. Thiru Kovaithambi may carry on.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டங்களை எல்லாம் உருவாக்கி எதிர் காலத்திலே மின் பற்றாக்குறை இல்லாமல் செய்யக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கி இருப்பது பாராட்டுவதற்குரியது.

அன்றைக்கு 10 விழுக்காடு மின் உற்பத்தி வளர்ச்சி பெறுவதற்கு அரசும், மின்சாரத்துறை அமைச்சர் அவர்களும் புரிந்திருக்கின்ற சாதனையைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமாத்திரமல்ல வடசென்னையில் அனல் மின் திட்டம், மேட்டூர் அனல் மின் திட்டம், தூத்துக்குடி அனல் மின் திட்டம், இப்படிப்பல அருமையான திட்டங்களை மத்திய அரசுக்குச் சமர்ப்பித்தது. தலைவரவர்களே, மின்சக்தி போதவில்லை என்று குற்றச்சாட்டுகளை மட்டும் கூற வருகின்ற ஒரு நிலையிலே அவற்றிற்கு பரிகாரம் தேடுவதற்காக 113 கோடி ரூபாய் அளவிலே கேப்பிட்டல் போட்டு திட்டங்களை உருவாக்கி இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது காங்கிரஸ் காலத்திலே போடப்பட்ட மின்சாரக் கம்பிகள்தான் இப்போது இருக்கின்றன என்ற ஒரு நிலையை எடுத்துச் சொன்னார்கள். உலகமும் நாடும் எவ்வளவு மாறி வருகின்றது என்பதையும் இன்றையதினம் எவ்வளவு சீர்கேடு இல்லாமல் இந்தியா சென்று வருகின்றது என்பதையும் பெருமதிப்பிற்குரிய இந்தியப் பேரரசை ஆண்டு கொண்டிருக்கின்ற வணக்கத்திற்குரிய திருமதி இந்திரா காந்தி அவர்கள் உலகம்

வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு இருப்பதாகக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. மேலும் மின்சார ஒழுகல் என்பது சென்ற ஆண்டு இருந்ததை விட இந்த ஆண்டில் குறைக்கப்பட்டு இருக்கிறது என்றாலும், அதை மேலும் சிக்கனப்படுத்த, அதைத் தவிர்க்க தீவிர நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சார வாரியத்திற்குக் கிடைக்கவேண்டிய பாக்கிகள் என்று பார்க்கிறபோது தொழில் துறையில் இருந்து ஏறக்குறைய 14 கோடியே 67 லட்சம் ரூபாய் பாக்கி இருக்கிறது. அதிலே மால்கோ நிறுவனம் மட்டும் 9 கோடியே 43 லட்சம் ரூபாய் பாக்கி வைத்திருக்கிறது என்றும், அந்த மால்கோ நிறுவனம் உச்சநீதிமன்றத்திற்கு சென்று இருக்கிற காரணத்தால் வசூலிக்க முடியாத நிலைமை இருக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக இந்த 9 கோடியே 43 லட்சம் ரூபாய் நிலுவையில் நிற்பதை அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்து, அதை வசூலிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அதே சமயத்தில் விவசாயிகளிடமிருந்து ஏறக்குறைய 37 கோடியே 59 லட்சம் ரூபாய் பாக்கி இருக்கிறது என்றும், 1981 டிசம்பர் முடிய பாக்கி வசூலித்தது போக 24 கோடியே 45 லட்சம் ரூபாய் பாக்கி உள்ளதாக இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. விவசாயிகளைப் பொறுத்தவரையில் கடந்த 6-7 ஆண்டுகளாக சிறுக சிறுக நின்று விட்ட பாக்கியின் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. ஏற்கனவே அது சம்பந்தப்பட்ட வரையில் அந்த விவசாயக் குழு பேசி எடுத்த முடிவின் அடிப்படையில் நடப்பு மாதத்திய பில்லையும், ஏற்கனவே நிற்கக் கூடிய ஒரு மாதத்து பில்லையும் ஆக, இரண்டு மாத பில் கட்டணத்தையும் சம்பந்தப்பட்ட விவசாயிகள் கட்டவேண்டும் என்று குறிப்பிட்டு இருக்கிறோம். அந்த மாதிரியான முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருப்பதால் தற்போது முறையாக வசூலிக்கும் சூழ்நிலை இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12.30)

ஏற்கனவே ஏற்படுகிற நஷ்டத்தை முழுமையாக கணக்கிட்டு, திட்டங்களைப் போடுகிறவர்கள் சரியாக செயல்பட்டிருக்க வேண்டும். உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் கீழ் மேட்டூர் மின் சாரத் திட்டத்தை எடுத்துக்கொண்டால்கூட 83,11,00,000 ரூபாய்க்கு திட்டத்தை தீட்டியிருக்கிறார்கள். அது ஏறத்தாழ 1978-ல் வேலை செய்ய தொடங்கியிருக்கிறது.

மேட்டூர் அணைக்கு நீர் வரக்கூடிய காவேரி ஆற்றில் மழைக் காலம் அல்லாத மற்றக் காலங்களில் வருகிற தண்ணீரின் அளவு 35,000 கன அடி. ஆனால் மழைக்காலங்களில் வருகிற தண்ணீரின் அளவு 60,000 கன அடிக்குமேல் 1,75,000 கன அடி வரையில் தண்ணீர் வருகிறது. திட்டம் போட்டுச் செயல்படுத்தும் பொறியாளர்கள் மழைக்காலங்களில் வருகின்ற தண்ணீரை கணக்கிட்டு,



அதற்கு தகுந்தபடி மதிப்பீடு செய்து திட்டத்தைச் செயல்படுத்தியிருந்தால் இப்போது ஏற்படுகின்ற இழப்பைக் குறைக்கலாம். ஆனால் அவர்கள் மழைக்காலம் அல்லாத மற்றக் காலங்களில் வருகின்ற தண்ணீரை கணக்கிட்டு, தடுப்புச் சுவர் கட்டியதால் மழைக்காலத்தில் அந்த தடுப்புச் சுவர் அடித்துச்செல்லப்படுகிறது. அதன் காரணமாக ஒரு பகுதியிலே இப்போது தண்ணீர் விரையம் எற்படுகிறது.

அதைப்போல இன்னொன்று, பெருந்துறையில் இருக்க வேண்டிய கண்காணிப்பாளர் அலுவலகம் ஈரோட்டில் இருக்கிறது. அந்த அலுவலகம் ஈரோட்டிலே இருப்பதற்கு எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. இப்படி தமிழ்நாடு பூராவும் அலுவலகங்கள் இருக்க வேண்டிய இடங்களில் இல்லாமல் சம்பந்தம் இல்லாமல் வெகு தூரத்தில் இருக்கின்றன. ஒருவேளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அதிகமாக டி.எ. கிடைக்குமோ என்னவோ தெரியவில்லை; சம்பந்தம் இல்லாத இடங்களில் அலுவலகங்களை கட்டியிருக்கிறார்கள். அதனால் மின்சார வாரியத்தின் பணம் வீண் விரையமாகிறது. இதை எல்லாம் மனதிலே வைத்து அரசு மின்சாரக் கட்டணத்தை அதிகப்படுத்துவதாக கூறி இருக்கிறது. கட்டணத்தை அதிகமாக்கும்போது விவசாயத்திற்கு நிச்சயமாக அதிகப்படுத்தக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் எப்படி எண்ணெய் விலை, நிலக்கரி விலை, வாகனங்கள் போக்குவரதுச் செலவு அதிகமாக ஏறியிருக்கிறதோ அதைப் போல விவசாய உற்பத்திக்காக விவசாயி தன்னுடைய நிலத்திற்கு இடுபொருளாக இடுகின்ற யூரியா போன்ற இரசாயன உரங்களின் விலையும் ஏறி, அதனால் உற்பத்திச் செலவுக்கும் விற்பனைக்கும் கட்டுப்படி ஆகாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. இதையும் கவனத்தில் எடுத்து கொண்டு அதிகமாக இலாபம் வரக்கூடிய தொழிற்சாலைகளுக்கு வேண்டுமானால் பரிசீலனை செய்து ஓரளவுக்கு ஏற்றிக்கொள்ளலாமே தவிர விவசாயக் காரியங்களுக்கு நிச்சயமாக ஏற்றக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு அலுவலகங்களிலே பெரிய அதிகாரிகள் வீண் செலவு செய்கின்ற மின்சாரத்தையும் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்தற்காக நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இன்று மின்சாரத் துறையில் ஏற்பட்டிருக்கிற பற்றாக்குறைக்கும் சங்கடங்களுக்கும் முந்தைய அரசுதான் காரணம் என்பதை தலைவரவர்களே, தாங்கள் நன்கு அறிவீர்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு துரைமுருகன்) : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன பேச வேண்டுமோ அதைப் பேசலாம். ஆனால் தன் பேச்சின் ஊடே ''நீங்கள் அறிவீர்கள்'' என்று என்னைப் பார்த்துச் சொல்லக்கூடாது. நான் ஒரு கட்சியிலே உறுப்பினராக இருந்தாலும் ஜனநாயக முறைப்படி எதிர்கட்சிகளைச் சேர்ந்தவர்களும் மாற்றுத் தலைவர் பட்டியலில் இடம் பெறலாம என்ற அந்த மரபுப்படி நான் இப்போது தலைவர்

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின் வாரியத்தின் 1981–82-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது அகில இந்திய பார்வேர்ட் ப்ளாக் கட்சி சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல நான் விழைகிறேன். அதற்கு முன்னால் இன்று தலைவராக இப்போது இருக்கிறவரிடம் நல்லதொரு மாற்றத்தை இந்தச்சபை கண்டது. ஆனால் தலைவர் பொறுப்பில் இருப்பவர்களுக்குரிய முறையில் அனிச்சச் செயலாக மணியை அடிக்க வேண்டாம் என்று தலைவர் அவர்களை நான் கேட்டுக்கொண்டு பேச விழைகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்). மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை உணராதவர் அல்ல. ஒவ்வொரு உறுப்பினருக்கும் பத்து நிமிடங்கள்தான் தரப்படுகிறது. தாங்கள் ஒரு கட்சியின் தலைவர் என்ற காரணத்தால் தங்களுக்கு பதினைந்து நிமிடங்கள் தரவேண்டும் என்று தலைவரால் பணிக்கப்பட்டவனாக நான் அமர்ந்திருக்கிறேன். எனவே தாங்கள் பதினைந்து நிமிடங்களுக்குள் முடித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: அதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் அப்படிச் சொன்னேன். தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையை வைப்பதற்கு முன்னால் ஆளுநர் அவர்கள் உரையில் தமிழக அரசு மின் கட்டணத்தை உயர்த்த வேண்டிய அவசியத்தில் இருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்கள். அதுமட்டுமல்ல. இப்போது இங்கே அளிக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையில் மின்சார வாரியம் கட்டணத்தை உயர்த்துவதற்குரிய காரணத்தை எந்த அளவிற்கு தெளிந்து குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள அறிக்கையில் பத்தாவது பக்கத்தில் கூறியிருக்கிறார்கள். மத்திய அரசிடம் பேசிய கருத்துக்களையும் அதற்குரிய காரணங்களை தெளிவாக எடுத்துக் கூறியும் அதற்கு பரிகாரம் கிடைக்கவில்லை என்பது போன்ற கருத்துக்களை அவர்கள் கூறியிருக்கிறார்கள். போதிய அளவு உதிரிப் பாகங்கள், நிலக்கரி இவை அனைத்தும் மைய அரசின் பிடியில் இருக்கிற காரணத்தால் மின் கட்டணத்தை உயர்த்த வேண்டிய அவசியம் இந்த அரசுக்கு இருக்கிறது என்பது போன்ற கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

மைய அரசின் மின் திட்டங்களில், அந்தந்த மாநிலங்கள் உற்பத்தி செய்கிற அந்த மின் உற்பத்தியை அண்டை மாநிலங்களுக்கு அதிகமாக அளித்திட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியும்கூட வேறு ஒரு இடத்தில் கூறுகிற போது நெய்வேலியில் உற்பத்தி செய்யப்படுகிற மின் சக்தி அனைத்தும், அத்தனை மெகவாட்ஸ்—ம் தமிழக அரசு பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலைமை இருந்தும்கூட இனி மேல் புதிதாக உற்பத்தி செய்ய இருக்கிற, அந்த நெய்வேலி மின்



திட்டத்தில் கிடைக்க இருக்கிற 1300 மெகவாட்ஸ் உற்பத்தியில் தமிழ்நாட்டுக்கு, நம் மாநிலத்தில் உற்பத்தி செய்கிற அந்த நெய்வேலியில் கிடைக்கிற அந்த 1300 மெகவாட்ஸில் 176 மெகவாட்தான் கிடைக்கும் என்ற ஐயப்பாட்டையும் தெரிவித்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, எண்ணூர் மின் நிலையத்தில் 2?3 மெகவாட்ஸ் உற்பத்தித் திறன் என்றும் அதிலே 44 சதவீதம் தான் உற்பத்தி செய்ய முடிகிறது என்றும் அதுபோன்று தூத்துக்குடி மின் நிலையத்தில் 201 மெகாவாட்ஸ் உற்பத்தித் திறன் உள்ளதில் இப்போது அதில் 47 சதவீதம்தான் உற்பத்தி செய்யப்படுகிறது என்றும் நிலை இருக்கிறது. அப்படியிருக்கிற நிலையில்கூட உயர் அழுத்த மின் சக்தியை உபயோகிக்கிற தொழிற்சாலைகளுக்கும், சிறிய தொழிற்சாலைகளுக்கும், விவசாயிகளுக்கும் இருந்த தட்டுப்பாடு நீங்கிவிட்டது என்று தெளிவாக அறிவித்திருக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் ஒன்று சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். தட்டுப்பாடு குறைந்து விட்டது என்று சொன்னால் -- எங்கள் மாவட்டத்தில் நாங்கள் பார்க்கிறோம். இந்த ஒரு மாத காலத்தில் அடிக்கடி மின்சாரம் நின்று விடுகிறது. எந்த நேரத்தில் மின்சாரம் வரும், போகும் என்று தெரிவதில்லை. அதன் காரணமாக எங்கள் மாவட்டத்தில உசிலம்பட்டி சட்டமன்ற தொகுதியை உள்ளடக்கிய பகுதியில் இந்த மின்சாரம் குறிப்பிட்ட நேரங்களில், காலங்களில் வராத காரணத்தால், திடீரென்று மின்சாரம் வருகிற காரணத்தால், மின் இணைப்பு இரண்டு பேஸில் வருகிற காரணத்தால், ஒரு நாளைக்கு 300 விவசாய பம்ப் செட்கள் புகைந்து விட்டன. இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் ஏற்கனவே விவசாயிகள் கஷ்டத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கவில்லை. இப்படியிருக்க ஒரு பம்ப் செட் எரிந்து விட்டால் ஒரு காயில் போட ரூ. 600 ஆகிறது. ஆகவே அது போய்விட்டால் ரூ. 600 நஷ்டம். நஷ்டம் என்பது மட்டுமல்ல. அந்தக் காயில் கட்டுகிற வரையில் ஒரு வாரத்திற்குள்ளாக அவர்கள் எந்தப் பயிர்களை நம்பியிருக்கிறார்களோ அந்தப் பயிர் வரண்டு வாடி விடுகிறது.

(பிற்பகல் 12—50)

இப்படிப்பட்ட நிலை இருக்கிறது. அதை மாற்றுவதற்கு என்ன வழி என்று கேட்டால் அங்கே இருக்கின்ற அதிகாரிகள் சொல்கிறார்கள். நீலகிரியிலிருந்து வந்ததை மாற்றி இங்கே கொடுத்தோம் அதன் காரணமாக ஏற்பட்டது என்று சொன்னார்கள். இன்னொன்று, ரெவின்யூ துறையாக இருந்தாலும் போலீஸ் துறையாக இருந்தாலும் அந்த அந்த மாவட்டங்களிலே இருக்கின்ற அலுவலகங்களிலே போய்ச் சொல்ல முடியும். ஆனால் மின்வாரியத்தைப் பொறுத்த வரையிலே எங்கே போய்ச் சொல்வது என்பது பிரச்சினையாக இருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். மதுரையிலே இருக்கிற அதிகாரிதான் அந்தப் பகுதிக்கும் என்று சொல்கிறார்கள். ஆனால் உசிலம்பட்டியிலே இருக்கிற ஒருவர் போய் கேட்டால் சமயநல்லூர்

முழுவதும் சுற்றிப் பேசிக்கொண்டு வருகிறார்கள். நான் பணிவன்போடு மாண்புமிகு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன். இந்த நிலையில் நீங்கள் கூறுவது உண்மையாக இருந்தால் கடந்த 10 ஆண்டு காலத்திற்கு முன்பு பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சர் ஆனதிலிருந்து இந்தியாவில் தமிழகம் இந்தத் துறையிலே இந்திய அரசால் எவ்வளவு தூரம் புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதையும் இந்திய அரசு தமிழக மின்சாரத் திட்டங்களுக்கு எவ்வளவு சேவைகளைச் செய்ய வேண்டுமோ அந்தச் சேவைகளைச் செய்யத் தவறி இருக்கின்றது என்பதையும் நீங்களே தெரியாமல் ஒப்புக் கொள்கிறீர்கள் என்பதையும் இங்கே நான் பணிவோடு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

உலக அரங்கிலே இந்தியா பெருமைக்குரிய இந்திரா காந்தியின் தலைமையிலேதான் பத்திரமாக இருக்கும் என்ற நிலைமையை உருவாக்கும்போது தேசீய நீரோட்டத்தின் அடிப்படையில் இந்தியாவில் இருக்கிற ஒரு மாநிலம் இவ்வளவு பின்தங்கியிருக்கிறதே என்ற உணர்வோடு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசும்போது, அந்த உணர்வினை பெருமதிப்பிற்குரிய பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அவர்களிடம் சொல்லி, மின் துறையில் நாம் தன்னிறைவைப் பெறக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் காட்ட எடுத்துச் சொல்ல வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40.)

பக்ரா நங்கல் அணைக்கட்டுத் திட்டத்தின் மூலம் மின்சாரம் எடுப்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுக்கு தெரிந்து, முயற்சி எடுத்ததைப் போல, இந்த ஒகேனக்கல் மின் திட்டத்தை உருவாக்கித் தருவதற்கு இந்திய பிரதமர் அவர்கள் முயற்சிக்க வேண்டும் என்று முயற்சிகளை எடுப்பதற்கு இந்திய தேசீய காங்கிரசினுடைய உறுப்பினர்கள் இந்த மாமன்றத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பங்கேற்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.. ...(குறுக்கீடு).

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் ; மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர், இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையிலேயே மத்திய அரசு ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் அளித்திருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது மேலும்....(மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) : அவர் பேசியதற்கு விளக்கம் சொல்வது என்பது பாயிண்ட் ஆப் ஆர்டர் ஆகாது. ஆகவே, கோவைத் தம்பி தொடர்ந்து பேசட்டும்.

திரு. கோவைத்தம்பி: மாற்றுத் தலைவர் அவர்களே, அத்தோடு, கோவை மாவட்டத்தில் விவசாயிகளுடைய நலன் கருதி ஒரு அனல் மின் நிலையத்தை உருவாக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை கோவை மாவட்ட மக்களின் சார்பாக வேண்டிக் கொள்கிறேன்.



கோவை மாவட்டமானாலும், மற்ற எந்த மாவட்டமானாலும், சிறு விவசாயிகளானாலும், பெருவிவசாயிகளானாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும் கேட்டுக் கொள்வது எல்லாம், மின்சாரக் கட்டணத்தை நீங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் உயர்த்துங்கள், அதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் கடந்த 10 ஆண்டுக் காலமாக பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சியிலிருந்து இன்று வரை பொது நிறுவனங்களிலும், மாநில அரசு ஊழியர்களுக்கும், மத்திய அரசு ஊழியர்களுக்கும், ஆலைத் தொழிலாளர்களுக்கும் பஞ்சப்படி என்ற பெயரால் டி.ஏ. என்ற பெயரால் கடந்த 10 ஆண்டு காலமாக அடிப்படை சம்பளத்தைவிட அதிகமாக உலக அளவில் உள்ள விலைவாசியை, இந்தியா மட்டத்தில் உள்ளவிலைவாசியை தமிழக அளவில் உள்ள விலைவாசி உயர் விளைசரிகட்டுவதற்காக, ஏறத்தாழ 400 ரூபாய்க்கு மேல் கொடுத்திருக்கிறீர்களே, அதே அளவுக்கு விவசாயிகள் உற்பத்தி செய்கிற கரும்புக்கு, நெல்லுக்கு கொள் முதல் விலையை வாங்கிக்கொடுங்கள், நாங்கள் எவ்வளவு மின் கட்டணம் வேண்டுமானாலும் கட்டத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள்.

அரசு ஊழியர்கள் உட்பட மற்றத் தொழிலாளர்களுக்கெல்லாம் பஞ்சப்படி என்ற பெயரால் 400 ரூபாய்க்கு மேல் வழங்கியிருக்கும்போது நெல்லுக்கு ஒரு 100 ரூபாய்க்குக்கூட உயர்த்தித் தா மத்திய அரசுக்கு மனமில்லையா என்று விவசாயப் பெருங்குடி மக்கள் கேட்கிறார்கள். ஆகவே இந்த அரசு அதிக அக்கறை செலுத்தி கவனம் செலுத்தி அதை பெறுவதற்காக போராட வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, கடந்த 10 ஆண்டுக் காலமாக மத்திய அரசு ஊழியர்களும் மாநில அரசு ஊழியர்களும், ஆலைத் தொழிலாளர்களும் பெற்றிருக்கக்கூடிய பஞ்சப்படிக்கு ஏற்ற அளவுக்கு விவசாயிக்கு கொள்முதல் விலையை உயர்த்தி தருவீர்களேயானால், நீங்கள் எந்த விலையை மின்சாரத்திற்கு வைத்தாலும் அதைத் தருவதற்கு நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம் என்று விவசாயப் பெருங்குடி மக்கள் கேட்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே தான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்தோடு கோவை மாவட்டத்தில் பாகப்பட்டி என்ற இடத்தில் ஒரு மின் துணை நிலையத்தை உருவாக்க வேண்டும் என்றும், சிறுவாணி நீர்தேக்கத்திலிருந்து மின்சாரம் எடுக்க வேண்டும் என்றும், அவினாசியில் விவசாயிகளின் நலன் கருதி, ஒரு அனல் மின் நிலையத்தை உருவாக்க வேண்டும் என்றும், மாண்புமிகு அமைச்சர் அவர்களை பணிவோடு கேட்டுக் கொண்டு, இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்று விடை பெற்றுக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

ஏ.இ.யைப் போய்ப் பார்க்க வேண்டுமென்று சொல்கிறார்கள். 10, 20 மைல் தூரம் போய் சொல்ல வேண்டிய நிலைமையில்தான் ஆபீஸ் அமைப்புகள் தவறாக இருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு 24 மணி நேரமும் மின்சாரம் கிடைக்கவில்லை. அதனால் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. 80 சதவீத விவசாயிகள் இருக்கின்ற இந்த நாட்டிலே மின்சாரம் அவர்களுக்குக் கிடைப்பதிலே எந்தவிதமான தடையும் இருக்கக்கூடாது. இரவு நேரங்களிலே நிறுத்தினாலும் கூட பகல் நேரங்களிலே முழுமையாக 12 மணி நேரமும் மின்சாரம் கிடைப்பதற்கான உத்திரவாதத்தை இந்த அரசு கொடுக்க வேண்டும்.

சினிமா கொட்டகைகளிலே ஜெனரேட்டர்கள் வைத்து ஓட்டுகிறார்கள். அவர்களை ஊக்குவிக்கலாம். அதிக வருமானம் இல்லாத நாட்டுப் பொருளாதாரத்திற்குத் தேவையில்லாத சினிமா கொட்டகைகளிலே ஜெனரேட்டர்களை வைத்துக் கொள்ளலாம் என்று அனுமதி வழங்கி, விவசாயிகளுக்கு எந்த நேரத்திலேயும் மின்சாரம் கிடைக்கின்ற அளவுக்கு ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசைக் காரணம் காட்டிக்கொண்டு மாநில அரசு உற்பத்தித் திறனை அதிகரிக்கவில்லை என்றாலும் எந்தக் காரணத்தைக் கொண்டும் விவசாயிகளுக்கு மின் கட்டணத்தை உயர்த்தக் கூடாது. சென்ற முறை விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய தொகை அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். சென்ற ஆண்டு அமைச்சர் அவர்கள் பேசிய போது விவசாயிகள் போராடிய போது ஒன் ப்ளஸ் ஒன் என்ற முறையைக் கொண்டுவா ஒப்பந்தம் ஏற்பாடு செய்யப்பட்டதன் மூலமாக அதிகமான விவசாயிகள் பணத்தைக் கட்டியிருக்கிறார்கள். அவர்களுக்குத் தொடர்ந்து சலுகைகளைக் கொடுப்பதற்கு அரசு தயங்கக்கூடாது மின் வாரியத்திலே 100, 200 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறதே என்று சொல்லக்கூடாது. தமிழகத்திலே இன்றைக்கு எத்தனை அரசு அலுவலகங்கள் இருக்கின்றனவோ அனைத்திற்கும் இந்த அரசு எவ்வளவு மின் கட்டணம் செலுத்துகிறது என்று பார்க்க வேண்டும் பொது நிறுவனங்களில் இருக்கின்ற அதிகாரிகள்—ஒருவருக்கு 10 பேன்கள் போட்டுக் கொள்ளக்கூடிய நிலைமை, ஏர்கன்டிஷன் போட்டுக் கொள்ளக்கூடிய நிலைமை இருக்கிறது. பத்து மாடிக் கட்டடத்திலே பகல் நேரத்திலே எதற்காக மின் வெளிச்சம் என்று தெரியவில்லை. சில வேளைகளிலே விளக்குகளைப் போட்டுவிட்டே போய்விடுகிறார்கள். அதிகாரிகள் இல்லையென்றாலும் 4 பேன்கள் ஓடக்கூடிய நிலைமை, லைட்கள் எரியக்கூடிய நிலைமை இருக்கின்றது. இப்படிப்பட்ட செலவுகள் ஏற்படாமல் சிக்கனப்படுத்தி அந்த விவசாயிகளுக்குக் கொடுத்து உதவி செய்ய வேண்டும். தன்னிறைவு பெற்றபிறகு அதிகாரிகள் 10 பேன்கள் போட்டுக் கொள்ளலாம், ஏர்கன்ஷன் போட்டுக் கொள்ளலாம். இரவு பகல் லைட் எரிக்கலாம் ஆனால் இன்றைக்குத் தன்னிறைவு பெறாத நேரத்திலே விவசாயிகளுக்கு உற்பத்திக்குத் தேவையான உரிய மின்சக்தியைக் கொடுக்க முடியாதபோது



அவர்களுக்கு உற்பத்திப் பொருள்களுக்குக் கட்டுபடியாகக்கூடிய விலை கொடுக்க முடியாத நிலையில் குறைந்த கட்டணத்திலே மின்சாரத்தை விவசாயிகளுக்கு கொடுக்கிற நிலையில் போதுமான மின்சாரத்தைக் கொடுப்பதற்கு தமிழக அரசு முன்வர வேண்டும் அலுவலகங்களில் மின் உபயோகத்தைச் சிக்கனப்படுத்த வேண்டும். தனியார் அலுவலகங்களிலே ஒருவர் வெளியே போகிறபோது லைட்டை நிறுத்தாது போய்விட்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது, அவர்களிடம் விளக்கம் கோரப்படுகிறது. இது போன்ற நடவடிக்கைகளை எடுத்து சிக்கனப்படுத்துவதற்கு முன் வரவேண்டும். மீட்டர் பழுது ஆகிவிட்டால் எடுத்துச் செல்கிறார்கள். அன்றைக்கே மாட்டுவதில்லை, ஒரு ஆண்டுக்காலம் ஆனாலும், குறிப்பிட்ட வாடகையை வசூலிக்கிறார்கள். என்ன ஆதாரம் என்றால் சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் அந்த விவசாயி என்ன கட்டியிருக்கிறாரோ அதையே இந்த ஆண்டுக்கும் என்று கணக்கிலே எடுத்துக்கொண்டு வசூல் செய்யக் கூடிய நிலைமை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் விவசாயப் பகுதியிலிருந்து வந்திருப்பதால் அவர்களுக்குத் தெரியும். பம்பு செட்டுகள் மானாவாரிப் பகுதியிலே தான் வைக்கப்படுகின்றன. அங்கே ஒரு ஆண்டு கரும்பு போட்டால் ஒரு ஆண்டு நெல் போட்டால் அடுத்த ஆண்டு கரும்பு போடுவார்கள். இப்படி விவசாயிகள் மாற்றுப் பயிர்களைப் போடுவார்கள். கரும்பு போட்டால் அது ஏப்ரல் மாதம் வரை இருக்கும். கரும்பு இல்லாத நேரத்திலே ஜனவரி மாதத்தோடு அறுவடையாகிவிடும். ஒரு மாதம் வீணாக இருந்தால்கூட நீங்கள் அந்த மீட்டரைப் பொறுத்தாததற்கு சென்ற ஆண்டுக் கணக்கில் வசூல் செய்வது எந்த வகையிலே நியாயம் என்று கேட்க விரும்புகிறேன். உடனடியாக அந்த மீட்டர் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, அட்டைப் பட்டியல் என்ற ஒரு முறையைக் கொண்டு வந்திருக்கின்றீர்கள். அதை அமல் படுத்துவதற்காக அட்டையைக் கொடுத்திருக்கின்றீர்கள். ஆனால் அதை எங்கே வைத்திருப்பது என்று தெரியவில்லை. அசசரோ அல்லது நீங்கள் போட்டிருப்பவர்களோ போகும்பொழுது என்ன நிலைமை ஏற்படும்? சாதாரணமாக கிராமங்களில் பார்த்தால் ஒரு பம்பு செட்டு ஒரு மைல் தூரத்தில் இருக்கும். அதன் சொந்தக்காரர்கள் இரவு நேரத்திலே அங்கிருந்து வீட்டிற்கு வந்து விடுவார்கள்; அல்லது பகல் நேரத்திலே வந்து விடுவார்கள். அப்படிப்பட்ட நிலையில் இவர்கள் போகின்ற நேரத்தில் அங்கே இல்லை என்றால் மூடிவிட்டதாகத்தான் சொல்ல வேண்டி வரும். எனவே, அட்டைப் பட்டியல் எங்கே இருக்க வேண்டுமென்று தெரியவில்லை. மீட்டர் ரீடிங் எடுக்கிறார்கள். அடுத்து அந்த மாத மீட்டர் எண் என்று இருக்கிறது; அதற்குரிய தொகை இருக்கிறது. ஆனால் அந்தத் தொகை கட்டப்பட்டிருக்கிறதா என்று தெரிந்து கொள்வதற்கு இடமில்லை. எங்கே போய்ச் செலுத்துகிறார்களோ அந்தப் பணம் இதில் குறிப்பிடப்படுவதில்லை. அப்படியென்றால் அட்டையை வாங்கிப் பணம் வசூலிப்பவர்கள் பணத்தை எடுத்து விடவும் வாய்ப்பிருக்கிறது. மின்வாரியம் அறியாமலே ஓராண்டுக்காலம் இருக்கும். எப்பொழுது ஆடிட்

அணைகளைக் கட்டி முடித்து, அதன் விளைவாக, நாம் மிகப்பெரிய பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறோம். அதே போல், இந்த மேகதாது திட்டத்தையும் மத்திய அரசு உத்தரவை மீறி அவர்கள் கட்டினால் நாம் என்ன செய்வது என்பதுதான் கேள்வி.

ஹொகேனக்கல் திட்டத்தைப் பொறுத்தவரையிலே, இன்று, நேற்றல்ல, 1961-ஆம் ஆண்டிலேயே அந்தத் திட்டம் வகுக்கப் பட்டது. 'சென்ட்ரல் வாட்டர் அன்ட் பவர் கமிஷனுக்கு இந்தத் திட்டத்தின் நகலை அன்றைக்கிருந்த தமிழக அரசு அனுப்பி வைத்தது. 25-8-1961—லே இந்தத் திட்ட நகல் சென்ட்ரல் வாட்டர் அன்ட் பவர் கமிஷனுக்கு அனுப்பப்பட்டது. அவர்கள் அதிலே சில சந்தேகங்களைக் கேட்டு, தமிழக அரசுக்கு எழுதி னார்கள். அதற்கும் தமிழக அரசு விரிவான பதிலை, அந்த ஆண்டிலேயே—இரண்டு மாதங்களிலேயே அனுப்பியிருக்கிறது. இவ்வளவு செய்ததோடுகூட, அதற்குப் பின்னாலே தொடர்ந்து தமிழகத்தின் சார்பிலே, அப்பொழுது எந்த ஆட்சியிருந்தாலும், அந்த ஆட்சியாளர்களாலே வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. ஆனாலுங்கூட, 20 ஆண்டுகளுக்கு மேலாகியும் இந்தத் திட்டத் திற்கு மத்திய அரசிடமிருந்து நமக்கு கிளியரன்ஸ் வரவில்லை. காரணம் கர்நாடகம் ஆட்சேபனை செய்கிறது என்பதால், 1961-லேயே ஹொகனேக்கல் திட்டம் வகுக்கப்பட்ட நேரத்திலே, அதைப்பற்றி, தமிழக அரசு, மத்திய அரசிடமும், சென்ட்ரல் வாட்டர் போர்ட் கமிஷனிடமும் வற்புறுத்திய காலத்திலே, கர்நாடக அரசு மேகதாது திட்டத்தைப் பற்றி எதுவும் சொல்ல வில்லை. அதைப்பற்றிய பேச்சே இல்லை. பின்னாலே, அவர்களுக்கு அந்தச் சிந்தனை வந்து, இன்றைக்கு அதை நிறை வேற்றுகிறார்கள், அந்த வகையிலே நம்முடைய அரசு ஒரு படி விட்டுக் கொடுத்துச் சொன்னது, இரண்டு அரசுகளும் சேர்ந்து, கர்நாடக அரசும், தமிழக அரசும் சேர்ந்து, இந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம், என்று. நம்முடைய அரசு விட்டுக்கொடுத்தது. அதற்கும் அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. வேண்டாம் இரண்டு அரசுகளுக்கும் வேண்டாம். மத்திய அரசே அந்த ஹொகேனக்கல் திட்டத்தை நிறைவேற்றட்டும். அதனால் உற்பத்தியாகும் மின்சாரத்தை, இரண்டு மாநிலங்களும் பகிர்ந்து கொள்வோம். இரண்டு மாநில மக்களும் வளர்ச்சிக்கு அதைப் பயன்படுத்துவோம் என்று நம்முடைய அரசு சொன்னது. அதையும் அவர்கள் ஏற்க வில்லை.

ஹொகேனக்கல் எங்கேயிருக்கிறது? தமிழக—கர்நாடக எல்லையில். இந்தப் பக்கம் நம்முடைய பகுதியிலே 15—வது கிலோமீட்டரிலே இருக்கிறது. எல்லைக்கு அந்தப் பக்கத்திலே மேகதாது திட்டம் இருக்கிறது. காவிரி ஆற்றுக்கு அந்தப் பக்கம் கர்நாடகக் கரை, இந்தப் பக்கம் தமிழகக் கரை. ஆகவே, இரண்டு பக்கங்களுக்கும் பொதுவாக, எல்லையாக, காவிரி ஆறு ஓடிக்கொண்டிருக்கிற பகுதியிலே அணையைக் கட்டி அதன்மூலம் கிட்டத்தட்ட ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம் என்று திட்டமிட்டு, அதற்கான வேலைகளை நாம் ஆரம்பிக்க வேண்டுமென்று துடித்துக்கொண்டிருக்கிற வேளையிலே



கர்நாடகத்தின் பிடிவாதத்தின் காரணமாக, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை, 20 ஆண்டுகாலமாக நம்மாலே செய்ய முடியவில்லை.

ஆனால் அவர்கள் இப்போது போட்டியாக ஒகேனக்கல்லில் இருந்து சற்றுத் தொலைவில் அவர்கள் எல்லைக்குள்ளே இருக்கும் மேகதாது திட்டத்தை நிறைவேற்றிவிடுவார்களேயானால், அதற்குப் பின்னர் எந்தக் காலத்திலேயும் நாம் ஒகேனக்கல் திட்டத்தை செயல்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுவிடக் கூடிய அபாயம் இருப்பதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஏற்கெனவே காவிரி நீர் பிரச்சினையிலே நம்முடைய தமிழகம் 100 டி.எம்.சி தண்ணீரை விட்டுக் கொடுக்கவேண்டும் என்று மத்திய அரசு வற்புறுத்திக் கொண்டிருக்கிறது. 100 டி.எம்.சியை நாம் விட்டுக் கொடுப்பதனால் ஏற்படக்கூடிய அந்த நீர் இழப்புக்கு, அதன் விளைவாக ஏற்படக்கூடிய மின் உற்பத்தி இழப்பிற்கு மத்திய அரசு ஈடு செய்ய வேண்டுமா, வேண்டாமா? அதற்கு ஈடு செய்யும் வகையிலாவது ஒகேனக்கல் திட்டத்திற்கு அனுமதி தரவேண்டுமா, வேண்டாமா? நம்முடைய நீரைப் பிடுங்கி அவர்களுக்குக் கொடுக்கிறார்கள். நாம் போடுகிற திட்டத்திற்கும் முட்டுக்கட்டை போடுகிறார்கள். அதே நேரத்தில் கர்நாடக அரசு அந்தத் திட்டத்தை அவர்களாகவே, தன்னிச்சையாக அமைக்கின்ற நேரத்தில் மத்திய அரசு தடுக்காமல் இருக்குமே யானால், தமிழகத்தின் எதிர்காலம், மின் துறையில் இருள் சூழ்ந்த தாக ஆகிவிடும் என்று நான் இந்த அவையிலே எச்சரிக்க விரும்புகிறேன். அந்த அபாயம் இன்றைக்கு வந்தாகிவிட்டது. ஹேமாவதி, கபினி அணைகள் மத்திய அரசாங்கத்தை மீறி, கர்நாடக அரசு கட்டி முடிக்கப்படாமலும் கூட, ஹேமாவதி அணையின் மூலம் 2 லட்சம் ஏக்கருக்குப் புதிதாக பாசன வசதி களை கர்நாடக அரசு அடைந்து அதன் மூலம் தமிழக விவசாயி களின் நலன் பாதிக்கப்பட்டாலும் கூட, மத்திய அரசு எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அதேபோல மேகதாது திட்டத்திலே நீங்கள் ஆட்சேபனை தெரிவித்தால் மட்டும் போதாது. மத்திய அரசு அவர்களுக்குப் புத்திமதிகளை சொல்லி இருக்கின்றது என்று சொன்னாலும் போதாது. அதையும் மீறி அவர்கள் செய்வார்களானால் உங்களுடைய நிலை என்ன? நீங்கள் ஒகேனக்கல் திட்டத்தை நம்முடைய அரசே, மத்திய அரசு அனுமதித்தாலும் அனுமதிக்காவிட்டாலும்' அதை ஏற்று செயல் படுத்துவதற்கு முன் வருமா என்பதை நான் அறியவிரும்புகிறேன்.

மேகதாது திட்டத்தைப் பற்றி கர்நாடக மாநிலத்தின் முதலமைச்சர் குண்டுராவ் அவர்கள் அண்மையிலே சொல்லி இருக்கிறார்கள். மேகதாது திட்டம் தமிழக நலனுக்குப் பாதக மானது என்றால், ஒகேனக்கல் திட்டம் கர்நாடக மாநிலத் திற்குப் பாதகமானது, ஆகவே நாங்கள் அதை அனுமதிக்க மாட்டோம் என்றும் பகிரங்கமாக அவர்கள் சொல்லக் கூடிய நிலைமை ஏற்பட்டிருப்பதை இந்த அவையின் முன் கொண்டு வரவிரும்புகிறேன்.

வந்து, இந்தத் தொகை அதற்குரிய இடத்தில் வர வேண்டுமென்று கணக்கெடுக்கப் போகிறீர்கள்? எனவே, அட்டைப் பட்டியல் முறை சரியாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைத் திருத்தியமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் அட்டை முறையிலே போட்டிருக்கின்ற கணக்குக்கும், வசூலிக்கின்ற கணக்குக்கும் எங்கள் பகுதியிலே ஏற்பட்டிருக்கின்ற வித்தியாசத்தைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அட்டையிலே மார்ஜினலில் ஆரம்பரீடிங் 1,000 மீட்டர் என்று குறிப்பிட்டிருந்தால் அந்த மாதம் எரிந்திருப்பது 200 மீட்டர் என்றால் மொத்தம் 1,200. குறிப்பிலே 200 என்று இருந்தாலும் அவர் என்ன கணக்குப் போடுகிறார், எந்த முறையில் போடுகிறார் என்று தெரியவில்லை. வசூலிப்பவர் சொல்கிறார், நான் இதில் இருப்பதைத்தான் வாங்குவேன் என்று சொல்கிறார். அனால் மொத்தம் எடுத்த ரீடிங்கிற்கும் இதற்கும் டேலி ஆகவில்லை. அந்த அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன. எனவே, அட்டை முறையைத் திருத்தியமைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கெப்பாசிட்டர் கொடுத்திருக்கிறீர்கள். மோட்டார் வைப்பவர்கள் கெப்பாசிட்டர்களை வைக்க வேண்டும். அதற்காக 190 ரூபாய் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். கெப்பாசிட்டர் பொருத்தப்படுவதன் நன்மை என்னவென்று யாருக்கும் புரியவில்லை. அதை ஏன் வைக்கச் சொன்னீர்கள் என்பது புரியவில்லை. கெப்பாசிட்டர் இருந்தால் புகையாது என்பதற்காக அதைக் கட்டாயமாக வைக்கச் சொன்னீர்கள். ஆனால் கெப்பாசிட்டர் வைத்திருந்தாலும் பம்பு செட்டுகள் புகைந்து விடுகின்றன. அந்த கெப்பாசிட்டர்கள் காண்ட்ராக்ட் முறையில் பெறப்பட்டதா? ஒப்பந்தம் ஏற்பட்டு அதன் காரணமாக விவசாயிகளை நிர்ப்பந்தப் படுத்தி விவசாயிகள் அதைப் பொருத்த வேண்டுமென்று சொல்கிறீர்களா என்பதுதான் விவசாயிகள் மத்தியில் உள்ள கேள்வி. ஆகவே, கெப்பாசிட்டர் வைப்பது எதற்காக என்பது தெரிய வேண்டும். இதைப் பொருத்தச் சொல்லி அதிகமான தொல்லையை விவசாயிகளுக்குக் கொடுக்கிறீர்கள். இப்படி அவர்களுக்குப் பண விரயத்தை ஏற்படுத்துவதன் மூலம் —ஏற்கனவே அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு விலை கிடைக்காத பொழுது அவர்களுக்கு அதிகமான பாரத்தைச் சுமத்துவதாக இது இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதுமட்டுமல்ல, நாட்டிலே கரண்ட் இழப்பு என்பதன்மூலம் 18 சதவீதம் என்று சொல்லும் நாம் அந்த இழப்பையெல்லாம் மனத்திற்கொண்டு, விவசாயிகளுக்கு எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்த அரசு கட்டணத்தை உயர்த்தக் கூடாது என்ற வேண்டுகோளை வைக்கிறேன். அவர்களுக்கு நன்மை செய்வதன் மூலம் இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு இந்த அரசு நன்மை செய்கிறது என்பதைக் கருத்திற்கொண்டு விவசாயிகளுக்கு அளிக்கப்படும் சலுகையாக அதை எடுத்துக் கொள்ள வேண்டும். எப்படி



நீங்கள் மத்திய அரசாங்கத்தைக் குறை சொன்னாலும், மத்திய மாநில உறவுகளைப்பற்றி நாம் அதிகமாகப் பேசினாலும் மத்தியிலிருக்கின்ற அரசு எடுத்துக்கொண்ட முறை நமக்குத் தெரியும். அவர்கள் உலக வங்கியிலே 5,000 கோடி ரூபாய் பெறுவதற்காக விலைவாசியை உயர்த்த வேண்டுமென்று உள்ளடக்கிய கொள்கையைப் பெற்றிருப்பார்கள். எனவே, விலைவாசியைக் குறைத்துத் தர மாட்டார்கள். டீசல் காரணத்தைக் கூறி, அதில் இருக்கின்ற கரி வகைகளைச் சொல்லி செய்கின்ற காரியங்களால் மாநில அரசு நிர்ப்பந்தப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, கட்டணத்தை உயர்த்தப் போகிறோம் என்றால் அதை வேறு இடத்திலே உயர்த்திக்கொண்டு விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்து அமர்கிறேன்.

[பிற்பகல் 1-00]

*திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்த மின் திட்ட அறிக்கையிலே எங்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களை எடுத்து வைக்க முன் வந்திருக்கிறேன். தமிழகத்திலே என்றைக்கும் இல்லாத அளவுக்கு மின் உற்பத்தித் துறையிலே ஒரு பெரிய நெருக்கடியை நாம் எதிர் நோக்கியிருக்கிறோம். மின்சாரப் பற்றாக்குறை மாநிலமாகத் தமிழகம் இருக்கிறது. இந்த ஆண்டல்ல, பல ஆண்டுகளாகவே தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. நம்முடைய மின் உற்பத்தித் திறனை எந்த, எந்த வகையிலே அதிகரிக்கலாம் என்பதற்கு, நம்முடைய பொறி இயல் வல்லுநர்களும், மின்சார வாரியமும் திட்டமிட்டு, எத்தனையோ செய்தாலுங்கூட, பல வகைகளிலே முட்டுக்கட்டைகள் ஏற்பட்டு, அதன் விளைவாக நாம் எதிர் பார்த்த திட்டங்கள் நிறைவேறமுடியாத நிலைமையிலே இருந்து கொண்டிருக்கிறோம். குறிப்பாக ஹொகேனக்கல் திட்டம். அந்தத் திட்டத்தைப் பற்றி ஆளுநர் உரை விவாதத்திலே கூட நான் குறிப்பிட்டேன், அந்தத் திட்டத்திற்கு ஆபத்து வந்திருக்கிறது. அந்தத் திட்டம் இனி எந்தக் காலத்திலேயும் நிறைவேற முடியாத திட்டமாகிவிடுமோ என்ற அச்சம் தமிழக மக்களுக்கு வந்திருக்கிறது. அண்டை மாநிலமான கர்நாடகத்திலே அந்த முதலமைச்சர் குண்டு ராவ் மேகதாது திட்டத்தை அந்த மாநில அரசு நிறைவேற்றப் போகிறது. உலக வங்கியின் உதவியுடன் என்று அறிவித்திருப்பதை ஆளுநர் உரை விவாதத்திலே சுட்டிக்காட்டி அதன் விளைவாக, ஹொகேனக்கல் திட்டம் என்ன ஆகும் என்று நான் கேட்டேன். நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் அதற்கு விடை அளிக்கும்போது, நாம் நம்முடைய ஆட்சேபனையைத் தெரிவித்திருக்கிறோம் மத்திய அரசுக்கு என்று சொன்னார்கள். ஆட்சேபனையைத் தெரிவித்த பின்னாலுங்கூட கர்நாடக அரசு தன்னுடைய நிலையை மாற்றிக் கொண்டதாகத் தெரியவில்லை. காரணம், இதற்கு முன்னால் இதே காவிரியின் உபநதிகளாகிய ஹேமாவதி, கபினி போன்ற நதிகளிலே அணைகள் கட்டுவதென கர்நாடக அரசு முனைந்த பொழுது நாம் ஆட்சேபித்தோம். இந்தியாவின் திட்டக்குழு அதற்கு அனுமதி தர மறுத்தது. மத்திய அரசும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தது. ஆனாலும், அவர்கள் பிடிவாதமாக அந்த இரண்டு

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் இது மிக முக்கியமானப் பிரச்சினையாகும். மேலும் அனல் மின் உற்பத்தி நிலையங்களை நாம் ஓரளவுக்கு அமைத்திருக்கிறோம். புனல் வாயிலாக மின் உற்பத்தி செய்யக்கூடிய நிலையங்கள் அனேகமாக அமைக்கப்பட்டு முடிந்து விட்டது. ஒகேனக்கல் பெரிய திட்டம் என்று சொன்னால் மற்றவைகள் எல்லாம் சிறிய சிறிய திட்டங்கள்தான். ஒகேனக்கல் திட்டத்துக்கு வாய்ப்பில்லாத நிலையிலே அடுத்து தாம் அனல் மின்நிலையத்தை அமைக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. அதற்கு நிலக்கரி ஆந்திராவிலிருந்து, சிங்கரேணியிலிருந்து வரவேண்டும். அதிலே பல சிக்கல்கள், பல தடைகள், பல முட்டுக் கட்டைகள். அதை மீறி அனல் மின் நிலையங்களை நாம் எதிர்பார்க்கிற வேகத்திற்கு அமைக்க முடியாத நிலை. ஆகவே நாம் அணு மின் நிலையத்தை நம் தமிழகம் நம்பி இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஏற்கனவே ஒரு அணு மின் நிலையம் இருக்கிறது. அது போக நெல்லை மாவட்டம் கூடங்குளத்திலே மற்றொரு அணு மின் நிலையத்தை அமைக்கவேண்டும் என்று 1970 ஆம் ஆண்டிலேயே திட்டம் இடப்பட்டது. இதன் மூலம் 970 மெகாவாட் உற்பத்தியாகும் என்று கருதப்படுகிறது. இது 1970 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டு கூட பன்னிரண்டு ஆண்டுகள் ஆகியும் இந்தத் திட்டம் நிறைவேறுவதற்கான வழிவகைகள் இன்னமும் தெரியவில்லை. அதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அணு மின் நிலையத்தைத் தவிர, வேறு வழி, தமிழகத்திற்கு மின் உற்பத்திக்கு இன்று தெரியவில்லை. ஆகவே, இந்த ணு மின் நிலையத்தை திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கூடங்குளத்தில் அமைப்பதற்கு நம்முடைய அரசு இன்னும் விரைவான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். மத்தியக் குழுவும் வந்து தைப் பார் வயிட்டு, அந்த இடம் சரியானது என்று சொல்லியாகிவிட்டது அதற்கு பின்னரும் அது தாமதிக்கப்படுவது சரியல்ல, மத்திய அரசு இதிலே போதுமான கவனம் செலுத்த வேண்டும் என்பதையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-10)

கூடங்குளத்திற்குப் பக்சத்திலே தூத்துக்குடியிலே ஹெவி வட்டர் பிளாட் இருக்கிறது. அதுவும் இந்த அணு மின் நிலயம் வருவதற்குச் சாதகமான சூழ்நிலையைத் தருகிறது. நிலக்கரிச் சுரங்கம் இருக்கக்கூடிய இடத்திலிருந்து 700 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால்தான் அணு மின் நிலயம் அமைக்க வேண்டும். அதற்கு அருகில் அமைக்க்கூடாது என்ற விதிலய மத்திய அரசு சொல்கிறது. அப்படிப் பார்க்கபோனாலும், சிங்கரேணி நில கரிச் சுரங்கத்திலிருந்து 1400 கிலோ மீட்டருக்கு அப்பால் தான் இந்தக் கூடங்குளம் இருக்கிறது. ஆகவே, அந்த அணு மின்நிலையத்தை அமைப்பதற்கு எல்லா வகையிலும் மத்திய அரசு உதவ வேண்டும்.

நெய்வேலியில் இருக்கக்கூடிய அனல் மின் திட்டத்தைப் பற்றி நான் இங்கே சில வார்த்தைகளை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். நெய்வேலியில் இருக்கக்கூடிய அந்த நிலையத்தைப் பற்றி



நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்கள் மத்திய மின் துறை மாநாட்டிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். 1980 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20-ம் தேதி நடைபெற்ற அந்த மத்திய மின் துறை அமைச்சர்கள் மாநாட்டில் அவர்கள் அதை வற்புறுத்திச் சொன்னார்கள். He cited that power-management in the State has become difficult because Neyveli which supplied 2676 million units in 1976-77 was able to give only 1768 million units in 1979-80. This has resulted in a serious crisis* 2676 மில்லியன் யூனிட்டுகள் 1976—77—ல் உற்பத்தியானது. ஆனால் 1979—80—ல் 1768 மில்லியன் யூனிட்டுகள்தான் உற்பத்தி செய்யப்பட்டது. ஆகவே, உற்பத்தி குறைந்து இருக்கிறது. இதன் காரணமாக தமிழகத்தில் பெரிய நெருக்கடி ஏற்பட்டது என்பதை நம்முடைய மதிப்பிற்குரிய மின் துறை அமைச்சர் அவர்கள் அந்த மாநாட்டிலே எடுத்துக் கூறினார்கள். அப்படி எடுத்துக் கூறிவிட்டு, இன்னொரு யோசனையையும் சொன்னார்கள். ஆகவே, நெய்வேலி மின் உற்பத்தி திட்டம் முற்றிலும் நிறைவேற்றப்பட்டவுடன், தமிழக அரசின் கையில் ஒப்படைக்கவேண்டும். அப்போது தான் முழுமையான மின் உற்பத்தி செய்ய முடியும் என்று அந்த மாநாட்டிலே அவர் விடுத்த கோரிக்கையை நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதிலே இந்த மன்றத்திலே உள்ள சகல கட்சிகளும் நம்முடைய அரசுக்கு ஒத்துழைப்பு அளிக்கவேண்டும்.

நெய்வேலி மின் திட்டம் தமிழக அரசின் கையில் ஒப்படைக்கப் பட்டால், அது முழுமையான உற்பத்தியை, திறமையான நிர்வாகத்தைச் செய்யும் நிலைமை ஏற்படும். இந்தக் கோரிக்கையை நம்முடைய அமைச்சர் அவர்கள் 1980-லே சொன்னார்கள். இன்றைக்கும் அதைத் தொடர்ந்து வற்புறுத்தி அதைப்பெற வேண்டும் என்று நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயத்தையும் நான் சொல்லிக் கொள்கிறேன். தற்போதைய மின் வாரியச் சட்டங்களும், பணி முறைகளும், அதிகாரங்களும் எப்படி இருக்கின்றன என்பதை அவையின் கவனத்திற்கு வைக்க விரும்புகிறேன். '1948 ஆம் ஆண்டிலே மத்திய அரசாங்கம் வகுத்த ஒரு சட்டத்தின் கீழ் மின் கழகங்கள் இயங்கி வருகின்றன. அந்தச் சட்டத்தின் அடிப் படையிலே தான் நாம் இந்த மின் நிதி நிலை அறிக்கையை விவாதிக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் இரண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் பேச வேண்டியிருப்பதால, சீக்கிரமாக முடித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ப. நெடுமாறன்:** இந்த சட்டமன்றத்தில் மின்சார வாரியத்தின் நிதிநிலை பற்றி விவாதிக்கிறோமே தவிர, மின்சார வாரியத்தின் நிர்வாக ரீதியில் ஏற்பட்டிருக்கிற தாமதத்தைப்பற்றி நாம் எதுவும் செய்ய முடியாது. காரணம் அவை ஒரு மத்தியச் சட்டத்தினால் இன்றைக்கு கன்ட்ரோல் செய்யப்படுகின்றன. இந்த நிலை நீடிப்பது சரியல்ல. இந்த பழைய சட்டத்தில் இருக்கிற ஓட்டை உடைசல்களை கவனிப்ப

தற்கு இந்தச் சட்டமன்றத்திற்கு அதிகாரம் இல்லை, ஆனால் நம்முடைய மாநில அரசு நிதியிலிருந்துதான் கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய்க்குமேல் மின்சார வாரியத்திற்கு வாரிக்கொட்டிக் கொண்டிருக்கிறோம்; நம்முடைய பணத்தைத் தான் கொடுக்கிறோமே தவிர மத்திய நிதி அல்ல. அப்படி இருந்தாலும் அதனுடைய நிர்வாகத் துறையிலே சீர்திருத்தம் செய்வதற்கு இந்த சட்டமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்று சொன்னால் அதற்கு நாம் ஏன் நம்முடைய பணத்தை வாரிக் கொடுக்க வேண்டும்? யார் இந்த மின்சார வாரியத்தைக் கட்டுப்படுத்துகிறார்களோ அந்த மத்திய அரசு கொடுக்க வேண்டுமே தவிர நாம் கொடுக்க வேண்டியதில்லை. நாம் கொடுப்பது எந்தவகையிலும் சரியல்ல. அது மட்டுமல்ல, பழைய சட்டத்தைத் திருத்துவதற்காக மாநில சர்க்கார் ஒரு சட்டத்தை இயற்றுவதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று நான் வற்புறுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, தமிழ்நாட்டில் நம்முடைய அரசு எலக்ட்ரானிக் கார்ப்பரேஷன் ஒன்றை தொடங்க முன்வர வேண்டும். கேரளம், ஆந்திரம், கர்நாடகம். மேற்குவங்காளம் ஆகிய மாநிலங்களில் அவர்கள் தனியாக மாநில அரசின் சார்பிலே எலக்ட்ரானிக் கார்ப்பரேஷனை அமைத்திருக்கிறார்கள். மத்திய அரசிலே கூட எலக்ட்ராணிக் கார்ப்பரேஷனுக்கு என்று தனியாக ஒரு துறையை அமைத்துவிட்டார்கள். ஆகவே, தமிழ்நாட்டிலேயும் ஒரு எலக்ட்ரானிக் கார்ப்பரேஷனை அமைக்க வேண்டும் என்று நான் நம்முடைய அரசைக் கேட்டுக் கொள்கிறேன்: அதுபற்றி பரிசீலனை செய்ய வேண்டுமென்று வற்புறுத்துகிறேன்.

அதைப்போலவே, மதுரை மாவட்டத்தில் சமயநல்லூரில் இருந்த தெர்மல் ஸ்டேஷன் மூடப்பட்டுவிட்டது: இயந்திரங்கள் எல்லாம் விற்பனை செய்யப்பட்டுவிட்டன. ஆனாலும் கட்டிடம், தளவாடங்கள் இருக்கின்றன. ஆகவே, அந்த இடத்திலே மீண்டும் ஒரு தெர்மல் ஸ்டேஷனை அமைக்க வேண்டும். அல்லது அந்த இடத்திலே பல்புகள், ட்ரான்ஸ்பார்மர்கள், மீட்டர்கள் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு தொழிற்சாலையை அமைக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு கிராமங்களில் சிறு கோவில்கள், சர்ச்சுகள், மசூதிகள் இருக்கின்றன. அவைகளுக்கும் அரசு கமர்ஷியல் டாரிப் போட்டிருக்கிறது. இது சரியல்ல. காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் கமர்சியல் டாரிப் போடவில்லை: மினிமம் டாரிப்தான் போட்டார்கள். அதை மாற்றி, 1979-லே கமர்ஷியல் டாரிப்பாகப் போட்டார்கள். சிறு கோவில்கள், சர்ச்சுகள், மசூதிகள் போன்றவை அதிகக்கட்டணம் செலுத்த வேண்டிய காரணத்தால் சிரமப்படுகின்றன, அவைகளுக்கு அந்த வசதி இல்லை. அதை எண்ணிப்பார்த்து இப்போது இருக்கின்ற கமர்ஷியல் டாரிப்பை மாற்றி மினிமம் டாரிப்பாகப் போட வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கிறேன். நெய்வேலியில்



அதேநேரத்தில், மின்சார வாரியத்தின் நிர்வாகத் துறையிலே அதிகமாக ஏற்படுகின்ற ஊதாரிச் செலவுகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிகாரிகளின் படிச்செலவு மட்டும் ஆண்டுக்கு 12 கோடிக்கு மேல்வருகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை கணக்கு அதிகாரிகளால் கட்டுப்படுத்த முடியவில்லை. காரணம் கணக்கு அதிகாரிகள் அந்தப் பெரிய அதிகாரிகளுக்கு கீழே பணியாற்றக் கூடியவர்கள், எஞ்சினீயர்கள் கன்ட்ரோலில் இருக்கக்கூடியவர்கள். இரயில்வேயில் இருப்பதுபோல கணக்குப் பிரிவு ஒன்றை தனியாக அமைத்து, எஞ்சினீயர்கள் கன்ட்ரோல் இல்லமல், தனியாக ஆடிட் பிரிவு இருந்தால் செலவுகளைக் குறைக்க வழிவகை ஏற்படும். அதை அமைச்சரவர்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஜீப், லாரி போன்ற மின்சார வாகனங்களுக்கு பெட்ரோல் செலவு மட்டும் 7 கோடி ரூபாய் செலவு செய்யப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் பரிசீலனை செய்து, நிர்வாகச் செலவுகளைக் குறைக்க வழிவகைச் செய்து, மின்சாரக் கட்டணத்தை உயர்த்துகிற இந்தத் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும்; கைவிட வேண்டும் என்று வற்புறுத்தி, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : தலைவரவர்களே, 1981-82 ஆம் ஆண்டுக்கான மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைமீது காந்தி-காமராஜ் தேசீய காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை சுருக்கமாகச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில் மின்வெட்டு இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் திருநெல்வேலி மாவட்டத்தில் பகலில் மின்சாரம் எப்போது வருகிறது, எப்போது போகிறது என்று தெரியாத அளவுக்கு மின்சார வெட்டு அமுலில் இருக்கிறது. குறிப்பாக நகரப்புறங்களில் 24 மணி நேரமும் மின்சாரம் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கிறது, அதைப்போன்று கிராமங்களில் 24 மணி நேரமும் மின்சாரம் கிடைக்கவில்லை என்றாலும் விவசாயிகளுடைய பம்புசெட்டுகளுக்கு பகலில் 6 மணி நேரமாவது மின்சாரம் கொடுத்தால்தான் அவர்கள் அதைப் பயன்படுத்தி விவசாயம் செய்ய முடியும். இரவிலே மின்சாரம் கொடுத்தால் உயரமாக வளரக்கூடிய சோளம், நெல், கரும்பு போன்ற பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாது.

ஆனால் இந்த சென்னை நகர வீதிகளிலே பார்க்கிறபோது, ஜப்பானுக்கு போய் வந்தவர்களுக்குத் தெரியும் — உலகத்திலுடைய பொருளாதாரத்தை மாற்றி அமைக்கக்கூடிய அளவு சக்தி பெற்ற அந்த கின்சா ஏரியாவில்கூட - சென்னையிலே எரிகிற அளவுக்கு விளக்குகள் வீதிகளிலே கிடையாது. ஆகவே அப்படி ஆடம்பரமான முறையிலே-லேவிஷ் முறையிலே மின்சாரம் இங்கே வீணடிக்கப்படுகிறது. இப்படி வீணடிக்கப் படுவதினால்தான் 107 கோடி அளவுக்கு நாம் இங்கே நஷ்டப் படுகிறோம். ஆனால் ஜப்பான் நாட்டிலே, மின்சாரத்தைப் பயன்படுத்துவதில் சிக்கனம் காட்டுகிறார்கள். இரவு 9 மணிக்கு மேல் விளக்குகள் எரியக்கூடாது என்று சொன்னால் எங்குமே எரிவதில்லை. 9 மணிக்கு மின்சாரம் நிறுத்தப்படவேண்டும் என்று உத்தரவு கூட போடப் படவில்லை. ஆனால் அதை நியதியாகவே ஜப்பானியர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள், அனுபவபூர்வமாக அதை செயல் படுத்துகிறார்கள். ஜப்பானிலே நாங்கள் ஷீபோபார்க் ஓட்டலில் தங்கியிருந்தோம். அந்த ஓட்டலின் மீதிருந்து பார்த்தால், இரவு 9 மணிக்கு மேல் டோக்கியோ நகரமே இருண்டு கிடக்கின்ற காட்சியைத்தான் பார்க்க முடிந்தது ஆனால் டோக்கியோ டவருக்கு மேலாக மட்டும் 2 சிவப்பு விளக்குகள்— விமானங்கள் வந்து மோதிக்கொள்ளாமல் இருப்பதற்காக— எரிகின்றன. இப்படி ஜப்பானியர்கள் மின்சாரத்தை சிக்கனமாக பயன் படுத்துவதன் காரணமாகத்தான் அவர்கள் மேலும் மேலும் முன்னேற்றமடைகின்றனர். நாம் அவைகளை வீணடிக்கிற காரணத்தினால்தான் பின்னுக்குப்போய் கொண்டேயிருக்கிறோம் என்று என்னால் சொல்லாமல் இருக்கமுடியவில்லை.

ஆகவே, எது எதற்கு பிரையாரிட்டி அதிகமாக கொடுக்க வேண்டும், எது எதில் சிக்கனப்படுத்தவேண்டும் என்று அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து பயன்படுத்தப்படவேண்டும். இது வரையில் அம்மாதிரி செய்யவில்லை என்றாலும், இனிமேலாவது அரசாங்கமும். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதற்கு ஒரு வழி முறை காணவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் The Power should be scientifically and economically used. வேஸ்டேஜ் என்பதே இருக்கக்கூடாது. பவர் ஓரியண்டட் இண்டஸ்ட்ரீகளையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக டிஸ்கரேஜ் பண்ணவேண்டியது மிகவும் அவசியம். உதாரணத்திற்கு மால்கோ நிறுவனத்தை எடுத்துக் கொள்ளுங்கள். 60 மெகாவாட் சப்ளை வேண்டும் அதற்கு. 60 மெகாவாட் சப்ளை என்று சொன்னால் எத்தனை ஆயிரம் பேர்களுக்கு அதில் வேலை கிடைக்கிறது. அதே 60 மெகாவாட்டைக்கொண்டு எத்தனை லட்சக்கணக்கான விவசாயிகள் இதனால் பயன் பெறுவர் என்று யோசித்துப் பார்த்து முடிவு எடுக்க வேண்டும்.

ஆகவே மின்சாரத்தை எவ்வளவுக்கு எவ்வளவு சிக்கனப் படுத்துகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு மக்கள் பயன்பெறுவார்கள் என்பதை உணர்ந்து, எப்படி எப்படியெல்லாம் அதை சிக்கனமாக பயன்படுத்தவேண்டும் என்பதற்கு வழிமுறைகளை வகுத்து, அந்த மக்கள் மத்தியிலே பரவக் செய்ய



வேண்டும். அந்த வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்த பிரச்னை லைன்-லாஸ் என்று சொன்னார்கள். இந்த லைன்—லாஸைப் பொறுத்தவரைக்கும் 21.7 சதவீதமாக இருந்தது இப்போது 17 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். பாராட்டப்பட வேண்டிய விஷயம்தான். ஆனாலும் இது போதாது. இன்னும் குறைக்கப்பட வேண்டும் 12 சதவீதம், 13 சதவீதத்திற்கு மேல் லைன் லாஸ் இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் எங்கேயோ மின்சாரம் களவாடப் படுகிறது என்று பொருள். அல்லது எங்கோ அண்டர் கிரவுண்டிலே கேபிள்களிலே லீக்கேஜ் இருக்கிறது என்று பொருள். (மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் முன் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 1-30)

மின்சாரம் வீணாகப் போயிருக்கிறது, அல்லது ஹை டவர் டென்ஷனுக்கு மாற்றக்கூடிய கரன்ட் மூலம் பலயிடங்களில் ஜம்பிங் இருப்பதை நானே பார்க்கிறேன். இவைகள் எல்லாம் தடுத்து நிறுத்தப்படவேண்டும். திருட்டுக்கள் தடுக்கப்பட வேண்டும். மின்சாரம் வீணாவது தடுக்கப்படவேண்டும்.

நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த பிளான்ட் பாக்டர், எண்ணூர் தர்மல் ஸ்டேஷன் அல்லது தூத்துக்குடி தர்மல் ஸ்டேஷன் இவற்றிலுள்ள கப்பாஸிட்டி யூட்டிலைஸேஷன் ப்ளான்ட் பாக்டர், எண்ணூரில் 44 சதவிகிதம், தூத்துக்குடியில் 47 சதவிகிதம் என்று உபயோகப்படுத்துவதாகச் சொன்னார்கள். அது மிக மிகக்குறைவு. அதை அதிகப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். அதேபோல் இயந்திரங்கள் பழுது பட்டால் அவற்றைச் செப்பனிடுவதற்கான முயற்சிகளை உடனே மேற்கொள்ளவேண்டும். அதேபோல் நிலக்கரி கிடைக்க வில்லை என்றால் நிலக்கரி கிடைக்கவில்லையென்பதற்காக என்னென்ன திட்டங்களைக்கொண்டு ஆராய வேண்டுமோ அவற்றையெல்லாம் எடுத்துச் செய்ய வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள், மின்சார வெட்டு இல்லை என்று. மின்சார வெட்டு இல்லை. ஆனால் மின்சாரம் வெட்டப்படுகிறது. தினந்தோறும் 10, 12 தடவைகள் லோட் ஷெட்டிங் இருக்கிறது. லோட் ஷெட்டிங் சென்னை நகரின் இருக்கிறதா என்றால், சென்னையில் உள்ள ஏ, வி. உள்ள வீடுகள், சினிமா தியேட்டர்கள் இவற்றிற்கு லோட் ஷெட்டிங் இல்லை. ஆனால் கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு விளக்குக்கு போதிய மின்சாரம் கிடைக்காது, குடிநீருக்கு வேண்டிய மின்சாரம் இல்லை என்ற நிலைதான் இருக்கிறது. லோட் ஷெட்டிங் கொடுத்து ரூரல் பீடரையே ஆப் செய்து விடுகிறார்கள். ஆக, நகரங்களில் உள்ளவர்கள் நல்ல வாழ்க்கை நடத்துவதும், கிராம மக்கள் அல்லல்படுவதும் என்ற நிலை நீடிக்கக்கூடாது. என்னென்ன செய்ய விரும்புகிறீர்கள் என்பதை தயவுசெய்து சொல்லுங்கள். பவர் கட் வேண்டுமா? வேண்டும் என்றால்

[திரு. ஆர். நவநீத கிருஷ்ண பாண்டியன்] [1982 பிப்ரவரி 19

[பிற்பகல் 1.20]

மேலும் அங்கே விஷப் பூச்சிகளின் தொல்லைகள் இருக்கும். எனவே பகலிலே ஒரு 6 மணி நேரமாவது விவசாயிகளுக்கு மின்சாரம் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். அதேபோன்று பம்ப்செட்டுகளுக்கு கடந்த 7 வருடங்கள் ஆகியும் கூட இன்னும் இணைப்பு கொடுக்கப்படவில்லை. இதை நான் அரசைக் குறை கூறவேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. ஆனால் தென்காசி டிவிஷனிலே இருந்த ஒரு பொறியாளர் செய்த தவறின் காரணமாக ஏராளமானபேர் மின்சார மோட்டாரை வாங்கி வைத்துவிட்டபின் இன்று இவ்வளவு நாளாகியும் அங்கே மின் இணைப்பு கிடைக்கவில்லை. ஆகவே எங்களுடைய தொகுதி அருகே சுரண்டை என்ற ஊரிலே ஒரு துணை மின் நிலையத்தினை அமைக்கக்கூடிய திட்டம் இருக்கின்றது அந்த சுரண்டை மின் துணை நிலையத்தினை அமைக்கக்கூடிய திட்டம் இருக்கின்றது. அந்த சுரந்தை மின் துணை நிலையத்தை உடனடியாக அமைத்தால்தான் அந்தப் பகுதிகளுக்கு உடனடியாக நாம் பம்ப் செட்டுகளுக்கு தாமதம் இன்றி மின்சார இணைப்பினைக் கொடுக்க முடியும். எனவே அரசு இதைச் செய்யவேண்டும்.

கடைசியாக இப்போது இந்த மின்சாரக் கட்டணத்தை அட்டை முறையிலே அதாவது புதிய முறையிலே வசூல் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் மிகக் குறைந்த வசூல்தான் ஆகிறது என்று சொல்லப்படுகிறது. கிட்டத்தட்ட 3 பேர் பார்த்த அந்த வேலையை ஒரே ஒரு அலுவலர்தான் செய்வதாகவும் அப்படிச் செய்வதன் காரணத்தால் சென்ற ஜனவரி மாதம் 24 கோடி ரூபாய் வசூல் வரவேண்டிய இடத்திலே 14 கோடி ரூபாய்தான் வசூல் ஆனதாகச் சொல்கிறார்கள். மேலும் பல பகுதிகளுக்கு அட்டை வழங்கப்படாமல் இருக்கின்றது. அதனால் அந்தப் பகுதியில் உள்ளவர்களால் பணம் கட்ட முடியவில்லை.

அடுத்து பம்ப்செட்டுகளுக்குரிய அட்டையை பம்ப் செட்டிலேயே வைத்திருக்க வேண்டும் என்பது சரியல்ல. 24 மணிநேரமும் ஆட்கள் அங்கே இருக்க மாட்டார்கள் ஆகவே அவ்வாறு பம்ப்செட்டிலே அட்டை இருக்கவேண்டும் என்ற முறையினை மாற்றுவதற்குரிய காரியங்களைச் செய்யவேண்டும்.

அடுத்து மின் இணைப்பைப் பொறுத்தவரையிலே திருவொற்றியூர் தொகுதியிலே காசிக்கோயில் குப்பம் என்று கிராமத்திற்கு திரு. குமரிஅனந்தன் அவர்களுடன் சென்றிருந்தேன். அங்கே கிட்டத்தட்ட 5 ஆயிரம் மக்கள் இருக்கிறார்கள். சுதந்திரம் அடைந்த 35 வருடங்கள் ஆகிவிட்டதற்குப் பிறகும் இன்னும் அந்த மக்கள் மின்சாரத்தைப் பார்க்காத நிலைமை இருக்கின்றது. சென்னைக்கு மிக அருகிலேயே இந்த நிலைமை இருப்பதை போக்கவேண்டும். அந்த காசிக்கோயில் குப்பத்திற்கு மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1982 பிப்ரவரி 19] [திரு. ஆர். நவநீத கிருஷ்ண பாண்டியன்]

எண்ணூர், தூத்துக்குடி போன்ற இடங்களிலுள்ள மின் நிலையங்களின் இயந்திரங்களில் பழுது ஏற்பட்டால் முன்பெல்லாம் பெல் கம்பெனியிடம் கொடுத்துத்தான் சரி செய்ததாகச் சொல்கிறார்கள். ஆனால் இப்போது அந்தக் கம்பெனியிடம் கொடுக்காமல் கடலூரிலே உள்ள தனியார் கம்பெனி ஒன்றுக்குக் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். கடலூர் என்று சொன்ன உடனே மாண்மிகு அமைச்சர் அவர்களைச் சுட்டிக்காட்டிப் பேசப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் தயவுசெய்து அதுபற்றி மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்புத் தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை சம்பந்தமான விளக்கமான குறிப்புக்களைக் கொடுத்து அது சம்பந்தமாக கருத்துக்களை எல்லாம் இங்கே கூறி இருக்கிறார்கள். ஆனால் நாம் மின்சாரத்தை முறையாகப் பயன்படுத்துகிறோம் என்று பார்த்தால் தான் உண்மையாகச் சொல்ல விரும்புகிறேன், நாம் மின்சாரத்தை லேவிஷாக ப்ரொடக்ஷன் ஓரியன்ட்டாக இல்லாமல் வீணாக அதிகமான அளவிலே செலவிடப்படுகிறது. சென்ற ஆண்டிலே நாங்கள் ஜப்பானுக்குச் சென்றிருந்தோம். டோக்கியோ நகரத்திற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் சென்றோம். அருமை நண்பர் தாமரைக்கனி அவர்களும் உடன் வந்திருந்தார்கள். நாங்கள் அங்கே தங்கியிருந்த சமயத்தில், ஜப்பானியர்கள் எப்படி மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்கள், நாம் இங்கே எப்படி பயன்படுத்துகிறோம் என்று பார்த்தால், உள்ளபடியே அங்கே மின்சாரத்தை அவர்கள் மிகச் சிக்கனமாக, வேலை வாய்ப்பை அதிகமாக உண்டாக்குவதற்கான முறையிலே பயன்படுத்துகிறார்கள்,

நான் இன்றையதினம் இதிலே பேசவேண்டும் என்று நேற்று என்னுடைய கட்சியிலிருந்து சொன்ன சமயத்தில், சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலிருந்து பார்க்கும்போது, டிரேட் ஃபேர் (கண்காட்சி) நடைபெறும் இடத்தை பார்க்க நேரிட்டது. பல்லாயிரக்கணக்கான விளக்குகள் அங்கே வெளிச்சத்தை உமிழ்ந்துக் கொண்டிருந்தன. அதைப்பார்க்கின்ற சமயத்திலே தான், டோக்கியோவையும் நினைத்தேன். அதேசமயத்திலே இன்றொன்றையும் நினைத்தேன். நம்முடைய அருமை சகோதரர் மாண்புமிகு பண்ருட்டி அவர்கள் வருகின்ற பண்ருட்டி பகுதியிலே, அங்கேயிருக்கக்கூடிய விவசாயிகள், மின்சாரம் எப்பொழுது வரும் என்று எதிர்பார்த்து, இரவு நேரத்திலே பாம்பு கடிக்குமோ, நண்டுவாக்கிளி கடிக்குமோ என்று பயந்துக் கொண்டு, மூன்று விளக்கு சுவிட்சுகளை போட்டுவிட்டு, எப்பொழுது மின்சாரம் வந்து பல்புகள் எரியும், அதைப் பயன்படுத்தி நம் விவசாயத்திற்கு நீர் இறைப்போம் என்று காத்துக் கொண்டிருக்கிறார்களே அந்தக் காட்சியையும் நினைத்தேன்.

சாலைகளுக்கு 30 சதவிகிதம், 40 சதவிகிதம் என்று வையுங்கள். அப்படி வைத்து மின்சாரத்தை சேகரித்து விவசாயிகளுக்குக் கொடுத்தால் விவசாயம் பாதிக்கப்படாமல் இருக்கும். எஸென்ஷியல் சர்வீஸஸ்—க்கு பயன் உள்ளதாக மின்சாரம் கொடுக்கப்படவேண்டும்.

இப்போது ஏற்கனவே இருந்த பீக் லோட் ரெஸ்ட்ரிக்ஷனை எடுத்துவிட்டதாகச் சொன்னார்கள். அதை எடுத்துவிட்டதால் இன்றைக்கு பீக் லோட் அதிகமாக ஆகியிருக்கிறது. 24 மணி நேரமும் கரன்ட் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அப்படிச் சொல்வது தமிழ்நாட்டுக்கு ஒவ்வாத காரியம். இன்டஸ்ட்ரீஸாக இருந்தாலும் சரி அல்லது வேறு எதுவாக இருந்தாலும் சரி சில மணி நேரங்கள் அந்த வேலைக்காரர்களுக்கு ஓய்வு கொடுக்கிற விதத்தில் அந்த முறை இருப்பதுதான் நல்லது. நிறைய இருக்கக் கூடியவர்கள் செலவு செய்யலாம். குறைவாக இருப்பவர்கள் அதிகமாகச் செலவு செய்யும்போது, ஊதாரித்தனமாக செலவு செய்துவிட்டால் தேவைப்படும்போது உண்மையில் கஷ்டப் படுவதுபோல் இன்று மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டு அதன் காரணமாக தமிழ்நாட்டில் லோட் ஷெட்டிங் ஏற்பட்டு இருக்கிறது.

டிசம்பர் மாதம் 2,100 மெகாவாட்ஸ் பீக் லோட் என்கிறார்கள். மார்ச்சில் 2,400 மெகாவாட்ஸ். இது மிகமிகக் குறைவு என்பதை போர்ட் என்ஜினியர்கள் உணரவேண்டும். 24 மணி நேரமும் மின்சாரம் கொடுக்க என்ன செய்யப் போகிறீர்கள்? அதை தயவுசெய்து விளக்க வேண்டும். இப்போது நெய்வேலி மட்டும் நமக்கு இல்லை என்றால் என்னவாகும்? அவர்களை நாம் பாராட்ட வேண்டும். ஏறக்குறைய 550 மெகாவாட்ஸ் மின்சாரத்தை அவர்கள் தருகிறார்கள். தமிழ் நாடு மின்சார வாரியத்தின் மானத்தைக் காப்பாற்றக் கூடியவர்களே நெய்வேலியில் இருக்கக்கூடிய தொழிலாளர்களும், நெய்வேலியில் உள்ள நிர்வாகமும் என்பதை நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன். 400, 450, 500 மெகாவாட்ஸ் உற்பத்தி இன்றையதினம் இன்ஸ்டால்ட் கபாஸிட்டியே 600 தான். அந்த 600 மெகாவாட்ஸில் 500 மெகாவாட்ஸ் அவர்கள் தருகிறார்கள். கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக அந்த நிலைமை இருக்கிறது. இப்போது 500ல் இருந்து இன்னும் சில தினங்களில் 550 ஆக ஆக்குகிறோம் என்று கடலூரில் நெய்வேலி நிர்வாக சேர்மன் தண்டன் அவர்கள் கூறினார்கள். ஆகவே அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம்.

இன்னொன்று. இரண்டாவது எக்ஸ்பேன்ஷனில் 630 மெகாவாட் அவர்கள் உற்பத்தி செய்ய இருக்கிறார்கள். ஆனால் மைய அரசு அதிலிருந்து 176 மெகாவாட்ஸ்தான் தமிழ்நாட்டுக்குக் கொடுப்பேன் என்று சொன்னார்கள் என்று சொன்னார்கள். நான் திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நெய்வேலியில் உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரம் முழுவதும் தமிழ்நாட்டுக்கே கிடைக்கப் படவேண்டும் என்பதில் திராவிட முன்னேற்றக் கழகம் யார்



ஆட்சியில் இருந்தாலும் அவர்களோடு ஒத்துழைக்கும். ஏனெனில் ஆந்திராவில் வைத்திருக்கக்கூடிய ராமகுண்டம் மத்திய அரசு திட்டத்தின் மூலம் இன்றையதினம் 30, 40 பசவிற்கு கொடுத்து அவர்கள் நமக்கு வழங்கக்கூடிய சூழ் நிலைக்கு தள்ளப்படக்கூடாது. சில நேரம் இருந்தது. மின்சார வாரியம் 1 யூனிட்டை 1 ரூபாய் கொடுத்து வாங்கியது. நெய்வேலியில் எண்ணெயை வைத்துக்கொண்டு, மின்சாரம் உற்பத்தி செய்ததால், 1 யூனிட் 1 ரூபாய்க்கு வாங்க வேண்டி யிருந்தது. ஆனால், இன்றையதினம் அப்படியில்லை. நிர்வாகம் சீராக நடத்தப்படுகின்ற காரணத்தாலும், இப்போது அதிகமான அளவிலே அங்கே பழுப்பு நிலக்கரி, லிக்னைட் கிடைக்கின்ற காரணத்தாலும், அங்கே மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இப்போது இரண்டாவது சுரங்கத் திட்டத்தினாலே கிடைக்கக்கூடிய 630 மெகா வாட் மின்சாரம், தமிழ்நாட்டிற்கு கிடைக்க வேண்டும். அதற்கு இந்த அரசாங்கத்திற்கு எந்தவிதமான உதவி தேவை என்று சொல் கிறதோ, அந்த உதவியை திராவிட முன்னேற்றக் கழகம் அளிக்கும் என்ற உறுதியை மீண்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நான் ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். 9,30,000 பம்பு செட்டுகளுக்கு கனெக்ஷன் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த காலத்தில்தான் 4 லட்சத்திலிருந்து 8 லட்சம் என்ற அளவிலே உயர்ந்தது. அண்ணா தி. மு. கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, I am asking a question, are you keeping up the tempo? ஒரு ஆண்டிற்கு ஒரு இலட்சம் பம்பு செட்டுகளுக்கு கனெக்ஷன் கொடுக்க வேண்டுமென்று கலைஞர் அவர்கள் உத்தரவிட்டார்கள். அதேபோல் இன்றைக்கு நடை பெறுகிறதா? 30,000 பம்பு செட்டுகளுக்கு இந்த ஆண்டு கொடுத்தோம். அடுத்த ஆண்டிற்கு 46 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு கொடுக்க இருக்கிறோம் என்று சொல்லப் படுகிறது. 1976 ஆம் ஆண்டு வரை இருக்கக்கூடிய எல்லா அப்ளிகேஷன்களுக்கும் கனெக்ஷன் கொடுக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்களே தவிர, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்த சமயத்தில் பம்பு செட்டுகளுக்கு கனெக்ஷன் கொடுத்த எண்ணிக்கை இன்றையதினம் இல்லை என்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

அதேபோல், மின்சார வாரியம் எவ்வளவு மின்சாரம் நமக்குத் தேவை என்பதற்கு ஒரு 'லாங் டெர்ம் பிளான்' போட்டு கொடுக்க வேண்டும். சென்னையிலே வரும் 10 ஆண்டு காலங்களுக்கு எவ்வளவு டெலிபோன் தேவை என்பதை இப்போதே சொல்லிவிடுங்கள், We will have a long term - plan என்று சொல்லுகிறார்கள். அதைப்போல், நீங்கள் மின்சார பம்பு செட்டுகளுக்கு மின்சார வசதி செய்துதர, யார் யாருக்கு வேண்டும் என்பதற்கு ஒரு மாதம் அவகாசம் கொடுத்து, அந்த

அரசாங்கத்திலே சீக்ரட்டாக வைத்து என்ன செய்யப் போகிறீர்கள்? யார் தலையிலே ஏற்றப் போகிறீர்கள்? மின்சார பம்புசெட்களுக்கு ஏற்றப்போகிறீர்களா? ஏற்ற முடியுமா? இதனை ஆலோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

117 கோடி ரூபாய் ஏற்கெனவே துண்டுவிழுகிறது. நம்முடைய பட்ஜெட்டிலிருந்து வருடாவருடம் 117 கோடி ரூபாயை கொட்டிக்கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்கிறீர்கள். இது தொடர்ந்து நடக்க வேண்டாமா? 117 கோடி ரூபாய் யார் கொடுத்தது? இந்த ரூபாய் மதுவிலக்கு இல்லாததாலும் சேல்ஸ்டாக்ஸினாலும் வரக்கூடிய பணம்தானே. 117 கோடி ரூபாய் 15 ஆயிரம் கடைகளைத் திறந்துவிட்டு ஏழை விவசாயிகள், கூலிக்காரர்கள் இவர்கள் எல்லாம் கொடுக்கிற பணம் அல்லவா? 117 கோடி அல்லது 150 கோடியாக இருந்தாலும் பட்ஜெட்டிலிருந்து கொடுப்பதற்கு நியாயம் இருக்கிறது இந்த சேல்ஸ்டாக்ஸின் மூலமாக வரக்கூடிய பணம் தொழிற்சாலைகளிலிருந்து வரக்கூடிய பணம்தானே. மதுவிலக்கு இல்லாததால் கிராமப்புறங்களிலிருந்து தானே அந்த வருமானம் வருகிறது. இதிலே ஒன்றும் வித்தியாசம் கிடையாது. கட்டணத்தைத் திருத்துவதை நாங்கள் ஆதரிக்க முடியாது.

அதே சமயத்தில் நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்போதே 14 பைசா விவசாயிகளிடமிருந்து வாங்கப்படுகிறது. அதுவே கட்ட முடியவில்லை. அதிலேயே 21 கோடி ரூபாய் பாக்கி வைத்திருக்கிறார்கள். இப்படி பாக்கி வைத்திருக்கின்ற சமயத்தில் மறுபடியும் அதை ஏற்றப் போகிறீர்களா? நான் ஒரு ஆலோசனையைச் சொல்ல விரும்புகிறேன். ஹைடல் புராஜக்ட் இருக்கிறது. ஹைடலிலே உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரத்திற்கு What is the cost per unit என்ன என்று சொல்லுங்கள். அதை எடுத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் விவசாயிகள் பயன்படுத்துகின்ற பாசன நீரைத் தேக்கி வைத்து அதனால்தான் மின்சாரம் உற்பத்தி செய்யப் படுகிறது. The benefit should be passed/on to the agriculturists. அது 5 பைசாவாக இருந்தாலும் 7 பைசாவாக இருந்தாலும், அந்தக் கட்டண விகிதத்திற்குத்தான் இருக்க வேண்டும், குறைக்கப்படவேண்டுமே தவிர ஏற்றப்படக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து ஸ்டாபைப் பற்றிச் சொல்லாமல் இருக்க முடியாது. இந்த நிர்வாகம் ரொம்பப் பெரிதாக வளர்ந்து விட்டது. ஏற்கெனவே சின்னதாகத் தான் இருந்தது. ஆகையால் இந்த மின்சார வாரியத்தை இரண்டு மூன்று மண்டலங்களாக, இரண்டு மூன்று மின்சார வாரியங்களாகப் பிரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்பாட் பில்லிங்கில் / பல குறைபாடுகள் இருக்கின்றன. The efficiency of the Electricity Board will not improve. I can challenge. அதனால் என்ன வந்துவிட்டது? ஏற்கனவே இருந்த முறையில் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டுமென்றால் அங்கே இருப்பவர்களிடையே கொந்தளிப்பு ஏற்படுகிறது.



விவசாயம் செய்கின்றவர்களுக்கு மின்சார மோட்டார் போட்டு வைத்திருக்கிறோம். ஸ்பாட் பில்லிங் முறையில் உடனே பணம் கட்ட வேண்டுமென்றால் எங்களிடம் கட்டுவதற்குப் பணம் எங்கேயிருக்கிறது? தபால் மூலம் அனுப்பினாலும் சரி அல்லது லைன் இன்ஸ்பெக்டர் மூலம் கொடுத்தாலும் சரி, நாங்கள் இருபத்தைந்து இருபத்தாறு என்று கடைசித் தேதிகளில்தான் கட்டுவோம். The spot billing will not improve the efficiency of the Electricity Board. ஆகையால் அந்த மின்சார ஊழியர்களுக்கு உள்ள குறைகளைப்பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்த வாரியத்தோடு கலந்து பேசி தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைக் கூறி முடித்துக்கொள்கிறேன். மின்சாரப் பம்பு செட்டுகளுக்கு மின்சாரக் கட்டணத்தை உயர்த்தினால் நீங்கள் தமிழ்நாட்டில் பெரும் போராட்டங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்று கூறி இந்த அளவோடு என்னுடைய கருத்துக்களைக் கூறி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மின்வாரிய நிதிநிலை அறிக்கையில் பல்வேறு கட்சிகளின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்து கொண்டு நல்ல ஆலோசனைகளையெல்லாம் வழங்கியிருக்கின்றார்கள்; விளக்கங்களும் கேட்டிருக்கின்றார்கள். அவைகளுக்கெல்லாம் பதில் அளிக்க வேண்டுமானால் நேரம் போதாது என்பதைத் தாங்களும் அறிவீர்கள்; பசியோடு காத்துக் கொண்டு, விட்டால் போதும் வீட்டுக்குச் செல்லலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களும் நன்றாக அறிவார்கள். ஆகையினால் முக்கியமான ஒன்றிரண்டு கருத்துக்களுக்கு மட்டும் நான் விளக்கங்களைக் கூறி முடிக்கவிருக்கின்றேன். மற்றவைகளுக்குக் கவனமான பரிசிலனை உண்டு என்பதற்கான உத்தரவாதத்தையும் நான் அளிக்க விரும்புகிறேன்.

இந்த நிதி நிலையைப் பொறுத்தவரையில் மின் வாரியம் ஒரு பெரிய நிறுவனம் என்றும், அது மிகப்பெரிய பொது நிறுவனம் என்றும், அது ஆண்டுதோறும் பேரிழப்புக்கு ஆளாகி வருவதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டிப் பேசினார்கள். ஆனால் அப்படிப் பேசியவர்களெல்லாம் இந்த இழப்புக்குப் பல்வேறு காரணங்களை எடுத்துச்சொல்லி, அதனாலேதான் பேரிழப்பு என்று குறிப்பிட்டார்கள். நிர்வாகம் சரியாக இல்லை; மேல் மட்டத்தில் நிறைய அதிகாரிகள் போடப்பட்டிருக்கிறார்கள்; மின்சாரம் திருட்டுப் போகிறது; கம்பித் தொடர் இழப்பைக் குறைக்கலாம்; பணியாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று எல்லோரும் அவரவர்களுக்குத் தெரிந்த யோசனைகளைச் சொல்லி, இவைகளெல்லாம் சரிவர நிறைவேற்றப்பட்டால் மின்வாரியம் இழப்புக்கு ஆளாகாது என்று எடுத்துச் சொல்லி, கடைசியாக எல்லோரும் மங்களம் பாடும் பொழுது கட்டணத்தை உயர்த்தும்பொழுது விவசாயிகளுக்கு உயர்த்தாதீர்கள் என்று சொல்லி முடித்தார்கள்.

ஒரு மாத காலத்திற்குள் உங்கள் தேவையை அரசாங்கத்திற்கு கொடுங்கள் என்ற வகையில் ஒரு திட்டத்தைப் போட்டுக் கொடுக்கவேண்டும். அதன்படி 2, 3, 4, 5 ஆண்டுகளில் இவ் பூர்த்தி செய்யப்படும் என்ற ஒரு உறுதியைக் கொடுக்க வேண்டும். There should be an assessment of the fu ure demands of the whole of Tamil Nadu for the next ten years.

இன்னொன்றையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இங்கே நம்முடைய அமைச்சர் அவர்கள் நிலக்கரி கிடைக்க வில் ல என்று ஆதங்கப்பட்டுக்கொண்டு, இதிலே சொல்லியிருக் கிறார்கள். பிரதம மந்திரி அவர்களையும், முகமது பாசல் அவர்களையும் பார்த்து, இந்த நிலக்கரி வராமல் இருக்கக் கூடிய நிலைமைக்கு. "the constraints in availability of coal, rail transport, handling facilities at Haldia Port and availability of berthing for ships and the need for maintaining a coal dump at Haldia to avoid waiting time for ships. என்று இவைகளை யெல்லாம் சொல்லியிருக்கிறார்.

அது மட்டுமல்ல. ஒரு நேரம் வந்தது. நிலக்கரியே இல்லாமல் மின்சார உற்பத்தியை நிறுத்தக்கூடிய நிலைமை வந்தது என்று சொன்னார்கள். இது வருத்தமான விஷயம் தான். நிலக்கரி கிடைக்கவில்லை; அது தமிழ்நாட்டின் துரதிருஷ்டம்தான். அதே சமயத்திலே, 'இந்து' பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது, நவம்பர் மாதம் 10 ஆம் தேதி. Tamil Nadu promised enough wagons for coal நம்முடைய அமைச்சர் அவர்கள் டெல்லி மந்திரியைப் பார்த்துக் கேட்கிறார்கள். அதைப்பற்றி. "Without proper movement of coal to Haldia port for being transported to Tuticorin and from Singareni to Ennore, the plants were often in crisis. Tuticorin required about one lakh tonnes and Ennore about 1·25 lakh tonnes of coal a month, Mr. Ramachandran said. என்று சொன்னார்கள்.

(முற்பகல் 1.40)

அதற்குப் பிறகு இப்போது சீராகியிருக்கும் என்று கருதுகிறேன். சீராக்க வேண்டிய முயற்சியிலே ஈடுபடுங்கள் என்றும் அரசாங்கத்திற்கு நான் ஆலோசனை சொல்ல விரும்புகிறேன், ஆனால் நிலைமை என்ன? ஆன்-கோயிங் ஸ்கீம்ஸ் நடை முறையிலே உள்ள திட்டங்களுக்கு— தூத்துக்குடியிலே மூன்றாவது திட்டத்திலே 210 மெகாவாட், மேட்டூர் தெர்மலின் மூலமாக 400 மெகாவாட் ஆக 630 மெகாவாட் இவைகளுக்கு உங்களுக்கு நிலக்கரி தேவை. அதற்கு என்ன வழிவகைகள் செய்திருக்கிறீர்கள்? இப்போதே மத்திய அரசாங்கத்திற்குத் திட்டத்தைத் தந்துகொண்டு இருக்கிறோம். அந்த திட்டத்தையும் உடனே சாங்ஷன் செய்துவிட்டால் We can take active steps for starting the project. என்கிறீர்கள் என்ன என்ன திட்டங்கள் என்றால் நார்த் மெட்ராஸிலே 1,050 மெகாவாட், மேட்டூர் தெர்மல் எக்ஸ்டென்ஷனிலே 210 மெகாவாட் 2ல் 420



தூத்துக்குடியிலே எக்ஸ்டென்ஷன் மூலமாக 210 மெகாவாட்; ஆக ஏறக்குறைய 2,180 மெகாவாட் அளவுள்ள நியூ ஸ்கீம்கள் தமிழ்நாடு அரசாங்கம் அனுப்பியிருக்கிறது. இப்போது இருக்கின்ற திட்டத்திற்கே கரி வருவதற்கு வசதி இல்லை, லைன்களுக்கு இடம் இல்லை. வேகன்கள் இல்லை. ஹால்டியா போர்ட்டிலே இடம் இல்லை, சிங்கரேணியிலே கொடுக்கமாட்டேன் என்கிறார்கள், இதன் காரணமாக மின்சார உற்பத்தி தடைபட்டிருக்கிறது. ஆன்கோயிங் ஸ்கீம்களுக்கு பூர்த்தியடையக்கூடிய முறையிலே நிலக்கரி எப்படிக் கொண்டு வரப்போகிறீர்கள். அதேபோல புதிய திட்டங்கள், 2180 மெகாவாட் அளவுக்கு உள்ள திட்டங்களுக்கு — நீங்கள் சமர்ப் பித்திருக்கிறீர்களே — எங்கே இருந்து நிலக்கரி கொண்டுவரப் போகிறீர்கள்? அதற்கான திட்டம் என்ன? அதற்கான முறை என்ன? முறை என்ன என்று கேட்டால் அண்ணா, எம். வி. பெரியார் கப்பல்களும் போய்விட்டது என்று சொல்வீர்கள். இப்போது மின்சார உற்பத்திக்கே கரி கிடைக்காத சமயத்தில் எங்கே நீங்கள் 200 கோடி ரூபாயிலே 2 ஆயிரம் பேர்களுக்கு வேலை கொடுக்கக்கூடிய முறையிலே காகித ஆலை போடப் போகிறீர்கள்? அதற்காக அங்கே இருக்கக்கூடிய 5, 6 சர்க்கரை ஆலைகளிலிருந்து நாங்கள் பெகாஸ் வாங்கிக்கொள்வோம். நாங்கள் நிலக்கரியை வைத்துக்கொண்டு ஸ்டீம் உற்பத்தி செய்வோம். அந்த ஸ்டீமை அந்த அந்த சர்க்கரை ஆலை களுக்கு விற்போம் என்று தமிழ்நாடு நியூஸ்பிரிண்ட் புராஜக்டிலே கொடுக்கிறார்கள். இது என்ன நடக்கக்கூடிய காரியமா? அதற்கு எவ்வளவு நிலக்கரி தேவை என்றால் ஆண்டுக்கு 3.4 லட்சம் டன் நிலக்கரி வேண்டும். அதை எப்படி ஆகாய விமானத்திலே கொண்டுவரப்போகிறீர்களா? இருக்கிற டிராக் ஏற்கெனவே ஓவர்லோடட். இல்லை பேரல்லல் டிராக் போடப் போகிறீர்களா? நிலக்கரி சிங்கரேணியில் இருக்கிறது, பிட்ஹெட்ஸில் இருக்கிறது, தல்சர் மைன்ஸில் இருக்கிறது, ஹால்டியா போர்டின் உள்ளே இருக்கிறது. How are you going to transport? இருக்கிற ஸ்கீமுக்கே மிக அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்ற மின்சாரத் துறைக்கே நிலக்கரியை எடுத்து வரமுடியவில்லை, நிலக்கரி இல்லாமல் நின்றுபோய்விடக்கூடிய நிலைமை இருக்கிறது. நீங்கள் எப்படி காகித ஆலைக்கு 3.4 லட்சம் டன் கொண்டுவரமுடியும். யாருக்கோ, சேஷசாயி விஸ்வநாதனைத் திருப்திப்படுத்துவதற்கு இந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டு இருக்கிறீர்கள். உருப்படுமா? மின்சார வாரியம் செயல்படுமா என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும்.

டாரிப் ரெவ்யூ கமிட்டி என்று போடப்பட்டு மின்சாரக் கட்டணங்களை எப்படி எப்படி சீர்திருத்துவது என்று சொல்லப் பட்டிருக்கின்றது என்று சொல்கிறார்கள் யார் தலையிலே வைக்கப்போகிறீர்களோ தெரியவில்லை. அந்த கமிட்டி ரிப்போர்ட்டை சட்டமன்றத்திலே வைத்திருந்தால் உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் கருத்துக்களைச் சொல் வதற்கு வாய்ப்பு இருந்திருக்கும். வைக்கவில்லையே,

மூலமாக நமக்குக் கிடைத்திருப்பது 32 கோடிதான். ஆகவே, ரூ. 137 கோடி நம்முடைய சக்திக்கு அப்பாற்பட்ட செலவினங்கள், என்பதை நாம் தெரிந்து கொண்டாக வேண்டும். இந்த உற்பத்தி விலைகளின் கூடுதல்கள் காரணமாக விவசாயத்திற்கு மட்டும், 1974-75-ல் ரூ. 40 கோடி என்கிற அளவிலே மானியம் இருந்தது. அதாவது, (Subsidy to the agriculture) .

இன்று 95 கோடி ரூபாய் அளவுக்கு நாம் மானியம் தருகின்றோம். ஒரே ஒரு புள்ளி விவரத்தை மட்டும், விவசாய கட்டணத்தைப் பொறுத்த வரையிலே, நான் சொல்ல விரும்புகிறேன். விவசாயக் கட்டணத்திற்கு 12 பைசா என்று விதித்தது 1972 ஆம் ஆண்டு. அன்றைக்கு இருந்த ரூபாய் மதிப்பும் இன்றைய ரூபாய் மதிப்பும் நாம் கணக்கில் எடுத்துக்கொள்வோமானால் இன்றைக்கு 21.7 காசு. அது தானாகவே வரும். அன்றைக்குக் கொடுத்தது 12 காசு. இன்றைக்கு 21.7 காசுகள். அதே 12 காசு இன்றைக்கு எவ்வளவுக்கு சமம் என்றால் 5.4 காசுகள்தான் சமம். ஆக விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணம் உயர்த்தாதது மட்டுமல்ல, ஒரே நிலையாக இல்லாதது மட்டுமல்ல, வெகுவானக் அளவுக்குக் குறைத்து வழங்கப்படுகிறது என்பதை இந்தப் புள்ளிவிவரங்கள் தெளிவாக எடுத்துக்காட்டும் என்று கருதுகிறேன். ஆகவே, மின்வாரியத்திற்கு ஏற்பட்டு இருக்கின்ற இந்தப் பேரிழப்புக்கு இரண்டு முக்கியமான காரணங்கள் உண்டு. ஒன்று, நமக்கு வரும் இடுபொருள்கள் விலை உயர்வு, மற்றொன்று, வளர்ந்து வருகின்ற உற்பத்தி விலையையும் கருதாது, விவசாயிகளுக்கு கட்டணத்தை ஒரே நிலையில் வைத்து இருப்பது. இதைச் சொல்வதன் மூலம் நீங்கள் விவசாயிகளுக்கு உயர்த்தப்போகிறீர்களா என்று தயவு செய்து என்னைக் கேட்க வேண்டாம். அதை எப்படி செய்வது என்பதை அரசு சிந்தித்துப் பார்த்து அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்

ஆனால் அதே நேரத்தில் 130 கோடி ரூபாய் அளவிற்கு மத்திய அரசு உயர்த்துகின்ற இந்த இனங்களைப் பற்றி மாநில மின்துறை அமைச்சர்கள் மாநாட்டிலே, அதற்குப் பிறகு திட்டக் குழுவினிடத்திலே மாண்புமிகு நிதி அமைச்சர்கள் அவர்களோடு நானும் சென்றபோது ஒரு கருத்தை வலியுறுத்தினோம். பொதுத் துறை நிறுவனங்கள் என்று சொல்கிறபோது, பொருளாதாரத்தின் உயிர் நாடியாக இருக்கக்கூடியவற்றை, அது நிர்வகிக்கின்ற தன்மைகளை மேற்கொண்டு இருக்கிறது. அப்படி இருக்கிறபோது பொதுத் துறை நிறுவனங்களின் கட்டணத்தைக் கூட்டுவதன் மூலமும், அல்லது விலையை உயர்த்துவதன் மூலமும் உதாரணமாக ரயில்வேயாக இருந்தாலும் சரி, மின்சார வாரியமாக இருந்தாலும் சரி கோல் இந்தியாவாக இருந்தாலும் சரி— இப்படி உயர்த்துவதன் மூலம் விலைவாசியை ஏற்றுவதற்கு அது வழி வகுக்கும். 'இட் வில் ஃப்யூயல் தி இன்பிளேஷன்' என்று சொல்வார்கள். ஆனால் ஒரு கருத்து மத்திய அரசின் சார்பிலே தெரிவிக்கப்பட்டது. அது என்னவென்றால், இந்த நிறுவனங்கள்



மேலும் விரிவாக்கம் அடைவதற்கு கூடுதல் நிதி தேவைப்படுகிறது. அப்படி நிதி தேவைப்படுகிறபோது, அந்த நிறுவனங்களே அந்த நிதியைப் பெற்றுக் கொள்ளவேண்டும். ஆகையினாலே தான், அவைகள் விலையை உயர்த்துவதற்கு நாம் உரிமை வழங்க வேண்டுமென்ற கருத்தை மிகப் பெரிய பொருளாதார நிபுணர்கள் கூட மத்திய அரசுக்குச் சொல்லி இருக்கிறார்கள். அது தவறான கொள்கை என்பதை நாம் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம்.

அடிப்படையான இன்றியமையாத தொழில்களிலே அல்லது மூலப்பொருள்களில் விலையேறுகிறபோது பொருளாதாரத்தில் வீக்கம் இன்னும் அதிகமாகவே ஆகுமே தவிர அந்த வீக்கம் நிச்சயமாக குறையாது. அதற்குரிய உதாரணத்திற்கு நெய்வேலி நிறுவனம் என்று வைத்துக்கொள்ளுங்கள். நெய்வேலி நிறுவனத்தில் இரண்டாவது சுரங்கம் வெட்டவேண்டும் என்று அவர்கள் திட்டத்தைப் போடுகிறார்களே, என்றால் இரண்டாவது சுரங்கத்தை வெட்டுவதற்கு நீங்கள் எவ்வளவு இண்டர்னல் ரிசோர்சஸை ஜெனரேட் செய்வீர்கள் என்று அவர்களைக் கேட்கிறார்கள். ஆகவே அவர்கள் என்ன செய்வார்கள். நமக்குத்தான் மின்சாரம் கொடுக்கிறார்கள். ஆகவே, நீங்கள் 30 பைசா கொடுங்கள் அல்லது 40 பைசா கொடுங்கள் என்று நம்மிடத்திலே கேட்கிறார்கள். அதற்கு பதிலாக பொது நிறுவனங்களின் முதலீடு மத்திய அரசே போடவேண்டுமே தவிர அந்தந்த பொது நிறுவனங்களின் விலையை உயர்த்த சொல்வார்களேயானால் விலைவாசியை என்றுமே இந்தியப் பொருளாதாரத்தில் கட்டுப்படுத்த முடியாது. இந்தக் கருத்தை மின்துறை அமைச்சர்கள் மாநாட்டில் நாங்கள் வலியுறுத்தினோம்.

அதைப்போல திட்டக்குழுவிலும் வலியுறுத்தினோம். இனிமேல் நிலக்கரியானாலும், அல்லது ரயில்வே கட்டணமானாலும் இது போன்ற முக்கிய காரியங்களின் விலையை உயர்த்துகிறபோது மாநிலங்களை கலந்தாலோசிக்க வேண்டும் என்ற கருத்தை நாங்கள் எடுத்துச்சொல்லி இருக்கிறோம்.

(பிற்பகல் 2.00)

ஏனென்றால், தர வேண்டியது நாம் தான். இன்றைக்கு மத்திய சர்க்கார் நிறுவனங்களின் மூலமாக நிதியை சுலபமாக திரட்டிவிட முடியும், உதாரணமாக நிலக்கரி விலையைக் கூட்டுகிறார்கள் என்றால் மாநிலங்களில இருக்கின்ற மாநில அரசுகளின் பணம் அவர்களுக்கு சுலபமாக போய்விடுகிறது. நாம் கொடுக்க முடியாது என்று சொல்ல முடியாது, நிலக்கரி விலையை உயர்த்துகிறபோது மாநில மின்சார வாரியம் பணம் கொடுக்கமுடியாது என்று சொல்ல முடியாது. ஆகவே, மாநில நிதியை மத்திய அரசு மறைமுகமாகப் பெற்றுக்கொள்வதற்கு வழி வகுக்கிறது என்பது உண்மையான நிலையான பொருளாதாரத்திற்கு வழிவகுக்கவில்லை. ஆகவே, பொது நிறுவனங்கள் கண்டபடி விலையை உயர்த்துவது மத்திய அரசின் பொருளாதார கொள்கைக்கு ஏற்றது அல்ல என்பதை நம்முடைய சார்பிலே

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 1974-ஆம் ஆண்டு மின்வாரியம் 13.61 கோடி ரூபாய் இழப்பிலேதான் நடந்தது. ஆனால் 1980–8 -ஆம் ஆண்டிலே 11 கோடி ரூபாய் இழப்பும். இந்த ஆண்டு 125 கோடி ஆகலாம் என்ற நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

லயன் லாஸ் — மின்கம்பித் தொடர் இழப்பைக் குறைத்தால் அதன்மூலம் நிறைய சேமிப்பு கிடைக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். 18 சதவீதம் என்று நாம் ஏற்கனவே குறைத்திருப்பது அகில இந்திய அளவிலேயே நாம் தான் அந்த அளவிற்குக் குறைந்திருக்கிறோம் என்பதை மத்திய அரசும் பாராட்டியது; மாண்புமிகு பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் தமிழகத்திற்கு வந்தபொழுது அது சுட்டிக்காட்டப்பட்டு அவர்களும் வரவேற்றிருக்கிறார்கள். அதை இன்னும் 3 சதவீதம் குறைக்கிறோம் என்று வைத்துக்கொண்டாலும், — 18–இலிருந்து 15 என்று வைத்துக் கொண்டாலும் அதன் மூலம் கூடுதலாகக் கிடைக்கக்கூடிய 19 கோடி ரூபாய் அளவிற்குத் தானே தவிர அதற்குமேல் கிடைக்காது. மின் கம்பித் தொடர் இழப்பிலே மின்சாரம் திருட்டும் சேர்ந்து வந்து விடுகிறது. ஆகையால் என்னதான் தீவிரப்படுத்தினாலும், என்னதான் கண்காணிப்பு நடத்தினாலும் 9 அல்லது 10 கோடி ரூபாய்க்கு மேல் பலன் கிடைக்காது.

அதே போல அனல் மின் உற்பத்தி நிலையங்களிலும் மத்திய மின் குழு நிர்ணயித்துள்ள குறியீட்டின்படி செயல்படுமோமேயானால் அதனாலும் ஆதாயம் பெருகும் என்றார்கள். ஆனால் குறியீட்டின்படி பார்த்தால் ரூ. 10 கோடி நாம் அதிகமாகப் பெறலாம்.

(பிற்பகல் 1.50)

பணியாளர்களைக் குறைக்க வேண்டும், ஏராளமான பணியாளர்கள் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். நான் இங்கே ஒரு புள்ளி விவரத்தைச் சொல்வேன். இது தொழிலாளர்களுக்காகப் பாடுபடுகிற மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சிகரமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஆனால், அதை வைத்து அவர்கள் கோரிக்கை எழுப்பி விடக்கூடாது என்றும் கேட்டுக் கொள்கிறேன். மின் பணியாளர் செலவு, மொத்த செலவில் 23.9 சதவீதம் என்று இருந்தது. 1976-77–ல். இப்பொழுது 21.7 சதவீதமாகக் குறைந்துள்ளது. அதோடு மட்டுமல்ல ஒட்டுமொத்தமாகப் பணியாற்றுகின்ற அத்தனை பேருக்குமே நாம் சம்பளம் தருவது ரூ. 82 கோடி தான். ஆக எல்லா பணியாளர்களையும் நிறுத்தி விட்டால்கூட சரிக்கட்ட முடியாது. இந்த ரூ. 115 கோடியை, ரூ. 125 கோடியைச் சரிக்கட்ட முடியாது. பணியாளர்களே இல்லாமல் மின்சார வாரியத்தை நடத்தினால்கூட இதுதான் நிலைமை என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். மொத்தப் பணியாளர்களும் 99,800–லேயிருந்து 90,400 என்கிற அளவிலே



குறைந்திருக்கிறார்கள். ஆகவே அவைகளையெல்லாம் பார்க்கிற பொழுது உண்மையான காரணங்கள் என்ன என்பதை நாம் தெரிந்துகொண்டால் நமக்கும் நல்லது, நாட்டுக்கும் நல்லது.

உண்மையான காரணம் என்ன என்று பார்க்கின்றபொழுது அதற்கு முக்கியமான இரண்டு காரணங்களை நாம் கருத்திலே கொள்ளவேண்டும். முதலாவது, நம்முடைய நிர்வாகத்திற்கு ஆட்படாத செலவினங்கள் என்று இருக்கின்றன. சான்றாக, நிலக்கரியைப் பெற வேண்டியிருக்கிறது. அதை புகைவண்டித் துறை மூலம் நாம் கொண்டு வரவேண்டியிருக்கிறது. அதே போல் கப்பல் மூலம் கொண்டுவரவேண்டியிருக்கிறது. எண்ணெய் ஃபர்னேஸ் ஆயில், போன்றவைகளை, நாம் பெற வேண்டியிருக்கிறது. அவைகளை எல்லாம் தருவது மத்திய அரசு என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

1974–ல் சிங்கரேணியிலிருந்து நிலக்கரியைச் சென்னைக்குக் கொண்டு வருவதற்கு 1 டன்னுக்கு ஆகிய செலவு ரூ. 111.37. ஆனால், இன்று ரூ. 267.12. அதே போல், சந்தாலிலேயிருந்து நிலக்கரி கொண்டு வருவதற்கான செலவு 1974–75-ல் ரூ. 100.57 இன்று ரூ. 286. பீகார்-பெங்கால் பகுதியிலேயிருந்து கொண்டு வருகின்ற நிலக்கரி—தூத்துக்குடிக்கு அது பயன்படுகிறது. 1974–75-ல் ரூ. 130.67 இன்றைக்கு இரண்டு மடங்கு அல்லது மூன்று மடங்குக்கும் மேலாக ரூ 478.78 என்று ஆகியிருக்கிறது. எண்ணெய் செலவு ரூ. 681–லிருந்து ரூ 2697 என்ற அளவுக்கு அதிகமாகியிருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல், நாம் மின்சாரத்தை நெய்வேலியிலிருந்து பெற வேண்டியிருக்கிறது. கேரளத்திலேயிருந்தும் பெற வேண்டியிருக்கிறது. கேரளத்திலேயிருந்து 7.8 காசுக்கு, 1974 ஆம் ஆண்டு வாங்கிய நாம், 28 காசுக்கு இன்றைக்கு வாங்கிக் கொண்டிருக்கிறோம். அது போதாது, 45 காசு கொடுக்க வேண்டுமென்று அம்மாநிலம் நம்மைக் கேட்டுக் கொண்டிருக்கிறது. அதே போல் நெய்வேலி 11.94 காசு என்று மின்சாரத்தை 1974–லே கொடுத்தது. இப்பொழுது 31.08 காசுக்கு கொடுக்கிறது. நான் இந்தப் புள்ளி விவரங்களைச் சொல்வதன் முக்கிய காரணம், நம்முடைய சக்திக்கு அப்பாற்பட்டு மின்சாரத்தைப் பெற்றுத்தான் தீரவேண்டுமென்ற நிலைமையில் நாம் இருக்கிற காரணத்தால், கேரளம் கேட்கின்ற விலை, நெய்வேலியில் அதிகரித்திருக்கின்ற விலை, அதே போல் மத்திய அரசு தருகின்ற இடுபொருள்களின் விலை அதிகரிப்பு இவைகளின் மூலமாக, மட்டும், 1974 ஆம் ஆண்டிலேயிருந்து இன்று வரையில் நமக்கு ஆகியிருக்கின்ற கூடுதல் செலவு ரூ. 137.81 கோடி. இந்த ஆண்டுகளில் நாம் கட்டணங்களை உயர்த்தியிருக்கிறோமா அல்லது கட்டணச் சலுகை அளித்திருக்கிறோமா என்று பார்த்தால், விவசாயிகளுக்கு ஏராளமான கட்டணச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. பெருந் தொழில்களுக்கென்று சில இனங்களிலே நாம் கட்டணத்தை அதிகரித்திருக்கிறோம். அதன்

நாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இதை ஓரளவிற்கு மத்திய அரசு உணர்ந்து அந்தப் பொறுப்போடு செயல்படுவார்களானால் இந்த அளவிற்குப் பேரிழப்பு இருக்காது. ஆனால் அந்த நேரத்தில் மின் கட்டணத்திலும் நாம் எந்த அளவிற்கு விவசாயிகளுக்கு சலுகை அளிக்கிறோம் என்பதையும் இதன் மூலம் புரிந்து கொள்ளலாம்.

குறிப்பாக மின்பற்றாக்குறை பற்றி இங்கே சொன்னார்கள். மின் பற்றாக்குறை எவ்வளவுக் கெவ்வளவு குறையவேண்டுமோ அவ்வளவுக்கவ்வளவு குறையவேண்டும் என்பது அரசின் நோக்கம், ஒரு காலத்தில் 100—க்கு 70 பங்கு, 100—க்கு 100 பங்கு என்கிற வகையில் 3 மாதம், 4 மாதம் என்று இருந்தது. அந்த நிலைமை மாறி மின் வெட்டுக் கொண்டு வரலாமா, வேண்டாமா என்று ஐயப்படுகிற அளவிற்கு இன்றைக்கு இருக்கிறோம் என்பதை எண்ணுகிறபோது பெருமைப்படலாம். இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களின் நிலையை எண்ணிப் பார்த்து, அங்கேயெல்லாம் நிலைமை எப்படி இருக்கிறது என்று எண்ணிப் பார்த்தால் தான்-வெயிலில் போனால் தான் நிழலின் அருமை தெரியும் என்பதைப் போல நம்முடைய அருமை நமக்குத் தெரியும். நாம் ஒன்றும் கீழே இறங்கிப் போய்விடவில்லை.

மின் வெட்டிற்கும், மின் நிறுத்தத்திற்கும் வேறுபாடு உண்டு. மின் வெட்டு என்பது மின்சாரம் 1,2 அல்லது 5 மாதங்களுக்குத் தொடர்ந்து பற்றாக்குறையாக இருக்குமானால், அந்த நேரத்தில் நாம் கொண்டு வருவது மின் வெட்டு. மின் நிறுத்தம் என்பது லோட் ஷெட்டிங் திடீரென்று ஒரு பெரிய யந்திரம் பழுதாகி விடுகிறது என்று வைத்துக்கொள்வோம். இங்கேகூட மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் சொன்னார்கள். பொங்கல் நேரத்தில் எங்களுக்குக் கஷ்டமாக இருந்தது என்று சொன்னார்கள். அது உண்மை. அந்த நேரத்தில் தூத்துக்குடியில் இருந்த இரண்டு யூனிட்டுகளும் நின்று விட்டன. அதனால் ஒழுங்காகப் பவர் கொடுக்கப்படவில்லை. அதைப் பவர் கட் என்று சொல்ல முடியாது. யந்திரங்கள் திடீரென்று பழுதாகி விட்டதால் ஏற்பட்ட நிலை அது. அதைத்தான் 'மின் நிறுத்தம் என்று சொல்கிறோம். அதாவது லோட் ஷெட்டிங். மின் தடங்கல் என்பது ஆங்காங்கே ஏற்படும் பழுதின் காரணமாகவும், ஒரு ஊரில் ஏற்படும் ரிப்பேர் காரணமாகவும் ஏற்படுவது. மின் வெட்டு அமலில் இருந்த காலத்தில் கூட நமக்கு மின் நிறுத்தம் இருந்து இருக்கிறது. சென்ற ஆண்டு இல்லையா? அதற்கு முந்திய ஆண்டு இல்லையா? ஆகவே நம் மின் வெட்டையும், மின் நிறுத்தத்தையும் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது. இருந்தாலும் ஊர்ப்புறங்களில் இத்தகைய நிலைமைகள் ஏற்படக் கூடாது என்பதற்காக தனி அக்கறை எடுத்துக் கொள்ள அரசு மிகுந்த கவனம் செலுத்தும் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன மற்ற கருத்துக்களைப் பற்றியெல்லாம் நிச்சயமாக அரசும், மின் வாரியமும் ஆராய்ந்து பார்த்து, படிப்படியாக நிறைவேற்றப் பாடுபடும் என்பதைக் கூறி முடிக்கிறேன். வணக்கம்.



திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தின் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் ஒரே ஒரு கேள்வியை மட்டும் கேட்க விரும்புகிறேன். அதை அரசின் கவனத்திற்கும் கொண்டு வரவிரும்புகிறேன். இன்று பம்ப் செட்டுகளுக்கு கனெக்ஷன் கொடுப்பதைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 2,61,000 அப்ளிகேஷன் இருக்கின்றன என்று சொல்லப் படுகிறது. இவைகளுக்கு எல்லாம் கனெக்ஷன் கொடுப்பதாக இருந்தால் மொத்தம் 9 வருஷம் ஆகும் என்கிற விவரங்களை விவரம் தெரிந்தவர்கள் சொல்கிறார்கள். இப்போது நான் உங்கள் மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவது விவசாயிகள் பம்ப்செட்டுகள் வாங்குவதற்காக வங்கிகளில் இருந்து கடன் பெற்று இருக்கிறார்கள். அந்த வகையில் ஆயிரக்கணக்கான ரூபாய்களை விவசாயிகள் பெற்று இருக்கிறார்கள். அந்தக் கடன்களைப் பெற்று பம்ப் செட்டு வாங்கியவர்களுக்கு இன்னும் கனெக்ஷன் கொடுக்கவில்லை. அதன் காரணமாக அவர்கள் அதைப் பயன்படுத்த முடியவில்லை. இருப்பினும் அந்தக் கடனுக்கு அவர்கள் வட்டி கட்ட வேண்டியிருக்கிறது. நீங்கள் போட்டு இருக்கும் முனு ஆதி கமிட்டி கொடுத்துள்ள பரிந்துரைகளில் முக்கியமான பரிந்துரை ஒன்று இந்தக் கடனை ரத்து செய்ய வேண்டும். இணைப்பு கொடுக்காதது மின்சார இலாகா தவறு. அதற்காக விவசாயிகளிடமிருந்து வட்டிப்பணம் வாங்குவது நியாயமல்ல. அதை ரத்து செய்யவேண்டும் என்று சொன்னதாகத் தெரிகிறது. ஆகவே, மின்சார இலாகா செய்த தவறு காரணமாக விவசாயிகள் வட்டி கட்டவேண்டிய நிலையைத் தவிர்க்கும் வகையில், அந்த வட்டியை அரசு ரத்து செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இது என்னுடைய துறை சம்பந்தமானது அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேரவை ஒத்தி வைப்பது குறித்த தீர்மானத்தை மொழிவார்.

### 3, அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) பேரவை ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''பேரவை விதி 25(1)—ன் கீழ், பேரவை இன்று ஒத்திவைக்கப் பெற்று, மீண்டும் பிப்ரவரி திங்கள் 26 ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு கூடலாம்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

LIST OF AGENTS FOR THE SALE OF
TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS,
IN MADRAS CITY.

1 Account Test. Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tirchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A. Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Center, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 5TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

122226 N83-2932

(3) அறிவிப்பு

பேரவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை இப்போது ஒத்தி வைக்கப்பட்டு, மீண்டும் 26–2–1982 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.00 மணிக்குக் கூடும். அன்று ஏற்கெனவே அறிவித்தபடி 1982–83 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை பேரவைக்கு அளிக்கப்படும். அன்று வினாக்கள்—விடைகள் நேரம் இல்லை. வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.06 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

102. 1980-81 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திரையரங்கு நிறுவனத்தின் ஒன்பதாவது ஆண்டறிக்கை (தமிழ்) (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

103. தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகத்தின் 1979 ஆம் ஆண்டிற்கான நான்காம் ஆண்டறிக்கை (ஆங்கிலம்) 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

இணைப்பு

[1...ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 26க்கான விடையைக் காண்க]

விவர அறிக்கை

தற்பொழுது சிறு சேமிப்புப் பற்றி பொது மக்களுக்கு பல முறைகளில் விளக்கங்கள் தரப்படுகின்றன.

விளம்பர ஊர்திகளில் சிறு சேமிப்பு அலுவலர்கள் கிராமங்களுக்குச் சென்று சிறு சேமிப்பைப் பற்றி விளக்கும் சினிமா படங்களைப் பொது மக்களுக்குப் போட்டுக் காட்டி பிரச்சாரம் செய்கிறார்கள். விளம்பர நாடகங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படுகின்றன. சிறு சேமிப்பு விளம்பரங்கள் அவ்வப்பொழுது காலத்திற்கேற்ப தினசரி செய்தித் தாள்களிலும், பயன்தரும் மாத இதழ்களிலும் வெளியிடப்படுகின்றன. தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலமும் சிறு சேமிப்புப் பற்றி அவ்வப்போது பொது மக்களுக்கு எடுத்துச் சொல்லப்படுகிறது. சிறு சேமிப்பின் அவசியத்தைப் புரிந்து கொள்ளும் வகையிலும், விளம்பரம் செய்யும் வகையிலும், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் நாவன்மைப் போட்டி தமிழிலும், ஆங்கிலத்திலும் நடத்தப்பட்டு வெற்றிப்பெறுபவர்களுக்குப் பரிசளிக்கப்படுகிறது.